
கம்பராமாயணம்

(இராமாவதாரம்)

மூலமும் உரையும்

ஆரண்ய காண்டம்



உரை நூல் ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

கம்ப இராமாயணம்

[இராமாவதாரம்]

ஆரணிய காண்டம்

மூலமும் உரையும்

உரை ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

(முன்னாள் முதுநிலை மேலாளர், பரோடா வங்கி)

சாந்த மங்கை பதிப்பகம்

16, சுந்தரர் தெரு, ராம் நகர்,

அம்பத்தூர், சென்னை-600053

☎: 26581517, Cell: 9840868543

முதற் பதிப்பு: பிப்ரவரி, 2007

KAMBA RAMAYANAM - ARANIYA KANDAM

PL.Palaniappan

First Edition: Februrary, 2007

No. of Pages: 784 + XXXII = 816

Size: Demy

Paper used: 70 G.S.M. Maplitho

விலை ரூ. 380/-

வெளியீடு:

சாந்த மங்கை பதிப்பகம்

16, சுந்தரர் தெரு, ராம் நகர்,
அம்பத்தூர்,சென்னை-600053
☎: 26581517, Cell: 9840868543

நூல்கள் கிடைக்குமிடம்:

THIRUMAGAL NILAYAM

New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 65413222

Printed at : Gem Offsets, Chennai - 14. Ph : 28416838

காணிக்கை

என்னை ஈன்றெடுத்து,
எனக்கும் ஓர் வாழ்வளித்து
தன்னைப் பேணிடாமல்,
தளிர்களையே காத்து நின்ற
அன்னை **மீனாட்சித் தாய்க்கு**
ஆயிரம் வணக்கம் கூறி,
இன்னமும் அருள் கூர்ந்து என்னை
இயக்கிட இறைஞ்சுவனே!



பொருளடக்கம்

அணிந்துரை

முனைவர் தெ. ஞானசுந்தரம்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30.

இராமகாதை இந்தியநாட்டின் தனிச்செல்வம். இராமன் திருக்கதையினை அறியாதார் இந்திய நாட்டில் எவரும் இல்லை. இராமன் இந்துசமயத்தவரால் கடவுளாக வழிபடப் பெறுகிறான். திருக்கோயில்களில் சீதை இலக்குவன் ஆகியவரோடு கூடிய இராமனுக்குத் திருமுற்றங்கள் உண்டாயின. இராமன் திருத்தொண்டில் முனைந்து நின்ற அனுமன் பெருஞ்சிறப்புக்கு உரியவனாகப் போற்றப் படுகிறான். நாமக்கல், சுசீந்தரம் போன்ற இடங்களில் அனுமனுக்குக் கோயில்கள் உள்ளன. இராமன், சீதை, இலக்குவன், பரதன், சத்துருக்கனன், தசரதன், கோசலை. சுமித்திரை போன்ற இராமாயனப் பெயர்களைத் தங்களுக்குப் பெயராகக் கொண்டவர்கள் இந்திய நாட்டில் எல்லாப் பகுதியிலும் காணப்படுகின்றார்கள். இந்தியர் குடியேறிய நாடுகளிலும் இராமகாதை பரவியது. அதன் கதை அந்த இடத்திற்கும் மக்களின் கற்பனைக்கும் ஏற்றவாறு சிறு சிறு மாற்றங்களோடு வழங்கி வருகிறது.

இராமன் திருக்கதையினை முதன்முதலில் காப்பியப்படுத்தியவர் வான்மீகிமுனிவர். அவர் ஆதிகவி என்னும் சிறப்புக்குரியவர். வான்மீகி ராமாயணம் இந்திய மொழிகலில் முதலில் தமிழில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. அதனைச் செய்த பெருமைக்கு உரியவர் கல்வியில் பெரியராகிய கம்பர் ஆவர். பிற இந்திய மொழிகளில் நெடுங் காலத்திற்குப் பின்னரே இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கம்பர் தேர்ந்த புலமையும் விரிந்து ஆழ்ந்த கல்வியும் நிறைந்தவர். அவர் தம் காலத்திற்கு முன்பு தோன்றிய தமிழ், வடமொழி நூல்களில்

பெரும்பாலானவற்றைக் கற்றுத் துறைபோகியவர். அவர் கவிதைகள் கற்பாரைப் பெரிதும் கவரவல்லன. அவர் கவிதை சில இடங்களில் எளிமையாகவும் சில இடங்களில் அரிய கருத்துக்களை உள்ளடக்கிய தாகவும் அமைந்துள்ளது.

மொழி காலத்துக்குக்காலம் வளருகிறது. அவ்வளர்ச்சியில் சிற்சில சொற்களும் வழக்காறுகளும் மறைகின்றன; சிற்சில புதியனவாகப் புகுகின்றன. சிற்சில மாற்றம் பெறுகின்றன. இவ்வியல்பினை எல்லா மொழிகளிலும் காணலாம். பழைய ஆங்கிலத்தைப் படித்துணர் வதற்குத் தனி அகராதியே தேவைப்படுகிறது. தமிழில் சங்க காலத்தில் வழங்கிய தமிழின் அடிப்படை அமைப்பு இன்றும் மாறவில்லை என்றாலும் பல சொற்கள் பொருள் உணர்வதற்கு அரியனவாக அமைந்துள்ளன. உரையின் உதவியின்றிச் சங்க நூல்களைக் கற்றறிவது அரிய முயற்சியாகவே அமைந்துள்ளது. அதனால் உரை தேவைப்படுகிறது. எந்த இலக்கியமும் அது தோன்றிய காலத்தில் உரையின்றி உணரக்கூடியதாகவே அமைந்திருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல உரையில்லாமல் அறிந்துகொள்ள முடியாத நிலை உருவாகிறது. இந்த விதிக்குக் கம்பராமாயணமும் விலக்கானதன்று. அதனால்தான் கம்பராமாயணத்திற்கும் உரை தேவைப்படுகிறது.

கம்பராமாயணம் முழுவதற்கும் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் என்னும் பெருந்தகை அரிதின் முயன்று உரை வரைந்து தமிழ் மக்களுக்குப் பேருதவி புரிந்தார். அவருக்கு முன்னேயும் இராமாயணத்தின் சிற்சில பகுதி களுக்கு வேறு சிலர் உரை கண்டுள்ளனர். ஆனால் வை.மு.கோவின் உரை தன் செல்வாக்கால் அவ்வுரைகளை யெல்லாம் 'இரவி என்பான் தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல்' ஒளி யிழக்கச் செய்துவிட்டது. அவ்வுரைக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அறிஞர்கள் பலரைக் கொண்டு இராமாயணச் சுவடிகளை ஒப்புநோக்கி நல்ல பாடங்களைக் கண்டு மூலத்தைச் செப்பம் செய்து உரை வரைந்து வெளியிட்டுக் கம்பராமாயணத் திற்குப் பெருந்தொண்டு புரிந்தது உ.வே. சாமிநாதஐயர் நூல்நிலையம், ஐயரவர்கள் எழுதிவைத்திருந்த சில குறிப்புகளின் துணையோடு இராமாயணம் முழுவதையும் உரையோடு வெளியிட்டது. மூலத்தை

மட்டும் சுவடிகளை ஆராய்ந்து செப்பஞ் செய்து பொருள் விளங்கும் வகையில் பிரித்து, மர்ரே பதிப்பகம் நல்ல பதிப்பு ஒன்றினைக் கொண்டு வந்தது. இப்பதிப்புகள் கிடைக்காத நிலையில், சென்னைக் கம்பன் கழகம் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீ. அவர்களை முதன்மை யாகக் கொண்ட அறிஞர் குழு ஒன்றைக்கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் பிற்சேர்க்கையாக இடம் பெற்றுள்ள பாடவேறுபாடுகளில் மிகுதியாக உள்ள பாடம் எது என்பதனை விருப்பு வெறுப்பின்றித் தேர்வு செய்து, மூலத்தை அடிக்குறிப்புடன் வெளி யிட்டது. இதனால் சில நல்ல பாடங்கள் கிடைத்தன.

அதனைத் தொடர்ந்து கங்கைப் பதிப்பகம் மூலத்தை அடிக்குறிப்பு களுடன் வெளியிட்டது. கோவைக் கம்பன் கழகம் அறிஞர் அ.ச.ஞா அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அறிஞர்கள் சிலரை உரை வரையச் செய்து அதனை மிகக் குறைந்த விலைக்கு வெளியிட்டுக் கம்பராமாயணம் பலரையும் அடையுமாறு அரும்பணி புரிந்தது.

இந்நிலையில் அறிஞர் பழ.பழனியப்பன் தாம் ஒருவராகவே இராமாயணத்திற்கு உரை வரையும் முயற்சியில் ஈடுபட்டுச் சில ஆண்டுகள் உழைத்து அரிய உரையினை வெளிக்கொண்டு வருகிறார். இவர் வங்கியில் மேலாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தமிழ்ப் பற்றினால் கம்பராமாயணத்தைப் பலகால் கற்றுத் தேர்ந்து உரை வரைந்துள்ளார். இவரது முயற்சி பெரும் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியது.

ஒவ்வொரு உரையிலும் நிறையும் உண்டு. குறையும் உண்டு. வை.மு.கோ. பதிப்பு, சாமிநாத ஐயர் நூல்நிலையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவை வெளியிட்ட பதிப்புகள் எல்லாம் சிறப்பாக அமைந்திருந்த போதிலும் அவற்றில் வான்மீகத்தையொட்டி உரை வரைந்துள்ளதால் சில இடங்களில் கம்பர் செய்துள்ள மாற்றங் களையொட்டி உரை அமையாமல் மாறாக அமைந்து பொருந்தாமல் உள்ளது. மேலும் புலமையுடையார்க்கே பெருவிருந்தாக அமைவன. அடிகுறிப்புடன் வந்துள்ள உரைகள் ஓரளவு கற்றவர்களுக்கே பயன்படுவனவாக அமைந்துள்ளன. கோவைப் பதிப்பு நல்ல முயற்சி

எனினும் அது பலரது முயற்சியாக அமைந்தமையால் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான அணுகுமுறையில்லை. ஆனால் இவையெல்லாம் கம்பராமாயணத்தைப் பரப்பும் முயற்சியில் மைல்கற்களாக அமைந்தன. என்பதனை நன்றியோடு நாம் போற்றுதல் வேண்டும். இந்நிலையில் அறிஞர் பழ. பழனியப்பன் அவர்களின் கம்பராமாயண உரை வெளிவருகிறது. இவ்வுரையின் நோக்கம் ஓரளவு தமிழ் உணர்ந்தவர்களும் கம்பரைக் கற்று மகிழவேண்டும் என்பதுதான்.

இவ்வுரை பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை என்னும் மரபில் அமைந்த உரை அன்று. இவ்வுரையில் பெரும்பாலான பாடல்களுக்குப் பொருத்தமான தலைப்புத் தரப்பட்டுள்ளது. அது பாட்டின் கருத்தினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அடுத்து, பாடல்கள் சந்தி பிரிக்கப்பட்டுப் பொருள் விளங்கும் வகையில் தரப் பட்டுள்ளன. அதன்பின் அருஞ்சொற்களுக்குப் பொருள்தரப்பட் டுள்ளது. இறுதியில் பாட்டின் கருத்து விளக்கப்படுகிறது. இப்பகுதியில் பாட்டில் காணப்படும் சிறப்பு. அக்கருத்தினை விளக்கும் வகையில் அமைந்த பிற நூல்களின் பகுதிகள் முதலிய இடம் பெற்றுள்ளன. இப்பகுதியே இவ்வுரையின் உயிரான பகுதி எனலாம்.

இதில் உரையாசிரியர் உரையினைப் படிப்பவரோடு நேரில் உரையோடுவதுபோல் நடை அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. நூலாசிரியரின் விரிந்த புலமையினையும் கூர்த்த நுண்ணறிவினையும் இப்பகுதியில் காணலாம். சங்க இலக்கியம், திருக்குறள் தொடங்கி வாலியின் அவதாரபுருஷன் வரை அனைத்து நூல்களிலிருந்தும் மேற்கொள் காட்டியுள்ளார். பிரபுலிங்கலீலை. இறையனார் களவியல் உரை, தாயுமானவர். திருவருட்பா, சேனாவரையம் முதலிய அதிகம் மேற்கொள் காட்டப்படாத நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி யிருத்தல் நூலாசிரியரின் விரிந்த புலமைக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. சான்றாக ஒரு பாடலைக் காணலாம்.

‘கல்லிடைப் பிறந்து போந்து’ என்பது ஆற்றுப்படலத்தின் பத்தொன்பதாவது பாடல் இப்பாடலின் விளக்கத்தில் “இந்தப் பாடல் கம்பனுடைய சமயச்சார்பின்மையைத் தெரிவிக்கும் ஒரு முக்கியமான பாடலாகும். இந்த வெள்ளப்பெருக்கையும் நதியையும், சமயத்தையும்

இணைத்து அண்மைக்கால ஞானிகள்கூடப் பாடியிருக்கிறார்கள். 'பொங்கு பல சமயம் எனும் நதிகளெல்லாம் புகுந்து கலந்திட, நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே'' என்று இராமலிங்கவள்ளலார் பரம்பொருளைப் பற்றிப் பாடுகிறார். ''வேறுபடு சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டல்லால், மாறுபடும் கருத்தில்லை. என்பார் தாயுமானவர். ஒரு வேறுபாடு புரிகிறதா? பல ஆறுகள்தானே ஒரு கடலில் சென்று சேர்கின்றன. பல சமயங்களால் பல பெயர்களால் வழங்கப்படும் பரம்பொருள். ஒன்றுதானே? ஆனால் கம்பன் இங்கு என்ன கூறுகிறான். ஓர் ஆறு பல கால்வாய்களாகப் பிரிந்து பரந்து செல்கிறது என்றும். ஒரு பரம்பொருள் பல சமயத்தாராலும் பல தெய்வங்களாக வழங்கப்படுகிறது என்றும் கூறுகிறாரே? அதுதான் கம்பனுடைய காவியத் தனிச்சிறப்பு'' என்று எழுதியுள்ளார்.

இதில் இப்பாட்டைப் பற்றி ஒரு மதிப்பீடு; பிறர் கருத்தோடு ஒப்பீடு. கம்பர் சொல்லும் முறையில் காணும் தனித்தன்மை எல்லாம் காணப் படுகின்றன. இவ்வாறே இப்படலத்தின் இருபதாம் பாட்டின் விளக்கத்தில் கம்பர் சரயுவாற்றின் வெள்ளப்பெருக்கினை விளக்கப் பயன்படுத்தியுள்ள உவமைகள் எல்லாவற்றையும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. இது கற்பாருக்குக் கம்பரின் ஆற்றுவருணனையைத் தொகுத்துக் காண உதவியாய் அமைந்துள்ளது.

இவரது ஆழ்ந்து பொருள்காணும் திறத்திற்குப் 'பொருந்திய மகளிர்' என்னும் நாட்டுப்படலம் பதினைந்தாம் ஆம் பாடல் தொடருக்கு எழுதியுள்ள உரையினைக் குறிப்பிடலாம். 'பொருந்திய' என்பதற்குத் தொல்காப்பியர் கூறும் பத்துப்பொருத்தங்களைக் கூறுவதோடு சோதிடம் கூறும் பொருத்தங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கங்கே வான்மீகத்தோடும் பிற இராமயணங்களோடும் ஒப்பிட்டு உரை வரைந்துள்ளார். இராமனுக்கும் மற்றப் பிள்ளை களுக்கும் வசிட்டர் பெயர் சூட்டிய நிக்ழ்ச்சியைத் தெரிவிக்கும் பாடல்களுக்கு உரை வரைந்த பின் இறுதியில் [திருவவதாரப் படலம் 125ஆம் பாடல்] விளக்கத்தில். ''நான்கு குழந்தைகளுக்கும் வசிட்டர் பெயர் சூட்டியதாக வான்மீகம் கூறவில்லை. இது கம்பனின் கை

வண்ணம். வசிட்டர் முக்காலமும் உணர்ந்தவர். ஆதலால் அவர்கள் பின்னர் ஆற்றப் போகும் செயல்களை முன்னரே உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல நாமகரணம் செய்திருக்கிறார் என்பதாம்'' என்று குறித்துள்ளார். விராதன் துதியினை விளக்குமிடத்து [2662] ''விராதன் துதி இவ்வளவு விரிவாக வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது நோக்கத்தக்கது'' என்று குறித்துள்ளார். கரன் வதை முடித்த பின் திரும்பிய இராமனை இலக்குவனும் சீதையும் கண்ணீரால் அவன் திருவடிகளைக் கழுவினார்கள் என்கிறார் கம்பர் [3163]. வான்மீகத்தில் சீதை இராமனை இறுகத் தழுவிக்கொண்டாள் என்றும் பாராட்டினாள் என்றும் வருகிறது. இவ்வேறுபாட்டினை ஆசிரியர் குறிக்கத் தவறவில்லை. ''அப்பாட்டின் இறுதியில் ''இங்கே சீதை இராமனை வெகுவாகப் பாராட்டி சத்திரிய உபசாரங்கள் செய்தாள் என்று மிக விரிவாக வான்மீகி கூறியிருப்பது நோக்கத்தக்கது'' என்று குறித்துள்ளார். 'இல்லாத உலகத்து எங்கும்' என்னும் பாட்டில் [3872] இராமன் தன்னுடன் உரையாடிய அனுமனை இலக்குவனிடம் சொல்லின் செல்வன் என்று பாராட்டிப் பேசுகிறான். இப்பாட்டின் உரையின் இறுதியில் ''இந்த இடத்தில் அனுமனைப் பற்றி இராமன் இலக்குவனிடத்துப் புகழ்ந்து கூறியதை 10 ஸ்லோகங்களில் கூறி யிருக்கிறது வான்மீகம்'' என்று சுட்டுகிறார். சுக்கிரீவனை நம்புதல் கூடாது என்ற இலக்குவனுக்கு இராமன் ஒழுக்கம் போன்ற நடை முறையை நாம் மனவுணர்வில்லாத குரங்குகளிடம் எதிர்பார்த்தல் கூடாது என்று விடை தருகிறான். இவ்விடத்தில் [4082] ''இவ்வாறு இலக்குவன் மறுப்புக் கூறுதலும். இராமன் இதற்கு மறுமொழி கூறுதலும் வான்மீகத்திலோ. அத்யாத்ம ராமாயணத்திலோ காணப்பட வில்லை என்று குறித்துள்ளார். இவ்வாறு வாலி தன் தவற்றினை உணர்ந்து இராமனிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டும் 'தாய் என உயிர்க்கு நல்கி' என்னும் பாட்டின் விளக்கத்தின் இறுதியில் ''இவ்வாறு ஞானம் பெற்ற வாலிக்குத் திரும்பவும் உயிரையும் உடலையும் அளிப்பதாக இராமன் தெரிவித்தாகவும். வாலி அதை மறுத்து இராமபிரானின் முன்னர் இறந்து போவதையே தான் விரும்புவதாகவும் அதுவே பெருமை தரும் என்று கூறியதாகவும் துளசிதாசர் எழுதிய ''ராமசரிதம் தெரிவிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார்.

அகத்தியப்படலத்தில் [2769-92] அகத்தியரைக் குறித்து வரும் புராணச் செய்திகளையெல்லாம் விளக்கமாகத் தந்துள்ளார். இஃது உரையாசிரியரின் விரிந்த புலமைக்கும் உழைப்புக்கும் சான்றாக அமைந்துல்ளது. அங்கங்கே இப்படித் தேவையான விளக்கங்களைத் தந்து உரையினை முழுமையுடையதாக ஆக்கியுள்ளார்.

இந்நூலில் உரையின் வாயிலாகச் சில இடங்களுக்குத் தெளிவு கிடைக்கிறது என்பதற்கு பதச்சோறாக ஒரு பாடலில் அமைந்துள்ள உரையினைச் சுட்டலாம். தூதுவர்கள் இராமன் வில் முறித்த செய்தியினைத் தெரிவித்தற்கு மிதிலையிலிருந்து அயோத்திக்குச் சென்றனர். அதனைக் கம்பர். ''கடுகிய தூதரும் காலின்காலின் சென்று'' [819] என்று குறித்துள்ளார். இதற்கு வை.மு.கோ. அவர்கள் காலால் நடந்து சென்றனர் என்று உரை வரைந்துள்ளார். இது பொருத்தமாக அமையவில்லை. அரச தூதர்கள் காலால் நடந்து சென்றார்கள் என்பது சிறப்பாக இல்லை. அவர்கள் விரைந்து சென்று செய்தியைத் தெரிவிக்கும் ஊக்கம் உடையவர்கள். அதனால் தேரில்தான் சென்றிருப்பார்கள். அதுவே பொருத்தமாக அமையும். அறிஞர் பழ. பழனியப்பன் அவர்கள் தூதர்கள் தங்கள் வாகனங்கலில் காற்றைவிட வேகமாகச் சென்றனர் என்று எழுதியுள்ள உரை அவருக்கு ஒரு 'சபாஷ்' போட வைக்கிறது.

ஓரிரு இடங்களில் முன்னைய உரையினையே ஒட்டி விளக்கம் தரப்பட்டுள்ளது. 'செவ்வழி உருட்டிய' [2248] என்னும் பாடலுக்கு முன்னையோர் எழுதிய போக்கிலேயே இவரும் உரை கண்டுள்ளார். 'இன்மை நண்பினோர்' என்பதற்கு மாறாக 'இனிய நண்பினோர்' என்னும் வேறொரு பாடத்தைக் கொண்டுள்ளார். அதனால் உரை மனங்கொள்ளத்தக்க வகையில் அமையவில்லை. அதற்குக் காரணம் அப்பாடலில் வரும் உலகினில் என்பதனைப் பிரிப்பதில் உள்ள இடர்ப்பாடாகும். உலகினில் என்பதில் இல் என்பது ஏழாம் வேற்றுமை உருபு அன்று. அப்படி எல்லாரும் கொண்டதால் பாட்டிற்குப் பொருள் காண்பதில் இடர் ஏற்பட்டுள்ளது. அதில் இல் என்பது வினைமுற்று. இல்லை அதனால் வறியவர்கள் மேலுலகத்தில் இருக்கிறார்கள் என்று கருதி அவர்களைத் தேடி அங்குச் சென்றாயோ?'' என்று பரதன்

ஆற்றாது புலம்புவதாகப் பொருள் காண்பதே இயல்பாகவும் பொருத்த மாகவும் அமையும்.

இதுபோலவே இராமனும் இலக்குவனும் குரக்குச்சேனையினை இருபது நாள்கள் கண்டனர் என்றும் அப்படிக் கண்டும் அதன் நடுப் பகுதி வரை கூடக் காண முடியவில்லை என்றும் கம்பர் தெளிவாகத் தெரிவித்துள்ளார். 'பத்து இரட்டி நன்பகல் இரவு ஒருவலர் பார்ப்பார். எத்திறத்தினும் நடுவு கண்டிலர் முடிவு எவனோ?' என்பது கம்பர் பாடல்; இதன் விளக்கத்தில் 'பத்து இரட்டி' என்பதற்கு இருபது நாட்கள் என்பது நேர்பொருள் அல்ல. பல நாட்கள் என்பது மறை பொருள். படையின் அளவின்மையைச் சிறப்பித்துக் கூறினார் என்க'' என்று கூறியுள்ளார். பாடலில் தெளிவாக இருபது நாள்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் இதனையும் மீளச் சிந்தித்தல் வேண்டும். ஒருவரால் எல்லாச் சிக்கல் களுக்கும் தீர்வு காண இயலாது என்பதனை மனங்கொள வேண்டும். இவை இன்னும் கம்பராமாயணத்தில் தெளிவு பெறுவதற்குரிய பகுதிகள் உள்ளன என்பதற்காக எடுததுக்காட்டப்படுகின்றன. இவ் வாசிரியரின் முயற்சியால் எவ்வளவோ விளக்கங்களும் தெளிவுகளும் கிட்டியுள்ளன. சராசரி தமிழறிவு உள்ளவர்களும் எளிதில் கம்ப ராமாயணத்தைப் பொருளுணர்ந்து படித்துச் சுவைக்க ஒளிவிளக்காக இவ்வுரை அமைந்துள்ளது. அறிஞர் திரு. பழ. பழனியப்பன் முயற்சி யைப் பாராட்டி எஞ்சிய சுந்தர காண்டம் முதலான பகுதிகளுக்கும் இவரது உரை விரைவில் வருதல் வேண்டும் என்றும் அதற்குத் தமிழ் மக்கள் ஆதரவும், இறையருளும் துணைநிற்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். உரையாசிரியருக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டு தல்கள். வாழ்க அவரது தமிழ்த்தொண்டு.

அன்பன்

சென்னை-600 101

4-3-2007.

ஆய்வுரை

கம்பனின் காப்பியம் கல்விப் பெருங்காப்பியம். எல்லா வகையானும் கம்ப இராமாயணம் ஒரு பெருநூல். தொடர் பழகுடைய, கதையோட்டமுடைய, கருத்தோட்டமுடைய, தமிழ்ப் பண்பாடு காட்டும் பரந்த நூல். அதன் காப்பிய மாந்தர்கள் செந்தமிழ் நிலம் சாரார் எனச் சொல்லி முழுப் பார்வை காணும் கண்ணோட்டம் பெறாச் சிலர் உண்டென்றாலும், கற்றுணர்ந்தோர் போற்றும் பெருங்காப்பியம் கம்ப இராமாயணம். அளவால், அச்சால் இந்த மிகுபெரும் படைப்பு 'கல்வியில் பெரியவன் கம்பன்' எனும் பெருமை சேர்த்தது. ''ஒரு மொழிக்கு நிலக் காப்பியங்களே தோன்ற முடியுமா? மொழியின் பரந்த வளர்ச்சிக்குத் தழுவலும் வேண்டும். ஆனால் அத்தழுவல் தழுவலாகத் தெரியாது. நிலத்தோடும் நிலமக்கள் மரபோடும் ஒட்ட வேண்டும். மொழிபெயர்ப்பு இதுவென எவ்விடத்தும் தோன்றாதிருக்க வேண்டும். 'மொழிபெயர்த்த அதற்பட யாத்தல்' என்பார் தொல்காப்பியர்'' என மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் கம்பனின் காப்பியப் பெருமைக்கும் தமிழ் உணர்விற்கும் விளக்கஞ் சொல்வர். மொழி வளர்ச்சிக்குக் கம்ப இராமாயணம் ஒரு வழிகாட்டி. இராமாயணப் பாத்திரங்களைத் தமிழ் மொழிமை குன்றாது செய்யுட் படுத்தியவன் கம்பன். சொல்லாற்றல் வேண்டுவோர்க்கு அருமருந்து, பெருவிருந்து கம்ப காதை. 'கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!' என முழங்குவார் கம்பன் அடிப்பொடியார்.

இராமகாதை பட்டி தொட்டியெல்லாம் ஊடுருவிய காதை. கம்பனின் நோக்கு தமிழ்நோக்கு. தன் தமிழ்நோக்குக்குக் கருவியாகச் சூழ்திறனோடு இராமகாதையைத் தழுவினான் கம்பன். அவன் மொழி பெயர்த்தானல்லன். தமிழ் வளர்த்தானாவான். தமிழ் மக்களின் அக வழக்கங்கள், புறப்பழக்கங்கள் இடம்பெற்று அவன் படைப்புக்கு முன்னர்த் தோன்றிய திருக்குறள், சீவக சிந்தாமணி, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலான நூல்கள் இராமவதாரக் காப்பியத்தை இயக்கின. சொல்லாலும் பொருளாலும் கம்பன் 'தமிழ் இயக்குநர்'

ஆனான். அவன் இயக்கிய 'இராமாவதாரம்', 'கம்ப இராமாயணம்' எனக் கம்பன் பெயரினை முன்னிறுத்தியது. கம்பனின் கவியொளி ஈடற்றது. அவன்தம் கவிஒளிக் கதிர்கள் பரவுமிடமெல்லாம் கவி பிறக்கும். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பர். அவன் கவிதையின் சக்தி அவனைக் ***'கவிச் சக்கரவர்த்தி'*** ஆக்கிற்று. 'கம்ப நாடன்' எனப் போற்றிற்று.

தமிழில் பெருநூல்கள் பல கம்பனுக்கு முன்பே தோன்றினாலும், பாடல் எண்ணளவில் பத்தாயிரத்தை மிஞ்சும் பாடற் காப்பியம் நமக்குக் கிடைத்துள்ள கம்ப இராமாயணமே. கம்பனை அறியாத் தமிழர் இல்லை. அவனைத் தெரிவோர், அறிவோர், ஆராய்ந்தோர் பல வகை யாளராவார். கடல் போலும் அவன் கவிதைப் பெருக்கில் அலைகடல் இன்பம் பெறுவோர் ஒரு சாரார்; ஆழ்கடல் இன்பம் பெறுவோர் இன்னொரு சாரார். அலைகடற் காற்றை வேண்டுவோர் சிலர், ஆழ்கடல் முத்தையும் வேண்டுவோர் இன்னும் சிலர். கம்பனில் தோய்வோரின் காப்பியப் பார்வைகள் வேறுபடும். பாட பேதங்கள், மிகைப்பாடல்கள், உரை நூல்கள், உரை வேற்றுமைகள் எல்லாம் கற்றுணர்ந்தோரின் சிந்தனைக் களத்தில் 'கலிங்கத்துப் பரணி'யாகும். 'சொலல் வல்லோர்' பலரை உருவாக்கும் சொற்போர்க் கருத்துக்கள் பொதிந்த நூல் கம்ப காவியம். கவியரங்குகள், பட்டி மன்றங்கள், வழக்காடு மேடைகள் எனக் கம்பனை மையப்படுத்தி வளரும் சொற்களங்களே இதன் சான்று. கம்பனைக் கேட்போர், கற்போர், ஆராய்வோர் என அவன்பால் ஈடுபடுவோரை மூன்று நிலைப் பிரிவினராகக் கொள்ளலாம். கம்பனை ஒரு முறை கேட்போர் மேலும் கேட்க விரும்புவர். பலமுறை கேட்டோர் அவனைக் கற்க விரும்புவர். அவ்விருப்புக் கூடி வர உரைநூல் தேடுவர். கற்றோரோ மேலும் தமிழ் பருக வேண்டி ஆய்வு மேற்கொள்வர். ஈத்துவக்கும் இன்பம் இன்னும் பெரிதென உணர்ந்து கம்பனைப் பரப்பிக் கன்னித் தமிழ் வளர்ப்பர். இவையெல்லாம் கம்பனை முழுப்பார்வை காணும் நோக்குடை யோரின் வரிசைப்படிகள்.

இந்த வரிசைப் படிகளில் ஒவ்வொரு படியாக ஏறி வந்தவர் இந்த நூலின் உரைநூலாசிரியர் திரு. பழ. பழனியப்பன் அவர்கள். அவர்பால் 25 ஆண்டுகட்கும் மேல் நட்புடையோன் நான். அவரை வங்கி அலுவலராக, மேலாளராக, முதுநிலைத் தலைவராக அவர் துறை சார்ந்த காலத்திலும், பொதுவாழ்வில் அரிமா சங்கத் தலைவராக அவர் செய்த நலம் சார் ஒப்புரவிலும், தமிழ்ப் பொழிவுகள் எங்கு நடப்பினும்

துணை சேரும் தமிழ் உணர்விலும் அவரைக் கண்டவன் நான். கம்ப காதையில் அவருக்கிருந்த தனி ஈடுபாட்டையும் நான் அறிந்திருந் தேன். 12 ஆண்டுகளுக்கு முன் அவர் நாமக்கல் வங்கிக் கிளைக்கு மாறியபோது கம்பன் கழக மூல நூலைக் கேட்டார். அந்த நூல் மிக மெல்லிய தாளில், 6 காண்டங்களையும் அடக்கிய ஒரே நூலாக மிக நேர்த்தியாகக் கம்பன் கழகம் வெளியிட்ட பாராட்டுக்குரிய பதிப்பாகும். இப்பதிப்பு ஏனோ எளிதில் அதன்பின் கிடைக்கவில்லை. கழிவு போக உரூபா. தொண்ணூறு அடக்க விலையில் வாங்கிப் பாதுகாத்த அந்த நூலைத் தயங்கித்தான் திரு. பழனியப்பனிடம் கொடுத்தேன். பொதுவாக நூல் இரவல் பெறுவோர் தாமாகத் திருப்பித் தருவதில்லை. தந்தாலும் படித்திருக்க மாட்டார்கள் என்பது என்னைப் போல் பலருக்கும் அனுபவம் இருக்கும். மாறாக, பழனியப்பன் அதனைத் திருப்பிக் கொடுத்தபோது அந்த நூலின் பயன்பாடு எனக்கு வியப்பைத் தந்தது. பக்கங்கள் முழுவதிலும், பாடல்கள் பலவினும் வரைகோலால் [பென்சில்] பல குறிப்புகள் எழுதியிருந்தார். அவ் வரைகோல் குறிப்புக்கள் பின்னர் உரைநூலாய் உருப்பெறும், வளரும் கருத் தோற்றமென் அன்று நான் அறியவில்லை. அவரின் அக வேட்கை, தொடர்ந்து கொழுந்துவிட்டு எரிந்து அணையா விளக்காகப் பன்னிரு ஆண்டுகள் கரு வளர்த்து உருவமைந்த ஓர் அரிய எளிய உரைநூலைப் பெற்றுத் தந்துள்ளது. பழனியப்பன் அவர்கள் முறையான தமிழ்க்கல்வி கல்லூரியில் பயின்று புலமை பெற்றவரல்லர்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்ற தமிழுணர்வுடன், கம்பனின் ஆசைப் பாடலான பூசைப் பாடலை நினைவு கூர்ந்தார். பாற்கடலை நக்கியே முழுதும் குடிக்கும் ஆசை, பூசைக்குப் பேராசைதான். ஆனால் அரவம் கேட்டு ஓடித் தன்னை ஒளிக்கும் இயல்பான பூசையல்ல இப்பூசை. இப்பூசை, 'துன்பம் உறவரினும் துணிந்து செயலாற்றி இன்பம் பயக்கும் வினை' செய்யும் பூசையென வேறுபட்டு நின்று திருவருள் துணையாய்ச் செயற்கரிய செய்த சாதனைப் பெரியவர் இந்நூலாசிரியர்.

இந்நூல் தமிழாய்ந்த புலமைசால் அறிஞர் பெருமக்களைக் குறிகொண்டு எழுதிய உரையல்ல. புலவரல்லாதோரும் கம்பச் சுவை பருக வேண்டின், ஒரு குடைக்கீழ், பொருளறிய வேண்டிய பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை அனைத்தையும் தந்துள்ள உரைநூல். ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் முன்னுரையாக, கதை

யோட்டம், காரண காரியங்கள் என்னென்ன அவற்றுள் அடங்குமெனத் தொடர்பழகுடனே, படிப்போரின் பசியோட்டம் தூண்டுமாகத் தரப் பட்டுள்ளது. தமிழறிந்த எவரும் கம்பனைப் படிக்க முடியும், வேண்டும் என்னும் நோக்கே, உரைநோக்கு என நூலாசிரியர் தெளிவு காட்டி யுள்ளார். படிப்பவர் மனதில் படிக்குங்காலை என்னென்ன கேள்விகள் வரக்கூடுமென, அனுபவப்பூர்வமாகத் தனக்குள்ளே வினவி, விளக்கங்களைத் தந்துள்ளார் ஆசிரியர். அவ்வாறுள்ள விளக்கங்களில் அவர் காட்டும் மேற்கோள்கள், ஒத்த கருத்துக்கள் சங்க நூல்களி லிருந்து மட்டுமன்றித் தற்கால நூல்களிலும், தற்கால நூலாசிரியர் களிடமிருந்தும் பல இடங்களில் கையாண்டமை, தேடும் சிரமம் இல்லாத செய்தித் தொகுப்பாகப் பெறப்பட்டுள்ளது. கம்பனை மட்டு மன்றி திருக்குறள், புறநானூறு, கலித்தொகை முதல் நளவெண்பா, திருமுறைகள், கவிஞர் வாலியின் பாடல்கள் வரை சுவைத்துப் பார்க்கும் வாய்ப்பாகவும் படிப்போர், விருந்தாகவும் அமைந்துள்ளது.

கோசல நாட்டின் செழிப்பையும் சிறப்பையும் கூறும் நாட்டுப் படலத்தில் கோசல மாதரின் கற்பென்னும் திண்மைகள், வழுவாத நெறியால், மாரியும் வழுவாது பெய்து நாடு செழிப்புற்றது எனப்பாடும் 'கற்பின் நின்ற கால மாரியே' எனும் கம்ப வரிகளை விளக்கு முகத்தான், பெண்ணின் கற்புக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை ஆசிரியர் காட்டும் மேற்கோள்கள் பல. 'கொழுநன் தொழு தொழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' [55]யெனத் திருக்குறளிலும், 'மழை வேண்டில் தருகிற்கும் தன்மையனே' எனக் கலித்தொகையிலும், 'வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது; நீள்நில வேந்தன் கொற்றம் சிதையாது, பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' எனச் சிலப் பதிகாரத்திலும் அவர் காட்டும் தொடர்புடைக் கருத்தோடும் மேற் கோள்கள் படிப்போர் மனத்தில் பரந்த தமிழ் இலக்கியப் பார்வையைப் பதிக்கின்றன.

அயோத்தியா காண்டம் மந்திரப் படலப் பாடலில் கம்பன் வள்ளுவனைக் கையாளும் திறனை வியந்த உரையாசிரியர் கம்பனின் ஒவ்வொரு அடியும் ஒரு குறட்பாவை உள்ளடக்கிய நயத்தை விளக்கு கிறார். ''ஊருணி நீர் நிறையவும், பயன் மரம் பழுத்தது ஆகவும் கார் மழை பொழியவும் கழனிபாய் நதி வார்புனல் பெருகவும், மறுக்கின்றார் யார்?'' என இராமன் உலகவாம் பேரறிவாளன், நயனுடையான், பெருந்தகையான், ஒப்புரவாளன் முடி சூடுவதால் மக்களும் உலகும் பயன் எய்துவரென மூன்று குறட்பாக்களை ஒரு

பாடற் சாறாகக் கவி படைத்த கம்பனை நம்முன் நிறுத்துகிறார், நூலாசிரியர்.

பிறரை வைவதில் இருவகையுண்டு. பேரொலி செய்து வைதல் ஒருவகை. மனத்துள்ளேயே ஒலி சுருக்கி வைவது இன்னொரு முறை. கைகேயியாம் மாகயத்தியை இருவகைப் பறவைகள் வைதன. கோழி கூவியது பேரொலி எழுப்பி வைதலை ஒத்திருந்தது. பிற பறவைகளின் மெல்லொலி மனதுள்ளே வைதலை ஒத்திருந்தது எனக் கைகேயி சூழ்வினைப் பாடலை விளக்கும் உரையாசிரியர் தன் எளியமுறை விளக்கத்தால் நம் மனம் பதிகிறார்.

கம்பனின் வேறுபட்ட உவமை நயங்கள் உரையாசிரியரின் பார்வையில் படுகின்றன. உருமாறிய சூர்ப்பணகை வரும் மெல்லோசைச் சந்தப் பாடலில், 'அஞ்சொல் இளமஞ்ஞை என' என்னும் வரிகளில் மயில் இனிய சொல்லுக்கு உவமித்துள்ள வேறுபாட்டைக் காணலுற்ற ஆசிரியர், பொதுவான உவமை மயிலை மகளிரின் சாயலாக உவமிப்பார்கள். என விட்டு விடாமல், 'மயில் கண்டன்ன மடநடை மகளிர்' என்னும் திருமுருகாற்றுப்படையையும் மேற்கோளிட்டு அதில் மயில் மகளிர் நடைக்கும் கூட உவமையாகிறது என்னும் செய்தியைத் தருகிறார்.

கிட்கிந்தா காண்டம் வாலி வதைப் படலத்திலே 'காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான் பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால், மாலினால் தரு வன்பெரும் பூதங்கள்' என்னும் வரிகளில், 'மாலினால் தரு' எனும் கவி வரிக்கு இந்நூலாசிரியர் கூறும் விளக்கம் சைவ வைணவச் சமத்து வத்தைப் பிரதிபலிக்கிறது. பல உரையாசிரியர்களின் 'திருமாலால் படைக்கப்பட்ட' என்னும் உரையில் வேறுபட்டு 'மால்' எனும் சொல்லுக்கு 'அன்பு' எனும் அழகிய பொருளும் உண்டாதலால் சைவ சமய உரையாசிரியர்கள் கூறும் பொருளும் ஏற்புடைத்து என்கிறார் பழனியப்பன் அவர்கள்.

ஆசிரியர் உரை யாத்துள்ள் 4845 பாடல்களை உள்ளடக்கிய 4 காண்டங்களிலும் எளிய, புதிய, தொகுத்த பல நயமான விளக்கங்கள் விரவிக் கிடப்பதைக் காணலாம். கம்ப காதைக்கு எளிதில் கிடைக்கும் மூலமும் உரைகளும் இல்லையென்றே சொல்லவேண்டும். ஒருமுறை போட்ட பதிப்புகள் மறுபதிப்புக்கு அதிகம் வரவில்லை. இது தமிழர்களின் தவக்குறைவே.

இதைப் பெருமளவு நிறை செய்யும் நோக்கிலே, இந்நூலாசிரியரின் இப்பெரும்பணி பயன்படுமென்பது தெளிவு. சிறப்புடைய இவ்வுரை நூல் மேலும் சிறக்க எனக்குப் புலப்பட்ட இருகருத்துக்களை ஆசிரியர்க்கு அறிவுரையாக அல்ல, ஆலோசனையாக வைக்க விரும்புவன். பல இடங்களில் வடமொழிச் சொற்கள் பொதிந்துள்ளன. பதவுரையிலும், விளக்கவுரையிலும் இவற்றை வரும் பதிப்புக்களிலும், எஞ்சிய காண்டங்களிலும் திருத்தம் செய்தல் தமிழ் நலம் கூட்டும். கம்பனே, வடமொழிப் பெயர்களைக் கூடத் தமிழ் இலக்கண மொழிமை குன்றாமல் எழுதியோனல்லவா? அவன் வழியில் சிந்திப்பது இவ்வுரைக்கு மேலும் வலிமை சேர்க்கும் என்பது ஒரு கருத்து. ஆசிரியர் பாடல்களைச் சொற்பிரித்துப் போட்டிருப்பது எளிதில் படிக்கவும், புரியவும் கூடும் எனும் பன்னோக்காகும். அது தவறல்ல. ஆனால் இன்றைய மாணவர்களுக்கு அதிலும் இளஞ்சிறார்களுக்குக் கவிதைகள் மனனம் செய்யும் பயிற்சி குறைவே. ஓசையும் தொடையும் படச் சேர்ந்து படிக்கும் முறையில் பாடல்கள் மனம் பதியும் என்பது உண்மை. என் சொந்த அனுபவம்கூட. இதைச் சிந்தித்து உரிய வகையில் மூலம் வெளிப்படச் செய்வது இன்னொரு கருத்து.

இவ்வுரை நூல் நூலாசிரியரின் முதல் முயற்சி. மிகவும் போற்றுதற்குரிய பெரு முயற்சி. பன்னிரு ஆண்டுகளுக்கு மேல் குறிக்கோள் திண்மையுடன் செய்துள்ள சாதனை. மேலும் உள்ள சுந்தரகாண்டம், யுத்த காண்டம் இரண்டையும் தொடர்ந்து அவர் முடிக்கத் திருவருள் துணை செய்யும். இந்நூல் உருவாக, நூலாசிரியர்க்குத் துணை நிற்கும் கம்பன் கழகத்தாரும், திருமகள் பதிப்பகத்தாரும், பிறரும் தமிழ்த் தொண்டாற்றிய பாராட்டுக்குரியவர்கள்.

அன்பன்.

வ.சுப.மா.தொல்காப்பியன்

வாழ்த்துரை

கலைமாமணி முனைவர் ஆறு. அழகப்பன்

மேனாள் தமிழ் துறைத்தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கல்வியில் பெரியவன் கம்பன்; தமிழிற்கு இருவர் 'கதி' [கம்பர், திருவள்ளுவர்] யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல என்ற வரிகளை கம்பராமாயணச் சிறப்புகளை எழுதுபவர்கள், மேடைகளில் உரையாற்றுகிறவர்கள் கூறாமல் இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட இலக்கியத்திற்காக கழகங்களும், அதிகமான பேச்சாளர்களும், தாசகர் களும் தோன்றினர் என்றால் அப்பெருமை கம்பராமாயணத்தையே சாரும்.

கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம் என்று உரத்த குரலில் தொடங்கி மாநாடுகளை நடத்தி இலக்கியச் சுவைஞர்களை அதிகமாக உண்டாக்கிய பெருமை கம்பராமாயணத்திற்கு உண்டு. பகுத்தறிவுக்கு ஒவ்வாத இலக்கியமென்று திட்டவும், எரிக்கவும் விரும்பிய எதிர்பாளர்களை கம்பராமாயண தாசர்களைவிட அதிகமாக படிக்க வைத்து பல பாடல்களைப் பரப்பவைத்த தனிப்பெரும் சிறப்பு கம்பராமாயணத்திற்கு உண்டு.

ஓர் இலக்கியம் தோன்றியவுடன் தொடர்ந்து அவ்விலக்கியம் மக்களைச் சென்றடைய அவ்விலக்கியத்தை மேடையில் உரையாற்றுதல் என்ற நிலையைத் தாண்டி நிரந்தரமாக பாடல்களுக்கு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, நயவுரை என்றெல்லாம் கற்றுத்துறைபோகிய அறிஞர்கள் உரைகள் எழுதத் தொடங்கினர். இக்கருத்திற்கு விரிவாக விளக்கம் தேவையில்லை என்பதை தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இரண்டு நூல்களுக்கும்

அறிஞர்கள் பலர் எழுதிய உரைகள் எடுத்துக்காட்டுகள். ஈராயிரம் ஆண்டுகள் முதுமைபெற்ற இவ்விரண்டு நூல்களுக்கும் இன்னும் தொடர்ந்து உரைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இச்சிறப்புகளை வேறு உலக இலக்கியங்கள் பெற்றிருக்கின்றன என்று கூறமுடியாது.

இவ்விரு நூல்களையும் போல கம்பன் காவியமும் மேடைகளில் கூறப்பட்ட உரைகளையும் எழுத்துவழி எழுதப்பட்ட பெருமை களையும் உடையதாக விளங்குகிறது. கம்பராமாயணத்திற்கு உரையெழுதிய உரைவிற்பன்னர்களில் திரு.வை.மு.கோ. உரை வடமொழி கலந்த எளிமைச் சிறப்புக்கொண்டதாக விளங்க இவ்வுரை பல உரையாசிரியர்களை தோற்றுவித்தது.

அண்ணாமலை பல்கலைக்கழக கம்பராமாயண செம்பதிப்பில் உரைகள் எழுதப்படும்பொழுது சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை தலைமையில் தமிழக அறிஞர் குழு உரை எழுதிய பாங்கினையும் சிறப்பினையும் உலகறியும். இக்காலக்கட்டங்களில் மக்கள் இலக்கியமாக கம்பராமாயணத்தை டி.கே.சி., ராஜாஜி ஆகியோர்கள் தம் உரைகளால் எடுத்துச் சென்றனர்.

கம்பராமாயண உரையாசிரியர் வரிசையில் பரோடா வங்கியில் பணியாற்றி ஓய்வுபெற்ற பழ. பழனியப்பன் அவர்கள் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் ஆகிய காண்டங்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். உரையாசிரியர் பழ. பழனியப்பன் தம் முன்னுரையில் கம்பராமாயணத்தில் தமக்கு ஏற்பட்ட ஈடுபாட்டை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாமக்கல் கிளையில் பணியாற்றிய பொழுது அனுமன் வழிபாடு ஓர் உந்துதலாக அமைய அதுபோது வ.சுப.மா. தொல்காப்பியம் வழி மூல நூல் மட்டும் கிடைக்க ஈர்ப்பு ஏற்பட தமிழிற்கு இன்று அது வரவாகிவிட்டது.

உரையாசிரியர் தம்முன்னுரையில் கம்பராமாயணமும் மூலமும் என்ற பகுதியில் கம்பராமாயண உரைகள் இதுகாறும் வந்தவைகளை தெளிவாக பட்டியலிட்டுள்ளார். இவர் எழுதிய உரையின் நெறிகளை இவரே பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,

பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரை தரப்பட்டிருக்கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறையினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

இவ்வுண்மையை நாம் காண்டங்களை படிக்கத் தொடங்கும்போது விரும்பப்பட்ட பாடல்களை புரட்டும் போதும் காண்கிறோம். பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் புராணம் விவாதத்திற்கு உள்ளது போல கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலம் விவாதத்திற்கு உரியது. இவ்வுரையாசிரியர் எழுதும் உரைகளைப் பார்க்கும் பொழுது இவர் உரைத்திறன் பளிச்சென வெளிப்படுகிறது. கம்பரையும், அவர் காவியத்தையும் முற்றிலும் உணரவேண்டுமா? யாருடைய உதவியுமில்லாமல் இவர் உரையை வைத்து கம்பராமாயணத்தை தனியாக ஒருவர் படித்து கம்பராமாயணச்சுவையை உணரலாம். நாமக்கல் கவிஞர் கம்பரைப் புகழும் போது ''எண்ணி எண்ணி, எப்படித்தான் எழுதினானோ, எண்ணாமல் எங்கிருந்து கொட்டினானோ'' என்று பாடுவர். அவ்வரிகளுக்கு ஏற்ப உரையாசிரியர் பழனியப்பன் தமிழைப் படித்து தமிழ் பேராசிரியராக பணியாற்றும் வாய்ப்பினை பெறாத இவர் இவ்வாற்றலை எவ்விதம் பெற்றாரோ என்று நினைக்கும் போது. மனித உறவுக்கு உரைகல்லாக அவதாரம் எடுத்த இராமர் தான் இவருக்குப் பின்புலமாக விளங்கி யிருக்கிறார் என்பது தெரிகிறது.

தமிழகம் திருவாசகத்திற்கு பண்டிதமணியையும், குறுந் தொகைக்கு இராகவையங்காரையும், நற்றிணைக்கு பின்னத்தூர் நாராயணசாமி ஐயரையும், புறநானூற்றுக்கு ஔவைதுரைச்சாமி பிள்ளையையும், சிலப்பதிகாரத்திற்கு ந.மு.வேங்கடசாமி

நாட்டாரையும் பெற்றிருக்கிறது. இவ்வரிசையில் கம்ப ராமாயணத்துக்கு அனைவருக்கும் நீர் உதவுவது போல நீரான உரையை பழனியப்பன் தமிழகத்திற்கு தந்துள்ளார். படிப்பவர் தமிழ் அறிவோடு இராமாயணச் சிறப்பை இவர் உரையால் அடையலாம். இலக்கிய வரலாற்று ஓட்டத்தில் நின்று நிலைபேறு உடையவர்களாக இடம்பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிட்டாது. சிலர் தோன்றியதும் விரைவில் எட்டாது போய்விடுவர். ஆனால் அவ்வகையில் எட்டாத தூரத்தில் உரையாசிரியர் சென்று விடாமல் நின்று நிலைக்கும் பெருமையைப் பெற்றுவிட்டார்.

உரையைப்படிக்கும் போது உரையாசிரியர் பக்கத்தில் இருப்பது போலவே உணர்வு ஏற்படுகிறது. பணியாற்றிய வங்கியிலும் அப்பழுக்கற்ற பணியாளராக விளங்கிய பள்ளத்தூர் பழ. பழனியப்பன் கம்பராமாயண உரையால் அவர் ஊரையும் பெயரையும் தமிழ் உலகம் என்றும் உச்சரிக்கும் வகையில் அருந்தமிழ் பணியாற்றியுள்ளார். பிறவிப்பயன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தம் உரைத்தொண்டால் மெய்ப்பித் திருக்கிறார்.

ஈரமான அவர் சிந்தனை மேலும் ஊற்றாக சுனையாக வளர்ந்திட தமிழன்னை அருள்பாலிப்பாள்.

அன்பன்

ஆறு. அழகப்பன்

பதிப்புரை

திரு. பழ. பழனியப்பன் அவர்களை நீண்ட பல ஆண்டுகளாக நாங்கள் அறிவோம். அவர் இங்நகரில் வங்கியில் பணியாற்றிய போதே தமிழ் ஆர்வலர் என்பதைப் புரிந்து கொண்டோம். இந்தப்பகுதியில் எங்கே இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தாலும் அங்கே சென்று குறிப்பு எடுத்து வந்து சேமித்து வைத்துக் கொள்வது அவர் பழக்கம். பின்நாளில் அவர் அலுவலகத் தொடர்பாக வெளிமாநிலங்களிலும் வெளியூர்களிலும் பணி யாற்றியதால் அவருடன் எங்கள் தொடர்பு சற்று விலகியிருந்தது.

மீண்டும் இதே நகரின் வங்கிக் கிளைக்கு மேலாளராக மாற்றலாகி வந்ததிலிருந்து அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் நேரமும் கிடைத்தது. அப்பொழுது அவர் கம்பராமாயணத்திற்கு ஒரு உரை எழுதவேண்டும் என்பது தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எங்களிடம் கூறினார். ஆனால் மறுபடியும் அவருக்கு வெளியூர்களுக்கு மாற்றல்கள் வந்தன.

இறுதியாக நாமக்கல்லில் இருந்து ஓய்வுபெற்று வந்த போது 1998-ம் ஆண்டு தன் இலக்கில் தான் உறுதியாக இருப்பதாகவும் உரை எழுதத்தொடங்கப்போவதாகவும் அறிவித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடலானார். இச்சமயத்தில் அன்றாடம் தான் எழுதிய உரைகளையும் எங்களிடம் தந்துவந்தார். 2001-ம் ஆண்டு, தான் முதல் நான்கு காண்டங்களுக்கும் உரை எழுதி முடித்து விட்டதாகவும் அதை நாங்கள் பதிப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 2001-ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டுவரை தன் நண்பர் ஒருவரின் அலுவலில் அவர் வேண்டுகோளுக் கிணங்க ஆலோசகராகப் பணியாற்றி வந்தார். மீண்டும் 2006ம் ஆண்டு முடிவில் மிகத் தீவிரமாக இதில் இறங்கி, எங்களுடன் கூடவே இருந்து, இப்பொழுது 2007ம் ஆண்டு அது சீரிய முறையில் வெளியிடுவதற்கு இறைவன் வாய்ப்பளித்திருக்கிறான்.

திரு. பழனியப்பன் அவர்களின் அயராத உழைப்பாலும், விடாத முயற்சியாலும் தான் நாங்கள் இந்தப்பதிப்பை வெளிக்கொணர முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எஞ்சிய சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் முதலிய பகுதிகளையும் விரைவிலேயே எழுதித் தந்தால், அவற்றையும் வெளியிட நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்பதையும் இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கு இறைவன் திருவருளும், குருவருளும் அவர்க்கும் எங்களுக்கும் துணை புரிய வேண்டிக்கொண்டு தமிழ்மக்களுக்கு இந்த எளிய, சிறந்த உரையை வெளியிடுகிறோம். மிக்க மகிழ்ச்சி மிக்க நன்றி.

- சாந்தமங்கை பதிப்பகத்தார்

முன்னுரை

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா,
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

உலகம் யாவையும் பரந்து புகழ்ந்து பேசப்பட்டு வரும் ஒரு நூல் இராமாயணம்; இதனை 'ஆதிகாவியம்' எனவும், இந்நூலை ஆக்கிய வான்மீகி முனிவர் 'ஆதிகவி' என்றும் அழைக்கப்படுகிறார்.

இதன்பின்னர் இந்த வரலாறு உலகில் - இந்தியாவில் - எல்லா இடங்களிலும் பக்தியினை வெளிப்படுத்துகின்ற நூல்களாகப் பெரும் அளவில் கையாளப்பட்டிருக்கின்றன.

வடமொழியைத்தவிர இருபதுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் இந்தி, அஸ்ஸாம், வங்காளம் ஒரிஸ்ஸா, மராட்டி முதலிய மொழிகளிலும் இராமகாதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உள்ள சங்ககாலப் பாடல்களான அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்களில் ராமாயண நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இதனைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற ஐம்பெருங்காவியங்களிலும், 6-7ம் நூற்றாண்டில் இயங்கி வந்த பக்தி இலக்கியங்களான நாயன்மார்களின் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங் களிலும், ஏனைய இறைவழிபாட்டு நூல்களிலும் இராமகாதை, பெருமளவில் பேசப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

கம்பனின் இராமாவதாரம் :

பின்னர் தோன்றிய கவிச்சக்ரவர்த்தி கம்பன் வான்மீகியின் ஆதிகாவிய மாகிய இராமாயணத்தைத் தமிழில் வழி நூலாக ஆக்கித் தந்திருக்கிறான். கம்பன் தன்னுடைய வழி நூலுக்கு 'இராமாவதாரம்'என்றே பெயர் சூட்டியிருக்கிறான். கம்பனது கவித்திறனையும், ஆழ்ந்த ராமபக்தியையும் உணர்ந்து, தமிழ் மக்கள் அதனைக் 'கம்ப இராமாயணம்' என்றே போற்றி

புகழ்ந்து பாராட்டி வந்திருக்கின்றனர். இன்றும் 'இராமாவதாரம்' என்ற பெயரைக் காட்டிலும் 'கம்ப இராமாயணம்' வழக்கில் இருந்து வருகிறது.

கம்பன் தனது பெருநூலுக்கு வான்மீகியைக் கருவாகக் கொண்டு பாடினானேஅன்றி வேறன்று. கம்பன்கூறும்கதையும், கதை நிகழ்ச்சியும், கதாபாத்திரங்களும், பிறவும் எல்லாம் அவனது உள்ளத்தின் அடித்தளத் தினின்றும் உதயமானவையே. தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப ஒரு புது சிருஷ்டியாகவே தனது பெருங்காப்பியத்தை கம்பன் ஆக்கித் தமிழ் உலகிற்குத் தந்துள்ளான். கம்ப இராமாயணம் வெறும் நீதி நூலன்று.

கம்பராமாயண மூலமும் உரையும் :

கி.பி. 1840ல் திரு. வெங்கடாசல முதலியார் அவர்களாலும், 100 ஆண்டுகளுக்குப் பின்னர் 1924ல் மதுரை கோபால கிருஷ்ணக் கோன் கம்பெனியாராலும், மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 1957-58ல் சென்னை மர்ரே அண்ட் கம்பெனி, ராஜம் அவர்களாலும், 1976ல் சென்னை கம்பன் கழகத்தாராலும் மூலம் மட்டும் வெளிவந்திருக்கின்றன. கற்றறிந்த சான்றோர்களுக்கு மட்டுமே மூலப் பாடல்கள் பயனளிக்கும். இந்த இரண்டு பதிப்புக்களிலும் இடைச் செருகல் என்று கருதப்பட்ட - வெள்ளியம்பலத்தம்பிரான் - வாணிதாதன் முதலானோர் இயற்றி அமைக்கப்பட்டன என்று கருதப்பட்ட, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் மிகைப்பாடல்கள் என்று தலைப் பிட்டு அந்தந்தப் படலங்களின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு பதிப்புகளையும் முறையே கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையிலும், நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையிலும் அமைந்த இரு பதிப்பாசிரியர்கள் குழுக்கள் செப்ப னிட்டுத் திருத்தி வெளியிட்டிருக்கின்றன. விபரங்கள் அருகில் உள்ள அட்டவணையில் தரப்பட்டிருக்கின்றன.

பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், திருமுருகாற்றுப்படை போன்ற பெருங் காப்பியங்களுக்கு உரைகள் வரையப்பட்டுள்ளன. அதுபோன்றே தமிழில் மற்றொரு இலக்கியமானகம்பராமாயணத்திற்கும் பல உரைகள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. நமக்குத் தெரிந் திருக்கும் கம்பராமாயண முழு உரை அதாவது 6 காண்டங்களுக்கு மான முழு உரை திரு. வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் 1929-ம் ஆண்டுமுதல் பதிப்பிக்கப் பட்டு 7-8 பதிப்புக்கள் 1967 வரை வெளிவந்திருக்கின்றன. ஆயினும் இவற்றில் எவையும் இன்று கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ, அரசு நூலகங்களிலோ கிடைக்கப் பெறுவதில்லை. இதனைத் தொடர்ந்து 1956-57ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னை திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகமும் தனித்தனியே உரை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டுக்கு ஒரு காண்டம் என்ற

கணக்குப்படி 1972 வரை முறையே 16 தொகுதிகளாகவும், 8 தொகுதிகளாகவும் வெளியிட்டு இருக்கின்றனர். இரண்டு பதிப்புக்களுக்கும் அரசு மானியமும், சில அறக்கட்டளைகளும் உதவி செய்து இருக்கின்றன. என்றாலும் இவற்றில் எதுவும் இரண்டாவது பதிப்பாக வெளிவர வில்லை. முதற்பதிப்பு இப்பொழுது கிடைப்பது மிக அரிதாக இருக்கின்றது.

இதனை நன்கு உணர்ந்த கோவை கம்பன் அறநிலை, சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் 1992 முதல் 1998 வரை 6 ஆண்டுகளில், எட்டுத் தொகுதிகளாக பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டும், 15 உரை ஆசிரியர்களைக் கொண்டும் ஒரு உரை வெளியிட்டிருக்கிறது. இது மிகக் குறைந்த அளவில் பிரதிகள் வெளியிட்டதனாலும், அன்பளிப்புப் பிரதிகளாக அதிகம் கொடுபட்டு விட்டதாலும் இந்தப் பிரதிகளும் இப்பொழுது எங்கும் கிடைப்பதில்லை. இவற்றைத்தவிரவர்த்தமானன்பதிப்பகமும், திருமகள் நிலையமும், ஏறத்தாழ ஒரே நேரத்தில் 1997-1999ல் உரைகள் வெளி யிட்டிருக்கின்றனர். திருமகள் நிலையத்தார் திரு. நாராயண வேலுப்பிள்ளை முதலிய 3 ஆசிரியர்களைக் கொண்டு வெளியிட்டுள்ள விளக்கவுரை பெரும் பாலோருக்குப் பயன்படும் முறையில் வெளியிடப் பட்டிருக்கிறது.

எனக்குள் எழுந்த ஆர்வம்:

இந்த நிலையில்தான் எனக்குள் ஒரு அடங்காத ஆசை - கம்பனை முழுதும் படிக்கவேண்டும் என்ற ஆசை - எழுந்தது. இது தெய்வ சங்கல்பம் என்றே எண்ணுகிறேன். நான் பணியாற்றும் வங்கியின் நாமக்கல் கிளைக்கு 1995ல் மாற்றப்பட்டேன். நாமக்கல் என்ற உடனேயே எல்லோருக்கும் 18 அடி ஆஞ்சநேயர் திருவுருவ ஆலயம் தான் நினைவுக்கு வரும். நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்றுவரும் போது என்னுள் இந்த மிகப்பெரிய ஆசை வித்தூன்றிச் செழித்து வளர்ந்தது. நண்பர் வ.சுப.மா. தொல்காப்பியன் அவர்கள் சென்னை கம்பன் கழகம் (1976) பதிப்பு - கம்பராமாயணம் மூலம் மட்டும் தந்து உதவி, ஊக்கம் அளித்தார்கள். நான் நாமக்கல்லில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு மூன்றுமுறை திருப்பித் திருப்பி மூலத்தை மட்டுமே, நேரம் கிடைக்கும்போதெல்லாம் படித்து வரலானேன். சில பாடல்கள் புதியதாகவே இருந்துவந்தன. அதற்கு ஒரு குரு - ஆசிரியன் தேவைப்பட்டான். அது அங்கே கிடைப்பது அரிதாக இருந்தது. எனவே இதற்குரிய உரைகளைத் தேடும் பணியில் ஈடுபட்டேன். கம்பன், கம்பராமாயணம் தொடர்புள்ள நூல்கள் எங்கெங்கே கிடைக் கின்றனவோ அவற்றையெல்லாம் வாங்க ஆரம்பித்தேன். முதலில் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரி அவர்கள் உரையைப் பார்க்கலானேன். அவர்களது தமிழ் மிக உயரிய, வடமொழி கலந்த தமிழாக இருந்தது. அது

எனக்குச் சரியாக அமையவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது எனக்குக் கோவைக்கு மாற்றலாகியது. கோவை அரசு நூலகம் மிக அருமையாகப் பணியாற்றுகிறது. பணியாளர்கள் மிக அன்புடன் வருபவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அங்கே எனக்கு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட திரு. கோ. வில்வபதி அவர்களின் பாலகாண்ட உரை மட்டிலும் கிடைத்தது. இப்போதைக்கு இதுவே போதும் என்று அதைப் படித்துக் குறிப்பு எடுக்கலானேன். இரண்டு முறை படித்திருப்பேன் - ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அதற்குள் எனக்கு மீண்டும் சென்னைக்கு மாற்றலாகி விட்டது. சென்னையில் ஒரு நூல் நிலையத்திலும் கம்பனது உரையே கிடைக்கவில்லை. ஒரு இரண்டு மாதம் இந்தத் துறையில் கருத்தைச் செலுத்தாது இருக்க நேரிட்டது.

1998ம் ஆண்டு ஜுன் 24ம் நாள் சென்னையை அடுத்த திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவியின் ஆலயத்திற்குச் சென்றுஅங்குள்ளநூல்நிலையத்தைப் பார்த்தேன். என்னஆச்சர்யம்! அங்கு இதுவரை வெளிவந்துள்ள கம்பராமாயண உரைகள் அனைத்தும் - வை.மு.கோ. உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலைய உரை - எல்லாம் இருக்கக் கண்டேன். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு எப்படிச் செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். பிறகு வைஷ்ணவி ஆலய நிர்வாகத்தாரை அணுகினேன். எனக்கு 6 மாதத்திற்கு நூல் நிலையப் புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு அனுமதிப்பதோடு அங்கேயே தங்கும் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அங்கே அந்த வசதி இருப்பதால் உடனேயே எனக்கு அனுமதி அளித்தது மட்டுமின்றி உணவுக்கும் ஏற்பாடு செய்து தந்தார்கள். அவர்களுடைய அன்பும், கருணையும், தாராள மனப்பான்மையும் என்றும் என்னால் மறக்க ஒண்ணாதது. பிறகு விரைவாகப் படிக்க ஆரம்பித்தேன். குறிப்புக்கள் எடுக்க முனைந்தேன்.

கம்பனைப் படிக்க படிக்க - உரைகளுடன் பொருள் உணர்ந்து படிக்க - சான்றோர்களின் பலவகையான கருத்துக்களையும் படிக்கப்படிக்க எனக்குள் ஒரு தன்னம்பிக்கையும், மன தைரியமும் வளர்ந்து விட்டன. ஒவ்வொரு உரையையும் பலமுறை படித்தேன். தொட்டுவிடத் தொட்டு விடத் தொடருகின்ற காதல் எனக்குக் கம்பனிடம் உண்டாகியது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போலப் படிக்கப் படிக்கப் பொருள்கள் தெரிய வரலாயின. புணரும் தோறும் போகம், பின்னும் புதிதாய் வளர்கின்றது என்று திருக்கோவையார் சொல்லியது போல, மனம் கம்பனில் முழுக்கத் தோய்ந்தது.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,

பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரைதரப்பட்டிருக் கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறை யினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்,

உற்றுழி உதவியோர்:

இக்காப்பியத்தைக் கம்பன் எழுதுவதற்குக் காரணமாயிருந்த சடையப்ப வள்ளலைப் போல, இந்த உரையை நான் எழுதுவதற்கு முழுமுதற் காரணமாக இருந்து, உள்ளத்தாலும், பொருளாலும் பேருதவி புரிந்தவரும் ஒரு இராமர்தான். வெற்றி பொருந்திய இராமர் - ஜெயராமர் (Jai Expo) இவர் எடுத்த காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும். தொடுத்த செயல்கள் அனைத்தும் துலங்கும். இராமாயணம் படிப் போரையும், கேட்போரையும் அவர்களது இருபத்தி ஒரு தலைமுறையினர் வாழ்த்துவர் என்று சான்றோர் கூறுவர். அத்தகைய பெரும் பயனை எனக்கு அளித்த அரிமா. திரு.B.ஜெயராமன் அவர்களுக்கும், அவர் தம் குடும்பத் தாருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் அலுவலகத் தில் உள்ள நண்பர்களுக்கும் நன்றி. அச்சுப் படிகளைக் கூர்ந்து நோக்கித் திருத்தி உதவிய பேராசிரியர் திரு.ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு எவ்வளவு முறை நன்றி சொல்வது என்று புலப்படாமல் தவிக்கிறேன்.

என்னுடைய கையெழுத்தையும் படித்துப் புரிந்துகொண்டு கணினியில் தட்டச்சு செய்து தந்த செல்வி பவானிக்கும், திருமதி. சித்ரா பத்மனாபனுக்கும், இதனைப் புத்தக வடிவில் ஆக்கித்தந்த சிவாகிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும், என் உள்ளத்தில் கருவாகி உருவாகிய காட்சியை நான் விளக்கியபோது, அதனைத் தன் உள்ளத்தில் வாங்கிக் கொண்டு, அதற்கு ஓவிய வடிவு கொடுத்த அட்டைப்பட ஓவியர் திரு.ஷ்யாம் அவர் களுக்கும், இதனை ஆர்வமுடன் பதிப்பித்து வெளியிட்ட சாந்தமங்கை பதிப்பகத்தார்க்கும் என் நன்றி.

நான் நான்கு ஆண்டுகளுக்கு முன் முதன்முதலில் இந்த உரை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைக் கூறியபோது, ''நன்றாகப் போடலாம்'', எழுதிக் கொண்டு வாருங்கள் என்று கூறி என்னை ஊக்குவித்து, இந்நூல் இன்று வெளிவரும் வரை தொடர்ந்து எனக்கு உதவி செய்து, என்னையும்

ஒரு நூலாசிரியன் ஆக்கிய பெருமை திருமகள் நிலையத்தாரையே சேரும். அவர்களுக்கு என் சிரந்தாழ்ந்த நன்றி உரியதாகும்.

புத்தகப் பிரதிகளைக் கூர்ந்து படித்து அணிந்துரை வழங்கிய முனைவர் பேராசிரியர் திரு.தெ.ஞானசுந்தரம் அவர்களுக்கும், திரு. சிலம்பொலி செல்லப்பன் அவர்களுக்கும், நுட்பமாகப் படித்து நிறை குறைகளை எடுத்து ஆய்வுரை மூலம் கூறி எனக்கு ஊக்கமளித்த நண்பர் திரு.வ.சுப.மா.தொல்காப்பியன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் முனைவர் திரு.ஆறு.அழகப்பன் அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன்.

இத்தகைய ஒரு பெருங்காப்பியத்திற்குத், தனிஒருவனாகவே, ஏனைய உரை நூல்களில் ஆழங்கால்பட்டு, இவ்வுரையினை எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருவருளால் எழுத முயன்றிருக்கிறேன். இதில் குற்றம், குறைகள் இருக்கக் கூடும். இது என் முதல் முயற்சி. குற்றங்களை அன்பு கூர்ந்து சுட்டிக்காட்டி ஊக்குவித்தால், மிக்க நன்றி உடையவனாய் இருப்பேன்.

குற்றம் களைந்து, குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனன்றோ!

3, வாசுகி தெரு, கிருஷ்ணா புரம்,
அம்பத்தூர், சென்னை-600 053.
செல்: 9840868543

அன்பன்
பள்ளத்தூர் பழ.பழநியப்பன்

3. ஆரணிய காண்டம்

ஆரணிய காண்டம் கம்பனது இராமாயணத்தின் மூன்றாவது பெரும் பிரிவு. இது 11 படலங்களில் ஏறக்குறைய 1200 பாடல்களைக் கொண்டது. ஆரண்யம் என்ற சொல்லுக்கு வனம், காடு என்று பொருள். இராமபிரான், தம்பி இலக்குவனோடும், மனைவி சீதாதேவியுடனும் தண்டக வனத்துள் காலங்கழித்தபோது நிகழ்ந்த நிகழ்வுகளைக் குறிக்கும் பகுதி என விரியும். இதில் வரும் கதை உறுப்பினர்கள் இம்மூவருடன், அத்திரி முனிவர், அனசூயை, சரபங்கர், சுதீக்கணர், அகத்தியர், சபரி, விராதன், கவந்தன், சூர்ப்பணகை, அயோமுகி, கரன், தூடணன், திரிசிரா, இராவணன், மாரீசன், முதலியோர். இராமபிரான் தன் வாழ்நாளில் பத்து ஆண்டுகளை இக்கானகத்தில் கழித்திருப்பதனால்,இக்காண்டத்தில் சொல்லப் பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் காப்பியத்தின்கதைப் போக்கிற்குத் திருப்பு மையமாகவும், மிகவும் இன்றியமையாதனவாகவும் அமைந்திருப்பதை உணரலாம்.

ஒரு முக்கியச் செய்தி. இராமபிரான் வனவாசம் தொடங்கிய போது அவருக்கு வயது 27 என்றும், சீதாதேவிக்கு வய்து 18 என்றும் அக்னி வேச்ய இராமாயணம் கூறுகிறது. இராவணன் சீதாதேவியை எடுத்துச் சென்ற போது இராவணனுக்கு வயது 40 என்றும் சீதாதேவிக்கு வயது 31 என்றும் மேலும் கூறுகின்றது.

இக்காண்டத்துள் இராமபிரான் தன் அவதார நிலைக்கு ஏற்ப, மானிடனாக, மானிட இயல்புகளுடன் ஆற்றிய செயல்கள் மிகுதியாக விவரிக்கப்பட்டிருப்பது கதைப் போக்கில் புரியவரும். அதனால் ஒன்பான் சுவைகளும் நிறைந்த ஓர் நாடகக் காப்பிய மாக இராமாயணத்தைக் கூறுவதற்கு இக்காண்டமே முழுமுதற் சான்றாக அமைகின்றது.

1. விராதன் வதைப் படலம் (73 பாடல்கள்)

விராதன் என்னும் அரக்கனை இராமபிரான் போர் செய்து வதைத்தது பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 73 பாடல்களைக் கொண்டது. விராதன் தும்புரு என்னும் பெயருடைய கந்தர்வன், கிலிஞ்சனின் மகன், குபேரனது அரசவைப் பணியாளன். அரம்பையரின் ஆடலில் ஈடுபட்டுப் பணி மறந்தமையால் குபேரனால் சபிக்கப்பட்டு அரக்கனானவன். ஒரு

லட்சத்து இருபத்தையாயிரம் யானைகளின் ஆற்றல் பெற்றவன். குபேரனாலேயே சாப நீக்கமும் அளிக்கப்பட்டவன்.

இப்படலத்துள் இராமபிரான் முதலிய மூவரும் அத்திரி முனிவன் ஆசிரமம் அடைதல்,.தண்டக வனம் புகுதல், விராதன் எதிர்ப்படுதல், அவன் சீதையைக் கவர்ந்து வானில் ஏறுதல், இராமன் போர் தொடுத்தல், விராதன் சீதையை விடுத்துப் போரிடுதல், சீதை துயருற்று வேண்டுதல், விராதனது தோள்களைத்துண்டித்து அவனை மண்ணில் புதைக்க எற்றுதல், விராதன் சாபம் நீங்கி விண்ணில் தோன்றுதல், விராதன் இராமனைத் துதித்தல், தன் வரலாறு கூறுதல், பின்னர் அவன் மறைய இவர்கள் மூவரும் ஒரு சோலையை அடைதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. கடவுள் வாழ்த்து

பேதியாது, நிமிர்பேத உருவம் பிறழ்கிலா,
ஓதிஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும்
வேதம், வேதியர், விரிஞ்சன் முதலோர் தெரிகிலா,
ஆதிதேவர் அவர்எம் அறிவினுக்கு அறிவு அரோ! (2615)

(பேதித்தல் - வேறுபடுதல்; பிறழ்தல் - நீங்குதல்; உணர்ச்சி - உண்மையறிவு / மெய்யுணர்வு / தத்துவ ஞானம்; உதவுதல் - அருளுதல்; விரிஞ்சன் - பிரமன்; ஆதி - மூலகாரணர்; வேதம் - அறிவிப்பது; உருவம் - சராசரப் பொருள்களின் வடிவங்கள்; ஆதிதேவர் - பரம்பொருள்; தெரிதல் - ஆராய்ந்து அறிதல்)

தனது பரத்துவத் தன்மையிலிருந்து மாறுபடாமலும், மேன்மேலும் வளர்கின்ற சர அசரப் பொருள்களின்றும் தான் நீங்காமலும், ஒவ்வொரு முறை படிக்கும் பொழுதும், மெய்யறிவை நல்குகின்ற வேதங்களும், அவற்றை ஓதி உணர்ந்த அந்தணர்களும், பிரமன் முதலிய கடவுளர்களும் கூட ஆராய்ந்து அறிய முடியாத மூலகாரணர் எவரோ, அவரே எமது சிற்றறிவுக்கு உற்ற பரம்பொருள் ஆவார்.

எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்து உறைபவன் எவனோ, நூல்களைப் பலமுறையும் படிக்கும் தோறும் தத்துவ ஞானத்தை எனக்கு அருள்பவன் எவனோ, வேதங்களாலும், வேதியர்களாலும், பிரமன் முதலிய தேவர்களாலும் கூட ஆராய்ந்து அறிய முடியாதவன் எவனோ, உலகத்துக் கெல்லாம் மூலகாரணன் எவனோ, அவனே என் அறிவிற்கு அறிவாய் விளங்குபவன் அவனை வணங்குவோம் என்பது கருத்து.

வேதம் என்ற சொல்லுக்கு அறிவிப்பது என்பது பொருள். செய்யத் தக்கன எவை, செய்யத்தகாதன எவை, அவற்றுக்கு என்ன விதி விலக்குகள் என்பதை அறிவிப்பது வேதம் என்பதாம். ''உயர்வற உயர் நலம் உடையவன் அவன் அவன்; மயர்வற மதிநலம் அருளினன் அவன் அவன்;

அயர்வறும் அமரர்கள் அதிபதி அவன் அவன்; துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே'' என்பது திருவாய்மொழி. ''தன்னுள் அனைத்துலகும் நிற்க, நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்'' என்பதும் திருவாய் மொழியே. இதுவே இங்கு பேதியாது, நிமிர் பேத உருவம் பிறழ்கிலா ஆதிநாதர் எனப்பட்டது என்பதாம்.

இங்கே ஒரு தெய்வத்தின் இயற்பெயர் கூறாது, பரம்பொருளின் இயல்பைக் கூறியது, முன்பு பாலகாண்டத்துக் கடவுள் வாழ்த்துப் பாடலில் ''உலகம் யாவையும்'' என்ற பாடலின் கருத்துடன் இயைவது உணர்க. வேதம் ஓத ஓத மேன்மேலும் நல்ல மெய்யுணர்வை அருளும் என்பதால் அது பலகாலும் பாராயணம் செய்யத் தக்கதாகும் என்பது உணர்த்தப்பட்டது. ''நவில் தொறும் நூல் நயம் போலும்'' என்ற குறளின் (783) கருத்தே ''ஓதி ஓதி உணரும் தொறும் உணர்ச்சி உதவும் வேதம்'' எனப்பட்டது.

பொதுவாக நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துப் பாடுவது நூலாக்குவோன் இயல்பு. எனினும் ஒவ்வொரு காண்டத்தின் முதலிலும் கம்பன் கடவுள் வாழ்த்துப் பாடுவது காணத்தக்கது. இதைப் போலவே நன்னூலார் நன்னூலின் ஒவ்வொரு அதிகாரத்திலும், வில்லிப்புத்தூரார் தம் பாரதத்தின் ஒவ்வொரு பருவத்தின் தொடக்கத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடியிருப்பதும் நோக்கத்தக்கன.

2. மூவரும் அத்திரி முனிவன் ஆசிரமம் அடைதல்

முத்து இருத்திய திருத்தி அன மொய்ந்நகையோடும்
சித்திரக் குனிசிலைக் குமரர் சென்று அணுகினார்,
அத்திரிப் பெயர் அருந்தவன் இருந்த அமைதிப்
பத்திரப் பழுமரப் பொழில் துவன்று பழுவம். (2616)

(குனி - வளைந்த; சிலை - வில்; இருத்துதல் - பதித்தல்; திருத்தல் - ஒழுங்கு படுத்துதல்; மொய் - நெருங்கிய; நகை - பற்கள்; பொழில் - சோலைகள்; துவன்ற - செறிந்த; பழுவம் - வனம்; சித்திரம் - சிறந்த; பத்திரம் - அழகிய / இலைகள்; அமைதி - நிறைவு / இடம்)

சிறந்த அழகிய முத்துக்களைச் செப்பம் செய்து பதித்து வைத்தாற் போன்ற நெருங்கிய பற்களை உடைய சீதாதேவியோடும், அழகிய வளைந்த வில்லையேந்திய அரசகுமாரர்களாகிய இராம இலக்குவர் இருவரும், அத்திரி என்னும் பெயரையுடைய, அரிய தவத்தைச் செய்த முனிவன் வசித்து வருகிற நிறைவான இடமாகிய, அழகிய இலைகளும் பழங்களும் நிறைந்த மரங்களையுடைய சோலைகள் நெருங்கியுள்ள வனத்தைச் சென்றடைந்தனர்.

அத்திரி என்பது காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று மலங்களையும் - திரிவர்க்கதோஷம்-விட்டொழித்தவர் என்று பொருள்பட்டு நின்றது.

இவர் சப்தரிஷிகளுள் முதன்மையானவராகக் கருதப்படுபவர். இவர் பிரம குமாரர்களுள் ஒருவர் என்றும் கூறப்படுவார். முத்துக்களை வரிசையாகச் செப்பனிட்டுப் பதித்து வைத்தாற் போன்ற நெருங்கிய அழகிய பற்கள் என்னும் சொற்கள் எல்லோரும் அறிந்த ஒரு திருப்புகழ்ப் பாடலை நினைவு படுத்தும். பாடல் இது. ''முத்தைத் தருபத்தித் திருநகை அத்திக்கு இறை'' என்பதாகும்.

3. மூவரும் முனிவரைச் சென்று வணங்குதல்

திக்குஉறும் செறி பரம் தெரியநின்ற திரள்பொன்
கைக்குறுங்கண் மலை போல்குமரர், காமம் முதலாம்
முக்குறும்பு அற எறிந்த வினை வால்முனிவனைப்
புக்கு இறைஞ்சினர்; அருந்தவனும் வந்து புகலும் (2617)

(தெரிய - புலப்பட; செறி - நிறைந்த / மிக்க; பரம் - பாரம் / கடவுள் தன்மை / பூமிபாரம் / சுமை; பொன் - அழகிய; மலை - யானை; குறும்பு - பகை / குற்றம்; எறிந்த - அழித்த; வால் - வெண்மை / தூய; வினை - தவச்செயல்; திக்கு - திசை / புகலிடம்)

எட்டுத் திசைகளிலும் உள்ள நிறைந்த உலகச் சுமையை யாவரும் அறியும்படி தாங்கி நிற்கின்ற, திரண்ட அழகிய துதிக்கைகளையும், சிறிய கண்களையும் உடைய மலையைப் போன்ற திக்கு யானைகளைப் போன்றவர்களான அரசகுமரர்களான இராமஇலக்குவர், காமம், வெகுளி, மயக்கம் முதலிய மூன்று பகைகளாகிய குற்றங்களை வேருடன் அறுத்து எறிந்து அழித்தவனும், தூய்மையான தவச் செயலை ஆற்றிக் கொண்டிருப் பவனுமான அத்திரி முனிவனின் ஆசிரமத்துள் சென்று அவனை வணங்கி னார்கள். செயற்கரிய தவத்தைச் செய்கின்றவனாகிய அம்முனிவனும் மனம் மகிழ்ந்து தன் இருக்கையினின்றும் எழுந்து வந்து, கீழ்வரு வனவற்றைக் கூறலானான்.

முக்குறும்பு என்பது மூன்று குற்றங்கள் என்றும், மூன்று பகைகள் என்றும் பொருள்படும். அவை காமம், வெகுளி, மயக்கம் என்பன. ஒன்றை அடைய வேண்டும் என எண்ணுவது ஆசை - காமம்; அதனை அடைய முடியாமல் இடையே வரும் ஊறுகளால் மனத்தில் எழுவது கோபம் - வெகுளி; அதனை அடையாத நிலையில் உண்டாகும் மனத்தடுமாற்றம் - மயக்கம் என்பதாம். இவற்றைக் கடந்து நீக்கியவன் அத்திரி முனிவன். ''காமம், வெகுளி, மயக்கம் இம்மூன்றின் நாமம் கெடக் கெடும் நோய்'' என்பது குறள் 360. நோய் என்பது பிறவிப் பிணியைக் குறிக்கும். இதுவே துன்பத்தின் நிவர்த்தியான பேரின்பமாகும்.

4. முனிவன் கூற்று

''குமரர்! நீர்இவண் அடைந்து உதவுகொள்கை எளிதோ?
அமரர் யாவரொடும் எவ்வுலகும் வந்த அளவோ?

எமரின் யார் தவம் முயன்றனர்கள்?'' என்று உருகினன்,
தமரெலாம்வர உவந்து அனையதன்மை முனிவன். (2618)

(தமர் - சுற்றத்தார்; கொள்கை - நிகழ்ச்சி; அளவு - நிலை; எமரின் - எங்களுள்; முயலுதல் - செய்தல்; உருகுதல் - மனம் கரைதல்)

தனது சுற்றத்தார் அனைவரும் ஒரே இடத்தில், ஒரே காலத்தில், ஒன்று கூடி வந்தால் எவ்வளவு மகிழ்ச்சியடைவாரோ அத்தகைய மகிழ்ச்சி அடைந்த தன்மையுடைய அத்திரி முனிவர், இராம இலக்குவர்களை நோக்கி, ''மைந்தர்களே! நீங்கள் இங்கு தாமே வந்து காட்சி தருகின்ற நிகழ்ச்சி எல்லோருக்கும் கிடைக்கின்ற எளிமையானதோ? அரிய தன்றோ? எல்லாத் தேவர்களும் ஒன்று கூடி, எல்லா உலகங்களிலும் வந்து காட்சிதரும்தன்மையதன்றோ? தாங்கள்இவ்வாறு இங்கு எளிவந்துகாட்சி தருதற்கு இங்கிருக்கின்ற முனிவர்கள் எங்களுள் யார்தான் இத்தகைய தவத்தினைச் செய்தனரோ? தெரியவில்லை என்று மனம் கரைந்து உருகிக் கூறினான். ''தமரெலாம் வர உவந்து அனைய தன்மை'' என்பது ''ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்; பல நாள் பயின்று, பலரொடு செல்லினும், தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ'' என்று ஔவையார் அதியமானைப் புகழ்ந்து பாடிய பாடலை நினைவுபடுத்தும்.

நாங்களேமிகச்சிரமப்பட்டு உன்னிடம்வந்துகாணவேண்டியது போக, தாங்களே மனம் இரங்கி யாம், இருக்குமிடம் வந்து காட்சி தந்தது பெரும்பேறாகும் என்று கூறினான் என்பதாம். உருகுதல் என்பது மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் பெருக, உள்ளம் நெகிழ்தல் என்பதைக் குறிக்கும். முதல் இரண்டு அடிகளின் கருத்தும் இராம அவதார உண்மை யாகும். இதனை அத்திரி முனிவர் அறிந்திருந்தார். எனவேதான் இவ்வாறு கூறினார் என்பதாம்.

5. மூவரும் தண்டக வனத்தை அடைதல்

அன்னமா முனியோடு, அன்று, அவண் உறைந்து, அவன்அரும்
பன்னி, கற்பின் அனசூயை பணியால், அணிகலன்
துன்னு தூசினொடு, சந்து, இவை சுமந்த சனகன்
பொன்னொடு ஏகி, உயர் தண்டகவனம் புகுதலும். (2619)

(பன்னி - பத்தினி / மனைவி; துன்று - பொருந்திய / ஏற்ற; தூசி - உடைகள்; சந்து - சந்தனம்; சுமந்த - தரித்த / தாங்கிய; பொன் - அழகு / திருமகள்; அனசூயை - அழுக்காறு அற்றவள்; அசூயை - அழுக்காறு / பொறாமை)

அத்தகைய பெருமை வாய்ந்த அத்திரி முனிவரின் ஆசிரமத்தில் அன்று தங்கியிருந்து, அவனுடைய அருமையான மனைவியான கற்பிற் சிறந்த அனசூயையின் கட்டளையினால், கிடைத்த ஆபரணங்களும், அவளுக்கு ஏற்ற ஆடைகளும், சந்தனக் கலவை ஆகியவையும் தரித்துக்

கொண்டிருந்த, சனக மன்னனின், திருமகள் போன்ற அழகிய சீதாதேவி யோடும் சென்று, சிறந்த தண்டகவனத்தை அடைந்த போது, (குளகப் பாடல்)

அசூயை என்றால் பொறாமை, அழுக்காறு என்று பொருள்; அனசூயை என்றால் பொறாமையற்றவள் என்பது பொருள். இவள் தக்ஷப்பிரஜா பதியின் புதல்வியருள் ஒருத்தி. இவளைப் பற்றி வான்மீகம் விரிவாகப் பேசுகிறது. இவள் ஒரு முறை கங்கை நதியைப் பெருகச் செய்து நாட்டின் பஞ்சத்தைப் போக்கினாள் என்றும், பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்து பெரும்பேறு பெற்றவள் என்றும் கூறுகிறது. இவள்தனது தவபலத்தால் சீதைக்கு மாசுபடிய முடியாத பட்டாடைகளும், நறுமணம் குன்றாத சந்தனக் கலவையையும், என்றும் மாறாத இளமைத் தன்மையையும் அளித்தாள் என்றும் கூறுகிறது. அத்யாத்ம ராமாயணம் விசுவகர்மாவினால் செய்யப்பட்ட மங்களகரமான இரண்டு குண்டலங்கள், பொன்மயமான இரண்டு பட்டாடைகள், பரிமளக்கலவைப் பூச்சு முதலியவற்றை விரும்பி அளித்தாள் எனக் கூறுகிறது. கற்பின் அனசூயை என்பது அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டவே என்க. இவளது கற்பினைச் சோதிக்க விழைந்தனர் திருமூர்த்திகள். அவர்களைத் தன் தவபலத்தால் ஆடையில்லாத சிறு குழந்தைகளாக்கித் தொட்டிலில் இட்டுச் சீராட்டித் தன் கற்பைக் காத்துக் கொண்டாள் என்பது ஒரு புராணக் குறிப்பு.

தண்டக வனம் என்பது, சூரிய குலத்தில் தோன்றிய இட்சுவாகு மன்னனின் நூறு புதல்வர்களில் கடைசியாகப் பிறந்தவன் தண்டன். இயற்கையிலேயே மூடனாகப் பிறந்தவன். எனவே தண்டன் என்பது அவனுக்குப் பெயர். விந்த மலைக்கும் சைவல மலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தை மதுமந்தம் என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். ஒரு முறை அசுர குலகுருவான சுக்கிர ஆச்சாரியாரின் ஆசிரமத்துள் புகுந்து, அவர் மகளான அரஜை என்பவளிடம் ஆசை கொண்டு கற்பழித்து விட்டான். சினம் கொண்ட குரு, அவன் சேனை, நாடு, குடும்பம் ஆகியவை மண் மாரியால் அழியச் சாபம் தந்தார். எனவே அந்த இடம் காடாகிப் போனது. அதுவே பின்பு தண்டக ஆரண்யம் என்றும் தண்டக வனம் என்றும் வழங்கப் பெறலாயிற்று.

6. விராதன் இராம இலக்குவரை எதிர்தல் [14 பாடல்கள்]

எட்டொடு எட்டு மதமாகரி, இரட்டி அரிமா,
வட்டவெம்கண் வரையாளி பதினாறு, வலியின்
கிட்டவிட்டு இடைகிடந்தன, செறிந்த ஒருகைத்
தொட்ட முத்தலை அயில்தொழில் மிடல் கழுவோடே. (2620)

(எட்டொடு எட்டு - பதினாறு; கரி - யானைகள்; இரட்டி - இருமடங்கு / பதினாறின் இரட்டி முப்பத்து இரண்டு; அரி - சிங்கங்கள்; வெம் - கொடிய;

வரை - மலை; கிட்டஇடுதல் - நெருக்கிக் கோக்கப்படுதல்; தொட்ட - பிடித்த; தொழில் - வேலைப்பாடு; மிடல் - வலிய; ஆளி - ஒரு விலங்கு; கழு - சூலம்; முத்தலை - மூன்று கவடு; அயில் - கூர்மை)

மதம் கொண்ட பதினாறு யானைகள்; அவற்றின் இருமடங்கான முப்பத்திரண்டு சிறந்த சிங்கங்கள், வட்டமானதும், வெம்மையானதுமான கண்களையுடைய மலையில் வசிக்கும் யாளி என்னும் விலங்குகள் பதினாறு, ஆகியவைகள் வலிமையாகவும் நெருக்கமாகவும் கோக்கப் பட்டு நெருங்கிக் கிடந்தனவாகவும், திரண்ட தன் ஒரு கையில் மூன்று கவடுகளையுடைய கூர்மையான, வேலைப்பாடமைந்த, வலிமையான முத்தலைச் சூலத்தைப் பிடித்துக் கொண்டு (குளகப்பாடல்)

விராதன்வரும்போது அவன்தோற்றத்தைக்குறிக்கிறார். 16யானைகள், 32 சிங்கங்கள், 16 யாளிகள் - யாளி என்பது யானை போல் துதிக்கையும், சிங்கம் போல் வலிய பற்களும், கூரிய நகங்களும், பிடரிமயிரும், இரு சிறகுகளும் கொண்ட ஒரு கொடிய விலங்கு. இவைகள் எல்லாவற்றையும் நெருக்கமாகக் கோத்துக் கட்டப்பட்ட மாலை; ஒரு கையில் கூரிய, வேலைப்பாடமைந்த, போர்த்தொழிலில் வல்ல முத்தலைச் சூலத்தை ஏந்தியிருக்கிறான். இவையெல்லாம் தான் உண்பதற்காகக் கொள்ளப் பட்டவை என்பதாம். அவைகளைச் சூலத்தில் கோர்த்து எளிதாகப் பிடித்திருந்தான் என்க.

7. செஞ்சுடர்ச் செறிமயிர்ச் சுருள் செறிந்த செனியன்;
நஞ்சுவெற்பு உருவுபெற்று இடைநடந்தது என, மா
மஞ்சு சுற்றிய வயங்குகிரி வாதவிசையில்
பஞ்சு பட்டது படப் படியின் மேல் முடுகியே. (2621)

(சுடர் - ஒளி; செறி - அடர்ந்த; சுருள்மயிர் - சுருட்டை முடி; செனியன் - சென்னியன்; சென்னி - தலை; நஞ்சு - விஷம்; வெற்பு - மலை; உருவு - வடிவம்; மஞ்சு - மேகம்; வாதம் - காற்று; விசை - வேகம்; படி - மண் / பூமி / தரை; முடுகி - விரைந்து; செறிதல் - பொருந்துதல்)

சிவந்த ஒளி மிகுந்த சுருட்டை முடி அடர்ந்திருந்த தலையையுடை யவன்; விடமே ஒரு மலையின் வடிவம் பெற்று அவ்வனத்திடையே வந்தது போல, பெரிய கரிய மேகங்கள் சூழ்ந்து திகழ்ந்து விளங்குகின்ற மலை போன்ற ஆற்றலுடையவன்; அவன்காற்றைப் போல நடக்கின்ற வேகத்தால், எதிர்ப்படுகின்ற மலைகளெல்லாம், பஞ்சு அலைவுற்றுச் சிதறிப் பறப்பது போல தரையில் விரைந்து விழவும் - குளகப்பாடல்.

பொதுவாகவே அரக்கர்கள் சிவந்த மயிர்க்கற்றை உடையவர்கள். இவனுடைய முடி மிகுந்த ஒளி வீசி அடர்ந்தும் இருந்தது எனச் சிறப்பித்தார். இவன்தோற்றம் நஞ்சேஒரு மலை போலக் கொடுமையான உருவம் கொண்டு எதிர்நடந்து வந்தது போன்றிருந்ததாம். அவன் நடந்து வந்த வேகத்தில் எதிர்ப்பட்ட மலைகள் எல்லாம் பஞ்சு போல் தூளாகிப்

பறந்து போனதாம். வயங்குதல் என்பது நெடுந்தூரத்தில் இருப்பவர்களுக்கும் புலனாகும் வண்ணம் தோற்றப் பொலிவுற்று விளங்குவது என்ற விரிந்த பொருள் கொண்டது. தாடகை வருவதையும் கம்பன் இவ்வாறே கூறியது நினைவு கூரத்தகும். கிரிகள் பின் தொடர வந்தாள் என்பார் அங்கு.

8. புண்துளங்கியன கண்கள் கனல்பொங்க, மழைசூழ்
விண்துளங்கிட, விலங்கல்கள் குலுங்க, வெயிலும்
கண்டு உளம்கதி குறைத்திட, நெடுங்கடல் சுலாம்
மண்துளங்க, வயஅந்தகன் மனம் தளரவே. (2622)

(துளங்குதல் - விளங்குதல் / நடுங்குதல்; மழை - மேகங்கள்; விலங்கல் - மலைகள்; வெயில் - சூரியன்; கதி - வேகம்; சுலாம் - சூழ்ந்த; வயம் - வெற்றி; அந்தகன் - இயமன்; கனல் - நெருப்பு; பூமியின் குறுக்கே தடையாய்க் கிடப்பதால் விலங்கல் மலைக்குக் காரணப் பெயர். எல்லா உயிரினங்களுக்கும் முடிவை உண்டாக்கும் கண்ணற்றவன் என்பதால் அந்தகன் இயமனுக்குக் காரணப்பெயர்)

புண் போன்று சிவந்து விளங்கிய தன் கண்களினின்றும் கோபத் தீ மேலெழுந்து பொங்க, மேகம் சூழ்ந்த ஆகாயம் நடுங்கிட, மலைகள் குலுங்கி அசைய, கதிரவனும் இவன் வரும் வேகத்தைக் கண்டு, தன் வேகத்தைக் குறைத்துக் கொள்ள, நீண்ட பெரிய கடல் சூழ்ந்த இப்பூமியும் சற்று அசைந்து கொடுக்க, வெற்றி பொருந்திய இயமனும் தன் மனம் தளர்ந்து போக. (குளகப் பாடல்).

விராதன் வந்த போது நிகழ்ந்தவைகளைக் கூறுகிறது இப்பாடல். முன்பு பரசுராமர் வந்த போது நிகழ்ந்தவைகள் இங்கு ஒப்பு நோக்கத்தகும். இவன் வரவால், ஆகாயம் நடுங்கிற்று, மலைகள் குலுங்கிற்று, சூரியன் வேகம் குறைந்தான்; கடல்கள் நடுங்கின; இயமன் மனம் தளர்ந்தான் என்பதாம். விராதன் இயல்பிலேயே கொடுமையானவன். எனவே அவன் கண்கள் கருணையற்ற கண்கள் எனவே புண் போன்ற கண்கள் என்றார். ''கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல் புண் என்று உணரப்படும்'' என்பது குறள்575. ''கண்ணோட்டம் இல்லவர்கண்ணிலர்'' என்பதும் குறள் 577. கண்ணில் கனல் பொங்குவது புண்ணில் செந்நிறம் விளங்குவது போன்றிருந்தது என்பதும் ஒன்று.

9. புக்கவாள் அரிமுழங்கு செவியின் பொறிஉறப்
பக்கம் மின்னும் மணிமேரு சிகரம் குழைபடச்
செக்கர் வான்மழை நிகர்க்க, எதிர்உற்ற செருவத்து
உக்கவீரர் உதிரத்தின் ஒளிர் செச்சையினோடே. (2623)

(வாள் - கொடிய; அரி - சிங்கம்; குழை - குண்டலங்கள்; செரு - போர்; உதிரம் - இரத்தம்; செச்சை - செஞ்சந்தனப் பூச்சு / சட்டை; மழை - மேகம்)

விராதனது செவிகள் மலைக்குகை போல் இருப்பதனால், கொடிய சிங்கங்கள் அதனுள் புகுந்து முழங்கின; பக்கங்களில் மின்னுகின்ற

குண்டலங்கள் மேருமலையின் சிகரங்கள் போல ஒளி வீசின. நேர்ப்பட்ட போரில் வீரர்கள் சிந்திய இரத்தத்தின் செஞ்சந்தனப் பூச்சு, செவ்வானத் திடையே மேகம் விளங்குவது போன்றிருந்தது.

செச்சை என்பது சட்டை என்ற பொருளிலும், செஞ்சந்தனப் பூச்சு என்ற பொருளிலும் கொள்ளப்படும்.

10. படையொடு ஆடவர்கள், பாய்புரவி, மால்களிறு, தேர்,
நடைய வாள்அரிகள், கோள்உழுவை, நண்ணிய எலாம்
அடையவாரி, அரவால் அசை அனேக வித வன்
தொடையல்மாலை துயல்வந்து உலவு தோள் பொலியவே. (2624)

(படை - படைக்கலன்கள் / ஆயுதங்கள்; புரவி - குதிரைகள்; மால் - மதமயக்கம்; வாள் - கொடிய; கோள் - வலிய; உழுவை - புலிகள்; அடைய - முழுவதும்; வாருதல் - கைக்கொள்ளுதல்; வன் - வலிய; தொடையல் மாலை - தொடுக்கப்பட்ட மாலைகள்; துயலுதல் - தொங்குதல்; உலவுதல் - அசைதல்; பொலிய - விளங்க; அரவு - பாம்பு)

படைக்கலன்களோடு கூடிய காலாட்படையினர்; பாய்ந்து வரும் குதிரைகள்; மதமயக்கம் கொண்ட ஆண் யானைகள்; தேர்கள்; பெருமித மிக்க நடையை உடைய கொடிய சிங்கங்கள்; வலிமையுடைய, கொல்லும் தன்மையுடைய புலிகள், இன்னும் தன் அருகில் வந்து அடைந்த எல்லா உயிரினங்களையும் முழுவதுமாக எளிதாகப் பற்றி, பாம்பையே பலவிதமாகத் தொடுக்கப்பட்ட மாலை போல் தொங்கவிட்டுக் கொண்டு, அவை அசைகின்ற தோள்கள் விளங்கித் தோன்ற. (குளகப்பாடல்)

இதனால் நால்வகைச் சேனைகளையும் ஒரு மாலை போல் தொடுத்துத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதும், இவைகளைத் தொடுப்பதற்கு உரிய நாராகப் பாம்பைப் பயன்படுத்தியிருக்கிறான் என்பதும் தெளிவாக்கப்பட்டது.

11. குன்று துன்றின எனக்குமுறு கோப மதமா
ஒன்றின் ஒன்று இடைஅடுக்கின தடக்கை உதவப்
பின்றுகின்ற பிலனின் பெரிய வாயின் ஒருபால்
மென்றுதின்று விளியாது விரியும் பசியோடே. (2625)

(துன்றுதல் - நெருங்குதல்; குமுறுதல் - முழங்குதல்; மா - யானைகள்; பிலன் - பிலம் / குகை; விளிதல் - தணிதல் / அடங்குதல்; விரிதல் - மிகுதல்; பின்றுதல் - நீண்டதாதல்)

பொங்குகின்ற கோபத்தையும் மதத்தையும் உடைய யானைகள், மலைகள் ஒன்றோடொன்று அடுக்கி வைத்தாற் போன்று நெருங்கி யிருக்கவும், தனது கைகளின் இடுக்கில் வைத்துக்கொண்டு நீண்டு கொண்டே செல்லுகின்ற குகை போன்ற தனது பெரிய கடைவாயில்,

இவற்றை மென்று தின்று கொண்டிருந்த போதும், தனக்குற்ற பசி அடங்காது மேலும் மிகுகின்ற பசி வந்து தாக்கவும். (குளகப்பாடல்)

மலைகள் நெருங்கியிருந்தாற் போன்று, ஒன்றன் மேல் ஒன்று அடுக்கப்பட்டதும், பொங்கி எழுகின்ற கோபமும், மதமும் கொண்ட யானைகளைத் தனது பெரிய கைகளில் கொண்டிருந்த போதும் அது பற்றாது இன்னும் மிகுந்த பசி கொண்டான் விராதன் என்பதாம். ''யானைப் பசிக்குச் சோளப்பொறி'' என்பது போல, விராதனது மிகுந்த பசிக்கு இவ் யானைகள் எல்லாம் போதவில்லை. மேலும் இவை சிறு உணவானதால், பசி மேலும் தூண்டிவிடப்பட்டது என்பதுமாம். எனவே தான் ''விரியும் பசி'' என்றார்., பின்றுகின்ற என்ற சொல், செல்லச் செல்லத் தொலையாது ஆழ்ந்து உட்செல்லும் இடம் என்ற பொருளைத் தந்து நின்றது.

12. பன்னக அதிபர் பணாமணி பறித்து, அவை பகுத்து,
என்ன வானவர் விமானம் இடையிட்டு, அரவிடைத்
துன்னுகோளினொடு, தாரகை தொடுத்த துழனிச்
சன்னவீரம் இடைமின்னு தட மார்பினோடுமே. (2626)

(பன்னகம் - பாம்பு; அதிபர் - தலைவர்; பன்னகாதிபர் - தலைமைப் பாம்பு / சிறந்த பாம்பு; பணம் - படம்; மணி - இரத்தினம்; பகுத்து - பாகுபாடு செய்து; துன்னு - நெருங்கிய; தாரகை - நட்சத்திரம்; துழனி - ஓசை; சன்னவீரம் - வெற்றி மாலை; கோள் - நவக்கிரகம்)

பாம்புகளின் தலைவர்கள் என்று சொல்லப்படுகின்ற குல நாகங்களின் படங்களிலிருக்கும் இரத்தினங்களைப் பிடுங்கி வந்து, அவற்றைப் பாகுபடுத்திப் பதித்து வைத்தும், தேவர்களின் புட்பக விமானங்களை இடையிடையே தொங்கவிட்டும், நெருங்கிய நவக்கிரகங்களோடு, நட்சத்திரங்களையும் சேர்த்துத் தொடுத்த, ஒலியுடைய சன்னவீரம் என்னும் வெற்றி மாலையின் இடையே மற்ற அணிகலன்கள் மின்னுகின்ற அகன்ற மார்பையும் உடையவனாய். (குளகப்பாடல்)

விராதன் அணிந்திருக்கும் வெற்றி மாலையில் தேவர்களின் விமானங்களும், நவக்கிரகங்களும் நட்சத்திரங்களும் கோக்கப் பெற்றிருக்கின்றன என்பதாம். அஷ்ட குல நாகங்கள் என்பன எட்டு. அவை வாசுகி, ஆனந்தன், தட்சன், சங்கபாலன், பதுமன், மகாபதுமன், குளிகன், கார்க்கோடகன் என்பனவாம். துழனி என்பது ஒன்றோடொன்று மோதும் ஒலியைக் குறிக்கும்.

13. பம்பு செக்கர் எரிஒக்கும் மயிர் பக்கம் எரியக்கும்
பம் உற்ற உயர்நெற்றியின் விசித்து, ஒளிகுலாம்
உம்பருக்கு அரசன் மால்கரியின் ஓடை, எயிறுஉண்
கிம்புரிப்பெரிய தோள் வளையோடும் கிளரவே. (2627)

(பம்புதல் - பரவுதல்; செக்கர் - செவ்வானம்; கும்பம் - குடம்; உற்ற - போன்ற; விசித்தல் - கட்டப்படுதல்; குலாம் - தழையும் / விளங்கும்;

உம்பர்க்கு அரசன் - தேவேந்திரன்; ஓடை - நெற்றிப் பட்டம்; கிம்புரி - யானைக்கொம்பில் இடும் பூண்; கிளர்தல் - விளங்குதல்; எயிறு - தந்தங்கள்; துதிக்கை என்னும் கரம் உடையது ஆதலின் யானைக்கு கரி என்பது காரணப்பெயர்; கரி ஆண்யானை; கரீணி பெண் யானை)

பரவிய செவ்வானம் போன்ற ஒளிமிகுந்த மயிர்க் கற்றை அவன் பக்கங்களில் நெருப்புப் போல எரிந்து விளங்கவும், குடம் போன்ற அவனது உயர்ந்த நெற்றியில் தேவர்களுக்கு அரசனான தேவேந்திரனது மதம் பொருந்திய சிறந்த ஐராவதம் என்னும் ஆண் யானையின் நெற்றிப் பட்டம் கட்டப்பட்டு ஒளி வீசிக் கொண்டிருக்கவும் அதன் கொம்பாகிய தந்தங்களுக்கு இடப்பட்டிருக்கும் பூண் தனது பெரிய தோள்வளை களாகவும் கொண்டு திகழ்ந்து விளங்கவும். (குளகப்பாடல்)

விராதனது மயிர்க் கற்றை, செவ்வானம் போல் பரந்து விளங்குகிறது. தேவேந்திரனது யானையாகிய ஐராவதத்தின் நெற்றிப்பட்டம் போலத் தனது குடம் போன்ற நெற்றியில் பட்டம் கட்டியிருக்கிறான். அந்த யானையின் தந்தங்களுக்கு இட்டிருக்கும் பூணைத் தனது தோள் வளையல்களாக அணிந்து திகழ்ந்து விளங்குகிறான் என்பதாம். இதனால் விராதன் இந்திரனை வென்றவன் என்பதும் பெறப்படும்.

14. தங்குதிண் கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்கு வெம்கொடுமை என்பது புழுங்கி எழ, மா
மங்குபாதகம் விடம் கனல்வயங்கி நிமிரக்
கங்குல் பூசிவருகின்ற கலிகாலம் எனவே. (2628)

(பொங்குதல் - கிளர்தல்; மங்குதல் - குறைதல்; மா - பெருமை; பாதகம் - பாவம்; தவழ்தல் - பரவுதல்; கங்குல் - இரவு; தங்குதல் - பொருந்துதல்; காளிமை - கருமை; புழுங்குதல் - வெகுளுதல்; பூசுதல் - இயைதல்)

பொருந்திய திண்ணிய மிக்க கருமை தழைத்துப் பரவவும், மிக்கு உருகுகின்ற மிக்க கொடுமை என்பது ஓங்கி யெழவும், பெருமை குறைகின்ற மாபாவங்கள் விடம் எனவும் நெருப்பெனவும் விளங்கி ஓங்கவும், இருளைப் பூசிக் கொண்டு வருகின்ற கலிகாலம் போலவும். (குளகப்பாடல்)

விராதன் மிக்க கரிய நிறம் கொண்டவன்; கொடுமையே வடிவானவன்; பஞ்சமா பாதகங்களுடைய நஞ்சும் நெருப்பும் போன்றவன். கலிகாலம் கருமை நிறம் கொண்டு - கரியைப் பூசிக் கொண்டு வருவதைப் போல வந்தான் என்பதாம். ஐம்பெரும் பாவங்களாவன. பொய், கொலை, களவு, கள், காமம் என்பனவாம். அவனது நிறத்திற்கு இருளும், வடிவுக்குக் கொடுமையும் செயலுக்கு மாபாதகமும், அவனுக்கு நஞ்சும், தீயும், கலிகாலமும் உவமைகள்.

15. செற்றவாள் உழுவை வன்செறி அதள் திருகுறச்
சுற்றி, வாரண உரித்தொகுதி நீவி தொடரக்

கொற்றம் மேவு திசையானையின் மணிக்குலம் உடைக்
கற்றை மாசுணம் உரித்த உரி கச்சு ஒளிரவே. (2629)

(செற்ற - கொல்லப்பட்ட; வாள் - கொடிய; உழுவை - புலி; அதள் - தோல்; திருகுறுதல் - மாறுபடுதல் / சுருண்டு விளங்குதல்; வாரணம் - யானைகள்; உரி - தோல்; நீவி - ஆடை / புடவை; மாசுணம் - மலைப் பாம்பு; கச்சு - அரைப்பட்டி; செறி - உள்ளீடு அடர்த்தியான)

தன்னால் கொல்லப்பட்ட கொடிய புலியின் வலிய அடர்த்தியான தோலைத் தன் மார்பில் முறுக்கி மேலாடையாக அணிந்து கொண்டும், தன்னால் கொல்லப்பட்ட யானைகளின் பலவகைப்பட்ட தோல்களை ஆடையாக இடுப்பில், அணிந்து கொண்டும், வெற்றி பொருந்திய திக்கு யானைகளின் இரத்தினங்களின் கூட்டத்தை உடைய மலைப்பாம்பி லிருந்து உரித்த தோலை அரைப்பட்டியாகவும் அணிந்து கொண்டும் விளங்கவே. (குளகப்பாடல்)

விராதன் மார்பில் புலித்தோல்; இடுப்பில் யானைத் தோல்; அரையில் மலைப் பாம்பின் தோல், முதலியவை அணிந்து கொண்டு விளங்கினான் என்பதாம். வாள்அரி, வாள்அரக்கர் என்பது போல வாள் உழுவை என்று இங்கு பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்.

16. செங்கண் அங்க அரவின் பொருஇல் செம்மணி விராய்
வெங்கண் அங்க வலயங்களும் இலங்க, விரவிச்
சங்கு அணங்கிய சலஞ்சலம் அலம்பு தவளக்
கங்கணங்களும் இலங்கிய கரம் பிறழவே. (2630)

(அங்கம் - உடல் / உறுப்பு; விராய் - விரவி / பதிக்கப்பட்டு; வலயங்கள் - வளைகள் / முன்கையில் அணிவது; இலங்க - அசைய / மாறுபட்டு ஒலிக்க / ஒளிவீச; அணங்க - நெருக்கமாக; அலம்புதல் - ஒலித்தல்; தவளம் - வெண்மை நிறம்; இலங்கிய - விளங்கிய; பிறழ்தல் - புடை பெயர்த்து அசைதல்; சலஞ்சலம் - சங்கினத்தில் சிறந்தது; கங்கணம் - முன்கை வளை)

சிவந்த கண்களையும், நீண்ட உடம்பினையும் உடைய பாம்பின் ஒப்பற்ற சிவந்த நாக இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற கொடுமையான கண்களாகிய உறுப்பும், ஆயிரம் சங்குகள் நெருக்கமாக அமைந்து ஒலிக்கின்ற வெண்ணிறமுடைய சலஞ்சலம் என்னும் உயரிய சங்கும் முன் கை வளையல்களாக விளங்க, கைகளைப் புடை பெயர்த்து அசைத்துக் கொண்டே. (குளகப்பாடல்)

விராதன் தனது முன் கையில், பாம்பின் தலை வடிவமாக அமைந்த பூட்டு வாயினை உடைய மாணிக்க வளையல்களையும், ஆயிரம் வலம்புரிச் சங்குகளால் நெருக்கி இசைத்துச் சூழப்பட்ட உயர்ந்த வெண்ணிறமான வளையல்களையும் அணிந்து கொண்டு அசைந்து நகர்ந்து வந்தான் என்பதாம்.

17. முந்துவெள்ளி மலை பொன்னின் மலையோடும் முரணப்
பந்தம் உந்துகழல் பாடுபட ஊடுபடர்வோன்,
வந்து மண்ணின் இடையோன் எனினும், வானின் இடையோர்
சிந்தையுள்ளும் விழியுள்ளும் உளன் என்ற திறலோன். (2631)

(முந்து - மேன்மையான / மேம்பட்ட / சிறந்த; முரண - மாறுபடும்படி; பாடுபடுதல் - நிலைதடுமாறி அவதியுறுதல் / ஒலித்தல்; படர்தல் - திரிதல்; வெள்ளி மலை - கயிலயங்கிரி; பொன்னின் மலை - மேரு மலை; பந்தம் - கட்டு)

மலைகள் எல்லாவற்றிலும் முன் வைத்து எண்ணத்தக்க மேம்பட்ட கயிலை மலையும், பொன் போன்ற மேரு மலையும் தமக்குள் மாறுபட்டு, பந்து போல் உந்தித் தள்ளத்தக்க வீரக்கழலணிந்த கால்களால் நிலை தடுமாறி அவதியுறும்படி இக்காட்டினிடையே திரிவோனாகிய விராதன், இவ்வுலகத்தில் வந்து தோன்றினான். எனினும், வானில் உள்ள தேவர்களும் இவனது வருகைக்கு அஞ்சி எப்போதும் இவனை மனத்துள் நினைத்துக் கொண்டும், கண்களால் கண்டு கொண்டும் இருக்கத்தக்க ஆற்றலுடையோன். (குளகப்பாடல்)

இவன் நடந்து வரும்போது கைலாய மலையும் மேரு மலையும் தமக்குள் மாறுபட்டு நிலை தடுமாறிப் போகும். இவன் காட்டில் தான் சஞ்சரிக்கிறான்; நிலவுலகில் தான் திரிகிறான் என்பதல்ல; இவன் கொடுமையால் எழுந்த அச்சத்தால் தேவர்களின் மனத்திலும் கண்களிலும் நீங்காது நிறைந்திருக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதாம். கயிலை மலையையும் மேரு மலையையும் பந்து போல் ஆடவல்ல வலிய பெரிய தாள்களைப் பெற்றவன் விராதன் என்பதாம்.

18. ''பூதம் அத்தனையும் ஓர்வடிவு கொண்ட புதிது'' என்று
ஓதஒத்த உருவத்தன்; உரும்ஒத்த குரலன்;
காதலித்து அயன் அளித்த கடைஇட்ட கணிதப்
பாதலக்கம் மதவெற்பு அவை படைத்த வலியான்; (2632)

(உரும் - இடி; அயன் - பிரமன்; காதலித்து - விரும்பி; பாதலக்கம் - கால் லட்சம்; பாதம் - கால்; வெற்பு - மலை / இங்கே யானை; வலி - ஆற்றல்; பூதம் - பேருருவுடைய உயிர்; கடை - இறுதி)

உலகிலுள்ள ஐம்பெரும் பூதங்கள் எல்லாமும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய வடிவம் கொண்டவன் என்று சொல்லத் தக்க பேருருவம் உடையவன்; இடி முழக்கம் போன்ற குரலோசை உடையவன்; அவன் செய்த தவத்தினால் மகிழ்ந்து பிரமன் தானே விரும்பி அளித்த கணக்கிட்டு முடிவு செய்து அருளிய கால் லட்சம் மதம் மிக்க மலை போன்ற யானைகளின் வலிமையும் ஆற்றலும் படைத்தவன்.

இங்கே கால் லட்சம் என்றும், ஒன்றே கால் லட்சம் என்றும் இருமுறையிலும் பொருள் கூறுவதுண்டு.

19. சாரவந்து, அயல் விலங்கினன் மரங்கள் தரையில்
பேர, வன்கிரி பிளந்துஉக, வளர்ந்து, இகல்பெறா
வீர வெம்சிலையினோர் எதிர், விராதன் எனும் அக்
கோர வெங்கண் உரும் ஏறுஅன கொடுந் தொழிலினான். (2633)

(தொழில் - செயல்; பேர - பெயர்ந்து விழ; வன் - திண்ணிய; உகுதல் - சிதறுதல்; இகல் - போர்; அயல் - அண்மை; விலங்குதல் - தடுத்தல் / குறுக்கிடுதல்; கோர - பயங்கரமான / அச்சம் ஊட்டும்; விராதன் - எதிலும் நிறைவு அடையாதவன் இவன். தந்தை ஜயன்; தாய் சதஹ்ரதை.

விராதன் என்று சொல்லப்படுகின்ற அந்த அச்ச மூட்டும் பயங்கரமான வெவ்விய கண்களையும், பேரிடி போன்ற கொடும் தொழிலையும் உடையவன், நடந்து வரும் பொழுது, அண்மையிலுள்ள மரங்கள் ளெல்லாம் தாம் இருந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து தரையில் சாய்ந்தன; திண்ணிய மலைகளெல்லாம் கூறாகிப் பிளந்து சிதறின; இவன் பேருருக் கொண்டு, இது வரையிலும் போரினைப் பெறாதவர்களும், வீரத் தன்மையும், கொடிய வில்லையும் ஏந்தியவர்களுமான இராம இலக்குவர்களின் எதிரில் வந்து, அருகில் நின்று, குறுக்கிட்டுத் தடுத்தான்.

20. விராதன் சீதாதேவியைக் கைப்பற்றிச் செல்லுதல்

''நில்லும் நில்லும்'' என வந்து, நிணம் உண்ட நெடுவெண்
பல்லும், வல்எயிறும் மின்னு பகுவாய் முழை திறந்து,
அல்லி புல்லும் மலரன்னம் அனையாளை ஒருகைச்
சொல்லும் எல்லையின் முகந்து, உயர் விசும்பு தொடர. (2634)

(நிணம் - இறைச்சி; பகு - பிளவுபட்ட; முழை - குகை; எல்லை - அளவு; புல்லும் - தங்கிய; விசும்பு - வான்வழி; அல்லி - அகஇதழ்; முகந்து - பற்றிக் கொண்டு)

நிறைந்த இறைச்சியை உண்ட நீண்ட வெள்ளிய பற்களையும், மற்ற கோரப் பற்களையும் கொண்டு ஒளிவிடுகின்ற பிளவுபட்ட குகை போன்ற தன் வாயைத் திறந்து, ''நில்லுங்கள் நில்லுங்கள்'' என்று சொல்லிக் கொண்டே வந்து, அந்தச் சொல்லைச் சொல்லி முடிக்கும் கால அளவுக்குள்ளேயே, அக இதழ்கள் நிறைந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்ற சீதாதேவியை, ஒரு கையில் பற்றிக் கொண்டு உயர்ந்த வானத்தில் சென்றான்.

21. இராம இலக்குவர் விராதனிடம் கூறுதல்

காளை மைந்தர் அது கண்டு, கதம் வந்து கதுவத்
தோளில் வெம்சிலை இடம்கொடு தொடர்ந்து, சுடர்வாய்
வாளி தங்கிய வலங்கையவர், ''வஞ்சனை, அடா!
மீள்தி; எங்கு அகல்தி?'' என்பது விளம்ப, அவனும். (2635)

(கதம் - சினம்; கதுவ - பற்ற; இடம் - இடக்கை; வாய் - முனை; சுடர் - ஒளி; வாளி - அம்பு; மீள்தி - திரும்புக; அகல்தல் - ஓடுதல்; வலங்கை - வலது கை; காளை - இளம் இடபம் / எருது)

இளம் எருது போன்ற வலிமையும், பெருமிதமும், நடையும் கொண்ட குமாரர்களான இராம இலக்குவர், விராதன் இவ்வாறு செய்ததைக் கண்டு மிக்க சினம் பற்றிக் கொள்ள, தம் தோளிலிருந்த கொடிய வில்லினை இடக்கையில் மாற்றிக் கொண்டு, ஒளி வீசுகின்ற முனையையுடைய அம்புகளை வலக்கையில் பிடித்துக் கொண்டு, அவனைத் தொடர்ந்து சென்று ''அற்பனே! நீ செய்வது வஞ்சகச் செயல்; எங்கே போகின்றாய்; திரும்பி வந்து விடு'' என்று கூற, அதற்கு அவன் (குளகப்பாடல்)

ஆடவர்களைக் காளைக்கு உவமிப்பது கவிமரபு.

22. விராதன் மறுமொழி கூறுதல்

''ஆதி நான்முகன் வரத்தின், எனது ஆவி அகலேன்;
ஏதி யாவதுவும் இன்றி உலகுயாவும் இகலில்
சாதியாதனவும் இல்லை; உயிர் தந்தனென்; அடா!
போதிர், மாது இவளை உந்தி இனிது'' என்று புகல. (2636)

(ஆதி - பழைமை / முதன்மை; நான்முகன் - பிரமன்; ஆவி - உயிர்; ஏதி - படைக்கலம்; இகலி - போர்; சாதியாதன - அழிக்கப்படாதன; போதிர் - போவீர்களாக; உந்தி - விட்டு விட்டு / நீங்கி)

''படைப்புக்களில் முதன்மையானவனான பிரமனிடமிருந்து பெற்ற வரத்தினால் எனது உயிர் நீங்க மாட்டேன். நான் சாகா வரம் பெற்றவன்; போர்ப்படைக்கலன்கள் எதுவும் இன்றியே இந்த உலகம் எல்லாவற்றையும் போரில் அழிக்கவல்லவன்; நான் சாதிக்காதவை எவையும் இல்லை; உங்கள் மீது இரக்கப்பட்டு உயிர்ப் பிச்சை தருகிறேன்; அற்பர்களே! இந்தப் பெண்ணை என்னிடம் விட்டு விட்டு, நீங்கள் சுகமாகப் போய்ச் சேருங்கள்'' என்று கூற (குளகப்பாடல்)

தேவர்களில் முதலில் வைத்து எண்ணப்படுபவன் பிரமன் எனவே ஆதி நான்முகன் என்றார்.

23. இராமன் சினங்கொண்டு போர்தொடுக்கத் தொடங்குதல்

வீரனும் சிறிது மென்முறுவல் வெண்நிலவு உகப்
''போர் அறிந்திலன் இவன்; தனது பொற்பும், முரணும்
தீரும் எஞ்சி'' என, நெஞ்சின்உறு சிந்தை தெரியப்
பாரவெம் சிலையின் நாண் ஒலி படைத்த பொழுதே. (2637)

(உக - வெளிப்பட; போர் - எனது போர்த்திறமை; பொற்பு - பொலிவு / வீரத்தால் விளங்கும் தன்மை; முரண் - வலிமை; எஞ்சி - குறைந்து; தீரும் -

அழியும்; சிந்தை - நினைவு / கருத்து; தெரிய - புலப்படும்படி; பார - கனத்த; படைத்த - எழுப்பிய / உண்டாக்கிய)

வீரனாகிய இராமனும் வெள்ளிய நிலவு வெளிப்படுவது போன்று புன் சிரிப்புச் சிரித்து; ''இவன் என்னுடைய போர்த் திறமை அறிந்தவன் அல்லன்; இவனுடைய வீரத்தின் பாற்பட்ட பொலிவும், வலிமையும், சிறிது சிறிதாகக் குறைந்து இறுதியில் அழிந்தே தீரும்'' என்று தனது உள்ளக் கருத்தை வெளிப்படுத்தி, கனத்த கொடிய தனது கோதண்டம் என்னும் வில்லின் நாணொலியை எழுப்பிய போது (குளகப்பாடல்)

''போர் அறிந்திலன் இவன்'' என்று அதனை விராதன் மீது ஏற்றி, வஞ்சகமாகச் சீதையைக் கைப்பற்றிச் சென்றதனால், போர் செய்யும் முறையை இவன் அறிந்தவன் அல்லன் போலும் என்று இராமன் கூறிய தாகவும் கொள்ளலாம். ''பொற்பே பொலிவு'' என்பது தொல்காப்பியம்.

24. இலைகொள் வேல்அடல் இராமன், எழுமேக உருவன்,
சிலைகொள் நாண் நெடிய கோதை ஒலியேறு, திரைநீர்,
மலைகள், நீடுதலம், நாகர்பிலம், வானம் முதலாம்
உலகம் ஏழும், உரும்ஏறு என ஒலித்து உரறவே. (2638)

(கொள் - கொண்ட; அடல் - வலிமை; எழு - கருக்கொண்டு எழுகின்ற; கோதை - விரல்உறை; ஒலியேறு - பேரொலி; திரை - அலை; நீர் - கடல்; தலம் - நிலவுலகு; பிலம் - பாதலம்; உரும் - இடி; உரறுதல் - முழங்குதல்; இலை - இலை வடிவம்)

இலை வடிவம் கொண்ட வேற்படையையும், வலிமையையும் கொண்டவனும், கருக்கொண்டு எழுகின்ற மேகம் போன்ற கரிய நிறமுடைய உருவத்தையுடையவனுமான இராமன், தனது வில்லில் இருந்து எழுப்பிய நாணின் பேரோசை, அலைகள் நிறைந்த கடலால் சூழப்பட்டதும் மலைகள் நிறைந்ததுமான இந்நீண்ட நிலவுலகு, நாகர்கள் வாழ்கின்ற பாதாளம், தேவர்கள் வாழ்கின்ற சுவர்க்கலோகம் முதலாய ஏழு உலகங்களிலும் இடியோசை போல ஒலித்து முழங்கியது.

இலை வடிவம் என்பது இங்கே அரசிலை அல்லது வெற்றிலை போல அகன்ற, நுனி கூர்மையான, வேற்படையை உடையதைக் குறித்து நின்றது. கோதை என்பது வீரர்கள் கை விரலில் அணியும் தோல் உறை. ஏழு உலகம் என்பது இங்கே கீழ் ஏழு உலகங்கள் அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன; மேல் ஏழு உலகங்கள் - பூலோகம், புவலோகம், சுவலோகம், மகாலோகம், சனலோகம், தபோலோகம், சத்திய லோகம் என்பனவாம். இராமன் எழுப்பிய வில்லின் நாண் ஒலி பதினான்கு உலகங்களிலும் இடியோசை போல ஒலித்தது என்பதாம்.

25. சீதையை விடுத்து, இராமனை நோக்கி விராதன் வருதல்

வஞ்சகக்கொடிய பூசை நெடுவாயில் மறுகும்
பஞ்சரக்கிளி எனக் கதறு பாவையை விடா,
நெஞ்சு உளுக்கினன் எனச் சிறிது நின்று, நினையா,
அஞ்சனக்கிரி அனான் எதிர், அரக்கன் அழலா. (2639)

(பூசை - பூனை; மறுகுதல் - அகப்பட்டுக் கலங்குதல்; பஞ்சரம் - கூடு; விடா - விட்டு; உளுக்குதல் - சிதைதல் / நடுக்கமுறுதல்; நினையா - நினைத்து / எண்ணி; அழலா - அழன்று / சினந்து; அஞ்சனம் - மை; அஞ்சனக்கிரி - மைம்மலை; உளுக்குதல் - நெளித்துக் கொடுத்தல்)

அந்த அரக்கனாகிய விராதன், ஒரு வஞ்சனையுடைய கொடிய பூனையின் பெரிய வாயில் அகப்பட்டுக் கலங்கும் கூட்டில் வாழும் கிளியைப் போலக் கதறி அரற்றுகின்ற சீதாதேவியை விட்டு விட்டு, தனது மனம் சற்று தளர்ந்தவனாய்ச் செயலற்று நின்று ஆலோசித்த பின்னர், மை போன்ற கரிய நிறமுடைய மலை போன்ற இராமன் எதிரில் வந்து கோபமுற்று (குளகப்பாடல்)

பூனை பதுங்கியிருந்து கிளியைக் கவர்ந்து செல்வது போல, விராதனும் வஞ்சனையால் சீதாதேவியைத் தூக்கிக் கொண்டு சென்றதாலும், பூனையிடமிருந்து தப்பித்துப் போகக் கிளி கதறி அழுவது போலச் சீதாதேவியும் பலவாறு புலம்பியதாலும், ''வஞ்சக்கொடிய பூனை நெடுவாயின் மறுகும் பஞ்சரக் கிளி'' என்ற மிகப் பொருத்தமான உபமானத்தைக் கவிஞன் கையாண்டிருப்பது கருதி இன்புறத்தக்கது. விராதன் வஞ்சகப் பூனை; சீதாதேவி பஞ்சரக்கிளி; சீதாதேவி இதுவரை அரண்மனையை விட்டு வெளியே வந்து அறியாதவள் எனவே கூட்டுக்கிளி என்றார் என்க.

26. விராதன் சூலப்படையை எறிதல்

பேய்முகப் பிணிஅறப் பகைஞர் பெட்பின் உதிரம்
தோய்முகத்தது; கனத்தது; சுடர்க் குதிரையின்
வாய்முகத்திடை நிமிர்ந்து, வடவேலை பருகும்
தீமுகத் திரிசிகைப் படை திரித்து எறியவே. (2640)

(பிணி - பசிப்பிணி; அற - நீங்கும்படி; பெட்பின் - விருப்பத்துடன்; முகம் - நுனி; சுடர் - ஒளி விளங்குகின்ற; நிமிர்ந்து - வளர்ந்து; வடம் - முத்துவடம் / வடதிசை; வேலை - கடல் / கடல்நீர்; தீ - வடவைத்தீ; திரிசிகை - முத்தலை / மூன்றுதலை; படை - வேல் / சூலாயுதம் / திரிசூலம்; திரித்து - சுழற்றி)

பேய்களிடத்து உள்ள பசிப்பிணி நீங்கும் படியும், பகைவர்களின் இரத்தத்தை மிக்க விருப்பத்துடன் பருகித் தோய்ந்து போயிருக்கும்

நுனியையுடையதும், மிகுந்த பாரம் உடையதும், வடதிசையின் கடல் நீரைப்பருகும் ஒளிமிகுந்த குதிரையின் முகத்திடையே வளரும், வடவைத் தீயே போல. மூன்று தலைகளைக் கொண்ட வேற்படையாகிய முத்தலைச் சூலத்தைச் சுழற்றி, இராமன் மீது எறியவே (குளகப்பாடல்)

இராமன் மீது விராதன் முத்தலைச் சூலப்படையை எறிந்தான் என்பது கருத்து. அம்முத்தலைச் சூலம் எப்படிப்பட்டது? பேய்களின் பசிப் பிணியை ஆற்ற வல்லது. காரணம் அவற்றின் நுனியில் எப்பொழுதும் பகைவர்களின் இரத்தம் தோய்ந்து இருக்கும். கனமானது; வடதிசைக் கடலில் குதிரை முகத்துடன் இருந்து கொண்டு கடல் கரை கடவாதவாறு அதிலுள்ள நீரைப் பருகிக் கொண்டே இருக்கும் வடவைத்தீ போன்று ஒளி மிகுந்தது. கொடியது என்பதாம். பகைவரின் உடல், பேய்களுக்கு உணவு; அவர்களின் இரத்தம் அவைகளுக்குப் பருகும் நீர்.

27. இருவரும் போர் செய்தல்

திசையும், வானவரும், நின்ற திசைமாவும், உலகும்
அசையும் ஆலம் என, அன்ன அயில் மின்னி வரலும்,
வசைஇல் மேருமுதல், மால்வரைகள் ஏழின் வலிசால்
விசைய வார்சிலை இராமன், ஒருவாளி விடவே. (2641)

(திசை - எட்டுத் திசைகள்; மா - யானைகள்; அசையும் - நடுங்கும்; ஆலம் - ஆலகால விடம்; அயில் - சூலப்படை; வசைஇல் - குற்றமற்ற; வலி - ஆற்றல்; விசைய - விஜய / வெற்றி; வார் - நீண்ட; வாளி - அம்பு)

அவன் எய்த அந்த முத்தலைச் சூலம், எட்டுத் திசைகளும், அந்த எட்டுத் திசைகளையும் காவல் காத்து நிற்கின்ற எட்டுத்திக்கு பாலகர்களாகிய தேவர்களும், எட்டுத் திசைகளையும் தாங்கி நிற்கின்ற எட்டுத்திக் கஜங்களும், எல்லா உலகங்களும், நடுங்கும் படியான ஆலகால விடம் என்று சொல்லும்படியும், மின்னல் போல ஒளிவிட்டுக் கொண்டு வரவும், இராமபிரான் குற்றமற்ற மேரு மலை முதலான பெருமை வாய்ந்த ஏழு மலைகளின் ஆற்றலை விட, வெற்றியைத் தருகின்ற நீண்ட வில்லில் ஒப்பற்ற ஒரு அம்பினைப் பொருத்தி விராதன் மேல் ஏவிவிடவே (குளகப்பாடல்).

எட்டுத்திசைகள் - கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு; வடகிழக்கு, தென்மேற்கு, தென் கிழக்கு, வடமேற்கு என்பனவாம். அஷ்டதிக்கு பாலகர்கள் இந்திரன், அக்னி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவராவர்; அஷ்டதிக்கஜங்கள் - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ர தீபம் என்பனவாம். உலகும் என்பது பதினான்கு உலகத்தையும் குறிக்கும்; ஏழு மலைகள் - கயிலை, இமயம் (மேரு), மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பனவாம்.

28. ''இற்றது இன்றொடு இவ்வரக்கர்குலம்'' என்று, பகலே
வெற்ற விண்ணின் இடைநின்று நெடுமீன் விழுவபோல்,
சுற்றமைந்த சுடர் எஃகம் அது இரண்டு துணியா
அற்ற கண்டம் அவை ஆசையினது அந்தம் உறவே. (2642)

(இற்றது - அழிந்தது; வெற்ற - வெறுமையாகிய; மீன் - நட்சத்திரங்கள்; சுற்று - தழுவி; துணியா - துணித்து / அறுபட்டு; கண்டம் - துண்டங்கள்; ஆசை - திசை; அந்தம் - எல்லை; எஃகம் - சூலம்)

''இன்றோடு இவ்வரக்கர்களின் குலம் அழிந்து போயிற்று'' என்று, பகற் பொழுதிலேயே வெறுமையான - விண் மீன்களற்ற, சூன்யமான ஆகாயத் தினின்றும் பெரிய நட்சத்திரங்கள் விழுவதைப் போல, சுற்றிலும் ஒளி பொருந்திய அந்த முத்தலைச் சூலம் இரண்டு துண்டுகளாக அறுபட்டுக் கீழே விழ, அவற்றின் துண்டங்கள், திக்கின் எல்லை வரை சென்றடைந்தன.

பகல் பொழுதில் நட்சத்திரங்கள் கீழே விழுதல் என்பது பின் விளையப் போகும் பெருங்கேட்டிற்கு அறிகுறி என்பதாம். விராதனின் சூலத்தின் துண்டுகள், வானிலிருந்து விண்மீன்களைப் போல் விழுந்தது, அரக்கர் குல அழிவுக்கு முன்னோட்டம் என்க. இதே போலப் பகலில் நட்சத்திரங்கள் விழும் நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி கோப்பெருந்தேவி இறப்பதற்கு முன்னாள் இரவில் ''வெம்பகல் வீழும் கடுங்கதிர் மீன் இவை காண்பேன், கதிரை இருள் விழுங்கக் காண்பென்'' என்று தான் கனவு கண்டதாகத் தோழியிடம் கூறுவது ஒப்பு நோக்கத்தக்கது.

29. சூர் ஒடுங்கு அயில் துணிந்து இறுதல் கண்டு, சிறிதும்
போர் ஒடுங்கலன்; மறம்கொடு புழுங்கி, நிருதன்
பார்ஒடுங்குறு கரம்கொடு, பருப்பதம் எலாம்
வேரொடும் கடிது எடுத்து எதிர் விசைத்து விடலும். (2643)

(சூர் - ஒரு கொடும் தெய்வம்; துணிந்து - துண்டு பட்டு; இறுதல் - ஒழிந்தது; ஒடுங்குதல் - தளர்ச்சியடைதல்; மறம் - வீரம்; புழுங்கி - சினந்து; நிருதன் - அரக்கன்; பருப்பதம் - பர்வதம் / மலைகள்; கடிது - விரைந்து; விசைத்து - வேகமாக; விடல் - எறிதல்; ஒடுங்குதல் - தங்கியிருத்தல்; நிருதி வழித் தோன்றினவர் ஆகையால் நிருதர் அரக்கர்க்குக் காரணப் பெயர் - பெயர் வழி வந்த பெயர் - தத்தி தாந்த நாமம்)

கொடுந் தெய்வத் தன்மையைத் தன்னுள் அடக்கிய அந்த முத்தலைச் சூலம் அறுபட்டு அழிந்து போனதைக் கண்டு சிறிதும் மனம் தளராது பின் வாங்காது அவ்வரக்கன், இன்னும் மிக்க வீரம் கொண்டு சினந்து போர் செய்யக் கருதி, உலகம் முழுவதையும் அடக்கிக் கொள்ளுகின்ற வலிமையுடைய தம் கைகளைக் கொண்டு, எதிர்ப்பட்ட மலைகள்

எல்லாவற்றையும் வேரோடும் விரைந்து பிடுங்கி எடுத்து, எதிரில் நின்ற இராமபிரான் மேல் வேகமாக வீசி எறியவும் - (குளகப் பாடல்).

சூர் என்ற சொல்லுக்கு, கொடுந் தெய்வம், தேவர்கள், வஞ்சம் என்று பல பொருள்கள் உண்டு. அரக்கர்கள் போர் கண்டு அஞ்சமாட்டார்கள், தளர்ச்சியடைய மாட்டார்கள் என்பது கருத்து.

30. வட்டம் இட்ட கிரி அற்றுஉக, வயங்கு வயிரக்
கட்டமைந்த கதிர்வாளி எதிரே கடவலான்
விட்டவிட்ட மலைமீள, அவன் மெய்யின் விசையால்
பட்டபட்ட இடம் எங்கும் உடல் ஊறுபடலும். (2644)

(வட்டம் இட்ட - சூழ்ந்து வருகின்ற; வயிரம் - உறுதிமிக்க; கடவுதல் - எய்யுதல் / ஏவுதல்; மீள - திரும்ப; விட்ட - ஏவிய / எறிந்த; விசை - வேகம்; மெய் - உடல்; ஊறு - காயம் / புண்)

தன்னைச் சூழ்ந்து வருகின்ற மலைகள் எல்லாம் தூளாகிப் போகும் படி சிதைத்து போக, இராமன் தனது விளங்குகின்ற, உறுதி வாய்ந்த, கட்டமைந்த, ஒளி படைத்த அம்புகளை அம்மலைகளுக்கு எதிரே எய்வதால், அவ்வரக்கன் எறிந்த மலைகள் எல்லாம் திரும்பவும் அவனைச் சென்று வேகமாகத் தாக்க, அவை பட்ட இடங்களில் எல்லாம், அவன் உடம்பு எங்கும் புண் ஆகிப் போகவும் - (குளகப்பாடல்).

''வயிரக் கட்டமைந்த கதிர் வாளி'' என்பதற்கு வயிரத்தைப் பதித்து உறுதியாகக் கட்டப்பட்ட ஒளியை உடைய அம்பு என்றும் பொருள் கூறுவதுண்டு. அம்பின் நுனியில் வைரம் பதிப்பது, வயிரம் எதையும் பிளந்து செல்லும் ஆற்றலும் உறுதியும் உடையது என்பதால் என்க. விராதன் எறிந்த மலைகள் எல்லாம், இராமன் அம்பினால் திரும்பிச் சென்று விராதனையே காயப்படுத்தின என்பதாம்.

31. ஓம் அராமரை, ஒருங்கும் உணர்வோர் உணர்வுறும்
நாமராம் அவரை, நல்லறம் நிறுத்த நணுகித்
தாம் அராஅணை துறந்து, தரை நின்றவரை, ஓர்
மா மராமரம் இறுத்து, அதுகொடு எற்ற வரலும். (2645)

(இறுத்து - வேரோடு பறித்து; ஒருங்கும் - ஒன்றுபட்ட; உணர்வோர் - ஞானிகள்; உணர்வுறுதல் - எண்ணுதல்; அரா - அரவு / பாம்பு; அணை - படுக்கை; ஓம் - பிரணவம்; எற்ற - தாக்க; மராமரம் - ஆச்சாமரம்)

''ஓம்'' எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளாகிய இராமபிரானை; ஓமங்களால் செய்யப்படும் வேள்வியும், வேள்வியின் பயனாயும் நிற்கும் இராமபிரானை; ஒன்றுபட்ட உணர்வோடு ஞானிகள் தியானிக்கும் இராமர் என்னும் பெயர் பெற்ற இராமபிரானை, சிறந்த தருமத்தை உலகில் நிலை நிறுத்துவதற்காகத் தமது ஆதிசேடனாகிய பாம்பணையைத் துறந்து, இவ்வுலகில் வந்து அவதரித்த இராமபிரானை, விராதன் ஒரு பெரிய

ஆச்சாமரத்தை வேருடன் பிடுங்கி, அதனைக் கொண்டு தாக்க வந்த போது - (குளகப்பாடல்).

இராம அவதாரத்தின் உண்மை நிலை புலப்படுத்தப்பட்டது.

32. ஏறுசேவகன் இரண்டினோடு இரண்டு கணையால்
வேறு வேறு துணி செய்து, அது விழுத்தி, விசையால்
மாறு மாறு நிமிர் தோளிடையும் மார்பினிடையும்
ஆறும் ஆறும் அயில் வெங்கணை அழுத்த, அவனும். (2646)

(ஏறுதல் - வளர்ச்சியடைதல்; ஏறு - ஆண்சிங்கமுமாம்; சேவகன் - வீரன் / இராமன்; விழுத்தி - வீழ்த்தி; நிமிர் - உயர்ந்த; அயில் - கூரிய; வெம் - கொடிய; விசையால் - வேகத்தோடு; மாறும் ஆறு - புறமுதுகு காட்டும்படி; மாறுதல் - முதுகிடுதல்; இடை - இடம்)

மேன் மேலும் வளர்ச்சியடைகிற வீரத்தன்மை கொண்ட ஆண் சிங்கம் போன்றவனான இராமன், நான்கு அம்புகளால், அவ்விராதன் ஏவிய மராமரத்தைத் துண்டு துண்டாக்கி அதை வீழ்த்தி, மிக்க வேகத்தால், அவன் புறமுதுகு இட்டு ஓடும்படி, பன்னிரண்டு கூரிய கொடிய அம்புகளால் அவனுடைய உயர்ந்த தோளிலும், மார்பினிடத்திலும் பதியும்படி செய்ய, அவ்விராதனும் - (குளகப்பாடல்).

''இடமும், நுசுப்பும், நடுவும் இடையெனல்'' என்பது பிங்கல நிகண்டு.

33. மொய்த்த முள்தனது உடல்தலை முளைத்த, முடுகிக்
கைத்தவற்றின் நிமிரக் கடிது கன்றி, விசிறும்
எய்த்த மெய்ப் பெரிய கேழல் என, எங்கும் விசையின்
தைத்த அக்கணை தெறிப்ப, மெய் சிலிர்த்து உதறவே. (2647)

(மொய்த்த - அடர்ந்த; முளைத்த - தோன்றிய; முடுகி - விரைந்து; கைத்தல் - வெறுத்தல்; கைத்தவை - தன்னால் வெறுக்கப்பட்ட; கேழல் - முள்ளம் பன்றி / ஏய்ப்பன்றி / காட்டுப் பன்றி; எய்த்த - இளைப்புற்ற; தெறிப்ப - சிதறி விழும்படி; நிமிர்தல் - நீளுதல் / மீள / விடுபட; தலை - இடம்; கன்றி - சினந்து / கோபித்து; விசிறும் - சிதறச் செய்யும்)

தனது உடம்பிடத்தில் அடர்த்தியாகத் தோன்றிய முள் போன்ற இராமனது அம்புகளை, தன்னால் வெறுக்கப்பட்ட விலங்குகளின் மேல் விரைந்து கோபித்து சிதறச்செய்யும், இளைப்புற்ற பெரிய உடலை உடைய முள்ளம் பன்றியைப் போல, தன் உடல் எங்கும் வேகத்தால் தைத்த அவ்வம்புகள் சிதறி விழும்படி, தனது உடலைச் சிலிர்த்து விராதன் உதறவும் - (குளகப்பாடல்.

முள்ளம் பன்றி தனக்குக் கேடு விளைவிக்கும் பிற பகை விலங்குகள் தன்னை நெருங்கும் போது, தன் உடலைச் சிலிர்த்து, அதிலுள்ள முட்கள் நீளும் படிச் செய்து, பகை விலங்குகளின் உடலில் தைத்துக் கிழிக்கச் செய்யும் இயல்புடையது. அதைப் போல இங்கே விராதன், இராமன் எய்த

அம்புகள் தன் உடலில் தைக்கப் பெற்றிருந்தவற்றை, அவைகள் உதிர்ந்து போகுமாறு தன்னுடலைச் சிலிர்த்து உதறினான் என்பதாம். முன்பாடலில் இராமபிரானை ஏறு / ஆண் சிங்கம் என்றார்; இங்கே விராதனை இழிந்த பன்றி என்று அதற்கு ஏற்ப உவமித்திருப்பது ஒரு நயம். இங்கே முள் என்பது அம்பைக் குறிக்கும். அதன் கூர்மையே காரணமாம்.

34. எரியின் வார்கணை இராமன் விட, எங்கும் நிலையாது
உருவிஓட, மறம் ஓடுதல் செயா உணர்வினான்,
அருவிபாயும் வரைபோல், குருதி ஆறு பெருகிச்
சொரிய, வேகவலி கெட்டு, உணர்வு சோர்வுறுதலும். (2648)

(மறம் - வீரம் / வலிமை; ஓடுதல் - அழிதல் / குறைதல்; எரி- நெருப்பு; வார்-நீண்ட; நிலையாது - தங்காது; வரை- மலை; வேகம் - கடுமை; உணர்வு - அறிவு; சோர்வுறுதல் - தளர்தல்; எரியின் வார்கணை - எரிகணை / நெருப்பு அம்பு; அக்னியாஸ்திரம் / தீக்கணை)

நெருப்புப் போன்ற நீண்ட அம்பினை - அக்னி அஸ்திரத்தை - இராமன் எய்யவும், அது வேறு எங்கும் தங்காது, வீரத் தன்மை சற்றும் குறையாத அறிவுடையவனான விராதன், உடலை ஊடுருவிச் செல்ல, மலையிலிருந்து பாயும் அருவி போல இரத்தம் அவன் உடம்பினின்றும் பெருக்கெடுத்து ஓட, அதனால் அவன் தனது கடுமையான வேகமும் வலிமையும் இழந்து, அறிவும் கெட்டுச் சோர்வடையவும் - (குளகப்பாடல்).

அக்னி அஸ்திரம் அதற்குரிய இயல்புப்படி அவனை எரிக்காது, அவன் உடலில் பாய்ந்து ஊடுருவி ஓடியது என்பதனால் விராதனது வரபலம் புலப்படுத்தப்பட்டது என்க. மலை - அவன் உடல்; அருவி - இரத்த ஆறு;

35. ''மெய் வரத்தினன் மிடல் படைவிடப் படுகிலன்
செய்யும் மற்றும் இகல்'' என்று, சினவாள் உருவி ''வன்
கை துணிக்கும்'' என முந்து கடுகிப் படர்புயத்து
எய்வில் மல்பொருவு தோள் இருவர்ஏற, நிருதன். (2649)

(மெய் - உண்மையான / தவறாத; மிடல் - வலிய; படுகிலன் - இறந்து ஒழியான்; மற்றும் - மேலும்; இகல் - போர்; வன் - வலிய; துணித்தல் - வெட்டுதல்; கடுகி - விரைந்து; படர் - பருத்த; நிருதன் - அரக்கன்; எய்வுஇல் - சோர்வில்லாத என்றலுமாம்)

எய்கின்ற அம்புகளை உடைய, வில்லாற்றலும், மற்போர் புரியும் தோளாற்றலும், சோர்வில்லாத பேராற்றலும் கொண்ட இராம இலக்குவர் ஆகிய இருவரும், ''இவ்வரக்கன் உண்மையான வரம் பெற்றவன்; வலிய படைகள் எவ்வளவு செலுத்தினாலும் உயிர் துறவான்; மீண்டும் மீண்டும் போர் புரிவான்'' என்று கருதி, கோபத்தால் தமது வாட்களை உறையிலிருந்தும் நீக்கி, ''இவனுடைய வலிமைபெற்ற கைகளைத் துண்டித்து விடுவோம்'' என்று சொல்லி, விரைவாக அவன் எதிர் சென்று,

அவனுடைய அகன்ற, பருத்த தோள்களின் மீது இருவரும் ஏறவும், அவ்வரக்கன் - (குளகப்பாடல்).

வில்லும் மல்லும் விற்றொழிலையும், மற்றொழிலையும் குறித்தது என்க. சோர்வில்லா மற்போர் புரியும் தோள்களையுடையவர் எனவும் பொருள் கொள்ளலாம். தவறாது பயனளித்ததால் மெய்வரம் எனப்பட்டது.

36. உண்டு எழுந்த உணர்வு அவ்வயின் உணர்ந்து, முடுகித்
தண்டு எழுந்து அனைய தோள்கொடு, சுமந்து, தழுவிப்
பண்டுஎழு தன் வன் கதி பதிற்றின் முடுகிக்
கொண்டு எழுந்தனன், விழுந்து அழி கொழும் குருதியான். (2650)

(அழி - சிந்துகின்ற; கொழும் - மிக்க; முடுகி - விரைந்து; எழுந்து - ஓங்கிய; தண்டு - தண்டாயுதம்; தழுவி - பற்றி; சுமந்து - தாங்கிக் கொண்டு; வன்கதி - கொடிய வேகம் / விரைவு; பதிற்றின் - பத்து மடங்கு; உண்டு - அடங்கியிருந்து; எழுந்த - மேற்கிளம்பிய)

கீழே விழுந்து இரத்தம் மிக்கச் சொரிகின்ற உடலை உடைய அவ்விராதன்; முன்பு இழந்திருந்த அறிவு இப்போது மேற்கிளம்ப, அப்போது, இராம இலக்குவர்கள் தன் தோள் மீது அமர்ந்திருக்கின்றனர் என்பதை உணர்ந்து, விரைந்து, தண்டாயுதம் நிமிர்ந்து எழுந்ததைப் போன்ற திண்ணிய தோள்கள் மீது அவர்களைப் பற்றித் தாங்கிக் கொண்டு, முற்பிறவியில் தன்னிடம் அமைந்த வலிமையும் வேகமும் இப்போது அதைப் போல பத்து மடங்கு அதிகமாகக் கொண்டு எழுந்து, மேற்கிளம்பிச் செல்ல - (குளகப்பாடல்).

இரத்தம் பெருகியதால் சோர்வுற்ற விராதன், இப்போது மீண்டும் உணர்வு பெற்று இராம இலக்குவர்கள் தன் தோள் மீது அமர்ந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, தனது தண்டாயுதம் போன்ற தோள்களில் அவர்களைச் சுமந்து கொண்டு, தனக்கு முன்பு இருந்ததைப் போல் பத்து மடங்கு அதிகமான வலிமை பெற்று மேற்கிளம்பினான் என்க.

37. முந்து வான்முகடுஉறக் கடிது முட்டி முடுகிச்
சிந்து சோரியோடு சாரிகை திரிந்தனன் அரோ;
வந்து மேருவினை நாள்தோறும் வலம்செய்து உழல்வோர்
இந்து சூரியரை ஒத்து இருவரும் பொலியவே. (2651)

(உழல்தல் - திரிதல்; இந்து - சந்திரன்; முந்து - உயர்ந்த; கடிது முடுகி - மிகவும் விரைந்து; சாரிகை - வட்டம்; சோரி - இரத்தம்; வலம் வருதல் - பிரதட்சணம் செய்தல்)

மகா மேரு மலையைத் தினந்தோறும் பிரதட்சணம் செய்து திரிகின்ற சந்திரனையும், சூரியனையும்போன்ற, இராம இலக்குவர்இருவரும்தனது தோளின் மேல் பொலிவுற்று விளங்க, ஐம்பூதங்களிலும் முன் வைத்து

உயர்வாக எண்ணப்படுகின்ற ஆகாயத்தின் முகட்டினைப் பொருந்துமாறு விரைந்து சென்று, ஒழுகுகின்ற இரத்தத்தோடு, விராதன் வட்டமிட்டுக் கொண்டு திரியலானான்.

சந்திரனும் சூரியனும் நாள்தோறும் மேரு மலையைச் சுற்றி வருவதைத் தான் இரவு என்றும் பகல் என்றும் கூறுகிறோம். சந்திரன் ஒளியும் தண்மையும் கொண்டது எனவே அதற்கு இராமபிரானும், சூரியன் வெப்பமும் பொன் நிறமும் கொண்டதால் அதற்கு இலக்குவனும் உவமை; மேரு மலை விராதனுக்கு உவமையாயிற்று.

38. விராதன் விண்மிசைச் செல்லுதல்

சுவண வண்ணனொடு கண்ணன் மிசைகொள்ள, இசைதோய்
அவண விண்ணிடை எழுந்து, படர்கின்றவன், அறம்
சிவண, அன்ன சிறை முன் அவரொடு ஏகு செலவத்து
உவணன் என்னும் நெடும் மன்னவனும் ஒத்தனன் அரோ. (2652)

(சுவணம் - சுவர்ணம் / சொர்ணம் / தங்கம் / பொன்; கண்ணன் - இராமன்; மிசை - மேலே; இசை - ஒலி; அவண - அப்புறத்தது; படர்தல் - செல்லுதல்; சிவண - பொருந்த; செலவு - விரைந்து செல்லுதல்; உவணன் - கருடன்; நெடும் மன்னவன் - பெரியவனான பறவை அரசன்; அன்ன - அத்தன்மையுள்ள)

பொன் நிறத்தவனான இலக்குவனோடு, கருணையே வடிவான இராமபிரானும் விராதனின் தோள் மேல் தங்கியிருக்க, ஒலியை இயல்பாகப் பெற்றுள்ள அப்புறத்ததாகிய ஆகாயத்தில் மேலெழும்பிச் செல்லுகின்றவனான விராதன், அறத்தையே ஓர் வடிவாகக் கொண்ட தன்மையுள்ளசிறகுகளைஉடையகருடன்என்னும்பெரிய பறவைகளுக்கு அரசன், பலராமனொடு கிருஷ்ணன் விரைந்து செல்லுகின்ற தன்மையை ஒத்திருந்தனன்.

இலக்குவன் பொன் நிறத்தவன்; இராமன் கருணையே வடிவானவன் கரிய நிறத்தினன். இதனைக் குறிக்க சுவண வண்ணன் என்றும்; கண்ணன் என்றும்கூறினார்என்க. ஆகாயத்திற்குஅப்புறம் மேலெழும்பிச்சென்றான் என்பதை ''இசைதோய் அவண விண்ணிடை எழுந்து படர்கின்றவன்'' என்றான்; இவ்வாறு செய்வதற்குப் பின்னால் கிருஷ்ண அவதாரத்தில் பட்சிராஜனாகிய கருடன் பலராமரையும் கிருஷ்ணரையும் தன் சிறகுகளில் சுமந்து சென்ற நிகழ்ச்சியை ஒப்புக் கூறினார் என்பதாம்.

கிருஷ்ணன் தன் அண்ணன் பலராமனுடன் கருடன் மீதமர்ந்து சென்றது ஏன் என்பதற்குப் பாகவதத்தில் ஒரு கதை வருகிறது. வாணன் என்பவன் ஆயிரம் கைகளையுடைய ஒரு அசுரன். சோணித புரத்தைத் தலை நகராகக் கொண்டு அரசு புரிந்தவன். அவன் மகள் உஷை; அவள் தன் கனவில் ஓர் பேரழகனைக் கண்டு காமுற்றாள். அவளது தோழி சித்திரலேகை; அவள்

தன் தலைவியின் கனவில் வந்தவன் கிருஷ்ணனுடைய பேரன் அனிருத்தன்தான் என்பதைத் தெரிந்து கொண்டாள். தோழி மாயம் வல்லவள். தன் தலைவியை மகிழ்விக்கக் கருதினாள். எனவே ஒரு நாள் இரவு கிருஷ்ணனின் ஊரான துவாரகையினுள் புகுந்து, அவன் பேரன் அணிருத்தனை அவன் தூங்கும் போது கட்டிலோடு தூக்கி வந்து தன் தலைவி உஷையிடம் கொண்டு வந்து விட்டாள். இருவரும் இன்பம் துய்த்தனர். வாணன் அனிருத்தனோடு போர் செய்தான். வெல்ல முடிய வில்லை. எனவே மறைந்து நின்று நாகாஸ்திரத்தை ஏவிச் சிறைப் பிடித்தான்.

தன் பேரன் வாணனால் சிறை வைக்கப்பட்டான் என்பதை அறிந்த கிருஷ்ணர், தன் அண்ணன் பலராமனோடு, கருடனின் மேலமர்ந்து சென்று வாணனோடு போர் செய்து அனிருத்தனைச் சிறையிலிருந்து மீட்டார் என்பது பாகவதக்கதை. கருடனைத் தரும சொரூபி என்றும் பெரிய திருவடி என்றும் வேறு பெயரிட்டு அழைப்பர்.

39. சீதாதேவி வருந்துதல்

மா தயா உடைய தன் கணவன், வஞ்சன் வினையின்
போதலோடும் அலமந்தனள்; புலர்ந்து பொடியில்
கோதையோடும் ஒசிகொம்பு என விழுந்தனள் குலச்
சீதை; சேவல் பிடியுண்ட சிறை அன்னம் அனையாள். (2653)

(தயா - தயை / கருணை; மா - பெரிய; வஞ்சன் - தீயோன்; வினை - செயல்; போதல் - செல்லுதல்; சேவல் - ஆண் அன்னம்; குலம் - நற்குடிப்பிறப்பு / நிமி குலம்; அலமருதல் - மனம் கலங்குதல்; புலர்தல் - வாட்டம் அடைதல்; கோதை - கூந்தல்; ஒசிதல் - துவண்டு விழுதல்; பொடி - புழுதி)

உயர்ந்த நிமி குலத்திலே பிறந்த சீதாதேவி, பெருங்கருணையுள்ளம் கொண்ட தன் கணவன் இராமனை, தீயோனான விராதன் தனது வஞ்சனைச் செயலாலும், வலிமையாலும், ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு போவதைக் கண்டதும், ஆண் அன்னத்தைப் பிறர் பிடித்துச் செல்ல அது கண்டு வருத்தமுறும் சிறகுகளையுடைய பெண் அன்னம் போல மனம் கலங்கினாள்; வாட்டமுற்றாள்; துவண்டு விழுகின்ற பூங்கொம்பு போலத் தன் கூந்தலோடும் புழுதியில் விழுந்தாள்.

கூந்தலொடு விழுதல் என்பது இலக்கிய மரபு. ''தானும் குழலும் தனி விழுந்தாள்'' என்பது நளவெண்பா.

40. சீதாதேவி விராதனை நோக்கிக் கூறுதல்

பின்னை ஏதும் உதவும் துணை பெறாள்; உரைபெறாள்;
மின்னை ஏய்இடை நுடங்கிட, விரைந்து தொடர்வாள்;

"அன்னையே அனைய அன்பின் அறவோர்கள் தமை விட்டு
என்னையே நுகர்தி" என்றனள், எழுந்து விழுவாள். (2654)

(உரை - ஆறுதல் மொழி; ஏய் - ஒத்த; நுடங்கிட - துவளும்படி; நுகர்தல் - உண்ணுதல்)

அவ்வாறு புழுதியில் விழுந்தவள், மீண்டும் எழுந்து, தனக்கு உதவி செய்பவர்கள் யாரும் இல்லாததையும், தனக்கு ஆறுதல் மொழி தரக்கூட ஒருவரும் இல்லாததையும் அறிந்து, மின்னலை ஒத்த தன் இடை துவளும்படி விரைந்து, அவனைத் தொடர்ந்து ஓடிப்போய், அவனை நோக்கி, "உலகத்தார்க்கெல்லாம் தாயைப் போல அன்பு காட்டுகின்ற அந்த அறத்தின் உருவானவர்களாகிய இராம இலக்குவர் இருவரையும் விட்டு விட்டு, என்னையே உண்பாயாக!" என்று கதறிக் கேட்டுக் கொண்டே மீண்டும் கீழே விழுவாளாயினாள்.

அவ்விடத்தில் அவளுக்கு உதவி செய்பவர்கள் யாரும் இல்லை; ஆறுதல் மொழி கூறக்கூட ஒருவரும் இல்லை. அவள் தனித்து விடப்பட்டாள் என்பதைக் கருதுக. மின்னலுக்கு ஒளிதான் உண்டு. உருவம் இல்லை. ஒளியை வைத்துத்தான் மின்னலை அடையாளம் காணமுடியும். அது போன்ற இடை என்ற ஒன்றே இல்லாத சீதாதேவி என்று அவள் இடை சிறப்பிக்கப்பட்டது. சீதாதேவி இராம இலக்குவர்களை விடுவிக்கக் கோரியதன் காரணம், அவர்கள் இருவராலும் உலகுக்கு விளைய வேண்டிய நன்மைகள் மிக இருக்கின்றன என்பதனாலாகும் என்க.

41. இலக்குவன் இராமனிடம் வேண்டுதல்

அழுது, வாய்குழறி, ஆர்உயிர் அழுங்கி, உலையும்
எழுது பாவை அனையாள் நிலை உணர்ந்து, இளையவன்
தொழுது, "தேவி துயர்கூர விளையாடல் தொழிலோ?
பழுது; வாழி?" என, ஊழி முதல்வன் பகர்வுறும். (2655)

(அழுங்கல் - கெடுதல்; உலைதல் - வருந்துதல்; குழறி - பிறழ்ந்து; கூர - மிக; பழுது - குற்றம்; ஊழிமுதல்வன் - இராமன் / எல்லாம் அழியும் ஊழிக் காலத்தும் அழியாத தலைவன்; பாவை - பதுமை; தொழில் - செயல்)

இவ்வாறு அழுது, வாய்ச் சொற்கள் பிறழ்ந்து, அருமையான உயிர் ஒடுங்கிப் போக, வருந்தித் தவிக்கும், சித்திரத்திலும் எழுதவொண்ணாப் பதுமைபோன்று அசையாது கிடப்பவளான சீதாதேவியின் துயரநிலையை நன்குணர்ந்த இளையவனான இலக்குவன், இராமனைத் தொழுது, "சீதாதேவி இவ்வாறு மிக்க துன்பம் அடையும்படி விளையாடுவது நற்காரியம் ஆகுமா? இது குற்றமாகும். தயவு செய்து இதைத் தவிர்ப்பீராக!" என்றலும், பிரளய காலத்துக்கெல்லாம் முந்தியவனான பரம்பொருளின் கூறான இராமபிரான் கீழ்வருமாறு கூறலானான்.

அழுதலும், வாய்ச் சொற்கள் பிறழ்தலும், உயிர் ஒடுங்கிப் போதலும், வருத்தமுறுதலும், அசையாது செயலற்று நிற்றலும், அவலத்தின் மெய்ப்பாடுகள். வாழி என்பது பொதுவாக அசைச்சொல்லாகக் கொள்ளப் பட்டாலும், இது தேவர், அரசர் முதலிய பெரியோர்களிடம் பேசும் முன் கூறும் மரியாதைக்குரிய சொல் எனக் கொள்ளப்படல் வேண்டும்.

42. இராமன் காலால் எற்ற, விராதன் தரையில் விழுதல்

ஏக நின்ற நெறி எல்லை கடிது ஏறி, இனிதின்
போகல் நன்று என நினைந்தனென், ''இவன்; பொருஇலோய்!
சாகல் இன்று பொருளன்று''; என நகும் தகைமையோன்,
வேக வெம்கழலின் உந்தலும், விராதன் விழவே. (2656)

(பொரு - ஒப்பு; ஏக - செல்ல வேண்டிய; இன்று - இப்பொழுது; நெறி - வழி; கடிது - விரைந்து; பொருள் - காரியம்; உந்துதல் - உதைத்தல்)

''ஒப்பற்றவனே! நாம் இக்காட்டினைக் கடந்து போக வேண்டிய வழியின் எல்லையை இவன் மீது அமர்ந்து கொண்டு, விரைவாகவும் வருத்தமில்லாமலும் இனிதாகவும் போய் விடுதல் நல்லது என்று கருதினேன். இவன் இறப்பது இப்பொழுது நமக்கு ஒரு பெரிய பொருட்டல்ல''; என இகழ்ச்சியாய்ச் சிரித்த இராமபிரான், தன்னுடைய வேகமும் வலிமையும் பொருந்திய கழல்களினால் அவனை ஒரு எற்று எற்றலும், விராதன் கீழே விழவும் - (குளகப்பாடல்).

''தேவி மிக்க துயருறும்படி விளையாடுவது தகுமா? எனக் கேட்ட இலக்குவனுக்கு நகைச்சுவையாக மாற்றம் அளித்த இராமபிரானின் கூற்று கருதத்தக்கது. பொரு என்ற சொல் போர் செய்தலையும் குறிப்பதால், பொருவிலோய் என்ற சொல்லுக்கு போர் புரியும் விற்படையை உடையவனே என்றும் பொருள் கூறுவர்; வெம் என்ற சொல்லுக்கு விரும்பத்தக்க என்றும் ஒரு பொருள் உண்டு; எனவே வெம் கழல் என்ற சொல்லுக்கு உலகத்தவரால் மிக்க விரும்பப்படுகின்ற வீரக்கழல் அணிந்த திருவடிகள் ஸ்ரீபாதம் என்றும் ஒரு பொருள் கூறுதல் பொருந்தும்.

43. இருவரும் விராதனின் தோள்களைத் துண்டித்தல்

தோள் இரண்டும் வடிவாள்கொடு துணித்து, விசையால்
மீளி மொய்ம்பினர் குதித்தலும், வெகுண்டு, புருவத்
தேளிரண்டும் நெரியச் சினவு செங்கண், அரவக்
கோள், இரண்டு சுடரும் தொடர்வதில் குறுகலும். (2657)

(மீளி - வலிமையுடைய / இயமன்; மொய்ம்பு - தோள்கள்; வடி - கூரிய; விசையால் - வேகமாக; அரவம் - பாம்பு (கேது) கோள் - கிரகம்; குறுகல் - நெருங்குதல்; இரண்டு சுடர் - சந்திர சூரியர்)

வலிய தோள்களையுடையவரும், கூற்றுவன் போல ஆற்றலுடைய வருமான இராம இலக்குவர் இருவரும், விராதனது இரண்டு தோள் களையும், கூரிய வாட்படை கொண்டு துண்டித்துவிட்டு, விரைவாகக் குதித்தவுடன், விராதன் மிக்க சினம் கொண்டு, தனது தேள் போன்ற இரண்டு புருவங்களையும் நெரித்து, கோபங்கொண்ட சிவந்த கண்களை யுடைய இராகு என்னும் கிரகமாகிய பாம்பு, சூரியன், சந்திரன் ஆகிய இருவரையும் பற்றித் தொடர்வதற்காக நெருங்கி வருதலைப் போல வரவும் - (குளகச் செய்யுள்).

தேளின்கொடுக்குப்போன்றுமேலேறியநுனியும், தேளின்பலகால்கள் போன்று அடர்ந்த உரோமமும் உடைமையால் புருவம் தேளுக்கு ஒப்பிடப்பட்டது. இடக்கையை இலக்குவனும், வலக்கையை இராமனும் துண்டித்ததாக வான்மீகம் கூறும். விராதன் இராகு எனும் அரவம்; இராம இலக்குவர் - சூரிய சந்திரர்.

44. அவனை மண்ணில் புதைத்தல்

புண்ணிடைப் பொழி உயிர்ப்புனல் பொலிந்து வரவும்
விண்ணிடைப் படர்தல் விட்டு எழு விகற்பம் நினையா,
எண்ணுடைக் குரிசில், எண்ணி, ''இளையோய்! இவனைஇம்
மண்ணிடைக் கடிது பொத்துதல் வழக்கு'' எனலுமே. (2658)

(பொழி - சொரிகின்ற; உயிர்ப்புனல் - இரத்தம்; எண் - மதிப்பு / கருமச் சூழ்ச்சி; பொத்துதல் - புதைத்து மூடுதல்; வழக்கு - முறை; விண்ணிடைப் படர்தல்; மேலுலகு அடைதல் / சாதல்; விகற்பம் - மாறுபாடு; நினையா - நினைந்து)

விராதனது உடம்பில் இருக்கும் புண்களினின்றும் பொழிகின்ற இரத்தமானது மிக்கு வெளி வந்து பெருகவும், அவன் மேலுலகத்திற்குச் செல்லாது - இறவாது - மீண்டும் எழுகின்ற மாறுபாட்டை நினைந்து, எல்லோர் மனத்திலும் சூட்சுமமாக உறைந்திருக்கும் ஆண்களிற் சிறந்தோனாகிய இராமபிரான், சற்று ஆலோசித்து, ''இளவல் இலக்குவனே! இவனை இந்நிலத்தில் விரைவாகப் புதைத்து மூடுதலே முறையாகும்'' என்று கூறியவுடனே, (குளகச் செய்யுள்).

உயிர்ப்புனல் என்பது ஒரு அரிய சொல்லாட்சி. உயிர்க்கு உறுதி தரும் செந்நீர் என்ற பொருளில் பயின்று வந்தது. ''இரு தோள்களை வெட்டிய பின்பும் இறவாமல் மீண்டும் எழுவதனால், இவனை ஆயுதங்களால் கொல்ல முடியாது; உயிரோடு மண்ணில் புதைப்பதே முறையாகும்'', என்று இராமன் ஆலோசித்துக் கூறினான் என்பதாம். விராதன் தன்னைக் குழிவெட்டி அதனுள் புதைத்து மூடுமாறு கேட்டுக் கொண்டதாகவும், இலக்குவன் குழிவெட்ட, இராமபிரான் அதில் அவனைத் தன் காலால் உந்தித் தள்ளினான் எனவும், பின் இலக்குவன் மண்கொண்டு அக்குழியை மூடினான் எனவும் வான்மீகம் கூறும்.

45. மதநல் யானை அனையான், நிலம் வகிர்ந்த குழிவாய்
நதம் உலாவும் நளிநீர்வயின் அழுந்த, நவைதீர்
அதவமாய் நறுநெய் உண்டு உலகில் அன்பர் கருதிற்று
உதவு சேவடியினால், அமலன் உந்துதலுமே. (2659)

(நவைதீர் - குற்றமற்ற; அதவம் - அத்திக்கட்டை; அமலன் - குற்ற மற்றவன்; வகிர்ந்த - பிளந்த / தோண்டிய; உலாவும் - செல்லும்; நளி - பெருமை; நதம் - மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு; உந்துதல் - காலால் எற்றுதல்; கருதிற்று - நினைத்தவற்றை; உதவுதல் - அருளுதல்; அமலன் - - பிரகிருதி / சம்பந்தம் இல்லாதவன்.

குற்றம் நீங்கிய - சுத்தமான - அத்திக் கட்டையால் செய்யப்பெற்ற அகப்பையால் நறுமணம் மிக்க நெய் பெய்யப்பட்ட வேள்வியில் தரும் ஆகுதியை உண்டு, உலகில் வேண்டுவார் வேண்டும் வரங்களைத் தந்தருளும் குற்றமற்றவனான இராமபிரான் தன் சிவந்த பாதங்களினால் விராதனை எற்றித் தள்ளவும், சிறந்த மதம் கொண்ட யானை போன்ற இலக்குவன், நிலத்தைப் பிளந்த குழியின் கண் மேற்கு நோக்கி ஓடும் ஆற்றின் பெருமை வாய்ந்த நன்னீர் தெளித்து அவன் உடலைப் பதியும் படி செய்யவும் - புதைக்கவும் - (குளகச்செய்யுள்).

நதம் என்பது மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு என்று பொருள்படும். இங்கே அது நருமதை அல்லது தபதி ஆற்றைக் குறிக்கும் என்று கூறுவர். இறைவன் வேள்வியாகவும் வேள்வியிற் பயன்படும் பொருள்களாகவும் விளங்குகிறான் என்றும் கூறுவர். யாகத்தீயாய் விளங்கி, அங்கு அளிக்கப்படும் நறு நெய்யை உண்பவன் இறைவன் என்பதும் உண்டு. ''யக்ஞபுக்'' என்பது திருமாலின் ஆயிரம் நாமங்களுள் ஒன்று என்பதும் நினைவிற்கொள்ளத் தக்கது.

46. விராதன் சாபம் நீங்குதல்

பட்டதன்மையும் உணர்ந்து, படர்சாபம் இடமுன்
கட்ட வன்பிறவி தந்த கடையான உடல்தான்
விட்டு, விண்ணிடை விளங்கினன்; விரிஞ்சன் என ஓர்
முட்டை தந்து, அதனில் வந்த முதல் முன்னவனினே. (2660)

(கடை - இழிந்த; பட்டதன்மை - நிகழ்ந்தவை; விரிஞ்சன் - பிரமன்; முட்டை - அண்டம் / ஹிரண்யகர்ப்பம்; தந்து - படைத்து; வந்த - தோன்றிய; முதல் முன்னவன் - முழு முதற்கடவுள்; கட்ட - துன்பத்திற்கு இடமான / கஷ்டம் என்ற வடசொல்லின் திரிபு)

இவ்வாறு தான் உதைபட்டுக் குழியில் புதைக்கப்பட்ட தன்மையை உணர்ந்து, விராதன், முன்பு குபேரனால் தனக்கு இடப்பட்ட சாபத்தினால் தன்னைத் துன்பத்திற்கு உள்ளாக்கிய வலிய கொடிய இவ்வரக்கப் பிறவி தந்த இழிந்த உடல் நீங்கப் பெற்று, இரண்யகர்ப்பம் என்னும் முட்டையால்

இவ்வுலகத்தை உண்டாக்கி, அதனின்றும் தோன்றிய முழு முதற்கடவுளான பிரமன் போலத் தன் பழைய கந்தர்வ வடிவம் கொண்டு விண்ணில் விளங்கித் தோன்றினான்.

முட்டை தந்து அதனில் வந்த முதல் முன்னவன் பிரமன்; திருமாலுக்கு இரண்யகர்ப்பன் என்றே ஒரு பெயரும் உண்டு; சாபம் நீங்கிய விராதன், பிரமனைப் போல ஒளி பெற்றுத் திகழ்ந்தான் என்பதாம். அண்டத்தில் பிரமன் தோன்றியது போல, விண்ணில் விராதன் தோன்றினான் என்றலும் ஒன்று. விரிஞ்சன் என்பது அன்னப்பறவையால் தாங்கப் பெறும் பிரமனைக் குறிக்கும் சொல்.

47. விராதன் இராமனைத் துதிக்கத் தொடங்குதல்

பொறியின் ஒன்றி அயல்சென்று திரிபுந்தி உணரா,
நெறியின் ஒன்றி, நிலை நின்ற நினைவு உண்டு, அதனினும்
பிறிவுஇல் அன்பு, நனி பண்டு உடைய பெற்றி தனினும்,
அறிவு வந்து உதவ, நம்பனை அறிந்து பகர்வான். (2661)

(அயல் - புறத்தே; புந்தி - அறிவு / மனம்; உணரா - அறிய முடியாத; ஒன்றி - பொருந்தி / வயப்பட்டு; பிரிவுஇல் - நீக்கமில்லாத; நம்பு - நசை / விருப்பம்; நம்பன் - விரும்பப்படுபவன் / இறைவன்; பெற்றி - தன்மை)

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளின் வயப்பட்டு, புறத்தே உள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களில் அலைந்து திரிந்து அறிவு கெட்டு, பழைய பிறவியில் உணர முடியாத நன்னெறியில் இப்போது ஈடுபட்டு, அதில் நிலைத்து நின்று என்றும் இறைவனையே நினைத்திருந்ததாலும், நீக்க முடியாத பேரன்பு உடையவனாய் இருந்த தன்மையாலும், இவ்வுரு நீங்கியவுடன், மெஞ்ஞானம் வந்து கை கொடுக்க, இப்பொழுது தன் எதிரே நிற்பவன் பரம்பொருள்தான் என்பதை நன்கு உணர்ந்து, பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

இவ்வளவு நாள் அரக்கனாய் இருந்து அரக்க குணங்கள் கொண்டிருந்தாலும், இராமன் திருவடிகள் தன் மீது பட்ட மாத்திரத்திலேயே தீவினைகள் நீங்கி, முன்பு கொண்டிருந்த மெஞ்ஞானம் கைவரப் பெற்றான். அதற்கு இரண்டு காரணங்கள் கூறுகிறான். ஒன்று பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றது; இரண்டாவது என்றும் நீங்குதலில்லாது இடைவிடாது இறைவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. அதனைக் காட்டிலும் இப்பொழுது இராமபிரான் திருவடிகள் தன் மீது பட்டதனாலும் மெய்யுணர்வு கைவரப் பெற்றான் என்கிறான். ''வாய் அவனை யல்லது வாழ்த்தாது; கை உலகம் தாய் அவனையல்லது தாம் தொழா; பேய் முலை நஞ்சு ஊணாக உண்டான் உருவோடு பேர் அல்லால் காணா கண்; கேளா செவி'' என்பது பொய்கையாழ்வாரின்முதல்திருவந்தாதி. முற்பிறவியில்ஐம்பொறிகளில்

சிக்கிக் கொள்ளாமலும், புத்தியை ஒரு வழியில் நிலை நிறுத்தி நன்னெறியில் செலுத்தியதாலும், இறைவனை நீங்காது பக்தி செய்தமையாலும் இப்பொழுது இறையருள் கூடியது. பழவினை நீங்கியது. ஞானம் கைகூடியது; இராமபிரானைப் பரம்பொருள் என உணர்ந்து துதிக்கத் தொடங்கலானான்.

48. விராதன் இராமபிரானைத் துதித்தல் [14 பாடல்கள்]

''வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னில், படிவங்கள் எப்படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி, ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப்
பூதங்கள் தொறும் உறைந்தால் அவை உன்னைப் பொறுக்குமோ?" (2662)

(அறைதல் - போற்றப்பெறுதல்; ஓதம் - குளிர்ச்சி / நீர்; கடல் - ஊழி காலக்கடல் / திருப்பாற் கடல்; படிவம் - வடிவம் / மற்றைய அங்கங்கள்)

இராமனது திருவடிகளின் ஸ்பரிசம் பட்டதும் கந்தர்வனாக மாறிய விராதன் விண்ணிற் சென்று, இராமபிரானை எல்லாம் வல்ல பரம்பொருள் என்று உணர்ந்து அவனைத் துதிப்பதாக வருகின்ற பாடல்கள். ''இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் துதிக்கின்ற, உன்னுடைய திருவடிகள் திரிவிக்கிரம அவதாரத்தில் இவ்வுலகம் முழுவதிலும் விரிந்து அளந்தன; உன்னுடைய பாதங்களின் பெருமையே இவ்வளவு என்றால், உன்னுடைய வடிவமும், மற்றைய அங்கங்களின் பெருமையும் எப்படியிருக்குமோ? என்னால் கூற இயலவில்லை; நீ எப்பொழுதும் தங்கி வாழ்கின்ற குளிர்ச்சி பொருந்திய திருப்பாற்கடலில் மட்டும் அன்றி, தமக்குள் குணத்தால் மாறுபட்ட மற்ற நான்கு பூதங்களிலும் நீ தங்கி வாழ்வாயேயானால், அவைகள் உன்னைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் உடையனவாய் அமையுமோ?''

ஓதம் என்ற சொல்லுக்கு ஒலி, குளிர்ச்சி, நீர், அலை என்று பல பொருள்கள் உண்டு. ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப் பூதங்கள் என்பது, ஐம்பூதங்களும் தங்களுக்குள் ஒன்றோடொன்று வன்மை, மென்மை, தட்பம், வெப்பம், உரு, அரு முதலிய குணங்களால் மாறுபட்டவை என்பதைக் குறிக்கும். ''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்'' என்பதும் ''மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்'' என்பதும் குறட்பாக்கள் (2, 3) பொதுவாக இறைவன் திருவடிகளையே எல்லா இலக்கியங்களும் மிகச் சிறப்பாகப் போற்றியிருக்கின்றன என்பது காணத்தகும். ''உயர்வற உயர்நலம் உடையவன் அவனவன் துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே'' என்பது திருவாய்மொழி.

கடல் என்றது பொதுவாக இறைவன் பள்ளி கொள்ளும் திருப்பாற் கடலையே குறிக்கும் எனினும், ஆலிலையில் குழந்தை வடிவில் அறி துயில் கொள்ளும் ஊழிக்காலக் கடல் வெள்ளத்தையும் குறிக்கும் எனக்

கொள்ளல் தகும். பஞ்சபூதங்கள் என்றது நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்பனவாம். ''திட விசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசைப்படர் பொருள் முழுவதுமாய், அவையவைதொறும் உடல் மிசை உயிரெனக் கலந்து எங்கும் பரந்துளன்'' என்பது திருவாய்மொழி. ''பூநிலாய ஐந்துமாய், புனற் கண் நின்ற நான்குமாய், தீ நிலாய மூன்றுமாய், சிறந்த கால் இரண்டுமாய், மீ நிலாயது ஒன்றுமாகி, வேறு வேறு தன்மையாய், நீ நிலாய வண்ண! நின்னையார் நினைக்க வல்லரே?'' என்பது திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம். விராதன் துதி இவ்வளவு விரிவாக வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

49. ''கடுத்த கராம் கதுவ, நிமிர்
  கை எடுத்து, மெய்கலங்கி,
உடுத்த திசை அனைத்தினும் சென்று
  ஒலி கொள்ள, உறுதுயரால்,
அடுத்த பெரும் தனி மூலத்து
  ''அரும்பரமே! பரமே!'' என்று
எடுத்து, ஒருவாரணம் அழைப்ப,
  நீயோ அன்று ''ஏன்'' என்றாய்'' (2663)

(கடுத்த - சினம் கொண்ட; கராம் - முதலை; கதுவ - பற்ற; நிமிர் - உயர்ந்த / பெரிய; உடுத்த - சூழ்ந்த; உறு - மிக்க; வாரணம் - யானை; எடுத்து - கூக்குரலிட்டு; அடுத்தல் - கிட்டுதல்; மூலம் - காரணம்; பரம் - மேலானது)

''சினம் கொண்ட ஒரு முதலை தன் காலைப் பற்றிக் கொள்ள, கஜேந்திரன் என்னும் ஒரு யானை, அன்று தான் பட்ட துயரத்தால், தனது உயர்ந்த பெரிய துதிக்கையை மேலே தூக்கி, உடல் தளர்ந்து, சூழ்ந்திருக்கின்ற திக்குகள் அனைத்திலும் சென்று தன் பிளிறல் ஒலி கேட்குமாறு ''அல்லல் காலத்தில் அருகு வந்து உதவிக் காப்பாற்றுகின்ற பெரிய ஒப்பற்ற முழு முதற்கடவுளே, பரம்பொருளே! பரம்பொருளே!'' என்று கூக்குரலிட்டு அழைக்க, நீ ஒருவன் தானே அன்று அதனருகில் சென்று ''ஏன்'' என்று கூறி, அதன் துயர் துடைத்து அதனைக் காப்பாற்றினாய்?''

''உடுத்த திசை'' என்பது உலகம் முழுவதும் உடுத்துக் கொண்ட ஆடைபோலச் சுற்றி விளங்கும் திசைகள் என்பதைக் குறிக்கும். ''ஒலி கொள்ள'' என்பது தனது பிளிறல் ஓசை எதிரொலியாக அமைய என்று பொருள் படும்; ''தனி மூலம்'' என்பது முழுமுதற் கடவுள் என்பதைக் குறிக்கும். ''பரமே! பரமே!'' என்ற அடுக்கு அச்சம் மிகுதியைக் குறிக்கும். ''ஏன் என்றாய்'' என்ற ஒரு சொல், நீயே வந்து, என்ன என்று கேட்டு, அதன் துயர் துடைத்துக் காப்பாற்றினாய் என்ற விரிவான பொருளைத்தரும்.

இதில் கஜேந்திர மோட்சம் என்ற ஒரு புராண வரலாறு கூறப் பட்டிருக்கிறது. ''மீன் அமர் பொய்கை, நாள் மலர் கொய்வான் வேட்கை

யினோடு, சென்று இழிந்த கான்அமர் வேழம், கைஎடுத்து அலறக் கரா அதன் காலினைக் கவ்வ, ஆனையின் துயர்தீரப் புள் ஊர்ந்து சென்று, ஆழிதொட்டான்'' என்பது திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி; ''மூலமே'' என்ற கரி முன் வந்து, இடர் தொலைத்து, நீலமேகம் போல நின்றான்'' என்பது பிள்ளைப்பெருமாள்ஐயங்காரின்திருவேங்கடமாலை; ''வேதத்தின் முன் நின்றான், வேழம், ''முதலே'' என அழைப்ப, ''ஏன்?'' என்றான் எங்கட்கு இறை; மால்யானை முந்து அருளும் ''வேத முதலே'' என அழைப்ப வந்தருளும் செந்தாமரை''. என்பது புகழேந்தியின் நளவெண்பா.

கஜேந்திர மோட்ச வரலாறு :- ஹூ ஹூ என்பவன் ஒரு கந்தருவன்; அவன் தேவலன் என்னும் முனிவனை அவமதித்தான்; முனிவன் சாபம் இட்டான். எனவே ஒரு முதலையாய் ஒரு குளத்தில் கிடந்து வந்தான்; இந்திரத்யும்நன் என்பவன் ஒரு பாண்டிய மன்னன்; அவன் அகத்திய முனிவனை அவமதித்தான். முனிவன் அவனை யானையாகும்படி சபித்தான். அவன் கஜேந்திரன் என்னும் யானையாய் வசித்து வந்தான். யானையாய் இருந்தாலும், தான் எப்பொழுதும் திருமாலுக்கு மலர் கொண்டு அச்சிப்பதை விட்டு விடவில்லை. ஒரு நாள் அந்த யானை, முதலை வாழும் குளத்தில் இறங்கிப் புதுமலர் பறித்தது. அப்பொழுது அம்முதலை யானையின் கால்களை நன்றாகப் பற்றிக் கொண்டு விட்டது. பல்லாண்டு காலம் வருந்தி இறுதியில், தன் கையைத்தலைமேல் கொண்டு ''ஆதி மூலமே'' என்று கூவிற்று. உடனே திருமால் தன் வாகனமாகிய கருடன் மேல் ஏறி வந்து ஆழிப் படையால் முதலையைக் கொன்று யானையை முதலையின் வாயினின்று விடுவித்து, அதன் துயரத்தைப் போக்கினான். யானை மோட்சம் அடைந்தது. முதலை பொன்னுலகம் போய்ச் சேர்ந்தது.

50. ''புறம்காண, அகம்காணப் பொது முகத்தின் அருள் நோக்கம்
இறங்காத தாமரைக் கண் எம்பெருமான்! இயம்புதியால்;
அறம் காத்தற்கு உனக்கு ஒருவர் ஆரும் ஒரு துணை இன்றிக்
கறங்கு ஆகும் எனத்திரிய நீயேயோ கடவாய்தான்!'' (2664)

(புறம் - வெளித் தோற்றம்; அகம் - உள்ளத்து எண்ணங்கள்; இறங்காத - குறையாத; பெருமான் - தலைவன்; கறங்கு - காற்றாடி; அருள் நோக்கம் - அருட்பார்வை; திரிதல் - கழலுதல்; பொதுமுகம் - நடுவு நிலைமை; கடவாய் - கடமைப்பட்டாய்)

''ஒவ்வொருவர் உருவத்தின் புறத்தோற்றத்திலும், அவர்களின் அகங்களிலும் நீக்கமற நிறைந்து நின்று, அவர்களுக்கு நடுவு நிலையில் நின்று எப்போதும் ஒரே தன்மையாகிய இனிய அருட்பார்வை அளிப்பதில் சற்றும் தாழாது நிறகின்ற செந்தாமரை போலும் கண்களை உடைய எம் தலைவனே! இவ்வுலகில் அறத்தை நிலை நிறுத்திக் காப்பாற்றுவதற்கு உனக்கு வேறுயார் ஒருவரும் ஒரு சிறு உதவிக் கூடச் செய்யாமல், நீயே

தனித்து நின்று, காற்றாடி போல எல்லா இடங்களிலும் சுழன்று திரிந்து அலைவதற்கு நீ மட்டும் தான் கடமைப்பட்டவனா? எனக்குச் சொல்வாயாக!''

''பொது முகம்'' என்பது எல்லோரிடத்தும் ஒரே தன்மைத்தாய நடுவு நிலைமை கொண்டு எனப் பொருள் படும். தாமரைக் கண் எம்பெருமான் என்பது புண்டரீகாக்ஷன் என்ற வடசொல்லின் தமிழாக்கம். உயிர்களின் வெளிவேஷத்தைக் கண்டும் கூடத் தன் அருட்பார்வையைச் சுருக்கிக் கொள்ளாத தன்மை ''பொது முகத்தின் அருள் நோக்கம்'' எனப்பட்டது. இங்கே விராதனின் வெளித் தோற்றம் எப்படிப் பட்டதாய் இருந்தது? காணும் போதே அச்சமும் அருவருப்பும் கொண்ட தோற்றம்; உள்ளுக்குள்ளே சுடாத சொல்லும் நினைவும் செயலும் கொண்டவன் என்றாலும் அவனுக்கும் அருட்பார்வை நல்கியவன் இராமபிரான் என்பது குறிக்கப்பட்டது. எங்கெங்கு தருமத்திற்குக் குறை உண்டாகிறதோ அங்கெல்லாம் தானே வலியச் சென்று சுற்றித் திரிந்து அறம் காக்கும் தன்மையால் கறங்கு எனப்படும் காற்றாடிக்கு உவமிக்கப்பட்டது. துணையின்றி அறம் காப்பவன் என்பது முன்பு ''தருமத்தின் தனி மூர்த்தி'', ''தனி அற மூர்த்தி'' என்று கூறியதைக் கருத்தில் கொண்டதாகும். பரம்பொருள் எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் பரவி நின்று அறம் காத்து அருள் புரியும் தன்மையை இப்பாடல் நன்கு விளக்கும்.

51. ''துறப்பதே தொழிலாகத் தோன்றினோர் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மை? அது அன்றாகில், மற்றவர் போல்
பிறப்பரோ? எவர்க்கும் யான் பெற்ற பதம்பெறல் அரிதோ?
இறப்பதே பிறப்பதே எனும் விளையாட்டு இனிது உகந்தோய்!'' (2665)

(உகந்தோய் - விரும்பியவனே; தொழில் - செயல்; பதம் - பதவி)

இறப்பித்தலையும் பிறப்பித்தலையும் ஒரு எளிய விளையாட்டாக மகிழ்ந்து இனிமையாகச் செய்பவனே! விருப்பு, வெறுப்பு என்ற அக, புறப்பற்றுக்களைத் துறந்து விடுதலையே தனது தொழிலாகக் கொண்ட ஞானியர்கள், தோன்றும் பொழுது தங்களையே மறந்து விடுவார்களோ? அவ்வாறு இல்லாமல், அவர்கள் மற்ற சாதாரண மனிதர்களைப் போல மீண்டும் பிறவி எடுப்பார்களோ? அவர்கள் எவ்வாறு பிறந்தாலும், அவர்கள் யாரும் நான் பெற்ற இப்பேறும் பதவியும் பெற முடியாது, அது அரிதாகும்.

விளையாட்டு என்பது முயற்சி அதிகமின்றிச் சிரமம் இன்றி எளிதாகச் செய்யும் தொழில் என்பதாம். இறப்பதும் பிறப்பதும் துன்பம் தருவன. அதை வினை வயத்தால் பெறுபவர் மக்கள் என்றும், தன் இச்சையால் பெறுபவர் ஞானியர், தேவர், பரம்பொருள் என்றும் வழங்கப்படுவர். பொருள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத பாடல்களுள் இதுவும் ஒன்று என்று அறிக.

52. ''பனி நின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் புணை பற்றி
நனி நின்ற சமயத்தோர் எல்லாரும் ''நன்று'' என்னத்
தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி நீ ஆகில்
இனி நின்ற முதல் தேவர் என்கொண்டு என் செய்வாரோ?'' (2666)

(பனி - துன்பம்; புணை - தெப்பம்; தத்துவம் - மெய்ம்மை; தகை - அழகு; மூர்த்தி - வடிவம்; நனி - உறுதிப்பாடு)

துன்பமும் அச்சமும் தருகின்ற பெரிய பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தெப்பம் போன்ற துணையாக, ஒப்பற்று விளங்குகின்ற மெய்ம்மையின் வடிவே நீ தான் என்றால், மற்ற சமயத்தோர்கள் எல்லோரும் ''நல்லது'' என்று சொல்லி, அவர்களுடைய தலைவர்கள் எல்லாம், எதைப் பற்றிக் கொண்டு என்ன தான் செய்வார்களோ?

''நீதான் பரம்பொருள்; பிறவிக் கடலைக் கடப்பதற்கு ஏற்ற புணையும் நீயே!'' மற்ற சமயங்கள் கூறுவன வெல்லாம் இத்தகைய சிறப்பு அற்றன அவைகளுக்கு இத்தகைய ஆற்றல் இல்லை என்பதாம். ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்'' என்னும் குறளின் (10) கருத்தும் இங்கு நோக்கத்தகும்.

53. ''ஓயாத மலர்அயனே முதலாக உளராகி,
மாயாத வானவர்க்கும், மற்றொழிந்த மன்னுயிர்க்கும்
நீ ஆதி முதல் தாதை, நெறி முறையால் ஈன்றெடுத்த
தாயாவார் யாவரே? தருமத்தின் தனி மூர்த்தி!'' (2667)

(மூர்த்தி - உருவம் / வடிவம்; தனி - ஒப்பற்ற; ஓயாத - நீங்காத / ஓய்வடையாத; அயன் - பிரமன்; மாயாத - அழிவற்ற; மன் - நிலை பேறுள்ள; தாதை - தந்தை; முதல் - சிறந்த)

''தருமத்தின் ஒப்பற்ற வடிவானவனே! படைத்தல் தொழிலில் ஓய்வில்லாத, தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் முதலாக உள்ள, இறவா வரம் பெற்ற தேவர்களுக்கும், அவர்கள் தவிர்ந்த ஏனைய நிலை பெற்ற உயிர்களுக்கும், நீ தான் முதன்மையான தந்தை என்றால், உலக வழக்கின்படி, இவர்களையெல்லாம் ஈன்றெடுத்து வளர்த்ததாய் என்பவள் யாரோ?'' அவளும் நீ தானே!

''மாயாத'' என்பது அழிவில்லாத என்று பொருள் படும். தேவர்கள் தேவாமிர்தம் உண்டவர்கள். எனவே இறவாதவர்கள்; மற்ற உயிரினங் களுக்கெல்லாம் உடலால் அழிவு உண்டு. ஆனால் உயிர் அழியாதது என்றும் நிலைத்திருப்பது. எனவே மன்னுயிர் என்றார் என்க. தந்தை நீ என்றால் தாய் என்று ஒருத்தி இருக்க வேண்டுமல்லவா? அது யார்? என்று கேட்டு, அதுவும் நீ தான் என்று உணரவைக்கிறார். ''என்னைப் பெற்ற அத்தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த அத்தா!'' என்பது திருவாய்மொழி.

54. ''நீ ஆதி பரம்பரமும்; நின்னவே உலகங்கள்;
ஆயாத சமயமும் நின்அடியவே; அயல் இல்லை;
தீயாரின் ஒளித்தியால், வெளி நின்றால் தீங்குண்டோ?
வீயாத பெருமாய விளையாட்டும் வேண்டுமோ?'' (2668)

(பரம் - மேலானது; ஆயாத - ஆராய்ந்து முடிவு காணமுடியாத; அயல் - வேறு; ஒளித்தி - மறைந்திருக்கிறாய்; வீயாத - அழியாத; மாயம் - ஆச்சரியம்; சமயம் - மதம்; அடி - திருவடி / முதற்காரணம்; தீயார் - வஞ்சகர்)

''மேலானவற்றுக் கெல்லாம் மேலான பரம்பொருள் - எல்லாம் வல்ல இறைவன் நீ தான்; இவ்வுலகங்கள் அனைத்தும் உன்னால் ஆக்கப் பட்டவை - உன்ஆட்சிக்கு உட்பட்டவை; ஆராய்ந்தாலும் ஒரு முடிவு காண முடியாத எல்லாச்சமயங்களும் உன்திருவடிகளைப் பற்றியே பேசுகின்றன - உன்னை மூல முதற்காரணமாகவே கொண்டு இயங்குகின்றன; வேறு எவரும் இல்லை; ஆனால் நீ மட்டும் தீயவரைப் போல - வஞ்சகர்களைப் போல உன்னை மறைத்துக் கொண்டிருக்கிறாய். எல்லோரும் காணும் படி வெளிப்படத் தோற்றம் அளித்தால் உனக்குத் தீங்கு வரும் என்று எண்ணுகிறாயா? அல்லது உன்னைக் காண்பவர்களுக்குத் தீங்கு நேரும் என்று எண்ணுகிறாயா? உனக்கு இந்த அழியாத பெரிய ஆச்சரியமான திருவிளையாடல்கள் எல்லாம் தேவை தானா?''

''விளம்பும் ஆறு சமயமும் அவை யாகியும், மற்றும் தன் பால் அளந்து காண்டற்கு அரியனாகிய ஆதிப்பிரான்'' என்பது திருவாய்மொழி; ''வணங்கும் துறைகள் பலப்பலவாக்கி, மதி விகற்பால் பிணங்கும் சமயம் பலப்பலவாக்கி, அவையவை தோறணங்கும் பலப்பலவாக்கி, நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்'' என்பது திருவிருத்தம்.

55. ''தாய் தன்னை அறியாத கன்றில்லை; தன் கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாயாகின் ஐய!
நீ அறிதி எப்பொருளும்; அவை உன்னை நிலை அறியா;
மாயை இது என்கொலோ? வாராதே வரவல்லாய்!'' (2669)

(ஆய் - தாய்ப்பசு; நிலை - தன்மை)

''தலைவனே! வழி கடந்து வாராது, நினைத்த இடத்தில், நினைத்த உடனேயே எளிதாக வந்து தோன்றும் ஆற்றலுடையவனே! உலகில் உள்ள எந்தத்தாய்ப் பசுவையும் அறிந்து கொள்ளாத பசுங்கன்றுகள் இல்லை; அது போலவே தனது கன்றை எல்லாத் தாய்ப் பசுக்களும் உடனே அறிந்து கொள்ளும்; நீ உலகிற்கே தாயாவாய், என்றாலும் உன்னால் படைக்கப் பட்ட பொருள்கள், உயிர்கள் அனைத்தையும் நீ நன்கு அறிந்து வைத் திருக்கின்றாய். ஆனால் உன்னால் படைக்கப்பட்ட உயிர்கள் மட்டும் உன்னுடைய உண்மையான தன்மையை அறிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவையாய் இருக்கின்றனவே? இது என்ன ஆச்சர்யம் ஐயனே! எதன் பொருட்டு இவ்வாறு நடக்கிறது?''

''பல்லாவுள் உய்த்து விடினும், குழக்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடல்'' என்பது நாலாடியார். ''வந்தாய் போல் வாராதாய், வாராதாய் போல் வருவானே'' என்பது திருவாய்மொழி.

56. ''பன்னலாம் என்று உலகம் பலபலவும் நினையுமால்;
உன்னலால் பெருந்தெய்வம் உயர்ந்துளோர் ஒழுக்கன்றே;
அன்ன ஊர்தியை முதலாம் அந்தணர் மாட்டு அருந்தெய்வம்
நின்னலால் இல்லாமை நெறிநின்றார் நினையாரோ?'' (2670)

(பன்னல் - துதித்தல்; ஒழுக்கு - நடைமுறை; நினைதல் - அறிதல்)

''உலக மக்கள், பலப்பல தெய்வங்களைத் துதிக்கலாம், தவறில்லை என்று நினைப்பார்கள். ஆனால் நல்ல நெறியில் நின்று உயர்ந்தவர்கள் உன்னையல்லால் வேறு பெரிய தெய்வம் உண்டு என்று எண்ணி நடப்பது அவர்கள் வழிமுறையன்று. அவர்கள் உன்னையே பெருந்தெய்வமாகக் கருதுவர். அன்னத்தை வாகனமாகக் கொண்ட பிரமன் முதலாகிய உயர்ந்த கருணை உடையவர்கள் வழிபடுகின்ற அரிய தெய்வம் நின்னைத் தவிர வேறில்லை என்று ஒழுக்க் நெறியில் நின்ற மற்றவர்கள் ஆராய்ந்து அறிய மாட்டார்களோ?''

இங்கே பெருந்தெய்வம் என்றும் அருந்தெய்வம் என்றும் குறிப்பது காண்க. அவனினும் மேம்பட்டதொரு தெய்வம் இல்லை என்பதை உணர்த்தவே இச்சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்று உணர்க. அது போலவே உயர்ந்துளோர், நெறி நின்றார் என்றும் பயன்படுத்தியிருப்பது மெய்யுணர்வுடைய பெரியோர்களை என்க. அந்தணர் என்ற சொல்லுக்கு அழகிய தண்ணளி - கருணை - உடையவர் என்பது நேர்பொருள்; அந்தத்தை அணவுபவர் என்பது மறைபொருள். அந்தம் என்பது வேதத்தின் முடிவு. அணவுதல் என்பது ஓய்வில்லாது ஓதுதலும், ஓதுவித்தலுமாகும்.

57. ''பொருஅரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர்,
இருவினையும் உடையார் போல், அருந்தவம் நின்று இயற்றுவார்;
திருஉறையும் மணிமார்ப! நினக்கு என்னை செயற்பால?
ஒரு வினையும் இல்லார்போல் உறங்குதியால், உறங்காதாய்!'' (2671)

(திரு - இலக்குமி; புத்தேளிர் - தேவர்கள்; பொரு - ஒப்பு; இருவினை - நல், தீ வினைகள் / புண்ணிய பாவங்கள்)

திருமகள் உறைகின்றதும், கௌத்துப மணி மாலை பெற்றதுமான அழகிய மார்பினை உடையவனே! ஒன்றோடொன்று ஒத்துப் போகாத பிற சமயங்கள் எல்லாம் கூறுகின்ற தேவர்கள், நல்ல, தீய வினையின் பயன்களாகிய புண்ணிய பாவங்களை உடைய சாதாரண மக்களைப் போல, யாரும் செய்தற்கரிய தவங்களை மேற்கொள்ளுவார்கள். ஆனால் உன்னால் செய்யத்தகாதன என்ன இருக்கிறது? ஒரு தொழிலும்

இல்லாதவர் போல அறிதுயில் கொண்டிருக்கின்றாயே - உறங்குவது போல் உறங்காதவனே!''

பிற சமயங்கள் எப்போதும் எதிலும் தமக்குள் ஒத்துப் போகும் படியான கொள்கைகள் உடையன அல்ல. ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வழியையும், ஒவ்வொரு முடிவையும் கூறும். எனவே அவற்றை ''பொருவரிய சமயங்கள்'' என்றார்; சாதாரண மக்கள் தவம் செய்வது போல, சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தேவர்கள் கூடத் தவம் செய்கிறார்கள். ஆனால் நீ ஏன் தவம் செய்வது போல யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கிறாய்? உன்னால் செய்ய முடியாத காரியங்கள் என்ன இருக்கின்றன? இங்கே ''உறங்குதல்'' என்பது யோக நித்திரை - அறிதுயிலைக் குறிக்கும். உறங்குவது போலத் தோற்றமளிப்பான். ஆனால் உறங்கமாட்டான். உலகில் என்ன எங்கே எப்படி நடக்கிறது என்பதை அறிவான் என்பது கருத்து. ''அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா''என்பது திருவாய்மொழி. அறிதுயில் என்பது உறங்குவது போல அமைதியாய் இருந்து யாவும் தத்தம் காரியங்களில் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது என்ற விரிவான பொருள் கொண்ட சொல். ''உறங்குவான் போல் யோகு செய்த பெருமானை'' என்பது திருவாய்மொழி.

58. ''அரவுஆகிச் சுமத்தியால்; அயில் எயிற்றின் ஏந்துதியால்;
ஒருவாயின் விழுங்குதியால்; ஓரடியால் ஒளித்தியால்;
திருஆன நிலமகளை; இது அறிந்தால் சீறாளோ?
மருஆரும் துழாய் அலங்கல் மணிமார்பின் வைகுவாள்'' (2672)

(நிலமகள் - பூமிதேவி; அரவு - பாம்பு / ஆதிசேஷன்; அயில் - கூரிய; எயிறு - கொம்புகள் / பற்கள்; ஏந்துதல் - தாங்குதல்; ஒளித்தல் - மறைத்தல்; மரு ஆரும் - நறுமணம் வாய்ந்த; துழாய் - துளசி; அலங்கல் - மாலை; மணி - அழகிய கௌத்துபமணி; சீறுதல் - சினமடைதல்)

''அழகிய பூதேவியாகிய இவ்வுலகத்தை ஆதிசேஷன் என்னும் பாம்பாக நின்று சுமந்து கொண்டிருக்கின்றாய்; வராக அவதாரம் எடுத்து, உன்னுடைய கூரிய பல்லில் - கொம்பில் - இவ்வுலகத்தைத் தாங்கி நிற்கின்றாய்; பிரளய காலத்தில் இவ்வுலகத்தை உனது ஒரு வாய்க்குள் அடைத்துக் கொண்டு விடுகிறாய்; வாமன அவதாரத்தில் திரிவிக்கிர மனாகி இவ்வுலகத்தை உன்னுடைய ஓரடியால் அளந்து மறைத்துக் கொள்ளுகின்றாய்; இவ்வாறு நீ இயற்றும் செயல்களையெல்லாம், நறுமணம் மிக்க துளசி மாலை அணிந்த அழகிய நீலமணி போல் ஒளிவீசுகின்ற, கௌத்துப மணி மிளிர்கின்ற உன்னுடைய மார்பில் நீங்காது தங்கியிருக்கும் இலக்குமியாகிய திருமகள் அறிந்தால், உன்னிடத்துச் சீற்றம் கொள்ள மாட்டாளோ?''

திருமாலின் வராக அவதாரமும், வாமன அவதாரமும் குறிக்கப் பட்டிருக்கின்றன. பாரைத் தாங்கியதும் எடுத்ததும், அளந்ததும், உண்டு

உமிழ்ந்ததும், சுமந்தது ஏந்தியது, உண்டது, அளந்தது என முறையே கூறப்பட்டன. ''பாரை இடந்தவனும், பாரை அளந்தவனும், பாரை எடுத்தவனும், பண்பாகப் பாரை மணம் கொண்டவனும், உண்டவனும், கொண்டல் என நின்று அருளும், வண்டு அமரும் தண் துளவ மால்'' என்பது பாடல்.

59. ''மெய்யைத் தான் சிறிது உணர்ந்து நீ விதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ? உனக்கு என்ன குறை உண்டோ?
வையத்தார், வானத்தார், மழுவாளிக்கு அன்று அளித்த
ஐயத்தால் சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர் ஐயா!'' (2673)

(விதித்த - படைத்த; மன் - நிலைபேறுடைய; மழுவாளி - மழுப் படையை உடைய சிவபெருமான்; ஐயம் - பிச்சை / சந்தேகம்; உய்தல் - நற்கதியடைதல்)

''தலைவனே! உன்னால் படைக்கப்பட்டு இயங்குவதற்கு நியமிக்கப் பட்ட நிலை பெற்ற உயிர்கள் எல்லாம் நீ தான் பரம்பொருள்'' என்று ஓரளவாவது உணர்ந்து கொண்டு நற்கதி பெறுதல் ஆகாதோ? அவ்வாறு அவர்கள் நற்கதி பெற்றால் அதனால் உனக்கு என்ன குறை நேர்ந்து விடும்? முன்பு கோடலி என்னும் மழுவை ஏந்திய சிவபெருமானுக்கு நீ இட்ட பிச்சையினால், நிலவுலகத்து மக்களும், வானுலகத்துத் தேவர்களும் ஓரளவு சந்தேகம் நீங்கப் பெற்றவர்கள் ஆனார்கள் அல்லவா?''.

''நீ தான் பரம்பொருள் என்று மக்களும் தேவர்களும் ஓரளவு தான் உணர்ந்து கொண்டு இருக்கின்றனர். உன்னால் படைக்கப்பட்ட உயிர்கள் எல்லாம் அதனைத் தெரிந்து கொண்டால் உனக்கு என்ன குறை வந்து விடும்?'' என்று கேட்கிறான் விராதன்.

''மழுவாளிக்கு அன்று நீ அளித்த ஐயம்'' என்ற சொற்றொடரில் ஒரு புராணக் கதை அடங்கியிருக்கிறது. முன்னொரு காலத்தில் சிவபெருமான் பிரம தேவனின் ஐந்து தலைகளுள் ஒன்றைக் கோபத்தால் கொய்து விட்டான். அதை அவன் எறிய முயன்ற போது, அது அவன் கையை விட்டு அகலாமல் கையிலேயே ஒட்டிக் கொண்டு விட்டது. அது பிரம தேவனின் சாபம். சிவபெருமான் இந்நிலையில் உன் மத்தனாகித் திரிந்தான். அது தான் ''பிச்சாடனர்'' என்ற வடிவம். அந்தச்சாபம் நீங்க அவன் விதித்த நிபந்தனை, அந்தப் பிரம கபாலம் யாராவது இடும் பிச்சையால் நிரம்ப வேண்டும் என்பது. அந்தப் பிரம கபாலம் பிச்சையால் நிரம்பி விட்டால் அது அவன் கையை விட்டு நீங்கி விடும். பலர் அதில் பிச்சையிட்டும் பல காலமாக அது நிரம்ப வில்லை. இறுதியில், திருமால் ''அக்ஷயம்'' என்று சொல்லி அதில் பிச்சை இட்டார். பிரம கபாலம் நிரம்பியது. சிவபெரு மானின் கையை விட்டு அது நீங்கியது. இந்நிகழ்ச்சி நடந்த இடம் இப்போது ''திருக்கண்டியூர்'' என வழங்கப்படுகிறது.

ஐயம் இட்டதால் ஐயம் நீங்கியது என்றது ஓர் நயம். இதில் முன்னர்க் கூறிய ஐயம் பிச்சை என்ற பொருளிலும், பின்னர்க் கூறிய ஐயம் சந்தேகம் என்ற பொருளிலும் கையாளப்பட்டிருப்பதை உணர்க.

60. ''அன்னமாய் அருமறைகள் அறைந்தாய் நீ; அவை உன்னை
முன்னம் ஆர் ஓதுவித்தார்? எல்லாரும் முடிந்தாரோ?
பின்னமாய் ஒன்றாதல் பிரிந்தேயோ? பிரியாதோ?
என்ன மாமாயம் இவை? ஏனமாய் மண் இடந்தாய்'' (2674)

(ஏனம் - வராகம்; இடத்தல் - குத்தி எடுத்தல்; அறைதல் - உப தேசித்தல் கற்பித்தல் / ஓதுவித்தல்; முடிதல் - இறந்து படுதல்; பின்னமாதல் - வேறுபடுதல்; ஒன்றாதல் - ஒன்றுபடுதல்; மாயம் - மாயை / விந்தை)

''வராக அவதாரம் எடுத்து இவ்வுலகை உன் கொம்புகளால் குத்தி எடுத்துத் தாங்கியவனே! அன்னப் பறவையாய் உருவெடுத்து பிரமனுக்கு அரிய வேதங்களை நீ கற்பித்தாய். அந்த வேதங்களை முன்பு உனக்குக் கற்பித்தவர்கள் யார்? அவர்கள் எல்லாம் இருக்கின்றார்களோ? இறந்து போய் விட்டார்களோ?காணப்படும் பொருள்கள் எல்லாவற்றிலும் நீ இருக்கிறாய் என்றால் நீ அப்பொருள்களினின்றும் பிரிந்திருக்கிறாயா? பிரியாமல் இணைந்து இருக்கிறாயா? வேறுபட்டும், ஒன்று பட்டும் இருக்கும் இந்தச் செய்கை எத்தனை விந்தையானது?''

திருமாலுக்கு வேதம் பயிற்றுவித்தவர்கள் யாரென்று தெரியவில்லை என்பதனால் அவன் பிறர் அறிவுறுத்துவாரின்றித் தானே அறிந்து கொள்ளும்தன்மை பெற்றவன்- ''சுவயம்பி'' சுய அறிவுடையவன்என்பது பெறப்பட்டது. வேதம் எழுதாக் கிளவி என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கது. ''ஏனமாய் மண் இடந்தது'' முன்பு இரண்யாக்கன் என்னும் அசுரன் பூமியைப் பாய் போலச் சுருட்டிக் கொண்டு கடலில் போய் ஒளிந்து கொண்டான்; திருமால் வராக அவதாரம் எடுத்துக் கடலுக்குள் சென்று இரணியாக்கனைக் கொன்று, பூமியைத் தன் கொம்புகளால் குத்தி எடுத்துக் கொண்டு வந்து விரித்து அருள் செய்தார் என்பது புராணவரலாறு.

61. ''ஒப்பு இறையும் பெறலரிய ஒருவா! முன் உவந்து உறையும்
அப்பு உறையுள் துறந்து, அடியேன் அருந்தவத்தால் அணுகுதலால்,
இப்பிறவிக் கடல் கடந்தேன்; இனிப் பிறவேன்; இருவினையும்
துப்பு உறழும் நீர்த்த சுடர்த் திருவடியால் துடைத்தாய் நீ'' (2675)

(இறையும் - சிறிதும்; அப்பு - நீர் / கடல்; அணுகுதல் - எதிர் வருதல்; துப்பு - பவளம்; உறழும் - ஒக்கும்; நீர்த்த - நீர்மையுடைய / பண்புடைய; சுடர் - ஒளி மிக்க; துடைத்தல் - போக்குதல்; உறையுள் - தங்கும் இடம்)

''உனக்கு ஒப்புக் கூறக் கூடிய வேறு எவரும் இல்லாத தனித்தன்மை மிக்கவனே! ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தேவனே! நீ முன்பு விரும்பித் தங்கியிருக்கின்ற திருபாற்கடலாகிய உன் இருப்பிடத்தை விட்டு, நான்

முன்பு செய்த அருமையான தவத்தின் பயனால், என் எதிர் வந்து சேர்ந்ததால் நான் இவ்விழி பிறவியாகிய கடலைக் கடந்தவனானேன்; இனி எனக்கு மறுபிறவி இல்லை; பிறப்பில்லாத் துறக்க முற்றேன். என்னுடைய நல்வினை, தீவினை ஆகிய இரண்டினையும், உன்னுடைய பவழம் போன்ற சிவந்த தன்மையும், ஒளி வீசும்படியானதுமான திருவடிகளால் நீ போக்கி அருள் செய்தாய்''

விராதன் இராம இலக்குவர்களைத் தன் தோளில் சுமந்ததாலும், இராமன் இவனைக் குழியில் தள்ளுவதற்காகத் தன் திருவடிகளால் எற்றியதாலும், அவன் திருவடிகள் விராதன் மேற்பட்டதனால் அவன் அரக்க உரு அழிந்து கந்தருவ உருப்பெற்றான்; அதனைத் தான் ''இப்பிறவிக்கடல் கடந்தேன், இனிப்பிறவேன், இருவினையும் துப்பு உறழும் நீர்த்த சுடர்த் திருவடியால் துடைத்தாய் நீ'' என்கிறான் விராதன் என்க. ''பனிக் கடலில் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்து என் மனக் கடலில் வாழவல்ல மாய மணாள நம்பீ?'' என்பது பெரியாழ்வார் திருமொழி.

62. விராதன் வரலாற்றை இராமன் வினவுதல்

இற்று எலாம் இயம்பினான் நிற்றலோடும், ''நீ இவ்வாறு
உற்ற ஆறு உணர்த்து'' எனா, வெற்றியான் விளம்பினான். (2676)

(இற்று - இத்தன்மை / இவ்விதம்)

இவ்வாறு இராமனைத் துதித்துக் கூறி நின்ற விராதனைப் பார்த்து, இராமபிரான், ''நீ இந்த அரக்க வடிவம் பெற்ற வரலாற்றைக் கூறுவாயாக!'' என வினவ, பிறவிப் பெருங்கடலை நீந்தி வெற்றி கொண்டவனான விராதன், பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

63. விராதன் தன் வரலாறு கூறுதல் [9 பாடல்கள்]

''கள்ளம் மாய வாழ்வு எல்லாம், விள்ள, ஞானம் வீசுதாள்
வள்ளல்! வாழி! கேள்!'' எனா, உள்ள ஆறு உணர்த்தினான். (2677)

(கள்ளம் - வஞ்சம்; மாய - அழிய; வாழ்வு - பிறவிகள்; விள்ள - ஒழிய / சிதைய; வள்ளல் - பரம உபகாரி; வீசுதல் - அருளுதல்)

''என்னுடைய வஞ்சகமும் அரக்கக் குணமும் அழிந்து போகும் படியும், என் பிறவிகள் எல்லாம் சிதைந்து போகும் படியும், அருளிய அறிவு ஒளி வீசுகின்ற திருவடிகளையுடைய வள்ளலே! வாழ்க! கேட்பீராக!'' என்று தனது வாழ்க்கை வரலாற்றை உள்ளவாறு கூறலானான், விராதன்.

இங்கே விராதன் தனது வாழ்க்கையை மட்டும் குறிப்பிடாமல், பொதுவாக எல்லோருடைய ''கள்ள, மாய, வாழ்வு எலாம், விள்ள ஞானம் வீசுதாள்'' என்று இராமன் திருவடிகளைப் போற்றினான் என்று கூறுதலும் பொருந்தும். தன் சாபத்தைப் போக்கி, அறியாமையை நீக்கி, ஞானத்தை அருளியதால் அவனை வள்ளல் என்று போற்றினான் என்க.

64. ''இம்பர் உற்றுஇது எய்தினேன்; வெம்பு விற்கை வீர! பேர்
தும்புரு; தனதன் சூழ் அம்பரத்து உளேன் அரோ!'' (2678)

(வெம்புதல் - சினத்தல் / கொடுமை; இம்பர் - இந்நிலவுலகு; இது - சாபம்நீங்கப்பெற்றமை; பேர் - பெயர்; தனதன் - குபேரன்; சூழ் - உட்பட்ட; அம்பரம் - வானுலகு / ஆகாயம்; தனத்திற்கு உரியவன் என்பதால் தனதன் என்பது குபேரனுக்குக் காரணப்பெயர்) (குளகப்பாடல்)

''கொடுமை மிக்க வில்லைக் கையில் ஏந்திய வீரனே! நான் இவ்வுலகத்தில் வந்து, உன்னால் சாப நீக்கம் பெறப் பெற்றேன்; என்பெயர் தும்புரு என்பது; குபேரனின் ஆட்சிக்கு உட்பட்ட வானுலகத்தில் வாழ்பவன்'' *(பாடல் முடியவில்லை தொடர்கிறது).*

65. ஆடு அரம்பை நீடு அரங்கு ஊடு நின்று பாடலால்,
ஊடு உவந்து கூட, இக்கூடு வந்து கூடினேன். (2679)

(நீடு - பெரிய; ஊடு - இடையே; கூட - கூடுதல்; கூடு - அரக்கன் உடல்; கூடுதல் - சேர்தல்)

''நடனமாடுதலையே தொழிலாகக் கொண்ட தேவ மடந்தையான அரம்பை பெரிய அரங்கத்தினிடையே நின்று பாடிக் கொண்டிருக்கும் பொழுது, நான் மிக மகிழ்வுற்று அவளிடம் காதல் கொண்டு ஊடிப் பின் கூடினமையால், இந்த அரக்கனது உடலில் வந்து சேருமாறு நேர்ந்தது''.

அவள் பாடி ஆடிக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த குபேரனைக் கவனிக்காமல் வணக்கம் செய்யாது இருந்ததனால் குபேரனால் சபிக்கப்பட்டு இங்கு வந்து சேர்ந்தான் என்பது பின் வரும் பாடலால் அறியலாம்.

66. கரக்க வந்த காம நோய், துரக்கவந்த தோமினால்,
இரக்கமின்றிஏவினான்; அரக்கன் மைந்தன் ஆயினேன். (2680)

(கரக்க - மறையும்படி; துரக்க - செலுத்த / தூண்ட; தோம் - குற்றம்; ஏவுதல் - காத்தல்)

''அறிவை மறைக்கும்படி நேர்ந்த ஆசை என்னும் நோய் என்னைப் பற்றிக் கொள்ள, அதனால் ஏற்பட்ட குற்றத்தினால், குபேரன், சிறிதும் கருணையின்றி என்னைச் சபித்தான். அதனால் இங்கே வந்து அரக்கன் மகனாகப் பிறந்தேன்''.

காமம் அறிவை மறைக்கும்; அது நிறைவேறாவிடில் பிணி போல் வருத்தும்; பின்னர் அதுவே பெரும் குற்றங்களுக்கு இடமளிக்கும் என்பதும் கூறப்பட்டது காண்க.

67. ''அன்ன சாபம் மேவிநான் இன்னல் தீர்வது ஏது? எனா
நின்னதாளின் நீங்கும்'' என்று, உன்னும் எற்கு உணர்த்தினான். (2681)

(நீங்கும் - அழியும்; உன்னுதல் - நினைத்தல்; எற்கு - எனக்கு)

''நான்அந்தச்சாபத்தைஅடைந்து, ''இந்தத்துன்பம்எவ்வாறுநீங்கும்?'' என்று எண்ணிக் கொண்டிருந்த போது, அக் குபேரன் ''உன்னுடைய திருவடிகளின் ஸ்பரிசத்தால் நீங்கும்'' என்று எனக்கு உணர்த்தினான்''.

68. "வலம் செய்து, இந்த வான் எலாம் நலிஞ்சு தின்னும் நாமவேல்
பொலிஞ்ச வென்றி பூணும் அக்கிலிஞ்சன் மைந்தன் ஆயினேன்". (2682)

(வான் - உலகு; வலம் செய்தல் - சுற்றி வருதல்; நலிஞ்சு - நலிந்து / வருந்தி; நாமம் - அச்சம்; பொலிஞ்ச - பொலிந்த / சிறந்த)

''இந்த வானுலகத்திலெல்லாம் சுற்றிச் சுற்றி வந்து, எல்லோரையும் துன்புறுத்தித் தின்னுபவனும், அச்சம் தரும் வேற்படையைக் கொண்டு விளங்குபவனும், எப்போதும் வெற்றியையே கொள்ளுகின்றவனுமாகிய கிலிஞ்சன் என்று புகழ்ந்து பேசப்படுகின்ற ஒரு அரக்கனின் மைந்தனாக அவதரித்தேன்''.

கிலிஞ்சன் என்னும் அரக்கனின் இயற்பெயர் ஜயன் என்று வான்மீகம் கூறும்.

69. ''அன்றுமூலம் ஆதியா இன்று காறும் ஏழையேன்,
நன்றுதீது நாடலேன்; நின்று தீய நேடினேன்''. (2683)

(மூலம் - காரணன்; ஏழை - அறிவிலி; ஆதி - முதல் / தொடக்கம்; காறும் - வரை; நாடல் - ஆராய்தல்; நேருதல் - தேடிக்கொள்ளுதல் / நெடுந்தூரம் தேடிச் செல்லுதலுமாம்)

''உலகங்களுக்கெல்லாம் மூல காரணமான முதல்வனே! அறிவிலி யாகிய நான் அன்று முதல் இன்று வரை இது நல்லது இது கெட்டது என்று ஆராய்ந்து அறியும் இயல்பில்லாதவனாய் இருந்தேன். தீய வழிகளிலேயே என் இச்சைப்படியே - எல்லாச் செயல்களையும் செய்து பழியையே தேடிக் கொண்டவனானேன். எதிரில் கிடைக்கும் எல்லாவற்றையும் என் கைப்படுத்தித் தின்று தீவினைகளையே தேடிக் கொண்டேன்''.

70. ''தூண்ட நின்ற தொன்மைதான் வேண்ட நின்ற வேத நூல்
பூண்டநின் பொலம் தாள் தீண்ட,இன்றுதேறினேன்'' (2684)

(தொன்மை - பழவினை; தூண்ட - செலுத்த; பொலம் - அழகு; தேறுதல் - தெளிதல்; வேண்டுதல் - விரும்புதல்)

''என்னுடைய பழவினை என்னைத் தூண்டுதலால் நிலை பெற்றிருந்த இப்பிறப்பு, எல்லோராலும் விரும்பப்படுவதுவும், வேத சாத்திரங்கள் எல்லாமும் அணிகலமாகக் கொண்டதுவுமான உன்னுடைய அழகிய திருவடிகள் என்னைத் தீண்டியதால், இன்று நான் இவ்வரக்கப் பிறப்பு அழிந்து, கந்தர்வனாகத் தெளிந்து உய்ந்தேன்''.

71. ''தெறுத்து வந்த தீது எலாம் அறுத்த உன் ஆதனேன்
ஒறுத்த தன்மை ஊழியாய்! பொறுத்தி'' என்று போயினான். (2685)

(ஆதன் - அறிவிலி / மூடன்; தெறுத்தல் - அழித்தல்; அறுத்த - போக்கிய; ஒறுத்த - துன்புறுத்திய; ஊழி - யுகம் முடியும் காலம்)

''யுக முடிவுக் காலத்திலும் அழியாதவனே! மூடனாகிய நான், என் எதிர்ப்பட்ட எல்லா உயிர்களையும் அழித்துத் தேடிக் கொண்ட தீவினை களையெல்லாம் போக்கியருளிய உன்னை, நான் துன்புறுத்திய செயல் களை எல்லாம் தயை செய்து பொறுத்தருள்வாயாக'' என்று துதித்துத் தன் பழைய கந்தருவ வடிவு கொண்டு தன்னுலகம் புகுந்தான்.

''முன்பொருள் செய்யாதார் ஆதரே'' என்பது சிறுபஞ்சமூலம் (20).

72. இராமன் முதலியோர் அவ்விடம் விட்டு அகலுதல்

''தேவு காதல் சீரியோன் ஆவி போயினான்'' எனாப்
பூ உலாவு பூவையோடு ஏ வலாரும் ஏகினார். (2686)

(தேவு - தெய்வம் / தேவர்கள்; சீரியோன் - சிறந்தவன்; ஆவி - உயிர்; ஏ - அம்பு; வலார் - வல்லவர்; பூ - தாமரைப் பூ; உலாவு - விளங்கும்; பூவை - நாகணவாய்ப் புள்)

தேவர்களால் விரும்பப் படுகின்றவனும், தெய்வக் காதலில் - திருமால் பக்தியில் - சிறந்தவனுமாகிய விராதனது உயிர் பிரிந்தது என்று கருதி, தாமரை மலரில் வீற்றிருக்கும், இலக்குமி போன்ற சீதையுடன், அம்புத் தொழிலில் (வில் தொழில்) வல்லவர்களான இராம இலக்குவரும் தண்டக வனத்துள் மேலும் சென்றனர்.

73. இராமன் முதலியோர் ஒரு சோலையில் தங்குதல்

கைகொள் கால வேலினார், மெய்கொள் வேதமெய்யர் வாழ்
மொய்கொள் சோலை முன்னினார், வைகல் தானும் வைகினார். (2687)

(முன்னுதல் - அணுகுதல்; வைகல் - அன்றையப் பொழுது; வைகுதல் - தங்குதல்; மொய் - அடர்ந்த)

இயமன் போன்ற கொடிய வேற்படையைக் கைகளிற் கொண்டுள்ள இராம இலக்குவர், உண்மையையே வாழ்வாகவும், வேதங்களையே அறநெறியாகவும் கொண்டு வாழ்கின்ற முனிவர்கள் வாழ்கின்ற, அடர்ந்த மரங்கள் செறிந்த ஒரு சோலையை அணுகினார்கள். அன்றையப் பொழுதை அங்கேயே தங்கிக் கழித்தார்கள்.

''வைகலானும் வைகினான் என்று கொண்டு சூரியனும் அஸ்தமித்தான்'' என்று பொருள்கூறுதலும் உண்டு; வைகலான் - பகலவன் - சூரியன்; வைகல் - பகல்.

விராதன் வதைப்படலம் நிறைவுற்றது

2. சரபங்கன் பிறப்பு நீங்கு படலம் [44 பாடல்கள்]

சரம் என்பது பொதுவாகக் கணையைக் குறிக்கும் என்றாலும் இங்கே சிறப்பாக மன்மதனுடைய சரமான காமபாணத்தைக் குறித்தது என்றும், பங்கம் என்ற சொல் தோல்வியுறச் செய்தல் என்ற பொருளைக் குறித்தது என்றும் கொண்டு, மன்மதனது காமபாணத்தை வென்றவனாகிய சரபங்கன் என்ற முனிவன் இராமபிரானைக் கண்டு, தனது பிறவிப் பிணி நீங்கி முக்தி அடைந்த வரலாற்றைக் கூறும் பகுதி என விரியும். காமம், வெகுளி, மயக்கம் முதலிய குற்றங்கள் தன்பால் சாராது நீக்கி வென்றவன் என்பது கருத்து. இது 44 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்'' எனவும், ''சரபங்கன் பிறவி நீங்கு படலம்'' எனவும், ''சரபங்கப் படலம்'' எனவும், சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் எனவும் குறிக்கப் பெற்றுள்ளன.

இப்படலத்தில், சரபங்கன் ஆசிரமத்தை இராமன் அடையும் போது அங்கே இந்திரன் வந்திருத்தல், இந்திரன் சரபங்கனை பிரமலோகத்திற்கு அழைத்தல்; அதனை முனிவன் மறுத்தல்; இந்திரன் வந்திருத்தலை இராமன் உணர்தல்; இந்திரன் இராமனைக் கண்டு தரிசித்துப் போதல்; இராமன், இலக்குவன், சீதை ஆகியோர் அவ்வாசிரமத்தில் அன்றைய இரவைக் கழித்தல்; சரபங்கன் தீப்புகுந்து பரமபதம் அடைய எண்ணுதல்; இராமன் அவன் உள்ளக் கிடக்கையை வினவுதல்; சரபங்கன் இராமனிடம் விடைபெற்றுத் தீப்புகுதல் ஆகிய செய்திகள் விரிவாகப் பேசப் பட்டிருக்கின்றன.

1. மூவரும் சரபங்கன் ஆசிரமம் அடைதல்

குரவம்குவி கோங்கு அலர் கொம்பினோடும்
இரவுஅங்கு அணுகும் பொழுது எய்தினரால்;
சரபங்கன் இருந்து தவம் கருதும்
மரவம்கிளர் கோங்கு ஒளிர் வாசவனம். (2688)

(குரவம் - குராமரம்; கொம்பு - பூங்கொம்பு போன்ற சீதை; கருதுதல் - புரிதல் / மேற்கொண்டிருத்தல் / செய்தல்; மரவம் - குங்குமமரம் / மராமரம் / வெண்கடம்பு; வாசம் - நறுமணம்; வனம் - ஆசிரமம்; தவம் - பலபடியாகவும் மெய்யை வருத்தி, மனத்தைப் பரம்பொருளில் செலுத்தும் செயல்; கொங்கு - தேன் / பூந்தாது)

குரா மலர்களும், குவிந்த கோங்கு அரும்புகளும் தன் கூந்தலில் சூடப்பெற்ற பூங்கொம்பு போன்ற சீதாதேவியுடன், அந்திப் பொழுது வந்து சேர்ந்த வேளையில், சரபங்க முனிவன் தங்கியிருந்து தவம் மேற்கொள்ளும், குங்கும மரங்கள் ஓங்கி வளர்ந்ததும், கோங்கு மரங்கள் நிறைந்து விளங்குகின்றதுமான, நறுமணம் மிக்க ஆசிரமத்தை மூவரும் அடைந்தனர்.

காமம் நிறைவேறாது போனால் வெகுளியும், வெகுளி முற்றிய நிலையில் மயக்கம் - தடுமாற்றமும் உண்டாகும். வெகுளிக்கும், மயக்கத்திற்கும் அடிப்படை காமமே. எனவே அதனை நீக்கியவன் என்றதனால் முன்னர்ச் சொல்லப்பட்ட வெகுளியையும் மயக்கத்தையும் வென்றவன் என்பது பெறப்படுகிறது.

2. இந்திரன் சரபங்கன் ஆசிரமம் வருதல்

செவ்வேலவர் சென்றனர், சேரல் உறும்
அவ்வேலையின் எய்தினன், ஆயிரமாம்
தவ்வாது இரவும் பொலி தாமரையின்
வெவ்வேறு அலர் கண்ணினன், விண்ணவர் கோன். (2689)

(தவ்வாது - கூம்பாது / தவறாது; வெவ்வேறு - தனித்தனியே)

செம்மையான, சிவந்த, சிறந்த, கூர்மையான வேற்படையை உடைய இராம இலக்குவர்கள், சரபங்கன் ஆசிரமம் சென்று சேர்ந்த சமயத்தில், தன் உடம்பெல்லாம் ஆயிரம் என்று சொல்லப்படுகின்ற எண்ணிக்கை அளவுள்ளதும், தவறாமல், இரவிலும் கூம்பாமல், தனித்தனியே மலர்ந்துள்ளதான தாமரையைப் போன்ற கண்களைப் பெற்றிருக்கும் தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரன் அங்கு வந்து சேர்ந்தான்.

செவ்வேலவர் என்பதற்கு எப்பொழுதும் பகைவர்களின் இரத்தக்கறை படிந்திருக்கும் சிறந்த வேற்படையை உடையவர் என்றும் கொள்ளத் தகும். வேல் என்பது இங்கு ஆயுதத்தைக் குறித்து நின்றது. இந்திரன் ஆயிரம் கண்களை உடையவன் என்பது பாலகாண்டத்துள் விரிவாக விளக்கப் பட்டுள்ளது. இரவிலும் கூம்பாத தாமரைக் கண்கள் என்பது, தேவர்கள் இமையா நாட்டம் கொண்டவர்கள் என்பதைக் குறிப்பது. வெவ்வேறு அலர் கண்ணினான் என்பது கௌதமன் சாபத்தால் அவன் உடல் உறுப்புக்கள் எல்லாவற்றிலும் கண்களைப் பெற்றிருப்பவன் என்பதைக் குறிப்பதாம். இந்திரனுக்கு ''சகஸ்ராக்ஷன்'' என்றும் ஒரு பெயர் உண்டு என்பதை அறிக.

3. இந்திரன் வருகை [11 பாடல்கள்]

அன்னச் செலவின் படிமேல் அயல்சூழ்
பொன்னின் பொலி வார் அணிபூண் ஒளிமேல்

மின்னின் செறிகற்றை விரிந்தன போல்
பின்னிச் சுடரும் பிறழ்பேர் ஒளியான். (2690)

(செலவு - நடை; படி - நிலம்; அயல் - பக்கம்; பூண் - அணிகலன்கள்; செறி - நெருக்கமான; கற்றை - தொகுதி; பின்னி - கலந்து / நெருங்கி / இணைந்து; ஒளி - பொலிவு / தேககாந்தி; பிறழ்தல் - விட்டு விட்டுப் பிரகாசித்தல்; பொன் - அழகு / தேமல்) (குளகப்பாடல்).

இலக்குமி போன்ற அழகிய தெய்வ மகளிர் நிலத்தின் மீது அழகிய அன்னப் பறவைகள் நடப்பது போல், தன்னை இருபக்கங்களிலும் சூழ்ந்து வர, தாங்கள் அணிந்திருக்கின்ற அணிகலன்கள் வீசும் ஒளியின் மேல், மின்னல்களின் செறிந்த தொகுதியும் பரந்தது போல் இரண்டும் இரண்டறக் கலந்து மிக்க ஒளி வீசும் தோற்றப் பொலிவு உடைய இந்திரன். *(பாடல் தொடர்கிறது).*

தேவமகளிர் அன்னம் போல் நடையும், இலக்குமி போல் பொலிவும் கொண்டவர்கள். அவர்கள் நிலத்தின் மீது நடந்துவரும் போது, அவர்கள் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள் ஒளி வீசுகின்றன. அந்த ஒளியும், மின்னலிலிருந்து பரவி வருகின்ற ஒளிக்கற்றையும் சேர்ந்து கலந்து, இந்திரனின் மேனிமேல் விட்டு விட்டுப் பிரகாசிக்கின்றன. அத்தகைய பேரொளியுடைய தோற்றப் பொலிவையுடையவன் இந்திரன் என்பதாம். இந்திரன் இயல்பில் கருமை நிறமுடையவன். இந்த இரண்டு ஒளிக்கற்றைகளும் அவன் உடலில் இரண்டறக் கலந்ததால் பேரொளி பெற்றவன் ஆயினான் என்பது நினைக.

4. வானில் பொலி தோகையர் கண்மலர் வண்
கானில் படர்கண் களி வண்டோடு, தார்
மேனித்திரு நாரதன் வீணை இசைத்
தேனில் படியும் செவி வண்டு உடையான். (2691)

(பொலிதல் - திகழ்தல்; படர் - படியும் / தோயும்; கோதையர் - தேவ மகளிர்; வண் - வண்மை / வளப்பம்)

தேவருலகத்தில் திகழ்கின்ற மயில்போலும் சாயலையுடைய தேவ மகளிரின் கண்களாகிற வளப்பம் மிக்க மலர்க் காட்டினில் படிகின்ற செருக்கு மிக்க வண்டு எனும் கண்களை உடையவனும், மாலையணிந்த உடலை உடையவனும், அழகானவனுமான நாரதனின் வீணை இசை என்னும் தேனில் தோய்கின்ற வண்டு என்னும் செவிகளும் உடைய வனாகிய இந்திரன் - *(குளகப்பாடல்)*

இந்திரனது கண்களையும் செவிகளையும் வண்டாக உருவகப் படுத்தினார் என்க. அவனது கண் என்னும் வண்டு, எப்போதும் தேவ மகளிரின் மலர்க்காட்டிலேயே மொய்த்துக் கொண்டிருக்கும்; அவனது செவி என்னும் வண்டு நாரதனின் மகதி என்னும் யாழிசையில் லயித்துக் கொண்டிருக்கும். வண்டுகள் மலர் வனத்தில் மொய்ப்பதும், தேன் பருக

நாடி ஓடலும் இயல்பு தானே? மகளிரின் கண் மலர்க் காட்டில் படிந்திருப்பது சிற்றின்பத்தையும், நாரதனின் வீணை இசைத்தேனில் ஊறியிருப்பது பேரின்பத்தையும் நல்கும் என்பதாம். இவ்விரு இன்பங்களையும் ஒரு சேர நுகர்ந்தவன் இந்திரன் என்க. மகளிரின் அழகைப் பருக அவனுக்கு ஆயிரம் கண்கள் இருந்தன. வீணையின் நாதத்தைக் கேட்க இருபது செவிகளே இருந்தன என்றதனால் இந்திரன் சிற்றின்பத்தைப் பெரிதும் நுகர்ந்தவன் எனப் பெறப்படுகிறது. கண்மலர் வண்கான் என்பது ''வாங்குவளைக் கையார் வதன மதி பூத்த பூங்குவளைக் காட்டிடையே போயினான்'' என்ற நளவெண்பாப்பாடலை நினைவு படுத்துதல் காண்க. நாரதன் பிரம்ம புத்திரர்களுள் ஒருவன். இசையிலும் பக்தியிலும் உயர்ந்தவன். நாரதன் என்ற சொல்லிற்கு ஆத்ம ஞானத்தைக் கொடுப்பவன் என்றும், அன்பை அருளுபவன், நரர்களுக்குள்ள ஒற்றுமையைப் பிளப்பவன் என்றும் பொருள்.

5. அனையின் துறை ஐம்பதொடு ஐம்பதும் நூல்
வினையின் தொகை வேள்வி நிரப்பிய மா
முனைவன்; முதுதேவரின் மூவர் அலார்
புனையும் முடிதுன்று பொலம் கழலான். (2692)

(அனை - அனல் / நெருப்பு; நிரப்பிய - நிறைவேற்றிய; முனைவன் - தலைவன்; முது - முதிய; புனையும் - சூட்டிக்கொள்ளும்; மா - சிறந்த / பெருமை வாய்ந்த)

வேதசாத்திர நூல்கள் கூறுகின்றபடி, சிறிதும் குறைவில்லாது, நூறு என்று சொல்லப்படும் எண்ணிக்கையுள்ள வேள்விகளை நிறைவேற்றிய சிறந்த பெருமை வாய்ந்த தலைவன்; முதிய தேவர்களான பிரமன், திருமால், சிவன் ஆகிய மூன்று கடவுளர்கள் அல்லாமல் மற்ற எல்லாத் தேவர்களும், அணிந்திருக்கின்ற கிரீடத்தையும் அழகிய பொன்னாலாகிய வீரக்கழலையும் உடைய இந்திரன் - (குளகப்பாடல்)

அனை என்பது அனல் என்பதைக் குறிக்கும் எதுகை நோக்கித் திரிந்த சொல். நூறு யாகங்களைக் குறைவறச் செய்து முடிப்பவன் இந்திர பதவிக்குத் தகுதியானவன். அவ்வாறு இவ்விந்திரன் நித்தியம், நைமித்திகம், காமியம் என்ற மூவகைப் பிரிவுள்ள வேள்விகளை எந்த ஒரு குறையும் இல்லாது நூறு முறை செய்து நிறைவேற்றியதனால் இவன் மாமுனிவன்எனப்பட்டான். இந்திரனுக்குச் ''சதமகன்'', ''சதக்கிரத'' என்ற காரணப்பெயர்களும் உண்டு என்பதை அறிக. அரன், அரி, அயன் என்ற மூவருக்கும் அடுத்தபடி வைத்து எண்ணத் தகுதியுடையவன் என்பதும், இம்மூவரல்லாத மற்ற எல்லாத் தேவர்களும் இவன் திருவடியை வணங்குபவர் என்பதும் பெறப்படுகிறது. இங்கே துறைநூல் என்பது மீமாம்சை என்னும் நூலைக் குறிக்கும் எனக் கொள்க.

6. செம்மா மலராள் நிகர் தேவியோடும்
மும்மாமத வெண்நிறம் முன் உயர்தாள்
வெம்மாமிசையான்; விரி வெள்ளி விளங்கு
அம்மாமலை அண்ணலையே அனையான். (2693)

, (தேவி - இந்திராணி / சசிதேவி; விரி - ஒளி வீசும்; வெம் - அச்சம் தரும்)

சிறந்த, சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளை ஒத்திருக்கும் தன்மனைவி இந்திராணியோடு, மூன்று பெரும் மதங்களையும், வெள்ளை நிறத்தையும், உயர்ந்த முன்னங்கால்களையும், வெப்பத்தையும் உடைய ஐராவதம் என்ற தன் வாகனமாகிய யானையின் மேல் அமர்ந்திருப் பவனாகிய இந்திரன், அந்த ஒளிவீசுகின்ற வெண்மையான நிறம் கொண்டு விளங்கும் சிறந்த கைலாச மலையில் பார்வதி தேவியுடன் வீற்றிருக்கும் பெருமையுடையவனாகிய சிவபெருமானையே ஒத்திருக்கின்றான்.

இந்திரனின் மனைவி பெயர் சசி. யானை வெளியிடும் மூன்று மதங்கள் கன்ன, (காது) கபோல, பீஜ மதம் எனப்படும். யானையின் முன்னங்கால்கள் அதன் பின்னங்கால்களைக் காட்டிலும் சற்று உயர்ந்திருக்கும். அதனால் தான் யானை சற்றுச் சரிந்தாற் போன்ற தோற்றம் தருகின்றது. வெம் என்ற சொல் அச்சம் தருகின்ற என்ற பொருளிலும் குறிக்கப்படும். மதம் பெருகிய யானையின் உடல் வெப்பமுற்றிருக்கும் எனவே வெம்மா என்றார் என்க. இந்திரனுக்குச் சிவபெருமான் ஒப்பு; ஐராவத யானைக்கு கைலாய மலை ஒப்பு; யானைக்குக் கைம்மலை, நடைமலை, மதமலை என்பனவும் காரணப்பெயர்.

7. தான்நின்று, அயல்நின்று ஒளிர்தண் கதிரோன்
''யான் நின்றது என்?'' என்று ஒளிஎஞ்சிட மா
வான்நின்ற பெரும்பதம் வந்து உருவாய்
மேல் நின்றென நின்று, ஒளிர்வெண் குடையான். (2694)

(தண் - குளிர்ந்த; எஞ்சிட - குன்றும்படி; பெரும்பதம் - வைகுந்தம்; பதம் - உணவு; பெரும்பதம் - தேவஅமிர்தம்)

தன் அருகில் நின்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் குளிர்ந்த கிரணங் களையுடைய சந்திரன் இவன் அருகில் தான் நிற்பதால் என்ன பயன் என்று நாணித் தன் ஒளி குறைந்து போகும்படி, சிறந்த வானுலகில் இருக்கும் சுவர்க்கமே ஒரு உருவெடுத்து வந்து இவன் மேல் மணி முடியாய் நிற்கிறது என்று சொல்லும்படி பேரொளி பரப்பிடும் வெண்மை நிறமுள்ள குடையைக் கொண்ட இந்திரன் - (குளகப்பாடல்)

''வானிலுள்ள சொர்க்கலோகமே ஒரு உருவெடுத்து வந்து இவனுக்கு வெண்குடையாய் அமைந்திருக்கும் பொழுது, என்னுடைய குளிர்ச்சி பொருந்திய கிரணங்களை விரித்து நான் ஒளி பரப்ப முயல்வது உலகத்தார்க்கு என்ன பயனைத் தந்து விடப் போகிறது?'' என்று சந்திரனே நாணியது. அதனால் அதன் ஒளி குறைந்து போயிற்று, அத்தகைய பேரொளி

படைத்த குடையை உடையவன் இந்திரன் என்பதாம். இங்கே பரமபதம் என்ற சொல்லுக்கு வானுலகத்துச் சொர்க்கம் என்றும் வைகுந்தம் என்றும் நாம் பொருள் கொண்டோம். பதம் என்ற சொல்லுக்கு உணவு என்ற ஒரு பொருளும் உண்டு. எனவே பரமபதம் என்பது இறவாத பெருமையுடைய உணவாகிய தேவாமிர்தத்தைக் குறிக்கும் என்றும் பொருள் கூறுவதுண்டு. சந்திரனிடத்துக் களங்கம் இருப்பதால் அதன் ஒளியைவிட களங்கமில்லாத வெண்குடையை உடைய இந்திரனின் ஒளி பேரொளி என்பதாம். சந்திரனின் கிரணம் அமுத கிரணம் என்றே வழங்கப்படுதலும் காண்க.

8. திசை கட்டிய மால்கரி தெட்ட மதப்
பசை கட்டின கிட்டின பற்பல போர்,
விசை கட்டுஅழி தானவர் விட்டு அகல்பேர்
இசை கட்டிய ஒத்து, இவர் சாமரையான். (2695)

(மால் - பெரிய; தெட்ட - முதிர்ந்த; கட்டின - தொடர்புடையனவான; விசை - விரைவு / வேகம்; கட்டு - திண்மை; தானவர் - அசுரர்கள்; இசை - கீர்த்தி / புகழ்; இவர்தல் - விளங்குதல்; தனு என்பவளின் மைந்தர் என்பதனால் தானவர் என்பது தத்திதாந்த நாமம். சாமரை - சமரம் என்ற வெண் கவரிமானுடைய வால் மயிர்க்கற்றை)

பல போர்களில், அசுரர்கள் தங்கள் வேகமும் உறுதியும் அழிந்து, விட்டு விட்டுப் போன பெரிய கீர்த்தித் தூண்களை, மீண்டும் நிலை நாட்டியது போன்று விளங்கும் வெண்சாமரையை உடைய இந்திரன். அந்த உறுதிக்கு எட்டுத்திசைகளிலும் கட்டப்பட்டுள்ள யானைகளின் முதிர்ந்த தெளிந்த பசையாகிக் கெட்டியாகிப் போன மதநீர்ப் பெருக்கு உவமை.

இந்திரனுக்கும் அசுரர்களுக்கும் மிகப் பல போர்கள் நிகழ்ந்தன. அவை எல்லாவற்றிலும் இந்திரன் அசுரர்களைத் தோற்கடித்து உலகத்தின் திசை எல்லை வரை துரத்திச் சென்றான் அங்கே இருக்கின்ற திக்கு யானைகளின் மதநீர்ப் பெருக்கு முற்றிப் போய் பசையாகிக் கெட்டியாகிப் போகின்ற அளவு போர் நிகழ்ந்தது. இறுதியில் அசுரர்கள் தங்கள் வேகமும் உறுதியும் குலைய, போர்க்களத்தினின்னும் அகன்றனர். அவர்கள் விட்டுச் சென்ற வெற்றித் தூண்கள் என்னும் வெண்சாமரையோடு ஒளி பெற்றுத் திகழ்பவன் இந்திரன் என்பதாம். அந்த வெற்றிகளையெல்லாம் ஒரு சேரத் தொகுத்துக் கட்டியது போன்ற வெண்சாமரை என்க.

9. தீர்வுஇல் திரி செங்கதிர் தங்குவது ஓர்
ஊர் உற்றது எனப்பொலி ஒண் முடியான்;
போர் வித்தகன்; நேமி பொறுத்தவன் மா
மார்பில் திருவின் பொலி மாலையினான். (2696)

(செங்கதிர் - செஞ்ஞாயிறு / சூரியன்; வித்தகன் - தேர்ச்சியுள்ளவன்; மா - பெருமை பொருந்திய; பொறுத்தவன் - ஏந்தியவன்; ஊர் - பரிவேடம் / ஒளிவட்டம்)

ஓய்வு ஒழிதல் இல்லாது எப்போதும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் சிவந்த கிரணங்களையுடைய சூரியன், நிலையாகத் தங்குவதற்கு ஒரு ஊர் கிடைத்தது என்று பொலிவுற்றுத் திகழ்கின்ற ஒள்ளிய கிரீடத்தை உடையவன்; போர்ப் பயிற்சியில் தேர்ந்தவனும், சக்கராயுதத்தை உடையவனும், மாட்சிமை பொருந்திய தனது திருமார்பில் திருமகளைத் தாங்கிக் கொண்டிருப்பவனுமான திருமால் போன்று, இரத்தின மாலையை அணிந்திருப்பவனுமாகிய இந்திரன் - (குளகப்பாடல்).

தீர்வுஇல் என்பதற்கு ஓய்வு ஒழிதல் இல்லாத, என்று பொருள் கொண்டோம். ''தேரில்'' என்றும் ஒரு பாடம் உண்டு; அதற்கு ஒற்றைச் சக்கரத்தையுடைய தேரில் என்று பொருள் கூறுவர். ஊர் என்பது பரிவேடத்தைக் குறிக்கும். பரிவேடம் என்பது ஒளிவட்டம். முன்பே பல இடங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. போர் வித்தகன் என்பதும் நேமி என்பதும் திருமாலுக்கு ஏற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. இவை இந்திரனையே குறிப்பதாகவும் கொள்ளலாம். காரணம் இந்திரனுக்கே ''சக்கிரி'' என்றும், ''நேமி'' என்றும் வேறு பெயர்களும் உண்டு என்பதை அறிக. இந்திரன் மார்பின் மாலைக்குத் திருமால் மார்பில் உறையும் திருமகள் உவமை.

10. செற்றிக் கதிரின் பொலி செம்மணியின்
கற்றைச் சுடர்விட்டு எரி கஞ்சுகியான்;
வெற்றித் திருவின் குளிர் வெண்நகை போல்
சுற்றிக் கிளரும் சுடர் தோள் வளையான். (2697)

(செற்றி - செதுக்கப்பட்ட; கதிர் - சூரியன்; கஞ்சுகம் - கவசம் / சட்டை / மேல் அங்கி; வெற்றித்திரு - விஜயலட்சுமி / வீரலட்சுமி / கொற்றவை; தோள்வளை - வாகு வலயம்)

சூரியனைப் போல ஒளி வீசுவதற்காகச் செதுக்கப்பட்ட சிவந்த இரத்தினங்களின் கூட்டங்கள் ஒளி விட்டுப் பிரகாசிக்கும் கவசத்தை உடையவன்; கொற்றவை என்ற விஜயலட்சுமியின் குளிர்ச்சி பொருந்திய புன் சிரிப்பால் எல்லாப் பக்கங்களிலும் ஒளி விட்டுப்பிரகாசிக்கும் தோள்வளைகளை உடையவன்.

இந்திரனுடைய மேலங்கிக்குச் சூரியனுடைய ஒளிக் கற்றையும், அவனுடைய தோள்வளையங்களுக்கு வெற்றித் திருமகளின் புன்னகையும் உவமை. இரத்தினங்களைச் செதுக்கச் செதுக்க - பட்டை தீட்ட தீட்ட - அவை ஒளி மிகும் என்பது இயற்கை. அதுபோலப் பட்டை தீட்டப்பட்ட சூரியனின் கிரணங்களையும் பட்டை தீட்டிய இரத்தினக் கற்றையின் ஒளியையும் விஞ்சும் ஒளி உடையது இந்திரனின் மேல் அங்கி என்பதாம். விஜயலட்சுமி விளங்கும் இடமாக வீரர்களின் மார்பையும் தோளையும் கூறுவது கவிமரபு.

11. பல்லாயிரம் மாமணி பாடம் உறும்
தொல்ஆர் அணிகால் சுடரின் தொகைதாம்
எல்லாம் உடனாய் எழலால், ஒருதன்
வில்லால் ஒளிர்மேகம் எனப் பொலிவான். (2698)

(பாடம் உறுதல் - ஒளிர்தல்; பாடம் - சோதி / ஒளி; கால் - காலுதல் / வெளியிடுதல்; வில் - வானவில் / இந்திரதனுசு; எழுதல் - மேற்கிளம்புதல்)

பல்லாயிரக் கணக்கான சிறந்த இரத்தினங்கள் ஒளி வீசுவதால், பழமையானஆபரணங்கள்ஒளிவிடும்ஒளியின்தொகுதிஎல்லாமும்ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் பிரகாசிப்பது போல, தனது ஒப்பற்ற இந்திர வில்லால் ஒளிர்கின்ற மேகம் போலப் பொலிந்து திகழ்கிறான் இந்திரன்.

பழமையானஆபரணங்களின்ஒளிஎப்போதும்மிகுந்திருக்கும். அவை பல்லாயிரக் கணக்கில் ஒருசேரச் சேர்ந்து ஒளி விடுதலால் அவற்றின் ஒளியை விஞ்சும் தனது இந்திர வில் எனும் வானவில்லின் ஒளியை உடைய, மேகம் போலத் திகழுபவன் இந்திரன் என்பதாம். இந்திரன் இயற்கையிலேயே கருமையானவன். எனவே கரிய மேகம் ஒப்பு; ஆனால் அவன் அணிந்திருக்கின்ற பழமையான ஆபரணங்களின் ஒளி மிகுதி, இந்திர வில்லுக்கு உவமை. இரத்தினாபரணங்களோடு பொலியும் இந்திரன், வானவில்லோடு திகழும் காளமேகத்திற்கு உவமை.

12. மானா உலகம்தனில் மன்றல் பொரும்
தேன்நாறு, நலம் செறி, தொங்கலினான்;
மீனோடு கடுத்து உயர் வென்றியவாம்
வான் நாடியர் கண்ணெனும் வாள் உடையான். (2699)

(மானா - ஒத்திராத; மன்றல் - நறுமணம்; நாறுதல் - தோன்றுதல்; நலம் - அழகு; தொங்கல் - மாலை; கடுத்தல் - ஒத்திருத்தல்; வான் நாடியர் - தேவமகளிர்)

ஒன்றோடு ஒன்று ஒத்திராத உலகங்கள் எல்லாவற்றிலும் சென்று நறுமணம் பரப்பும் தேன் தோன்றுகின்ற, அழகு நிறைந்த மாலையை அணிந்திருப்பவன் இந்திரன்; மீன்களைப் பகைத்து உயர்ந்த வெற்றியை உடைய தேவ மகளிரின் கண்கள் என்னும் வாட்படையை உடையவன் இந்திரன் - (குளகப்பாடல்)

மானா என்ற சொல்லுக்கு ஒன்றோடு ஒன்று ஒத்திராத - வேறுபட்ட - பல உலகங்கள் என்று பொருள் கொண்டோம். மானா என்ற சொல்லுக்கு ஒப்பில்லாத என்ற ஒரு பொருளும் உண்டு. தேவ மகளிரின் கண்கள் ஒளி மிகுந்தவை கூர்மையானவை, கண்டாரை வருத்துபவை, வெற்றி தருபவை. எனவே இவற்றால் ஒத்திருக்கும் வாட்படையை உவமை கூறினார் என்க.

13. வெல்வான் நசையால், விசையால் விடும்நாள்
எல்வான் சுடர்மாலை இராவணன் மேல்
நெல்வாலும் அறாத, நிறம் பிறழா
வல்வாய் மடியா, வயிரப் படையான். (2700)

(எல் - சூரியன்; வான்சுடர் - மிகுந்த ஒளி; நசை - விருப்பம்; விசை - விரைவு; வால் - முனை; அறாத - முறியாத; பிறழ்தல் - மாறுபடுதல்; மடியா - மடங்காத; வயிரப்படை - வச்சிராயுதம்; நெல்வால் - நெல்லின் வால் போல் அமைந்த ஓர் நுட்பமான கூரிய பகுதி)

சூரியனைப் போன்று மிகுந்த ஒளியை உடைய இரத்தின மாலை அணிந்த இராவணன், முன்னொரு காலத்தில், அவனை வெற்றி கொள்ளும் ஆசையின் பொருட்டு, தனது வாட்படையை வேகத்தோடு வீசிய போதும், இந்திரனுடைய வச்சிராயுதம் என்னும் உறுதி வாய்ந்த ஆயுதம், ஒரு நெல்லின் வால் போல் அமைந்த நுட்பமான பகுதி கூட ஒடிந்து போகாமலும், தன்னுடைய வண்ணம் மாறுபடாமலும், தனது கூரிய வலிய நுனி மடங்கிப் போகாமலும், நின்றது. அத்தகைய உறுதியான வச்சிராயுதப் படையை உடையவன் இந்திரன்.

பெருவலி படைத்த இராவணனாலும் சிறிதும் ஊறுபடுத்த முடியாத வச்சிரப் படை என்பதாம். வச்சிராயுதம் என்பது இருதலைச்சூலம் போல், நடுவே பிடி அமைந்த ஓர் ஆயுதம். இந்திரன் ததீசி என்னும் முனிவரை வேண்டிக்கேட்க, அவரும் மிக்க விருப்பத்தோடு இதை இந்திரனுக்கு அளித்தார். இது அவரது முதுகெலும்பினால் ஆக்கப்பட்டது என்பது அறியப்பட வேண்டிய தொன்றாகும்.

14. சரபங்கன் இந்திரனை வினவுதல்

நின்றான்; எதிர் நின்ற நெடுந்தவனும்
சென்றான் எதிர்கொண்டு; சிறப்பு அமையா,
"என்தான் இவண் எய்திய ஆறு?" எனலும்,
பொன்றாத பொலங் கழலோன் புகலும். (2701)

(அமையா - அமைந்து / பொருந்துமாறு; பொன்றாத - அழியாத)

இத்தகைய இந்திரன் சரபங்கன் ஆசிரமம் சென்று நின்றான்; எதிரே நின்ற பெருந்தவசியான முனிவனும், அவனை எதிர் சென்று அழைத்துக் கொண்டு தனது ஆசிரமத்திற்குச் சென்று, விருந்தினர்க்குரிய உபசாரங்களைச் சிறப்பாகச் செய்து, "தாங்கள் இங்கு வந்ததன் நோக்கம் யாது?" என்று வினவியதும், என்றும் அழியாத அழகிய பொன்னாலாகிய வீரக்கழல் அணிந்த இந்திரனும், பின்வருமாறு கூறலானான்.

15. இந்திரன் கூறுதல்

"நின்னால் இயல் நீதி நெடுந்தவம் இன்று
என்னானும் விளம்ப அரிது"; என்று உணர்வான்
அந் நான்முகன், நின்னை அழைத்தனனால்;
"பொன்னார் சடைமாதவ! போதுதியால்". (2702)

(போதுதி - வருவாயாக; நீதி - முறை தவறாத; என்னானும் - எவ்வித மேனும்)

"பொன்னைப் போன்ற சிவந்த நிறமுடைய சடைமுடியை உடைய பெருந்தவத்தோனே! உன்னால் முறைதவறாது இயற்றப்படும் இந்நெடிய தவத்தின் பெருமையினை எந்த வகையாலும் புகழ்தற்கு இயலாது என்று உணர்ந்த அந்த நான்கு முகங்களையுடைய பிரமதேவன், உன்னைத் தன்னுடைய சத்திய லோகத்திற்கு அழைத்திருக்கிறான்; எனவே அங்கே செல்லுவதற்கு எழுந்தருள்வீராக!" என்றான்.

என்னானும் என்று பாடம் கொண்டு எவ்வகையாலும், எவ்விதமேனும் புகழ்ந்து கூறுதற்கு இயலாது என்று பொருள் கொண்டோம். "என்னாலும்" என்று இதனை இந்திரன் கூற்றாகவும் கொள்ளலாம். காரணம் இந்திரன் ஐந்திரம் என்னும் இலக்கணம் இயற்றிய அறிஞன். எனவே அவனால் கூட முனிவரது பெருந்தவத்தின் சிறப்பியல்புகளைக் கூற இயலாது என்றும் பொருள் கொள்ளலாம்.

16. "எந்தாய்! உலகு யாவையும் எவ்வுயிரும்
தந்தான் உறையும் நெறி தந்தனனால்;
நந்தாத பெரும் தவ! நாடு அதுநீ
வந்தாய் எனின், நின் எதிரே வருவான்" (2703)

(தந்தான் - படைத்தவன்; நெறி - வாழ்விடம்; நந்தாத - கெடுதியற்ற)

"என் தந்தை போன்ற பெரியோய்! இவ்வுலகங்கள் எல்லாவற்றையும், அவற்றில் வாழ்கின்ற உயிரினங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவனான நான்முகன், தான் வாழ்கின்ற சத்திய லோகத்தைத் தங்களுக்குத் தந்தருளியிருக்கிறான்; குற்றமில்லாத பெரிய தவத்தினாலன்றி வேறு எவற்றாலும் பெறற்கரிய நாடு அது. அந்நாட்டிற்குத் தாங்கள் வருவீர் என்றால், பிரமதேவன், தானே எதிர் வந்து, தங்களை அழைத்துச் செல்வான்" என்றான்.

தவநாடு என்பதைத் தபோலோகம் என்று கூறுவதும் உண்டு.

17. "எல்லா உலகிற்கும் உயர்ந்தமை, யான்
சொல்லாவகை நீ உணர் தொன்மையையால்;
நல்லாளுடனே நடநீ" எனலும்,
"அல்லேன்" என வாலறிவான் அறைவான். (2704)

(தொன்மையை - பழமை வாய்ந்தவன்; வாலறிவான் - மெய்யுணர்வு உடையவன் / திவ்ய ஞானி)

''அந்தச் சத்தியலோகம், மற்றெல்லா உலகங்களையும் விடச் சிறந்தது என்பதை யான் சொல்லாமலேயே, தாங்களே உணர்ந்து அறிகின்ற மிக்க அறிவாற்றலுடைய பழமையானவர்தாங்கள்; எனவே தங்களின் நற்குணம் வாய்ந்த மனைவியுடன் காலந்தாழ்த்தாது எழுந்தருள்வீராக'' என்று இந்திரன் கூறியதும், ''நான் இதற்கு உடன்படேன்'' என்று மெய்யறிவுடையவனான சரபங்கன், மேலும் கூறுவானாயினான்.

தொன்மையை என்று இந்திரனே கூறியதனால், அவனுக்கும் முன்பிருந்தே முனிவர் தவம் இயற்றி வருகிறார் என்பது புலப்படுகிறது. வாலறிவான் என்பது வள்ளுவனின் ''கற்றதனால் ஆய பயன் என்கொல்? வாலறிவன் நற்றாள் தொழார் எனின்'' குறளை (2) நினைவு படுத்துவது உணர்க.

18. சரபங்கனின் மறுமொழி

''சொல்பொங்கு பெரும் புகழோய்! தொழில்மாய்
சிற்பங்களின் வீவன சேர்குவனோ?
அற்பம் கருதேன்; என் அருந்தவமோ
கற்பம் பல சென்றது; காணுதியால்!'' (2705)

(சொல் - பாராட்டு; தொழில் - வேலைப்பாடு; வீவன - அழிந்து போவன; கருதுதல் - விரும்புதல்; காணுதி - அறிவாய் / தெரிந்து கொள்வாயாக)

''உலகத்தாரால் மிகுதியும் பாராட்டிச் சொல்லும்படியான புகழை உடையவனே! வேலைப்பாடும் வண்ணமும் சிதைந்து போவதும் அழிந்து போவதும்படியான சிற்பங்களைப் போல அழிந்து போகக் கூடிய சத்திய லோகத்தை நான் அடைவேனோ? அத்தகைய கீழ்த்தரமான நினைவை நான் ஒரு போதும் கொண்டதில்லை. என்னுடைய செயற்கரிய தவமோ, பல கற்ப காலங்களைக் கடந்தது. இதனை நீ அறிந்து கொள்வாயாக!''

''சொல் பொங்கு பெரும் புகழோய்'' என்ற விளி, இந்திரன் ஐந்திரம் என்னும் இலக்கணத்தை இயற்றி அதனால் பெரும் புகழ் கொண்டவன் என்பதைக் குறிப்பால் உணர்த்தும். சிற்பங்கள் பொதுவாக நீண்ட காலம் சிறப்புப் பெற்றிருக்கும் என்றாலும், அதன் வண்ணமும், வேலைப்பாடும் மங்கிப் போனால் சிற்பம் அழிந்து போனதாகும். எனவே ''மறு பிறப்பிற்கு வழிவகுக்கும் அத்தகைய சத்தியலோகத்தை நான் சேர மாட்டேன். இத்தகைய எளிய நினைவுகளை நான் கருதமாட்டேன். என்னுடைய தவம் பல கற்பங்களைக் கடந்தது. எனவே நான் சத்திய லோகத்தைக் காட்டிலும் சிறப்பு மிக்கதான பரமபதத்தையே நாடுவேன்'' என்றார் என்க. கற்பம் என்பது பலயுகங்கள் கொண்ட காலம்.

19. ''சொற்றும் தரமன்று இது; சூழ் கழலாய்!
பெற்றும் பெறுகில்லது ஓர் பெற்றியதே;
மற்று என்பல சொல்? இவண் வந்து தவம்
முற்றும் பகல் தானும் முடித்தனனால்!'' (2706)

(பெற்றி - தன்மை; பகல் - நேரம் / ஆயுட்காலம்)

''கட்டப்பட்ட கழலினை உடையவனே! நீ கூறும் இது, என்பால் கூறப்படுதற்குத் தக்கதன்று. நான் அந்தப் பிரம லோகத்தைப் பெற்றாலும், அது பெறாததாகக் கருதப்படும் தன்மையது; வேறு பல சொல்ல என்ன இருக்கிறது? இங்கே நீ வந்துள்ளதால், என்னுடைய தவம் முற்றும் நிரம்பி என் ஆயுட்காலமும் முடிந்து போனது என நான் உணர்கிறேன்''.

சிறந்த தவசியர்களின் தவம் முடிவுறும் காலத்தைத் தேவர்கள் முதலியோர் வந்து தெரிவிப்பார்கள் என்பது மரபு. எனவே இந்திரன் வருகையால் தனது வாழ்நாட்காலம் பூமியில் முடிவுற்றது என்பதைத் தாம் அறிந்து கொண்டதாக முனிவன் கூறுகின்றான் என்க.

20. ''சிறு காலைஇலா, நிலையோ திரியா,
குறுகா, நெடுகா, குணம் வேறுபடா,
உறுகால் கிளர் பூதம் எலாம் உகினும்,
மறுகா நெறி எய்துவென்; வானுடையாய்!''. (2707)

(காலை - கால எல்லை; கால் - காற்று; உகுதல் - அழிதல்; மறுகா - அழியாத; நெறி - முக்தி நெறி / மோட்ச பதவி)

''வானுலகத்தை ஆட்சி செய்பவனே! சிறிய பொழுதாகிய கால எல்லை இல்லாததும், தனது நிலையில் மாறுபடாததும், காலத்தால் சுருங்காததும், அதனால் நீளாததும், தன் குணங்களில் வேறுபடாது ஒரே தன்மையை உடையதுவும், ஆகி விளங்குகின்ற ஐந்து பூதங்கள் எல்லாம், வலிய காற்றினால் அழிந்துபட்டாலும், அழியாத முக்தி நெறியை - பரமபதத்தை நான் அடைவேன்'' என்றான்.

பரமபதத்தில் தான் இரவு, பகல் என்ற சிறுகால எல்லைகள் இல்லை; இளமை, முதுமை என்ற பருவ வேறுபாடுகள் இல்லை; ஒரே தன்மைத்தாய் எந்த வேறுபாடும் இல்லாததும், ஊழிக் காலத்தும் அழியாத தன்மையையுடையதுமான வைகுந்தத்தைத் தான் அடைவேன் என்று உறுதியாகக் கூறுகிறான் முனிவன். மற்ற பதவிகள் எல்லாம் உருவத்தாலும், காலத்தாலும், குணங்களாலும் மாறுபடும் இயல்பின. ஆனால் இந்த மோட்ச பதவி ஒன்றில் தான் இத்தகைய மாறுபாடுகள் எதுவும் இருக்காது. அத்தகைய நெறியையே தான் விரும்புவதாகவும் அதை உறுதியாக அடையப் போவதாகவும் கூறுகிறான் என்க. ''பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம் புக்கான்'' என்று சடாயு மோட்சத்தின் போது கம்பன் கையாளும் சொற்றொடர்கள், இங்கு நினைக்கத்தக்கன.

21. இராமன் முதலியோர் ஆசிரமம் வந்து தயங்கி நிற்றல்

என்று இன்ன விளம்பிடும் எல்லையின் வாய்,
வன்திண் சிலை வீரரும் வந்து அணுகா
ஒன்றும் கிளர் ஓதையினால் உணர்வார்,
நின்று, ''என்னைகொல் இன்னது?'' எனா நினைவார். (2708)

(அணுகா - அணுகி / அடைந்து; ஒன்றும் - பொருந்தும்; நினைதல் - எண்ணுதல்)

இவ்வாறு சரபங்க முனிவர் இந்திரனிடம் கூறி முடிக்கின்ற போது, வலிமையும், உறுதியும் கட்டமைந்த வில்லும் உடைய இராம இலக்குவர் அந்த ஆசிரமத்தை வந்து அடைந்தனர். அவர்கள் வந்த பொழுது அங்கு பொருந்தி எழும்பிய ஆரவாரத்தைக் கேட்டவர்களாய், ''இங்கு என்ன நடக்கிறது?'' என்று, சற்று தயங்கி நின்று, எண்ணத் தொடங்கினர்.

''ஒன்றும் கிளர் ஓதை'' என்பது, இந்திரனின் கூட வந்த யானை முதலிய பரிவாரங்களினால் எழுந்த ஓசை என்க. இந்திரனுக்கும் சரபங்கருக்கும் இத்தகைய உரையாடல் நடந்ததாகவோ, சரபங்கர் பிரம்மலோகத்தை அடைய விரும்பாமல் மறுத்தார் என்றோ வான்மீகத்தில் கூறப்பட வில்லை. எனினும் பின்னால் முனிவன் இராமபிரானிடத்துப் பேசும் போது இவ்வுண்மையை வெளிப்படுத்துவதாகவே வான்மீகி கதைப் போக்கை அமைத்திருக்கிறார் என்பது கருதத்தக்கது.

22. இராமபிரான், இந்திரன் வந்திருப்பதை ஊகித்து அறிதல்

கொம்பு ஒத்தன நால் ஒளிர் கோள் வயிரக்
கம்பக் கரிநின்றது கண்டனமால்,
''இம்பர்த் தலை மாதவர்பால், இவண் ஆம்
உம்பர்க்கு அரசு எய்தினன்'' என்று உணரா. (2709)

(கோள் - கொண்டது; கொம்பு - தந்தங்கள்; கம்பம் - கட்டுத்தறி; உணரா - உணர்ந்து) (குளகச்செய்யுள்)

ஒளிர்கின்ற, வயிரம் பாய்ந்த, உறுதியான, ஒன்றுக் கொன்று மாறு பாடில்லாத ஒரே அளவினதான நான்கு கொம்புகளை உடையனவும், கட்டுத்தறியில் கட்டப்படுவதும் இந்திரனுக்குச் சொந்தமானதுமான ஐராவதம் என்னும் யானையைக் கண்டோம். ஆதலால், இப்புவியில் பெருந்தவம் இயற்றுகின்ற சரபங்க முனிவனிடத்து, தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் வந்திருக்கிறான் என்று அறிந்து. (பாடல் தொடர்கிறது).

இந்திரனது ஐராவதம் என்ற யானைக்கு நான்கு கொம்புகள் - தந்தங்கள் உண்டு. அந்த யானை புறத்தே நிற்றல் கண்டு, இந்திரன் உள்ளே இருக்க வேண்டும் என்று அனுமான அளவையால் அறிந்தான் இராமன் என்க.

''ஈரிரு மருப்புடை வாரணம்'' என்பது கலிங்கத்துப் பரணி. இந்திரன் ஒரு தேரில் வந்தான் என்றும், அவனைச் சூழ்ந்து அவனது பரிவாரங்கள் நின்றன என்றும் வான்மீகம் கூறும்.

23. இராமன் மட்டும் சோலைக்குள் செல்லுதல்

மானே அனையாளொடு மைந்தனை அப்
பூநேர் பொழிலின் புறனே நிறுவா,
ஆன்ஏறு என, ஆள்அரிஏறு இது எனத்
தானே அவ்அகன் பொழில் சாருதலும். (2710)

(நேர் - நிறைந்த; நிறுவா - நிறுவி / நிறுத்தி; ஆன்ஏறு - இடபம் / காளை; அரிஏறு - ஆண் சிங்கம்; பொழில் - தவச்சாலை; மைந்து - வலிமை / இளமை)

மான் போன்ற மருண்ட பார்வையையுடைய சீதாதேவியுடன், இளவலான இலக்குவனையும் அந்தப் பூக்கள் நிறைந்த சோலையின் புறத்தே நிற்க வைத்து விட்டு, தான் மட்டும் தனியாக, வலிமையுள்ள இடபம் போலவும், பிற விலங்குகளை அடக்கியாளும் ஆண்சிங்கம் போலவும், அந்த அகன்ற தவச்சாலையினை இராமன் அடைந்ததும் - (பாடல் தொடர்கிறது).

மைந்தன் என்பது இங்கு மகன் என்றும், வலிமையுடையவன் என்றும், இளையவன் என்றும் பொருள்படும். இராமபிரான் நடைக்குக் காளையும், ஆண் சிங்கமும் உவமைகள்.

24. இந்திரன் இராமனைக் காணுதல்

கண்தாம் அவை ஆயிரமும் கதுவக்
கண்தாமரை போல் கருஞாயிறு எனக்
கண்டான் இமையோர் இறை; காசினியின்
கண்தான் அரும் நான்மறையின் கனியை. (2711)

(கதுவ - பொருந்துமாறு / ஊன்றும் படி; காசினி - பூமி)

தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரன், இவ்வுலகத்தின் கண், நான்கு வேதங்களின் எல்லாப் பயனையும் உடைய பழுத்த பழம் போன்றவனும், கண்கள் தாமரை போலச் சிவப்பாகவும், கரிய மேனி ஞாயிறு போல ஒளி வீசிக் கொண்டும் திகழும் இராமபிரானை, தனது ஆயிரம் கண்களாலும் நன்கு ஊன்றி உற்று நோக்கினான்.

''கருஞாயிறு'' என்பது இராமனது உடல் நிறத்திற்கும், அவன் உடல் பொலிவுக்கும் உவமை. ''நான் மறையின் கனி'' என்பது, நான்கு வேதங்களின் முதிர்ந்த பயனாய் உள்ள பொருள் எனப் பொருள்படும். ''வேதத்தை, வேதத்தின் சுவைப் பயனை'' என்பது பெரிய திருமொழி.

25. இந்திரன், இராமனைத் தொழுதல்

காணா மனம் நொந்து, கவன்றனனால்;
ஆண் நாதனை, அந்தணர் நாயகனை,
நாள்நாளும் வணங்கிய நல்முடியால்
தூணாகிய தோள்கொடு அவன் தொழுவான். (2712)

(காணா - கண்டு; கவலுதல் - வருந்துதல்; நாதன் - நாயகன் / தலைவன்; நாள் நாளும் - நாள்தோறும்; தோள் - கைகள்; ஆண் நாதன் - புருஷோத்தமன்)

இராமபிரானின் இந்த எளிவந்த தோற்றத்தைக் கண்டு மனம் நொந்து வருந்தினான் இந்திரன். புருஷோத்தமனும், அந்தணர் முனிவர்களுக்குத் தலைவனுமான திருமாலை நாள்தோறும் வணங்குகின்ற தன் தலைகளாலும், தனது தூண் போன்ற வலிமை படைத்த கைகளாலும், இராமபிரானது திருவடிகளைத் தொழுதான்.

''காணா மனம் நொந்து கவன்றனன்'' என்பது, தேவர்களின் பொருட்டு வானின்று இழிந்து, வந்து, மானிடப் பிறவி எய்தி அல்லலுறும் இந்நிலை கண்டு வருந்துதலைக் குறிக்கும். முடியால், தோள்கொடு என்பதனால், மற்ற உறுப்புக்களும் நிலத்தில் படிய சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான் என்பது புலப்படுகிறது. வலிய, நீண்ட, திரண்ட தோள்களுக்குத் தூண் உவமை.

26. துவசம்ஆர் தொல் அமருள் துன்னாரைச் செற்றும்,
சுருதிப் பெருங்கடலின் சொல்பொருள் கற்பித்தும்,
திவசம்ஆம் நல் அறத்தின் செந்நெறியின் உய்த்தும்,
திருஅளித்தும், வீடு அளித்தும், சிங்காமைத் தங்கள்
கவசமாய், ஆருயிராய் கண்ணாய், மெய்த்தவமாய்க்
கடையிலா ஞானமாய்க் காப்பானைக் காணா
அவசமாய், சிந்தையழிந்து அயலே நின்றான்
அறியாதான் போல, அறிந்த எலாம் சொல்வான். (2713)

(துவசம் - கொடி; அமர் - போர்; துன்னார் - பகைவர்; செற்று - தொலைத்து; சுருதி - மறைகள்; திவசம் - நாள்தோறும் / நித்யகர்மம் / தினம்; சிங்காமை - அழியாமை / குறையாத / சுருங்குதல்; கடை - ஈறு / முடிவு; அவசம் - தன் வயம் இழத்தல்; கண் - உலகியல் கல்வியறிவு; ஞானம் - தத்துவ அறிவு; காணா - கண்டு / தரிசித்து)

கொடிகள் நிறைந்த பழமையான தேவ அசுரர் போர்களில் பகைவர் களை அழித்தும், வேதங்களென்னும் பெரிய கடலின் சொற்களையும், பொருள்களையும் கற்பித்தும், தினம் அனுசரிக்கக் கூடிய நல்ல அறச் செயல்களால் செம்மையான வழியில் செலுத்தியும், செல்வங்கள் அளித்தும், வீடு பேறளித்தும், தேவர்களாகிய நாங்கள் எல்லோரும்

அழிந்து போகாமல் கவசம் போல் காப்பாற்றியும், பெறற்கரிய உயிராகவும், உண்மையான யோகமாகவும், கல்வியறிவாகவும், எல்லையில்லாத தத்துவ அறிவாகவும் உள்ளவனும் எப்பொழுதும் தங்களைக்காப்பாற்றும்பரம்பொருளானவனுமானஅவ்விராமபிரானைக் கண்டு தரிசித்து, தன் நிலை மறந்து, மனம் அழிந்து, அவன் அருகில் நின்று அவனுடைய சிறப்புக்கள் ஒன்றையும் அறியாதவன் போல, தான் அறிந்த பெருமைகளை மட்டும் சொல்லித் துதிக்கலானான் இந்திரன்.

முதலடியில் கூறப்பட்டிருக்கின்ற வரலாறு. மது, கைடபர் என்ற இரு அரக்கர்கள் நான்முகனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்று கடலுக்குள் புகுந்து கொள்ள, அவர்களைத் தொலைத்து, வேதங்களை மீட்டுக் கொண்டு வந்து, அயக்கிரீவனாகப் பிரமனுக்கு அவற்றை உபதேதித்த புராணக் குறிப்பு. ''நால் வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமாய் அருளிய வெம்பரமன்'' என்பது பெரிய திருமொழி. திவசம் என்பது நாள் / தினம் என்று நின்று நாள் தோறும் அனுஷ்டிக்கும் நித்யகரு மங்களைக் குறித்தது. ''கண்ணுடையோர் என்போர் கற்றோர்'' எனவே இங்கு கண் என்ற சொல்லுக்கு உலகியல் கல்வியறிவு என்று பொருள் கொள்ளப்பட்டது. பின்னால் வருகின்ற ''கடையிலா ஞானம்'' என்பதற்குத் தத்துவ மெய்யறிவு என்று பொருள் கொள்ளப்பட்டது. வேதம் அனந்தமானது. அதற்கு எல்லை இல்லை எனவே அது பெருங்கடலுக்கு உருவகிக்கப்பட்டது என்க. கவசம் என்பது பகைவரின் ஆயுதங்கள் பட்டு ஊறு உண்டாகாமல் காத்துக் கொள்வதற்காக அணியும் ஒரு மெய்உறை. பிரளய காலத்தில் எந்தப் பொருளுக்கும் உயிருக்கும் ஊறுநேரா வண்ணம் தன் வயிற்றுள் அடக்கிக் காப்பாற்றும் மெய்யுறை அது. எனவே கவசம் எனப்பட்டது.

27. இந்திரன் துதி [5 பாடல்கள்]

''தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற
சுடரே! தொடக்கு அறுத்தோர் சுற்றமே! பற்றி
நீந்த அரிய நெடுங் கருணைக்கெல்லாம்
நிலையமே! வேதநெறி முறையின் நேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே! பகையால்
அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற, அந்நாள்
ஈந்தவரம் உதவ எய்தினையே! எந்தாய்!
இருநிலத்தவோ நின்இணை அடித்தாமரை தாம்?'' (2714)

(தோய்தல் - கலந்திருத்தல்; சுடர் - ஒளி; தொடக்கு - பற்று; சுற்றம் - உறவு; நிலையம் - இருப்பிடம் / உறைவிடம்; நேடி - தேடி; அலைப்புறுதல் - நலியப்படுதல் / துன்புறுத்தப்பட்டு; இரு - கரிய / அஞ்ஞானம் மிக்க)

''உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் கலந்தும், கலவாதது போல் இருக்கின்ற ஒளி பொருந்தியவனே! அக, புறப் பற்றுக்களை விட்

டொழித்த ஞானியர்களுக்கு உறவானவனே! எந்தப் புணையையும் பற்றிக் கொண்டு கூட நீந்திக் கடப்பதற்கு அரியதான பெரிய கருணைச் செயல்களுக்கெல்லாம் இருப்பிடமானவனே! வேதநூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி சிறிதும் வழுவாது, தேடி அலைந்து ஆராய்ந்து அறிந்த உணர்வுகளால் மட்டுமே உணரப்படக்கூடியவனே! முற்காலத்தில் எங்கள் பகைவர்களான அரக்கர்களால் நாங்கள் துன்புறுத்தப்பட்ட போது நாங்கள் எல்லோரும் ஒன்று கூடி வந்து தங்கள் திருவடிகளை ஏற்றித் துதிக்க, நீ அன்று எங்களுக்குத் தந்த உறுதிமொழியைச் செயலாக்க இப்பூமியில் அவதரித்து வந்தாயே! எங்களுக்குத் தாயும் தந்தையும் ஆனவனே! உன்னுடைய இரண்டு தாமரை மலர் போன்ற திருவடிகளும் இந்தக் கரிய அஞ்ஞானம் நிறைந்த நிலவுலகத்தில் பொருந்தத் தக்கனவோ?''

''தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற சுடர்'' என்பது, இறைவன் உலகத்துள் உள்ள எல்லாப் பொருள்களிலும் உயிரினங்களிலும் கலந்திருந்தாலும், அவற்றிற்குரிய குற்ற நற்றங்களைத் தான் பெறா திருத்தலைக் குறிக்கும். சுடர் என்பது சூரிய சந்திரர்களுக்கும் சுடரளிக்கும் ஆதிச்சுடர் என்பதாம். ''இரு நிலத்தவோ நின் இணையடித் தாமரை தாம்'' என்பது, தேவர்களின் கால்கள் நிலத்தில் தோயாது என்பதைக் குறிக்கும். இந்தத் தேவர்கள் தான் இறைவனிடம் சென்று முறையிட்டனர். அவர்களுக்கு உதவுவதற்காகவே இறைவன் இந்நிலவுலகில் மானிடனாகத் தோன்றினான். எனவே அவன் திருவடிகள் நிலத்தில் படிதலாயிற்று. தேவர்களின் கால்கள் நிலத்தில் தோயாதிருக்க, அவர்களுக்கு உதவ வந்த இறைவனின் திருவடிகள் நிலத்தில் தோய்ந்து துன்புறுதல் கண்டு வருந்தி இவ்வாறு கூறினன் என்க.

28. ''மேவாதவர் இல்லை; மேவினவரும் இல்லை;
வெளியோடு இருள் இல்லை; மேல்கீழும் இல்லை;
மூவாமை இல்லை; மூத்தமையும் இல்லை;
முதல், இடையோடு, ஈறுஇல்லை; முன்னோடுபின்இல்லை;
தேவா! இங்கு இவ்வோ நின்தொன்று நிலை என்றால்,
சிலை ஏந்தி வந்து, எம்மைச் சேவடிகள் நோவக்
காவாது ஒழியின், பழி பெரிதோ? அன்றேல்,
கருங்கடலில்கண் வளராய்! கைம்மாறும் உண்டோ?'' (2715)

(மேவாதவர் - பகைவர்; மேவினவர் - நண்பர்; வெளி - ஒளி; மூவாமை - இளமை; மூத்தமை - முதுமை; ஈறு - முடிவு; தொன்று - பழைய / முந்திய; கைம்மாறு - எதிர் உதவி / பிரதி உபகாரம் / மாற்றுப்பயன்; இவ்வோ - இத்தன்மையனவோ; கருமை - பெருமை; கண்வளர்தல் - யோக நித்திரை / அறிதுயில்)

''தேவர்களுக்கு எல்லாம் தலைவனான தேவனே! பெருமை பொருந்திய கரிய பாற்கடலில் அறிதுயில் கொள்ளுபவனே! நீ

எல்லோரிடத்தும் நடுவு நிலைமை கொண்டு ஒழுகுதலால் உனக்கு இவ்வுலகில் நண்பர்கள் என்று எவரும் இல்லை; அதே போலப் பகைவர்கள் என்றும் ஒருவரும் இல்லை; உனக்கு இரவென்றும் பகல் என்றும் காலவேறுபாடுகள் இல்லை; நீ எங்கும் வியாபித்திருப்பதால் உனக்கு மேற்புறம் என்றும் கீழ்ப்புறம் என்றும் திசைகளில் வேறுபாடில்லை; நீ என்றும் ஒரே நிலை கொண்டிருத்தலால் உனக்கு இளமை என்றும் முதுமை என்றும் பருவ வேறுபாடுகள் இல்லை; உனக்கு ஆதி, மத்யம், அந்தம் என்ற எல்லை வேறுபாடுகள் இல்லை; உனக்குக் காலத்தில் முற்பட்டோரும் இல்லை; பிற்பட்டோரும் இல்லை; இது தான் உன்னுடைய பண்டைய நிலை; அவதாரத்திற்கு முந்திய நிலை என்றால், இப்போது நீ தேவர்களாகிய எங்களைக் காக்கும் பொருட்டு, தாமரைக் கைகள் நோகும் படி வில்லை ஏந்திக் கொண்டு, திருவடிகள் நோகும்படி பரற்கற்களில் நடந்து வந்து எங்களைக் காப்பாற்றாது போனால் அதனால் உனக்கு ஏதேனும் பழி வந்து சேர்ந்து விடுமோ? அல்லது இச்செயலுக்குக் கைம்மாறாக பிரதி உபகாரம் ஏதேனும் தான் உனக்குக் கிடைக்கப் போகிறதோ?''.

இறைவனுக்குப் பகைவர்களும் இல்லை; நண்பர்களும் இல்லை, என்பது அவன் எல்லோரிடத்தும் விருப்பு வெறுப்பின்றி ஒரே தன்மைத்தாய் அருள் பொழிபவன் என்ற கருத்தை உட்கொண்டது. ''வெளியோடு இருள் இல்லை'' என்பது அவன் சோதி வடிவானவன் என்பதைக் குறித்தது; தொன்று நிலை என்பது, இங்கே அவதாரம் எடுப்பதற்கு முந்திய நிலையான இறை நிலையைக் குறிக்கும். கருங்கடல் என்பது பாற்கடலையே குறிக்கும். இறைவன் கரிய திருமேனி எப்பொழுதும் படிந்திருத்தலால் பாற்கடலைக் கருங்கடல் என்றார் என்க. கருமை பெருமை என்று கொண்டு, மஹா பிரளயக் கடல் என்றும் கூறுவதுண்டு. இங்கே உடன்பாட்டுப் பொருளையும் எதிர்மறைப் பொருளையும் சுட்டிக் கடவுளின் எல்லாம் கடந்த நிலையைக் குறித்து வணங்கினான் என்பதாம்.

மேவாதவர் - மேவினவர்; வெளி - இருள்; மேல் - கீழ்; மூவாமை - மூத்தமை; முதல் - ஈறு; முன் - பின் என்ற முரண்பாட்டுச் சொல்லாட்சியின் நயம் உணர்ந்து இன்புறற்குரியது.

29. ''நாழி நவைதீர் உலகெலாம் ஆக,
நளினத்து நீ தந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவும் நின்று அளந்தால், ஒன்றும்
உலவாப் பெருங்குணத்து எம் உத்தமனே! மேல்நாள்
தாழி தரையாக, தண்தயிர் நீராக,
தடவரையே மத்தாக, தாமரைக்கை நோவ
ஆழி கடைந்து, அமுதம் எங்களுக்கே ஈந்தாய்;
அவுணர்கள்தாம்நின்அடிமை அல்லாமை உண்டோ?'' (2716)

(நளினம் - தாமரை / திரு உந்தித்தாமரை; நவை - குற்றம்; நாழி - அளவுக் கருவி / அளக்கும் படி; உலவா - குறையாத / அளவிடற்கரிய; உத்தமன் - மேலோன்; மேல்நாள் - முற்காலத்தில்; அவுணர் - அசுரர்; நின்று - தொடர்ந்து / விடாமல்; தாழி - தயிர் கடையும் பானை)

''நீ உனது கொப்பூழாகிய உந்தித் தாமரையிலிருந்து தோற்றுவித்த நான்கு முகங்களையுடைய பிரமதேவனே, இவ்வுலகு அனைத்தையும், குற்றமற்ற அளக்கும் கருவியாகக் கொண்டு, மிகப்பல யுகங்கள் அளவும் இடைவிடாமல் தொடர்ந்து அளந்து கொண்டே இருந்தாலும், உன்னுடைய நற்பண்புகளில் ஒன்றைக்கூட முற்றிலும் அளந்து கூறமுடியாத இயல்புடைய மேலோனே! முற்காலத்தில் நீ இந்நிலத்தையே தயிர்கடையும் பானையாகவும், பாற்கடலின் நீரையே குளிர்ந்த தயிராகவும், பெரிய மந்தர மலையையே மத்தாகவும் கொண்டு, உன்னுடைய தாமரை போன்ற மலர்க்கைகள் வருந்தும்படி பாற்கடலைக் கடைந்து, அதனின்றும் தோன்றிய அமிழ்தத்தை எங்களுக்கு மட்டுமே தந்து அருள் செய்தாய்; எங்களுடன் கடைந்தவர்களான அசுரர்கள் தான் உனக்கு அடியவர் ஆகார் என்பதும் உளதோ?''

நாழி என்பது படி என்னும் பொருளானாலும், இங்கு அளக்கும் கருவியாகப் பொதுப் பொருளைத் தந்து நின்றது. முன்பாடலில் இவ்அவதாரத்தினால் அவன் ''சேவடிகள் நோவ'' என்று கூறியவன், இப்பாடலில்; ''தாமரைக் கைகள் நோவ'' என்று குறித்ததை உணர்க. நல்லோர்க்கு அருளுதலும், தீயோரைத் தண்டித்தலுமே அவன் அவதார உண்மை. எனவே நல்லோராகிய தேவர்களுக்கு மட்டுமே அமிழ்தத்தைத் தந்து, தீயோராகிய அசுரர்களுக்கு அதனைத் தாராது தண்டித்தான் என்க. ''வரம்பு இல் ஊழி ஏத்தினும், வரம்பிலாத கீர்த்தியாய்!'' என்பது திருமழிசையாழ்வாரின் திருச்சந்தவிருத்தம்.

30. ''ஒன்றாகி, மூலத்து உருவம் பலவாகி,
உணர்வும் உயிரும் பிறிதாகி, ஊழி
சென்று ஆசுஅறும் காலத்து, அந்நிலையதாகி,
திறத்து உலகம் தானாகி, செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத்தனிக் கொழுந்தே! நங்கள்
நவை தீர்க்கும் நாயகமே! நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி; அயலோரைக் காய்தி;
நிலையில்லாத் தீவினையும் நீ தந்தது அன்றே!'' (2717)

(உருவம் - வடிவம்; உணர்வு - அறிவு; பிறிது - வெவ்வேறு; செஞ்செவே - மிகவும் செம்மையாய்; நாயகம் - தலைவன்; நோக்கி - கருதி; காய்தல் - அழித்தல்; தந்தது - படைத்தது / தோற்றுவித்தது; மூலம் - ஆதி; ஆசறுதல் - முடிதல்)

ஆதிகாலத்தில் ஒரே பொருளாக இருந்து, பின்பு உலகைப் படைக்கும் பொழுது அந்த ஒன்றே பல பல வடிவங்களாகி, அறிவு, உணர்ச்சி, உயிர் முதலியவைகளில் வெவ்வெறாகி, பலயுகங்கள் வாழ்ந்திருந்து, பின் ஊழி முடிவுக் காலத்தில் மீண்டும் அந்த ஆதி முதல் பொருளே ஆகி, மீண்டும் படைப்புக் காலத்தில், பல திறப்பட்ட உலகங்களாகிச் செம்மையாக நிற்கின்ற நல்ல மெய்யறிவின் ஒப்பற்ற கொழுந்தே! எங்கள் குறைகளைத் தீர்த்தருளும் எங்கள் தலைவனே! நல்வினையைச் செய்து புண்ணியங் களையே கருதி நிற்கின்றவர்களை நீ காத்து அருள் புரிகின்றாய்; இதற்கு மாறான தீயவினைகளைச் செய்து பாவங்களைக் கருதுபவர்களைத் தண்டித்து அழிக்கின்றாய்; இந்த நிலையற்ற தீவினைகளும் அதன் பயனாகிய பாவங்களும் கூட உன்னால் தோற்றுவிக்கப் பட்டவை தானே?

படைப்புக்கு முந்தைய நிலை ஆதி மூல நிலை; செஞ்செவே நின்ற நன்றாய ஞானம் என்பது ஐயம் திரிபு அற்ற, குற்ற மற்ற தூய மெய்யறி வினைக் குறிக்கும். நல்ல வினையும் உன்னால் படைக்கப்பட்டதே; தீயவினையும் உன்னால் படைக்கப்பட்டதே; அவ்வாறு இருக்க, நல்வினை செய்பவரைக் காத்தலும், தீயவினை செய்பவரை அழித்தலும் எவ்வாறு நியாயமாகும்? என்று புகழாப் புகழ்ச்சியாக இந்திரன் கூறுகிறான் என்பதாம். ஓர்உரு பல வடிவாதலும், படைத்தல், காத்தல், அழித்தல் என்பதும், தீவினை, நல்வினை என்பதுவும் மாறி மாறி வருவனவாகும் என்பது புலப்படுத்தப்பட்டது. எதுவும் நிலையானதன்று என்பது கருத்து.

31. ''வல்லை வரம்பு இல்லாத மாய வினைதன்னால்
மயங்கினரோடு எய்தி, மதிமயங்கி, மேல்நாள்
அல்லை இறையவன் நீ ஆதி எனப் பேதுற்று,
அலமருவேம்; முன்னை அறப்பயன் உண்டாக,
எல்லை வலயங்கள் நின்உழை என்று, அந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவர் என நின்ற,
தொல்லை முதல் முனிவர் சூள் உற்றபோதே
தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ? எந்தாய்!". (2718)

(வல்லை - வலிமை வாய்ந்த; பேதுற்று - வேறுபட்டு / தடுமாறி; அலமருதல் - தடுமாறுதல் / வருந்துதல்; வலயங்கள் - குவலயம் / உலகங்கள்; உழை - இடம்; தொல்லை - பழமையான; முதல் - முதன்மை வாய்ந்த; எரியோன் - தீ / அக்னி தேவன்; துடைத்தல் - தீர்த்தல்; மாயவினை - அஞ்ஞானச் செயல்; எழுவர் - சப்தரிஷிகள்; சூள் - சபதம்; தொகை - திரண்டு)

''எந்தையே! முற்காலத்தில் வலிமை வாய்ந்த, எல்லையற்ற வஞ்சகச் செயல்களால், ''நீயே பரம்பொருள்'' என்றும், ''நீ பரம்பொருள் இல்லை'' என்றும் மாறுபாடு கொண்டு, மதி மயங்கியவர்களோடு சேர்ந்து, நாங்களும் அவ்வாறு கூறி வருந்தி நின்றோம்; எங்களுடைய முன் பிறவியின் நற்பயன் காரணமாகத் தெளிவு பெற்று, எல்லைகளுடன் கூடிய இவ்வுலகங்க

ளெல்லாம் உனக்கே உரிமை உடையன என்று அப்போது அக்னி தேவனைத் தொட்டு, ஏழு பேர் என்று சொல்லப்படுகின்ற பழைமையான முதன்மையான சப்தரிஷிகள் சபதம் செய்த போதே, திரண்டு நின்ற இவ்ஜயத்தினை நீ தீர்த்து விடவில்லையோ?''

எழுவர் என்பது சப்தரிஷிகளைக் குறிக்கும். அவர்கள் அத்திரி, பிருகு, குப்ஸர், வசிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கீரசர் என்பவராவர். தமது கொள்கையின் உறுதிப்பாட்டை நிறுவுவதற்கு முன்பெல்லாம், நீர், நெருப்பு முதலியவற்றைத் தொட்டுக் கொண்டு சத்தியம் செய்வது வழக்கம் என்பது பெறப்படுகிறது. மாயவினை என்பது ராஜஸ, தாமஸ குணங்களால் உண்டாகும் தீவினை என்க; இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரலாறு பலராலும் பலவாறாகக் குறிக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் ஒன்று. மும்மூர்த்திகளுள் யார் சிறந்தவர் என்று பிருகு முனிவர் ஆராய்ந்து முடிவு செய்தார் என்றும், அதன்படி, சிவனும், பிரமனும் தாமஸ குணமும் ராஜஸ குணமும் உடையவர்கள் என்றும், திருமால் மட்டுமே சத்துவ குணம் உடையவர் என்றும் முடிவு செய்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

32. இந்திரன் விடைபெற்றுச் செல்லுதல்

இன்னன பல நினைந்து ஏத்தினன் இயம்பாத்
''துன்னுதல் இடை உளது'' என நனி துணிவான்;
தன்நிகர் முனிவனை ''தா விடை'' என்னாப்
பொன்ஒளிர் நெடுமுடிப் புரந்தரன் போனான். (2719)

(பொன் - அழகிய; புரந்தரன் - இந்திரன்; துன்னுதல் - பொருந்துதல்; நனி - நன்கு; ஏத்துதல் - துதித்தல்; இயம்பா - இயம்பி)

பொன்னாலாகிய அழகிய, ஒளி விடுகின்ற, நீண்ட கிரீடத்தை உடைய இந்திரன், இவ்வாறு பலவற்றையும் தன் மனத்தில் எண்ணி, இராம பிரானை வாய் வார்த்தைகளால் துதித்து, ''இதற்கு நடுவில் ஏதோ ஒன்று நடக்க இருக்கிறது'' என்று நிச்சயமாக உணர்ந்து கொண்டு, தனக்குத் தானே ஒப்பான சரபங்க முனிவனிடம், ''எனக்கு விடை தந்து அருள்வீராக!'' எனக் கூறி, விடை பெற்றுத் தனது தேவலோகம் சென்றான்.

''துன்னுதல் இடைஉளது என நனி துணிவான்'' என்பது, சரபங்க முனிவன் நான்முகனே அழைப்பித்த போதும் தனக்கு பிரம்மலோகம் தேவையன்று என்றும், தான் பரமபதத்தை அடையக் கருதியே தவம் இயற்றுவதாகவும் கூறியமையும், அதற்கேற்ப, வீட்டுடைத் தலைவனாகிய இராமபிரானே அம்முனிவனை நாடி அவனது ஆசிரமம் வந்து எதிர் நிற்றலாலும் ஏதோ ஒரு நல்ல நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்பதை இந்திரன் நிச்சயமாக உணர்ந்தான் என்பதைக் குறிக்கும். ''தன் நிகர் முனிவன்'' என்பது சரபங்கரின் தவ ஆற்றலைச் சிறப்பிப்பது என்க.

இந்தச் செய்திகள் முதல் நூலாகிய வான்மீகத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் ஒன்று. தன்னை வணங்கித் துதித்த

இந்திரனிடம் இராமபிரான் எதுவும் கூறியதாகவும் தெரியவில்லை. பொதுவாகத் தன்னை ஏற்றிப் போற்றியவர்களுக்கு ஆசி கூறுதல் பெரியோர் இயல்புதானே? ஆனால் இந்திரன் இராமபிரானிடமும் விடைபெற்றுச் சென்றான் என்று அருத்தாபத்தியால் கொள்ளலாம். அருத்தாபத்தி என்பது சொல்லிய ஒன்றைக் கொண்டு, சொல்லாத ஒன்றை அனுமானத்தால் ஊகித்து அறிதல் எனப்படும்.

33. சரபங்கன் இராமபிரானை எதிர்கொண்டு அழைத்தல்

போனவன் அகநிலை புலமையின் உணர்வான்,
வானவர் தலைவனை வரவு எதிர் கொண்டான்;
ஆனவன் அடிதொழ, அருள்வர அழுதான்;
தான்உடை இடவகை தழுவினன் நுழைவான். (2720)

(அகநிலை - மனநிலை; புலமை - தவவன்மையால் ஆகிய அறிவு / ஞானதிருஷ்டி; வானவர் தலைவன் தேவதேவன் / திருமால் / இராமன்; இடவகை - இருப்பிடம் / வீடு)

அவ்வாறு விடைபெற்றுச் சென்ற இந்திரனின் உள்ளத்தின் நிலையைத் தனது தவவன்மையால் - ஞானக்கண்ணால் உணர்ந்த சரபங்கன், தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய திருமாலின் அவதாரமாகிய இராம பிரானை எதிர்சென்று அழைத்தான்; இராமபிரானும் முனிவனின் திருவடி களில் விழுந்து வணங்கினான். முனிவன் அன்பு மேலீட்டால் உவகைக் கண்ணீர் பொழிந்து, தான் தனக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ள ஆசிரமத்திற்குள், இராமனைத் தழுவிக் கொண்டே சென்றான்.

வீடுபேற்றுக்கு உரியவனாகிய இராமபிரானே சரபங்க முனிவனின் குடில் நாடி வந்து இருப்பதால் ஏதோ ஒரு நல்ல நிகழ்ச்சி நடக்க இருக்கிறது என்று உறுதியாக உணர்ந்த இந்திரனின் மனநிலையைத் தனது தவவன்மையால் முனிவன் உணர்ந்தான் என்பதாம். இராமபிரானுக்கும் முனிவருக்கும் நடக்க இருக்கின்ற உரையாடலுக்குத் தான் இடையூறாக இருக்க வேண்டாம் என்று கருதி இந்திரன் அகன்றான் என்ற அவனது உள்ள நிலையை முனிவன் உணர்ந்தான் என்றும் கொள்ளலாம். ''தான் உடை இடவகை'' என்பதற்குத் தான் உடைமையாகப் பெற வகுத்துள்ள இடத்தை - பரமபதத்தை - அடைய விழைந்தவனான சரபங்கன் என்றும் பொருள் கூறுவர். இதனையே இராமன் மீது ஏற்றித் தன் அடியவர் இருப்பிடமே தனது வைகுந்தமாகக் கருதும் இராமபிரான் அத்தவக் குடிலுக்குள் நுழைந்தான் எனவும் பொருள் கூறுவர். அழுகை நான்கு காரணங்களுக்காக வரும். ''இழிவே, இழவே, அசைவே, வறுமை என விளிவில் கொள்கை அழுகை நான்கே'' என்பது தொல்காப்பியம். அசைவு - சோர்வு.

34. இலக்குவன், சீதை முதலியோரும் வருதல்

''ஏழையும் இளவலும் வருக'' என, ''இனிதா
வாழிய!'' அவரொடும் வந்தனன் மகிழ்வால்;
ஊழியின் முதல் முனி உறையுளை அணுக,
ஆழியில் அறிதுயிலவன் என மகிழ்வான். (2721)

(ஏழை - பெண் / சீதை; இளவல் - இலக்குவன்; ஊழியின் முதல் - தொன்மை வாய்ந்த திருமாலின் அவதாரமான இராமபிரான்; ஆழி - கடல் / திருப்பாற்கடல்; அறிதுயில் - யோக நித்திரை)

''பெண்ணாகிய சீதையும், இளவலான இலக்குவனும் இனிதாய் வாழ்க! வருக'' என முனிவன் அழைத்த அளவில், இராமபிரானும் மகிழ்ச்சியோடு அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். தொன்மை வாய்ந்த திருமாலின் அவதாரமான இராமபிரானும், முனிவனின் ஆசிரமத்தை அடையவும், ''இவன் தான் திருப்பாற்கடலில் யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும் திருமால்'' என்று கருதி முனிவன் மிக்க மகிழ்வுற்றான்.

இங்கே ''ஊழியின் முதல்'' என இராமனைச் சொன்னோம். ''ஊழி முதல்வன் உருவம் போல்'' என்பது திருப்பாவை 4. ஊழியின் முதல் முனி என்று இதனையே முனிவர் மேல் ஏற்றிச் சொல்லுதலும் ஒன்றாம். சீதையையும் இலக்குவனையும் ஆசிரமத்தின் புறத்தே நிறுத்தி வந்ததை அறிந்த முனிவன் அவர்களையும் அழைத்து வருமாறு கூறினான் என்க.

35. முனிவன் அறவுரை

அவ்வயின் அழகனும் வைகினன்; அறிஞன்
செவ்விய அறவுரை செவிவயின் நுகரா,
நவ்வியின் விழியவளோடும், நனி இருளைக்
கவ்விய நிசி ஒருகடையுறும் அளவில். (2722)

(அறவுரை - தருமவார்த்தைகள் / தருமஉபதேசங்கள்; நிசி - இரவு; கடை - முடிவு; அறிஞன் - மகா ஞானி; செவ்விய - சிறந்த; கவ்விய - பற்றிக் கொண்ட) (குளகச்செய்யுள்)

அவ்விடத்தில் இராமபிரான், மகா ஞானியாகிய சரபங்க முனிவனின் சிறந்த தரும உபதேசங்களை மான் போன்ற விழிகளையுடைய சீதாதேவியோடும் உடன் இருந்து காதுகளில் உணர்ந்து அனுபவித்துக் கொண்டு, மிகுதியான இருளைப் பற்றிக் கொள்ளும் இரவுப் பொழுது, ஒரு முடிவை அடையும் வரை (விடியும் வரை) - பாடல் தொடர்கிறது.

அன்று இரவு முழுவதும் இராமனும் சீதையும் கண்ணுறக்கம் இல்லாது, முனிவனின் அறவுரைகளைக் கேட்டுக் கொண்டே இருந்தனர் என்பதாம். இலக்குவன் வனம் புகுந்த நாளிலிருந்தே தூங்காதவன் எனவே அவனை விலக்கிக் கூறினான் என்க. அல்லது சீதையை நவ்வியின்

விழியவளொடும் எனக் கூறியதால் இலக்குவனையும் உபலட்சணத்தால் பெறவைத்தான் என்க.

36. சூரியன் தோன்றுதல்

விலகிடும் நிழலினன், வெயில் விரி அயில்வாள்
இலகிடு சுடரவன், இசையன திசைதோய்
அலகிடல் அரிய தன் அவிர்கர நிரையால்,
உலகிடு நிறைஇருள் உறையினை உரிவான். (2723)

(இலகுதல் - விளங்குதல்; சுடரவன் - கதிரவன்; விரி - பரப்புகின்ற; நிழல் - காந்தி / ஒளி; இசை - புகழ்; அலகிடல் - அளவிடுதல்; அவிர் - விளங்கும்; கரம் - கிரணங்கள்; நிரை - வரிசை; உரிவான் - நீக்கினான் / கழற்றினான்; விலகுதல் - பரந்திருத்தல் / வியாபித்திருத்தல்; இடுதல் - போர்த்தல்; இனன் - சூரியன்; உறை - போர்வை)

வீசுகின்ற ஒளியை உடையவனும், வெயிலைப் பரப்பும் கூரியவாள் போன்று விளங்குபவனுமான சூரியன், தனது புகழ் உலகின் எல்லாத் திசைகளிலும் போய்ப் படிந்திருப்பது போலும், இவ்வளவு என்று அளவிட்டுச் சொல்ல முடியாததுமான, ஒளிவிடுகின்ற கிரணங்கள் என்ற தன் கைகளின் வரிசையால், இவ்வுலகத்தைப் போர்த்தியிருக்கின்ற நிறைந்த இருள் என்னும் போர்வையைக் கழற்றி நீக்கினான்.

இவ்வுலகம் இருளாகிய போர்வையைப் போர்த்தியிருக்கிறது என்றும், அதனைச் சூரியன் தன் ஒளிமிக்க கிரணங்களைத் திசையெங்கும் பரப்பி அந்தப் போர்வையை விலக்கி ஒளிவிட்டுப் பிரகாசித்தான் என்பதும் கருத்து. சூரியன் உலகின் இருளாகிய போர்வையைத் தன் கிரணங்கள் என்னும் ஒளி பொருந்திய வாள்களைக் கொண்டு உரித்தெடுப்பானானான் என்பதும் ஒன்று. உலகை மூடிய இருளைப் போக்குவது வெயில்; அதனைப் பரப்புதற்குக் கதிர் முதலியவற்றை, உறை, வாள், கை என உருவகப்படுத்தியுள்ள நயம் உணர்ந்து இன்புறற்குரியது.

37. சரபங்கன் எரிபுக முனைதல்

ஆயிடை, அறிஞனும் அவன் எதிர், அழுவத்
தீயிடை நுழைவது ஓர் தெளிவினை உடையான்,
"நீ விடைதருக" என நிறுவினன்; நெறியால்
காய்எரி வரன்முறை கடிதினில் இடுவான். (2724)

(எதிர் - முன்னிலையில்; தெளிவு - உறுதி; காய் - காயும் / கொழுந்து விட்டு எரியும்; இடுதல் - அமைத்தல் / மூட்டுதல்; ஆயிடை - அப்போது; அழுவம் - மிகுதி; நிறுவுதல் - கேட்டுக் கொள்ளுதல்

அப்பொழுது, ஞானியாகிய முனிவன், இராமபிரான் முன்னிலையில், மிகுந்த தீயினிடத்து மூழ்கிப் பரமபதம் அடைவது என்ற உறுதியை

உடையவனாகி, ''தீ புகுவதற்கு எனக்கு விடை தருக'' என இராமபிரானை வேண்டிக் கேட்டுக் கொண்டு, முறைப்படி, சாத்திர விதிப்படி கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பை விரைந்து மூட்டலானான்.

அழுவத்தீ எனக்கொண்டு, அங்கிருந்த காட்டுத்தீ என்றும் பொருள் கொள்வதுண்டு.

38. இராமபிரான் – முனிவன் உரையாடல்

வரிசிலை உழவனும் மறை உழவனை ''நீ
புரிதொழில் எனை? அது புகலுதி'' எனலும்,
''திருமகள் தலைவ! செய்திருவினைஉற, யான்
எரிபுக நினைகுவென்; அருள்க!'' என, இறைவன். (2725)

(உழவன் - தொழிலில் வல்லவன்; தொழில் - காரியம்; எரிபுகுதல் - அக்னிப் பிரவேசம்; திரு - மோட்சச் செல்வம்) (குளகச்செய்யுள்)

கட்டமைந்த வில் பயிற்சியில் தேர்ச்சியுற்ற இராமபிரானும், வேதங்களில் வல்லவனான சரபங்க முனிவனை நோக்கி ''தாங்கள் இப்பொழுது செய்யும் காரியம் என்ன? அதை எனக்குச் சொல்லுவீராக!'' என்று கேட்டலும், முனிவன் ''திருமகள் கணவனே! எனக்கு நன்மை தர இருக்கின்ற மோட்சச் செல்வத்தை - வீடு பேற்றினை - அடைய எண்ணி, நான் தீப்புக - அக்னிப் பிரவேசம் - செய்ய எண்ணியிருக்கிறேன். அதற்குத் தாங்கள் அருள் புரியவேண்டும'' என்று கூறவும், இறைவனான இராமபிரான் - பாடல் தொடர்கிறது.

இங்கே வரிசிலை உழவன் என்றதும், மறை உழவன் என்றதும், அந்தந்தத் தொழிலில் தேர்ச்சி பெற்ற வல்லமையைக் குறிக்கும். முன்பே கம்பன் ஆழி உழவன் என்றும் வாளேர் உழவன் என்றும் பயன்படுத்தியிருப்பதை நினைவிற் கொள்க. வள்ளுவனும் வில்லேர் உழவர், சொல்லேர் உழவர் என்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பதும் கருதத்தகும். இங்கே செய்திருவினை உற என்று பாடம் கொண்டு நாம் பொருள் கூறினோம். இதனை செய் இருவினைஅற என்று பாடம் கொண்டு, நான் செய்த நல்வினை தீவினை ஆகிய இருவினையும் அவற்றின் பயன்களும் என்னை விட்டு நீங்கும்படி என்றும் பொருள் கூறுவது உண்டு.

39. ''யான்வரும் அமைதியின் இதுசெயல் எவனோ?
மான்வரு தனி உரி மார்பினை!'' எனலும்,
மீன்வரு கொடியவன் விறல் அடுமறவோன்
ஊன்விடும் உவகையின், உரை நனி புரிவான். (2726)

(தனி - ஒப்பற்ற; உரி - தோல்; கொடியவன் - கொடியை உடையவன் / மன்மதன்; விறல் - வெற்றி; அடுதல் - அழித்தல்; மறவோன் - முனிவன் /

வன்மையுடையவன்; ஊன் - உடல்; நனி - மிக்க; அமைதி - சமயம்; வரு - அடையப் பெற்றதான; எவனோ - ஏனோ)

''மானிடம் இருந்து அடையப் பெற்றதான ஒப்பற்ற தோலை மார்பில் அணிந்திருக்கும் முனிவரே! நான் வந்திருக்கும் இந்தச் சமயம் பார்த்து நீங்கள் செய்கின்ற இந்தக் காரியம் எதனாலோ?'' என்று இராமபிரான் முனிவனை நோக்கிக் கேட்டலும், மீன் உருவம் எழுதப் பெற்ற கொடியை உடையவனாகிய மன்மதனின் வெற்றியை அழித்துப் பங்கப் படுத்திய வன்மை மிக்கவனான சரபங்கமுனிவன், தான் உயிர்விடப் போவதை எண்ணி மிக்க மகிழ்ச்சியுற்று, பின்வருமாறு கூறலானான்.

தவம் புரிவோர் மானின் தோலை மார்பில் அணிந்திருப்பது மரபு; ''மீன்வரு கொடியவன் விறல் அடு மறவோன்'' என்றது சரபங்கன் என்ற பெயருக்கு உரிய காரணத்தைப் புலப்படுத்திற்று என்க.

40. ''ஆயிரம் யுகம்உள தவம் அயர்குவென் யான்;
நீ இவண் வருகுதி எனும் நினைவு உடையேன்;
போயின இருவினை; புகலுறு விதியால்
மேயினை; இனிஒரு வினைஇலை, விறலோய்!'' (2727)

(விறல் - வெற்றி; ஆயிரம் யுகம் - எண்ணுப்பொருள்; நிலை - உறுதி; போயின - அழிந்தன; மேயினை - வந்தனை; வினை - செயல்; விதி - அருள்)

''வெற்றியை உடைய வீரனே! நான் இங்கு பலவகைப்பட்ட தவங்களை ஆயிரக்கணக்கான யுகங்களாகச் செய்து கொண்டிருக்கிறேன்; நீ இங்கு எழுந்தருள்வாய் என்ற உறுதியை உடையவனாய் இருந்தேன்; நான் செய்த நல்வினை தீவினை ஆகியவைகள் என்னை விட்டு நீங்கி அழிந்தன; அதன் பயனாய் நீ இங்கு வந்திருக்கிறாய்; எனவே எனக்கு இவ்வுலகத்தில் ஆற்றக் கூடிய செயல்கள் இனி வேறு ஏதும் இல்லை'' என்றான் முனிவன்.

ஆயிரம் யுகம் என்பது அம்முனிவனது வலிய தவ ஆற்றலைச் சிறப்பிக்கக் கூறப்பட்டது என்க. ''இடைவிடாது தவம் செய்ததால் இறைவனையும் திருமகளையும் ஒருசேரக் காணும் வாய்ப்புப் பெற்றேன். எனவே இனிஇவ்வுலகில் செய்ய வேண்டிய காரியங்கள் ஏதும் இல்லை'' என்பதும் ஒன்று.

41. இந்திரன் அருளினன் இறுதிசெய் பகலா
வந்தனன், ''மருவுதி மலர்அயன் உலகம்
தந்தனன்'' என, ''அது சாரலன் உரவோய்!''
அந்தம்இல் உயர்பதம் அடைதலை முயல்வேன். (2728)

(பகல் - நாள் / வாழ்நாள்; அயன் - பிரமன் / நான்முகன்; உலகம் - சத்திய லோகம்; மருவுதி - வருக; சாருதல் - அடைதல்; உரவு - வலிமை; அந்தம்இல் - அழிவற்ற)

''வலிமை உடையவனே! இந்திரன் இங்கு வந்து எனது வாழ்நாளின் இறுதியை உரைத்தான்; ''தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமன் தனது

உலகமாகிய சத்திய லோகத்தை உனக்குத் தந்திருக்கிறான் அங்கு வருவாயாக'' என்று கூறினான்; நான் அழிவில்லாத பரமபதத்தை அடைய முயற்சி மேற்கொண்டிருப்பதால், அவன் கூறிய சத்தியலோகத்தை அடைய உடன்படவில்லை'' என்றான்.

பரமபதம் என்பது வைகுந்தம். அங்கு சென்றோர்க்கு மீண்டும் பிறப்பு இல்லை என்பது நூற்கொள்கை. அவ்வுலகு அழிவற்றது, அதைவிடச் சிறந்த இடம் வேறு இல்லை. எனவே அது ''அந்தம் இல் உயர்பதம்'' எனப்பட்டது. உலகம் அழியும் அளவும் சத்திய லோகத்தில் தங்கி இருக்கும்படி பிரமன் கூறியதாக இந்திரன் வந்து கூறினான் அதற்கு நான் உடன்பட வில்லை'' என்றலும் ஒன்று.

42. சரபங்கன் தீயிடைப் புகுதல்

''ஆதலின் இதுபெற அருள்'' என உரையாக்
காதலி அவளொடு கதழ்எரி முழுகிப்
போதலை மருவினன்; ஒருநெறி புகலா
வேதமும், அறிவரும் மிகு பொருள் உணர்வோன். (2729)

(அறிவரும் - அறிதற்கரிய; பொருள் - பரம்பொருள்; காதலி - மனையாள்; கதழ் - மிக்க; மருவுதல் - எய்துதல்; மிகுபொருள் - பரத்துவம்)

ஒருவராலும் இயற்றப்படாததும், எழுதப்படாததுமான வேதங் களையும், எவராலும் அறிவதற்கரிய சிறந்த பரம்பொருளையும் தன் தவவலிமையாலும் மெய்யறிவினாலும் உணர்ந்த முனிவனாகிய சரபங்கன், ''எனவே அத்தகைய பரமபதத்தை நான் அடைய எனக்கு அருளுக'' என்று இராமபிரானிடம் கூறித் தனது மனைவியோடு, கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்ற தீயுள் முழுகிப் பரமபதத்தை எய்த முற்பட்டான்.

வேதம் என்பது எழுதாக்கிளவி; இங்கு புகலாக் கிளவி என்றும் வேதத்தைக் கூறினார் என்க. வேதங்கள் பரம்பொருளை அறியும் நெறிகளைப் பலவாறு கூறுகின்றன. இதுதான் ஒரே வழி என்று அறுதியிட்டுக் கூறவில்லை எனவே ''ஒருநெறி புகலா வேதம்'' என்றார் என்னலும் ஒன்று. சரபங்கர் பிரமலோகத்திற்குப் போனதாகவே வான்மீகம் கூறுகிறது என்பது இங்கு கருதத்தக்கது.

43. தேவரும், முனிவரும், உறுவது தெரிவோர்
மாவரும், நறுவிரை மலர்அயன் முதலோர்
ஏவரும், அறிவினில் இருவினை ஒருவிப்
போவது கருதும் அவ்வருநெறி புக்கான். (2730)

(உறுவது - பின்னே நிகழ இருப்பது; ஏவரும் - எல்லோரும்; அறிவு - தத்துவ உணர்வு; ஒருவி - போக்கி / நீக்கி; மாவரும் - பெருமைமிக்க)

தேவர்களும், முனிவர்களும், பின்னால் நிகழ இருப்பதை நன்கு தெளிந்து உணரத்தக்க - முக்காலமும் உணர்ந்த ஞானியர்களும், பெருமை மிக்க நறுமணம் கமழும் செந்தாமரை மலரில் விற்றிருக்கும் பிரமன் முதலாய மற்ற அனைவரும், மெய்யறிவினால் நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் நீக்கி, இறுதியாகச் சென்றடைவதற்கு எண்ணும் அந்த அடைதற்கு அரிய பரமபதத்தைப் போய்ச் சேர்ந்தான்.

நல்வினைப் பயன்களை இராமன் திருவடிகளில் சேர்ப்பித்துச் சரபங்கன் பரமபதம் அடைந்தான் என்றும் கூறுவர்.

44. கவிக்கூற்று

''அண்டமும் அகிலமும் அறிவரும் நெறியால்
உண்டவன் ஒருபெயர் உணர்குநர் உறுபேறு
எண்தவ, நெடிது எனின், இறுதியில் அவனைக்
கண்டவர் உறுபொருள் கருதுவது எளிதோ?'' (2731)

(எண் - எண்ணுதல்; தவ - மிக்க; பொருள் - பதவி; பேறு - பாக்கியம்)

''எல்லா அண்டங்களையும், உலகங்களையும், உலகில் உள்ள எல்லா சர, அசரப் பொருள்களையும் எவராலும் அறிதற்கு இயலாத வண்ணம், தன் வயிற்றுள் அடக்கிக் கொண்டவனான திருமாலின் ஆயிரம் நாமங்களில் ஒரே ஒரு நாமமாகிய ''இராமன்'' என்ற ஒரு பெயரை, மனத்தில் நன்கு உணர்ந்து உச்சரித்தவர்கள் அடைகின்ற மிகப்பெரும் பாக்கியமே எண்ணுதற்கு அரிய பெரியது என்று சொன்னால், தன் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் அவனை நேருக்குநேர் கண்டவர்கள் அடைகின்ற மிகப்பெரும் பேற்றினை நினைப்பது கூட அவ்வளவு எளிதான செயலோ?

அண்டமும் அகிலமும் என்பது உலகில் உள்ள இயங்குதிணைப் பொருள்கள், நிலைத்திணைப் பொருள்கள் அனைத்தையும் குறிக்கும். திருமாலுக்கு இருக்கும் ஆயிரம் பெயர்களில் இராமன் என்ற ஒரு பெயரை ஒரே ஒரு முறை வாயினால் சொன்னால் கூட அந்த ஆயிரம் பெயர்களையும் கூறிய பலன் கிடைக்கும் என்பது நூல் கொள்கை. அப்படியென்றால் இப்பொழுது அவனை நேரில் கண்ட சரபங்கன் அடையப் போகும் பெரும்பேறு - பரமபதம் - பற்றிச் சொல்லவும் கூடுமோ? என்பது கவிஞனின் கூற்று. ஆயுள் முடிவில் இறைவனையே எண்ணித் தன் மனத்தில் வைத்திருத்தல் ''அந்திம ஸ்மிருதி'' எனப்படும். மிகக் கொடியவனான ''அசாமிளன்'' என்பவன் தன் உயிர்போகும் நிலையில் ஒரே ஒரு முறை இறைவன் பெயரை உச்சரித்ததனால் அவன் வீடுபேறடைந்தான் என்பது ஒரு புராணக்குறிப்பு.

சரபங்கன் பிறப்பு நீங்கு படலம் நிறைவுற்றது

3. அகத்தியப் படலம் [59 பாடல்கள்]

அகம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலை என்பதும் பொருள். விந்திய மலையை அடக்கியவன் என்பதால் அகத்தியன் என்பது அம் முனிவனுக்குக் காரணப்பெயர். சரபங்க முனிவன் தீப்புகுந்து வீடு பேறடைந்ததும், இராமன் முதலிய மூவரும் அகத்தியன் இருக்கும் தவக்குடில் வந்து அங்கு அவனிடமிருந்து படைக்கலன்கள் பெற்றுத் தண்டகாரண்யத்திற்குச் செல்லும் நிகழ்ச்சிகள் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 59 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் இப்படலம், ''தண்டகாரண்யப் படலம்'' எனவும் ''அகத்தியப் படலம்'' எனவும் இரண்டாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

இப்படலத்துள், இராமன் முதலியோர் தண்டகவனம் வந்திருப்பது அறிந்து அங்குள்ள வாலகில்லரும், முனிவரும், மோனரும் மிக்க மகிழ்ச்சி எய்தி அவர்களை எதிர்கொண்டு வரவேற்றலும், முனிவர்கள் அரக்கர்களால் தாங்கள் படும் துயரங்களைக் கூறி முறையிடுதலும், இராமபிரான் அவர்களுக்கு அபயம் அளித்தலும், அவர்கள் மூவரும் அந்தத் தண்டக வனத்திலேயே பத்தாண்டுகள் தங்கியிருத்தலும், பின்னர் அகத்தியனைக் காணச் செல்லும் மூவரையும் சுதீக்கணன் என்ற முனிவன் வரவேற்று உபசரித்தலும், அவன் அருள் பெற்று அகத்தியனைக் காணச் செல்லுதலும், இராமன் வருகையை அறிந்து அகத்தியன் முதலிய முனிவர்கள் மகிழ்ந்து வரவேற்றலும், இருவரும் உரையாடுதலும், இராமபிரானுக்கு அகத்தியன் படைக்கலன்கள் வழங்குதலும், அருகிலுள்ள பஞ்சவடி என்னும் இடத்தின் சிறப்பை முனிவன் கூறுதலும், மூவரும் பஞ்சவடி நோக்கிச் செல்லுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. மூவரும் சரபங்கன் ஆசிரமத்திலிருந்து செல்லுதல்

அனையவன் இறுதியின் அமைவு நோக்கினர்,
இனியவர், இன்னலின் இரங்கும் நெஞ்சினர்,
குனிவரு திண் சிலைக் குமரர், கொம்பொடும்
புனிதனது உறையுள் நின்று அரிதில் போயினார். (2732)

(குனிவரு - வளைதல் பொருந்திய; இறுதி - முடிவு; அமைவு - தன்மை / நிலைமை; புனிதன் - தூயவன்; உறையுள் - தவக்குடில் / இருப்பிடம் / ஆசிரமம்; அரிதில் - மெல்ல; இரங்குதல் - வருந்துதல்)

அத்தகைய சரபங்க முனிவரது முடிவுக் காலத்தின் தன்மையைக் கண்டு, இனிய இயல்புடையவரும், இத்துன்பத்தால் வருந்துகின்ற மனத்தை உடையவரும், வளைந்த, வலிய வில்லினையுடையவருமான அரச குமாரர்களான இராம, இலக்குவரும், பூங்கொம்பு போன்ற சீதா தேவியோடு, தூய்மையான சரபங்க முனிவனின் தவக்குடிலில் இருந்து, பிரிய மனமில்லாமல் பிரிந்து மெதுவாகச் சென்றனர்.

இறுதியின் அமைவு என்பது சரபங்கர் தீப்புகுந்த தன்மையைக் குறிக்கும். மூவரும் மனக் கலக்கமுற்று வருந்தி நின்றனர் என்பதாம். இங்கே வான்மீகி, மூவரும் வியப்புற்று நின்றனர் என்கிறார். அரிதில் போயினார் என்பது கால்கள்தான் முன் சென்றனவே யன்றி மனம் பின் செல்ல மெல்ல மெல்லப் பிரிய மனமில்லாமல் நீங்கினர் என்பதைக் குறிக்கும்.

2. மூவரும் சென்ற வழியின் தன்மை

மலைகளும், மரங்களும், மணிக்கற் பாறையும்,
அலைபுனல் நதிகளும், அருவிச் சாரலும்,
இலைசெறி பழுவமும், இனிய சூழலும்,
நிலைமிகு தடங்களும், இனிது நீங்கினார். (2733)

(மணி - அழகிய / நீலமலை; சாரல் - மலைச்சாரல்; செறி - அடர்ந்த; பழுவம் - காடு / சோலை; சூழல் - இடங்கள்; தடம் - குளம்; நிலை - நிற்றற்குரிய நிலையுடையது / ஆழ்ந்த)

மலைகளையும், மரங்களையும், அழகிய நீலமணி போன்ற உறுதி வாய்ந்த கருங்கற்பாறைகளையும், அலை வீசுகின்ற நீர்ப் பெருக்கை யுடைய ஆறுகளையும், அருவி பாய்ந்து வருகின்ற மலைச்சாரல்களையும், இலைகள் அடர்ந்த சோலை போன்ற காடுகளையும், மற்றும் இனிமை தருகின்ற இடங்களையும், நீர்மிகுந்த ஆழ்ந்த குளங்களையும், மூவரும் மகிழ்ச்சியுடன் கடந்து சென்றனர்.

இனிது நீங்கினர் என்பது வழி செல்லும் வருத்தமின்றிச் சுகமாகச் சென்றனர் என்பதைக் குறிக்கும். அது போல இனிய சூழல் என்பது வெயில் போன்ற வருத்தங்கள் இல்லாது குளிர்ச்சியான, கண்ணுக்கு இனிமை தருகின்ற இடங்கள் என்பதைக் குறிக்கும் என்க.

3. தண்டகவனத்து முனிவர்கள் இராமபிரானைக் காணுதல்

பண்டைய அயன்தரு வாலகில்லரும்,
முண்டரும், மோனரும், முதலினோர்கள், அத்
தண்டகவனத் துறை தவத்துளோர் எலாம்,
கண்டனர் இராமனைக் களிக்கும் சிந்தையார். (2734)

(பண்டைய - மிகப் பழமையான; அயன் - பிரமன்; தரு - பெற்றெடுத்த; முண்டர் - தலையை மழித்துள்ளவர்கள்; மோனர் - மௌன விரதம் பூண்டவர்கள்; வாலகில்யர் - உரோமத்தில் தோன்றியவர்)

உலகத்தில் எல்லோருக்கும் யாவற்றிற்கும் முதன் முதலாகத் தோன்றிய பழைமையான பிரமதேவன் பெற்றெடுத்த மானசபுத்திரர்களாகிய வாலகில்லரும், தலையை மழித்துக் கொண்டுள்ளவர்களான முண்டரும், பேசா விரதம் அனுஷ்டிக்கும் மோனர்களும் ஆகிய அத்தண்டக வனத்தில் தவம் செய்து கொண்டிருப்பவர்கள் எல்லோரும், இராமபிரான் தண்டகவனம் வந்து அடைந்ததைக் கண்ணுற்று, மிக்க மகிழ்ச்சி கொண்டவராயினர்.

பாலகில்லர் என்பவர் வாலகில்யர் எனப்படுவர். இவர்கள் பிரமனது உரோமத்தினின்று தோன்றிய அவனது மானச புத்திரர்கள். இவர்கள் அறுபதினாயிரர் என்றும், கட்டை விரல் அளவே உயரமுடையவர் என்றும், சூரியனை எப்போதும் வலம் வந்து கொண்டிருப்பவர் என்றும் பெருந் தபோதனர்கள் என்றும் புராணங்கள் கூறும். இவர்களுடைய வரலாறு, மகா பாரதத்தில் ஆதிபருவத்தில் இன்னும் நன்றாக விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

4. தண்டகவனத்து முனிவர்களின் நிலை [5 பாடல்கள்]

கனைவரு கடுஞ்சினத்து அரக்கர் காய, ஓர்
வினை பிறிது இன்மையின், வெதும்புகின்றனர்;
அனல்வரு கானகத்து, அமுது அளாவிய
புனல்வர, உயிர்வரும் உலவை போல்கின்றார். (2735)

(கனை - மிகுதி; காய - வருத்த; வினை - தக்க செயல் / உபாயம்; அளாவிய - கலந்த; புனல் - வெள்ளம்; உலவை - பட்டமரம் / உலர்ந்த மரம்; உயிர் வருதல் - தளிர்த்தல் / துளிர்த்தல்; வெதும்புதல் - வாடுதல்)

மிகுதியாக வருகின்ற, கடுமையான கோபத்தையுடைய அரக்கர்கள் தங்களைவருத்த, அவர்களைஎதிர்த்துச்செய்யக்கூடியதக்கஉபாயம்வேறு ஒன்றும் இல்லாமையால், அங்குள்ள முனிவர்கள் மிக்க வருந்தி வாட்டமுற்றிருக்கின்றனர். அவர்களுக்கு நெருப்புப் பற்றி எரிகின்ற காட்டில், தேவாமிர்தத்தோடு கலந்த ஒரு வெள்ளம் வந்தாற் போன்றிருந்தது இராமனுடைய வரவு. பட்டுப்போய் இருந்த மரங்களெல்லாம் இந்த வெள்ளம் வந்ததால் தளிர்த்துத் துளிர்த்து உயிர் பெற்றது போல மிக்க மகிழ்ச்சியுற்றனர்.

அனல் வரும் கானகம் - கனைவரு கடுஞ்சினத்து அரக்கர்; அமுது அளாவிய புனல் - இராமபிரான்; உயிர்வரும் உலவை - தண்டகவனத்து முனிவர்கள். அரக்கர்களின் கோபக்கனலால் வாடியிருக்கின்ற முனிவர்களுக்குக் காட்டுத்தீயால் வாடி உலர்ந்து பட்டுப்போன மரங்கள் உவமை;

அரக்கரின் சினத்தால் துன்புற்றிருந்த முனிவர்கள், இராமன் வரவால் இன்புற்றனர் என்பதாம். அரக்கர்கள் நெருப்பு; முனிவர்கள் உலவை மரங்கள்; இராமபிரான்வரவு நீர்ப் பெருக்கின்வரவு; இது அடுக்கு உவமை.

5. ஆய்வரும் பெருவலி அரக்கர் நாமமே
வாய்வெரீஇ அலமரும் மறுக்கம் நீங்கினார்;
தீவரு வனத்திடை இட்டுத் தீர்ந்தது ஓர்
தாய்வர, நோக்கிய கன்றின் தன்மையார். (2736)

(தீர்ந்தது - விட்டு நீங்கியது; ஆய்வரும் - மேலும் மேலும் பெருகுகின்ற; நாமம் - பெயர்; வாய்வெருவுதல் - பிதற்றுதல்; அலமருதல் - திகைத்து வருந்துதல்; மறுக்கம் - கலக்கம் / தத்தளிப்பு)

மேன்மேலும் பெருகி வருகின்ற பெரிய வலிமையுடைய அரக்கர்களின் பெயர்களையே கனவில் கூடப் பிதற்றிக் கொண்டு வருத்தமுற்றிருக்கும் முனிவர்கள், இப்போது அந்தக் கலக்கம் நீங்கியவர்களானார்கள். எப்படி? தீப்பற்றி எரிகின்ற ஒரு காட்டிடையே, ஒரு தாய்ப்பசு, தன் கன்றை விட்டு விட்டு வழி தவறிப் போய், பின்னர் வழி கண்டு படித்துத் தன் இளங்கன்றைத் தேடிவர, அதை எதிர்நோக்கியிருந்த இளங்கன்றைப் போன்ற நிலையை உடையவர்களானார்கள்.

நனவிலும் கனவிலும் இறைவன் நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டிய முனிவர்கள், கனவில் கூட அரக்கர்கள் பெயரையே வாய் பிதற்றிக் கொண்டிருந்தார்கள் என்றது, அவர்களின் அச்ச மிகுதியைக் குறிக்க என்க. தீயாக அரக்கர்களையும், தாய்ப்பசுவாக இராமபிரானையும், இளங்கன்றாக முனிவர்களையும் உவமித்தார். முன் பாட்டில் இராமனது வருகையால் முனிவர்கள் மகிழ்ந்தனர்; இந்தப் பாட்டில் அவன் வருகையால் அவர்கள் கலக்கம் நீங்கினர் என ஒருபடி மேற்சென்று கூறிய நயம் காண்க.

6. கரக்க அரும் கடுந்தொழில் அரக்கர் காய்தலின்,
பொரற்கு இடம்இன்மையின், புழுங்கிச் சோருநர்,
அரக்கர் என் கடலிடை ஆழ்கின்றார், ஒரு
மரக்கலம் பெற்று என மறுக்கம் நீங்கினார். (2737)

(கரக்க - மறைத்துக்கொள்ள; காய்தல் - வருத்துதல்; பொரற்கு - போர் செய்வதற்கு; மரக்கலம் - தோணி; மறுக்கம் - மனக்கலக்கம்; ஆழ்தல் - அமிழ்தல்)

எவராலும் மறைக்க முடியாத கொடுமையான தொழிலையுடையவர்களான அரக்கர்கள் வருத்துவதால், அவரை எதிர்த்துப் போர் புரிவதற்கும் அவர்களை வெல்லுவதற்கும் தம் தவநிலை இடந்தராததால், மனம் நொந்து, உடல் சோர்வுற்று, அந்த அரக்கர்கள் என்னும் கடலில் முழுகிப் போயுள்ள முனிவர்கள், அக்கடலை நீந்திக் கடப்பதற்கு ஏதுவாக ஒரு

மரக்கலம் கிடைத்தாற்போல, இராமன் வரவால், தன் மனக்கலக்கம் நீங்கப் பெற்றனர்.

அரக்கர்கள் யாவர்க்கும், எவற்றிற்கும் அஞ்சாதவர்கள். எனவே அவர்களது கொலைத் தொழில் ''கரக்க அரும் கடுந்தொழில்'' எனப் பட்டது. முனிவர்களின் தவநிலை அரக்கர்களுடன் போர் செய்து வெல்ல இடந்தராது எனவே ''பொரற்கு இடம் இன்மையின்'' என்றார். புழுங்குதல் என்பது உள்ளம் நொந்து போதலையும், சோர்தல் என்பது உடல் தளர்வுறு தலையும் குறிக்கும். இராமன் வரவு, கடலில் தத்தளிக்கின்ற முனிவர் களுக்கு ஒரு மரக்கலம் கிடைத்தது போன்றிருந்தது என்றும் அதனால் மனக்கலக்கம் நீங்கினர் என்றும் கூறினார் என்க.

7. தெரிஞ்சு உற நோக்கினர்; செய்த செய்தவம்
அருஞ்சிறப்பு உதவ, நல்அறிவு கைதர,
விரிஞ்சு உறப் பற்றிய பிறவி வெம்துயர்ப்
பெருஞ்சிறை வீடு பெற்றுஅனைய பெற்றியார். (2738)

(கைதரல் - கைகொடுத்து உதவுதல் / உற்றுழி உதவுதல்; விரிஞ்சு - விரிந்து / விரிவாக; வீடு - விடுதலை / முக்தி; பெற்றி - தன்மை; தெரிஞ்சு - தெரிந்து / உணர்ந்து; நல்லறிவு - மெஞ்ஞானம்)

இராமபிரான் திருமாலின் அவதாரம்தான் என்பதை நன்கு உணர்ந்து முனிவர்கள் அவனை உற்று நோக்கினர்; தாம் செய்த செயற்கரிய தவத்தின் பெருஞ்சிறப்பினாலும், தாம் பெற்ற மெஞ்ஞானம் தக்க சமயத்தில் உதவியதாலும்,. விரிந்து வந்து தம்மைப் பற்றிக் கொண்டுள்ள பிறவி யென்னும் கொடிய துயரப் பெருஞ்சிறையினின்றும் விடுதலை பெற்று வீட்டுலகம் என்னும் பேற்றினைப் பெற்றவர்கள் போன்று இன்புற்றனர்.

8. வேண்டின வேண்டினர்க்கு அளிக்கும் மெய்த்தவம்
பூண்டுளர் ஆயினும், பொறையின் ஆற்றலால்,
மூண்டுஎழு வெகுளியை முதலின் நீக்கினார்;
ஆண்டுஉறை அரக்கரால் அலைப்புண்டார் அரோ! (2739)

(வேண்டின - விரும்பின; பூணுதல் - மேற்கொள்ளுதல்; மூளுதல் - பெருகி எழுதல்; முதல் - வேர்; ஆண்டு - அங்கு; பொறை - பொறுமை; அலைப்புறுதல் - வருத்தமடைதல்)

விரும்பினவற்றை, அவ்வாறு விரும்பியவர்களுக்கு, அவர்கள் விரும்பினபடியே அளிப்பது உண்மையான நற்றவம் ஆகும். அத்தகைய நற்றவத்தை இங்கு வாழும் முனிவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றாலும், பொறுமை என்னும் வலிமையினால், மிக்குப் பெருகி வரும் கோபம் / சினம் என்னும் குணத்தை வேரோடு களைந்து விட்டிருந்தனர். எனவே, அங்கு வாழ்கின்ற அரக்கர்களை எதிர்த்துப் போர் செய்தோ, கடுமொழி தந்தோ அவர்களை வெல்ல இயலாதவர்களாகி, அவர்கள் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

முனிவர்கள் இராக்கதர்களை ஒரு நொடியில் அழித்து விடும் வல்லமை பெற்றவர்கள், என்றாலும் அவர்கள் கோபம் என்னும் குணத்தை வேரோடு அழித்தவர்கள் ஆதலால் அவ்வாறு செய்யாது பொறுமையோடிருந்து அரக்கர்களின் தொல்லைகளையெல்லாம் தாங்கிக் கொண்டிருந்தனர் என்பதாம். ''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்'' என்பது குறள் 265. தவம் செய்வதற்கே, முதலில் சினம் நீக்க வேண்டும், பொறுமை எய்த வேண்டும் என்பது பெறப்படுகிறது. ''தன்னைத் தான் காக்கின் சினங்காக்க, காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்'' என்பது குறள் 305. பொறை என்பது காரணம் பற்றியோ, மடமை பற்றியோ, ஒருவன் தனக்கு மிகை செய்த போது, தான் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலாகும்.

9. இராமன் முனிவரைத் தொழுதலும், அவர்கள் வாழ்த்துதலும்

எழுந்தனர், எய்தினர், இருண்ட மேகத்தின்
கொழுந்து என நின்ற அக்குரிசில் வீரனைப்
பொழிந்து எழு காதலின் பொருந்தினார்; அவன்
தொழும்தொறும், தொழும் தொறும், ஆசி சொல்லுவார்.(2740)

(குரிசில் - ஆண்மையிற் சிறந்தவன் / அரச குமரன்; பொருந்துதல் - அண்டுதல்; ஆசி - வாழ்த்து)

சேய்மையில் இராமபிரான் வருவதைக் கண்ட முனிவர்கள் காலம் தாழ்த்தாது தம் இருக்கையை விட்டு எழுந்து விரைவில் சென்று, கரிய மேகத்தின் கொழுந்து போல் அங்கே நின்று கொண்டிருந்த பெருமைக் குரிய அரசகுமாரனாகிய இராமபிரான் என்னும் கோதண்டம் ஏந்திய வீரனை, தம்முள் மிக்குப் பொழிந்து வழிகின்ற பேரன்பினால் அடைந் தார்கள். முனிவர்களைக் கண்ட இராமபிரானும் அவர்களைத் தனித்தனி யாகவும், எல்லோரையும் பலமுறையும் வணங்கினான்; அவன் அவ்வாறு வணங்கும் பொழுதெல்லாம், முனிவர்களும் அவனை மீண்டும் மீண்டும் வாழ்த்தினார்கள்.

''எழுந்தனர் எய்தினர்'' என்ற சொல்லாட்சி எடுத்தது கண்டார் இற்றது கேட்டார் என்றது போல விரைவு குறித்தது. அவர்கள் எழுந்தது தெரியும். அவர்கள் எப்படிப் போனார்கள் என்று தெரியாது. ஆனால் இராமனை அடைந்து விட்டார்கள் என்பதாம். இராமபிரானைக் கரிய மேகத்தின் கொழுந்திற்கு உவமித்திருப்பது, மேகம் மழை பெய்து உயிரினங்களைக் காப்பது போல், இராமபிரானும் தண்ணருளால் இவ்வுலகைக் காக்கின்றான் என்ற கருத்துப்படக் கூறியது என்க. ''கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதி'' என்று முன்பும் இராமபிரானைக் கூறியதை உணர்க. இராமபிரான் திருமாலின் அவதாரம்தான் என்றாலும், தான் எடுத்த மானிடக் கோலத்திற்கேற்ப முனிவர்களை வணங்கினான் என்க.

10. இனியதோர் சாலை கொண்டு ஏகி, ''இவ்வயின்
நனிஉறை'' என்று, அவற்கு அமைய நல்கி, தாம்
தனியிடம் சார்ந்தனர்; தங்கி, மாதவர்
அனைவரும் எய்தினர், அல்லல் சொல்லுவான். (2741)

(நனி - நலம்; அமைய - பொருத்தமான; சொல்லுவான் - சொல்லும் பொருட்டு; சாலை - பன்னசாலை; அல்லல் - துன்பம்)

அவ்வாறு ஆசீர்வதித்த பின், இராமன் முதலிய மூவரும் தங்குதற்கு இனிமையானஒருபர்ணசாலைக்குஅழைத்துக்கொண்டுசென்று ''இங்கே நலமுடன் நீண்டகாலம் தங்கியிருப்பீர்களாக!'' என்று கூறி, அவர்களுக்கு வேண்டிய, அவர்கள் தகுதிக் கேற்ற உபசாரங்களையெல்லாம் செய்து முடித்துவிட்டுத் தத்தம் குடில்களுக்குச் சென்று சேர்ந்தனர். அங்கு சில நாட்கள் தங்கியிருந்து, பின்னர் தாம் அரக்கர்களால் படும் துன்பங்களை எல்லாம் எடுத்துச் சொல்லும் பொருட்டு எல்லா முனிவர்களும் ஒன்று சேர்ந்து இராமனை வந்து அடைந்தனர்.

சில சுவடிகளில் அடுத்த நாளே வந்து சொன்னார்கள் என்று காணப்படுகிறது.

11. முனிவர்கள் இராமபிரானிடம் தங்கள் அல்லலைச் சொல்லுதல் [6 பாடல்கள்]

எய்திய முனிவரை இறைஞ்சி, ஏத்து, உவந்து,
ஐயனும் இருந்தனன்; ''அருள் என்?'' என்றலும்,
''வையகம் காவலன் மைந்த! வந்தது ஓர்
வெய்ய வெங்கொடுந்தொழில் விளைவு கேள்''எனா. (2742)

(ஏத்து - வாழ்த்து; அருள் - கட்டளை; வந்தது - நேரிட்டுள்ளது; விளைவு - பெருக்கம் / மிகுதி) - (குளகப்பாடல்)

அவ்வாறு தன்னை வந்தடைந்த முனிவர்களை, இராமன் வணங்கித் துதித்து, அவர்கள் வாழ்த்தினால் மகிழ்ந்து சிறிது நேரம் இருந்தனன். பின்னர் ''இப்பொழுது நான் செய்ய வேண்டுவது என்ன என்பதைக் கூறியருள்வீராக!'' என்றான். உடனே முனிவர்கள், ''இவ்வுலகங்கள் அனைத்தையும் காத்து வந்த தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனே! எங்களுக்கு நேர்ந்த ஒரு கொடிய, கடுமையான துயரத்தின் மிகுதியைக் கேட்பாயாக!'' என்று தொடங்கிப் பின்வருமாறு கூறலானார்கள்.

இது முதல் 6 பாடல்கள் ஒரு தொடர். ''அருள் என்?'' என்பது உயர்ந் தோர்பால் உரையாடும் முறையைக் குறித்து ''எனக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள்?''என்றுபொருள்தந்துநிற்கும். ''வையகம்காவலன்மைந்த'' என்று முனிவர்கள் இராமபிரானை அழைத்ததனால், தந்தை தசரதச்சக்கரவர்த்தி இவ்வையகத்தைக் காத்தது போல், நீயும் எங்களைக்

காக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது என்பதைக் குறிப்பால் உணர்த்தினார்கள் என்க. வெய்ய, வெம், கொடும் என்பன அவர்கள் பட்ட அல்லலின் மிகுதியைக் குறிக்கக் கவிஞன் தந்த அடைமொழிகள் / ஒரு பொருள் குறித்த பல சொற்கள். மனத்தாலும், மொழியாலும், உடலாலும் கொடுமைக்கு உட்பட்டனர் என்று கொள்ளுதலும் பொருந்தும்.

12. ''இரக்கம் என்ற ஒருபொருள் இலாத நெஞ்சினர்;
அரக்கர் என்று உளர் சிலர்; அறத்தின் நீங்கினார்;
நெருக்கவும், யாம் படர்நெறி அலாநெறி
துரக்கவும், அருந்தவத் துறையுள் நீங்கினேம்'' (2743)

(பொருள் - குணம்; நெருக்குதல்- வருத்துதல்; படர்தல் - செல்லுதல்; துரத்தல் - செலுத்துதல்; இரக்கம் - அன்பு) - (குளகச் செய்யுள்)

''அன்பு, இரக்கம் என்று சொல்லப்படுகின்ற ஒரு ஒப்பற்ற குணமே இல்லாத மனத்தினையுடையவர்களாய், அரக்கர்கள் என்று ஒரு பிரிவினர் சிலர் இருக்கின்றனர். அவர்கள் தரும நெறியினின்றும் நீங்கியவர்கள், அவர்கள் நீங்கியதோடு மட்டுமல்லாமல் எங்களையும் துன்புறுத்து கின்றனர். நாங்கள் செல்லுகின்ற அறவழியல்லாது, அதனின்றும் மாறுபட்ட, நாங்கள் செல்லத் தகாத தீய நெறிகளிலும் எங்களைச் செலுத்துகின்றனர். எனவே நாங்கள் நல்தவம் செய்யும் அருமையான நெறியிலிருந்தும் விலகியிருக்கிறோம்'' - பாடல் முடியவில்லை தொடர்கிறது.

''யாம் படர்நெறி அலாநெறி'' என்பது, நீராடுதல், செப, தபங்கள் செய்தல் முதலானவற்றைச் செய்யாமல் இருக்குமாறு வற்புறுத்தித் துன் புறுத்துதல் என்பதாம். அரக்கர்கள் அறத்தின் நின்றும் நீங்கவும், நாங்கள் தவத்தின் நின்றும் நீங்கினோம் என்று கூறியது ஒரு நயம்.

13. ''வல்லியம் பலதிரி வனத்து மான் என,
எல்லியும் பகலும் நொந்து இரங்கி ஆற்றலெம்;
சொல்லிய அறநெறித் துறையும் நீங்கினெம்;
வில்இயல் மொய்ம்பினாய்! வீடு காண்குமோ?'' (2744)

(வல்லியம் - புலி; எல்லி - இரவு; இயல் - பொருந்திய; மொய்ம்பு - தோள் / வலிமை; வீடு - விடுதலை / வைகுந்தம் / பரமபதம் / மோட்சம்; காண்குதல் - அடைதல் / பெறுதல்; இரங்குதல் - பரிதவித்தல்)

''பல புலிகள் அலைந்து திரிகின்ற காட்டில் வாழும் புள்ளி மான்களைப் போல, அரக்கர்களின் கொடுமையால் இரவும் பகலும் உளம் நொந்து பரிதவித்துப் போகிறோம். அவர்களின் கொடுமையைப் பொறுக்க மாட்டாதவர்களானோம். அறநூல்கள் கூறுகின்ற தரும நெறியினின்றும் விலகியிருக்கிறோம். வில் தொழிலில் வலிமை உடையவனே! வில்லை ஏந்திய தோள்களை உடையவனே! இத்தகைய அரக்கர்களிடமிருந்து

நாங்கள் விடுபட்டு விடுதலை அடைவோமோ? அறநெறியில் செல்லாத முனிவர்களாகிய எங்களுக்கு வீடுபேறு - பரமபதம் கிட்டுமோ?''

ஒரு புலி இருந்தாலே மான்கள் அஞ்சும். பல புலிகள் திரிந்து கொண்டிருக்கின்ற காடு என்றதால், அவர்களின் தொல்லை மிகுதி குறிக்கப்பட்டது. புலி - அரக்கர்கள்; மான் - முனிவர்கள்; ''வில் இயல் மொய்ம்பினாய்'' என்று இராமபிரானை அழைத்ததனால் இத்துயரங்களி லிருந்து எங்களைக் காப்பாற்றும் வலிமை உன்னிடம் இருக்கிறது எங்களைக் காப்பாற்று'' என்று குறிப்பிடுகின்றனர் என்க. வீடு என்ற சொல் விடுதலை, வீடுபேறு என்று இரு பொருளும் தந்து நிற்பதை அறிக. முன் பாடலில் தவத்துறை நீங்கினோம் என்று கூறிய முனிவர்கள், இப்பாடலில் அறநெறித் துறையின் நீங்கினோம் என்று கூறுவதும் நோக்கத்தக்கது.

14. ''மாதவத்து ஒழுகலேம்; மறைகள் யாவையும்
ஓதலேம்; ஓதுவார்க்கு உதவல் ஆற்றலேம்;
மூதுஎரி வளர்க்கிலேம்; முறையின் நீங்கினேம்;
ஆதலின், அந்தணரேயும் ஆகிலேம்!'' (2745)

(மூது - முதிய / பழமையான)

''மாட்சிமைப்பட்ட தவ ஒழுக்கத்தை மேற்கொள்ளவில்லை; வேதங்கள் எல்லாவற்றையும் ஓதவில்லை; ஓதுகின்ற தகுதியுடைய மாணவர்களுக்கு ஓதுவிக்க உதவி கூடச் செய்யவில்லை; பழமையான வேள்வித்தீயை வளர்க்கவும் இல்லை; எங்களுக்கென வகுக்கப்பட்டுள்ள நெறி முறைகளினின்றும் வழுவினோம்; எனவே நாங்கள் வேதியர் - அந்தணர்களாகக் கூட ஆகமாட்டோம்''.

மறைகள் யாவையும் என்பது வேதங்கள், வேதாந்தங்கள், சாத்திரங்கள் முதலியவற்றையும் உட்படுத்தியதாகும். மூதுஎரி என்பது இளமைக்காலம் தொட்டே வளர்த்து வரும் வேள்வித்தீ எனப்பொருள்படும். அந்தணர்க் குரிய ஆறு ஒழுக்கங்களில் நான்கைக் கூறி, எஞ்சிய இரண்டையும் அருந்தாபத்தியால் - அனுமான அளவையால் - பெறவைத்தார் என்க. அந்தணர்க்குரிய ஆறு பிறப்பு ஒழுக்கங்கள் - ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவாம். அந்தணர்களை ''அறுதொழிலோர்'' என்பர்; ''ஆயபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல் மறப்பர்'' என்பது குறள் *(560)*. முனிவர்களைத் தவத்தோர் என்று முன்பும், அறவோர் என்று முன்பாடலிலும், அந்தணர் என்று இப்பாடலிலும் கூறி அவர்களுக்குரிய பெயர்களையும் அறிய வைத்தார் என்க.

15. ''இந்திரன் எனின், அவன் அரக்கர் ஏயின
சிந்தையில், சென்னியில் கொள்ளும் செய்கையான்;
எந்தை! மற்று யாருளர் இடுக்கண் நீக்குவார்?
வந்தனை, யாம் செய்த தவத்தின் மாட்சியால்''. (2746)

(இடுக்கண் - துன்பம்; ஏயின - கட்டளையிட்ட; மாட்சி - சிறப்பு / பெருமை)

''எங்களுக்குத் தலைவனான தேவேந்திரனிடம் சென்று முறையிடலாம் என்றால், அவனோ, அவ்வரக்கர்கள் இட்ட கட்டளைகளைத் தன் மனத்திலும் தலையிலும் தாங்கி சிரம் மேற்கொண்டு செய்கின்ற ஏவலாளன்போல் இருக்கின்றான்; எங்கள் தந்தை போன்றவனே! எங்களது துன்பத்தைத் துடைக்க வல்லவர் உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? நாங்கள் முன்பு செய்த தவத்தின் பயனாலும் சிறப்பாலும் இப்போது நீ இங்கு எழுந்தருளியிருக்கின்றாய்!''.

தேவர்களுக்குத் தலைவனான இந்திரனின் கடமை முனிவர்களின் துயரத்தைத் தீர்ப்பது. ஆனால் இந்திரனோ அரக்கர்களுக்கு ஆட்பட்டு, அவர்கள் காலால் இட்ட கட்டளைகளைத் தலையால் செய்து முடிக்கின்ற அடிமை போல் ஆகிவிட்டான். எனவே எங்களின் துயரத்தைத் துடைக்க உன்னைத் தவிர வேறுயாரும் இல்லை; நாங்கள் முற்பிறவியின் செய்த மாதவத்தின் பயனால்தான் இப்பொழுது எங்கள் துயர் துடைக்க நீ எங்கள் முன் எழுந்தருளியிருக்கிறாய் என்றனர் என்பதாம். விண்ணவர் வேந்தன் கைவிட்ட நிலையில், மண்ணக வேந்தனின் மகனாகிய நீ கைவிடாது காக்க வந்தது எங்கள் தவப்பயன் என்பது கருத்து.

16. ''உருளுடை நேமியால் உலகை ஓம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ! போக்கிலா
இருளுடை வைகலேம்; இரவி தோன்றினாய்;
அருள் உடை வீர! நின் அபயம் யாம்'' என்றார். (2747)

(நேமி - ஆணைச் சக்கரம்; ஓம்பிய - காப்பாற்றிய; வைகலேம் - இருக்கின்றோம்; இரவி - ஞாயிறு / சூரியன்; அபயம் - பயமற்றது / அடைக்கலம்; போக்கிலா இருள் - விடியாத பேரிருள்)

''உலகெங்கும் சுற்றித் திரிகின்ற ஆணைச் சக்கரத்தைக் கொண்டு பரிபாலித்து வந்தவனும், எல்லாச் செல்வங்களையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்த தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனுமாகிய இராமனே! நீக்குதற்கரிய இருட்டினில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்விருளிலிருந்து எங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் சூரியன் போல நீ எங்கள் முன் தோன்றியிருக்கின்றாய்; அருளும் வீரமும் உடையவனே! நாங்கள் எல்லோரும் உன் அடைக்கலம்'' என்று கூறினர்.

அரசன் ஆணையைச் சக்கரமாகக் கூறுவது கவிமரபு. ஆணைச் சக்கரம் அவன் ஆட்சிக்கு உட்பட்ட இடம் எங்கும் செல்லும். எனவே, ''உருளுடை நேமியால் உலகை ஓம்பியவன்'' எனத் தசரதன் சிறப்பிக்கப்பட்டான்; தந்தை உலகைக் காப்பாற்றியது போலவே தயைனும் உலகை - எங்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை உனக்கு இருக்கிறது என்பது குறிப்பு; ''போக்கிலா இருள்'' என்பது ஒரு நல்ல சொல்லாட்சி. விடியாத பேரிருள்

என்று பொருள் தந்து, அவர்கள் துன்பத்தின் கடுமையைச் சிறப்பிக்கும் சொல்; ''அருள்உடைவீர'' என்பதும் மற்றொரு நல்ல சொல்லாட்சி. அருள் என்பது அறவோரைக்காக்கும் நற்பண்பு; வீரம் என்பது மறவோரை அழிக்கும் மற்றொரு பண்பு. துஷ்ட நிக்ரகம், சிஷ்ட பரிபாலனம் என்ற அவதார உண்மையை உட்கொண்டு கையாளப்பட்ட ஒரு அரிய சொற்றொடர் என்பதை உணர்க. அபயம் என்பது பயம் என்பதன் எதிர்ச்சொல். பயம் அற்றது என்பது பொருள். முனிவர்கள் இவ்வாறு முறையிட்டதும், இராமபிரான் அவர்களுக்கு அபயம் அளித்ததும், சரபங்கனின் ஆசிரமத்திலேயே நிகழ்ந்ததாக வான்மீகம் கூறும்.

17. இராமபிரான் அபயம் அளித்தல் [9 பாடல்கள்]

''புகல் புகுந்திலரேல், புறத்து அண்டத்தின்
அகல்வரேனும், என் அம்பொடு வீழ்வரால்;
தகவுஇல் துன்பம் தவிருதிர் நீர்'', எனப்
பகலவன் குல மைந்தன் பணிக்கின்றான். (2748)

(பகலவன் - சூரியன்; புகல் - அடைக்கலம்; பணித்தல் - சொல்லுதல் / உறுதி கூறுதல்; தவிருதல் - தவிர்தல் / நீங்குதல்; பகலைச் செய்வதால் பகலவன் சூரியனுக்குக் காரணப்பெயர் - தினகரன் என்பதன் தமிழாக்கம்)

சூரிய குலத்தோன்றலாகிய இராமபிரான் முனிவர்களை நோக்கி, ''அவ்வரக்கர்கள் தாங்கள் செய்வது தவறு என்று உணர்ந்து மன்னிப்புக்கேட்டு, இனிமேல் அவ்வாறு செய்ய மாட்டோம் என்று உறுதி கூறி என்னிடம் அடைக்கலம் புகாமற் போனால், அவர்கள் இவ்வுலக எல்லைக்கு அப்பால் உள்ளதான புற அண்டத்திற் சென்று ஒளிவரேனும், என்னுடைய வில்லுக்கு இரையாகி மாண்டு வீழ்வார்கள்; எனவே தங்களுக்குத் தகுதியில்லாத இந்தத் துன்பத்தைத் தவிர்ப்பீர்களாக!'' என்று உறுதி கூறி, மேலும் சொல்லலுற்றான்.

முனிவர்கள் துன்பம் உறுதல் தகாது என்பதைக் குறிக்க ''தகவுஇல் துன்பம்'' என்றார். ஒன்று நோக்குதல் வேண்டும். முனிவர்கள் அரக்கர் களின் கொடுமையைக் கூறிச் சரண் புகுந்து அரக்கர்களை அழிக்க வேண்டும் என்று வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கித்தான் திருமால் இராமனாக அவதாரம் செய்து இந்நிலவுலகில் தோன்றினார். இப்பொழுது அரக்கர்கள் தாம் செய்த தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு, இனிமேல் இவ்வாறு செய்ய மாட்டோம் என்று உறுதி கூறித் தன்னைச் சரணடையாவிட்டால் நாம் அவர்களைக் கொன்று வீழ்த்துவோம் என்றால், அவர்கள் அவ்வாறு சரணடைந்து விட்டால் அவர்களையும் காப்பாற்றுவோம் என்பது தானே பொருள்? எனவே இராம அவதாரத்தின் நோக்கம் நல்லோரைக் காப்பதும், அல்லவரைக் காய்வதும் என்றாலும், தீயோர் நல்லோராக மாறினால் இறைவனிடம் சரணடைந் தால் அவர்களை என்றும் காப்பாற்றும் குணமுடையவன் என்பது தெள்ளத்

தெளிவாக இப்பாடலால் அறியப்படுகிறது. சரணாகதித் தத்துவத்தின் சாரம் இப்பாடல்.

18. "வேந்தன் வீயவும், ஆய்துயர் மேவவும்,
ஏந்தல் எம்பி வருந்தவும், என்நகர்
மாந்தர் வன்துயர் கூரவும், யான்வனம்
போந்தது, என்னுடைப் புண்ணியத்தால்" என்றான். (2749)

(வீய - இறக்க; ஆய் - தாய்; ஏந்தல் - பெருமை மிக்கவன் / பரதன்; கூர - மிகுதியாக; புண்ணியம் - நல்வினைப் பயன்)

"கோசல நாட்டு அரசன் தசரதச் சக்கரவர்த்தி இறந்து போகவும், என்னுடைய தாய் கோசலை அதனால் துன்பம் கொள்ளவும், பெருமைக்குரிய என் தம்பி பரதன் என் பிரிவால் வருத்தமடையவும், என் அயோத்தி நகர மக்கள் மிக்க கொடுமையான துன்பம் உறவும், நான் வனம் புகுந்த இந்தச் செயல், நான் முன்பிறவியில் செய்த நல்வினைப்பயனாகிய புண்ணியத்தாலேயே ஆகும்" என்றான்.

நான் வனம் புகுந்த போது, இந்த நால்வகையோர்க்கும் அது துன்பத்தைத்தந்தாலும், இப்பொழுது, என்னால் உங்களுக்கு உதவ முடியும் என்று எண்ணுகிற போது இது என்னுடைய முன்வினைப் பயன் என்றே கருதுகிறேன் என்றான் என்பதாம். தந்தையைக் காட்டிலும், தாயைக் காட்டிலும், தம்பியைக் காட்டிலும், தன் நகர் மக்கள் மீது இராமன் கொண்டிருந்த அன்பு மிகப் பெரிது என்பதை "வன் துயர் கூர" என்ற சொற்களால் படம் பிடித்துக் காட்டிய நயம் உணர்ந்து இன்புறற்குரியது. இவர்கள் எல்லாரும் வருந்தவும் நான் வனம் புகுந்ததால் பல முனிவர்களின் துயர்தீர்க்க ஒரு வாய்ப்புக் கிட்டியது பெரும்பேறு என்று இராமபிரான் பெருமை கொண்டான் என்பது கருத்து.

19. "அறம்தவா நெறி அந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலி தொலையேன் எனின்,
இறந்து போகினும் நன்று; இது அல்லது
பிறந்துயான் பெறும் பேறு என்பது யாவதோ?" (2750)

(தவா - கெடாத / நீங்காத; புல்லர் - அற்பர் / புன்மை வாய்ந்தோர்; பேறு - பாக்கியம்)

"தரும நெறியினின்றும் ஒரு போதும் நீங்காத முனிவர்களின் பெருந்தன்மையை மறந்து, அவர்களுக்குத் துன்பம் தந்து கொண்டிருக்கும் இந்த அற்பர்களான அரக்கரது வலிமையை அழிக்கவில்லை என்றால், அவர்களுடன் செய்யப்போகும் போரில், அவர்களாலேயே நான் அழிக்கப்பட்டு இறந்து போவேன் என்றாலும் அதுவும் நன்மை பயப்பதே. அப்படியில்லாவிட்டால், நான் இங்கு மானிடனாக அவதரித்ததால் உண்டாகும் பயன் என்னவோ?"

ஒரு உயிர்க்கும் தீங்கு செய்யாத முனிவர்களுக்குத் தீங்கு செய்வதால் அரக்கர்கள் புல்லர் எனப்பட்டனர். இராம அவதாரத்தின் உண்மை குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் பாடல்களுள் இதுவும் ஒன்று. இராமபிரான் மானிடன் என்றாலும் அரச குமாரன். நல்லோரை வருத்தும் புல்லர்கள், நெல்லுடன் தோன்றி அதற்குத் தீங்கிழைக்கும் புல்லைப் போன்றவர். எனவே புல்லைக் களைதல் உழவன் பணிபோல, புல்லர் களைக்களைதல் வேந்தன் பணி என்பது குறள். ''கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்கூழ்களை கட்டதனோடு நேர்'' குறள் (550). இங்கே இராமன் முனிவர்களுக்காக அரக்கர்களுடன் போரிட்டு மாண்டாலும் அது நன்மை பயப்பதே என்று கூறுவது, போரில் பிறருக்கு உதவி செய்து மடிந்தோர் அடைவது வீர மரணம் என்பது குறித்தது.

20. ''நிவந்த வேதியர் நீவிரும், தீயவர்
கவந்த பந்தக் களிநடம் கண்டிட,
அமைந்த வில்லும், அருங்கணைத் தூணியும்,
சுமந்த தோளும் பொறைத்துயர் தீருமால்''. (2751)

(நிவந்த - உயர்ந்த; வேதியர் - முனிவர்கள்; கவந்தம் - தலையற்ற முண்டங்கள் / குறைஉடல்கள்; தூணி - புட்டில்; பொறை - சுமை; பந்தம் - தொகுதி / கூட்டம்)

''உயர்ந்த நற்குணங்களை உடைய அந்தணர்களாகிய நீங்களும், உங்களுக்குத் தீங்கிழைக்கும் அற்பர்களான அரக்கர்களின் தலையற்ற குறை உடல்களின் தொகுதி, மகிழ்ச்சியுடன் கூத்தாடப் போவதைக் காணப் போகிறீர்கள்; அதனால் என்னுடைய கட்டமைந்த வில்லையும், அரிய அம்பறாப் புட்டிலையும் பயனற்றதாக இதுகாறும் சுமந்து கொண்டிருந்த என் தோள்களும், தமது சுமைப் பாரத்தின் துயர் நீங்கி மகிழ்ச்சியடையும்''.

''அரக்கர்களின் கூட்டம் கொல்லப்படப் போவதால் அவர்களின் தலையற்ற முண்டங்கள் கூத்தாடப் போவதைக் கண்டு நீங்கள் மகிழப் போகிறீர்கள். அத்தகைய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததால் இதுவரையிலும் பகைவரேயில்லாமல் பயனற்று என் தோளில் தொங்கிக் கொண்டிருந்த வில்லும் அம்பும், தமது சுமை நீங்கி மகிழ்ச்சியடையப் போகின்றன'', என்றான் என்பதாம். ஆயிரம் போர் வீரர் மடிந்தால் ஒரு கவந்தம் ஆடும் என்பர். ''ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம், படர்பரி ஒரு கோடி, சேனைக் காவலர் ஆயிரம் பேர் படின், கவந்தம் ஒன்று எழுந்து ஆடும்'' என்று கம்பரே பின்னால் மூலபலவதைப் படலத்துள் கூறப் போகிறார். எனவே இராமன் அரக்கர்களை அடியோடு அழிக்க உறுதி பூண்டுள்ளான் என்பது இதனின்றும் புலப்படுகிறது.

21. ''ஆவுக்கு ஆயினும், அந்தணர்க்கு ஆயினும்,
யாவர்க்கு ஆயினும், எளியவர்க்கு ஆயினும்,
சாவப் பெற்றவரே, தகை வான்உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்''. (2752)

(ஆ - பசு; தகை - தகுதிமிக்க / பெருமை பொருந்திய)

''பசுக்களைக் காப்பதற்காகவும், வேதம் ஓதுகின்ற தகுதி வாய்ந்த அந்தணர்களைக் காப்பதற்காகவும், உலகில் உள்ள பெரியோர்கள் எல்லோரையும் காப்பதற்காகவும், மற்றுமுள்ள எத்தகுதியும் இல்லாத, இழிந்தவரான சாதாரண ஏழை எளியவர்களைக் காப்பதற்காகவும், தம் உயிரைக் கொடுத்தவர்களே - இறந்துபட்டவர்களே, பெருமையும் தகுதியும் வாய்ந்த சுவர்க்க லோகத்தில் வாழுகின்ற தேவர்களும் கூடக் கை தொழுது வணங்குகின்ற தேவர்களுக்கெல்லாம் தேவர்கள் ஆகிறார்கள்''.

பசு எல்லா உயிரினங்களிலும் புனிதமானது; எல்லோர்க்கும் எப்போதும் பயன்தருவது. ''விடு நில மருங்கின் மக்கட்கெல்லாம், பிறந்த நாள் தொட்டும் சிறந்த தன் தீம்பால் அறம் தரு நெஞ்சொடு அருள் சுரந்து ஊட்டும்'' என்பது மணிமேகலை. ஆ, அந்தணர், பெரியோர், எளியோர் இவர்களுக்கு உதவி செய்வதால் ஏற்படுகிற மரணம் தெய்வ மரணம். இவர்கள் வீடு பேறு எய்தும் போது, சுவர்க்கத்திலுள்ள தேவர்களெல்லோரும் கைகூப்பித்தொழுவர்என்பதாம். வீட்டுலகம் புகுந்த தேவர்களை பொன்னுலகத்தோர்கள் வணங்குவர் என்பது மரபு. எளியவர்க்காக உயிர்விட்டால் கூட தேவதேவனாய் மதிக்கப்படுவான் என்பது கருத்து.

22. ''சூர் அறுத்தவனும், சுடர் நேமியும்,
ஊர் அறுத்த ஒருவனும், ஓம்பினும்,
ஆர் அறத்தினொடு அன்றி நின்றார், அவர்
வேர் அறுப்பென்; வெருவன்மின் நீர்!'' என்றான். (2753)

(சூர் - சூரபத்மன்; அறுத்தவன் - கொன்றவன் / முருகன்; நேமி - காலநேமி / சக்கரப்படை; சுடர் - ஒளிமிக்க; ஊர் - திரிபுரம்; ஓம்புதல் - பாது காத்தல்; வெருவுதல் - அஞ்சுதல்; வேரறுத்தல் - அடியோடு தொலைத்தல்)

''சூரபத்மனைத் தன் வேல் கொண்டு அழித்த முருகப்பெருமானும், ஒளிமிக்க சக்கர ஆயுதத்தைக் கொண்டு காலநேமியை அழித்த திருமாலும், தனது சிரிப்பினாலும் தன் சூலத்தாலும் முப்புரங்களையும் எரித்து அழித்த ஒப்பற்றவனான சிவபெருமானும், ஆகிய மூவருமே, அரக்கர்களுக்குத் துணையாக வந்து பாதுகாத்தாலும், யார் அறத்திற்கு மாறுபட்ட நெறியில் நின்று ஒழுகுகிறார்களோ, அவ்வரக்கர்களை அடியோடு தொலைப்பேன், நீங்கள் அஞ்சாதீர்கள்'' என்றான் இராமன்.

முருகக் கடவுளை முதலில் வைத்துக் கூறியது அவர் தேவசேனாபதி என்ற காரணத்தால் என்க. மும்மூர்த்திகளில் பிரமதேவனைத் தவிர்த்தது நோக்குதற்குரியது. காரணம் பிரமதேவன்படைகொண்டு பகைவெல்லும் தகையன் அல்லன் என்பதும், அவன் எப்போதும் வேத நெறியில் தவநியமத்தில் இருப்பவன் ஆதலாலும் என்க. இராமபிரான் திருமாலின் அவதாரம்தான் என்றாலும், தான் பிறந்த மானிடப் பிறப்புக்கு ஏற்பத் தன்னையும் பிறர் போல உளப்படுத்தியே கூறினான் என்க. இம்மூவரும்

அரக்கர்களுக்கு உதவி செய்ய வந்தால் அவர்கள் அறத்திற்கு மாறுபட்டவர் என்று கருதப்படுவர். எனவே அவர்களையும் அழிப்பேன் என்று உறுதி கூறுகிறான் இராமன். ஊர் என்பது பொதுப் பெயர் என்றாலும் இங்கு திரிபுரத்தைக் குறித்தது என்க.

23. முனிவர்கள் மகிழ்ச்சி

உரைத்த வாசகம் கேட்டு, உவந்து ஓங்கிட,
இரைத்த காதலர், ஏகிய இன்னலர்,
திரித்த கோலினர், தேம் மறை பாடினர்;
நிருத்தம் ஆடினர்; நின்று விளம்புவார். (2754)

(வாசகம் - சொல் / உறுதிமொழி; இரைத்தல் - பேரொலி செய்தல்; திரித்தகோல் - முக்கோல் / திரிதண்டம்; திரித்தல் - சுழற்றுதல்; தேம் - இனிய; நிருத்தம் - நடனம்; தே - தெய்வத் தன்மையுள்ள; ஏகிய - நீங்கிய)

இவ்வாறு இராமபிரான் உரைத்த உறுதிமொழிகளைக் கேட்டு முனிவர்கள் மகிழ்ச்சியும் அன்பும் பொங்க, உரத்த குரலில் பேரொலி செய்தனர்; தங்களது துன்பம் நீங்கியது என்று எண்ணித் தங்களது முக்கோலைச் சுழற்றியும், இனிய தெய்வத்தன்மை பொருந்திய வேதங் களைப் பாடியும், அதற்கேற்ப நடனம் ஆடியும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துப் பின்னர் பின்வருமாறு கூறலானார்கள்.

முன்பாடலில் நேமி என்ற சொல் கால நேமியையும், ஆணைச் சக்கரத்தையும் குறித்தது போல. ''திரித்த கோலினர்'' என்ற ஒரே சொற்றொடர்முக்கோலை உடையவர்என்றும், அதைச்சுழற்றித்திரிந்தனர் என்றும் பொருள் தருதல் உணர்க. மகிழ்ச்சியின் வெளிப்பாடு நன்கு புலப்படுத்தப்பட்டது காண்க. ஓங்கிட இரைத்த என்ற சொல்லுக்கு விண் பிளக்க எழுப்பும் இரைச்சல் என்றும் பொருள் கொள்ளலாம்.

24\. ''தோன்றல்! நீ முனியின், புவனத்தொகை
மூன்று போல்வன முப்பதுகோடி வந்து
ஏன்ற போதும், எதிர்அல; என்றலின்
சான்று வேதம் எம் தவப் பெரும் ஞானமே'' (2755)

(தோன்றல் - அவதார புருஷன் / தலைவன்; முனியின் - வெகுண்டால்; புவனம் - உலகம்; மூன்று - விண், மண், பாதலம்; ஏன்ற போதும் - எதிர்த்த போதும்; கோடி - மிகுதி குறிக்கும் ஒரு பேரெண்)

''அவதாரபுருஷனே! நீசினம்கொண்டு எழுந்தால், விண், மண், பாதலம் என்ற இந்த மூன்று உலகங்களைப் போன்று முப்பது கோடி உலகங்கள் வந்து உன்னை எதிர்த்துப் போரிட்டாலும் அவை எல்லாமும் உனக்கு ஒரு எதிர்ப்பு அல்ல; உனக்கு ஈடு அல்ல; இவ்வாறு நாங்கள் கூறுவதற்கு எங்களுடைய வேதமும், தவமும், தத்துவ ஞானமுமே சான்றாகும்'' என்று முனிவர்கள் கூறினர்.

எல்லையற்ற பெருக்கத்தைக் கோடி என்று கூறுவது இலக்கிய வழக்கு. எனவே மூன்று போல்வன முப்பது கோடி என்றார். தோன்றுதல், அவதரித்தல் என்ற பொருளில் நின்றது. கடவுளின் பேராற்றல் வேதத்தாலும், முனிவர்களின் தவத்தாலும், ஞானியர்களின் மெஞ் ஞானத்தாலும் அறியப்படும் என்பது பெறப்பட்டது.

25. ''அன்னது ஆகலின், ஏயின ஆண்டு எலாம்,
இன்னல் காத்து இங்கு இனிது உறைவாய்'' எனச்
சொன்ன மாதவர் பாதம்தொழுது, உயர்
மன்னர் மன்னவன் மைந்தனும் வைகினான். (2756)

(ஏயின - கட்டளையிட்ட; எலாம் - முழுமையும்; காத்தல் - தடுத்தல்)

''உன்னுடைய பெருமை அத்தகையது; எனவே உன் சிற்றன்னை இட்ட கட்டளைப்படி, நீ வனவாசம் செய்வதில் எஞ்சியுள்ள ஆண்டுகள் முழுவதும், எங்களுக்குத் துன்பங்கள் வாராது காத்து, நீயும் இங்கு மகிழ்ச்சியாகத் தங்குவாயாக'' என்று கூறிய பெரும் முனிவர்களின் திருவடிகளைத் தொழுது வணங்கி, சிறந்த தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வன் இராமனும், அங்கேயே தங்கினான்.

ஆண்டு எலாம் என்பது எஞ்சிய பத்து ஆண்டுகளைக் குறித்தது. அவ்வனத்தில் நீர், நிழல், காய், கனி முதலிய, அவர்களுக்குத் தேவையான எல்லாம் கிடைத்தலின், அவர்கள் இன்னல் உறாது இனிமையாய் வாழலாம் என்பது கருத்து.

26. மூவரும் பத்து ஆண்டுகள் தங்கியிருத்தல்

ஐந்தும் ஐந்தும் அமைதியின் ஆண்டு, அவண்
மைந்தர், தீதுஇலர் வைகினர்; மாதவர்
சிந்தை எண்ணி, ''அகத்தியற் சேர்க'' என,
இந்து நல்நுதல் தன்னொடும் ஏகினார். (2757)

(மைந்தர் - வலிமையுடையவர்; இந்து - பிறைச்சந்திரன்; அமைதி - மனநிறைவு; தீது - துன்பம்)

வலிமை உடைய இராமஇலக்குவ சீதை முதலியோர் மிக்க மன நிறைவுடனும், எந்தத் துன்பமும் இல்லாமல் அந்தத் தவக்குடில்களில் பத்து ஆண்டுகள் தங்கியிருந்தனர். இச்சமயத்தில் அப்பெருந்தவசிகள் கலந்து ஆலோசித்து, இராமன் அகத்தியரிடமிருந்து பெற வேண்டிய சில படைக்கலன்கள் இருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, ''தாங்கள் மூவரும் அகத்தியர் வாழும் ஆசிரமத்திற்குச் சென்று சேருவீர்களாக!'' என்று கூற, இராமனும், இலக்குவனோடும், பிறைச்சந்திரன் போன்ற நல்ல அழகிய நெற்றியை உடைய சீதாதேவியோடும் அகத்தியர் ஆசிரமம் நோக்கிச் செல்லலாயினர்.

பத்தாண்டுகள் என்று கூறாது, ஐந்தும் ஐந்தும் என்று கூறியதில் ஒரு கருத்து இருக்கிறது. முதல் நூலாகிய வான்மீகத்தில் இவர்கள் அங்கிருந்த பத்து ஆசிரமங்களிலும் முதன் முறையாக ஒரு வட்டத்தில் 5 ஆண்டுகளையும் பின்பு அதே போல் மற்றும் ஓர் ஐந்து ஆண்டுகள் அதே வரிசைப்படி இரண்டாவது வட்டத்தையும் கழித்தனர் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த மூல நூல் ஆசிரியனின் கருத்தைப் பின்பற்றியே கம்பனும் ஐந்தும் ஐந்தும் என்று பிரித்துப் பாடுவது நோக்கத்தக்கது. மற்றும் ஒன்று. ஒரே பாடலில் பத்து ஆண்டுகளில் நிகழ்ந்தவற்றைக் கூறி முடித்துவிடும் விரைவும் நோக்கத்தக்கது. நான்காண்டு கால வன வாசத்தை ஆயிரக்கணக்கான பாடல்களில் பாடிய கம்பன், பத்தாண்டுக் காலத்தை ஒரே பாடலில் தாண்டிச் செல்லுகின்ற சிறப்பை நோக்குக.

அங்கே அவர்கள் இருக்கிறார்கள் என்பதையறிந்த அரக்கர்கள் அங்கு வந்து துன்பம் ஏதும் தரவில்லை எனவே ''தீது இலர் வைகினர்'' என்றார். அவர்களின் தீங்கு இல்லாமையால், அமைதியாக வாழ்ந்தனர் என்று தோன்ற ''அமைதியின் வைகினர்'' என்றார் என்க. அங்கிருந்த முனிவர்கள் முக்காலும் உணர்ந்தவர்கள்; இராமபிரானின் அவதார உண்மையையும் அறிந்தவர்கள். எனவே அவன் அகத்தியர் பால் சென்று சேர்வதில் அவனுக்குச் சில நன்மைகள் கிடைக்க இருக்கின்றன என்பதை மனத்தில் கருதி அவனை ''அகத்தியர் சேர்க'' என்றனர் என்க.

27. சுதீக்கணன் ஆசிரமம் அடைதல்

விட ரகங்களும், வேய் செறி கானமும்,
படரும் சில்நெறி பைப்பைய நீங்கினார்;
சுடரும் மேனிச் சுதிக்கணன் என்னும் அவ்
இடர்இலான் உறை சோலை சென்று, எய்தினார். (2758)

(விடரகம் - மலை; வேய் - மூங்கில்; செறி - அடர்ந்த; படர்தல் - செல்லுதல்; சில்நெறி - சிறிய வழி; பைப்பைய - மெல்ல மெல்ல; இடர் - துன்பம்; சோலை - தவவனம்)

மலைகளிலும், மூங்கில்கள் அடர்ந்த காடுகளிலும் செல்லும் சிறிய வழிகளை மெல்ல மெல்ல மூவரும் நடந்து கடந்தனர்; அங்கே ஒளி வீசுகின்ற உடலையுடைய சுதீக்கணன் என்னும் பிறவித்துன்ப மற்ற முனிவன் வசிக்கின்ற தவவனத்தைச் சென்று சேர்ந்தனர்.

விடரகம் என்றால் மலை. அதை விடர் அகம் எனப்பிரித்து மலை வெடிப்புக்களான பள்ளங்கள் என்றும் பொருள் கூறுவதுண்டு; அவர்கள் சென்ற வழி சின்ன வழி, மலைகளும், பள்ளங்களும், மூங்கில்களும் நிறைந்திருந்த வழி; உடன் வருபவள் மெல்லியலாளாகிய சீதாதேவி. எனவே மெல்ல மெல்லத் தான் பாதையைக் கடக்க முடிந்தது. முன் பாடலில் பத்து ஆண்டுகள் அமைதியாகத் தீதிலாது வதிந்தனர் என்று ஒரே பாடலில் கூறிய கவிஞன் இங்கே ஒரு வழியைப் பையப் பையக் கடந்தனர்

என்று கூறுவது எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. சுதீக்கணன் என்ற சொல் சுதீக்ஷ்ணன் என்ற வடசொல்லின் தமிழாக்கம். சுதீக்ஷ்ணன் என்பதற்கு ''உக்ரதபஸ் உடையவன்'' என்பது பொருள். உக்கிரமான தவத்தைச் செய்பவன் என்பதால் சுதீக்கணன் என்பது அவனுக்குக் காரணப்பெயர். எனவே அவன் மேனி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தன்மையுடையது என்பதுபோதரும். இவர்அகத்தியரின்சீடர்என்றுஅத்யாத்மஇராமாயணம் கூறும்.

28. அங்கே தங்கியிருத்தல்

அருக்கன் அன்ன முனிவனை அவ்வழிச்
செருக்குஇல் சிந்தையர், சேவடி தாழ்தலும்,
''இருக்க ஈண்டு'', என்று இனியன கூறினான்;
மருக்கொள் சோலையில் மைந்தரும் வைகினார். (2759)

(அருக்கன் - சூரியன்; செருக்கு - மயக்கம் / கர்வம் / ஆணவம் / மதம்; சிந்தை - மனம்; சே - சிவந்த / செம்மையான; மரு - மிக்க நறுமணம்; இனியன - முகமன் / உபசார மொழிகள்)

சூரியனைப் போன்ற பிரமதேஜஸ் உடைய சுதீக்கண முனிவனை அடைந்து, மதமயக்கம் இல்லாத இராம இலக்குவர் அவனுடைய செம்மையான சிவந்த திருவடிகளில் பணிந்து வணங்குதலும், ''இங்கே இருப்பீர்களாக'' என்று கூறி முகமனாகச்சில இனிய உபசாரமொழிகளைக் கூறினான் முனிவன்; அவர்கள் மூவரும் நறுமணம் மிக்க அந்தச் சோலையில் தங்கியிருந்தனர்.

செருக்கு என்பது யான், எனது என்று எண்ணும் மதம் என்பதைக் குறிக்கும். மயர்வறு மதி நலம் உடையவர் என்பது கருத்து. ''யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்'' என்பது குறள் *(346)*

29. வைகும் வைகலின், மாதவன், மைந்தன்பால்,
செய்கை யாவையும் செய்து, ''இவண், செல்வ! நீ
எய்த, யான் செய்தது எத்தவம்?'' என்றனன்;
ஐயனும் அவற்கு அன்பினன் கூறுவான். (2760)

(செய்கை - சைத்திய உபசாரங்கள்; வைகல் - வேளை / சமயம் / பொழுது)

அவ்வாறு அங்கேதங்கியிருந்த பொழுது, முனிவன்சுதீக்கணன், இராம இலக்குவர்களுக்கு ஆற்ற வேண்டிய சைத்திய உபசாரங்களைத் தக்க முறையில் செய்து முடித்து இராமபிரானை நோக்கி, ''அரசச் செல்வமுடையவனே! நீ எனது குடிலுக்கு வந்து இருக்க, யான் எத்தகைய தவத்தைச் செய்திருக்கிறேனோ? தெரியவில்லையே'' என்று இரங்கினான்; இராமபிரானும் சுதீக்கணன்பால் மிக்கஅன்புடையவனாகிக் கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினான்.

''செல்வ'' என்று முனிவன் இராமபிரானை அழைத்தது இம்மை மறுமைச் செல்வங்களை அளிப்பவனே! என்ற பொருளாதலும் நினைக. தான் மிக உயர்ந்த தவம் செய்திருந்தால் அல்லது, இராமன் வரவு நிகழ்ந்திருக்காது என்பது கருத்து.

30. ''சொன்ன நான்முகன் தன்வழித் தோன்றினர்
முன்னையோருள், உயர் தவம் முற்றினார்
உன்னின் யார் உளர்? உன் அருள் எய்திய
என்னின் யார் உளர் இற்பிறந்தார்?'' என்றான். (2761)

(இல் - நற்குடிப் பிறப்பு; முன்னையோர் - நான்கு வருணத்தாரில் முன் வைத்து எண்ணப்படும் அந்தணர் / முதன்மை பெற்ற பண்டைய முனிவர்)

''சான்றோர்களால் புகழ்ந்து சொல்லப்படுகின்ற பிரம தேவனின் வழித் தோன்றல்களான பண்டைய முதன்மையான முனிவர்களுள் உயர்ந்த சிறந்த தவத்தை முற்ற முடியச் செய்து உயர்ந்தவர் உன்னை விட வேறு யார் இருக்கிறார்கள்?'' அது போல நற்குடியில் பிறந்து இல்வாழ்க்கையில் இருப்பவர்களுள், உன்னுடைய சிறப்பான அருளைப் பெற்றவர்கள் என்னைப் போல் யார் இருக்கிறார்கள்? என்றும் இராமன் முனிவனைப் புகழ்ந்து கூறினான்.

31. உவமை நீங்கிய தோன்றல் உரைக்கு எதிர்,
நவமை நீங்கிய நற்றவன் சொல்லுவான்;
''அவம் இலா விருந்தாகி, என்னால் அமை
தவமெலாம் கொள்க தக்கணையா'' என்றான். (2762)

(நவமை - புதுமை; அவம் - பயனில்லாமை / வீண் ; அமை - செய்யப் பெற்ற; தக்கணை - தக்ஷணை / காணிக்கை / பெரியோருக்கு அன்பால் அளிக்கும் கையுறைப் பொருள்; எதிர் - மறுமொழி; தக்கனை - தக்கவன் / தகுதியுள்ளவன்)

தனக்கு ஒப்பாரும் மிக்காரும் உவமையும் இல்லாத தலைவனாகிய இராமபிரான் இவ்வாறு கூறியதற்கு மறுமொழியாக, புதுமை நீங்கிய பழமையான நல்ல தவத்தைச் செய்தவனான சுதீக்கணன் சொல்லுவான் ''வீண்தன்மையற்ற - பயனுள்ளதானஎன்னுடைய நல்லவிருந்தினன்ஆகி, என்னால் செய்யப்பட்ட எல்லாத்தவத்தின் பயன்கள் அனைத்தையும் நீ கொள்ளத்தக்கவன்; எனவே அத்தவத்தின் பயன்களை என்னுடைய தக்கணையாக - காணிக்கையாக ஏற்றுக் கொள்வாயாக?'' என்றான்.

இவ்வாறு தான் செய்த தவத்தின் பயன்களை எல்லாம் இராமனுக்குப் பரசுராமன் அளித்தான் என்பதை ஈண்டு நினைவு கூர்க. இவ்வாறு அளிப்பது பிரபத்தி மார்க்கம் என்றும் சாத்வீகத்தியாகம் என்றும் வழங்கப் பெறும்.

32. மறைவலான் எதிர், வள்ளலும் கூறுவான்,
"இறைவ! நின்னருள் எத்தவத்திற்கு எளிது?
அறைவது ஈண்டு ஒன்று; அகத்தியற் காண்பது ஓர்
குறை கிடந்தது இனி", எனக் கூறினான். (2763)

(எதிர் - மறுமொழி / விடை; கிடந்தது - இருக்கின்றது; குறை - காரியம்; அருள் - அனுக்ரகம்)

வேதங்களில் வல்லவனாகிய சுதீக்கணனுக்கு மறுமொழி கூறுவானாய் வள்ளன்மை உடைய இராமபிரான், "தலைவனே! உன்னுடைய அருளைப் பெறுவதற்கு நான் எத்தகைய தவத்தைச் செய்திருக்க வேண்டும்? உன் அருளைப் பெறுவது அவ்வளவு எளிதான காரியமா? எத்தகைய பெருந்தவத்திற்கும் எளிதன்று. எனினும் நான் இங்கே சொல்லக் கூடியது ஒன்று உண்டு. அகத்திய முனிவனைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்ற ஒரு இன்றியமையாத குறை என் மனத்தில் இருக்கின்றது" என்று கூறினான்.

இங்கே இராமபிரானை வள்ளல் என்று கூறியது கூர்ந்து நோக்குதற்குரியது. முனிவன் தான் செய்த தவத்தின் பயனையெல்லாம் என் காணிக்கையாக ஏற்றுக் கொள்க என்று கூறிய போது இந்த வள்ளல் என்னும் சொல்லைக் கவிஞன் பயன்படுத்தியிருக்கிறான் பாருங்கள். அவன் எதையும் கொடுத்துத் தான் பழக்கமே தவிர யாரிடமிருந்தும் எதனையும் பெற்றுக் கொள்ளாதவன் என்பதைக் குறிக்கவே இங்கே வள்ளல் என்ற சொல்லைப் பயன்படுத்தி, முனிவனுடைய அருள் பெற்றதே போதும், அவனது தவத்தின் பயனைத் தன்னால் பெற இயலாது என்று ஏற்காது மறுத்தமை தோன்றவே இவ்வாறு கூறினான் என்க. சுதீக்கணன் அகத்தியரின் மாணவர். எனவே அவர் இருக்கின்ற இடத்திற்கு இவர் நெறிப்படுத்தக் கூடும் என்பதால் இவரிடம் இதனைக் கூறினான் என்பதாம்.

"கொள்" எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர் "கொள்ளேன்" என்றல் அதனினும் உயர்ந்தன்று என்பது புறநானூறு.

33. "நல்லதே நினைந்தாய்; அது, நானும் முன்
சொல்லுவான் துணிகின்றது; தோன்றல்! நீ,
செல்க ஆண்டு; அவற்சேருதி; சேர்ந்தபின்
இல்லை நின்வயின் எய்தகில்லாதவே". (2764)

(எய்தகில்லாதன - அடைய முடியாதன; துணிகின்றது - நிச்சயித்தது)

சுதீக்கணன் இராமபிரானைப் பார்த்து, "தலைவனே! நீ நல்லன வற்றையே நினைத்தாய், நானும் அதனையே உன்னிடம் கூற முன்னரே நிச்சயித்திருந்தேன்; நீ அங்கு செல்க; சென்று அவரை அடைக; சேர்ந்த பின் உன்னிடம் எல்லாப் பேறுகளும் தாமே வந்து சேரும் தன்மை உடையனவாகும்; உன்னிடம் வாராத நன்மைகளே இருக்காது என்றான்".

இல்லை, எய்தகில்லாதவை என்று இரண்டு எதிர் மறைச் சொல்லைக் கூறி எல்லாம் இயையும் என்ற ஒரு உடன்பாட்டுப் பொருளை உணர்த்தியது காண்க.

34. ''அன்றியும், நின் வரவினை ஆதரித்து,
இன்றுகாறும் நின்று ஏமுறுமால்; அவற்
சென்று சேருதி; சேருதல், செவ்வியோய்!
நன்று தேவர்க்கும், யாவர்க்கும் நன்று'' எனா. (2765)

(ஆதரித்து - விரும்பி; இன்று காறும் - இன்று வரையில்; ஏமுறுதல் - மகிழ்ச்சியடைதல்; செவ்வி - செம்மை நலம்; நின்று - எதிர்பார்த்து இருந்து)

''செம்மை நலம் கொண்ட சிறந்தவனே! அது மட்டுமல்லாமல், உன்னுடைய வருகையை மிக விரும்பி இன்று வரையிலும் எதிர்பார்த்துக் காத்திருப்பார் அகத்தியர்; நீ சென்று சேர்வாயாக! அவ்வாறு சேர்ந்தால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார்; நீ அவ்வாறு சேருதல், தேவர்களுக்கும், மற்றும் உள்ள எல்லோருக்கும் நன்மை பயப்பனவாகும்'' என்று கூறி - பாடல் முடியவில்லை தொடர்கிறது.

முன் பாடலில், இராமன் அகத்தியனைச் சென்று சேர்வதனால் அவனுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும் என்று கூறியவன், இப்பாடலில் அவனுக்கு மட்டுமல்ல, தேவர்களுக்கும், மற்றும் உள்ள எல்லோருக்கும் நன்மை உண்டாகும் என்று கூறுவது நோக்குக.

35. மூவரும் முனிவனிடம் விடைபெற்றுச் செல்லுதல்

வழியும் கூறி, வரம்பு இல் ஆசிகள்
மொழியும் மாதவன் மொய்ம் மலர்த்தாள் தொழா,
பிழியும் தேனின் பிறங்கு அருவித் திரள்
பொழியும் சோலை, விரைவினில் போயினார். (2766)

(வரம்பு இல் - அளவில்லாத; மொய் - நெருங்கிய; பிறங்கு - விளங்குகின்ற)

அகத்தியர் ஆசிரமத்திற்குச் செல்லுகின்ற வழியையும் கூறி, எல்லையற்ற தன் வாழ்த்துக்களையும் தெரிவிக்கும் பெரிய தவசியான சுதீக்கணனின் நெருங்கிய தாமரை போன்ற திருவடிகளைப் பணிந்து தொழுது, தேனடையிலிருந்து பிழிந்து எடுக்கப்படுகின்ற தேனின் சுவையுள்ள நீரைப் பொழிகின்ற அருவிகள் நிறைந்துள்ள சுதீக்கணனது சோலையினின்றும் விரைவாக, மூவரும், அகத்தியன் ஆசிரமம் நோக்கிச் சென்றனர்.

இங்கு குறிப்பிடுகின்ற சோலை அகத்தியன் ஆசிரமத்துச் சோலை என்றும் கூறுவர். ''இங்கிருந்து தென் திசையில் நான்கு யோசனை தூரம் சென்றால் அகத்தியனின் இளைய உடன்பிறப்பான சுதர்சனனின் ஆசிரமம்

வரும் என்றும், அதன் பின் ஒரு யோசனை தூரம் சென்றால் அகத்தியன் ஆசிரமும் வரும்'' என்றும் சுதீக்கணன் கூறி வழியனுப்பி வைத்தான் என்றும், அவ்வாறே மூவரும் சுதர்சன ஆசிரமம் சென்று, அவரையும் வழிபட்டுப் பின் அகத்தியன் ஆசிரமம் சென்று சேர்ந்தனர் என்றும் வான்மீகம் கூறும். இங்கு தான் சீதாதேவி இராமபிரானுக்குச் சில நல்லுரைகளைக் கூறினாள் என்றும், அரக்கர்கள் நமக்குத் தொல்லை தந்தால்தான் அவர்களை வதைக்க வேண்டும் என்றும், இன்றேல் அவர்களை வதைக்கக் கூடாது என்றும் கூறினாள் என்றும் வான்மீகம் கூறும்.

36. அகத்தியர் இராமபிரானை எதிர் கொண்டு வரவேற்றல்

ஆண்தகையர் அவ்வயின் அடைந்தமை அறிந்தான்;
ஈண்டு உவகை வேலை துணை ஏழ்உலகும் எய்த,
மாண்ட வரதன் சரண் வணங்க, எதிர்வந்தான்;
நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான். (2767)

(நேமி - சக்கரப்படை; வேலை - கடல்; துணை - இரண்டு; துணைஏழ் - பதினான்கு; மாண்ட - மாட்சிமையுடைய; வயின் - இடம்; ஈண்டுதல் - நெருங்குதல்; எய்தல் - மூழ்குதல் / அழுந்துதல் / திளைத்தல்; வரதன் - வரத்தைக் கொடுப்பவன் / மேலானவன் / இராமபிரான்)

திருமால் இவ்வுலகைத் தன் மூவடிகளால் அளந்தது போல், தொன்மையான, பழமையான, உயர்ந்த தமிழ் மொழியினை, அளந்தவனான அகத்தியன், ஆண்மையிற் சிறந்தவரான இராம இலக்குவர் முதலியோர் தனது ஆசிரமம் வந்து சேர்ந்திருக்கின்றனர் என்பதை அறிந்து, இந்த ஈரேழு பதினான்கு உலகங்களும் மகிழ்ச்சிக் கடலில் நெருங்கித் திளைக்கும்படி மகிழ்ச்சி எய்தி, மாட்சிமைப்பட்ட வரங்களைத் தருகின்ற மேலோனான இராமபிரான் தன்னுடைய திருவடிகளை வணங்கும் வண்ணம், அவன் எதிரே வந்து நின்றான்.

திரி விக்கிரம அவதாரத்தில் திருமால் முதலில் வாமன உருவத்தில் சென்று, வரம் பெற்றதும் மிக நீண்டு உயர்ந்து தன் மூவடிகளால் எல்லா உலகங்களையும் அளந்தது போல, மிகக் குறுகிய வடிவினனான அகத்திய முனிவரும் உயர்ந்த தமிழால் இவ்வுலகெல்லாவற்றையும் அளந்தான் என்பதாம். எவ்வாறெனில் தமிழில் இலக்கணங்கள் இயற்றி, அம்மொழியை வளப்படுத்தி, இவ்வுலகமெங்கும் அறியும்படி செய்தான் என்பதாம். நீண்ட தமிழ் என்பது அளவிறந்த நூல்கள் உடைமையைக் குறிக்கும் என்க. சிவபெருமானே அகத்தியருக்குத் தமிழைக் கற்பித்தவர் என்பதனால் நீண்ட பழமையான தமிழ் என்றார் என்க. ''ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'' என்பது பெரியபுராணம்.

37. அகத்தியன் கடல் குடித்தமை

பண்டு, ''அவுணர் மூழ்கினர்; படார்கள்'', என வானோர்
''எண்தவ! எமக்கு அருள்க!'' எனக் குறை இரப்பக்
கண்டு, ஒருகை வாரினன் முகந்து கடல் எல்லாம்
உண்டு, அவர்கள் பின், ''உமிழ்க'' என்றலும், உமிழ்ந்தான். (2768)

(பண்டு - முற்காலத்தில்; அவுணர் - தேவர்கள்; எண் - மதிக்கத்தக்க; படார் - அழிய மாட்டார்கள்)

முற்காலத்தில் அசுரர்கள், தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து, இந்திரனை அழிக்க முயன்றனர். அப்போது இந்திரனுக்குப் பயந்து அசுரர்கள் கடலில் சென்று ஒளிந்து கொண்டார்கள். இவர்கள் கடலிலேயே இருந்தால் அழியமாட்டார்கள் என்று கருதிய தேவர்கள், அகத்தியரை அடைந்து, ''மதிப்பு மிக்கப் பெரிய தவசியே! இப்பொழுது இவர்களை உயிர்ப்பித்து எங்களுக்கு அருள் செய்வீர்களாக!'' என்று வேண்டிக் கேட்டுக் கொள்ள, அதற்கு இசைந்து, அகத்தியர் ஏழுகடல் நீர் எல்லாவற்றையும் தன் ஒரு கையால் முகந்து வாரிக் குடித்துவிட்டார். எனவே கடல் வற்றியது. அவுணர்கள் உயிருடன் இருந்தனர். இந்திரன் அவர்களை வென்று அழித்தான். பின்னர் தேவர்கள் மீண்டும் வேண்ட, உண்ட கடல் நீரை உமிழ்ந்து கடல்கள் எல்லாவற்றையும் நீரால் நிரப்பியவன் இந்த அகத்தியன்.

விருந்திராகரன் போன்ற அசுரர்கள் இந்திரனை எதிர்த்துப் போர் புரிந்தனர். இந்திரன் ததீசி என்ற முனிவனின் முதுகெலும்பால் ஆகிய வலிமையான படையைக் கொண்டு அவர்களை எதிர்த்தான். அதனைத் தாங்காது அவ்வசுரர்கள் கடலில் சென்று ஒளிந்து கொண்ட போதுதான் மேற்கண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இது திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் பழி தீர்த்த படலத்தில் இன்னும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. *''முனிக்கரசு கையால் முகந்து முழங்கும் பனிக்கடலும் உண்ணப்படும்''* என்பது நன்னெறி (7).

38. அகத்தியன் வாதாபியின் உடலைத் தின்றமை

தூய கடல் நீர் அடிசில் உண்டு, அது துரந்தான்;
ஆய அவன்ஆல் அமரும் மெய்யுடைய அன்னான்;
மாய வினை வாள் அவுணன் வாதவி தன் வன்மைக்
காயம் இனிது உண்டு, உலகின் ஆரிடர் களைந்தான். (2769)

(அடிசில் - உணவு; அமரும் - ஒளி விளங்கும் / உள்ளடங்குதல்; மெய் - மேனி / உடல்; மாயம் - வஞ்சகம்; ஆய - அப்படிப்பட்ட; வாதவி - வாதாபி; காயம் - உடல்)

தூய்மையான கடல் நீரை உணவு போல் உண்டு, பின் அதை உமிழ்ந்தவனாகிய அகத்தியன் உருவத்தால் ஆலம்விதை போன்ற சிறிய ஆனால் ஒளி விளங்கும் மேனியை உடையவன். அவன், வஞ்சகச் செயல்கள் புரிகின்ற ஒளி பொருந்திய வாட்படையைக் கொண்ட வாதாபி என்ற அசுரனின் கொடிய வன்மையான உடலையும் வெறுப்புக் காட்டாது மகிழ்ச்சியோடு உண்டு, இவ்வுலகத்தைப் போக்குதற்கரிய பெரிய துயரத்தினின்றும் போக்கியவன் ஆவான்.

பொதுவாகத் தவம் இயற்றுபவர்கள் முதலில் உணவு முதலியவைகளைத் துறந்து, பின் நீர் உண்டே தவம் செய்வர்; பின்னர் அதனையும் துறந்து விடுவர். அதனால் அவர்கள் மேனி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அத்தகைய ஒளி படைத்த மேனியை உடைய அகத்திய முனிவன் என்று முதல் இரண்டு அடிகளுக்குப் பொருள் கொள்ளுதல் அகத்தியனின் தவச்சிறப்பைப் போற்றியதாகும். அன்றி, முன்பாடலில் கூறிய வரலாற்றை மீண்டும் கூறி, ஆலமர வித்துப் போன்று சிறிய, ஆனால் பேருருவை உள்ளடக்கிய மேனியை உடைய அகத்தியன் என்று பொருள் கொள்ளுதலும் அகத்தியனைச் சிறப்பிப்பதே ஆகும்.

அகத்தியன் வாதாபி உடல் உண்ட வரலாறு:- இல்வலன், வாதாபி என்ற இரண்டு அசுரர்கள் காசியபரின் வழி வந்தவர்கள். உடன் பிறந்தோர் அந்தணர்களையும், முனிவர்களையும், ஒரு நூதனமான முறையில் வஞ்சகமாக அழித்து வந்தனர். இல்வலன் மூத்தவன். இவன் அந்தணர் வேடம் தரித்துக் கொள்வான். வாதாபியை ஆட்டின் வடிவம் கொள்ளச் செய்து விடுவான். சிரார்த்தம் செய்வது என்று கூறி ஒவ்வொரு அந்தணரையும் வரழைத்து பின் அவ்வாட்டைக் கொன்று சமைத்து அந்தணர்களைச் சாப்பிட வைப்பான். பின்னர் ''வாதாபி வெளியே வா'' என்று கூறுவான். அந்த வாதாபி அந்தணர்களின் வயிற்றிலிருந்து உயிரோடு வெளியே வந்துவிடுவான். இறந்தவர்களை எழுப்பும் மிருதசஞ்சீவி மந்திரத்தின் வலிமையால் அவ்வாறு செய்து வந்தான். வயிறு கிழித்து வெளி வந்தால் அவ்வந்தணர் இறந்து போய்விடுவார். அம்மாமிச உணவை இருவரும் நன்கு உண்டு களிப்பர். இதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, அத்தியரே ஒரு முறை அந்தணர் வடிவம் கொண்டு இவர்களிடம் சென்றார். எல்லாம் முடிந்து ''வாதாபி வெளியே வா'' என்று இல்வலன் கூற, ''வாதபி நீ சீரணமடைவாயாக!'' என்று தன் தவவலிமையால் அகத்தியர் கூற, வாதாபி வெளிவர முடியாது அங்கேயே சீரணமானான். இவ்வாறு வாதாபி அழிந்தான். இவ்வலனைத் தன் கட்பார்வையாலேயே சுட்டெரித்ததார் அகத்தியர் என்பது புராண வரலாறு.

ஆல் அமரும் மெய்யுடையன் என்ற சொற்றொடர் மரங்களுள் பெரிய ஆலமரம் மிகச் சிறிய விதையில் அடங்கியுள்ளது போல ஏழு கடல்களின் நீர்ப்பரப்பையும் தன் உள்ளங்கையில் அடக்கிய குறுகிய வடிவமுள்ள மேனியையுடைய அகத்தியன் என்று பொருள் விரிவு கொள்ளும்.

''தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை, தெண்ணீர்க் கயத்துள் சிறுமீன் சினையினும், நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை, அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க்கிருக்க நிழலாகும்மே'' என்பது நறுந்தொகை. ஊழியிறுதியில் உலக உயிரினங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டு ஆல இலையில் அமர்ந்தருளிய பரம்பொருள் போன்று குறுகிய வடிவு உடையவன் என்று கொள்ளலும் ஒன்று.

39. அகத்தியன் விந்திய மலையை அடக்கியமை

''யோகம் உறு பேர் உயிர்கள் தாம், உலைவு உறாமல்
ஏகும் நெறி யாது?'' என, மிதித்து அடியின் ஏறி,
மேக நெடு மாலை தவழ் விந்தம் எனும் விண்தோய்
நாகமது நாகம் உற, நாகம் என நின்றான். (2770)

(உலைவு - வருத்தம் / துன்பம்; நெறி - வழி; மாலை - வரிசை; நாகம் - மலை; நாகம் - பாதாள உலகம்; நாகம் - யானை; யோகம் - முயற்சி / ஜீவன உபாயம்)

தவநெறியில் முயற்சி மேற்கொண்டு யோகம் செய்கின்ற அளவற்ற யோகியர்கள் எல்லாம் விண்ணில் - சஞ்சரிக்கின்ற ஆற்றல் பெற்ற உயிரினங்கள். இவர்கள் துன்பம் அடையாமல் சென்று வருகின்ற வழி யாது? என்று அகத்தியரை அணுகிக் கேட்டுக் கொள்ள, அவர் தன் பாதங்களால் அம்மலை மீது ஏறி, வானளாவி உயர்ந்து நிற்கின்ற நீண்ட மலை வரிசைகளான விந்திய மலையைத் தன் கால்களால் அழுத்த, அது அதனைத் தாங்கவொண்ணாது பாதாள லோகத்தை சென்று அடைந்தது - அழுங்கிப் போயிற்று. அவ்வாறு யானை போல மிகக் கம்பீரமாக வீறுகொண்டு நின்றவன் அகத்தியன்.

அகத்தியர் விந்திய மலையை அடக்கிய வரலாறு:- யோகியர்கள் வானத்தில் சஞ்சரிக்கின்றவர்கள். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவைகளும் விண்ணில் சென்று வருபவை. இவை சரியாகப் போய் வர முடியாமல் விந்திய மலை வானைத் தொடுமளவுக்கு உயர்ந்து நின்று இவற்றின் கதியைத் தடுத்து வந்தது. எனவே காலங்கள் முறை மாறிப் போயின. தேவர்கள் அகத்தியரை அணுகித் தாங்கள் துன்பம் உறாமல் தங்களது நித்தியக் கடமைகளை ஆற்றும் வழி யாது என்று கேட்டனர். அகத்தியன் தானே அம்மலையின் மீது ஏறி ஆண் யானை போன்று நின்று கொண்டு தன் கால்களால் அவ்விந்திய மலையை அழுத்தினான். அம்மலை தான் இருந்த உயரம் குறைந்து, பாதாள உலகத்திற்குச் சென்று அமிழ்ந்து விட்டது என்பதும் அது முதல் அதன் வளர்ச்சி குன்றியது என்பதும் புராண வரலாறு.

''நாகமது நாகமுற நாகமென நின்றான்'' என்ற சொல்லாட்சி சுவைக்கத்தக்கது. நாகம் என்ற சொல் மலை, பாம்பு, யானை என்ற பல பொருள்களைத் தந்து நின்றது உணர்க. இதே போல் முன்பு

பாலகாண்டத்திலும் ''நாகமும் நாகமும் நாண நடந்தான்'' என்றதும் இங்கே நினைவு கூரத்தகும்.

40. அகத்தியன் வடக்கையும் தெற்கையும் சமநிலைப் படுத்துதல்

மூசு அரவு சூடும் முதலோன் உரையின், ''மூவா
மாசு இல் தவ! ஏகு''; என வடாது திசை மேல்நாள்
நீசம்உற, வானின் நெடு மா மலயம் நேரா,
ஈசன் நிகராய், உலகு சீர்பெற இருந்தான். (2771)

(மேல் நாள் - முற்காலத்தில்; மூசுதல் - மொய்த்தல்; அரவு - பாம்புகள்; முதலோன் - சிவபெருமான்; மலயம் - பொதியமலை; மூவா - மூப்பற்ற; சீர் - சமநிலை; ஈசன் - சிவபெருமான்; வடாது திசை - வடக்குத்திசை; நீசம் - கீழ் / தாழ்ச்சி / பள்ளம்; உரை - கட்டளை)

முன்னொரு காலத்தில் வடக்குத் திசை தாழ்ந்து போவதைக் கண்ணுற்ற, பாம்புகளை நெருக்கமாக அணிந்துள்ள, எல்லோர்க்கும் முதல்வனாகிய சிவபெருமான், அகத்தியனை அழைத்து, ''என்றும் மூப்பற்ற, குற்றமற்ற தவத்தை உடையவனே! நீ உடனே தெற்குப் பக்கம் செல்லுவாயாக'' என்று கட்டளையிட, வானளாவி ஓங்கி உயர்ந்திருந்த பெரிய பொதிய மலைக்கு அகத்தியன் வந்து சேரவும், வடக்கும் தெற்கும், உலகமும் சமநிலை அடைந்தன. அப்போது அகத்தியன் சிவபெருமான் போல அவனை நிகர்த்துப் பொதியமலையில் அமர்ந்திருந்தான்.

அகத்தியன்தவபலத்தால்என்றும்இளமையானவன்என்பதைக்குறிக்க ''மூவா தவ'' என்றார் என்க. வடக்குத் திசையில் கையிலயங்கிரியில் ஈசன் சிவபெருமான் அமர்ந்திருப்பது போலத் தெற்குத் திசையில் பொதிய மலையில் அகத்தியன் அமர்ந்திருப்பதால், ஈசனும் அகத்தியனும் ஒருவர்க்கொருவர் நிகர் என்றார் என்க. நீசம், உச்சம் என்ற சொற்கள் சோதிட நூலில் பயிலுதல் காண்க.

அகத்தியன் உலகைச் சமன் செய்த வரலாறு:- பர்வத ராஜகுமாரியாகிய பார்வதி தேவிக்கும் சிவபெருமானுக்கும் வடக்கே கைலாச மலையில் திருமணம். அக்காட்சியைக் காண்பதற்காக உலக மக்கள் அனைவரும் ஒருவர் விடாது கைலாச மலையை நெருக்கி மொய்த்தனர். எனவே உலகின் வடக்குப் பகுதி தாழ்ந்து போயிற்று. தெற்குப் பகுதி உயர்ந்து நின்றது. இதனை உணர்ந்த முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், இதனைச் சமன் செய்வதற்குத் தகுதியானவர் அகத்தியரே என்று அறிந்து, அகத்தியரை அழைத்து உடனே தென்பகுதிக்குச் சென்று பொதிய மலையில் அமர்வீராக என்று கட்டளையிட, அதையேற்று அகத்திய முனிவர்தெற்கேவந்துபொதியமலையில்அமர்ந்ததும்வடக்கும்தெற்கும் சமநிலை அடைந்து உலகம் சீராகியது. அதற்குக் கைம்மாறாக, ஈசன்

சிவபெருமான் தன் திருமணக் கோலத்தோடு பொதிய மலைக்கு வந்து அகத்தியருக்கு மட்டும் தனியாகக் காட்சியளித்து அருளினார் என்பது புராண வரலாறு.

41. அகத்தியன் தமிழ் இலக்கணம் இயற்றியமை

உழக்கும் மறை நாலினும் உயர்ந்து, உலகம் ஓதும்
வழக்கினும், மதிக் கவியினும், மரபின் நாடி,
நிழல் பொலி சுணிச்சி மணி நெற்றி உமிழ் செங்கண்
தழல் புரை சுடர்க்கடவுள் தந்த, தமிழ் தந்தான். (2772)

(உழக்கும் - வருந்திப் பயிலும்; ஓதும் - பேசுகின்ற; நாடி - ஆராய்ந்து; நிழல் - ஒளி; கணிச்சி - மழுவாயுதம் / கோடாரி / கோடலி; தழல் - நெருப்பு; புரை - போன்ற; சுடர் - ஒளி; தமிழ் - தமிழ் இலக்கணம்; தந்த - செய்தருளிய)

ஒளி மிகுந்து விளங்குகின்ற மழுவாயுதத்தையும், அழகிய நெற்றியில் தோன்றுகின்ற சிவந்த கண்களையும், நெருப்புப் போன்று சுடர்விடுகின்ற மேனியையும் உடைய சிவபெருமான் அளித்தருளிய தமிழ் மொழியை யும், மிக வருந்திப் பயில வேண்டுவதால், உயர்ந்தது என்று புகழப்படும் நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்தும், உலக வழக்கினையும், மதி நுட்பத்தால் புனையப்படுகின்ற கவிதை வழக்கினையும், முறைப்படி ஆராய்ந்து, அத்தமிழ் மொழிக்கு இலக்கணம் ஆக்கித் தந்தவன் இந்த அகத்தியன்.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பன நான்கு வேதங்கள். இவற்றைப் பயின்று உயர்தல் என்பது அவ்வளவு எளிதல்ல. கனம், ஜடை, ஓசை, ஸ்வரம் முதலியவற்றை முறை தவறாமல் ஓதி உணரத்தக்க வேதங்கள் என்பதாம். இதைப் பயிலும் முறையும், ஓதும் முறையும் மிகக் கடினமானவை. முயற்சி மிகத் தேவை என்பதைக் குறிக்க ''உழக்கு மறை நாலினும்'' என்றார். உலகம் என்றது இங்கு வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்பதாம். அகத்தியன் தமிழ் இலக்கணம் ஆக்குவதற்கு முன்பு, மறை நான்கினையும், உலகப் பேச்சு வழக்கினையும், செய்யுள் வழக்கினையும், மரபு நெறியினையும் நன்கு ஆராய்ந்துதான் இயற்றியிருக்கிறான் என்பது பெறப்படுகிறது.

அவன் ஆக்கிய இலக்கண நூல்கள் சிற்றகத்தியம், பேரகத்தியம் எனப்படும். தமிழில் சிறந்த இலக்கண நூலாகக் கூறப்படும் தொல் காப்பியத்தை ஆக்கிய தொல்காப்பியர், அதங்கோட்டு ஆசான் போன்ற பன்னிரண்டு மாணவர்களுக்கு அகத்தியர் ஆசானாக இருந்தார் என்பது வரலாற்றுக் குறிப்பு. ''தழல்புரைச் சுடர்க்கடவுள்'' என்பது ''எரி போல் மேனிப் பிரான்'' என்ற திருநாவுக்கரசர் தேவாரத்துடன் ஒப்பு நோக்குதற் குரியது. சிவபெருமான்தான் அகத்தியருக்குத் தமிழ் அறிவுறுத்தினான் என்பதை, ''தென்மொழியை உலகமெலாம் தொழுது ஏத்தும் குடமுனிக்கு வகுத்துரைத்தார் கொல்லேற்றுப் பாகர்'' என்ற காஞ்சிப் புராணத்தின் மூலம்

அறியலாம். ''ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க்கு உணர்த்திய மாதொரு பாகனை வழுத்ததும்'' என்பது சேனாவரையர் வாக்கு; கடவுள் தந்த தமிழை, அகத்தியன் நூலினும், வழக்கினும், மரபின் நாடித் தந்தான் என்பதாம்.

மேற்கண்ட பாடல்களால், அகத்தியன் கடலை உண்டது, வாதாபியின் வல்லமை அழித்தது, விந்திய மலையை அடக்கியது, தென் வட திசைகளைச் சமமாக்கியது, தமிழுக்கு இலக்கணம் ஆக்கியது இத்தகைய அருஞ்செயல் அனைத்தையும் உலக நன்மைக்காகவே செய்தான் என்பது எண்ணி இன்புறற்குரியது.

42. அகத்தியர் மகிழ்ச்சி

''விண்ணினில், நிலத்தினில், விகற்ப உலகினில், பேர்
எண்ணினில், இருக்கினில் இருக்கும்'' என, யாரும்
உள்நினை கருத்தினை, உறப் பெறுவெனால், என்
கண்ணினில் எனக்கொடு, களிப்புறும் மனத்தான். (2773)

(விகற்பம் - வேறுபட்டது; எண் - அறிவு; இருக்கு - இருக்கு வேதம்; கருத்து - பரம்பொருள்)

''தேவருலகத்திலும், இம்மண்ணுலகத்திலும், மற்றும் இவற்றி னின்றும் வேறுபட்டதாகிய பாதாளம், அதலம் முதலிய மற்ற உலகங் களிலும், அங்கு நிறைந்திருக்கின்ற உயிரினங்களிலும், அன்பர்களின் பேர் அறிவினில், அதற்குக் காரணமாகிய வேதங்களில் ஆகிய எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்ற, எல்லோராலும் தம் உள்ளத்தில் வைத்து எண்ணப்படுகின்ற பரம்பொருளாகிய இராம பிரானை, இன்று நான் என் கண் எதிரில், நேராகக் காட்சிப் பொருளாகக் காணும் பேறு பெற்றேனே'' என்று மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட மனத்தை உடையவனானான் அகத்தியன்.

இருக்கினில் என்று இருக்கு வேதத்தை மட்டும் கூறியதால், உப லட்சணத்தால் மற்ற மூன்று வேதங்களையும் சேர்த்துப் பொருள் கூறப் பட்டது. எல்லோரும் தன் உள்ளத்தே நிறுத்தி நினைந்து தான் அறிந்தாரே யன்றி அகத்தியனைப் போல் கண் எதிரே காட்சிப் பொருளாகக் கண்டனரில்லை. எனவே அவன் மட்டற்ற மகிழ்ச்சியுற்றான் என்க. ''பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால், கேட்டறியோம்; உனைக் கண்டறிவாரை, எம்கண்முன்வந்து ஏதங்கள்கெடுத்து எமை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான்'' என்பார் மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தில்.

43. ''இரைத்த மறை நான்கினொடு இயைந்த பிற யாவும்
நிரைத்த நெடுஞான நிமிர் கல்லில் நெடுநாள் இட்டு
அரைத்தும், அயனாரும் அறியாத பொருள், நேர்நின்று
உரைத்து உதவுமால்'' எனும் உணர்ச்சியில் உவப்பான். (2774)

(நிரைத்த - முறைப்படுத்திய; கல் - அம்மி; இரைத்த - மிக்கு ஒலிக்கின்ற / கோஷித்தல்; அயன் - பிரமன்)

நன்கு உரத்த குரலில் ஒலிக்கின்ற நான்கு வேதங்களோடு, அவற்றோடு தொடர்புடைய, சாத்திரநூல்கள்எல்லாமும் முறைப்படுத்திய பேரறிவால் உயர்ந்த அம்மியில், நீண்ட நாட்களாகப் போட்டு அரைத்தும் கூட, பிரமனாலும் இன்னதென்று அறிந்து கொள்ள முடியாத பரம்பொருளாகிய இராமபிரான், இன்று தன் நேரில் வந்து, காட்சி தந்து, உரையாடி, உதவியும் செய்யப் போகின்றானே என்ற மன எழுச்சியாலும், புத்துணர்ச்சியாலும் மிக்க மகிழ்ச்சியுற்றிருந்தான் அகத்தியன்.

வேதம் என்பது மெதுவாக ஓதப்படக் கூடாதது. எல்லோருக்கும் கேட்கும் வண்ணம் மிக்க உரத்த ஒலி கொண்டே ஓதப்பட வேண்டும் எனவே இரைத்த மறை என்றார்; இயைந்த பிற யாவும் என்றது, வேதத்தோடு தொடர்புடைய, அதனை அறிவதற்குக் கருவியாக உள்ள மீமாம்சை புராணம், அளவை நூல், அறநூல், சாத்திர நூல்களைக் குறித்து நின்றது. இவற்றால் உண்டான அறிவைப் பயிற்சியால் மேலும் நெறிப் படுத்தி வளர்த்த பேரறிவு என்பதைக் குறிக்க நிரைத்த, நெடு, ஞானம் என்றார். அகத்தியர் ஒரு சித்த மருத்துவர் என்பதும் அறியப்படுவதொன்று எனவே அம்மியில் வைத்து அரைத்தலையும், உரைத்தலையும் இங்கே கூறுகிறான் கம்பன். வேதங்களுக்கும், வேதங்களின் தலைவனாகிய பிரமனுக்குமே நெடுநாள் ஆராய்ந்தும் அறிய மாட்டாத பரம்பொருள் இராமன் உருவில் வந்து தனக்குக் காட்சியளிக்கப் போகிறான், தன்னுடன் உரையாடப் போகிறான், தனக்கு அருள் செய்து உதவப் போகிறான் என்பதனால் எழுச்சியும், புத்துணர்ச்சியும் கொண்டு மகிழ்ந்தான் என்பதாம்.

44. ''உய்ந்தனர் இமைப்பிலர்; உயிர்த்தனர் தவத்தோர்;
அந்தணர் அறத்தின் நெறி நின்றனர்கள் ஆனார்;
வெந்திறல் அரக்கர் விட வேர் முதல் அறுப்பான்,
வந்தனன் மருத்துவன்'' எனத் தனி வலிப்பான். (2775)

(திறல் - வலிமை; விட - நஞ்சு / நச்சு; முதல் - அடி; உய்தல் - பிழைத்தல் / ஈடேறுதல்; வலித்தல் - துணிதல்; இமைப்பிலர் - தேவர்கள்; அறுப்பான் - அறுக்கும் பொருட்டு)

''கொடிய வலிமையுடைய அரக்கர்களாகிய நச்சுவேரை, அடியோடு அறுத்து எறியும் பொருட்டு மருத்துவனான இராமபிரான் வந்து விட்டான்; எனவே இனி இமையா நாட்டமுடைய தேவர்கள் பிழைத்தவர்கள் ஆனார்கள். தவமியற்றும் தவசியர் உயிர் பெற்றனர்; வேதியர்கள் அறத்தின்பால் நின்று ஒழுகுபவர்கள் ஆனார்கள்; எனத் தனக்குள் ஒரு ஒப்பற்ற துணிவு கொண்டான் அகத்தியன்.

இமையாத கண்களையுடையவர் என்பதால் இமைப்பிலர் என்பது தேவர்களுக்குக் காரணப் பெயர்; தவத்தோர் என்பது காடுகளில் இருந்து

தவமியற்றுவோரையும், அந்தணர் என்பது, இல்லறத்தில் இருந்தே அறத்தின் வழி ஒழுகுபவர்களையும் தனித்தனியே குறித்து நின்றது. முன்பு இராமன் கூற்றால் அமைந்த, ''ஆர் அறத்தினோடு அன்றி நின்றார் அவர் வேர் அறுப்பேன்'' என்பதை அனுவதித்து, இங்கு ''அரக்கர்விட வேர்முதல் அறுப்பான்'' என்று கூறியதை நினைவு கூர்க. அகத்தியன், தானே மருத்துவன்; எனவே இராமபிரானையும் மருத்துவனாகவே கருதுவது நோக்கத்தக்கது. நக்கீரர் புலவர்; அவர் திருமுருகாற்றுப் படையில் முருகனையும் புலவனாகவே ''நூலறி புலவ'' என்றே அழைப்பதும் காண்க. திருமாலையே ''தன்வந்திரி பகவான்'' என்றும், ''ஆதி வைதியன்'' என்றும் கூறுவர். எனவே அவன் அவதாரமான இராமபிரானை அகத்தியன் மருத்துவன் என்று குறிப்பிட்டது முற்றும் பொருந்தும் என்க.

45. ஏனை உயிராம் உலவை யாவும், இடை வேவித்து
ஊன் நுகர் அரக்கர் உருமைச் சுடு சினத்தின்
கான அனலைக் கடிது அவித்து உலகு அளிப்பான்,
வான மழை வந்தது என, மைந்து உறு மனத்தான். (2776)

(உலவை - மரங்கள் / வாடியவை / உலர்ந்தவை; உரும் - இடி; கான அனல் - காட்டுத்தீ; கடிது - விரைந்து; மைந்து - வலிமை)

அரக்கர்கள், தம்மை ஒழிந்த மற்றைய வாடிய எல்லா உயிர்களையும், உலர்ந்து போன மரங்கள் முதலானவற்றையும், தமக்கு வேண்டும் பொழுதெல்லாம் வேகவைத்து, அவற்றின் தசைகளை உண்ணு கின்றவர்கள், பேர் இடியையே கொதிக்கச் செய்கின்ற கோபத்தையும், உடைய காட்டுத்தீப் போன்ற அவ் அரக்கர்களை விரைவில் அழித்து, உலகத்தைக் காப்பாற்றும் பொருட்டு, விண்ணுலகிலிருந்து வந்த மழை போல, இராமபிரான் வந்தான் என்று, மிக்க வலிமையான மனத்தை உடையவனானான் அகத்தியன்.

வெப்பத்தின் விவரிக்க இயலாத எல்லை இடி ஆகும். வான மழை வந்தது என மேக வண்ணனான இராமபிரானைக் குறித்தது நோக்குக. முன்பும், ''ஆறாக்கனல் ஆற்றும் ஓர் அஞ்சன மேக மென்ன'' வந்தான் என்றதையும் நினைவு கூர்க. ஏனைய உயிர்கள் - மரங்கள்; காட்டுத்தீ அரக்கர்கள், அதை அணைக்க வந்த வானமழை இராமபிரான்; விரைந்து அழிக்கும் ஆற்றல் வான மழைக்குத் தான் உண்டு என்பதால் இங்கே அரக்கர்களைக் காட்டுத்தீக்கும் இராமபிரானை வானமழைக்கும் ஒப்பிட்டது சாலப் பொருத்தம் என்க.

இங்கே அகத்தியனை நேமி அளந்தான், கடலெலாம் உமிழ்ந்தான், உலகின்இடர்களைந்தான், நாகம் எனநின்றான், உலகு சீர்பெற இருந்தான், தமிழ் தந்தான் என்று சிறப்பித்து, இப்போது, களிப்புறும் மனத்தான், உணர்ச்சியில் உவப்பான், தனி வலிப்பான், மைந்துறு மனத்தான் என முடித்தமை உணர்ந்து இன்புறத்தக்கது.

46. இராமபிரானைக் காணுதல்

கண்டனன் இராமனை வர, கருணை கூரப்
புண்டரீக வாள் நயனம் நீர் பொழிய, நின்றான்;
எண்திசையும், ஏழ்உலகும், எவ்வுயிரும் உய்ய,
குண்டிகையினில், பொருஇல், காவிரி கொணர்ந்தான். (2777)

(குண்டிகை - கமண்டலம் / கரகம் / கடம்; கூர - மிக / அதிகரிக்க; புண்டரீகம் - தாமரை மலர்; நயனம் - கண்கள்; உய்ய - நற்கதியடையும் பொருட்டு; நீர் - உவகைக் கண்ணீர் / ஆனந்த பாஷ்பம்)

உலகில் உள்ள எட்டுத் திசைகளும், ஏழு உலகங்களும், அவற்றிலுள்ள எல்லா உயிர்களும் நற்கதியடையும் பொருட்டுத் தனது கமண்டலத்தில் ஒப்பற்ற காவிரியைக் கொண்டு வந்தவனாகிய அகத்தியன், இராமபிரான் தன்னை நோக்கி வருதலைக் கண்ணுற்று, அன்பு அதிகரிக்க, தாமரை மலர் போன்ற தன் கண்கள் பனித்து, ஆனந்தக் கண்ணீர் பொழிய, எதிர்கொண்டு நின்றான்.

கூர என்பது மிகுதலைக் குறிக்கும். ''கழிவும் கூரும் மிகுதிப் பொருள்'' என்பது தொல்காப்பியம். குண்டிகை என்பது தவசிகளுக்குரிய வாய் குறுகிய சிறிய நீர்க்குடம். பொருஇல் காவிரி என்பது, கங்கை முதலிய பிற நதிகளும் கூட, காவிரியில் படிந்து தமது பாவத்தைப் போக்கிக் கொள்ளும் தூய்மை வாய்ந்தது என்பதைக் குறித்து நின்றது. ''கங்கையிற் புனிதமாய காவிரி'' என்பார் தொண்டரடிப் பொடி ஆழ்வார். கம்பரும் பின்னர் ''தெய்வப் பொன்னி'' என்று காவிரியை அழைப்பார்; காவிரி என்பது காவேரி என்பதன் தமிழ் ஆக்கம். கவேரன் என்னும் சோழ மன்னனின் கன்னி என்னும் மரபு பற்றி வந்த காரணப் பெயர். கவேர கன்னி என்பது காவிரியாயிற்று; ''தவா நீர்க் காவிரிப் பரவை தன் தாதை, கவேரன் ஆங்கிருந்த கவேரவனமும்'' என்பது மணிமேகலை; அகத்தியன் காவிரி கொணர்ந்த வரலாறு ஆக்னேய புராணம், துலாகாவேரி மகாத்மியம் என்ற நூல்களில் விரித்து உரைக்கப் பெற்றிருப்பது காண்க.

47. நின்றவனை, வந்த நெடியோன், அடிபணிந்தான்;
அன்று, அவனும், அன்போடு தழீஇ, அழுத கண்ணால்
''நன்று வரவு'' என்று, பல நல்லுரை பகர்ந்தான்;
என்றும்உள தென் தமிழ் இயம்பி இசைகொண்டான். (2778)

(அன்று - அப்பொழுது; தமிழ் - தமிழ் இலக்கணம்; இசை - புகழ்; தழீஇ - தழுவி; உரை - சொற்கள்; தென் - தெற்கு / தேன் / அழகு / இனிமை; நெடியோன் - நெடுமால் / இராமபிரான் / விசுவரூபன்; நன்று - நன்மை பயப்பதாக)

அவ்வாறு உவகைக் கண்ணீர் பொழிய நின்று கொண்டிருந்த அகத்திய முனிவரை அங்கு வந்து சேர்ந்த குணநலன்களால் யாவரினும்

உயர்ந்தோனாகிய இராமபிரான் தாள்களில் வணங்கினான்; அப்பொழுது, என்றும் நிலைபேறுள்ளதாய் தேன் போன்று இனிமை பொங்க, விளங்கும் தென்னாட்டு மொழியான தமிழுக்கு இலக்கணம் வகுத்துப் புகழ் பெற்றவனான அகத்தியனும், மிக்க அன்போடு இராமபிரானைத் தழுவிக் கொண்டு, அழுதகண்களோடு, ''உனது வரவு நன்மை பயப்பதாகுக'' என்று கூறி இன்னும் பல நல்ல உபசார மொழிகளைக் கூறினான்.

நெடியோன் என்பது திருமாலின் திரிவிக்கரமனாகி, விசுவரூபம் எடுத்தவனின் அவதாரமாகிய இராமபிரானைக் குறித்தது. தமிழை உண்டாக்கியவன் அகத்தியன் என்பதை மறுத்து, அகத்தியன் வருவதற்கு முன்பே தமிழ் மொழி இருந்தது என்றும் அது அநாதியானது என்றும் தமிழுக்கு இலக்கணம் வகுத்துத் தந்தவன் அகத்தியன் என்பதையும் ''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்ற சொற்றொடர் நன்கு விளக்கும்.

48. வேதியர்கள் வேதமொழி வேறுபல கூற,
காதல் மிகநின்று, எழில் கமண்டலுவின் நல்நீர்
மாதவர்கள் வீசி, நெடு மா மலர்கள் தூவ,
போது மணம் நாறு குளிர் சோலை கொடு புக்கான். (2779)

(காதல் - அன்பு; எழில் - அழகிய; வீசி - தெளித்து; மா - சிறந்த; போது - அப்பொழுது மலரும் நிலையிலுள்ள மலர்; கமண்டலு - கமண்டலம் / குண்டிகை / கரகம் / கடம்)

வேதம் வல்ல அந்தணர்கள் நால்வகை வேதங்களிலும் உள்ள பல வகைப்பட்ட உபசார மொழிகளைக் கூறி ஆசீர்வதிக்கவும், அன்பு மிகப் பெற்று, அழகிய தங்களது கமண்டலங்களிலிருந்த தூய்மையான கரக நீரை அப்பெரிய தவசியர்கள் இராமன் முதலியோர் மீது தெளிக்கவும், நீண்ட சிறந்த மலர்களைத் தூவி வாழ்த்தவும், அன்றலர்ந்த மலர்கள் மணம் வீசுகின்ற குளிர்ந்த தனது சோலைக்குள் அவர்களை அழைத்துக் கொண்டு சென்றான் அகத்தியன்.

வேதமொழி கூறுதலும்; கமண்டல நல்நீர் வீசுதலும், (புரோரக்ஷணம் செய்தல்) நெடுமாமலர்கள் தூவுதலும் ஆசிர்வதித்து வாழ்த்துதலைக் குறிக்கும் மந்திர பூர்வமான உபசார வகைகள் என்க.

49. பொருந்த, அமலன் பொழில் அகத்து இனிது புக்கான்;
விருந்து அவண் அமைத்தபின், விரும்பி, முனி ''மேல்நாள்
இருந்தவம் இழைத்த எனது இல்லிடையின் வந்து, என்
அருந்தவம் முடித்தனை; அருட்கு அரச!'' என்றான். (2780)

(அமலன் - குற்றமற்றவன் / பரிசுத்தமானவன்; இரும் - பெரிய; பொருந்த - மனநிறைவுடன்; விருந்து - புதுமை; புதிதாய் வந்தவர்க்குச் செய்யும் உபசாரம் விருந்து எனப்படும்)

குற்றமற்ற பரிசுத்தமானவனான இராமபிரான் மனநிறைவுடன் அத்தவக்குடிலுக்குள் மகிழ்ச்சியுடன் சென்றான்; வந்தவனுக்கு முனிவன் விருந்து அளித்து உபசாரம் செய்தான். பின்னர் மிக அன்பு கொண்டு ''கருணைக் கெல்லாம் தலைவனே! முற்பிறப்பில் நான்பெரிய தவமியற்றியிருக்கின்றதால், இப்போது எனது குடிலுக்கு நீ எழுந்தருளி, யான் இயற்றிய செய்தற்கரிய தவத்தினை நிறைவேற்றி வைத்தாய்!'' என்று கூறினான்.

பெரிய தவசியின் குடிலுக்குள் செல்லுவதால் இராமன் முதலியோர் மிக்க மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் சென்றனர் என்பதை ''பொருந்த, இனிது புக்கான்'' என்றார் என்க. ''எனது இல்லிடையின் வந்து'' என்பது ''என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்'' என்று வில்லிபாரதத்தில் கண்ணபிரான் தன் குடிலுக்கு வந்த போது, விதுரன் கேட்டதை நினைப் பூட்டுவது காண்க. திருமாலின் அவதாரமான இராமபிரானைக் காட்சிப் பொருளாய்க் கண்ணுக்கு நேரே கண்டதால் தனது தவம் நிறை வெய்தியது என்று அகத்தியன் கருதினான் என்பதைக் குறிக்க, ''இல்லிடை வந்து அருந்தவம் முடித்தனை'' என்றான் என்க. மாரியினும், பனியினும், நீர் நிலையினின்றும், வெயிலில், நெருப்பில் நிலை நின்றும், காற்றே உணவாகக் கொண்டும் செய்யும் அருமைப்பாடு உடையது தவம் ஆதலில் அருந்தவம் எனப்பட்டது. இராமபிரான் பேரருள் கொண்டு, தம்மை நாடித் தம்குடில் வந்து அருளியதால் அவன் ''அருட்கு அரச'' என அழைக்கப்பட்டான் என்க.

50. என்ற முனியைத் தொழுது, இராமன், ''இமையோரும்
நின்றதவம் முற்றும் நெடியோரின் நெடியோரும்,
உன்தன் அருள் பெற்றிலர்கள்; உன் அருள் சுமந்தேன்;
வென்றனென் அனைத்துலகும்; மேல் இனி என்?''என்றான். (2781)

(இமையோர் - தேவர்கள்; நின்ற - நிலைபெற்ற; அருள் - அனுக்ரகம்)

என்று கூறி நின்ற அகத்திய முனிவனை, இராமன் தொழுது வணங்கி ''தேவர்களும், நிலைபெற்ற தவத்தைச் செய்து முற்றுவித்த உயர்ந்தவர் களாகிய முனிவர்களிலும் சிறந்த மாமுனிவர்களும் கூட உன்னுடைய அருளினைப் பெற்றார்கள் இல்லை; ஆனால் உன்னுடைய கருணையை என்னுடைய தகுதிக்கும் அதிகமாக இப்போது சுமந்து நிற்கிறேன். எனவே நான் எல்லா உலகங்களையும் வென்றவனாகக் கருதுகிறேன்; இதற்கு மேலும் நான் பெறக் கூடியது என்பது என்ன இருக்கிறது?'' என்றான்.

தவம், நிலை பெற்ற பயனை இம்மையிலும் மறுமையிலும் தரும் என்பதால் ''நின்ற தவம்'' எனப்பட்டது. நெடியோரின் நெடியோர் என்பது பொதுவாக உயர்ந்தவர்களான முனிவர்களிலும் உயர்ந்தவர்களான மாதவர்களைக் குறித்தது என்க. தாங்குதற்கரிய பாரத்தைப் பெற்றிருக்கும் போது தான் அதைச் சுமை என்று கூறுகிறோம். அது போல இங்கே

இராமனும் தனது தகுதிக்கு மீறிய அருள் தனக்குக் கிடைத்ததாகக் கருதி ''உன்னருள் சுமந்தேன்'' என்கிறான் என்க. அரக்கர்களை வெல்லு வதற்குரிய கருவிகளாகிய படைக்கலங்களை அகத்தியன் இராம பிரானுக்கு இனிமேல் தான் தரப்போகிறான் என்றாலும் இராமபிரான் அதனை உணர்ந்து முன் கூட்டியே அவ்வருளை இங்கு சுட்டுகிறான் என்க. அகத்தியன் இப்பொழுதுதான் இராமபிரானை ''அருட்கு அரசே'' என்று கூறியிருக்கிறான். உடனே இராமன் அகத்தியன் அருளைத் தான் சுமந்து கொண்டிருப்பதாகக் கூறியது ஒரு நயம். முனிவனின் சொல்லையும் வெல்ல வல்ல சொல்லையுடையான் இராமன் என்பது போதரும்.

51. அகத்தியன் கூற்று

''தண்டக வனத்து உறைதி'' என்று உரைதரக் கொண்டு,
''உண்டு வரவு இத்திசை'' எனப் பெரிது உவந்தேன்;
எண்தகு குணத்தினை!'' எனக்கொடு, உயர் சென்னித்
துண்ட மதி வைத்தவனை ஒத்த முனி சொல்லும். (2782)

(எண் - மதிக்கத்தக்க; உரைதர - சொல்ல; துண்ட மதி - பிறைச்சந்திரன்; திசை - பக்கம்)

''எல்லோராலும் போற்றி மதிக்கத்தக்க குணங்களை உடையவனே! நீ தண்டக வனத்தில் தங்கியிருக்கிறாய் என்று இங்கு வந்த முனிவர்கள் கூறக்கேட்டு, நீ இந்தப் பக்கம் வரக்கூடும் என்று எதிர் பார்த்து மகிழ்ந் திருந்தேன்'' எனக் கூறத் தொடங்கி, உயர்ந்த தலையில் பிறைச்சந்திரனைச் சூடிக்கொண்டிருக்கிற சிவபெருமானை ஒத்தவனான அகத்திய முனிவன் மேலும் கூறுவானாயினான்.

''எண்தகு குணத்தினை'' என்பதற்கு மேலான எட்டுக் குணங்களை யுடையவனே என்றும் பொருள் கூறுவதுண்டு. இறைவனை வள்ளுவன் ''எண் குணத்தான்'' என்பது நினைவு கூர்க. அகத்திய முனிவனைச் சிவபெருமானுக்கு நிகராக முன்பும் கூறியதை நினைவு கொள்க. ''ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்தான்'' என்பது பாடல் பகுதி.

52. ''ஈண்டு உறைதி ஐய! இனி, இவ்வயின் இருந்தால்,
வேண்டியன மாதவம் விரும்பினை முடிப்பாய்;
தூண்டு சின வாள் நிருதர் தோன்றியுளர் என்றால்,
மாண்டு உக மலைந்து, எமர் மனத்துயர் துடைப்பாய்''. (2783)

(வேண்டியன - இன்றியமையாதன; தூண்டு - வளர்க்கின்ற; வாள் - கொடிய; நிருதர் - அரக்கர்கள்; மலைந்து - போர்செய்து; எமர் - எம்மவர்கள் / முனிவர்கள்; தோன்றுதல் - வருதல்; துடைத்தல் - போக்குதல் / நீக்குதல்)

''தலைவனே! இங்கேயே தங்கியிருப்பாயாக! அவ்வாறு இனிமேல் நீ இங்கே தங்கி இருந்தால், உன் சிற்றன்னை உன்னிடம் வேண்டியதும்,

உனக்கு இன்றியமையாததுமான பெருந்தவத்தை, நீ விரும்பியபடியே எளிதில் செய்து முடிக்க இயலும். அதுமட்டுமல்ல; பெருகுகின்ற கோபத்தையுடையவரும், கொடியவர்களுமான அரக்கர்கள் இங்கு வருவார்களேயானால், அவர்கள் இறந்து போகும்படி அவர்களுடன் போர் செய்து, என்னைப் போன்ற முனிவர்களுடைய துயரத்தையும் போக்கியவனாவாய்'' என்றார்.

இராமபிரான் இங்கு தங்குவதால் அவனுக்கும் பயன் உண்டு, இங்கு வசிக்கின்ற முனிவர்களுக்கும் நன்மை உண்டு என்று கூறினார் என்க.

53. ''வாழும் மறை; வாழும் மனுநீதி; அறம்வாழும்;
தாழும் இமையோர் உயர்வர்; தானவர்கள் தாழ்வர்;
ஆழி உழவன் புதல்வ! ஐயம்இலை; மெய்யே!
ஏழ்உலகும்வாழும்; இனி இங்கு உறைதி'' என்றான். (2784)

(ஆழி - ஆணைச் சக்கரம்; உழவன் - செலுத்தியவன்)

''ஆணைச் சக்கரத்தை உலகெங்கும் செலுத்தியவனான தசரதச் சக்கரவர்த்தியின்மைந்தனே! நீ இங்கு தங்கியிருந்து தவம் செய்வாயானால், வேதங்கள் புதுவாழ்வு பெறும்; பதினெட்டு தர்மசாத்திர நூல்களும், அவற்றின் முறைகளும் வாழ்வடையும்; முப்பத்திரண்டு தர்மகாரியங்கள் நிலைபெற்று நிற்கும்; இப்பொழுது அரக்கர்களின் கொடுமையால் தாழ்வுற்றிருக்கும் தேவர்கள் உயர்வடைவர்; அரக்கர்கள் தாழ்ச்சியுறுவர்; ஏழு உலகங்களும் நன்கு மகிழ்ச்சியுடன் வாழும்; இது பொய்யில்லை. இதில் சந்தேகமும் இல்லை; இது உண்மையே; எனவே நீ இங்கேயே தங்கியிருப்பாயாக!'' என்றான்.

அரக்கர்களை இராமன் அழிக்கப் போவதால் வேதங்கள் வாழும், மனுநீதி வாழும், அறம் வாழும், தேவர்கள் வாழ்வர்; அரக்கர்கள் தாழ்வர், ஏழுலகும் வாழும் என்றான் என்க. தானவர்கள் என்பது தனு என்பாளிடம் பிறந்த அசுரர்கள் என்றாலும், அசுரர்களைப் போன்ற அரக்கர்களைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். தருமசாஸ்திர நூல்கள் பதினெட்டு. அதில் முதன்மையானது மனுதர்மசாஸ்திரம். எனவே அதை மட்டும் சுட்டிக் காட்டினார் என்க. அறம் என்பது நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் ஆகும். அறம் என்பது முப்பத்திரண்டு வகைப்படும். ஆழி உழவன் என்பது சொல்லேருழவர், வில்லேருழவர் என்பது போல, என்பதை உணர்க. தன் ஆணைச் சக்கரத்தால் உயிரினங்களைத் தழைக்கச் செய்பவன் என்பதால் ''ஆழி உழவன்'' என்றான் என்க.

54. இராமன் மறுமொழி கூறுதல்

''செருக்கு அடை அரக்கர் புரி தீமை சிதைவு எய்த,
தருக்கு அழிதர, கடிது கொல்வது சமைந்தேன்;

வருக்க மறையோய்! அவர் வரும் திசையில், முந்துஉற்று
இருக்கைநலம்; நிற்கு அருள் என்?'' என்றனன் இராமன். (2785)

(வருக்கம் - வர்க்கம் / தொகுதி; சிதை வெய்தல் - ஒழிதல்; தருக்கு - வலிமை; கடிது - விரைவில்; சமைதல் - முடிவு செய்தல்; முந்து - முற்பட்டு; அருள் - குறிப்பு / கருத்து; செருக்கு - கர்வம்; இருக்கை - இருத்தல்)

''வேதங்களிலும், அவற்றைச் சார்ந்த பிற நூல்களிலும் தேர்ச்சி உடையவனே! அரக்கர்களின் ஆணவத்தையும், அவர்கள் செய்கின்ற தீமைகளையும் அழிக்குமாறும் அவர்களின் கர்வத்தையும் களிப்பையும் போக்குமாறும், அவர்களைவிரைவில் கொன்றுஅழிப்பது என்று முடிவும் உறுதியும் கொண்டுள்ளேன்; எனவே அவர்கள் வர ஏதுவாகிய தெற்குத் திசையில் முற்பட்டுச் சென்று அவர்களை எதிர் நோக்கி இருத்தல் நன்மை பயக்கும் எனக் கருதுகிறேன். தங்கள் எண்ணம் என்ன? அவ்வாறு செய்தற்குத் தாங்கள் எனக்கு அருள் புரிய வேண்டும்'' என்று இராமன் கூறினான்.

''வருக்கமறை'' என்பது, வேதங்களையும், வேதத்தின் அங்கங் களையும், அதனோடு தொடர்புடைய எல்லா நூல்களையும் குறிக்கும். ''கடிது கொல்வது அமைந்தேன்'' என்பது முன்பு தண்டகவன முனிவர்களுக்கு அவன் உறுதியளித்து அபயம் அளித்ததைக் குறிக்கும். இராக்கதர்கள் இலங்கையிலிருந்துவர வேண்டும். எனவே இப்பொழுது அகத்தியன் இருக்கும் இடத்திலிருந்து இன்னும் முன்னே தெற்குத் திசையில் சென்று அவர்களை எதிர்பார்த்திருப்பது நலம் என்று இராமன் கருதி, அதற்கு ஒப்புதலும் அனுமதியும் அகத்தியனிடமிருந்து வேண்டினான் என்க.

55. அகத்தியன், இராமனுக்குப் படைக்கலன்கள் அளித்தல்

''விழுமியது சொற்றனை; இவ்வில்இது இவண், மேல்நாள்
முழுமுதல்வன் வைத்துளது; மூவுலகும், யானும்,
வழிபட இருப்பது; இது தன்னை, வடிவாளிக்
குழு, வழுஇல் புட்டிலொடு கோடி!'' என, நல்கி. (2786)

(விழுமியது - சிறந்தது; முழு முதல்வன் - திருமால்; வாளிக்குழு - அம்பின்திரள்; வழுஇல் - குறைதலில்லாத; வடி - கூர்மை; கோடி - கொள்) - (குளகப்பாடல்)

அகத்தியன் இராமனை நோக்கி, ''சிறந்த கருத்தினைக் கூறினாய்; இந்த வில், முற்காலத்தில் மூலப்பரம்பொருளான திருமால் வைத்திருந்தது; மூன்று உலகத்தவரும், நானும் போற்றித் துதித்துக் கொண்டிருப்பது. இதனுடன், கூர்மையான குறைவு படாத அம்புக் கூட்டம் நிறைந்த அம்பறாத்தூணியையும் - அம்புப் புட்டிலையும் - ''ஏற்றுக் கொள்வாயாக''

என்று கூறி, அவற்றை அவனிடம் கொடுத்து - பாடல் முடியவில்லை தொடர்கிறது.

இங்கே ஒன்றை நோக்க வேண்டும். முதலில் விசுவகர்மாவினால் இரண்டு விற்கள் செய்யப்பட்டன. ஒன்றைச் சிவபெருமானும், ஒன்றைத் திருமாலும் கொண்டனர். சிவபெருமான் வில்தான் பரசுராமர் கையில் வந்து, இராமரிடம் போய், இப்பொழுது வருணனிடம் இருப்பது. இங்கே கூறப்படும்வில் அதனினும் மாறுபட்டது. திருமாலிடம் இருந்து அகத்தியருக்கு வந்து இப்போது இராமனிடம் சேர்ப்பிக்கப் படுவது, ''வாளிக்குழு வழுஇல் புட்டில்'' என்பது அம்பு அறாத் தூணியைக் குறிக்கும்.

56. ''இப்புவனம் முற்றும் ஒரு தட்டின் இடை இட்டால்
ஒப்பு வரவிற்று என உரைப்ப அரிய வாளும்,
வெப்பு உருவு பெற்ற அரன் மேரு வரை வில்லா
முப்புரம் எரித்த தனி மொய்க் கணையும், நல்கா''. (2787)

(புவனம் - உலகம்; தட்டு - தராசுத்தட்டு; வரவிற்று - வரும் தன்மை / ஆகக்கூடியது; உருவு - மேனி; அரன் - சிவபெருமான்; தனி - ஒப்பற்ற; மொய் - வலிய; வெப்பு - நெருப்பு / தீ; நல்கா - நல்கி / கொடுத்து) - (குளகப்பாடல்)

இந்த உலகம் முழுவதையும் தராசுத் தட்டின் ஒரு தட்டில் வைத்து, தான் வைத்திருக்கின்ற இந்த வாளை மற்றொரு தட்டில் வைத்து நிறுத்தால், இதற்கு இவ்வுலகம் முழுவதும் ஒப்பாக மாட்டாது என்று கூறும்படியான அருமையானதொரு வாட்படையையும், வெப்பம் மிகுந்த நெருப்பையே தன் மேனியாக்க் கொண்ட சிவபெருமான், மேருமலையையே வில்லாகக் கொண்டு திரிபுரங்களையும் எரித்த போது உதவிய ஒப்பற்ற வலிமையை உடைய ஒரு வில்லையும் அகத்திய முனிவன் இராமனுக்கு அளித்து - பாடல் முடியவில்லை தொடர்கிறது.

முதல் இரண்டு அடிகளில் வாட்படையின் பெருமை விளக்கப்பட்டது. ''வெப்பு உருவு பெற்ற அரன்'' சிவபெருமான் என்பதை ''எரிபோல் மேனிப் பிரான்'' என்கிறது தேவாரம். சிவபெருமான் திரிபுரம் எரித்த போது மேருமலையை வில்லாகவும், பூமியைத் தேராகவும், பிரமனைத் தேர்ப்பாகனாகவும், திருமால், நெருப்பு, காற்று ஆகிய மூவரையும் அம்பாகவும் கொண்டு திரிபுரத்தை எரித்தார் என்பது புராண வரலாறு. அத்தகைய வலிமை வாய்ந்த அம்பை இப்பொழுது அகத்தியன் இராமனுக்குக் கொடுத்தான் என்றவாறு.

அகத்தியன் இராமனுக்கு வாள், வில், அம்பறாத் தூணி ஆகிய மூன்றையும் கொடுத்தான் என்றே கூர்மபுராணமும் கூறும். வில் விசுவகர்மாவினால் உண்டாக்கப் பெற்று திருமாலிடம் இருந்தது என்றும், அம்பு பிரமனால் அளிக்கப்பட்ட தென்றும், அம்பும், இருபுட்டில்களும்,

வாளும், தேவேந்திரனால் அளிக்கப்பட்ட தென்றும் கூறி, அகத்தியர் இராமனிடம் கொடுத்தார் என்று வான்மீகம் கூறும். அவ்வில் மகேந்திரம் என்ற பெயருடையது என்றும், அக்ஷயபாத்திரம் போன்ற அம்பறாத் தூணீரத்தையும், இரத்தினங்கள் இழைத்த ஒரு வாளையும் தந்ததாக அத்யாத்ம ராமாயணம் கூறும். முப்புரம் எரித்த மொய்கணையை, ''எரிமுகப் பேரம்பு'' என்பது சிலப்பதிகாரம்.

57. பஞ்சவடி பற்றிக் கூறுதல்

''ஓங்கும் மரன்ஓங்கி, மலை ஓங்கி, மணல்ஓங்கி,
பூங்குலை குலாவு குளிர்சோலை புடை விம்மி,
தூங்கு திரை ஆறு தவழ் சூழலது, ஓர்குன்றின்
பாங்கர் உளதால், உறையுள் பஞ்சவடி; மஞ்ச!'' (2788)

(மஞ்ச - மைந்தனே!; ஓங்குதல் - நிமிர்ந்து வளரப்பெறுதல்; ஓங்கும் - உயர்ந்த; மணல் - மணற்குன்றுகள் / மணல் மேடுகள்; விம்மி - தழைத்து; தூங்குதல் - அசைதல்; சூழல் - சுற்றுப்புறம்; உறையுள் - தங்குதற்கு உரிய இடம்; பாங்கர் - பக்கத்தில்; புடை - அருகில்; குலாவு - விளங்குகின்ற; பஞ்சவடி - ஐந்து ஆலமரங்கள் செறிந்துள்ள இடம்; வடவிருக்ஷம் - ஆலமரம்; குலை - கொத்து)

''மைந்தனே! உயர்ந்த மரங்கள் நிமிர்ந்து வளர்ந்துள்ளதும், ஓங்கி உயர்ந்த மலைகள் உள்ளதும், பெரிய மணற்குன்றுகள் உடையதும், பூங்கொத்துக்கள் மிகுதியாக விளங்குகின்றதும், குளிர்ச்சி பொருந்திய சோலை ஒன்றின் அருகில் தழைக்கப் பெற்றும், அசைகின்ற அலை களையுடைய ஆறுகள் ஓடுகின்ற சுற்றுப்புறத்தையும் உடையதுமான ஒரு மலையின் அருகில் பஞ்சவடி என்னும், தங்குதற்குரிய ஒரு இடம் இருக்கிறது'' என்றான்.

மரம், மலை, மணற்குன்றுகள், பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகள், அசைந்தாடும் அலைகளையுடைய ஆறுகள் சூழ்ந்திருக்கப் பெற்ற ஒரு அருமையான இடம் தவம் செய்வதற்கு ஏற்ற அமைதியான சூழ்நிலை உடைய இடம் பஞ்சவடி என்பதாம். பொதுவாக ஆறுகள் அலை மிகுந்ததாகத்தானேகாணப்பெறும். அதைவேறுபடுத்த ''தூங்குதிரைஆறு தவழ் சூழல்'' என்ற அருமையான சொற்றொடரைப் பயன்படுத்தி யிருக்கிறான் கவிஞன். விரைந்த செலவும் வேகமுமின்றி அசைந்தாடு கின்ற அலைகள் என்பதால் அது நீராடுதற்கும் உகந்த ஆறு என்பது பெறப்பட்டது. ஆறு தவழ்கின்ற இடம் என்பதிலிருந்தே அவ்விடத்தின் சூழலை நம்மைப் புரிந்து கொள்ள வைக்கிறான். பஞ்சவடி என்பது இப்போது நாசிக் என வழங்கப்படுகிறது. அகத்தியன் ஆசிரமத்திலிருந்து பஞ்சவடி இரண்டு யோசனை தூரம் என்று வான்மீகமும், ஒரு காததூரம்

என்று அத்யாத்ம ராமாயணமும் கூறும். இது கோதாவரி ஆற்றின் கரையில் உள்ளது என்றும் கூறுவர்.

58. ''கன்னி இளவாழை கனிஈவ, கதிர்வாலின்
செந்நெல் உள; தேன்ஒழுகு போதும்உள; தெய்வப்
பொன்னி எனலாய புனல்ஆறும் உள; போதா
அன்னம்உள; பொன்இவளொடு அன்பின் விளையாட''. (2789)

(கன்னி - இளமை; கதிர் - கூரிய / ஒளி; ஒழுகு - வழிகின்ற; போது - மலர்கள்; பொன்னி - காவிரி; பொன் - திருமகள்; போதா - பெருநாரைகள்; பொன்நிறமுள்ளநீரைஉடையதால்பொன்னிகாவிரிக்குக்காரணப்பெயர்)

''பஞ்சவடியில், என்றும் மிக்க இளமையோடிருக்கும் வாழை மரங்கள் பழத்தைத் தந்து கொண்டேயிருக்கும்; ஒளி பொருந்திய கூரிய வால் போன்ற பகுதியை உடைய சிவந்த நிறமுடைய சம்பாநெல் உள்ளது; தேன் சிந்துகின்ற அன்றன்று மலரும் புத்தம் புதுமலர்களும் உள்ளன; தெய்வத்தன்மை பொருந்திய காவிரி என்று சொல்லத்தக்க, நீர்ப் பெருக்குடைய ஆறுகளும் உள்ளன; பெரு நாரைகள், அன்னப் பறவைகள் ஆகிய நீர்ப்பறவைகளும் உள்ளன; அவற்றோடு இலக்குமி போன்ற இச்சீதாதேவி அன்புடன் விளையாடிக் கொண்டிருக்கலாம்'' என்றான் அகத்தியன்.

கன்னி இளம் என்பது ஒருபொருட் பன்மொழி; இந்த ஆறு கோதாவரி என்று கருதப்படுகிறது. இந்நீர்வாழ் பறவைகள் தீங்கொன்றும் செய்யாது இனிதாக விளையாடும் என்பதை உணர்த்த ''அன்பின் விளையாட'' என்று கூறுவதை நோக்குக. நெல்லுக்குவால் போன்று நீண்ட, கூரிய நுண்ணிய ஒரு உறுப்பு உள்ளது என்பதை ''கதிர் வாலின் செந்நெல்'' என்றார். ''பொன்விளைந்தாற் போலும் நறும்பொடி விரிந்த காவிரி'' என்பார் பாரதிதாசன். ''தெய்வக் காவிரி தீது தீரா சிறப்பு'' என்பது சிலப்பதிகாரம். ''பொன்னி நல்நதி மிக்க நீர்பாய்ந்து, புணரி தன்னையும் புனிதமாக்குவது'' என்பது பெரியபுராணம்.

59. இராமன் விடைபெற்றுச் செல்லுதல்

''ஏகி, இனி அவ்வயின் இருந்து உறைமின்'' என்றான்;
மேகநிற வண்ணனும் வணங்கி, விடை கொண்டான்;
பாகு அனைய சொல்லியோடு, தம்பி பரிவின் பின்
போக, முனி சிந்தைதொடர, கடிது போனான். (2790)

(பாகு - சர்க்கரைப்பாகு / தேன்பாகு / வெல்லப்பாகு; பரிவின் - அன்புடன்; சிந்தை - மனம்; கடிது - விரைந்து)

''இங்கிருந்து சென்று, இனிமேல் அந்தப் பஞ்சவடியில் தங்கி யிருங்கள்'' என்று முனிவன் கூறினான்; மேகம் போன்ற கரிய நிறமுடைய

இராமனும் முனிவனைத் தொழுது விடை பெற்றான்; தேன்பாகு போன்ற இனிமையான சொற்களையுடைய சீதாதேவியோடு, தம்பி இலக்குவன் அன்போடு பின் தொடர்ந்து போக, முனிவனின் மனம் அவர்களைப் பின் தொடர்ந்து வர, விரைந்து சென்றான்.

''பாகு அனைய சொல்லி'' என்று சீதாதேவியை முன்னரும் ''பாகு ஒக்கும் சொல் பைங்கிளி'' என்று கூறியதை நினைவு கூர்க. முனிவன் பிரியலாற்றாது பிரிகிறான். எனவே அவன் உடல் மட்டும் அங்கிருக்க அவன் மனம் அவர்களுடன் கூடவே போயிற்று என்று அன்பின் மிகுதி கூறப்பட்டது. இராமனை அடுத்துச் சீதையும், அவள் பின் இலக்குவனும் சென்றார்கள் என்பதாம்.

அகத்தியப்படலம் நிறைவுற்றது

4. சடாயு காண்படலம் [43 பாடல்கள்]

இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் அகத்தியரைக் கண்ட பின்பு, பஞ்சவடி நோக்கிச் செல்லுகையில் ஓர் மலையில் அமர்ந்திருந்த கழுகுகளின் வேந்தனான சடாயுவைக் கண்டு அவன் நட்பைப் பெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 43 பாடல்களைக் கொண்டது. சடாயு என்ற கழுகின் வேந்தன், இராமன் முதலிய மூவரையும் கண்ட படலம் என்றும் பொருள் கொள்ளுமாறு படலத் தலைப்பு அமைந்திருப்பதை நோக்குக. இது சில சுவடிகளில் ''சடாயுப் படலம்'' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சடா என்பது ஜடை என்ற வட சொல்லின் திரிபு. சடாயு என்பது சம்பாதியின் தம்பி; சூரியனின் தேர்ச்சாரதியாகிய அருணனின் புதல்வன். தசரதனின் நண்பன். சடை + ஆயுள் என்று பிரித்து, பலமயிர்கள் செறிந்த சடை போன்ற நீண்ட ஆயுளைப் பெற்றவன் என்றும், சடை என்ற சொல்லுக்குச் சிறகு என்று பொருள் கொண்டு சிறகுகளில் உயிரை உடையவன் என்றும் கூறுவதுண்டு. சடாயுவைப் பற்றி வான்மீகம் விரிவாகக் கூறவில்லை என்பது கருதத்தக்கது.

இப்படலத்துள், பஞ்சவடி நோக்கிச் செல்லும் இராமன் முதலியோர் அங்கு ஓர் மலையில் அமர்ந்திருக்கும் சடாயுவைக் கண்டு அரக்கனோ என்று ஐயமும் கலக்கமும் அடைதல்; சடாயு அவர்களை யார் என்று வினவுதல்; தசரதன் மைந்தர் எனக் கேட்டு மகிழ்தல்; தசரதன் மரணம் அறிந்து வருந்தி, தம் நட்புப் பற்றிக் கூறி, பிரிவுக்கு ஆற்றாது உயிர் விடப்புகுதல்; இராமன் முதலியோர் தடுத்தல்; அவர்கள் கானகம் புகுதற்குக் காரணம் கேட்டல்; இலக்குவன் நடந்தவை அனைத்தையும் கூறவும் அவர்களைப் பாராட்டிச் சீதையைச் சுட்டி இவள் யார் எனக் கேட்டல்; இராமன் பஞ்சவடியில் தங்குவதற்காகப் போய்க்கொண்டிருப்ப தாகக் கூறுதல், சடாயுவே அவர்களுக்கு வழிகாட்டிப் பஞ்சவடியில் சேர்ப்பித்தல் ஆகிய நிகழ்ச்சிகள், மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. மூவரும் சடாயுவைக் காணுதல்

நடந்தனர் காவதம் பலவும்; நல்நதி
கிடந்தன, நின்றன, கிரிகள் கேண்மையின்
தொடர்ந்தன; துவன்றின சூழல் யாவையும்
கடந்தனர்; கண்டனர் கழுகின் வேந்தையே. (2791)

(கேண்மை - நட்பு; துவன்றின - அடர்ந்துள்ள; சூழல் - காட்டு இடம் / காடு / வனப் பிரதேசம்; கிடந்த - குறுக்கிட்ட / ஓடிக்கொண்டிருந்த; காவதம் - காதம்)

இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் பஞ்சவடி நோக்கிப் பல காததூரம் நடந்தனர். இடையில் குறுக்கிட்ட புண்ணிய நதிகள், ஓங்கி உயர்ந்து நின்ற மலைகள், நட்புக் கொண்டது போல தொடர்ச்சியாக இருந்த மலைக் குன்றுகள், மரம், செடி, கொடிகள் அடர்ந்திருந்த வனப் பிரதேசங்கள் ஆகிய எல்லாவற்றையும் கடந்து வந்து, ஓரிடத்தில் கழுகுகளுக்கு அரசனான சடாயுவைக் கண்டார்கள்.

தரையில் படுத்துக்கிடந்தாற்போன்று நீண்ட தோற்றம் தந்ததால் நல்நதி கிடந்தன என்றார். முதலில் மலைகள் என்றது ஓங்கி உயர்ந்து ஓரிடத்தில் தனித் தனியாக நின்ற மலைகளையும், பின்னர் கிரிகள் தொடர்ந்தன என்றது தொடர்ச்சியாக அமைந்துள்ள மலைக் குன்றுகளையும் என்க. சூழல் என்றது இவை தவிர்த்த மற்ற பிற இடங்களையும் குறிக்கும்.

2. சடாயுவின் தோற்றம் [8 பாடல்கள்]

உருக்கிய சுவணம் ஒத்து, உதயத்து உச்சிசேர்
அருக்கன் இவ்அகல் இடத்து அலங்கு திக்கெலாம்
தெரிப்புறு செறிசுடர்ச் சிகையினால், திசை
விரித்து இருந்தனன் என, விளங்குவான்தனை. (2792)

(சுவணம் - சுவர்ணம் / சொர்ணம் / பொன்; உதயம் - உதயகிரி; அருக்கன் - சூரியன்; அலங்கு - விளங்குகின்ற; தெரிப்புறல் - தெளியச்செய்தல்; செறி - நெருங்கிய; சிகை - கொழுந்து) - (குளகப்பாடல்)

தீயிலிட்டுக் காய்ச்சி உருக்கிய பொன்னைப் போன்று, உதயகிரியின் உச்சியில் சேர்ந்திருக்கின்ற சூரியன், இவ்வகன்ற உலகத்தில் விளங்கு கின்ற திசைகள் எல்லாவற்றையும் நன்கு தெளிவாகத் தெரியும்படி செய்வதற்காகத் தனது அடர்ந்த கதிர்களின் கொழுந்தினால் நான்கு திசைகளிலும் விரித்து இருந்தது போல, தனது ஒளி வீசும் சிறகுகளை விரித்துக் கொண்டு உதயம் என்னும் மலையில் அமர்ந்திருக்கின்ற சடாயுவை - பாடல் தொடர்கிறது.

சடாயுவின் நிறம் பொன்னிறம் என்பது பெறப்படுகிறது. உதயகிரியில் தோன்றிய சூரியன் அதன் உச்சிக்கு வரும் போது அதன் கதிர்கள் எப்படி ஒளிவிட்டுப் பிரகாசித்து, இவ்வுலகில் உள்ள எல்லாத் திசைகளையும் தெளிவு படுத்திக் காட்டுமோ, அதுபோல, சடாயு உதயம் என்னும் மலையில் அமர்ந்து கொண்டு தன் ஒளி பொருந்திய சிறகுகளால் தான் அமர்ந்திருந்த இடமெல்லாம் ஒளி பெற்றுத் திகழும்படி விளங்கிக் கொண்டிருந்தான் என்பதாம். சடாயு சூரியனுக்கு உவமை. அவன் சிறகுகள் கதிரவனின் கதிர்களுக்கு உவமை.

3. முந்துஒரு கருமலை முகட்டு முன்றிலின்
சந்திரன் ஒளியொடு தழுவச் சார்த்திய,
அந்தம்இல் கனைகடல் அமரர் நாட்டிய
மந்தரகிரி என, வயங்குவான்தனை. (2793)

(முந்து - முற்காலத்தில்; முகடு - உச்சி; முன்றில் - முன்பக்கம்; கனை - ஒலிக்கின்ற; அந்தம்இல் - முடிவில்லாத; வயங்குவான் - விளங்கு கின்றவன்; கரு - கரிய / பெரிய)

முற்காலத்தில் தேவர்கள் சந்திரனை அடைதூணாகக் கொண்டும் மந்தர மலையை மத்தாகக் கொண்டும் எல்லையில்லாது ஒலிக்கின்ற திருப்பாற் கடலைக் கடைந்த போது விளங்கிய மந்தரமலை போல் ஒரு பெரிய மலையின் உச்சியின் முன்னிடத்தில் விளங்குகின்ற சடாயுவை - பாடல் தொடர்கிறது.

தேவர்களும் அசுரர்களும் முன்பு திருப்பாற்கடலைக் கடையும் போது, சந்திரனை அடைதூணாகவும், மந்தர மலையை மத்தாகவும் கொண்டு கடைந்தார்கள் என்பது புராணவரலாறு. இப்போது இம்மலையின் முன் பக்கத்தில் தோன்றுகின்ற சடாயு அம்மந்தரமலையைப் போன்று பருத்தும், உறுதியாகவும், உயர்ந்தும் சந்திரனைப் போன்ற ஒளியுடனும் விளங்கினான் என்பதாம்.

சடாயு ஓர் ஆலமரத்தின் உச்சியில் இருந்தான் என்று வான்மீகம் கூறும். கம்பர் ஒரு மலை முகட்டின் முன்புறத்தில் அமர்ந்திருந்தான் என்று கூறுவதை நோக்குக. சடாயு அமர்ந்திருந்த மலை ''பிரஸ்ரவணம்'' என்று மகாபாரதம் கூறும். முன் பாடலில் சூரியன் கதிர் போல ஒளிவீசும் சிறகுகளை உடையவன் என்று கூறி, இங்கு சந்திரனின் தண்ணொளி போல ஒளி தரும் சிறகுகள் என்று கூறியதையும் உணர்க.

4. மால்நிற விசும்பு எழில்மறைய, தன் மணிக்
கால்நிறச் சேயொளி கதுவ, கண்அகல்
நீல்நிற வரையினில் பவள நீள்கொடி
போல்நிறம் பொலிந்தென, பொலிகின்றான்தனை. (2794)

(மால் - திருமால்; விசும்பு - வானம்; மணி - செம்மணி; சே - சிவந்த / செம்மையான; கதுவ - பற்றிப்பரவ; வரை - மலை; கண்அகல் - இடம் அகன்ற; நீல் - நீலம்; நிறம் - உடலுமாம்)

திருமாலின் நீல நிறம் போன்ற ஆகாயத்தின் அழகு மறையும்படி, தனது செம்மணி நிறமுடைய சிவந்த ஒளிபொருந்திய கால்கள் பற்றிப் பரவவும், இடமகன்ற நீலநிறம் பொருந்திய மலையில், நீண்ட பவழக் கொடி போல தனது கால்களின் செந்நிறம் பொலியவும் விளங்குகின்ற சடாயுவை - பாடல் தொடர்கிறது.

ஆகாயத்தின் கரிய நிறம் சடாயுவின் கால்களின் செந்நிறத்தால் மறைந்து போகிறது; நீலநிற மலை, அவனது பவளம் போல் சிவந்த கால்களின்

நிறத்தால் அழகு பொலிந்து விளங்குகிறது. அவனது சிவந்த கால்கள் மலையில் பதிந்திருப்பது, அம்மலையில் பவழக்கொடி படர்ந்திருப்பது போல்தோற்றுகிறது என்பதும் ஒன்று. பொதுவாகப் பவழக்கொடிகடலில் தான் தோன்றும், இங்கே கம்பன் பவழக் கொடி மலையில் தோன்றியது போல் இருக்கிறது என்று கூறுவது சடாயுவின் கால்களின் செந்நிறத்தை மிகுதியாகச் சிறப்பிக்க என்க.

''நீள் நிறத்தால் சோலை நிறம் பெயர, நீடியதன் தாள் நிறத்தால் பொய்கைத் தலம் சிவப்ப, மால் நிறத்தான் முன் அப்புள் தோன்றும் முளரித்தலை வைகும் அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு'' என்ற நளவெண்பாப் பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

5. தூய்மையன்; இருங்கலை துணிந்த கேள்வியன்;
வாய்மையன்; மறுஇலன்; மதியின் கூர்மையன்;
ஆய்மையில், மந்திரத்து அறிஞன் ஆம்எனச்
சேய்மையின் நோக்குறு சிறுகணான்தனை. (2795)

(இரும் - பெரிய; துணிந்த - கற்றுத் தெளிந்த; மறு - குற்றங்கள்; மதி - அறிவு; ஆய்மையில் - ஆராயுமிடத்து; சேய்மை - நெடுந்தொலைவு)

உள்ளும், புற்மும் தூய்மையானவன்; பெரிய சாத்திர நூல்களைக் கற்றவன்; அத்துடன் தெளிந்த கேள்வியறிவுடையவன்; வாய்மையே பேசும் சத்திய சீலன்; குற்றமற்றவன்; புத்தி கூர்மையுடையவன்; ஆராயுமிடத்து, மந்திரிகளைப்போன்ற அறிஞன்என்று கூறும்படி தொலை நோக்குடைய சிறிய கண்களைப் பெற்றவனாகிய சடாயுவை - பாடல் தொடர்கிறது.

உள்ளும் புறமும் என்பது உடலையும் உள்ளத்தையும் குறித்து நின்றது. இருங்கலை என்பது சகல சாஸ்திரங்களையும் குறிக்கும் துணிந்த கேள்வியன் என்பது ஐயம் திரிபு அறக் கற்றலையும், கற்றபின் தெளிந்த கேள்வியறிவு உடைமையையும் குறிக்கும். வாய்மை என்பது பிற உயிர்க்குத் தீங்கு நேராத வகையில் நிகழ்ந்தது கூறுதலும், பிற உயிர்க்கு நன்மை பயக்கும் வகையில் நிகழாதது கூறுதலுமாம். ''பொய்மையும் வாய்மையிடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்'' என்பது குறள்(292). சடாயுவைக் குறிக்கும் போது, ''பொய் சொல்லாது உயிர்போனான் புள் இருக்கு வேளுரே'' என்பார் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில். மறு என்பது பொதுவாகக் குற்றம் என்று பொருள் படினும், காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்னும் ஆறு குற்றங்களையும் குறிக்கும் என்க. மதியின் கூர்மை என்பது நுட்பத்தினுள்ளும் நுட்பமாக நுழைந்து ஆயும் நுண்ணறிவைக் குறிக்கும். மந்திரத்து அறிஞன் என்பது முன்பு பால காண்டத்துள் தசரதச்சக்கரவர்த்தியின் அமைச்சர்களுக்குரிய எல்லாக் குணநலன்களையும் குறித்தது என்க. ''மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்'' என்பது நீதிமொழி; சிறுகணான் என்பது ஒரு அரிய சொல்லாட்சி. சடாயுவின் உருவத்தை மலைக்கு உவமித்த கவிஞன்

அவனது கண்ணைச் சிறுகண் என்று கூறுவது நோக்கத்தக்கது. சிறுகண் என்றாலும் அது தொலைநோக்கு உடையது என்பதை ''சேய்மையின் நோக்குறு சிறுகண்'' என்று கூறிய நயம் காண்க. இன்றும் நல்ல கூரிய கண்பார்வை உடையவரைக் கழுகுக் கண்ணினான் என்பதையும் கருதுக. ''தீர்க்க தரிசனம்'' என்றும் கொள்ளலாம்.

6. வீட்டிவாள் அவுணரை, விருந்து கூற்றினை
ஊட்டி, வீழ்மிச்சில் தான் உண்டு, நாள்தொறும்
தீட்டி, மேல் இந்திரன் சிறுகண் யானையின்
தோட்டிபோல் தேய்ந்து, ஒளிர் துண்டத்தான்தனை. (2796)

(வீட்டி - அழித்து; கூற்று - இயமன்; மிச்சில் - மிச்சம் / மீதம்; தோட்டி - அங்குசம்; துண்டம் - மூக்கு / அலகு)

வாள் ஏந்திய அசுரர்களை நாள் தோறும் கொன்று, அவர்களை இயமனுக்கு விருந்தாக அமைத்து ஊட்டி, அவை மீதம் வைத்திருக்கும் அவுணர்களின் உடம்பைத் தான் உண்டு, பின்னர் தன் அலகில் படிந்திருக்கும் சதைத் துண்டங்களைப் போக்கும் பொருட்டு, மரங்களில் தன் அலகுகளைத் தீட்டுகின்ற, வானுலகத்து இந்திரனின் சிறிய கண்களையுடைய ஐராவதம் என்னும் யானையின் அங்குசம் போலத் தேய்ந்து ஒளிவீசுகின்ற, மூக்கினை உடைய சடாயுவை - பாடல் தொடர்கிறது.

பிறருக்குத் துன்பம் செய்யும் அரக்கர்களைக் கொல்லுவதும், அவர்களைக் கூற்றுவனுக்கு இரையாக்கி ஊட்டுவிப்பதும் சடாயுவின் நித்தியக் கடன்களாக இருந்தன என்பது புலப்படுத்தப்பட்டது. கூற்றுவனுக்கு ஊட்டிவிட்டு மீதமிருப்பதைத்தான், தான் உண்பான் என்பது, ''வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்'' என்னும் வள்ளுவன் குறளை *(85)*. நினைப்பூட்டுவது காண்க. இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்னும் யானையின் அங்குசத்திற்குச்சடாயுவின்கூரிய மூக்கை உவமை கூறினார். அங்குசத்தின் நுனிவளைந்திருப்பது போல், சடாயுவின் மூக்கின் நுனியும் வளைந்திருக்கும் என்பது கருத்து. கழுகினைப் போலவே யானைக்கும் கண்கள் சிறியன என்பது உணர்க.

7. கோள்இரு நான்கினோடு ஒன்று கூடின
ஆள்உறு திகிரிபோல், ஆரத்தான்தனை,
நீள்உறு மேருவின் நெற்றி முற்றிய
வாள் இரவியின்பொலி மெளலியான்தனை. (2797)

(திகிரி - துருவசக்கரம்; ஆரம் - நவரத்தின மாலை; நீள்உறு - உயர்ந்த; நெற்றி - உச்சி; வாள் - ஒளிவாய்ந்த; இரவி - சூரியன்; மௌலி - மகுடம்)

ஒன்பது கிரகங்களையும் இயக்குகிற சிம்சுமாரம் என்னும் துருவச் சக்கரத்தைப் போல் நவமணி மாலையை யணிந்தவனும், உயர்ந்த

மேருமலையின் உச்சியில் விளங்குகிற ஒளி பொருந்திய சூரியனைப் போலப் பொலிவுற்றுத் திகழ்கின்ற கிரீடத்தை அணிந்தவனுமாகிய சடாயுவை - பாடல் தொடர்கிறது.

ஒன்பது கிரகங்களாவன. சூரியன் (ஞாயிறு), சந்திரன் (திங்கள்), செவ்வாய் (அங்காரகன்), புதன், வியாழன் (பிரகஸ்பதி), வெள்ளி (சுக்கிரன்), சனி, இராகு, கேது என்பன. காற்றின் வடிவமாகக் கயிறுகளினால் கட்டப்பட்ட ஒன்பது கோள்களையும் இயக்குவது துருவனுடைய சிம்சுமாரச் சக்கரம் என்பதாம். அதனைத் தான் ''ஆள் உறுதிகிரி'' என்றார். நவமணிகளாவன - கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பனவாம். நவமணிகளுக்கும் உரிய தெய்வங்கள் நவகோள்களாம் என்பது சோதிடநூல்; ஆரம் என்பது சடாயுவினுடைய கழுத்திலிருக்கும் உரோமப் பகுதியையும், கிரீடம் என்பது அவரது தலையில் இருக்கும் கொண்டையையும் குறித்தது என்க.

8. சொல்பங்கம்உற நிமிர் இசையின் சும்மையை,
அல்பங்கம் உற வரும் அருணன் செம்மலை,
சிற்பம்கொள் பகல் எனக் கடிது சென்றுதீர்
கற்பங்கள் எனைப் பல கண்டுளான்தனை. (2798)

(பங்கம் உறுதல் - குறைவடைதல் / அழிதல் / தோற்றல்; நிமிர் - வளர்கின்ற; இசை - புகழ்; சும்மை - திரட்சி; அல் - இரவு; செம்மல் - மகன்; சிறபம் - அற்பம் / சிறுமை; பகல் - நாள்; கற்பம் - கற்பகாலம்; அருணன் - சூரியனின் தேர்ப்பாகன் / சடாயுவின் தந்தை; எனைப்பல - மிகப்பல)

சொற்கள் போதாமையால் அவை தோல்வியுற்று ஒதுங்கும் படியான, வளர்கின்ற மிக்க புகழின் தொகுதியை உடையவனை, இருள் அழிந்து போகும்படி, ஒளியுடன் தோன்றுகின்ற சூரியனின் தேர்ச்சாரதியாகிய அருணனின் புதல்வனாகியவனை, விரைந்து சென்று முடிந்து போகிற அற்பமான நாட்கள் கழிந்து போவது போல மிகப்பல - கணக்கிலடங்காத கற்ப காலங்களைக் கண்டு கொண்டு இருப்பவனாகிய சடாயுவை - பாடல் தொடர்கிறது.

சடாயு சொல்லுக்கு அடங்காத உயர்ந்த புகழும், நீண்ட ஆயுளும் உடையவன் என்பது பெறப்பட்டது. கற்பம் என்பது பிரமனுக்கு ஒரு நாள்; ஒரு கற்பம் என்பது நானூற்று முப்பத்திரண்டு கோடி வருடங்கள் கொண்டது என்று கூறுவர். எனவே சடாயுவின் ஆயுளை இதன் மூலம் கணக்கிட முடியாது என்பதாம்.

9. மூவரும் சடாயுவை அணுகுதல்

ஓங்கு உயர்நெடுவரை ஒன்றில் நின்று, அது
தாங்கலது இருநிலம் தாழ்ந்து தாழ்வுற,

வீங்கிய வலியினில் இருந்த வீரனை,
ஆங்கு அவர் அணுகினர், அயிர்க்கும் சிந்தையார். (2799)

(வீங்கிய - பெருத்த; அயிர்த்தல் - ஐயுறுதல்; ஆங்கு - சேய்மை)

ஓங்கி உயர்ந்த பெரிய மலை ஒன்றின் மேல் நின்று கொண்டு, அம்மலை அவன் பாரத்தைத் தாங்க மாட்டாமல் பெரிய நிலத்தில் அழுந்திப் புதைந்து போக, பெருத்த வலிமையுடன் வீற்றிருந்த வீரம் மிக்க சடாயுவை, சேய்மையிலிருந்து கண்ட அம்மூவரும், சற்றே ஐயுறும் மனமுடைய வராய் அருகில் நெருங்கி வந்தனர்.

ஓங்கி, உயர், நெடு வரை என்று முதலடியில் கூறி, அது தாழ்ந்து தாழ்வுற என்று இரண்டாம் அடியில் கூறிச் சடாயுவின் வலிமையைச் சிறப்பித்த நயம் நோக்குக. அயிர்க்கும் சிந்தையார் என்பது அவர்கள் சடாயுவின் பேருருவைக் கண்டு அவன் அரக்கனாய் இருப்பானோ என்று சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே வரலானார்கள் என்பதைக் குறிக்கும்.

10. சடாயுவை ஐயுற்று நோக்குதல்

இறுதியைத் தன்வயின் இயற்ற எய்தினான்,
அறிவிலி அரக்கனாம்; அல்லனாம் எனின்,
எறுழ்வலிக் கலுழனே என்ன உன்னி, அச்
செறிகழல் வீரரும் செயிர்த்து நோக்கினார். (2800)

(இறுதி - அழிவு; எறுழ் - மிக்க; கலுழன் - கருடன்; செயிர்த்து - கோபித்து; உன்னி - நினைத்து; தன்வயின் - தனக்கு)

அங்கு வந்து சேர்ந்த, நெருங்கிய வீரக்கழல்களை அணிந்துள்ள வீரர்களாகிய ''இராம இலக்குவர் இவன் தனக்கு அழிவை உண்டாக்கிக் கொள்ள இங்கு வந்திருக்கின்ற அறிவற்ற ஓர் அரக்கனாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், மிக்க வலிமை பெற்ற அந்தக் கருடனாக இருக்க வேண்டும்'' என்று எண்ணி, அவனைச் சந்தேகத்துடனும், கோபத்துடனும் உற்று நோக்கினார்கள்.

இவர்கள் மூலமாகத் தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்ள வந்திருப்பதால் அவனை அறிவிலி என்றும், அவன் பேருருவைக் கருத்திற்கொண்டு, அவன் ஓர் அரக்கனாக இருக்கவும் கூடும் என்றும் ஐயுற்றனர். இது முதலில் அவர்கள் கொண்ட நினைவு. அவனுடைய பொன்மயமான மேனியையும், ஒளிவீசும் இறக்கைகளையும் கண்டு அவன் கருடனாக இருக்கவும் கூடும் என்று பின்னர் நினைத்தனர் என்பதாம். தம்மைப் பகைத்து வந்தவர் யாராயிருந்தாலும் இறந்து படுவர் என்பது உறுதி. ஆதலின் ''இறுதியைத் தன்வயின் இயற்ற எய்தினான்'' என்று இறந்த காலத்தில் கூறினான் என்க. ஒரு பொருளின் மேல், இதுவா, அதுவா என்று இருவகை எண்ணம் ஏற்படுவதே ஐயம் எனப்படும்.

11. சடாயுவும் இராம இலக்குவர்களைச் சந்தேகத்துடன் நோக்குதல்

''வனைகழல், வரிசிலை, மதுகை மைந்தரை,
அனையவன் தானும் கண்டு, அயிர்த்து நோக்கினான்;
வினைஅறு நோன்பினர் அல்லர்; வில்லினர்;
புனைசடை முடியினர்; புலவரோ?'' எனா. (2801)

(வனை - கட்டிய; வரி - கட்டமைந்த; மதுகை - வலிமை; புனை - கட்டப்பட்ட; நோன்பினர் - தவத்தினர்; புலவர் - தேவர்கள்; அயிர்த்து - ஐயமுற்று)

அத்தகைய சடாயு, வீரக்கழலணிந்தவர்களும், கட்டமைந்த வில்லினைக் கையில் ஏந்தியவர்களும், வலிமையும் உடைய குமாரர் களைத் தானும் பார்த்து, ''இவர்கள் இருவினைகளையும் களையும் தவத்தை மேற்கொண்டவர் அல்லர், காரணம் கையில் வில்லேந்தி யிருக்கிறார்கள்; ஆனால் சடை முடி தரித்திருக்கிறார்கள், எனவே தேவர்களோ?'' என்றும் ஐயமுற்று மனத்தால் எண்ணிப்பார்த்தான்.

''மைந்தரை'' என்பது அரச குமாரர்களை என்றும், தன் நண்பன் தசரதனின் மைந்தரை என்றும், வலிமையுடையவர்களை என்றும் பொருள்படும். மைந்து - வலிமை; இரண்டாம் அடியில் கண்டு, என்றும் நோக்கினான் என்றும் கூறுவதைக் காண்க. கண்டு என்பது கண்களால் காண்பதையும்; நோக்குதல் என்பது மனத்தால் எண்ணுவதையும் குறிக்கும். இதனை நோக்கல் நோக்கம் என்பார் தொல்காப்பியர். அவர்கள் இருவேறு கோணங்களில் பார்த்தது போலவே, இவனும் இருகோணங் களில் பார்க்கிறான். தவக்கோலம் பூண்டிருந்தாலும், அதற்கு மாறுபட்டுக் கையில் போருக்குரிய வில்லினை ஏந்தியிருப்பதால் தவசியர்கள் அல்லர் என்று முடிவு கொள்கிறான். பின்னர் அவர்கள் சடைமுடியையும் மேனி ஒளியையும் வனப்பையும் கண்டு, தேவர்களாயிருப்பார்களோ என்றும் ஐயுற்று நோக்கினான் என்க.

12. ''புரந்தரன் முதலிய புலவர் யாரையும்
நிரந்தரம் நோக்குவென்; நேமியானும், அவ்
வரம்தரும் இறைவனும், மழுவலாளனும்
கரந்திலர் என்னை; யான் என்றும் காண்பெனால்''. (2802)

(புரந்தரன் - இந்திரன்; புலவர் - தேவர்கள்; நிரந்தரம் - எப்பொழுதும்; நேமி - சக்கரப்படை; கரத்தல் - ஒளித்தல்)

''இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரையும் நான் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருப்பவன்; சக்கரப்படையையுடைய திருமாலும், வேண்டுவார்க்கு வேண்டும் வரம் அருளும் அந்தப் பிரமனும், மழுப்படையைக் கையிலேந்திய சிவபெருமானும் என்னைக் கண்டு

மறைந்து ஒளிந்து கொள்ள மாட்டார்கள்; வெளிப்பட்டுத் தோன்றுவர்; நான் என்றும் அவர்களைக் கண்டு கொண்டிருப்பவன். எனவே இவர்கள் முத்தேவருமல்லர் இந்திரனும் அல்லர்'' என்று முடிவு செய்கிறான் சடாயு.

முத்தேவரும் வரம் தருபவரே. ஆயினும் சிறப்பாகப் பிரமதேவரையே அனைவரும் நாடித் தவம் செய்வது நோக்கி இவ்வாறு கூறப்பட்டது என்க. இம்மூவரும் என்னிடம் தங்கள் உருவை மறைத்துக் கொள்ள மாட்டார்கள். தங்களின் இயற்கையான உருவத்துடனே தோன்றுவர் என்பதாம். இச்செய்யுளிலிருந்து சடாயு நாள்தோறும் சிவபெருமான், திருமால், பிரமன் ஆகிய மூவரையும் வழிபடுபவன் என்பது புலப்படுகிறது. சடாயு புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன் கோவிலில்) சிவனை வழி பட்டதாகத் திருஞானசம்பந்தரும், திருப்புட்குழியில் திருமாலை வழிபட்டதாகத் திருமங்கையாழ்வாரும் தம் தேவாரத்திலும், பெரிய திருமொழியிலும் கூறியிருப்பதை அறிய முடிகிறது. ஆனால் நம் நாட்டு கோவில்களில் பிரமதேவர் வழிபாடு இல்லாமையால் இதைப் பற்றி அறியும் வாய்ப்பு இல்லை என்க.

13. ''காமன் என்பவனையும் கண்ணின் நோக்கினேன்;
தாமரைச் செங்கண் இத்தடக்கை வீரர்கள்,
பூமரு பொலங்கழல் பொடியினோடும் ஒப்பு
ஆம் என அறிகிலென்; ஆர்கொலாம் இவர்கள்?'' (2803)

(காமன் - மன்மதன்; பூ - தாமரை; மரு - போன்ற; பொலன் - அழகிய; பொடி - துகள் / தூசு; அறிதல் - நினைத்தலுமாம்)

''அழகிய வடிவிற்குச் சிறப்பாகச் சொல்லப்படுகின்ற மன்மதனை நான் என் கண்களால் கண்டிருக்கின்றேன்; தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையும், பெரிய நீண்ட கைகளையும் உடைய இவ்வீரர்களின் தாமரை மலரை ஒத்திருக்கின்ற அழகிய பாதங்களின் தூசுக்குக் கூட மன்மதன் ஒப்பாவான் என்று என்னால் நினைக்க முடியவில்லை; எனவே இவர்கள் யாராய் இருக்க முடியும்?'' என்று எண்ணுகிறான் சடாயு.

இராம இலக்குவரின் கால் தூசுக்குக்கூட மன்மதனின் அழகு ஒப்பாகாது என்பது சடாயுவின் கூற்று. சடாயு மன்மதனைச் சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணால் எரிப்பதற்கு முன்பே-அனங்கனாவதற்கு முன்பே - அவன் வில்லேந்திய கையுடையவனாய் இருக்கும் போதே கண்டிருக்கிறான் என்பது புலப்படுகிறது. சடாயுவைப் போல் சாம்பவனும் மன்மதனைக் கண்டிருப்பதாக ஒரு தனிப்பாடல் தெரிவிக்கிறது. பாடல் இது. ''அலைகடல் கடையக் கண்டேன்; அயன் ஐந்து முகமும் கண்டேன்; மலை இருசிறகு கண்டேன்; வாரிதி நன்னீர் கண்டேன்; சிலை மதன் வடிவு கண்டேன்; சிவன் சுத்தக் கழுத்தும் கண்டேன்; குலவு அரி இருகண் கண்டேன்; கொடுத்ததை வாங்கக் காணேன்'' என்பது பாடல். ''ஒப்பாம் என அறிகிலேன்'' என்பதால் ஒப்பாகா மாட்டான் என்பதை அறிவேன் என்பது பெறப்படுகிறது.

14. ''உலகு ஒரு மூன்றும் தம் உடைமை ஆக்குறும்
அலகு அறும் இலக்கணம் அமைந்த மெய்யினர்;
மலர்மகட்கு உவமையாளோடும், வந்த இச்
சிலைவலி வீரரைத் தெரிகிலேன்'' எனா, (2804)

(அலகு அறும் - அளவற்ற) (குளகப்பாடல்)

''மண், விண், பாதாளம் என்ற மூன்று உலகங்களையும் தமக்கு உரிமையாக்கிக் கொள்ளும் ஆற்றலும், அளவற்ற சாமுத்திரிகா லக்ஷணமும் அமைந்த மேனியையும் உடையவர்களாய் இருக்கிறார்கள்; இவர்களுடன் கூட தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் திருமகளுக்கே உவமையாகக் கூறக் கூடிய அழகு பொருந்திய ஒரு பெண்ணோடும் வந்திருக்கும் இந்த வில் வித்தையில் வலிமை பெற்ற வீரர்களை இன்னா ரென்று என்னால் தெரிந்துகொள்ள முடிய வில்லையே?'' என்று எண்ணி - பாடல் தொடர்கிறது.

பல கற்பகாலம் வாழ்ந்திருந்து எல்லோரையும் அறிந்துள்ள என்னால் இவர்கள் இருவரும் யார் என்று அறிய முடியவில்லையே என்று ஏங்குகிறான் என்க. இவர்களது மேனி ஒளியை நோக்கும் போது, இவர்கள் ''திரிலோகாதிபதிகளாய்'' இருப்பரோ என எண்ணியதைத்தான் முதல் இரு அடிகளில் கவிஞன் கூறுகிறான் என்க.

15. ''கருமலை செம்மலை அனைய காட்சியர்;
திருமகிழ் மார்பினர்; செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தின், என் துணைவன் ஆழியான்
ஒருவனை, இருவரும் ஒத்துளார் அரோ!'' (2805)

(காட்சி - தோற்றம்; திரு - வெற்றிச்செல்வி; குணம் - பண்பு; துணைவன் - நண்பன்; ஆழியான் - தசரதன்; கருமலை - இந்திரநீலபர்வதம்; செம்மலை - செம்பொன் நிறமுள்ள மேரு மலை)

''கரிய இந்திர நீலமலையையும், சிவந்த செம்பொன் நிறமுள்ள மேருமலையையும் போன்ற தோற்ற முடையவர்களாயிருக்கிறார்கள்; வெற்றித் திருமகள் மகிழ்ச்சியோடு வீற்றிருக்கும் மார்பினை யுடையவர்களாயிருக்கிறார்கள்; சிவந்த கண்களையுடைய இவ்வீரர்கள், யாராலும் பெறுதற்கரிய நற்குணங்கள் வாய்க்கப் பெற்ற என் நண்பனும், ஆணைச் சக்கரத்தை உடையவனுமான ஒப்பற்ற தசரதச்சக்கரவர்த்தியை சாயலில் ஒத்திருக்கின்றனரே!'' என வியப்புற்றான் சடாயு.

இராமனின் தோற்றம் கருமலையாகவும், இலக்குவனின் தோற்றம் செம்மலையாகவும் தோற்றியது என்க. ''செங்கண்வீரர்'' என்றது, திருமாலைச் ''செங்கண்மால்'' என்று அழைப்பது போல் எனக் கொள்க. தந்தையின் சாயை புதல்வர்களிடம் விளங்குவது இயல்பே. எனவே ''ஆழியான் ஒருவனை இருவரும் ஒத்துளர்'' என்றான் என்க.

16. சாடாயு, அவர்களை யார் என வினவுதல்

எனப்பல நினைப்பினன், மனத்துள் எண்ணுவான்,
சினப்படை வீரர்மேல் செல்லும் அன்பினான்,
''கனப்படை வரிசிலைக் காளை நீர்கள் யார்?
மனப்பட எனக்கு உரை வழங்குவீர்'' என்றான். (2806)

(கன - பெரிய; மனப்பட - மனத்தில் பதியுமாறு)

என்று பலவாறான எண்ணங்களை மனத்துள் கொண்டவனான சடாயு, சினத்தையுடைய படைகளைக் கொண்ட வீரர்களான இராம இலக்குவர் மேல் செல்லுகின்ற அன்பை உடையவனாகி, ''பெரிய கட்டமைந்த விற்படையை உடைய காளை போன்றவர்களாகிய நீங்கள் யார்? என் மனத்தில் பதியும்படி விளக்கமாகக் கூறுங்கள்'' என்றான்.

சினப்படை என்ற சொல் சினத்தையுடைய காளையர்கள் கொண்டுள்ள விற்படையைக் குறிக்கும். தன் நண்பன் தசரதனின் சாயல் இவ்விரு வரிடத்தும் தெரிந்ததால் ''செல்லும் அன்பினான்'' என்றார். ''நீர்கள்'' என்ற சொல்லாட்சி ஒரு புதுத்தமிழ் - கம்பனே கையாண்ட தமிழ்ச் சொல்.

17. இராம இலக்குவர் மறுமொழி கூறுதல்

வினவிய காலையில், மெய்ம்மை அல்லது
புனை மலர்த்தார் அவர் புகல்கிலாமையால்,
''கனைகடல் நெடுநிலம் காவல் ஆழியான்,
வனைகழல் தயரதன் மைந்தர் யாம்'' என்றார். (2807)

(காலை - பொழுது / சமயம்; புனை - தொடுத்த / அழகிய; மெய்ம்மை - உண்மை; கனை - ஒலிக்கின்ற; வனை - கட்டிய; ஆழி - ஆணைச்சக்கரம்; புகல்தல் - பேசுதல்)

அவ்வாறு சடாயு கேட்ட பொழுது, உண்மையைத் தவிர வேறு ஒன்றும் பேசத் தெரியாதவர்களும், தொடுத்த அழகிய மலர் மாலையை அணிந்துள்ளவருமான இராம இலக்குவர், ''ஒலிக்கின்ற கடல்களால் சூழப்பெற்ற இப்பெரிய உலகம் முழுவதும் காத்தல் தொழில் புரிகின்ற ஆணைச் சக்கரத்தையும், வீரக்கழல்களையும் அணிந்தவனாகிய தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் நாங்கள்'' என்று கூறினர்.

முன் பின் அறிமுகமாகாதவர்களிடம் தன்னுடைய உண்மை நிலையைக் கூறக் கூடாது என்பது அரச நீதி. எனினும் இராம இலக்குவர் யாருக்கும் அச்சம் இன்றி உண்மையே பேசுபவர்கள் எனவே உண்மையைக்கூறினர்என்பதாம். பொய் பேசாதவர்கள்பொய்ம்மை புகல் இலாமையால் என்று கூறுவதைக் காட்டிலும், ''மெய்ம்மை அல்லது புகல் இலார்'' என்று கூறியது அவர்களுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாகும். இன்னும் ஒன்று, முதலில் சடாயுவைக் கண்ட இராம இலக்குவர் இவன்

ஓர் அரக்கனாய் இருப்பானோ என்று ஐயுற்றனர். எனவே அவர்கள் அவனிடம் உண்மையே கூற வேண்டும் என்பது இயல்பல்ல. அவசியமும் அல்ல. எனினும் உண்மை நிலையையே கூறினர் என்றது ஒரு நயம். ஆழியான் என்ற சொல் சக்கரவர்த்தி என்ற பொருளில் பல இடங்களிலும் கையாளப்பட்டிருப்பதை உணர்க. தசரதன் என்பதற்குப் பத்துத் திக்குகளிலும் தன் தேரைச் செலுத்தி வெற்றி கண்டவன் என்பது பொருள். வடநூலார் தச என்ற சொல்லுக்குப் பட்சி என்று பொருள் கொண்டு, பட்சிகளின் அரசனான கருடனைத் தன் தேரில் கொடியாகக் கொண்டவன் என்றும் கூறுவர்.

18. சடாயு, தசரதனைப் பற்றிக் கேட்டல்

உரைத்தலும், பொங்கிய உவகை வேலையன்,
தரைத்தலை இழிந்து, அவர்த் தழுவும் காதலன்,
''விரைத் தடம் தாரினன்! வேந்தர் வேந்தன்தன்
வரைத்தடம் தோள் இணை வலியவோ?'' என்றான். (2808)

(வேலை - கடல்; இழிந்து - இறங்கி வந்து; விரை - மணம்; தடம் - பெரிய; தார் - மாலை; வேந்தர் வேந்தன் - சக்கரவர்த்தி; வரை - மலை; இணை - இரண்டு; தலை - இடம்; உவகை வேலை - ஆனந்த சாகரம்)

அவ்வாறு அவர்கள் கூறியவுடன், கடல் போன்று பொங்கியெழும் மகிழ்ச்சியுடையவனாய், மலையிலிருந்து கீழ் இறங்கி வந்து, தரையிடத்து நின்று கொண்டு, அவர்களை மிக்க அன்புடன் தழுவி, ''நறுமணம் மிக்க மலர் மாலையணிந்தவனும், அரசர்க்கரசனுமாகிய தசரதச் சக்கரவர்த்தி யின் மலை போன்று அகன்ற இரண்டு தோள்களும் வலியனவாய் உள்ளனவோ?'' என்று கேட்டான்.

இது பொதுவாக அரசர்களை நலம் விசாரிக்கும் முறை. அரசர்களின் வலிய தோள்கள் தான் ஒன்னாரை ஒறுத்து, அரசபாரத்தைச் சுமந்து, உலக மக்களைக் காப்பாற்றுவன என்பது உலக வழக்கு. எனவே தோள்கள் வலியனவாய் இருக்கின்றனவா? என்று கேட்டான் என்க. ''தசரதன் நலமாயிருக்கிறானா?'' என்பது கருத்து.

19. தசரதன் இறந்தமை கேட்டு சடாயு வருந்துதல்

மறக்க முற்றாத தன்வாய்மை காத்து, அவன்
துறக்கம் உற்றான் என, இராமன் சொல்லலும்,
இறக்கம் உற்றான் என ஏக்கம் எய்தினான்;
உறக்கம் உற்றான் என உணர்வு நீங்கினான். (2809)

(முற்றாத - இயலாத / முடியாத; இறக்கம் - நிலைத்தடு மாற்றம்; உணர்வு நீங்குதல் - மூச்சற்று விழுதல்; ஏக்கம் - ஏமாற்றமுமாம்)

''தன்னால் மறக்க இயலாததான, தனக்கே உரிய சத்தியத்தைக் காத்துத் தசரதன்சுவர்க்கம் சென்றான்'' என்று இராமன்கூறியவுடன், தன்நிலையில் தடுமாற்றமுற்று உளம் வருந்தினான் சடாயு. தூங்குவது போலத் தன் அறிவும் நீங்கப் பெற்று, மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான்.

ஏக்கம் ஏமாற்றத்தையும் குறிக்கும். ''நான் ஆவி, நீ உடல்'' என்று தசரதன் சடாயுவைப் பற்றிக் கூறியிருத்தலால், இப்போது இவ்வுடலை மட்டும் விட்டு விட்டு அவன் ஆவி பிரிந்து இறந்து விட்டானே என்று அறிந்ததால் உண்டான ஏமாற்றம் என்றும் கூறுவதுண்டு. இங்கே ஒன்று நோக்க வேண்டும். இதுவரையிலும் யார் கேள்வி கேட்டாலும் இராமனுக்குப் பதிலாக இலக்குவனே பதில் கூறி வந்திருக்கிறான். இங்கு மட்டும் சடாயுவின் கேள்விக்கு இலக்குவனை முந்திக் கொண்டு இராமன் பதில் கூறுவதைக் கவனிக்க வேண்டும். காரணம் இலக்குவனுக்கு இன்னும் தசரதன் மேல் தான் கொண்ட சினம் தணிய வில்லை என்பதாம். எனவே சடாயுவின் கேள்விக்குரிய மாற்றத்தை மட்டும் இராமனே கூறினான் என்க.

20. தழுவினர், எடுத்தனர் தடக்கையால்; முகம்
கழுவினர் இருவரும் கண்ணின் நீரினால்;
வழுவிய இன்னுயிர் வந்த மன்னனும்
அழிவுறு நெஞ்சினன், அரற்றினான் அரோ! (2810)

(மன்னன் - கழுகின் வேந்தன்; வழுவிய - நீங்கிய; அரற்றுதல் - வாய் விட்டு அழுது புலம்புதல்)

இராம இலக்குவர் இருவரும், சடாயுவைத் தமது பெரிய கைகளால் தழுவி, வாரி எடுத்து, தங்கள் கண்களில் இருந்து பெருகுகின்ற கண்ணீரினால் அவன் முகத்தைக் கழுவினர்; உயிர்போய் விட்ட நிலையில் இருந்த கழுகுக்கு அரசனாகிய சடாயுவும், உயிர் மீண்டு வந்ததும், மனம் அழிந்து, வாய் விட்டு அழுது புலம்பலானான்.

அவர்கள் இருவரும் இவன் மூர்ச்சித்து விழுந்ததைக் கண்டு ஆற்றாது பெருக்கிய கண்ணீர் அவன் முகத்தில் பட்டதும், அவன் மூர்ச்சை தெளிந்து உணர்வு பெற்று எழுந்தான் என்பதாம். ''அஞ்சனம் தோய் கண்ணில் அருவி நீர் ஆங்கு அவர்க்கு மஞ்சன நீராக வழிந்தோட'' என்பது நளவெண்பா. முகத்தைக் கழுவும் அளவுக்கு அவர்களுக்குக் கண்ணீர் பெருகியது என்பது, அவர்கள் சடாயுவின்பால் கொண்ட பேரன்பையும், அவன் நினைவிழந்ததால் அவர்கள் கொண்ட துயர மிகுதியையும் குறிக்கும்.

21. சடாயு அழுது புலம்புதல் [5 பாடல்கள்]

''பரவல் அரும் கொடைக்கும், நின்தன் பனிக்குடைக்கும்;
பொறைக்கும், நெடும் பண்பு தோற்ற
கரவல் அரும் கற்பகமும், உடுபதியும்,
கடல் இடமும், களித்து வாழப்

புரவலர்தம் புரவலனே! பொய்ப்பகையே!
மெய்க்கு அணியே! புகழின் வாழ்வே!
இரவலரும், நல்லறமும், யானும், இனி
என்பட நீத்து ஏகினாயே!'' (2811)

(புரவலர் - அரசர்; வாழ்வு - வாழ்விடம்; பரவல் - புகழ்தல்; பனி - குளிர்ந்த; நெடும் - சிறந்த; கரவல் - ஒளித்தல்; உடுபதி - சந்திரன்; இடம் - பூமி; என்பட - பெரிய துன்பத்தை அடைய; என் - பெரிய)

''அரசர்க்கெல்லாம் அரசனே! பொய்ம்மைக்குப் பகைவனாகிய சத்தியசீலனே! மெய்ம்மைக்கு அணிகலனாக விளங்குபவனே! புகழுக்கே ஒரு வாழ்விடமாகியவனே! புலவர்களாலும் புகழ்தற்கு அரிய நின் வள்ளல் தன்மை, உனது குளிர்ச்சி பொருந்திய வெண் கொற்றக் குடை, உனது பொறுமை ஆகிய இந்நற்பண்புகளுக்கு இதுவரை தோற்றிருந்த, வேண்டு வார்க்கு வேண்டியதை ஒளிக்காமல் கொடுத்து வந்த கற்பகமரமும், விண்மீன்களின் தலைவனாகிய சந்திரனும் கடல் சூழ்ந்த இந்தப் பூமியிடமும், நீ இறந்ததால், இனி அவைகளுடன் போட்டிபோடுவார் இல்லை என்று கருதி, மிக்க மகிழ்ச்சியுற்று வாழ்வன ஆகும். ஆனால் உன்னிடம் வந்து யாசிப்பவர்களும், நல்ல தரும நெறிகளும், நானும், இனி என்ன செய்வோம்! எங்கே போவோம்! எங்களைத் பெருந்துன்பத்தில் ஆழ்த்தி விட்டு, நீ மட்டும் இறந்து போனாயே!'' என்று புலம்பினான் சடாயு.

இங்கே தசரதனது மூன்று முக்கிய நற்பண்புகள் பற்றிக் கூறிப் புலம்புகிறான் சடாயு. ஒன்று அவனது வள்ளல் தன்மை; இரண்டு அவனது தண்மை; மூன்று அவனது பொறுமை. பொதுவாக வள்ளல் தன்மைக்குத் தேவலோகத்துக் கற்பகத் தருவையும், தண்மைக்குச் சந்திரனையும், பொறுமைக்கு நிலத்தையும் உவமை கூறுவது மரபு. ஆனால் சடாயு கற்பகத்தருவின் வண்மையை விடத் தசரதனது வள்ளன்மை சிறந்தது என்றும், நிலத்தின் பொறுமையை விடத் தசரதனது பொறுமை சிறந்தது என்றும் கூறுகிறான். எப்படி? தேவருலகத்துக் கற்பகத்தரு வேண்டிக் கேட்போருக்கு மட்டுமே வேண்டினவற்றைக் கொடுக்கும். ஆனால் தசரதன் இரவலர் வந்து யாசிப்பதற்கு முன்பே, அவர்கள் குறிப்பு அறிந்து, வேண்டியது மட்டுமல்ல, அதற்கு மேலும் கொடுக்கும் தருகை நீண்ட கையான், ஈந்தே கடந்தான் இரந்தோர் கடலை என்றும் கூறுகிறான். விண்மீன்களின் தலைவனாகிய சந்திரன் களங்கம் உள்ளவன் அவனுக்குத் தேய்தலும் வளர்தலும் உண்டு. அவன் இரவில் மட்டுமே குளிர்ச்சி தருபவன். ஆனால் தசரதன் குற்றமற்றவன், தேய்தலும் வளர்ச்சியுமின்றி எப்போதும் ஒரு தன்மைத்தாய் எல்லார்பாலும் கருணை பொழிபவன். இரவுபகலின்றி எப்போதும் தண்மையைப் பரப்புபவன் என்கிறான் சடாயு. நிலம் அகழ்வாரைத் தான் தாங்கும். ஆனால் தசரதன் தன்னை இகழ்வாரைப் பொறுப்பதோடு மட்டுமில்லாமல், அந்நிலத்தையே தாங்குகின்ற பொறுமையுடையவன். இப்போது தசரதன் இறந்ததனால்

இம்மூன்றும், கற்பகத்தருவும், சந்திரனும், நிலமும் தம்முடன் போட்டி யிட ஒருவரும் இல்லையென்று இறுமாந்து இருக்கின்றன. ஆனால் அவர்களின் மகிழ்ச்சிக்கு மாறாக தசரதனிடமிருந்து யாசித்துப் பெறுபவர்களும், நல்ல அறத்தன்மைகளும், நானும் மட்டும் இப்போது என்ன செய்வதன்று அறியாது பெருந்துன்பம் உற்று வருந்துகிறோம் என்றான் என்க. புகழ்தான் ஒருவனுக்கு வாழ்வின் புகலிடம் என்பதாம்.

22. ''அலங்காரம் என உலகுக்கு அமுது அளிக்கும்
தனிக் குடையாய்! ஆழி சூழ்ந்த
நிலம் காவல் அதுகிடக்க; நிலையாத
நிலை உடையேன்; நேய நெஞ்சின்
நலம்காண நடந்தனையோ? நாயகனே!
தீவினையேன்; நண்பின் நின்றும்
விலங்கு ஆனேன்; ஆதலினால் விலங்கினேன்;
இன்னும் உயிர் விட்டிலேனால்''. (2812)

(தனி - ஒப்பற்ற; நிலை - இயல்பு; கிடக்க - விடுத்து; விலங்குதல் - விலகுதல்; நிலையாத நிலை - சஞ்சலம்; நலம் - சிறப்பு)

''தலைவனே! உனது வெண் கொற்றக் குடை ஒரு அலங்காரப் பொருள் அன்று. அது உலகத்தார்க்குத் தேவாமிர்தம் போன்று அருளை அளிக்கும் ஒப்பற்ற குடை; அத்தகைய குடையைப் பெற்றவனே! கடலால் சூழப் பெற்ற இந்த நிலவுலகத்தைக் காக்கின்ற தொழிலை ஒரு பொருட்டாக மதிக்காமல், அதனைவிடுத்து, நிலையற்ற இயல்பு படைத்த - சஞ்சல மனம் கொண்ட என்னுடைய அன்பு மிகுந்த உள்ளத்தின் சிறப்பைக் காண வேண்டும் என்று கருதித்தான் இவ்வுலகை விட்டு நீங்கிப் போனாயோ? பாவியாகிய நான், நமது நட்புத் தன்மையினின்றும் விலகி விட்டேன். காரணம், நான்பிறப்பால்விலங்கினத்தைச்சேர்ந்தவன். நீஇறந்து விட்டாய் என்று தெரிந்தும், இன்னும் உயிர் விடாமல் இருக்கிறேனே! இதை என்னென்று சொல்வது?'' என்று புலம்புகிறான் சடாயு.

பொதுவாக வெண்கொற்றக் குடை ஒரு அலங்காரப் பொருள் போல வெளிக்குத் தோற்றம் தந்தாலும், அது தேவாமிர்தத்தைத் தந்தது போலக் கோசல நாட்டு மக்களைப் பாதுகாத்து வந்தது என்பதாம். ''கண்பொர விளங்கும் நின் விண்பொரு வியன் குடை, வெயில் மறைக் கொண்டன்றோ; அன்றே; வருந்தியகுடி மறைப்பதுவே'' என்பது புறநானூறு. ''கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்று இவ்வங்கண் உலகு அளித்தலான் திங்களைப் போற்றுதும்'' என்பது சிலப்பதிகாரம். நண்பர் இறந்துவிடின், அவனது உண்மையான நண்பரும் இறந்துபடுவர் என்பது நாம் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பிலிருந்து அறிந்த ஒரு செய்தி. இதனைக் குறிக்கும் ஒரு நல்ல பாடலைக் கேளுங்கள். ''காணுதல் ஒழிக நல்லார்; காணின், அங்கு அவர்பால் நட்புப் பேணுதல் ஒழிக; பேணில் பிரிவுறல் ஒழிக; உற்றால்

மாண் உயர் உடம்பில் வாழும் வாழ்க்கை போய் ஒழிக'' இது பிரபுலிங்க லீலை என்னும் இலக்கியத்தில் வரும் ஒரு பொருள் செறிந்த பாடல்.

தசரதன் சடாயு நட்பிற்கு மேற்கொள் காட்டப்பட வேண்டிய பாடல். அன்புடையார்க்கு ஆறு குணங்கள் உண்டு என்பது நூற்கொள்கை அவற்றுள் தலைசிறந்த பண்பாகக் கருதப்படுவது ''சாவிற் சாதல்'' என்பது. ஆனால் இங்கே சடாயு தன் நண்பன் தசரதன் இறந்த பின்பும், இறந்ததைக் கேள்வியுற்ற பின்னும் தான் இறக்காமல் இருப்பதற்காகத் தன்னைத் தானே ''நிலையாத நிலையுடையேன், தீவினையேன், விலங்கு ஆனேன்'' என்றெல்லாம் நொந்து கொள்ளுகிறான் என்க.

23. ''தயிர் உடைக்கும் மத்து என்ன, உலகை நலி
சம்பரனைத் தடிந்த அந்நாள்
அயிர் கிடக்கும் கடல் வலயத்தவர் அறிய,
''நீ உடல்; நான் ஆவி'' என்று
செயிர் கிடத்தல் செய்யாத திருமனத்தாய்!
செப்பினாய்; திறம்பா நின்சொல்;
உயிர் கிடக்க, உடலை விசும்பு ஏற்றினார்
உணர்வு இறந்த கூற்றினாரே''. (2813)

(செயிர் - குற்றம்; கிடத்தல் - தங்குதல்; திரு - சிறந்த; நலி - தாக்கி வருத்திய; தடிந்த - வென்று கொன்ற; அயிர் - கரிய நுண்மணல்; வலயத்தவர் - உலகத்தவர்; திறம்பா - மாறுபடாதன; விசும்பு - விண்ணுலகு; வலயம் - நிலவட்டம்; உணர்வு - அறிவு; உடலிலிருந்து உயிரைக் கூறுபடுத்திக் கொண்டு செல்பவன் என்பதால் கூற்றுவன், இயமனுக்குக் காரணப் பெயர்)

''குற்றம் தங்காத அழகிய சிறந்த மனத்தை உடையவனே! கட்டித் தயிரைக் கலக்கும் மத்துப் போன்று, இவ்வுலகத்தவரைக் கலக்கி வருத்தமுறச் செய்த சம்பராசுரன் என்ற அசுரனை முற்காலத்தில் நீ போர் செய்து வென்று, அவனை அழித்த போது, கரிய நுண்மணல் மிக்கிருக்கின்ற கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தவர்களின் முன்னிலையில், அவர்கள் சான்றாக, ''நீ உடல், நான் உயிர்'' என்று அன்புடன் கூறினாயே! அவ் வார்த்தைகள் மாறுபடாதவை. ஆனால் அறிவற்ற இயமன் தான், உயிராகிய நான் இங்கே இருக்க, உடலாகிய உன்னை விண்ணுலகுக்கு அனுப்பி விட்டான்'' என்று புலம்பினான் சடாயு.

தயிர் - உலக உயிர்கள்; மத்து - சம்பராசுரன்; தயிரைக் கடையும் மத்தைப் போலசம்பராசுரன் உலகத்தவர்க்குத்துன்பம் இழைத்து வந்தான் என்பதும், அப்போது இந்திரன் வந்து தசரதனை அணுகி உதவி வேண்டினான் என்பதும், தசரதன் கைகேயியின் உதவியுடன் சம்பராசுரனை வென்று அவனை அழித்து, இந்திர பதவியை மீட்டும் இந்திரனுக்கே அளித்தான் என்பதும் நாம் பால காண்டத்தில் கண்டோம். அப்பொழுது சடாயுவும்

தேவர்களுக்காக உதவி செய்தான் என்றும், அதனைப் பாராட்டித் தசரதன் ''நீ உடல் நான் உயிர்'' என்றும் விண்ணோர், மண்ணோர் சான்றாகக் கூறினான் என்றும் இப்போது இங்கே சடாயுவின் மூலமாக நாம் அறிகிறோம். இது போலக் கம்பன், ஒரு நிகழ்ச்சி நிகழும் போது, நிகழும் இடத்தில் அதனைக் கூறாது, பின்னர் நிகழ்ச்சியில் ஈடுபட்டவர்கள் கூற்றாக எங்காவது காப்பியத்தில் ஓரிடத்தில் சொல்லிச் செல்வது கண்கூடு.

பொதுவாக இயமன் உடம்பிலிருந்து தான் உயிரைப் பிரித்துச் செல்வான். ஆனால் இங்கே அந்நிலையைமாற்றி உயிராகிய என்னை விட்டு விட்டு, உடலாகிய உன்னைப் பிரித்து எடுத்து விண் உலகுக்கு அனுப்பி விட்டானே? என்னே மதியீனம்! என்று இகழ்கிறான். ''ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே'' என்பது முதுமொழி. கூற்றுவனார் என்று மரியாதையாகக் கூறியபோதே அறிவு கெட்டவன் என்றும் கூறிய முரண்பாடு காண்க. ''உணர்விறந்த கூற்றினாரே'' என்பது அறிவு கெட்ட இயமனே என்பதைக் குறிக்கும். ''நனி பேதையே! நயன்இல் கூற்றம்'' என்பது புறநானூறு.

24. ''எழுவது ஓர்இசை பெருக, இப்பொழுதே
ஒப்பரிய எரியும் தீயில்
விழுவதே நிற்க, மடமெல்லியலார்
தம்மைப்போல், நிலத்தின்மேல் வீழ்ந்து
அழுவதோ யான்? என்னா, அறிவுற்றான்
என எழுந்து, ஆங்கு அவரை நோக்கி,
முழுவதும் ஏழ் உலகு உடையான் மைந்தன்மீர்!
கேண்மின்'' என, முறையில் சொல்வான். (2814)

(எழுவது - உண்டாவது; இசை - புகழ்; நிற்க - விடுத்து; மட - பேதைமை; மெல்லியலார் - பெண்டிர்; அறிவு - தெளிவு)

உண்டாகின்ற ஒப்பற்ற புகழ் பெருகும்படி, இப்பொழுதே நான் ஒப்பற்ற, சுடர் விட்டு எரியும் நெருப்பில் விழுந்து உயிர் விடுவதை விடுத்து, பேதமையுடைய பெண்டிர்கள் போல், தரையின் மீது விழுந்து அழுது அரற்றுவது எனக்குத் தகுமோ? என்று கருதி, அது தகாதது என்று தெளிவு பெற்றவனைப் போல எழுந்து, அங்கு நின்றிருந்த இராம இலக்குவர்களை நோக்கி, ''ஏழு உலகங்களையும் முழுமையாகத் தனது அரசாட்சிக்கு உரிமை உடையவனான தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தர்களே! கேளுங்கள்'' என்று கூறிப் பின் வருமாறு, முறையாகச் சொல்லலானான்.

''சாவிற் சாதல்'' தான் புகழைத் தரும். அதை விடுத்துப் பெண்களைப் போல் தரையில் கிடந்து அழுது அரற்றுவது எனக்குத் தகாது என்று அறிவுத் தெளிவு பெற்றுத் தன் வரலாற்றை இராம இலக்குவர்களுக்குக் கூறி உயிரை விட உறுதி செய்கிறான் சடாயு என்பதாம். துக்கத்தின் போது பெண்கள்

தரையில் விழுந்து அழுது அரற்றுவர் என்பதை முன்பே கம்பன் மிக அழகாக, ''கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்'' என்று கூறியிருப்பதை நோக்குக. ''பசைந்தாரில் தீர்தலின் தீப்புகுதல் நன்று'' என்பது நான்மணிக்கடிகை - 13. ''செம்மாண் தனிக்கோல் உலகு ஏழினும் செல நின்றான்'' என்று தசரதனை முன்பு கூறியதும் கருதுக.

இங்கே சில சுவடிகளில் 5 பாடல்கள் காணப்படுகின்றன. அவை இவ்வுலகில் உயிர்கள் எவ்வாறு தோன்றின என்பதைக் குறிப்பிடுகின்றன; இவை கம்பராலேயே பாடப் பெற்றதா அல்லது இடைச்செருகலா என்பது தெரியவில்லை. இரண்டு சுவடிகளில் இவை பாடல் வரிசையிலும், மற்றெல்லாச் சுவடிகளிலும் மிகைப் பாடல்களாகவும் காட்டப் பெற்று இருக்கின்றன. இந்தத் துயரக் கட்டத்தில் கம்பன் இவ்வளவு விரிவாக உயிர்கள் தோன்றிய வரலாற்றைக் கூறியிருக்க முடியாது என்பதால் இவற்றைப் பெரும்பாலோர் மிகைப் பாடலாகவே கருதுகின்றனர். என்றாலும் உலகம் எப்படித் தோன்றியது என்பது நமக்குத் தெரிய வேண்டுமென்பதால் பாடல்கள் மட்டும் தரப்பட்டிருக்கின்றன. பொருள் எளிதில் புரியும் ஆதலால் உரை விளக்கம் தரப்படவில்லை. ஆனால் இந்த ஐந்து பாடல்களும் வான்மீகத்தில் இருக்கின்றன.

1. தக்கன் மனைவயிற்று உதித்தார் ஐம்பதின்மர்;
   தடங்கொங்கைத் தையலாருள்,
   தொக்க பதின்மூவரை அக்காசிபனும்
   புணர்ந்தனன்; அத்தோகைமாருள்
   மிக்க அதிதிப் பெயராள், முப்பத்து
   முக்கோடி விண்ணோர் ஈன்றாள்;
   மைக்கருங்கண் திதி என்பாள், அதின் இரட்டி
   அசுரர்தமை வயிறு வாய்த்தாள்.

2. தானவரே முதலோரைத் தனுப் பயந்தாள்;
   மதிஎன்பாள், மனிதர் தம்மோடு
   ஆன வருணங்கள் அவயவத்து அடைவே
   பயந்தனளால்; சுரபி என்பாள்
   தேனுவுடன் கந்தருவம் மற்றுள்ள
   பிற பயந்தாள்; தெரிக்கும் காலை
   மானமுடைக் குரோதவசை, கழுதை, மரை,
   ஒட்டை, பிறவயிறு வாய்த்தாள்.

(தேனு - பசுக்கள்; மரை - மான்கள்)

3. மழை புரையும் குழல் விநதை, வான், இடி, மின்,
   அருணனுடன் வயிநதேயன்,

தழை புரையும் சிறைக் கூகை, பாறுமுதல்
பெரும்பறவை தம்மை ஈன்றாள்;
இழை புரையும் தாம்பிரை, ஊர்க்குருவி, சிவல்,
சாடையுடன் பிறவும் ஈன்றாள்;
கழை என்னும் அக்கொடி பயந்தாள், கொடியுடனே
செடி முதலாக் கண்ட எல்லாம்.

(கூகை - ஆந்தை / கோட்டான்; பாறு - பருந்து; வயிநதேயன் - கருடன்)

4. வெருட்டி எழும் கணபணப்பை வியாளம் எல்லாம்
கத்துருவாம் மின்னும் ஈன்றாள்;
மருள் திகழும் ஒரு தலைய புயங்கம் எல்லாம்
சுதை என்னும் மாது தந்தாள்;
அருட்டை எனும் அவள் பயந்தாள், ஓந்தி, உடும்பு,
அணில்கள் முதலாய எல்லாம்;
தெருட்டிடும் மாது இளை ஈந்தாள் செலசரம் ஆகிய
பலவும் தெரிக்கும் காலை;

(வியாளம் - பாம்பு; புயங்கம் - பாம்பு; ஓந்தி - ஓணான்; செலசரம் - நீர்வாழ்வன)

5. அதிதி, திதி, தனு, அருட்டை, சுதை, கழையே,
சுரபி, அணிவிநதை, ஆன்ற
மதி, இளை, கத்துருவுடனே, குரோதவசை,
தாம்பிரையாம் மட நலார்கள்,
விதிமுறையே, இவையனைத்தும் பயந்தனர்கள்;
விநதை சுதன், அருணன், மென்தோள்
புது மதி சேர் நுதல் அரம்பை தனைப் புணர
உதித்தனம் யாம் புவனிமீதே.

(சுதன் - மகன்)

இந்த ஐந்து பாடல்களிலும் கூறியுள்ள கருத்து.

தக்கன் என்பவனுக்கு 50 பெண்கள் பிறந்தனர். அவர்களுள் 13 பெண்களைக் காசிபன் மணந்தான். 10 பெண்களைத் தருமதேவன் மணந்தான்; 27 பெண்களைச் சந்திரன் மணந்தான். அவர்கள் அதிதி, திதி, தனு, மதி, சுரபி, குரோதவசை, விநதை, தாம்பிரை, கழை, கத்துரு, சுதை, அருட்டை, இளை என்பவராவர். இவர்கள் பெற்றெடுத்தவை.

1.அதிதி-முப்பத்து முக்கோடித் தேவர்கள்

2.திதி-அறுபத்தாறு கோடி அசுரர்கள்

3.தனு-தானவர் - அரக்கர்கள்

4.மதி-மனிதர்கள், தேவதைகள்

(இங்கே மனிதர்களின் நான்கு வருணங்களாகிய அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்பவற்றை முறையே முகம், தோள், தொடை, பாதம் என்ற அவயங்களில் பெற்றாள் என்பது கருதத்தக்கது)

5. சுரபி	- பசுக்கள், கந்தர்வர், இயங்குவன, நிற்பன.
6. குரோதவசை	- கழுதைகள், மான்கள், ஒட்டகங்கள்.
7. விநதை	- மேகம், இடி, மின்னல், அருணன், கருடன், கோட்டான், பருந்து.
8. தாம்பிரை (தாமிரை)	- ஊர்க்குருவிகள், சேவல், காடை, கௌதாரிகள்
9. கழை	- செடி, கொடிகள் (தாவரங்கள்)
10. கத்துரு	- பலதலைப் பாம்புகள்
11. சுதை	- ஒரு தலைப்பாம்புகள்
12. அருட்டை(அரிஷ்டை)	- ஓணான், உடும்பு, அணில்
13. இளை	- நீர்வாழ்வன, பிராணிகள்

இவர்களுள் விநதையின் மகனான அருணன், அரம்பை என்னும் தெய்வப் பெண்ணை மணந்தான். அவர்களுக்குப் பிறந்தவர்கள்தான் சம்பாதி, சடாயு என்னும் இரண்டு கழுகுகள்.

25. சடாயு தன்னைப் பற்றிக் கூறுதல்

''அருணன் தன் புதல்வன்யான்; அவன் படரும்
உலகெல்லாம் படர்வேன்; ஆழி
இருள் மொய்ம்பு கெடத் துரந்த தயரதற்கு இன்
உயிர்த்துணைவன்; இமையோரோடும்
வருணங்கள் வகுத்திட்ட காலத்தே
வந்துதித்தேன்; கழுகின் மன்னன்;
தருணம்கொள் பேர் ஒளியீர்! சம்பாதி
பின்னர் வரு சடாயு நான்'' என்றான். (2815)

(தருணம் - இளமை; படர்தல் - செல்லுதல்; மொய்ம்பு - வலிமை; துணைவன் - நண்பன்; இமையோர் - தேவர்கள்; வருணங்கள் -சாதிகள்; துரத்தல் - செலுத்துதல்; சம்பாதி என்பது நன்றாய்ப் பறந்து செல்லுபவன் என்னும் பொருள் பற்றி வந்த காரணப்பெயர்)

''இளமையும் பேரொளியும் பெற்றுள்ள இராம இலக்குவர்களே! நான் சூரியனின் தேர்ச்சாரதியாகிய அருணன் என்பவனின் புதல்வன்; அவன் செல்லுகின்ற உலகம் எல்லாம் செல்லும் ஆற்றல் உடையவன்; பகைவர்களாகிய வலிய இருள் நிலைதிரிந்து ஓடும்படி தனது ஆணைச் சக்கரத்தைச் செலுத்துகின்ற தசரதச் சக்கரவர்த்திக்கு இனிய உயிர் போன்ற

நண்பன்; சாதிகள் வகுக்கப்பட்ட அந்த ஆதி காலத்திலேயே தேவர் களோடும் தோன்றியவன்; கழுகுகளுக்கெல்லாம் அரசனாகிய சம்பாதி என்பவனின் பின்னர் பிறந்த அவன் தம்பி நான். என் பெயர் சடாயு என்பது'' என்று கூறினான்.

இந்த ஒரே பாடலில் அவன் பிறப்பு, உறவு, நட்பு, பதவி, முதுமை, ஆற்றல் ஆகிய எல்லாவற்றையும் நன்கு தெளிவுறத் தெரியும்படி கூறிய நயம் ஓர்க. பேரொளி என்பது அவர்கள் மேனியின் தேஜைஸை. (தேசு - ஒளி) காசிபனுக்கும் விநதைக்கும் பிறந்தவர் அருணன்; அருணனுக்கும் அரம்பைக்கும் பிறந்தவர் சம்பாதியும் சடாயுவும் என்பதாம்.

26. இராம இலக்குவர் மகிழ்தல்

ஆண்டு, அவன் ஈது உரைசெய்ய, அஞ்சலித்த
மலர்க்கையார், அன்பினோடும்
மூண்டபெரும் துன்பத்தால் முறை முறையின்
நிறைமலர்க் கண்மொய்த்த நீரார்,
பூண்டபெரும் புகழ் நிறுவித் தம்பொருட்டால்
பொன்னுலகம் புக்க தாதை
மீண்டனன் வந்தான், அவனைக் கண்டனரே
ஒத்தனர், அவ்விலங்கல் தோளார். (2816)

(விலங்கல் - மலை; அஞ்சலித்த - கூப்பிய; மூண்ட - பெருகிய; மொய்த்த - ததும்பிய / மிகுதியாக; பூண்ட - மேற்கொண்டிருந்த; பொன் உலகம் - துறக்கம் / சுவர்க்கம்; தாதை - தந்தை)

அவ்வாறு அங்கு சடாயு கூறியவுடன், மலை போலும் தோள் களையுடைய இராம இலக்குவர், கூப்பிய, தாமரை மலர் போன்ற கைகளை யுடையவராகி, அன்பினோடு, அழகும் மணமும் நிறைந்த தாமரை மலர் போன்ற கண்களிலிருந்து பெருகிய பெரும் துன்பத்தால் பெருகிய கண்ணீரை உடையவராயினர். தான் மேற்கொண்ட வாய்மை என்ற சத்தியத்தால் தனது புகழ் என்ற அணியை நிலை நிறுத்தித் தம் பிரிவு காரணமாகத் துறக்கம் புகுந்த தம் தந்தை தசரதனே மீண்டும் வந்தது போலவும், அவனைத்தாங்கள் மீண்டும் பார்ப்பதைப்போலவும் முறையே மகிழ்ச்சிக் கண்ணீரும், துக்கக் கண்ணீரும் உகுத்தனர்.

முறை முறையின் என்ற சொல் அவர்கள் முறையே மகிழ்ச்சிக் கண்ணீரும், அழுகைக் கண்ணீரும் மாறி மாறி உகுத்தனர் என்பதாம். தம் தந்தையின் நண்பனைக் கண்டமையால் தம் தந்தையைக் காண்பது போலவே இருந்ததால் மகிழ்ச்சிக் கண்ணீரும், தம் தந்தையின் பொருட்டுச் சடாயு கலங்குவதைக் காண்பதால் பெருகியெழும் துன்பக் கண்ணீரும் மாறி மாறிப் பொழிந்தனர் என்பது கருத்து.

27. சடாயு தான் தீப்புகத் துணிதல்

மருவினிய குணத்தவரை, இருசிறகால்
உறத் தழுவி ''மக்காள்! நீரே
உரிய கடன் வினையேற்கும் உதவுவீர்;
உடல் இரண்டுக்கு உயிர் ஒன்றானான்
பிரியவும் தான் பிரியாதே இனிது இருக்கும்
உடல் பொறையாம் பீழை பாராது,
எரிஅதனின் இன்றே புக்கு இறவேனேல்
இத்துயரம் மறவேன்'' என்றான். (2817)

(மருவ - பழக; பொறை - பாரம் / சுமை; பீழை - துன்பம்)

பழகுவதற்கு மிக்க இனிய குணநலன்களைப் பெற்றவரான இராம இலக்குவர்களைச் சடாயு தனது இரண்டு சிறகுகளாலும் நன்கு பொருந்தும்படி இறுகத்தழுவி, ''என் மக்களே! தீவினையை உடைய எனக்கும், நீங்களேநெருப்பு, நீர்க்கடன்முதலியகடமைகளைஆற்றி உதவி செய்யுங்கள்; என் உடல், தசரதன் உடல் ஆகிய இரண்டு உடல்களுக்கும் ஒரே உயிர் போன்றவனான தசரதன் என்னை விட்டுப் பிரிந்து இறந்து போன பின்னாலும், நான் உயிர் துறக்காது இனிதாக வாழ்ந்து கொண்டிருப்பது, என் உடலுக்கு ஒரு பெரிய சுமையாகும்; எனவே இந்தத் துன்பத்தை ஒரு பொருட்டாக எண்ணாது. நெருப்பில் புகுந்து இன்றே நான் இறந்து போகாவிட்டால், இந்தப் பிரிவுத் துயரை என்னால் மறக்க முடியாது'' என்று கூறித் தீப்புக முனைந்தான் சடாயு.

பறவைகளுக்குச் சிறகுகளே கைகள். எனவே தன் சிறகுகளால் குஞ்சுகளைத் தழுவுவது போல், அவர்களைத் தழுவிக் கொண்டான் என்பதாம். ''தையல் துயர்க்குத் தரியாது, தம் சிறகாம் கையால் வயிறு அலைத்து'' என்பது நளவெண்பா. தசரதன் மக்களைத் தன் மக்கள் என்று கூறியதோடு மட்டுமல்லாமல், தனக்குரிய இறுதிக் கடன்களையும் அவர்களே ஆற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டது, சடாயுவின் பெருந்தன்மையைச்சிறப்பிக்க என்க. இறுதிக்கடன்கள்இரு வகைப்படும் நெருப்புக்கடனும் நீர்க்கடனுமாம். அவை பிரேத சம்ஹாரம், தர்ப்பணம், பிண்டம் இடுதல் முதலியவற்றைக் குறிக்கும். தசரதன் சடாயுவைச் சிறப்பிக்க வேண்டித் தன்னை உடம்பாகவும் சடாயுவை உயிராகவும் கூறினான் முன்பு; இப்போது சடாயு தசரதனைச் சிறப்பிக்க வேண்டித் தன்னை உடம்பாகவும், தசரதனை உயிராகவும் கூறுவது காண்க. இருவரும் ஒருவரையொருவர் எவ்விதம் நேசித்தனர் என்பது இதனால் பெறப்படும். ''பிரிவின்கண் பீழை தருவது ஒன்றுஇல்'' என்பது குறள்839.

28. இராம இலக்குவர் அதனைத் தடுத்துக் கூறுதல்

என்று உரைத்த எருவை அரசனைத்
துன்று தாரவர் நோக்கித் தொழுது, கண்

ஒன்றும் முத்தம் முறை முறையாய் உக,
நின்று, மற்று இன நீர்மை நிகழ்த்தினார். (2818)

(எருவை - பருந்து / கழுகு; துன்று - நெருங்கிய; தார் - மலர்மாலை; ஒன்றும் - பொருந்திய; முத்தம் - முத்து; இன நீர்மை - இத்தன்மையான; நிகழ்த்துதல் - சொல்லுதல்; முறை முறையாய் - மேலும் மேலும்)

என்று அவ்வாறு கூறிய பருந்துகளின் அரசனான சடாயுவை, நெருங்கிய மலர் மாலை அணிந்த இராம இலக்குவர்கள், அவனை நோக்கித் தொழுது, கண்களில் பொருந்திய முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளைமேலும்மேலும்சிந்திநின்று, இத்தன்மையனவாகிய கீழ்க்கண்ட சொற்களைச் சொல்லலானார்கள்.

29. ''உய்விடத்து உதவற்கு உரியானும், தன்
மெய்விடக் கருதாது விண் ஏறினான்;
இவ்விடத்தினில் எம்பெருமான்! எமைக்
கைவிடில், பினையார் களைகண் உளார்?'' (2819)

(பினை - பின்னை / பின்னர்; களைகண் - பற்றுக்கோடு / ஆதரவு; உய்தல் - பிழைத்தல்; மெய் - சத்தியம்; கொடி வளர்ந்தோங்க உறுதுணையாய் நட்டு வைக்கப் பெறும் கொம்பு, களைகண் எனப்படும்)

''துன்பமும், தீங்கும் நேரும் காலத்தில், அதனின்றும் தப்பிப் பிழைப்பதற்கு உதவ வேண்டிய எங்கள் தந்தை தசரதனும், தான் மேற்கொண்டிருந்த வாய்மை காத்தல் என்ற நெறியினைக் கை விடக் கருதாமல், அதனைக் காப்பாற்றிச் சுவர்க்க லோகம் சென்றடைந்தான். இந்தக்காட்டிடத்தில், எம்தந்தை போன்றதலைவனே! எங்களைநீங்களும் காப்பாற்றாமல் கைவிட்டு விட்டு இறந்து போனால் பின்னர் யார் எங்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பார்கள்? ஒருவரும் இல்லையே'' என்று இரங்கிக் கூறினர்.

30. ''தாயின், நீங்க அரும் தந்தையின், தண்நகர்
வாயில் நீங்கி, வனம்புகுந்து, எய்திய
நோயும் நீங்கினெம் நுன்னின் என் எங்களை
நீயும் நீங்குதியோ? நெறி நீங்கலாய்!'' (2820)

(நீங்க அரும் - நீங்குதற்கரிய; தண் - குளிர்ச்சி மிக்க; நோய் - துன்பம்; நுன்னின் - உன்னால்; எய்திய - அடைந்த; என் - ஏனோ)

''அறநெறியினின்றும் நீங்காதவனே! நீங்குதற்கரிய எங்கள்தாயரையும், தந்தையையும், குளிர்ச்சி பொருந்திய நிலவளம் மிக்க அயோத்தி நகரத்தின் கோட்டை வாயிலையும் பிரிந்து, காட்டிற்குள் நுழைந்து, அங்கு நாங்கள் அடைந்த துன்பங்கள் எல்லாவற்றையும், உன்னைக் கண்டதனால் நீங்கப்

பெற்றோம். அப்படிப்பட்ட எங்களை, நீயும் தவிக்கவிட்டு விட்டுப் பிரிந்து போய் விடுவாயோ?'' அவ்வாறு பிரியக் கூடாது என்றனர்.

ஒருவரால் தன் தாய், தந்தை, தான் பிறந்த ஊர் இவைகளைப் பிரிந்து செல்லுதல் இயலாது என்பது பெறப்பட்டது. ''நுன்'' என்பது ''உன்'' என்ற பொருளில் இன்றும் கன்னடத்தில் வழங்குவதைக் காணலாம். தாய், தந்தை, தம் ஊர் இவற்றை நீங்கிய துன்பங்களையும், காட்டில் ஏற்பட்ட துன்பங்களையும், அவர்கள் இருவரும், சடாயுவைக் கண்டதனால் நீங்கப் பெற்றனர் என்பதாம்.

31. சடாயு, அவர்கள் வனம் புகுந்தமைக்குக் காரணம் கேட்டல்

என்ற சொல்லர்; இரந்து அழி நெஞ்சினர்;
நின்ற வீரரை நோக்கி, நினைந்து, அவன்
''அன்றுஅது என்னின், அயோத்தியின் ஐயன்மீர்
சென்றபின் அவன் சேர்குவென் யான்'' என்றான். (2821)

(அழிதல் - உருகுதல்; அவன் - தசரதன்)

என்று சொல்லிய இராம இலக்குவர் உள்ளம் உருகி இரக்க முற்று நின்றனர்; அவ்வாறு நின்ற அவ்வீரர்களைப் பார்த்து அவர்களின் ஆதரவற்ற நிலையை நன்குணர்ந்த சடாயு, ''இப்பொழுது நான் தீக்குளித்து, இறந்து போவது உங்களுக்கு உடன்பாடு இல்லையென்றால், அன்பிற்சிறந்த புதல்வர்களே! நீங்கள் வனவாசம் முடிந்து, பாதுகாப்பு மிகுந்த அயோத்தி நகருக்குத் திரும்பிச் செல்லும் வரையில் உயிருடனிருந்து, அதன் பின்னர் இறந்து, தசரதன் சென்ற சுவர்க்க லோகத்தை நான் அடைவேன்'' என்றான்.

32. ''வேந்தன் விண் அடைந்தான் எனின், வீரர் நீர்
ஏந்தும் ஞாலம் இனிது அளியாது, இவண்
போந்தது என்னை? புகுந்த என்? புந்தி போய்க்
காந்துகின்றது; கட்டுரையீர்;'' என்றான். (2822)

(ஏந்தும் - தாங்குதற்குரிய; ஞாலம் - இங்கே நாடு; அளித்தல் - காத்தல் / அரசுசெய்தல்; போந்தது - வந்தது; காந்துதல் - வெதும்புதல்; புகுந்த - நடந்த நிகழ்ச்சிகள்; புந்தி - உள்ளம்; கட்டுரைத்தல் - தெளிவாக விரித்துச் சொல்லுதல்)

''சரதச்சக்கரவர்த்தி இறந்து சுவர்க்கலோகம் போய் விட்டான் என்று சொன்னால், அவனுடைய மக்களும் வீரர்களுமாகிய நீங்கள், உங்களுக்கு வழி வழியாய் உரிமையாய் உள்ள, தாங்குதற்குரிய கோசல நாட்டின் அரசுரிமையை ஏற்று நடத்தி மக்களை அன்புடன் பாதுகாவாமல், இந்தக் காட்டினிடத்தில் வந்ததற்கு என்ன காரணம்? என்னென்ன நிகழ்ந்தன?

எனது மனம் ஒரு நிலையில் நில்லாது போய் வெதும்புகிறது. எனக்குத் தெளிவாக விரித்துக் கூறுங்கள்'' என்றான் சடாயு.

ஞாலம் என்ற சொல் பொதுவாக உலகத்தைக் குறிக்கும் எனினும் இங்கே கோசல நாட்டைக் குறித்தது என்க.

33. ''தேவர், தானவர், திண்திறல் நாகர், வேறு
ஏவர்ஆக, இடர் இழைத்தார் எனின்,
பூஅராவு பொலம் கதிர் வேலினீர்!
சாவர் ஆக்கித் தருவென் அரசு'' என்றான். (2823)

(பூ - கூர்மை; அராவுதல் - தீட்டுதல்; பொலம் - அழகிய; கதிர் - ஒளி; தானவர் - அசுரர்; திண் - மிக்க)

''கூர்மையாகப் பூப்போன்று தீட்டப்பெற்ற அழகிய, ஒளி வாய்ந்த வேற்படையை உடையவர்களே! தேவர்களாக இருந்தாலும், அசுரர் களாயிருந்தாலும், மிக்க வலிமை படைத்த நாகலோகத்தவராயினும், அல்லது வேறு மனிதர், அரக்கர், கந்தர்வர் ஆகிய எவராக இருந்தாலும் சரி, உங்களுக்குத் துன்பம் தருவார்களேயானால், அவர்களை யெல்லாம் கொன்று, இறந்தவர்களாக ஆகச்செய்து, உங்களுக்கு உரிமையுடைய அரசாட்சியை உங்களிடம் மீட்டுக் கொடுப்பேன்'' என்றான்.

சாவராக்கித் தருதல் என்பது ஒரு நல்ல சொல்லாட்சி ''கொன்று விடுவேன்'' என்பது பொருள்.

34. இலக்குவன் வனம் புகுந்த காரணம் கூறுதல்

தாதை கூறலும், தம்பியை நோக்கினான்
சீதை கேள்வன்; அவனும் தன் சிற்றவை
மாதரால் வந்த செய்கை, வரம்பு இலா
ஓதவேலை ஒழிவு இன்று உணர்த்தினான். (2824)

(கேள்வன் - கணவன்; செய்கை - வினை; ஓதம் - அலை; இன்று - இல்லாமல்; அவ்வை - தாய்; சிற்றவை - சிற்றன்னை)

அவ்வாறு தன் பெரிய தந்தையாகிய சடாயு கூறியதும், சீதையின் கணவனாகிய இராமன், தம்பியாகிய இலக்குவனை நோக்கினான்; அந்நோக்கில் குறிப்பு உணர்ந்த இலக்குவன், தனது சிற்றன்னை கைகேயியினால் விளைந்த எல்லையில்லாத அலை கடல் போன்ற நிகழ்ச்சிகளைச் சிறிதும் ஒளிக்காமல் - விட்டு விடாமல் சடாயுவுக்குப் புரியும்படி கூறினான்.

நோக்கம், இங்கு நோக்கல் நோக்கம்; தான் கூறாது, தம்பியை நோக்கியது, தான் கைகேயியின் தீவினைகளைச் சொல்ல வேண்டாம் என்ற கருத்துப்பட என்க. இவ்வாறே முன்பு குகனிடத்தும் பின்னர் அனுமனிடத்தும் நிகழ்தல் உணரத்தக்கது. கடலுக்குக் கரை இருந்தாலும்,

இந்தக் கைகேயி செய்த வினை என்னும் கடலுக்குக் கரையேயில்லை என்பதை உணர்த்தவே ''வரம்பிலா ஒதவேலை'' என்றான். சடாயுவை இராம இலக்குவர்கள் தந்தை என்பதும், இராம இலக்குவர்களைச் சடாயு மக்கள், மைந்தர் என்பதும் பல இடத்தும் பயின்று வருவது காண்க. ''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்'' என்பது குறள் (701). இலக்குவன் இங்கித ஞானத்தில் வல்லவன் என்பதாம்.

35. சடாயு இராமபிரானைப் பாராட்டுதல்

''உந்தை உண்மையன் ஆக்கி, உன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு, தாரணி
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே!
எந்தை வல்லது யாவர் வல்லார்?'' எனா. (2825)

(வல்லமை - திறமை; வல்லவர் - திறமையுடையவர்; தாரணி - தரணி / உலகம் / அரசச் செல்வம்) (குளகப்பாடல்)

சடாயு இராமபிரானை நோக்கி, ''உன் தந்தை தசரதன் சத்தியசீலன் என்பதை நிலை நிறுத்தி, உன் சிற்றன்னையாகிய கைகேயியின் வரங்களைத் தலைமேற் கொண்டு, உன் தந்தையால் உனக்களிக்கப்பட்ட அரசச்செல்வத்தை, உனக்குப் பின் பிறந்தவனாகிய உன் தம்பி பரதனுக்குத் தந்தருளிய வண்மையாளனே! நீ செய்தது மிக அரிய செயல். இத்தகைய செயலைச் செய்யும் ஆற்றலும் வலிமையும் பெற்ற திறமுடையவர் யார் இருக்கிறார்கள்?'' என்று பாராட்டினான்.

''உந்தை உண்மையன் ஆக்கி'' என்பது முன்பு ''எந்தையை மறந்தும் பொய்யிலனாக்கி'' என்று கூறியதாலும், ''பொய்த் திறத்தின் ஆக்குதியோ, புகல் மெய்த்திறத்தின் நம் வேந்தனை'' என்று கூறியதாலும் கொண்டு உணரத்தக்க சொற்றொடர். வள்ளல் என்பவர் ''தனக்கென்று ஒன்றை வரைந்து கொள்ளாது, தம்பால் உள்ள எல்லாம் கொடுப்பவரே'' என்பர். இங்கே இராமனைக் காட்டிற்கு ஏகும்படி தந்தை தசரதன் கூறவில்லை; சிற்றன்னை கைகேயிதான் கூறினாள் என்பதை உறுதிப்படுத்த கவிஞன் சடாயு கூற்றாக, ''சிற்றவை தந்த சொல்'' என்பது காண்க. ''எந்தை வல்லது யாவர் வல்லார்'' என்பது முன்பு ''ஐயன் வல்லன்; என் ஆயிருர் வல்லன்'' என்ற சொற்களை நினைப்பூட்டுவது அறிக.

36. அல்லித் தாமரைக் கண்ணனை அன்பு உறப்
புல்லி, மோந்து, பொழிந்த கண் நீரினன்;
''வல்லை மைந்த! அம்மன்னையும், என்னையும்
எல்லைஇல் புகழ் எய்துவித்தாய்'' என்றான். (2826)

(அல்லி - அக இதழ்கள்; உற - மிக; வல்லை - வல்லவன் / சமர்த்தன்; மன் - மன்னன்; மோத்தல் - மூக்கால் நுகர்தல்)

அக இதழ்களையுடைய தாமரை மலர் போன்ற கண்களையுடைய இராமபிரானை, அன்பு மிகுதியால் இறுகத்தழுவி, உச்சி மோந்து, ஆனந்தக் கண்ணீர் பொழிந்த சடாயு, ''மகனே! உன் செயலால் அந்த மன்னனாகிய தசரதனையும், என்னையும், அளவற்ற புகழ் அடையுமாறு செய்து விட்டாய்; நீ மிக்க வல்லவன்; சமர்த்தன்'' என்று பாராட்டினான்.

இங்கே அல்லி என்ற அகஇதழை இமை என்றும், தாமரை என்ற மலரைக் கண்கள் என்றும் உவமைப்படுத்தினார் என்க. உச்சி மோத்தலும், உடல் உறத் தழுவுதலும், அன்பின் மிகுதியால் தந்தை தனயர் களுக்கிடையே நடக்கும் அன்புப் பரிமாற்றம் என்க. மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம். மோத்தல் என்ற சொல்லை ''மோப்பக் குழையும் அனிச்சம்'' என்ற குறளிலும் *(90)* காண்க. வல்லை என்ற சொல் ''சாமர்த்தியம்'' என்ற பொருளில், திருப்பாவையில் *(15)* ''வல்லை உன் கட்டுரைகள்'' என்று ஆண்டாள் கையாண்டிருப்பதையும் ஒப்பு நோக்குக.

37. சடாயு சீதையைப் பற்றிக் கேட்டல்

பின்னரும் அப்பெரியவன், பெய்வளை
அன்னம் அன்ன அணங்கினை நோக்கினான்;
''மன்னர் மன்னவன் மைந்த! இவ்வாள்நுதல்
இன்னள் என்ன இயம்புதியால்!'' என்றான். (2827)

(பெய் - அணிந்திருக்கின்ற; வாள் - ஒளி பொருந்திய; நுதல் - நெற்றி; அணங்கு - தெய்வப் பெண்)

பின்னர், கல்வி, கேள்வி, குணம், ஞானம், வாழ்நாள், வயது முதலிய வைகளில் பெரியவனான அந்தச்சடாயு, வளையல்கள் அணிந்திருக்கின்ற, அன்னப் பறவை போன்ற, தெய்வப் பெண் போன்ற சீதையை நோக்கி னான்; அவளைக் காட்டி, ''அரசர்க்கரசனான தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனே! இந்த ஒளி பொருந்திய நெற்றியையுடையவள் யார்? உனக்கு என்ன உறவு? என்பதை எனக்குக் கூறுவாயாக!'' என்றான்.

38. இலக்குவன் கூறுதல்

அல்இறுத்து அன தாடகை ஆதியா,
வில் இறுத்தது இடை என, மேலை நாள்
புல்இறுத்தது யாவும் புகன்று, தன்
சொல் இறுத்தனன், தோன்றல்பின் தோன்றினான். (2828)

(தோன்றல் - இராமபிரான் / ஆடவரில் சிறந்தோன் / தலைவன்; மேலை நாள் - முன் நாள்; அல் - இருள்; இறுத்தல் - தங்குதல்; ஆதியா - முதலாக; இறுத்தது - ஒடித்தது; இறுத்தல் - முடித்துக் கொள்ளுதல்; தாடகை மலைகள் மீது சஞ்சரிப்பவள் என்னும் காரணத்தால் வந்த பெயர்)

ஆடவரிற் சிறந்தோனும் தலைவனுமாகிய இராமபிரானின் பின் பிறந்தவனான இலக்குவன், முன்பு இருளே ஒரு வடிவமாகத் தங்கியது போன்ற கரிய உருவமுடைய, மலையில் திரிபவளான தாடகையை வதம் செய்தது முதலாக, சனகன் சபையில் வில்லை முறித்துச் சானகியை மணந்தது இடையாக, பின்பு வனம் புகுந்து புல்படுக்கையில் படுத்திருந்தது ஈறாக, எல்லாவற்றையும் கூறித் தனது சொற்களை முடித்துக் கொண்டான்.

இதனால் சீதை இராமனின் மனைவி என்பது தெரிவிக்கப்பட்டது காண்க.

39. இங்கேயே தங்கும்படி சடாயு கூறுதல்

கேட்டு உவந்தனன் கேழ்கிளர் மௌலியான்;
''தோட்டு அலங்கலினீர்! துறந்தீர் வளம்
நாட்டின்; நீவீரும், நல்நுதல் தானும், இக்
காட்டில் வைகுதிர்; காக்குவென் யான்'', என்றான். (2829)

(கேழ் - நிறம் / ஒளி; கிளர் - விளங்குகின்ற; மௌலி - மகுடம்; தோடு - இதழ்; அலங்கல் - மலர்மாலை; வளம் - அரசச்செல்வம் / செல்வச்சிறப்பு)

இலக்குவன் கூறியதைக் கேட்டு மனம் மகிழ்ந்த, ஒளி விளங்குகின்ற மகுடத்தையுடைய சடாயு, ''பூ இதழ்களை உடைய மலர் மாலையை அணிந்தவர்களே! நீங்கள் அரசச் செல்வத்தையும், செல்வச் சிறப்பையும் துறந்து, நாட்டில் இருந்து இங்கு வந்து சேர்ந்தீர்கள். நீங்களும், இந்த நல் நெற்றியை உடைய சீதாதேவியும் இந்தக் காட்டிலேயே தங்கி விடுங்கள். உங்களுக்கு ஒரு இடையூறும் வாராது நான் உங்களைக் காப்பேன்'' என்று உறுதி கூறினான்.

மௌலி என்பது கழுகுக்கு உள்ள உச்சிக் கொண்டை போன்ற மயிர்த் தொகுதி என்பதாம். நாட்டில் எவ்வாறு அச்சமின்றி இருந்தீர்களோ, அதைப் போலவே அரக்கர்களும் விலங்குகளும் திரிகின்ற இந்தக் காட்டிலும் அச்சமின்றித் தங்கியிருங்கள். நான் உங்களைக் காத்து நிற்கிறேன் என்றான் என்பதாம்.

40. இராமன் விடை கூறுதல்

''இறைவ! எண்ணி அகத்தியன் ஈந்துளது,
அறையும் நல்மணி ஆற்றின் அகன்கரைத்
துறையுள் உண்டு ஒரு சூழல்; அச்சூழல் புக்கு
உறைதும்;'' என்றனன், உள்ளத்து உறைகுவான். (2830)

(இறைவன் - தலைவன்; ஈந்தது - அருளியது; அறையும் - ஒலிக்கின்ற; சூழல் - இடம்; உறைதல் - மறைந்து வசித்தல் / நிறைந்திருத்தல்)

உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாவற்றின் உள்ளத்திலும் நிறைந்து மறைந்து இருக்கின்ற பரம்பொருளாகிய இராமபிரான், சடாயுவை நோக்கி, ''தலைவ! அகத்திய முனிவன் நன்கு ஆலோசித்து, நாங்கள் தங்குவதற்குரிய இடம் என்று சொல்லியருளியது, புகழ்ந்து பேசப்படுகின்றதும், ஒலிக்கின்ற அலைகளையுடையதும், நல்ல இரத்தினங்களைக் கொண்டதுமான கோதாவரி ஆற்றின் பரந்த கரையின் ஒரு துறையில் உள்ள ஒரு அழகிய இடம். அந்த இடத்தை அடைந்து நாங்கள் வசிப்போம்'' என்று கூறினான்.

ஈந்துளது என்ற சொல் சொல்லியருளியது என்ற பொருள் தந்து நின்றது. சூழல் என்பது மரம் செடி கொடி நீர்நிலைகள் நிறைந்த அமைதியான சுற்றுச் சூழல் கொண்ட இடம் என விரியும். ''உள்ளத்து உறைகுவான்'' என்பது, அயோத்தியா காண்டத்துக் கடவுள் வாழ்த்துப் பாடல் ''உள்ளும் புறமும் உளன்'' என்பதை நினைப்பூட்டுவதை உணர்க.

41. சடாயு, அவர்களை அழைத்துச் செல்லுதல்

''பெரிதும் நன்று; அப்பெருந்துறை வைகி, நீர்
புரிதிர் மாதவம்; போதுமின்! யான் அது
தெரிவுறுத்துவென்'' என்று அவர் திண் சிறை
விரியும் நீழலில் செல்ல, விண் சென்றனன். (2831)

(பெரிதும் - மிகவும்; போதுமின் - வாருங்கள்; தெரிவுறுத்தல் - காட்டுதல்; சிறை - சிறகு / இறக்கை; நன்று - நன்மை தரத்தக்கது; மா - சிறந்த)

அதனைக் கேட்ட சடாயு, ''அகத்தியர் கூறிய இடம் மிகவும் நன்மை தரத்தக்கது. அந்தப் பெருமையான இடத்தில் தங்கி நீங்கள் சிறந்த தவத்தை மேற்கொள்ளுங்கள்; வாருங்கள்; நான் அந்த இடத்தை உங்களுக்குக் காண்பிக்கிறேன்'' என்று கூறித் தனது வலிய திண்ணிய இறகுகளை விரித்து, அதன் நிழலில் அவர்கள் பொருந்தி வருமாறு செய்து, அவர்களைப் பாதுகாத்துத் தான் ஆகாயத்தில் பறந்து செல்லத் தொடங்கினான்.

இங்கே விண் சென்றனன் என்ற சொல், பின்னால் சீதையைக் காப்பாற்ற இராவணனுடன் போராடிச் சடாயு விண்ணுலகு செல்ல இருப்பதை முன்னோட்டமாகக் குறிக்கிறது என்று கொள்ளலாம். இது போலக் கம்பன் காப்பியத்தின் போக்கில் பரவலாகக் குறிப்பிப்பதும் உணர்க. ''பெரிதும் நன்று'' என்பதும், இராவணவதத்தைக் குறிப்பால் உணர்த்துவது என்றும் கூறுவதுண்டு. அவர்களின் நடைக்கேற்ற வேகத்தில், சடாயு நிதானமாக, குளிர்ந்த நிழலைத் தந்து கொண்டு, தாழ்ந்து பறந்து சென்றான் என்பதாம்.

42. மூவரும் சோலையை அடைதல்

ஆயசூழல் அறிய உணர்த்தி, அத்
தூய சிந்தை அத்தோம்இல் குணத்தினான்

போய பின்னை, பொருசிலை வீரரும்
ஏய சோலை இனிது சென்று எய்தினார். (2832)

(தோம்இல் - குற்றமற்ற; பொரு - போர் செய்தற்குரிய; ஏய - ஏவிய / பொருத்தமான / கூறிய; இனி - இடையூறின்றி)

அத்தகைய பஞ்சவடி என்னும் இடத்தை அவர்கள் அறியுமாறு உணர்த்திய அந்தப் பரிசுத்தமான உள்ளத்தை உடையவனும், குற்றமற்ற நற்குணங்கள் அமையப் பெற்றவனுமான சடாயு போன பின்பு,போரிடு வதற்குரிய வில்லைக் கையிலேந்திய வீரர்களான இராம இலக்குவரும் தமக்குப் பொருத்தமானதும் அகத்தியர் கூறியதுமான சோலையை, எந்த இடையூறுமின்றி, மகிழ்ச்சியாகச் சென்று சேர்ந்தனர்.

இங்கே போரிட வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை முன்னோட்டமாகக் கூறும் முகத்தான், கவிஞன் ''பொரு சிலை வீரர்'' என்று இராம இலக்குவர்களைக் குறிப்பிடுவதை உணர்க்.

43. சடாயு அவர்களைக் குறிக் கொண்டு காத்தல்

வார்ப்பொன் கொங்கை மருகியை, மக்களை,
ஏர்ப்பச் சிந்தனையிட்டு, அவ்வரக்கர் தம்
சீர்ப்பைச் சிக்கு அறத் தேறினன், சேக்கையில்
பார்ப்பைப் பார்க்கும் பறவையில் பார்க்கின்றான். (2833)

(சீர்ப்பு - சிறப்பு / வலிமை / மேம்பாடு; சிக்குஅற - ஐயமின்றி; தடையின்றி; தேறுதல் - தெளிதல்; சேக்கை - பறவைக் கூடு; பார்ப்பு - குஞ்சுகள்; வார் - கச்சு; மருகி - மருமகள்; ஏர் - எழுச்சி; ஏர்ப்ப - செம்மையாக; பார்த்தல் - பாதுகாத்தல்; பொன் - அழகு)

அங்குள்ள அரக்கர்களின் வலிமைச் சிறப்பை ஐயமில்லாது தெளிந்து தேர்ந்தவனான சடாயு, செம்மையாகத் தக்கபடி நன்கு ஆலோசித்து, கச்சணிந்த பொன்னிறமான அழகிய கொங்கைகளையுடைய தன் மருமகளான சீதா தேவியையும், தன் மக்களான இராம இலக்குவர் களையும் பறவைக் கூட்டில் உள்ள குஞ்சுகளைப் பாதுகாக்கும் தாய்ப் பறவை போல மிக்க விழிப்புடன் கண்காணித்துப் பாதுகாத்து வந்தான்.

''வார்ப் பொறி கொங்கை மருகி'' என்று சீதாதேவியை முன்னர்க் கூறியதும், அவள் இளமை அழகை இங்கே குறிப்பிட்டதும் அவளுக்கு ஏதோ தீங்கு நேரப் போகிறது என்று கவிஞன் கூறும் முன்னோட்டம். இவளால் தான் இவள் இளமை அழகால்தான், தன் மக்களுக்குத் தீமை விளையப் போகிறது என்பதால் அவளை முன்னர்க் கூறிப் பின்னர் இராம இலக்குவர்களைக் கூறினான் என்க. தான் எப்படி இவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை முன்னரே நன்கு செம்மையாக ஆலோசித்து வைத்திருக்கிறான் என்பதை, ''ஏற்பச்சிந்தனைஇட்டு'' என்ற சொற்களால் குறிக்கின்றான்; அங்கிருக்கின்ற அரக்கர்களது வலிமை மேம்பாட்டை

ஐயம் திரிபு அற உணர்ந்தவன் சடாயு என்பதைச் ''சீர்ப்பைச் சிக்கறத் தேறினன்'' என்ற சொற்களால் கூறுவதை உணர்க. பார்ப்பு என்பது சிறகு முளைக்காத, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத, தாயின் பாதுகாப்பை மட்டுமே நம்பியுள்ள இளங் குஞ்சுகளைக் குறிக்கும் ஒரு அருமையான சொல். இது தவழும் இனமான தவளை, ஆமை, பல்லி முதலியனவற்றுக்கும் பொருந்தும். இது சடாயு இம்மூவர் மேலும் கொண்ட பாசம், அன்பு, பற்று, பாதுகாப்பு உணர்ச்சி முதலியவற்றையும் குறிக்கும் ஒரு அருமையான சொற்றொடர்.

சடாயு காண் படலம் நிறைவுற்றது

5. சூர்ப்பணைகைப் படலம் [142 பாடல்கள்]

சூர்ப்பணகையால் விளைந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் படலம் என விரியும். பஞ்சவடியில் தங்கியிருந்த இராமன் முதலியோரிடம் வந்து இராமனைக் கண்டு மோகித்ததனால் அவளுக்கு விளைந்த துன்பங்களைப் பற்றிக் கூறும் பகுதி. இது 142 பாடல்களைக் கொண்டது. சூர்ப்பணகை என்றால், முறம் போன்ற நகங்களை உடையவள் என்பது பொருள். சூர்ப்பம் என்றால் குருதி நிறைந்த கலம் என்று பொருள். நகா என்றால் கெடுப்பவள் என்பது பொருள். முனிவர்கள் செய்யும் வேள்விகளில் குருதி நிறைந்த பாண்டங்களைச் சொரிந்து வேள்வியைக் கெடுப்பவள் என்பது மற்றொரு பொருள். இப்படலத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள், அம்மூவரும் பஞ்சவடியில் தங்கிய மூன்றாம் ஆண்டில் நிகழ்ந்திருக்கலாம் என்று ஒரு சுவடியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படலம் சில சுவடிகளில் ''பஞ்சவடிப் படலம்'' எனவும் ''கோதாவரிப் படலம்'' எனவும், ''சூர்ப்பநகி மூக்கரி படலம்'' எனவும் ''மூக்கரி படலம்'' எனவும் பலவாறாகப் பெயரிடப்பட்டு இருக்கின்றன. சில சுவடிகளில் இரண்டு பகுதிகளாகவும், இன்னும் சில சுவடிகளில் மூன்று பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. காப்பியத் திருப்பத்திற்கு நல்லதோர் அடித் தளமாக அமைகிறது இப்படலம் என்பது இதன் தனிச்சிறப்பு.

இப்படலத்துள் கோதாவரி ஆற்றின் தெய்வப் பொலிவு, இராமனும் சீதையும் பல்வகைக் காட்சிகளைக் கண்டு செல்லுதல், சூர்ப்பணகை வந்து இராமனின் அழகில் ஈடுபடுதல், கோர உருவை மாற்றிக் கோல உருவம் கொள்ளுதல், இராமன் அவளைக் கண்டு வியப்படைதல், அவளை யார் என்று கேட்க அவள் குலமுறை கூறுதல்; அவர்களின் நீண்ட உரையாடல்; சீதை வெளிப்பட்டு வர, சூர்ப்பணகை அவள் அழகில் வியந்து போய் இராமனை நோக்கி அவள் அரக்கி, மாயம் வல்லள் என்று கூறிச் சீதையை வெருட்டுதல்; இராமன் அவளை விரட்டுதல்; சூர்ப்பணகை மோக வெறியால் புலம்புதல்; இரவு முழுவதும் விரக தாபத்தால் தவித்தல்; மிக்க ஆலோசனைக்குப் பிறகு சீதையை அப்புறப்படுத்தத் துணிதல்; மறுநாள் சீதையைத் தூக்கிச் செல்ல முயலும் போது, இலக்குவனால் மூக்கு முதலியன அரிபடுதல்; சூர்ப்பணகை ஓலமிட்டு அரற்றுதல், அவள் குலத்தோரைக் கூவி முறையிடுதல், இராமன் அதனைக் கேட்டு இலக்குவனிடம் விசாரித்தல், அவன் நிகழ்ந்தது கூற, இராமன் அவளை

ஓடிப் போகச் சொல்லுதல்; அவள் மறுத்துத் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடுதல்; நிலையை உணர்ந்து அவர்களை அச்சுறுத்தி அகன்று கரன் இருக்குமிடம் செல்லுதல் ஆகிய செய்திகள், மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இப்படலத்தின்கதைப் போக்கு வான்மீகத்தினின் றும் பெரிதும்மாறுபட்டது என்பது கருதத்தக்கது.

1. கோதாவரி ஆற்றின் தோற்றம்

புவியினுக்கு அணியாய், ஆன்ற பொருள் தந்து, புலத்திற்றாகி,
அவி அகத்துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவி உறத் தெளிந்து, தண்ணென்று ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவி எனக் கிடந்த, கோதாவரியினை வீரர் கண்டார். (2834)

(புவி - நிலமகள்; அணி - அணிகலன் / அணி இலக்கணம்; ஆன்ற - சிறப்பு; பொருள் - பொருள்கள் / பொருட்சுவை; புலம் - விளைநிலம் / அறிவு; அவி - அவியுணவு; அகத்துறை - வேள்வித்துறை / அகப்பொருள் இலக்கணத்துறை; திணை - நிலம் / திணைஇலக்கணம்; சவி - ஒளி / அழகு; தண் - குளிர்ந்த / இனிய; ஒழுக்கம் - வற்றாத நீரோட்டம் / தடையில்லாத நடை)

கோதாவரியாறு நிலமகளுக்கு ஒரு அழகிய ஆபரணம் போன்றது. அகில், தேக்கு, சந்தனம், இரத்தினங்கள் முதலிய சிறந்த மலைபடு பொருள்களைத் தருவது. தான் ஓடும் பக்கங்களிலெல்லாம் விளை நிலத்தை உண்டாக்கி வயலுக்குப் பயன்படுவது. வெப்பத்தைத் தணிக்கும் மரச் செறிவுடைய நீர்த்துறைகளைக் கொண்டது ; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து பகுப்புகளை உடைய இந்நிலமெங்கும் பரவிச் செல்லுவது. ஒளி மிகுந்து மிக அழகிய தெளிவினை உடைய நீரைப் பெற்றிருப்பது. மிக்க குளிர்ச்சி உடையதாயும், வற்றாத நீரோட்டம் உடையதாயும் அமைந்திருப்பது. இவ்வாறு உயர்ந்த புலவர்கள் இயற்றிய கவிதை போல ஓடிக் கொண்டிருந்த கோதாவரி நதியினை வீரர்களாகிய இராம இலக்குவர் கண்டனர்.

உலக மக்களுக்கு அணியிலக்கணம் பொருந்திய கவிதைகளைத் தருபவர்கள் உயர்ந்த புலவர்கள்; அவர்கள் தருகின்ற செய்யுட்களில் ஆழ்ந்த பொருள்பொதிந்திருக்கும், பொருட்சுவை மிகுந்திருக்கும்; அவை நூற்பயனாகிய அறம், பொருள்,இன்பம், வீடு ஆகியவற்றை நல்கும் உறுதிப் பொருள்களை நல்கும். அவை அறிவை வளர்ப்பதாய் அமைந்திருக்கும்; அகப்பொருள், இலக்கணத்தில் அமைந்துள்ள களவு, கற்பு என்னும் துறைகளையுடையதாயும் இருக்கும். அந்தக் கவிதைகள் புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்னும் ஐந்திணை நெறிகளையும் கொண்டதாய் இருக்கும். அவைமயக்கத்திற்கு இடமின்றி சொல்தெளிவு, பொருள் தெளிவினையுடையதாய் அமைந்திருக்கும்.

குளிர்ந்த இனிய ஆற்றொழுக்குப் போன்ற, தடையில்லாது மனத்திற்கு இன்பம் பயக்கும் நடையும் உடையதாய் அமைந்திருக்கும்.

இந்தப் பாடல் கோதாவரி நதிக்கும், சான்றோர்கவிக்கும் சிலேடையாய் அமைந்த ஒரு பாடல். இருவகையானும் மேற்கண்டவாறு பொருள் கண்டோம். பொதுவாக ''ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்'' என்று கூறுவர். எனவே ஒரு ஊருக்கு - நாட்டுக்கு - புவிக்கு அழகு செய்தலே ஆறு தான் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு கோதாவரி நதியும், சான்றோர் கவியும், அணி, பொருள், துறை, திணை இவற்றைத் தழுவியே அமைந்திருக்கும் என்க. ''உலகு புரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப் புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி, வையை என்ற பொய்யாக் குலக்கொடி'' என்பது சிலப்பதிகாரம்.

2. வண்டு உறை கமலச் செவ்வி, வாள்முகம் பொலிய, வாசம்
உண்டு உறை குவளை ஒண்கண் ஒருங்குஉற நோக்கி, ஊழின்
தெண்திரைக் கரத்தின் வாரி, திருமலர் தூவி, செல்வர்
கண்டு, அடி பணிந்து என்னப் பொலிந்தது கடவுள் யாறு. (2835)

(கடவுள் - தெய்வத்தன்மை; உறைதல் - தங்குதல்; கமலம் - தாமரை மலர்; செவ்வி - அழகிய; வாள் - ஒளி; வாசம் - நறுமணம்; குவளை - கருநீல மலர் / நீலோற்பலமலர்; ஒண் - ஒளியுள்ள; தெண் - தெள்ளிய; திரை - அலைகள்; வாரி - எடுத்து; மலர் தூவுதல்; அர்ச்சித்தல்; ஊழ் - முறைமை / வரிசை)

அந்தத் தெய்வத் தன்மை வாய்ந்த கோதாவரி ஆறு, வண்டுகள் தம்மிடம் தங்கியிருக்கும் தாமரை மலர் போன்ற அழகிய ஒளி பொருந்திய முகம் விளக்கமுற்றுத் திகழவும், நறுமணத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும் கருநீல மலர்கள் போன்று, ஒளி பொருந்திய கண்களால் ஒரு சேரக் கூர்ந்து நோக்கியும், வரிசையாக எழுகின்ற தெள்ளிய அலைகளாகிய கைகளால், அழகிய மலர்களை எடுத்து அர்ச்சித்தும், செல்வ வளம் பொருந்திய இராமன் முதலிய மூவரையும் கண்டு அவர்கள் திருவடிகளைத் தொழுவது போலவும், விளக்கமுற்றுத் திகழ்ந்தது.

ஏழு புண்ணிய நதிகளில் கோதாவரியும் ஒன்று. எனவே தெய்வயாறு எனப்பட்டது. தாமரை, குவளை ஆகிய மலர்கள் பொதுவாக ஓடை முதலிய நீர் நிலைகளில் தான் பூக்கும் என்றாலும், ஆறுகளிலும் பூக்கும் என்று சொல்வது கவிமரபு. அந்தக் கோதாவரியாற்றுக்குத் தாமரை மலரை முகமாகவும், நீலோற் பல மலரைக் கண்களாகவும், தெளிந்த அலைகளைக் கைகளாகவும் உருவகித்தார் என்க. இவ்வாறு கூறுவது கவிமரபு. இதே போல முன்பு கங்கை யாற்றைக் கூறும் போதும் ''தெண்திரை யென்னும் நிமிர்கையால் ஏந்தினள் ஒரு தானே'' என்று கூறியதை நினைவு கூர்க.

பெரியவர்களைச் சென்று தரிசிக்கும் போது அவர்களது திருவடிகளில் மலர் தூவி வழிபட்டுத் தொழுதல் வழக்கம். அவ்வாறே கோதாவரி

யென்னும் இந்தப் பெண்ணும், இராமன் முதலிய மூவரையும் வணங்கி வழிபட்டாள் என்று கூறியது ஒரு நயம். ''புள்ளார் புறவிற் பூங்காவி புலன்கொள் மாதர் கண்காட்ட, நள்ளார் கமலம் முகம் காட்டும் நறையூர்'' என்பது பெரிய திருமொழி. (காவி - கருங்குவளை மலர்) ''தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணி'' என்பது பெருமாள் திருமொழி. ஐம்பூதங்களில் காற்று, நெருப்பு இரண்டையும் வாயு பகவான் அக்கினி பகவான் என்று ஆணாகவும் விண், நீர், மண் ஆகிய மூன்றையும் ஆகாச வாணி, கங்காதேவி, பூமாதேவி / நிலமகள் என்று பெண்ணாகவும் கூறுவது கருதத்தக்கது. எனவே கோதாவரியைப் பெண்ணாகக் கூறினார் என்க.

3. எழுவுறு காதலால், இங்கு இரைத்து, ஏங்கி ஏங்கி,
பழுவநாள் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர,
வழுஇலா வாய்மை மைந்தர் வனத்து உறை வருத்தம் நோக்கி,
அழுவதும் ஒத்ததால், அவ்அலங்கு நீர் ஆறு மன்னோ? (2836)

(அலங்கு - அசைகின்ற; வழுஇலா - தவறுதல் இல்லாத; காதல் - அன்பு; இரைத்து - ஓலமிட்டு; ஏங்கி - இரங்கி; பழுவம் - காடு / தொகுதி; நாள் - புதிய / அன்றலர்ந்த; குவளை - நீல மலர்; செவ்வி - அழகிய; பனி - நீர்த் துளிகள்; பரந்து - நிறைந்து; சோர - சிந்த; கண்பனி - கண்ணீர்)

அசைந்து ஓடுகின்ற நீர்ப பெருக்கையுடைய அக்கோதாவரி ஆறு, குற்றமில்லாத வாய்மையை உடைய தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தர்களான இராம இலக்குவரும் சீதையும், கானகம் புகுந்து, படும் அல்லல்களைக் கண்டு, அவர்கள் பால் மிக்கெழும் அன்பினால் மிகவும் துயருற்றுப் பெருமூச்சு விட்டு, ஓலமிட்டு, இரங்கி, குவளைக் காட்டில் இருக்கும் அன்றலர்ந்த புதிய மலர் போன்ற அழகிய கண்களினின்றும் கண்ணீர்த் துளிகள் நிறைந்து சிந்தி அழுவதைப் போன்றிருந்தது.

முன் பாடலில் அவர்கள் திருவடிகளில் மலர் தூவி அர்ச்சித்த கோதாவரி என்னும் பெண், இப்பாடலில் அவர்களை நன்கு கூர்ந்து நோக்கி, அவர்கள் தசரதன் குமாரர்கள் காட்டிற் புகுந்து இன்னலை அனுபவிக்கிறார்கள் என்று அன்பினால் நெஞ்சம் கரைந்து அழுவதைப் போல் இருக்கிறது என்கிறான் கவிஞன். இங்கே கோதாவரி அழுதது போலச் சிலப்பதிகாரத்தில் கண்ணகி வருத்தம் நோக்கி வைகை ஆறு அழுதது என்கிறார் இளங்கோவடிகள். பாடல் இது ''வையை என்னும் பொய்யாக் குலக்கொடி, தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல், புண்ணிய, நறுமலர் ஆடை போர்த்துக் கண் நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி'', ''கருநெடுங் குவளையும், ஆம்பலும், கமலமும் தையலும், கணவனும் தனித்துறு துயரம் ஐயம் இன்றி அறிந்தன போல, பண்நீர்வண்டுபரிந்து இனைந்து ஏங்கிக் கண்ணீர் கொண்டு கால்உற நடுங்க'' என்பதும் சிலப்பதிகாரம்.

4. இராமனும் சீதையும் இயற்கை எழில் கண்டு மகிழ்தல்

நாளம்கொள் நளினப் பள்ளி நயனங்கள் அமைய, நேமி
வாளங்கள் உறைவ கண்டு, மங்கைதன் கொங்கை நோக்கும்,
நீளம்கொள் சிலையோன், மற்றை நேரிழை, நெடிய நம்பி
தோளின்கண் நயனம் வைத்தாள் சுடர்மணித் தடங்கள் கண்டாள். (2837)

(நீளம் - நீண்ட; நேமி வாளங்கள் - சக்கரவாளப் பறவைகள்; நாளம் - தண்டு; நளினம் - தாமரை; பள்ளி - படுக்கை; நேர் - நேரிய / திருத்தமான; இழை - அணிகலன்கள்; நெடிய - இறந்த / மூத்த / நீண்ட; நம்பி - ஆடவரிற் சிறந்தவன்; வைத்து - செலுத்தி; தடம் - மணற்குன்று; அமைய - மூடியிருக்க)

நீண்ட வில்லினைக் கையிலேந்திய இராமன், தண்டுகளை உடைய தாமரை மலர்களால் ஆகிய படுக்கையில், கண்களை அமைதியுடன் மூடிக் கொண்டு, சக்கரவாளப் பறவைகள் உறங்குவதைக் கண்டு, தன் துணைவியான சீதாதேவியின் கொங்கைகளை உருவெளித் தோற்றத்தில் காணலுற்றான். உடன் இருக்கும் திருத்தமான அணிகலன்களை அணிந்த சீதாதேவி, தசரதனுக்கு மூத்த மைந்தனும், திருவிக்கிரம அவதாரத்தில் நெடிய உருவம் கொண்ட திருமாலின் அம்சமானவனுமாகிய இராமபிரானின் தோள்களில் தன் கண்பார்வையை ஊன்றிப் பதித்து, அருகில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இரத்தினங்கள் போன்ற மணற்குன்றுகளை நோக்கினாள்.

நாளம் என்பது உள்தொளை உடைய தண்டுப் பகுதியைக் குறிக்கும். நேமிவாளங்கள் என்பது சக்கர வாளப் பறவைகளைக் குறிக்கும். சக்கரவாகம் என்பது வடசொல். இவை நீர் வாழ் பறவைகள். இவை வட்டமாய்க் குவிந்து உயர்ந்த வடிவுடையது. இதனை மகளிர் கொங்கைகளுக்கு உவமையாகக் கூறுவது மரபு. இவை இரவில் பிரிந்து வருந்தும்; பகலில் ஒன்று சேர்ந்து மகிழ்ந்து வாழும். நேரிழை என்பது அத்திரி முனிவன் ஆசிரமத்தில் அனசூயை அளித்த திருத்தமான அணிகலன்களை அணிந்தவள் என்று சீதையைக் குறிக்கும். நெடிய என்ற சொல் நெடிது உலகளந்த திருமாலின் அம்சமான இராமன் என்றும், தசரதச் சக்கரவர்த்தியின் மூத்தமைந்தன் இராமன் என்றும், நீண்டு உயர்ந்த மேனியை உடைய இராமன் என்றும் பொருள்படும்.

இங்கே ஒன்று நோக்குதல் வேண்டும். இராமன் வெளியே இருந்த சக்கரவாளப் பறவைகளைப் பார்த்து, சீதையின் கொங்கைகளை நினைவு கூர்ந்தான். சீதை, இராமபிரானின் தோள்களை நினைத்து, வெளியே இருக்கும் மணற்குன்றுகளைப் பார்த்தாள், புறக்காட்சியில் அக நிலையும், அகக்காட்சியில் புறநிலையும் காண்பதில் அவர்களது அன்புள்ளம் தெளிவாகத் தெரிவது காண்க. மகளிருக்குக் கொங்கையும், ஆடவர்க்குத் தோளும் சிறந்த உறுப்புக்கள் என்பதாம். இதைத் தான் முன்பு "நோக்கிய

நோக்கெனும் நுதி கொள்வேல் இணை, ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன; வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும் தாக்கணங்கு அனையாள் தனத்தில் தைத்தவே'' என்றார். இந்தப் பாடல்கள் முன்பு அயோத்தியா காண்டத்தில், கங்கைப் படலத்தில் கங்கையாற்றின் காட்சிகளைக் கண்டு கொண்டு சென்ற இவ்விருவரின் மனநிலையையும் நினைப்பூட்டுவதையும் உணர்க.

5. ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன், உழையள் ஆகும்
சீதை தன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்;
மாது அவள்தானும், ஆண்டு வந்து நீருண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். (2838)

அவ்வாற்றங்கரையில் ஓர் அன்னப் பறவை இவர்களைக் கண்டு சற்று ஒதுங்கிச் சென்றது. அதனைக் கண்ட நல்லவனான இராமன், தன் அருகில் வரும் சீதையையும் அவள் நடையின் அழகையும் பார்த்து அவ்வன்னப் பறவை, தன் நடையினைக் காட்டிலும், இச்சீதையின் நடை மிக அழகாக இருக்கிறது என்று கருதி நாணித்தான் சற்று ஒதுங்கிப் போனது போலும் என்று நினைத்து ஓர்சிறு புன்முறுவல் செய்தான். அதைப் போலவே அங்கு வந்து நீர் பருகிப் போன ஒரு ஆண்யானைக் கன்றின் நடையைக் கண்டு, சீதாதேவியும், இவ்யானைக் கன்று, தன் கணவனான இராமனின் நடைக்குத் தோற்றுத்தான் இவ்வாறு ஒதுங்கிப் போகிறது போலும் என்று நினைத்து, முன்பு எப்போதும் இல்லாத ஒரு ஒப்பற்ற புன்சிரிப்புச் சிரித்தாள்.

பொதுவாக ஆண்களின் நடைக்கு யானைக் கன்றின் நடையையும், பெண்களின் நடைக்கு அன்னப் பறவையின் நடையையும் உவமை கூறுவது கவிமரபு. இங்கு இவ்விரண்டும் இவர்கள் இருவரின் நடைக்கும் தோற்றுப் போனது என்று கூறியது ஒரு நயம். ''ஒதுங்க'' என்ற சொல்லும், ''மீளும்'' என்ற சொல்லும் தோற்றதால் நாணி அப்பால் விலகிச் சென்றன என்று பொருள்படும். அவன் சிறியதோர் முறுவல் செய்தான், இவள் புதியதோர் முறுவல் பூத்தாள் என்று கூறியதும் மற்றொரு நயம். போதகம் என்பது 10 ஆண்டு நிறைந்த ஆண் யானைக் கன்று என்று கூறுவர். இதுவரையிலும் இராமபிரான் நடையையும் ஆண்யானைக் கன்றின் நடையையும் ஒப்பாகவே நினைத்து வந்த சீதாதேவி, இப்பொழுது ஆண் யானைக் கன்றின் நடையைவிட இராமபிரானின் நடை இன்னும் அழகாக இருந்ததனால் இப்போது புதியதோர் முறுவல் பூத்தாள் என்பதாம். அவ்வாறே சிறியதோர் முறுவல் என்பதற்கும் கொள்க. இதனை வால்மீகி ''மத்த மாதங்க கமனம்; மத்த சாரச காமனீம்'' என்பார். ''எள்ளல், இளமை, பேதமை, மடம் என்று உள்ளப்பட்ட நகை நான்கு என்ப'' என்பது தொல்காப்பியம்.

6. வில்இயல் தடக்கை வீரன்,
வீங்குநீர் ஆற்றின் பாங்கர்,
வல்லிகள் நுடங்கக் கண்டான்,
மங்கைதன் மருங்குல் நோக்க;
எல்லி அம்குவளைக் கானத்து
இடையிடை மலர்ந்து நின்ற
அல்லிஅம் கமலம் கண்டாள்,
அண்ணல் தன்வடிவம் கண்டாள். (2839)

(இயல் - பொருந்திய; தட - பெரிய; வீங்கு - மிகுந்த; பாங்கர் - பக்கம்; வல்லி - நீர்க்கொடிகள்; நுடங்குதல் - அசைதல்; மருங்குல் - இடை; எல்லி - இருள் / கரிய; அம் - அழகிய; குவளை - கருநீல மலர் / நீலோற் பலமலர்; கானம் - தொகுதி; அல்லி - அகஇதழ்கள்; கமலம் - செந்தாமரை மலர்; வடிவு - உருவம்; வில்லியல் - தனுர்வேதம்)

வில்வித்தையில் தேர்ச்சி பெற்றவனும், வில்லினைப் பெரிய கைகளில் ஏந்திக் கொண்டிருப்பவனும் வீரனுமான இராமன், மிக்க நீரையுடைய கோதாவரி ஆற்றின் கரையின் அருகில் வஞ்சி முதலிய நீர்க்கொடிகள் அசைந்தாடுவதைக் கண்டான். உடனே அவனுக்குச் சீதையின் இடை நினைவிற்கு வர அவளை ஏறிட்டு உற்று நோக்கினான். அது போலவே இருட்டைப் போன்ற கரிய நிறமுடைய, அழகிய நீலோற்பல மலர்கள் மிகுதியாகப் பூத்து விளங்குதையும், அவற்றின் இடையே அகவிதழ் களையுடைய அழகிய செந்தாமரை மலர்கள் மலர்ந்திருப்பதையும் கண்ட சீதை, பெருமைக்குரியவனான இராமபிரானின் கரிய மேனியும், சிவந்த கை, கால், முகம், பாதம் ஆகியவையும் நினைவுக்கு வர, அவனையும் அவன் உருவத்தையும் உற்று நோக்கினாள்.

கொடிகள் சீதையின் இடைக்கும், குவளை மலர் இராமபிரான் மேனி நிறத்திற்கும், செந்தாமரை மலர்கள் இராமபிரானது கண், கை, கால், முகம் ஆகிய உறுப்புக்களுக்கும் உவமை. குவளை இரவில் மலரும் எனவே ''எல்லி அம்குவளைக் கானம்'' என்றார் என்க.

7. மூவரும் இலக்குவனால் அமைக்கப்பட்ட தவக்குடிலில் தங்குதல்

அனையதோர் தன்மையான, அவ்வருவி நீர் ஆற்றின் பாங்கர்,
பனிதரு தெய்வப் ''பஞ்சவடி'' எனும் பருவச் சோலை
தனியிடம் அதனை நண்ணி, தம்பியால் சமைக்கப்பட்ட
இனிய பூஞ்சாலை எய்தி இருந்தனன் இராமன்; இப்பால். (2840)

(அனையது - அப்படிப்பட்டது; பாங்கர் - பக்கம்; பனி - குளிர்ச்சி; படிவம் - அழகு; பருவம் - இளமை; சமைத்தல் - செய்து முடித்தல்; பூ -

அழகு; சாலை - பன்னசாலை / தவக்குடில்; தனியிடம் - ஏகாந்தம்) (குளகப்பாடல்)

அத்தகைய தன்மை வாய்ந்த அருவி போல் பொங்கி வருகின்ற நீர்ப் பெருக்கையுடைய கோதாவரி ஆற்றின் அருகில் குளிர்ச்சி பொருந்திய, தெய்வத்தன்மை வாய்ந்த ''பஞ்சவடி'' என்று சொல்லப்படுகின்ற, எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற தட்பவெப்ப நிலை கொண்ட இளமையான சோலையின் ஏகாந்தமான ஒரு தனி இடத்தை அடைந்து, தம்பி இலக்குவனால் திருத்தமாகச் செய்து முடிக்கப்பட்ட இனிமை நிறைந்த அழகிய தவக்குடிலை அடைந்திருந்தான் இராமன். அதன் பின்னர், பாடல் தொடர்கிறது.

இராமன், சீதை இருவரும் கோதாவரியாற்றங்கரையின் இயற்கை அழகைப் பருகிக் கொண்டிருக்கும் போது, இலக்குவன் தழைகளால் வேயப்பெற்ற ஒரு தவக்குடிலைச் சமைத்து முடித்தான் என்க. இந்த இடத்தில்தான் இந்திரன் மகனான ஜயந்தன் காக்கை உருவம் எடுத்து வந்து சீதையின் மார்பகங்களைக் கொத்தியதும், சீதை துடித்து அலறியதும், இராமன் ஒரு தருப்பைப் புல்லை எடுத்துப் பிரம்மாத்திரமாகப் பயன்படுத்தியதும், அதைத் தவிர்க்க ஜயந்தன் பிரமன் பால் சென்று தன்னைக் காக்க வேண்டுதலும், பிரமன் தன் இயலாமையைக் கூறியதால், ஜயந்தன் மீண்டும் வந்து இராமனிடமே சரணடைந்ததும், இராமன் அவன் இரண்டு கண்களில் ஒரு கண்ணை இழக்கச் செய்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாக மற்ற மொழி இராமாயணங்களில் காணப்படுகின்றது. ஆனால் கம்பன், இதை இங்கு கூறாமல் பின்னர், அசோக வனத்தில் அனுமனிடத்தில் சீதை கூறுவதாகக் கூறுகிறான் என்பதை நினைவில் கொள்க. இப்பால் என்ற சொல் இதன் பின்னர் நடக்கவிருப்பதைக் குறிக்கும் குறிப்புச் சொல்.

8. சூர்ப்பணகை அறிமுகம்

நீலமாமணி நிற நிருதர் வேந்தனை
மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்,
மேலை நாள் உயிரொடும் பிறந்து, தான்விளை
காலம் ஓர்ந்து, உடன்உறை கடிய நோய்அனாள். (2841)

(மேலை நாள் - ஆதியில் / முற்காலத்தில்; விளை காலம் - முதிர்ந்த / விதிக்கப்பட்ட காலம்; ஓர்ந்து - காத்திருந்து; நிருதர் - அரக்கர்; மூலம் - வேர்; மொய்ம்பு - வல்லமை) (குளகப் பாடல்)

சிறந்த நீல நிற இரத்தினத்தைப் போன்ற கரிய நிறம் கொண்ட அரக்கர்களின் தலைவனான இராவணனை, அவனது குலத்தோடு வேரறுத்து முடிக்கின்ற சூழ்ச்சியும் வலிமையும் பெற்றவள் சூர்ப்பணகை. ஆதிகாலத்தில் - உடலில் உயிர் தோன்றிய போது - கர்ப்பத்திலேயே - தான்

இயற்றி முடிக்கப் படவேண்டிய செயலுக்கு விதிக்கப்பட்ட காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு - அவ்வுயிருடனே உடலில் உடன் உறைந்திருக்கும் கொடிய நோயைப் போன்றவள் சூர்ப்பணகை.

நிருதர் என்பவர் நிருதி என்னும் தென் மேற்குத் திசைக் காவல் தெய்வத்தின் வழி வந்தவர் என்க. ''உயிரொடும் பிறந்து, உடன் உறை கடிய நோய்'' என்பது ''உடன் பிறந்தார், சுற்றத்தார் என்றிருக்க வேண்டா, உடன் பிறந்தே கொல்லும் வியாதி'' என்ற மூதுரையை நினைப்பூட்டுவது அறிக. இராவணனை, ''நீல மாமணி நிறத்து அரக்கன்'' என்பது சம்பந்தர் தேவாரம், மூலநாசம் என்பது குலம் முழுவதும் மீதியின்றி அடியோடு அற்றுப் போதல் எனப் பொருள் விரியும்.

இங்கு ஒன்று நோக்க வேண்டும், கம்பன் தன் காப்பியத்தில் கொடியவர்களை அறிமுகப்படுத்தும் போதெல்லாம், அவர்களை கொடியவனான இராவணனுடன் தொடர்பு படுத்தியே அறிமுகப்படுத்து கிறான் என்பதை உணர்க. முதலில் தாடகை வீழ்ந்த போது, ''முடியுடை அரக்கர்க்கு அந்நாள் முந்தி உற்பாதமாகப் படியிடை அற்று வீழ்ந்த, வெற்றி அம்பதாகை ஒத்தாள்'' என்றான். பின்னர் கூனியை அறிமுகப்படுத்தும் போது, ''இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல், துன்னரும் கொடு மனக் கூனி தோன்றினாள்'' என்றான். இப்பொழுது ''நீல மாமணி நிற நிருதர் வேந்தனை, மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்'' என்கிறான். அவள் பிறவியின் நோக்கம் என்ன என்பதை முதல் பாடலிலேயே உணர்த்தி விடுகிறான் கவிஞன்.

9. செம்பு அராகம் படச் செறிந்த கூந்தலாள்;
வெம்பு அராகம் தனி விளைந்த மெய்யினாள்;
உம்பர் ஆனவர்க்கும், ஒண்தவர்க்கும், ஓதநீர்
இம்பர் ஆனவர்க்கும், ஓர்இறுதி ஈட்டுவாள். (2842)

(அராகம் - செந்நிறம்; வெம்பு - கொதிக்கின்ற; அராகம் - காம இச்சை; உம்பர் - மேல் உலகம்; ஓதம் - கடல்; இம்பர் - இவ்வுலகம்; இறுதி - முடிவு; ஈட்டுதல் - தேடித் தருதல்; ஒண் - ஒள்ளிய / சிறந்த)

தாமிரத்தின் செந்நிறம் கூடத் தோற்றுப் போகும்படி அத்தகைய சிவந்த, நெருக்கமான செம்பட்டை மயிரைக் கொண்ட கூந்தலையுடையவள்; வெப்பம் மிக்க காம இச்சையில் ஒப்பற்று விளங்கும் உடம்பினை உடையவள்; மேல் உலகத்துத் தேவர்களுக்கும், சிறந்த தவமியற்றும் முனிவர்களுக்கும், கடல் நீரால் சூழப்பெற்ற இவ்வுலக மக்களுக்கும் ஒரு முடிவு கட்டும் வல்லமை யுடையவள் சூர்ப்பணகை.

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மக்களுக்கும் இறுதி ஈட்டுவாள் என்பது அரக்கர்களால் அல்லற்படும் அவர்களின் துயரத்திற்கு முடிவு கட்டுவாள் என்று அவளைச் சிறப்பித்துச் சொன்னதாகவும் கொள்ளலாம். இறுதி ஈட்டுவாள் என்றால் இம்மூவினத்தவரையும் அழித்து விடுவாள்

என்பதும் ஒரு பொருள். வான்மீகி கூறியது போல ''துஷ்ட நிக்கிரகமும், சிஷ்ட பரிபாலனமும்'' ஆகிய இராம அவதாரத்தின் பயன் சூர்ப்பணகை மூலமாக நடக்கப் போகிறது என்று கவிஞன் குறிப்பால் உணர்த்துவதை நினைக. இதே போலக் கைகேயியையும் முன்பு கவிஞன் சிறப்பித்திருப்பது காண்க. சூர்ப்பணகையும், கைகேயியும் உண்மையில் தவறான நோக்கம் கொண்டவர்கள் தான், என்றாலும் அவர்கள் செய்கைகளினால் இறுதியில் உலகம் நன்மை பெற்றது என்பதைக் கவிஞன் நமக்கு அறிவுறுத்துவதை எண்ணுக. ''இறுதி'' என்ற சொல் சில சுவடிகளில் ''உறுதி ஈட்டுவாள்'' என்று காணப்படுகிறது; என்றால் இம்மூவினத்தினருக்கும் நன்மை செய்யப் போகிறாள் என்பது பொருள்.

10. சூர்ப்பணகை வருதல்

வெய்யதோர் காரணம் உண்மை மேயினாள்,
வைகலும் தமியள் அவ்வனத்து வைகுவாள்;
நொய்தின், இவ்வுலகெலாம் நுழையும் நோன்மையாள்;
எய்தினள் இராகவன் இருந்த சூழல்வாய். (2843)

(நொய்தின் - விரைவில் / எளிதாக; நோன்மை - ஆற்றல்; வைகலும் - நாள் தோறும்; தமியள் - தனியவளாக; வெய்ய - கொடிய; சூழல் - சோலையிடம்; மேயினாள் - விரும்பினவள் / மேற்கொண்டவள்)

கொடிய காரணம் ஒன்றை மனத்தில் பதியவைத்து மேற் கொண்டிருப்பவளும், நாள்தோறும் தனியாக அவ்வனத்தில் அடக்கமும், கட்டுப்பாடும் இன்றித் திரிந்து வாழ்பவளும், எளிதாகவும், விரைவாகவும் இவ்வுலகத்திலுள்ள எல்லா இடங்களிலும் புகுந்து செல்லத்தக்க வல்லமையும், ஆற்றலும் பெற்றவளுமான சூர்ப்பணகை, இராமன் இருந்த தவக்குடிலில் தற்செயலாக வந்து சேர்ந்தாள்.

''வெய்யதோர் காரணம்'' என்பதற்குப் பல பொருள்களைக் கூறுவதுண்டு. அவளுடைய கொடிய காம இச்சையால் அவ்வனத்தில் தனியாய்ச் சுற்றித் திரிபவள் என்றும், சீதையை இராமனிடமிருந்து பிரித்து விட வேண்டும் என்ற கொடிய எண்ணத்துடன் சுற்றித் திரிபவள் என்றும், தன் கணவன் வித்யுத்சிகுவனைப் போரில் அழித்து விட்ட தன் தமையன் இராவணனைப் பழிவாங்க வேண்டும் என்ற காரணத்துடன் சுற்றித் திரிபவள் என்றும், தண்டகாரணியத்தில் தவம் இயற்றும் முனிவர்களுக் கெல்லாம் தொல்லை தந்து வருத்த வேண்டுமென்ற காரணத்தால் சுற்றித் திரிபவள் என்றும் பொருள் கூறலாம்.

இராகவன் என்பது இரகு என்ற அரசனின் குலத்தில் தோன்றியமையால் வந்த காரணப் பெயர். ''எய்தினள்'' என்ற சொல் அவள் இராமனைக் காண வேண்டும் என்ற நோக்கத்தில் வரவில்லை. அவள் தற்செயலாகச் சுற்றி வந்த இடத்தில் இராமன் இருக்கவே அவ்விடத்தை அடைந்தாள் என்ற

பொருள் தரும். இங்கே வான்மீகி அவள் தற்செயலாக வந்ததாக அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவது நோக்குதற்குரியது.

11. எண்தரும் இமையவர், ''அரக்கர் எங்கள் மேல்
விண்டனர், விலக்குதி'' என்ன, மேலைநாள்,
அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயனைக்
கண்டனள், தன் கிளைக்கு இறுதி காட்டுவாள். (2844)

(கிளை - சுற்றத்தார்; எண் - மதிக்க; விண்டனர் - பகை கொண்டனர்; அண்டசம் - பாம்பணை; விள்ளல் - வேறுபடுதல்; அண்டசம் - முட்டையில் பிறப்பது; அருந்துயில் - அறிதுயில் / யோக நித்திரை)

எல்லோராலும் மதிக்கத் தக்க முப்பத்து முக்கோடித் தேவர்களும், ''அரக்கர்கள் எங்கள் மீது பகை கொண்டுள்ளனர்; அதனால் விளைகின்ற துயரத்தைத் தீர்த்தருள்வீராக'' என்று முற்காலத்தில் திருமாலை வேண்ட, ஆதிசேஷன் மீது அறிதுயில் கொள்ளுவதைத் துறந்து, அயோத்தியில் வந்து இராமபிரானாக அவதரித்திருந்த தலைவனைத் தன் சுற்றத்தாராகிய அரக்கர்களுக்கு முடிவை உண்டாக்குபவளான சூர்ப்பணகை பார்த்தாள்.

விள்ளல் என்பது வேறுபடுதல் என்று பொருள் கொண்டு, இங்கே பகை கொள்ளுதலைக் குறித்தது. அண்டசம் என்பது அண்டஜம் என்ற வடசொல்லின் திரிபு. முட்டையில் இருந்து பிறப்பது என்று பொதுப் பொருள் கொண்டு, இங்கே சிறப்பாக ஆதிசேஷன் என்னும் பாம்பினைக் குறிக்கின்றது. அறிதுயில் என்பது, மற்றவர் போல அருமையான தூக்கம் இல்லாது, உலகிலுள்ள எல்லா உயிர்களையும் காப்பாற்ற வேண்டுமே என்று எண்ணிக் கொண்டே உறங்கியும் உறங்காத நிலையைக் குறிக்கும் யோக நித்திரை என்று பொருள்படும். முன்பாடலில் உம்பரானவர்க்கும், ஒண்தவர்க்கும், ஓதநீர் இம்பர் ஆனவற்கும் ஓர் இறுதி ஈட்டுவாள் என்ற கவிஞன், இப்பாடலில், தன் கிளைக்கு இறுதி காட்டுவாள் என்று கூறியது கூர்ந்து அறிந்து சுவைக்கத்தக்கது. சூர்ப்பணகை இராமபிரானைப் பஞ்சவடியில் கண்டது பதின்மூன்றாவது ஆண்டு சிறிது எஞ்சி இருக்கையில் என்று சில சுவடிகளும், பன்னிரண்டு வருடங்கள் கழிந்த பிறகு பதின்மூன்றாவது ஆண்டு துவக்கத்தில் வந்தாள் என்று பத்மபுராணமும் கூறும்.

12. சூர்ப்பணகை இராமன் அழகை வியந்து போற்றுதல் [16 பாடல்கள்]

''சிந்தையின் உறைபவர்க்கு உருவம் தீயந்ததால்;
இந்திரற்கு ஆயிரம் நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண் ஒரு மூன்று; நான்குதோள்
உந்தியின் உலகு அளித்தாற்கு'' என்றுஉன்னுவாள். (2845)

(சிந்தையின் உறைபவன் - மன்மதன்; தீர்ந்தது - ஒழிந்தது; ஈசன் - சிவபெருமான்; முந்திய - முற்பட்ட; அளித்த - உண்டாக்கி அருளிய; தீய்ந்தது - எரிந்து போயிற்று; தோள் - சிறந்த கைகளைக் குறிக்கும்)

இராமனைப் பார்த்த சூர்ப்பணகை, ''எல்லோருடைய மனத்திலும் தங்கி வாழ்பவனாகிய மன்மதனுக்குத் தான் உருவம் எரிந்து போய் விட்டதே? இந்திரனுக்குத் தான் ஆயிரம் கண்கள் இருக்குமே? சிவபெருமானுக்கோ சிறந்த தாமரை மலர் போன்ற மூன்று கண்கள் உண்டே? தனது நாபிக் கமலத்திலிருந்து இவ்வுலகை உண்டாக்கி அருளிய திருமாலுக்கோ நான்கு தோள்கள் இருக்க வேண்டுமே?'' என்று ஐயமுற்றுச் சிந்திப்பவள் ஆனாள். இராமனின் அபரிமித அழகைக் கண்டு வியந்து நின்றாள் சூர்ப்பணகை என்பதாம்.

''மன்மதனின் உருவத்தைச் சிவபெருமான் எரித்து அனங்கள் ஆக்கியதை முன்பு பால காண்டத்தில் கண்டதை நினைவு கூர்க; தேவேந்திரனுக்குக் கௌதம முனிவன் சாபத்தால் ஆயிரம் கண்கள் அமைந்தன என்பதும் நாம் பால காண்டத்தில் தெரிந்து கொண்டதே; சிவபெருமானுக்கு முக்கணன் என்ற பெயருண்டு என்பதை நாம் அறிவோம். அவை சூரியன், சந்திரன், அக்கினி என்றும் அவை செந்தாமரை, வெண்டாமரை, செவ்வல்லியை ஒத்திருக்கும் என்பதும் அறிக. இராமனைக் கண்ட சூர்ப்பணகை முதலில் இவன் மன்மதனோ என்றும், இந்திரனோ, திருமாலோ என்றும் ஒவ்வொருவராக எண்ணிப் பார்த்து அவர்களுக்குள்ள சிறப்பு உறுப்புக்கள் இவனுக்கு இல்லையே என்று ஐயமுற்றாள் என்றாலும் அவர்கள் எல்லோரையும் விட மிக அழகாக இருக்கிறானே! இவன் யாராக இருக்கும்?'' என்று தன் மனத்துள் ஐயம் கொள்கிறாள். ஆனால் இந்தக் காரணங்களால் இவன் இந்நால்வரும் அல்லர் என்று ஐயம் தீர்கிறாள்.

பொதுவாக அகப்பொருள் திணையில் தலைவன் தலைவியைப் பார்த்து இவ்வாறு ஐயம் கொள்ளுதல் உண்டு. ஆனால் இங்கே ஒரு அரக்கியாகிய பெண் ஒரு தலைவனைப் பார்த்து இவ்வாறு ஐயம் கொள்ளுவதால் இது பொருந்தாக்காமம் ஆகிய பெருந்திணையின் பாற்பட்டது என்பது அறிக. சிந்தையில் உறைபவன் என்ற சொல் சித்தஜன், மனோபாவன் என்ற வடசொற்களின் தமிழாக்கம் என்க.

''முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ? பெருகு ஒளியால் தன்நேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ? மின்நேர் செஞ்சடை அண்ணல் மெய்யறிவு பெற்றுடையவனோ? என்னே! என் மனம் திரித்த இவன் யாரோ? என நினைந்தார்'' என்பது சுந்தரரைப் பார்த்த பரவை நாச்சியார் எண்ணியதாகச் சேக்கிழார் கூறும் பெரிய புராணப்பாடல். ''இந்திரன் என்னின் இரண்டே கண்; ஏறூர்ந்த அந்தரத்தான் என்னின் பிறைஇல்லை; அந்தரத்துக் கோழியான் என்னின், முகம் ஒன்றே; கோதையைஆழியான் என்று உணரற் பாற்று'' என்பது முத்தொள்ளாயிரம்.

13. ''கற்றைஅம் சடையவன் கண்ணில் காய்தலால்
இற்றவன், அன்றுதொட்டு இன்றுகாறும், தான்
நற்றவம் இயற்றி, அவ்வனங்கன், நல்உருப்
பெற்றனனாம்'' எனப் பெயர்த்தும் எண்ணுவாள். (2846)

(கற்றை - திரள்; காய்தல் - எறித்தல்; இற்றது - இழந்தது; இன்று காறும் - இந்நாள்வரையிலும்; பெயர்த்தும் - மீண்டும்; அனங்கன் - அங்கமற்றவன் / மன்மதன்)

''திரளான அழகிய சடைமுடியை உடையவனான சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணினால் கோபித்து எரித்ததால் உருவம் இழந்தவனாகிய மன்மதன், அந்த நாள் முதல் இன்று வரை, நல்ல தவத்தைத் தொடர்ந்து செய்து, அதன் பயனாய்த் தன் உருவமற்ற நிலை மாறி, இப்போது முன்னிலும் நல்ல வடிவினைப் பெற்றுவிட்டான்போலும்!'' என மீண்டும் எண்ணலானாள் சூர்ப்பணகை.

சிவபெருமான் கைலாயத்தில் யோக நிலையில் இருந்த போது, தேவர்கள் ஏவியதால், மன்மதன் அவரது தவத்தைக் கலைக்க முனைந்து மலர்க்கணைகளை அவர் மீது ஏவினான். அதனால் சினம் கொண்ட சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்துவிட்டார். அன்று முதல் அவன் உருவமே இல்லாத அனங்கள் ஆயினான் என்பது புராணவரலாறு. அத்தகைய மன்மதன்தான் நல்லதவங்களைத் தொடர்ந்து செய்து, மீண்டும் நல்ல உருப்பெற்றுவிட்டானோ என்று மீண்டும் ஐயப்படுகிறாள் சூர்ப்பணகை என்பதாம்.

14. கைகளின் அழகைச் சிறப்பித்தல்

''தரங்களின் அமைந்து, தாழ்ந்து, அழகின் சார்பின;
மரங்களும் நிகர்க்கல; மலையும் புல்லிய;
உரங்களின் உயர்திசை ஓம்பும் ஆனையின்
கரங்களே இவன் மணிக்கரம்'' என்று உன்னுவாள். (2847)

(தரம் - சிறப்பு; சார்பு - இருப்பிடம்; புல்லிய - அற்பமானவை / இழிந்தவை / எளியன; உரம் - வலிமை; ஓம்பும் - தாங்கும் / பாதுகாக்கும்; மணி - அழகிய)

''இவனது அழகிய கைகள், உத்தம இலக்கணத்தின்படி சிறப்பாக அமைந்து, முழங்கால் அளவு தாழ்ந்து, அழகிற்கே இருப்பிடம் என்று சொல்லும்படி அமைந்திருக்கின்றன. பொதுவாக ஆடவரின் கைகளுக்கு ஒப்பாகக் கூறும் பனைமரங்களும் இவன் கைகளுக்கு ஒப்பாக மாட்டா. மலைகளுக்குச் சொல்லலாம் என்றால் அவையும் இழிந்தவை, அற்ப மானவையாகத் தோற்றுகின்றன. எனவே வலிமையால் இவ்வுலகத்தின் உயர்ந்த எட்டுத் திசைகளையும் தாங்கிக் காத்து வரும் திக்கஜங்களின்

துதிக்கைகளையே இவன் கைகளுக்கு உவமை கூற முடியும்'' என்று சூர்ப்பணகை எண்ணுகிறாள்.

முழங்கால் வரை தாழ்ந்து அமைந்திருக்கின்ற கைகள் ஆடவரின் உத்தம இலக்கணங்களுள் ஒன்று. பனை மரத்தை உவமை கூறியது அதன் செழிப்பு, பருமை, வளர்ச்சி, உருட்சி, நீட்சி முதலியன கருதி என்றும், மலைக்கு உவமை கூறியது அதன் வலிமை, தோற்றம், பொலிவு, திண்மை முதலியன கருதி என்றும் கொள்க. பின்னர் அனுமனும் இராமனது கரங்களை ''கீழ்த் திசை நின்ற யானையின் கோடுஉறு கரம் எனச் சிறிது கூறலாம், தாள்தொடு தடக்கை'' என்று கூறுவதும் இங்கு நினைவிற் கொள்ளத் தகும்.

15. தோள்களின் வலிமையைச் சிறப்பித்தல்

''வில்மலை வல்லவன் வீரத் தோளோடும்
கல்மலை நிகாக்கல; கனிந்த நீலத்தின்
நல்மலை அல்லது, நாம மேருவும்
பொன்மலை ஆதலால், பொருவலாது'' என்பாள். (2848)

(மலைத்தல் - போரிடுதல்; கனிந்த - முதிர்ந்த; நாமம் - புகழ் / பெருமை; பொருவலாது - ஒப்பாகாது)

''வில்லைக் கொண்டு போர் செய்வதில் வல்லவனான இவனுடைய வீரம் செறிந்த தோள்களோடு, சாதாரணக் கல்லாலாகிய மலைகள் சமமாக நிற்க முடியாது; புகழும் பெருமையும் பொருந்திய மேரு மலையை உவமையாகச் சொல்லலாம் என்றால் அது நிறத்தால் வேறுபட்டது. பொன்னிறமானது எனவே இவன் தோள்களுக்கு ஒப்பாகாது. எனவே முதிர்ந்த அழகிய இந்திர நீலமலை மட்டும் தான் இவன் தோள்களுக்கு இணையாக உவமை கூறத் தகுதி படைத்தது'' என்பாள் சூர்ப்பணகை. இவன் தோள்களுக்கு இந்திர நீலமலை தான் ஒப்பாகுமே தவிர மற்ற கல்மலையும், பொன் மலையும் ஒப்பாகாது என்றாள் என்பதாம்.

16. கண், தோள், மார்பைச் சிறப்பித்தல்

''தாள்உயர் தாமரைத் தளங்கள் தம்மொடும்
கேள்உயர் நாட்டத்துக் கிரியின் தோற்றத்தான்
தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின்
நீளிய அல்ல கண்; நெடிய மார்பு'' என்பாள். (2849)

(தாள் - நாளம் / தண்டு; தளம் - இதழ்கள்; கேள் - உறவு / நட்பு; நீளிய - நீட்சியுடையன / நீளமானது; நெடிய - நீண்ட / அகன்ற; தொடர்ந்து - சேர்த்து)

''உயர்ந்த தண்டுகளையுடைய சிறந்த தாமரை மலர்களின் இதழ்களுடன் உறவு கொண்ட சிறந்த கண்களையும், திரண்ட மலை

போலும் தோற்றத்தையும் உடையவனான, இவனுடைய ஒரு தோளோடு சேர்த்து மற்றொரு தோளையும் தொடர்ந்து பார்க்க வேண்டும் என்று கருதினால் அது இயலாது. காரணம் என் கண்கள் அவ்வளவு நீண்டன அல்ல; அவனது மார்புகள் மிகவும் நீண்டு, பரந்து, அகன்றன'' என்று கூறுவாள்.

தாமரை மலர் நீர் மட்டத்திற்கு மேல் உயர்ந்து தோன்றும், எனவே ''தாள்உயர் தாமரை'' என்றாள் என்க; கேள் என்பது கேழ் என்று மருவி, நட்பு, உறவு என்று பொருள்படும். உயர்ந்த தாமரை மலர் போன்ற சிறந்த கண்கள் என்று இராமபிரானின் செவ்வரியோடிய கண்ணுக்குத் தாமரை மலரிதழ்களை உவமை கூறினாள் என்க; அவனுடைய நீண்ட தோள்கள் இரண்டையும் ஒரு சேரப் பார்ப்பதற்கு என் கண்கள் அவ்வளவு பெரியன அல்ல. அவன் பரந்த மார்பு எனது இச்சிறுகண்கள் கொண்டு பார்க்க இயலாத அளவுக்கு அகன்று விரிந்தன என்றாள் என்பதாம். அவன் தோளுக்கு அளக்கலாகா அளவும், துளக்கலாகா நிலையும் கருதி மலையை ஒப்பிட்டாள் என்க. இராமபிரானின் தோள்களிலும், மார்பிலும் அவள் பெரிதும் ஈடுபட்டிருந்தாள் என்பது கருத்து.

17. முகத்தின் சிறப்பைப் புகழுதல்

''அதிகம் நின்று ஒளிரும் இவ்வழகன் வாள்முகம்
பொதிஅவிழ் தாமரைப் பூவை ஒப்பதோ?
கதிர் மதியாம் எனில், கலைகள் தேயும்; அம்
மதியெனின், மதிக்கும் ஓர்மறு உண்டு'' என்னுமால். (2850)

(நின்று - நிலைபெற்று; வாள் - ஒளி; பொதி - கட்டு / முகை / அரும்பு / மொட்டு; கதிர் - கிரணங்கள்; மறு - களங்கம்)

''எப்பொழுதும் நிலைபெற்ற, மிகுதியான ஒளி பொருந்திய இவ்வழகனாகிய இராமபிரானது முகம், மொட்டவிழ்ந்து அன்று மலர்ந்த தாமரை மலரை நிகர்க்குமோ? கிரணங்களையுடைய சந்திரனுக்கு உவமை கூறலாம் என்றால், அதன் கலைகள் நாளுக்கு நாள் குறைந்து தேயும் தன்மையுடையன; கலைகள் தேயாத முழு மதிக்கு உவமை கூறலாம் என்றால் அந்தச் சந்திரனிலும் ஒரு களங்கம் உண்டு'' என்று கூறுவாள்.

தாமரை மலர் இரவில் குவியும்; சந்திரனின் கலைகள் நாள் தோறும் தேய்ந்து அழியும். சந்திரனில் களங்கமுண்டு. எனவே இவற்றிற்கு உவமை கூற முடியாத நிலை பெற்று ஒளியுடன் விளங்குவது இராமபிரான் முகம். அது குவியாது, தேயாது, களங்கமில்லாது எப்போதும் ஒரு தன்மைத்தாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் முகம் என்று புகழ்ந்தாள் என்பதாம்.

18. ''இவன் தவம் இயற்ற என்ன காரணம்?'' என எண்ணுதல்

''எவன்செய, இனிய இவ்வழகை எய்தினோன்,
அவம்செயத் திருஉடம்பு அலச நோற்கின்றான்?

நவம்செயத் தகைய இந்நளின நாட்டத்தான்
தவம் செய''தவம் செய்த தவம் என்?'' என்கின்றாள். (2851)

(எவன் - எதை / யாது; அவம் - வீண்; அலச - வருத்த; நோற்றல் - தவம் செய்தல்; நவம் - புதுமை; நளினம் - தாமரை மலர்; இனிய அழகு - திவ்ய சௌந்தர்யம்; செய - செய்ய; செய்தல் - தேடி அடைதல்; நளின நாட்டத்தான் - புண்டரீகாட்சன்)

''இவ்வளவு அழகிய மேனியை உடையவனான இவன் எதை அடைவதற்காக, இவ்வாறு தன் அழகிய உடம்பு வருந்தும்படி வீணாகத் தவம் செய்கின்றான்? பார்க்கும்தொறும் புதுமை பயக்கத்தக்க இந்தச் செந்தாமரை மலர் போலும் கண்களையுடையவனான இவன் இவ்வாறு தவம் செய்வதற்கு, அந்தத்தவம் தான், தன் முற்பிறப்பில் எத்தகைய பெருந்தவத்தைச் செய்ததோ?'' என்று வியப்புற்றாள் சூர்ப்பணகை.

செய என்பது செய்ய என்று விரிந்து தேடி அடைதல் என்ற பொருள் தந்து நிற்கும். ''ஈதற்குச் செய்க பொருளை'' என்பது திரிகடுகம். நவம் என்பது நட்பு என்றும் பொருள் தரும். எனவே கண்டவுடன் நட்புக் கொள்ளத் தூண்டும் செந்தாமரை போலும் கண்களை உடையவன் என்றும் பொருள் கூறுவர். ''தவம் செய்த தவம்'' என்ற சொல்லாட்சி, கம்பனால் பின் அனுமன் கூற்றாகச் சீதையையும் ''தவம் செய்த தவமாம் தையல்'' என்று பயன் படுத்தப் போவதையும் நினைவிற் கொள்க. பொதுவாகத் தவம் இயற்றும் முனிவர்களை வெறுக்கும் குணமுடைய அரக்கியான சூர்ப்பணகை, இப்பொழுது இராமபிரானைத் தவக் கோல அழகில் கண்டதும், தவத்தின்மேலேயே ஒரு விருப்பம் கலந்த உயர்வான எண்ணம் கொண்டு, இராமன் அதனால் உடல் வருத்தமுறுவதற்குத் தானும் வருந்துகிறாள் என்பதைக் கம்பன் படம் பிடித்துக் காட்டும் திறமை போற்றுதற்குரியது.

19. நிலமகளின் பேற்றை எண்ணி ஏங்குதல்

''உடுத்த நீர் ஆடையள்; உருவச் செவ்வியள்;
பிடித்தரு நடையினள் பெண்மை நன்று; இவன்
அடித்தலம் தீண்டலின், அவனிக்கு அம்மயிர்
பொடித்தன போலும் இப்புல்'' என்று உன்னுவாள். (2852)

(நீர் - கடல்; செவ்வி - அழகு; தரு - போன்ற; பெண்மை - நிலமகளின் பிறப்பு; அடித்தலம் - திருவடிகள்; பொடித்தல் - சிலிர்த்தல் / அரும்புதல்; அவனி - பூமி)

''கடலையே ஆடையாக உடுத்திக் கொண்டிருப்பவளும், அழகிய வடிவினை உடையவளும், பெண் யானை போன்ற நடையினை உடையவளுமான இந்நிலமகளின் பிறவிப் பயன் மிக நன்றாக இருக்கிறது. இந்த இராமனின் திருவடிகள் இவள் மீது பட்டதனால்

இந்நிலமகளுக்கு உண்டான இன்ப உணர்ச்சியால் மயிர்க் கூச்செறிந்தது போலஇந்நிலத்தில்இந்தப்புற்கள்முளைத்திருக்கின்றனபோலும்'' என்று எண்ணுவாள்.

புவிக்கு ஆடை கடல் என்றும், பெண்ணின் நடை பெண் யானையின் நடை போன்றது என்றும் கூறுவது கவிமரபு. இவனது திருவடிகள் இப்பெண்ணாகிய நிலத்தின் மீது பட்டதால் அவள் இன்ப உணர்ச்சி மீதூர மயிர்ச் கூச்செறிகிறாள். அதனுடைய புறவெளிப்பாடு தான் இப்பூமியில் புற்கள் முளைத்திருப்பன என்றும் எண்ணுகிறாள். தனக்கு அத்தகைய வாய்ப்புக் கிடைக்க வில்லையே என்று ஏங்குகின்ற தொனியும் தோன்றுவது நோக்குக. இதனையே பின்னர் கிட்கிந்தா காண்டத்தில் கார்காலப் படலத்தில் ''நெடுநில மடந்தை புறமயிர்த்தலம் பொடித்தன போன்றன பசும்புல்'' என்பார் கவிஞர்.

20. சூரியன் ஒளியைக் கூட இகழ்தல்

''வாள்நிலா முறுவலன், வயங்கு சோதியைக்
காணலனேகொலோ கதிரின் நாயகன்?
சேண்எலாம் புல்ஒளி செலுத்திச் சிந்தையின்
நாணலன் மீமிசை நடக்கின்றான்'' என்றாள். (2853)

(வாள் - ஒளிபொருந்திய; முறுவல் - பற்கள்; வயங்கு - விளங்கும்; சோதி - பேரொளி; சேண் - நெடுந்தூரம்; புல் - புல்லிய / அற்பமான; ஒளி - வெளிச்சம்; மீமிசை - உயரத்தில்)

''ஒளி பொருந்திய சந்திரனைப் போன்ற பற்களையுடையவனான இவனது விளங்குகின்ற மேனியின் பேரொளியை, ஒளிகளுக்கு எல்லாம் தலைவனான சூரியன் காணவில்லை போலும்! கண்டிருந்தால், இவ்வாறு நெடுந்தூரம் வரைக்கும் தனது அற்பமான ஒளியைப் பரப்பிக் கொண்டு, உள்ளத்தில் கொஞ்சமும் வெட்கமில்லாமல், உயரே வானத்தில் நடந்து கொண்டு போவானோ?'' என்று இகழ்கிறாள்.

சூரியனை விஞ்சிய பேரொளி படைத்த மேனியன் இராமன். இவனுடையபேரொளியை, ஒளிகளுக்கெல்லாம்தலைவன்என்றுகருதப் படுகிற சூரியன் இன்னும் பார்க்கவில்லை போலும்! பார்த்திருந்தால், இவன்பேரொளிக்கு நாணி, வெளிவராமல் ஒளிந்து கொண்டு இருந்திருப் பான். இப்படி நெடுந்தூரம் வரை அற்பமான ஒளியைச் செலுத்திக் கொண்டிருக்கமாட்டான் என்று சூரியனை இகழ்கிறாள் சூர்ப்பணகை. இராமனின் மேனி ஒளி சூரியனை மழுங்கச் செய்யும் என்பதை முன்பு அயோத்தியா காண்டத்தில் கங்கைப் படலத்தில் ''வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய'' என்று கூறியதையும் நினைவிற் கொள்க. இராமன்மேனி ஒளி பேரொளி; எனவே சூரியனின் ஒளி புல்ஒளி என்று கூறியது ஒரு நயம்.

21. இதழ்களின் சிறப்பு

"குப்புறற்கு அரிய மாக்குன்றை வென்று, உயர்
இப்பெரும் தோளவன் இதழுக்கு ஏற்பது ஓர்
ஒப்பு என, உலகம் மேல் உரைக்க ஒண்ணுமோ?
துப்பினில் துப்புடை யாதைச் சொல்லுகேன்?" (2854)

(குப்புறல் - கடத்தல் / தாண்டிச் செல்லல்; ஒண்ணுமோ - முடியுமோ; துப்பு - பவழம்; துப்பு - சிவப்பு / செந்நிறம்)

"கடத்தற்கரிய பெரிய மலையும் பின்னிட உயர்ந்த தோள்களைக் கொண்ட இவ்விராமனுடைய வாய் உதடுகளுக்குத் தகுந்ததாக இந்த உலகத்தில் எதனையாவது உவமை என்று உரைக்க முடியுமோ? எதையும் உவமையாகக் கூறமுடியாது. பவழத்தினும் சிறப்பாக வேறு எதைச் சொல்ல முடியும்?" என்றாள் சூர்ப்பணகை.

இராமனின் உதடுகளுக்குப் பவழத்தை ஒப்பாகக் கூறமுடியாது. ஏன்? உலகில் எந்தப் பொருளையும் அதன் செந்நிறத்திற்கு ஒப்பாகக் கூறமுடியாது என்பது கருத்து. துப்பு என்ற சொல்லுக்குப் பவழம், வலிமை, அழகு, சிறப்பு, தூய்மை என்று பலபொருள்கள் உண்டு.

22. மரவுரியின் பெருமை பேசுதல்

"நற்கலை மதிஉற வயங்கு நம்பிதன்
எற்கலை திருஅரை எய்தி ஏமுற
வற்கலை நோற்றன; மாசிலா மணிப்
பொற்கலை நோற்றில போலுமால்?" என்றாள். (2855)

(நம்பி - சிறந்த ஆண்மகன்; எல் - இருள்; கலை - கலைக்கின்ற / விலக்குகின்ற; ஏம் - ஏமம் / இன்பம்; வற்கலை - மரவுரி; நோற்றல் - தவம் செய்தல்; பொற்கலை - பீதாம்பரம் / பொன்பட்டு; மதி - பூரண சந்திரன்; அரை - நடு / இடை)

"நல்ல பதினாறு கலைகளும் நிரம்பிய பூரண சந்திரன் போன்று அழகுடன்விளங்கும் இந்தச்சிறந்த ஆண் மகனாகிய இராமனின், இருளை விலக்கி ஓட்டுகின்ற அழகிய ஒளியையுடைய இடையை அடைந்து இன்பம் அடைதற்கு, மரவுரிகள் தான் எத்தகைய தவத்தைச் செய்திருக் கின்றன? இவைகள் செய்த இத்தவத்தை, குற்றமற்ற அழகிய பொன்பட்டு ஆடைகளும், பீதாம்பரங்களும் செய்தில போலும்!" என்று இரங்கிக் கூறுகிறாள் சூர்ப்பணகை.

நற்கலைமதி என்பது எல்லாக்கலைகளும் நிரம்பிய பூரணசந்திரனைக் குறித்து, இராமச்சந்திரன் என்பதையும் குறிப்பதாகவும் கூறுவர். அரை என்ற சொல் உடம்பின் நடுப்பகுதி என்று குறித்து இடை என்று பொருள்படும். அது போலவே கால் என்பது உடலின் கால்பகுதியைக்

குறிப்பதாகவும் கூறப்படும். வற்கலை உடுத்திருக்கும் போதே இவ்வளவு பேரொளி விரிக்கும் இவன் மேனி, மாசிலா மணிப் பொற்கலை உடுத்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள் சூர்ப்பணகை என்க.

முன்புதவம், தவம் செய்திருக்க வேண்டும் என்று கூறியவள், இப்போது வற்கலை தவம் செய்திருக்க வேண்டும் என்று கூறி, தான் எந்தத் தவமும் செய்யாது போய் விட்டோமே என்று தன்னை நொந்து கொள்ளுகிற பாங்கு புலப்படுகிறது. பூர்சம் எனும் ஒருவகை மரத்திலிருந்து எடுக்கும் பட்டையாலாகிய ஆடை வற்கலை என்பர். சூர்ப்பணகை என்ற அரக்கி தவம் செய்வதைப் பெருமையாகக் கூறுவது இது இரண்டாவது இடம் என்பதை உணர்க.

23. தலை முடி பற்றிக் கூறுதல்

''தொடைஅமை நெடுமழைத் தொங்கலாம் எனக்
கடைகுழன்று, இடைநெறி, கரியகுஞ்சியைச்
சடையெனப் புனைந்திலன் என்னில், தையலார்
உடை, உயிர் யாவையும் உடையுமால்'' என்றாள். (2856)

(தொடை - தொடர்ச்சி; மழை - மேகம்; கடை - நுனி; குழல்தல் - சுருண்டிருத்தல்; நெறி - அடர்த்து; குஞ்சி - ஆண்களின் தலைமயிர்; உடையும் - அழியும் / தகரும்)

''இடைவிடாது தொடர்ச்சியாகப் பொருந்தியுள்ள மேகத்தின் கூறுகள் கீழ் இறங்கி வரிசை என்று கூறும்படி, நுனி சுருண்டு, இடையில் அடர்த்தியாக இருக்கும் கரிய தலைமுடியை இவன் சடை போலப் பின்னிக் கொண்டிருக்காவிட்டால், இவனைக் காணும் பெண்கள் எல்லோருடைய உயிரும் தகர்ந்து போய்விடும்'' என்பாள்.

மழைத்தொங்கல் என்ற சொல்லுக்கு மழைக்கால் என்றே பொருள் கொண்டிருக்கின்றனர். மேகத்தின் கூறுகள் கீழ் இறங்கிய வரிசை என்பது பொருள். இதே போல இராமபிரானின் தலைமுடியை அனுமன் சீதையினிடத்தில் பின்னர் வருணிக்கின்றான். மிக அருமையான பாடல் ''நீண்டு, குழன்று, நெய்த்து, இருண்டு, நெறிந்து, செறிந்து, நெடுநீளம் பூண்டு, புரிந்து, சரிந்து, கடைசுருண்டு, புகையும், நறும்பூவும் வேண்டுமல்ல எனத்தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி, ஈண்டு சடை ஆயினதென்றால், மழை என்று உரைத்தல் இழிவன்றோ?'' என்பது சுந்தர காண்டப்பாடல். இதையே முன்பு பால காண்டத்தில் சீதையின் கூற்றாக ''இந்திர நீலம் ஒத்த இருண்ட குஞ்சி'' என்று கூறியதையும் ஒப்பிட்டு நோக்குக.

24. அணிகலன்கள் இல்லா மேனிஒளி

''நாறிய நகை அணி நல்ல புல்லினால்
ஏறிய செவ்வியின் இயற்றுமோ?'' எனா,
''மாறு அகல் முழுமணிக்கு அரசின் மாட்சிதான்
வேறு ஒரு மணியினால் விளங்குமோ?'' என்பாள். (2857)

(நாறிய - விளங்குகின்ற / தோன்றிய; நகை - அழகு; அணி - ஆபரணங்கள்; புல்லுதல் - தழுவுதல்; ஏறிய - மிகுந்த; செவ்வி - அழகு; மாறு - ஒப்பு; அகல் - இல்லாத; மணிக்கு அரசு - கௌத்துப மணி; மாட்சி - அழகு / பெருமை)

''விளங்குகின்ற அழகு மிகுந்த சிறந்தவையாகிய ஆபரணங்கள் சிறந்த இவன் மேனியைத் தழுவுவதால் அவனுக்கு சுவை மிகுந்த அழகைத் தந்துவிடுமோ? தராது''; என்று எண்ணிப் பின்னர், ஒப்பில்லாத சிறந்த இரத்தினமாகிய கௌத்துப மணியின் சிறப்பும் பெருமையும் வேறு ஒரு இரத்தினத்தை அணிவதால் உண்டாகுமோ? உண்டாகாது என்று எண்ணுகிறாள் சூர்ப்பணகை

''முற்ற முழு மணிப்பூணுக்குப்பூண்வேண்டார்; யாரேஅழகுக்கு அழகு செய்வார்'' என்பது நீதிநெறி விளக்கம்12. வேறொரு அணியினால் கௌத்துப மணியின் சிறப்பு விளங்காதது போல, நல்ல அணிகலன்களால் இராமன் எழில் நலம் ஏற்றம் பெறாது என்பதாம்.

25. இவனைப்படைத்த பிரமனையே பழித்தல்

''கரந்திலன், இலக்கணம் எடுத்துக் காட்டிய
பரம் தரும் நான்முகன் பழிப்புற்றான் அரோ?
இரந்து, இவன் இணை அடிப்பொடியும் ஏற்கலாப்
புரந்தரன் உலகெலாம் புரக்கின்றான்'' என்பாள். (2858)

(கரத்தல் - ஒளித்தல்; பழிப்புறுதல் - குற்றமுடையவனாதல்; பொடி - துகள்; பரம் - உடல் / மேன்மை / திருமால்; புரந்தரன் - தேவேந்திரன்; காட்டிய - உண்டாக்கிய / படைத்த)

''இவனுடைய இரண்டு திருவடிகளின் துகள்களுக்கும் கூட ஒப்பாக முடியாத தேவேந்திரனோ, இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் அரசாட்சி செய்கிறான்; ஆனால் சாமுத்திரிகா லக்ஷ்ணங்களாகக் கூறப்பட்ட எல்லா இலக்கணங்களையும் ஒளிக்காது பூரணமாகப் பெற்றுள்ள இவனைப் படைத்தமேன்மைபொருந்திய பிரமதேவன்நிச்சயம்பழிப்பதற்குரியவன் தானே?'' என்று கூறுவாள் சூர்ப்பணகை.

''இவனுடைய கால் தூசுக்கும் ஒப்பாகாத இந்திரன் மூன்று உலகங்களையும் அரசாளவும், இவ்வளவு பேரழகு படைத்த இராமன் இவ்வாறு காட்டில் திரிந்து அலையும் படியும் படைத்த அப்பிரமதேவன்

இகழ்ச்சிக்குரியவன்'' என்று படைப்புக் கடவுளையே பழிக்கின்றாள் சூர்ப்பணகை. தேவேந்திரன் விண்ணுலகுக்கு மட்டுமின்றி. இம்மூவுல கிற்கும் அரசன் என்பது புராணக்குறிப்பு.

26. சூர்ப்பணகையின் காமம் மிகுதல்

நீத்தமும் பரவையும் குறுக, நெஞ்சிடைக்
கோத்த அன்பு உணர்விடைக் குளிப்ப, மீக்கொள,
ஏத்தவும், பரிவின் ஒன்று ஈகலான், பொருள்
காத்தவன் புகழ்எனத் தேயும் கற்பினாள். (2859)

(நீத்தம் - ஆற்றுவெள்ளம்; பரவை - கடல்நீர்; குறுகுதல் - சிதறுதல் / குறைய; கோத்த - உண்டாகிய; உணர்வு - அறிவு; மீக்கொள - மேற்கொள்ள; ஏத்துதல் - போற்றுதல் / துதித்தல்; பரிவு - அன்பு; கற்பு - உறுதிப்பாடு)

ஆற்று வெள்ளமும், கடல் நீரும் அளவில் குறைந்து போயிற்று என்று சொல்லும்படி, தன் மனத்தில் எழுந்த அன்பு, அறிவினை வென்று மேற்பட்டுப் போக, அறிவழிந்து நின்ற சூர்ப்பணகையின் நிலையைக் கவிஞன், எவ்வளவு துதித்துப் போற்றிப் பாராட்டினாலும், தன்னிடம் வந்து கையேந்தி நின்றவர்க்கு, அன்பினால் ஒரு சிறிது பொருள் கூடக் கொடுக்காது, தன்னுடைய பொருளைப் பாதுகாத்துக் கொள்ளுகின்ற புரவலனது புகழ் எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து போகுமோ அப்படிச் சூர்ப்பணகை தன் உறுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து போனாள், என்று உவமிக்கிறான்.

இவ்வாறு படிப்படியாக சூர்ப்பணகை இராமபிரான் மீது பேரன்பு கொண்டு, காமம் தலைக்கேற, அறிவு அழிந்து நின்றாள் என்பதாம். ''காமம் பெரிது; காதல் தானும் கடலினும் பெரிதே'' என்பது நற்றிணை *166*. சூர்ப்பணகையின் கற்பு என்னும் உறுதிப்பாட்டின் தேய்வுக்குத் தன் பொருளில் கொஞ்சம் கூடத் தாராது, காத்து வரும் உலோபியின் புகழின் தேய்வு உவமை. அவளுடைய ஆசைவெள்ளம் ஆற்று வெள்ளத்தையும், கடல் வெள்ளத்தையும் கடந்து நின்றது எனவே அவள் அறிவு அழியப் பெற்று கற்பு தேயப் பெற்றாள் என்பதாம்.

27. வான்தனில் வரைந்தது ஓர்மாதர் ஓவியம்
போன்றனள்; நின்றனள்; புழுங்கும் நெஞ்சினள்;
தோன்றல்தன் சுடர்மணித் தோளில், நாட்டங்கள்
ஊன்றினள்; பறிக்கஓர் ஊற்றம் பெற்றிலள். (2860)

(புழுங்குதல் - கொதித்தல் / வேகுதல்; தோன்றல் - இராமன்; ஊன்றுதல் - பதியவைத்தல்; பறிக்க - மீட்டுக்கொள்ள; ஊற்றம் - வலிமை; ஓவியம் - சித்திரப்பாவை; நாடிப்பார்க்கும் செயலைக் கொண்டதால் நாட்டம் கண்களுக்குக் காரணப்பெயர்)

இவ்வாறு உள்ளம் கொதித்து, இராமபிரானின் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தோள்களில் தனது கண்பார்வையைப் பதியச் செய்தவள், அதை மீண்டும் எடுக்க வலிமை இல்லாதபடி, வானத்தில் ஓர் அசைவற்ற சித்திரம் தீட்டியது போல நின்று கொண்டேயிருந்தாள்.

பாலகாண்டத்தில் எவ்வாறு ''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்றாரோ, அதுபோல இங்கே சூர்ப்பணகை அவன் தோள்களின் அழகைப் பருகிக் கொண்டேயிருந்தாள். அவற்றில் பதிந்த கண்களைப் பறித்து எடுக்கும் ஆற்றல் அற்றவளாய் கண் இமைக்காமல், உணர்ச்சியற்று சித்திரப்பாவை போல அசைவற்று நின்று கொண்டேயிருந்தாள் என்பதாம். அவள் இப்போது நிற்பது வானில், தன் சுயஉருவமான அரக்கி உருவத்தில் தான் இருக்கிறாள் என்பதை நினைவுபடுத்தவே ''வான்தனில் வரைந்தது ஓர் மாதர் ஓவியம் போன்றனள்'' என்றார். ''வைத்தகண் வாங்காமல்'' என்று இப்போது பழக்கத்தில் இருக்கும் சொற்றொடரை ஒப்பு நோக்குக.

28. இராமன் மேல் காதல் கொள்ளுதல்

நின்றனள்; ''இருந்தவன் நெடிய மார்பகம்
ஒன்றுவென்; அன்றுஎனின், அமுதம் உண்கினும்
பொன்றுவென்; போக்குஇனி அரிது போன்ம்'' எனா,
சென்று, எதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள். (2861)

(நெடிய - பரந்த; ஒன்றுதல் - சேர்ந்து தழுவுதல்; பொன்றுதல் - இறத்தல்; போக்கு - வழி; தேடுதல் - ஆராய்தல்)

அவ்வாறு அவன் தோள்களையே வானத்திலிருந்து அசையாத சித்திரப்பாவை போலப் பார்த்துக் கொண்டு நின்ற சூர்ப்பணகை, ''இங்கு தனியாகவும், தவம் செய்து கொண்டும் இருக்கின்ற இவ்விராமனது பரந்த மார்பினிடத்தை நான் சேர்ந்து தழுவுவேன். அவ்வாறு தழுவ முடியாது போயிற்று என்றால், சாவாமருந்தாகிய தேவாமிர்தத்தை நான் உண்டாலும், உயிர் பிழைத்திருக்க மாட்டேன், இறந்துபடுவேன்; எனக்கு வேறுவழி ஒன்றும் கிடையாது போலும்'' என்று எண்ணி, அவன் எதிரில் போய் நின்று அவனைக் கவர்வதற்கான வழிவகைகளை ஆராயத் தொடங்கினாள்.

அமிழ்தத்தினும் மிக இனியது இராமனின் சேர்க்கை என்று சூர்ப்பணகை எண்ணினாள் என்பது புலனாகும். தேவாமிர்தத்தை உண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதைக் காட்டிலும் இராமன் மேனியைப் புல்லி உயிர் இழப்பது மேல் என்பது அவள் கருத்து.

29. தன் உருவத்தை மாற்றிச் செல்லக் கருதுதல்

''எயிறுஉடை அரக்கி, ''எவ்வுயிரும் இட்டது ஓர்
வயிறு உடையாள்'' என மறுக்கும்; ஆதலால்

குயில்தொடர் குதலை, ஓர்கொவ்வைச் செவ்விவாய்,
மயில்தொடர் இயலியாய் மருவல் நன்று'' எனா, (2862)

(எயிறு - கோரப்பற்கள்; இட்டது - நிரப்புகின்ற; குதலை - மழலைச் சொற்கள்; செவ்வி - அழகிய; இயல் - சாயல் / மென்மை; மருவல் - அருகில் செல்லுதல் / தழுவி ஏற்றுக் கொள்ளுதல்; இயலி - மெல்லியல்; உயிர் - பிராணிகள்; தொடர் - ஒத்த / போன்ற; கோரைப்பல் - வக்ரதந்தம்) (குளகப்பாடல்)

''கோரப் பற்களையுடைய இவள் ஓர் அரக்கி; உலகில் உள்ள எல்லாப் பிராணிகளையும் போட்டு நிரப்பிய ஓர் பெரியவயிற்றை உடையவள்'' என்றுகருதி, என்னைமறுத்துவிடக்கூடும்; எனவே ''குயில்போன்றஇனிய மழலைச் சொற்களையும், ஒப்பற்ற கொவ்வைப்பழம் போன்ற சிறந்த அழகிய உதடுகளையுடைய வாயினையும், மயில் போன்ற சாயலையும் உடைய ஒரு மெல்லியல் போல உருவம் கொண்டு இவன் அருகில் செல்லுவது நல்லது'' என்று எண்ணினாள்.

குதலை என்பது எழுத்து வடிவு பெறாத, பொருள் விளங்காது, இளங்குழந்தை கூறும் சொல். மழலை என்பது எழுத்து வடிவம் பெற்றுச் சொல் வடிவம் பெறாதது என்பர்.

30. திருமகளை நினைத்து, உரு மாறுதல்

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
அங்கையின் ஆய மந்திரத்தை ஆய்ந்தனள்;
திங்களின் சிறந்து ஒளிர்முகத்தள்; செவ்வியள்;
பொங்கு ஒளி விசும்பினில், பொலியத் தோன்றினாள். (2863)

(பங்கயம் - செந்தாமரை மலர்; பாவியா - பாவித்து / தியானித்து; ஆய்தல் - உச்சரித்தல்; விசும்பு - வானம்; தோன்றுதல் - காணப்படுதல்)

செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைத் தன் மனத்தில் தியானித்து, தான் முன்னமேயே பழகித் தனக்கு கைவந்த ஒரு மந்திரத்தை உச்சரித்தாள். உடனேயே, பூர்ணசந்திரனைக் காட்டிலும் சிறந்து ஒளி பெருகும் முகத்தையும், பருவம் நிறைந்த அழகுடைய இளமைத் தோற்றத்தையும் பெற்று, மிக்கு விளங்குகின்ற ஒளியுடன் ஆகாயத்தில் பொலிவோடு காணப்பட்டாள்.

அழகுக்கும் செல்வத்துக்கும் அதிதேவதை இலக்குமி. எனவே அவளை நினைந்து வழிபட்டுத் தனக்கு தெரிந்த சித்தியும் அனுகூலமும் அளிக்கக் கூடிய தனக்குக் கை வந்த ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்தாள். அவள் சொல்லி முடிக்கும் முன்பே, அழகிய உருப்பெற்று வானத்தில் காணப்பட்டாள் என்பதாம். சூர்ப்பணகை இவ்வாறு உருமாறி வந்ததாக வான்மீகத்தில் இல்லை. வான்மீகத்தில் கூறியிருப்பது கம்பனுக்கு நேர் எதிர்மாறானது. அது சுவைக்கத்தக்க வருணனை என்பதால் இங்கே

எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. "சூர்ப்பணகை பார்க்கப் பயங்கரமான முகம் உடையவள்; பேரியைப் போலப் பருத்தவயிற்றை உடையவள்; பார்க்கப் பயங்கரமான கண்களையுடையவள்; நெருப்புக் கொழுந்து போல் சிவந்து, விரிந்த தலைமயிரை உடையவள்; பார்ப்பவர்களுக்குச் சொல்ல முடியாத வெறுப்பை உண்டாக்கும் வடிவு கொண்டவள்; அவள் குரல் கேட்பவர்களை மூர்ச்சையடையச் செய்யும்; மிகவும் வயதானவள்; கபடமாகப் பேசுபவள்; கெட்ட நடத்தை உடையவள்; குரூபிகளுக்குள் முதலானவள்" என்பது வான்மீகம். ஆனால் அத்யாத்மராமாயணம் கம்பனைப் போலவே, சூர்ப்பணகை இளமை உருப் பெற்று வந்தாள் என்றே கூறுகிறது.

31. உருமாறிய சூர்ப்பணகை வருதல்

பஞ்சி ஒளிர், விஞ்சுகுளிர், பல்லவம் அனுங்க,
செஞ்செவிய கஞ்சம் நிமிர் சீறடியளாகி,
அஞ்சொல் இளமஞ்ஞைஎன, அன்னம்என, மின்னும்
வஞ்சிஎன, நஞ்சம்என, வஞ்சமகள் வந்தாள். (2864)

(பஞ்சி - செம்பஞ்சு; பல்லவம் - தளிர்கள்; அனுங்க - வருந்த; கஞ்சம் - தாமரை; நிமிர் - உயர்ந்த; மஞ்ஞை - மயில்; வஞ்சி - கொடி; நஞ்சம் - நஞ்சு / விஷம்)

ஒளிமிக்கு விளங்குகின்ற செம்பஞ்சும், குளிர்ச்சி பொருந்திய தளிர்களும், ஒப்பாக மாட்டாமையால் வருந்த, சிவந்த, அழகிய. தாமரை மலர் போன்ற சிறிய அடிகளை உடையவளாகி, அழகிய சொற்களைப் பேசும்இளமையானமயில்போலவும்,அன்னப்பேடுபோலவும்,மின்னல் கொடி போன்ற ஒளிவீசும் வஞ்சிக் கொடி போலவும், கொடிய விஷத்தைப் போலவும், வஞ்சனையே உருக்கொண்ட சூர்ப்பணகை, இராமன் எதிரில் வந்தாள்.

செம்பஞ்சும் தளிர்களும் வருந்தக் காரணம் இவளுடைய சிவப்பு நிறத்திற்கும், அழகிற்கும், குளிர்ச்சிக்கும் மென்மைத் தன்மைக்கும் ஒப்பாகாமையால் என்க. மயில் இனிய சொற்களுக்கும், சாயலுக்கும், அன்னப்பேடை அழகிய நடைக்கும், மின்னல்கொடி மேனி எழிலுக்கும், நஞ்சு கொடிய வஞ்சத்திற்கும் உவமைகள். இப்பாடலில் பயின்றுள்ள மெல்லோசைச் சந்தம் உணர்ந்து இன்புறற்பாலது. பொதுவாக மயிலை மகளிரின் சாயலுக்குத் தான் உவமிப்பார்கள் கவிஞர்கள். இவர் அதன் இனிய சொல்லுக்கு உவமித்திருப்பது கருதத்தக்கது; மகளிரின் நடைக்குக்கூட மயிலின் நடையை உவமித்திருக்கிறார் நக்கீரர். "மயில் கண்டன்ன மடநடை மகளிர்" என்பது திருமுருகாற்றுப்படை.

32. பொன்ஒழுகு பூவில் உறை பூவை, எழில் பூவை,
பின்னு எழில் கொள்வாள் இணை பிறழ்ந்து ஒளிர் முகத்து ஓர்

கன்னி எழில் கொண்டது, கலைத்தட மணித் தேர்
மின் அழிவுஇல் தன்மையது, விண் இழிவது என்ன. (2865)

(பொன் - மகரந்தப்பொடி; ஒழுகுதல் - சிந்துதல்; பூ - தாமரை மலர்; பூவை - பெண் / திருமகள்; பூவை - கிளி / நாகணவாய்ப் புள்; இணை - இரண்டு; கன்னி - இளம்பெண் / இளமை / புதுமை / அறியாத்தன்மை; எழில் - அழகு / வடிவு; கலை - ஆடை; மின் - ஒளி / மின்னற்கொடி; இழிவது - இறங்குவது; பிறழ்ந்து - நிலைமாறி) (குளகப்பாடல்)

பொன் நிறம் பொருந்திய மகரந்தப் பொடி சிந்துகின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் பொலிவும், நாகணவாய்ப் புள், கிளி முதலியவற்றின் அழகும் பின்னிட்டுத் தோற்றுப் போகும்படி அழகு கொண்ட தனது ஒளிபொருந்திய இரண்டு கண்களும் மாறி மாறி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் முகத்தையும் உடைய சூர்ப்பணகை, ஒரு கன்னி அழியாத் தன்மை வாய்ந்த இளம்பெண்ணின் வடிவம் கொண்டு, அழகிய மெல்லிய சித்திரச் சீலைகள், ஆடைகளால் அலங்கரிக்கப்பட்ட பெரிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தேரும், அழிவில்லாத ஒளிபடைத்த மின்னற்கொடியும், வானத்திலிருந்து கீழே இறங்கி வருவது போல - பாடல் தொடர்கிறது.

''பூ எனப்படுவது பொறிவாழ் பூவே'' என்பது தொல்காப்பியம். எனவே பூ என்றால் அது இலக்குமி உறையும் தாமரை மலரையே குறிக்கும் என்க. சூர்ப்பணகை, இளம்பெண் வடிவையும், மேகலை சூழ்ந்த அல்குலையும் கொண்ட மின்னல் ஒன்று வானிலிருந்து இறங்கி வந்தது போல் வந்தாள் என்றும் பொருள் கூறுவர்.

33. கானின் உயர்கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி
மேனி நனி பெற்று, விளைகாமம் நிறைவாசத்
தேனின் மொழிஉற்று, இனியசெவ்வி நனிபெற்று, ஓர்
மானின் விழிபெற்று, மயில் வந்தது என வந்தாள். (2866)

(கான் - நறுமணம்; உயிர்த்த - ஈன்ற; கதிர் - ஒளி; நனி - நன்றாக / மிகுதியாக; செவ்வி - அழகு / பருவநலன்; ஓர் - ஒப்பற்ற)

நறுமணத்தில் சிறந்து விளங்குகின்ற கற்பக மரம் தோற்றுவித்த ஒளி மிகுந்த வல்லிக்கொடி போன்ற வடிவுடன் கூடிய மேனியும், மேலும் மேலும் காமத்தைத் தூண்டுகின்ற நிறைந்த வாசனை பொருந்திய தேன் போன்ற இனிமையான சொற்களும், இனியதான அழகை அளவிற்கு அதிகமாகவும் கொண்டு, ஒப்பற்ற ஒரு மானின் மருண்ட பார்வையையுடைய விழிகளையும் பெற்று, ஒரு மயில் அசைந்து வருவதுபோல வந்தாள் சூர்ப்பணகை.

அவள் மேனி வடிவுக்கும் ஒளிக்கும் கற்பக மரத்தினைச் சார்ந்து படர்ந்திருக்கும் காமவல்லிக் கொடியும், அவளது இனிமையான சொற்களுக்குத் தேனும், அவளுடைய மருண்ட பார்வையுடைய

விழிகளுக்கு மானின் விழிகளும், அவள் நடைக்கும் சாயலுக்கும் மயிலும் உவமைகள். இவ்வாறு முன் பாடல்களிலும் இப்பாடலிலும் ஒன்றுக்கு மேற்பட்ட உவமைகளைக் கூறியது அவளுடைய மாயம் நிறைந்த வஞ்சகத் தன்மையை வெளிப்படுத்தவே என்பதை நினைவிற்கொள்க. இங்கே இவள் கற்பக மரத்தைச் சார்ந்து படர்கின்ற வல்லிக் கொடி போன்ற மேனி என்றதும், பின்னர் இவள் இராமனிடம் தான் ஒரு கன்னி என்றும், தன்பெயர்காமவல்லிஎன்றும்அறிமுகப்படுத்திக்கொள்ளப்போவதையும் ஒப்பு நோக்குதல் வேண்டும்.

34. ஒரு பெண் வருதலை இராமன் உணர்தல்

நூபுரமும், மேகலையும், நூலும், அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும் இவை பூசலிடும் ஓசை
தாம், உரை செய்கின்றது; ''ஒரு தையல்வரும்'' என்னா,
கோமகனும், அத்திசை குறித்து எதிர் விழித்தான். (2867)

(நூபுரம் - சிலம்பு / சலங்கை; அறல் - கருமணல்; ஓதி - கூந்தல்; முரலும் - ரீங்காரமிடும்; பூசல் - ஆரவாரம்; தையல் - பெண்; விழித்தல் - உற்று நோக்குதல்; நூல் - மணிமாலை; உரைசெய்தல் - தெரிவித்தல்)

காலில் அணிந்துள்ள சிலம்பு, இடையில் அணிந்துள்ள மேகலா பரணம், நூல் கோத்து மார்பில் அணிந்திருந்த மணிமாலை, கருமணல் போன்று அடர்த்தியான கூந்தலில் அணிந்துள்ள மலர்களிலிருந்து வண்டுகள் இடும் ரீங்காரம் ஆகிய இவைகள் எழுப்பும் பேரோசை ''ஒரு பெண் வருகின்றாள்'' என்பதைத் தெரிவிக்க, சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமனும், இவ்வோசை வருகின்ற திசையில் உற்று நோக்கினான்.

''யானைவரும்பின்னே, மணியோசைவரும்முன்னே'' என்பதுபோல, சூர்ப்பணகை பின்னால் வர, அவள் அணிந்திருந்த சிலம்பு, மேகலை, மணிமாலை, கூந்தல் மலரிலுள்ளவண்டுகள்ஆகியவற்றின்ஓசைமுன்னே வந்து, ''ஒரு பெண் வருகின்றாள்'' என்பதைத் தெரிவிக்க, இராமன் அந்தத் திசையில் உற்றுநோக்கினான் என்க. சிலம்பின் ஓசையும், மேகலையின் ஓசையும் மகளிர்க்கே உரியன. எனவே ஒரு பெண் வருகிறாள் என்பதை உய்த்துணர்ந்தான் என்பதாம். விலங்குகள் திரியும் காட்டில் ஒரு பெண் வருவதும், இவள் விண் வழியாக வருவதும் புதுமையாக இருக்கவே அவன் உற்றுப்பார்த்தான் எனக் கொள்ள வேண்டும்.

35. அவள் அழகை இராமன் கண்டு வியத்தல்

விண்அருள வந்தது ஒருமெல் அமுதம் என்ன,
வண்ண முலைகொண்டு, இடைவணங்க வரு போழ்தத்து,
எண்அருளி, ஏழைமை துடைத்து, எழும் மெஞ்ஞானக்
கண் அருள்செய் கண்ணன், இருகண்ணின் எதிர்கண்டான். (2868)

(விண் - ஆகாயம் / சுவர்க்கம்; வண்ண - அழகிய; வணங்க - தளர்ந்து வளைய; எண் - நினைவு / எண்ணம்; ஏழைமை - அறியாமை / அஞ்ஞானம்; கண்ணன் - கண்ணோட்டமுடையவன் / இராமன்)

விண்ணுலகத்துத் தேவர்கள் அன்புடன் நல்கிய ஒரு மென்மையான தேவாமிர்தம் போல, அழகிய கொங்கைகளைக் கொண்டு, அவைகளைத் தாங்கமுடியாமல், தனது இடை தளர்ந்து துவண்டு போகும்படி சூர்ப்பணகை வருகின்ற போது, தன்னையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கும் படியான எண்ணத்தை உலகத்து மக்களுக்குக் கொடுத்து, அவர்களிடமிருக்கும் அறியாமையாகிய அஞ்ஞானத்தைப் போக்கி, மேலே விளங்கித் தோன்றுகின்ற தத்துவ அறிவு என்னும் மெஞ்ஞான மாகிய கண்களைக் கொடுத்தருளுகின்ற கருணை நிறைந்தவனும், கண்ணோட்டம் உடையவனுமாகிய இராமன், தன் இரண்டு கண்களின் எதிரிலும் அவள் வந்து நிற்பதைக் கண்டான்.

தேவாமிர்தம் பாற்கடலில் இருந்துதான் கிடைத்தது என்றாலும் இப்போது தேவர்களிடத்தில் விண்ணுலகத்தில் உள்ளது. எனவே ''விண்ணருள வந்தது ஒரு மெல் அமுதம்'' என்றார். சூர்ப்பணகை விண்ணிலிருந்து வந்த ஒரு தேவாமிர்தம் போன்று மென்மையாகவும், இனிமையாகவும், அழகாகவும் இருந்தாள் என்பது மானிட இராமனின் கருத்துக் கணிப்பு. இதையே கண்ணகியை நோக்கி, ''அலையிடைப் பிறவா அமுதே என்கோ?'' என்பார் இளங்கோவடிகள் தன் சிலப்பதி காரத்தில். கண்ணன் என்ற சொல்லுக்கு கண்டோர் கண்களை விட்டு அகலாதவன் என்றும், எல்லோர் கண்களையும் கவரும் வனப்புடையவன் என்றும், யாவர்க்கும் அறிவுக் கண்ணை அளிப்பவன் என்றும், யாவர் மாட்டும் கருணை செய்யும் கண்களையுடையவன் என்றும், பல பொருள்கள் கூறுவதுண்டு. இராமபிரானுக்கு கருணாகரன் என்ற பெயரும் உண்டு; அவனைக் கம்பன் கருணைக் கடல், கருணை ஆர்கலி, கருணையின் நிலையம் என்றெல்லாம் புகழ்ந்திருப்பதும் நினைவு கூர்க.

36. இராமன் அவள் அழகில் மயங்குதல்

''பேர் உழைய நாகர் உலகின், பிறிது வானின்
பார் உழையின் இல்லது, ஒரு மெல்உருவு பாரா,
ஆர்உழை அடங்கும், அழகிற்கு அவதி உண்டோ?
நேர் இழையர் யாவர் இவர்நேர்?'' என நினைந்தான். (2869)

(உழை - இடம்; பாரா - பார்த்து; அடங்குதல் - முழுத்தன்மை பெறுதல் / முழுமை பெறும்; அவதி - எல்லை; நேர் - பொருத்தமான; இழை - அணிகலன்கள்; நேர் - ஒப்பு; பார் - பூலோகம்)

பெரிய இடமாகிய நாகர்கள் வாழ்கின்ற பாதலத்திலும், அதனினும் வேறான வானுலகத்திலும், இப்பூவுலகத்திலும் இல்லாததான ஒரு மென்மையான வடிவத்தைப் பார்த்து, இராமபிரான், ''அழகு என்பது

யாரிடம் முழுமை பெறும்? அழகிற்கு ஒரு எல்லை தான் உண்டோ? திருத்தமான அணிகலன்கள் அணிந்துள்ள பெண்டிரில் இவளுக்கு ஒப்பாவார்யார் இருப்பார்கள்?'' என்று தன் மானிட அவதாரத்திற்கு ஏற்பத் தன் மனத்துள்ளே நினைத்தான்.

மூவுலகிலும் இல்லாத பேரழகு படைத்தவள் சூர்ப்பணகை என்பது இராமன் கருத்து. இதுவரையிலும் சீதை மட்டும்தான் பேரழகி என்று நினைத்திருந்த இராமன் இப்பொழுது சூர்ப்பணகையைக் கண்ட பின்பு, அழகு என்பது ஒருவரிடத்தில் மட்டும் அடங்கிவிடாது. அதற்கு எல்லையே இல்லை என்ற முடிவுக்கு வருகிறான் என்க. ''யார் இவர் நேர்'' என்ற சொற்றொடர் யாரும் இல்லை என்ற எச்சப்பொருளையும் தந்து நிற்பதை அறிக. ''புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே'' என்பது தொல்காப்பியம்.

37. சூர்ப்பணகை இராமனை வணங்குதல்

அவ்வயின், அவ்வாசை தன்அகத்து உடைய அன்னாள்,
செவ்விமுகம் முன்னி, அடி செங்கையின் இறைஞ்சா,
வெவ்விய நெடுங்கண் அயில்வீசி, அயல்பாரா,
நவ்வியின் ஒதுங்கி, இறைநாணி, அயல் நின்றாள். (2870)

(அவ்வயின் - அப்பொழுது; வெவ்விய - கொடிய; அயில் - வேல்; பாரா - பார்த்து; நவ்வி - மான்; இறை - சிறிது; அயல் - பக்கம்; முன்னி - கருதி / எதிர்நோக்கி)

அப்பொழுது, இராமன் மீது கொண்ட காம இச்சையைத் தனது மனத்துள் கொண்டவளாகிய அச்சூர்ப்பணகை, இராமனது சிவந்த அழகிய முகத்தை எதிர்நோக்கித் தனது அழகிய முகத்தை அவன் காணுமாறு முற்பட்டு நின்று, தனது சிவந்த கைகளால் அவன் திருவடிகளைத் தொழுது, கொடிய தன் நீண்ட கண்கள் என்னும் வேற்படையை அவன் மீது வீசி, அவனைப் பார்க்காதது போல் வேறு பக்கம் திரும்பிப் பார்த்து, மருண்ட மான் போன்று ஒரு பக்கம் விலகித் தள்ளி நின்று கொண்டு, சிறிது வெட்கத்தையும் உடன் கொண்டு, அவ்விடம் விட்டு அகல மனம் வாராது அவன் அருகில் சற்று நின்றாள்.

காமம் கொண்ட ஒரு பெண், தன் மனத்துக்கு இனியவனைக் கண்டபோது நிகழும் மன, உடல் வெளிப்பாடுகளைத் தெளிவாகத் தெரிவிக்கிறது இப்பாடல். வீசி என்ற சொல் அவளது காமப்பார்வையின் விரைவு, ஆழம், முதலியவைகளை உணர்த்துவது காண்க. ''நெடுங்கண் அயில் வீசி அயல்பாரா'' என்பது வள்ளுவனின் ''யான் நோக்குங்கால் நிலன் நோக்கும்'' என்னும் குறளை *(1094)* நினைவு படுத்துவது காண்க. தம் காம உணர்ச்சியைத் தம் கண்களால் தெரிவித்து எதிர்ப்பட்ட ஆடவரை வாட்டுவது மகளிர் இயல்பு. எனவே கண்ணை அயில் என்றார் என்க. புதிதாக ஒன்றைக் கண்டால் அச்சம் கொண்டு மருண்டு ஒதுங்குவது மானின்

இயல்பு. எனவே நவ்வியின் ஒதுங்கி என்றார். இங்கு இவள் செவ்விமுகம் முன்னியதும், அடி செய்கையின் இறைஞ்சியதும், நெடுங்கணை அயில் வீசியதும், அயல் பார்த்ததும், நவ்வியின் ஒதுங்கியதும், இறை நாணியதும், அயல் நின்றதும் அனைத்தும் பாசாங்கு என்பது கவியின் நடையிலேயே நம்மை உய்த்துணர வைத்திருக்கும் பாங்கு போற்றுதற்குரியது.

38. இராமன் - சூர்ப்பணகை உரையாடல் [18 பாடல்கள்]

''தீது இல்வரவு ஆக திரு! நின்வரவு சேயோய்!
போதஉளது எம்உழை ஓர் புண்ணியம் அது ஒன்றோ?
ஏதுபதி? ஏதுபெயர்? யாவர் உறவு?'' என்றான்
வேதமுதல்; பேதை அவள் தன் நிலைவிரிப்பாள். (2871)

(திரு - இலக்குமி; சேயோய் - செம்மைக் குணம் உடையோய் / செந்நிறமுடையவன்; போத - வர / வருவதற்கு; உழை - இடம்; பதி - ஊர்; பேதை - அறியாமை; நிலை - வரலாறு / தன்மை; முதல் - மூலம்)

எல்லாவேதங்களுக்கும் மூலமுதல்வனானஇராமபிரான், அங்கு அயல் நின்ற சூர்ப்பணகையை நோக்கி, ''இலக்குமி போன்றவளே! செம்மைக் குணம் உடையவளே! உனது வரவு தீமை பயக்காத நல்ல வரவு ஆகுக! நீ இங்கு வருகை புரிவதற்கு நாங்கள் செய்த புண்ணியம் இருக்கிறது போலும்! உனக்கு எந்த ஊர்? உன் பெயர் என்ன? உனக்கு உறவினர் யார்?'' என்று கேட்டான். அதற்கு அறியாமையுடைய சூர்ப்பணகை தன் தற்போதையத் தன்மையையும், தன் வரலாற்றையும் மிக விரிவாகக் கூறத் தொடங்கினாள்.

பொதுவாக ஒருவரை வரவேற்கும் போது ''தங்கள் வரவு நல்வரவாகுக'' என்றே கூறுவர். இதனை ''ஸ்வாகதம்'' என்பர் வடநூலார். ஆனால் கம்பன் சற்றுக் கொடிய பாத்திரங்களின் வருகையைக் கூறும் பொழுது, இவ்வாறு எதிர்மறையாகவே கூறுவது ஊன்றிக் கவனிக்கத்தக்கது. இவள் வரவால் பின்னால் தீங்கு நிகழப்போகிறது என்பதைக் குறிப்பால் உணர்த்தவே கம்பன் இவ்வாறு எதிர்மறையாகக் கூறுகிறான் என்க. செம்மைக் குணம் உடையவர்கள் தம்மிடம் நோக்கி வருவதற்கு, தாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்ற கருத்துத் தோன்ற ''போதஉளது எம்முழை ஓர் புண்ணியம்'' என்றார் என்க. அவள் கண்களைக் கொண்டே அவள் நல்லவல்லள், அவள் வரவால் தீங்கு நிகழப்போகிறது என்பதை இராமன் உய்த்துணர்ந்தான் என்க. ''நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால் கண் அல்லது இல்லை பிற'' என்பது குறள் (710). ஊரின் இயல்பால் அவ்வூரவர் தன்மையறிதல் கூடும் எனவே முதலில் ஏதுபதி என்றான்.

சேயோய் என்ற சொல் செம்மைக் குணம் படைத்தவள்; செந்நிறம் உடையவள்; அந்நியள்; என்ற பல பொருள்களைத் தரும். இராமனை வேதமுதல்வன் என்றும், சூர்ப்பணகையைப் பேதை என்றும் கூறிய நயம்

காண்க. அவன் சுருங்கக் கேட்டதால் மேதை; இவள் குறிப்பறியாது விரித்துக்கூறத் தொடங்கியதால்பேதை என்றார்என்பதாம். பேதை என்பது மக்கட்பதடி என்ற பொருளில் பயனில் சொல் பாராட்டுவாளைக் குறித்து நின்றது. அவள் அவ்வாறு விரித்துக் கூறியதற்கும் ஒரு காரணம் உண்டு; சூர்ப்பணகை பேதையல்லள் என்பது பின்னால் தெரியவரும். அவளும் சுருக்கமாக என் ஊர் இலங்கை; என்பெயர் சூர்ப்பணகை; என் உறவு இராவணன் என்று கூறியிருந்தால், இவள் அரக்கி என்பதை உய்த்துணர்ந்து இராமன் அவளை உடனே ஒதுக்கியிருப்பான். அதை மறைக்கவும் அவனுடன் உறவு கொள்ளவுமே அவள் விரித்துரைக்கத் தொடங்கினாள் என்பதாம்.

39. தன் பெயர், உறவு பற்றிக் கூறுதல்

''பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி; முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவனான செங்கையோன்
தங்கை; திக்கின்
மாஎலாம் தொலைத்து, வெள்ளிமலை
எடுத்து, உலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காம
வல்லியாம் கன்னி'' என்றாள். (2872)

(பூ - தாமரை மலர்; பூவிலோன் - பிரமன்; புதல்வன் - புலத்தியன்; மைந்தன் - விச்சரவசு; செற்ற - எரித்த / அழித்த; சே - விடை / காளை / எருது / இடபம்; சேவலோன் - சிவபெருமான்; செங்கையான் - குபேரன்; மா - களிறு / யானை; காவலோன் - அரசன் / இராவணன்; பின்னை - பின் பிறந்தவன்; வெள்ளிமலை - கைலாய மலை; கன்னி - மணமாகாதவள்)

''தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் பிரமனின் மகனான புலத்தியனின் மகன் விச்சிரவசு. அவனுடைய மகள் நான்; திரிபுரங்களையும் எரித்து அழித்தவனும், காளையைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்த வல்லவனுமாகிய சிவபெருமானின் நண்பனும், கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கைகளையுடையவனுமாகிய குபேரனின் தங்கை நான்; எட்டுத்திக்குகளையும் காவல் செய்கின்ற அஷ்டதிக்கஜங்களாகிய யானைகளை அவற்றின் வலி தொலைத்து, வெள்ளி மலையாகிய கையிலாய மலையைக் கைகளாலேயே பெயர்த்து எடுத்து, விண், மண், பாதாளம் என்ற மூன்று உலகங்களையும் அரசாட்சி செய்து வருகின்ற இராவணனின் பின்பிறந்தவள் நான். என் பெயர் காமவல்லி என்பது. நான் மணமாகாத கன்னிப் பெண்'' என்றாள் சூர்ப்பணகை.

பிரமன் - புலஸ்தியன் - விச்சிரவசு என்பது குலமுறை. குபேரன் இராவணனால் துரத்தப்பட்ட போது அவன் சிவபெருமானை நாடித் தவம் செய்து அவன் அருள் பெற்று அவன் நண்பனானான் எனவே சேவலோன்

துணைவன் என்றாள்; திக்கின் வலி தொலைத்ததும் வெள்ளி மலை எடுத்ததும் உத்தரகாண்டத்தில் வரையெடுத்த படலத்திலும், திக்குவிஜயப் படலத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இராவணனின் வலிமை, ஆற்றல், ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றையும், குபேரனது செல்வச் செழிப்பையும், கூறித் தான் யாரென்பதைக் கூறுகிறாள். இறுதியில் தன் பெயரைப் பொய்யாகவும், தான் மணமாகாதவள் என்பதை வஞ்சகமாகவும் கூறியிருக்கிறாள். பொதுவாக மணம் குறித்துப் பேசும் போது மணமகன் அல்லது மணமகள் ஆகியோரது மூன்று தலை முறைகள் பற்றிக் கூறுவது வழக்கம். அது போலவே இவளும் கூறியதால் இவள் உள்ளக் கிடக்கை இராமனை மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதை அறியலாம்.

பிரமன் தனக்குப் படைப்புத் தொழிலில் உதவி புரிவதற்காகத் துணைப் பிரமர்கள் ஒன்பது பேரைப் படைத்தான். அவற்றுள் ஒருவன் புலஸ்தியன். இவன் முனிவன். இவன் மனைவி இன்னொரு முனிவனான திருணபிந்து என்பவனின் மகள். இவர்களுக்குப் பிறந்தவன் விச்சிரவசு. விச்சரவசு, பரசுராமனின் மகளை மணந்தான். அவர்களுக்குப் பிறந்தவன் குபேரன். கேசகிக்கும் விச்சிரவசுவுக்கும் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை, வீடணன் ஆகியோர். இராவணன் என்ற பெயரைச் சொல்லாதிருப்பது காண்க. காரணம் அந்தச் சொல்லுக்குப் பிறரை அழச் செய்பவன் என்றும், அழுபவன் என்றும் இரு பொருள்களும் உண்டு. ''மாவெலாம் தொலைத்து'' என்றதனால் அழச் செய்தல் என்ற பொருளும், ''வெள்ளி மலை எடுத்து'' என்றதனால் தானே அழுதவன் என்ற பொருளும் கிடைப்பதை உணர்க.

சூர்ப்பணகை என்ற விகாரமான பெயரைக் காமவல்லி என்று அழகாகவும், தான் விதவை என்பதை மறைத்துக் கன்னி என்று பொய்யாகவும் கூறியதன் உள்நோக்கம் உணர்ந்து கொள்ளத்தக்கது. அவனுடைய மூன்று கேள்விகளில் இரண்டு கேள்விகளுக்கு விடை தந்து, மற்றொன்றான ஊரின் பெயரைக் கூறாது விடுத்தது, உறவு கூறவே ஊரும் தெரியவரும் என்ற காரணத்தால் என்க.

விச்சிரவசுவைப் பற்றி வியாசபாரதம் வேறு போலக்கூறும். விச்சிரவசுவுக்கு மூன்று மனைவியர் என்றும், அவர்களும் புஷ்போத்கடை என்பவள் இராவணனையும், கும்பகர்ணனையும், மாலினி என்பவள் வீடணனையும், இராகை என்பவள் கரன், சூர்ப்பணகை என்பவரையும் பெற்றனர் என்று கூறும். இங்கே குபேரனைப் பற்றிக் குறிப்பிடப்படாதது கருதத்தக்கது. என்றாலும் சூர்ப்பணகை விச்சிரவசுவின் மகள் என்பது பெறப்படுகிறது. தாய் பெயர் கேகசியா, இராகையா என்பது தான் புலப்படவில்லை.

40. சூர்ப்பணகை வடிவு கண்டு இராமன் ஐயுறுதல்

அவ்வுரை கேட்டவீரன், ஐயுறு
மனத்தான், ''செய்கை
செவ்விது அன்று; அறிதலாகும் சிறிதின்''
என்று உணரச் ''செங்கண்
வெவ்வுரு அமைந்தோன் தங்கை
என்றது மெய்ம்மை ஆயின்,
இவ்வுரு இயைந்த தன்மை
இயம்புதி இயல்பின்'' என்றான். (2873)

(செவ்விது - நல்லது; வெவ்வுரு - கொடிய வடிவம்; இயல்பின் - உள்ளவாறு)

சூர்ப்பணகை கூறியவற்றைக் கேட்ட வீரனாகிய இராமன், இவள் கூறுவதற்கும், இவள் கொண்டிருக்கும் தோற்றத்திற்கும் ஒத்துப் போகாமையால் சிறிது ஐயம் உற்றவனாய், இவளுடைய செய்கைக் குறிப்புக்கள் நல்லதாகத் தோற்றவில்லை; இவளிடம் பேசிப்பார்த்தால் சிறிது நேரத்தில் உண்மை தெரிந்து விடும் என்று உணர்ந்து, அவளை நோக்கி, ''எப்பொழுதும் கோபத்தால் சிவந்த கண்களையும், கொடிய உருவத்தையும் கொண்ட இராவணனின் தங்கை நீ என்று கூறுவது உண்மையானால், உனக்கு இந்த அழகான எழில் தோற்றம் வாய்த்தது எவ்வாறு என்பதை எனக்கு உள்ளவாறு கூறுவாயாக!'' என்றான்.

செய்கை என்றது அவள் கண்ணாலும், முகத்தாலும் உணர்த்திய காமக் குறிப்புக்களை என்க. ஒரு வயிற்றுப் பிறந்தோர் ஒத்த உருவ அமைப்புக் கொண்டிருத்தலே இயல்பு. பத்துத் தலையும் இருபது கைகளும், இருபது சிவந்த கண்களும், கறுத்த உடலும் கொண்டுள்ள இராவணனுக்கு இவ்வளவு அழகு பொருந்திய தங்கை இருப்பது இயலாது என்பதை உணர்த்தவே செங்கண், வெவ்வுரு அமைந்தோன் தங்கை என்றது மெய்ம்மை ஆகின் என்றான் என்க. ஒன்று மெய்யானால் மற்றொன்று பொய்யாதல் வேண்டும். இரவும் பகலும் போல ஒன்று நின்றுழி, ஒன்று நில்லா. அவனது தங்கை என்றால் இவ்வுருப் பொய்யாதல் வேண்டும்; இவ்வுரு மெய்யென்றால் அவன் இவள் அண்ணன் என்பது பொய்யாதல் வேண்டும். இதுவும் இனித்தொடரப் போகும் உரையாடலும் கம்பன் காப்பியத்தை ஒரு சுவைமிக்க நாடகக் காப்பியம் போல் தோற்றச் செய்யும் விந்தையை உன்னுக.

41. ''தவம் செய்து பெற்ற உருவம்'' என்று சூர்ப்பணகை கூறுதல்

தூயவன் பணியாமுன்னம், சொல்லுவாள், சோர்விலாள்; ''அம்
மாய வல்அரக்கரோடு வாழ்வினை மதிக்கலாதேன்,

ஆய்வுறு மனத்தேன்ஆகி, அறம்தலை நிற்பதானேன்;
தீவினைதீய, நோற்றுத் தேவரில் பெற்றது'' என்றாள். (2874)

(ஆய்தல் - ஆராய்தல்; தலை நிற்பது - நின்று ஒழுகுதல் / கடைப் பிடித்தல்; நோற்றல் - தவம் செய்தல்; பணித்தல் - சொல்லுதல்)

பரிசுத்தமான இராமன் அவ்வாறு சொல்லி முடிக்கும் முன்பே, சிறிதும் தளர்ச்சியடையாதவளாய்ச் சூர்ப்பணகை சொல்லலுற்றாள். ''அந்த வஞ்சனை மிக்க வலிமை வாய்ந்த அரக்கர்களோடு சேர்ந்து வாழப் பிடிக்காமையால், அவர்களை மதிக்காது, நல்லது இது தீயது இது என்று பகுத்தறியும் உள்ளத்தை உடையவளாகி, தருமத்தையே மேற்கொண்டு வாழவேண்டும் என்று கருதி அதன்படி நின்று ஒழுகலானேன்; நான் செய்த தீவினைகள் எல்லாம் அழிந்து போகும்படி பெருந்தவம் செய்து, தேவர்களின் அருளால் இவ்வழகிய உருவத்தைப் பெற்றேன்'' என்றாள்.

நான் உருவத்தால் வேறுபடுவதற்கு முன்பே, அவர்களிடமிருந்து உள்ளத்தால் வேறுபட்டு அறவழியில் நின்று, தவமியற்றித் தேவர்களிட மிருந்து இத்திவ்யசரீரம் பெற்றேன் என்றாள் என்பது கருத்து. ''தூய்மை என்பது அவா இன்மை'' என்பது குறள் 364. எனவே ஆசையே அற்ற இராமன் தூயவன் எனப்பட்டான். தான் சொல்வது பொய் என்று அவன் உணர்ந்து விடக்கூடாது என்ற விரைவினால் சிறிதும் தயக்கமோ தளர்ச்சியோ இல்லாது. கூறினாள் என்பதைக் குறிக்கவே, பணியா முன்னம், சோர்விலாள் சொல்லுவாள்'' என்றார்.

42. ''ஏன் தனியாக வந்தாய்?'' என இராமன் கேட்டல்

''இமையவர் தலைவனேயும் எளிமையின் ஏவல் செய்யும்
அமைதியின், உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை ஆயின்,
அமைஉறு செல்வத்தோடும் தோன்றலை; துணையும் இன்றித்
தமியை நீ வருதற்கு ஒத்த தன்மை என்? தையல்!'' என்றான். (2875)

(இமையவர் - தேவர்கள்; அமைதி - தன்மை; சுமை - மிகுதி; தமியை - தனியளாய்; தன்மை - காரணம்; தையல் - அழகுடையவள்; எளிமை - இழிந்த நிலை; தை - அலங்கரித்தல் / அழகு)

''அழகுடையவளே! தேவர்களின் தலைவனான இந்திரனும்கூட, இழிந்த நிலையில் இராவணன் ஏவியபடி செய்கின்ற தன்மையுடையவன் என்றால், இம்மூன்று உலகங்களையும் அரசாட்சி செய்பவனின் தங்கை நீ என்றால், மிகுந்த செல்வச் சிறப்போடும், ஆடம்பரத்தோடும், பெருமிதத்தோடும் நீ வந்திருக்கவில்லை; பணிப்பெண்கள், காவலர், தோழியர் முதலிய துணைவர்களும் இன்றித் தன்னந்தனியளாக நீ இங்கு வருவதற்குப் பொருத்தமானகாரணம் என்ன?'' என்று கேட்டான் இராமன்.

எளிமையின் ஏவல் செய்தல் என்பது, ஏவிய பணிகளைச் சிறிதும் தடையின்றி, அச்சத்துடன், அடக்கமாகச் செய்து முடித்தல் என்பதாம்.

43. தான் வந்த காரணம் பற்றிச் சூர்ப்பணகை சொல்லுதல்

வீரன் அஃது உரைத்தலோடும், மெய்இலாள், "விமல! யான்அச்
சீரியர் அல்லார் மாட்டுச் சேர்கிலேன்; தேவர்பாலும்
ஆரிய முனிவர்பாலும், அடைந்தனென்; இறைவ! ஈண்டு ஓர்
காரியம் உண்மை, நின்னைக் காணிய வந்தேன்'' என்றாள். (2876)

(மெய் - உண்மை; விமலன் - குற்றமற்றவன்; சீரியர்அல்லார் சிறப்பில்லாதவர் / உயர்குண ஒழுக்கமில்லாதவர்; அரிய - சிறந்த; இறைவன் - தலைவன்; உண்மை - உள்ளது / இருக்கிறது; காணிய - காண்பதற்காக)

அவ்வாறு வீரனான இராமன் கூறியவுடன், பொய்யே வடிவானவளான சூாப்பணகை, ''குற்றமற்றவனே! நான் அந்த நற்பண்பும் நற்குணமும் சிறப்பும், உயர்குண ஒழுக்கமும் இல்லாதவர்கள் பக்கம் சேர்ந்திருக்க மாட்டேன்; தேவர்களிடத்தும், சிறந்த முனிவர்களிடத்தும் சேர்ந்துள்ளேன். தலைவனே! இங்கு எனக்கு ஒரு செய்கை நிகழ வேண்டியுள்ளது. அதன் பொருட்டு உன்னைக் காண்பதற்காக வந்துள்ளேன்'' என்றாள்.

இராமன் கேட்டவை இரண்டு கேள்விகள். ''செல்வச் சிறப்போடு ஏன் வரவில்லை? தனியளாக ஏன் வந்தாய்? என்பன. அதற்கு மிகப் பொருத்தமாக விடை கூறுகிறாள் சூர்ப்பணகை. நான் அவர்களிடமிருந்த உறவை அறுத்துக் கொண்டேன் எனவே செல்வச் சிறப்போடு வரவில்லை. எனக்கு இங்கே ஆகவேண்டிய ஒரு காரியம் உள்ளது. அதனால் உன்னைக் காண்பதற்காகத் தனியாக வந்தேன் என்றாள். ''மெய் இலாள்'' எனச் சூர்ப்பணகையைச் சொன்ன கவிஞன், அவள் இராமனை அழைக்கும் போது, ''விமல'', குற்றமற்றவனே என்று அழைப்பதாகக் கூறுவது ஒரு நயம். அதே போலத் தான் தனியாக வந்தது உன்னைக் காண்பதற்குத் தான் என்று கூறவரும் போது, ''இறைவ!'' தலைவனே, கணவனே, என்று பொருள்படும்படி சொற்களைப் பயன்படுத்தியிருப்பது இன்னும்ஒரு நயம். அரக்க குணம் படைத்தவர்கள்என்று கூறாமல், ''சீரியர் அல்லார்'' என்று எதிர்மறையாகக் கூறுவது மற்றும் ஓர் நயம்.

44. ''என்ன காரியம்'' என்று இராமன் வினவுதல்

அன்னவள் உரைத்தலோடும்,
ஐயனும், ''அறிதற்கு ஒவ்வா
நன்னுதல் மகளிர் சிந்தை;
நன்னெறிப்பால அல்ல;
பின்னிது தெரியும்'' என்னா
''பெய்வளைத் தோளி! என்பால்
என்ன காரியத்தை? சொல்; அஃது
இயையுமேல், இழைப்பல்'' என்றான். (2877)

(நுதல் - நெற்றி; ஒவ்வா - இயலாதது; பெய் - அணிந்த; இழைத்தல் - செய்தல்; சிந்தை - மனநோக்கம்)

அவ்வாறு சூர்ப்பணகை கூறியதும், இராமனும் ''நல்ல நெற்றியை யுடைய மகளிரின் மனக்கருத்துக்கள் ஆடவர்களால் அறிய இயலாதன; அவர்கள் உள்ளமும் நல்ல நெறியில் செல்வன அல்ல; எனினும் இவளது தன்மை இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்து விடும்'' என்று தன் மனத்துள் கருதி, அவளை நோக்கி ''வளையல்கள் அணிந்த தோள்களை உடைய வளே! என்னிடத்து என்ன காரியமாய் வந்தாய்? அதைச் சொல்லுவாயாக! செய்யக் கூடுமாயின் செய்கின்றேன்'' என்றான்.

பெண்டிரின் மனம் ஆழம் காணமுடியாதது என்பதும் அவர்கள் பொதுவாக நல்ல நெறியில் நினைக்கத் தெரியாதவர்கள் என்பதும் பொதுக் கருத்துத்தான் என்றாலும், இங்கே சூர்ப்பணகையைக் கருத்திற் கொண்ட கூற்றாகவே கொள்ள வேண்டும். ''அத்தி மலரும், அருங்காக்கை வெண்ணிறமும், கத்து புனல் மீன்பதமும், கண்டாலும், பித்தரே! கானார் தெரியல் கடவுளரும் காண்பரோ, மானார் விழியார் மனம்'' என்பது நீதிவெண்பா. ''பெண் எனப்படுவ கேண்மோ! பீடில, பிறப்பு நோக்கா, உண்ணிறை உடைய வல்ல ஓராயிரம் மனத்தவாகும்'' என்பது சீவக சிந்தாமணி. ''இயையுமேல் இழைப்பல்'' என்ற சொற்றொடரும் பலபொருள்களைத் தரும். ஒன்று என்னால் செய்ய முடியுமானால் நான் செய்கிறேன் என்பது; இரண்டு அது நான் செய்வதற்குப் பொருத்தமாக இருக்குமானால் நான் செய்கிறேன் என்பது; மூன்று அது செய்யத்தக்கதானால் நான் செய்வேன் என்பதாம். இங்கே ஒன்றை நோக்க வேண்டும். இராமன் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் தற்காத்துக் கொண்டு இயையுமேல் இழைப்பல் என்றது, இயையாதவழி இழையேன் என்ற உட்கருத்தையும் கொண்ட மிக அற்புதமான சொற்றொடர். காரணம் தன் தந்தை தசரதன் பின் விளைவுகளை நோக்காது வாக்களித்துப் பின் வருத்தமுற்றதை நன்கு உணர்ந்தவன் இராமன். எனவே மிகவும் திறமையாகக் கூறியதை எண்ணுக.

45. தன் காம இச்சையை சூர்ப்பணகை வெளிப்படுத்துதல்

''தாம்உறு காமத்தன்மை தாங்களே உரைப்பதென்பது
ஆம்எனல் ஆவது அன்றால், அருங்குல மகளிர்க்கு அம்மா!
ஏம்உறும் உயிர்க்கு நோவேன்; என்செய்கேன்? யாரும் இல்லேன்;
காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி!'' என்றாள். (2878)

(உறு - அடைந்துள்ள; ஆம் - பொருந்தும்; ஆவது - தக்கது; ஏம் - ஏமம் / கலக்கம் / துன்பம்; வன்மை - கொடுமை; காத்தல் - தடுத்தல்; நோதல் - வருந்துதல்; காமன் - மன்மதன்)

''தாங்கள் அடைந்துள்ள காமவேட்கையைத் தாங்களே வெளிப்படையாகக் கூறுவது என்பது அரிய நற்குலத்தில் பிறந்த பெண்டிர்க்குப் பொருந்தும் என்பது தக்கதன்று என்றாலும் நான் என்ன செய்ய இயலும்? நான் தனியளாய் இருக்கிறேன்; நான் தூதாக அனுப்ப யாரும் இல்லை. எனவே என்னுடைய மயக்க நிலையுற்றிருக்கும் உயிர் வருந்துவதையும் பொருட்படுத்தாது, நானே கூறிவிடுகிறேன். மன்மதன் என்ற ஒப்பற்றவன் செய்கின்ற கொடுமைகளைத் தடுத்து என்னைக் காப்பாற்றி அருள்வாயாக!'' என்றாள் சூர்ப்பணகை.

தாங்களே உரைப்பது என்பது தக்கதன்று என்றதனால் இதனை உரைப்பதற்கென்றே தூதுவராகத் தோழியர், கிளி போன்ற பறவைகள் இருக்கின்றனர் என்பது பெறப்படும். காமனின் வன்மையைக் காத்தி என்பதில் ''என்னை மணந்துகொள்க'' என்ற கருத்து அடங்கியிருப்பதை உணர்க. அவள் தன் மனக்கருத்தை வெளிப்படுத்திய திறம் வியந்து பாராட்டுதற்குரியது. ''உருவிலா ஒருவன் செய்யும் உறுபகை காத்தல் வேண்டும்'' என்பது நைடதம். ''கன்னியர் தம் வேட்கையே போலும் கழி மழலை தன் மணிவாய் உள்ளே தடுமாற'' என்பது நளவெண்பா. அதைப் போல் சூர்ப்பணகையும் தான் கூறவந்த கருத்தை நேரே கூற முடியாமல் தடுமாறுவது ''தாம் உறுகாமத்தன்மை, தாங்களே உரைப்பதென்பது ஆம்எனல் ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா!'' என்று நீட்டி முழக்கிக் கூறுவதில் இருந்தே தெரியவருவதை உணர்க. ''கன்னியர் உற்ற நோய், கண்ணனார்க்கும் அஃது இன்னது என்று உரையலர்'' என்பது சீவகசிந்தாமணி. காம இச்சையைத் தூண்டி விட்டுத் துன்புறுதத்துவதில் மன்மதனுக்கு இணை வேறுயாரும் இல்லை என்பதைப் புலப்படுத்த ''ஒருவன்'' ஒப்பற்றவன் என்று கூறினாள் என்க.

46. சூர்ப்பணகை நல்லவள் அல்லள் என்றுஇராமன் துணிதல்

சேண்உற நீண்டு, மீண்டு,
 செவ்வரி சிதறி, வெவ்வேறு,
ஏண்உற மிளிர்ந்து, நானாவிதம்
 புரண்டு, இருண்ட வாள்கண்
பூண்இயல் கொங்கை அன்னாள்,
 அம்மொழி புகறலோடும்
''நாண் இலள்''; ஐயள், ''நொய்யள்;
 நல்லளும் அல்லள்''; என்றான். (2879)

(சேண் - நெடுந்தொலைவு; ஏண் - வலிமை / சிறப்பு / உயர்ச்சி; நானாவிதம் - பலவிதம்; பூண் - அணிகலன்கள்; நொய்யள் - இழிகுணமுடையவள் / அற்பத்தன்மையள்; அரி - இரேகைகள்; நாண் - வெட்கம்; ஐய - மிகவும் நுட்பமான)

நீண்ட தூரம் சென்று, பின் செல்வதற்கு இடமில்லாமையால் திரும்பி வந்து, சிவந்த இரேகைகள் கண்களெங்கும் பரவியும், வெவ்வேறு விதமான சிறப்புக்களால் ஒளிவிட்டுப் பிரகாசித்தும், பலவிதமாக இங்கும் அங்கும் திரிந்தும் கொண்டிருக்கின்ற இருள் போன்று கரிய, வாள் போன்ற கூரிய கண்களும், ஆபரணங்கள் அணியப் பெற்ற கொங்கைகளும் கொண்ட சூர்ப்பணகை அவ்வாறு கூறியவுடன், இராமபிரான், ''இவள் வெட்கமில்லாதவள், மிகவும் அற்பத்தன்மையுடையவள், நல்ல குணங்கள் கொண்டவளும் அல்லள்'' என்று தீர்மானித்தான்.

கண்களின் குறிப்பாலும், கொங்கைகளின் அசைவாலும், சூர்ப்பணகை சில காமக் குறிப்புக்களை இராமன் பால் செலுத்தினாள் என்பது கருத்து. இதனை இராமபிரான் அவள் செயல்களைக் கொண்டே அவள் தீயவள் என்பதைத் தீர்மானித்துக் கொண்டான் என்பதாம். பொதுவாக நற்குலப் பெண்கள் ஆடவர் முன் நிற்கவும் வெட்கப்படுவார்கள். இவள் அச்சமின்றி நின்றாள். எனவே நாண் இலள் என்றான். நின்றதோடு மட்டுமல்ல, தன் கண்களால் சில காமக் குறிப்புக்களையும் கொங்கைகளின் அசைவுகளால் சில இழிவான குறிப்புக்களையும் காட்டியதால் அவள் ''நொய்யள்'' என்றும் ''நல்லளும் அல்லள்'' என்றும் தீர்மானித்தான் என்க. அவள் மட்டும்தான் அவனை விரும்பினாளேயன்றி, இராமபிரான் எந்த எண்ணத்தையும் அவள் பால் தெரிவிக்கவில்லை. இவ்வாறு இருவருமின்றி ஒருவர் மட்டும் விருப்பம் கொள்வதை ஒருதலைக் காதல் என்றும் ''கைக்கிளை'' என்றும் இலக்கணம் கூறும். கண்களில் செவ்வரி படர்ந்திருப்பது சிறப்பு.

47. சூர்ப்பணகை அவன் எண்ணம் அறியாது தடுமாறுதல்

பேசலன், இருந்த வள்ளல்
உள்ளத்தின் பெற்றி ஓராள்;
பூசல் வண்டு அரற்றும் கூந்தல்
பொய்ம்மகள், ''புகன்ற என்கண்
ஆசை கண்டு அருளிற்று உண்டோ?
அன்று எனல் உண்டோ?'' என்னும்
ஊசலின் உலாவுகின்றாள்; மீட்டும்
ஓர் உரையைச் சொல்வாள். (2880)

(பெற்றி - தன்மை / நிலை; ஓர்தல் - அறிதல் / உணர்தல்; பூசல் - போர் / ஒலி; அரற்றுதல் - ரீங்காரமிடுதல்; பொய்ம்மகள் - பொய்யுருக் கொண்டவள்; ஊசல் - ஊஞ்சல்)

அக்காமக் குறிப்புகளைக் கண்டு இராமபிரான் ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தான். அவ்வாறு இருந்தவனின் உள்ளத்தின் தன்மையை உணராதவளானாள் சூர்ப்பணகை. போர் செய்யும் வண்டுகள் ரீங்காரிக்கும் கூந்தலையுடையவளும், இப்பொழுது பொய் உருவம் மேற்கொண்டிருப்

பவளுமான சூர்ப்பணகை. ''இவன் இப்போது என்னைக் கண்டு ஆசை கொண்டு நல்வார்த்தை கூறி அருள் செய்வானோ? அல்லது இது தக்கது அன்று என்று கூறி மறுத்து விடுவானோ?'' என்று ஐயமுற்று ஊஞ்சல்போல் இருகருத்துக்களையும் கொண்டு தடுமாறினாள்; எனவே கீழ்க்கண்டவாறு, மேலும் ஒரு வார்த்தையைச் சொல்லத் தொடங்கினாள்.

மௌனமாக இருந்த வள்ளலின் உள்ளத்தன்மையை உணர்ந்து கொள்ளாமல், இரு மனம் கொண்டு தடுமாறினாள் என்பதாம். ஐயம் என்பது உண்டோ இல்லையோ என்பதைத் தெளிவாகத் தெரியாத ஒரு நிலை. எனவே ஓரிடத்தில் நில்லாது இங்கும் அங்கும் சென்று வரும் ஊஞ்சலுக்கு உவமை கூறினார். ''யாதென்று இருபால் கவருற்று இடை ஊசலாடி, ஒருபாற்படாது என் உள்ளம்'' என்பது தண்டியலங்காரம். ஊசலின் உலாவுதல் என்பது ஐயத்தால் தடுமாறுதல் என்று பொருள்படும்.

48. ''எழுத அருமேனியாய்! ஈண்டு எய்தியது அறிந்திலாதேன்,
முழுதுஉணர் முனிவர் ஏவல் செய்தொழில் முறையின் முற்றிப்
பழுதுஅறு பெண்மையோடும், இளமையும் பயன் இன்று ஏகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும்'' என்றாள். (2881)

(ஏக - கழிய; வாளா - வீணாக; செய்தொழில் - பணிவிடைகள்)

''சித்திரத்தில் எழுதுதற்கும் இயலாததான மேனி உருவம் கொண்டவனே! நீ இங்கு வந்து இருப்பதை அறியாதவளான நான், முற்றும் உணர்ந்த முனிவர்களுக்கு, அவர்கள் ஏவிய பணிவிடைகளை முறையாக முற்றவும் நிறைவேற்றி, என்னுடைய குற்றமற்ற பெண் தன்மையும், அத்தோடு எனது கிடைத்தற்கரிய இளமைப் பருவத்தையும் பயன் இல்லாமல் கழித்து விட்டேன். அதனால் என்னுடைய வாழ்நாளும் சிறுபொழுது கூடப் பயன் இல்லாமல் வீணாகக் கழிந்துவிட்டன'' என்று ஏங்கிக் கூறுகிறாள்.

நீ இங்கு வந்திருப்பது எனக்கு முன்பே தெரிந்திருந்தால், முனிவர்களுக்குப் பணிவிடை செய்வதை நீக்கி, உன்னை அடைந்து, என் பெண்மையும் இளமையும் பயன்படும்படி என்னுடைய ஒவ்வொரு பொழுதையும் நாளையும் இன்பமாகக் கழித்திருப்பேன் என்று நினைத்தாள் என்பது கருத்து. எழுத அருமேனியாய் என்று இங்கு சூர்ப்பணகை கூறியது போல, முன்பு இராமனுக்குப் பெயர் சூட்டும் போதே விசுவாமித்திரன் கூற்றாக ''எழுதரிய திருமேனிக் கருங்கடலைச் செங்கனிவாய்க் கோசலை என்பாள் பயந்தாள்'' என்றும், பின்னர் கிட்கிந்தா காண்டத்தில் வாலியின் கூற்றாக ''ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்!'' என்று கூறியிருப்பதையும் ஒப்பு நோக்குக. இதைப் போலவே ''பழுதுஅறு பெண்மையும் இளமையும்'' என்று சூர்ப்பணகை சொல்வது போலவே பின்னால், அயோமுகிப் படலத்தில் அயோமுகியும், ''முன்னம் ஒருத்தர் தொடா முலையோடும், பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்து, என் இன்னுயிரைக் கடிது ஈகுதி'' என்பதும் நோக்கத்தகும்.

பொழுது என்பது ஒரு நாளின் ஆறு கூறுகளைக் குறிக்கும் அவை காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, இடையாமம், வைகறை என்பனவாம். பெண் தன்மைக்குப் பயன்தரத் தக்க கணவனோடு இளமைப் பருவத்தில் இன்புற்று வாழ்தலே ஆகும். ''அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று'' என்பது குறள் (1007). இதனையே இறைவனைக் கண்டு மகிழாத அடியார்களும் இக்கருத்துப்படவே பாடியிருப்பதும் உணர்த்தக்கது. ''புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே'' என்பதும் ''கரும்பு இருக்க இரும்பு கடித்து எய்த்தவாறே'' என்பதும் அப்பர் தேவாரம்.

49. இராமன் அவள் கருத்தை மறுத்துக் கூறுதல்

''நிந்தனை அரக்கி; நீதிநிலை இலாள்; வினை மற்று எண்ணி
வந்தனள் ஆகும்''; என்றே வள்ளலும் மனத்துள் கொண்டான்;
''சுந்தரி! மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவிற்று அன்றால்;
அந்தணர் பாவை நீ; யான் அரசரில் வந்தேன்'' என்றான்.(2882)

(நிந்தனை - பழி; வினை - வஞ்சகச் செயல்; சுந்தரி - அழகுடையவள்; மரபு - குலமுறை; தொன்மை - பழமை; துணிவு - ஒழுக்கத்திற்கு உட்பட்டது)

அதனைக் கேட்ட இராமபிரான், ''இவள் எல்லோருடைய பழிச் சொல்லுக்கும் ஆளாகின்ற அரக்கி; நீதிநெறியில் செல்லாதவள்; ஒரு நிலையற்ற கருத்துடையவள், இவள் இங்கு வந்திருப்பதற்கு வேறு ஏதோ தீய எண்ணம், வஞ்சகம் இருக்கும் போலும்'' என்று தன் மனத்துள் எண்ணிக் கொண்டு அவளிடம் விளையாட்டாக, ''மிக்க அழகுடையவளே! நீ கூறும் கருத்து குலமுறைக்கும், பழமையான ஒழுக்க நெறிக்கும் உட்பட்டது அன்று, மாறுபாடானது ஆகும். ஏனெனில் நீயோ புலஸ்தியன் வழியில் வந்த அந்தணர் குலப்பெண், நானோ க்ஷத்திரிய வழியில் வந்த அரசர் மரபினன் எனவே இது தகாது'' என்றான்.

சூர்ப்பணகையின் உள்ளக்கருத்தை இப்பொழுது தான் இராமபிரான் நன்கு உணர்ந்து கொண்டான். அவளை நேரே அகன்று போ என்று கடிந்து கூறாமல், ''சுந்தரியே'' என்று அழைத்து விளையாட்டுக்காட்டுகிறான். முதலில் குலமுறை, மரபு ஒழுக்கம் கூறி அவளது கருத்தை மறுக்கிறான் என்பதாம். முன்பு ''அறம் தலை நிற்பதானேன்'' என்று கூறியவள், இப்பொழுது ''பழுதறு பெண்மையோடு இளமையும் பயனின்று ஏகப், பொழுதொரு நாளும் வாளாக் கழிந்தன'' என்கிறாள். எனவே நீதி நிலை இலாள் ''நிந்தனை அரக்கி, வினை மற்று எண்ணி வந்தனள்'' என்றான் என்க. ''வினை மற்று எண்ணி'' என்பது அரக்கர்களை அழிக்க வந்திருக்கும் நம்மை மணப்பது போல ஆசை வார்த்தை காட்டி வஞ்சித்து, நம்மை அழிக்க வந்த அரக்கியாய் இருப்பாளோ என்று இராமன் கருதியதனையும் குறிக்கும். அரசர், அந்தணர் பெண்ணை மணப்பது பழமையான

ஒழுக்கத்திற்கு மாறுபட்டது. ஒருவன் தன் குலத்துப் பெண்ணை மணப்பதே சிறப்புடையது. இல்லையேல் தன் குலத்திற்குக் கீழ்ப்பட்ட குலத்துப் பெண்ணை மணக்கலாம்; ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் தன் குலத்திற்கு மேம்பட்ட குலத்தில் மணம் கொள்ளக் கூடாது என்பது பழைய ஒழுக்க நெறியும் மனுநீதியும் ஆகும்.

50. சூர்ப்பணகை அதை மறுத்துரைத்தல்

''ஆரண மறையோன் எந்தை;
அருந்ததிக் கற்பின் எம்மோய்;
தாரணி புரந்த சாலகடங்கடர்
மரபின் தையல்;
போர்அணி பொலங்கொள் வேலாய்!
பொருந்தலை இகழ்தற்கு ஒத்த
காரணம் இதுவே ஆயின், என்
உயிர் காண்பென்'' என்றாள். (2883)

(ஓய் - தாய்; புரந்த - காத்த; பொலம் - அழகு; பொருந்துதல் - இசைதல்; உயிர் காணுதல் - உய்தல் / கடைத்தேறுதல்; தையல் - அழகுடையவள்; மறையோன் - மறையோதும் அந்தணன்; ஆரணம் - ஆரண்யகம் / வேதத்தின் ஒரு பகுதி)

''போர் செய்வதையே அணிகலனாகக் கொண்ட அழகு பொருந்திய வேற்படையை உடையவனே! என்னுடைய தந்தை விச்சிரவசு வேதம் வல்ல அந்தணன். ஆனால் என் தாய் அருந்ததி போன்ற சிறப்பான கற்பொழுக்க முடையவள்; அவள் இவ்வுலகை அரசாட்சி செய்து வந்த சாலகடங்கடர் என்ற அரசனின் அழகிய மகள்; எனவே நமது திருமணத்திற்கு ஒவ்வாதது, என்று நீ இகழ்ந்து கூறியதற்குரிய காரணம் இதுதான் என்றால், நான் என் உயிர் பிழைத்தவள் ஆவேன்'' என்றாள்.

இராமன் இவளை மணந்து கொள்ள முடியாது என்று மறுத்துச் சொன்ன காரணம் அவள் அந்தணர் குலத்தில் பிறந்தவள் என்பதே. ஆனால் சூர்ப்பணகை இப்போது, தன் தந்தை அந்தணர் குலத்தவர் தான் என்றாலும், தன்னைப் பெற்றெடுத்த தாய் கேகசி, சாலகடங்கடர் என்னும் அரச குலத்தில் பிறந்தவள் என்று கூறி, எனவே இனி நம் திருமணத்திற்குத் தடை இருக்காது என்று மகிழ்ந்து, போன உயிர் திரும்பி வந்தது என்று கூறுகிறாள்.

இப்பொழுது நான் உயிர் காண்பென் என்றதனால், இராமன் உடன்படாது மணக்க இயலாது போனால் உயிர்தரியேன் என்ற பொருளும் தொனிப்பது காண்க. தன் தாய் அருந்ததிக் கற்பினாள் என்றதனால், தானும் பழுதறு பெண்மையாள் என்பதனைக் குறிக்கிறாள். ''தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை'' என்பது பழமொழி. சாலகடங்கடர்

அரக்கர் எனினும் அரசு புரிந்த அரச குலத்தவர் என்பதைக் குறிப்பிட்டு ''தாரணி புரந்த'' என்பதை முன்னதாகச் சொன்னாள் என்க. அரக்கர் என்பதால் கோர உருவத்தாள் என்று எண்ணி விடக்கூடாதே என்பதற்காகத் ''தையல்''- அழகுடையவள் என்று கூறியதும் உணர்க. தான் அந்தணருக்கும் அரச குலத்திற் பிறந்த க்ஷத்திரியத் தாய்க்கும் பிறந்தவள் என்றும் தான் அந்தணர் மகள் அல்ல என்றும் சூர்ப்பணகை, தான் இராமனை மணக்கத் தக்கவள் என்றும் நிறுவுகிறாள். அருந்ததி வசிட்ட முனிவனின் மனைவி. கற்புக்கு எடுத்துக்காட்டாய்க் கூறப்படுபவள்; வானில் விண்மீனாய்க் கணவனைப் பிரியாதிருக்கும் நிலை பெற்றவள்.

சாலகடங்கடர் வரலாறு. ஏதி என்பவன் ஓர் அரக்கன். அவன் மகன் வித்தியுத்கோன். அவன் சாலகடங்கடை என்பவளை மணந்தான். அவர்களுக்குப் பிறந்தவன் சுகேசன். சுகேசன் மக்கள் மாலியவான், சுமாலி, மாலி என்பவர்கள். இதில் சுமாலியின் மகள் கேகசி. கேகசி விச்சிரவசுவை மணந்து, இராவணன், சூர்ப்பணகை முதலியோரை ஈன்றாள் என்பது புராணவரலாறு. சாலகடங்கடையின் தந்தை திருணவிந்து என்ற ராஜரிஷி, தாய் சந்தியை.

51. இராமன் மீண்டும் மறுத்துரைத்தல்

அருத்தியள் அனைய கூற, அகத்து
உறு நகையின் வெள்ளைக்
குருத்து எழுகின்ற நீலக்கொண்டல்,
உண்டாட்டம் கொண்டான்,
''வருத்தம் நீங்கு அரக்கர் தம்மில்
மானுடர் மணத்தல், நங்கை!
பொருத்தம் அன்று என்று சாலப்
புலமையோர் புகல்வர்'' என்றான். (2884)

(அருத்தியள் - ஆசை மிக்கவள்; குருத்து - இளஒளி / இளங்கொழுந்து; எழுதல் - வெளித்தோன்றுதல்; கொண்டல் - மேகம்; உண்டாட்டம் - சிறுவிளையாட்டு; நங்கை - பெண்களிற் சிறந்தவள்; சால - மிகுந்த / சிறந்த)

இராமனிடம் ஆசை கொண்டவளான சூர்ப்பணகை அவ்வாறு கூறவும், இராமபிரான் தன் மனத்துள் சிரித்துக் கொண்டு, அது இளஒளி போல வெளித் தோன்றும்படிக் காட்டி, மேகம் போன்ற நீலவண்ணனாகிய இராமன் ஒரு சிறுவிளையாட்டு விளையாடுவதை மேற்கொண்டான். பின்னர் சூர்ப்பணகையை நோக்கி, ''பெண்களிற் சிறந்தவளே! துன்பம் என்றால் என்ன என்பதையே அறியாத அரக்கர்களை, துன்பத்திலேயே கிடந்து உழலும் மனிதர்கள் மணம் செய்து கொள்ளுதல் பொருத்த மற்றதென்று, மிகுந்த அறிவு உடையவர்கள் கூறுவர்'' என்று கூறினான்.

சூர்ப்பணகை தான் சாலகடங்கடர் மகள் என்று கூறியதால், அவள் அரக்கன் மகள் என்பது தெள்ளிதாகப் புலப்படவே, இராமன் இப்போது,

அரக்கர்களுடன் மனிதர்கள் மணத் தொடர்பு கொள்ளுதல் பொருந்தாது என்று பெரியவர்கள் கூறுவர் என்று கூறி மறுக்கிறான் என்பது கருத்து. தான் முதலில் மறுத்துக் கூறிய பின்னும், தன்னுடைய கருத்திலிருந்து நீங்காது மீண்டும் வற்புறுத்தும் சூர்ப்பணகையின் பேதமையை எண்ணி இராமபிரான் ஒரு இளம் புன்முறுவல் பூத்தான். ''வெள்ளைக் குருத்து எழுகின்ற'' என்பதற்குத் தான் சிறிது வாய்திறந்த அளவில், பல்லொளி மெல்லிதாக வெளிப்பட்ட புன்னகை என்றும் பொருள் கூறுவதுண்டு. உண்டாட்டம் என்பது மனம் பற்றுக் கொள்ளாமல் வாயால் உரையாடி விளையாடும் ஒரு சிறு விளையாட்டைக் குறிக்கும். அரக்கர்கள் பொதுவாகப் பிறர் வருத்தம் கண்டு தாம் வருந்தமாட்டார். அஃதோடன்றி, மேலும் அவர்களை வருத்துவர். இது அரக்கர்கள் இயல்பு. இதைக் குறிப்பால் உணர்த்தவே, ''வருத்தம் நீங்கு அரக்கர்'' என்றான் என்க. இத்தகையோரை ''நெஞ்சத்து அவலம் இலர்'' என்கிறான் வள்ளுவன், குறள் *(1072)*. இப்பொழுது சூர்ப்பணகையின் நிலை தேளுக்குப் பயந்து பாம்பின் வாயில் விழுந்தது போல் ஆயிற்று. அரக்கரும் மனிதரும் மணத்தல் கூடாது என்பது சோதிட நூல் கொள்கையுமாகும்.

52. சூர்ப்பணகை அரக்கப் பிறவியை நீக்கியது கூறுதல்

''பராவஅரும் சிரத்தை ஆரும்
பத்தியின் பயத்தை ஓராது
''இராவணன் தங்கை'', என்றது
''ஏழைமைப் பாலது'' என்னா,
''அராவணை அமலன் அன்னாய்!
அறிவித்தேன் முன்னம்; தேவர்ப்
பராவினில் நீங்கினேன் அப்
பழிபடு பிறவி'' என்றாள். (2885)

(பராவுதல் - புகழுதல் / துதித்தல்; சிரத்தை - ஊக்கம்; ஏழைமை - அறியாமை; அரா - பாம்பு; அணை - படுக்கை; ஆரும் - நிறையும்; அமலன் - குற்றமற்றவன்; பயம் - பயன்; பழிபடு பிறவி - பாவ ஜன்மம்)

''புகழ்வதற்கு அரிய ஊக்கம் நிறைந்த பக்தியின் பயனைச் சிறிதும் உணராமல், ''நான் இராவணனின் தங்கை'' என்று கூறியது, என்னுடைய அறியாமையின் பாற்பட்டதாகும். ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையில் அரிதுயில் கொள்ளும் குற்றமற்றவனான திருமாலைப் போன்றவனே! நான் தேவர்களைத் துதித்ததனால் அந்தப் பழிப்பிற்குரிய அரக்கர் பிறவியை விட்டு நீங்கி விட்டேன். இதனை நான் உனக்கு முன்பே கூறியிருக்கிறேன்'' என்று மீண்டும் கூறினாள்.

நான் அரக்கன் இராவணனின் தங்கை என்று கூறியது தவறான செய்தியாகும். நான் தேவர்களைத் தொழுது அவர்கள் அருள் பெற்று அந்தப் பழிக்குள்ளான அரக்கப் பிறவியை நீக்கியவள். தீவினை தீய

நோற்றுத் தேவரின் பெற்றது இந்தப் பிறவி. இதனை நான் முன்பே கூறியிருக்கிறேன். எனவே நீ மானிடன். நான் தேவர் குலத்தவள் எனவே நாம் இருவரும் மணந்து கொள்ளலாம். இதற்குத் தடையேதும் கூடாது என்பது அவள் உள்ளக்கருத்து.

53. இராமன் நிபந்தனையோடு உடன்படுதல்

''ஒருவனோ உலகம் மூன்றிற்கு
ஓங்கு ஒரு தலைவன்; ஊங்கின்
ஒருவனோ குபேரன்; நின்னோடு
உடன் பிறந்தவர்கள்; அன்னார்
தருவரேல், கொள்வென்; அன்றேல்,
தமியை வேறு இடத்துச் சார்தி;
வெருவுவென் நங்கை!'' என்றான்,
வேதத்தின் அறிவை வென்றான். (2886)

(ஓங்கு - சிறந்த; தமியை - தனியள்; சார்தல் - அடைதல் / செல்லுதல்; வெருவுதல் - அஞ்சுதல்; ஊங்கு - சிறப்பு / மேம்பட்டது)

''பெண்களிற் சிறந்தவளே! உன்னோடு உடன் பிறந்தவர்களில் ஒருவனோ, இம்மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற சிறந்த தலைவன் இராவணன்; அவன் முன் பிறந்தவனோ செல்வத்திற்கு அதிபதியும், திக்குப் பாலகர்களில் ஒருவனுமாகிய குபேரன். எனவே அவர்கள் உன்னைக் கரம் பிடித்து என்னிடம் தருவார்களேயானால் நான் உன்னை மணம் செய்து கொள்வேன். இல்லை என்றால் தனியாக இருக்கின்ற நீ வேறு இடம் நோக்கிச் செல்லுவாயாக. உன்னிடம் மேலும் பேசுவதற்கு நான் அஞ்சுகிறேன்'' என்றான், வேதங்களாலும் அளவிடற்கரிதான மேம்பட்ட அறிவினையுடையவனான இராமபிரான்.

இவர்கள் இருவரும் சேர்ந்து இங்கு வந்து மணம் முடித்துத் தரமாட்டார்கள் என்ற துணிச்சலில் ''தருவரேல் கொள்வென்'' என்று கூறினான் இராமன் என்பதாம். மேலும் வேதத்தின் அறிவை வென்றவனான இராமன் ''வெருவுவென்'' என்று கூறியது சிறுவிளையாட்டு என்றே கொள்க. இங்கு நிற்காதே, சீக்கிரம் விலகிப் போ என்பதை மிகச் சாதுர்யமாக ''வேறு இடத்துச் சார்தி'' என்ற நயம் நோக்குக. தம்பியாகிய இராவணனை முன்னரும், மூத்தவனாகிய குபேரனைப் பின்னரும், இராமன் கூறியதற்குக் காரணம். இராவணனுடைய வீரப்பராக்கிரமும், அவன் மூவுலகங்களுக்கும் தலைவன் என்பதாலும், அவன் சூர்ப்பணகையுடன் ஒரு தாய் வயிற்றில் பிறந்த நேர் அண்ணன் என்பதாலும் என்க. குபேரன் என்ற சொல்லுக்கு ''விகாரப்பட்ட உடம்பை உடையவன்'' என்பது பொருள். கயிலயங்கிரியில் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்த பொழுது, உமையம்மை மேல் இடக்கண்ணைச்

செலுத்தியதால், அக்கண் ஒளிகுன்றியது, அதனால் அவனுக்குக் குபேரன் என்ற பெயர் வழங்கலாயிற்று என்பது புராண வரலாறு.

54. காந்தர்வ மணம் பற்றிக் கூறுதல்

''காந்தர்ப்பம் என்பது உண்டால்;
காதலின் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும்
மறைகளே வகுத்த கூட்டம்,
ஏந்தல் பொன் தோளினாய்! இஃது
இயைந்தபின், எனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற்று ஆகும்;
வேறும் ஒரு உரை உண்டு'' என்றாள். (2887)

(ஏந்தல் - மலை / உயர்ந்த; கூட்டம் - புணர்ச்சி; காந்தர்ப்பம் - கந்தர்வம்; பொன் - அழகு; பல பொருள்களையும் ஏந்தி நிற்பதால் ஏந்தல், மலைக்குக் காரணப்பெயர்)

''மலை போல உயர்ந்த தோள்களையுடையவனே! அன்பினால் ஒன்றுபட்ட மனத்தையுடைய ஆடவர்க்கும் மகளிர்க்கும் வேதங்களே விரித்துக் கூறப்பட்ட ''காந்தர்வம்'' என்ற ஒரு மணமுறை உள்ளதல்லவா? அந்த முறைப்படி நம்மிருவர்க்கும் மணம் முடிந்த பின், என்னுடன் பிறந்த மூத்தவர்களும், அரசர்களுமான இராவணன், குபேரன் ஆகியவர்களுக்கும் அது விருப்பமுடையதாகி விடும். இது தவிர, உன்னிடம் நான் கூறவேண்டிய செய்தி ஒன்றும் உள்ளது'' என்றாள் சூர்ப்பணகை.

காந்தர்ப்பம் - காந்தர்வம் - கந்தருவம் என்பது எட்டுவகைத் திருமண முறைகளுள் ஒன்று. இது தலைவனும் தலைவியும் மனம் ஒத்துக் கூடும் மணமுறை. இதனை ''யாழோர் கூட்டம்'' எனவும் தமிழ் நூல்கள் கூறும். இராமனைக் கூடிவிட வேண்டும் என்பது ஒன்றே அவள் நோக்கம். எனவே எந்த் முறையிலாவது அதை நிகழ்த்திவிட வேண்டும் என்று அவள் ஒன்று மாற்றி ஒன்று கூறிக் கொண்டு செல்வதை உணர்க. ஒத்த அன்பினராய்த் தலைவனும் தலைவியும், கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தம்மில் கூடும் கூட்டம் காந்தருவமாகும். எட்டுவகைத் திருமணங்களாவன, பிரம்மம், தைவதம் (தெய்வம்), பிரஜாபத்தியம், ஆரிஷம், ஆசுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்பன. இவை வேதங்களிலேயே கூறப்பட்ட மண முறைகள். எனவே யாரும் தடை செய்ய முடியாது. இவ்வாறு காந்தருவ முறையால் நாம் மணந்து கொண்டு விட்டோம் என்றால் எனக்கு மூத்தவர் இருவரும் தடையொன்றும் கூறாது உடன்பட்டு விருப்புடன் ஏற்றுக் கொள்வார்கள் என்றாள் சூர்ப்பணகை. இங்கே தான் அரச குலத்தைச் சேர்ந்தவள் என்பதை மீண்டும் வலியுறுத்துவது தோன்ற ''எனக்கு மூத்த வேந்தர்க்கும்'' என்று கூறுவது நோக்குக.

55. இராமன் தன்னை மணப்பதால் விளையும் நன்மைகள் பற்றிக் கூறுதல்

''முனிவரோடு உடையர் முன்னே
முதிர்பகை; முறைமை நோக்கார்;
தனியை நீ; ஆதலால், மற்று
அவரொடும் தழுவற்கு ஒத்த
வினையம் ஈது அல்லது இல்லை;
விண்ணும் நின்ஆட்சி ஆக்கி,
இனியராய் அன்னர் வந்து, உன்
ஏவலின் நிற்பர்'' என்றாள். (2888)

(வினையம் - உபாயம் / தந்திரம் / சூழ்ச்சி; முதிர் - முற்றிய; தழுவுதல் - நட்புடன் வாழ்தல்)

''என்னுடைய உடன் பிறந்தவர்கள், முன்னரேயே முனிவர்களோடு முற்றிய பகைமை கொண்டுள்ளனர்; அவர்களை அழிப்பதில் அவர்கள் நீதி, நியாயம் ஆகிய ஒழுங்கு முறைகளைப் பார்க்க மாட்டார்கள்; நீயோ தவக்கோலத்தில் துணையின்றித் தனியாக இருக்கிறாய்; எனவே நீ அவர்களோடு நட்புச் செய்து கொண்டு சுகமாக வாழ்வதற்கு என்னை மணம் புரிந்து கொள்ளுவதைத் தவிர வேறு உபாயம் ஒன்றும் இல்லை; நீ அவ்வாறு செய்வாயானால், அவர்கள் மிக மகிழ்ந்து, இம்மண்ணுலகத் தோடு, விண்ணுலகின் அரசாட்சியையும் உனக்கு உரிமை உள்ளதாக்கி, உன் கட்டளைப்படி ஏவல் செய்பவர்களாய் உன் எதிரில் வந்து நிற்பார்கள்'' என்றாள்.

இராமன் தன்னை மணந்து கொள்ளாவிட்டால் என்னென்ன தீமைகள் விளையும் என்று முதலில் கூறி, தன்னை மணந்து கொண்டால் என்னென்ன நன்மைகள் கிட்டும் என்று பின்னர் கூறிய திறம் நோக்குக. சாம பேத தானம் முதலியவற்றைப் பயன்படுத்திய சூர்ப்பணகை இங்கே தண்டோபாயத்தைப் பயன்படுத்துவதை உணர்க. தன்னை மணப்பதால் இராமன் உயிர் இழக்காதது மட்டுமல்ல, மூவுலக ஆட்சியும், முடிமன்னரின் உயர்ச்சியும் கிட்டும் என்று ஆசை ஊட்டுகிறாள் சூர்ப்பணகை. இம்மணம் முடிந்தால், நாம் அவர்களைத் தேடிச் செல்ல வேண்டுவதில்லை; அவர்களே இங்கே வந்து உனக்கு ஏவல் செய்வார்கள் என்பதும் நோக்கத்தக்கது.

56. இராமன் ஏளனமாகச் சிரித்தல்

''நிருதர்தம் அருளும் பெற்றேன்;
நின்நலம் பெற்றேன்; நின்னொடு
ஒருவஅரும் செல்வத்து யாண்டும்
உறையவும் பெற்றேன்; ஒன்றோ?

திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்தது'' என்னா
வரிசிலை வடித்த தோளான்,
வாள்எயிறு இலங்க நக்கான். (2889)

(நிருதர் - அரக்கர்; ஒருவுதல் - நீங்குதல்; தீர்ந்த - நீங்கிய; வரி - கட்டமைந்த; வாள் - ஒளிவாய்ந்த; எயிறு - பற்கள்; இலங்க - தோன்றுமாறு; நகுதல் - சிரித்தல்; நலம் - இன்பம் / நன்மை / அழகு; யாண்டும் - எவ்விடத்தும்; வடித்த - அழகு செய்யப்பட்ட)

கட்டமைந்த வில்லை ஏந்திய அழகுத் தோள்களையுடைய இராமன், சூர்ப்பணகையை நோக்கி, ''நின்னை அடைந்ததால் மிக்க நன்மைகளைப் பெற்றேன்; அரக்கர்களின் அருளாசியையும் பெற்றேன். உன்னோடு நீங்காது உறையும் பேற்றினையும் பெற்றேன்; எவ்விடத்தும் செல்வச் செழிப்புள்ள விண்ணுல ஆட்சியும் பெற்றேன். இது மட்டுமா? அழகிய செல்வம் மிக்க அயோத்தி நகரைவிட்டு நீங்கிய பின் யான் பத்தாண்டுக்கும் மேலாகச் செய்த தவத்தின் பயனையும் இப்போது பெற்றவன் ஆகிறேன்'' என்று இகழ்ச்சியாகத் தன் ஒளி பொருந்திய பற்கள் வெளிப்பட்டுத் தோன்றுமாறு சிரித்தான். முன்பு மனத்துக்குள் சிரித்துக் கொண்டதை ''அகத்து உறு நகை'' என்ற கவிஞன் இப்பொழுது ''வாள் எயிறு இலங்க நக்கான்'' என்று கூறியதை நோக்குக. ''சிலை வடிப்ப வீங்கி, வரையெனத் திரண்ட தோளான்'' என்பது சிவகசிந்தாமணி.

57. சீதை வருதல்

விண்ணிடை, இம்பர், நாகர், விரிஞ்சனே முதலோர்க்கெல்லாம்,
கண்ணிடை ஒளியின் பாங்கர்க் கடிகமழ் சாலை நின்றும்
பெண்ணிடை அரசி, தேவர் பெற்ற நல்வரத்தால், பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள் வந்தாள். (2890)

(விரிஞ்சன் - பிரமன்; பாங்கர் - பக்கம்; கடி - மணம்; சாலை - தவக்குடில்; மணி - மாணிக்கம்; இடை - இடம்)

விண்ணுலகத்திலும், இம்மண்ணுலகத்திலும், நாகர்கள் வாழ்கின்ற பாதளத்திலும் இருக்கின்ற பிரமன் முதலிய எல்லோருக்கும் கண்ணின் ஒளியாய் விளங்கும் இராமன் அருகில், நறுமணம் கமழ்கின்ற தவக்குடிலினின்றும், உலகப் பெண்களுக்கெல்லாம் அரசியாகிய திருமகள் போல்பவளும், முன்பு தேவர்கள் திருமாலிடம் பெற்ற நல்ல வரத்தினால், பின்னர் இம்மண்ணுலகில் உழுபடைசாலில் ஒளிமிக்க மாணிக்கம் போல வந்து பிறந்தவளும் ஒரு வஞ்சிக் கொடி போல்பவளுமான சீதாதேவி, வந்து தோன்றினாள்.

உறுப்புக்களிலெல்லாம் சிறந்தது கண்; கண்ணிற் சிறந்தது அதன் விழி; அதனிற் சிறந்தது அதன் ஒளி; எனவே அவ்வொளியை பிரமன் முதல்

மூவுலகத்தோர்க்கும் நல்குபவன் என்று இராமபிரான் சிறப்பிக்கப் பட்டான் என்க. ''கண் மணியை, கண் மணிக்குள் ஒளியாய் நின்ற பூரணனை'' என்பது நல்லாப்பிள்ளை பாரதக் கடவுள் வாழ்த்து; இராமன் சூர்ப்பணகையுடன் விளையாட்டாக உரையாடிக் கொண்டிருந்தபோது, அருகிலிருந்த தவச் சாலையிலிருந்து சீதை வெளியே வந்தாள் என்பது கருத்து.

58. சூர்ப்பணகை சீதையைக் காணுதல்

ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்வு இலி, உருவம் நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்து இடைவயங்க, நோக்கி,
மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள். (2891)

(ஊன் - மாமிசம்; உணங்குதல் - வருந்துதல்; பேழ் - பிளந்த; நாறுதல் - தோன்றுதல்; வான்சுடர் - ஞாயிறு / சூரியன்; வயங்குதல் - விளங்குதல்; மீன் - விண்மீன்கள் / நட்சத்திரம்; கான் - காடு / கூட்டம் / தொகுதி; கனலி - நெருப்பு; சோதி வெள்ளம் - ஒளிப்பரப்பு; முளைத்த - தோன்றிய; கற்பு - பதிவிரத தர்மம்)

மாமிசத்தையே உண்டு பழக்கப்பட்ட, அதனால் தன் வாய் சுடுவதனால் வருந்துகின்ற பிளந்த பெரிய வாயையுடையவளும், வாய் உணர்வு இன்றி மற்ற செவியுணர்வு முதலியவை இல்லாதவளுமான சூர்ப்பணகை, அப்பொழுது அங்கு தோன்றிய சீதையின் உருவத்தை உயர்ந்த ஆகாயத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சூரியன் போன்று ஒளி வெள்ளம் ஒன்று அவ்விடத்தில் வந்து விளங்கியதை முதலில் பார்த்து, விண்மீன்கள் ஒளிவிடும் வானுலகத்திலும், இம்மண்ணுலகிலும் பரந்து இருக்கின்ற போர்க்குணம் கொண்ட அரக்கர்கள் என்னும் பெருங்காடு போன்ற கூட்டத்தை அழிப்பதற்கு என்றே தோன்றியிருக்கின்ற கற்பு என்றும் நெருப்பாகிய சீதையைத் தன் கண் எதிரில் கண்டாள்.

''செவிக்கு உணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்'' என்பது குறள் (412). ஆனால் இவள் வயிற்றுணவைத் தவிர வேறு எந்த உணர்வும் தெரியாதவள் என்பதைக் குறிக்க ''ஊன்கட உணங்கு பேழ்வாய் உணர்வுஇலி'' என்றார். ஊன் என்பதற்கு உடல் என்று பொருள் கொண்டு, தன் உடலைக் காமத்தீ எரிக்க, அதனால் வருந்துகின்ற பெரிய வாயை உடைய நல்லுணர்வற்ற சூர்ப்பணகை என்றும் பொருள் கூறுவர். சீதை அங்கு தோன்றியதைச் சூர்ப்பணகை எப்படிப் பார்க்கிறாள் என்று கமபன் கூறுகிறான்? ''வான்சுடர்ச்சோதி வெள்ளம்'' ஆகப் பார்க்கிறாள். ''கற்பின் கனலி'' ஆகப்பார்க்கிறாள். இவள் ஏன் அவ்வாறு தோன்றுகிறாள்? இவள்தான் இவ்வரக்கர் குலத்தை அழிக்கத் தோன்றியவள் ''விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும் கான் சுட முளைத்தவள்'' என்கிறான்.

இங்கே ஒன்று நோக்க வேண்டும். முன்பு சூர்ப்பணகை தான் ''நீல மாமணி நிறநிருதர் வேந்தனை, மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்'' என்று கூறிய அதே கவிஞன், இப்போது சீதையின் கற்பு தான் அரக்கர் என்னும் கானைச் சுடப்போகிறது என்கிறான். எனவே இருவர் நோக்கமும் ஒன்றுதான் என்பதைப் புலப்படுத்துகிறான் கவிஞன். சூரியன் உதிக்கும் முன்பு அருணோதயம் தோன்றுதல் போலச் சீதை வருவதற்கு முன்பு அவளது ஒளிப்பிழம்பு முன்னர்த் தோன்றியது என்று கூறியது ஒரு நயம். அரக்கர்கள் கான்; சீதையின் கற்பு கனல் என்பது உருவகம். பின்னர் சுந்தரகாண்டத்திலும் சீதையை ''சனகி என்றொரு தழல்'' என்றும், யுத்தகாண்டத்தில் ''தீய்ந்தது அவ்வெரி, அவள் கற்பின் தீயினால்'' என்றும் கூறுவதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

59. சீதையின் உருகண்டு சூர்ப்பணகை வியந்து நிற்றல்

''மருஒன்று கூந்தலாளை வனத்து
இவன் கொண்டு வாரான்
உரு இங்குஇது உடையராக
மற்றையோர் யாரும் இல்லை;
அரவிந்த மலருள் நீங்கி,
அடிஇணை படியில் தோயத்
திருஇங்கு வருவாள் கொல்லோ?''
என்று அகம் திகைத்து நின்றாள். (2892)

(மரு - நறுமணம் / இயற்கை; ஒன்று - பொருந்திய; அரவிந்தம் - தாமரை; படி - தரை; இணை - இரண்டு; அகம் - மனம்; திகைத்து - மருண்டு)

''இயற்கையிலேயே நறுமணம் பொருந்திய கூந்தலை உடையவளான தன் மனைவியை இவன் இக்கொடிய காட்டிற்குள் அழைத்துக் கொண்டு வரமாட்டான்; என்றால் இந்தக் காட்டிலேயும் இத்தகைய பேரழகுடைய பெண் யாரும் இல்லை; அப்படியானால் தாமரை மலரிலிருந்து நீங்கி, தன் இரு திருவடிகளும் இந்நிலத்தில் படிய திருமகளே வந்து விட்டாளோ?'' என்று தன் உள்ளம் மருண்டு பிரமித்துப் போய்ச் செயலற்று நின்றாள் சூர்ப்பணகை.

உத்தமசாதிப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் உண்டு என்று கூறுவது இப்பாடல். இதைக் குறிக்கும் குறுந்தொகைப் பாடலை முன்பே கண்டோம். ''வாசம் நாறும் ஓதியாள்'' என்பது திருவிருத்தம். ''வைகுந்தம்அன்னாள்குழல்வாய்விரைபோல், வண்டுகள் வாழும் மலர் உளவோ?'' என்பது நம்மாழ்வார் திருவிருத்தம். இவள் இவன் மனைவி போலத் தோற்ற வில்லை; எனக்குரிமையுடைய இந்தக் காட்டிலும் இது போன்ற பேரழகு கொண்ட பெண் யாரும் இல்லை. அப்படியென்றால் இது யாராக இருக்க முடியும்? என்பது ஐயம்;

செந்தாமரை மலரிலிருந்து நீங்கி திருமகளே வந்து விட்டாளோ? என்பது திரிபு; இவள் திருவடிகள் நிலத்தில் தோய்கின்றனவே எனவே இவள் திருமகள் அல்லள், மானிடப் பிறவி தான் என்பது துணிபு. எனவே மனம் திகைத்துச் செயலற்று நின்றாள் என்பதாம். சீதை அழகால் திருமகளுக்கு ஒப்பாவாள் என்று சூர்ப்பணகை கருதுவது தெரியவருகிறது. முன்பாடலில் ''உணர்வு இலி'' என்று கூறியவர் இப்பாடலில் மூக்கால் நுகர்கின்ற உணர்வு இருக்கிறது என்று கூறுவது நோக்கத்தக்கது.

60. சீதையின் அழகை வியந்து பாராட்டுதல்

பண்புஉற நெடிது நோக்கி
''படைக்குநர் சிறுமையல்லால்,
எண் பிறங்கு அழகிற்கு எல்லை
இல்லையாம்'' என்று நின்றாள்;
''கண் பிறபொருளில் செல்லா,
கருத்து எனின் அஃதே; கண்ட
பெண் பிறந்தேனுக்கு என்றால்,
என்படும் பிறர்க்கு?'' என்றாள். (2893)

(பண்பு - அழகு; சிறுமை - திறமைக்குறைவு; எண் - மதிப்பு; பிறர் - ஆண்கள்; படைக்குநர் - சிருஷ்டிப்பவர்)

சீதையின் அழகுருவை நீண்ட நேரம் உற்றுப் பார்த்த சூர்ப்பணகை, ''படைக்கும் தொழிலை உடைய பிரமனின் திறமைக் குறைவு என்று சொல்லலாமே தவிர, மதிப்புமிக்க இவள் அழகிற்கு ஒரு எல்லையே இல்லை'' என்று எண்ணிச் செயலற்று நின்றாள்; மேலும் ''பெண்ணாகப் பிறந்த எனக்கே, இவளைப் பார்த்த பின்னர், என் கண்கள் பிற பொருள்கள்பால் செல்ல மறுக்கின்றன; என்னுடைய மனமும் அவ்வாறே பிறபொருள்கள் மேற்செல்லவில்லை; அப்படியென்றால் இவளைப் பார்க்கும் மற்ற ஆடவர்களின் கண்ணும் கருத்தும் என்னபாடுபடும்?'' என்று வியக்கிறாள் சூர்ப்பணகை.

சீதையின் அழகை முன்பே பாலகாண்டத்தில் பல்லாற்றானும் கூறினார் கவிஞர். ''அழகிற்கு அவதி யுண்டோ?'' என்றும், அழகெனும் அதுவும் ஓர் அழகு பெற்றதே என்றும், ''அழகு இவளைத் தவம் செய்து பெற்றது காண்'' என்றும் கூறியது காண்க. இப்போது பெண்ணாகிய சூர்ப்பணகை அவள் அழகை வியந்தது போல, முன்பு சீதையை அழகு செய்த பெண் தோழிகளே இவ்வாறு வியந்தது இங்கு நினைவு கொள்ளத்தகும். ''அஞ்சொற்கள் கிள்ளைக்கும் அருளினாள் அழகை மாந்தித் தம் சொற்கள் குழறி, தத்தம் தகை தடுமாறி நின்றார்; மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றே அன்றோ?'' என்பது பாடல் பகுதி. இங்கே கவிஞன் சூர்ப்பணகை, சீதையின் அழகை நெடிது நோக்கினாள் என்கிறான். காரணம், இவள் இராவணனிடம் சென்று சீதையின் அழகைப் பற்றிப்

பின்னால் விளக்கமாகக் கூறப்போகிறாள். அதனால் இப்பொழுது நெடிது நொக்கினாள் என்றார் என்க. பெண்களே விரும்பும் பேரழகுடையவள் சீதை என்பதும் சூர்ப்பணகை இதுவரை கண்ட பெண்களில், இவள் தான் அழகின் மேல்வரம்பு என்று கூறத்தக்கவள் என்பதும் புலப்படுத்தப் படுகிறது.

61. இருவர் அழகையும் சூர்ப்பணகை பாராட்டுதல்

''பொரு திறத்தானை நோக்கி, பூவையை நோக்கி நின்றாள்;
கருத மற்று இனிவேறில்லை; கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத்து உணர நோக்கி, உருவினுக்கு, உலகம் மூன்றின்
இருதிறத்தார்க்கும் செய்த வரம்பு இவர் இருவர்'' என்றாள். (2894)

(பொருதல் - போர் செய்தல்; பூவை - நாகணவாய்ப் புள்; கமலத்துக் கடவுள் - பிரமன்; திறத்தார் - வகையினர்; வரம்பு - மேல் எல்லை; ஒருதிறம் - ஒப்பற்ற விதம்)

போர் செய்தலில் திறமை உள்ளவனான இராமபிரானைப் பார்த்து, பின்னர் நாகணவாய்ப் பறவை போன்ற இனிய சொற்களையுடைய சீதையையும் பார்த்து, வியந்து போய் நின்றாள் சூர்ப்பணகை. ''இனிமேல் இதுபற்றி நினைப்பதற்கு வேறு ஒன்றுமில்லை; தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், தானே தனது ஒப்பற்ற திறமையால், மிக நன்கு ஆலோசித்து, ஆராய்ந்து பார்த்து, பின்னர் தான், இம்மூவுலகங்களிலும் உள்ள ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும் உருவத்தில் அழகில் இவர்கள் இருவரும் தான் உச்சவரம்பு, இதற்கு மேல் ஒருவரும் இல்லைஎன்று கருதிப் படைத்திருக்கிறான்'' என்றாள் சூர்ப்பணகை.

முன்பு ஐயுற்றவள், இப்போது நன்கு தெளிவாக ஒரு தீர்மானத்திற்கு வந்து விடுகிறாள் என்பதாம். நோக்கி, நோக்கி என்று இருமுறை கூறியிருப்பதால், அவள் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்து வியந்து நின்றாள் என்பது புலப்படுகிறது. மேலும் ஒன்று, முதலில் இராமன் அழகைப் பார்த்துக் காமுற்றுச் செயலற்று நின்ற சூர்ப்பணகை, இப்பொழுது அவனை விடவும் மிகவும் அழகான சீதையைப் பார்த்து என்ன செய்வதென்றே அறியாமல் திகைத்து நின்றாள் என்பதாம். இவ்விருவருக்கும் ஒப்பாரோ, மிக்காரோ யாரும் இல்லை என்பது கருத்து.

62. சூர்ப்பணகை சீதையைப் பழிக்க எண்ணுதல்

''பொன்னைப் போல் பொருஇல் மேனிப்
பூவைப்பூ வண்ணத்தான், இம்
மின்னைப் போல் இடையாளோடும் மேவும்
மெய் உடையன் அல்லன்;

தன்னைப் போல் தகையோர் இல்லா,
தளிரைப் போல் அடியினாளும்
என்னைப் போல் இடையே வந்தாள்;
இகழ்விப்பேன் இவளை'' என்னா. (2895)

(பொருஇல் - ஒப்பற்ற; பூவைப்பூ - காயாம்பூ; மேவுதல் - பொருந்துதல்; மெய் - தோற்றம் / வேடம்; தகையோர் - தக்க அழகுடையவர்; இடை - நடு) (குளகப்பாடல்)

காயாம்பூப்போன்ற நிறமுடையவனான இராமன், பொன்னைப் போல் ஒளிர்கின்ற மேனியையும், மின்னலை ஒத்த இடையையும் உடைய இவளோடு இணைந்து வாழும் கணவன் போலத் தோற்றவில்லை; காரணம் இவன் தவக் கோலத்தில் இருக்கிறான். எனவே இவள் அவன் மனைவி அல்லள்; இவள் தன்னைப் போல அழகு உடையவர்கள் இல்லாததால், தளிரைப் போன்ற மெல்லிய திருவடிகளை உடைய இவளும், என்னைப் போல், இவன் மீது ஆசை கொண்டு நடுவில் வந்தவளாகத்தான் இருக்க வேண்டும். எனவே இவனைக் கொண்டே இவளை இகழச் செய்கிறேன் என்று கருதி - பாடல் தொடர்கிறது.

இராமன் தவக்கோலத்தில் இருப்பதால், சீதை அவன் மனைவியாக இருக்க முடியாது என்றும், இவளும் தன்னைப் போல் மாயத் தோற்றம் கொண்டு, இராமன் மேல் காமுற்று வந்திருக்கிறாள் என்றும் அவள் கருதினாள் என்றும், எனவே இவன் அவளை அடைய முடியாது தடுத்து அவளை அகற்றிவிட வேண்டும். எனவே இவனைக் கொண்டே இவளை இகழ்ச்சி செய்ய வைக்க வேண்டும் என்று கருதினாள் என்க. கரிய நிறம் கொண்ட இராமனுக்குப் பொன் நிறம் கொண்ட சீதை பொருத்தமானவள் அல்லள், தானே தகுதியுடையவள் என்று அவள் எண்ணினாள் என்பதாம்.

63. சூர்ப்பணகை சீதையை ''அரக்கி'' என்று கூறுதல்

''வரும் இவள் மாயம் வல்லள்; வஞ்சனை அரக்கி; நெஞ்சம்
தெரிவுஇல; தேறும் தன்மை சீரியோய்! செயல்இது அன்றால்,
உருஇது மெய்யது அன்றால்; ஊன்நுகர் வாழ்க்கையாளை
வெருவினென்; எய்திடாமல் விலக்குதி வீர!'' என்றாள். (2896)

(நெஞ்சம் - மனக்கருத்து; தேறுதல் - தெளிதல்; மெய் - உண்மை; வெருவுதல் - அஞ்சுதல்; ஊன் - மாமிசம்)

''நல்ல பண்புகளை உடையவனே! இதோ வருகின்ற இவள் மாயா ஜாலங்களில் தேர்ச்சி பெற்றவள்; சூழ்ச்சி செய்கின்ற அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள். இவளுடைய உள்ளக் கருத்தை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடியாது; இவள் நல்லவள் என்று தீர்மானிப்பது செய்யத்தக்க காரியம் அல்ல; இவள் கொண்டிருக்கின்ற இந்தத் தோற்றமும் உண்மையானது இல்லை. மாறுவேடம். மாமிசத்தையே உண்டு வாழும்

வாழ்க்கையை உடைய இவளைக் கண்டு நான் அஞ்சுகிறேன்; இவள் உன்னை நெருங்கிவிடாமல், இவளை அகற்றி விடுவாயாக வீரனே!'' என்று கூறினாள்.

தனக்குரிய குணங்களான மாயம், வஞ்சனை, கபட நெஞ்சம், பொய்யுருவம், மாமிசம் உண்ணும் குணம் ஆகிய எல்லாவற்றையும் சீதையின்மேல் ஏற்றிக் கூறுகிறாள் சூர்ப்பணகை. முன்பாடலிலும் ''மெய் இலாள்'' என்றும் ''பொய்ம் மகள்'' வஞ்ச மகள், நஞ்சம் என்றும் கவிஞன் கூறியது நோக்குக.

64. இராமன் சூர்ப்பணகையை இகழ்தல்

''ஒள்ளிது உன் உணர்வும் மின்னே! உன்னை யார் ஒளிக்கும் ஈட்டார்?
தெள்ளிய நலத்தினால், உன் சிந்தனை தெரிந்ததம்மா!
கள்ள வல்அரக்கி போலாம் இவளும் நீ காண்டி'' என்னா,
வெள்ளிய முறுவல் முத்தம் வெளிப்பட வீரன் நக்கான். (2897)

(ஒள்ளிது - சிறப்புடையது / ஒளிமிக்கது; ஈட்டார் - வலிமையுடையார்; வெள்ளிய - வெண்மையான; முறுவல் - பற்கள்)

இராமன் சூர்ப்பணகையை நோக்கி ''மின்னற் கொடி போன்றவளே! உன்னுடைய அறிவு சிறப்புடையது; ஒளி மிக்கது; உன்னிடம் யார் தன் உருவை மறைக்கும் வல்லமை பெற்றவர்? உன்னுடைய தெளிந்த அறிவினால், உன்னால் எல்லோருடைய உண்மை நிலையையும் அறிய முடிகிறது. இது மிக்க வியப்பே! இதோ வருகின்ற இவள் கூட வன்மையான அரக்கிதான் போலும்! இவளை நன்றாகப் பார்த்துக் கொள்'' என்று இகழ்ச்சியாகக் கூறித் தன்னுடைய வெண்மையான முத்துப் போன்ற பற்கள் வெளியே தோன்றுமாறு பெருகச் சிரித்தான், வீரனாகிய இராமன்.

''மின்னே'' என சூர்ப்பணகையை அழைத்தது அவளுடைய நிலை பேறில்லாதத் தோற்றத்தை உணர்ந்து என்க. ''ஒள்ளிது'' என்ற சொல் இன்றும் கன்னடத்தில் இப்பொருள் தருதல் காண்க. இங்கே ஒரு நயம். முன்பு ''அகத்துறு நகையின் வெள்ளைக் குருத்து'' என்றான்; அடுத்து ''வாள் எயிறு இலங்க நக்கான்'' என்றான். இப்பொழுது ''வெள்ளிய முறுவல் முத்தம் வெளிப்பட நக்கான்'' என்கிறான். படிப்படியாக அவன் அவளை இகழ்ந்து இப்போது உண்டாட்டத்தின் உச்சக்கட்டத்தை எய்தினான் என்பதைக் குறிப்பால் உணர வைத்த கவிஞனின் திறம் காண்க. மேலும் ஒன்று, இதுவரை இவர்கள் இருவருக்குள்ளும் நிகழ்ந்த உரையாடலைச் சீதை அறிய மாட்டாள் என்பதை நினைவிற் கொள்க.

65. சூர்ப்பணகை சீதை மேல் சினத்தல்

ஆயிடை, அமுதின்வந்த, அருந்ததிக் கற்பின் அம்சொல்
வேயிடைத் தோளினாளும், வீரனைச் சேரும் வேலை

''நீயிடை வந்ததென்னை நிருதர் தம் பாவை?'' என்னாக்
காய்எரி அனைய கள்ள உள்ளத்தாள் கதித்தலோடும். (2898)

(வேலை - சமயம் / காலம் / தருணம்; வந்த - பிறந்த; இடைதல் - பின்னடைதல்; நிருதர் - அரக்கர்; காய் - வெதும்புகின்ற; எரி - தீ; கதித்தல் - உரப்புதல் / ஒலித்தல் / அதட்டுதல்; இடை - குறுக்கீடு) (குளகப்பாடல்)

அந்தச் சமயத்தில், திருப்பாற்கடலிலிருந்து அமிழ்தத்துடன் உடன் தோன்றி வந்தவளும், அருந்ததி போன்று கற்பிற் சிறந்தவளும், அழகிய இனிய சொற்களையுடையவளும், மூங்கில்களும் பின்னடையும் படியான தோள்களையுடையவளுமாகிய சீதை, உள்ளிருந்து வெளியே வந்து,வீரனாகிய இராமன் அருகில் நின்றாள். சூர்ப்பணகை - சீதையை நோக்கி, ''ஏ! அரக்கப் பெண்ணே! நாங்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கும் போது நீ ஏன் இங்கு குறுக்கே வந்தாய்?'' என்று எரிகின்ற நெருப்பைப் போன்றவளும், வஞ்சனையான எண்ணங்களையுடைய வளுமான சூர்ப்பணகை அதட்டிய போது - பாடல் தொடர்கிறது.

பெண்களின் கற்பு நிலைக்கு அருந்ததியை உவமையாகக் கூறுவது கவிமரபு. ''தீதிலாவடமீனின்திறம் இவள்திறம்'' என்பது சிலப்பதிகாரம். சீதையின் அழகு கண்டு பொறாமைத் தீயால் வெதும்புகின்ற உள்ளத்தைக் கொண்டவள்சூர்ப்பணகைஎன்பதை மிகஅழகாக ''காய்எரிஅனையகள்ள உள்ளத்தாள்'' என்ற சொற்களால் பெற வைத்தார்.

66. சீதை அச்சம் கொண்டு இராமனைத் தழுவிக் கொள்ளுதல்

அஞ்சினள்; அஞ்சி அன்னம், மின்இடை அலசஓடி
பஞ்சின் மெல்லடிகள் நோவப் பதைத்தனள்; பருவக்கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி என்ன
குஞ்சரம் அனைய வீரன் குவவுத்தோள் தழுவிக் கொண்டாள். (2899)

(அலச - வருந்த; மஞ்சு - மேகம்; வல்லி - கொடி; குஞ்சரம் - களிற்று யானை; குவவு - திரட்சி பொருந்திய; பதைத்தல் - துடித்தல்)

சூர்ப்பணகை அவ்வாறு அதட்டுவதைக் கேட்டு பயந்து போனவளான சீதை, தனது மின்னல் போன்ற இடை துவண்டு வருந்தவும், பஞ்சு போன்ற மெல்லிய பாதங்கள் துன்பமுறவும், துடிதுடித்து ஓடிப்போய், நல்ல பருவத்தில் பொழிய இருக்கும் கரிய மேகத்தினிடம் சிறந்து விளங்குகின்ற பவளக் கொடி போன்று, களிற்று யானை போன்ற வீரனான இராமனின் திரட்சி பொருந்திய தோள்களைத் தழுவிக் கொண்டாள்.

சீதையின் மெல்லிய ஓட்டத்திற்கு அன்னத்தையும், நுண்ணிய இடைக்கு மின்னலையும், மெல்லிய பாதங்களுக்குப் பஞ்சினையும் உவமித்தார். மேலும் சிவந்த பவளக் கொடியாகச் சீதையையும், கார்கால கரிய மேகமாக இராமனையும் உவமித்தார். களிற்று யானை எப்போதும்

தன் பிடியைக் காப்பாற்றும் தன்மை கொண்டது; ''எழு உறழ் தடக்கையின் இனம் காக்கும் எழில் வேழம்'' என்பது கலித்தொகை.

67. இராமன் சூர்ப்பணகையை எச்சரித்தல்

வளை எயிற்று அவர்களோடு வரும் விளையாட்டு என்றாலும்,
விளைவன தீமையேயாம் என்பதை உணர்ந்து, வீரன்;
''உளைவன இயற்றல்; ஒல்லை உன்நிலை உணருமாயின்,
இளையவன் முனியும், நங்கை! ஏகுதி விரைவின்'' என்றான். (2900)

(உளைவன - வருத்தம் தருவன; ஒல்லை - விரைவாக / உடனே; முனிதல் - கோபித்துத் தண்டித்தல்; வளைஎயிறு - வக்ரதந்தம் / வளைந்த கோரப் பற்கள்)

வளைந்த கோரப் பற்களை உடைய அரக்கர்களோடு நேர்வது விளையாட்டுத்தான் என்றாலும் அவைகளால் விளைவது கேடே என்று, தான் அனுபவித்து உணர்ந்த வீரனாகிய இராமன், சூர்ப்பணகையை நோக்கி, ''பெண்ணே! வருத்தம் தரும் செயல்களைச் செய்யாதே; என் தம்பியான இலக்குவன் உன்னுடைய நிலையை அறிவானானால், விரைவில் கோபம் கொண்டு உன்னைத் தண்டிப்பான். எனவே இவ்விடம் விட்டு விரைவிற் சென்று விடு'' என்று எச்சரித்தான்.

''விளையாட்டு வினையாய் விடும்'' என்பது பழமொழி. இளமையில் இராமன் விளையாட்டாகத்தானே மண்ணுருண்டையை வில்லில் வைத்து மந்தரையின் கூனல் முதுகு மீது எறிந்தான்? அதன் விளைவு தானே அவன் அரசுரிமை இழந்து வனம் புகுந்தது. எனவே விளையாட்டு வினையாகும் என்பதை நன்குணர்ந்தவன் இராமன். எனவே தான் ''விளையாட்டு என்றாலும் விளைவன தீமையேயாம் என்பதை உணர்ந்து'' என்றார். ''இளையவன் முனியும்'' என்றதனால் இவன் அவள் மீது சினம் கொள்ளவில்லை என்பதைப் புலப்படுத்துவதை நோக்குக. ஆனால் சூர்ப்பணகை இதையே தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு மேலும் பின்வருமாறு பேச முற்படுகின்றதையும் நோக்க வேண்டும். முன் ஐந்து கவிகளிலும் இராமனை வீரன் என்ற அடைமொழி கொடுத்தே குறிப்பிட்டு வந்தமையை நோக்கும் போது, இந்த வீரம், ''பிறன் மனை நோக்காத பேராண்மையைக் குறிக்கும்'' என்று கொள்ளல் தகும். இலக்குவன் பின்னால் என்ன செய்யப் போகிறான் என்பதை முன் கூட்டியே இப்பாடலில் ''முனியும்'' என்று குறிப்பால் உணர்த்தும் பாங்கு உணர்க.

68. சூர்ப்பணகை தன் அழகைத் தானே புகழ்ந்து கொள்ளுதல்

பொற்புடை அரக்கி, ''பூவில், புனலினில், பொருப்பில், வாழும்
அற்புடை உள்ளத்தாரும், அனங்கனும், அமரர் மற்றும்
எற்பெறத்தவம் செய்கின்றார்; என்னை நீ இகழ்வது என்னே?
நற்பொறை நெஞ்சில் இல்லாக் கள்ளியை நச்சி'', என்றாள். (2901)

(பொற்பு - அழகு; புனல் - பாற்கடல்; பொருப்பு - கைலாய மலை; அற்பு - அன்பு / காதல்; அனங்கன் - உருவமற்றவன் / மன்மதன்; நச்சி - விரும்பி)

அழகிய வடிவத்தை மாயத்தால் மேற்கொண்ட அரக்கியாகிய சூர்ப்பணகை, இராமனை நோக்கி, ''தாமரை மலரில், திருப்பாற் கடலில், கைலாய மலையில் வாழும், என்பால் அன்பு கொண்ட உள்ளத்தாராகிய நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளும் உருவமற்ற மன்மதனும் மற்றும் உள்ள எல்லாத் தேவர்களும், என்னை அடையப் பெரிய தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறிருக்க நல்ல பொறுமைக்குணமே உள்ளத்தில் இல்லாத இந்த வஞ்சகியை விரும்பி, உன்னை நாடி அன்பு கொண்டு வலிய வந்த என்னைப் புறக்கணிக்கும் காரணம் என்ன? என்று கேட்டாள்.

சூர்ப்பணகை இயற்கையிலேயே அழகி அல்லள், அவள் மாயத்தால் தன்னை அழகியாக மேற்கொண்டிருக்கிறாள் என்பது புலப்பட ''பொற்பு உடை அரக்கி'' என்றார். தவம் செய்பவர்கள் மலரிலும், நீரிலும், மலையிலும் இருந்து தவம் செய்வார்கள் என்பதைக் குறிக்க அங்கங்கே வாழ்கின்ற மும்மூர்த்திகளையும் குறித்தாள் என்க. தான் சிறிது அதட்டியவுடனேயே சிறிதும் பொறுமை இல்லாமல் பதை பதைத்து ஓடிச் சென்று இராமனைக் கட்டித் தழுவிக் கொண்ட செயலை எண்ணி, ''நல் பொறை நெஞ்சில் இல்லாக் கள்வி'' என்றாள். மும்மூர்த்திகளும் அவரவர்களுக்குரிய இடங்களில் அமர்ந்திருக்க, அவர்கள் தன்னைப் பெறுவதற்காகத்தான் அவ்வாறு அங்கே தவம் இருக்கிறார்கள் என்று தன் அழகைத் தானே புகழ்ந்து கொள்ளுமாறு கற்பித்து அமைத்த கவிஞனின் திறம் சுவைக்கத்தக்கது. மும்மூர்த்திகளையும் புறக்கணித்து நான் உன்னை நாடி வந்தேன் என்பதனால், அம்மும்மூர்த்திகளினும் உயர்ந்தவன் இராமன் என்பதைக் குறிப்பால் உணர்த்தும் பாங்கும் உணர்க.

69. இராமன் சீதையுடன் தவக்குடிலுக்குள்செல்லுதல்

''தன்னொடும் தொடர்பு இலாதேம்
என்னவும் தவிராள்; தான்இக்
கல்நெடு மனத்தி சொல்லும் கள்ள
வாசகங்கள்;'' என்னா
மின்னொடு தொடர்ந்து செல்லும்
மேகம்போல், மிதிலை வேந்தன்
பொன்னொடும் புனிதன் போய், அப்
பூம்பொழில் சாலை புக்கான். (2902)

(பூம்பொழில் - மலர்வனம்; பொன் - மகள்; மிதிலை வேந்தன் - சனகன்; தவிர்தல் - நீங்குதல்; தொடர்பு - இயைபு / சம்பந்தம்; கள்ள வாசகங்கள் - வஞ்சகச் சொற்கள்; மிதி என்ற மன்னன் அரசாட்சி செய்ததால் அந்த நகருக்கு மிதிலை என்பது காரணப்பெயர்)

''கல்போன்றவன்மையானதும்நீண்டுபெரியதுமானமனத்தைஉடைய சூர்ப்பணகை, நமக்கும் இவளுக்கும் எத்தகைய தொடர்பும் இருக்க முடியாது என்று பலமுறை கூறியும் இன்னும் தான் சொல்லும் வஞ்சகச் சொற்களை விடாதவளாகவும், இவ்விடத்தை விட்டு அகலாதவளாகவும் இருக்கிறாளே'' என்று தன் மனத்தில் எண்ணி, மின்னல் பின்வர முன் செல்லும் மேகம் போல, மிதிலை நகரத்தின் அரசனான சனகன் பெற்றெடுத்த பொன் போன்ற மகளாகிய சீதையுடன், தூயவனான இராமன் சென்று, அந்த மலர் வனத்திற்கு இடையே அமைக்கப் பட்டிருக்கும் தனது தவச்சாலையை அடைந்தான்.

அந்தணரைஅரசர்மணப்பதோ,அரக்கரைமானிடர்மணப்பதோதகாது என்று பலமுறை முன்பு கூறியதை ''தன்னொடு தொடர்பு இலாதேம் என்னவும்'' என்று குறிக்கிறார். கல் எவ்வளவு நாள் நீரினுள் கிடந்தாலும் அது அதன் ஈரத்தன்மையைப் பெற்று மெல்லிதாக ஆகிவிடாது. அதைப் போல அழகிய உருவம் கொண்ட இவளும் அரக்கர் குலத்திலேயே பிறந்து வளர்ந்து வாழ்பவள் ஆதலால் இவள் கல்லின் வன்மைக் குணங்கள் நிறைந்தவளே என்பதைக் குறிக்கும் வண்ணம் ''கல்நெடு மனத்தி'' என்றார். ''வைகலும் நீரில் கிடப்பினும், கல்லிற்கு மெல் என்றல் சால அரிதாகும்; அஃதே போல் வைகலும், நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக் கல்லினும் வல்லென்னும் நெஞ்சு'', என்பது அறநெறிச் சாரம் (51). சீதையைப் பொன் என்றது அவள் மேனி ஒளிக்கும், மனப்பண்பிற்கும் என்க; அதுபோல இராமனைப் புனிதன் என்றது, பிறன்மனை நோக்காப் பேராண்மை கருதியும், புலனடக்கம் கருதியும் என்க. தன் கொள்கையை விடாததால் ''கல்மனத்தி'', தன் நெடு நேர ஆசையைக் கருதி ''நெடு மனத்தி'' என்றார் என்க. மின்னல் சீதைக்கும், மேகம் இராமனுக்கும் உருவத்தாலும், ஒளி நிறத்தாலும் உவமை. ''கள்ள வாசகங்கள்'' என்பது அவள் அழகைத் தானே புகழ்ந்து கூறி மும்மூர்த்திகளும் மன்மதனும் தேவர்களும் தன்னை அடையத் தவம் செய்கிறார்கள் என்று கூறியது கருதி என்க.

70. சூர்ப்பணகையின் எண்ணம்

புக்கபின் போயது என்னும் உணர்வினள்;
  பொறையுள் நீங்கி
உக்கதாம் உயிரள்; ஒன்றும் உயிர்த்திலள்;
  ஒடுங்கி நின்றாள்;
''தக்கிலன்; மனத்துள் யாதும் தழுவிலன்;
  சலமும் கொண்டான்;
மைக்கருங் குழலினாள் மாட்டு அன்பினில்
  வலியன்'' என்பாள். (2903)

(பொறை - பாரம் / சுமை / உடம்பு; தக்கிலன் - தகுதியற்றவன்; தழுவுதல் - பற்றுக் கொள்ளுதல்; சலம் - கோபம் குழல் - கூந்தல்; பொறுத்தல் - தாங்குதல்; உயிரைத் தாங்கி நிற்றலால் பொறை, உடம்புக்குக் காரணப் பெயர்; ஒன்றும் - சிறிதும்)

அவ்வாறு இராமன் சீதையை அழைத்துக் கொண்டு தவக்குடிலுக்குள் சென்ற பின்னர், சூர்ப்பணகை தனது அறிவும் உணர்வும் போய் விட்டது என்ற நிலையுடையவளானாள்; தன் உடம்பே சுமையாகத் தோன்றியது. அதனின்றும் உயிர் பிரிந்து சிதறி விட்டது போன்றவளானாள்; மூச்சுக்கூட விடமுடியாமல், ஐம்புலனும் அடங்கி நின்றாள். பின்னர் சிறிது தெளிந்து, ''இவன் நமக்குத் தகுதியுடையவன் அல்லன்; அவன் மனத்தில் நம்பால் சிறிதும் பற்றில்லாதவனாயிருக்கிறான்; அதோடுமட்டுமல்ல. நம்மீது தணியாத கோபமும் கொண்டுள்ளான்; இவன் அந்த மை போன்ற கரிய நிறமுடைய கூந்தலையுடைய சீதையின்பால் மட்டற்ற அன்பு கொண்டவனாகவும், அதில் மிக உறுதிமிக்கவனாகவும் இருக்கின்றான்'' என்று தன் மனத்துள் எண்ணிக் கொண்டாள்.

பொறை என்ற சொல்லுக்குப் பொறுத்தல் என்பது பொருள். உயிரைத் தாங்கிக் கொண்டிருப்பதால் அச்சொல் உடம்புக்குக் காரணப் பெயராய் அமைந்து பொறை, உடம்பு என்ற பொருளைத் தரும். இப்போது சூர்ப்பணகைக்குத்தன்உடம்பே ஒரு பெரிய பாரமாகச்சுமையாக இருந்தது என்பது கருத்து. தக்கிலன் என்பது தகுதியுடையவன் அல்லன் என்று பொருள்படும். தகுதி என்பது நடுவு நிலையில் இராது, ஒருத்தி மேல் ''அன்பின் வலியனாகவும்'', இன்னொருத்தி மேல் சலம் கொள்ளுதலும் நடுவுநிலைமையின் பாற்பட்டதல்ல என்பதனால் ''தக்கிலன்'' என்று எண்ணினாள் என்பதாம். தன்னிடம் சிறிதும் அன்பு கொள்ளாதது மட்டுமல்ல தன்னிடம் கோபமும் கொண்டான் என்பது இன்னும் அவளுக்குக் கோபத்தைத் தருகிறது. மைக்கருங்குழலினாள் என்று சீதையைக் குறிப்பிட்டது, தன்னுடைய கூந்தல் சிவந்த நிறமாக இருக்க, கரிய கூந்தலை உடையவளிடம், செம்மையான கூந்தல் இல்லாதவளிடம் மிகுந்த அன்பு செலுத்துகிறானே என்ற ஆற்றாமையால் என்க. இவ்வுரையாடல் நிகழ்ந்த நேரம் ''மாலைப்பொழுது, எற்பாட்டுப் பொழுது'' என்று கூறுவர். சூர்ப்பணகை அறிவு அழிய, உயிர்ப்பு ஒடுங்க, செயல் அடங்க, உயிர் நீங்கினாற் போல மூர்ச்சித்தாள் என்பது கருத்து.

71. சூர்ப்பணகை சூளுரையும்சூரியன்மறைதலும்

நின்றிலள்; அவனைச் சேரும்
    நெறியினை நினைந்து போனாள்;
''இன்றுஇவன் ஆகம் புல்லேன் எனின்,
    உயிர் இழப்பென்'' என்னாப்

பொன்திணி சரளச் சோலைப்
பளிக்கறைப் பொதும்பர் புக்காள்;
சென்றது பரிதி மேல்பால்; செக்கர்
வந்து இறுத்தது அன்றே! (2906)

(சேர்தல் - தழுவுதல் / கூடுதல்; ஆகம் - மார்பு / உடம்பு; பொன்திணி - அழகு நிறைந்த; சரளம் - ஒழுங்கு; பொதும்பர் - குறுங்காடு / சோலை; பரிதி - சூரியன்; மேல்பால் - மேற்குத் திசை; செக்கர் - செவ்வானம்; இறுத்தல் - தங்குதல்)

அதன்பின் சூர்ப்பணகை அங்கு நிற்கப் பிடிக்காமல், அவனை எப்படியாவது அடைந்து விட வேண்டும் என்று அதற்குரிய வழிகளை ஆராய்ந்தபடியே செல்லலானாள்; இன்றைக்குள் இவனுடைய மார்பினை நான் தழுவவில்லை, என்றால் நான் என் உயிரை இழந்து விடுவேன் என்று சொல்லிக் கொண்டே, அழகு நிறைந்த, ஒழுங்காக மரங்கள் நிறைந்திருக்கின்ற ஒரு சோலையில் உள்ள பளிங்கு மண்டபத்துள் நுழைந்தாள். அப்பொழுது சூரியனும் மேற்குத் திசையில் சென்று மறைந்தான். அங்கே செவ்வானம் வந்து சேர்ந்தது.

அவளுடைய விரகதாபம் புலப்படுத்தப்பட்டது. அவளுடைய ஒருதலைக் காமத்தால் விளைந்த வெப்பத்தைக் தணிக்கக் குளிர்ச்சியான பளிங்கு மண்டபத்தைச் சென்று சேர்ந்தாள் என்றதும், வெப்பம் மிக்க சூரியன் போய் மறைந்தான் குளிர்ந்த செவ்வானம் தோன்றியது என்று கூறியதும் ஒருநயம். பளிக்கறை என்பது பளிங்குப் பாறையையும் குறிக்கும். நூற்று எட்டு வைணவத்திருத்தலங்களுள் ஒன்று திரு வெள்ளறை: அது அழகிய வெண்மையான பாறையின்மேல் இருப்பதால் அப்பெயர் பெற்றது என்றும் எனவே அறை என்பது பாறையைக் குறித்து நின்றது என்றும் கூறுவர். மறையும் சூரியனுடைய கிரணங்கள் படிவதால், மேகம் செந்நிறமாகத் தோன்றும். இதனைச் செவ்வானம் - செக்கர் என்கிறோம். இது பிரிந்திருக்கும் தலைவன் தலைவியருக்கு விரக தாபத்தை மிகுவிக்கும் என்பது தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் ஒரு செய்தி.

72. சூர்ப்பணகையின் காமம் மிகுதல்

அழிந்த சிந்தையளாய் அயர்வாள் வயின்
மொழிந்த காமக் கருங்கனல் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன்தொளை வாள்எயிற்று
இழிந்த கார்விடம் ஏறுவது என்னவே. (2905)

(வழிந்த - தோல் நீக்கிய; வாள் - கூரிய; இழிந்த - இறங்கிய; கார் - கரிய; அழிந்த - நைந்துபோன; அயர்தல் - சோர்ந்திருத்தல்; மொழிந்த - முன் கூறிய; மூளுதல் - பெருகுதல்)

தோல் உரிக்கப்பட்ட நல்ல பாம்பின் வலிமையான தொளையுடைய கூரிய பற்களிலிருந்து இறங்கிய கரிய நஞ்சானது எப்படிக் கடித்தவர் உடல் முழுவதிலும் ஏறிப்பரவிவிடுமோ, அதுபோல, இராமன் தன்னைப் புறக்கணித்துச் சீதையுடன் சென்றதால் தன்மனம் சிதையப் பெற்றுச் சோர்ந்து போன சூர்ப்பணகையிடம், முன்பு கூறிய ஒருதலைக் காமம் என்னும் கொடிய நெருப்புப் பெருகி எழுந்தது.

காமத்தைக் கடுங்கனலுக்கு உவமிக்கிறார். கடுங்கனல் குறுகுங்கால் வெதுப்பும்; நீங்குங்கால் தண் என்னும்; ஆனால் காமம் நீங்கில் தெறுஊம்; குறுகுங்கால் தண் என்னும் இயல்புடையது என்பதை உணர்க. பாம்புக்கு நச்சுப்பை உண்டு. அதில் விஷம் இருக்கும். அது இறங்குவதற்காகப் கூரிய பல்லில் ஒரு தொளை - துவாரம் - இருக்கும். அதைத் தான் ''நாகத்தின் வன்தொளை வாள் எயிற்று இழிந்த கார்விடம்'' என்றார் என்க. நாகத்திற்கு நச்சுப் பற்கள் நான்கு உண்டு. அவை காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்பன. மீண்டும் இந்தக் காமக் கடுங்கனலுக்குக் கார்விடத்தை உவமிக்கிறான். கார்விடம் பாம்பின் பல்லிலிருந்து இறங்கி எப்படி உடல் முழுதும் பரவி இறக்கக் காரணமாகிறதோ, அதுபோலச் சூர்ப்பணகையின் கண் வழி புகுந்த காமம், என்னும் நஞ்சு அவள் உடம்பு முழுதும் பரவி அவளைச் செயலற்றதாக்கி விட்டது என்றது ஒரு நயம். இங்கே ஒன்றை நோக்க வேண்டும். முன்பு சீதையும் இராமன் பால் காமம் கொண்டாள். அப்போது கவிஞன் அவள் கொண்ட காமம் உடம்பெல்லாம், பரவிற்று என்றும் கூறும் பொழுது, ''பால்உறு பிரை எனப் பரந்தது எங்குமே'' என்று இனிமையான பாலை உவமித்தான். இங்கே சூர்ப்பணகைக்குக் காமநோய் உடம்பெல்லாம் பரவியதற்குப் பாம்பின் நஞ்சை உவமையாகக் கூறுகிறான். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. சீதை இராமன்பாலும், இராமன் சீதைபாலும், இருவரும் ஒருவரையொருவர் நேசித்தனர். அது இருதலைக் காமம்; இங்கே சூர்ப்பணகை கொள்வது ஒருதலைக் காதல். அது இன்பம் தரும். எனவே தான் கம்பன் மிக அற்புதமான உவமையை ஈரிடத்திலும் கையாண்டிருக்கிறான், இன்னொரு ஒற்றுமையும் உண்டு. பாம்பு தோலுரிக்கும் போது அதன்விடம் முழுவதும் வழிந்து விடும் என்றும், அதனால் பாம்பின் உடம்பு சற்று நேரத்திற்கு வெதும்பிப் போய் விடும் என்றும் கூறுவதுண்டு. அதுபோலச் சூர்ப்பணகையும் இராமன் சீதையுடன் அகன்ற பின்பு, ஒருதலைக் காமத்தால் தானே வருந்தி நின்றாள் என்பதாம். கனலினும் காமம் கடிய வெம்மையுடையது. எனவே காமக்கடுங்கனல் எனப்பட்டது. ''ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு, நீருள் குளித்தும் உயலாகும்; நீருள் குளிப்பினும், காமம் சுடுமே; குன்றேறி ஒளிப்பினும்காமம்சுடும்'' என்பது நாலடியார்90. ''தொடில்சுடின்அல்லது காமநோய் போல விடிற் சுடல் ஆற்றுமோ தீ'' என்பது குறள் *(1159)*

73. தாடகைக் கொடியாள் தட மார்பிடை,
ஆடவர்க்கரசன் அயில் அம்பு போல்,

பாடவத்தொழில் மன்மதன் பாய்கணை
ஓட, உட்கி, உயிர் உளைந்தாள் அரோ! (2906)

(தடம் - பெரிய; அயில் - கூரிய; பாடவம் - திறமை; உட்கி - அஞ்சி; உளைதல் - வருந்துதல்; ஆடவர்க்கரசன் - புருஷோத்தமன் / இராமன்; மனத்தைக் கலக்கி வருத்துவதனால் மன்மதன் என்பது அவனுக்குக் காரணப்பெயர்; ஓட - ஊடுருவிச் செல்ல; உயிர் உளைதல் - பிராண அவஸ்தை)

தாடகை என்னும் கொடிய அரக்கியின் பெரிய மார்பின் ஊடே, ஆடவர்களில் சிறந்தவனான இராமபிரான் எய்த இராமபாணம் என்னும் கூரிய அம்பு பாய்ந்து அப்பால் சென்றதைப் போல, காமப் போர்த் தொழிலில் மேம்பட்டவனும் திறமை மிகுந்தவனுமான மன்மதன் செலுத்திய மலர்க் கணைகள்சூர்ப்பணகையின்நெஞ்சத்தில் ஊடுருவிப் பாய, அதனால் அவள் மிக அஞ்சி, உயிர் போகும் நிலையை அடைந்து மிக்க வருத்தமுற்றாள்.

இங்கே, காப்பியத்தில் முன்னே நடந்த ஒரு நிகழ்ச்சியையே உவமையாகக் கூறுகின்ற நயம் நோக்கற்பாலது. தாடகையின் வலிய உடலைத் தொளைத்துச் சென்று விழுந்தது இராமபாணம் என்பதை நாம் பாலகாண்டத்துள் கண்டோம். அதைப் போல இங்கே, காமப் போர்த் தொழிலில் கைதேர்ந்தவனான மன்மதன் ஏவுகின்ற மலர்க்கணைகள் சூர்ப்பணகையின் வலிய உள்ளத்தில் பாய்ந்து செல்வதால் அவள் மிக அஞ்சி உயிர் வருந்தினாள் என்பதாம். தாடகை அரக்கி, வலியவள்; இராமபிரானின் இராமபாணம் அவள் உடலைத் தொளைத்து அப்பாற் சென்று விழுந்தது; சூர்ப்பணகையும் அரக்கி; வலிய கொடிய காமம் நிறைந்த நெஞ்சை உடையவள். ஆனால் மன்மதனின் காமபாணம் கூர்மையற்றது, மெல்லியது. மலர்களால் ஆனது. என்றாலும் அது அந்த வலிய நெஞ்சைக்கதிகலங்கச்செய்து உயிர்விடும்நிலைக்கு உள்ளாக்கியது என்றது ஒரு நயம். இத்தகைய மெல்லிய கணைகளைக் கொண்டே எல்லோரையும் கொன்று விடுவதால்தான் மன்மதன் ''பாடவத் தொழில் மன்மதன்'' என்றார் என்க. தாடகை இராமனைப் பகைத்து வந்தாள். இராமபாணம் தாக்கியது; இங்கே சூர்ப்பணகை இராமனை நயந்து வந்தாள் - காமபாணம் அவளை உயிர் உளைய வருத்தியது. பாடவம் என்ற சொல்லுக்கு வல்லமை, சளிப்பு, சுகம், இன்பம், மதிப்பு, பெருமை என்று பலபொருள்கள் உண்டு.

74. கலை உவாமதியே கறியாக, வன்
சிலையின் மாரனைத் தின்னும் நினைப்பினாள்,
மலைய மாருதமாம் நெடுங்கால வேல்
உலைய மார்பிடை ஊன்றிட, ஓயுமால். (2907)

(உவாமதி - முழுமதி / நிறைமதி / பூரணசந்திரன்; மாரன் - மன்மதன்; மலையமாருதம் - பொதிகைத் தென்றல்; உலைய - வருந்துமாறு; ஓய்தல் - சோர்வடைதல் / வலிமை குறைந்து மெலிதல்; கறி - வெஞ்சனம் / கறிக்கப்படுவது; உவா என்பது அமாவாசை, பௌர்ணமி இரண்டுக்கும் பொதுவான சொல்)

பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்ற பூரணசந்திரனையே உணவுக்குத் தொட்டுக் கொள்ளும் கறியாகவும், வலிய வில்லினைக் கையில் கொண்ட மன்மதனையே உணவாகத் தின்ன வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தாள் சூர்ப்பணகை; ஆனால் அது நிறைவேறாதபடி பொதிய மலையிலிருந்து வீசிய தென்றற்காற்று, எமனைப் போன்ற நீண்ட வேல் தன்னை வருத்தும்படி மார்பைத் தொளைத்துத் தைத்து ஊடுருவிச் சென்றதால், சோர்வுற்று மெலிந்தாள்.

மன்மதனுக்குக் குடையாகச் சந்திரனையும், தேராகத் தென்றலையும் கூறுவதுண்டு. எனவே தென்றல் என்னும் தேர் வந்து அவளை வருத்தியதாகக் கூறியதும் பொருத்தமே. கறி என்பது கறிக்கப்படுவது கடித்துத் தின்னப்படுவது. காய் கிழங்கு முதலியவற்றைத் துண்டாக நறுக்கிச் சமைக்கப்படுவது. இதை வெஞ்சனம் என்றும் கூறுவர். சூர்ப்பணகை இராமனைக் கண்டது ஒரு பௌர்ணமி தினம் என்பது பெறப்படுகிறது.

75. அலைக்கும் ஆழி அடங்கிட, அங்கையால்
மலைக்குலங்களின் தூர்க்கும் மனத்தினாள்,
நிலைக்கும் வானில் நெடுமதி நீள்நிலா
மலைக்க, நீங்கும் மிடுக்கிலள் மாந்துவாள். (2908)

(அலைக்கும் - வருத்துகின்ற / அலைவீசுகின்ற; ஆழி - கடல்; தூர்த்தல் - நிரப்புதல்; மலைத்தல் - மாறுபட்டு வருத்துதல்; மிடுக்கு - வலிமை; மாந்துதல் - வருந்துதல்; அங்கை - அகம்கை / உள்ளங்கை; கலம் - தொகுதி)

அலைவீசித் தன்னை வருத்துகின்ற கடல் ஓசை அடங்கும் படியாகத் தன்னுடைய உள்ளங்கைகளால் மலைக் கூட்டங்களைப் பெயர்த்துக் கடலை நிரப்பி, வற்றிப் போகும்படி செய்யத் தன் மனத்தில் நினைத்தாள் சூர்ப்பணகை; ஆனால் கடலுடன் தொடர்புடைய, ஆகாயத்தில் நிலைபெற்றிருக்கும் நீண்ட சந்திரன், தனது நீண்ட நிலாக் கற்றைகளால் போராட, தனது வலிமை குன்றிப் போக, வருந்திச் சோர்வுறுவாள்.

முன்பு தென்றல் தேராக வந்து தடுத்தது போல இப்பொழுது, சந்திரன் குடையாக வந்து அவள் எண்ணத்தைத் தடுத்தான் என்பது கருத்து. அவள் எண்ணம் என்ன? ஒலியெழுப்பித் தன்னை வருத்துகின்ற கடலை மலைகளைக் கொண்டு தூர்த்துவிட வேண்டுமென்பது. ஆனால் அது முடியவில்லை. காரணம், சந்திரன் உதிப்பதற்கு இடமாகிய தாய்வீடு கடல். எனவே சந்திரன் சும்மா இருப்பானா? அவன் தன்னுடைய நிலாக்

கற்றையை வீசி அவளை வலிமை குன்றியவளாக ஆக்கிவிட்டான். கடல் மன்மதனுக்கு முரசு என்பர். எனவே தான் அது ஒலியெழுப்பிக் கொண்டே இருக்கும். மன்மதன் முரசுக்குக் கேடு செய்ய எண்ணியவளின் செயலை, அவனது குடையாகிய தண்மதி காப்பாற்றியது என்றது ஒரு நயம்.

76. ''பூ எலாம் பொடியாக, இப்பூமியுள்
கா எலாம் ஒடிப்பென்'' எனக் காந்துவாள்,
சேவலொடு உறை செந்தலை அன்றிலின்
நாவினால் வலி எஞ்ச, நடுங்குவாள். (2909)

(பொடி - துகள்; கா - மலர்ச் சோலைகள்; காந்துதல் - கோபித்தல்; எஞ்ச - குறைய; சேவல் - ஆண் அன்றில்; அன்றில் - கிரௌஞ்சபக்ஷி)

''மலர்களெல்லாம் துகளாகும்படியாக, இந்தப் பூமியில் உள்ள மலர்ச் சோலைகள் அனைத்தையும் முறித்து அழித்து விடுவேன்'' என்று சூர்ப்பணகை மிகுந்த கோபம் உறுவாள். ஆனால் தன் ஆண் அன்றிலோடு ஒன்றி வாழ்ந்திருக்கும் சிவந்த தலையையுடைய பெண் அன்றிலினது குரலைக் கேட்டு, அதனால் விரகதாபம் மிகுதியாக, தனது வலிமை குன்றிப் போய், அச்சப்படத் தொடங்குவாள்.

காமம் மிக்கது மன்மதனின் மலர்க் கணைகளால் தானே? எனவே மலர்களே இல்லாது செய்து விட்டால், மன்மதனால் மலர்க் கணைகளைச் செலுத்த இயலாது. தன் காமம் மிகாது அல்லவா! எனவே ''பூ எலாம் பொடியாக, இப்பூமியுள் கா எலாம் ஒடிப்பேன்'' என்கிறாள். ஆனால் அது முடிந்ததா? முடியவில்லை. ஏன்? ஆண் அன்றிலோடு சேர்ந்து மகிழ்ந் திருக்கும் பெண் அன்றிலின் மகிழ்ச்சிக் குரல் இவள் காமத்தை இன்னும் மிகுவித்ததேயன்றி, அவள் எண்ணியது போல் மலர்களை அழிக்க முடியவில்லை. தன் ஆற்றல் குறைந்து அச்சம் கொள்ளலானாள் என்பதாம். செவ்வானம், சந்திரன், கடல் ஒலி, அன்றில் இவையெல்லாம் காமுற்றோர்க்குக் காமத்தை இன்னும் மிகுதிப் படுத்தும் இயல்பின. அன்றில் பறவைகள் இணைபிரியாது வாழும் இயல்பினது. ஒன்றை விட்டு ஒன்று பிரிந்தால் மூன்று முறை கூவி அழைக்கும். அதற்கு வாராது போனால், உயிர் விட்டு விடும் இயல்பினது. சீதையும் இராமனைக் கண்டபின்பு இவ்வாறெல்லாம் துயருற்றாள் என்பதை இங்கு நினைவு கூர்க.

77. அணைவுஇல் திங்களை நுங்க, அராவினைக்
கொணர்வேன் ஓடி, எனக் கொதித்து உன்னுவாள்;
பணை இன் மென்முலை மேல் பனிமாருதம்
புணர, ஆருயிர் வெந்து புழுங்குவாள். (2910)

(அணைவுஇல் - அணைதல் இல்லாத / அணுக இயலாத; நுங்க - விழுங்குவதற்கு; அரா - பாம்பு / இராகு; உன்னுதல் - நினைத்தல்; பணை -

பெருத்த; பனி - குளிர்ந்த; மாருதம் - காற்று; புணர்தல் - பொருந்துதல்; பனி மாருதம் - தென்றல்; அணைவு - அனுகூலமுமாம் / இணக்கம்)

தன்னால் எளிதாக அணுக முடியாததும், தனக்கு அனுகூலமாய் இல்லாததுமான சந்திரனைத் தன்னால் விழுங்க முடியாது; எனவே அதனை விழுங்குவதற்கு இராகு / கேது ஆகிய பாம்புகளை உடனே ஓடிச் சென்று கொண்டு வருகிறேன் என மனம் வெதும்பி எண்ணுவாள். ஆனால், அவளுடைய பருத்த, இனிமையான, மென்மையான கொங்கைகளின் மேல் குளிர்ச்சி பொருந்திய தென்றற் காற்று வந்து வீசிப்படிய, அதன் வெப்பத்தால் தன் அருமையான உயிர் வெந்து போகும்படி புழுங்கிப் போவாள்.

சந்திர சூரியர்களை இராகு கேது என்ற பாம்புகள் விழுங்கும் என்பதும் அவற்றிற்குச் சூரிய சந்திர கிரகணங்கள் என்று பெயர் என்பதும் புராணக் குறிப்புக்கள். தன்னால் முடியாத ஒரு காரியத்தை, எவரால் அக்காரியத்தை நிறைவேற்ற முடியுமோ, அவர்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளுதல் உலக இயல்பு. தன்னை வருத்தும் சந்திரனைத் தான் அருகில் அணுகக் கூட முடியாது என்பதறிந்த சூர்ப்பணகை, திங்களுக்குப் பகையாகிய இராகு என்னும் பாம்பைக் கொண்டு வந்து திங்களை விழுங்க வைப்பேன் என்று எண்ணுவது அவளது காமமயக்கத்தைப் புலப்படுத்தும். ஆனால் இங்கேயும் திங்களுக்குத் துணையாகத் தென்றல் வந்து, அவள் கொங்கைகளை வருடிக் கொடுத்து, அவள் எண்ணம் நிறைவேற முடியாதபடி செய்து விடுகிறான். எனவே காமவெப்பம் மிக்கஉற்று மேலும் உயிர் வெந்து வாடுவாளானாள். திங்கள் கூடினார் பால் நிழலாய், கூடார் பால் வெய்யதாய் அமையும். பணை என்பது பருத்த என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. ''பணையே பிழைத்தல், பெருப்பும் ஆகும்'' என்பது தொல்காப்பியம்; குளிர் காற்று காம நோயுற்றாரைத் தீப்போல் எரித்து வருத்தும் இயல்பினது. பாம்புக்குக் காற்று உணவு என்பது ஒரு செய்தி. இராகு கரிய பாம்பு; கேது செந்நிறமானது என்பதும் மற்றொரு செய்தி.

78. கைகளால், தன்கதிர் இளங்கொங்கை மேல்
ஐய தண் பனி அள்ளினள் அப்பினாள்;
மொய்கொள் தீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால். (2911)

(கதிர் - ஒளி; ஐய - வியக்கத்தக்க; மொய் - நெருங்கிய; முருங்கிய - தீய்ந்து போன; வெய்ய - வெப்பமுள்ள)

தனது காமவெப்பத்தைத் தணித்துக் கொள்ளும் பொருட்டு, தனது ஒளி மிகுந்த இளமையான கொங்கைகளின் மீது குளிர்ச்சி பொருந்திய வியக்கத்தக்க பனிக்கட்டிகளை நிரம்ப எடுத்துத் தன்கைகளால் அள்ளி அப்பிக் கொண்டாள். என்றாலும் அவை, நெருங்கிய நெருப்பினிடத்து

வெந்து தீய்ந்து போகின்ற வெப்பமான பாறையின் மீது வைத்த வெண்ணெய் போல கரைந்து உருகிப் போயிற்று.

நெருப்பு - காமத்தீ; வெய்ய பாறை - அவள் வலிமை மிகுந்த கொங்கை; வெண்ணெய் - பனிக்கட்டிகள்; சூடு தணியும் என்று பனிக்கட்டியை அள்ளி அப்பினாள், ஆனால் அதற்கு மாறாக அக்கொங்கைகளின் காமத்தீயின் வெப்பத்தால், அப்பனிக் கட்டிகளே உருகிப் போயிற்று என்றது ஒரு நயம். அதற்குக் கூறிய உவமை மற்றுமோர் நயம். வெப்பமுள்ள பாறையின் மீது வெண்ணெயை வைத்தால் என்ன ஆகும்? வெய்ய பாறையில் வெண்ணெய் உருகுவது போல, பனிக் கட்டியும் சூர்ப்பணகையின் கொங்கைகளின் வெப்பத்தால் உருகியது என்பது கருத்து.

79. அளிக்கும்மெய், உயிர், காந்து அழல் அஞ்சினள்,
குளிக்கும் நீரும் கொதித்து எழக் கூசுமால்;
விளிக்கும் வேலையை, வெங்கண் அனங்கனை,
ஒளிக்கலாம் இடம் யாது? என உன்னுவாள். (2912)

(அளிக்கும் - காப்பாற்றும்; காந்து - கொளுத்துகின்ற / எரிக்கின்ற; அழல் - நெருப்பு / காமத்தீ; கூசுதல் - நாணுதல்; விளிக்கும் - பேரொலி செய்யும்; வேலை - கடல்; அனங்கன் - மன்மதன்; உன்னுதல் - சிந்தித்தல்)

தன்னால் காப்பாற்றப் படவேண்டிய உடல், உயிர் ஆகியவற்றைச் சுட்டெரிக்கின்ற தனது காமத்தீயைக் கண்டு அஞ்சுவாளானாள். எனவே அதைத் தணித்துக் கொள்ளும் பொருட்டு கடலில் குளிக்கச் சென்றாள். இவளது காமவெப்பத்தால் அக்கடல் நீரும் கொதித்துப் பொங்கி எழலாயிற்று. எனவே அதற்காக வெட்கப்பட்டாள். பின்னர் பேரொலி எழுப்பி ஆர்க்கும் கடலையும், கொடியவனான மன்மதனையும் தவிர்த்துத்தான் ஒளிந்து கொள்ளத்தக்க இடம் யாது என்று சிந்திக்கலானாள். முன்பு கண்ட நாலடியார் பாடலை இங்கு நினைவு கொள்ளுதல் தகும். ''நீருட் குளிப்பினும் காமம் சுடுமே; குன்றேறி ஒளிப்பினும் காமம் சுடும்'' என்பது நாலடியார் 90. அதன் படியே இவளும் நீருட் புகுந்தாள் எனினும் காமம் சுட்டது; தணியவில்லை; எனவே இப்போது மலையில் ஒளித்துக் கொள்ளலாமா என்று சிந்திக்கத் தொடங்கினாள் என்பதாம்.

80. வந்து கார்மழை தோன்றினும், மாமணிக்
கந்து காணினும், கைத்தலம் கூப்புமால்;
இந்து காந்தத்தின் ஈர நெடுங்கலும்
வெந்து காந்த, வெதுப்புறு மேனியாள். (2913)

(இந்து காந்தம் - சந்திர காந்தக் கல்; ஈர - குளிர்ச்சியுடைய; கார் மழை - கரிய மேகம்; மா - சிறந்த; கந்து - தூண் / தறி; கைத்தலம் - கைகள்; கூப்புதல் - குவித்து வணங்குதல்)

தனது காம வெப்பத்தைத் தணித்துக் கொள்ள முன் கூறியவற்றை யெல்லாம்விட்டுவிட்டுச்சந்திரகாந்தக்கற்கள்பரப்பப்பட்டபடுக்கையை அடைந்தாள். அந்தக் குளிர்ச்சியான நீண்ட கல்லும் கூட, இவள் காம வெப்பம் தாங்காமல் வெந்து கருகிப்போயிற்று. அத்தகைய கொதிக்கின்ற மேனியை உடையவளான சூர்ப்பணகை, தன் எதிரில் கரிய மேகம் வந்து தோன்றினாலும், அல்லது சிறந்த நீலமணி பதிக்கப் பெற்ற ஒரு தூண் வந்து எதிர்ப்பட்டாலும், அவை இராமனின் மேனி நிறத்திற்கு ஒப்பாவதால், அவனே தன் எதிரில் தோன்றியதாகக் கருதி இருகைகளையும் கூப்பித் தொழத் தொடங்குபவள் ஆனாள்.

சந்திர காந்தக்கல் என்பது ஒரு இரத்தினக்கல். அது சந்திரனைக் கண்டதும் அல்லது சந்திரனின் ஒளி தன் மேல் பட்டதும் குளிர்ந்த நீரைச் சொரியும் இயல்புடையது. அதுவே வெந்து காந்தியது என்றதனால் சூர்ப்பணகையின் காமம் மிகுதி புலப்படுத்தப்பட்டது என்க. தான் அன்பு கொண்டவர்களின் மேனியின் நிறத்தைக் கொண்ட எந்தப் பொருளைப் பார்த்தாலும், அவர்களே நேரில் தோன்றி அருள் செய்வது போலத் தோற்றுவது இறைவன் மீது பற்றுக் கொண்ட அடியவர்களுக்கும், தலைவன் மீது காதல் கொண்ட தலைவியர்க்கும் இயல்பான பொதுத் தன்மை. ''நன்று பெய்யும் மழை காணில் நாரணன் வந்தான் என்று ஆகும்'' என்பதும், கரும்பெரும் மேகங்கள்காணில் கண்ணன்என்று ஏறப் பறக்கும் என்பதும் திருவாய்மொழி; ''தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா நின்னைத் தீண்டும் இன்பம் தெரியுதடா நந்தலாலா'' என்பது பாரதியின் கண்ணன் பாட்டு.

81. சூர்ப்பணகை ஒரு குகைக்குள் செல்லுதல்

வாம மா மதியும், பனிவாடையும்
காமனும், தனைக்கண்டு உணரா வகை
நாமவாள் எயிற்று ஓர் கதநாகம்வாழ்
சேம மால்வரையின் முழை சேருமால். (2914)

(வாமம் - அழகு; மா - சிறந்த; பனி - குளிர்ச்சி; நாமம் - அச்சம்; வாள் - கூரிய; கதம் - சினம்; சேமம் - பாதுகாப்பு; மால் - பெரிய; வரை - மலை; முழை - குகை; காமன் - மன்மதன்)

அழகிய, சிறந்த, நிறைமதியும், குளிர்ந்த காற்றும், மன்மதனும் தன்னைக் கண்டு கொள்ளா வண்ணம், அச்சம் தரக் கூடிய கூரிய கொடிய நச்சுப் பற்களைக் கொண்ட ஒரு சினம் மிகுந்த பாம்பு வாழுகின்ற, பாதுகாப்பான பெரிய மலையிலுள்ள ஒரு குகைக்குள் போய்ச் சேர்ந்தாள் சூர்ப்பணகை.

ஏன் சூர்ப்பணகை ஒரு குகைக்குள் சென்று தன்னை ஒளித்துக் கொள்ள வேண்டும்? அங்கே தான் தன்னைத் துன்புறுத்துகின்ற பூர்ண சந்திரனும், குளிர்ந்த தென்றற் காற்றும், மன்மதனும் நுழைய முடியாது. காரணம்,

பூரணசந்திரனைக்கண்டால் பாம்புக்கு அச்சம், தன்னைக்கவ்விக் கொண்டு விடுமோ என்று; தென்றற் காற்றுக்கு அச்சம், பாம்பு தன்னை உணவாக உண்டு விடுமோ என்று; மன்மதனுக்கு அச்சம் பாம்பிருக்கும் இடத்தில் அதை மாலையாக அணிந்துள்ள சிவபெருமானே இருப்பான் அல்லவா? அவன் தன்னை எரித்தவன் ஆயிற்றே? எனவே இம்மூவரும் நுழைய முடியாத ஒரு பெரிய மலைக் குகைக்குள் சென்றாள் என்பதாம். இருண்ட குகைக்குள் மதியோ, காற்றோ, உருவமற்ற மன்மதனோ நுழைய முடியாது என்பது ஒன்று.

82. காமம் சூர்ப்பணகையை அங்கும் வருத்துதல்

அன்னகாலை, அழல் மிகுத்து ஏறலும்
முன்னின் மும்மடியாய் முலை வெந்துஉக,
இன்னவா செய்வது என்று அறியாது, இளம்
பொன்னின் வார் தளிரில் புரண்டாள் அரோ! (2915)

(அழல் - காமவெப்பம்; மும்மடி - மும்மடங்கு; வார் - நீண்ட)

அப்பொழுதும், அவளது காமத்தீ குறையாமல் மிகுதியாய் வருத்த, முன்னைக்காட்டிலும் அவளுடைய கொங்கைகள் இங்போது மும்மடங்கு வெதும்பி வெப்பத்தைக்கக்க, இதைத்தணிப்பதற்கு என்ன செய்வது என்று அறியாது, இளமையான, பொன் போன்ற, மென்மையான, தண்மையான, நீண்ட இலைத்தளிர்களைப் படுக்கையாய் விரித்து அதில் படுத்துப் புரண்டாள்.

வெளியில் இருந்த போது நிலவாலும், தென்றலாலும், மன்மதனாலும் வருந்திய கொங்கைகள், இப்போது இவர்கள் ஒருவரும் இல்லாத நிலையிலும், இருண்ட குகைக்குள் தன்னை ஒளித்துக் கொண்ட போதிலும், முன்னைக் காட்டிலும் மும்மடங்கு அவள் கொங்கைகள் வெப்பத்தைச் சிதறின என்பதால் அவளுடைய காமத்தீயின் தன்மை புலப்படும். எனவே அந்த வெப்பம் புறத்தில் இருந்து வரவில்லை. அகத்திற்குள்ளேயே இருக்கிறது என்று கூறாமல் கூறியது ஒரு நயம். இங்கே ஒன்று நினைவுக்கு வரவேண்டும். சீதையும் மிதிலைக் காட்சிப் படலத்தில் காமவெப்பம் மிகுந்து தளிர்கள் பரப்பிய படுக்கையில் புரண்டாள்என்றார். அங்கேயும் ''கரிந்தனபல்லவங்கள்'' என்றார். ஆனால் அங்கே தோழியர் தளிரால் ஆகிய படுக்கைகள் கரியக் கரிய ''ஆயிரத்தின் இரட்டி கொணர்ந்து அடுக்கினர்'' என்றார். இங்கே சூர்ப்பணகை தனக்கு உதவுவார் யாரும் இல்லாமல் தானே தனக்குரிய படுக்கையை அமைத்துக் கொண்டாள் என்பதாம். காமத்துயரால் வருந்துவோரைத் தளிர்ப் படுக்கையில் கிடத்தி ஆற்றுதல் சைத்திய உபசாரங்களில் ஒன்று.

83. சூர்ப்பணகை இராமனின் உருவெளித் தோற்றம் காணுதல்

வீரன் மேனி வெளிப்பட, வெய்யவள்
கார்கொள் மேனியைக் கண்டனனாம் எனச்
சோரும்; வெள்கும்; துணுக்கெனும்; அவ்வுருப்
பேருங்கால், வெம் பிணியிடைப் பேருமால். (2916)

(வெய்யவள் - விருப்பமுடையவள் / கொடியவள்; வெம்மை விருப்பமுமாம்; கார் - கருமுகில்; சோர்தல் - தளர்தல்; பேர்தல் - நீங்குதல் / மறைதல்; பிணி - காமநோய்; பேர்தல் - விழுதல் / அகப்படுதல்)

வீரனாகிய இராமனது உருவம் வெளிப்பட்டுக் கண்ணுக்குத் தோன்ற, கொடியவளும், இராமன்பால் மிகுந்த விருப்பமுள்ளவளுமான சூர்ப்பணகை, அவனுடைய கருமுகில் போன்ற மேனியை நேரில் கண்டவள் போலத் தளர்ச்சியடைவாள்; வெட்கப்படுவாள்; பின்னர் திடுக்கிட்டு நடுங்குவாள்; அந்த உருவெளித் தோற்றம் மறையும் பொழுது, கொடிய காமநோயில் மீண்டும் அகப்பட்டுக் கொள்வாள்.

ஒன்றைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருந்தால் அது நம் அருகில் அப்படியே தோன்றுவது போல நமக்குத் தெரியும். இதனை உருவெளித் தோற்றம் என்று தமிழ் இலக்கியங்கள் கூறும். சீதை இராமனும், இராவணன்சீதையும், இன்றும்தமிழ்க்காப்பியங்களில் வரும் எல்லாத் தலைவன் தலைவியரும் இவ்வாறே உருவெளிப்பாடு கண்டு மனம் கலங்கியிருக்கின்றனர். எதிர்பாராத நேரத்தில் அவன் உருவெளித் தோற்றத்தைக் கண்டதால் திடுக்கிட்டாள், பின்னர் நாணினாள், அவனைத் தழுவமுடிய வில்லையே என்ற ஏக்கத்தால் சோர்ந்து போனாள் என்க.

84. சூர்ப்பணகையின் மோக மிகுதி

ஆகக் கொங்கையின், ஐயன் என்று, அஞ்சன
மேகத்தைத் தழுவும்; அவை வெந்தன,
போகக் கண்டு புலம்பும்; அப் புன்மையாள்
மோகத்துக்கு ஒரு முடிவும் உண்டாம் கொலோ? (2917)

(அஞ்சனம் - மை / கருமை; ஆகம் - மார்பு; புன்மை - இழிகுணம்)

கரிய மை போன்ற காளமேகத்தைக் கண்டு, அது இராமனது மேனி போன்ற நிறம் கொண்டிருக்கவே, இராமன் தானோ என்று கருதி, தன் மார்பில் அமைந்திருக்கும் கொங்கைகளில் அதனை அணைத்துக் கொள்வாள்; தனது உடலின் காம வெப்பத்தால் அம்மேகங்கள் வெந்து போய்த் தன்னை விட்டு அகல்வதைக் கண்டு, வாய்விட்டுப் புலம்பி அழுவாள்; இத்தகைய அற்பக்குணம் வாய்ந்த சூர்ப்பணகையின் மோகத்திற்கு ஒரு எல்லையும் இருக்கிறதோ?

உயர் குடியில் பிறந்தவர் காமவெப்பத்தால் துயருரினும் இது போன்ற இழிவான செயல்களில் ஈடுபடமாட்டார்கள். எனவே அத்தகைய செயல்களில் ஈடுபட்ட சூர்ப்பணகையைப் பொருந்தாக் காம நிகழ்ச்சி களில் ''புன்மையாள்'' என்றார். மோகத்தால் அவள் செய்த செயல்கள் பல. அதற்கு ஒரு முடிவே இல்லை என்பதாம். மோகம் என்பது தாங்க முடியாது காமத்தால் அழுதலும், பிதற்றலும் ஆகிய மன்மத அவஸ்தை என்க.

85. கவிக்கூற்று

''ஊழி வெங்கனல் உற்றனள் ஒத்தும், அவ்
ஏழை ஆவி இறந்திலள்'' என்பரால்;
ஆழி யானை அடைந்தனள் பின்னையும்
வாழலாம் எனும் ஆசை மருந்தினே. (2918)

(உற்றனள் - அகப்பட்டவள்; ஏழை - பேதை / அறிவிலி; ஆழி - கடல்)

''பிரளய காலத்தில் ஏற்படும் கொடிய நெருப்புப் போலக் காமத்தீ தன்னைப் பற்றியிருந்தும் அந்த அறிவிலியாகிய சூர்ப்பணகை இன்னும் இறக்காமல் உயிரோடு இருக்கிறாள் என்றால் அதற்குக் காரணம், கடல் வண்ணனும், சக்கரப் படையை உடையவனுமாகிய இராமபிரானை எப்படியும் அடைந்து, பின்னரும் வாழலாம் என்ற ஒரு ஆசை என்னும் சாவா மருந்து அவளிடம் இருப்பதனால் தான்'' என்கிறான் கவிஞன்.

ஆசையே காமநோய்க்கு மருந்தாகி அவள் உயிரைக் காத்து வந்தது என்பதாம். ஆசையே நோய்; அவ்வாசையே அந்நோய்க்கு மருந்து என்றது ஒரு நயம். ''பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை தன் நோய்க்குத் தானே மருந்து'' என்பது குறள் (1102).

86. சூர்ப்பணகை காமத்தில் பிதற்றுதல்

''வஞ்சனைக் கொடு மாயை வளர்க்கும் என்
நெஞ்சு புக்குளன தாபத்தை நீக்கு'' எனும்;
''அஞ்சனக் கிரியே! அருளாய்'', எனும்;
நஞ்சு நக்கினள் போல நடுங்குவாள். (2919)

(நக்குதல் - உண்ணுதல்; தாவம் - தாபம் / விரகதாபம்; அஞ்சனம் - மை)

விஷத்தை உண்டவள் போல உடல்மிக்க நடுக்குற்றவளாகிய சூர்ப்பணகை, ''வஞ்சகச் செயல்களையும், கொடுமையான எண்ணங் களையும் உடைய என் உள்ளத்தினுள் நீ புகுந்தது போலவே, என் மனத்திற்குள் இருக்கும் விரகதாபத்தையும் போக்கி விடு'' என்று தன் மனத்திற்குள்ளே இராமன் இருப்பதாக எண்ணி, அவனை நோக்கி, ''மை போன்ற கரிய நிறமுடைய மலை போன்றவனே! எனக்கு அருள் செய்வாயாக!'' என்பாள்.

87. காவியோ கயலோ எனும்கண் இணைத்
தேவியோ, திருமங்கையின் செவ்வியாள்;
பாவியேனையும் பார்க்கும் கொலோ? எனும்
ஆவி ஒயினும் ஆசையின் ஒய்வு இலாள். (2920)

(ஆவி - உயிர்; ஓய்தல் - தேய்தல் / அழிதல் / குறைதல்; காவி - கருங்குவளை மலர்; இணை - இரண்டு; தேவி - மனைவி; செவ்வி - அழகு; திருமங்கை - இலக்குமி / திருமகள்)

உயிரே தேய்ந்து அழிந்தாலும், இராமன்பால் கொண்ட ஆசையில் தேய்வுறாத சூர்ப்பணகை, கருங்குவளை மலரோ, கயல் மீனோ என்று சொல்லும்படியான அழகு மிகுந்த இரு கண்களையும் உடைய மனைவியாகிய சீதையோ இலக்குமி போன்ற அழகுடையவள்; அவளை விடுத்து விகார உருவம் கொண்ட பாவியாகிய என்னையும் இராமன் ஏறெடுத்தும் பார்ப்பானோ? என்று புலம்பலானாள்.

கருங்குவளை மலர் கண்ணின் நிறத்திற்கும் மென்மைக்கும், கயல் பிறழ்ச்சிக்கும் ஒளிக்கும் பெண்களின் கண்களுக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. சீதையைத் தேவி என்றும், தன்னைப் பாவி என்றும் கூறுவதில் உள்ள நயத்தை உணர்க. ''ஆவியினும் ஆசையின் ஒய்வு இலாள்'' என்பது, நளவெண்பாவில் உள்ள ''பூவின்வாய் வாளி புகுந்த வழியே என் ஆவியார் போனாலும், அவ்வழியே பாவியேன் ஆசை போகாது என்று அழிந்தாள்'', என்ற வரிகளை நினைப்பூட்டும். ''மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை'' என்பது இக்காலத்து வழக்கு. இங்கே ஒன்று நோக்க வேண்டும். தான் இராமன்பால் எவ்வளவோ காமம் கொண்டு அவனை அடையவேண்டும் என்று எண்ணிச்செயல்பட்டாலும், சூர்ப்பணகையால் சீதையின் அழகைப் புகழாமல் இருக்க முடியவில்லை என்பதைக் காண்க. பகைவரும் தன்பகைமையை மறந்து புகழலாம்படி ஒரு பேரழகு சீதையின் அழகு என்பது பெறப்படுகிறது. பின்னர் இராவணனும் இராமனின் அழகைப் புகழ்ந்து கூறுவது காணப்போகிறோம். ''ஒய்தல் உள்ளதன் அணுக்கம்'' என்பார் தொல்காப்பியர்.

88. சூரியன் உதித்தல்

ஆன்ற காதல் அஃதுஉற எய்துழி,
மூன்று உலோகமும் மூடும் அரக்கராம்
ஏன்றகார் இருள் நீக்க இராகவன்
தோன்றினான் என, வெய்யவன் தோன்றினான். (2921)

(ஆன்ற - நிறைந்த; காதல் - காமநோய்; உற - மிகுதியாக; மூடுதல் - நிறைதல் / மறைத்தல்; ஏன்ற - எதிர்ந்த; வெய்யவன் - வெப்பமுடைய சூரியன்)

அவ்வாறு சூர்ப்பணகை நிறைந்த காமத்தை மிக்கு எய்தும் சமயத்தில் விண், மண், பாதாலம் என்னும் இம்மூன்று உலகங்களிலும் நிறைந்துள்ள அரக்கர்கள் என்னும் எதிர்ந்த கரிய இருளைப் போக்குவதற்காக இராமபிரான் அவதரித்து வந்தது போல, வெப்பமுடைய சூரியன் இம்மூன்று உலகத்தையும் மூடியிருக்கிற கரிய இருளைப் போக்கு வதற்காக உதயமானான்.

இருளுக்கு அரக்கர்களும், சூரியனுக்கு இராமபிரானும் உவமைகள். நிலவை எப்படி வெண்ணிலவு என்று கூறுகிறோமோ அது போல இருளைக் கார் இருள் என்பது மரபு. மேற்கூறிய சூர்ப்பணகை அடைந்த காமத்துன்பத்தின் மிகுதியை 18 பாடல்களில் விரித்துக் கூறியது காண்க.

89. சூர்ப்பணகையின் சூழ்ச்சித் திட்டம்

விடியல் காண்டலின், ஈண்டு தன்னுயிர் கண்ட வெய்யாள்,
''படிஇலாள் மருங்கு உள்ளஅளவு, எனை அவன் பாரான்;
கடிதின் ஓடினென் எடுத்து ஒல்லைக் கரந்து, அவள்காதல்
வடிவினான் உடன் வாழ்வதே மதி'' என மதியா. (2922)

(கண்ட - தங்கப்பெற்ற; வெய்யள் - காமவிருப்பமிக்கவள்; படி - ஒப்பு / உவமை; மருங்கு - பக்கம்; கடிது - விரைந்து; ஒல்லை - விரைவில்; கரந்து - மறைத்து; காதல் - விரும்பத்தக்க; மதி - அறிவுடைமை / சூழ்ச்சி; மதித்தல் - எண்ணுதல் / திட்டம் தீட்டுதல் / கருதுதல் / தீர்மானித்தல்; ஈண்டுதல் - பொருந்துதல்) (குளகப்பாடல்)

இவ்வாறு இரவு முழுதும் காமநோய் வாய்ப்பட்டு உயிர் போய் விடுகின்ற உணர்வற்ற நிலையில் வருந்திக்கிடந்த சூர்ப்பணகை, பொழுது விடிந்ததைக் கண்டவுடன், தன் உயிர் தன்னிடத்தில்தான் பொருந்தி யிருக்கிறது என்பதை உணர்ந்து, மீண்டும் காமவெப்பம் உடையவளாகி, தனக்கு உவமையில்லாத சீதை அருகில் இருக்கும் வரை, இராமன் என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். எனவே விரைவில் ஓடிச் சென்று, அவளை அபகரித்து, விரைவாக அவளை எங்கேயாவது ஒளித்து வைத்து விட்டு, அவளிடம் மிக்க அன்பு கொண்ட இராமன் விரும்புகின்ற அவளுடைய அழகிய வடிவிலேயே நான் சென்று அவன் உடன் இணைந்து வாழ்வதே அறிவுடைமையாகும் என்று தீர்மானித்து - பாடல் தொடர்கிறது.

''வெம்மை வேண்டல்'' என்பது தொல்காப்பியம். எனவே இங்கே ''வெய்யாள்'' என்ற சொல்லுக்கு இராமனிடம் விருப்பமுடையவள் என்றும், கொடியவள் என்றும் காமவெப்பம் மிகுந்தவள் என்றும் எந்தப் பொருளைக் கொண்டாலும் அது சூர்ப்பணகைக்குப் பொருந்தி வருவதை உணர்க. சூர்ப்பணகை தான் விரும்பிய வேடத்தை எப்பொழுது வேண்டு மாயினும் எடுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவள். எனவே சீதையின் அழகைத் தான் எடுத்துக் கொண்டு, அவளை மறைத்து வைத்துவிட்டு,

தானே அவள் வடிவேற்றுக் கொண்டு, இராமனுடன் இணைந்து வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும் என்று தீர்மானிக்கிறாள் சூர்ப்பணகை. இங்கே சூர்ப்பணகையை ''காமரூபிணி'' என்கிறது வான்மீகம். காமரூபிணி என்பது இச்சைப்பட்ட உருவை எடுத்துக் கொள்ளும் சித்தி பெற்ற அழகிய உருவத்தாள் என்றும் பொருள்தரும். இங்கே இந்தச்செயல் விரைவில் நடைபெற வேண்டும் என்று கருதியதால் முதலில் ''கடிதின்'' என்றும், பின்னர் ''ஒல்லை'' என்றும் இருஇடங்களில் விரைவுக் குறிப்புச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கும் பான்மை நோக்குக. இரவு கலவிக்கு உரிய காலம். எனவே காமநோய் மிகும். பகலில் அது குறையும் என்பது கூறப்பட்டது.

90. சூர்ப்பணகை அவர்கள் இருந்த சோலைக்கு வருதல்

வந்து நோக்கினள்; வள்ளல் போய் ஒரு மணித்தடத்தில்
சந்திநோக்கினன் இருந்தது கண்டனள்; தம்பி
இந்து நோக்கிய நுதலியைக் காத்து, அயல் இருண்ட
கந்தம் நோக்கிய சோலையில் இருந்தது காணாள். (2923)

(மணித்தடம் - தெளிந்த நீர்த்துறை; சந்தி - சந்தியா வந்தனம் / காலை வழிபாடு; இந்து - பிறைச்சந்திரன்; நுதல் - நெற்றி; கந்தம் - நறுமணம்; நோக்கிய - போன்ற; மணி - தெளிவு / அழகுமாம்)

விரைவில் அவர்கள் தங்கியிருந்த தவச்சாலைக்கு வந்து எல்லா இடங்களிலும் பார்த்தாள் சூர்ப்பணகை. வள்ளலாகிய இராமன் அங்கிருந்து தள்ளிப் போய் ஒரு அழகிய தெளிந்த கோதவரி நீர்த்துறையில் காலைவழிபாடு ஆற்றிக் கொண்டிருந்ததைக் கண்டாள்; அவனது தம்பி இலக்குவன், பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய சீதையைப் பாதுகாத்துக் கொண்டு, பக்கத்தில் இருள் நிறைந்ததும், நறுமணம் வீசுவதுமாகிய சோலையில் நின்றிருந்தவனைக் காணவில்லை.

சந்தி என்பது சந்தியா என்ற வடசொல்லின் தமிழாக்கம். காலையும் மாலையும் சந்திக்கும் வேளை சந்தி எனப்படும் அதைப் போல இரவும் பகலும் சந்திக்கும் வேளையும் சந்தி எனப்படும். எனவே காலைச் சந்தி, மாலைச் சந்தி என இவற்றைக் குறிப்பிடுவர். இராமனுடன் அவன் தம்பி இலக்குவனும் வந்திருக்கிறான் என்பதையே அறியாதவள் சூர்ப்பணகை. எனவே இவர்கள் இருவர் மட்டுமே இருப்பதாக எண்ணினாள். மேலும் இலக்குவன் நின்றிருந்த இடம் இருண்டிருந்தமையாலும் அவன் தனித்து ஒதுங்கியிருந்தமையாலும் அவனைக் கவனிக்கும் வாய்ப்பு இல்லாது போயிற்று என்பதாம். இந்து என்பது எட்டாம் நாள் பிறைச்சந்திரனைக் குறிக்கும். சந்திரனும் பார்த்துத்தன் அழகைவிட எழில் வாய்ந்த நெற்றியை உடையவள் சீதை என்று வியக்கும்படியான நெற்றி என்று ஏற்றிக் கூறுதலும் பொருந்துவது காண்க.

91. சூர்ப்பணகை சீதையை நோக்கிச் செல்லுவதை இலக்குவன் காணுதல்

தனிஇருந்தனள்; ''சமைந்தது என் சிந்தனை; தாழ்வுற்று
இனிஇருந்து எனக்கு எண்ணுவதுஇல்'' என, எண்ணாத்
துனிஇருந்த வல்மனத்தினள், தோகையைத் தொடர்ந்தாள்;
கனிஇரும் பொழில் காத்துஅயல் இருந்தவன், கண்டான். (2924)

(சமைந்தது - நிறைவேறிற்று / பலித்தது; எண்ணா - எண்ணி; துனி - வெறுப்பு; தோகை - மயில்; தொடர்தல் - பற்றி நெருங்குதல்; இரும் - பெரிய; தாழ்வுறுதல் - காலம் தாழ்த்துதல்)

தான் வந்த பொழுது, சீதை தனியளாய் இருந்தாள்; ''என் எண்ணம் ஈடேறி விட்டது. இனிமேல் காலந் தாழ்த்தி ஆலோசிப்பதற்கு எதுவும் இல்லை'' என்று தீர்மானித்து, சீதைபால் வெறுப்புக் கொண்டவளும், வலிய மனத்தையுடையவளுமான சூர்ப்பணகை, மயில் போன்ற சாயலையுடைய சீதையைப் பற்றுவதற்காக அவளை நெருங்கினாள்; அப்பொழுது பழங்கள் நிறைந்த பெரிய சோலையில் காவல் செய்து கொண்டு அருகில் நின்றிருந்தவனான இலக்குவன் இதனைக் கண்டு விட்டான்.

சீதை இருக்கும் வரை இராமன் தன்னைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டான் என்றதனால் உண்டாகிய வெறுப்பு ''துனிஇருந்த வல்மனத்தினள் என்ற சொற்களால் வெளிப்படுத்தப்பட்டது. இலக்குவன் இருப்பதையே அறியாதவள். இராமன் காலை வழிபாடு செய்யப் போய்விட்டான். எனவே சீதை தனியாகத்தான் இருக்கிறாள். இதுதான் தக்க தருணம். இனிக் காலந்தாழ்த்தக் கூடாது என்று நன்கு ஆலோசித்து அவளைப் பற்றுவதற்காக விரைவில் நெருங்கிச் சென்றாள் என்பதாம். சூர்ப்பணகை இலக்குவனைக் காணமுடியவில்லை; ஆனால் இலக்குவன் சூர்ப்பணகையைக் கண்டு விட்டான் என்பது பொழிலின் அத்தகைய அமைப்பைக் குறிப்பதாகும்.

92. இலக்குவன் சூர்ப்பணகையின் கூந்தலைப் பற்றுதல்

''நில்லடி'' எனக் கடுகினன்; பெண் என நினைந்தான்;
வில்எடாது, அவள் வயங்கு எரியாம் என விரிந்த
சில்வல் ஓதியைச் செங்கையில் திருகுறப் பற்றி,
ஒல்லை ஈர்த்து, உதைத்து, ஒளி கிளர் சுற்று வாள்உருவி, (2925)

(விலங்கு - விலங்குகின்ற; எரி - நெருப்பு; ஓதி - கூந்தல்; திருகுற - குறுக்கி; ஈர்த்து - இழுத்து; கிளர் - விளங்கும்; சுற்றுவாள் - உடைவாள்; சுற்று - உடை / சுற்றப் பட்டது) (குளகப்பாடல்)

இதனைக் கண்ட இலக்குவன், விரைந்து முற்பட்டு, ''நில்லடி'' என உரப்பிக் கொண்டே வந்தான். சூர்ப்பணகை இப்பொழுது அரக்கி வடிவத்தில் இருந்தாள். எனவே இவள் பெண் என்றும், பெண் கொலை பெரும்பாவம் என்றும் கருதித் தன் வில்லை எடுக்காமல், அவளுடைய விளங்குகின்ற நெருப்புப் போன்று சிவந்து சேர்ந்து முழக்கப்படாது விரிந்திருந்த சிலவாகிய வன்மையானகூந்தலைத்தன்சிவந்த கைகளினால் முறுக்கிப் பிடித்து, விரைவாகத் தன் பக்கம் இழுத்து தன் கால்களால் அவளை உதைத்து, ஒளி விளங்குகின்ற தனது இடையில் சுற்றப் பட்டிருக்கும் உடைவாளை உறையிலிருந்து உருவி எடுத்து, - பாடல் தொடர்கிறது.

இலக்குவன் சீற்றமுறுவது இது மூன்றாவது இடம். முதலில் இராமனுக்கு முடி சூடவில்லை என்றபோது; பின்னர் பரதன் பெரும் படை கொண்டு இராமனுடன் போர் செய்ய வருகிறான் என்று தவறாகக் கருதியபோது. இன்னுமொரு ஒற்றுமை. முன்பு இராமன் தாடகையைக் கொல்ல நினைத்தபோதும், அவள் அரக்கி என்றாலும் ''பெண்'' என்று கருதிக் கொல்லாமல் விட்டான். இப்போது சூர்ப்பணகை ''பெண்'' என்று கருதி இலக்குவன் கொல்லாமல் விடுகிறான். மீண்டும் ஒருமுறை இலக்குவன் அயோமுகியைப் பெண் என்று கருதிக் கொல்லாமல் விடப்போவதைக் காணப்போகிறோம். எனவே, பெண் கொலை பெரும்பாவம் என்பதைக் கம்பன் அங்கங்கே சுட்டிச் சொல்வதைக் காண்க.

93. இலக்குவன் சூர்ப்பணகையின் உறுப்புக்களை அறுத்தல்

ஊக்கித்தாங்கி, ''விண்படர்வென்'' என்று உருத்து, எழுவாளை
நூக்கி, நொய்தினின், ''வெய்து இழையேல்'' என நுவலா,
மூக்கும், காதும், வெம் முரண் முலைக் கண்களும் முறையால்
போக்கிப் போக்கிய சினத்தொடும், புரிகுழல் விட்டான். (2926)

(ஊக்கி - முயன்று; தாங்கி - ஏந்திக் கொண்டு; படர்தல் - செல்லுதல்; உருத்தல் - கோபித்தல்; நொய்தின் - எளிதில்; நூக்குதல் - கீழே தள்ளி விடுதல் / எற்றுதல்; வெய்து - கொடுமை; இழைத்தல் - செய்தல்; நுவலா - நுவன்று / கூறி; முரண் - வலிய; கண் - காம்பு; முறையால் - ஒன்றன்பின் ஒன்றாக; போக்குதல் - தணிதல் / அறுத்தல்; புரி - பின்னிய / முறுக்கிப் பிடித்த; குழல் - கூந்தல்)

இப்பொழுது சூர்ப்பணகை, ''இவனையும் முயற்சி செய்து ஏந்திக் கொண்டு ஆகாயத்திற்குச் சென்றுவிடுவேன்'' என்று மிகச் சினந்து எழுந்தாள். அதற்கு இடம் கொடுக்காமல் இலக்குவன் அவளை மிக எளிதாகக் கீழே உந்தித் தள்ளி, ''கொடுமை செய்யாதே'' என்று புத்திமதி கூறி, அவளுடைய மூக்கையும், காதுகளையும், கொடிய வலிய முலைக் காம்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அறுத்தெறிந்து, பின் தன் சினமும்

தணியப் பெற்று, தான் முறுக்கிப் பிடித்திருந்த அவளுடைய கூந்தலையும் விடுவித்தான்.

''ஊக்கித் தாங்கி விண்படர்வென்'' என்றது சூர்ப்பணகையின் உடல் வலிமையையும், இலக்குவனது பேராற்றலையும் இரண்டையும் சிறப்பித்தது என்பதாம். ''நொய்தினின் நூக்கி'' என்றதனால் இலக்குவனின்வலிமை மீண்டும் மிகுத்துரைக்கப்பட்டது. மூக்கும் காதும் அறுத்தது அவளுக்கு அவலட்சணம் உண்டாக்க வேண்டும் என்பதாலும், முலைக்கண்களை அறுத்தது அவள் பெண்மை நலம் குறைவாக்க என்பதாலும் என்க.

''முலையிரண்டும் இல்லாதாள் பெண்மை காமுற்றற்று'' என்பது குறள் 402. இலக்குவன் சூர்ப்பணகையின் மேல் வாயையும் மேல் உதட்டையும் கூட அறுத்து விட்டான் என்று பின்னர் கூறப்போகிறான் கவிஞன். இவ்வாறே பாகவத புராணமும் கூறும். ஆனால் வான்மீகம், அத்யாத்ம ராமாயணம், கூர்ம புராணம் ஆகியவை இலக்குவன் சூர்ப்பணகையுடைய மூக்கையும் காதுகளையும் மட்டுமே கொய்தான் என்று கூறுகின்றன. மூக்கு, காதுகள், உதடுகள் முதலியவற்றை மட்டுமே அரிந்தான் என மகாபாரதம் கூறுகிறது. வான்மீகம் இந்த இடத்தில் வேறுபடுகிறது. இராமன் இலக்குவன் சூர்ப்பணகை மூவரும் ஒருவரிடம் ஒருவர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டதாகவும், இருவர் மேலும் சினங் கொண்டு சூர்ப்பணகை சீதையைப் பற்ற முயன்றதாகவும், அப்பொழுது இராமன் கட்டளையிட இலக்குவன் அவளது மூக்கையும் காதுகளையும் அறுத்தெறிந்தான் என்கிறது வான்மீகம்.

94. சூர்ப்பணகையின் நிலை

அக்கணத்து அவள் வாய் திறந்து அரற்றிய அமலை
திக்கனைத்தினும் சென்றது; தேவர்தம் செவியும்
புக்கது; உற்றது புகல்வது என்? மூக்கு எனும் புழையூடு,
உக்க சோரியின் ஈரம் உற்று, உருகியது உலகம். (2927)

(அரற்றிய - கதறிய; அமலை - ஓசை; உற்றது - நேர்ந்தது; புழை - துளை; உக்க - சிந்திய / பெருகிய; சோரி - இரத்தம்; உருகியது - கரைந்து போனது)

அந்த நேரத்தில், சூர்ப்பணகை தன் வாயைத் திறந்து பெருமுழக்க மிட்டுக்கதறிய ஓசை, எட்டுத் திக்குகளிலும் சென்று பரவியது; அவை தவிர விண்ணுலகத்திலுள்ள தேவர்களின் செவிகளிலும் சென்று நுழைந்தது; இதற்குமேல் அவளுடைய துயரத்தால் எழுந்த இந்தப் பேரோசையைப் பற்றிச் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? அவள் மூக்கு அறுபட்டதால் அந்த இடத்தில் மூக்கு என்று இருந்த இரண்டு துளைகளிலும் இருந்து வழிந்து பெருகிய இரத்தத்தின் ஈரம் படிந்து, இந்நிலவுலகமே அதில் கரைந்து போயிற்று.

எட்டுத் திக்குகளையும் சொல்லி, ஒன்பதாவது திக்கான விண்ணுலகத்தையும் கூறியதனால் எஞ்சி உள்ள பத்தாவது திக்கான நிலவுலகத்தில் அந்த மூக்கின் இரத்தம் பெருகியதைக் கூறி முடித்தார் என்க. மூக்கு அறுபட்டதால் இப்போது அந்த இடத்தில் இரண்டு துவாரங்கள் தான் இருந்தன என்று கூறுவது ஒரு நயம்.

95. கொலை துமித்து உயர் கொடுங்கதிர் வாளின் அக்கொடியாள்
முலை துமித்து, உயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைதுமித்து என, இராவணன் மணிஉடை மகுடத்
தலைதுமித்தற்கு நாள் கொண்டது ஒத்தது ஓர் தன்மை. (2928)

(துமித்தல் - துணித்தல் / ஒழித்தல் / வெட்டுதல் / அறுத்தல்; கதிர் - ஒளிவாய்ந்த; முறைமை - தன்மை / செயல்; நாள்கோள் - ஆரம்பச்சடங்கு)

கொலையையே தொழிலாகக் கொண்ட உயர்ந்த கொடிய ஒளி வாய்ந்த வாளினால், அந்தக் கொடியவளான சூர்ப்பணகையின் முலைக் காம்புகளையும், உயர்ந்து விளங்கிய மூக்கினையும் அறுத்தெறிந்த தன்மை, மலைச் சிகரங்களை வெட்டிச் சாய்த்தது போல, இராவணனுடைய நல்ல இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற கிரீடங்களை உடைய தலைகளைப் பின்னர் அறுத்தெறிவதற்கு இப்பொழுதே ஆரம்பச் சடங்குகள் செய்ய முற்பட்டதை ஒத்திருக்கிறது.

கொலை துமித்து என்பதற்குக் கொலையைத் தவிர்த்துத் தனது வாளால் அக்கொடியவளின் மூக்கையும் முலையையும் மட்டும் துமித்து என்று பொருள் கூறுதலும் பொருந்தும். இதே போன்று முன்பு இராமன் தாடகையைக் கொன்ற போதும், அந்நிகழ்ச்சி ''முந்தி உற்பாதம்'' எனக் கூறப்பட்டதை நினைவு கூர்க. அதே பொருளில் தான் இங்கு ''நாட் கொண்டது'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதை நோக்குக. நாட் கொள்ளுதல் என்பது குறித்த நல்ல நாளில் ஒரு செயலைச் செய்ய இயலாத நிலை ஏற்பட்ட பொழுது அச்செயலினைத் தொடங்கி மட்டும் விடுவது. போர் தொடுக்க நாள் குறித்த அந்நாளில் செல்ல முடியவில்லை. அந்த நாளில் தங்கள் குடை, வாள், முரசு முதலியவற்றை அந்த நல்ல நாளில் அது இருக்கும் இடத்தை விட்டுப் பெயர்த்து வேறோர் இடத்தில் வைப்பர். இதனை வாள் நாட்கோள், முரசு நாட்கோள், குடை நாட்கோள் என்பர். பின்னர் நேரம் வாய்க்கும் போது அச்செயலை நிறைவேற்றுவது. ஆரம்பச் சடங்குகளைக் குறிக்கும் ஒரு சொற்றொடர். பின்வரும் திருமணத்திற்கு நிச்சயதார்த்தம் என்பது நாள் குறிப்பதுபோல. அதைப் போலப் பின் வரும் இராம இராவண யுத்தத்திற்கு இன்று நாள் குறிக்கப்பட்டது என்க. இந்த நாளிலிருந்து சரியாகப் பதினெட்டு மாதங்களில் இராவண யுத்தம் தொடர்ந்து 18 மாதங்கள் நிகழ்ந்தன என்றும் கூறுவர்.

96. அதிர, மாநிலத்து அடி பதைத்து அரற்றிய அரக்கி,
கதிர்கொள் காலவேல் கரன்முதல் நிருதர், வெம் கதப்போர்

எதிர் இலாதவர் இறுதியின் நிமித்தமா எழுந்து, ஆண்டு,
உதிரமாரி பெய் கார்நிற மேகம் ஒத்து உயர்ந்தாள். (2929)

(கதிர் - ஒளி; எதிர்இலாதவர் - நிகர்அற்றவர்கள்; நிருதர் - அரக்கர்; இறுதி - அழிவு; உதிரம் - இரத்தம்; கதம் - கோபம்; அரற்றுதல் - வாய்விட்டுக் கதறுதல்; நிமித்தம் - பொருட்டு / தீய சகுனம்; பதைத்தல் - உதறுதல்)

அதிர்ச்சி உண்டாகுமாறு, பெரிய நிலத்தில் தன் கால்கள் துடிதுடிக்க, வாய் விட்டுக் கதறிய அந்த அரக்கியான சூர்ப்பணகை, ஒளி பொருந்தியதும், இயமனைப் போன்று தப்பாததுமான வேற்படையையுடையவனுமாகிய கரன் முதலான, கொடிய சினத்தோடு செய்கின்ற போரில் தமக்கு நிகரற்றவர்களுமாகிய அரக்கர்களின் அழிவின் பொருட்டு, தீய சகுனம் போல், அங்கு இரத்த மழை பெய்கின்ற அரிய மேகத்தைப் போல எழுந்து உயர்ந்து நின்றாள்.

கரிய மேகம் சிவந்த இரத்த மழை பொழிவது ஒரு தீயசகுனம் என்பதாம். அவள் தன் உறுப்புக்கள் அறுபட்டதனால் தரையில் விழுந்து துடிதுடித்து அரற்றியதால், இந்நிலமே அதிர்ந்தது என்பதாம். சூர்ப்பணகையின் கரிய உடம்பு கரிய மேகத்திற்கும், அவள் உடம்பிலிருந்து பெருகிய இரத்தம் உதிர மழைக்கும் உவமை. வான்மீகத்தில் கையாண்டிருக்கும் உவமையையே கம்பனும் கையாண்டிருக்கிறான் என்பது நோக்கத்தக்கது. இதை உண்மையாக்குதல் போல கரன் வதைப் படலத்தில், ''குருதி மாமழை சொரிந்தன மேகங்கள்'' எனக் கம்பன் கூற்றாகக் கூறப்போவதும் உணரத்தக்கது.

97. உயரும் விண்ணிடை; மண்ணிடை வீழும்; கிடந்து உழைக்கும்;
அயரும்; கைகுலைத்து அலமரும்; ஆருயிர் சோரும்;
பெயரும்; ''பெண் பிறந்தேன் பட்ட பிழை'' எனப் பிதற்றும்;
துயரும் அஞ்சி முன்தொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள். (2930)

(தொல் - பழமையான; உழைத்தல் - வருந்துதல்; அயர்தல் - தளர்ச்சியடைதல்; குலைத்து - அசைத்து; அலமருதல் - மனம் அழலுதல்; பிழை - பீழை / துன்பம்; பிதற்றுதல் - புலம்புதல்)

துன்பம் என்ற ஒன்றே மிகவும் அஞ்சி தம் பால் வாராது விலகி நிற்கின்ற பழமையான அரக்கர் குடியில் பிறந்தவளான சூர்ப்பணகை, வலியினால் துன்புற்று வானளாவ உயர்ந்து குதிப்பாள்; உடனே தரையில் விழுவாள்; தரையில் கிடந்து வருந்துவாள்; ஊளையிடுவது போலச் சத்தம் செய்வாள்; தளர்ச்சியடைவாள்; கைகளைப் பிசைந்து கொண்டு சுழலுவாள்; அருமையான உயிர் சோர்ந்து மூர்ச்சையுறுவாள். பின்னர் தெளிந்து எழுவாள். ''பெண்ணாகப் பிறந்ததனால் நான் படுகின்ற துன்பம் எத்தகையது பாருங்கள்'' என்று பலவாறாகப் புலம்புவாள்.

உடலின் உறுப்புக்கள் வெட்டப் பட்ட நிலையில் ஒரு உடலும் உயிரும் படும் மரண அவஸ்தையை சூர்ப்பணகை மூலமாய்க் கம்பன்

காட்டியிருக்கும் அழகு நோக்கி இன்புறத் தக்கது. இதற்கு முன் அரக்கர் குலத்தவர்க்கு இடையில் துன்பம் என்பதே வருவதற்கு அஞ்சுமாம். தொடராமல் விலகியே நிற்குமாம். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த துன்பமே அனுபவிக்காத இன்பத்திலேயே உழன்ற பெருங்குடி அரக்கர் குலம் என்றதனால் இனிமேல் துன்பம் தொடர்ந்து வரப்போகிறது என்பதைக் குறிப்பால் உணர்த்திச் சொல்லுகிறான் கவிஞன் என்க. ''களிக்கின்றார் அலால் கவல்கின்றார் ஒருவரைக் காண்கிலேன்'' என்ற அனுமன் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தகும். பொதுவாகவே பெண்கள் தன்னுடைய பிறப்பைக் குறித்து ''பெண் பிறவியே இழிவானதாகும்'' என்று கூறுவார்கள். இங்கே ஒரு அரக்கியும் கூட அவ்வாறே எண்ணு கிறாள் என்று கவிஞன் கூறுவது ஒரு நயம்.

98. ஒற்றும் மூக்கினை; உலைஉறு தீஎன உயிர்க்கும்;
எற்றும் கையினை நிலத்தினில்; இணைத்தடங் கொங்கை
பற்றும்; பார்க்கும்; மெய் வெயர்க்கும்; தன் பரு வலிக்காலால்
சுற்றும் ஓடும்; போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும். (2931)

(ஒற்றுதல் - ஒத்திருத்தல்; உயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல்; எற்றுதல் - மோதுதல் / தாக்குதல் / அறைதல்; இணை - இரண்டு; சொரிதல் - பெருகுதல்)

அறுந்து இரத்தம் ஒழுகும் மூக்கினைத் தன் ஆடையால் இரத்தம் பெருகாதபடி நிறுத்துவதற்காக ஒற்றிக் கொள்வாள்; உலைக்களத்தில் துருத்தியிலிருந்து எழும் நெருப்புப் புகைபோலப் பெருமூச்சு விடுவாள்; கைகளால் தரையில் மோதிக் கொள்வாள்; இரண்டு பெரிய கொங்கைகளைத் தன் கைகளால் பற்றுவாள். அங்கே அவை அறுபட்டிருப்பது கண்டு உடம்பெல்லாம் வியர்த்துப் போவாள்; ஆனால் அறுபடாமல் வலிமை மிக்கதாய் விளங்கும் தனது பருத்த கால்களினால் சுற்றிச்சுற்றி ஓடி வருவாள்; ஓடுவதால் இரத்தம் வெள்ளமாய் பெருக்கெடுக்க, வலி தளர்ந்து சோர்ந்து போவாள்.

''இணைத்தடங் கொங்கை பற்றும்; பார்க்கும்; மெய் வெயர்க்கும்'' என்பது ஒன்றையொன்று தொடர்ந்த நிகழ்ச்சிகள். உறுப்புக்கள் அறுபட்டதனால் உண்டாகிய துயரத்தைக் காட்டிலும், அவ்வாறு அறுபட்டுவிட ஆளானோமே என்கின்ற வெட்கத்தால் உண்டானதுயரமே பெரிதாகப் பட்டது என்பதை உணர வைக்கிறான் கவிஞன். மற்ற உறுப்புக்கள் குறைபட்டன என்று கூறும் பொழுதே கால் மட்டும் பருத்தது, வலியது என்று கூறுவது அவள் இன்னும் ஓடும் திறமை உடையவள் என்று குறிப்பால் உணர்த்துவதாகும். பின்னால் கும்பகர்ணன் தலையும் கைகளும் அறுபட்ட நிலையிலும் காலால் போர் செய்தான் என்று கூறுவார் கவிஞர்.

99. ஊற்றுமிக்க நீர் அருவியின் ஒழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துள் திரிபவள், தேவரும் இரியக்

கூற்றும் உட்கும் தன் குலத்தினோர் பெயரெலாம் கூறி
ஆற்றுகிற்கிலள், பற்பல பன்னி நின்று, அழைத்தாள். (2932)

(இரிதல் - அஞ்சி ஓடுதல்; உட்கும் - வெட்கமடையும் / அஞ்சும்; பன்னி - விரித்துக் கூறி / பிரலாபித்து; வெள்ளம் - பிரவாகம்; ஆற்றுதல் - பொறுத்தல்; தானே ஊறுவதால் அது ஊற்று)

தானாகவே ஊறிவருகின்ற மலையருவியிலிருந்து மிகுதியான நீர் வருவதைப் போல, தன் உடம்பிலிருந்து பெருகி வழிகிற இரத்த வெள்ளமாகிய சேற்றில் அலைந்து திரிபவளான சூர்ப்பணகை, விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் அஞ்சி ஓடும்படி, இயமனும் வெட்கி அஞ்சுகின்ற ஆற்றலுடைய தன் குலத்தில் உதித்த தன் உறவினர்களின் பெயர்களையெல்லாம் சொல்லிக் கொண்டும், தன் உடம்பில் ஏற்பட்ட துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாகவும், பலவாறு பலமுறை அவர்களைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய உடம்பிலிருந்து ஒழுகிய இரத்தப் பெருக்கிற்கு, ஊற்றுமிக்க நீர் அருவி உவமை. அவள் அந்த இரத்த வெள்ளத்துள் அலைந்து திரிவதால் அது சேறாயிற்று. இவள் கூவி அழைக்கும் குரல் கேட்டு விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் அஞ்சி ஓடுகிறார்கள். இவளுடைய குலத்தினரும் உறவினரும், இயமன் கூட வெட்கப்படும் படியான ஆற்றல் மிக்கவர்கள் என்பதாம். உடம்பின் உறுப்புக்கள் வெட்டப்பட்டபின் அதனிலிருந்து பீறிட்டு எழும் இரத்தப் பெருக்கிற்கு ஊற்றிலிருந்து பீறிட்டெழும் நீர்ப் பெருக்கை உவமை கூறியது கருதத் தக்கது.

100. சூர்ப்பணகை இராவணனைக் கூவி அழைத்தல்

"நிலைஎடுத்து, நெடு நிலத்து நீ இருக்க, தாபதர்கள்
சிலை எடுத்துத் திரியும் இது, சிறிதன்றோ? தேவர்எதிர்
தலையெடுத்து விழியாமைச் சமைப்பதே? தழல் எடுத்தான்
மலை எடுத்த தனி மலையே! இவை காண வாராயோ?" (2933)

(தழல் - அனல்; தனி - ஒப்பற்ற; நிலை - தலைமை நிலை; எடுத்து - நிமிர்ந்து / மேற்கொண்டு; தாபதர்கள் - தவவேடம் பூண்டவர்கள்; சிறிது - சிறுமை; விழியாமை - பார்க்காதபடி; சமைப்பது - பங்கப்படுத்துவது / திரிதல் - சஞ்சரித்தல்)

"தன் கைகளில் நெருப்பை ஏந்திக் கொண்டிருப்பவனான சிவபெரு மான் வாழும் கயிலை மலையை வேரோடு பெயர்த்தெடுத்த ஒப்பற்ற மலை போன்றவனே! இப்பெரிய உலகத்தில் நிலைத்த புகழுடன் நீ வாழ்ந்து கொண்டிருக்க, தவ வேடம் பூண்டவர்கள் நமது எல்லையில் வில்லைக் கையிலேந்திக் கொண்டு திரிகின்ற செயல் உனக்கு இகழ்ச்சியைத் தருவதன்றோ? நமக்குப் பகைவர்களான தேவர்களின்

எதிரில் தலை நிமிர்ந்து பார்க்க முடியாதபடி என்னைப் பங்கப் படுத்திவிட்டார்களே அவர்கள்? என் உறுப்புக்கள் அறுபட்ட இந்த நிலையைக் காண நீ வரமாட்டாயோ'' என்று தன் அண்ணன் இராவணனை எண்ணிக் கூவி அழைக்கிறாள் சூர்ப்பணகை.

கழல் எடுத்தான் - சிவபெருமான்; தாருக வனத்து முனிவர்கள், சிவபெருமானுடன் மாறுபட்டபோது, அவரை அழிக்க எண்ணி மந்திர சக்தியால் நெருப்பை ஏவி விட்டார்கள். அதை அவர் தன் இடது கையிலேயே தாங்கிக் கொண்டார் என்பது புராண வரலாறு. அது இங்கே சூர்ப்பணகையால் கூறப்பட்டது. அவர்கள் வேடத்தால்தான் தாபதர்கள். ஆனால் அதற்கு மாறுபட்ட வில்லினைக் கையில் ஏந்தித் திரிகிறார்கள். என் உறுப்புக்களையும் அறுத்து மானபங்கப் படுத்தி விட்டார்கள். இது உனக்குப் பெரும் தாழ்ச்சி இல்லையா? என்று கேட்டு, தனது உறுப்புக்கள் அறுப்பு உற்று அல்லற்படும் நிலையைக் காண வரமாட்டாயோ என்று கூவுகிறாள்.

101. ''புலிதானே புறத்து ஆகக்குட்டி கோட்படாது'' என்ன,
''ஒலிஆழி உலகு உரைக்கும் உரைபொய்யோ? ஊழியினும்
சலியாத மூவர்க்கும், வானவர்க்கும், தானவர்க்கும்,
வலியானே! யான்பட்ட வலி காண வாராயோ?'' (2934)

(கோட்படல் - கொள்ளப்படுதல்; ஆழி - கடல்; சலியாத - நிலை குலையாத; தானவர் - அசுரர்கள்; வலி - துன்பம்; ஊழி - கற்ப முடிவு காலம்; உரை - பழமொழி / மூதுரை)

''ஊழி முடிவுக் காலத்திலும் தளர்வுறாத அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளுக்கும், அவர்களை வணங்குகின்ற தேவர்களுக்கும், அவர்களுக்கு மாறுபட்டவர்களான அசுரர்களுக்கும் மேம்பட்ட வலிமையையுடைய அண்ணா இராவணனே! புலி அண்மையில் இல்லாது சேய்மையில் இருக்கும் போதும் கூட, அதன் குட்டியை யாரும் அகப்படுத்த முடியாது என்று, ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகத்தார் சொல்லுகின்ற பழமொழியும் பொய்யாய்ப் போனதோ? நான் படுகின்ற துன்பத்தைக் காண்பதற்கு நீ வரமாட்டாயோ?''

தாய்ப்புலி அண்மையில் இருந்தால் குட்டிப் புலியை யாரும் தீண்ட முடியாது என்பது இயற்கை. சிறப்பல்ல, ஆனால் தாய்ப்புலி அண்மையில் இல்லாது சேய்மையில் இருந்தாலும் கூடக் குட்டிப்புலியை யாரும் கொள்ளுதல் என்பது இயலாது என்பது தான் சிறப்பு. இது ஒரு மூதுரை. ''உறங்கு மாயினும், மன்னவன் தன் ஒளி, கறங்கு தெண்திரை வையகம் காக்குமால்'' என்பதும், ''குட்டியைத் தின்னலாமோ கோட்புலி புறத்த தாக'' என்பதும் சீவகசிந்தாமணி; ''புலி புறம்காக்கும் குருளை போல'' என்பது புறநானூறு; தானவர் என்பவர், தனு என்பாளிடம் காசிபர்க்குப் பிறந்த அசுரர்கள்.

102. ஆர்த்து, ஆனைக்கு அரசு உந்தி, அமரர்
கணத் தொடும் அடர்ந்த
போர்த் தானை இந்திரனைப் பொருது,
அவனைப் போர் தொலைத்து,
வேர்த்தானை, உயிர்கொண்டு
மீண்டானை, வெரிந் பண்டு
பார்த்தானே! யான் பட்ட
பழி வந்து பாராயோ? (2935)

(ஆர்த்து - ஆரவாரித்துக் கொண்டு; ஆனைக்கு அரசு - ஐராவதம்; உந்துதல் - ஏறி நடத்துதல் / செலுத்துதல்; தானை - சேனை; பொருதல் - போர் செய்தல்; தொலைத்து - தோல்வியுறச் செய்து / அழியச் செய்து; வெரிந் - முதுகு; பண்டு - முன்பு)

''முன்பு ஆரவாரித்துப் பெருமுழக்கமிட்டுக் கொண்டு, யானைகளுக் கெல்லாம் அரசனாகிய ஐராவதத்தைச் செலுத்திக் கொண்டு, தேவர் கூட்டத்தோடும் நெருங்கி வந்தவனும், போர் செய்வதில் வல்ல சேனைகளையும் உடையவனுமான தேவேந்திரனை, உன் திக்விஜயத்தின் போது எதிர்த்துப் போர் செய்து, அவனைத் தோல்வியுறச் செய்து, அதனால் அவன் உடலெல்லாம் வியர்க்க, உயிர் பிழைத்தால் போதும் என்று புறமுதுகிட்டு ஓடி ஒளிந்தவனின் முதுகினைக் கண்ட இராவணனே! இப்பொழுது நான் படுகின்ற இந்தப் பழிநிறைந்த துன்பத்தை வந்து காண மாட்டாயோ?''

ஆனைக்கு அரசு - தேவேந்திரன் வாகனம். வெள்ளைநிறமும் திருப்பாற் கடலிலிருந்து பெறறப்பட்டதும், நான்கு கொம்புகளையும் உடைய ஐராவதம் என்னும் யானை. இங்கு கூறப்படும் நிகழ்ச்சி முன்பு இராவணன் திக்விஜயத்தின் போது நிகழ்ந்திருக்கலாம் என்பர். ஆயினும் இராவணன் மகன் மேகநாதன் தான் இந்திரனை வெற்றி கண்டு, பிரமனால் ''இந்திரஜித்'' என்று அழைக்கப்பட்டான் என்பது நாம் காணப்போகும் ஒரு புராணக்குறிப்பு. உன் எதிரியான இந்திரன் பட்ட பழியைப் பார்த்த நீ, உன் தங்கையாகிய நான் பட்ட பழியைப் பார்க்க வரமாட்டாயோ? என்றாள் என்பதாம். ஐராவதம் என்னும் அரசயானை இருந்தது; அமரர் கூட்டம் இருந்தது; போரில் வல்ல சேனை இருந்தன. இத்தனை இருந்தும் நீ புறமுதுகிட்டு ஓடச் செய்தாய் என்று இராவணனின் போராற்றல் சிறப்பிக்கப் பட்டதைக் காண்க.

103. ''காற்றினையும், புனலினையும்,
கனலினையும், கடுங்காலக்
கூற்றினையும், விண்ணினையும்,
கோளினையும், பனிகோடற்கு

ஆற்றினை நீ; ஈண்டு, இருவர்
மானுடவர்க்கு ஆற்றாது
மாற்றினையோ உன்வலத்தை? சிவன்
தடக்கை வாள்கொண்டாய்!'' (2936)

(புனல் - நீர்; கோடல் - ஏவுதல்; மாற்றுதல் - போக்கடித்துக் கொள்ளுதல்)

''சிவபெருமான் தன் பெருமை பொருந்திய பெரிய கைகளால் தந்த சந்திரகாசம் என்னும் வாளைப் பெற்றவனே! இராவணா! நீ காற்றுக்கு அதிபதியான வாயுதேவன், நீருக்கு அதிபதியான வருணன்; நெருப்புக்கு அதிபதியான அக்னி, கொடுமையான காலத்திற்கு அதிபதியான இயமன், விண்ணிலுள்ள தேவர்கள், அவர்களுக்கு அதிபதியான இந்திரன்; சூரியன் முதலான நவக்கிரகங்கள் இவர்களையெல்லாம் உன்னிடம் குற்றேவல் செய்யும் ஏவலாளர்களாக ஆக்கிக் கொள்ளும் வல்லமை பெற்றவன்; ஆனால் இங்கே உள்ள இரண்டு பேர், மானிடர்கள். அவர்களின் வல்லமைக்கு ஈடுகொடுக்க முடியாது உனது வலிமையைப் போக்கடித்துக் கொண்டு விட்டாயோ?'' என்று சூர்ப்பணகை இராவணனைக் கூவியழைக்கிறாள்.

கூற்று என்பது உடலையும் உயிரையும் தனித்தனியாகப் பிரிப்பதால் கூற்றுவன் என்பது இயமனுக்குக் காரணப்பெயர். காலக்காற்று என்பதும் இயமன் ஒரு உயிரின் ஆயுட் காலத்தை நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் உயிரைப் பறிக்கும் இயல்புடையவன். எனவே காலக் காற்று எனப்பட்டான் என்க. இராவணன் கைலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற போது, உமாதேவியின் அச்சம் தீர்க்கக் கருதி சிவபெருமான் அதைத் தகர்க்கவிடாது, தன் காற்பெருவிரலால் அழுத்தினான். அப்பொழுது இராவணனின் கைப்பெருவிரல் மலையிடையில் அகப்பட்டுக் கொள்ள, துன்புற்று அழுதான். அப்பொழுது அவன் தன் கையையே யாழாக்கிச் சாமகீதம் பாடினான். அதில் மனம் உருகிய சிவபெருமான் சினம் நீங்கி, மகிழ்ந்து, அவனுக்கு ''இராவணன்'' என்ற பெயரையும், ''சந்திரகாசம்'' என்ற வாளையும், முப்பத்து முக்கோடி நீண்ட வாழ்நாளையும் அவனுக்குத் தந்தான் என்பது புராண வரலாறு. இராவணன் வாயு, வருணன், அக்னி, இயமன், தேவர்கள், நவக்கிரகங்கள் முதலியவர்களை வென்றது உத்தரகாண்டத்தில் திக்விஜயப்படலத்தில் விரிவாக விளக்கப்பட்டிருப்பது காண்க.

104. ''உருப்பொடியா மன்மதனை ஒத்துளரே ஆயினும், உன்
செருப்படியில் பொடி ஒவ்வா மானிடரைச் சீறுதியோ?
நெருப்படியில் பொடிசிதற நிறைந்த மதத் திசையானை
மருப்புஒடிய, பொருப்பு இடியத்தோள் நிமிர்த்த வலியோனே!'' (2937)

(பொடி - துகள் / மண் துகள்; மருப்பு - கொம்பு; பொருப்பு - மலை; உரு - தோற்றம்; படிவம் - வடிவு; சீறுதல் - வெகுளுதல்)

தம் காலின் கீழ்ப்படுகிற மண் துகள்களெல்லாம் நெருப்பாகச் சிதறிப் போகின்ற மதம் கொண்ட எட்டுத்திக்கு யானைகளின் கொம்புகள் ஒடிந்து போகவும், கைலாய மலையும் இடிந்து விழும்படியும் செய்ததால் உனது இருபது தோள்களையும் நிமிர்த்தி நிற்கின்ற வலிமை படைத்த அண்ணா இராவணனே! இந்த இரண்டு மானிடர்களும் உருவத்திலும் வடிவழகிலும், சிவபெருமான் சுட்டெரிக்காத பழைய அழகிய உருவத்தைக் கொண்டிருக்கும் மன்மதன் போன்று இருக்கின்றார்கள் என்றாலும், வீரத்தில் உன்னுடைய செருப்பின் கீழ் இருக்கும் தூசுக்கும் ஒப்பாக மாட்டார்கள். அத்தகைய மனிதப் பிறவிகளின் மேல் நீ சீற்றம் கொண்டு போர் செய்ய முயற்சிப்பாயோ?

''மன்மதன் மீதுகோபம் கொண்டு சிவபெருமான் அவன் அழகையும் உருவத்தையும் தன் நெற்றிக் கண்ணால் எரித்ததால் அவன் சாம்பலாகி, அங்கமற்றவனானான் என்பது புராணவரலாறு. அதற்கு முன்னால் மன்மதன் எவ்வளவு அழகாய் இருந்தானோ, அதைப் போன்ற அழகும் வடிவும் பொருந்தியவர்கள் இந்த இருமானிடர்களும் என்று இந்தத் துன்பச் சூழ்நிலையிலும் அவர்களது அழகு அவளை ஆட்படுத்தியதை நினைத்துக் கூறத்தவறவில்லை. சூர்ப்பணகை என்பது நோக்கத்தக்கது. அவர்கள் மானிடர்கள் எனவே இராவணன் மானிடன் போர் செய்யச் சித்தமாய் இருப்பானோ என்ற ஐயம் அவளிடத்து எழுந்ததனால் சீறுதியோ? என்று கேட்டு விட்டு விடுகிறாள் என்பதை உணர வேண்டும். சீறமாட்டாய் என்பது அவள் கருத்து. செருப்படி என்ற சொல்லை இவ்வளவு கீழ்தரமாகக் கம்பன் பயன்படுத்தியிருப்பானா என்ற ஐயம் எல்லோருக்கும் எழுவது இயல்பே. இதன்மேல் பலப்பல விவாதங்கள் நடைபெற்று இறுதியில் நாதமுனிகள் இதனைக் கவிக்கூற்றாகக் கொள்ளாமல், சூர்ப்பணகை இராம இலக்குவர் மேல் கொண்ட காழ்ப்புணர்ச்சியின் உந்துதலால் இவ்வாறு கூறினர் எனக் கொள்க என்று கூறியிருப்பதை விநோதரச மஞ்சரியில் காணலாம். இன்னும் ஒன்று. செருப்படி என்பது போர்க் களம், சமர பூமி என்ற பொருளையும் தரும் சொல். யுத்த பூமியில் ஒரு சிறு துகளுக்கும் ஒப்பாகாதவா என்றும் பொருள் கொள்ளலாம். அவர்கள் உன்னைவிட அழகானவர்கள், ஆனால் ஆற்றலில் உனக்கு நிகராகாதவர்கள் என்றாள்'' என்பது கருத்து.

105. ''தேனுடைய நறுந்தெரியல் தேவரையும் தெறும் ஆற்றல்
தானுடைய இராவணற்கும், தம்பியர்க்கும் தவிர்ந்ததோ?
ஊனுடைய உடம்பினராய், எம்குலத்தோர்க்கு உணவு ஆய
மானுடவர்மருங்கேபுக்குஒடுங்கினதோவலி? அம்மா!'' (2938)

(தெரியல் - மாலை / மலர்மாலை / கற்பக மலர்மாலை; தெறும் - அழிக்கும்; தவிர்தல் - நீங்குதல்; ஊன் - தசை; ஒடுங்குதல் - தங்குதல் / அடங்குதல்; அம்மா - வியப்பு)

''தேன் போன்ற இனிமையும், நறுமணமும் மிக்க கற்பக மலர் மாலையணிந்த தேவர்களையும் பொருது அழிக்கும் ஆற்றல் கொண்ட என் அண்ணனான இராவணனுக்கும் அவன் தம்பியர்களான கும்பகர்ணன், கரன் முதலியோர்க்கும் அவ்வாற்றல் இப்போது நீங்கி விட்டதோ? தசையும் இரத்தமும் கூடிய உடம்பை மட்டுமே உடையவர்களும், எங்களது அரக்கர் குலத்தினருக்கு உணவாவதற்காகவே படைக்கப் பட்டவர்களுமான இந்த மானிடர்களிடத்தில் சென்று அந்த வலிமை அடங்கிக் கொண்டதோ? இது என்ன வியப்பு!'' என்று புலம்புகிறாள் சூர்ப்பணகை.

இப்போது மானிடர்க்கு வலிமை மிகுந்திருப்பதாகவும், தன் அண்ணன் இராவணன் முதலியோர்க்கு வலிமை குறைந்து விட்டதாகவும் அவள் கருதியதால் அவளுக்கு மிக்க வியப்பு. எனவே ''அம்மா!'' என்ற இடைச்சொல் இறுதியில் சேர்க்கப்பட்டது காண்க.

106. ''மரன்ஏயும் நெடும்கானில் மறைந்து உறையும் தாபதர்கள்
உரனேயோ? அடல்அரக்கர் ஓய்வேயோ? உற்று எதிர்ந்தார்
அரனேயோ? அயனேயோ? அரியேயோ? எனும் ஆற்றல்
கரனேயோ? யான்பட்ட கையறவு காணாயோ?'' (2939)

(அரன் - உருத்திரன் / சிவபெருமான்; அயன் - பிரமன் / நான்முகன்; அரி - திருமால் / விஷ்ணு; மரன் - மரம்; தாபதர் - தவவேடம் பூண்டிருப்பவர்; உரன் - உரம் / வலிமை; அடல் - வெற்றி / வலிமை; கையறவு - துன்பம்; ஏயும் - அடர்ந்த)

மரங்கள் அடர்ந்திருக்கின்ற பெரிய கானகத்தில், அரக்கர்களாகிய நமக்கு அஞ்சி மறைந்து வாழுகின்ற தவவேடம் பூண்டவர்களாகிய இம்மானிடர்களின் வலிமை மிகுந்து விட்டதா? அல்லது வலிமையும் வெற்றியும் பொருந்திய அரக்கர்களாகிய நமது வலிமை ஓய்ந்து போய் விட்டதா? நான் அறியேன். எதிர்த்து வந்து போர் செய்கின்றவர்கள் முத்தலைச் சூலத்தைக் கையிலேந்திய சிவபெருமானா? நான்மறை களுக்கும் தலைவனாம் பிரமதேவனா? அல்லது சக்கரப்படையை ஏந்திய திருமாலா? என்று துணுக்குறும் கரனே! என்று சூர்ப்பணகை கரனைக் கூவியழைக்கிறாள்.

இங்கே ''கரனே'' என்ற சொல்லுக்குச் சூர்ப்பணகை தன் அண்ணன் கரனைக் கூவியழைப்பதாகப் பொருள் கொண்டுள்ளோம். ஆனால் ''கரனே'' என்ற சொல்லுக்கு கைகளை உடையவனே என்றும் பொருள் கூறி, அதனைஇராவணன்மேல் ஏற்றிப் பொருள்கொள்வதும் உண்டு. கரன் திருமூர்த்திகளுள் ஒருவன் என்று ஆற்றலால் சிறப்பிக்கப்படுபவன். தாபதர்கள் என்றது அவர்களின் வலிமையை இகழ்வதற்காகப் பயன் படுத்தப்பட்ட சொல் என்க. கரன் விச்ரவசுவுக்கும் கும்பீநசிக்கும் பிறந்தவன். விச்சிரவசு இராவணனின் தந்தை. கும்பீநசி கேகசியின்

தங்கை. கேகசி இராவணனின் தாய் விச்சிரவசுவின் மனைவி. தண்ட காரண்யத்தில் சூர்ப்பணகைக்குக் காவலாக இராவணனால் அனுப்பப் பட்டவன். இராவணனுக்குத் தம்பி முறையானவன்.

107. ''இந்திரனும், மலர் அயனும், இமையவரும் பணிகேட்பச்
சுந்தரி பல்லாண்டு இசைப்ப, உலகுஏழும் தொழுது ஏத்தச்
சந்திரன்போல், தனிக்குடைக்கீழ் நீ இருக்கும் சபை நடுவே
வந்து,அடியேன்நாணாதுமுகம்காட்டவல்லேனோ?'' (2940)

(அயன் - பிரமன்; சுந்தரி - அழகிய தேவ மகளிர் / இந்திராணி)

''தேவேந்திரனும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், மற்றைய தேவர்களும் உன்னுடைய குற்றேவல் பணியினைச் செய்து கொண்டிருக்கவும், ஈரேழு பதினான்கு உலகங்களில் உள்ளவரும் உன்னைத் தொழுது போற்றவும், பூரண சந்திரன் போன்ற ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் கீழ் நீ வீற்றிருக்கும் உன்னுடைய அரச சபையின் நடுவில் வந்து, உன் தங்கையாகிய நான் இவ்வாறு முகத்தில் உள்ள உறுப்புக்களாகிய மூக்கும் காதும் அறுபட்ட நிலையில், வெட்கமில்லாது, உன்னிடம் வந்து என் முகத்தைக் காட்டும் வல்லமை படைத்தவளோ? அல்லள்'' என்றாள் சூர்ப்பணகை.

இராவணனின் வேத்தவைச் சிறப்பும், அவன் திருவோலக்க எழிலும் கூறப்பெற்றது. பல்லாண்டு என்பது மன்னன்பல ஆண்டுகாலம்நீடுழிவாழ வேண்டும் என்று பாடும் மங்கல வாழ்த்து.

108. ''உரன் நெரிந்துவிழ, என்னை உதைத்து,
உருட்டி, மூக்கு அரிந்த
நரன் இருந்து தோள்பார்க்க, நான்
கிடந்து புலம்புவதோ?
கரன் இருந்த வனமன்றோ? இவை
படவும் கடவேனோ?
அரன் இருந்த மலை எடுத்த
அண்ணாவோ! அண்ணாவோ!'' (2941)

(அரன் - சிவபெருமான்; உரன் - மார்பு; நரன் - மனிதன்; கடவேனோ - தக்கவள் தானோ)

''சிவபெருமான்வீற்றிருக்கும் கைலாய மலையையே பெயர்த்தெடுத்த என் அண்ணாவே! என் அண்ணாவே! என்னுடைய மார்பு நெரிந்து போகும்படி நான் கீழே விழவும், என்னைத் தன் கால்களால் உதைத்து, நிலத்தில் விழுந்த என்னைப் புரட்டி, என் மூக்கையும் அறுத்தெறிந்தான் அந்த மனிதனாகிய இலக்குவன். இவ்வளவும் செய்த பின்னர் வெற்றிச் செறுக்கால் தன் தோள்களைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டான். அவன் இவ்வாறு இருக்க, நான் மட்டும் இங்கிருந்து கொண்டே புலம்பி

அழுது அரற்றிக் கொண்டிருப்பேனோ? இது என் அண்ணன் கரன் ஆட்சி செய்யும் ஜனஸ்தானம் அல்லவா? அங்கேயே நான் இவ்வளவு துன்பம் படவும் தக்கவள் தானோ?'' என்று புலம்புகிறாள் சூர்ப்பணகை.

தோள் பார்த்தல் என்பது வீரர்கள், வெற்றியடைந்த பின், செருக்கால், தம் தோள்களைத் தாமே பெருமிதத்துடன் பார்த்துப் பூரிப்படைதலைக் குறிக்கும். ''எள்ளுநர்கள்சாயவெனத்தோள்இரண்டும்நோக்கி''என்பதும் ''கோவனும் மக்களும் குளிர்ந்து தோள் நோக்கினர்'' என்பதும் மணிமேகலை. அண்ணாவோ அண்ணாவோ என்று வந்த அடுக்கு, புலம்புதலைக் குறிக்கும். வலிமையற்ற மனிதன் துன்புறுத்தி மகிழ, வலிமை அத்தனையும் உடைய நான் துன்புற்றுப் புலம்புவதோ என்பது கருத்து.

109. ''நசையாலே மூக்கிழந்து, நாணம்இலா நான்பட்ட
வசையாலே, நினது புகழ் மாசுண்டது ஆகாதோ?
திசையானை விசை கலங்கச் செருச்செய்து, மருப்பு ஒசித்த
இசையாலே நிறைந்த புயத்து, இராவணவோ! இராவணவோ!'' (2942)

(விசை - வேகம் / மதம்; செரு - போர்; மருப்பு - கொம்புகள்; ஒசித்த - ஒடித்த; இசை - புகழ்; நசை - ஆசை; வசை - பழி; மாசு - களங்கம்)

''எட்டுத்திக்குகளிலுமுள்ள காவல் யானைகளின் மதச் செருக்குக் குறையும்படி அவற்றைக் கலங்கச் செய்து, போர் தொடுத்து அவற்றின் கொம்புகளை ஒடித்ததனால் பெரும்புகழால் நிறைந்த தோளாற்றலை உடைய இராவணனே! இராவணனே! நான் இராமன் மீது கொண்ட காதலால் என்னுடைய மூக்கு அறுபட்டு, வெட்கமில்லாது, நான் அடைந்த பழி உன்னுடைய புகழுக்கும் களங்கம் உண்டாவது போல் ஆகாதோ? எனவே உடனே வந்து அவனுடன் போர் புரிவாயாக'' என்றாள் சூர்ப்பணகை.

நசை என்பது சூர்ப்பணகை இராமனிடம் கொண்ட பொருந்தாக் காதல் என்றும், அழகிய சீதையை இராவணனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எண்ணிய ஆசை என்றும் கொள்ளலாம். முன்னது நிகழ்ந்தது, பின்னது அவளால் கற்பிக்கப்பட்டது. அத்தகைய புகழுடைய நீ, என் மீது உள்ள பழியைத் துடைக்க வில்லையானால் உனது புகழுக்கும் களங்கம் உண்டானதாகுமே என்று புலம்பினாள் என்க.

110. ''கானம் அதினிடை, இருவர், காதொடு மூக்கு உடன் அரிய,
ஈனமதால் பாவியேன், இவண் மடியக் கடவேனோ?
தானவரைக் கருஅறுத்துச் சதமகனைத் தளையிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ! மருகாவோ!'' (2943)

(தானவர் - அசுரர்; கரு - வேர்; சதமகன் - இந்திரன்; தளை - விலங்கு; மருகன் - சகோதரன் மைந்தன் / மருமகன்; கானம் - காடு; ஈனம் - தாழ்வு / அவமானம் / இழிவு; கருவறுத்தல் - நீர்மூலமாக்குதல்)

''அசுரர்களைக் குலத்தோடு வேரறுத்து நிர்மூலமாக்கி, நூறு அசுவமேத யாகங்களைச் செய்த தேவேந்திரனையும் விலங்கிட்டுச் சிறைப்படுத்தி, தேவர்களையும் உனது குற்றேவல் பணியாளர்களாக அமர்த்திக் கொண்ட மருமகன் இந்திரசித்துவே! மருமகன் இந்திரசித்துவே! இந்தக் காட்டில் வசிக்கின்ற இரண்டு மானிடர்கள், என்னுடைய காதையும், மூக்கையும் அறுத்த இழிவினால், தீவினையுடையேனாகிய நான், இந்தக் காட்டிலேயே மடிந்து போகத் தக்கவளோ?'' என்று சூர்ப்பணகை, தன் அண்ணன் மகன் இந்திரசித்துவை நோக்கிக் கூறிப் புலம்புகிறாள்.

ஈனம் என்பது இழிவு கொண்டு மானத்திற்கு எதிர்ச் சொல்லான அவமானத்தைக் குறிக்கும். இந்திரசித்து என்னும் பெயர் இந்திரனை வென்றவன் என்று பொருள் படும். இராவணனை அழைத்தும் வாராமையால் இப்பொழுது அவன் மகன் இந்திரசித்தை அழைக்கலாம் எனக் கருதி அழைத்தாள் என்பதாம்.

111. ''ஒரு காலத்து, உலகேழும் உருத்து எதிரத் தனு ஒன்றால்,
திருகாத சினம் திருகித் திசையனைத்தும் செல நூறி,
இருகாலில் புரந்தரனை இருஞ்சிறையின் இடுவித்த
மருகாவோ! மானிடவர் வலிகாண வாராயோ?'' (2944)

(உருத்து - கோபித்து; திருகாத - தணியாத; திருகி - முதிர்ந்து; தனு - வில்; நூறி - அழித்து; புரந்தரன் - இந்திரன்; காண - அடக்க)

முன்பு இராவணன் திக்விஜயம் செய்து வரும் காலத்தில் அவனுடன் சென்ற இந்திரசித்துவை மனத்தில் கருதி, ''இவ்வேழு உலகங்களும் சினந்து எதிர்ந்து வர, தன்னுடைய ஒரே வில்லால், தணியாத கோபம் முதிர்ந்து, எதிர்த்தவர்கள் அனைவரும் எல்லாத் திசைகளிலும் செல்லுமாறு அழித்து, தேவேந்திரனது இரண்டு கால்களிலும் விலங்கை இட்டுப் பெரிய சிறையில் அடைத்து வெற்றி கண்ட மருகனே! இந்திரசித்து, இந்த மானிடர்களின் வலிமையைக் காணவும், அவர்களை அடக்கவும் நீ இப்பொழுது வரமாட்டாயோ?'' என்று புலம்பினாள் சூர்ப்பணகை.

திசையனைத்தும் என்பது எட்டுத்திக்குகளையும், விண்ணும், பாதலமும் சேர்ந்து பத்துத் திசைகளைக் குறிக்கும். இருகாலில் என்பது இரண்டு கால்களிலும் என்று பொருள் கொள்ளப்பட்டது. இருகால் என்று கொண்டு இருமுறைகள் என்று பொருள் கொள்வதும் பொருந்தும். காரணம் இந்திரசித்து இந்திரனை நான்கு முறை வென்றதாகப் பின்னர் நாகபாசப் படலத்தில் கூறப்பட்டிருக்கிறது. ''இகல் இந்திரன் ஈரிருகால் எனக்கே தோற்றான்'' என்பது பாடல் பகுதி. ''இடுவித்த'' என்று கவிஞன் கூறுவதனால் இந்திரசித்து இப்பொழுது வென்றது அவனே நேராகப் பொருதாமல், இராவணன் திக்விஜயம் செய்யப் போன பொழுது இவனும் உடன் சென்று இதனைச் செய்வித்தான் என்ற பொருளைத் தருதலையும் உணர்க.

112. ''கல்ஈரும் படைத்தடக்கை அடல், கரதூடணர் முதலா,
அல்ஈரும் சுடர்மணிப் பூண், அரக்கர் குலத்து அவதரித்தீர்!
கொல்ஈரும் படைக் கும்பகருணனைப் போல், குவலயத்துள்
எல்லீரும் உறங்குதிரோ? யான் அழைத்தல் கேளீரோ?'' (2945)

(ஈர்தல் - பிளத்தல் / அராவுதல்; அடல் - வலிமை; அல் - இருள்; சுடர் - ஒளிவாய்ந்த; பூண் - அணிகலன்கள்; குவலயம் - உலகம்; கொல் - கொல்லன்; அழைத்தல் - பெருங்குரலோடு கூவுதல்)

''கல்லையும் பிளக்கத்தக்க படைக்கலன்களை ஏந்திய பெரிய கைகளை உடைய, வலிமையும் வெற்றியும் பொருந்திய கரன், தூடணர் முதலான, இருளையும் பிளக்கத்தக்க ஒளி பொருந்திய இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற அணிகலன்களை அணிந்த அரக்கர் குலத்தில் உயர்வாகத் தோன்றியவர்களே! நீங்கள் எல்லோரும் கொல்லன் உலைக்களத்தில் அரத்தினால் அராவப்பட்ட கூர்மையுடைய ஆயுதங்களையுடைய கும்பகர்ணனைப் போல் இவ்வுலகத்தில் தூங்குகின்றீர்களா? அல்லது நான் உரக்கக் கூவி அழைப்பது உங்கள் செவிகளில் கேட்க வில்லையா?'' என வெறுப்புற்றுப் புலம்புகிறாள் சூர்ப்பணகை.

கல்லையும் பிளக்கத்தக்க படைக்கலன்களை எப்போதும் ஏந்திக் கொண்டிருக்கின்ற பெரிய கைகளை உடையவன் என்பதால் தான் அவனுக்குக் கரன் என்பதே பெயராயிற்று என்க. அவதரித்தல் என்பது மேலோர் பிறந்ததைக் குறிக்கும் ஒரு செம்மையான சொல். சூர்ப்பணகை இங்கே தன் அரக்கர் குலத்தை மேலோர் குலமாகக் கருதி இவ்வாறு குறிப்பிட்டாள் என்க. கும்பகருணன் இராவணன் தம்பி. குடம் போன்ற காதுகளை உடையவன் என்பது இச்சொல்லுக்குக் பொருள். பிரமனை நோக்கித் தவம் செய்யும் பொழுது சிரஞ்சீவித் தன்மை வேண்டும் நித்தியத்துவம் வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக கலைமகளின் தூண்டுதலால் வாய்தவறி - நித்திரத்துவம் - வேண்டும் என்று கேட்டு விட்டதனால் வாழ்நாள் முழுதும் தூங்கிக் கொண்டே இருக்கும் இயல்புடையவன் என்பது புராணக்குறிப்பு. எனவே இவன் எப்போதும் உறங்கிக் கொண்டிருப்பவர்க்கு உவமைப் பொருள் ஆனான். இவள் அழைப்பதை அவர்கள் கேளாமைக்கு இரண்டு காரணங்கள் கூறுகிறாள். ஒன்று எல்லோரும் கும்பகருணனைப் போல் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும், அல்லது நான் இருக்கும் இடத்தில் இருந்து அழைப்பது அவர்கள் காதுகளில் கேளாமல் இருக்க வேண்டும் என்று ஐயுறுகிறாள். இன்னும் ஒன்று. முதலில் தன் அண்ணன் இராவணனை அழைத்தாள்; பின்னர் தன் மருமகன் இந்திரசித்தை அழைத்தாள். இவர்கள் இருவரும் சேய்மையில் இலங்கையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இவள் குரல் கேளாமல் இருக்கலாம். ஆனால் அண்மையில் ஜனஸ்தானத்தில் இருக்கும் கரனுக்கும் தூடணனுக்கும் கேட்டிருக்க வேண்டுமே என்று கவலைப்

பட்டு அவர்களும் கும்பகருணனைப் போல உறங்குகிறார்களோ என்று ஐயுறுகிறாள் என்பதாம்.

113. இராமன் அங்கே வருதல்

என்று இன்னபல பன்னி, இகல் அரக்கி அழுது, இரங்கிப்
பொன்துன்னும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து,
நின்று, அந்த நதியகத்து, நிறைதவத்தின் குறைமுடித்து,
வன்திண்கைச் சிலைநெடுந்தோள் மரகதத்தின் மலை வந்தான். (2946)

(இன்ன - இது போன்ற; பன்னி - பலமுறை கூறி; இகல் - வலிமை; இரங்கி - புலம்பி; துன்னும் - பொருந்திய; படி - தரை; பொன் - அழகு)

என்று இவ்வாறு பற்பலவற்றையும் அழுது புலம்பிக் கூறிக் கொண்டிருந்த வலிமையுடைய அரக்கியாகிய சூர்ப்பணகை, இலக்குவனால் அமைக்கப்பட்ட அழகு பொருந்திய அத்தவச்சாலையின் அருகே உள்ள தரையில் புரண்டு கொண்டிருந்த காலைப் பொழுதில், அந்த கோதாவரி நதித்துறையில் நித்தியக்கடன்களைக் குறைவின்றி நிறைவாகச் செய்து முடித்த பின்னர், வலிய திண்மையான வில்லைக் கையிலேந்திய வனும், நீண்டு திரண்ட தோள்களையுடையவனும், மரகத மலை போன்ற உறுதியும் வாய்ந்தவனுமான இராமன் அங்கு வந்து சேர்ந்தான்.

அவன் சந்தியா வந்தனம் செய்து கொண்டிருக்கும் பொழுதும் வில்லைக்தோள்களில் கொண்டிருந்தான்என்பது பெறப்படுகிறது. பொன் துன்னும்படி என்பது பொன்னைத் தன்னிடம் கொண்ட பூமி என்னும் பொருளில் வந்தது. இராமனை மரகத மலைக்கு உவமம் கூறி இக்காப்பியத்தில் பல இடங்களிலும் கூறப்பட்டிருப்பதும் காண்க.

114. சூர்ப்பணகை இராமனிடம் நிகழ்ந்தவை கூறுதல்

வந்தானை முகம்நோக்கி, வயிறு அலைத்து, மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதிகொடு செழுநிலத்தைச் சேறாக்கி,
''அந்தோ! உன் திருமேனிக்கு அன்புஇழைத்த வன்பிழையால்
எந்தாய்! யான்பட்டபடி இதுகாண்!'' என்று எதிர் விழுந்தாள். (2947)

(அலைத்து - அடித்துக் கொண்டு; அந்தோ - ஐயோ!; எந்தாய் - என் தலைவனே; படி - தன்மை / கேடு / நிலை)

அங்கு வந்து சேர்ந்த இராமனை நன்றாக அவன் முகத்தைப் பார்த்து, தன் கைகளால் தன் வயிற்றில் அடித்துக் கொண்டு, மழை போலக் கண்ணீரையும், தாரை தாரையாக புண்களிலிருந்து வழியும் சிவந்த இரத்தத்தையும் கொண்டு, அழகாக இலக்குவனால் செப்பம் செய்து வைத்திருந்த செழுமையான அந்தத் தரையைச் சேறு போலாக்கி, ''ஐயோ! எம் தலைவனே! உன்னுடைய அழகிய மேனியின் மேல் நான் வைத்த அன்பு என்னும் கொடிய குற்றத்தால் இப்போது நான் பட்டிருக்கின்ற

கேட்டினை உன் கண் கொண்டு பார்ப்பாயாக!'' என்று அழுது புலம்பி, அவன் முன் விழுந்தாள் சூர்ப்பணகை.

முகம் நோக்குதல் என்பது, ஒருவரின் முகத்தை இரக்கம் வேண்டிப் பார்த்தல்என்பதாம். பொதுவாகப்பெண்கள்பெருந்துக்கம்கொள்ளுகின்ற போது வயிற்றிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு அழுவது இயல்பு; தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரோடு, அவள் புண்களிலிருந்து வழிந்த இரத்தக்கண்ணீரும்சேர்ந்த, அந்த நிலத்தில் அவள்புரண்டு அழுதமையால் அது சேறாகி விட்டது என்பது கருத்து; பொதுவாகத் தீங்கு செய்தவர்களுக்குத் தான் தண்டனை கிடைக்கும். ஆனால் நான் உன்னிடம் அன்பு தானே செய்தேன். அவ்வாறிருக்க எனக்கு இந்த நிலை வரலாமா? என்று தன் மீது குற்றம் இல்லை என்பதை இராமனுக்குத் தெரிவிக்க முயலுகிறாள் சூர்ப்பணகை. உன்னிடம் அன்புதான் செய்தேனே யன்றி வன்பு செய்யவில்லை, அந்த அன்புக்குக் கிடைத்த பயன் இது. இதனை நீ பார்ப்பாயாக என்றாள் என்க.

115. சூர்ப்பணகையை ''யார்'' என இராமன் கேட்டல்

விரிந்தாய கூந்தலாள் வெய்யவினை யாதானும்
புரிந்தாள் என்பது தனது பொரு அரிய திருமனத்தால்
தெரிந்தான்; இன்று இளையானே இவளை நெடுஞ்செவியோடு மூக்கு
அரிந்தான்என்பதும்உணர்ந்தான்; அம்மனை!நீயார்?என்றான். (2948)

(வெய்ய - கொடிய; பொரு அரிய - ஒப்பற்ற; அம்மனை - அம்மா)

விரிந்து கிடந்த கூந்தலையுடையவளாய் நின்றிருந்த சூர்ப்பணகை ஏதாவது ஒரு கொடிய செயலைச்செய்திருப்பாள்என்பதைத்தனது ஒப்பற்ற சிறந்த மனத்தால் உணர்ந்து கொண்டான் இராமன். அதே சமயம், இச்செயலை இப்பொழுது தன் இளையவனான இலக்குவன்தான் இவளுடைய நீண்ட காதுகளோடு மூக்கையும் அறுத்தெறிந்திருக்க வேண்டும் என்பதையும் உய்த்து உணர்ந்தான். எனவே அவளை நோக்கி ''அம்மா! நீ யார்?'' என்று கேட்டான்.

இலக்குவன் அவளதுக் கூந்தலைத் திருகித்தானே தூக்கினான். எனவே அவள் கூந்தல் அவிழ்ந்த நிலையிலேயே, தலை விரிகோலமாகவே, பரட்டைச் செம்பட்டைத் தலையாகவே நின்றிருந்தாள் என்பதாம். தன் தம்பி இலக்குவன்தான் இத்தகைய செயலைச் செய்திருக்க வேண்டும். அவன் காரணமில்லாமல் செய்திருக்க மாட்டான். இவள் ஏதாவது கொடிய தீங்கு யாருக்கேனும் இழைத்திருப்பாள். எனவே இலக்குவன் இவள் காது மூக்கு ஆகிய உறுப்புக்களை அறுத்திருப்பான் என்று உய்த்துணர்ந்தான் இராமன் என்க. இது காரியத்தைக்கண்டு காரணத்தை அறியும் வழியளவை ஆகும். புகையைக் கண்டு, நெருப்பு இருக்கிறது என்று கூறுவது போல். எனவேதான் இராமனை ''பொருவு அரிய திருமனத்தான்'' என்றார் என்க. இங்கே இவர்கள் இருவரைத் தவிர இருப்பவர்கள் இன்னும் இருவர் தான்.

சீதையும் இலக்குவனும், எனவே இவள் சீதைக்கோ, இலக்குவனுக்கோ ஏதோ தீங்கிழைத்திருக்கிறாள். அது பொறுக்காது இலக்குவன் அவள் உறுப்புக்களை அறுத்திருக்கிறான் என்று தீர்மானித்தான் இராமன் என்பதாம். இங்கே நெடும் செவியோடு மூக்கு என்று மட்டும் கூறுவது காண்க. முரண் முலைக்காம்பு பற்றிக் கூறாததும் உணர்க. முதல் நாள் வந்த பேரழகியின் உருவம் இல்லாது இன்று தன் சுய உருவத்தில் அரக்கியாகவே வந்தாள் ஆதலின் ''நீ யார்'' என இராமன் கேட்க வேண்டியதாயிற்று என்க.

116. சூர்ப்பணகை விடையளித்தல்

அவ்வுரைகேட்டு அடல்அரக்கி, ''அறியாயோ நீ என்னை?
தெவ்உரை என்று ஓர் உலகும் இல்லாத சீற்றத்தான்,
வெவ்இலை வேல் இராவணனாம், விண்ணுலகம் முதலாக
எவ்வுலகும் உடையானுக்கு உடன் பிறந்தேன் யான்'' என்றாள். (2949)

(அடல் - வலிய; தெவ் - பகை; உரை - சொல்; சீற்றம் - கோபம்)

இராமன் கேட்டதைக் கேட்ட வலிமை பொருந்திய அரக்கியாகிய சூர்ப்பணகை, ''நான் யார் என்பதை நீ அறிய மாட்டாயோ? பகைமை என்ற பேச்சுக்கே இவ்வுலகத்தில் இடமில்லாதவாறு, கோபம் கொண்டவனும்; கொடிய இலை போன்ற வடிவமுடைய வேற்படையை யுடையவனும், விண்ணுலகம் முதலாக எல்லா உலகங்களையும் தன் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்தி உரிமையுடைய வனுமான இராவணன் என்று சொல்லப்படுகின்றவனுக்கு உடன் பிறந்தவள் நான்'' என்றாள் சூர்ப்பணகை.

117. இராமன் மீண்டும் அவளிடம் கேட்டல்

''தாம்இருந்த தகை அரக்கர் புகல் ஒழியத் தவம் இயற்ற
யாம் இருந்த நெடும் சூழற்கு, என்செய வந்தீர்?'' எனலும்
''வேம் இருந்தில்எனக் கனலும் வெம்காம வெம்பிணிக்கு
மாமருந்தே! நெருநலினும் வந்திலனோ யான்?'' என்றாள். (2950)

(நெடுஞ்சூழல் - செய்மையிலுள்ள இடம்; தகை - பெருமை; புகல் - இருக்கை / இடம்; ஒழிய - விட்டு விட்டு; வேம் - வேகும்; இருந்தில் - கரி; வெம் - விரும்பத்தக்க / கொடிய; மா - சிறந்த; நெருநல் - நேற்று)

''பெருமை பொருந்திய அரக்கர்கள் வாழ்கின்ற இடத்தை விட்டு விட்டு, நாங்கள் தவம் இயற்றுவதற்காக வந்துள்ள இந்தச் செய்மையான இடத்திற்கு நீ என்ன செய்வதற்காக வந்தாய்?'' என்று இராமன் கேட்டதும்; ''வேகின்ற கரிபோலக் கனன்று எரியும் விரும்பத்தக்க காமம் என்னும் கொடிய நோய்க்குச் சிறந்த மருந்து போன்றவனே! நேற்றும் நான் வந்தேனே! அவளே தான் நான்'' என்றாள் சூர்ப்பணகை.

''லுங்கள் இருக்கும் இடத்திலிருந்து நெடுந்தூரம் தள்ளித் தானே நாங்கள் தவம் இயற்றுவதற்காக வந்திருக்கிறோம், இங்கும் ஏன் வந்தீர்?'' என்று இராமன் கேட்டான் என்பதாம்; அவன் கேட்ட கேள்விக்கு நேராக விடை கூறாது, ''நேற்றுத் தான் நான் வந்தேனே; எனக்கு இருக்கின்ற நோய்க்கு நீ தான் மருந்து அதனால் தான் இன்றும் வந்தேன்'' என்று கூறுகிறாள் சூர்ப்பணகை. வெம் என்ற சொல்லில் முதலது விரும்பத்தக்க என்ற பொருளிலும், பின்னது கொடிய என்ற பொருளிலும் கையாளப் பட்டிருப்பதை நோக்குக. அரக்கர்கள் தம் பகைவரேயானாலும், அவர்களின் போராற்றலைக் குறைத்து மதிக்காமல், தகைஅரக்கர் என்று சிறப்பாகக் கூறியது இராமபிரானின் பெருந்தன்மையைக் குறித்தது என்க.

118. சூர்ப்பணகை விடை கூறுதல்

''செங்கயல் போல் கருநெடுங்கண்,
தேம்மரு தாமரை உறையும்
நங்கைஇவர்'' என நெருநல்
நடந்தவரோ நாம்'' என்னக்
''கொங்கைகளும், குழைக்காதும்,
கொடிமூக்கும் குறைத்து அழித்தால்
அங்கண் அரசே! ஒருவர்க்கு
அழியாதோ அழகு?'' என்றாள். (2951)

(தேம்மரு - தேன்பொருந்திய; நடந்தவர் - வந்தவர்; குறைத்து - அறுத்து; நாம் - நீர்)

''பவந்த கயல் மீன்கள் போன்ற பிறழ்ச்சியுடையதும், கரிய நீண்டது மான கண்களையும், தேன் பொருந்தியிருக்கின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்தான் இவள் என்று, நேற்று என் எதிரில் வந்தவள்தானோ தாங்கள்?'' என்று இராமன் சூர்ப்பணகையைப் பார்த்துக் கேட்க, அதற்குச் சூர்ப்பணகை, ''அழகிய கண்ணோட்டமுள்ள கண்களை உடைய அரசனே! ஒருவருக்கு அவருடைய கொங்கைகளையும், குண்டலமணிந்த வளர்ந்து துவண்டு தொங்குகின்ற காதுகளையும், கொடி போன்று மேலுயர்ந்த நீண்ட மூக்கினையும் அறுத்து அழித்து விட்டால் அவர் அழகு அழிந்து காணப்பட மாட்டாரோ?'' என்றாள்.

நேற்றுத் தான் கண்ட அழகிய உருவத்திற்கும், இன்று தான் காணும் கோர வடிவிற்கும் ஒற்றுமையில்லாததால் இராமன் அவ்வாறு கேட்க நேர்ந்தது என்க.

119. இராமன் இலக்குவனைக் கேட்டல்

மூரல்முறுவலன், இளைய
மொய்ம்பினோன் முகம் நோக்கி,
''வீர! விரைந்தனை, இவள்தன்
விடுகாதும், கொடிமூக்கும்,

ஈர, நினைந்து, இவள் இழைத்த
பிழைஎன்?'' என்று இறை வினவச்
சூர நெடுந்தகை, அவனை அடி
வணங்கிச் சொல்லுவான். (2952)

(இறை - எல்லா உயிர்க்கும் தலைவன்; முறுவல் - புன்சிரிப்பு; மொய்ம்பினோன்-வலிமையுடையவன்/வீரன்; விடுதல்-தொடங்குதல்; ஈர-அறுக்க; நெடுந்தகை-பெருமைக்குணம்; மூரல்-புன்சிரிப்பு; நினைந்து - கருதி)

எல்லா உயிர்க்கும் தலைவனாகிய இராமபிரான், பற்கள் வெளியே தெரியும்படி புன்முறுவல் செய்து, தனது தம்பியாகிய வலிமையுடைய இலக்குவன் முகத்தைப் பார்த்து, ''வீரனே! இவளுடைய தொங்குகின்ற காதுகளையும், கொடி போன்ற மூக்கினையும் விரைந்து அறுத்தெறிவதற்கு, இவள் எண்ணிச் செய்த பிழை என்ன?'' என்று கேட்க, சூரனும் பெருமைக் குணம் மிக்கவனுமாகிய இலக்குவன், இராமனது திருவடிகளைத் தொழுது கீழ்க்கண்டவாறு சொல்லலானான்.

மூரல் முறுவல் என்பது பற்கள் வெளித் தெரியும்படி புன்முறுவல் பூத்தலைக் குறிக்கும். நினைவின்றிச் செய்யும் பிழை மன்னிக்கத்தக்கது. எனவே நினைந்து இவள் பிழை செய்தாளா என்பதை அறிய வேண்டி, இராமன் இலக்குவனிடம், ''நினைந்து இவள் இழைத்த பிழை என்'' என்றாள் என்க. இராமன் இங்கே காதும் மூக்கும் அறுபட்டதாக மட்டுமே கூறி, கொங்கைகள் அறுபட்டதைக் கூறாது விடுத்தது அவனுடைய ஒழுக்கமுடைமைக்கு ஒரு சான்றாகும். ''ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லாவே, தீய வழுக்கியும் வாயால் சொலல்'' என்பது குறள் (139).

120. இலக்குவன் காரணம் கூறுதல்

தேட்டம்தான் வாள் எயிற்றில்
தின்னவோ? தீவினையோர்
கூட்டம்தான் புறத்துளதோ? குறித்த
பொருள் உணர்ந்திலனால்;
நாட்டம்தான் எரிஉமிழ,
நல்லாள்மேல் பொல்லாதாள்
ஓட்டந்தாள்; அரிதின் இவள்
உடன்று எழுந்தாள்'' என உரைத்தான். (2953)

(தேட்டம் - தேடிவந்தது; வாள் - கூரிய; எயிறு - பற்கள்; பொருள் - நோக்கம்; உடன்று - கோபித்து; ஓட்டந்தாள் - ஓடி வந்தாள் / ஓட்டம் தந்தாள்; புறத்து - பின்னால் / பக்கத்தில்)

''இவள் இங்கு தேடி வந்ததற்குக் காரணம், நமது சீதாதேவியைத் தனது கூரிய ஒளி பொருந்திய கோரப் பற்களால் கடித்துத் தின்னவோ? அல்லது

அவளுக்குப் பின்னால் தீய செயல்களைச் செய்கின்றவர்களின் கூட்டம் தூண்டுதலாலோ, இவள் குறித்து வந்த நோக்கம் இன்னது என்பதை நான் அறிந்தேனில்லை; ஆனால் இவளுடைய கண்கள் நெருப்பைக் கக்கிக் கொண்டு நல்லவளான நமது சீதாதேவியை நோக்கிப் பொல்லாதவளாகிய இவள் கோபித்து எழுந்து பாய்ந்து ஓடி வந்தாள்'' என்று கூறினான்.

இவள் பின்னால் தீவினையுடையோர் கூட்டத்தின் தூண்டுதல் இருக்கலாமோ என்று இலக்குவன் ஐயுற்றதற்குக் காரணம் அவள் இராவணன், இந்திரசித்து, கரன், தூடணன் ஆகியவர்களை இங்கிருந்தே கூவி அழைத்ததேயாகும் என்க. தேட்டம் தான், கூட்டம் தான், நாட்டம் தான் என்ற சொற்களில் உள்ளது தான் என்றவை தேற்றப் பொருளில் வந்தன. ''கல்லைத் தான், மண்ணைத் தான், காய்ச்சித் தான் குடிக்கத் தான், கற்பித்தானா?'' என்ற தனிப் பாடல் போல. நாட்டம் என்பது கண்களைக் குறிக்கும். நாடும் தொழிலை உடையது கண் என்பதால் நாட்டம் கண்களுக்குக் காரணப்பெயர். நல்லாள் மேல் பொல்லாதாள் என்ற சொற்றொடர் இனிமை பயப்பது.

121. சூர்ப்பணகை இடையிட்டுக் கூறுதல்

ஏற்ற வளைவரி சிலையோன் இயம்பாமுன், இகல்அரக்கி,
''சேற்றவளைத் தன்கணவன் அருகு இருப்பச் சினம் திருகிச்
சூல்தவளை, நீர்உழக்கும் துறைகெழு நீர்வள நாடா!
மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்?'' என்றாள். (2954)

(ஏற்ற - ஏந்திய; வளை - வளைந்த; வரி - கட்டமைந்த; இகல் - மாறுபட்ட தன்மை / பகைமை; வளை - சங்கு; திருகி - முதிர்ந்து; சூல் - கரு; உழக்கும் - கலக்குகின்ற; கெழு - நிறைந்த; மாற்றவள் - சக்களத்தி; அழல்தல் - கொதித்தல்)

கையில் ஏந்திய வளைந்த கட்டமைந்த வில்லை உடையவனான இலக்குவன் இவ்வாறு கூறி முடிக்கும் முன்பே, மாறுபட்ட தன்மை கொண்ட அரக்கியான சூர்ப்பணகை, சேற்றில் ஒரு சங்கு, தன் கணவனின் அருகில் அமர்ந்திருக்க, அதனால் கோபம் முதிர்ந்து, ஒரு கர்ப்பம் உற்ற பெண் தவளை, ஊடல் கொண்டு நீரைக் கலக்குகின்ற படித்துறைகள் நிறைந்த நீர்வளம் பொருந்திய கோசல நாட்டு அரசாட்சி உரிமை பெற்றவனே! மற்றும் ''ஒருத்தியாகிய சக்களத்தியைக் கண்டபொழுது ஒரு பெண்ணுக்கு மனம் பற்றி எரியாதோ?'' என்று கேட்டாள்.

இலக்குவன் சூர்ப்பணகை இன்னும் ஏதேனும் செய்து விடுவாளோ என்று ஐயமுற்று எப்பொழுதும் வில்லையேந்திய கையினனாகவே இருப்பதைக் குறித்து ஏற்ற வளைவரி சிலையோன் என்றார், இயம்பாமுன் என்பது விரைவினைக் குறித்தது. ஒரு கர்ப்பமுற்ற பெண் தவளை, தனது துணையான ஆண் தவளை அங்குள்ள ஒரு சேற்றில் வேற்றினத்தைச் சேர்ந்த ஒரு சங்கிற்கு அருகில் இருப்பதைக் கண்டு, தான் கருவுற்றிருப்ப

தால் தன்னுடன் கூட வாய்ப்பில்லை என்று கருதி, மற்றொரு சங்குடன் கூட எண்ணி அங்கு இருக்கிறது என்று தவறாகக் கருதி, அதனால் முதிர்ந்த கோபம் கொண்டு நீரைக் கலக்குகின்ற அத்தகைய வளமை பொருந்திய நீர்த் துறைகளையுடைய கோசல நாடு என்று கோசல நாட்டின் நீர் நிலவளங்களும், பெண்களின் உள்ள நிலையும் ஒரு சேரச் சிறப்பிக்கப் பட்டது. இங்கே ஒரு செய்தி. நாம் பயன்படுத்தும் வெண் சங்கு ஓர் உயிர்ப் பொருளின் தசை நீங்கிய உடலாகும். சங்கு என்பது ஊர்ந்து செல்லும் ஒருவகை உயிரினம். சக்களத்தி என்பது சககளத்தி என்று ஒத்த உரிமையுடைய ஒரே நிலையிலுள்ள ஓர்ப் படியாளைக் குறிக்கும் என்க.

''மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்?'' என்ற ஈற்றடியில் பெண்டிர் இயல்பைப் புலப்படுத்தியிருப்பது நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. ஐந்தறிவுயிரினமாகிய தவளைக்கே இது இயல்பு என்றால் என்னைப் போன்ற பெண் மக்கள் மனம் கொதிப்பதற்குச் சொல்ல வேண்டுமோ? என்பது கருத்து. முதலில் தான்தான் அவன் மேல் காதல் உற்றதாகவும், சீதை இடையில் வந்தவள் என்பதும், தான்தான் உண்மையான மனைவி என்று அவள் தனக்குத் தானே நினைத்துக் கொண்டதால் சீதையைப் பற்றி ஒளிக்க எண்ணியதும் தன் நோக்கில் சரியானதே என்பதும், சீதாதேவி மாற்றாள் தான் என்பதும் சூர்ப்பணகையின் துணிந்த கருத்து. இந்நிலையில் சீதைக்குக் கேடு சூழத் தான் கருதியது தவறில்லை என்று கருதுகிறாள் சூர்ப்பணகை என்பதாம்.

122. இராமன் சூர்ப்பணகையை ''ஓடிப்போ'' என்று சினத்தல்

''பேடிப்போர் வல்லரக்கர்
பெருங்குலத்தை ஒருங்கு அவிப்பான்
தேடிப் போந்தனம்; இன்று
தீ மாற்றம் சிலவிளம்பி,
வீடிப் போகாதே; இம்மெய்
வனத்தை விட்டு அகல
ஓடிப்போ'' என்று உரைத்த
உரைகடந்தாற்கு, அவள் உரைப்பாள். (2955)

(ஒருங்கு - ஒருசேர; அவிப்பான் - அழிக்கும் பொருட்டு; போந்தனம் - வந்துள்ளோம்; மாற்றம் - சொற்கள்; விளம்பி - சொல்லி; வீடிப் போதல் - அழிந்து போதல்; உரைகடந்த - சொற்களுக்கு எட்டாத; பேடித்தல் - அச்சுறுத்தல்)

''பேடித் தன்மையுள்ள வலிமையான போரினைச் செய்யும் அரக்கர்களுடைய பெரிய கூட்டத்தை ஒருசேர அடியோடு அழிப்பதன் பொருட்டே நாங்கள் அவர்கள் இருக்கின்ற இடம் தேடி இங்கு வந்திருக்கின்றோம்; இப்பொழுது நீ கொடிய சொற்கள் சிலவற்றைக் கூறி அழிந்து போகாதே; மெய்ம்மை நிறைந்த முனிவர்கள் வாழும் இந்தக் காட்டிடத்தை விட்டுச்

சேய்மையான இடத்திற்கு விலகி ஓடிப் போய்விடு'' என்று கூறித்துரத்திய, புகழுக்கு அப்பாற்பட்ட இராமபிரானுக்குச் சூர்ப்பணகை கீழ்வருமாறு உரைக்கத் தொடங்கினாள்.

பொதுவாக அரக்கர்கள் ஒத்த வலிமையுடையோருடன் போர் செய்யாது, குறைந்த வலிமையுடைய முனிவர்களோடேயே போர் செய்வதனாலும், யாருடனும் நேருக்கு நேர் நின்று போர் செய்யாமல் மறைந்து நின்று போர் செய்தலானும், ஆயுதங்கள் கொண்டு போர் செய்யாது மாயையினாலும், வஞ்சத்தாலும் போர் செய்வதாலும், அவரைப் பேடிப் போர் அரக்கர் என்றான். என்றாலும் அவர்கள் வலிமையைக் குறைத்து மதிப்பிட முடியாது என்ற காரணத்தால் வல்அரக்கர் என்று சேர்த்துக் கூறிய நயமும் உணர்ந்து இன்புறத்தக்கது. அரக்கர்கள் பெருங்குலத்தார் என்றாலும் அவற்றை ஒரு சேர அழிக்கும் வல்லமைதனக்கு உண்டு என்பதை உணர்த்தினான். வீரர்கள்தன்மேம்பாடு பற்றிக் கூறிக் கொள்வது ''நெடுமொழி'' எனப்படும். ''தீ மாற்றம்'' என்ற சொல்லாட்சி, சூர்ப்பணகை தன்னையே மனைவி என்று கருதிக் கூறியதையும், சீதையை மாற்றவள், சக்களத்தி என்று கூறியதையும் குறிக்கும் என்க. உரை கடந்தான் என்பது ''சொற்பதம் கடந்தான்'' என்ற பொருளில் வந்தது. பேடித்தல் என்ற சொல் அச்சுறுத்தல் என்ற பொருளில் இன்றும் குடநாட்டில் வழங்கப்படுகிறது.

123. சூர்ப்பணகை இராமனிடம் கூறுதல் [11 பாடல்கள்]

''நரைதிரை என்று இல்லாத
நான்முகனே முதல், அமரர்''
கரை இறந்தோர், இராவணற்குக்
கரம் இறுக்கும் குடி என்றால்,
''விரையும் இது நன்றன்று;
வேறாக யான் உரைக்கும்
உரைஉளது; நுமக்கு உறுதி
உணர்வு உளதேல்'', என்று உரைப்பாள். (2956)

(நான்முகன் - பிரமன்; கரை - அளவு; இறந்தோர் - இல்லாதவர்கள்; கரம் - கப்பம் / திறை / இறைப்பொருள்; இறுத்தல் - செலுத்துதல்; உறுதி - நன்மை; நரை - மயிர் வெளுத்தல்; திரை - உடம்பின் தோல் சுருங்குதல்; வேறாக - சிறப்புடையதாக / தனிப்பட)

''மயிர் வெளுத்துப் போதலும், உடம்பின் தோல் சுருங்குதலும் ஆகிய மூப்பின் இயல்புகளே தோன்றாது, என்றும் அழியா இளமையுடன் இருக்கும் பிரமன் முதலான தேவர்கள் எண்ணற்றவர்கள், இராவணனுக்குக் கப்பம் கட்டுகின்ற அவனது குடிமக்கள் ஆவார்கள் என்றால், நீங்கள் அவன் பெருமையறியாது இவ்வாறு என்னை ஓடிப்போ என்று விரைந்து விரட்டுவது உங்களுக்கு நன்மை பயப்பதாகாது.

உங்களுக்கு உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணம் இருக்குமானால், உங்களுக்கென்று தனியாக நான் சொல்லுவது ஒன்று உளது'' என்று கூறிப் பின்வருமாறு கூறலானாள் சூர்ப்பணகை.

நரை, திரை என்றதனால் அதனோடு இயைந்த மூப்பு, சாக்காடு ஆகியவைகளும் கொள்ளப்படும். ''ஒன்றினம் முடித்தல், தன் இனம் முடித்தல்'' என்பது நூற்பா. மூப்பு என்பது கிழட்டுத் தன்மை. மூப்பு - கிழட்டுத் தன்மை; சாக்காடு - இறப்பு; இது நயந்து கூறுதல் சாம உபாயம்.

124\. ''ஆக்க அரியமூக்கு, உங்கை
அரியுண்டாள்'' என்றாரை
நாக்கு அரியும் தயமுகனார்;
நாகரிகர் அல்லாமை
மூக்குஅரிந்து, நும்குலத்தை முதல்
அரிந்தீர்; இனி உமக்குப்
போக்குஅரிது; இவ்வழகையெல்லாம்
புல்லிடையே உகுத்தீரே!'' (2957)

(உங்கை - உம்தங்கை; அரிதல் - அறுத்தல்; தயமுகன் - தசமுகன் / பத்து முகங்கள் கொண்ட இராவணன்; நாகரிகம் - கண்ணோட்டம்; முதல் - வேர் / அடி; போக்கு - பிழைத்தல்; புல்லிடை - அற்பமான இடம் / தூய்மையற்ற இடம்)

''உம் தங்கை மீண்டும் உண்டாக்கிக் கொள்ளுதற்கரிய மூக்கு அறுபட்டு நிற்கிறாள்'' என்று யாராவது போய்ச் சொன்னால் கூட, அப்படிச் சொல்லியவரின் நாக்கை ஆராயாமல் அறுத்து விடும் இயல்புடையவன் என் அண்ணன் பத்து முகங்களைக் கொண்ட இராவணன். அவன் கண்ணோட்டம் இல்லாதவன். ''இன்னான் இனியான் என்று கருதாதவன். என்னுடைய மூக்கை அறுத்து, உங்கள் குலத்தையே வேரோடு அழித்துவிட்டவர் ஆகிவிட்டீர்; இனிமேல் நீங்கள் இராவணனிடமிருந்து தப்பிப் பிழைத்துப் போகுதல் என்பது அரிதாகும்; உங்களுடைய இந்தப் பேரழகையெல்லாம் அற்பமான தூய்மையற்ற இடத்தில் சிந்தி அழித்து விட்டீரே'' என்றாள் சூர்ப்பணகை.

ஆக்க அரிய மூக்கு என்றதனால், அது இயற்கையிலேயே அமைந்த மூக்கு அல்ல. தன் மந்திரசக்தியினால் உண்டாக்கிக் கொள்ளப்பட்ட மூக்கு என்று சூர்ப்பணகை தன் வாயாலேயே கூறிக்கொள்வதை உணர்க.

மூக்கு என்று மட்டும் கூறினாலும், அது காதுகளையும் கொங்கை களையும் உடன் சேர்த்துக் கூறியதாகக் கொள்ளப்பட வேண்டும். நாகரீகம் என்பது கண்ணோட்டம் என்ற பொருள் முன்பும் கையாளப் பட்டிருக்கிறது. ''பெயத்தக்க நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரீகம் வேண்டுபவர்'' என்பது குறள் 580. ''முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'' என்பது நற்றிணை; இந்த நிலையிலும் ''நும் அழகை யெல்லாம் புல்லிடையே உகுத்தீரே'' என்று சூர்ப்பணகை இராமனை நோக்கிக் கூறுவது அவள் அவன் அழகில் கொண்ட ஈடுபாட்டினையும், அதைத் தன்னால் அனுபவிக்க முடியவில்லையே என்ற காமம் மிகுதியினையும் காட்டுகிறது என்க. இதே சொற்களை முன்பு கூனி கைகேயியிடமும், பரதன் கோசலையிடமும் கூறியதை நினைவிற் கொள்க. இவள் இங்கே அவனை அச்சுறுத்தியும் இரங்கியும் கூறுதலால் இது பேத உபாயமாகும். புல்லிடை உகுத்தல் என்பது பொதுவாக வீணாக்குதலைக் குறிக்கும் ஒரு சொல். புல்லிடை உகுத்த பொருளை மீண்டும் திரட்டி எடுத்தல் முடியாதது போல, அவன் அழகை மீண்டும் தான் அடைந்து இன்புற முடியாதே என்ற வருத்தம் தொனிப்பது காண்க.

125. ''வான்காப்போர், மண்காப்போர்,
மாநாகர் வாழ்உலகம்
தான்காப்போர், இனித்தாங்கள்
தலைகாத்து நின்று, உங்கள்
ஊன்காக்க உரியார் யார்?''
என்னை உயிர் நீர் காக்கின்
யான்காப்பென்; அல்லால்,
அவ்விராவணனார் உளார்'' என்றாள். (2958)

(மா - பெருமை வாய்ந்த; ஊன் - உடம்பு)

''என்னுடைய ஆசையை நிறைவேற்றி, என் உயிரை நீங்கள் காப்பாற்றி விட்டால், நான் உங்களை, என் அண்ணன் இராவணனிடமிருந்து காப்பாற்றுவேன்; இல்லையென்றால் என் அண்ணன் இராவணன் இருக்கிறான், அவனை எதிர்த்துக் கொண்டு, வானுலகத்தைக் காக்கும் தேவர்களுள்ளும், மண்ணுலகத்தைக் காக்கின்ற மன்னர்களுள்ளும், சிறந்த நாகர் உலகமாகிய பாதலத்தைக் காக்கும் நாகர் அரசர்களிலும், முதலில் தங்கள் தலையைக் காத்துக் கொண்டு, பின்னர் உங்கள் உடலைக் காப்பாற்றும் ஆற்றல் பெற்றவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை'' என்றாள் சூர்ப்பணகை.

இராவணன் உனக்குப் பகைவன் என்று தெரிந்தால் இம்மூவுலத்துள் உள்ளோரில் யாரும் உன் துணைக்குத் துணிந்து வரமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் என் அண்ணன் இராவணனுக்கு அடிமைப் பட்டவர்கள். ஒரு வேளை யாரேனும் துணிந்து வந்தால் முதலில் அவர்கள் தங்கள் தலைகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் தான் உன் உடலைக் காப்பாற்ற முடியும். அப்படிப்பட்டவர் இங்கு ஒருவரும் இல்லை என்பதாம். நீங்கள் என்னைக் காப்பாற்றினால்தான் நான் உங்களைக் காப்பாற்றுவேன் என்று கூறுவது தான உபாயம் ஆகும். இராவணனை எதிர்த்து மூவுலகும் நில்லாது என்பது கருத்து.

126. ''காவல் திண்கற்பு அமைந்தார்
தம்பெருமை தாம் கழறார்;
ஆவல் பேரன்பினால்
அறைகின்றேன்; ஆம் அன்றோ?
தேவர்க்கும் வலியான்தன்
திருத்தங்கையாள் இவள்; ஈண்டு
ஏவர்க்கும் வலியாள்'' என்று
இளையானுக்கு இயம்பீரோ?'' (2959)

(கழலுதல் - கூறிக் கொள்ளுதல்)

''தனக்குக் காவலாக விளங்கும் திண்ணிய கற்பொழுக்கம் உடைய பெண்டிர், தமது உயர்வைத் தாமே பறை சாற்றிக் கொள்ளமாட்டார்கள்; இருந்தாலும், நான் தங்களிடம் கொண்ட அளவற்ற பேரன்பின் காரணமாக உங்களிடம் கூறுகிறேன்; ''எல்லாத் தேவர்களினும் வல்லமையில் மேம்பட்டவனான இராவணனின் பெருமை மிக்க சிறந்த தங்கை இவள். இங்குள்ள எல்லோரைக் காட்டிலும் வலிமை மிக்கவள் இவள் என்று, உங்கள் தம்பியாகிய இலக்குவனுக்குக் கூறமாட்டீர்களா?'' என்று சூர்ப்பணகை இராமனிடம் கேட்கிறாள்.

தம் பெருமைச் சிறப்பைத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளுதல் கற்புடைய பெண்டிரின் இயல்பல்ல. என்றாலும் நான் என்னுடைய பெருமையைத் தங்களிடம் வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளு வதற்குக் காரணம் என்ன என்றால் நான் தங்களிடம் கொண்டிருக்கும் தணியாத பேரன்பாகும் என்கிறாள். திண் கற்பு என்பது வள்ளுவனின் ''கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்'' குறள் (54) என்ற அடிகளை நினைப்பூட்டுவது காண்க. இலக்குவனும் உடன்தான் நிற்கிறான், என்றாலும் அவனிடம் நேரே கூறாது, இராமனிடம் கூறி, இலக்குவனிடம் தன்னைப் பற்றி உயர்வாகக் கூறச்சொல்வதற்குக் காரணம் அதனைத் தானே கூறுதல் தன் பெண்மைக்கும், உயர்வுக்கும் தக்கதன்று என்று அவள் கருதியதால் என்க. அல்லது இலக்குவன் மேல் உள்ள அச்சத்தால் அவ்வாறு கூறினாள் என்று கொள்ளலும் ஒன்று. திருத்தங்கை என்று தன்னைத் தானே உயர்த்திக் கூறிக்கொண்டு, முன்னர் காவல்திண் கற்பு அமைந்தார் தாம் கழறார் என்று கூறுவது முரணாவது நோக்குக. சூர்ப்பணகை எவ்வாறேனும் தன் பெருமையை இவ்விருவரும் அறியச் செய்துவிட வேண்டும் என்ற விரைவில் வார்த்தைகள் தடுமாறி வருவதை உணர்க. தன்னுடைய உறுப்புக்களை அரிவதையே தடுத்துக் கொள்ள முடியாத இவள் ''தான் ஏவர்க்கும் வலியாள்'' என்றும் ''திண்கற்பு அமைந்தார்'' என்று கூறிக்கொள்ளுவதும் தடுமாற்றத்தின் உச்சம் என்பதும், நகைச்சுவைக்கு உரியதாகிறது என்பதும் அறிக.

127. ''மாப்போரில் புறம் காப்பேன்;
வான்சுமந்து செலவல்லேன்;
தூப்போலக் கனிபலவும்
சுவையுடைய தரவல்லேன்;
காப்போரைக் கைத்து என்?
நீர் கருதியது தருவேன்; இப்
பூப்போலும் மெல்லியலால்
பொருள் என்னோ? புகல்வீரே?'' (2960)

(மா - பெரிய; புறம் - பக்கம்; தூ - மாமிசம்; கைத்து - வெறுத்து; பொருள் - பயன்)

''பெரிய போர் வந்தாலும், அதில் உன் அருகில் இருந்து வில்களைக் காப்பாற்றுவேன். அவ்வாறு முடியாது போனால் உங்களைச் சுமந்து வானத்திலும் செல்லும் ஆற்றல் படைத்தவள் யான். மாமிசம் போன்று மிக்கச் சுவையுள்ள பழங்கள் பலவற்றையும் உங்களுக்குத் தருவேன்; நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதனைத் தர என்னால் முடியும். அப்படிப்பட்ட பேராற்றல் படைத்து, உங்களைக் காக்க விழைகின்ற என்னை நீங்கள் வெறுத்து ஒதுக்குவது ஏனோ? இந்த மலர் போன்ற மெல்லிய இயல்புடைய சீதையால் உங்களுக்கு என்ன பயன் உண்டாகும்? சொல்லுங்கள்'' என்றாள் சூர்ப்பணகை.

புறம் என்பது அருகில் நின்று பாதுகாத்தல் என்று பொருள் தரும். ''வழிபடு தெய்வம் நிற்புறங்காக்க'' என்பது தொல்காப்பியம். வானில் சஞ்சரிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் அரக்கர்கள் என்பதாம். தன்னைப் போல வலிமையும் ஆற்றலும் அற்ற, மென்மையான உடல் படைத்த சீதையால் உங்களுக்கு என்ன நன்மை விளையும்? அவளால் உங்களைப் போரில் காப்பாற்ற முடியுமா? வானத்தில் சுமந்து செல்ல முடியுமா? உங்களுக்கு வேண்டிய காய்கனிகளைத் தரமுடியுமா? உங்களுக்கு வேண்டியவற்றை உடனே கொண்டு வந்து தரமுடியுமா? அவளால் உங்களுக்கு என்ன நன்மை? அவளைவிடுத்து என்னைச்சேருங்கள். அதனைவிடுத்து என்னை ஏன் வெறுத்து ஒதுக்குகிறீர்கள் என்று சீதையை இழித்துக் கூறினாள் என்க. தான் உண்பவற்றில் மாமிசமே சுவையுடையது என்பதால் அந்த அரக்கி, பழங்களில் கூட மாமிசம் போன்ற சுவையுடைய பழங்கள் என்று கூறுவதை உணர்க. அது போலவே பெண்கள் என்றால் தன்னைப் போல வன்மையுடையவர்களாக இருக்க வேண்டும், மென்மையுடைய பெண்களால் பயன் ஏதும் இல்லை என்று கூறுவதும் உணர்க. இதுவும் தான உபாயத்தைச் சார்ந்ததே. முன்பு குகனும் இவர்களுக்கு உதவி செய்வதாகக் கூறினான். அதற்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை உய்த்து உணர்க.

128. குலத்தாலும், நலத்தாலும், குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலும், மதியாலும், வடிவாலும், மடத்தாலும்,

நிலத்தாரும், விசும்பாரும், நேரிழையார், என்னைப்போல்
சொலத்தான் இங்கு உரியாரைச் சொல்லீரோ, வல்லீரேல்?'' (2961)

(குறித்தன - நினைத்தன; வலம் - வன்மை; மடம் - இளமை / மென்மை; நேரிழையார் - பெண்டிர்; விசும்பு - வானுலகு; வல்லீரேல் - திறமையுடைய வரானால்)

''நற்குடிப்பிறப்பாலும், குணநலச்சிறப்பாலும், தாங்கள் வேண்டிய வற்றைக் கொண்டு தரும் ஆற்றலாலும், அறிவுடமையாலும், வடிவழகினாலும், இளமையுடைய மென்மையினாலும், இவ்வுலகத்துள்ளோருள்ளும், வானுலகத்துள்ளோருள்ளும், என்னைப் போல் வல்லமையுடைய பெண்களை, உங்களால் ஒப்பிட்டுக் கூற முடியும் என்ற ஆற்றல் உங்களுக்கு இருந்தால் சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று சூர்ப்பணகை இராமனுக்குச் சவால் விடுகிறாள்.

எல்லா வகையாலும் தன்னேரில்லாத் தலைவி தானே என்கிறாள் சூர்ப்பணகை. மண்ணுலகிலும் விண்ணுலகிலும் தனக்கு ஒப்பான பெண் வேறு எவரும் இலர் என்கிறாள் என்க. பெண்களின் குண நலச்சிறப்பாகத் தொல்காப்பியம் கூறுவதைக் கேளுங்கள். ''பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு, உருவு, நிறுத்த காமவாயில், நிறையே, அருளே, உணர்வோடு, திரு என முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே'' என்பது தொல்காப்பியம்.

129. ''போக்கினீர் என் நாசி; போய்த்து
என்? நீர் பொறுக்கிலிரேல்
ஆக்குவென் ஒருநொடி வரையின்;
அழகு அமைவென்; அருள்கூரும்
பாக்கியம் உண்டு எனின், அதனால்
பெண்மைக்கு ஓர் பழுது உண்டோ?
மேக்கு உயரும் நெடுமூக்கும்
மடந்தையர்க்கு மிகை அன்றோ?'' (2962)

(நாசி - மூக்கு; போய்த்தது - கெட்டுப்போனது / போயிற்று; பொறுத்தல் - சகித்தல்; பாக்கியம் - பேறு; மேக்கு - மேலே; மிகை - அதிகப்படியானது / தேவையற்றது / வேண்டாதது; பழுது - குறை)

''எனது மூக்கை அறுத்து விட்டீர்கள்; அதனால் எனக்கு என்ன இழப்பு நேர்ந்தது? நீங்கள் என்னை இந்தத் தோற்றத்துடன் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால், ஒரு நொடிப் பொழுதிற்குள் என்னால் இழந்த மூக்கை உண்டாக்கிக் கொள்ள முடியும்; முழு அழகும் நிரம்பப் பெற்ற மங்கையாகவும் என்னால் ஆக்கிக் கொள்ள முடியும். நீங்கள் என்னைக் காதலோடு பார்க்கும் பேறு கிடைக்கப் பெறுவேன் என்றால், இம்மூக்கு இல்லாததனால் என் பெண் தன்மைக்கு என்ன பழி ஏற்பட்டு விடும்? முகத்தின் மேலே உயர்ந்திருக்கும் இந்த நீண்ட மூக்குப் பொதுவாகப்

பெண்களுக்கு அதிகப்படியானதுதான், வேண்டாத ஒன்றுதான்'' என்றாள் சூர்ப்பணகை.

பொதுவாக முகத்தில் எல்லா உறுப்புக்களும் உள்ளடங்கி இருக்க, இந்த மூக்கு மட்டும் சற்று உயர்ந்திருப்பதனால் அந்த உயர்ச்சி வேண்டாத ஒன்று. அதுவும் உள்ளடங்கியே இருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் இலக்குவன் என் உயர்ந்த பகுதியான மூக்கை அறுத்து விட்டானோ என்று கழிவிரக்கம் கொள்ளுகிறாள் என்பதாம். மூக்குப் போனதால் தனக்குக் கவலையில்லை என்பதும், இராமனின் காதல் நோக்குத்தான் தனக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்றும் கூறுவது காண்க. போன மூக்கைத் திரும்பப் பெற்று அழகுள்ளவளாவேன் என்றும், மூக்கே இல்லாமல் போனாலும் அது என் பெண்மைக்கு இழிவாகாது என்றும் இரண்டு வகையான எண்ணங்களும் கொண்டுள்ளாள் சூர்ப்பணகை என்பதை உணர்க. இராமனுக்கு இவ்விரண்டில் எது பிடிக்குமோ அவ்வாறு செய்வதற்குத் தயாராக இருப்பதாகக் கூறுவதையும் நோக்குக.

130. ''விண்டாரே அல்லாரோ வேண்டாதார் நான் வேண்டின்?
உண்டாய காதலின், என்உயிர் என்பது உமது அன்றோ?
கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடம் அன்றோ?
கொண்டாரே கொண்டாடும் உருப்பெற்றால், கொள்ளீரோ?'' (2963)

(வேண்டின் - விரும்பினால்; விடம் - விஷம் / நஞ்சு; கொண்டார் - தன்னைக் கொண்ட தன் கணவர்; கொண்டாடுதல் - பாராட்டுதல்; கட்டழகு - பேரழகு; கட்டு - உடல்; கட்டழகு - உடலழகு; விண்டார் - பகைவர் / மனம் வேறுபட்டவர்)

''நானே விரும்பினாலும், என்னை விரும்பாதவர் என்னிடம் மாறுபட்ட பகைவர் அல்லவோ? உங்கள் மீது ஏற்பட்ட காதலினால் என் உயிர் கூட உங்கள் வசம் ஆயிற்றல்லவா? தன்னைக் கண்டவர்கள் அனைவருமே காதலிக்கும் பேரழகுடைய பெண்ணும் உங்களுக்கு நஞ்சு போன்றவளல்லவா? தன்னை மணந்து கொண்ட கணவன் மட்டும் பாராட்டிப்புகழும் தோற்றம் கொண்டு, நான் வந்து உங்கள் எதிரில் நின்றால் என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா?'' என்று கேட்கிறாள் சூர்ப்பணகை.

நான் விரும்பினால் என்னை எல்லோரும் விரும்பி ஏற்றுக் கொள்வர். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்னுடன் மாறுபட்ட கருத்துடைய பகைவராக இருக்க வேண்டும், அல்லது பேடியராக ஆண்மைத் தன்மை நீங்கியவராக இருக்க வேண்டும். கண்டாரே காதலிக்கும் கட்டழகு உடைய சீதை, உமக்குப் பின்னால் நஞ்சாக அமையப் போகிறாள் என்பதை முன் கூட்டியே கவிஞன் இச்சொற்களால் நமக்கு உணர்த்துவதைக் காண்க. நான் அழகில்லாதவள், உறுப்புக் குறைக்கப்பட்டவள், கண்டாரால் காதலிக்கப்படாதவள், கொண்டாரால் மட்டுமே பாராட்டப்படுபவள்

எனவே நானே உன்னை மணத்தற்கு உரியவள் என்று சூர்ப்பணகை குறிப்பால் உணர்த்துவதையும் உணருங்கள். கட்டழகு என்பது, இதற்கு மேல் ஒரு கட்டு இல்லை, வரம்பு இல்லை எனக் கட்டிய அழகு என்ற விளக்கத்தில் பேரழகு என்ற பொருளைத் தரும். கட்டு + அழகு என்று பிரித்தால் கட்டு என்பது உடலைக் குறிக்கும். யாக்கை, எலும்பு, தசை, நரம்பு இவற்றால் கட்டப்பட்டது. எனவே கட்டழகு என்பது உடலழகு என்ற பொருளைத் தந்து நிற்கும். அதிக அழகு பெண்ணுக்கு விடம் போன்றது. ''பார்யா ரூபவதி சத்ரு'' என்பது வடமொழி. மூதுரை ''கொண்டவன் மெச்சினவள் அரம்பை'' என்றும் கூறுவதுண்டு. இராமன், தன்னை விரும்பாத சீதைமேல் ஆசைப்படக் கூடாது என்கிறாள் சூர்ப்பணகை.

131. சிவனும், மலர்த் திசைமுகனும்,
திருமாலும், தெறுகுலிசத்து
அவனும், அடுத்து ஒன்றாகி
நின்றஅன்ன உருவோனே!
புவனம் அனைத்தையும், ஒரு தன்
பூங்கணையால் உயிர் வாங்கும்
அவனும், உனக்கு இளையானோ?
இவனே போல் அருள் இலனால். (2964)

(தெறும் - அழிக்கும்; குலிசம் - வச்சிரப்படை; அடுத்து - சேர்ந்து; புவனம் - உலகம்; ஒரு - ஒப்பற்ற; பூங்கணை - மலர்அம்பு; வாங்குதல் - நீங்குதல்)

''சிவபெருமானும், தாமரை மலரில் தோன்றிய நான்கு முகங்களை யுடைய பிரமதேவனும், திருமாலும், பகைவர்களை அழிக்கும் வச்சிராயுதப் படையை உடையவனான இந்திரனும், இந்நால்வரும் சேர்ந்து ஓர் உருப்பெற்றதைப் போன்று அழகிய தோற்றமுடைய இராமனே! இவ்வுலகங்கள் அனைத்திலும் உள்ள உயிரினங்களுக் கெல்லாம் தனது ஒப்பற்ற மலரம்புகளால் உயிரை நீக்குகின்ற மன்மதனும், உனக்குத் தம்பி முறை உள்ளவனோ? ஏனெனில் உன் தம்பி இலக்குவன் போல், அவனும் என்னிடம் கருணை இல்லாது எனக்கு மரணவேதனை தருகின்றானே?'' என்று சூர்ப்பணகை இராமனிடம் கேட்கிறாள். இராமன் சகல தேவ அம்சமும் பொருந்தியவன் என்று சூர்ப்பணகை கருதுகிறாள்.

சிவன், பிரமன், திருமால், இந்திரன் முதலியோர் ஆற்றல், அறிவு, அருள், ஆட்சியுடைமை இவையனைத்தும் ஒன்று சேர்ந்து நின்றால் தான் இராமனின் ஆற்றலுக்கும், அறிவுக்கும், அருளுக்கும், ஆட்சியுடை மைக்கும் ஒப்பாகும் என்பது சூர்ப்பணகை கருத்து. இதே போல பின்னர் இராவணனும், இந்நால்வருக்கும் மேம்பட்ட ஆற்றலைக் கொண்டவன் இராமன் என்று பாராட்டுவதும் நினைவு கூரத்தக்கது. ''வாசவன், மாயன், மற்றை மலர் உளோன், மழுவாள் அங்கை ஈசன் என்று இனைய தன்மை

இளிவரும் இவரால் அன்றி, நாசம் வந்துற்றபோது, நல்லதோர் பகையைப் பெற்றேன்'' என்பான் இராவணன். மன்மதன் உலகத்து உயிரினங்களுக்கெல்லாம் தன் மலரம்புகளால் காம இச்சையைத் தோற்றுவித்துக் கருணையின்றி வேதனை தருபவன், அது போல இலக்குவனும் தன் உறுப்புக்களை அறுத்து மரணவேதனை தந்ததால், இலக்குவன் போல, மன்மதனும் இராமனுக்கு இன்னொரு தம்பியோ என்று வினவுகிறாள் சூர்ப்பணகை. மன்மதனின் நீலோற்பல மலரம்பு உயிரை வாங்கும் தன்மையது என்பது வழக்கு. ''நினைக்கும் அரவிந்தம்; நின் பசலை மாம்பூ; அனைத்துணவு நீக்கும் அசோகு; வனத்திலுறு முல்லை இடை கூட்டும்; மாதே முழு நீளம் கொல்லும், மதன் அம்பின் குணம்'' என்பது உபமான சங்கிரகம். இலக்குவன் அருள் இலாதவன் என்று கூறுவதனால், இராமன் அருளுடையவன் என்பதும், அவன் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று இவள் வேண்டுகிறாள் என்பதும் கருத்து.

132. ''பொன் உருவப் பொரு கழலீர்!'' புழை காண,
மூக்கரிவான் பொருள் வேறு உண்டோ?
இன்னுருவம் இதுகொண்டு, இங்கு இருந்தொழியும்
நம்மருங்கே; ஏகாள் அப்பால்;
பின் இவளை அயல் ஒருவர் பாரார்'' என்றே
அரிந்தீர்; பிழை செய்தீரோ?
அன்னதனை அறிந்தன்றோ அன்பு இரட்டி
பூண்டது நான்; அறிவிலேனோ''? (2965)

(பொருதல் - போர் செய்தல்; புழை - துளை; காண - வெளிப்பட; பொருள் - காரணம்; மருங்கு - அருகில்; இரட்டி - இருமடங்கு; பூணுதல் - பெருகுதல்)

''பொன் போன்ற வடிவு கொண்ட போர் செய்யும் வீரக்கழல் அணிந்தவர்களே! என் மூக்கு இருந்த இடத்தில் இப்பொழுது இரண்டு துளைகள் மட்டும் வெளிப்பட்டுத் தோன்றும்படி என் மூக்கை அறுத்ததற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்க முடியுமோ? இவள் பேரழகி; இவளுடைய இந்த இனிய உருவத்தைக் கொண்டு நம்மிடமே இருந்து விடுவாள்; வேறு எங்கும் செல்ல மாட்டாள். அதனால் மற்றவர்கள் இவளைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார்கள்'' என்று கருதித்தானே என்னுடைய மூக்கினை அறுத்து விட்டீர்கள்? எனவே நீங்கள் தவறு செய்தவர்கள் ஆக மாட்டீர்கள்; அதனை நன்கு உணர்ந்ததனால்தான் எனக்கு உங்களிடம் முன்பு இருந்ததை விட இரட்டிப்பு மடங்கு அன்பு பெருகியது. என்னை என்ன ''அறிவில்லாதவள் என்று நினைத்தீர்களா?'' என்று சூர்ப்பணகை, தன் மூக்கரியப் பட்டதற்கு ஒரு காரணம் கற்பித்துக் கொள்கிறாள்.

தான் மூக்கறுபட்டதற்கு அவள் கூறும் காரணம் கீழ்த்தரமானதாயிருந்தாலும், வியப்பிற்கு உரியதாவதை உணர்க.

133. ''வெப்பு அழியா நெடுவெகுளி வேல்அரக்கர்
ஈதுஅறிந்து வெகுண்டு நோக்கின்,
அப்பழியால், உலகனைத்தும், நும் பொருட்டால்,
அழிந்தனஆம்; அறத்தை நோக்கி,
ஒப்பு அழியச் செய்கிலார் உயர்குலத்துத்
தோன்றினோர்; உணர்ந்து நோக்கி,
இப்பழியைத் துடைத்து, உதவி, இனிது இருத்திர்!
என்னோடும்'' என்று, இறைஞ்சி நின்றாள். (2966)

(அழியா - மாறாத / நீங்காத; நெடு - பெரிய; ஒப்பு - ஒருங்கே; வெப்பு - கொதிப்பு / கொடுமை / வெம்மை)

கொதிப்பு அடங்காத பெருங்கோபத்தையுடைய வேற்படையை ஏந்திய அரக்கர்கள் நீங்கள் என் உறுப்புக்களை அறுத்துவிட்டீர்கள் என்பது தெரிந்து, சினத்தால் கோபித்துப் பார்த்தார்கள் என்றாலே, நீங்கள் செய்த இந்தக் காரியத்தால் உங்களை மட்டுமல்ல, இந்த உலகத்தையே அழித்து விடுவார்கள்; பொதுவாக உங்களைப் போன்று உயர்ந்த குலத்தில் தோன்றியவர்கள் தங்கள் பொருட்டு உலக மக்கள் அழிவதைச் கருத மாட்டார்கள். எனவே அரச தருமத்தைக் கருதி ஆலோசித்துப் பார்த்து, இத்தகைய பெரிய பழியை நீக்கிக் கொண்டு, உலகம் உய்யவும் உதவி செய்து, என்னை மணம் செய்து கொண்டு என்னுடனேயே மகிழ்ச்சியாக இருந்து விடுங்கள்'' என்று வேண்டிக் கேட்டுக் கொண்டு வணங்கி நின்றாள் சூர்ப்பணகை.

அரக்கர்களின் கோபத்திற்கு இரண்டு அடைமொழிகள் தருவதைக் கவனியுங்கள். நெடுவெகுளி; வெப்பு அழியா வெகுளி; என்பன அவர்களின் இயல்பான குணத்தைக் குறிப்பதாகும். அவளுடைய வாதத்திறமையை நோக்குங்கள். என்னுடைய மூக்கை அரிந்தது இருக்கட்டும். இந்த உலகத்தார் எல்லாம் அழிந்து படாதிருப்பதற்காக வாவது என்னை நீங்கள் மணம் செய்து கொண்டே ஆக வேண்டும் என்றும் கூறும் திறம் உணர்க. இது தண்ட உபாயத்தால் கூறியது. இதனால் நீங்கள் மூன்று பயன்களைப் பெறுகிறீர்கள். ''ஒன்று உங்களுக்கு வந்த பழியைத் துடைத்துக் கொள்ளுகிறீர்கள்; இரண்டு இவ்வுலகம் அழியாமல் உதவி செய்கிறீர்கள்; மூன்று உங்கள் மகிழ்ச்சிக்காக என்னை மணந்து கொள்கிறீர்கள்'' என்ற அவள் திறத்தை உன்னுக. அரச தருமத்தையும், உயர்குடிப் பிறந்தோர் நல்லெண்ணத்தையும், உலக நன்மையையும் கருத்தில் கொள்ளுங்கள் என்று அவள் மேம்போக்காகக் கூறினாலும், அதில் தன்னலம் தொனிப்பதை நன்கு உணர முடிகிறதல்லவா? இதுதான் கம்பனின் கவித்திறம்.

134. இராமன் சூர்ப்பணகையைக் கடிந்து கூறுதல்

நாடறியாத் துயர் இழைத்த நவைஅரக்கி
நின்அன்னை தன்னை நல்கும்
தாடகையை, உயிர் கவர்ந்த சரம் இருந்தது;
அன்றியும் நான் தவம் மேற்கொண்டு,
தோள்தகைய துறுமலர்த்தார் இகல் அரக்கர்
குலம் தொலைப்பான் தோன்றி நின்றேன்;
போடு அகலப் புல்ஒழுக்கை; வல்அரக்கி!''
என்று இறைவன் புகலும் பின்னும். (2967)

(நாடு - உலகம; நவை - குற்றம்; சரம் - அம்பு; தகை - அழகு; துறு - அடர்ந்த; இகல் - மாறுபாடு; தொலைப்பான் - அழிக்கும் பொருட்டு; போடு - எறிந்துவிடு; அகல - தொலைவில்; புல் - புல்லிய / அற்பமான; ஒழுக்கை - ஒழுக்கத்தை; நல்கும் - வெற்றவனான)

''இதுவரை இவ்வுலகம் அறிந்திராத துன்பத்தை உண்டாக்கிய குற்றமுற்ற அரக்கியாகிய நின் அன்னை கேகசியை ஈன்றெடுத்த உன் பாட்டி தாடகையின் உயிரை அழித்த அம்பு இன்னும் என்னிடம் இருக்கிறது; அது மட்டுமல்லாமல், நான் தவத்தை மேற்கொண்டு, தோள்களில் அழகிய அடர்ந்த மலர்மாலைகளை அணிந்த பகைவர் களாகிய அரக்கர்களின் குலத்தைப் பூண்டோடு அழிப்பதற்காகவே அவதரித்து வந்து இங்கே தங்கியிருக்கிறேன். கொடிய அரக்கியே! உன்னுடைய அற்பமான நடத்தையை அப்பால் எறிந்துவிடு'' என்று எல்லோர்க்கும் தலைவனாகிய இராமபிரான் இன்னும் சிலவற்றைக் கூறலானான்.

தாடகையை இராவணன் தன் பாட்டி என்றும், அவள் மைந்தர்கள் இராவணனை மாமன் முறை கொண்டு கூறியதாலும், சூர்ப்பணகையைப் பெற்றெடுத்த கேகசியை, நேராக ''தாடகை'' என்றார் என்க. தனது அவதாரத்தின் உண்மை நிலையை ஒருவாறு கூற முற்படுகிறான் இராமன் என்பது தெரிகிறது. அதனால் தான் இறுதியடியில் கவிஞன்''இறைவன்'' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறான் என்பதைக் காண்க. ''புல் ஒழுக்கு'' என்றது அவளது பொருந்தாக் காமத்தை.

135. இராமன் தனது நோக்கம் பற்றிக் கூறுதல்

''தரைஅளித்த தனி நேமித் தயரதன்
தன் புதல்வர் யாம்; தாய் சொல்தாங்கி
விரை அளித்த கான் புகுந்தேம்; வேதியரும்
மாதவரும் வேண்ட, நீண்டு

கரை அளித்தற்கு அரிய படைக்கடல் அரக்கர்
குலம் தொலைத்துக் கண்டாய், பண்டை
வரை அளித்த குலமாட நகர்புகுவேம்;
இவை தெரிய மனக்கொள்'' என்றான். (2968)

(தரை - பூமி; தனிநேமி - ஏகச்சக்ராதிபதி; தாங்கி - தலைமேற்கொண்டு; விரை - நறுமணம்; வரை - மலை; அளித்த - போன்ற; குவி - சிறந்த; தெரிய - விளங்கும்படி / தெளிவாக; கரை அளித்தல் - காத்தல்)

''இந்த பூமியை முழுதும் அரசாட்சி செய்த ஒப்பற்ற ஆணைச்சக்கரத்தை உடைய தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தர்கள் நாங்கள்; எங்கள் தாயாகிய கைகேயியின் சொற்களைத் தலைமேற்கொண்டு, இந்த நறுமணமுள்ள கானகத்திடையில் வந்து தங்கி இருக்கிறோம்; இங்குள்ள வேதங்களில் வல்லவராகிய அந்தணர்களும், பெரும் தவசிகளும் எங்களை வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நீண்ட, அளவிடற்கரிய கடல் போன்ற படையை உடைய அரக்கர்களின் கூட்டத்தை வேரோடு அழிக்கவும், அதன்பின், தொன்மையான, மலையை ஒத்த சிறந்த மாட மாளிகைகளை உடைய அயோத்தி நகருக்குச் செல்லவும் உறுதி பூண்டிருக்கிறோம்; இதனை நீ நன்கு மனத்தில் பதியும்படி அறிந்து கொள்வாயாக!'' என்றான் இராமன்.

தனிநேமி என்பது ஏகச்சக்ராதிபதி என்பதன் தமிழாக்கம்; தந்தையின் பெருமை, தாயின் ஆணை, தம் வாழ்வின் நோக்கம் மூன்றையும் ஒரே பாடலில் கூறிய திறம் நோக்குக.

136. இராமன் சூள் உரைத்தல்

''நெறித்தாரை செல்லாத நிருதர் எதிர்
நில்லாதே, நெடிய தேவர்
மறித்தார்; ஈண்டு இவர் இருவர்; மானிடவர்
என்னாது, வல்லை ஆகின்,
வெறித்தாரை வேல்அரக்கர், விறல் இயக்கர்
முதலினர், நீ மிடலோர் என்று
குறித்தாரை யாவரையும் கொணருதியேல்,
நின் எதிரே கோறும்'', என்றான். (2969)

(தாரை - ஒழுங்கு / கூர்மை; நிருதர் - அரக்கர்கள்; நெடிய - பெரிய; மறித்தல் - தோற்றுப் புறமுதுகிட்டு ஓடுதல்; வல்லை - வல்லவள்; வெறி - நாற்றம் / புலால் நாற்றம்; விறல் - வெற்றி; மிடல் - வலிமை; கோறுதல் - கொன்று குவித்தல்)

''ஒழுக்க நெறியில் ஒழுங்காகச் செல்லாத இயல்புடைய அரக்கர்களின் எதிரே நிற்கமாட்டாமல், போர் செய்ய அஞ்சி, பெரிய பிரமன் போன்ற தேவர்களே தோற்றுப் புறமுதுகிட்டுத் திரும்பி ஓடினார்கள்;

இங்கிருக்கின்ற இவர்கள் இரண்டு மனிதர்கள்தானே என்று அலட்சியமாக நினைக்காது, உனக்கு உண்மையிலேயே நல்ல ஆற்றல் இருக்குமானால், புலால் நாற்றம் வீசுகின்ற கூரிய வேற்படையை உடைய அரக்கர்கள், வெற்றியையுடைய உன் தமையனான குபேரனைத் தலைவனாகக் கொண்ட யட்சர்கள் முதலியவர்களோடு, நீ மிக்க வலிமையுடையோர் என்று கருதப்படுபவர்கள் எல்லோரையும் இங்கே அழைத்து வருவாயானால், உன்கண் எதிரிலேயே அவர்கள் அனைவரையும் கொன்று குவிக்கிறேன்'' அதனை நீ காண்பாயாக!'' என்றான் இராமன்.

137. சூர்ப்பணகை மீண்டும் கூறுதல்

கொல்லலாம்; அவர் மாயங்கள் குறித்தனவே
கொள்ளலாம்; கொற்றம் முற்ற
வெல்லலாம்; அவர் இயற்றும் வினை எல்லாம்
கடக்கலாம்; மேல்வாய் நீங்கிப்
பல்லெலாம் உறத் தோன்றும் பகுவாயள்
என்னாது, பார்த்தி ஆயின்,
நெல்லெலாம் சுரந்து அளிக்கும் நீர்நாட!
கேள்'' என்று நிருதி கூறும். (2970)

(சுரத்தல் - விளைவித்தல்; உற - நன்கு; பகு - திறந்த / பெரிய / பிளந்த; கொற்றம் - வெற்றி; முற்ற - முழுவதும்; வினை - சூழ்ச்சி; நிருதி - அரக்கி)

''நெல் முதலிய தானியங்களை எல்லாம் விளைவித்து உலகிற்கு அளித்து மக்களைக் காக்கும் மருத நில நீர்வளமுள்ள கோசல நாட்டின் வேந்தனே! நான் கூறுவதைக் கேட்பாயாக! மேலே உள்ள வாய் அறுபட்டு, வாயினுள்ளே இருக்கும் பற்களெல்லாம் நன்கு வெளியே தோன்றும்படி அளவுக்கதிகமாகப் பிளந்த பெரிய வாயை உடையவள் தானே இவள் என்று என்னை இகழாது, நீ என்னைக் காதல் கொண்டு நோக்குவாயானால், நீ அந்த அரக்கர்களைக் கொல்லலாம்; அவர்கள் செய்ய இருக்கும் வஞ்சகச் செயல்களை என் மூலம் முன்னதாகவே அறிந்து கொள்ளலாம்; அவர்கள் வெற்றி முழுவதும் முடிவு பெறுமாறு அவர்களை வெல்லலாம்; அவர்கள் இயற்றுகின்ற தீயவினைகள் எல்லாவற்றிலிருந்தும் நாம் தப்பிக் கடந்து விடலாம்'' என்று அரக்கியாகிய சூர்ப்பணகை இன்னும் சில சொல்லுகிறாள்.

இங்கே ஒன்று கருத வேண்டும். இலக்குவன் சூர்ப்பணகையின் காது, மூக்கு, முலைக்கண்ணைத் தான் அரிந்தான் என்று இதுவரை நம்மை நம்பவைத்திருந்தான் கவிஞன். இப்பொழுது இலக்குவன் மேற்கண்ட உறுப்புக்களை அரிந்தபோது அவளுடைய மேல்வாயும், புறஉதடும் உடன் அறுபட்டுப் போயிற்று என்பதை அவள் மூலமாகவே கூறவைத்திருக்கிறான் கவிஞன். அவள் மேல் வாய் அறுபட்டதனால் அவளுடைய பற்கள் இப்போது நன்றாக வெளித் தோன்றும்படி வாய் அகன்று பிளந்து

திறந்திருக்கிறது. எனவே அவள் மிக விகாரமான தோற்றம் பெற்றிருந்தாள் என்பதை நம் கண்முன் கொண்டு வருகிறான் கவிஞன். முன்பாடல் ''ஈண்டு இங்கு இருவர் மானிடவர் என்னாது'' என்று கூறியதை அவள் அப்படியே திருப்பி, ''மேல்வாய் நீங்கிப் பல்லெலாம் உறத் தோன்றும் பகுவாயள் என்னாது'' என்று கூறும் நயத்தினை நோக்குக. நாடு எப்படி நிலவளம் சுரக்கிறதோ, அது போல இராமனும் தன் மேல் காதல் வளம் சுரக்க வேண்டும் என்பதால் தான் இங்கே இந்த உவமையைக் கையாண்டிருக்கிறான் கம்பன் என்க.

138. ''காம்பு அறியும் தோளாளைக் கை விடீர்,
எனினும், யான் மிகையோ? கள்வர்
ஆம்பொறிஇல் அடல் அரக்கர் அவரோடே
செருச்செய்வான் அமைந்தீராயின்,
தாம்பொறியின் பல மாயம் தரும்பொறிகள்
அறிந்து, அவற்றைத் தடுப்பென் அன்றே?
''பாம்பு அறியும் பாம்பின் கால்'' என மொழியும்
பழமொழியும் பார்க்கிலீரோ?'' (2971)

(காம்பு - மூங்கில்; அறியும் - போன்ற; மிக - அதிகம்; பொறி - அறிவு / திரு / வழி / சூது / இயந்திரம் / தந்திரம்; செரு - போர்; கால் - தங்குமிடம் / புழை / பாழி / பற்று; பார்த்தல் - அறிதல்)

''இளம் மூங்கிலை யொத்த மெல்லிய தோள்களை உடைய சீதையைத் தாங்கள் ஒதுக்கித் துறந்துவிட மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். என்றாலும் நான் உங்களுக்கு மற்றொரு மனைவியாவது மிகுதியாகுமோ? குற்றமாகுமோ? வஞ்சகர்களும், அறிவற்றவர்களும், வலிமையுடையர் களுமாகிய அரக்கர்களுடன் நீங்கள் போர் செய்ய முனைந்திர்களானால், அவர்களுடைய சூழ்ச்சியால் அவர்கள் செய்கின்ற பல விதத் தந்திரங்களையும், அவர்கள் பயன்படுத்தும் எந்திரங்களையும் நான் நன்கு அறிந்தவள். ஆதலின் அவற்றை முன் கூட்டியே உங்களுக்குத் தெரிவித்து அதைத் தடுத்து விடுவேன் அல்லவா? பாம்பு தங்குகின்ற இடமாகிய புதையைப் பற்றிப் பாம்புக்குத் தானே நன்கு தெரியும்? அது வேற்றாராகிய உங்களுக்கு எப்படித் தெரியும். உலகத்தார் கூறும் பழமொழியை நீங்கள் அறிய மாட்டீர்களா?'' என்றாள் சூர்ப்பணகை.

பொதுவாக மெல்லிய தோள்களுக்கு மூங்கிலை உவமை கூறுவது கவிமரபு. இங்கே ஓர் அரக்கி சூர்ப்பணகை தன் வலிய தோள்களின் ஆற்றலால்தான் அவர்கள் பகைவர்களிடமிருந்து தப்பிக்க முடியும் என்றும், மெல்லிய தோள்களையுடைய சீதையை உடன் வைத்துக் கொண்டு அவர்கள் ஏதும் செய்ய முடியாது என்றும் கூற விழைகிறாள். என்றாலும் அவளை இராமன் வெறுத்து ஒதுக்கிவிட மாட்டான் என்றும் தானே கூறிவிடுகிறாள். அவன் மீதுள்ள ஆசை காரணமாக, அவள்

இருந்தாலும், என்னையும் கூடச் சேர்த்துக் கொண்டால் அது குற்றமாகுமா? பலமனைவியரை மணக்கும் உரிமை ஆடவர்க்கு உண்டு என்று தன் தவறான எண்ணத்திற்குச் சமாதானம் கூறிக் கொள்ளுகிறாள். இவளைச் சேர்த்துக் கொள்வதால் உண்டாகும் நன்மைகளையும் கூறுகிறாள். வஞ்சகர்களாகிய அரக்கர்களின் வஞ்சகச் செயல்களை அவ்வப்போது அறிந்து அது தங்களைத் தாக்காதவாறு முன் கூட்டியே அதைத் தடுக்கும் வழிமுறைகளைச் சொல்லித் தருவேன் என்கிறாள். அதற்கு ஒரு பொருத்தமான உவமையையும் கூறுகிறாள். மெல்லிய லாளாகிய சீதையைக் கைவிடாமல், வலிய தோள்களையுடைய என்னையும் சேர்த்துக் கொள்ளுதல் குற்றமாகாது என்று நிறுவுகிறாள் சூர்ப்பணகை. இதுவும் ஒரு வகையில் தான உபாயமாகும். ''புலம்மிக்க வரைப் புலமை தெரிதல் புலம் மிக்கவர்க்கே புலனாம்; நலம் மிக்க பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே, பாம்பறியும் பாம்பின் கால்'' என்பது பழமொழி நானூறு(5).

139. ''உளம் கோடல் உனை இழைத்தாள் உள்ள் ஒருத்தி
என்னுதியேல், நிருதரொடும்
களம் கோடற்குரிய செரு கண்ணியக்கால்,
ஒருமூவேம் கலந்த காலைக்
குளம் கோடும் என்று இதுவும் உறுகோளே?
என்று உணரும் குறிக்கோள் இல்லா,
இளங்கோவோடு எனை இருத்தி, இருகோளும்
சிறை வைத்தற்கு இளையேன்'' என்றாள். (2972)

(கோடல் - வைத்துக் கொள்ளுதல்; இழைத்தாள் - விரும்பச் செய்தவள்; நிருதர் - அரக்கர்; கண்ணுதல் - கருதுதல் / நினைத்தல்; கலத்தல் - ஒருங்கு சேர்தல்; இருகோள் - சூரியசந்திரர்; இளைத்தல் - சளைத்தல் / குறைபடுதல்; குளம் கோடல் - குழிபறித்தல் / ஒழித்தல்; உறுகோள் - துன்பம் / நிகழ்ச்சி / சம்பவம்)

''உன்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒருத்தி சீதை உனக்கு மனைவியாக இருக்கிறாள் என்று நீ கூறுவாயானால், அரக்கர்களோடும் போர்க்களம் செல்லுதற்கு நீ கருதுகின்ற போது, நீ, நான், உன் இளவல் இலக்குவன் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து எதிர்க்கும் போது, அவர்களைக் குழி பறித்து வென்று வெற்றி காண்போம் என்பது நான் கூறுவதும் உனக்குத் துன்பம் தருவதோ? இதனை உணர்ந்தும், ஒரு குறிக்கோள் இல்லாது என்னை வருத்திய உன் இளவல் இலக்குவனோடாவது என்னைச் சேர்த்து வைத்தாயானால், சூரிய சந்திரன் ஆகிய இரண்டு கிரகங்களையும் சிறைப்பிடித்து அடக்கியவனான இராவணனுக்கு நான் தங்கை என்பதையும், அவனுக்கு எந்த விதத்திலும் நான் தாழ்ந்தவள் அல்லள் என்பதையும் உங்களுக்குக் காட்டுவேன்'' என்றாள் சூர்ப்பணகை.

உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சீதையைத் தவிர நீ வேறு ஒரு பெண்ணை மனத்தாலும் நினைக்க மாட்டேன் என்று ஏகபத்தினிவிரதனாக இருப்பாயானால், என்னை உன் இளவல் இலக்குவனோடாவது இருக்குமாறு செய்வாயாக என்று விரும்பிக் கேட்கிறாள் சூர்ப்பணகை. அவன் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு காரணமும் கூறுகிறாள்; ஒரு வேளை நீ அரக்கர்களுடன் போர் செய்ய வேண்டும் என்று கருதினால், நான், நீ, இலக்குவன் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் போரில் வெற்றி காணலாம். நானில்லாது சீதையை வைத்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் நீங்கள் வெற்றி பெற முடியாது என்கிறாள் சூர்ப்பணகை.

140. ''பெரும்குலா உறுநகர்க்கே ஏகும் நாள்,
வேண்டும் உருப்பிடிப்பேன் நன்றே;
அருங்கலாம் உற்று அரிந்தான் என்னினும், ஈங்கு
இளையவன் தான் அரிந்த நாசி,
ஒருங்குஇலா இவளோடும் உறைவேனோ?
என்பானேல், இறைவ! ஒன்றும்
மருங்கு இலாதவளோடும் அன்றோ நீ
நெடுங்காலம் வாழ்ந்தது? என்பாய்'' (2973)

(குலாம் - மகிழ்ச்சி / கொண்டாட்டம்; பிடிப்பேன் - மேற்கொள்வேன்; கலாம் - கோபம்; ஒருங்கு - முழுதும்; உறைதல் - வாழ்தல்; இறைவ - அரசனே; மருங்கு - இடை; ஒன்றும் - சிறிதும்)

''பெரிய மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் உடைய உங்களுடைய தலைநகரானஅயோத்திக்கு நீங்கள்திரும்பிச்செல்லும் நாள்அன்று, நீங்கள் விரும்பும் நல்ல உருவத்தை நான் மேற்கொள்வேன்; தணித்தற்கரிய கோபம் கொண்டு, என் மூக்கினை அரிந்தான் என்றாலும் உன் தம்பி இலக்குவன் ஒழுங்கான மூக்கு முழுவதும் இல்லாத - குறை மூக்குடைய - இவளோடும் நான் எப்படி வாழ்வேன் என்று கேட்பானேயானால், தலைவனே, நீ எப்படி சிறிதும் இடையே இல்லாத சீதையோடு நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறாயோ அதை எடுத்துச் சொல்லி, அவனை அமைதிப்படுத்தி, என்னை மணந்து கொள்ளும் படி வற்புறுத்துவாயாக!'' என்றாள் சூர்ப்பணகை.

இடையில்லாதது, அவளுடைய அழகை மிகுதிப்படுத்தும்; மூக்கு இல்லாதது அழகின்மையை மிகுதிப்படுத்தும். இடை நூல் போலிருப்பது இயற்கை; மூக்கில்லாதது செயற்கை. இவளுடைய சொற்களும், செய்கைகளும், இவளுடைய காதலின் இழிவினை எடுத்துக் காட்டுவனவாக அமைதல் காண்க. சீதைக்கு இடை இல்லாததை முன்பும் கவிஞன் ''மருங்கிலா நங்கை'' என்றும், ''பொய்யோ எனும் இடையாள்'' என்றும் ''வெளியன்னதோர் இடையாள்'' என்றும் கூறியிருப்பதை நோக்குக.

141. இலக்குவன் சூர்ப்பணகையைக் கொல்லநினைத்தல்

என்றவள்மேல், இளையவன்தான், இலங்கு இலைவேல்
கடைக்கணியா, ''இவளை ஈண்டுக்
கொன்று களையேம் என்றால், நெடிது அலைக்கும்;
அருள்என் கொல்? கோவே''! என்ன,
''நன்று; அதுவே ஆம்அன்றோ? போகாளேல்
ஆக!'' என நாதன் கூற,
''ஒன்றும் இவர் எனக்கு இரங்கார்; உயிர் இழப்பேன்
நிற்கின்'', என, அரக்கி உன்னா. (2974)

(இலங்கு - விளங்குகின்ற; கடை - கடைக்கண்; கணியா - கணித்து / நோக்கி; களைதல் - ஒழித்தல்; அலைத்தல் - வருந்துதல்; அருள் - கட்டளை / உத்தரவு / ஆணை; ஈண்டு - இப்பொழுது; ஒன்றும் - சிறிதும்; நாதன் - தலைவன்; உன்னா - உன்னி / கருதி) (குளகப்பாடல்)

என்று அவ்வாறு கூறிய சூர்ப்பணகையின் மேல் ஏவுதற்காக இலக்குவன், தனது விளக்கம் பொருந்திய இலை வடிவுள்ள வேற்படையைக் கடைக் கண்ணால் நோக்கி, இராமனைப் பார்த்து, ''இவளை இப்பொழுது கொன்று ஒழிக்காவிட்டால், இவள் நம்மை நீண்ட காலத்திற்கு வருத்திக் கொண்டே இருப்பாள்; தாங்கள் கட்டளை என்ன அரசே?'' என்று கேட்கவும்; நீ நினைப்பது தான் சரி; அவள் இவ்விடம் விட்டு அகன்று செல்ல வில்லை என்றால் அவ்வாறே செய்க! என்று தலைவனான இராமன் கூறவும், சூர்ப்பணகை ''இவர்கள் என்மேல் சிறிதும் இரக்கம் காட்ட மாட்டார்கள்; இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நின்றிருப்பேன் என்றால், என் உயிரை இழந்து விடுவேன்'' என்று கருதி - பாடல் தொடர்கிறது.

இங்கே இலக்குவன் தன் விற்படையை நோக்காது வேற்படையை நோக்கியது காண்க. காரணம் சூர்ப்பணகை அவனுக்கு மிக அருகில் நிற்கிறாள். எனவே வில் தேவையற்றது என்று கருதி வேற்படையை நோக்கினான் என்க.

142. சூர்ப்பணகை அவர்களை எச்சரித்துச் செல்லுதல்

''ஏற்ற நெடுங்கொடி மூக்கும், இருகாதும்
முலைஇரண்டும் இழந்தும் வாழ,
ஆற்றுவனே? வஞ்சனையால், உமை உள்ள
பரிசு அறிவான் அமைந்த தன்றோ?
காற்றினிலும், கனலினிலும், கடியானைக்
கொடியானை, கரனை, உங்கள்
கூற்றுவனை, இப்பொழுதே கொணர்கின்றேன்''
என்று சலம் கொண்டு போனாள். (2975)

(ஆற்றுதல் - சகித்துக் கொள்ளுதல்; பரிசு - தன்மை; கூற்றுவன் - இயமன்; சலம் - தணியாத கோபம்)

''என் அழகிய உருவத்திற்கு ஏற்ற நீண்ட, உயர்ந்த கொடி போன்ற மூக்கையும், இரண்டு காதுகளையும், இரண்டு கொங்கைகளையும் இழந்த பின்பும், உங்களுடன் சேர்ந்து வாழ என்னால் பொறுத்துக் கொள்ள முடியுமோ? தந்திரத்தால், உங்களிடம் உள்ள உண்மையான நோக்கம் என்ன என்று அறிந்து கொள்ளும் பொருட்டே இவ்வாறு நாடகம் ஆடினேன். இப்பொழுது உங்களை நன்றாகப் புரிந்து கொண்டேன். எனவே காற்றைக் காட்டிலும் விரைவானவனும், நெருப்பைக் காட்டிலும் கொடியவனுமாகிய, என் அண்ணன் கரன் என்னும் அரக்கனை, உங்கள் உயிரைக் கவரும் இயமன் போன்றவனை இப்பொழுதே அழைத்துக் கொண்டு வருகின்றேன்'' என்று தணியாத சினம் கொண்டு அவ்விடம் விட்டு அகன்றாள் சூர்ப்பணகை.

முன்பு ''மேக்குயர்ந்த மூக்கும் மடந்தையர்க்கு மிகையன்றோ'' என்று கூறியவள் இப்பொழுது ''ஏற்ற நெடுங்கொடி மூக்கு'' என்பதனை நோக்குக. சலம் என்பது தணியாது, நெடிது நிற்கும் சினத்தைக் குறிக்கும். இந்தச் சினம்தான் இராவணன் இறுதியில் இறக்கும் வரை நின்று காரியமாற்றியது என்பதை நினைவிற்கொள்க. முதலில் உண்மை யிலேயே இராமன்பால் காம இச்சை கொண்டு வந்தவள், இப்பொழுது இவர்கள் இருவருமே தங்கள் கொள்கைகளில் உறுதியாய் இருக்கிறார்கள் என்பதை அறிந்தவுடன், தான் இதுகாறும் கூறியவை, செய்தவை அனைத்தும் ஒரு கபட நாடகமே என்று கூறிச் சமாளிப்பது வியப்பிற்குரியதன்றோ?

சூர்ப்பணகைப் படலம் நிறைவுற்றது

6. கரன் வதைப் படலம் [192 பாடல்கள்]

இராமபிரான் இடம் விட்டு அகன்று சென்ற சூர்ப்பணகை, தன் அண்ணன் கரனிடம் சென்று முறையிட, கரன் தன் படைகளுடன் புறப்பட்டு வர, அவர்களை இராமபிரான் தனியாகவே நின்று வதைத்து அழித்த செய்திகளைக் கூறும் படலம் என விரியும். இப்படலம் 192 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''கர தூடணாதியர் வதைப் படலம்'' எனவும் சில சுவடிகளில் ''கரதூடணாதி வதைப் படலம்'' எனவும் இன்னும் சில சுவடிகளில் ''கரன், தூடணன், திரிசிரா வதைப் படலம்'' எனவும் தலைப்பிடப்பட்டுள்ளன. சில சுவடிகள் இந்த ஒரு படலத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து ''கரன் தலைவர் வதைப் படலம்'', ''திரிசிரா வதைப்படலம்'', ''தூடணன் வதைப் படலம்'', ''கரன் வதைப் படலம்'' என்றும் தலைப்பிட்டிருக்கின்றன. இன்னும் சில சுவடிகளில் இதனை மூன்று பகுதிகளாகப் பிரித்து ''திரிசிரா வதைப் படலம்'', ''தூடணன் வதைப் படலம்'', ''கரன் வதைப் படலம்'' எனவும் தலைப்புகள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. எவ்வாறேனும் இவர்கள் அனைவருக்கும் தலைவன் கரன்; எனவே அவன் பெயரையே தலைப்பாகக் கொடுத்து ''கரன் வதைப் படலம்'' என்று இம்மூவரின் வதையையும் கூறுவது இப்படலம்.

இங்கே வான்மீகிக்கும், கம்பனுக்கும் உள்ள ஒரே ஒரு வேறுபாட்டை நினைவிற் கொள்ளுதல் தகும். வான்மீகி முன்னே தூடணனும், அடுத்துத் திரிசிராவும், பின்னர் இறுதியில் கரனும் வதை படுகிறார்கள் என்கிறார். ஆனால் கம்பனோ, முன்னே திரிசிராவும், அடுத்துத் தூடணனும், முடிவில் கரனும் மாய்கிறார்கள் என்று கூறுகிறான். இவர்களுக்கும் இராவணனுக்கும் உள்ள உறவு முறை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். பிரமன் மகன் புலஸ்தியன். அவன் மகன் விச்ரவசு; விச்ரவசுவுக்கு இரண்டு மனைவியர். ஒருத்தி கேகசி, மற்றொருத்தி கும்பீனசி. இவர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள். கேகசிக்கும் விச்ரவசுவுக்கும் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை, வீடணன் ஆகியோர்; கும்பீநசிக்கும் விச்ரவசுவுக்கும் பிறந்தவர்கள் கரன், தூடணன் ஆகியோர். எனவே கரனும், தூடணனும் இராவணனுக்குத் தந்தை வழியாலும், தாய் வழியாலும் உடன்பிறந்த தம்பியர் என்பதாம். திரிசிரா, கரனின் படைக்குத் தனித் தலைவன். அவ்வளவே.

இப்படலத்துள், சூர்ப்பணகை கரனிடம் சென்று, தான் பட்ட இன்னலை எடுத்துக் கூறுதல்; கரன் சினந்து எழுதல்; அவனை விலக்கி பதினான்கு வீரர்கள் போர் மேல் செல்லுதல்; சூர்ப்பணகை அவர்களை அழைத்துச் சென்று இராமனைச் சுட்டிக் காட்டுதல்; இலக்குவன் தானே சென்று போர் புரிவதாக இராமனிடம் வேண்டுதல்; இராமன் அவனை விலக்கி, சீதைக்குக் காவலாக இருக்குமாறு பணித்து, தானே தனியாகப் புறப்படுதல்; அரக்க வீரர் பதினால்வரும் மடிதல்; சூர்ப்பணகை அரற்றிக் கொண்டு மீண்டும் கரனிடம் ஓடுதல். கரன் வெகுண்டு எழ நாற்படையும் தொடர்ந்து செல்லுதல்,; இராமன் இடத்தை அடைதல்; இலக்குவன் மீண்டும் இவ்வாய்ப்பைத் தனக்குத் தருமாறு வேண்டுதல்; சூர்ப்பணகை கரனுக்கு இராமனைக் காட்டுதல்; தீய நிமித்தம் தோன்றுதல்; அகம்பன் கரனுக்கு அறிவுறுத்தல்; கரன் புறக்கணித்துப் போர் மேல் செல்லுதல்; எல்லோரும் இராம பாணத்தால் அழிதல்; பதினான்கு படைத்தலைவரும் அழிதல் - திரிசிரா போருக்கு வருதல்; சேனைகள் அழிதலும் திரிசிரா வானில் எழுந்து மாயப் போர் புரிதலும், அவன் இருதலைகள் அறுந்து போதல்; ஒரு தலையுடன் போர் செய்து, பின் மாளுதல்; சேனைகள் சிதறி ஓடுதல்; சிதறி ஓடிய வீரரைத் தூடணன் தேற்றி அழைத்துப் போர் செய்ய வருதல்; இராமன் கணைகளுக்குத் தூடணனும் பலியாதல்; இப்போது கரன் சினந்து போர் மேல் செல்லல்; இராமன் போர் செய்யும் போது அவன் வில் இற்றுப் போதல்; வானவர்கள் அஞ்சுதல்; முன்னர்ப் பரசுராமனிடமிருந்து பெற்ற வில்லை எண்ணிப் பின்னால் கை நீட்டுதல், அதைக் காத்து வந்த வருணன் அதை இராமனுக்குத் தருதல்; இறுதியில் கரன் மடிதல்; இமையவர் மகிழ்தல்; முனிவர்கள் உடன்வர இராமன், சீதை இருக்குமிடம் அடைதல்; சூர்ப்பணகை இந்த அழிவு கண்டு, அழுது புலம்பி, இலங்கைக்கு இராவணனைக் காணச் செல்லுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப் பெற்றிருக்கின்றன.

1. சூர்ப்பணகை கரன் முன்விழுந்து முறையிடுதல்

இருந்த மாக்கரன் தாள் இணையின் மிசை,
சொரிந்த சோரியள், கூந்தலள், தூம்பு எனத்
தெரிந்த மூக்கினள், வாயினள், செக்கர்மேல்
விரிந்த மேகம் என விழுந்தாள் அரோ! (2976)

(சோரி - குருதி / இரத்தம்; தூம்பு - மதகின்துளை; செக்கர் - செவ்வானம்; மா - பெருமை; இணை - இரண்டு; மிசை - மீது)

இரத்தம் பெருக்கெடுத்தோடும் உடலையும், அவிழ்ந்து அலைந்த கூந்தலையும், மதகின் துளை போன்று தோன்றுகின்ற துவாரங்களை யுடைய மூக்கினையும், அகன்று திறந்த வாயினையும் உடைய சூர்ப்பணகை, செவ்வானத்தின்மேல் நிற்கின்ற கரிய மேகம் போல ஓடிவந்து, ஜனஸ்தானத்தில் இருந்த பெருமை பொருந்திய கரனது இரண்டு பாதங்களிலும் வந்து விழுந்தாள்.

செவ்வானம் அவளுடைய குருதி நிறைந்த உறுப்புக்களுக்கும்; செம் பட்டைத் தலை முடிக்கும் உவமை; கரிய மேகம் அவளுடைய உடலுக்கு உவமை; இவ்வாறு கரன் இருந்த ஜனஸ்தானத்தை ''திரி கண்டகம்'' என்று ஆனந்த ராமாயணம் குறிப்பிடுகிறது. இந்த இடம் இப்போது ''திரியம்பகம்'' என வழங்கப்படுகிறது என்று கூறுவர்.

2. ''அழுங்கும் நாள் இது'' என்று, அந்தகன் ஆணையால்
தழங்கு பேரிஎனத் தனித்து ஏங்குவாள்,
முழங்கும் மேகம் இடித்த வெம்தீயினால்
புழுங்கும் நாகம் எனப் புரண்டாள் அரோ? (2977)

(அழுங்குதல் - அழிதல்; அந்தகன் - இயமன்; தழங்கு - முழங்குகின்ற; புழுங்குதல் - வெதும்புதல்; பேரி - முரசம்; தீ - இடி)

''அரக்கர்கள் அழியப் போகின்ற நாள் இன்று'' என்று இயமனின் கட்டளையால் அதை அறிவிப்பதற்கு முழங்குகின்ற முரசொலி போல, தனியே நின்று இரங்கி அழுகின்ற சூர்ப்பணகை, ஒலிக்கின்ற மேகம் இடிக்கின்ற போது எழுகின்ற கொடிய தீப்போன்ற இடிக்கு அஞ்சி வெதும்புகின்ற பாம்பினைப் போல, கரனின் தாள்களில் விழுந்து புரண்டு அழுதாள்.

இன்று சூர்ப்பணகை அழுகின்ற ஒலி, அரக்கர்களின் அழிவு நாளை முன் கூட்டியே அறிவிக்கின்ற இயமனின் முரசொலியாம் என்கிறான் கவிஞன்.

3. கரன் சூர்ப்பணகையிடம் கேட்டல்

வாக்கின் கோபப் புகை முந்து வாயினான்,
நோக்கி ''கூசலர், நுன்னை இத்தன்மையை
ஆக்கிப் போனவர், ஆர்கொல்?'' என்றான்; அவள்
மூக்கின் சோரி முழீஇக்கொண்ட கண்ணினான். (2978)

(முழீஇக்கொண்ட - ஆழ்ந்து பதிந்த; கூசுதல் - அஞ்சுதல்; வாக்கு - சொல்)

தன் பாதத்தில் வந்து விழுந்து புரள்பவளாகிய சூர்ப்பணகையின் மூக்கிலிருந்து பெருகும் இரத்தத்தில் தன் விழிகளை ஆழப்பதித்த கண்களைக் கொண்ட கரன், தான் பேசப்போகும் கொடிய சொற்களுக்கு முன்னால் எழுகின்ற கோபம் பொருந்திய புகை முந்தி வரப்பெறுகின்ற வாயையுடையவனாய், அவளை நோக்கி, '' சிறிதும் அஞ்சாது, வெட்கப் படாது, ஒரு பெண்ணாகிய உன்னை இந்நிலைக்கு ஆட்படுத்திப் போனவர்கள் யார்?'' என்று கேட்டான்.

பின்னால் கூறப்போவது கொடுஞ்சொல். அது தீச்சொல், அதிலிருந்து முன்னால் எழுவது புகை. அந்தப் புகையைத் தன் வாயில் கொண்டவன் என்று அவனுடைய கோப மிகுதி புலப்படுத்தப்பட்டது. நெருப்பு உண்டாவதற்குமுன் புகை தோன்றுதல் இயல்பு. கூசலர் என்பது அஞ்சுதல்

என்றும், வெட்கப்படுதல் என்றும் இருபொருளைத் தந்து நின்றது காண்க. நீ இராவணன் தங்கை என்று அறிந்தும் அஞ்சாது உன்னை இந்நிலைக்கு ஆளாக்கியவர் யார்? என்றும் நீ ஒரு பெண் என்று தெரிந்தும் வெட்கப்படாமல் உன்னை இந்நிலைக்கு ஆளாக்கியவர் யார் என்றும் இருபொருள்படும்.

4. சூர்ப்பணகை கூறுதல்

இருவர்; மானிடர்; தாபதர்; ஏந்திய
வரிவில் வாள்கையர்; மன்மதன் மேனியர்;
தரும நீரர்; தயரதன் காதலர்;
செருவில் நேரும் நிருதரைத் தேடுவார். (2979)

(தாபதர் - தவவேடம் கொண்டவர்; நீரர் - நீர்மையுடையவர் / தன்மையுடையவர்; காதலர் - புதல்வர்கள்; நேர்தல் - எதிர்ப்படுதல்; நிருதர் - அரக்கர்; செரு - போர்) (குளகப் பாடல்)

இரண்டு மனிதர்கள்; தவவேடம் பூண்டவர்கள்; கைகளில் கட்டமைந்த வில்லும், வாளும் ஏந்தியவர்கள்; மன்மதன் போல அழகான மேனியும் உருவமும் கொண்டவர்கள்; அறத்தின் தன்மை கொண்டு நடப்பவர்கள்; தசரதச்சக்கரவர்த்தியின் மைந்தர்கள்; போரில் எதிர்ப்படும் அரக்கர்களைத் தேடித்திரிபவர்கள் - பாடல் தொடர்கிறது.

5. ''ஒன்றும் நோக்கலர் உன்வலி; ஓங்கு அறம்
நின்றுநோக்கி நிறுத்தும் நினைப்பினார்;
வென்றி வேல்கை நிருதரை வேர் அறக்
கொன்று நீக்குதும்'' என்று உணர் கொள்கையார்.'' (2980)

(ஓங்கு - சிறந்த; நோக்கி - பாதுகாத்து; ஒன்றும் - சிறிதும் / சற்றும்; நோக்குதல் - எண்ணுதல் / கருதுதல்; உணர்தல் - உறுதி பூணுதல் / தீர்மானித்தல்; கொள்கை - கோட்பாடு / சங்கற்பம் / இலட்சியம்)

''உன்னுடைய வலிமையை ஒரு பொருட்டாகச் சிறிதும் கருதாதவர்கள்; செழித்து விளங்குகின்ற அறத்தின் வழி தாமும் நின்று, அதைப் பாதுகாத்து, அதை நிலைநிறுத்துகின்ற கருத்து உடையவர்கள்; வெற்றி பொருந்திய வேற்படையைக் கையில் ஏந்தித்திரியும் அரக்கர்களைக் கருவோடு வேரறுத்து ஒழித்து நீக்குவோம் என்ற தளராத கோட்பாடு உடையவர்கள்'' - பாடல் மேலும் தொடர்கிறது.

கரன் கேட்ட கேள்விக்கு இன்னும் அவள் நேராகப் பதில் கூறவில்லை என்பதை உணர்க. அவர்களின் தோற்றத்தையும், ஆற்றலையும், கொள்கையையுமே பாராட்டுகின்றாளே தவிர அவர்கள் ஏன் இவ்வாறு செய்தார்கள் என்று கூறவில்லை. இன்னொன்று. தன்னை இந்த இழி நிலைக்கு ஆளாக்கியவர்களைப் புகழ்ந்து பேசுவதாகவே தெரிகிறதே தவிர கோபமாக, ஆவேசமாக ஏதும் கூறியதாகவும் இல்லை என்பதையும்

உணர்க. இவையனைத்தும் வேண்டாத செய்திகள். இவற்றை இவள் முற்படுத்திக் கூறுதற்குக் காரணம், அவர்களிடத்துக் கரன் வெறுப்பும் கோபமும் மிகுதியாகக் கொள்ளவேண்டும் என்பதாலேயாம்.

6. மண்ணில், நோக்க அரும் வானினில், மற்றினில்,
எண்ணி நோக்கு உறின், யாவரும் நேர்கிலாப்
பெண்ணின் நோக்கு உடையாள், ஒரு பேதை, என்
கண்ணின் நோக்கி, உரைப்பஅரும் காட்சியாள். (2981)

(நோக்குதல் - காணுதல்; நேர்கிலா - ஒப்பாகாத; பேதை - பெண்; காட்சி - தோற்றப்பொலிவு; நோக்கு - அழகு)

இம்மண்ணுலகத்திலும், நம்மால் எளிதில் காணமுடியாத விண்ணுலகத்திலும், இவை தவிர்த்த மற்ற பாதாளம் மற்றும் உள்ள எல்லா உலகங்களிலும், ஆராய்ந்து பார்க்குமிடத்து, வேறுயாரும் இவளுக்கு நிகர் என்று கூறமுடியாத ஒரு பேரழகு வாய்ந்த பெண் ஒருத்தி அவர்களுடன் இருக்கிறாள். அவளுடைய அழகை என் கண்களால் காணவும், வாயாற் சொல்லவும் அரிதான மிக அழகான தோற்றப் பொலிவுடையவள்.

''சீதையின் பேரழகுக்கு உவமை கூற என்னால் முடியாது'' என்று கம்பன் பாலகாண்டத்தில் கூறியதையும் அங்கங்கே அவள் அழகு பற்றிக் கூறியவற்றையும் இங்கே நினைவிற் கொள்க.

7. ''கண்டு, நோக்கஅரும் காரிகையாள் தனைக்
கொண்டு போவன் இலங்கையர் கோக்கு'' எனா,
விண்டுமேல் எழுந்தேனை, வெகுண்டு, அவர்
துண்டம் ஆக்கினர் மூக்கு'' எனச் சொல்லினாள். (2982)

(கோ - அரசன்; காரிகை - அழகுடையவள்; விண்டு - கருதி)

''அத்தகையவளைக் கண்டு, காண்டற்கரிய பேரழகுடைய இவளை, நமது இலங்கையின் தலைவனான அண்ணன் இராவணனிடம் எடுத்துக் கொண்டு போகலாம் என்று கருதி, அவளை எடுப்பதற்காக அவள் மேல் பாய்ந்த பொழுது, இவர்கள், என்மேல் வெகுண்டு, என்னுடைய மூக்கையும் மற்ற உறுப்புக்களையும் கண்டதுண்டமாக வெட்டி விட்டார்கள்'' என்று கூறிமுடித்தாள் சூர்ப்பணகை.

துண்டம் என்ற சொல்லுக்கே மூக்கு என்ற ஒரு பொருளும் உண்டு. சூர்ப்பணகை, சீதையை இராவணனுக்காக எடுக்கச் சென்றதாக இங்கு கூறியது, வான்மீகத்திற் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

8. கரன் சினந்து எழுதல்

கேட்டனன் உரை; கண்டனன் கண்ணினால்
தோட்ட நுங்கில் தொளைஉறும் மூக்கினை;

"காட்டு" எனா, எழுந்தான்; எதிர்கண்டவர்
நாட்டம் தீய, உலகை நடுக்குவான். (2983)

(தோட்ட - தோண்டியெடுக்கப்பட்ட; நுங்கு - பனங்காய்; நாட்டம் - கண்கள்)

தன் எதிரில் நின்று தன்னைப் பார்ப்பவர்களுடைய கண்களெல்லாம் கருகிப் போகும்படி கோபம் கொண்டு, இவ்வுலகத்தையே நடுக்கமுறச் செய்பவனான கரன், சூர்ப்பணகை இவ்வாறு கூறியவற்றைக் கேட்டான்; தோண்டியெடுக்கப்பட்ட பனங்காயின் தொளைகள் போல் தோன்றும் மூக்கினையும் தன் கண்களால் கண்டான்; "உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்களை எனக்குக் காட்டு" என்று சொல்லி, மிக்க கோபத்துடன் எழுந்தான்.

மூக்கறுபட்டு, துவாரங்கள் மட்டுமே வெளித்தெரிந்த சூர்ப்பணகையின் முகத்தின் தோற்றத்திற்கு நுங்கு தோண்டியெடுக்கப்பட்டபின் விளங்கும் பனங்காய் மிகப் பொருத்தமான உவமை என்பதை நன்கு உணர்க. கேட்பதும், காண்பதும் உண்மையை அறிவதற்கு நுழைவாயில்களே என்றாலும் ஆராய்ச்சியின் வழி அவை போதா என்பதாம். "கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீரவிசாரிப்பதே மெய்" என்ற பழமொழி இங்கு நினைவு கூரத்தகும்.

9. எழுந்துநின்று, உலகேழும் எரிந்து உகப்
பொழிந்த கோபக் கனல் உகப் பொங்குவான்,
"கழிந்து போயினர் மானிடர்" என்னுங்கால்,
அழிந்ததோ இவ்அரும்பழி? என்னுமால். (2984)

(உகுதல் - கெடுதல் / அழிதல் / சிந்துதல்; பழி - நிந்தனை / அபகீர்த்தி)

அவ்வாறு கோபத்தால் எழுந்து நின்ற, கரன் இவ்ஈரேழு பதினான்கு உலகங்களும் எரிந்து பொடிப் பொடியாய்ச் சிதறிப் போகும்படி கோபம் கொண்டு, "நான் இம்மானிடர்களை அழித்து விட்டேன்" என்றாலும் நம் அரக்கர்களுக்குண்டான இப்பெரும்பழி அழிந்ததாகுமோ? என்று கேட்டான்.

என்னால் இம்மானிடர்கள் அழிந்துபட்டாலும், நமக்கு வந்த "இராவணனின் தங்கை மானிடர்களால் மூக்கறுபட்டாள் என்னும் இந்தப் பெரும்பழி அழிந்து படாதே" என்று கரன் நொந்தான் என்பது கருத்து.

10. கரன்எழ, பதினால்வரும் தாம்போகமுன்வருதல்

"வருகதேர்" எனும் மாத்திரை, மாடுஉளோர்,
இருகை மால்வரை ஏழினோடு ஏழ்அனார்,
ஒருகையால் உலகுஏந்தும் உரத்தினார்,
"தருக இப்பணி எம்வயின் தான்" என்றார். (2985)

(மாத்திரை - அளவு; மாடு - பக்கம்; ஏந்தும் - தாங்கும்; மால் - பெரிய; வரை - மலை; உரம் - வலிமை)

''என்னுடைய தேர் தயார் நிலையில் வரட்டும்'' என்று கரன் ஆணையிட்ட நொடிப் பொழுதில், அங்கு அவன் அருகில் இருந்த அவனுடைய இரண்டு கைகளையுடைய, பெரிய மலை போன்ற பேருருவமுடைய பதினான்கு படைத்தலைவர்களும், ஒவ்வொருவரும் தனது ஒரு கையாலேயே இந்த உலகம் முழுவதையும் தாங்கும் ஆற்றல் பெற்றவர்களும் ''இந்த முறை போர் செய்யும் பணியை எங்களிடம் தந்தருள்வீராக'' என்று வேண்டிக் கொண்டனர்.

மாத்திரை என்பது ஒரு நொடிப் பொழுது, கண்ணிமைக்கும் நேரம் அல்லது கை நொடிக்கும் நேரம். கரனது படைத் தலைவர்கள் பதினான்கு பேர் என்பதும் அவர்கள் ஒவ்வொருவரும் இவ்வுலகை ஒரு கையினாலேயே தாங்கும் பேராற்றல் படைத்தவர்கள் என்பதும் புலப்படுத்தப்பட்டது.

11. சூலம், வாள், மழு, தோமரம், சக்கரம்,
காலபாசம், கதை, பொரு கையினார்;
வேலைஞாலம் வெருஉறும் ஆர்ப்பினார்;
ஆலகாலம் திரண்ட அன்ன ஆக்கையார். (2986)

(மழு - கோடாலி; தோமரம் - இருப்பு உலக்கை; கதை - தண்டம்; வேலை - கடல்; வெரு - அஞ்சும்; ஆக்கை - யாக்கை / உடல்; காலபாசம் - இயமனின் பாசக் கயிறு) (குளகப் பாடல்)

முத்தலைச் சூலம், வாள், கோடாலி, இரும்பு உலக்கை, சக்கரம் இயமனுடைய பாசக்கயிறு போன்ற கயிறு, தண்டாயுதம் முதலிய வற்றைப் போர் செய்வதற்காகக் கொண்டுள்ள கையை உடையவர்கள். கடல் சூழ்ந்த இவ்வுலகமே அஞ்சும்படியாக ஆர்ப்பரிக்கின்றவர்கள். ஆலகால விடமே ஒன்று திரண்டு வந்தாற் போன்ற கரிய உடலை உடையவர்கள் - பாடல் தொடர்கிறது.

பாற்கடல் கடைந்த காலத்தில் முதலில் தோன்றிய நஞ்சு ஆலகாலம் எனப்படும்.

12. வெம்பு கோபக் கனலர் விலக்கினார்;
''நம்பி! எம்அடிமைத் தொழில் நன்று'' எனா,
''உம்பர்மேல் இன்று உருத்தனை போதியோ?
இம்பர்மேல் இனி யாம் உளமோ?'' என்றார். (2987)

(வெம்புதல் - கொதித்தல்; உம்பர் - தேவர்; உருத்து - சினந்து; இம்பர் - இத்தரை; விலக்குதல் - தடுத்தல்; நம்பி - தலைவன்)

கொதிக்கின்ற கோபத்தீயைக் கொண்டவர்களான அப்பதினான்கு படைத்தலைவர்களும், கரனை நோக்கி, ''தலைவனே! எங்கள் சேவகத்

தொழில் மிக நன்றாக இருக்கிறது என்று தங்களைத் தாங்களே இகழ்ந்து நொந்து கொண்டு, இப்பொழுது நீ என்ன தேவர்களுடன் கோபித்துக் கொண்டா போர் செய்யப் போகிறாய்? இரண்டு மானிடர்களுடன் போர் செய்யச் செல்லும்படி எங்களை ஏவாமல் நீயே போருக்குச் சென்றால், நாங்கள் இவ்வுலகில் எதற்காக உயிருடன் இருக்கிறோம்'' என்று கேட்டு, கரன் போருக்குச் செல்வதைத் தடுத்தனர்.

தேவர்களுடன் அன்றி மானிடர் மேல் போருக்குச் செல்லுதல் கரன் போன்ற ஆற்றலுடையவர்களுக்குத் தகுதியன்று, அதற்கெனவே தாங்கள் இருப்பதாகவும் அவர்கள் கூறி அவனைத் தடுத்தனர் என்பதாம்.

13. கரன் அதற்கு இசைதல்

''நன்று சொல்லினீர்! நான் இச்சிறார்கள் மேல்
சென்று போர்செயின், தேவர் சிரிப்பரால்;
கொன்று, சோரிகுடித்து, அவர் கொள்கையை
வென்று, மீளுதிர் மெல்லியலோடு'' என்றான். (2988)

(வென்று - அழித்துமாம்)

''நன்றாகச் சொன்னீர்கள்; நான் இந்த மானிடச் சிறுவர்கள் மேல் போர் தொடுத்துச் சென்றால் நம்மைப் பார்த்து நமக்குப் பகைவர்களாகிய தேவர்கள் எள்ளி நகையாடுவார்கள். எனவே நீங்களே சென்று அவர்களுடன் போர் தொடுத்து, அவர்களைக் கொன்று, அவர்களின் இரத்தத்தைக் குடித்து, அவர்களின் நோக்கத்தை அழித்து, அவர்களுடன் உறைகின்ற அந்த மென்மைத் தன்மை வாய்ந்த பெண்ணோடு திரும்பி வாருங்கள்'' என்று கட்டளையிட்டான் கரன்.

அவர் கொள்கை என்பது அவர்களது கோட்பாடாகிய அரக்கர்களைக் கொன்று அறத்தை நிலை நிறுத்துவது என்பதாம். வலியார், மெலியார் மேல் செல்வது தகாது. பகைவர் பழித்தற்கு இடமாகும் என்றவாறு. போர் செய்து வென்று வருவதுடன் சீதையையும் சிறைப்பிடித்து வாருங்கள் என்று கூறியிருப்பதையும் நோக்குக. நிலவுலகில் நிகழும் நிகழ்ச்சிகளை வானுலகிலிருந்து பார்த்து மகிழ்வது தேவர்களின் இயல்பு. எனவே தேவர் சிரிப்பர் என்றான் என்க.

14. பதினான்கு பேரும் இராமன் இருக்குமிடம் சென்று சேர்தல்

என்னலோடும், விரும்பி, இறைஞ்சினார்,
சொன்ன நாண்இலி, அந்தகன் தூதுஎன,
அன்னர் பின்படர்வார் என ஆயினார்,
மன்னன் காதலர் வைகுஇடம் நண்ணினார். (2989)

(நாண்இலி - சூர்ப்பணகை; அந்தகன் - இயமன்; மன்னன் - தசரதன்; நண்ணுதல் - அடைதல்; படர்தல் - செல்லுதல்)

அவ்வாறு கரன் இசைந்து கூறியதும், மகிழ்ச்சியுற்ற பதினான்கு வீரர்களும், அவனைக் கை தொழுது வணங்கினார்கள். தன் அங்கம் அறுக்கப்பட்டதைத் தானே நேரில் வந்து சொல்லிய வெட்கமற்றவளான சூர்ப்பணகை, இயமன் அனுப்பிய தூது போல. முன்னே செல்ல, அப்பதினால்வரும் அவள் பின்னே தொடர்ந்து செல்வாராயினர். சென்று, தசரதச்சக்கரவர்த்தியின் அன்புடைய மக்கள் தங்கியிருக்கின்ற இடத்தை அடைந்தனர்.

நாண்இலி என்ற சொல் மங்கல நாண் அற்ற விதவையான சூர்ப்பணகை என்றும் பொருள் தரும். தான் பங்கப்பட்டதைத் தானே நேரில் வந்து கூறியதாலும், தகாத முறையில் மானிடர்களிடத்துப் பொருந்தாக்காமம் கொண்டமையாலும், அவர்களையே அளவு கடந்து புகழ்ந்து பேசியதாலும் அவள் நாண்இலி என்று அழைக்கப்பட்டாள் என்க. இந்தச் சூர்ப்பணகை, இயமன் அனுப்பிய தூதி போல முன்னால் செல்ல, பதினால்வரும் தொடர்ந்து சென்றார் என்றதனால் இவர்கள் வென்றுமீளார் இறந்துபடுவர் இயமனிடத்திற்கே செல்கிறார்கள் என்ற குறிப்புத் தோன்ற முன்கூட்டியே அவர்களின் விதி பற்றிக் கவிஞன் கூறியிருப்பதை உணர்ந்து இன்புறுக.

15. சூர்ப்பணகை அவர்களுக்கு இராமனைச் சுட்டிக் காட்டுதல்

துமிலப் போர் வல்அரக்கர்க்குச் சுட்டினாள்,
அமலத்தொல் பெயர் ஆயிரத்து ஆழியான்,
நிமலப்பாதம் நினைவின் இருந்த அக்
கமலக் கண்ணனைக் கையினில் காட்டினாள். (2990)

(அமலன் - குற்றமற்றவன்; தொல் - பழமையான; நிமலன் - குறை யில்லாத / பரிசுத்தமான; துமிலம் - பேராரவாரம்; நினைவு - தியானம்)

குற்றமற்ற தொன்மையான ஆயிரம் நாமங்களையுடையவனும், சக்கரத்தைக் கையில் ஏந்தியவனுமான திருமாலின், பரிசுத்தமான பாதங்களையே தியானித்துக் கொண்டிருந்த, தாமரை மலர் போன்ற கண்களையுடைய இராமபிரானைச் சூர்ப்பணகை, பேராரவாரத்தோடு போர் செய்வதில் வல்லவர்களான பதினான்கு அரக்கர் படைத் தலைவர்க்கும் தன் கையால் சுட்டிக் காட்டினாள்.

பேராரவாரம் செய்து கொண்டு போர் செய்ய வருகிற அரக்கர்களுக்கு, ஆரவாரமின்றி மௌனமாகத் தியானத்தில் ஆழ்ந்திருந்த இராமபிரானைச் சுட்டிக் காட்டினாள், என்று இருவேறுபட்ட நிலையைக் கூறிய நயம் உணர்க. பெயர் ஆயிரம் என்பது சகஸ்ர நாமத்தைக் குறிக்கும். மலம் - குற்றம்; நிமலம் - குற்றத்தினின்று விடுபட்டது என்பது பொருள். அமலப்

பெயர் என்பது தன்னை உச்சரித்தவர்களின் கருமங்களை ஒழிக்கும் திருநாமம் எனப் பொருள்படும்.

16. அவர்கள் இராமனைச் சுற்றி நிற்றல்

''எற்றுவாம் பிடித்து ஏந்தினம்'' என்குநர்,
''பற்றுவாம் நெடும்பாசத்தின்'' என்குநர்,
''முற்றுவாம் இறைசொல் முறையால்'' எனா,
சுற்றினார் வரை சூழ்ந்துஅன்ன தோற்றத்தார். (2991)

(எற்றுதல் - மோதுதல் / தாக்குதல்; பற்றுதல் - கைக்கொள்ளுதல் / கட்டுதல்; இறை - தலைவன் / கரன்; முற்றுதல் - நிறைவேற்றுதல்; வரை - மலை; சுற்றுதல் - வளைத்துக் கொள்ளுதல்; ஏந்துதல் - ஓங்குதல்)

''இவனைப் பிடித்துத் தரையில் ஓங்கி மோதிப் பின் கைகளில் ஏந்திக் கொள்வோம்'' என்று கூறுபவர்களும், ''இவனை நீண்ட பாசக்கயிற்றால் கட்டிப் போடுவோம்'' என்று கூறுபவர்களும், ''நம் தலைவன் கரன் கூறியவாறு அம்முறையிலேயே நிறைவேற்றிவிடுவோம்'' என்று கூறுபவர்களுமாக, மலைகள் போன்ற தோற்றமுடைய அவ்வரக்கர்கள் இராமனைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

எற்றுவாம் பிடித்து ஏந்தினம் என்றது, பந்து போல முதலில் அடிப்போம், அது திரும்பி வரும் போது பிடித்துக் கொள்வது போலக் கையால் பிடித்துக் கொள்வோம் என்று கூறியவாறு என்க. இறைசொல் முறை என்றது, முன்பு கரன் கூறியது ''கொன்று, சோரி குடித்து, அவர் கொள்கையை வென்று, மீளுதிர் மெல்லியலோடு'' என்பதைக் குறிக்கும்.

17. இராமன் தானே போருக்கு எழுதல்

ஏத்து வாய்மை இராமன், இளவலை,
''காத்தி தையலை'' என்று, தன் கற்பகம்
பூத்தது அன்ன பொருஇல் தடக்கையால்
ஆத்த நாணின் அருவரை வாங்கினான். (2992)

(ஏத்து - போற்றத்தக்க; ஆத்த - யாத்த / கட்டப்பட்ட; இளவல் - தம்பி / இலக்குவன்; தையல் - பெண் / சீதை; பூத்தல் - விளங்குதல்; வாங்குதல் - கைக்கொள்ளுதல்)

எல்லோராலும் போற்றிப் புகழத்தக்க வாய்மையையுடைய இராமன், தன் தம்பி இலக்குவனை நோக்கி, ''சீதையைக் காத்துக் கொண்டிரு'' என்று கூறிவிட்டு, கற்பகம் போன்று பொலிவு பெற்று விளங்குவதும், ஒப்பற்றது மான தனது பெரிய கைகளால், கட்டப்பட்ட நாணையுடைய, அழித்தற்கு அரிய மலையைப் போன்ற வில்லைக் கையில் எடுத்தான்.

''கற்பகக்காவு பற்பல அன்ன தோள் ஆயிரம் தழைத்த நெடியோய்'' என்பது திவ்வியப்பிரபந்தம்; ''கற்பகக்கா அன நற்பல தோளற்கு'' என்பது பெரியாழ்வார் திருமொழி.

18. இராமன் அவர்களோடு போர் செய்தல்

வாங்கி, வாளொடு வாளிபெய் புட்டிலும்
தாங்கி, தாமரைக் கண்ணன், அச்சாலையை
நீங்கி, ''இவ்வழி நேர்மின் அடா!'' எனா,
வீங்கு தோளன், மலைதலை மேயினான். (2993)

(வீங்கு - பூரித்த / பருத்த; வாங்கி - வளைத்து; புட்டில் - தூணி; மலைதல் - போர் செய்தல்; மேவுதல் - தொடங்குதல்; வாளி - அம்பு)

செந்தாமரை மலர் போன்ற கண்களையுடையவனான இராமன், போர் நேர்ந்தது பற்றி மகிழ்ந்து பூரித்த தோள்களை உடையவனாய், அவன் கைக்கொண்டிருந்த வில்லை வளைத்து, உடைவாளை இடுப்பில் செருகி, அம்புகளை அம்பறாத் தூணியில் இட்டு நிரப்பி அதைத் தன் தோள்களில் சுமந்து கொண்டு, அத்தவச்சாலையை விட்டு நீங்கி வெளியே வந்து, ''இந்தப் பக்கம் வந்து போர் செய்யுங்களடா'' என்று கூறிக்கொண்டே போர் செய்யத் தொடங்கினான்.

அடா என்பது இழிந்தோரைக் குறிக்கும் விளிச் சொல்.

19. அவர்களுடைய கைகளை அறுத்தல்

மழுவும், வாளும், வயங்குஒளி முச்சிகைக்
கழுவும், காலவெம்தீ அன்ன காட்சியார்,
எழுவின் நீள் தடக்கை எழுநான்கையும்,
தழுவும் வாளிகளால் தலம் சார்த்தினான். (2994)

(காலம் - ஊழிக்காலம் / பிரளயம்; காட்சி - தோற்றம்; சிகை - தலை; எழு - தூண்; எழுநான்கு - இருபத்தி எட்டு; தழுவும் - பொருத்தமான; தலம் - நிலம்; கழு - சூலம்; சார்த்தல் - சேர்த்தல் / விழச் செய்தல் / வீழ்த்துதல்)

ஊழிக்கால முடிவில் தோன்றும் கொடிய நெருப்புப் போன்ற தோற்றத்தையுடைய அந்தப் பதினான்கு படைத்தலைவர்களின் கோடாலிகள், வாள், ஒளி வீசுகின்ற முத்தலைச் சூலங்கள் ஆகிய ஆயுதங்களை ஏந்திய தூணைப் போன்று திரண்டு நீண்ட பெரிய கைகள் இருபத்தெட்டையும் குறிதப்பாது தாக்கும் பொருத்தமான அம்புகளால் துணித்து, அவற்றை நிலத்தில் விழும்படிச் செய்தான் இராமன்.

போரின் தொடக்கத்திலேயே அப்பதினான்கு படைத் தலைவர்களின் கைகளையும் துணித்து விட்டான் இராமன் என்பதை உணர்க.

20. சூர்ப்பணகை கரனிடம் ஓடுதல்

மரங்கள் போல் நெடுவாளொடு தோள்விழ,
உரங்களான் அடார்ந்தார், உரவோன் விடு
சரங்கள் ஓடின தைக்க, அரக்கர்தம்
சிரங்கள் ஓடின; தீயவள் ஓடினாள். (2995)

(உரம் - மார்பு; அடர்தல் - நெருங்குதல்; உரவோன் - பேராற்றல் உடையவன்; சரம் - அம்பு; தைக்க - ஊடுருவிப்பாய)

வாள் போன்ற நீண்ட ஆயுதங்களை ஏந்திய தோள்கள், மரங்கள் வெட்டப்படுவது போலத் தரையில் விழவும், அதையும் பொருட் படுத்தாது, அப்படைத் தலைவர்கள் தங்கள் மார்புகளினால் போர் செய்ய நெருங்கினர்; எனினும் வலிமையுடையவனான இராமன் செலுத்திய அம்புகள் ஓடிச் சென்று ஊடுருவிப்பாய, அதன் காரணமாக அவர்களின் தலைகள் அறுபட்டு வீழ்ந்தன. இதனைக் கண்ட கொடியவளான சூர்ப்பணகையும், அச்சமுற்று, இதனைத் தெரிவிக்கக் கரனை நோக்கி ஓடலானாள்.

சரங்கள் ஓடின, சிரங்கள் ஓடின, தீயவள் ஓடினாள் என்ற சொல் நயமும் நிகழ்ச்சிகளின் விரைவும் கூறிய விதம் உணர்ந்து இன்புறத்தக்கன. சிரங்கள் ஓடின என்பது தலை அறுபட்டு இறந்தனர் என்பதைக் குறிக்கும்.

21. கரனிடம் நிகழ்ந்தது கூறுதல்

ஒளிறுவேல் கரற்கு உற்றது உணர்த்தினாள்;
குளிறுகோப வெம்கோள் அரிமா அட,
களிறு எலாம்பட, கை தலைமேல்உற,
பிளிறி ஓடும்பிடி அன்ன பெற்றியாள். (2996)

(குளிறுதல் - முழங்குதல்; கோள் - வலிமை; அரிமா - சிங்கம்; அடுதல் - கொல்லுதல் / போரிடுதல்; படுதல் - இறந்து ஒழிதல்; பிளிறுதல் - கர்ஜனை / பேரொலி; பிடி - பெண்யானை; களிறு - ஆண்யானை; பெற்றி - தன்மை; ஒளிறு - ஒளிரும் / விளங்குகின்ற)

பேரொலி செய்து கொண்டு, சினத்துடன் கொடிய வலிமையும் பெற்ற ஒரு சிங்கம், போரிட்டுக் கொன்றதால் ஆண்யானைகள் எல்லாம் இறந்து அழிய, தன் துதிக்கையைத் தன் தலைமேல் படியுமாறு வைத்துக் கொண்டு கர்ஜித்துக் கொண்டு ஓடுகின்ற ஒரு பெண்யானையைப் போன்ற தன்மையை உடையவளான சூர்ப்பணகை. ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வேற்படையை உடைய தன் அண்ணன் கரனிடம் அங்கு நிகழ்ந்தனவற்றை எல்லாம் அவன் உணருமாறு நன்கு கூறினாள்.

சிங்கம் - இராமன்; களிறுகள் - போர்ப் படைத் தலைவர்கள்; பிடி பெண்யானை - சூர்ப்பணகை; யானை சிங்கத்தைக் கண்டு அஞ்சி ஓடும்

போது தன் தலையில் தன் துதிக்கையை வைத்துக் கொண்டு ஓடுவது இயல்பு.

22. கரன் வெகுண்டு எழுதல்

''அங்கு அரக்கர் அவிந்து ஒழிந்தார்'' என,
பொங்கு அரத்தம் விழிவழிப் போந்து உக,
வெம்கரப் பெயரோன் வெகுண்டான்; விடைச்
சங்கரற்கும் தடுப்ப அரும் தன்மையான். (2997)

(அவிந்து - மாண்டு; விடை - காளை / எருது; சங்கரன் - சிவபெருமான்; வெம் - கொடிய; அரத்தம் - இரத்தம் / குருதி; போந்து - வந்து)

காளை வாகனத்தை உடைய அழித்தற் கடவுளான சிவபெருமானாலும் தடுப்பதற்கரிய பெரும் வல்லமை பெற்றவனான கொடிய கரன் என்னும் பெயர் கொண்டவனான அரக்கன், தன்னால் அனுப்பப்பட்ட பதினான்கு படைத்தலைவர்களும் அந்த இடத்திலேயே இறந்து ஒழிந்தார்கள் என்று சூர்ப்பணகை சொல்லக் கேட்டு, தன் உள்ளிருந்து பொங்கி எழுகின்ற இரத்தம், தன் கண்களின் வழியாக வெளிவந்து சிந்தும்படி மிக்கச் சினம் கொண்டான்.

இங்கே ஒரு இலக்கணச் செய்தி. பொதுவாக நாம் ரத்தம் என்பதைத் தமிழ் இலக்கணம் இரத்தம் என்று கூறும். ஆனால் இதையே அரத்தம் என்றும் உரத்தம் என்றும் கூறலாம். இலக்கணம் அதற்கு இடம் தருகிறது. ''ர-வ்விற்கும் முதலாம் முக்குறிலும்'' என்பது இலக்கணம்.

23. கரன் இட்ட கட்டளைகள்

''அழை என்தேர்''; ''எனக்கு ஆக்குவன் போர்ப்படை'';
''உழையர் ஓடி, ஒருநொடி, ஓங்கல் மேல்
மழையின் மாமுரசு எற்றுதிர் வல்'' என்றான்,
முழையின் வாள்அரி அஞ்ச முழங்குவான். (2998)

(முழை - குகை; வாள் - கொடிய; அரி - சிங்கம்; உழையர் - ஏவலாளர்கள் ஓங்கல் - யானை; மழை - மேகம்; முரசு - போர்ப் பறை; எற்றுதல் - அறைதல் / முழக்குதல் / அடித்தல்; படை - படைக்கலன்கள் / ஆயுதங்கள்; வல் - விரைவு)

குகைக்குள் பதுங்கியிருக்கும் கொடிய சிங்கம் கூட அஞ்சும்படி முழக்கம் செய்கின்றவனான கரன், தன் அருகிலிருக்கும் ஏவலாளர்களை அழைத்து, ''என்னுடைய தேரை அழையுங்கள் - கொண்டு வாருங்கள்; வலிய போருக்குரிய என்னுடைய சேனைகளையும், படைக்கலன் களையும் எனக்கு ஆக்குங்கள்; ஒரு நொடிப் பொழுதுக்குள் விரைவில் ஓடிப்போய், யானையின் மீது மேகம் போல முழங்குகின்ற போர் முரசை

ஏற்றி, அதனை முழக்கி, போரினை மக்களுக்கு அறிவியுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

24. தேர்ப்படை ஆயத்தமாகி வருதல்

பேரிஓசை பிறத்தலும், பெட்பு உறும்
மாரிமேகம் வரம்புஇல வந்து எனத்
தேரின் சேனை திரண்டது; தேவர்தம்
ஊரும், நாகர் உலகும் உலைந்தவே. (2999)

(பேரி - பேரிகை / முரசு / பறை; பெட்பு - பெருமை; உலைந்தன - நிலை குலைந்தன; வரம்பு - எல்லை; ஊர் - உலகம் / இடம்)

அவ்வாறு அடிக்கப்பட்ட போர்ப் பறைகள் ஒலித்த அளவில், பெருமை பொருந்திய மழையைப் பொழியும் மேகங்கள் கணக்கற்ற அளவில் வந்தது போல, தேர்ப்படை ஒருங்கு திரண்டு வந்தது; அவை வந்ததனால் தேவருலகமும், நாகர் உலகாகிய பாதாளமும் நிலை குலைந்து வருந்தலாயின.

மாரி மேகத்திற்கு தேர்ச் சேனை உவமை; கரனின் கோபத்தால் இராமனுக்கு என்ன நேருமோ என்று தேவர்களும், தேர்ப்படைகள் எல்லாம் ஒரே இடத்தில் ஒன்று திரண்டு நின்றதால் பாரம் தாங்காமல் பாதாளலோகமும் நிலை குலைந்து வருந்தின என்பதாம். மேல் கீழ் உலகங்களைக் கூறியதால், நடுவில் இருக்கும் மண்ணுலகும் வருந்தியது என்பது பெறப்படும்.

25. காலாட்படை திரண்டுவருதல்

போர்ப்பெரும் படை, பொம்மென் முழக்கமா,
நீர்த்தரங்கம் நெடுந்தடம் தோள்களா,
ஆர்த்து எழுந்தது; இறுதியின் ஆர்கலிக்
கார்க்கருங்கடல் கால் கிளர்ந்து என்னவே. (3000)

(தரங்கம் - அலைகள்; ஆர் - மிக்க; கலி - பேரொலி; கார் - மேகம்; கால் - காற்று; கிளர்தல் - பொங்கி எழுதல்; பொம் ஒலிக்குறிப்பு; இறுதி - ஊழிக்காலம் / பிரளயம்)

ஊழி இறுதிக் காலத்தில் மிக்க ஒலியுடைய மேகங்கள் கொண்ட பெரிய கடல், காற்றினால் பொங்கி எழுவதைப் போல, போர் செய்தற்குறிய பெரிய காலாட்படை, பொம்மென்று ஒலி செய்து கொண்டு, நீரிலுள்ள, அலைகளையே தங்களது நீண்ட பெரிய தோள்களாகக் கொண்டு ஆரவாரம் செய்து கொண்டு திரண்டு நின்றது.

ஊழிக்காலத்தின் கடல் ஆரவாரம், இப்பொழுது எழுந்த காலாட்படையின் பெரு முழக்கத்திற்கு உவமை.

26. காடு துன்றி, விசும்பு சுரந்து என
நீடி, எங்கும் நிரந்த நெடுங்கொடி;
''ஓடும் எங்கள் பசி'' என்று உவந்து, எழுந்து,
ஆடுகின்ற அலகையின் ஆடவே. (3001)

(துன்றி - நெருங்கி; கரந்து - மறைய; நிரந்த - பரவிய; அலகை - பேய்கள்; விசும்பு ஆகாயம்) (குளகப் பாடல்)

காடு முழுவதும் அடர்ந்து, ஆகாயத்தையும் மறைக்கும்படியாக நிமிர்ந்து ஓங்கி எல்லா இடங்களிலும் பரவியிருக்கின்ற நீண்ட கொடிகள், ''எங்கள் பசி தீர்ந்துபோகும் என்று மகிழ்ச்சி அடைந்து, எழுந்து நின்று கூத்தாடுகின்ற பேய்களைப் போல அசைந்து ஆடவும்,

கொடிகள் காற்றில் அசைவதற்குப் பேய்கள் களிப்பால் ஆடுதல் உவமை. போரில் அனைவரும் மாண்டு அதனால் கிடைக்கப்போகும் உணவையும், இரத்தத்தையும் எண்ணி மகிழ்ந்து பேய்கள் எழுந்து கூத்தாடின என்பதாம்.

27. தறியின் நீங்கிய, தாழ் தடக்கைத் துளைக்
குறிகொளா மதவேழக் குழு அனார்,
செறிவின் வாளொடு, வாள் இடை தேய்ந்து உகும்
பொறியின் கான் எங்கும் வெங்கனல் பொங்கவே. (3002)

(தறி - கம்பம் / தூண்; குறி - அடையாள மொழிகள்; செறிவு - நெருக்கம்; தேய்ந்து - உராய்ந்து; பொங்க - மூள; குறி கொள்ளுதல் - பொருட் படுத்துதல்)

தான் கட்டப்பட்டிருக்கின்ற கட்டுத் தறியினின்றும் வெளிப்பட்டு வந்தனவும், தாழ்ந்து நீண்டு தொங்குகின்ற பெரிய துளைகளையுடைய துதிக்கைகளையுடையனவும், பாகர்களின் அடையாள மொழிகளை ஒரு பொருட்டாக மதிக்காதனவும், மதம் கொண்டதுமான யானைக் கூட்டத்தைப் போன்று, நெருங்கி வருகின்ற காலாட் படையினரின் வாள்கள் ஒன்றோடு ஒன்று உராய்தலால் சிந்துகின்ற தீப்பொறிகள், அந்தக் காட்டில் எல்லா இடத்திலும் கொடிய நெருப்புப் போல் பற்றி மூண்டு எழவும் - பாடல் தொடர்கிறது.

கான் எங்கும் வெங்கனல் பொங்கப் போர்ப் பெரும்படை ஆர்த்து எழுந்தது என்பதாம். தன்னைக் கட்டியுள்ள தறியைக் கடுங்கோபத்தால் முறித்துத் தள்ளி விட்டுத் தடையின்றி வெளிச் செல்வது மதம் பிடித்த யானையின் இயல்பு. அதுபோல இவ்வளவு நாளும் போரில் ஈடுபடாது அடைபட்டுக் கிடந்த போர்ப் படை வீரர்கள், இப்போது போர் எழுந்தது என்று முரசறையக் கேட்டவுடனே தறியை முறித்துக் கொண்டு வெளிப்படும் யானையைப் போலத் தயாராகி வெளி வந்து ஆர்த்துத் திரண்டனர் என்பது கருத்து.

28. முருடு இரண்டும் முழங்குறத் தாக்கு ஒலி
உருள் திரண்டு எழும் தேர் ஒலியுள் புக,
அருள் திரண்ட அருக்கன் தன் மேல் அழன்று
இருள் திரண்டுவந்து ஈண்டியது என்னவே. (3003)

(முருடு - ஒருவகைப் பறை / மத்தளம்; உருள் - உருளை / சக்கரம்; புகுதல் - மறைதல்; அருக்கன் - சூரியன்; அழன்று - சினந்து; ஈண்டியது - நெருங்கியது)

முருடு என்னும் ஒரு வகை முரசின் இரண்டு பக்கங்களிலும் தாக்குவதால் எழுகின்ற பேரொலி, தேர்ப்படைகளின் சக்கரங்களிலிருந்து திரண்டு எழும் பேரொலியில் அடங்கிப் போகவும், கருணையே வடிவமாகத் திரண்டு எழுந்திருக்கின்ற சூரியன் மேல், கோபித்து, இருள் அடர்ந்து வந்து நெருங்கியது போலவும், காலாட்படையினர் திரண்டு வந்தனர்.

பேரிகைகளில் இருந்து எழுந்த ஒலி முழக்கம், தேர்ப்படை எழுந்து வருதலால் அவற்றின் சக்கரங்களில் இருந்து எழும் ஒலிக்குள் அடங்கிப் போயிற்று என்பதாம். எல்லோர்க்கும் ஒரே தன்மையாய்க் கருணை செய்யும் சூரியன்மேல், கோபம் கொண்டு, இருட்டு அவனை மறைக்க முயலுவதைப் போல, சூரிய குலத் தோன்றலான இராமபிரானை, கரிய நிறமுடைய அரக்கர்கள் போரிடுவதற்காக எழுந்தனர் என்பதாம்.

''இராம திவாகரன்'' என்றே இராமனை ஆசார்யஹ்ருதயம் பேசும். கதிரவன்முன்இருள்போலஇராமபிரான்முன்அரக்கர்கள்எளிதில்அழிவர் என்பதை முன்கூட்டியே நமக்குத் தெரிவிக்கின்றான் கவிஞன்.

29. தலையின் மாசுணம் தாங்கிய தாரணி
நிலை நிலாது முதுகை நெளிப்பு உற,
உலைவுஇல் ஏழ் உலகத்தினும் ஓங்கிய
மலையெலாம் ஒருமாடு தொக்க என்னவே. (3004)

(மாசுணம் - பாம்பு / ஆதிசேடன்; தாரணி - பூமி; உலைவுஇல் - அழிவில்லாத / கெடாத; மாடு - பக்கம்; தொக்கல் - குழுமுதல்; தாங்கிய - சுமந்து கொண்டிருக்கிற)

ஆதிசேடன்என்னும்பாம்புதன்தலையில்தாங்கிநிற்கின்றஇந்தப்பூமி, ஒரு நிலையில் இல்லாது, பாரத்தால் தன் முதுகைச் சற்று நெளிக்கவும், அழிவில்லாத இந்த ஏழு உலகத்திலும் ஓங்கி வளர்ந்துள்ள மலைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே பக்கத்தில் நிற்பது போலவும் தேர், காலாள் படைகள் திரண்டு நின்றன.

உலகத்திலுள்ள மலைகள் எல்லாம் ஒரே பக்கத்தில் வந்து நின்றால் எப்படி அந்தச் சுமையை பூமியால் தாங்கிக் கொள்ள முடியாதோ, அதே போல, கரன் ஆணையிட்டதால் எழுந்த தேர், காலாட் படைகள்

அனைத்தும் ஓரிடத்தில் திரண்டு எழுந்து நின்றதால் பூமித் தாய் பாரம் தாங்காது சற்றே முதுகை நெளித்துக் கொண்டாள் என்பது கருத்து. படைகளின் மிகுதி சிறப்பித்துக் கூறப்பட்டது. அரக்கர்களுடைய பேருருவத்திற்கு மலைகள் உவமை. பூமி சர அசரப் பொருள்கள் அனைத்தையும் தரித்து (தாங்கி) நிற்பதால், தாரணி எனப்பட்டது.

30. காலாட் படை வீரர்களின் தோற்றம்

''வல்லியக் குழாங்களோ? மழையின் ஈட்டமோ?
ஒல்இபத் தொகுதியோ? ஓங்கும் ஓங்கலோ?
அல்ல, மற்று அரிகளின் அனிகமோ?'' என,
பல் பதினாயிரம் படைக்கை வீரரே. (3005)

(வல்லியம் - புலி; மழை - மேகம்; ஒல் - ஒலி / ஆரவாரம்; இபம் - யானை; ஓங்கல் - மலை; அரி - சிங்கம்; அனிகம் - சேனைப்படை; குழாம், ஈட்டம், தொகுதி, அனிகம் - கூட்டம்; படை - படைக்கலன்கள் / ஆயுதங்கள்)

புலிகளின் கூட்டமோ? மேகத் தொகுதியோ? ஒலிக்கின்ற இயல்புடைய யானைக் கூட்டமோ? ஓங்கி உயர்ந்து வளர்ந்துள்ள மலைகளோ? இவையெல்லாம் அல்ல; சிங்கங்களின் சேனைதான் என்று காண்பவர்கள் கூறுமாறு, கைகளில் படைக்கலன்களை ஏந்தி வந்த படைவீரர்கள் பல பதினாயிரக்கணக்கானவர் ஆவர்.

புலி, அதன் பாய்ந்து தாக்கும் தன்மைக்கும், மேகக் கூட்டம் அதன் முழக்கத்திற்கும், யானை அதன் பேருருவத்திற்கும், கரிய நிறத்திற்கும், மலைகள் அவற்றின் சலியாத திண்மைக்கும் சிங்கம் அவற்றின் பீடுநடைக்கும் உவமைகளாம்.

31. தேர்களின் எழுச்சி

ஆளிகள் பூண்டன; அரிகள் பூண்டன;
மீளிகள் பூண்டன; வேங்கை பூண்டன;
ஞாளிகள் பூண்டன; நரிகள் பூண்டன;
கூளிகள் பூண்டன; குதிரை பூண்டன; (3006)

(ஆளி - யாளிகள்; பூண்டன - பூட்டுதல் / கட்டப்பட்டன; மீளி - பேய்கள்; வேங்கை - புலிகள்; ஞாளி - நாய்கள்; கூளி - பூதங்கள் / பிசாசுகள்)

அங்கு வந்த தேர்களில், யாளிகள், சிங்கங்கள், பேய்கள், புலிகள், நாய்கள், நரிகள், பூதங்கள், குதிரைகள் ஆகியவை பூட்டப்பெற்றிருந்தன. தேர்களை இவைகள் இழுத்துக் கொண்டு வந்தன.

யாளி என்பது யானை போல் துதிக்கையுடையதும், யானையைக் கொல்லும் ஆற்றல் பெற்றதும், சிறகுகள் உள்ளதும் போன்ற ஒரு மிருகம்.

இது முன்பு இருந்தது. இப்பொழுது இல்லை என்று கூறுவர். அரக்கர்களின் தேர்களில் பேய், பிசாசு, பூதங்களும் பூட்டப்பெற்றிருக்கும் என்பது அறிக.

32. ஏற்றினம் ஆர்த்தன; ஏனம் ஆர்த்தன;
காற்றினம் ஆர்த்தன; கழுதை ஆர்த்தன;
தோற்றின மாத்திரத்து உலகு சூழ்வரும்
பாற்றினம் ஆர்த்தன; பணிலம் ஆர்த்தன. (3007)

(ஏறு - காளை / சிங்கம்; ஏனம் - பன்றிகள்; ஆர்த்தல் - கட்டுதல் / பூட்டப்பெறுதல் / முழங்குதல்; தோற்றின - மனத்தில் தோன்றிய / பிறந்த; மாத்திரம் - அளவு; சூழ்வருதல் - சுற்றி வருதல்; பாறு - பறவை / பருந்து / கழுகு; பணிலம் - சங்குகள்; இனம் - கூட்டம்; காற்று - பேயுமாம் / பிசாசு)

காளைகள், சிங்கங்கள் முதலியன கட்டப்பெற்றவையும், பன்றி, காற்றுப் போன்ற பேயின் தொகுதிகள், கழுதை, தான் நினைத்த அளவிலேயே இவ்வுலகைச் சுற்றி வரும் ஆற்றல் பெற்ற கழுகு / பருந்துகள் கட்டப்பட்டனவும் ஆகிய தேர்களில் அமர்ந்து வந்த வீரர்கள், சங்கினை முழக்கிக் கொண்டு வந்தனர்.

ஏறு என்பது பொதுவாகக் காளையைக் குறிக்குமாயினும் மிருகங்களின் தலைவனான சிங்கத்தையும் குறிக்கும் என்க. ஆர்த்தன என்ற சொல்லுக்கு முழக்கமிட்டன என்ற ஒரு பொருளும், கட்டப்பட்டன என்ற ஒரு பொருளும் உள்ளது அறிக. இங்கே இரண்டு பொருளும் பொருந்தி வருதலும் உணர்க.

33. நால் வகைப்படையும் புறப்படுதல்

தேரினம் துவன்றின; சிறுகண், செம்முகக்
காரினம் நெருங்கின; காலின் கால்வரும்
தாரினம் குழுமின; தடைஇல் கூற்றுஅன்ன
பேரினம் கடல் எனப் பெயரும் காலையே. (3008)

(துவன்றின - நெருங்கின; கார் - மேகம் / யானை; கால் - காற்று; தார் - குதிரை; பேர் - ஆள் / காலாட்படை; பெயர்தல் - புறப்படுதல்)

தடுத்தல் இல்லாத இயமனைப் போன்று ஆற்றல் பெற்ற காலாட்படையினர் கடல் போல முன்னே புறப்பட்டுச் செல்ல, அதனைத் தொடர்ந்து, தேர்களின் கூட்டங்களும், சிறிய கண்ணும் சிவந்த புள்ளிகள் கொண்ட முகமும் உடைய மேகம் போன்ற கரிய யானைக் கூட்டமும், காற்றைப் போலக் காலால் ஓடிவரும் கிண்கிணி மாலையணிந்த குதிரைப் படைகளும், கூட்டமாய்ச் சேர்ந்து செல்லும் பொழுது - பாடல் தொடர்கிறது.

துவன்றின, நெருங்கின, குழுமின என்பன எல்லாம் ஒரே பொருளுடையன. தார் என்பதற்குப் பிடரி மயிர் என்ற ஒரு பொருளும்

உண்டு. எனவே பிடரி மயிருடைய குதிரைப் படை என்றலுமாம். சிறிய கண்களும், சிவந்த புள்ளிகள் கொண்ட முகமும், உத்தம யானைக்குரிய இலக்கணமாம்.

34. படைக்கலன்கள் குவிதல்

மழுக்களும், அயில்களும், வயிர வாள்களும்,
எழுக்களும், தோமரத் தொகையும், ஈட்டியும்,
முழுக் கலும், முசுண்டியும், தண்டும், முத்தலைக்
கழுக்களும், உலக்கையும், கால பாசமும். (3009)

(மழு - கோடாலி; அயில் - வேல்; வயிரம் - வன்மைமிக்க / உறுதியான; எழு - குத்துக்கோல்கள்; தோமரம் - இருப்பு உலக்கை; கலும் - கல்லும்; கழு - சூலம்; தண்டு - தண்டாயுதம் / கதை; முசுண்டி - சிறுவாள்)

கோடாலிகள், வேற்படைகள், உறுதிமிக்க வாட்படைகள், குத்துக் கோல்கள், இருப்பு உலக்கையின் தொகுதிகள், ஈட்டிகள், சிதைவுபடாத உருண்டையான முழுமையான கவண்கற்கள், முசுண்டி என்னும் சிறுவாட்கள், தண்டாயுதம் என்கின்ற கதைகள், முத்தலைச் சூலங்கள்; உலக்கைகள், இயமனைப் போன்று கவர்ந்து இழுக்கும் சுருக்குக் கயிறு - பாடல் தொடர்கிறது.

35. குந்தமும், குலிசமும், கோலும், பாலமும்,
அந்தம்இல் சாபமும், சரமும், ஆழியும்,
வெந்தொழில் வலயமும், விளங்கு சங்கமும்,
பந்தமும், கப்பணப் படையும், பாசமும். (3010)

(குந்தம் - எறிகோல்; குலிசம் - வச்சிரப்படை; கோல் - கம்பு; பாலம் - பிண்டிபாலம் என்னும் எறிபடை; சாபம் - வில்; சரம் - அம்பு; ஆழி - சக்கரம்; வலயம் - வளை; பந்தம் - தீப்பந்தம்; கப்பணம் - ஆனை நெருஞ்சி முள் வடிவான இருப்புக் கருவி; பாசம் - கயிறு / கயிற்று ஏணி)

எறிகோல், வச்சிரப்படை, கம்புகள், பிண்டி பாலம் என்னும் எறிபடை; அழிவில்லாத விற்கள், அம்புகள், சக்கரப்படை, கொடிய கொலைத் தொழில் செய்யும் வளையங்கள், வெண்மையான சங்குகள், தீப்பந்தங்கள், கப்பணம் என்னும் ஆனைநெருஞ்சி முள் போன்ற வடிவுள்ள இரும்புக் கருவிகள், கயிற்றாலாகிய ஏணிகள் - பாடல் தொடர்கிறது.

தனது பெரு ஓசையால் பகைவரை அஞ்சச் செய்தலால், சங்கும் ஒருவகைப் படையாகக் கூறப்பட்டது என்க. கோல் என்பது குதிரைச் சம்மட்டியையும் குறிக்கும்.

36. ஆதிய, அருக்கனும், அனலும், அஞ்சுறும்
சோதிய, சோரியும், தூவும், துன்னிய,

ஏதிகள் மிடைந்தன; இமையவர்க்கெலாம்
வேதனை கொடுத்தன; வாகை வேய்ந்தன. (3011)

(அருக்கன் - சூரியன்; அனல் - எரிக்கடவுள்; சோதி - ஒளி / விளக்கம்; தூ - நிணம் / மாமிசம்; துன்னிய - செறிந்த; வாகை - வெற்றிமாலை; வேய்தல் - சூட்டுதல்; ஏதிகள் - ஆயுதங்கள்; மிடைதல் - குவிதல்)

மழு முதல் பாசம் வரை முன்பு சொல்லப்பட்ட, ஆயுதங்களும் சூரியனும், நெருப்புக் கடவுளும் கூட அஞ்சுகின்ற ஒளி விளக்கம் உடைய, நுனியில் பகைவர்களின் இரத்தமும், தசைத் தூள்களும் அடர்ந்திருக்கின்ற, தேவர்களுக்கெல்லாம் துன்பத்தைத் தந்து, வெற்றிமாலை சூடியிருக்கின்ற, ஆயுதங்கள் நெருங்கிக் குவிந்தன.

37. சேனைத் தலைவர்கள் திறல்

ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர்;
மாஇரு ஞாலத்தை விழுங்கும் வாயினர்;
தீஎரி விழியினர்; நிருதர் சேனையின்
நாயகர், பதின்மரோடு அடுத்த நால்வரே. (3012)

(தீ - கோபத்தீ / சினக்கனல்; நாயகர் - தலைவர்; நிருதர் - அரக்கர்)

இவ்வாறு புறப்பட்ட அரக்கர்களின் சேனைக்குத் தலைவரானவர் பதினான்கு பேர். அவர்கள் ஒவ்வொருவரும் பல்லாயிரக் கணக்கான யானைகளின் வல்லமைபொருந்தியவர்கள்; இப்பெரிய உலகத்தை விழுங்கி விடும் அளவுக்குப் பெரிய வாயினையுடையவர்கள்; கோபத்தீ பொங்கும் கண்களையுடையவர்கள்.

இங்கு கூறப்படுகின்ற பதினான்கு படைத்தலைவர்களும், முன்பு இராமபாணத்தால் இறந்த பதினான்கு பேரினும் வேறு ஆவர்.

38. சேனையின் அளவு

"ஆறினோடு ஆயிரம் அமைந்த ஆயிரம்
கூறின ஒருபடை; குறித்த அப்படை
ஏறினது ஏழினது இரட்டீ;" என்பரால்,
ஊறின சேனையின் தொகுதி உன்னுவார். (3013)

(6 x 1000 x 1000 = 60,00,000; *60 லட்சம் து 14 = 840 லட்சம்; குறித்தல் - கொல்லுதல்; ஊறின - திரண்ட)*

இத்தகைய படையின் எண்ணிக்கையை ஊன்றிக் கணக்கிடுபவர்கள், அவ்வாறு எழுந்த ஒரு சேனையின் அளவு 60 லட்சம் என்றும், அது போன்று 14 படைத்தலைவர்களின் கீழும் 14 சேனைகள் திரண்டன என்றும் கணக்கிட்டிருக்கின்றனர்.

1 சேனைக்கு 60 லட்சம் பேர் என்றால் அங்கு திரண்ட சேனையின் அளவு 840 லட்சம் என்று கொள்ள வேண்டும். இதைவிட இன்னும் அதிகமாகக் கூறும் ஒரு பாடலும் கிடைக்கிறது. அது சுவைக்கத்தக்கதாக இருப்பதால் இங்கு தரப்படுகிறது. ''ஆறு நூறாயிரம் கோடி ஆழித்தேர்; கூறிய அவற்றினுக்கு இரட்டி குஞ்சரம்; ஏறியவர் அவற்று இரட்டி; வெள்ளம் நூறு ஈறு இல் ஆள்; கரன் படைத்தொகுதி என்பரால்'' என்பது ஒரு மிகைப்பாடல். ஆனால் கரன்படை வீரர் மொத்தம் பதினான்காயிரம் பேர் என்று பின்னால் சுந்தரகாண்டத்திலும், வான்மீகம், அத்யாத்ம ராமாயணம் போன்ற நூல்களில் வேறாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இதன் எண்ணிக்கையைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. எனவேதான் கம்பன் தான் சொன்னதாக அல்லாமல் ''என்பரால்'' என்று, என்று கூறுவார்கள் என்று சொல்லிவிடுகின்றான்.

39. படைவீரர்களின் ஆற்றல்

உரத்தினர்; உரும்என உரறும் வாயினர்;
கரத்துஎறி படையினர்; கமலத்தோன் தரும்
வரத்தினர்; மலைஎன மழை துயின்று எழு
சிரத்தினர்; தருக்கினர்; செருக்கும் சிந்தையார். (3014)

(உரம் - வலிமை; உரும் - இடி; உரறுதல் - முழங்குதல்; எறிதல் - தாக்குதல்; கமலத்தோன் - பிரமதேவன்; மழை - மேகம்; துயிலுதல் - தூங்குதல்; தருக்கு - அகந்தை / கர்வம்; செருக்கு - களிப்பு)

அப்படையிலுள்ள ஒவ்வொரு வீரரும் மிக்க வலிமையுடையவர்கள்; பேரிடி போல முழங்கும் வாயை உடையவர்கள்; தங்கள் கைகளில் எறிபடைகளாகிய ஆயுதங்களை ஏந்தியவர்கள்; பிரமதேவனிடம் இருந்து வரங்களைப் பெற்றவர்கள். ''இது மலை போலும்'' என்று எண்ணி, மேகங்கள் நீண்ட நேரம் தங்கிப் பின் எழுந்து போகும் அகன்ற தலைகளையுடையவர்கள்; அகந்தை மிக்கவர்கள்; பகைவர்களைக் கொல்லுவதில் களிப்புக் கொள்ளும் மனத்தை உடையவர்கள்.

அரக்கர்களின் தலைவர்கள் மட்டுமல்லாமல், பொதுவாக அரக்கர்கள் எல்லோருமே தவம் செய்து தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவனிடமிருந்து வரங்களைப் பெற்றவர்கள் என்பது புலப்படுகிறது.

40. விண் அளவிட நிமிர்ந்து உயர்ந்த மேனியர்;
கண் அளவிடல் அருமார்பர்; காலினால்
மண் அளவிடும் நெடுவலத்தர்; வானிடை
எண் அளவிடல் அரும் செருவென்று ஏறினார். (3015)

(விண் அளவிட - வானளாவ; நிமிர்ந்து - ஓங்கி; வலத்தார் - வலிமையுடையவர்கள்; அளவிடல் - அளத்தல்; ஏறுதல் - மேம்படுதல்; நெடு - மிகுந்த)

அப்படை வீரர்கள் வானளாவி, ஓங்கி உயர்ந்த உடம்பினைப் பெற்றவர்கள்; கண்களால் அளவிடற்கரிய அகன்ற மார்பினை உடையவர்கள்; கால்களினால் இம்மண்ணுலகையே அளந்துவிடும் மிகுந்த வலிமை படைத்தவர்கள்; விண்ணில் நிகழ்ந்த எண்ணற்ற பெரும் போர்களில் தேவர்களை வெற்றி பெற்று மேம்பட்ட சிறப்பைப் பெற்றவர்கள்.

41. இந்திரன் முதலினோர் எறிந்த மாப்படை
சிந்தின தெரித்து உகச் செறிந்த தோளினார்;
அந்தகன், அடிதொழுது அடங்கும் ஆணையார்;
வெந்தழல் உருவு கொண்டனைய மேனியார். (3016)

(மா - சிறந்த; செறிந்த - திண்மையான / உறுதிவாய்ந்த; அந்தகன் - இயமன்; தழல் - நெருப்பு / வடவைத்தீ; ஆணை - கட்டளை / அதிகாரம்)

அப்படைவீரர்கள் இந்திரன் முதலிய தேவர்கள் தம்மைத் தாக்கி எறிந்த சிறந்த ஆயுதங்களையெல்லாம், தங்கள் மீது படாமல் காத்து, ஊறுவிளையாதபடி பொடியாகச் சிதறும்படி செய்யும் உறுதி மிக்க தோள்களை உடையவர்கள்; இயமனும்கூட இவர்கள் பாதங்களைப் பணிந்து வணங்கி அடங்கிப் போகும்படிச் செய்யும் அதிகாரம் உடையவர்கள்; கொடிய நெருப்பாகிய வடவைத்தீயே ஒரு உருப்பெற்று வந்தது போன்ற தகதகக்கும் உடம்பினைப் பெற்றவர்கள்.

42. சூலமும், பாசமும், தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமும், தறுகணும், எயிறும் தாங்கினார்;
ஆலமும் வெளிது எனும் நிறத்தர்; ஆற்றலால்
காலனும் ''காலன்'' என்று அயிர்க்கும் காட்சியார். (3017)

(சாலம் - தொகுதி / திரள்; தொடர்ந்த - மிகுந்த; எயிறு - கோரப்பற்கள்; ஆலம் - நஞ்சு / விஷம்; வெளிது - வெண்ணிறமுடையது; அயிர்க்கும் / சந்தேகிக்கும்; காட்சி - தோற்றம்; தறுகண் - அஞ்சாமை / கொடிய கண்கள்)

அப்படைவீரர்கள் முத்தலைச் சூலமும், பாசக் கயிறும், மிகுந்த செம்பட்டை மயிர்த் திரளும், கொடிய கண்களும், அஞ்சாமையும், கோரப்பற்களும் கொண்டவர்கள்; கரிய ஆலகால விஷம் கூட வெண்ணிறம் உடையது என்று சொல்லத்தகும்படி அவ்வளவு கரிய நிறம் படைத்தவர்கள்; தங்களது வலிமையால், இயமன்கூட, இவர்கள் நம்மை அழித்துவிடும் வல்லமை பெற்ற இயமர்களோ என்று ஐயமும் அச்சமும் கொள்ளும்படியான தோற்றம் கொண்டவர்கள்.

அரக்கர்களின் கரிய நிறத்தை மிகுத்துக் கூறியது காண்க.

43. கழலினர்; தாரினர்; கவச மார்பினர்;
நிழல்உறு பூணினர்; நெறித்த நெற்றியர்;

அழல்உறு குஞ்சியர்; அமரை வேட்டு உவந்து
எழல்உறும் மனத்தினர்; ஒருமை எய்தினார். (3018)

(நிழல் - ஒளி; நெளித்த - வளைத்த; நெற்றி - புருவமுமாம்; அழல் - நெருப்பு; குஞ்சி - ஆண்களின் தலைமயிர்; அமர் - போர்; வேட்டு - விரும்பி; எழல் உறுதல் - கிளர்தல் / உற்சாகம் கொள்ளுதல்; ஒருமை - ஒரு தன்மை / ஒற்றுமை; கழல் - தண்டை; தார் - போர் மாலை)

அப்படைவீரர்கள் வீரக்கழல் அணிந்தவர்கள்; போர் மாலை சூடியவர்கள்; கவசமணிந்த மார்பினை உடையவர்கள்; ஒளிவீசுகின்ற அணிகலன்களை அணிந்தவர்கள்; கோபத்தால் வளைந்த புருவங்களையும், மேலே நெறிந்த நெற்றியையும் உடையவர்கள்; நெருப்புப் போன்று சிவந்த செம்பட்டை முடியினை உடையவர்கள்; போர் செய்வதை மிக விரும்பி, மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு உற்சாகத்துடன் எழுகின்ற மனத்தை உடையவர்கள்; அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை உடையவர்கள். இப்பொழுது ஒன்று கூடினார்கள்.

44. மருப்புஇறா மதக்களிற்று அமரர் மன்னனும்,
விருப்புஉறா முகத்தின் எதிர்விழிக்கின், வெந்நிடும்;
உருப்பொறாது உலைவுறும் உலகம் மூன்றினும்
செருப்பெறாத் தினவுஉறு சிகரத் தோளினார். (3019)

(ஊன் - உடம்பு; தினும் - தின்னும் / அழிக்கும்; செரு - போர்; சிகரம் - மலை; விருப்பு உறா - வெறுப்பு உற்று; விழிக்கின் - விழித்தால் / நோக்கினால்; இறா - ஒடியாத; மருப்பு - கொம்புகள்; அமரர் மன்னன் - தேவர் தலைவன் / இந்திரன்; வெந் - முதுகு; வெந்நிடுதல் - புறுமுதுகு காட்டி ஓடுதல் / தோற்றுப் போதல்; பொறுத்தல் - தாங்குதல்; உலைவுறுதல் - நிலைகுலைதல்; தினவு - அரிப்பு)

இப்படைவீரர்கள் விண், மண், பாதாளம் என்னும் மூன்று உலகங்களிலும் தங்களை எதிர்ப்பார் யாரும் இல்லாமையால் போர் செய்யும் வாய்ப்பே இல்லாமல் தினவெடுத்த மலை போலும் தோள்களை உடையவர்கள்; ஒருவராலும் ஒடிக்க முடியாத நான்கு கொம்புகளை உடைய மதச் செருக்குற்ற ஐராவதம் என்னும் யானையைத் தன் வாகனமாகக் கொண்ட தேவர்களின் தலைவனான இந்திரன்கூட, தான் விருப்பப்படாமல், இவர்கள் முகத்தில் ஏதிர் நோக்கினால், நிச்சயம் தோற்றுப் புறமுதுகிட்டு ஓடிவிடுவான். அத்தகைய பேராற்றல் பெற்றவர்கள்; இவர்களின் தோற்றத்தைக் காணப் பொறுக்காமல் இந்த உலகமே நிலைகுலையும் தன்மையர் இவர்கள்.

45. குஞ்சரம், குதிரை, பேய், குரங்கு, கோள்அரி,
வெஞ்சினக் கரடி, நாய், வேங்கை, ஆளி என்று
அஞ்சுறக் கனல்புரை முகத்தர்; ஆர்கலி
நஞ்சு தொக்கெனப் புரை நயனத்தார்களும். (3020)

(குஞ்சரம் - யானை; கோள் - வலிய; வேங்கை - புலி; ஆர்கலி - கடல்; தொக்கென - திரண்டாற்போல; கனலுதல் - சினத்தல்; புரை - பருமை / பெரிய; நயனம் - கண்) (குளகப் பாடல்)

அப்படைவீரர்கள் யானை, குதிரை, பேய், குரங்கு, வலிமையுடைய சிங்கம், கடுங்கோபமுடைய கரடி, நாய், புலி, யாளி என்று பார்ப்பவர்கள் அஞ்சும்படி நெருப்புப் போன்ற முகத்தையுடையவர்கள்; பாற் கடலிலிருந்து தோன்றிய ஆலகாலவிடம் திரண்டுவந்தது போன்ற கரிய கண்களை யுடையவர்கள் - பாடல் தொடர்கிறது.

அவ்வரக்கர்கள் யானை முதலிய மேற்சொல்லப்பட்ட கொடிய மிருகங்களின் முகத்தை உடையவர்கள் என்றும் பொருள் கூறுவதுண்டு; கனல் போன்ற முகம்; விடம் போன்ற கண்கள் என்பதாம்.

46. எண்கையர்; எழு கையர்; ஏழும் எட்டுமாய்க்
கண்கனல் சொரிதரும் முகத்தர்; காலினர்;
வண்கையின் வளைத்து, உயிர்வாரி, வாயின்இட்டு,
உண்கையில் உவகையர், உலப்பு இலார்களும். (3021)

(வள் - வலிய; வாரி - அள்ளி; உலப்பு - அழிவு / அளவு)

அப்படைவீரர்களில் சிலர் எட்டுக் கைகளை உடையவர்கள்; சிலர் ஏழு கைகளை உடையவர்கள் இவ்வாறே ஏழும் எட்டுமாய், கனல் சொரிகின்ற கண்களைக் கொண்ட முகத்தை உடையவர்கள்; வலிய ஏழும் எட்டும் ஆன கால்களையும் உடையவர்கள்; தங்களது வலிய கைகளை வளைத்து, எதிரே அகப்பட்ட உயிரினங்களையெல்லாம் அள்ளித் தம் வாயில் போட்டு உண்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்பவர்கள்; இப்படிப்பட்ட வீரர்கள் அளவிறந்தவர்கள்; அழிவில்லாதவர்களும் கூட.

முன்பாடலிலும் இப்பாடலிலும் அவர்கள் அச்சம் தரும் தோற்றத்தை உடையவர்கள் என்பது கூறப்பட்டது. இராவணனுக்கு மட்டும்தான் பத்துத் தலைகளும், இருபது கைகளும், கண்களும் இருந்தன என்றில்லாமல், அரக்க வீரர்களில் மிகப் பலருக்கு இம்மாதிரியான உருவத் தோற்றம் இருந்தது என்பது தெரியவருகிறது.

47. கொடிகள் வந்த முறை

இயக்கரின் பறித்தன; அவுணர் இட்டன;
மயக்கு உறுத்து அமரரை வலியின் வாங்கின;
துயக்குஇல் கந்தர்ப்பரைத் துரந்து வாரின;
நயப்பு உறு சித்தரை நலிந்து வவ்வின. (3022)

(அவுணர் - அசுரர்கள்; துயக்குஇல் - குற்றமற்ற / சோர்வற்ற; துரந்து - விரட்டி / ஓட்டி; நயப்பு - அன்பு; நலிந்து - வருத்தி; வவ்வுதல் - கவர்ந்து கொள்ளுதல் / அபகரித்துக் கொள்ளுதல்) (குளகப்பாடல்)

அப்படைவீரர்கள் தங்கள் கைகளில் ஏந்தியுள்ள கொடிகளில் சில, யக்ஷர்களுடன் முன்பு போர் செய்த போது அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டனவாகும்; சில அரக்கர் இனத்தவருள் ஒரு வகையான அசுரர்கள் தோற்றோடும் போது, போர்க்களத்தில் விட்டு விட்டுச் சென்றனவாகும். இன்னும் சில இவர்கள் மாயச் செயல்கள் செய்து தேவர்களிடமிருந்து தங்கள் வலிமையால் பெற்றுக் கொண்டனவாகும்; சில குற்றமற்றவரும், சோர்வில்லாதவருமான கந்தர்வர்களை ஓட ஓட விரட்டி அவர்களிடமிருந்து அள்ளிக் கொண்டனவாகும்; சில அன்பு மிகுந்த சித்தர்களை வருந்தும்படி செய்து அபகரித்துக் கொண்டனவாகும் - பாடல் தொடர்கிறது.

இவர்கள் கொண்டவை என்று இங்கே குறிப்பிடப்படுவது கொடிகள்தான் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆயுதங்கள் அல்ல. யக்ஷர், கந்தர்வர்கள், சித்தர் என்பவர்கள் பதினெட்டுத் தேவகணங்களுள் ஒரு சாதியினர். தேவர்கள் இயற்கையிலேயே இவர்களுக்குப் பகைவர்கள். இவர்கள் அரக்க இனத்தைச் சேர்ந்த அவுணர்களிடமும் போர் செய்து கொடிகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அசுரர்கள் இவர்களுக்குக் கொள்கைகளால் மாறுபட்டவர் என்க. அன்பு செய்பவர்களையும் வஞ்சகமாக ஏமாற்றி விடுவார்கள் என்பதும் தெரியவருகிறது.

48. கொடி, தழை, கவிகை, வான்தொங்கல், குஞ்சரம்
படியுறு பதாகை, மீ விதானம், பல்வகை
இடையிலாது, எங்கணும் இசைய, மீமிசை
மிடைதலின், உலகெலாம் வெயில் இழக்கவே. (3023)

(தழை - மயிற்பீலிக் குடைகள்; கவிகை - குடைகள்; தொங்கல் - குஞ்சம்; குஞ்சரம் - யானை; பதாகை - பெரிய கொடிகள்; மீவிதானம் - மேற்கட்டிகள்; இசைய - பொருந்த; மிடைதல் - நெருங்குதல்; வெயில் - ஒளி)

துகிற் கொடிகளும், மயிற் பீலிக்குடைகளும், வெண்கொற்றக் குடைகளும், உயர்ந்த மாலைகளும், குஞ்சலங்களும், யானை மீது படிவதற்குப் பொருந்திய பெரிய கொடிகளும், மேற்கட்டிகளும் இன்னும் பல்வகையான கொடிகளும், நடுவில் இடமேயில்லாது எல்லா இடங்களிலும் பரந்து விரிந்து, நெருங்கி இருத்தலால், இவ்வுலகமெல்லாம் சூரியனின் இயற்கை ஒளியை இழந்தனவாயின.

இவைகளும் பகைவர்களிடமிருந்து எடுக்கப்பட்டவை என்க. இவைகள் வெயில் புகாதபடி மறைத்து நிழலைச் செய்தன என்பதாம்.

49. சேனைத் தலைவர்களின் ஆற்றல்

எழுவரோடு எழுவராம் உலகம் ஏழோடுஏழ்
தழுவிய வென்றியர்; தலைவர் தானையர்;

மழுவினர்; வாளினர்; வயங்கு சூலத்தர்;
உழுவையொடு அரிஎன உடற்றும் சீற்றத்தார். (3024)

(தழுவிய - பரவிய; தானையர் - படை வீரர்கள்; உழுவை - புலி; அரி - சிங்கம்; உடற்றுதல் - வலியழித்தல் / கெடுத்தல்)

இந்தப் பதினான்கு பேரும், ஈரேழு பதினான்கு உலகங்களையும் வெற்றி கொண்டவர்கள்; இந்தச் சேனைகளுக்குத் தலைவர்கள். அவர்கள் கைகளில் மழுவினை ஏந்தியவர்கள்; உடைவாளை இடுப்பிலே செருகியவர்கள்; விளங்குகின்ற முத்தலைச் சூலத்தை மற்றொரு கையில் கொண்டவர்கள். புலியைப் போன்றும், சிங்கத்தைப் போன்றும் பகைவர்களின் வலியழிக்கும் ஆற்றல் உடையவர்கள். மிக்க சினத்தை உடையவர்கள்.

50. வில்லினர்; வாளினர்; இதழின் மீதுஇடு
பல்லினர்; மேருவைப் பறிக்கும் ஆற்றலர்;
புல்லினர் திசைதொறும்; புரவித் தேரினர்;
சொல்லின முடிக்குறும் துணிவின் நெஞ்சினர். (3025)

(இதழ் - உதடு; இடுதல் - பதிந்திருத்தல்; பறித்தல் - பெயர்த்தல்; புல்லுதல் - சூழ்ந்து நிற்றல்; துணிவு - உறுதி / திட்டம்; சொல்லின - எண்ணியபடி)

அப்படைத்தலைவர்கள் கைகளில் வில்லை உடையவர்கள்; உடைவாளை உடையவர்கள்; தங்கள் உதடுகளின் மீது பற்கள் படியும் கோபம் உடையவர்கள்; மேரு மலையையே பெயர்த்தெடுக்கும் ஆற்றல் பெற்றவர்கள்; குதிரைகள் பூட்டிய தேரினை உடையவர்கள்; தாம் எண்ணிய படியும் அல்லது கரன் கட்டளையிட்ட படியும், அத்தனையையும் தவறாமல் செய்து முடிக்கும் உறுதி படைத்த மனத்தை உடையவர்கள். அவர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து, கரனைச் சூழ்ந்து நின்றனர்.

இதழில்பல் பதித்தல் வெகுளியின் மெய்ப்பாடு. கோபத்தில் இதழை அதுக்குவதால் வெளித்தோன்றிய பற்களை உடையவர்கள் என்பதும் பொருந்தும்.

51. தூடணன் முதலியோரும் வந்து சேருதல்

தூடணன், திரிசிராத் தோன்றல், ஆதியர்
கோடுஅணை முரசினம் குளிறு சேனையர்,
ஆடவர், உயிர்கவர் அலங்கல் வேலினர்;
பாடவ நிலையினர், பலரும் சுற்றினர். (3026)

(ஆடவர் - வீரர்; அலங்கல் - மாலை; பாடவம் - களிப்பு / திறமை; கோடு - சங்கு; குளிறுதல் - முழங்குதல்; தோன்றல் - வீரன் / தலைவன்; ஆதியர் - முதலியோர்)

எதிர்த்து வரும் படைவீரர்களின் உயிரைக் கவர்கின்ற மாலை சூட்டப் பட்ட வேற்படையை உடையவர்கள்; திறமையும் அதனால் செருக்கும் உடையவர்கள்; பேராரவாரம் செய்கின்ற சங்கு, முரசு ஆகியவற்றை உடைய சேனையை உடையவர்களாகிய, தூடணன், திரிசிரா ஆகிய தலைவர்கள் பலரும், கரனைச் சூழ்ந்து நின்றனர்.

தூடணன் என்பது எல்லோரையும் தூஷிப்பவன், நிந்திப்பவன் என்னும் பொருளது. திரிசிரா என்பது மூன்று தலைகளையுடைய திரிசிரஸ் என்னும் வடசொல்லின் திரிபு; கோடணை என்பதும் கோஷணம் - கோஷம் என்ற வடசொல்லின் திரிபாகி பேராரவாரம், ஒலி, முழக்கம், அலங்காரம் என்னும் பொருள் தரும்.

52. இப்பொழுது கரனுடைய தோற்றம்

ஆன்றுஅமை எறிபடை அழுவத்து, ஆர்கலி
வான்தொடர் மேருவை வளைத்ததாம் என,
ஊன்றின தேரினன், உயர்ந்த தோளினன்,
தோன்றினன், யாவரும் துணுக்கம் எய்தவே. (3027)

(ஆர்கலி - கடல்; வான்தொடர் - வானளாவ; ஆன்று - நிறைந்து; அழுவம் - பரப்பு / ஆழம்; ஊன்றின - நிறுத்தப்பட்ட; துணுக்கம் எய்தல் - அஞ்சுதல்; எறிதல் - அழித்தல்; துணுக்கம் - நடுக்கம்)

ஒலியையுடைய கடல், வானளாவிய வளர்ந்த மேரு மலையைச் சுற்றி வளைத்துக் கொண்டது என்னும்படி, நிலை நாட்டப்பெற்ற தேரை உடையவனும், உயர்ந்த தோள்களையுடையவனுமான கரன், நிறைந்து விளங்குகின்ற, பகைவரை அழித்துத் தாக்கவல்ல சேனைப் பரப்பின் நடுவில், கண்டவர் எல்லோரும், இயமனும்கூட அஞ்சும்படி தோன்றினான்.

தூடணன், திரிசிரா, பதினான்கு படைத்தலைவர்கள், படைவீரர்கள், இவர்களெல்லாம் கரனைச் சூழ்ந்து நின்ற தோற்றம், கடல் மேரு மலையைச்சுற்றி நின்றதற்கு உவமை. கரன்மேருமலை; சேனைகள்கடல்;

53. சேனைகள் புறப்பட்டுச் செல்லுதல்

அசும்புஉறு மதகரி, புரவி, ஆடகத்
தசும்புஉறு சயந்தனம், அரக்கர், தாள்தர
விசும்புஉறு தூளியான் வெண்மை மேயின
பசும்பரி பகலவன் பைம்பொன் தேர்அரோ! (3028)

(அசும்பு - கசிவு / ஊற்று; கரி - யானை; புரவி - குதிரை; ஆடகம் - பொன்; தசும்பு - குடம் / கலசம்; சயந்தனம் - தேர்; விசும்பு - ஆகாயம்; தூளி / புழுதி; பசும்பரி - பச்சைக் குதிரைகள்; பகலவன் - சூரியன்; தாள்தருதல் - நடத்தல்)

நீரூற்றுப் போல மதநீர் சொரிகின்ற யானைகள், குதிரைகள், பொன்னாலான கலசத்தை உடைய தேர்கள், அரக்கர்களாகிய காலாட்படை ஆகிய நான்கு வகைப் படைகளும் தத்தம் கால்களால் நடத்தலால் உண்டாக்கப்பெற்ற புழுதியின் தூசி, ஆகாயத்தைச் சென்றடைய, அங்குள்ள சூரியனின் பசும்பொன்னாலாகிய தேரும், அந்தத் தேரில் பூட்டப்பட்டிருக்கின்ற ஏழு பச்சைக் குதிரைகளும் வெண்மை நிறமடைந்தன.

நால்வகைப் படையின் மிகுதி கூறப்பட்டது. சூரியன் குதிரைகள் ஏழு. அவை பச்சைநிறத்தவை. அவன் தேர் ஒற்றைச் சக்கரமுடையது. படைகள் எழுப்பிய தூசி, சூரிய மண்டலத்திற் படிந்தது என்பது பொருள். சயந்தனம் என்பதும் ஆடகம் என்பதும் வடசொற்களின் திரிபு.

54. சேனை சென்றதன் விளைவுகள்

வனம் துகள் பட்டன; மலையின் வான்உயர்
கனம் துகள் பட்டன; கடல்கள் தூர்ந்தன;
இனம்தொகு தூளியால்; இசைப்பது என் இனி?
சினம்தொகு நெடுங்கடல் சேனை செல்லவே. (3029)

(தொகு - மிக்க; கனம் - மேகங்கள்; துகள் - தூசி; படுதல் - படிதல்; தூர்தல் - மேடாதல்; இசைப்பது - சொல்லுவது)

சினம் மிக்க இந்தச் சேனையாகிய பெருங்கடல் புறப்பட்ட பொழுது, அவற்றின் செயலால், அந்தக் காடு முழுவதும் தூசியால் மூடப்பட்டது; மலையிலும், ஆகாயத்திலும் படிந்திருக்கின்ற மேகங்கள் கூடத் தூசியால் மறைக்கப்பட்டன; கடல்கள் இந்தத் தூசியால் தூர்க்கப்பட்டு மேடாயிற்று; என்றால் இதனைப் பற்றி வேறு என்ன சொல்ல இருக்கிறது?

55. நிலமிசை, விசும்பிடை, நெருக்கலால், நெடு
மலைமிசை, மலையினம் வருவபோல், மலைத்
தலைமிசை, தலைமிசை, தாவிச் சென்றனர்;
கொலைமிசை நஞ்சுஎனக் கொதிக்கும் நெஞ்சினார். (3030)

(நிலை - நிலம் / தரை / பூமி; தலை - சிகரங்கள்)

பகைவர்களைப் போரில் கொல்லும் தொழிலில், நஞ்சினைப் போலக் கொதிப்புடைய மனத்தை உடையவர்களான அரக்கர்கள், நிலத்திலும், ஆகாயத்திலும் இந்தப் படைகள் இடைவெளியின்றி நெருக்கி வருதலால், வேறு இடமின்றி பின்னால் வந்த அரக்க வீரர்கள் நீண்ட மலைச் சிகரங்கள் தோறும் தங்கள் கால்களால் தாவித் தாவிச் சென்றனர்.

அது பார்ப்பதற்கு ஒரு மலை மேல் மற்றொரு மலை ஏறி வருவது போல் இருந்தது. படையின் நெருக்கத்தையும், வீரர்களின் ஆற்றலையும் புலப்படுத்தியது.

56. சேனைகள் இராமன் முன்னே வருதல்

வந்தது சேனைவெள்ளம் வள்ளியோன் மருங்கு; மாயா
பந்தமா வினையம் மாளப் பற்றறு பெற்றியோர்க்கும்
உந்தஅரு நிலையதாகி, உடன்உறைந்து, உயிர்கள் தம்மை
அந்தகற்கு அளிக்கும் நோய்போல், அரக்கிமுன் ஆக அம்மா! (3031)

(பந்தம் - பிணிப்பு; மாள - அழிந்து போக; பெற்றி - தகுதி; உந்தஅரு - நீக்குதற்கரிய; அந்தகன் - இயமன்; வள்ளியோன் - வள்ளல் தன்மை உடையவன் / இராமன்; மருங்கு - அருகு; மாயா - அழியாத)

என்றும் அழியாத பிணிப்பு என்னும் பெரிய கருமங்கள் அழிந்து போகும்படி யான், எனது என்னும் பற்றுக்களை நீக்கிய பெருமையும் தகுதியும் வாய்ந்த முனிவர்களும், ஞானிகளும் கூட நீக்கிவிடுதற்கு அரியதாகிய, தான் தோன்றும் போதே தன்னுடலுடன் தோன்றி, வாழ்நாள் முழுதும் தன்னுடனேயே தங்கியிருந்து, இறுதியில் உடம்பில் உள்ள உயிரை மட்டும் இயமனுக்குத் தந்து விடுகின்ற நோயினைப் போல, அந்த அரக்கியாகிய சூர்ப்பணகை வழிகாட்டிக் கொண்டு முன்னே செல்ல, கரனது படைக்கடல், வள்ளல் இராமபிரான் அருகே வந்து சேர்ந்தது.

சூர்ப்பணகையை உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்று கம்பன் கூறுவது இது இரண்டாவது இடம். முதலில் அவளை அறிமுகப்படுத்தும் போதே ''நீல மாமணிநிற நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்'' என்றும், ''மேலைநாள்உயிரொடும் பிறந்து, தான்விளை காலம் ஓர்ந்து, உடன் உறை கடிய நோய் அனாள்'' என்றும் கூறியதும் நோக்குக. மேலும் முன்வினைப் பயனால் நோய் வருதலும், அதனால் இறுதியில் மரணம் அடைதலும் பற்றற்ற முனிவர்களுக்கும், ஞானியர்களுக்கும் கூட இயைபானது; அவர்களாலும் தவிர்க்க இயலாதது'' என்பதும் பெறப்பட்டது.

57. தூரியக் குரலின், வானின் முகில்குலம் துணுக்கம் கொள்ள,
வார்சிலை ஒலியின் அஞ்சி, உரும்எலாம் மறுக்கம் கொள்ள,
ஆர்கலி ஆர்ப்பின் உட்கி அசைவுஉற அரக்கர் சேனை
போர் வனத்து இருந்த வீரர் உறைவிடம் புக்கது அன்றே. (3032)

(தூரியம் - பேரிகை / முரசு / வாத்தியங்கள்; முகில் - மேகம்; துணுக்கம் - நடுக்கம்; உரும் - இடி; மறுக்கம் - கலக்கம்; அசைவுறுதல் - தளர்வுறுதல்; உட்குதல் - அஞ்சுதல்; புக்கது - அடைந்தது; குரல் - ஓசை; குலம் - கூட்டம்; வார் - நீண்ட; போர் - செறிவு)

படைவீரர்களின் வாத்தியங்களின் முழக்கத்தால் ஆகாயத்திலுள்ள மேகக்கூட்டங்கள் நடுக்கம் கொள்ளவும், நீண்ட விற்களிலிருந்து எழும்பிய நாண் ஓசைக்கு அஞ்சி, இடியெல்லாம் கலக்கம் அடையவும், படைக்கடலின் பேராரவாரத்திற்கு வெட்கப்பட்டு, கடல்கூடத் தளர்ச்சி

அடையவும், அந்த அரக்கர்கள் சேனை, வனங்கள் செறிந்த இடத்தில் இருந்த இராம இலக்குவர்களாகிய வீரர்கள் தங்கியிருந்த அந்த தவச்சாலை அருகே வந்து சேர்ந்தது.

அந்த அரக்கர் சேனைகள் எழுப்பிய வாத்திய ஒலியின் ஓசை மேகமுழக்கத்தைக் காட்டிலும், வில்லின் நாண்ஒலி எழுப்பிய ஓசை இடி முழக்கத்தைக் காட்டிலும், படையினரின் பேராரவாரம் கடல் முழக்கத்தைக் காட்டிலும் மிக்கிருந்தன என்பதாம்.

58. பறவைகளும், விலங்குகளும் ஒற்றர்களாதல்

வாய்புலர்ந்து அழிந்த; மெய்யின் வருத்தத்த; வழியின் யாண்டும்
ஓய்வுஇல; நிமிர்ந்து வீங்கும் உயிர்ப்பின; உலைந்த கண்ண;
தீயவர் சேனை வந்து சேர்ந்தமை தெரியச் சென்று,
வேய்தெரிந்து உரைப்ப போன்ற, புள்ளொடு, விலங்கும் அம்மா! (3033)

(புள் - பறவை; புலர்ந்து - உலர்ந்து; அழிதல் - சோர்ந்து போதல்; மெய் - உடல்; உலைதல் - ஒளி மழுங்குதல்; வேய் - ஒற்றர்)

அவ்வனத்திலுள்ள பறவைகளும் விலங்குகளும், இச்சேனைகள் வருவதால் அஞ்சி, நாக்கு உலர்ந்து போய்ச் சோர்ந்து போயின; உடம்பில் வருத்தமுண்டாயிற்று; திரிகின்ற வழியில் எங்கும் இளைப்பாற முடியவில்லை; மிக்க நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு விட்டன; கண்கள் ஒளி மங்கிப் போயிற்று; பகைவர்களாகிய தீமை செய்கின்ற இயல்புடைய அரக்கர்களின் சேனை இங்கு வந்து விட்டது என்பதை அறிந்த ஒற்றர்கள் போல், தாமே முன்சென்று, தாம் அறிந்த செய்தியை அவர்களுக்கு உரைக்கின்ற ஒற்றர்கள் போல் விளங்கின.

வாய் புலர்தலும், மெய் வருந்துதலும், ஓய்வில்லாமையும், பெருமூச் செறிதலும், கண்கள் ஒளி மங்கிப் போதலும் ஒற்றர்க்கு உரிய மெய்ப் பாடுகள். அவற்றை இப்பறவைகளின் மேலும் விலங்குகளின் மேலும் ஏற்றிக் கூறப்பட்டது.

59. இலக்குவன் போர்க்கு எழுதல்

தூளியின் படலை வந்து
தொடர்வுற, மரமும் தூறும்
தாளிடை ஒடியும் ஓசை,
சடசட ஒலிப்ப, கானத்து
ஆளியும் அரியும் அஞ்சி,
இரிதரும் அமலை நோக்கி,
''மீளிமொய்ம்பின் அரும்சேனை
மேல்வந்தது உளது'' என்று உன்னா. (3034)

(தூளி - தூசி; படலை - திரள் / படலம் / தொகுதி; இரிதரல் - அஞ்சி ஓடுதல்; அமலை - ஓசை; மொய்ம்பு - வலிமை; உன்னா - உன்னி / நினைத்து; தொடர்வுறுதல் - படிதல்; தூறு - புதர்கள்; சடசட - ஒலிக்குறிப்பு (இரட்டைக்கிளவி) - (குளகப் பாடல்)

தூசியின் திரள் வந்து படியவும், காட்டிலுள்ள மரங்களும் புதர்களும், அரக்கர்களின் கால்களின் இடையில் அகப்பட்டு ஒடிந்து விழுகின்ற சடசட என்ற ஓசையும், அங்குள்ள மிக்க வலிமையுள்ள விலங்குகளான யாளியும் சிங்கமும் அச்சமுற்று நிலை திரிந்து ஓடுகின்ற ஓசையும் கேட்டு, ''தம் மிக்க வலிமையுடைய பகைவர்களின் தடுத்தற்கரிய சேனை போரிட எழுந்து வந்திருக்கிறது'' என்று எண்ணி - பாடல் தொடர்கிறது.

60. இலக்குவன் தோற்றம்

மின்நின்ற சிலையன்; வீரக்கவசத்தன்; விசித்த வாளன்;
பொன்நின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன்; புகையும் நெஞ்சன்;
''நில்; நின்றுகாண்டி யான்செய் நிலை;'' என விரும்பி, நேரா
முன்நின்ற பின் வந்தோனை நோக்கினன், மொழியலுற்றான். (3035)

(மின் - ஒளி; நின்ற - தங்கிய; வீரம் - உறுதியுமாம்; விசித்தல் - கட்டுதல்; வடிம்பு - விளிம்பு; வாளி - அம்பு; புட்டில் - தூணி; புகைதல் - சினத்தல்; நேரா - நேர்ந்து / மேற்கொண்டு; பின் வந்தோன் - பின்னால் பிறந்தவன் / இளையவன் / இலக்குவன்)

மின்னலைப் போன்று வில்லையுடையவனும், உறுதி படைத்த கவசத்தை அணிந்தவனும், இடையில் கட்டிய வாளினையுடையவனும், அழகு பொருந்திய பொன்னால் இழைக்கப்பட்ட விளிம்புகளையுடைய அம்புகள் நிறைந்த அம்பறாத் தூணியை உடையவனும், கோபத்தால் புகையும் மனத்தையுடையவனுமாகிய இலக்குவன், இராமனை நோக்கி ''தயவு செய்து நிற்பாயாக! இப்பொழுது நான் செய்யப் போகும் போரின் ஆற்றலை இங்கிருந்தே காண்பாயாக!'' என்று போரை மிக விரும்பி, அதற்கு உடன்பட்டு, போரை மேற்கொண்டு தயார் நிலையில் தன் முன் நின்ற தனது இளையவனான இலக்குவனை, இராமன் கூர்ந்து பார்த்து, கீழ்வருவனவற்றைக் கூறலானான்.

மின் நின்ற சிலையன் என்பதற்கு மின்னலே ஒருவடிவு கொண்டு தங்கி நின்றது போன்ற வில்லை உடையவன் என்றலும் ஒன்று. அம்புகளின் ஓரங்களில் பொன் பூசப்பட்டிருக்கும் என்பது தெரிய வருகிறது. முன்பும் இவ்வாறு கூறியிருத்தலை நினைவு கூர்க.

61. இராமன் கூறுதல்

''நெறிகொள் மாதவர்க்கு முன்னே நேர்ந்தனென், ''நிருதர்ஆவி
பறிக்குவென் யானே;'' என்ற பழமொழி பழுது உறாமே,

வெறிகொள் பூங்குழலினாளை, வீர! நீ வேண்டினேன் யான்,
குறிக்கொடு காத்தி! இன்னே கொல்வென் இக்குழுவை'' என்னா. (3036)

(நெறி - ஒழுக்கம்; நேர்ந்த - இசைந்து கூறிய; பழமொழி - பழைய வார்த்தை; பழுது - தவறு; குழு - கூட்டம்; வெறி - நறுமணம்; குழல் - கூந்தல்; குறிக்கொடு - கருத்தூன்றி நின்று; நிருதர் - அரக்கர்; இன்னே - இப்பொழுதே) (குளகப்பாடல்)

''நன்னெறியாகிய தவஒழுக்கத்தையும், வீட்டு நெறியையும் குறிக்கோளாகக் கொண்டுள்ள பெருந்தவம் செய்கின்ற தண்டக வன முனிவர்களுக்கு, முன்பு நான் இசைந்து கூறிய ''அரக்கர்களின் உயிரை நானேஅழிப்பேன்'' என்றஅந்தஉறுதிமொழிக்குஎந்தவிதமானகுறையும் ஏற்பட்டுவிடாமல், வீண்போய் விடாமல் நான் இப்பொழுதே இந்த அரக்கர்களின் கூட்டத்தை ஒழித்து விட்டு வருகிறேன்; அதுகாறும் இந்த நறுமணமுடைய மலர்களை அணிந்த கூந்தலையுடைய சீதையை நீ கருத்தூன்றிக்காத்திருப்பாயாக!'' என்று இராமன்இலக்குவனைவேண்டிக் கேட்டுக் கொண்டான்.

''தீக்கானகத்து உறையும் தெய்வங்காள்! பீமன் தன் கோக்காதலியைக் குறிக்கொள் மின்!'' என்பது நளவெண்பா. குறிக்கொள் என்பது கருத்தூன்றிக் காப்பாற்றுதல் என்ற பொருளில் பயின்று வந்துள்ளமை காண்க.

62. இராமன் போருக்கு ஆயத்தமாதல்

மரம்படர் கானம் எங்கும், அதர்பட வந்த சேனை
கரன்படை என்பது எண்ணிக் கருநிறக்கமலக் கண்ணன்,
சரம்படர் புட்டில் சுட்டிச் சாபமும் தரித்தான்; தள்ளா
உரம்படர்தோளின் மீளாக்கவசம் இட்டு, உடைவாள் ஆர்த்தான். (3037)

(படர் - பரவிய / மிக்க; அதர் - வழி; மீளா - நிலைபெயராத / தகர்க்க முடியாத; தள்ளா - நீங்காத; உரம் - வலிமை; ஆர்த்தல் - அணிந்து கொள்ளுதல்; தரித்தல் - தாங்குதல்; கவசம் - மெய்யுறை)

மரங்கள் அடர்ந்து பரவியிருக்கின்ற வனத்தில் எல்லா இடங்களும் வழிகளாக மாறிப் போகும்படி விரைவுடன் வந்த படைகள் கரனது படைகள்தான் என்பதை நினைத்து, கரிய நிறமும், தாமரை மலர் போன்ற கண்களுமுடைய இராமன், அம்புகள் நிறைந்த புட்டிலை, நீக்க முடியாத வலிமையுடைய தோள்களில் கட்டிக் கொண்டு, வில்லையும் ஏந்தி நின்றான்; தகர்க்க முடியாத மெய்யுறையாகிய கவசத்தையும் அணிந்து கொண்டு, இடையில் உடைவாளைக் கட்டிக் கொண்டு ஆயத்த நிலையில் நின்றான்.

முன்பே சூர்ப்பணகை இப்பொழுதே கரன் படையைக் கொணர்கின்றேன் என்று சொல்லிச் சென்றாள். எனவே இப்பொழுது வந்த படை கரனது படைதான் என்று இராமன் தீர்மானித்தான் என்பதாம்.

63. "மீளஅரும் செருவில், விண்ணும் மண்ணும் என்மேல் வந்தாலும்,
நாள் உலந்து அழியும் அன்றே! நான் உனக்கு உரைப்பது என்னே?
ஆளியின் துப்பினாய்! இவ்அமர் எங்கு அருளி நின்று, என்
தோளினைத் தின்னுகின்ற சோம்பினைத் துடைத்தி!" என்றான். (3038)

(துப்பு - வலிமை; செரு - போர்; நாள் - வாழ்நாள் / ஆயுள்; உலந்து - கெட்டு; தின்னுகின்ற - வருந்துகின்ற; துடைத்தல் - போக்குதல்; அருள்தல் - கொடுத்தல்)

இராமன், இலக்குவனை நோக்கி, ''சிங்கம் போன்ற வலிமை உடையவனே! உயிர் மீண்டு வருதற்கு அரியதான இந்தப் போரில், கரன் மட்டுமின்றி, விண்ணுலகத்தாரும், நிலவுலகத்தாரும் ஒன்று சேர்ந்து என்னுடன் போர் செய்யக் கருதி வந்தாலும், அவர்களது ஆயுட்காலம் கெட்டு அழிந்து போவார்கள் அல்லவா? இதைப் பற்றி நான் மேலும் உனக்குக் கூறுவதற்கு என்ன இருக்கிறது? எனவே இந்தப் போர் செய்யும் வாய்ப்பை எனக்கு அளித்து, என் தோள்களைத் தின்னுவது போலத் தினவை உண்டாக்கி வருத்துகின்ற சோம்பலைப் போக்குவாயாக'' என்றான்.

முன்பாடலில் முனிவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை என்று கூறியதால் இந்தக் கூற்றும் இராமனே இலக்குவனிடம் கூறுவதாகக் கொள்ளுதலே பொருந்தும். சிலர் இதனை இலக்குவன் கூற்றாகக் கொள்வர், அது பொருந்தாதது காண்க.

64. இலக்குவன் உடன்படுதல்

என்றலும், இளையவீரன் இசைந்தனன்; இராமன் ஏந்தும்
குன்றுஅன தோளின் ஆற்றல் உள்ளத்தின் உணரக் கொண்டான்;
அன்றியும், அண்ணல்ஆணை மறுக்கிலன்; அங்கை கூப்பி
நின்றனன்; இருந்து கண்ணீர் நிலன் உறப் புலர்கின்றாள்பால். (3039)

(ஏந்தும் - ஓங்கிய / உயர்ந்த; அம் - அழகிய; புலர்தல் - வருந்துதல்)

என்று இராமன் கூறியதும் இளையவனும் வீரனுமான இலக்குவன் அதற்கு உடன்பட்டான்; இராமனது உயர்ந்த மலை போன்ற தோள்களின் ஆற்றலை உள்ளத்தில் நன்கு எண்ணிக் கொண்டான். அதுமட்டுமின்றி, இறைவனான இராமனின் கட்டளையையும் மறுக்க இயலாதவனானான். எனவே தன் அழகிய இருகைகளையும் கூப்பிக் கொண்டு, தவச்சாலைக்குள் இருந்து நிலத்தில் புகும்படி கண்ணீர் சொரிகின்ற சீதையின் அருகில் காவல் காத்துக்கொண்டு நின்றிருந்தான்.

சீதை தவச்சாலையில் தனித்திருந்து அழுதது இராமன் தன்னந் தனியனாக எந்தத் துணையும் இல்லாமல் இத்தகைய பெரும் சேனையை எதிர்த்துச் செல்கிறானே அவனுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்பதற்காக என்க.

65. இராமன் போர்க்களத்திற்குச் செல்லுதல்

குழைஉறு மதியம் பூத்தகொம்பு
அனாள் குழைந்து சோர,
தழைஉறு சாலை நின்றும்,
தனிச்சிலை தரித்தமேரு,
மழைஎன முழங்குகின்ற வாள்
எயிற்று அரக்கர் காண
முழையில் நின்று எழுந்து செல்லும்
மடங்கலின் முனிந்து சென்றான். (3040)

(தனி - ஒப்பற்ற; குழை - குண்டலம் / காதணி; குழைந்து - கரைந்து; சோர்தல் - தளர்தல்; மழை - மேகம்; வாள் - கொடிய; முழை - குகை; மடங்கல் - சிங்கம்; தழை - இலைகள்; மதியம் - பூர்ண சந்திரன்)

காதணிகளாகிய குண்டலங்களை அணிந்த ஒரு பூரண சந்திரனே ஒரு மலராகப் பூத்திருக்கின்ற ஒரு பூங்கொடி போன்றவளான சீதை, தவக்குடிலுக்குள் மனம் கரைந்து தளர்ந்து போனவளாய் அமர்ந்திருக்க, இலைகளால் வேயப்பட்ட அந்தக் தவச்சாலையிலிருந்து, ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்லைக் கையில் ஏந்திய மேரு மலையை ஒத்த இராமபிரான், ஒப்பற்ற மேகத்தைப் போல முழக்கம் செய்கின்ற, கொடிய கூரிய வளைந்த பற்களையுடைய அரக்கர்கள் காணும் வண்ணம், ஒரு குகையிலிருந்து ஒரு சிங்கம் பொங்கியெழுந்து போவதைப் போல, மிக்க கோபம் கொண்டு வெளிச் சென்றான்.

சீதை குழைந்து சோர்ந்திருப்பதற்கான காரணம் முன் பாட்டிலேயே கூறப்பட்டது. இங்கே ஒன்று நோக்க வேண்டும். இராமன் போருக்குப் புறப்படும் பொழுது சீதையிடப் ஒன்றும் சொல்லாமலேதான் சென்றிருக்கிறான் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். வாலி போருக்குப் புறப்படும் பொழுது தாரையிடம் சொல்லிச் சென்றான். அவள் தடை செய்தாள். வாலி மாண்டான். இராவணன் இறுதிப் போருக்குச் செல்லும் பொழுது மண்டோதரியிடம் கூறிச் சென்றான் அவள் தடை செய்தாள். இராவணன் மாண்டான். எனவே இராமன் இங்கு சீதையிடம் ஏதும் கூறாது சென்றான் என்பதைக் கம்பன் கோடிட்டுக் காட்டுகிறான் என்று கொள்ள வேண்டும். தவக்குடிலிலிருந்து சினந்து செல்லும் இராமனுக்கு, மலைக்குகையிலிருந்து எழுந்து சினந்து செல்லும் சிங்கம் உவமை. ''மாரிமலை முழைஞ்சில் மன்னிக்கிடந்து உறங்கும் சீரிய சிங்கம், அறிவுற்றுத் தீ விழித்து, வேரி மயிர் பொங்க, வெப்போடும் பேர்த்து உதறி,

மூறி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே'' என்பது திருப்பாவை 23.

66. சூர்ப்பணகை இராமனைக் கரனுக்குக் காட்டுதல்

தோன்றிய தோன்றல் தன்னைச்
சுட்டினள் காட்டிச் சொன்னாள்;
வான்தொடர் மூங்கில் தந்த வயங்கு
வெம்தீ இதுஎன்னத்
தான்தொடர் குலத்தையெல்லாம்
தொலைக்குமா சமைந்து நின்றாள்,
''ஏன்று வந்து எதிர்ந்த வீரன் இவன்
இகல் இராமன்'' என்றே. (3041)

(வான்தொடர் - ஆகாயம் அளாவ; வயங்கு - விளங்குகின்ற / தோற்றுவித்த; தோன்றல் - இராமன்; ஏன்ற - மேற்கொண்ட; இகல் - வலிமை)

ஆகாயமளவு உயர்ந்து நின்ற மூங்கில்கள் தங்களுக்குள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்ளுவதால் எழுகின்ற ஒளி மிக்கக் கொடிய தீ என்று சொல்லும் படியாக, தான் பிறந்த அரக்கர் குலத்தையே வேரோடு அழிக்கும் எண்ணம் கொண்டு நிற்கின்றவளாகிய சூர்ப்பணகை, அப்போது தவக்குடிலிலிருந்து போர்க்களத்திற்கு வந்து கொண்டிருந்த இராமபிரானைச் சுட்டிக்காட்டி, ''இவன் தான் போர்க் கோலம் பூண்டு, நம்மைப் பகைத்து வந்த வலிமையுடைய வீரன் இராமன்'' என்றாள்.

மூங்கில் காட்டில் மூங்கில்கள் ஒன்றோடொன்று இழைவதால், தாம் மட்டும் எரிந்து போகாமல், அக்காட்டைச் சுற்றியிருக்கும் புதர்களையும் அதைச் சார்ந்த வேறு பல மரங்களையும் அழித்து விடுவதுபோல், சூர்ப்பணகை என்னும் இந்த மூங்கில், தான் மட்டும் அழிவதோடல்லாமல் அவள் தோன்றிய அரக்கர் குலத்தையே அழிக்கப் புறப்பட்டிருக்கிறாள் என்பதாம்.

67. கரன் தன் படையினருக்குக் கூறுதல்

கண்டனன் கனகத்தேர்மேல், கதிரவன் கலங்கி நீங்க,
விண்தனில் நின்ற வென்றிக் கரன் எனும் விலங்கல் தோளான்,
''மண்டு அமர்யானே செய்து, இம்மானிடன் வலியை நீக்கி,
கொண்டனன் வாகை'' என்று, படைஞரைக் குறித்துச் சொன்னான். (3042)

(கனகம் - பொன்; விலங்கல் - மலை; மண்டு - நெருங்கிய)

ஆயிரம் கதிர்களையுடைய சூரியன் கூட கலக்கமுற்று அப்பால் போகுமாறு, பொன் மயமான தேரில் ஆகாயத்தில் வந்து நின்ற பகைமை

கொண்ட வெற்றியையுடைய, கரன் என்னும் பெயர் கொண்ட, மலை போன்ற திண்ணிய தோள்களையுடையவன், இராமனைத் தனித்துக் கண்டவுடன், தனது படைவீரர்களை நோக்கி, ''நெருங்கி வந்திருக்கும் இந்தப் போரில், நான் ஒருவனே தனியாகவே இந்தப் போரைச் செய்து, இந்த மனிதனுடைய ஆற்றலையெல்லாம் போக்கடித்து வெற்றி வாகை சூடிவருகிறேன்'' என்று கூறினான்.

இராமன் போர் செய்யத் தனித்து வந்தமை நோக்கித் தானும் தனியாகவே தான் இவனை எதிர்க்க வேண்டும், படைவீரர்கள் தேவையல்ல என்று தீர்மானித்துப் படைஞர்களிடம் இவ்வாறு கூறினான் என்க. விலங்கல் என்பது குறுக்கீடாக வளர்ந்து நின்று வழியைத் தடைப்படுத்துவதால் மலைக்குக் காரணப்பெயர்.

68. ''மானிடன்; ஒருவன்; வந்த வலிகெழு சேனைக்கு அம்மா!
கான்இடம் இல்லை'' என்னும் கட்டுரை கலந்த காலை,
''யான்உடை வென்றி என்ஆம்? யாவரும் கண்டு நிற்றீர்,
ஊன்உடை இவனை, யானே உண்குவென் உயிரை'' என்றான். (3043)

(வலிகெழு - ஆற்றல் மிக்க; கட்டுரை - பேச்சு; ஊன் - தசை / உடல்)

கரன், படைஞர்களை நோக்கி மேலும் கூறினான். ''நம்மை எதிர்த்து வந்துள்ள இவனோ மனிதன்; அதுவும் தனித்து ஒருவனாகவே வந்திருக்கிறான்; ஆனால் நம்முடைய ஆற்றல் மிக்க சேனைகள் நிற்பதற்கே இக்கானகத்தில் இடம் போதவில்லை. ஒருவனை வெல்ல இவ்வளவு பெரிய படையுடன் வந்திருக்கிறார்களே என்று இவ்வுலகத் தவர்கள் எல்லாம் கூடிப் பேச ஆரம்பித்தால் என்னுடைய வலிமையும் வெற்றியும் என்ன சிறப்புடைத்தாகும்? எனவே நான் மட்டிலும் தனியாக இவனுடன் போர் செய்கிறேன். நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு நில்லுங்கள். நமக்கு உணவாகும் மாமிசம் பொருந்திய உடலை உடைய இவனை நானே கொன்று, இவன் உயிரைப் பருகுவேன்'' என்றான்.

ஒரே ஒரு மனிதனோடு இவ்வளவு பெரிய படையினைக் கொண்டு போர் செய்து அதில் தான் வெற்றி பெற்றால் அது தன் புகழுக்கு இழுக்காகும் என்பது கரனின் கருத்து. எனவே படைவீரர்கள் விலகி நின்று, தான் போர் செய்யும் முறையைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி வேண்டுகிறான் என்க.

69. தீய அறிகுறிகளும், அகம்பன் அறிவுரையும்

அவ்வுரைகேட்டு வந்தான், அகம்பன் என்று அமைந்த கல்விச்
செவ்வியோன் ஒருவன், ''ஐய! செப்புவென்; செருவில் சால
வெவ்வியர் ஆதல் நன்றே! வீரருள் ஆண்மை வீர!
இவ்வயின்உளவாம்தீயநிமித்தம்''என்றுஇயம்பலுற்றான். (3044)

(செவ்வி - சிறப்பு; சால - மிகவும்; வெவ்வியர் - விரைவுடையவர் / தீவிரமுடையவர்; நிமித்தம் - குறிகள்; வெம்மை - கடுமை / விரைவு; இவ்வயின் - இப்பொழுது; அகம்பன் - கம்பமில்லாதவன் / சலனமோ சலிப்போ இல்லாதவன்)

அவ்வாறு கரன் கூறியவற்றைக் கேட்டதும், அங்கே இருந்த அகம்பன் என்ற பெயருள்ள கல்விச்சிறப்புள்ள ஒருவன் கரனின் முன்னே வந்து, ''தலைவனே! வீரர்களுக்குள் ஆண்மையில் மேம்பட்ட வீரனே! நான் ஒன்று கூறுவேன். கேட்டருள் வீராக! போரில் மிகவும் தீவிரமுடையதாதல் மிகவும் நல்லதே! என்றாலும் இந்த இடத்தில் இப்பொழுது சில தீய குறிகள் தென்படுகின்றன'' என்று தொடங்கி அவை என்னென்ன என்று மேலும் கூறலானான்.

அகம்பன் என்பதற்குச் சலிப்பில்லாதவன், தளராத உறுதியை உடையவன் என்று பொருள். அவனே சலிப்படைந்தும் சலனமுற்றும் அதனைத் தெரிவிக்கக் கரன் முன்னே வந்தான் என்றால் அவை எத்தகைய கொடிய தீய நிமித்தங்களாய் இருக்கும் என்பதை நாம் உணர வேண்டும். அவன் நிமித்தங்கள், குறிகள் பார்ப்பதிலும் அவற்றின் பலனை உணர்த்துவதிலும் வல்லவன். நிமித்திகன்; அதனைவிளக்கவே ''அமைந்த கல்விச் செவ்வியான்'' என்று அவனைச் சிறப்பித்தார் என்க. நிமித்தம் என்பது பின்னே வரும் பயன்களை முன்னே அறிவிக்கும் குறி, உற்பாதம் என்பதாம். வான்மீகம் அகம்பன் என்ற ஒரு நிமித்திகன் இதனைக் கூறினான் என்று கூறவில்லை. தீய உற்பாதங்கள் சில நிகழும் போது அவற்றைக் கரனே கண்டான் என்றும், எனினும் அதனைப் பொருட்படுத்தாது மேற்சென்றான் என்றும் கூறும். ஆனால் இறுதியில் கரன் உயிரிழந்த பிறகு அச்செய்தியை இராவணனிடம் சென்று கூறிய ஒற்றன் பெயர் அகம்பனன் என்று முதல் நூல் வான்மீகம் கூறும்.

70. அகம்பன் கூறியவை

''குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறி;
பருதிவானவன் ஊர் வளைப்புண்டது பாராய்!
கருதுவீர! நின் கொடிமிசைக் காக்கையின் கணங்கள்
பொருது வீழ்வன, புலம்புவ, நிலம்படப் புரள்வ. (3045)

(கருது - மதிக்கத்தக்க; குமுறுதல் - முழங்குதல்; ஊர் - பரிவேடம் / ஒளிவட்டம் / ஊர்கோள்; கணங்கள் - கூட்டம்; பொருது - சண்டையிட்டு; பருதிவானவன் - சூரியதேவன்)

அகம்பன், கரனை நோக்கி, ''எல்லோராலும் நன்கு மதிக்கத்தக்க வீரனே! மேகங்கள் முழங்கிக் கொண்டு இரத்த மழை பொழிகின்றது பார்; சூரியனைச் சுற்றி ஒளிவட்டம் சூழ்ந்து கொண்டுள்ளதைப் பார்; உன்னுடைய கொடியின்மேல் காக்கைக் கூட்டங்கள் தங்களுக்குள்

சண்டையிட்டுக் கொண்டு கீழே விழுந்து, அழுது அரற்றி, நிலத்தில் புரண்டு கொண்டிருப்பதையும் பார்ப்பாயாக'' என்றான்.

மேகம் இரத்த மழை பொழிதலும், சூரிய சந்திரர்களிடம் பரிவேடம் தோன்றுதலும், தமது நாட்டுக் கொடியின் மீது காக்கைகள் சண்டையிட்டுக் கொண்டு நிலத்தில் விழுந்து அழுது புலம்புவதும் அகம்பன் கூறிய தீய நிமித்தங்களாகும்.

71. ''வாளின் வாய்களை ஈ வளைக்கின்றன; வயவர்
தோளும் நாட்டமும் இடம் துடிக்கின்றன; தூங்கி
மீளி மொய்ம்பு உடை இவுளி வீழ்கின்றன; விரவி
ஞாளியோடு நின்று உளைக்கின்ற நரிக்குலம் பலவால்'' (3046)

(வளைத்தல் - சூழ்ந்து மொய்த்தல்; நாட்டம் - கண்கள்; மீளி - மிக்க; மொய்ம்பு - வலிமை; இவுளி - குதிரைகள்; குலம் - கூட்டம்; ஞாளி - நாய்கள்; விரவி - கலந்து; உளைத்தல் - ஊளையிடுதல்; வயவர் - வீரர்)

''வீரர்களின் வாளின் கூரிய பகுதியை ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன; அவர்களின் இடது தோள்களும் இடது கண்களும் துடிக்கின்றன; மிக்க வலிமையுடைய படைத்தலைவர்களது குதிரைகள் தூங்கி வழிந்து கொண்டு கீழே விழுகின்றன; நரிக்கூட்டங்களோடு நாய்களும் கலந்து நின்று ஊளையிடுகின்றன; இவற்றையெல்லாம் காண்பாயாக!'' என்கிறான் அகம்பன்.

போர்க் கருவிகளில் ஈ மொய்த்தலும், வீரர்களின் இடது தோளும் கண்ணும் துடித்தலும், குதிரைகள் தாமே தூங்கி விழுவதும், நரியும் நாயும் சேர்ந்து ஊளையிடுவதும் தீய அறிகுறிகள் என்பதாம்.

72. ''பிடியெலாம் மதம் பெய்திடப் பெருங்கவுள் வேழம்
ஒடியுமால் மருப்பு; உலகமும் கம்பிக்கும்; உயர் வான்
இடியும் வீழ்ந்திடும்; எரிந்திடும் பெருந்திசை; எவர்க்கும்
முடியின் மாலைகள் புலாலொடு முழுமுடை நாறும்.'' (3047)

(பிடி - பெண்யானை; வேழம் - ஆண்யானை; கவுள் - கன்னம்; மருப்பு - கொம்பு; கம்பித்தல் - நடுங்குதல்; முடி - தலை; முடை - கெட்ட நாற்றம்; மால் - பெரிய)

''பெண்யானைகள் மிக்க மதநீரைச் சொரிகின்றன; பெரிய கன்னங்களையுடைய ஆண் யானைகளின் கொம்புகள் ஒடிந்து விழுகின்றன; உலகம் நடுக்கமுற்று நிற்கின்றது; உயர்ந்த வானத்தில் இருந்து இடி விழுகின்றன; பெரிய திசைகளெல்லாம் தீப்பற்றி எரிகின்றன; வீரர்கள் எல்லோரின் தலையில் இருக்கும் தலைமாலைகளெல்லாம் இறைச்சி நாற்றத்தோடு கெட்ட நாற்றமும் வீசுகின்றன'' என்றான் அகம்பன்.

பொதுவாகப் பெண்யானைகள் மதநீர் பொழிவதில்லை. இப்பொழுது பெண்யானைகளும் மதநீர் பொழிவதால் அதனைத் தீ நிமித்தம் என்கிறான்

அகம்பன் என்க. முடை என்பது பொதுவாக நாற்றத்தைக் குறித்தாலும், நீண்ட நாள் உடல் கழுவாத நிலையிலும், தயிர், மோர், வெண்ணெய் முதலியன பதன் அழிந்த நிலையிலும் எழுகின்ற தீயநாற்றத்தைக் குறிக்கும் என்க.

இயற்கைக்கு மாறான செயல்கள் நிகழ்வது தீ நிமித்தத்தின் அறிகுறி என்க. பொதுவாகத் தலைமாலைகள் மணம் பரப்ப வேண்டும். இங்கே அவை புலால் நாற்றமும் முடை நாற்றமும் வீசுகின்றன. திசைகள் எரிவதும், இடிகள் வீழ்வதும், உலகம் நடுக்கமுறுதலும், ஆண் யானைகளின் தந்தங்கள் முறிவதும், பெண் யானைகள் மதம் பெருக்குவதும் தீய அறிகுறிகள் என்பதாம்.

73. ''இனைய ஆகலின், ''மானிடன் ஒருவன்'' என்று இவனை
நினையல்; ஆவதொன்று அன்று அது; நீதியா நின்ற
வினையெலாம் செய்தும் வெல்லலாம் தன்மையன் அல்லன்;
புனையும் வாகையாய்! பொறுத்தி என்உரை'' எனப் புகன்றான். (3048)

(புனைதல் - அணிதல்; இனைய - இவ்வாறான; நினையல் - நினைக்காதே; நீதி - மெய் / நியாயம்; வினை - போர்)

''அலங்கரித்த வெற்றி மாலையை அணிந்தவனே! இவ்வாறு தீய குறிகள் தோன்றி இருத்தலால், இவனை மனிதன் என்றோ, தனியன் என்றோ எண்ணி விடாதே! அவ்வாறு நினைப்பது நல்லதல்ல; நியாயமான முறையில் நீ போர் புரிந்தாலும், இவன் உன்னால் வெல்லப்படக் கூடிய தன்மையன் அல்லன். நான் கூறும் இவ்வுரைகளைப் பொறுத்தருள் வாயாக!'' என்று அகம்பன் கரனை எச்சரித்தான்.

''மானிடன், ஒருவன்'' என்பது, முன்பு கரன் கூறிய அதே சொற்களை மீண்டும் அவனுக்கு எதிராகவே அவனது நிமித்திகனைக் கொண்டே கூறவைத்த கவிஞனின் திறம் நோக்குக. பொதுவாக அரக்கர்கள் தனுர்வேதத்தில் கூறியபடி போர் செய்பவர்கள் அல்லர். மாயத்தால்தான் வெற்றி கொள்வர். எனவே அகம்பன் நீ நீதியுடன் போர் செய்தால் கூட இவனை வெல்லலாம் என்று கருதிவிடாதே என்று எச்சரிக்கிறான் என்க. இவ்வாறு தான் கூறுவதால் கரன் உறுதியாகத் தன்மீது சினம் கொள்வான் என்பதறிந்த அகம்பன் ''பொறுத்தி என் உரை''என்றான் என்க.

74. கரன் சினந்து கூறுதல்

உரைத்த வாசகம் கேட்டலும், உலகெலாம் உலையச்
சிரித்து, ''நன்றுநம் சேவகம்; தேவரைத் தேய
அரைத்த அம்மியாம் அலங்கு எழில் தோள், அமர்வேண்டி
இரைத்து வீங்குவ, மானிடற்கு எளியவோ?''என்றான். (3049)

(உலைதல் - நிலைகுலைதல்; சேவகம் - வீரம்; தேய்தல் - அழிதல்; அலங்கு - அசையும் / விளங்குகின்ற; அமர் - போர்; வேண்டி - விரும்பி; இரைத்தல் - சீறுதல்; வீங்குதல் - பூரித்தல்; வாசகம் - சொல்)

அவ்வாறு அகம்பன் கூறியவற்றைக் கேட்ட கரன், இவ்வுலகங்களெல்லாம் நிலைகுலையும்படி ஆவேசமாகச் சிரித்து, ''தேவர்களே அவர்கள் குலம் அழியும்படி அரைத்த அம்மி போன்ற என் அசைகின்ற அழகான தோள்கள் - போரை விரும்பிச் சீறிப் பூரித்துப் போயிருக்கின்ற என் தோள்கள், ஒரு மானிடனாகிய இராமனை வெல்ல முடியாத எளிமையுடையனவோ? நன்றாயிருக்கிறது என் வீரம்'' என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

''தேவரைத் தேய அரைத்த அம்மியாம் அலங்கு எழில் தோள்'' என்பது கரன் முன்பு தேவரை வென்றது குறித்தது என்க. தேவர்களை எளிதில் அழித்த நாம் இம்மனிதனுக்கு அஞ்சுவதோ? என்பது கருத்து.

75. அரக்கர்படை இராமனை வளைத்துக் கொள்ளுதல்

என்னும் மாத்திரத்தே, ''எறி, பிடி'' என இடியா
மன்னர் மன்னவன் மதலையை வளைத்தன; வனத்து
மின்னும் வால்உளை மடங்கலை முனிந்தன வேழம்
துன்னினால் எனச் சுடு சினத்து அரக்கர்தம் தொகுதி. (3050)

(மாத்திரம் - அளவு; சுடு - கொதிக்கும்; இடியா - இடித்து / முழங்கிக் கொண்டு; வால் - வெண்மையான; உளை - பிடரிமயிர்; மடங்கல் - சிங்கம்; முனிதல் - வெகுளுதல்; துன்னுதல் - நெருங்குதல்; மதலை - புதல்வன்; தொகுதி - கூட்டம்; வளைத்தல் - சூழ்ந்து கொள்ளுதல்)

என்று கரன் கூறிய அளவில், கொதிக்கின்ற கோபம் கொண்ட அரக்கர்களின் படைகளின் கூட்டம், ''ஆயுதங்களை வீசுங்கள்; அவனைப் பிடியுங்கள்'' என்று இடி போல முழங்கிக் கொண்டு காட்டில் உள்ள மின்னல் போல் ஒளி வீசுகின்ற வெண்மையான வாலினையும் பிடரிமயிரையும் உடைய ஒரு சிங்கத்தை, கோபம் கொண்ட பல யானைகள் ஒன்று சேர்ந்து நெருங்கினாற் போல, அரசர்க்கரசனாகிய தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனாகிய இராமனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

வேழம் அரக்கர் படைக்கும் மடங்கல் இராமனுக்கும் ஒப்பு.

76. கரன் படை அழிதல் [20 பாடல்கள்]

வளைந்த காலையில், வளைந்தது அவ்விராமன் கை வரிவில்;
விளைந்த போரையும் ஆவதும் விளம்புதும்; விசையால்,
புளைந்த பாய்பரி புரண்டன; புகர்முகப் பூட்கை
உளைந்த, மால்வரை உரும் இடிபட ஒடிந்து என்ன. (3051)

(காலை - பொழுது / சமயம்; வரி - கட்டமைந்த; விளைந்த - நிகழ்ந்த; ஆவது - விளைவு; விளம்புதல் - சொல்லுதல்; பாய்தல் - தாவிச்செல்லுதல்; பரி - குதிரைகள்; விசை - விரைவு; புளைதல் - துளைபடுதல்; புகர் - புள்ளிகள்; பூட்கை - யானை; உரும் - முழங்குகின்ற; மால் - பெரிய; ஓடிதல் - சிதைதல்; உளைதல் - நிலைகுலைதல் / வருந்துதல்; படுதல் - விழுதல்; பூட்கை - புழைக்கை - துளையையுடைய துதிக்கையையுடையது என்பது யானைக்குக் காரணப் பெயர்)

அவ்வாறு கரனுடைய சேனைகள் இராமனைச் சுற்றி வளைத்துக் கொண்ட போது, இராமன் கையில் இருந்த கட்டமைந்த வில்லும், நாண் ஏற்றப்பட்ட அம்பு தொடுப்பதற்காக வளைந்தது. அப்பொழுது நிகழ்ந்த போரையும், அதனால் உண்டாகிய விளைவுகளையும் இப்போது கூறுவோம்; இராமன் தொடுத்த இராமபாணத்தின் விரைவாலும் வேகத்தாலும் தாவிச் செல்லுகின்ற குதிரைகள், துளைபட்டு நிலத்தில் விழுந்து புரண்டன; புள்ளிகளை உடைய முகத்தையும் தொளையுள்ள கைகளையும் உடைய யானைகள், முழங்குகின்ற இடி இடித்தலால் ஒடிந்து விழுகின்ற பெரிய மலைகளைப்போல, நிலை குலைந்து சிதறிப் போயின.

யானைகளுக்கு மலைகளும், இராமபாணத்திற்கு இடியும் உவமை.

77. சூலம்அற்றன; அற்றன சுடர் மழுத்தொகை; வாள்
மூலம்அற்றன; அற்றன முரண் தண்டு; பிண்டி
பாலம்அற்றன; அற்றன பகழி; வெம்பகுவாய்
வேலும்அற்றன; அற்றன வில்லொடு பல்லம். (3052)

(அற்றன - ஒடிந்தன; தொகை - திரள்; மூலம் - அடி; முரண் - வலிமை; பகழி - அம்புகள்; பகு - பிளக்கும்; பல்லம் - ஒருவகைஅம்பு / அம்புக்குதை)

இராமன் செலுத்திய பாணங்களால், அரக்க வீரர்களின் சூலாயுதங்கள் ஒடிந்து விழுந்தன; ஒளிவிட்டு பிரகாசிக்கும் கோடாலி என்னும் ஆயுதத்தின் கூட்டங்களும் அழிந்தன. வாட்படைகள் அடிப்பகுதியுடன் கைப்பிடியுடன் - உருத்தெரியாமல் அற்று வீழ்ந்தன; வலிமை மிக்க தண்டாயுதம் கூட இற்று விழுந்தது; பிண்டிபாலம் என்னும் எறிபடையும் ஒடிந்து விழுந்தது; அவர்கள் செலுத்திய அம்புகள் அறுந்து போயின. கொடிய பகைவரின் உயிரைப் பறிக்கின்ற வேற்படைகளும் இற்று ஒடிந்து வீழ்ந்தன. அவர்கள் கொண்டிருந்த விற்களும், அதனின்று செலுத்தப்படும் பல்லம் என்னும் ஒரு வகை அம்புகளும் இற்று விழுந்தன.

78. தொடி துணிந்தன தோளொடு; தோமரம் துணிந்த;
அடிதுணிந்தன கடகளிறு; அச்சொடு நெடுந்தேர்,
கொடி துணிந்தன; குரகதம் துணிந்தன; குலமா
முடிதுணிந்தன; முளையொடு துணிந்தன முசலம். (3053)

(தொடி - தோள்வளைகள்; கடம் - மதம்; அடி - கால்கள்; துணிதல் - அறுபடுதல்; குரகதம் - குதிரைகள்; குலம் - கூட்டம்; முடி - தலைகள்; முளை - தண்டாயுதம்; முசலம் - உலக்கை; தோமரம் - கைவேல்; அச்சு - இருசு)

இராமன் ஏவிய அம்புகளால் கரன் படையிலுள்ள வீரர்களின் கைகளில் அணியப் பெற்றிருந்த தோள்வளைகள் அவர்கள் தோள்களோடு துண்டிக்கப்பட்டன; கைவேல்கள் தூர வீசயெறியப்பட்டன; மதம் கொண்ட யானைகள் கால்கள் அறுபட்டு விழுந்தன; பெரிய தேர்களின் அச்சுக்கள் முறிந்து போயின; அவற்றில் கட்டப்பட்டிருந்த கொடிகள் அறுந்து வீழ்ந்தன; குதிரைகள் உயிர் நீத்தன; சிறந்த கூட்டமான படைத்தலைவர்கள் தங்கள் தலைகளையும், தலையில் அணிந்திருந்த கிரீடங்களையும் இழந்தனர்; தண்டாயுமும், உலக்கைகளும் அறுபட்டு வீழ்ந்தன.

79. கருவி மாவொடு கார்மதக் கைம்மலைக் கணத்தூடு
உருவி மாதிரத்து ஓடின சுடுசரம்; உதிரம்
அருவி மாலையில் பிறங்கியது அவனியில்; அரக்கர்
திருஇல் மார்பகம் திறந்தன; துறந்தன சிரங்கள். (3054)

(கருவி - சேணம் / கல்லணை / தவிசு / இருக்கை; மா - குதிரை; கார் - கரிய; கைம்மலை - யானை; மாதிரம் - திசைகள்; மாலை - ஒழுங்கு; பிறங்குதல் - பெருகுதல்; அவனி - பூமி / நிலம்; சுடு - கொடிய)

இராமன் செலுத்திய கொடிய இராமபாணம், சேணம் கட்டப்பட்ட குதிரைகளோடும், கரிய மதநீர் பெருக்குகின்ற, துதிக்கைகளையுடைய யானைக் கூட்டத்தோடும், அவர்களின் உடல்களில் ஊடுருவிச் சென்று, திசைகளெங்கும் ஓடின. அதனால் பெருகிய இரத்த ஒழுக்கு அருவி போலத் தரையில் பெருகியது; பொலிவற்ற அரக்கர்கள் மார்புகள் பிளக்கப் பட்டன; அவர்களுடைய தலைகள் அவர்களது உடலினின்றும் நீங்கிச் சிதறிப் போயின.

80. ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், கோடி என்று உணரா,
துன்று பத்திய இராகவன் சுடுசரம் துரப்ப,
சென்று, பத்திரத் தலைஎன, மலை திரண்டு என்ன,
கொன்று, பத்தியில் குவித்தன பிணப்பெரும் குன்றம். (3055)

(துன்று - நெருங்கிய; பத்தி - வரிசை; துரப்ப - செலுத்த; பத்திரத்தலை - மலைச் சிகரம்; உணரா - கணக்கிட்டு அறிய முடியாத)

ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று கணக்கிட்டு வரையறை செய்ய முடியாதபடி, இரகுகுலத்தில் தோன்றியவனான இராமன், கொடிய அம்புகளை நெருக்கமாகவும் வரிசையாகவும் செலுத்த, அவ்வம்புகள் சென்று, கரன் படைவீரர்களைக் கொன்று, மலைச்சிகரங்கள் என்னும்படியும், அம்பு பாய்ந்த மலைகளே ஒன்று திரண்டு இருக்குமாறு

போலவும், அவர்களின் பிணங்களை வரிசையாகப் பெரிய மலைகளைப் போலக் குவித்து நிறைத்தன.

81. காடுகொண்ட கார்உலவைகள், கதழ் எரிகதுவச்
சூடுகொண்டன எனத் தொடர் குருதி மீத்தோன்ற,
ஆடுகின்ற அறுகுறை; அயில் அம்பு விண்மேல்
ஒடுகின்றன, உயிரையும் தொடர்வன ஒத்த. (3056)

(உலவைகள் - பட்டமரங்கள் / மரக்கொம்புகள்; கதழ் - கிளர்ச்சி; கதுவுதல் - பற்றுதல்; அறுகுறை - தலையற்ற உடல்கள் / முண்டம் / கவந்தம்; தொடர் - இடைவிடாது; சூடு கொள்ளுதல் - எரிதல்; அயில் - கூரிய)

காட்டில் உள்ள கரிய பட்டுப்போன மரங்கள், கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்புப் பற்றிக் கொண்டு அதனால் சூடுபெற்று மிகுந்து எரிதல் போல, இராமபாணத்தால் அறுபட்ட அரக்க வீரர்களின் தலையற்ற முண்டங்கள் இடைவிடாது இரத்தம் வெளிப்பட்டுத் தோன்ற ஆடிக்கொண்டிருக்கின்றன. இராமனுடைய கூரிய அம்புகள், அவர்கள் தலையை அறுத்ததோடல்லாமல், அவர்கள் உயிர் வீரசுவர்க்கத்திற்குச் சென்று கொண்டிருப்பதால், ஆகாயத்தில் அவற்றையும் சென்று அழிப்பதற்காகத் தொடர்ந்து செல்வதைப் போலச் சென்றன.

உலவை என்பது பொதுவாக உலர்ந்துபோன பட்ட மரங்களைக் குறிக்கும் என்றாலும், உலவை என்றே ஒருவகை மரம் இருப்பதாகவும் கூறுவதுண்டு. இதனை ஓடை மரம் என்றும் வழங்குவர். தழையும், கிளையும் இல்லாது மொட்டையாக உள்ள மரம், தலை அறுத்த அரக்கர்களின் முண்டங்களுக்கு உவமை; அவர்கள் உடலிலிருந்து கொப்பளித்து வெளிவிடும் இரத்தப் பெருக்கிற்கு, அவ்வுலவை மரங்கள் நெருப்புப் பற்றி எரிவது உவமை. உடல்களை மட்டும் அறுத்த தோடல்லாமல் இராமனது அம்பு, ஆகாயத்தில் வீரசுவர்க்கம் அடையச் சென்று கொண்டிருக்கும் அவர்களது உயிரையும் துரத்திச் சென்றன என்பது ஒரு நயம்.

82. கைகள் வாளொடு களம்பட, கழுத்துஅற, கவச
மெய்கள் போழ்பட, தாள்விழ, மிகநெடு நிருதர்
செய்ய மாத்தலை சிந்திட, திசைஉறச் சென்ற
தையலார் நெடுவிழி எனக் கொடியன சரங்கள். (3057)

(பட - அற்றுவிழ; மெய் - இங்கே மார்பு / உடல்கள்; போழ்பட - பிளவுபட; செய்ய - சிவந்த)

பெண்களின் நீண்ட கண்கள் போலக் கொடியனவான இராம பாணங்கள், மிகவும் பெரிய அரக்க வீரர்களின் கைகளை வாளொடு அறுத்துப் போர்க்களத்தில் போட்டு விட்டு, கழுத்தை அறுத்து,

கவசமணிந்த உடலையும் மார்பினையும் பிளந்து, கால்களை விழச் செய்து, செம்பட்டை நிறமுடைய பெரிய தலைகளைச் சிதறடித்து, பின்னர் திசைகளின் இறுதியைக் காணச் சென்றன.

மகளிர் கண்களும், இராமனின் அம்புகளும், கொடுமையாலும், இலக்கில் தவறாது தைத்தலாலும், கூர்மையாலும் ஒப்பு. ''நல்லார் கொழுங்கயல்தடங்கண்போலும்அம்பு கொண்டு அரசர்மீட்டார்'' என்பது சீவசசிந்தாமணி.

83. மாரி ஆக்கிய வடிக்கணை, வரைபுரை நிருதர்
பேர்யாக்கையின் பெருங்கரை வயின்தொறும் பிறங்க,
ஏரிஆக்கின; ஆறுகள் இயற்றின; நிறையச்
சோரி ஆக்கின; போக்கின வனம் எனும் தொன்மை. (3058)

(மாரி - மழை; வடி - கூரிய; வரை - மலை; புரை - போன்ற; யாக்கை - உடம்பு; பிறங்க - உயர்ந்து தோன்ற; ஏரி - குளங்களுமாம்; தொன்மை - பழைய நிலை)

இராமன் செலுத்திய கூரிய அம்புகள் மழை போலப் பொழிந்தன. எனவே மலைகளைப் போன்ற அரக்கர்களுடைய பெரிய உடல்கள், பெரியகரைகளைப் போல பக்க இடங்களில் எல்லாம் விளங்க, அவர்கள் உடல்களிலிருந்து பெருகிய இரத்தப் பெருக்கு குளங்கள் போலவும், ஆறுகள் போலவும் ஆனது. முன்பு காடாய் இருந்த தண்டக வனம் எனும் பழைய நிலையை மாற்றி இரத்தக்காடாக ஆக்கி விட்டன.

இராமன் எய்த அம்புகளால் குவிக்கப்பட்ட அரக்கர்களின் உடல்கள் அங்கங்கே ஒதுங்கிக் கரைகளாக அமைய, அவர்கள் உடலில் இருந்து பெருகிய இரத்தம் ஏரியாகவும், குளங்களாகவும், ஆறாகவும் ஆயின. எனவே முன்பு இருந்த தண்டகவனத்தை இப்பொழுது காணமுடிய வில்லை. அது இரத்த ஏரியாகக் காணப்பட்டது என்பதாம். இடைவிடாது அம்புகளைச் செலுத்தியதால் அதை மழை என்றும், அதனால் நிரம்பிய இரத்தப் பெருக்கை ஏரியாகவும், ஆறுகளாகவும் கூறினார்.

84. அலை மிதந்தன குருதியின் பெருங்கடல், அரக்கர்
தலை மிதந்தன; நெடுந்தடி மிதந்தன; தடக்கைம்
மலை மிதந்தன; வாம்பரி மிதந்தன; வயப்போர்ச்
சிலை மிதந்தன; மிதந்தன கொடிநெடுந் தேர்கள். (3059)

(தடி - தண்டாயுதம்; வாம் - வாவும் / தாவும்; வய - வலிய; மிதத்தல் - மேற்பரப்பில் தங்குதல்)

அந்த அலை மிகுந்து எழுகின்ற இரத்தப் பெருங்கடலில், அரக்கர்களுடைய தலைகள் மிதந்தன; நீண்ட தண்டாயுதங்கள் மிதந்தன; பெரிய துதிக்கைககளை உடைய மலை போன்ற யானைகள் மிதந்தன; தாவிச் செல்லும் இயல்புடைய குதிரைகள் மிதந்தன; வலிமையுடைய

போர் புரியும் விற்கள் மிதந்தன; கொடியுடன் கூடிய பெரிய தேர்களும் மிதந்தன.

நால்வகைப் படைகளும் அழிந்து மிதந்தன என்பது கூறப்பட்டது.

85. ஆயகாலையில், அனல் விழித்து, ஆர்த்து, இகல் அரக்கர்
தீய வார்கணை முதலிய தெறுசினப் படைகள்,
மேய மால்வரை ஒன்றினை வளைத்தன; மேகம்
தூய தாரைகள் சொரிவனவாம் எனச் சொரிந்தார். (3060)

(இகல் - வலிய; மேய - பொருந்திய; வார் - நீண்ட; தெறும் - கொல்லும்)

அவ்வாறான சமயத்தில், எஞ்சிய சில வலிமையுள்ள அரக்கர்கள், நெருப்புப் போல் விழித்து, ஆரவாரம் செய்து, பொருந்திய பெரிய மலை ஒன்றினைமேகங்கள்சூழ்ந்து கொண்டு, தூய்மையான மழைத்தரைகளைப் பொழிவதைப் போல, பகைவரைக் கொல்லும் தன்மையுடைய கொடிய நீண்ட அம்பு முதலிய படைக்கலன்களை இராமன் மீது சொரிய லானார்கள்.

மேகங்கள் சூழ்ந்து எவ்வளவு மழை பொழிந்தாலும், மலைக்கு ஒரு கேடும் உறாதது போல, அரக்கர்கள் எவ்வளவு தெறுசினப்படைகளைச் சொரிந்தாலும் இராமன் சற்றும் கவலையில்லாது மலைபோல் நின்றான் என்பதும் இவ்வுவமையால் பெறப்படுகிறது. இங்கு மலையை இராமனுக்கு ஒப்பிட்டது அளக்கலாகா அளவும், துளக்கலாகா நிலையும், தோற்றமும் கருதி என்க.

86. சொரிந்த பல்படை துணிபடத் துணிபடச் சரத்தால்,
அரிந்து, போந்தன சிந்திட, திசைதிசை அகற்றி,
நெரிந்து, பார்மகள் நெளிவுற, வனம்முற்றும் நிறைய,
விரிந்தசெம்மயிர்க்கருந்தலைமலைஎன வீழ்த்தான். (3061)

(துணிபடுதல் - முறிதல்; சரம் - அம்பு; பார்மகள் - நிலமடந்தை; கருமை - பெரிய; படை - படைக்கலன்கள் / ஆயுதங்கள்)

இராமன், அரக்கர்கள் செலுத்திய பல வகைப் படைக்கலன்களை யெல்லாம் தன் அம்புகளால் துண்டாகிப் போகும்படி அறுத்தெரிந்தான்; தன்மேல் வந்து விழுந்த ஆயுதங்களையும் சிதறிப் போகும்படி விலக்கினான். அந்த அரக்கர்களின் கரிய பெரிய தலைகளை அறுத்து மலைகள்போலக் குவித்தான், அந்தவனம் முழுதும் நிறைந்திருந்த அரக்கர் தலைகளின்பாரம்தாங்காமல் நிலமகள்கூடத்தன்முதுகுநெரிந்து நெளியத் தொடங்கினாள்.

87. கவந்த பந்தங்கள் களித்தன; குளித்த கைம் மலைகள்
சிவந்து பாய்ந்த வெம் குருதியில்; திருகிய சினத்தால்
நிவந்த வெம்தொழில் நிருதர் தம்நெடு நிணம் தெவிட்டி
உவந்த, வன்கழுது; உயிர்சுமந்து உளுக்கியது உம்பர். (3062)

(கவந்தம் - தலையற்ற உடல்கள்; குளித்த - முழுகின; திருகிய - மாறுபட்ட / கடுமையான; நிவந்த - ஓங்கிய; நிணம் - உடல் தசை / கொழுப்பு / மாமிசம்; தெவிட்டுதல் - வெறுத்தல்; கழுது - பேய்கள்; உளுக்குதல் - நெளிதல்; பந்தம் - திரள்; உம்பர் - விண்ணுலகு)

அரக்கர்கள்அளவற்றோர் மடிந்து விழுந்ததைக் கண்டு, தலையற்ற உடல்களெல்லாம் மகிழ்ச்சியால் கூத்தாடின; அங்கே பெருகிய சிவந்த நிறமுடைய இரத்த வெள்ளத்தில் துதிக்கைகளையுடைய யானைக ளெல்லாம் முழுகின; கடுமையான கோபத்தால் மேலோங்கிய கொடுந் தொழிலாகிய கொலைத் தொழில் புரியும் அரக்கர்களின் நீண்ட உடல்களி லிருந்த மாமிசக் கொழுப்புக்களை யெல்லாம் வலிமையான பேய்கள் திகட்டும் அளவிற்குத் தின்று மகிழ்ந்தன; வீர சுவர்க்கம் அடைந்த அரக்கர்கள் எல்லாம் விண்ணுலகு சென்று சேர்ந்ததால், விண்ணுலகும் அக்சுமை தாங்காது தன் உடலை நெளிக்கத் தொடங்கியது.

தெவிட்டுதல் என்பது அளவிற்கு அதிகமாக உண்பதால் உண்டாகும் வெறுப்பினைக் குறிக்கும்.

88. மருள்தரும் களி வஞ்சனை வளைஎயிற்று அரக்கர்,
கருடன் அஞ்சுறு கண்மணி காகமும் கவர்ந்த;
இருள்தரும் புரத்து இழுதையர் பழுது உரைக்கு எளிதோ?
அருள்தரும்திறத்து அறன் அன்றி, வலியதுஉண்டாமோ? (3063)

(மருள் - மயக்கம்; புரம் - உடல்; இழுதையர் - அறிவிலிகள் / கீழ்மக்கள்; பழுது - தீங்கு; திறம் - இயல்பு; இருள் - கரிய)

மயக்கம் தருகின்ற மாயச் செயல்களில் வல்லவரும், மிக்க செருக்குக் கொண்டவர்களும், வஞ்சனையான எண்ணங்கள் கொண்டவர்களும் வளைந்த கோரபற்களைக் கொண்டவர்களும் ஆகிய அரக்கர்களின் கரிய பெரிய கண்மணிகளைக் கண்டு பறவைகளுக்கு அரசனும், கூரிய கண்பார்வையையுமுடைய கருடன் கூட அஞ்சுவான். ஆனால் இப்பொழுது அரக்கர் போர்க்களத்தில் மடிந்துகிடப்பதால் பிறப்பில் இழிவானதும், ஒரே ஒரு கண்ணைப் பெற்றதும், கூரிய கண்பார்வை யற்றதுமான காகங்கள் கூட, அந்த அரக்கர்களின் கண்மணிகளைப் பறித்துச் செல்லலாயின. இருள் போன்று கரிய உடல் படைத்த அறிவிலிகளாகிய கீழ்மைக் குணம் கொண்ட அரக்கர்களுக்கு ஏற்படும் தீங்கினை எடுத்துச் சொல்லுவது என்பது மிக எளிதாகுமன்றோ? கருணை செய்யும் இயல்புடைமைக்கு அறத்தைத் தவிர வேறு வலிமையுடையது ஏதேனும் இருக்கிறதா? ஒன்றும் இல்லை என்பதாம்.

அறநெறியில் நின்ற இராமன் வலிமை வாய்ந்தவனானான்; அதர்ம நெறியில் நின்ற அரக்கர்கள் வலியிழந்து அழிவுற்றனர் என்பது கருத்து. உயிர்களுக்குத் தர்மமே நன்மை தரும். அதர்மம் கேட்டினையே விளைவிக்கும் என்பது புலப்படுத்தப்பட்டது. அறத்திற்கு அருள் மிக இன்றியமையாதலால், ''அருள் தரும் திறத்து அறன்'' என்றார்.

89. பல்லாயிரம் இருள் கீறிய பகலோன்என ஒளிரும்
வில்லாளனை முனியா, வெயில்அயிலாம் என விழியா,
கல்ஆர் மழை, கணமாமுகில், கடைநாள் விழுவனபோல்
எல்லாம்ஒரு தொடையா, உடன்எய்தார் வினைசெய்தார். (3064)

(கீறிய - பிளந்து ஒழித்த; பகலோன் - சூரியன்; முனியா -முனிந்து / கோபித்து ; விழியா - விழித்து ; களம் - கூட்டம் ; விழுவன - பொழிவன ; ஒருதொடையா - ஒருசேர ; வினை - போர்; வெயில் - ஒளி ; அயில் - வேற்படை ; கடைநாள் - யுகமுடிவு / ஊழிமுடிவு)

பல ஆயிரக்கணக்கான இருளின் தொகுதியைப் பிளந்து அழித்து ஒளி வீசுகின்ற சூரியனைப் போன்ற தேககாந்தியை உடையவனும், வில்தொழிலில் சிறந்து விளங்குபவனுமாகிய இராமபிரானை, எஞ்சியிருந்த அரக்கர்கள் எல்லோரும் கோபித்து, ஒளிமிகுந்த வேற்படையைப் போன்ற கூரிய கண்களால் விழித்துப்பார்த்து, ஊழி முடிவுக் காலத்தில் மேகக் கூட்டங்கள் எல்லாம் சேர்ந்து கல்லாலாகிய மழையைப் பொழிவன போல, எல்லா அரக்கர்களும் ஒன்று சேர்ந்து, எல்லாப் படைக்கலன்களையும் ஒரு சேரச் சேர்த்து ஒரே சமயத்தில் இராமன் மேல் செலுத்திப் போர் செய்யலானார்கள்.

பல்லாயிரம் இருள் கீறிய பகலோன் என்பது, பல்லாயிரக் கணக்கான அரக்கர்களை அழித்த சூரியன் போன்ற இராமன் என்பதையும் குறிக்கும். பல்லாயிரம் இருள் - உயிரிழந்த அரக்கர்கள்; பகலோன் - இராமன்; கல்மழை - ஆயுதங்கள் பொழிதல்; மேகக்கூட்டம் - அரக்கர் கூட்டம்.

90. எறிந்தார்என, எய்தார்என, நினைந்தார்என, எறிய
அறிந்தார்என, அறியாவகை, அயில்வாளியின் அறுத்தான்;
செறிந்தாரையும், பிரிந்தாரையும், செறுத்தாரையும், சினத்தால்
மறிந்தாரையும், வலித்தாரையும், மடித்தான் சிலை பிடித்தான். (3065)

(செறிதல் - நெருங்குதல் / திரண்டு வருதல்; செறுத்தல் - சினத்தல் / பகைத்தல்; மறித்தல் - தடுத்தல் / திரும்பி வருதல்; வலித்தல் - வளைத்துக் கொள்ளுதல்; மடித்தல் - கொல்லுதல்; அயில் - கூரிய)

வில்லினைக் கையில் ஏந்திய இராமன், தன்னை நெருங்கித் திரண்டு வந்தவர்களையும், தன்னை எதிர்த்துத் தனித்தனியாக வந்தவர்களையும், தன்னைப் பகைத்துக் கோபத்தோடு வந்தவர்களையும், முன்பு ஓடிப்போய் இப்போது கோபம் கொண்டு திரும்பி வந்தவர்களையும், தன்னை மேற்செல்லாது தடுத்தவர்களையும், வலிய வந்து போர் செய்தவர்களையும், தன்னை வளைத்துக் கொண்டவர்களையும் இவர்கள்தான் படைக்கலன்களை எறிந்தவர்கள் என்றும், இவர்கள் அம்பினைச் செலுத்தியவர்கள் என்றும், இவர் படைக்கலன்களை எறிய நினைந்தவர்கள் என்றும், இவர் அம்புகளைச் செலுத்தும் வகை அறிந்தவர் என்றும், மாறுபாடு கருதாது, அவர்கள் அறியாத வண்ணம், கண்ணில்

பட்ட எல்லோரையும் தனது கூரிய அம்பினால் விரைவில் அறுத்து அழியச் செய்தான்.

91. வானத்தன; கடலின்புற வலயத்தன; மதிசூழ்
மீனத்தன; மிளிர் கொண்டலின் மிசையத்தன; மிடல்வெம்
கானத்தன; மலையத்தன; திசைசுற்றிய கரியின்
தானத்தன; காகுத்தன் சரம் உந்திய சிரமே. (3066)

(காகுத்தன் - இராமன்; உந்திய - செலுத்திய; வானம் - மேக மண்டலம்; வலயம் - சக்கரவாளகிரி; மீன் - நட்சத்திர மண்டலம்; மிளிர் - விளக்கம்மிக்க; மிடல் - வலிமை; கானம் - காடு; தானம் - ஸ்தானம் / இடம்)

காகுத்தன் வழிவந்த இராமன் செலுத்திய அம்புகளால் அறுத்துத் தள்ளப்பட்ட அரக்கர்களுடைய தலைகள், ஆகாயத்தில் சென்று சேர்ந்தன; கடலின் புற எல்லைகளைச் சுற்றியிருக்கும் சக்கரவாள கிரியைச் சென்றடைந்தன; சந்திரன் சூழ்ந்திருக்கும் நட்சத்திர மண்டலத்தைச் சென்று சேர்ந்தன; ஒளி விளங்குகின்ற மேக மண்டலத்தின்பாற் சென்று சேர்ந்தன; வலிய கொடுமையான காடுகளிலும் கிடந்தன; மலைகளின் இடுக்குகளிலும், மேலும் கிடந்தன; உலகின் எட்டுத்திக்குகளிலும் சுற்றி நிற்கின்ற திசையானைகளின் இடத்திற் போய்ச் சேர்ந்தன.

மதிசூழ் மீன் என்பது உரோகிணி, வியாழம், வெள்ளி முதலியன. இராமபிரான் அம்புகளால் அறுக்கப்பட்ட அரக்கர்களின் தலைகள் எல்லாப் பக்கங்களிலும், அதற்கு அப்பாலும் நெடுந்தூரம்வரை சென்று விழுந்தன என்பதாம்.

92. மண்மேலன; மலைமேலன; மழைமேலன; மதிதோய்
விண்மேலன; நெடுவேலையின் மேல், கீழன; மிடலோர்
புண்மேலன; குருதிப் பொருதிரை ஆறுகள் பொங்க,
திண்மேருவை நகும்மார்பினை உருவித் திரி சரமே. (3067)

(திரை - அலை; திண் - வலிய; நகும் - பரிகசிக்கும் / இகழும்; மண் - நிலம்; மழை - மேகம் / மேக மண்டலம்; தோய்தல் - தவழுதல்; வேலை - கடல்; மிடல் - வலிய)

வலிய மேருமலையையும் தன் திண்மையால் பரிகசிக்கின்ற அரக்கர்களது மார்பினை ஊடுருவிச் சென்றதால் பொங்கியெழுந்து, மோதுகின்ற அலைகள்ளையுடைய இரத்த வெள்ளத்தில் திரிந்த இராம பிரானது அம்புகள் பின்னர் தரையில் விழுந்து கிடந்தன; மேகங்களின் மேல் கிடந்தன; சந்திரன் தவழுகின்ற ஆகாயத்தின்மேல் சென்று பதிந்தன; பெரிய கடல்களின் மேற்பரப்பிலும், அடியிலும் சென்று ஒளிந்து கொண்டன; வலிமையுள்ளவர்களான அரக்கர்களின் உடலில் ஏற்பட்ட புண்களிலும் குத்திட்டு நின்றன.

அரக்கர்களின் திண்ணிய மார்புக்கு வலிய மேருமலை ஒப்பு.

93. பொலம்தாரினர், அனலின் சிகைபொழி கண்ணினர், எவரும்
வலம்தாங்கிய வடிவெம்படை விடுவார், சரமழையால்
உலந்தார்; உடல் கடலோடுஉற, உலவா உடல் உற்றார்;
அலந்தார் நிசிசரர் ஆம்என, இமையோரோடும் ஆர்த்தார். (3068)

(பொலம் - பொன் / அழகு; சிகை - கொழுந்து / சுடர்; வலம் - வெற்றி; வடி - கூரிய; விடுதல் - ஏவுதல்; உலந்தார் - இறந்தார்; உலவா - அழியாத; நிசிசரர் - அரக்கர்; அலந்தார் - வலி கெட்டு வருந்தினார்; ஆர்த்தல் - ஆரவாரித்தல்)

அழகிய பொன்னாலாகிய மாலையணிந்தவர்களும், தீப்பொறி பறக்கின்ற கண்களையுடையவரும், வெற்றியையுடைய கூரிய கொடிய படைக்கலன்களை இராமன்மேல் ஏவியவருமாகிய அரக்கர்கள் எல்லோரும், இராமன் செலுத்திய அம்பு மழையினால் இறந்து போயினர்; அவர்களது உடல் இரத்த வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டுக் கடலில் சேர்ந்தது. அவர்கள் போரில் மடிந்தனர் எனவே அவர்கள் அழியாத தேவர் உடல் பெற்றுச் சுவர்க்கம் சேர்ந்தனர். அங்கு சென்று தேவர்களோடும் சேர்ந்து, ''இரவில் சஞ்சரிக்கும் இயல்புடைய அரக்கர்கள் அழிந்து 'பட்டனர்'' என்று மகிழ்ச்சியாக ஆரவாரித்தனர்.

நிசிசரர் என்பது இரவில் சஞ்சரிப்பவர்கள் என்பதால் அரக்கர்களுக்குக் காரணப்பெயர். அரக்கர்களும் போரில் மாண்டதால் வீரசுவர்க்கம் பெற்றுத் தேவர்களாகித் தம் பண்டைய நிலை மறந்து ''அரக்கர்கள் அழிந்து பட்டனர்'' என்று தேவர்களோடும் கூடி மகிழ்ந்து ஆரவாரித்தனர் என்று கூறியதில் உள்ள நகைச்சுவை உணர்வை நினைக.

94. ஈரல்செறி கமலத்தன, இரதத்திரள் புளினம்;
வீரக்கரி முதலைக்குலம் மிதக்கின்றன; உதிக்கும்
பாரக்குடர் மிடை பாசடை படர்கின்றன; பலவால்
மூரித்திரை உதிரக்குளம் முழுகிக் கழுது எழுமே. (3069)

(புளினம் - மணற்குன்றுகள்; வீரம் - வலிமை; பார - பெரிய; மிடை - அடர்ந்த; பாசஅடை - பாசடை / பசிய இலைகள்; மூரி - வலிய / பெரிய; கழுது - பேய்கள்; ஈரல் - வயிற்றில் உள்ள ஓர் உறுப்பு / மாங்கிசம்; வால் - மிக்க)

போர்க் களத்தில் இறந்த அரக்கர்களுடைய வயிற்றின் ஓர் உறுப்பாகிய ஈரல், தாமரை மலர்கள் போல் இருக்கவும், அறுத்தெரியப்பட்ட தேர்களின் கூட்டம் மணற்குன்றுகளைப் போல் இருக்கவும், வலிமையுடைய இறந்து போன யானைகள் முதலைக் கூட்டங்கள் போல் மிதக்கவும், பெரிய அரக்கர்களின் குடல்கள் எல்லாம் பசிய இலைகளைப் போல் படர்ந்திருக்கவும், அந்த வலிய அலைகளையுடைய இரத்தக் குளத்தில், கழுகுகள் முழுகி எழுகின்றன.

இராமனால் வெல்லப்பட்ட போர்வீரர்களின் இரத்தப் பெருக்கு நிறைந்த இடத்தை ஒரு இரத்தக் குளமாகவும், அதில் தாமரை மலர்களாக அரக்கர்களின் ஈரலையும், தேர்களை மணற்குன்றுகளாகவும், யானைகளை முதலைக் கூட்டங்களாகவும், குடல்களை இலைகளாகவும், உருவகித்திருக்கின்றார். அந்தக் குளத்தில் பேய்கள் முழுகி எழுகின்றன என்பதாம்.

95. அழைத்தார் சிலர்; அயர்ந்தார் சிலர்; அழிந்தார் சிலர் கழிந்தார்;
உழைத்தார் சிலர்; உயிர்த்தார் சிலர்; உருண்டார் சிலர் புரண்டார்;
குழைத்து, ஆழ்திரைக் குருதிக்கடல் குளித்தார் சிலர்; கொலைவாய்
மழைத்தாரைகள் படப் பாரிடை மடிந்தார் சிலர்; உடைந்தார். (3070)

(வாய் - வாய்ந்த; அயர்தல் - சோர்வுறுதல்; கழிதல் - ஓடிப்போதல்; உழைத்தல் - வருந்துதல்; உயிர்த்தல் - நெடுமூச்செறிதல்; குழைத்து - கலக்கப்பட்டு; குளித்தல் - முழுகுதல்; அழைத்தல் - கூப்பிடுதல் / விளித்தல்; அழிதல் - வலியழிதல்; உடைதல் - வலி அழிந்து போதல்)

கொலை புரியும் தன்மை வாய்ந்த நுனியை உடைய இராமனது அம்புகள் மழைத்தாரை போல் அரக்கர்களின் மீது பாய்ந்ததனால், அரக்கர்களில் சிலர் ஐயோ அப்பா என்று தம் உறவினர்களைக் கூவி அழைத்தார்கள்; சிலர் சோர்வுற்றுத் தளர்ந்தார்கள்; சிலர் வலியழிந்து போனார்கள்; சிலர் அவ்விடத்தைவிட்டு அகன்று ஓடிப் போனார்கள்; சிலர் வருத்தப்பட்டு அழுதார்கள்; சிலர் பெருமூச்செறிந்தார்கள்; சிலர் தரையில் விழுந்து உருண்டார்கள்; சிலர் தரையில் புரண்டு தத்தளித்தார்கள்; சிலர் சேறுடன் கலக்கப்பட்ட ஆழமான இரத்தக்கடலில் முழுகித் திளைத்தார்கள்; சிலர் தரையில் விழுந்து இடிந்து போனார்கள். சிலர் மனஉறுதி அழிந்து நிலைகெட்டுப் போனார்கள்.

96. படைத்தலைவர்கள் போர் புரிதல்

உடைந்தார்களை நகைசெய்தனர், உருள் தேரினர் உடனாய்
அடைந்தார் படைத்தலை வீரர்கள் பதினால்வரும்; அயில்வாள்
மிடைந்துஆர் நெடுங்கடல் தானையர், மிடல் வில்லினர், விரிநீர்
கடைந்தார் வெருஉற மீதுஎழு கடுஆம் எனக் கொடியார். (3071)

(அயில் - வேற்படை; மிடைந்து - நெருங்கி; மிடல் - வலிய; விரி - பரந்த; நீர் - பாற்கடல்; வெருவுதல் - அஞ்சுதல்; கடு - நஞ்சு; உருள் - செல்லுகின்ற; உடைந்தார் - தோற்று ஓடுபவர்; உடன் ஆய் - ஒன்று சேர்ந்து / ஒருமிக்க)

பாற்கடலைக் கடைந்த தேவர்களும், அசுரர்களுமே அஞ்சும் படியாக அதிலிருந்து தோன்றிய நஞ்சு என்று சொல்லத்தக்கக் கொடியவர்களான, கரனுடைய படைத்தலைவர்கள் பதினான்கு பேரும், தமக்கு முன்பு போர்க் களத்திலிருந்து வலிவிழந்து தப்பி ஓடியவர்களை எண்ணி இகழ்ந்து

சிரித்து, சக்கரங்களையுடைய தேர்களைச் செலுத்திக் கொண்டும், வேற்படை, வாட்படை ஆகியவற்றைக் கைக்கொண்டும், நீண்ட கடல் போன்ற சேனை வீரர்களுடனும், வலிய விற்படையுடனும், ஒருங்கு சேர்ந்து இராமன் நின்றிருந்த போர்க்களத்தை அடைந்தார்கள்.

இந்தப் படைத்தலைவர் பதினான்கு பேரும், முன்பு இருமுறை வந்து மடிந்து போன பதினான்கு படைத் தலைவர்களிலிருந்தும் வேறுபட்டனர் என்க. இவர்கள் கரனுடன் வந்தவர்கள். அவர்களோடு வந்த அரக்கர் படையைக் ''கடல் தானையர்'' என்று கூறி அதன் மிகுதியைக் குறித்தது காண்க.

97. இராமனுடன் அவர்கள் போரிடுதல்

நாகத்தனி ஒரு வில்லியை, நளிர்முப்புரர், முன்னாள்
மாகத்திடை வளைவுற்றனர் என, வள்ளலை மதியார்,
ஆகத்துஎழு கனல், கண்வழிஉக, உற்றுஎதிர் அழன்றார்;
மேகத்தினை நிகர்வில்லியை வளைத்தார், செரு விளைத்தார். (3072)

(ஆகம் - அகம் / உடல்; அழன்றார் - வெகுண்டவர்; நாகம் - மலை / மேருமலை; வில்லி - சிவபெருமான்; நளிர் - செறிந்த; முப்புரர் - திரிபுர அசுரர்கள்; மாகம் - ஆகாயம்; செரு - போர்; விளைத்தல் - செய்தல்)

முற்காலத்தில், மேருமலையையே தனது ஒப்பற்ற வில்லாகக் கொண்ட சிவபெருமானை, செறிந்த மூன்று ஊர்களை உடைய அசுரர்கள், ஆகாயத்தில் சூழ்ந்து கொண்டதைப் போல, இப்போது இப்படைத் தலைவர் பதினால்வரும், வள்ளல் தன்மை பொருந்திய இராமனை ஒரு பொருட்டாக மதிக்காமலும், தம் உடலில் இருந்து எழுந்த நெருப்புப் போன்ற கோபம் தம் கண்கள் வழியாகச் சிந்தும்படியும், இராமன் எதிரே வந்து சினந்து நின்று, மேகத்தை ஒத்தவில்லை ஏந்திய இராமனைச் சூழ்ந்து கொண்டு போர் செய்யலானார்கள்.

முன்பு வித்யுன்மாலி, தாருகாட்சன், கமலாட்சன் என்ற மூன்று அசுரர்களும், முறையே இரும்பு, செம்பு, பொன்னாலாகிய கோட்டைகளைக் கொண்டிருந்தனர். இக்கோட்டைகள் இவர்கள் நினைத்த அளவில் நினைத்த இடத்திற்குப் பறந்து செல்லும் சக்தியுடையவை, இவர்கள் மூவரும் சிவபெருமானிடம் போரிட்டு அவனை வெல்லக் கருதி, ஆகாயத்தில் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். அப்பொழுது சிவபெருமான் மேருமலையையே வில்லாகக் கையில் ஏந்திக் கொண்டு போனார்; என்றாலும் அதைப் பயன்படுத்தாமல் தமது சிரிப்பினாலேயே தீஎழச் செய்து அம்மூவரையும், அவர்கள் கோட்டைகளுடன் எரிந்து சாம்பலாகும்படிச் செய்தார் என்பது புராணவரலாறு. அவர்கள் மூவரும் தனியாக நின்ற சிவபெருமானை ஆகாயத்தில் சூழ்ந்து கொண்டது போல், இப்படைத்தலைவர் பதினால்வரும் தனியாக வில்லை ஏந்தி நின்ற இராமனைச் சூழ்ந்து

கொண்டு போர் செய்தனர் என்றார் என்க. அம்மூவரும் இறுதியில் அழிந்தது போல, இவர்களும் அழிந்து போகப் போகிறார்கள் என்பது குறிப்பு.

98. எய்தார்பலர்; எறிந்தார்பலர்; மழுஓச்சினர்; எழுவால்
பொய்தார்பலர்; புடைத்தார்பலர்; கிடைத்தார்பலர்; பொருப்பால்
பெய்தார்மழை; பிதிர்த்தார் எரி; பிறைவாள் எயிற்று அரக்கர்
வைதார்பலர்; தெழித்தார்பலர்; மலையாம்என வளைத்தார். (3073)

(ஓச்சுதல் - வீசுதல்; எழு - இருப்புலக்கை; பொய்தல் - தாக்குதல் / துளைத்தல்; புடைத்தல் - அடித்தல்; கிடைத்தல் - நெருங்குதல் / கட்டுதல்; பொருப்பு - மலை; பிதிர்த்தல் - சிந்துதல்; எரி - சினநெருப்பு; வைதல் - நிந்தித்தல்; தெழித்தல் - அதட்டுதல்; வளைத்தல் - சூழ்ந்து கொள்ளுதல்)

பிறைச்சந்திரன்போன்று வளைந்த ஒளி பொருந்திய கொடிய பற்களைக் கொண்ட அரக்கர்கள் பலர், அம்பு முதலியவற்றை எய்தனர்; வாள், வேல் முதலிய சில படைக்கலன்களைப் பலர் எறிந்தார்கள்; கோடலியைப் பலர் வீசினார்கள்; இருப்புலக்கையால் பலர் தாக்கினார்கள்; பலர் எதிர்த்துக் கைகளால் அடித்தனர்; பலர் அவனை மிக நெருக்கமாகக் கிட்டி வந்தனர்; மலைகளை எடுத்து மழை போலச் சொரிந்தார்கள் பலர்; நெருப்புக் கோளங்களைச் சிந்தினர் பலர்; பலர் அவனை நிந்தித்தனர்; இன்னும் பலர் உரக்க அதட்டினார்கள்; பலர் மலை போல அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

99. தேர்பூண்டன விலங்கு யாவையும், சிலைபூண்டு எழு கணையால்
பார்பூண்டன; மதமாகரி பலிபூண்டன; பரிமா
தார்பூண்டன; உடல்பூண்டில தலை; வெம்கதிர் தழிவந்து
ஊர்பூண்டன; பிரிந்தால் என இரிந்தார், உயிர் உலைந்தார். (3074)

(பூண்டன - கட்டப்பட்ட / பொருந்துதல்; ஊர் - ஊர்கோள் / பரிவேடம்; பிரிதல் - நீங்குதல்; இரிதல் - நிலைகெட்டு ஓடுதல்; தார் - கிண்கிணி மாலை; பரிமா - விரைவுடைய குதிரை; தழிவருதல் - தழுவிச்சூழ்ந்து கொள்ளுதல்)

வில்லைக் கையிலேந்தி எழுந்து நின்றவனான இராமன் எய்த அம்பினால், அரக்கர்களின் தேர்களில் பூட்டப் பெற்றிருந்த யாளி முதலிய விலங்குகள் அனைத்தும் இறந்து நிலத்தில் விழுந்தன. மதம் கொண்ட பெரிய யானைகள் பலியாக்கப்பட்டு இறந்து போயின. விரைவுடையதும், கழுத்தில் கிண்கிணி மாலையணிந்ததுமான குதிரைகள், தம் உடலிலிருந்து தலைகள் அறுபட்டனவாயின. இவற்றைக் கண்ட அரக்கர் படைத் தலைவர்கள் வெம்மையான சூரியனைத் தழுவி வந்த ஊர்கோளான பரிவேடம் சற்று நேரத்தில் விலகி விடுவது போல, உயிர் நடுங்கி இராமனைவிட்டு நிலைகெட்டு ஓடினார்கள்.

தமது வாகனங்களும், விலங்குகளும் அழிதலைக் கண்ட படைத் தலைவர்கள் தாமும் இராமனைவிட்டு அஞ்சி அகன்று போயினர் என்பதாம்.

100. மால்பொத்தின மறவோர் உடல் மழை பொத்தின; வழிசெம்
பால்பொத்தின நதியில் கிளர் படி பொத்தின; படர்வான்
மேல்பொத்தின குழுவிண்ணவர் விழிபொத்தினர்; விரைவெம்
கால்பொத்தினர் நமன் தூதுவர் கடிது உற்று உயிர் கவர்வார். (3075)

(மால் - மயக்கம்; மறவோர் - தீவினையாளர்; செம்பால் - இரத்தம்; படி - நிலம்; பொத்துதல் - மறைத்தல் / நிறைதல் / கலத்தல் / பிடித்துக் கொள்ளுதல்; படர் - பரந்த; விரை - விரைவு; மழை - அம்பு மழை; கால் காற்று)

மயக்கம் நிறைந்த தீவினையாளர்களான அரக்கர்களின் உடலின் மீது, இராமன் செலுத்திய அம்பு மழை துளைத்துச் சென்றது. அதனின்றும் வழிந்து ஓடுகின்ற இரத்தம் ஆற்றைப் போல ஓடி இந்நிலத்தை மறைத்தது; பரந்த ஆகாயத்திலிருந்து இப்போர்க் காட்சிகளைக் கண்டு கொண்டிருந்த தேவர்கள் கூட்டம், போரின் உக்கிரத்தைப் பாக்கவொண்ணாது தம் கண்களைக் கைகளால் பொத்திக் கொண்டனர்; இயமனின் தூதுவர்கள் விரைவாகவும் கொடுமையாகவும் வீசும் காற்றைப் போல விரைவாக வந்து அரக்கர்களுடைய உயிர்களையெல்லாம் பறிக்கலாயினர்.

தேவர்கள் இமை இல்லாதவர்கள். எனவே கண்கள் தானே மூடிக் கொள்ளாது. எனவே அவர்கள் தம்கைகளால், கண்களை மூடிக் கொண்டார்கள் என்பது விளங்க ''கண்பொத்தினர்'' என்ற நயம் காண்க.

101. பேய்ஏறின; செருவேட்டு எழு பித்து ஏறினர், பிலவாய்
நாய்ஏறின; தலைமேல் நெடுநரிஏறின; எரிகால்
வாய்ஏறின; வடிவாளியின் வான்ஏறினார்; வந்தார்
தீஏறு இகல் அரிஏறுஎன, முகில்ஏறு எனச் செறிந்தார். (3076)

(ஏறின - மிக்க / சிந்துகின்ற; செரு - போர்; வேட்டு - விரும்பி; பித்து - மயக்கம் / வரம்பு கடந்த ஆசை; வடி - கூரிய; பிலம் - குகை; தீ - கொடுமை; இகல் - வலிமை; அரி - சிங்கம்; முகில் - மேகம்; செறிதல் - நெருங்குதல்; எரி - நெருப்பு; காலுதல் - சிந்துதல்)

பேய்கள் வந்து குழுமியிருக்கின்ற போர்க்களத்தில், போரை விரும்பிப் போர் செய்யும் பேராசையும் மயக்கமும் கொண்டு வந்த அரக்கர்கள், கூரிய நுனியில் நெருப்புக் கொழுந்து விட்டெரியும் இராமபிரானின் கணைகளால் வீரசுவர்க்கம் அடைந்தனர். அவர்களின் குகை போன்று அகன்று ஆழ்ந்த வாய்கள் மீது நாய்கள் ஏறின; அவர்களின் தலைமேல் பெரிய நரிகள் ஏறின; இறந்தவர்கள் தவிர எஞ்சியவர்களில் சிலர் மேலும் போர் செய்யக் கருதிக் கொடுமை நிறைந்த வலிய ஆண் சிங்கம் போலவும்,

மேகத்தில் தோன்றும் பெரிய இடியைப் போலவும் முழங்கிக் கொண்டு போர்க்களத்தை நெருங்கினர்.

போர்க் களத்தில் இறந்து கிடக்கின்ற பிணங்களைத் தின்பதற்காகப் பேய்களும், நாய்களும், நரிகளும் வந்தன என்பதாம். அரக்கர்கள் போர் செய்ய விரும்பி வந்தமையால் அவர்கள் போர் செய்வதில் பித்துக் கொண்டனர் என்பதைக் குறிக்க, ''செருவேட்டு எழு பித்து ஏறினர்'' என்றார். போர் வெறியுடன் வந்து தாக்கிய அரக்கர்கள் தம் உயிரிழந்து வீரசுவர்க்கம் அடைந்தனர். அவர்கள் உடலைப் பேயும், நாயும், நரியும் உண்டன என்பதாம்.

102. தலைசிந்தின; விழிசிந்தின; தழல்சிந்தின; தரைமேல்
மலைசிந்தின; படிசிந்தின; வருசிந்துரம்; மழைபோல்
சிலைசிந்தின; கணைசிந்தின; திசைசிந்தின; திசையூடு
உலைசிந்தின; பொறிசிந்தின; உயிர்சிந்தின உடலம். (3077)

(சிந்துரம் - யானைகள்; தழல் - நெருப்பு; சிந்துதல் - சிதறிப்போதல் / உமிழ்தல்)

இராமன் வில்லினை மழையைப் போல இடைவிடாது எய்ததனால் அம்புகள் சீறிச் சென்று பாய்ந்தன; அதனால் அரக்கர்களது தலைகளெல்லாம் அற்று வீழ்ந்தன; அவர்கள் கண்களும் அதிலிருந்து சிதறிய நெருப்புப் பொறிகளும் தெறித்து வீழ்ந்தன; போர்க் களத்திற்கு வந்த இருக்கை கட்டப்பட்ட யானைகள், மலைகள் தரையில் வீழ்வது போல வீழ்ந்தன; எல்லாத் திக்குகளும் நிலை குலைந்தன; அந்தத் திசைகளில் எல்லாம் கொல்லன் உலைக்களத்தில் சிதறும் நெருப்புப் பொறிபோல், அரக்கர்களது உடல்களினின்றும் உயிர் நீங்கிச் சிதறின.

103. படைப்பெரும் தலைவரும், படைத்த தேர்களும்,
உடைத்தடம் படைகளும், ஒழிய, உற்றுஎதிர்
விடைத்து அடர்ந்து எதிர்த்தவர், வீரன் வாளியால்,
முடைத்தடம் குருதியின் கடலின் மூழ்கினார். (3078)

(படைத்த - உரிய; தடம் - பெரிய; படை - படைக்கலன்கள் / சேனை; ஒழிய - தவிர / நீங்கலாக; விடைத்தல் - பெருஞ்சினம் கொள்ளுதல் / செருக்குக்கொள்ளுதல்; அடர்ந்து - நெருங்கி; முடை - கெட்ட நாற்றம் / துர்க்கந்தம்)

படைகளுக்குத் தலைமை தாங்கி வந்த படைத்தலைவர் பதினான்கு பேர்களும், அவர்களுக்குரிய தேர்களும், அவர்கள் கைக்கொண்டிருந்த போர்க்கருவிகளும் நீங்கலாக, இராமன் எதிரில் அவனிடம் மிக்க கோபமும் செருக்கும் கொண்டு நெருங்கி எதிர்த்து வந்த அரக்கர்கள் எல்லோரும், இராமபிரானது அம்பினால், கெட்டநாற்றம் வீசுகின்ற பெரிய இரத்தக்கடலில் முழுகி இறந்து போயினர்.

104. படைத் தலைவர்கள் இராமனைச் சூழ்ந்து கொள்ளுதல்

சுற்றுஉற நோக்கினர்; தொடர்ந்த சேனையில்
அற்றில தலை எனும் ஆக்கை கண்டிலர்;
தெற்றினர் எயிறுகள்; திருகினார் சினம்;
முற்றினர் இராமனை முடுகு தேரினார். (3079)

(சுற்று - சூழ்நிலை; உற - நன்கு; தொடர்ந்த - பின்பற்றிவந்த; ஆக்கை - யாக்கை / உடல்; தெற்றுதல் - கடித்தல்; முடுகு - விரைவு; முற்றுதல் - முற்றுகையிடுதல் / வளைத்துக் கொள்ளுதல்; திருகுதல் - மிகுதல் / முறுக்கேறுதல்)

தனித்துவிடப் பட்ட படைத்தலைவர் பதினால்வரும் எல்லாப்பக்கங் களிலும் சூழலை உற்று நோக்கினர்; தம்முடன் தொடர்ந்து வந்த அரக்க வீரர் யானை, குதிரை ஆகிய எல்லாவற்றினும் தலை சிதறாதவை என்று ஒரு உடம்பைக் கூடக் காணமுடியவில்லை. எல்லோரும் தலையற்று, குறையுடலமாய் வீழ்ந்து கிடந்தனர். எனவே மிக்க கோபம் கொண்டு பற்களைக் கடித்தனர். தமது தேர்களை விரைவாகச் செலுத்திக் கொண்டு இராமன் இருக்குமிடம் சென்று அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

எயிறு தெற்றுதல் என்பது சினத்தின் ஒரு மெய்ப்பாடு. இதனை எயிறு அலைத்தல் என்றும் எயிறு தின்றல் என்றும் கூடக் கூறுவதுண்டு.

105. படைத்தலைவர்களின் தேர்கள் அழிந்து போதல்

ஏழ்இருதேரும் வந்து, இமைப்பின் முன்பு, இடை
சூழ, வன்கணைகளால் துணிய நூறினான்;
ஆழியும், புரவியும், ஆளும் அற்று, அவை
ஊழி வெம்கால் எறி ஓங்கல் ஒத்தவே. (3080)

(சூழ - வளைத்துக் கொள்ள; துணிய - சிதையும்படி; நூறுதல் - அழித்தல்; ஆழி - தேர்ச் சக்கரம்; ஆள் - பாகன் / சாரதி; கால் - காற்று; எறி - எறியப்பட்ட / மோதப்பட்ட / தாக்கப்பட்ட; ஓங்கல் - மலைகள்)

படைத்தலைவர்களுடைய பதினான்கு தேர்களும் வந்து சேர்ந்த அளவில், ஒரு நொடிப் பொழுதில் அவை இராமனைச் சூழ்ந்து கொள்ளவும், தனது கொடிய அம்புகளால் அவை சிதறிப் போகும்படி அழித்தான்; அதனால் தேர்ச்சக்கரங்களும், குதிரைகளும், பாகர்களும் அழிந்து, அத்தேர்கள் யுகமுடிவுக் காலத்தில் காற்றால் தாக்கப்படும் மலைகளைப் போன்று சிதறி விழுந்தன.

ஊழிக் காற்றுக்கு இராமபாணமும், தேர்கள் மலைக்கும் உவமை.

106. தேரிழந்த படைத்தலைவர் தரையில் நின்று போரிடுதல்

அழிந்தன தேர்; அவர்அவனி கீண்டு உக
இழிந்தனர்; வரிசிலை எடுத்த கையினர்;
ஒழிந்திலர்; சரங்களை உருமின் ஏறுஎனப்
பொழிந்தனர்; பொழி கனல் பொடிக்கும் கண்ணினார். (3081)

(கீண்டு - பிளந்து; இழிதல் - இறங்குதல்; உரும் - இடி; பொடிக்கும் - தெறிக்கும்)

இவ்வாறு தேர்கள் எல்லாம் அழிந்து போனது. எனவே அவர்கள் தேரிலிருந்து தரையே பிளந்து போகும்படி வேகமாகவும் விசையுடனும் கீழ் இறங்கினர்; தங்கள் கைகளில் கட்டமைந்த விற்களை ஏந்தியவராகவும், நெருப்புப் பொறி பறக்கின்ற கண்களையுடையவர் களாகவும், பேரிடி போன்ற அம்புகளை இடைவிடாது பொழியத் தொடங்கினர்.

தேர்கள் அழிந்தும், சோர்வு படாது, தரையில் இறங்கி விற்போர் புரிந்தனர் என்பதாம்.

107. அவர்கள் விற்கள் இராமனால் அழிக்கப்படுதல்

நூறிய சரம்எலாம் நுறுங்க, வாளியால்
ஈறுசெய்து, அவர்சிலை ஏழொடு ஏழையும்,
ஆறினொடு ஆறும் ஓர்இரண்டும் அம்பினால்
கூறுசெய்து, அமர்த் தொழில்கொதிப்பை நீக்கினான். (3082)

(நூறிய - அழிய; நுறுங்க - நொறுங்கிப் போகும்படி / பொடியாகும்படி; ஈறுசெய்தல் - முடித்தல்; ஆறினோடு ஆறும் ஓர் இரண்டு - பதினான்கு; கூறுசெய்தல் - துண்டித்தல்; கொதிப்பு - கடுமை / உக்கிரம்)

இலக்குத் தப்பாது அழிக்கும் இயல்புடைய அரக்கர்கள் செலுத்திய அம்புகள் எல்லாம் பொடியாகிப் போகும்படி, இராமன் தனது அம்பினால் அழித்து, அவர்களது பதினான்கு விற்களையும், தமது பதினான்கு அம்புகளால் துண்டித்து, அவர்கள் போர்த் தொழிலில் கொண்டிருந்த கடுமையைப் போக்கினான்.

அவர்கள் செலுத்திய அம்புகளை அழித்ததோடல்லாமல், அவர்கள் கையிலிருந்த விற்களையும் துண்டித்ததனால், போரின் வேகம் குறைந்தது என்பதாம்.

108. மலைகளைக் கொண்டு போர்செய்தல்

வில் இழந்து, அனைவரும் வெகுளி ீக்கொள,
கல்உயர் நெடுவரை கடிதின் ஏந்தின.

ஒல்லையின் உருத்து, உயர் விசும்பின் ஓங்கிநின்று,
எல்உயர் பொறிஉக எறிதல் மேயினார். (3083)

(வெகுளி-சினம்; மீக்கொளல்-மிகுதல்; வரை - மலை; கடிதின்-விரைந்து; ஏந்துதல்- தாங்குதல்; விசும்பு-ஆகாயம்; எல்-ஒளி; மேவுதல்-தொடங்குதல்: எல்லை-விரைவு உருத்து-கோபித்து)

அப்படைத்தலைவர்கள்தம் விற்களை இழந்ததால், அனைவரும் மிக்க கோபம் கொண்டு, கற்களையும், பெரிய உயர்ந்த மலைகளையும் விரைவில் கையில் ஏந்திக்கொண்டு, ஆகாயத்தின் மேற்சென்று உயர்ந்து விளங்கி, ஒளி நிறைந்த தீப்பொறிகள் சிந்தும்படி, அம்மலைகளை எறியத் தொடங்கினார்கள்.

முதலில் தேரில் நின்று போர் புரிந்தவர்கள் தேர் அழிந்ததால் தரையில் இறங்கி விற்போர் புரிந்தனர் : இப்போது அவ்விற்களையும் இழந்ததால் ஆகாயத்தின் மீதேறி நின்று மலைகளை எறியத் தொடங்கினார்கள் என்பதாம்.

109. படைத்தலைவர் பதினான்குபேரும் இறந்துபோதல்

கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான்;
இலைகொள் வெம்பகழி ஏழ்இரண்டு வாங்கினான்;
கொலைகொள் வெம்சிலையொடு, புருவம் கோட்டினான்;
மலைகளும், தலைகளும் விழுந்த மண்ணினே. (3084)

(கோடுதல்-வளைதல்; கோட்டுதல்-வளைத்தல்; கடந்த-கற்றுத் தேர்ந்த)

அறுபத்து நான்கு கலைகள் என்று கூறப்படும் பெரிய கடலினைக் கற்றுத் தேர்ந்து கரையேறிய கல்வியாளனாகிய இராமபிரான், கொல்லும் தொழிலை உடைய தனது கொடிய விற்களோடு தனது புருவத்தையும் ஒருசேரவளைத்தான். இலைகள்போன்ற அலகுகளைக் கொண்ட கொடிய அம்புகள் பதினான்கினைக் கைகளில் கொண்டு வில்லினை வளைத்தான், அவ்வரக்கர்கள் எறிந்த மலைகளுடன் கூடவே அவர்களின் தலைகளும் அறுந்து மண்ணின்மேல் விழுந்தன.

முன்னரும் இராமனைக் கம்பர் ''தென்சொற்கடந்தான், வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்'' என்றதையும், தசரதனைப் பற்றிக் கூறும் போது ''நுண்நூல் ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர்'' என்று கூறியதையும் ஒப்பு நோக்குக.

110. திரிசிரன் படை இராமனுடன் போர்செய்தல்

படைத்தலைவர்கள் படலும், பல்படை
புடைத்து, அடர்த்து, எதிர் அழல் புரையும் கண்ணினார்

கிடைத்தனர், அரக்கர்கள், கீழும்மேலும் மொய்த்து
அடைத்தனர் திசைகளை; அமரர் அஞ்சினார். (3085)

(பட - இறந்துபோக; புடைத்து - தாக்கி; அடர்ந்து - நெருங்கி; கிடைத்தல் - கிட்டுதல்; அணுகுதல் - நெருங்குதல்; கீழ்-தரை; மேல்-விண்/ வான்; அடைத்தல்-மறைத்தல்; புரைதல்-பொருந்துதல்; தலை- முதன்மை)

முதன்மையான படைத்தலைவர்கள் பதினான்கு பேரும் அழிந்து போக, எஞ்சி இருந்த அரக்கவீரர்கள், பல வகைப்படைக்கலன்களை ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டும் நெருப்புப் பறக்கின்ற கண்களை யுடையவராய் இராமன் எதிரில் நெருங்கிக் கொண்டு வந்தனர்; அவர்கள் மண், விண், மற்ற எட்டு திசைகள் ஆகிய எல்லாப் பக்கங்களும் பரவி மறைத்துக் கொண்டு நின்றனர். இதனைக் கண்டு தேவர்கள் கூட அச்சம் கொள்வார் ஆயினர்.

111. முழங்கின பெரும்பணை; மூரிமால்கரி;
முழங்கின வரிசிலை முடுகும் நாண்ஒலி;
முழங்கின சங்கொடு புரவி; மொய்த்துஉற
முழங்கின அரக்கர்தம் முகிலின் ஆர்ப்பு ஆரோ! (3086)

(பணை-போர்ப்பறை / முரசு; மால் - மதுமயக்கம்; மூரி - பெரிய / வலிய; முடுகுதல்-விரைதல்; முகில்-மேகம்)

அப்பொழுது பெரிய போர்ப்பறை முழங்கியது; வலிய மதமயக்க முடைய யானைகள் பிளிறின; கட்டமைத்த விற்களில் பூட்டப்படும் நாணின் ஒலிமுழங்கியது; சங்குகளும் குதிரைகளும் ஒலித்தன; அரக்கர்கள் நெருங்கிவந்து மேகத்தின் முழக்கம்போல் ஆரவாரித்தனர்.

112. வெம்படை நிருதர் வீச, விண்ணிடைமிடைந்த; வீரன்
அம்பு இடைஅறுக்க, சிந்தி அற்றன படும் என்று அஞ்சி
உம்பரும் இரியல் போனார்; உலகெலாம் உலைந்து சாய்ந்த;
கம்பம் இல் திசையில் நின்ற களிறும் கண் இமைத்த தன்றே. (3087)

(வெம்-கொடிய; நிருதர்-அரக்கர்; மிடைதல்-செறிதல்; படும்- தம்மேல்வரும்; இரியல் போதல்- நிலைகெட்டு ஓடுதல்; உலைந்து- வலியழிந்து; கம்பம்இல்-நிலைபெயராது / அசைவில்லாத; சாய்தல்- தளர்வுறுதல்)

அவ்வரக்கர்கள் தங்களது கொடிய படைக்கலன்களை இராமன் மீது வீசுவதால் அவை ஆகாயத்தில் செறிந்திருந்தன. அவற்றை வீரனான இராமனின் அம்பு இடையே புகுந்து அறுக்கும். அம்பு அறுத்தால் அவை கீழேவிழுந்து நமக்கு ஏதேனும் தீங்கு செய்யும் என்று ஆகாயத்தில் போரினைக் கண்டு கொண்டிருந்த தேவர்களும் அச்சம் கொண்டு நிலை கலங்கி ஓடிப்போனார்கள். மற்ற உலகத்துள் உள்ளவர்களெல்லாம்

நடுங்கித் தளர்வுற்றார்கள்; அசைவே இல்லாத திசைகளைக் காத்து நிற்கும் திக்கஜங்கள் கூட அச்சத்தால் தங்கள் கண்களை மூடிக்கொண்டன.

113. திரிசிரா வருதல்

அத்தலைத்தானையன் அளவுஇல் ஆற்றலன்;
முத்தலைக்குரிசில்; பொன்முடியன்; முக்கணான்
கைத்தலைச் சூலமே அனைய காட்சியான்
வைத்தலைப் பகழியால் மழை செய் வில்லினான்; (3088)

(வை - கூர்மை; தலை - நுனி / வாய்; பகழி - அம்பு; அத்தலை - அப்போது; தானை - படை / சேனை; காட்சி - தோற்றம்; குரிசில் - தலைவன்)

அப்போது, அளவற்ற அப்படைகளுக்குத் தலைவனும், அளவற்ற வலிமை பொருந்தியவனும், பொன்னாலாகிய மகுடத்தை அணிந்தவனுமான மூன்றுதலைகளுடைய திரிசிரா என்று கூறப்படுகின்ற தலைவன், மூன்று கண்களையுடையவனும், கையின் கண் முத்தலைச் சூலத்தை ஏந்தியவனுமான சிவபெருமானைப் போலத் தோற்றம் தருபவன்; கூரிய நுனியை உடைய அம்புகளை மழை போலப் பொழிகின்ற வில்லினை உடையவன் - பாடல் தொடர்கிறது.

மூன்று தலைகளோடு விளங்கியதால் அவன் திரிசிரா எனப்பட்டான். அதனாலேயே அவனுக்குச் சிவபெருமானுடைய முத்தலைச் சூலம் உவமை ஆயிற்று. திரிசிராகரனுடைய படைத்தலைவன் என்று வான்மீகம் கூறும்.

114. இராமன் தனியே நிற்றல்

அன்னவன் நடுஉற, ஊழிஆழி ஈது
என்ன வந்து எங்கணும் இரைத்த சேனையுள்,
தன்நிகர் வீரனும், தமியன், வில்லினன்
துன்இருள் இடையது ஓர்விளக்கின் தோன்றினான். (3089)

(அன்னவன் - அத்தகையவன் / திரிசிரா; ஊழி - பிரளயம்; ஆழி - கடல்; இரைத்த - ஆரவாரித்த; துன் - செறிந்த / அடர்ந்த)

அத்தகையவனான திரிசிரா நடுவில் நின்றிருக்க, ஊழிக்காலத்தில் பொங்கியெழும் கடலைப் போன்றது இச்சேனைக்கடல் என்று சொல்லும்படி எல்லாப்பக்கங்களிலும் ஆரவாரித்துக் கொண்டு நின்ற அந்தச் சேனைக்குள், தனக்குத் தானே நிகரானவனும், தனியானவனும், ஒப்பற்ற வில்லைக் கையில் ஏந்தியிருப்பவனுமான இராமன், அடர்ந்த இருட்டின் மத்தியில் ஒரு கை விளக்கைப் போன்று தோற்றமளித்து நின்றான்.

115. இராமன் திரிசிராவை எதிர்த்து நிற்றல்

ஓங்கிய வாளினன்; உருமின் ஆர்ப்பினன்;
வீங்கிய கவசத்தன்; வெய்ய கண்ணினன்;
ஆங்கு அவன் அணிக்கு எதிர் அணிகளாக, நேர்
தாங்கினன் இராமனும் சரத்தின் தானையால். (3090)

(உரும் - இடி; வீங்கிய - பருத்த; வெய்ய - கொடிய; நேர் தாங்குதல் - எதிர் ஊன்றி நிற்றல்; அணி - படைவகுப்பு)

போரிடுவதற்கென ஓங்கிய வாட்படையையுடையவனும், இடி முழக்கம் போல் ஆர்ப்பரிக்கின்றவனும், பருத்த கவசத்தை அணிந்தவனும், கொடிய கண்களை உடையவனுமாகிய திரிசிரா, அங்கு தன் படை வகுப்புக்களுடன் தோன்றிய போது, அந்த நால்வகைப் படைகளுக்கு எதிராக, தன்னுடைய அம்புகள் என்னும் சேனைகளை எதிர் ஊன்றி நின்றான் இராமன்.

திரிசிரா நான்கு வகைப் படைகளையும் அணிவகுத்து நிறுத்தியிருக்க, இராமபிரானோ தன்னுடைய ஆயுதமான அம்புகளையே தனது அணி வகுப்பாக நிறுத்தினான் என்ற நயம் நினைக. இது போலவே அனுமனுக்கும், அவன் அங்கங்களே படைகளாகவும், படைக்கலன் களாகவும் விளங்கிய தன்மை பின்னர் கூறப்போவதையும் ஒப்பு நோக்குக.

116. இராமன் அம்புகளால் திரிசிராவின் படைகள் அழிதல்

தாள்இடை அற்றன; தலையும் அற்றன;
தோள்இடை அற்றன; தொடையும் அற்றன;
வாள்இடை அற்றன; மழுவும் அற்றன;
கோள்இடை அற்றன; குடையும் அற்றன. (3091)

(தாள் - கால்கள்; கோள் - வலிமை)

அவ்வாறு இராமன் ஏவிய அம்புகளால் அரக்க வீரர்களது கால்கள் இடையிலே அறுபட்டுத் தொடையும் அறுந்தது அவர்கள் கைகளில் கொண்டிருந்த வாட்படையும் இடையே அற்று வீழ்ந்தன; கோடலிகளும் அறுந்து போயின; இராமனை வெல்லவேண்டும், கொல்ல வேண்டும் என்ற அவர்களது வலிமையான கொள்கைகூட அற்றுப் போயிற்று; அவர்களுடைய குடைகளும் அறுந்து வீழ்ந்தன.

117. கொடியொடு கொடிஞ்சு இற, புரவிக் கூட்டுஅற,
படியொடு படிந்தன பருதித் தேர்ப்பணை
நெடிய வன்கடகரி புரண்ட, நெற்றியின்
இடியொடு முறிந்துவீழ் சிகரம் என்னவே. (3092)

(பருதி - உருளை / வட்டம் / சக்கரம்; பணை - தொகுதி; கூட்டு - பிணைக்கும் நுகம்; படி - தரை / மண்; படிதல் - புதைந்து போதல்; சிகரம் -

மலைகள்; நெற்றி - உச்சி; கொடிஞ்சு - தேர்த்தட்டின் மேற்கட்டி; அறுதல் - அழிந்து போதல்)

இராமன் ஏவிய அம்புகளால், திரிசிராவின் படையிலிருந்த வட்ட வடிவமான சக்கரங்களைக் கொண்ட தேர்ப்படையின் தொகுதிகள் அவற்றில் ஏற்றியிருந்த கொடிகளோடும் அவற்றில் கட்டப்பட்டிருந்த தேர்தட்டின் மேற்கட்டியோடும், அவற்றில் பூட்டப்பட்டிருந்த குதிரை களைப் பிணைக்கும் நுகத்தோடும் அறுந்து விழ தேர்கள் மண்ணோடு மண்ணாய்ப் புதைந்து போயின. பெரிய வலிமையான மதம் கொண்ட யானைகள், உச்சியில் விழுந்த இடியின் தாக்கத்தால் முறிந்து வீழ்ந்த மலைகளைப் போல, மண்ணில் படிந்து புரண்டன.

கொடி, கொடிஞ்சு, புரவிக்கூட்டு, பருதி என்பன தேரின் உறுப்புக்கள். கொடிஞ்சு என்பது தேர்த்தட்டின் முன்னே கைக்கு உதவியாகத் தாமரை மொட்டு வடிவில் அமைத்துத் தொங்கவிடப் பட்டிருக்கும் ஓர் அழகிய உறுப்பு.

118. அற்றன சிரம்என அறிதல் தேற்றலர்;
கொற்ற வெம் சிலைச்சரம் கோத்து வாங்குவார்
இற்றவர்; இறாதவர் எழுந்து விண்ணினைப்
பற்றிய மழைஎனப் படை வழங்குவார். (3093)

(கோத்து - இழுத்து / பூட்டி; வாங்குதல் - எய்தல்; தேற்றுதல் - தெளிதல்)

தலை அறுபட்ட அரக்கர்கள், தம் தலைகள் அற்று வீழ்ந்து விட்டன என்பதையே அறியாதவர்களாய், வெற்றி பொருந்திய கொடிய வில்லினில்அம்பினைப்பூட்டி இழுத்துத் தொடுக்க முற்படுவர். அவ்வாறு தலை அறாதவர்கள் ஊக்கத்துடன் எழுந்து ஆகாயத்தில் தங்கியிருக்கிற மழையைப் போலத் தன்னிடமுள்ள படைக்கலன்கள் எல்லாவற்றையும் எறிய முற்படுவார்கள்.

தலை அற்றவர் செயலும், தலையறாதவர் செயலும் கூறி, அவர்களின் போர் ஆவேசத்தைப் புலப்படுத்தியது காண்க. தலை அறுபட்ட பின்பும், உயிர் சிறிது நேரம் இருக்கும். எனவே அந்த நேரத்தில் தன் உடல் நிலை உணராது, போரின் மேல் ஊக்கம் கொண்டு ஆவேசம் கொண்டிருந்தனர் என்றவாறு. ''பற்றி நின்று ஒரு வன்படை வாள்எதிர் உற்றவன்தலை சிந்திட ஓச்சினான், அற்றதன் தலை கொண்டவனும் தனைச் செற்றவன் தலை சிந்திட வீசினான்'' என்பது வில்லிபாரதம்.

119. கேடகத் தடக்கைய; கிரியின் தோற்றத்த;
ஆடகக் கவசத்த; கவந்தம் ஆடுவ;
பாடகத்து அரம்பையர் மருள, பல்வித
நாடகத் தொழிலினை நடிப்ப ஒத்தவே. (3094)

(ஆடகம் - பொன்; அரம்பையர் - தெய்வமகளிர்; மருளுதல் - மயங்குதல் / வியத்தல்; நாடகம் - நடனமுமாம்; கவந்தம் - தலையற்ற உடல் / குறையுடல் / முண்டம்; பாடகம் - ஒருவகைக் காலணி)

கேடயத்தை ஒரு பெரிய கையில் ஏந்திக் கொண்டிருப்பனவும், மலை போன்ற பெரிய உருவினைக் கொண்டனவும், பொன்னாலாகிய கவசத்தை அணிந்தவைகளுமான அரக்கர்களின் தலையற்ற குறையுடல்கள், துடித்துத் துவள்கின்றன. அது பாடகம் என்னும் காலணிகளை அணிந்த ஆடல்வல்ல தேவமகளிர் கூடக் கண்டு மயங்கி வியப்புறுமாறு, பல விதமான பாவங்களைக் காட்டி நடிப்பதைப் போல் இருந்தது.

கேடகம் என்பது பகைவர் படைவீச்சுத் தம்மேல் தாக்காதபடி வீரர்கள் இடது கையில் தாங்கி இருக்கும் ஒரு வட்டப்பலகை வடிவுள்ளதொரு படைக்கலன். அரம்பையர் என்பது பொதுவாகத் தேவமகளிரைக் குறிக்கும் ஒருசொல். உடல்குறைபட்ட கவந்தங்கள், நடனத்தொழிலில் வல்லவரான தேவமகளிரும் கண்டு வியந்து மயங்கும்படி பலவாறு விசித்திரமான வேறுபட்ட முறையில் கூத்தாடின என்றது ஒரு நயம்.

120. இரத்த ஆறு பெருகுதல்

கவரி, வெண்குடை எனும் நுரைய; கைம்மலைச்
சுவரின; கவந்தம் ஆழ்சுழிய; தண்துறைப்
பவர் இனப்படு மணி குவிக்கும் பண்ணைய;
உவரியைப் புதுக்கின, உதிர ஆறு அரோ! (3095)

(கவரி - வெண்சாமரை; கைம்மலை - யானை; சுவர் - அணைக்கட்டு / மதில் / கரை; பண்ணை - வயல்கள்; புதுக்குதல் - புதியனவாக்குதல்; பவர் - செறிவு; உவரி - கடல்)

அரக்கர்படைகள் அழிந்தமையால் பெருகிய இரத்த ஆற்றில், வெண்சாமரை, வெண்கொற்றக்குடைகள் ஆகியன நுரையாகவும், துதிக்கைகளையுடைய மலைபோன்ற யானைகள் இருபக்கங்களிலுமுள்ள கரைகள் போலவும், உடல் குறைகள் ஆழ்ந்த சுழிகள் போலவும், குளிர்ந்த நீர்த்துறைகள் செறிந்த பலவகையான இரத்தினங்களைக் குவிக்கும் வயல்கள் போலவும் அமைந்தன. இந்த இரத்த ஆறு கடலில் சென்று கலக்கும் போது அதன் இயற்கையான கருநிறத்தைப் போக்கிச் செந்நிறமாகவும், அதன் உவர்ப்புத்தன்மையை நீக்கிப் புதியனவுமாக்கின.

உதிரப்பெருக்கை ஆற்றுக்கு உவமித்ததால், வெண்சாமரையையும் வெண்கொற்றக் குடையையும் வெள்ளை நிறமுள்ள ஆற்று நுரைக்கும், பெரிய யானைகளை இருகரைகளுக்கும், கவந்தங்களை ஆற்றில் ஏற்படுகின்ற சுழற்சிகளுக்கும், நீர்த்துறைகளை வயலுக்கும் உவமித்தார் என்க. புதுக்குதல் என்பது தன்னினும் வேறுபட்ட தன்மையைத் தந்தது என்ற பொருளில் பயிலுவது காண்க. சுவர் என்பதற்கு மதில் என்றும் அணைக்கட்டு என்றும் பொருள் கொள்வது உண்டு.

121. போர்க் களக் காட்சி

சண்டவெம் கடுங்கணை தடிய, தாம்சில
திண்திறல் வளைஎயிற்று அரக்கர், தேவராய்,
வண்டுஉழல் புரிகுழல் மடந்தைமாரொடும்
கண்டனர், தம்உடற் கவந்த நாடகம். (3096)

(சண்டம் - வலிமை; தடிதல் - அழித்தல் / குறைத்தல்; திண் - மிக்க; உழல்தல் - மொய்த்தல்; புரி - சுருண்ட; குழல் - கூந்தல்; மடந்தையர் - மனைவியர்; கவந்தம் - குறைஉடல் / உடற்குறை)

வலிமை மிக்க, கொடிய, விரைவிற் சென்று தாக்கும் இராமபாணங்கள் சென்று, மிக்க வலிமையும், வளைந்த பற்களுமுடைய சில அரக்கர்களைக் குறைத்து அழிக்க, அதனால் வீரசுவர்க்கம் பெற்ற அவர்கள் உடனே தேவர்களாக மாறித் தத்தமக்குரிய வண்டுகள் மொய்க்கின்ற பின்னப்பட்ட கூந்தலையுடைய தேவமகளிர்களான மனைவியர்களுடன் கூட அமர்ந்து, போர்க்களத்தில் ஆடுகின்ற உடற்குறைகள் தம் உடல் தான் என்பதை அறியாதவர்களாய் அந்தக் கவந்தக் கூத்தைக் கண்டு களித்தனர்.

போரில் இறந்த அரக்கர்களும் வீரசுவர்க்கம் அடைவர் என்றும்; அவ்வாறு அடைந்தவர்கள் விரைவில் தேவர்களாய் மாறித் தத்தமக்கு உரிய மனைவியராகிய தேவ மகளிரைக் கூடுவர் என்பதும் பெறப்படுகிறது. மடந்தைமார் என்பது இங்கு பொதுவாகப் பெண்கள் என்ற பொருளில் வாராது. மனைவியர் என்ற பொருளிலேயே வருதல் வேண்டும். அரக்கர்களுடைய மனைவியரும் அரக்கர்கள் வீரசுவர்க்கம் செல்லும் போது உடன் செல்வர் என்பதும் ஒரு நியதி. இதன்படி அரக்கர் மனைவியரும் உடன் சென்று தேவலோகத்திலிருந்து போர்க்களத்தில் தங்கள் கணவன்மார்களின் உடற்குறைகள் ஆடும் கவந்த நாடகத்தைக் கண்டு களித்தனர் என்றும் பொருள் கொள்வது உண்டு.

122. ஆய்வளை மகளிரொடு அமரர் ஈட்டத்தர்
தூயவெம் கடுங்கணை துணித்த தங்கள் தோள்,
பேய்ஒரு தலைகொளப் பிணங்கி, வாய்விடா
நாய்ஒரு தலைகொள, நகையுற்றார் சிலர். (3097)

(ஆய் - தெரிந்தெடுக்கப்பட்ட / சிறந்த; மகளிர் - மனைவியர்; ஈட்டம் - கூட்டம்; தலை - பக்கம்; பிறங்கி - மாறுபட்டு)

சுவர்க்கம் அடைந்த சில அரக்கர்கள் தேவர்களாய் மாறி தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த வளையல்களை அணிந்த தேவமாதர்களாகிய தம்மனைவியரோடு அமர்ந்து, தூய்மையான, கொடிய, விரைவான இராமபாணங்களால் துண்டிக்கப்பட்ட தங்கள் தோள்களின் ஒரு பக்கத்தைப் பேய்கள் பற்றியிழுத்துக் கொண்டிருக்க, அதற்கு மாறாக, மற்றொரு பக்கத்தில் ஒரு நாய் தன் வாயிலிருந்து அதை நழுவவிடாதபடி கவ்விக் கொண்டிருக்கவும், அதனைக் கண்டு நகைப்பாராயினர்.

123. தெரிகணை மூழ்கலின் திறந்த மார்பினர்
இருவினை கடந்துபோய் உம்பர் எய்தினார்;
''நிருதர் தம்பெரும்படை நெடிது; நின்றவன்
ஒருவன்'' என்று உள்ளத்தில் உலைவுற்றார் சிலர். (3098)

(தெரி - தேர்ந்தெடுக்கப்பட்ட; மூழ்குதல் - பதிதல் / அழுந்துதல் / உட்புகுதல் / தைத்தல்; திறந்த - பிளந்துபோன; இரு - மிக்க; உம்பர் - மேலுலகம்; நெடிது - அளவற்றது; உலைவுறுதல் - வருந்துதல் / இரங்கி அஞ்சுதல் / மனமழிதல்; ஒருவன் - ஏகாங்கி / ஒப்பற்றவன்)

இராமபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்டு எய்த அம்புகள் உடலிற் சென்று பாய்ந்ததால் பிளவுபட்ட மார்பினை உடைய அரக்கர்கள், தங்களது பெரிய தீவினைகளிலிருந்தும் நீங்கி, மேலுலகு அடைந்தனர்; அங்கே சென்று தேவர்களுடைய நற்பண்புடையவராகி, ''அரக்கர்களின் சேனையோ மிகப் பெரியது; அளவற்றது; ஆனால் அதனை எதிர்த்து நின்றவனோ ஒரே ஒருவன்; அவன் ஒப்பற்றவனாகிய இராமன்'' என்று மனமிரங்கிக் கூறுவாராயினர்.

இராமனது கணைகளால் இறந்துபட்டனர் எனவே இவர்களை அவன் சுவர்க்கம் ஏற்றினான் என்ற பொருள்பட ''வஞ்சகத்து அரக்கரை வளைத்து, வள்ளல்தான் செஞ்சரத் தூய்மையால் தேவராக்கினான்'' என்று பின்னர் கூறப்போவதையும் ஒப்பு நோக்குக. அரக்கர்கள் துறக்கம் சென்றதும் தேவர்களின் தூய பண்பு மீதுற, இராமபிரான்பால் அன்பு கொண்டு அவனைப் புகழ்ந்தனர் என்க.

124. கைக்கரி அன்னவன் பகழி, கண்டகர்
மெய்க்குலம் வேரொடும் துணித்து வீழ்த்தின;
மைக்கரு மனத்துஒரு வஞ்சன், மாண்புஇலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போலவே. (3099)

(மாண்பு - நற்குண நற்செய்கைகள்; கரி - சான்று; பகழி - அம்பு; மெய் - உடல்; துணித்தல் - அறுத்தல்; கண்டகம் - முள்; கண்டகர் - முள் போன்று கொடியவர்)

மை போலும் கரிய மனத்தையுடையவனும், வஞ்சக எண்ணங்கள் உடையவனும், நற்குண நற்செய்கை களில்லாதவனுமாகிய ஒருவன், நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சி கூறுவானேயானால், அந்தக் கொடிய வார்த்தைகளே அவனது குலத்தை வேரோடும் அழித்துவிடும். அது போலத் துதிக்கையை உடைய யானையைப் போன்றவனான இராம பிரானின்அம்புகள், முள்போன்று கொடியவர்களானஅரக்கர்களின் உடல் தொகுதிகளை வேரொடும் அறுத்து வீழ்த்தின.

பொய்ச்சாட்சி சொன்னவன் எந்த நிலை அடைவான் என்பதை முன்பே பரதன் கூற்றாகக் கம்பன் கூறியவற்றை நினைவுபடுத்திக் கொள்க.

''வேதாளம் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே; பாதாள மூலி படருமே; மூதேவி சென்று இருந்து வாழ்வளே; சேடன் குடி புகுமே; மன்று ஓரம் சொன்னார் மனை'' என்பது நல்வழி 23.

125. அம்சிறை, அறுபதம் அடைந்த கீடத்தைத்
தஞ்சுஎனத் தன்மயம் ஆக்கும் தன்மை போல்,
வஞ்சகத்து அரக்கரை, வளைத்து, வள்ளல்தான்
செஞ்சரத் தூய்மையால் தேவராக்கினான். (3100)

(அம் - அழகிய; சிறை - இறக்கைகள்; அறுபதம் - ஆறுகால்கள்; கீடம் - புழு; தன்மயம் - தனது தன்மை; தஞ்சு - எளிது / அடைக்கலம்)

அழகிய இறக்கைகளையும் ஆறுகால்களையும் கொண்ட குளவி என்னும் வண்டு. தன்னைத் தஞ்சம் என்று வந்தடைந்த புழுவைத் தன் கூட்டிற்கு எடுத்துச் சென்று அதன் தலையில் கொட்டிக் கொட்டித் தனது தன்மையும் வடிவும் ஆகுமாறு செய்தல் போல, வள்ளல் தன்மையுடைய இராமபிரான் தனது சிவந்த அம்புகளின் தூய்மைக் குணத்தால், வஞ்சக எண்ணம் கொண்டிருந்த அரக்கர்களையும் வளைத்துத் தன்னைப் போல் வடிவத்தால் தேவராக்கினான்.

''அசுரரைத் தேவர் ஆக்குகை, இரும்பைப் பொன் ஆக்குகை'' என்பது தக்கயாகப்பரணி.

126. ''வலம்கொள் போர்மானிடன் வலிந்து, கொன்றமை,
அலங்கல் வேல்இராவணற்கு அறிவிப்பாம்'' என,
சலம்கொள் போர்அரக்கர் தம் உருக்கள் தாங்கின
இலங்கையின் உற்ற அக்குருதி ஆறுஅரோ! (3101)

(வலம் - வெற்றி / வலிமை; அலங்கல் - மாலை; சலம் - சினம்; உருக்கள் - உடல்கள்; உற்ற - உற்றது / புகுந்தது; வலிந்து - வன்மை செய்து)

''வலிமையும் வெற்றியும் பொருந்திய, போர் செய்வதில் வல்லவனான ஒரு மானிடனாகிய இராமன், அரக்கர்கள் அனைவரையும் தன் வலிமையால் கொன்று அழித்த செய்தியை, மாலை அணிந்த வேற்படையை உடைய இராவணனுக்குத் தெரிவிப்போம்'' என்று கருதி, மிக்கக் கோபம் கொண்டு போர் புரிந்து மடிந்த அவ்வரக்கர்களின் உடல்களைச் சுமந்து கொண்டு அந்த இரத்த ஆறு சென்று இலங்கையை அடைந்தது.

போரில் அரக்கர்க்கு உண்டான அழிவை அறிவிப்பதோடு, இராமனது பேராற்றலையும் அவனை எதிர்த்து நின்றால் இராவணனுக்கும் இலங்கைக்கும் இத்தகைய கேடே நிகழும் என்று எச்சரிப்பதற்காகவும் சென்றது என்பதும் பொருந்துவது காண்க.

127. திரிசிரா இராமனோடு போர் செய்தல்

சூழ்ந்ததார் நெடும்படை, பகழி சுற்றுறப்
போழ்ந்து உயிர் குடித்தலின், புரளப் பொங்கினான்,
தாழ்ந்திலன்; முத்தலைத் தலைவன்; சோரியின்
ஆழ்ந்த தேர் அம்பரத்து ஓட்டி ஆர்க்கின்றான். (3102)

(தார் - படையின் அணிவகுப்பு; போழ்ந்து - பிளந்து; தாழ்தல் - தாமதித்தல்; சோரி - இரத்தச் சேறு; அம்பரம் - ஆகாயம்; முத்தலைத் தலைவன் - திரிசிரா என்ற படைத்தலைவன் / மூன்று தலைகளை உடையவன்; பகழி - அம்பு / இராமபாணம்)

இராமனைச் சூழ்ந்து நின்ற அரக்கர்களின் படை அணிவகுப்பை, இராமனின் அம்புகள் எல்லாப்பக்கமும் சென்று தாக்கியதால், அவற்றைப் பிளவுபடுத்தி உயிர் பருகியது, எனவே அவர்கள் தரையில் விழுந்து உருண்டு புரண்டனர்; இதைக் கண்ட மூன்று தலைகளையுடைய படைத் தலைவனான திரிசிரா கொஞ்சமும் தாமதிக்காமல் பொங்கியெழுந்து, இரத்தவெள்ளத்தில் மாட்டிக் கொண்டிருந்த, தன்னுடைய தேரைத் தனது மாயச் செயல்களினால் அதனின்றும் பெயர்த்து, தரையில் ஓட்டிச் செல்ல இடமில்லாததால் ஆகாயத்திற்கு ஓட்டிச் சென்று அங்கிருந்து ஆரவாரம் செய்வானாயினான்.

ஆர்த்தல் என்பது வாய் புடைத்தல், அவலம் கொட்டல் என்றும் கூறப்படும்.

128. ஊன்றிய தேரினன், உருமின் வெம்கணை
வான்தொடர் மழைஎன், வாய்மை யாவர்க்கும்
சான்று என நின்ற அத்தருமம் அன்னவன்
தோன்றல்தன் திருஉரு மறையத் தூவினான். (3103)

(ஊன்றிய - நிலை நிறுத்தப்பட்ட; சான்று - சாட்சி; உரு - உருவம் / மேனி; உரும் - இடி; மழை - மேகம்; தோன்றல் - புதல்வன்; தூவுதல் - பொழிதல் / சொரிதல்; தொடர் - இடைவிடாது)

அவ்வாறு வானில் நிலை நிறுத்திய தேரினை உடையவனான திரிசிரா, இடி போன்ற கொடிய அம்புகளை, வானிலிருந்து இடைவிடாது பெய்யும் மழை போல, சத்தியத்தை நிலை நிறுத்துவதில் உலகில் உள்ள யாவர்க்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய, தருமமே ஒரு உருவெடுத்து வந்தாற் போன்றவனாகிய தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனான இராமனது திருமேனி மறையும் வண்ணம் அம்பு மழையைப் பொழிந்தான்.

தேரில் வானத்தில் நின்ற திரிசிரா மேகத்திற்கும், அவன் பொழிந்த அம்புகள் மழைக்கும் உவமை.

129. திரிசிரனின் தேர், பாகனுடன் அழிதல்

தூவிய சரமெலாம் துணிய, வெம்கணை
ஏவினன் இராமனும், ஏவி, ஏழ்இரு
பூஇயல் வாளியால், பொலம் கொள்தேர் அழித்து,
ஆவி வெம்பாகனை அழித்து மாற்றினான். (3104)

(இயல் - தன்மை / பொருந்திய; பொலம் - பொன் / அழகு; ஆவி - உயிர்; மாற்று,தல் - ஒழித்தல்; தூவிய - பொழிந்த; பூ - கூர்மை / பொலிவு)

அவ்வாறு திரிசிரா பொழிந்த அம்புகள் எல்லாம் அறுந்து போகும்படி, இராமனும் கொடிய அம்புகளைச் செலுத்தினான்; அவ்வாறு செலுத்திப் பதினான்கு கூர்மையான, பூக்களால் அலங்கரிக்கப்பட்ட, பொலிவு பொருந்திய அம்புகளால், திரிசிராவினுடைய அழகிய பொன்னாலாகிய தேரினைச் சிதைத்து, கொடிய தேர்ப்பாகனின் உயிரையும் அழித்து ஒழித்தான்.

''வள், நிசிதம், பூ, வள், அயில், வசி, ஆறும் கூர்மை'' என்பது சூடாமணி நிகண்டு.

130. திரிசிரனின் இரண்டு தலைகள் அறுபட்டு வீழ்தல்

அன்றியும், அக்கணத்து அமரர் ஆர்த்துஎழ,
பொன்தெரி வடிம்பு உடைப் பொருஇல் வாளியால்,
வன்தொழில் தீயவன் மகுட மாத்தலை
ஒன்று ஒழித்து, இரண்டையும் உருட்டினான் அரோ! (3105)

(அன்றியும் - இதோடுமட்டுமல்லாமல் / மேலும்; தெரி - விளங்கும்; ஒழித்து - விடுத்து / தவிர்த்து; வடிம்பு - விளிம்பு / ஓரம்; பொருஇல் - ஒப்பில்லாத; மகுடம் - கிரீடம்; தீயவன் - துஷ்டன்)

இத்தோடு மட்டுமல்லாமல் மேலும், அதே நேரத்தில் தேவர்கள் ஆரவாரம் செய்து கொண்டாடும்படி, பொன்னால் வரிக்கோலம் தீட்டப்பட்ட விளிம்புகளை உடைய ஒப்பற்ற, தன் இராமபாணத்தால், கொடிய வஞ்சகனான திரிசிராவின் மகுடமணிந்த மூன்று தலைகளுள் ஒன்றே ஒன்றை மட்டும் விட்டு விட்டு, எஞ்சிய இரண்டு தலைகளையும், பூமியில் விழுந்து புரளுமாறு செய்தான்.

131. திரிசிரன் ஒரு தலையோடு போர் புரிதல்

தேர்அழிந்து, அவ்வழித் திரிசிரா எனும்
பேர்அழிந்தது; அதனினும் மறம் பிழைத்திலன்;
வார்அழிந்து, இமிழ்சிலை வளைய நாட்டுழிக்
கார்இழிந்தால் எனக் கணை வழங்கினான். (3106)

(மறம் - வீரம்; பிழைத்தல் - தவறுதல்; இமிழ் - ஒலிக்கின்ற; வார் - நீட்சி; நாட்டுதல் - ஊன்றுதல்; உழி - இடம் / நிலை; கார் - மேகம்; அவ்வழி - அப்பொழுதே)

அப்பொழுது அப்போர்க்களத்தில் திரிசிரனது தேர் சிதைந்ததோடு, அவனுடைய இரண்டு தலைகளும் அறுபட்டமையால் இப்பொழுது முத்தலைத் தலைவன் - திரிசிரா - என்று சொல்லக்கூடிய பெயரும் அழிந்து போனது. என்றாலும் தனது வீரத்தினின்றும் தப்பாதவனான திரிசிரன், தனது ஒருதலையைக் கொண்டே ஒலிக்கின்ற நீண்ட வில்லினை வளைத்து ஊன்றி, ஆகாயத்திலிருந்து மழை பொழிவது போல அம்புக் கூட்டங்களைத் தொடுக்கலானான்.

132. இராமன் திரிசிரனின் வில்லையும் அழித்தல்

ஏற்றிய நுதலினன், இருண்டகார் மழை
தோற்றிய வில்லொடும் தொடர, மீமிசைக்
காற்று இடை அழித்துஎனக் கார்முகத்தையும்
மாற்றஅரும் பகழியால் அறுத்து மாற்றினான். (3107)

(இருண்ட - கரிய; மழை - மேகம்; கார்முகம் - வில்; மாற்ற அரும் - தடுத்தற்கு அரிய; பகழி - அம்பு; மாற்றுதல் - நீக்குதல்)

கடுங்கோபத்தால் தன் புருவங்கள் நெற்றியின் மீது ஏற, கரிய மேகத்திலிருந்து உண்டாகும் மழை போலத் தோற்றம் தரும்படி வில்லினைத் தொடர்ந்து செலுத்திப் போர் செய்து கொண்டிருந்த திரிசிரனுடைய வில்லை, வானத்தின்மேல் காற்று இடையில் வந்து மேகத்தைக் கலைப்பது போல், தனது தடுத்தற்கரிய இராமபாணத்தால் துண்டிக்கச் செய்து திரிசிரனது போராற்றலையும் நீக்கினான் இராமபிரான்.

புருவங்கள் நெற்றியின் மீது ஏறுதல் என்பது வெகுளியின் ஒரு மெய்ப்பாடு; திரிசிரனின் அம்புகளுக்கு மழையையும், இராமபிரானின் அம்புக்குக் காற்றையும் உவமித்த நயம் காண்க.

133. வில்லை இழந்தும் திரிசிரன் போர் செய்தல்

வில்இழந்தனன்; என்னினும் விழித்தவாள் முகத்தின்
எல்இழந்திலன்; இழந்திலன் வெம்கதம்; இடிக்கும்
சொல்இழந்திலன்; தோள் வலிஇழந்திலன்; சொரியும்
கல்இழந்திலன்; இழந்திலன் கறங்கு எனத் திரிதல். (3108)

(விழித்த - சினந்த நோக்குடைய; வாள் - கொடிய; எல் - ஒளி; கதம் - கோபம்; இடிக்கும் - தாக்கும் / இடிபோல முழங்கும்; கறங்கு - காற்றாடி; திரிதல் - சுழலுதல்)

திரிசிரன் வில்லை இழந்துவிட்டாலும் கூட, தனது சினந்த நோக்குடைய கொடிய ஒரு முகத்தின் இயற்கையான ஒளியை இழக்கவில்லை; தனது கடுமையான கோபத்தை இழக்கவில்லை; இடி போன்று முழங்கும் தனது பேச்சுவன்மையை இழக்கவில்லை; தனது தோளாற்றலை இழக்கவில்லை; இராமன் மேல் பொழியும் கற்களைத் தவிர்க்கவில்லை; காற்றாடி போலச் சுற்றித் திரிந்து போர் செய்வதையும் நிறுத்தவில்லை.

திரிசிரா இருதலைகளையும், கையிலேந்தியிருந்த வில்லையும் இழந்தான் என்றாலும் போர் செய்வதில் உள்ள ஊக்கத்தை இழந்தானில்லை என்பது கூறப்பட்டது. இந்நிலையிலும் கூட அஞ்சாது வீரவுரைபேசி, தான் ஒருவனே காற்றாடி போலச் சுற்றித் திரிந்து, தனது தோளாற்றலால் மலைகளை எடுத்து இராமன் மேல் எறிந்து வீரம் காட்டினான் என்பதாம்.

134. இராமன் திரிசிரனது தாளையும், தோளையும் அறுத்தல்

ஆள்இரண்டு நூறுஉள என, அந்தரத்து ஒருவன்
மூள்இரும் பெருமாய வெம்செரு முயல்வானை,
தாள் இரண்டையும் இரண்டு வெங்கணைகளால் தடிந்து,
தோள்இரண்டையும் இரண்டு வெங்கணைகளால் துணித்தான். (3109)

(அந்தரம் - ஆகாயம்; மூள் - மூட்டிய / விளைத்த; தடிதல் - குறைத்தல் / அழித்தல்; செரு - போர்; ஆள் - வீரர்)

ஆகாயத்தில் வேறு யார் துணையும் இன்றித் தான் ஒருவனாகவே தனித்து நின்று, இரு நூறு பேர்கள் நின்று போர் செய்வதைப் போலத் தோற்றும்படி விளைத்த பெரிய மாயையையுடைய கொடிய போரினைத் தொடர்ந்து செய்கின்றவனாகிய திரிசிரனுடைய இரண்டு கால்களையும் இராமன் தனது இரண்டு கொடிய அம்புகளால் அறுத்து, மேலும் இரண்டு கொடிய அம்புகளால் அவனது இரண்டு தோள்களையும் அறுத்தழித்தான்.

அவனுடைய போராற்றல் விளங்கக் கவிஞன் அவன் புரிந்த போரை, மூள்போர், இரும்போர், பெரும்போர், மாயப்போர், வெம்போர் என எத்துணை அடைமொழி கொடுத்துப் பாடுகிறான் பாருங்கள்.

135. திரிசிரன் எஞ்சியிருந்த ஒரு தலையையும் இழத்தல்

அற்றதாளொடு தோளிலன்; அயில் எயிறு இலங்க,
பொற்றை மாமுழைப் புலால்உடை வாயினின் புகுந்து,
பற்ற ஆதரிப்பான்தனை நோக்கினன், பரியான்,
கொற்றவா் சரத்து ஒழிந்தது ஓர் சிரத்தையும் குறைத்தான். (3110)

(அயில் - கூரிய; இலங்க - விளங்கித் தோன்ற; முழை - குகை; ஆதரித்தல் - விரும்புதல்; பரிதல் - இரங்குதல்; ஒழிந்தது - எஞ்சியிருந்த; குறைத்தல் - அறுத்தல்; பொற்றை - மலை)

தனது கால்களுடன் தோள்களையும் இழந்த திரிசிரன், ஊக்கம் குறையாது, தனது கூர்மையான கோரப்பற்கள் வெளிப்பட்டுத் தோன்றுமாறு பெரிய மலைக்குகை போன்றதும், புலால் நாற்றம் வீசுவதுமான தனது வாயைத் திறந்து, அதனால் இராமனைப் பற்றிக் கொள்ள விரும்பினான். அவனை அப்போது நோக்கிய இராமன், சிறிதும் இரக்கம் கொள்ளாது, தனது வெற்றி பொருந்திய நீண்ட அம்பினை எடுத்து திரிசிரனிடம் எஞ்சியிருந்த ஒரு தலையையும் அறுத்துவிட்டான்.

136. திரிசிரன் படை நிலைகெட்டு ஓடுதல்

திரிசிரா எனும் சிகரம், மண்சேர்தலும், சிந்தி,
நிருதர் ஓடினர்; தூடணன் விலக்கவும் நில்லார்;
பருதி வாளினர்; கேடகத் தடக்கையர்; பரந்த
குருதி நீரிடை, வார்கழல் கொழுங்குடர் தொடக்க. (3111)

(சிகரம் - மலை; சிந்தி - சிதைந்து; பருதி - சூரியன் / ஒளி / விளக்கம்; கழல் - கால்கள்; தொடக்க - தடுக்கும்படி; தொடக்கு - விலங்குமாம்)

திரிசிரா என்னும் பெரிய மலை, சாய்ந்து தரையில் விழுந்த அளவில், அவனது படையைச் சேர்ந்த, சூரியன் போல் விளக்கம் மிகுந்த வாளினை உடையோரும், கேடகத்தைத் தம் கைகளில் கொண்டுள்ளோரும், போர்செய்யும் மனவலியழிந்து சிதறிப்போய் ஓடலானார்கள். தூடணன் தடுத்தும்நில்லாமல் ஓடினார்கள். அவ்வாறு அவர்கள் எங்கும் நிறைந்திருந்த இரத்தவெள்ளத்திடை, நிறைந்திருந்த இறந்து போன அரக்கர்களின் கொழுத்த குடல்கள் தங்கள் நீண்ட கால்களில் மாட்டிக்கொண்டு, விலங்குபோலத் தடுக்கவும் நில்லாது ஓடினார்கள்.

கைகளில் ஆயுதங்கள் இருந்தும், படைத்தலைவன் தூடணன் தடுத்தும் அவர்கள் இனத்தாராகிய அரக்கர்களின் குடல்கள் அவர்கள் ஒடுவதைத்தடுத்தும் அவர்கள் விரைந்து ஓடினர் என்றால் அவர்கள் மனவலி அழிந்து அஞ்சி ஓடினர் என்பது பொருள் என்பதாம். வில் அழிந்து, தேர் அழிந்து., இருதலைகள் அழிந்து, பின்னர் ஓர் தலையும் அழிந்து, பின்னும் போர் செய்யும் ஊக்கத்தால் தன் வாயினாலேயே பகைவனைப் பற்றியழிக்கமுயன்ற திரிசிரன் வீரத்தின் பெருமையையும், அவன் படையினரின் சிறுமையையும் நன்கு புலப்படுத்தியது காண்க.

137 கணத்தின் மேல் நின்றவானவர் கைபுடைத்து ஆர்ப்பார்,
பணத்தின்மேல் நிலம் குழி உற கால்கொடு பதைப்பார்;
நிணத்தின்மேல் விழுந்து அழுந்தினர் சிலர்; சிலர் நிவந்த
பிணத்தின்மேல்விழுந்து உருண்டனர், உயிர்கொடு பிழைப்பார். (3112)

(மேல் - ஆகாயம்; புடைத்து - கொட்டி; பணம் - படம்/ பாம்பின்படம்; பதைத்தல் - நடுங்குதல்; நிவந்த - உயர்ந்த; கால்கொள்ளல் - நடத்தல் / ஓடுதல்; கணம் - கூட்டம்)

இதனைக் கண்டு ஆகாயத்தின் மேல் கூட்டமாக நின்று கொண்டிருந்த தேவர்கள் தங்கள் கைகளைக் கொட்டி ஆரவாரித்தனர்; சில அரக்கர்கள், நிலத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஆதிசேடன் என்ற பாம்பின் படத்தின் மேல் கால் பதிய நடந்தும் ஓடியும் செல்லுதலால் நிலமே குழியாயிற்று; இன்னும் சிலர் அரக்கர்களின் கொழுப்பின் மேல் கால் வைத்துஓட முயன்றவர்கள், அது வழுக்கி விடவே, கீழே விழுந்து அதிலேயே அமிழ்ந்து போயினர். இன்னும் சிலர் ஒன்றன்மேல் ஒன்றாய்க் கிடந்த அரக்கர்களின் உயர்ந்த பிணக்குவியலின் மேல் விழுந்து கீழே விழுந்து உருண்டு, பின் எழுந்து, உயிர் பிழைத்தால் போதும் என்று கருதி ஓடுவாராயினர்.

அரக்கர்கள் தோற்றோடுவதைக் கண்டு தேவர்கள் கைகொட்டி ஆரவாரித்தனர் என்பதாம். பூமியை ஆதிசேடன் என்னும் பாம்பு தாங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுவது புராணக் குறிப்பு.

138. வேய்ந்த வாளொடு வேல்இடை மிடைந்தன வெட்ட
ஓய்ந்துள்ளார் சிலர்; உலந்தனர், உதிரநீர் ஆற்றில்
பாய்ந்து, கால்பறித்து அழுந்தினர் சிலர்; சிலர் பயத்தால்
நீந்தினார்; நெடுங் குருதிஅம் கடல்புக்கு நிலையார். (3113)

(வேய்தல் - அணிதல் / சூட்டுதல்; மிடைதல் - செறிந்து கிடத்தல்; உலந்தனர் - இறந்தவர்கள்; பறிந்து - நிலைபெறாது / வீழ்தல்; நிலையார் - அழுந்துவார்)

அவ்வாறு அரக்கர்கள் ஓடும்போது, மாலைகள் சூட்டப்பட்ட வாளுடன் வேலும் இடையிடையே நெருங்கிக் கிடத்தலால் அவை அவர்கள் கால்களை வெட்ட, அதனால் சோர்வுற்றுத் தளர்ந்தனர் சிலர்; இன்னும் சிலர் இறந்து கிடந்த அரக்கர்களின் இரத்த வெள்ளத்தில் தாவிவிழுந்து, அவ்விரத்த வெள்ளம் கால்களைப் பற்றியிழுத்ததால் நிலைகொள்ளாது அதனுள்ளே அழுந்திப் போனார்கள். இன்னும் சிலர் அச்சத்தால் அந்த இரத்தவெள்ளத்திலேயே நீந்திப் போய், பெரிய இரத்தக் கடலில் புகுந்து, அங்கும் நிலைகொள்ளாமல் தத்தளித்தனர்.

139. கச்சும், வாளும் தம்கால் தொடர்ந்து ஈர்வன காணார்;
அச்சம் என்பது ஒன்று உருவு கொண்டால் என அழிவார்;
உச்சவீரன் கைச் சுடுசரம், நிருதர் நெஞ்சு உருவத்
தச்சு நிற்பன கண்டனர்; அவ்வழித் தவிர்ந்தார். (3114)

(கச்சு - அரைப்பட்டிகை; ஈர்வன - இழுப்பன / அறுப்பன; அழிதல் - வருந்துதல்; உச்ச - உயர்ந்த / தலைசிறந்த; சுடுதல் - வருத்துதல்; தச்சு - தைச்சு / தைத்து; தவிர்த்தல் - நீக்குதல் / கைவிடுதல்)

தங்களுடைய அரைப்பட்டிகையும், தாம் கையில் கொண்டிருக்கும் வாட்படையுமே, தங்கள் கால்களைத் தொடர்ந்து அறுத்துக் கொண்டிருப் பதைக் கண்டு கொள்ளாதவர்களாய், அச்சம் என்பது ஒரு உருக் கொண்டு வந்தது போல் மனம் மிகவும் வருந்துபவராய், தலைசிறந்த வீரனான இராமனின் கைகளிலிருந்து செலுத்தப்படும், வருத்தும் தன்மையுடைய அம்புகள், போர்க்களத்தில் இறந்து கிடக்கின்ற அரக்கர்களின் மார்பகத்தை ஊடுருவித் தைத்து நிற்பனவற்றைக் கண்டு அஞ்சி, அந்த வழியில் செல்லுவதையே தவிர்த்து வேறு பாதை தேடி ஓடலாயினர்.

140. மண்டி ஓடினர் சிலர், நெடுங்கடகரி வயிற்றுப்
புண் திறந்த மாமுழையிடை வாளொடும் புகுவார்;
தொண்டை நீங்கிய கவந்தத்தை ''துணைவ! நீ எம்மைக்
கண்டிலேன் எனப் புகல்'' எனக் கை தலைக் கொள்வார். (3115)

(மண்டி - விரைந்து; கடம் - மதம்; முழை - தொளை; தொண்டை - கழுத்து; புகல் - கூறுக; கைதலைக் கொள்ளுதல் - வணங்குதல்; துணைவ - நண்பனே)

விரைந்து ஓடுகின்ற சில அரக்கர்கள், மலைக் குகைகளில் ஒளிந்து கொள்ளச் சென்றவர்கள், இடையில் நின்ற பெரிய மதநீர் ஒழுக்குகின்ற யானையின்வயிற்றில் இராமபாணத்தால் உண்டாகிய புண்ணால் ஏற்பட்ட பெரிய தொளையைக் குகை என்று கருதித் தம் வாட்படையுடன் புகுவாராயினர். அப்படிப் புகும்பொழுது அருகில் நின்ற, கழுத்து அறுபட்ட கவந்தங்களை நோக்கி, ''நண்பனே! நீ எங்களைப் பார்க்க வில்லை என்று இராம பாணத்திடம் சொல்லிவிடு'' என்று கூறித் தங்கள் கைகளைத் தலைக்குமேல் கூப்பி வணங்குவார்கள்.

141. அஞ்சி ஓடிய அரக்கர் படையினருக்குத் தூடணன் அறிவுரை கூறுதல்

அனையர் ஆகிய அரக்கரை, ஆண் தொழிற்கு அமைந்த
வினையம் நீங்கிய மனித்தரை, ''வெருவன்மின்'' என்னா,
நினையும் ''யான் உமக்கு உரைப்பதும் உண்டு'' என்று நின்றான்
துனையும் வாம்பரித் தேரினன், தூடணன் சொன்னான். (3116)

(துனையும் - விரைந்து செல்லும்; வினையம் நீங்கிய - பயிற்சியற்ற; ஆண்தொழில் - போர்த் திறமை; வெருவுதல் - அஞ்சுதல்; வினையம் - சாமர்த்தியம் / தந்திரம் / உபாயமுமாம்)

அவ்வாறு அஞ்சி ஓடிய அரக்கர் வீரர்களை நோக்கி, விரைந்து தாவிச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்து ஓரிடத்தில் நின்றிருந் தவனான தூடணன், ''ஆண்மைத் தொழிலாகிய போரிடும் தன்மையில் பயிற்சியற்ற, மாயச் செயல்களை அறியாத இந்த மனிதர்களைப் பார்த்து

அஞ்சாதீர்கள்; இன்னும் நன்கு ஆலோசித்துப் பார்த்தால் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுவதும் உண்டு'' என்று கீழ்கண்டவற்றைக் கூறத் தொடங்கினான்.

அனையர் என்றது முன்பாடல்களில் கூறிய பிழைப்பார், நிலையார், அழிவார், தவிர்ந்தார், கைதலைக் கொள்வார் என்று அஞ்சி ஓடிய அரக்கர்களை என்க. தங்களைப் போல மாயப் போரில் வல்லமை இல்லாதவர்கள் மனிதர்கள் என்றும், வஞ்சனையின்றித் தர்ம நெறி முறைப்படியே அவர்கள் போர் செய்வார்கள். எனவே, சூதும், வஞ்சனையும், மாயமும் கொண்ட நாம், இந்த மனிதர்களைப் பார்த்து அஞ்ச வேண்டியதில்லை என்றான் என்க.

142. ''வச்சையாம் எனப் பயம் மனத்து உண்டு என வாழும்
கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிரும் கூசார்;
நிச்சயம் எனும் கவசம்தான் நிலை நிற்பதன்றி,
அச்சம் என்னும் ஈது ஆர்உயிர்க்கு அருந்துணை ஆமோ?'' (3117)

(வச்சை - வசை / பழிப்பு / பேதமை; பயம் - அச்சம்; கொச்சை - அற்பம் / இழிவு; கோல் - திரட்சி; நிச்சயம் - உறுதி / மனத்துணிவு; கோலம் - அழகுமாம்)

''வசைக்கும் பழிப்புக்கும் இடமாகும் என்று கூறப்படும் இந்த அச்சம் என்பதைத் தன் மனத்தில் கொண்டு வாழும் இழிவான அற்பமான மனிதர்களிடம் இருந்து, அழகிய வளையல் அணிந்த மகளிர் கூட அஞ்சி ஓட மாட்டார்கள்; மனத்துணிவு என்னும் உறுதிதான் இறுதிவரை கவசம் போல நிலை நிற்குமே அல்லாது, இந்த பயம் என்னும் தன்மை அருமையான உயிர்க்குப் பொருந்திய துணையாக அமைவது உண்டோ? அமையாததன்றோ?''

அச்சம் கொண்டு உயிர் வாழ்பவர்களை மகளிர் முதல், அனைவரும் வெறுப்பர். அச்சம் உயிருக்குத் துணையாகாது. அஞ்சாமையே, மன வலிமையே துணை வரும் என்றான் என்க. ''உடன்று மேல்வரினும், கூடி எதிர் நிற்கும் ஆற்றல் அதுவே படை'' என்பது குறள் 765. அச்சத்தையே ஒரு குணமாகக் கொண்ட மனிதர்களைக் கண்டு, அச்சமே அற்ற அரக்கர் குலத்தவராகிய நாம் அஞ்சி ஓடலாமோ? என்பது கருத்து. எனவே, இத்தகைய அச்சத்தை விட்டு, மன உறுதி கொள்வதே உயிர்க்குக் கவசம் போன்றதாகும் என்றான் என்பதாம்.

143. ''பூ அராவு வேல் புரந்தரனோடுதான், பொன்றா
மூவரோடுதான், முன்னின்று முட்டிய முனையில்
ஏவர் ஓடினார் இராக்கதர்? நுமக்கு இடைந்து ஓடும்
தேவரோடு கற்று அறிந்துளீரோ? மனம் திகைத்தீர்!'' (3118)

(பூ - கூர்மை; புரந்தரன் - இந்திரன்; பொன்றா - அழிவற்ற; முன் - எதிர்; முட்டிய - தாக்கிய; முனை - போர்; இடைதல் - தோற்றுப் போதல் / மெலிந்து தேய்தல்)

''மனம் திகைத்து அஞ்சி ஓடும் அரக்கர்களே! கூர்மையாக அராவப்பட்ட வேற்படையையுடைய இந்திரனோடும், அழிவேயில்லாத, என்றும் நிலைபெற்று வாழும் மும்மூர்த்திகளோடும், முன் எதிர் நின்று தாக்கி மேற்கொண்ட போர்களில் எந்த அரக்கராவது போர்க் களத்தை விட்டு ஓடியது உண்டா? கிடையாதே! அப்படி இருக்கும் போது இந்தப் புறமுதுகு இட்டு ஓடும் பண்பை, உங்களுக்குத் தோற்று ஓடக்கூடிய தேவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டீர்களா?'' என்று கேட்டான் தூடணன்.

இது உங்களுக்குப் பிறப்பால் ஏற்பட்ட இயற்கையான குணம் அன்று. நீங்கள் தேவர்களைப் பார்த்துத் தான் இவ்வாறு புறமுதுகிட்டு அஞ்சி ஓடக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றான் என்க.

144. ''இங்கு ஒரு மானிடற்கு இத்தனை வீரர்கள் இடைந்தீர்;
உங்கை வாளோடு புகழ் இழந்து ஊர்புகல் உற்றீர்;
கொங்கை மார்பிடைக் குறிப்புறக் களிப்புஉறு கொழுங்கண்
நங்கைமார்களைப் புல்லுதிரோ? நலம் நுகர்வீர்?'' (3119)

(நலம் - இன்பம்; இடைதல் - பின்னிட்டு ஓடுதல் / தோல்வியுறுதல்; கொழும் - மதர்த்த / செழித்த; குளிப்புற - அழுந்த; புல்லுதல் - தழுவுதல்; நங்கைமார் - மனைவியர்)

''எப்பொழுதும் இன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருப் பவர்களே! இப்பொழுது இங்கு உங்களுடன் போர் புரிய முற்பட்ட ஒரு தனி மனிதனுக்கே இத்தனை அரக்க வீரர்களும் தோற்றுப் பின்னிட்டு ஓடினீர்களே! உங்கள் கைகளில் பொருந்திய வாட்படைகளை இழந்தது மட்டுமல்லாமல், அரக்கர் குலத்தின் புகழையும் அழித்து, உங்கள் ஊருக்குள் புகுந்து கொள்ள விரைந்து செல்லுகிறீர்களே! அங்கே போய் மகிழ்ச்சியுடன் இருக்கும் உங்கள் மனைவியரின் மதர்த்த கண்களில் வெட்கமில்லாமல், எப்படி விழிப்பீர்கள்? அவர்களுடைய கொங்கைகள் உங்கள் மார்புடன் அழுந்தும்படி எப்படித் தழுவுவீர்கள்? உங்களுக்கு வெட்கமில்லையோ?'' என்று இகழ்ந்தான் தூடணன்.

போரிலே எதிர்த்து நின்று மார்பிலே விழுப்புண் தாங்கி வந்த வீரரையல்லாது, புறமுதுகிட்டுத் தோற்றோடி வந்து ஊர் புகுந்து கொண்டவரை, மகளிர் தழுவ மாட்டார்கள் என்பது கருத்து.

145. ''செம்பு காட்டிய கண் இணை பால் எனத் தெளிந்தீர்!
வெம்பு காட்டிடை நுழைதொறும், வெரிந் உறப்பாய்ந்த
கொம்பு காட்டுதிரோ? தட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதிரோ? குலமங்கையர்க்கு அம்மா?'' (3120)

(தெளிதல் - வெளுப்புற்று விளங்குதல்; குலம் - சிறந்த; மங்கையர் - மனைவியர்; வெம்பு - கொதிக்கின்ற; குளித்த - அழுந்திய; வெரிந் - முதுகு; செம்பு - செம்புக் குழம்பு; இணை - இரண்டு)

''உருக்கிய செம்புக்குழம்பு போல் சிவந்து காணப்பட வேண்டிய உங்கள்கண்கள்இரண்டும்இப்போது சினம்நீங்கி அச்சம் பரவியதால், பால் போல் வெளுத்துக் காணப்படுகிறது. இப்படியே உங்கள் சிறந்த மனைவிமார்களிடம் சென்று, பகைவர்களால் உங்கள் அகன்ற மார்பில் அழுந்திய அம்புகளால் உண்டான புண்களைக் காண்பிக்கப் போகிறீர்களா? அல்லது அவர்களுக்குப் பயந்து ஒளிந்து ஓடிவரும்போது கொதிக்கின்ற காட்டில் நுழைந்தபோதெல்லாம் உங்கள் முதுகில் நன்கு ஆழப் பாய்ந்த மரக் கொம்புகளாலாகிய புண்களால் உண்டான வடுக்களைக் காண்பிக்கப் போகிறீர்களா? இவ்விரண்டில் எதைக் காண்பிக்கப் போகிறீர்கள்? என்று இகழ்ந்தான் தூடணன். மார்பில் விழுப்புண் படுதல் புகழ்; முதுகில் புண் படுதல் இகழ்ச்சி.

146. ''ஏக்கம் இங்கு இதன் மேலும் உண்டோ? இகல் மனிதன்
ஆக்கும் வெம் சமத்து, ஆண்மை அவ் அமரர்க்கும் அரிதாத்
தாக்க அரும்புயத்து உம்குலத் தலைமகன் தங்கை
மூக்கொடு அன்றி, உம்முதுகொடும் போம் பழி முயன்றீர்!'' (3121)

(இகல் - பகை; ஆக்கும் - செய்யும்; சமம் - போர்; தலைமகன் - தலைவன்; முதுகு - புறமுதுகு / தோல்வி; ஏக்கம் - இழிவு / வருத்தம்; முயலுதல் - உண்டாக்குதல்; பழி - அவமானம்)

''பகைவனான இந்த ஒரு தனி மனிதன் செய்யும் கொடிய போர்த் திறமையினால், தேவேந்திரன் முதலிய தேவர்களாலும் கூடத் தாக்கி அழிக்க முடியாத அரிய வலிமையுடைய தோளாற்றலை உடைய, உங்கள் குலத்தின் தலைவனான இராவணனின் தங்கையான சூர்ப்பணகையின் மூக்கு அறுபட்டதால் விளைந்த பழியோடு மட்டுமல்லாமல், இப்போது நீங்கள் அவனுக்குப் புறமுதுகிட்டு ஓடி வந்திருக்கும் பெரும் பழியையும் உண்டாக்க முயன்றிருக்கிறீர்கள். இதைவிட வேறு இகழ்ச்சி என்ன வேண்டும் நமக்கு?'' என்று தூடணன் அரக்கர்களை இழித்துரைக்கிறான்.

உங்கள் குலத் தலைவனுக்கு உண்டாகிய பழியைத் துடைப்ப தோடல்லாமல் நீங்கள் புறமுதுகு காட்டி ஓடி வந்ததால் மேலும் ஒரு பழியை அவனுக்கு உண்டாக்கி விட்டீர்களே! என்று வருந்தினான் தூடணன் என்க.

147. ''ஆரவாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ? அயில்வேல்
வீரவாள் கொழுஎன மடுத்து உழுதிரோ? வெறிப் போர்த்
தீரவாழ்க்கையின் தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீரவாட் கையீர்! எங்ஙனம் வாழ்திரோ? விளம்பீர்.'' (3122)

(தீரம் - ஆவேசம்; தெவ்வர் - பகைவர்; அயில் - கூரிய; கொழு - துலாக்கோல்; ஆர் - நிறைந்த; மடுத்து - பொருத்தி / செறித்து; விளம்புதல் - சொல்லுதல்; கொழு - கலப்பையின் நுனியில் பொருத்தப்படும் இரும்பு; வெறி - மூர்க்கத்தன்மை))

''மூர்க்கத்தனமான, போரில் வீராவேசத்தோடு போர் புரிந்து, பகைவரிடமிருந்து போர்க்களத்தில் பறித்துக் கொண்டு வந்த வீரம் பொருந்திய வாட்படையைக் கையில் ஏந்திய படைவீரர்களே! நீங்கள் இப்போது தோற்று அஞ்சி ஓடிவந்ததனால் இனிமேல் உங்களுக்கு, இந்த வேலும் வாளும் பயன்படாது. நீங்கள் போர்வீரராகச் செயல்பட முடியாது. எனவே இந்தக் கூரிய வேலையும் வீரமான வாளையும் துலாக்கோலாகக் கொண்டு நிறைந்த செல்வம் மிக்க வாணிகர்களாக எஞ்சிய வாழ்க்கையைக் கழிக்கப் போகிறீர்களா? அல்லது இந்தக் கூரிய வேலையும், வீரவாளையும், கொழுவாகக் கொண்டு வயலை உழுது வாழும் வேளாளர்களாக எஞ்சிய வாழ்க்கையைக் கழிக்கப் போகிறீர்களா? சொல்லுங்கள்'' என்றான் தூடணன்.

இவர்கள் போரில் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடி வந்ததனால் இனிமேல் படைவீரர்களாக இருத்தல் இயலாது. எனவே வேறு ஏதேனும் தொழில் செய்துதான் எஞ்சிய காலத்தைக் கழிக்க வேண்டும். எனவே நீங்கள் இனி வாணிகராகப் போகிறீர்களா? அல்லது வேளாளராகப் போகிறீர்களா? என்று இகழ்ச்சியாகக் கேட்டான் என்க.

148. தூடணனும் இராமனும் போர் புரிதல்

என்று, தானும், தன் எறிகடற்சேனையும், ''இறை, நீர்
நின்று காண்டிர் என்நெடுஞ்சிலை வலி'' என நேராச்
சென்று தாக்கினன்; தேவரும் மருள்கொண்டு திகைத்தார்;
''நன்று!காத்தி''என்று,இராமனும் எதிர்செல நடந்தான். (3123)

(இறை - சிறிது பொழுது / கொஞ்ச நேரம்; எறிதல் - அலை மோதுதல்; மருள் கொள்ளுதல் - மயங்குதல்; நேரா - நேர்ந்து / எதிர்த்து; திகைத்தல் - கலங்குதலுமாம்; காத்தி - காத்துக் கொள்வாயாக)

என்று மேற்கூறிய அறிவுரைகளை அவ்வரக்க வீரர்களுக்குக் கூறிமுடித்து, ''சற்று நேரம் ஓடாமல் இங்கேயே நின்று, என்னுடைய பெரிய வில்லின் ஆற்றலைக் காணுங்கள்'' என்று அவர்களுக்குக் கூறி, அலைமோதும் கடல் போன்ற பெரிய படையினையும் அழைத்துக் கொண்டு இராமபிரானை எதிர்த்துச் சென்று தாக்கினான்; அச்செயலைக் கண்டு தேவர்களும் மயக்கமடைந்து கலங்கினர்; இராமன் ''உனக்குத் திறமையும் ஆண்மையும் இருந்தால் உன்னையும், உனது சேனையையும் நன்கு காத்துக் கொள்வாயாக!'' என்று கூறி அவனுடன் போரிடுவதற்காக நடந்து சென்றான்.

திகைத்தல் என்பது இன்னது செய்வது என்று தீர்மானிக்க முடியாமல் பிரமித்து நிற்றலைக் குறிக்கும்.

149. தூடணன் படை அழிதல்

ஊடுஅறுப்புண்ட, மொய்படை; கையொடும் உயர்ந்த
கோடுஅறுப்புண்ட, குஞ்சரம்; கொடிஞ்சொடு கொடியின்
காடுஅறுப்புண்ட, கால்இயல் தேர்; கதிர்ச் சாலி
சூடுஅறுப்புண்ட எனக் கழுத்து அறுப்புண்ட, துரகம். (3124)

(மொய் - செறிந்த; ஊடு - இடையே; அறுப்புண்டல் - துண்டிக்கப் படுதல்; கோடு - கொம்புகள்; கால் - காற்று; கொடிஞ்சு - மேற்கட்டி; காடு - மிகுதி; சாலி - நெற்கதிர்; சூடு - உச்சி / கொண்டை; துரகம் - குதிரை)

இராமபாணங்களினால்தூடணனின்அடர்ந்தகாலாட்படைகள்தங்கள் படைக்கலன்களோடு இடையே அறுபட்டன; துதிக்கையோடும் உயர்ந்த கொம்புகளும் அறுபட்டு வீழ்ந்தன யானைகள். தேர்த்தட்டுடன், மிகுதியான கொடிகளும், காற்றுப் போல் விரைந்து செல்லும் அழகிய சக்கரங்களை உடைய தேரிலிருந்து அறுபட்டு வீழ்ந்தன; முற்றிய சம்பா நெல்லின் உச்சி அறுபட்டது போல, குதிரைகளின் கழுத்துகளும் அறுபட்டு வீழ்ந்தன.

நால்வகைப் படையும் அழிந்த வகை கூறியவாறு. காடு என்ற சொல் மிகுதி என்ற பொருளில் பயின்று வந்தது. கொடிஞ்சு என்பது வளைந்த தாமரை மொட்டுப் போன்ற தேரின் உறுப்பு; தலை காய்ந்த முற்றிய செந்நெல் பயிர் கழுத்தறுபட்ட குதிரைகளுக்கு உவமை.

150. துருவிஓடின, உயிர்நிலை, சுடுசரம், துரந்த;
கருவிஓடின, கச்சையும் கவசமும் கழல;
அருவி ஓடினஎன அழிகுருதி ஆறு ஒழுக,
உருவிஓடின, கேடகத் தட்டொடும் உடலம். (3125)

(சுடு - கொதிக்கின்ற / தகிக்கும்; துருவி - குடைந்து; கருவி - படைக் கலன்கள்; கழல - அற்றுவிழ; துரந்த - தொடுத்த / ஏவிய; உருவி - உட்புகுந்து / துளைத்து; கச்சை - அரைப்பட்டிகை; அழிதல் - சிந்துதல்; உயிர்நிலை - மர்மஸ்தானங்கள்)

இராமனால் தொடுக்கப்பட்ட கொதிக்கும் தன்மையுள்ள அம்புகள், அரக்கர்களின் உயிர் நிற்கின்ற மர்மஸ்தானங்களைக் குடைந்து பாய்ந்தன; அவன் ஏவிய மற்ற படைக்கலன்கள் அரக்க வீரர்கள் அணிந்திருந்த இடைக் கச்சையையும், உடற்கவசத்தையும் கழன்று போகும்படிச் செய்தன. மற்ற ஆயுதங்கள், அவர்கள் உடலில் இருந்து ஒழுகிய இரத்த ஆறு, அருவி பாய்வது போலப் பாய்ந்தோடச் செய்து, அவர்கள் கைக்கொண்டிருந்த கேடயம் என்னும் தட்டையும், அவர்கள் உடலையும் அதில் அடித்துச் செல்லும் படிச் செய்தன.

151. ஆய்ந்த கங்கபத்திரங்கள் புக்கு, அரக்கர் தம் ஆவி
தோய்ந்த; தோய்வுஇலாப் பிறைமுகச் சரம் சிரம் துமித்த;
காய்ந்த வெஞ்சரம் நிருதர்தம் கவசமார்பு உருவப்
பாய்ந்த; வஞ்சகர் இதயமும் பிளந்தன, பல்லம். (3126)

(கங்கபத்திரம் - கழுகு இறகுகள் கட்டப்பட்ட ஒருவகை அம்பு; தோய்தல் - பொருந்துதல்; துமித்தல் - துணித்தல்; காய்ந்த - சினந்த / பகைத்த; பல்லம் - மற்றொரு வகை அம்பு; பிறை முகச்சரம் - அர்த்த சந்திரபாணம் / கோடாலிவாய் அம்பு; ஆய்ந்த - தேர்ந்தெடுக்கப்பட்ட)

இராமனால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செலுத்திய கங்கபத்திரம் என்னும் கழுகின் சிறகுகளை உடைய அம்புகளும் அரக்கர்களின் உடலுக்குள் புகுந்து அவர்கள் உயிரில் படிந்தன; அவ்வாறு தோயாத சில பிறை வடிவமான அம்புகள் அவர்கள் தலைகளைத் துண்டித்தன. பகைத்துச் சினந்து செலுத்திய கொடிய வேறு சில அம்புகள், அரக்கர்களது மார்புக் கவசங்களையும் ஊடுருவிப் பாய்ந்தன; கொடிய அரக்கர்களது இதயங்களைப் பல்லம் என்னும் ஒரு வகை அம்புகள் பிளந்தன.

கங்கபத்திரம், பிறை முகக்கணை, சரம், பல்லம் என்பன ஒவ்வொரு வகையான அம்பினைக் குறிப்பன.

152. தூடணன்விடு சுடுசரம் யாவையும் துணியா,
மாடுநின்றவர் வழங்கிய படைகளும் மாற்றா,
ஆடல்கொண்டனன், அளப்ப அரும் பெருவலி அரக்கர்
கூடிநின்ற அக்குரைகடல் வறள்படக் குறைத்தான். (3127)

(துணியா - துணித்து / துண்டித்து; மாடு - பக்கம்; மாற்றா - மாற்றி / செயலற்றதாக்கி; அளப்ப அரும் - அளவிடற்கரிய; வறள்பட - வற்றிப் போகும்படி; குரைத்தல் - ஒலித்தல்; குறைத்தல் - முற்றிலும் அழித்தல்; ஆடல் - வெற்றி)

தூடணன் தொடுத்த கொடிய அம்புகள் எல்லாவற்றையும் துண்டாக்கியும், அவன் அருகில் நின்ற அரக்கர்கள் செலுத்திய எல்லா வகைப் படைக்கலன்களையும் செயலற்றதாக்கியும், வெற்றி கொண்டான் இராமன்; அளவிடற்கரிய போராற்றல் வாய்ந்த, அரக்கர்கள் ஒன்றுகூடி நின்று ஒலிக்கின்ற கடல் போன்ற அந்தச் சேனைக்கடல் வற்றிப் போகும்படி முற்றிலும் அழித்து விட்டான்.

இராமன் மிக எளிதாகத் தான் ஒருவனாகவே அந்தச் சேனைக் கடலை முற்றிலும் அழித்தான் என்பதாம்.

153. ஆர்த்து எழுந்தனர் வானவர்; அருவரை மரத்தோடு
ஈர்த்து எழுந்தன குருதியின் பெருநதி; இராமன்
தூர்த்த செஞ்சரம் திசைதொறும் திசைதொறும் தொடர்ந்து,
போர்த்த வெஞ்சினத்து அரக்கரைப் புரட்டின, புவியில். (3128)

(தூர்த்த - நிரம்ப / மிகுதியாக; போர்த்த - மறைத்த; புவி - மண் / தரை; வரை - மலைகள்; ஈர்த்து - இழுத்து; வானவர் - தேவர்கள்)

இராமன் செலுத்திய நிறைந்த செவ்விய அம்புகள், எல்லாத் திசைகளிலும் தொடர்ந்து சென்று, அத்திசைகளை மறைத்துக் கூடிநின்ற கொடிய கோபம் கொண்ட அரக்கர்களைத் தரையில் சாய்த்துப் புரட்டியெடுத்தன; அதனால் பெருகிய இரத்த ஆறுகள் அசைக்க முடியாத பெரிய மலைகளையும், அவைகளில் வளர்ந்திருந்த மரங்களையும் இழுத்துக் கொண்டு பொங்கி எழுந்து ஓடின; இதனைக் கண்ட தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்துக் களித்தனர்.

செஞ்சரம் என்பது வளைவில்லாத நேரான அம்பு என்றும், பகைவரின் இரத்தம் தோய்ந்து எப்பொழுதும் சிவந்த நிறமாகத் தோன்றும் அம்பு என்றும், தீயவரை அழித்து நன்மையே புரியும் செவ்விய அம்பு என்றும் பொருள்படும்.

154. தோன்றும் மால்வரைத் தொகை எனத் துவன்றிய நிணச்சேறு
ஆன்றபாழ் வயிற்று அலகையைப் புகல்வது என்?அமர்வேட்டு
ஊன்றினார் எலாம் உலைந்தனர்; ஒல்லையில் ஒழிந்தார்;
கான்ற இன்உயிர் காலனும் கவர்ந்து, மெய்ம்மறந்தான். (3129)

(அமர் - போர்; வேட்டு - விரும்பி; ஊன்றிய - முன்நின்ற; உலைதல் - வலியழிதல்; ஒழிதல் - இறத்தல்; கான்ற - வெளிப்பட்ட; காலன் - இயமன்; தோன்றும் - தெரிகின்ற; துவன்றிய - குவிந்திருந்த; ஆன்ற - நிரம்பிய; அலகை - பேய்கள்; புகல்வது - கூறுவது; ஒல்லை - விரைவில்)

போரினை விரும்பி வந்து எதிரில் நின்ற அரக்கர்கள் எல்லோரும் விரைவில் வலியழிந்து மாண்டு போனார்கள். அவர்கள் உடலிலிருந்து வெளிப்பட்ட இனிய உயிரையெல்லாம், இயமனும் தொடர்ந்து பற்றிக் கொண்டே இருந்ததனால் அவனும் தன் உடல் சோர்வுற்று மெய் மறந்தான். என்றால், பெரிய மலைகளைப் போலத் தோன்றிய, குவிந் திருந்த அரக்கர்களின் மாமிசச் சேறுகளை யெல்லாம் நிரப்பிக் கொண்ட பருத்த வயிற்றையுடைய பேய்களின் நிலைமையைப் பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது?

155. தூடணன் கொதித்து எழுதல்

களிறு, தேர், பரி, கடுத்தவர் முடித்தலை, கவந்தம்,
ஒளிறு பல்படை, தம்குலத்து அரக்கர்தம் உடலம்,
வெளிறு சேர்நிணம், பிறங்கிய அடுக்கலின் மீதாக்
குளிறுதேர் கடிது ஒட்டினன் தூடணன், கொதித்தான். (3130)

(கடுத்தவர் - சினந்தவர்; முடி - குடுமி / கிரீடம்; ஒளிறு - விளங்குகின்ற; வெளிறு - வெண்மையான; நிணம் - சதை / கொழுப்பு / மாமிசம்;

பிறங்குதல் - விளங்குதல்; அடுக்கல் - மலை; குளிறுதல் - முழங்குதல்; கவந்தம் - உடற்குறை / முண்டம்; படை - படைக்கருவிகள்)

இவற்றைக் கண்டு கடுங்கோபங் கொண்டு கொதித்த மனத்தினனாய்த் தூடணன், தம் படை வீரரது யானைகள், தேர்கள், குதிரைகள், சினந்து போரிட்ட அவர்களின் கிரீடமணிந்த தலைகள், அவர்களின் முண்டங்கள், ஒளிவீசுகின்ற போர்க்கருவிகள், தமது இனத்தைச் சேர்ந்த அரக்கர்களின் உறுப்புக்கள் அறுபடாத முழுவுடல்கள், அதனின்றும் வெளிப்பட்டுக் குவிந்து கிடக்கும் வெண்மை நிறம் பொருந்திய கொழுப்பு ஆகியவை நிறைந்து விளங்குகின்ற மலையின் மீது, தனது முழக்கம் செய்கின்ற தேரை விரைவாக ஓட்டிச் சென்றான்.

அடுக்கல் என்பது ஒன்றன் மீது ஒன்று அடுக்கி வைத்தாற் போன்று தோற்றம் தருவதால் மலைக்கு அடுக்கல் காரணப்பெயர். நால்வகைப் படைகளோடு, அரக்கர்களின் கவந்தம், உடல், நிணம் ஆகியவையும் மலை போலக் குவிந்து கிடந்தன என்பதனால் அரக்கர்களின் அழிவு மிகுதி புலப்படும்.

156. அறம்கொளாதவர் ஆக்கைகள் அடுக்கிய அடுக்கல்
பிறங்கி நீண்டன, கணிப்புஇல; பெருங்கடு விசையால்,
கறங்கு போன்றுளது ஆயினும், பிணப்பெருங் காட்டில்
இறங்கும், ஏறும்; அத்தேர் பட்டதுயாது என இசைப்பாம்?(3131)

(ஆக்கை - யாக்கை / உடல்; அடுக்கல் - மலைகள்; கணிப்பில - அளவற்றன; பிறங்கி - விளங்கி; விசை - வேகம்; கறங்கு - காற்றாடி / பம்பரம்; காடு - களம் / போர்க்களம்)

தர்மத்தைப் பற்றியே நினைக்காதவர்களும், அதனைக் கைக் கொள்ளாதவர்களுமாகிய அரக்கர்களின் அழிந்துபட்ட உடல்கள் அடுக்கடுக்காக மலைகள் போல் நீண்டு விளங்கியவை கணக்கற்றவை; எனினும் தூடணன் செலுத்திச் சென்ற தேர், விரைவும் வேகமும் கொண்டு காற்றாடி போலச் சுற்றிச் சுழன்றாலும், அந்தப் பிணங்கள் நிறைந்த போர்க் களத்தில் உடல்களால் உண்டாகிய மேட்டில் ஏறியும், இரத்த ஆறாகிய பள்ளத்தில் இறங்கியும் சென்றது. அந்தத் தேர்பட்ட இடர்ப்பாட்டினை நாம் என்னவென்று சொல்லுவோம்? சொல்லி மாளாது.

157. தூடணன் இராமன் எதிரில் வருதல்

அரிதின்எய்தினன் ஐ ஐந்து கொய் உளைப்பரியால்
உருளும் ஆழியது ஒரு தனித்தேரினன், உலகத்து
இருளை நீக்கிய இந்துவின் பொலிகின்ற இராமன்
தெருளும் வார்கணைக் கூற்றுஎதிர், ஆவி சென்றென்ன.(3132)

(கொய் - கொய்த / நறுக்கிய; உளை - பிடரி மயிர்; ஐ ஐந்து - இருபத்தி ஐந்து; ஆழி - சக்கரம்; இருள் - மறைப்பு; இந்து - சந்திரன்; தெருளுதல் -

தெளிதல்; வார் - நீண்ட; கூற்று - இயமன்; ஆவி - உயிர்; அரிதின் - சிரமப்பட்டு)

நன்கு கத்தரிக்கப்பட்ட பிடரி மயிரினை உடைய இருபத்து ஐந்து குதிரைகள் பூட்டியதால் நன்கு உருளும் வல்லமை பெற்ற சக்கரத்தை உடைய தனித்த ஒப்பற்ற தேரைச் செலுத்தி வந்த தூடணன், மேகத்தினால் தற்காலிகமாக ஏற்பட்ட இருட்டிலிருந்து நீங்கி வந்த சந்திரனைப் போலப் பொலிவு பெற்று விளங்குகின்ற இராமனுடைய தெளிவான நீண்ட, அம்பாகிய இயமனுக்கு எதிரில், தானே வலியச் சென்று சேரும் உயிர் போலத் தூடணன் மிகவும் சிரமப்பட்டு வந்து சேர்ந்தான்.

பொதுவாக இயமன்தான் உயிரைத் தேடிச் செல்லுதல் உண்டு; இங்கே தூடணன் இராமனுடைய அம்பாகிய கூற்றுக்கு எதிரில் தானே வலியச் சென்றான் என்றது ஒரு நயம். அவன் அரிதின் எய்தியதற்குக் காரணம் முன்பாடலில் கூறியது போல அரக்கர்களின் பிணக்குவியல்களாகிய மலைகள் என்க. இராமன் சந்திரனுக்கும், அவன் அம்பு இயமனுக்கும் தூடணன் இயமன் உணவுக்கும் உவமைகள்.

158. தூடணன் மூன்று அம்புகள் செலுத்துதல்

சென்றதேரையும், சிலையுடை மலைஎனத் தேர்மேல்
நின்றதூடணன் தன்னையும் நேர்உற நோக்கி,
''நன்று நன்று, நின் நிலை!'' என, அருள், இறை நயந்தான்
என்றகாலத்து,அவ்வெய்யவன்பகழி மூன்று எய்தான். (3133)

(நேர் - எதிரில்; உற - நன்றாக; இறை - தலைவன்; வெய்யவன் - கொடியவன்)

அவ்வாறு தன் முன் வந்து நின்ற தேரையும், ஒரு வில்லைத் தன் கையில் ஏந்திய மலை போலும் தோற்றம் கொண்டு தேர்மேல் நின்றிருந்த தூடணனையும், தலைவனான இராமன் நன்றாக உற்று நோக்கி, ''நீ போரில் கடைப் பிடித்த உறுதியான நெறிமுறைகள் நன்று; உனது தளராத வீரம் மிக நன்று,'' என்று கருணை கூர்ந்து பாராட்டினான். ஆனால் அதே சமயத்தில், கொடியவனான தூடணன் இராமன்மேல் மூன்று அம்புகளைத் தொடுத்தான்.

தன் பகைவனாயினும் அவனது வீரத்தைப் பாராட்டிய இராமனுடைய பெருந்தன்மையைக் காட்டும் ஒரு பாடல் இது.

159. இராமனது வீரபட்டத்தை அவ்வம்புகள் தாக்குதல்

தூரவட்ட எண் திசைகளைத் தனித்தனி சுமக்கும்
பாரஎட்டினோடு இரண்டினில் ஒன்று பார்புரக்கப்
பேரவிட்டவன், நுதல் அணிஓடையின் பிறங்கும்,
வீரபட்டத்தில் பட்டன, விண்ணவர் வெருவ. (3134)

(தூரம் - சேய்மை; பாரம் - பெரிய; பேர - இடம் பெயர்ந்து செல்ல; நுதல் - நெற்றி; ஓடை - நெற்றிப்பட்டம்; பட்டன - தாக்கின)

மிக நீண்ட தூரத்தில் இருப்பதுவும், வட்டவடிவமானதுமான உலகின் எட்டுத் திசைகளையும் தனித்தனியாகத் தாங்கி நிற்கின்ற பெரிய எட்டு யானைகளுடன், ஆதிசேடன், ஆதிகூர்மம் ஆகிய இரண்டு பாம்புகளும் பூமியின் அடியில் இருந்து உலகத்தைத் தாங்கி வருகின்றன. இவ்விரண்டு பாம்புகளில் ஒன்றான ஆதிசேடனுக்கும் கீழே இருந்து ஆதிகூர்மம், ஆதிசேடனையும் தாங்கி நிற்கும். எனவே திருமால் நிற்கும் போது ஆதிசேடன் அவனுக்குப் பாதுகையாகத் திகழ்கிறான் என்பது நூற்கொள்கை. அந்தப் பாதுகையைப் பரதன் வேண்டுகோளுக்கு இணங்கி அவனுக்கு இந்த உலகத்தைக் காப்பதற்காகக் கொடுத்தவனான இராமனின் நெற்றியில் அணிந்திருந்த, யானையின் நெற்றிப்பட்டம் போன்ற வீரபட்டிகையில், தூடணன் செலுத்திய மூன்று அம்புகளும் சென்று தாக்கின. இதைக் கண்டு தேவர்கள் மிக அஞ்சினர்.

ஆதிசேடன் உலகைக் கீழிருந்து தாங்கி நிற்கின்றான் என்பது நாம் அறிந்த செய்தி. அதற்குக் கீழும், அவனையே தாங்கி நிற்பது ஆதிகூர்மம் என்ற பாம்பு என்பது நாம் இதுவரை அறியாத ஒரு புதிய செய்தி. ''சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்; நின்றால் மரவடியாம்; நீள்கடலுள் என்றும் புணையாம்; மணி விளக்காம், பூம்பட்டாம், புல்கும் அணையாம் திருமாலுக்கு அரவு'' என்பது பொய்கையாழ்வார் திருமொழி. வீரபட்டம் என்பது, வீரர்கள் வெற்றி பெற்றததற்கு அடையாளமாக நெற்றியில் அணியும் ஒரு பொன்தகடு. அது யானையின் நெற்றிப்பட்டத்திற்கு இங்கே உவமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

160. தூடணன் தேர், வில், கவசம் முதலியன அழிதல்

''எய்தகாலமும் வலியும் நன்று'' என நினைந்து, இராமன்
செய்த சேயொளி முறுவலன், கடுங்கணை தெரிந்தான்;
நொய்தின், அங்கு அவன் நொறில் பரித்தேர் படநூறி,
கையில்வெஞ்சிலைஅறுத்து,ஒளிர்கவசமுங்கடிந்தான். (3135)

(சேய் - சிவந்த / செம்மையான; தெரிதல் - தேர்ந்தெடுத்தல்; நொய்தில் - எளிதில்; நொறில் - விரைவான; படுதல் - சிதைதல்; நூறுதல் - அழித்தல்; ஒளிர் - விளக்கம் மிக்க; கடிதல் - அறுத்தல் / அழித்தல்; முறுவல் - புன்சிரிப்பு)

''தூடணன் அம்புகள் ஏவிய காலமும், அவனது போர்த் திறமையும் மிக்க சிறப்பானது'' என்று எண்ணிய இராமன், அழகான ஒளி விளங்குகின்ற புன்முறுவல் ஒன்று செய்தவனாய், கடுமையான ஓர் அம்பை தேர்ந்தெடுத்துத் தொடுத்தான். அது எளிதாகவும் விரைவாகவும் சென்று தூடணனுடைய விரைவாகச் செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட

தேரினைச் சிதைத்து அழித்தது; அவன் கையில் கொண்டிருந்த கொடிய வில்லை வெட்டி வீழ்த்தியது; ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற அவனது மார்புக் கவசத்தையும் ஊடுருவி அழித்தது.

போரில் எதிரிகளைக் கண்டு அஞ்சி ஓடிய அரக்க வீரர்களுக்கு வீர உரை பகன்று, அவர்களை அஞ்சாது மீண்டும் போர்க் களத்துக்குள் கொண்டு வந்தமையாலும், தானும் அஞ்சாது தன்மீது பகழிகளைப் பாய்ச்சினமை யாலும், தூடணனின் காலமறிந்த செயலும், ஆற்றலும் இராமனால் பாராட்டப்பட்டன என்க. தூடணன் மூன்று அம்புகளால் இராமனது ஒரு வீரப்பட்டயத்தைத் தாக்கினான் என்றதும், இராமன் ஒரே அம்பினால் தூடணனது, தேர், வில், கவசம் ஆகிய மூன்றையும் ஒருசேரத் தாக்கி அழித்தான் என்றதும் ஒரு நயம்.

161. தூடணன் தலை துண்டிக்கப்பட்டு இறந்து வீழ்தல்

தேவர்ஆர்த்து எழ, முனிவர்கள் திசைதொறும் சிலம்பும்
ஓவுஇல் வாழ்த்து ஒலி நாற்கடல் முழக்கு என ஓங்க,
''காஅடா இது, வல்லையேல், நீ'' என, கணைஒன்று
ஏவினான்; அவன் எயிறுடை நெடுந்தலை இழந்தான். (3136)

(சிலம்புதல் - முழங்குதல்; ஓவுஇல் - ஒழியாத; கார் - மேகம்; வல்லை - வலிமை / ஆற்றல்; கா - காத்துக் கொள்க)

இதனைக் கண்டு, தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரிக்கவும், எல்லாத் திசைகளிலும் முனிவர்கள் நின்று ஒலிக்கும் ஒழியாத வாழ்த்தொலிகள், கரிய கடலின் முழக்கம் போலப் பேரோசையாக ஒலிக்கவும், இராமன், தூடணனை நோக்கி ''உன்னால் முடிந்தால் இந்த வில்லைத் தடுத்து, உன் உயிரைக் காத்துக் கொள்ளடா!'' என்று வீரவுரை கூறி, ஒரு அம்பினை ஏவினான். அது சென்று, இலக்குத்தப்பாது, தூடணனுடைய கோரப் பற்கள் கொண்ட பெரிய தலையை அழித்தது. தூடணன் தலை இழந்து தரையில் சாய்ந்தான்.

''அடா'' என்பது இழிந்தோரை நோக்கிக் கூறும் சொல்; வேத மந்திரங்களின் ஓசை கடல் முழக்குக்கு உவமை.

162. கரன் போர் செய்ய வருதல்

தம்பிதலை அற்றபடியும், தயரதன் சேய்
அம்பு படையைத் துணிபடுத்ததும், அறிந்தான்,
வெம்புபடை விற்கை விசயக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டிய குலக்கரி கடுப்பான். (3137)

(கடுத்தல் - ஒத்திருத்தல்; வெம்பு - கொதிக்கின்ற; விசயம் - ஜெயம் / வெற்றி; படி - தன்மை; சேய் - மகன்)

கொம்புகள் தலையில் உறுதியாகப் பிணைக்கப்பட்ட, கொலைத் தொழிலில் வல்ல, மதம் கொண்ட யானையைப் போன்றவனும், கொதிக்கின்ற படைக்கலன்களை ஒரு கையிலும், வில்லை மற்றொரு கையிலும் கொண்டவனும், வெற்றியையே கொண்டவனுமான கரன், தன் தம்பி தூடணன் தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனான இராமனது அம்பினால், தலையற்று வீழ்ந்த தன்மையையும், அவனது படைகள் எல்லாம் சிதைக்கப்பட்டு அழிந்தமையையும் அறிந்து மிக்க சினம் கொண்டான்.

163. அந்தகனும் உட்கிட, அரக்கர் கடலோடும்
சிந்துரம், வயப்புரவி, தேர், திசைபரப்பி,
இந்துவை வளைக்கும் எழிலிக்குலம் என, தான்
வந்து, வரிவிற்கை மதயானையை வளைத்தான். (3138)

(சிந்துரம் - யானை; வயம் - வெற்றி / வலிமை; அந்தகன் - இயமன்; உட்குதல் - அஞ்சுதல்; இந்து - சந்திரன்; எழிலிக்குலம் - மேகக்கூட்டம்; வளைத்தல் - சூழ்ந்துகொள்ளுதல்)

சினம் கொண்ட கரன், இயமனும் அஞ்சிடும்படி, அரக்கர்களாகிய காலாட்படை என்ற கடலுடன், யானை, வெற்றி தரும் குதிரை, தேர் ஆகிய நாற்படைகளையும் எல்லாத்திசைகளிலும் பரப்பி நிற்க வைத்து, சந்திரனைச் சுற்றி வளைக்கும் மேகக்கூட்டங்கள் போல, வந்து, கட்டமைந்த வில்லைக்கையிலேந்தியவனும், மதம் கொண்ட யானையைப் போன்றவனுமான இராமனைச் சுற்றி முற்றுகையிட்டான்.

இராமன் சந்திரன்; அரக்கர் கூட்டம் மேகக் கூட்டம்.

164. கரன் படையினரும் இராமனும் போர் புரிதல்

அடங்கல்இல் கொடுந்தொழில் அரக்கர், அவ்அனந்தன்
படம்கிழிதர, படிதனில், பலவிதப் போர்,
கடம்கலுழ் தடங்களிறு, தேர், பரி, கடாவி,
தொடங்கினர்;நெடுந்தகையும் வெங்கணை துரந்தான். (3139)

(படி - நிலம்; கடம் - மதம் / கன்னம்; கலுழ் - பெருக்குதல் / சிந்துதல்; கடாவுதல் - செலுத்துதல்; நெடுந்தகைமை - பெருந்தன்மை; துரத்தல் - விரைந்து செலுத்துதல்; அனந்தன் - ஆதிசேடன்)

கட்டுக்கடங்காத கொடிய கொலைத் தொழிலில் வல்லவரான அரக்கர்கள், பூமியைத் தாங்குகின்ற அந்த ஆதிசேடனது படம் கிழிந்து போகும்படி, நிலத்தில் , மதநீரைப் பெருக்குகின்ற பெரிய யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை முதலியவற்றைச் செலுத்திப் பல விதமான போர்களைச் செய்யத் தொடங்கி விட்டனர்; நற்பண்புகளை உடைய இராமனும் தளராது, கொடிய அம்புகளை விரைந்து செலுத்தலானான்.

படைகளின் சுமையும் நெருக்கமும் தாங்க மாட்டாது ஆதிசேடனின் படம் கிழிவுற்றது என்க.

165. இராமன், கரன் படையைக் கொன்று அழித்தல்

துடித்தன கடக்கரி; துடித்தன பரித்தேர்
துடித்தன முடித்தலை; துடித்தன தொடித்தோள்;
துடித்தன மணிக்குடர்; துடித்தன தசைத்தோல்;
துடித்தன கழல்துணை; துடித்தன இடத்தோள். (3140)

(கடம் - மதம்; தொடி - வளையல் / தோள்வளை; கழல் - கால்கள்; துணை - இரண்டு; முடி - மயிர்; மணி - சிறந்த)

இராமன் செலுத்திய அம்புகளால் கரனுடைய படையிலிருந்த மதம் கொண்ட யானைகள் பதைத்துக் கீழே விழுந்தன; குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள் முறிந்து கீழே விழுந்தன; பொன்முடியணிந்த அரக்கர்களின் தலைகள் அறுபட்டு வீழ்ந்து துடித்தன; அவர்கள் அணிந்து இருந்த தோள்வளைகள் சிதறிக் கீழே விழுந்தன; அவர்களது சிறந்த சிறுகுடல்கள் வயிற்றினின்று வெளிவந்து கீழே விழுந்து துடித்தன; அவர்களுடைய தசைகளினாலான தோல்கள் கூடத் துடித்துக் கொண்டிருந்தன; அவர்களது இரண்டு கால்களும் அறுபட்டுக் கீழே விழுந்த பின்னும் துடித்தன அரக்கர்களுடைய இடது தோள்கள் துடிக்கலாயின.

ஆடவர்க்கு இடது தோள் துடித்தல் தீ நிமித்தமாகும்.

166. வாளின்வனம், வேலின்வனம், வார்சிலைவனம், திண்
தோளின்வனம், என்றுஇவை துவன்றி, நிருதப்பேர்
ஆளின்வனம் நின்றதனை, அம்பின்வனம் என்னும்
கோளின்வன வன்குழுவினின், குறைபடுத்தான். (3141)

(நிருதர் - அரக்கர்; ஆள் - காலாட்படை; வனம் - காடு / தொகுதி / மிகுதி பற்றியது; வார் - பெரிய; திண் - வலிய; துவன்றி - செறிந்து; கோள் - கொடிய; வன - வனப்பு / அழகிய; குறைபடுத்தல் - வெட்டி அழித்தல்; குழு - கூட்டம்)

அரக்கர்களுடைய வாட்படைகளின் தொகுதி, வேற்படைகளின் தொகுதி, நீண்ட விற்படைகளின் தொகுதி, வலிய காலாட்களின் தோள்களின் தொகுதி என்று இவை எல்லாமும் கைக்கொண்டு நிறைந்து நின்ற அரக்கர்கள் என்று சொல்லப்படுகின்ற காலாட்படையின் தொகுதி அங்கு நின்றிருந்தது; அதனைக் கண்ட இராமன், தனது அம்பு என்னும் தொகுதியால் கொடிய கொலைத் தொழில் புரிகின்ற, அழகிய, வலிய கூட்டத்தை வெட்டி அழித்தான்.

167. தான்உருவு கொண்ட தருமம் தெரிசரம்தான்
மீன்உருவும்; மேருவை விரைந்து உருவும்; மேல்ஆம்

வான்உருவும்; மண்உருவும்; ''வாள்உருவி வந்தார்
ஊன்உருவும்'' என்னும் இது உணர்த்தவும் உரித்தோ? (3142)

(உருவு - வடிவம்; தெரி - தேர்ந்தெடுக்கப்பட்ட; மீன் - நட்சத்திர மண்டலம்; உருவும் - ஊடுருவிச் செல்லும்; விலங்கு - குறுக்கே; மேலாம் - உயர்ந்த; மண் - நிலம்; ஊன் - தசை / உடல்; உணர்த்தவும் - சொல்லவும்; உரித்தோ - வேண்டுவதோ)

தருமமே ஒரு மனித வடிவம் கொண்டு வந்தது போன்றவனான இராமன், தேர்ந்தெடுத்துச் செலுத்திய அம்புகள், நட்சத்திர மண்டலத்தை ஊடுருவிச் செல்லும்; மேரு மலையைக் குறுக்காகத் துளைத்துச் செல்லும்; மேலேயுள்ள உயர்ந்த வான்முகட்டையும் சென்றடையும்; நிலத்தையும் துளைத்து உட்புகும்; என்றால் வாட்படைகளைத் தம் உறையினின்று உருவிக் கொண்டு வந்தவர்களான இந்த அரக்கர்களின் உடலை ஊடுருவிச் செல்லும் என்பதைச் சொல்லத்தான் வேண்டுமோ? சொல்லாமலேயே விளங்குமல்லவா?

168. அன்றுஇடர் வளைத்தவர் குலங்களொடு அடங்கச்
சென்று உலைவுறும்படி, தெரிந்து கணைசிந்தா,
மன்றிடை நலிந்து வலியோர்கள் எளியோரைக்
கொன்றனர் நுகர்ந்த பொருளின், கடிது கொன்றான். (3143)

(அன்று - அப்பொழுது; வளைந்தவர் - சூழ்ந்து கொண்டவர்; அடங்க - முழுவதும்; உலைவுறுதல் - கெட்டு அழிதல்; தெரிந்து - ஆராய்ந்து; சிந்தா - சிந்தி / பொழிந்து; மன்று - நீதிமன்றம்; நலிதல் - வருத்துதல்)

அப்பொழுது, தன்னைச் சுற்றி வளைத்த அரக்கர் கூட்டம் தங்கள் குலத்தோடு முழுதும் கெட்டு அழியும்படி, தான் ஆராய்ந்து எடுத்த அம்புகளைச் செலுத்தினான் இராமன். அவ்வம்புகள் மன்றத்திடையே வலியவர்கள், தம்மில் வலிகுன்றியவர்களை வருத்திக் கொன்று, அதனால் அடைந்து அனுபவித்த பொருள்கள், அவர்களை எப்படி நாசப் படுத்துமோ, அவ்வாறு விரைந்து சென்று அரக்கர்களைக் குலத்தோடு நாசப்படுத்தின.

மன்று என்பது பொதுவாக நீதிமன்றம், வழக்கு ஆராயும் இடம் இவற்றைக் குறிக்கும் என்றாலும் இங்கே ''வெளியிடத்தில்'' என்றும் பொருள் கொள்வதுண்டு.

169. கரன் தனியனாய் நிற்றல்

கடுங்கரன் எனப்பெயர் படைத்த கழல்வீரன்,
அடங்கலும் அரக்கர் அழிவுற்றிட, அழன்றான்;
ஒடுங்கல்இல் நிணக்குருதி ஓதம்அதில் உள்ளான்,
நெடுங்கடலில் மந்தரம் என, தமியன் நின்றான். (3144)

(கடும் - கொடிய; அடங்கலும் - அனைவரும் / எல்லாம்; அழலுதல் - சினத்தல்; ஒடுங்கல்இல் - குறையாத; ஓதம் - வெள்ளம் / கடல்; தமியன் - தனியன்)

வீரக்கழல்களையணிந்த கொடிய கரன் என்று பெயர் படைத்த வீரன் தனது அரக்கர் படை அனைத்தும் அழிந்து போனதைக் கண்டு கடும் சினம் கொண்டான்; குறைவில்லாத மேலும் மேலும் பெருகுகின்ற அரக்கர்களின் இரத்தமும் கொழுப்பும் நிறைந்த வெள்ளக் கடலில் நிற்கின்றவன், முன்பு பெரிய பாற்கடலில் அமிழ்தம் கடைந்த பொழுது, மந்தர மலை மட்டும் தனித்து நின்றதைப் போலத் தனித்தவனாக நின்றான்.

அரக்கர் படையோடு வந்து, அவையெல்லாம் அழிந்து போக, இப்போது தனித்து நின்ற கரனுக்குப் பாற்கடலில் தனித்து நின்று இயங்கிய மந்தரமலை என்னும் மத்து உவமை.

170. கரன் தேரைச் செலுத்திக் கொண்டு வருதல்

செங்கண் எரிசிந்த, வரிவில் பகழிசிந்த,
பொங்கு குருதிப் புணரியுள், புகையும் நெஞ்சன்
கங்கமொடு காகம் மிடைய, கடலின் ஓடும்
வங்கம் எனல் ஆயது ஒரு தேரின்மிசை வந்தான். (3145)

(எரி - நெருப்பு; கங்கம் - பருந்து / கழுகு; மிடைதல் - நெருங்குதல்; புணரி - கடல்; வங்கம் - கப்பல் / மரக்கலம்; மிசை - மேல்; புகையும் - மூண்டெழும்)

அதனைக் கண்டு தன்னுள் மூண்டெழும் கோபமுடைய கரன், தனது சிவந்த கண்களில் தீப்பொறி பறக்க, கட்டமைந்த வில்லினின்றும் அம்புகள் பொழிய, அங்கே தேங்கிக்கிடக்கின்ற பொங்குகின்ற இரத்தக்கடலுள், கழுகும் காகமும் நெருங்கி நிற்க, கடலில் செல்லுகின்ற ஒரு கப்பல் போன்றது என்று கூறும்படியான ஒரு அழகிய தேரின் மேல் ஏறி, இராமனை நோக்கி வரலானான்.

குருதி வெள்ளத்தைக் கடல் என்றதால், அவன் ஏறி வந்த தேரைக் கப்பல் என்று உவமித்தான் என்க. கழுகும், காக்கையும் நிறைந்து நெருங்கி வருதல், அரக்கருடல்களை உண்பதற்காம். தூடணன் தேர் ஏறி வந்ததைக் காற்றாடிக்கு ஒப்பிட்ட கவிஞன், இங்கே கரன் தேரேறி வருவதை ஒரு கப்பலுக்கு ஒப்பிடுவது நோக்கத்தக்கது.

171. இராமன் கரனை எதிர் கொள்ளுதல்

செறுத்து, இறுதியில் புவனிதீய எழுதீயின்,
மறத்தின் வயிரத்து ஒருவன் வந்து அணுகும்முந்தை,
கறுத்த மணிகண்டர் கடவுட்சிலை கரத்தால்
இறுத்தவனும், வெங்கணை தெரிந்தனன், எதிர்ந்தான். (3146)

(இறுதி - ஊழிமுடிவுக் காலம்; புவனி - உலகம்; செறுத்து - சினந்து; மறம் - வீரம்; அணுகுதல் - நெருங்குதல்; முந்தை - முன்னரே; மணி - அழகிய; கண்டம் - கழுத்து; இறுத்தல் - வளைத்து ஒடித்தல்; தெரிதல் - ஆராய்தல்; வயிரம் - உறுதிப்பாடு / பகைமை; ஒருவன் - கரன்; கடவுள் - சிவபெருமான்; எதிர்தல் - எதிரே செல்லுதல்)

ஊழி இறுதிக் காலத்தில் இவ்வுலகமே எரிந்து போகும்படி பொங்கி எழுகின்ற ஊழித்தீயைப் போலக் கடுங்கோபமும் உறுதியான பகைமையும் வீரமும் கொண்டவனான கரன், தன்னை வந்து நெருங்கும் முன்னரே, நஞ்சுண்டதால் கரிய நிறமடைந்த அழகிய கழுத்தினை உடையவரான சிவபெருமானின் தெய்வத்தன்மை பொருந்திய சிவதனுசை, தனது கையினாலேயே வளைத்து ஒடித்தவனாகிய இராமனும், கொடிய கணைகளை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அவன் முன்னால் சென்று கரனை எதிர்கொண்டான்.

கரனுக்கு ஊழித் தீ உவமை.

172. இருவரும் போர் செய்தல்

தீஉருவ, கால்விசைய, செவ்வியன, வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை அரக்கர்பதி எய்தான்;
தீஉருவ, கால்விசைய, செவ்வியன, வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை இராமனும் அறுத்தான். (3147)

(கால் - காற்று; விசை - வேகம்; வெவ் - கொடிய; வடி - கூர்மை; உருவ - வடிவம்; பதி - தலைவன்)

தீயைப் போன்ற உருவம் உடையதும், காற்றைப் போன்று வேகமுடையதும், அம்புக்குரிய எல்லாச் சிறப்பு இலக்கணங்களையும் பெற்று நேரானதும், கோட்டம் இல்லாததும், கொடிய நுனியை உடையனவுமான ஆயிரம் கூர்மையான அம்புகளை அரக்கர் தலைவனான கரன், இராமன் மீது செலுத்தினான்; அதே தன்மையுடைய ஆயிரம் கூரிய அம்புகளால் இராமனும் அவற்றை அறுத்தெறிந்தான்.

கரன் அம்பு செலுத்தியதையும், இராமன் அவற்றைத் துண்டித்ததையும் ஒரே சொற்றொடரால் கூறிய நயம் காண்க. மேலும் போரில் இருவரின் சமநிலை குறித்ததாகவும் கொள்ள வாய்ப்புண்டு.

173. ஊழிஎரியின் கொடிய பாய்பகழி ஒன்பான்
ஏழ் உலகினுக்கும் ஒரு நாயகனும் எய்தான்;
சூழ்சுடர் வடிக்கணை அவற்று எதிர்தொடுத்தே,
ஆழிவரிவிற் கரனும், அன்னவை அறுத்தான். (3148)

(நாயகன் - தலைவன்; பாய்தல் - விரைந்து செல்லுதல்; ஆழி - வட்டம் / வளைவு; ஊழி - யுக முடிவுக்காலம்; ஒன்பான் - ஒன்பது)

ஏழு உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவனாகிய இராமன், ஊழி இறுதிக் காலத்தில் பற்றி எரியும் நெருப்பைப் போல் கொடியதுவும், விரைந்து செல்லும் தன்மையதுமான ஒன்பது அம்புகளைக் கரனுக்கு எதிராகத் தொடுத்தான் அவற்றுக்கு எதிராக கரனும் சக்கரம் போன்ற வட்டவடிவ மான வளைந்த, கட்டமைந்த வில்லைக் கையிலேந்தி, நுனியில் சுடர்விட்டு எரிகின்ற கூர்மையான அம்புகளைத் தொடுத்து, அந்த ஒன்பது அம்புகளையும் அறுத்துத் தள்ளினான்.

ஏழ் உலகு என்பது கீழ், மேல் உலகு எனப்பதினான்கு உலகங்களையும் குறிக்கும்.

174. கள்ளவினை மாய அமர் கல்வியின் விளைத்தான்;
வள்ளல் உருவைப் பகழி மாரியின் மறைத்தான்;
உள்ளம் உலைவுற்று, அமரர் ஓடினர் ஒளித்தார்;
வெள்ளயிறு இதழ்ப் பிறழ, வீரனும் வெகுண்டான். (3149)

(கள்ளவினை - வஞ்சகச் செயல்; அமர் - போர்; விளைத்தல் - செய்தல்; மாரி - மழை; உலைவுறுதல் - மனம் நடுங்குதல்; பிறழ - பெயர / விளங்க; வெகுள்தல் - சினத்தல்; இதழ் - உதடு; கல்வி - கற்றவித்தை / மந்திரம்)

வஞ்சகச்செயல்களிலும், மாயப்போர்புரிவதிலும் வல்ல வித்தையைக் கற்றறிந்த கரன், மாயப் போர் செய்யத் தொடங்கினான். இராமனின் திருமேனி மறைந்து போகும்படி தனது அம்பு மழையால் மறைத்து விட்டான்; இது கண்ட தேவர்கள் உள்ளம் நடுக்கமுற்று ஓடி ஒளிந்து கொண்டார்கள்; வெண்மையான பற்கள் தனது உதட்டைக் கடித்த வண்ணம் விளங்குமாறு வீரனாகிய இராமனும் மிக்கச்சினம் கொண்டான்.

கள்ளவினை, மாய அமர் என்பன, தனது உண்மையுருவத்தை மறைத்துக் கொள்ளுதல், வேறு வேறு பல வடிவம் கொள்ளுதல் போன்றவற்றைக் குறிக்கும்.

175. இராமனுடைய வில் ஒடிந்து போதல்

''முடிப்பென் இன்று, ஒருமொய் கணையால்'' எனா,
தொடுத்து நின்று, உயர் தோள்உற வாங்கினான்;
பிடித்த திண்சிலை, பேர்அகல் வானிடை
இடிப்பின் ஓசைபட, கடிது இற்றதே. (3150)

(இன்று - இப்பொழுதே; மொய் - வலிய; முடித்தல் - இறுதி செய்தல் / கொல்லுதல்; தொடுத்து - இணைத்து; வாங்குதல் / இழுத்தல்; திண் - வலிய; பேர் - பெரிய; இடிப்பின் - இடி முழக்கம் போல்; இற்றது - ஒடிந்தது / முறிந்தது)

''இப்பொழுது என்னுடைய வலிய ஒரே அம்பினால் இவனை அழித்து விடுகிறேன்'' என்று தன் மனத்தில் எண்ணி, வில்லில் நாணேற்றி அதனைத்

தன் தோள்வரை இழுத்து வளைத்துத் தொடுக்கின்ற அளவில், அவன் பிடித்திருந்த வலிய வில், பெரிய அகன்ற வானத்தில் கேட்கும் இடியின் ஓசை போன்ற ஓசையுடன் விரைந்து முறிந்து வீழ்ந்தது.

176. அதனைக் கண்ட தேவர்கள் அஞ்சுதல்

வெற்றி கூறிய வானவர், வீரன்வில்
இற்றபோது, துணுக்கம் உற்று ஏங்கினார்;
மற்றுஓர் வெஞ்சிலை இன்மை மனக்கொளா,
''அற்றதால் எம்வலி'' என, அஞ்சினார். (3151)

(வானவர் - தேவர்கள்; இற்றல் - ஒடிதல்; துணுக்கம் - நடுக்கம்; கொளா - கொண்டு; மனம் கொள்ளுதல் - நினைத்தல்; வலி - ஆற்றல்)

முன்பு தூடணனைக் கொன்ற பொழுது இராமனது வெற்றியைப் புகழ்ந்து பாராட்டிய தேவர்கள் இப்பொழுது அந்த வீரனது வில் ஒடிந்து போனதைக் கண்டு மிக்க நடுக்கமுற்று மனம் கலங்கினர். இவனுக்கு இப்பொழுது போரிட வேறு ஒரு மாற்றுவில் இல்லையே என்பதைத் தமது மனத்தில் எண்ணி, இதனால் இனி அரக்கர் கை ஓங்கி விடும்; நம் வலிமை குறைந்து விடும் என்று மிக அச்சம் கொள்வாராயினர்.

177. வருணன் ஒரு சேமவில் கொடுத்தல்

என்னும் மாத்திரத்து, ஏந்திய கார்முகம்
சின்னம் என்றும், தனிஎன்றும், சிந்தியான்;
மன்னர் மன்னவன் செம்மல், மரபினால்,
பின்உறத் தன் பெருங்கரம் நீட்டினான். (3152)

(கார்முகம் - வில்; சின்னம் - அறுபடல் / சிதைவுறுதல்; மரபு - முறை)

அந்த வில் ஒடிந்து போனதால் தேவர்கள் அஞ்சியிருந்த சமயத்தில், அரசர்க்கரசனான தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனான இராமன், தனது கையில் கொண்டிருந்த வில் சிதைவுபட்டு விட்டது என்பதையும், தான் இப்போது நிராயுத பாணியாகத் தனியாக நிற்பது பற்றியும் கருதி அஞ்சாதவனாய், போரின் வழக்கப்படி, தன் பெரிய கைகளைப் பின்புறமாக நீட்டினான்.

இங்கே மரபு என்பது பண்டைக் காலப்போர் முறையினைக் குறிப்பதாகும். போர் செய்யும் வீரன் / அரசன் தன் கையில் ஆயுதங்கள் அற்றுப் போய் விட்டன என்றால், பின்னால் இருக்கும் ஆயுதங்களைக் கொண்டு வரும் பணியாளனை நோக்கிக் கையை நீட்டுவது வழக்கம். அப்பணியாளனும் குறிப்பறிந்து அவ்வீரனுக்கு வேண்டிய ஆயுதத்தைக் கொடுப்பது என்பதும் மரபு. அதனையே இங்கே குறிப்பிட்டார் என்க.

178. கண்டுநின்று, கருத்து உணர்ந்தான் என,
அண்டர் நாதன் தடக்கையில், அத்துணை,
பண்டு போர் மழுவாளியைப் பண்பினால்
கொண்ட வில்லை, வருணன் கொடுத்தனன். (3153)

(அண்டர் நாதன் - தேவர் தலைவன்; பண்பு - வீரப்பாடு; மழுவாளி - பரசுராமன்; அத்துணை - அந்த அளவிலேயே / அப்பொழுதே)

போரினைக் கண்டு கொண்டு வானத்தே நின்ற வருணன், இந்நிலையினைக் கண்டு, அப்பொழுது இருந்த நிலையையும், இராமன் பின்னால் கை நீட்டியதற்கு உரிய காரணத்தையும் நன்கு உணர்ந்து, முன்பு போர் செய்தற்குரிய மழுப்படையை உடையவனான பரசுராமனைத் தன் வீரப்பாட்டினால் வெற்றியடைந்து அவன் கையிலிருந்த விஷ்ணு தனுசைப் பெற்றுத் தன்னிடம் கொடுத்துச் சேமித்துவைக்கச் சொல்லியிருந்த அந்த வில்லை, இப்போது, முத்தேவர்களுக்கும் தலைவனான இராமனிடம் வருணன் கொடுத்தான்.

இந்த வில் பிரசண்டகோதண்டம் எனப்படுகிறது.

179. கொடுத்த வில்லை, அக்கொண்டல் நிறத்தினான்
எடுத்து வாங்கி, வலம்கொண்டு, இடக்கையில்
பிடித்தபோது, நெறி பிழைத்தோர்க்கு எலாம்
துடித்தவால், இடக்கண்ணொடு தோளுமே. (3154)

(கொண்டல் - மேகம்; பிழைத்தல் - தவறுதல்; வாங்குதல் - வளைத்தலுமாம்)

அவ்வாறு வருணன் கொடுத்த விஷ்ணுதனுசை, மேகம் போன்ற கரிய நிறத்தினனான இராமன் தன் கைகளில் எடுத்துக் கொண்டு, தன் வலிமையால் வளைத்து இடக்கையில் பற்றிக் கொண்ட போது, அறநெறியினின்றும் பிறழ்ந்த அரக்கர்களுக்கெல்லாம் அவர்களது இடது கண்களும், இடது தோள்களும் துடிக்கலாயின.

ஆடவர்க்கு இடக்கண்ணும், இடது தோள்களும் துடித்தல் தீய நிமித்தம் என்பதாம்.

180. கரன் தேர் அழிதல்

ஏற்றிநாண், இமையாமுன் எடுத்து, அது,
கூற்றினாரும் குனிக்க, குனித்து, எதிர்
ஆற்றினான் அவன் ஆழி அம்தேர், சரம்
நூற்றினால், நுண் பொடிபட, நூறினான். (3155)

(கூற்றினார் - இயமன்; குனித்தல் - மகிழ்தல் / அஞ்சுதல் / கூத்தாடுதல் / வளைத்தல்; ஏற்றுதல் - நாணேற்றுதல்; அடல் - வலிமை; ஆழி - சக்கரம்;

பொடி - துகள்; நூறுதல் - அழித்தல்; எதிர் ஆற்றுதல் - பகைத்துப் போர் செய்தல்)

இராமன், அந்த வில்லை நொடிப் பொழுதில் எடுத்து, இயமனும் அஞ்சும்படி வில்லில் நாண் ஏற்றித் தன்னைப் பகைத்து எதிர்த்து வந்த கரனின் வலிய அழகிய தேரினைத் தனது நூறு அம்புகளினால், அத்தேர் நுண்ணிய பொடியாகும்படி நொறுக்கி அழித்தான்.

குனித்து என்ற சொல் அஞ்சும்படி யென்றும், மகிழும்படி என்றும் இருபொருள் தந்து நிற்பது காண்க. இயமன் அஞ்சுதல் வில்லின் நாண் ஒலி கேட்டு என்பதாம். இயமன் மகிழ்தல், தானே சென்று கவர்ந்து உண்ண வேண்டிய உயிர்களை, எளிதில் தன்னிடத்திற்கே அனுப்பிவைக்கும் இராமனது போராண்மை கண்டு என்க. அவன் மகிழ்ந்து கூத்தாடியது இதுவரையில் அவன் அரக்கர்களின் உயிரை உண்டு அனுபவித்ததில்லை. இப்பொழுது தான் முதன் முறையாக இராமனின் கருணையால் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதால் கூத்தாடினான் என்றலுமாம்.

181. கரன் வானுக்குச் சென்று போரிடுதல்

எந்திரத் தடந்தேர் இழந்தான்; இழந்து,
அந்தரத்திடை ஆர்த்து எழுந்து, அம்பு எலாம்
சுந்தரத் தனிவில்லிதன் தோள் எனும்
மந்தரத்தில் மழையின் வழங்கினான். (3156)

(எந்திரம் - பொறி; இழிந்து - இறங்கி; அந்தரம் - ஆகாயம்; சுந்தரம் - அழகு; தனி - ஒப்பற்ற; எழுந்து - கிளம்பி)

பொறிகள் அமைந்த, எந்திரம் போல் விரைந்து செல்லும் தனது பெரிய தேரை இழந்ததனால், கரன் அதனின்றும் இறங்கி, ஆரவாரம் செய்து கொண்டு ஆகாயத்திடையில் கிளம்பி எழுந்து போனான். அங்கிருந்து அழகிய ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்லினைக் கையில் ஏந்தி இருக்கும் இராமனின் மந்தரமலை போன்ற தோள்களில், தன்னிடம் இருந்த அம்புகள் எல்லாவற்றையும் ஒரு சேர மழைபோலப் பொழிந்தான்.

இராமன் தோள் மந்தரமலைக்கு உவமை. மந்தரமலை கடலைக் கலக்கியது போல, இராமன் தோள்கள் அரக்கர் கடலைக் கலக்கும் என்பது குறிப்பு.

182. கரன் வலக்கையை இழத்தல்

தாங்கி நின்ற தயரத ராமனும்,
தூங்கு தூணியிடைச் சுடு செஞ்சரம்
வாங்குகின்ற வலக்கை ஓர் வாளியால்,
வீங்கு தோளொடு பார்மிசை வீழ்த்தினான். (3157)

(தூணி - அம்புப் புட்டில் / அம்புக் கூடு; தூங்கு - தங்கியிருந்த / தொங்குதல்; வாங்குதல் - வெளியே எடுத்தல்; வீங்கு - பருத்த; பார் - நிலம்; தாங்கி - பொறுத்து / தடுத்து)

கரன் தொடுக்கின்ற எல்லா அம்புகளும் தன்மேல் படாதவாறு தடுத்துத்தாங்கி நின்ற தசரதன் மைந்தனான இராமனும், தனது தொங்குகின்ற அம்புப்புட்டிலிலிருந்து, கொடிய சிறந்த ஒரு அம்பை வெளியே எடுத்து, கரனது வலது கையைத் தோள்களோடு சேர்த்து நிலத்தின் மீது விழச் செய்தான்.

183. கரன் இடது கையால் போர் செய்தல்

வலக்கை வீழ்தலும், மற்றைக் கையால் வெற்றி
உலக்கை, வானத்து உரும்என, ஓச்சினான்;
இலக்குவற்கு முன் வந்த இராமனும்
விலக்கினான், ஒரு வெங்கதிர் வாளியால். (3158)

(உரும் - இடி; ஓச்சுதல் - எறிதல்; வந்த - பிறந்த; கதிர் - விளக்கமுள்ள / ஒளி; வாளி - அம்பு; விலக்குதல் - மாற்றுதல் / தடுத்தல்)

வலக்கை அறுந்து வீழ்ந்த கரன், தனது மற்றொரு கையான இடது கையினால், வெற்றியைத் தரத்தக்க உலக்கை என்னும் ஆயுதத்தை, வானத்தில் எழும் இடியைப் போல, இராமன் மீது வீசினான். இலக்குவனுக்கு முன்பு பிறந்த அவன் அண்ணனாகிய இராமனும், அதனைத் தனது கொடிய ஒளிமிக்க அம்பினால் தடுத்து விலக்கினான்.

184. கரன் மலையைப் பெயர்த்து எறிதல்

விராவரும் கடுவெள் எயிறு இற்றபின்,
அராஅழன்றது அனைய தன் ஆற்றலால்
மராமரம் கையில் வாங்கி வந்து எய்தினான்;
இராமன் அங்கு ஓர் தனிக்கணை ஏவினான். (3159)

(கடு - நஞ்சு / விடம்; விராவுதல் - பொருந்துதல்; அழல்தல் - வெகுள்தல் / சீறுதல்; அரா - பாம்பு; எய்தினான் - நெருங்கினான்)

விடம் பொருந்திய வெள்ளைப் பற்களை இழந்த பின் ஒரு நாகப் பாம்பு சீறினால் எப்படியிருக்குமோ, அவ்வாறு சீறிக்கொண்டு, கரன், தன் வலிமையால் ஒரு மராமரத்தைப் பெயர்த்தெடுத்து வந்து இராமன் அருகில் நெருங்கினான்; இராமனும் தனது ஒப்பற்ற ஒரு வில்லை அவன் மீது செலுத்தினான்.

185. கரன் இறந்து புடுதல்

வரம் அரக்கன் படைத்தலின், மாயையின்,
உரமுடைத் தன்மையால், உலகு ஏழையும்

பரம் முருக்கிய பாவத்தினால், வலக்
கரம்என, கரன் கண்டம் உற்றான் அரோ. (3160)

(உரம் - பேராற்றல்; முருக்குதல் - வருந்துதல் / அழித்தல்; கண்டம் - கழுத்து; அரக்கன் - இராவணன்; பாவம் - தீவினை)

சிவபெருமானிடமிருந்து பலவரங்கள் பெற்றிருப்பவனாகவும், தான் கற்ற மாயவித்தையினில் பேராற்றல் படைத்தவனாகவும் விளங்குகின்ற இராவணன், இவ்வேழு உலகங்களையும் பெரிதும் வருத்தி அழித்த தீவினையினால், இப்போது, அவனுக்கு வலது கரம் என்று கருதப்படுகிற கரன், முன்பு வலது கை இற்றது போல, இப்போது கழுத்து அறுபட்டு இறந்தான்.

முன்பு தாடகை இறந்தபோதும், பின்பு சூர்ப்பணகை மூக்கறுபட்ட போதும், கவிஞன் இராவணனைத் தொடர்புபடுத்திக் கூறியது போலவே, இப்போதும் கரன் இறந்த பொழுதும் இராவணனைத் தொடர்பு படுத்திக் கூறுவது காண்க. இந்தக் கரன் அழிவு ஒரு முகூர்த்த நேரத்தில் நடைபெற்று முடிந்து விட்டதாகவும் வான்மீகம் கூறுகிறது.

186. தேவர்கள் மகிழ்ச்சி

ஆர்த்து எழுந்தனர், ஆடினர், பாடினர்,
தூர்த்து அமைந்தனர், வானவர் தூய்மலர்;
தீர்த்தனும் பொலிந்தான், கதிரோன் திசை
போர்த்த மென்பனி போக்கியது என்னவே. (3161)

(தூர்த்து - சொரிந்து / நிரம்பப் பொழிந்து; தீர்த்தன் - தூயவன்; கதிரோன் - சூரியன்; போர்த்தல் - மறைத்தல்)

கரன் மாண்டதும் தேவர்கள் மகிழ்ச்சியால் எழுந்து ஆரவாரித்தனர்; ஆடிப்பாடிக் கொண்டு தூய கற்பகமலர்களை இராமன் மீது நிரம்பப் பொழிந்து வாழ்த்தி நின்றனர்; தூயவனான இராமனும், சூரியன் எல்லாத் திசைகளிலும் மறைத்திருந்த மெல்லிய பனியைப் போக்கி ஒளிபெற்றுத் திகழ்வதைப் போலப் பகைவரை அழித்துப் பொலிவு பெற்று விளங்கினான்.

பனிக்கு அரக்கர்களும், அதனை நீக்கிய சூரியனுக்கு இராமனும் உவமைகள்.

187. இராமன் சீதை இருந்த இடத்திற்குச் செல்லுதல்

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற,
இனிய சிந்தை இராமனும் ஏகினான்.
அனிக வெஞ்சமத்து ஆர்உயிர் போகத் தான்
தனிஇருந்த உடல் அன்ன, தையல்பால். (3162)

(மொய்த்தல் - நெருங்குதல்; அனிகம் - படைவகுப்பு; சமம் - போர்க்களம்; இனிமை - நன்மை; முறை முறை - வரிசையாக / தொடர்ந்து)

அங்கிருந்த முனிவர்களெல்லாம் இராமனைத் தொடர்ந்து வந்து வரிசை வரிசையாக அணுகினார்கள்; எல்லோராலும் விரும்பப்படுகின்ற இனிய மனமுடைய இராமனும், போர்ப் படைகள் போர் செய்கின்ற போர்க்களத்திற்குத் தனது அருமையான உயிர் மட்டும் தன்னை விட்டுச் செல்லத் தன் உடல் மட்டும் தனியாக இருந்தது போன்ற நிலையிலுள்ள தன் மனைவி சீதை இருக்குமிடத்திற்குச் சென்றான்.

போர் செய்வதற்குத் தன்னைத் தனித்துப் பர்ணசாலையில் விட்டு விட்டுத் தனியாகப் போன இராமனுக்கு, உடலை விட்டுவிட்டுப் பிரிந்த உயிர் உவமையாயிற்று. இராமன் உயிர், சீதை உடல் என்பதைக் கம்பன் பல விடத்தும் கூறுதல் காணலாம்.

188. சீதையும் இலக்குவனும் இராமனைப் போற்றுதல்

விண்ணின் நீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணின் நீரும் பொடிகளும் போய்உக,
அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவினார். (3163)

(புண் நீர் - இரத்தம்; அண்ணல் - பெருமையில் சிறந்தோன்)

போரில் மடிந்த கொடிய அரக்கர்கள் வீரசுவர்க்கம் அடைந்தனர். அவர்களுடைய மேனியிற்பட்ட புண்களினின்றும் வடிகின்ற நீராகிய இரத்தமும், அங்கே எழுந்த தூசுகள் மேனியிற் பட்டிருப்பவை நீங்கிப் போகும்படியும், பெருமை சான்ற வீரனான இராமனின் தம்பி இலக்குவனும், அன்னம் போன்ற மனைவியான சீதையும், தங்கள் கண்ணீரினால் அவன் திருவடிகளைக் கழுவினார்கள்.

வெளியில் இருந்து வருபவர்களுக்கு வீட்டின் உள்ளே செல்லும் முன்பு கால்களைக் கழுவிக் கொள்ள நீர்கொடுப்பது ஒரு உபசாரம். இங்கே இவர்களுடைய கண்ணீரே அந்தக் கால்களைக் கழுவும் நீராயிற்று என்று கூறியது ஒரு நயம். அவர்கள் இருவரும், இராமன் அரக்கர் படையை அழித்ததனால் உவகைக் கண்ணீரும், போரில் இராமனுக்கு ஏற்பட்ட காயங்களை எண்ணி அவலக் கண்ணீரும் உகுத்தனர் என்பதும் ஒன்று. இராமன் உள்ளே வரும் போது இலக்குவனும் சீதையும் அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி வரவேற்ற போது பெருகிய உவகைக் கண்ணீர், இராமனது பாதங்களைக் கழுவும் அருக்கிய நீர் போலாயிற்று என்பதாம். ''கோதிலாப் பொன்னடியைக் கண்ணிற்புனலால் கழுவினான் மின்னிடையாளோடும் வீழ்ந்து'' என்பது நளவெண்பா. கண்களிலிருந்து வழிவது கண்ணீர்; புண்களிலிருந்து வழிவது புண்ணீர் / இரத்தம் என்க.

இங்கே சீதை இராமனை வெகுவாகப் பாராட்டி சத்திரிய உபசாரங்கள் செய்தாள் என்று மிக விரிவாக வான்மீகி கூறியிருப்பது நோக்கத்தக்கது.

189. மூத்தம் ஒன்றில், முடிந்தவர் மொய்புண்ணீர்
நீத்தம் ஓடி, நெடுந்திசை நேர்உற
கோத்த வேலைக் குரல் என, வானவர்
ஏத்த, வீரன் இனிது இருந்தான் அரோ. (3164)

(முடிந்த - இறந்துபட்ட; மொய் - செறிந்த; நீத்தம் - வெள்ளம்; கோத்த - கலந்த / இணைந்த; ஏத்துதல் - துதித்தல்; மூத்தம் - முகூர்த்தம் / இருநாழிகை / மூன்றே முக்கால் நாழிகை / மூன்று நாழிகை / 1½ மணிநேரம்; இனிது - இன்புற்று)

ஒரு முகூர்த்த காலஅளவிற்குள் இறந்து பட்ட அரக்கர்களின் செறிந்த புண்களிலிருந்து பெருகிய இரத்த வெள்ளம் ஓடிச் சென்று நீண்ட பெரிய திசைகளின் எல்லையை அடைய, பல கடல்கள் ஒன்றோடொன்று கலந்து எழுப்பும் ஒலியைப் போல, தேவர்கள் இராமனைத் துதித்துப் போற்ற, வீரனாகிய இராமன் இன்பமுற்று அங்கே இருந்தான்.

மூத்தம் என்பது முகூர்த்தம் என்ற வடசொல்லின் தமிழாக்கம்; இது இரண்டு நாழிகை என்றும், மூன்று நாழிகை என்றும், மூன்றே முக்கால் நாழிகை என்றும் பலவாறு கூறுவர். கம்பன் பின்னால் ''கடிகை மூன்றில்'' என்றும், ''கன்னல் மூன்றில்'' என்றும் இந்நேரத்தைக் குறிக்கிறான் என்பது அறிக. என்றாலும் இன்றையக்கணக்கிற்கு 1½ மணிநேரம் என்பதை அறிக. வானவர் இராமனைத் துதித்துப் போற்றிய ஒலி, பல கடல்கள் இணைந்து ஒலித்த ஒலிக்கு உவமை கூறப்பட்டது. இப்போர் ஒன்றரை முகூர்த்த நாழிகை அளவில் முடிந்தது என்று வான்மீகமும் மூன்றே முக்கால் நாழிகை நடந்தது என்று அத்யாத்ம ராமயணமும் கூறுகின்றன.

190. கரன் இறந்ததால் சூர்ப்பணகை துயருறுதல்

இங்கு நின்றது உரைத்தும்; இராவணன்
தங்கை தன்கை, வயிறு தகர்த்தனள்;
கங்குல் அன்ன கரனைத் தழீஇ, நெடும்
பொங்கு வெங்குருதிப் புரண்டாள் அரோ. (3165)

(நின்றது - எஞ்சியது / மேல் நிகழ்ந்தது; தகர்த்தல் - அடித்துக் கொள்ளுதல்; கங்குல் - இருள்; தழீஇ - தழுவி)

இவ்விடத்தில் சொல்லாது எஞ்சி நின்றவையான மேல் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக்கூறுவோம். இராவணனின்தங்கையானசூர்ப்பணகைதன் வயிற்றில் தன் கைகளால் அடித்துக் கொண்டு, இருள் போன்ற கரிய நிறத்தையுடைய கரனின் உடலைத் தழுவி, நீண்டு பரந்து பொங்கியெழும் வெம்மையான இரத்தவெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்தாள்.

191. சூர்ப்பணகை தன்னை நொந்து கொண்டு செல்லுதல்

''ஆக்கினேன் மனத்து ஆசை; அவ்ஆசை என்
மூக்கினோடு முடிய, முடிந்திலேன்;
வாக்கினால், உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கினேன்; கொடியேன்'' என்று போயினாள். (3166)

(ஆக்குதல் - கொள்ளுதல்; முடிதல் - இறந்து படல்; நாள் - வாழ்நாள் / ஆயுள்; வாக்கு - வாய்ச் சொற்கள்)

''என்னுடைய மனத்தில் இராமன்மேல் ஆசை கொண்டேன்; அந்தத் தகாத ஆசையினால் என்னுடைய மூக்கு முதலியன அறுபட்டது போக, அத்துடன் நான் இறந்து படாது ஒழிந்தேன். என்னுடைய வாய்ச் சொற்களினால் உங்கள் செல்வம் மிகுந்த வாழ்க்கையையும், உங்கள் நீண்ட ஆயுட் காலத்தையும் போக்கி விட்டேன். நான் மிகக் கொடியவள்'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டு, அவ்விடம் விட்டு அகன்றாள்.

192. சூர்ப்பணகை இலங்கையை அடைதல்

அலங்கல் வேற்கை அரக்கரை ஆசறக்
குலங்கள் வேர் அறுப்பான் குறித்தாள், உயிர்
கலங்கு சூறை வன்போர் நெடுங்கால்என,
இலங்கை மாநகர் நொய்தின் சென்று எய்தினாள். (3167)

(அலங்கல் - மாலை; ஆசு - பற்றுக்கோடு / அடி; சூறை - சூறைக்காற்று; கால் - காற்று; நொய்தின் - விரைந்து; குலம் - கூட்டம்; குறிப்பு - கொள்கை / எண்ணம்)

மாலைகள் சூட்டிய வேற்படையைக் கைகளில் ஏந்திய அரக்கர் கூட்டத்தை, பற்றுக்கோடு ஏதும் இன்றி அடியோடு ஒழிக்கும் எண்ணத்துடன் உள்ள சூர்ப்பணகை, இப்பொழுது உலகத்து உயிர்களைக் கலக்கமடையச்செய்கின்ற, வலிந்து தாக்கும் பெரிய சூறாவளிக் காற்றைப் போல, விரைந்து, இலங்கை மாநகரம் சென்று சேர்ந்தாள்.

சூர்ப்பணகைப் படலத்தின் முதலில் ''நீல மாமணிநிற நிருதர் வேந்தனை, மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்'' என்று அறிமுகப்படுத்திய கவிஞன், படலம் முடியும் போதும் ''அலங்கல் வேற்கை அரக்கரை, ஆசறக் குலங்கள் வேரறுப்பான் குறித்தாள்'' என்று சொல்லுவதும் உணர்ந்து இன்புறத்தக்கது. கரன் தூடணன் ஆகியவர்களை ஜனஸ்தானத்தில் உயிரிழக்கும்படி செய்ததோடன்றி, இலங்கையில் உள்ள அரக்கர்களும் வேரோடு அழிய எண்ணிய சூர்ப்பணகை விரைவில் இலங்கை சென்று சேர்ந்தாள் என்பதும் ஒன்று.

இங்கே ஒரு செய்தி. கரன், தூடணன், திரிசிரன் என்பவர்கள், சில சாபத்தால் அரக்கர்கள் ஆயினர் என்றும், இவர்கள் முன் பிறப்பில் யாக்ஞவல்கியருடைய குமாரர்களான, சந்திரகாந்தன், மகாதேவன், விஜயன் என்ற அந்தணர்களாக வாழ்ந்தனர் என்றும் ஒரு புராணக்குறிப்புக் கூறுகிறது. இப்பொழுது இராமபிரானின் திருக்கரங்களால் கொல்லப் பட்டதால் அவர்கள் சாபம் நீங்கப் பெற்றனர் என்பதாம்.

கரன் வதைப் படலம் நிறைவுற்றது

7. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம்

[170 பாடல்கள்]

இராவணன்தங்கை சூர்ப்பணகை இலக்குவனால் மூக்கரிபட்டு, இராம இலக்குவர்களைப் பழி தீர்க்க எண்ணித் தன் தம்பி கரன், தூடணன் முதலியோரை அணுகி அரற்றியதும், அவர்கள் அனைவரும் போரில் மாண்ட பின்னர் சூர்ப்பணகை இலங்கையை அடைந்ததும் முன்படலத்தில் கண்டவை. இலங்கையை அடைந்த சூர்ப்பணகை தன் சொல்வன்மையாலும் சூழ்ச்சித் திறத்தாலும், தன் அண்ணன் இராவணனைச் சீதையின் மேல் காமம் கொள்ளுமாறு செய்து அவனைக் காமஇச்சையில் மூழ்கும்படி செய்யும் செய்திகளைக் கூறும் படலம் என விரியும். இது 170 பாடல்களைக் கொண்டது.

சில சுவடிகளில், பின்வரும் மாரீசன் வதைப் படலத்தையும் இணைத்து ஒரே படலமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற சில பதிப்புக்களில் இந்த ஒரே படலம் ''இராவணன் அரசிருக்கைப் படலம்'', ''அவைபுகு படலம்'', ''மோகப் படலம்'', ''மாரீசன் வதைப்படலம்'' என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டும் தலைப்பிடப்பட்டுள்ளன. ராஜம் ஐயர் மர்ரே கம்பெனி மூலப்பதிப்பில் மட்டும் இப்படலம் ''இராவணன் அணங்குறு படலம்'' எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.

இப்படலத்துள், சூர்ப்பணகை இலங்கை வந்த போது இராவணன் அரசவையில் வீற்றிருந்த தன்மை; சூர்ப்பணகையை இக்கோலத்தில் கண்ட இலங்கை மாந்தரின்துயரக்காட்சி; சூர்ப்பணகை வந்து இராவணன் காலில் விழுகின்ற காட்சி; இராவணன் கொதித்தெழுந்து ''இக்கொடுமையை உனக்கு இழைத்தவர் யார்?'' எனக்கேட்டல்; சூர்ப்பணகை ''இருமானிடர்'' என்றலும், அதனை நம்பாது ''உண்மையில் நடந்ததைச் சொல்'' என மீண்டும் கேட்டல்; சூர்ப்பணகை தனக்கு நிகழ்ந்தவற்றை நேரிடையாகக் கூறாமல், இராம இலக்குவர்கள் மேனியழகை உயர்த்திக் கூறுதல்; ''கரன் முதலியோர் உதவிக்கு வரவில்லையா'' என்று கேட்ட இராவணனுக்கு, ''அவர்களும் அரக்கர் படைவீரருடன் அனைவரும் மாண்டனர்'' என்று கூறுதல்; மீண்டும் இராவணன் ''நீ செய்த குற்றம் என்ன?'' என்று கேட்க, அப்பொழுது சூர்ப்பணகை சீதையின் வனப்பின் செவ்வியை வியந்து புகழ்ந்து கூறுதல்; இராவணன்காமம் கொள்ளும்வகையில் சூர்ப்பணகை சீதையின் அழகைத்

தொடர்ந்து போற்றுதல்; பொங்கி யெழுந்த சினம் அடங்க, இராவணன் சீதைமேல் காதலும் காமமும் கொள்பவனாக மாறுதல்; இராவணன் விரகதாபம்; ஒரு சோலையை அடைந்து அங்கு பறவைகள், பருவங்கள், சந்திரன், பகலவன், இளம்பிறை, இருள் முதலியவற்றைப் பழித்து, தன் இச்சையால் தோன்றச் செய்து, நீக்கி, அடக்கி, ஒடுக்கி, ஆணையிடுதல்; சீதையின் உருவெளித்தோற்றம் காணுதல்; சூர்ப்பணகை இராமன் உருவையும், இராவ்ணன் சீதை உருவையும் உருவெளித் தோற்றத்தில் கண்டு இருவரும் மயங்கிப் பிதற்றுதல்; சீதையை வஞ்சத்தால் கவர்ந்து வரச் சூர்ப்பணகை தூண்டுதல்; மீண்டும் இராவணன் ஒரு சந்திரகாந்த மண்டபத்தை அமைத்து அதனுள் சென்று இருந்தும், தென்றலைப் பழித்தல்; பின்னர் மந்திரியோடு ஆலோசனைசெய்து தன் மாமன் மாரீசனை அடைதல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

1. சூர்ப்பணகை வந்தபொழுது இராவணன்கொலு வீற்றிருந்த நிலை [23 பாடல்கள்]

இரைத்த நெடும்படை அரக்கர் இறந்ததனை
மறந்தனள், போர் இராமன் துங்க
வரைப் புயத்தினிடைக் கிடந்த பேர்ஆசை
மனம் கவற்ற, ஆற்றாள் ஆகி,
திரைப்பரவைப் பேர் அகழித் திண்
நகரில் கடிது ஓடி, ''சீதை தன்மை
உரைப்பென்'' எனச் சூர்ப்பணகை வர,
இருந்தான் இருந்த பரிசு உரைத்தும் மன்னோ. (3168)

(இரைத்த - முழங்குகின்ற; துங்க - உயர்ந்த; வரை - மலை; கவற்றுதல் - வருத்துதல்; ஆற்றுதல் - தாங்குதல்; திரை - அலை; பரவை - கடல்; தன்மை - இயல்பு; பரிசு - தன்மை)

முழங்குகின்ற பெரிய படையுடன் கரன், தூடணன், திரிசிரா போன்ற அரக்கர்களும் மாண்டதனை நினைத்து வருந்தாததுடன், அதனை மறந்தவளாகிப் போரில் வல்லவனான இராமனது உயர்ந்து விளங்கும் தோள்களிடத்துத்தான் கொண்ட பேராசை தன் மனத்தை வருத்த, அதனைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் அற்றவளாகி, ''அலைகள் நிறைந்த கடல்களையே பெரிய அகழியாகக் கொண்டுள்ள, செல்வம் நிறைந்த, வலிய, இலங்கை மாநகரத்திற்கு விரைந்து ஓடிச் சென்று சீதையின் அழகுச் சிறப்பியல்புகளை இராவணனுக்கு எடுத்துக் கூறுவேன்'' என்று மனத்துள் கருதி சூர்ப்பணகை இலங்கையுள் நுழைந்தாள். அப்பொழுது அங்கே அரசவையில் வீற்றிருந்த இராவணனின் நிலை பற்றி இப்பொழுது கூறத் தொடங்குவோம்.

சூர்ப்பணகை இலங்கைக்கு ஓடிச் சென்றது தனது மூக்கரிபட்டதையும், தன் உடன்பிறந்தவர்கள், படைத்தலைவர், அரக்கர்களுடன் மடிந்ததையும்

பற்றிச் சொல்லுவதற்காக அல்ல என்பதையும், உண்மையில் தன் அண்ணன் இராவணன் சீதையை அடைய வேண்டும் என்று அவன்பால் கொண்ட அன்பின் காரணமாகவும் அல்ல என்பதையும், குறிப்பால் உணர்த்தி, அவள் செய்ய எண்ணியது, தனக்கு இடையூறாகவுள்ள சீதையின் வனப்பினை இராவணனுக்கு உணர்த்தி, அவளை அவன் கவர்ந்து கொண்டு வரும்படிச் செய்து, சீதையை இராமனிடமிருந்து பிரித்துத் தான் அவனை அடைய வேண்டும் என்ற ஒரு சூழ்ச்சித் திட்டத்துடன்தான் சூர்ப்பணகை இலங்கைக்குள் நுழைகிறாள் என்பதைக் கற்போர் அறியுமாறு கவிஞன் உணர்த்துவதை நோக்குக. ''இறந்ததனை மறந்து'' என்ற சொற்றொடர், காமம், துக்கத்தை வென்று மேலோங்கி நிற்கும் தன்மையது என்பதைக் குறிக்கவே என்க. ஒரு நாட்டிற்குப் பலவகை அரண்கள் உண்டு; நில அரண், மலை அரண், காட்டு அரண் என்று. இங்கே குறிப்பிடப்படுவது நீர் அரண். எனவேதான் ''திரைப்பரவைப் பேர் அகழித்திருநகர்'' என்றான் என்க.

2. நிலையிலா உலகினிடை நிற்பனவும்
நடப்பனவும் நெறியின் ஈந்த
மலரின்மேல் நான்முகற்கும் வகுப்பு அரிது,
நுனிப்பது ஒரு வரம்புஇல் ஆற்றல்
உலைவுஇலா வகை இழைத்த தருமம் என,
நினைந்த எலாம் உதவும் தச்சன்
புலன்எலாம் தெரிப்பது. ஒருபுனை மணி
மண்டபம் அதனில் பொலிய மன்னோ. (3169)

(நிற்பன - அசையாப்பொருள்கள் / நிலைத் திணைப் பொருள்கள்; நடப்பன - அசையும் பொருள்கள் / இயங்கு திணைப் பொருள்கள்; ஈந்த - தோற்றுவித்த; நான்முகன் - பிரமன்; வகுப்பஅரிது - படைக்க முடியாதது; நுனிப்ப - நுட்பமாக; உலைவு - தீங்கு / அழிவு; உழத்தல் - முயலுதல்; உதவுதல் - உண்டாக்குதல்; புலன் - அறிவு; தெரிப்பது - காட்டுவது; புனை - அலங்கரிக்கப்பட்ட; பொலிதல் - விளங்குதல் / திகழ்தல்) (குளகப்பாடல்)

நிலையில்லாத இவ்வுலகத்தில் ஒரே நிலையில் நிற்கும் நிலைத்திணைப் பொருள்கள், இடம் விட்டுப் பெயரும் தன்மையுள்ள இயங்கு திணைப் பொருள்கள் ஆகியவற்றை நெறிமுறைப்படி படைத்த, தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமதேவனுக்கும் படைப்பதற்கு அருமையானதும், நுட்பமாக அமைந்ததும், அளவில்லாத ஆற்றல் பெற்றதும், பிறருக்குத் தீங்கு செய்யாத வகையில் இயற்றப்பட்ட அறம் என்று கூறுமாறும், தான் நினைத்ததை நினைத்தபடியே செய்து முடிக்கும் பேராற்றல் வாய்ந்த தெய்வத் தச்சனான விசுவகர்மா, தன் சிற்ப நூல் நுட்ப அறிவின்தன்மையையெல்லாம் எடுத்துக்காட்டும் ஒரு ஒப்பற்ற முறையில் வடிவமைக்கப்பட்டு, அலங்கரிக்கப் பெற்ற, இரத்தினம் பதிக்கப்பட்ட

சபா மண்டபத்தில், இராவணன் தன் ஆற்றல் விளங்கும்படி வீற்றிருக்க - பாடல் தொடர்கிறது.

நிற்பன - ஸ்தாவரம்; நடப்பன - ஜங்கமம்; ஸ்தாவர ஜங்கமப் பொருட்கள் ''தாவர சங்கமம்'' என்பது தமிழாக்கம். ''இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' என்பது மாணிக்கவாசகரின் சிவபுராணம். தெய்வத் தச்சனாகிய விசுவகர்மா தான் தன்மனத்தில்நினைத்தவாறேபடைக்கும்ஆற்றல்வாய்ந்தவன்என்பதாம். இராவணன்கொலு வீற்றிருந்த மண்டபம் தெய்வத்தச்சன்விசுவகர்மாவின் சிற்ப நூல் அறிவுத் திறம் எல்லாம் புலப்படுத்துவது; நான்முகனாலும் படைத்தற்கரியது என்பது மேலும் சிறப்புச் சேர்ப்பதாம்.

3. புலியின்அதள் உடையானும், பொன்னாடை
புனைந்தானும், பூவினானும்
நலியும் வலத்தார் அல்லர்; தேவரின் இங்கு
யாவர், இனி நாட்டல் வல்லார்?
மெலியும்இடை, தடிக்கும் முலை, வேய் இளந்தோள்,
சேயரிக்கண், வென்றி மாதர்
வலிய நெடும் புலவியினும் வணங்காத
மகுட நிரை வயங்க மன்னோ. (3170)

(அதள் - தோல்; நலியும் - வருத்தும்; நாட்டல் - சொல்லத்தக்கவர் / கூறுதல்; தடிக்கும் - பருத்த; வேய் - மூங்கில்; சேய் - செவ்விய / சிவந்த; அரி - இரேகை; புலவி - ஊடல்; மகுடம் - கிரீடம்; நிரை - வரிசை; வயங்குதல் - விளங்குதல்) (குளகப் பாடல்)

புலியின் தோலை ஆடையாக உடுத்தியிருக்கும் சிவபெருமானும், பட்டாலாகிய பீதாம்பரத்தை அணிந்திருக்கும் திருமாலும், தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும் ஆகிய மும்மூர்த்திகளும் இவ் விராவணனை வருத்தும் ஆற்றல் பெற்றவர் அல்லர்; என்றால் மற்ற தேவர்களில் இவனை வருத்துபவர் என்று யாரைக் கூறமுடியும்? அத்தகைய ஆற்றல் பெற்றவர் ஒருவரும் இலர். நாள்தோறும் மெலிந்து கொண்டே வரும் இடையும், நாள்தோறும் பூரித்துக் கொண்டே வரும் கொங்கைகளும், மூங்கில் போன்ற, எப்போதும் இளமையான தோள்களும், செவ்வரி படர்ந்த கண்களும், எப்போதும் வெற்றியே பெறுபவருமான மகளிரின் வலிமையான நீண்ட ஊடற் காலத்தும், வணங்காத கிரீட வரிசையைப் பெற்று, ஒளி வீசித் திகழ்கின்ற இராவணன் - பாடல் தொடர்கிறது.

இராவணன் வணங்கா முடியன் என்பது கூறப்பட்டது, வணங்குதல் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று வீரத்தால் விளைவது. பிறருக்குத் தோற்றால்வணங்கவேண்டும். இங்கேசிவபெருமான், திருமால், பிரமன், ஏனைய தேவர்கள் ஆகிய யாரும் இவனுக்கு வருத்தம் விளைவிக்கும்

ஆற்றல் அற்றவர். அத்தகைய வரபலம் உடையவன் இராவணன், என்றதனால் அவன் வீரத்தால் வணங்காமை பெறப்பட்டது. மற்றொன்று காதலால் விளைவது, தனது தலைவியிடத்து, ஊடற்காலம் நீண்ட பொழுது, அதனைத் தணிப்பிப்பதற்காகத் தலை தாழ்த்துவது அகத் துறையுள் கூறப்படும் ஒரு இயல்பான வணக்கம். அந்த ஊடற் காலத்தும் வணங்காத முடியையுடையவன் இராவணன் என்பது இங்கு குறிக்கப் பட்டிருப்பதைக் காண்க. ''முன்னம் யாரையும் கும்பிடாது என் தலை'' என்று இராவணனே கூறுவதும் நோக்கத்தகும். ''புலியின் அதள் உடையான்'' என்பதை ''புலித்தோலை அரைக்கு அசைத்து'' என்ற சுந்தரர் தேவாரத்துடன் ஒப்பிட்டு நோக்குக.

4. வண்டு அலங்குநுதல் திசைய, வயக்களிற்றின்
மருப்பு ஒடிய, அடர்த்த பொன்தோள்
விண்தலங்கள் உறவீங்கி, ஓங்கு உதய
மால்வரையின் விளங்க, மீதில்
குண்டலங்கள், குலவரையை வலம்வருவான்
இரவி கொழுங்கதிர் சூழ்கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டும், நால்ஐந்து ஆய்ப்
பொலிந்த என வயங்க மன்னோ. (3171)

(அலங்குதல் - விளங்குதல் / மொய்த்தல்; பணை - பருத்த; மருப்பு - கொம்பு; இணை - இரண்டு; பொன் - அழகு; தலம் - இடப்பரப்பு; வீங்குதல் - பூரித்தல்; குலவரை - சிறந்த மேரு மலை; இரவி - சூரியன்; கதிர் - கிரணங்கள்; கற்றை - தொகுதி; சூழ்தல் - பரவுதல்; நால் ஐந்து - இருபது; வயங்க - விளங்க / பிரகாசிக்க; குண்டலம் - காதணி; வயம் - வலிமை; அடர்ந்த - தாக்கிய; கொழுமை - வளமை) (குளகப்பாடல்)

வண்டுகள் மொய்க்கின்ற நெற்றியையுடைய எட்டுத் திசை யானைகளின்வலிமைமிக்கக்கொம்புகளும்ஒடிந்துபோகும்படிஎதிர்த்துத் தாக்கிப் போர் புரிந்த அழகிய தோள்கள், விண்மண்டலத்தையும் எட்டும்படி பூரித்து, ஓங்கி நிற்கும் உதயகிரி போல் விளங்கவும், அதன்மீது செவிகளிலிருந்து தொங்குகின்ற இருபது குண்டலங்களும், சிறந்த மேருமலையை வலம் வருபவனான சூரியனது வளமையான கிரணங் களின் தொகுதிகள் பரவியிருக்கும் பன்னிரண்டு சூரிய மண்டலங்களும் ஒருசேர இருப்பதுபோல் ஒளிவீசும்படி விளங்க - பாடல் தொடர்கிறது.

இராவணன் தோளுக்கு உதயகிரியும், அவன் செவிகளில் அசைந்தாடும் இருபது குண்டலங்களுக்கு பன்னிரண்டு சூரிய மண்டலங்களும் உவமை. எட்டுத் திசை யானைகள் - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம் என்பன. பன்னிரண்டு சூரியர்கள், வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, லோகப்பிரகாசன், உலோககாட்சி, திரிவிக்ரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி எனப்படுவர். தாதா, இந்திரன், அரியமா,

மித்திரன், வருணன், அம்சுமான், பர்ஜன்யன், பகன், விவசுவான், பூஷா, விஷ்ணு, துவஷ்டா என்றும் கூறுவதுண்டு. இவர்களை மொத்தமாக துவாதக ஆதித்தர் என்பர். இராவணன் திக்குவிஜயத்தின்போது, எட்டுத் திசை யானைகளையும் அடக்கி வென்றான் என்றும், அப்பொழுது அந்த யானைகளின் தந்தங்கள் இவன் மார்பில் பட்டு முறிந்தன என்றும் உத்தரகாண்டம் கூறும்.

5. வாள்உலாம் முழு மணிகள் வயங்கு ஒளியின்
தொகைவழங்க, வயிரக் குன்றத்
தோள்எலாம் படிசுமந்த விடஅரவின்
படநிரையின் தோன்ற, ஆன்ற
நாள்எலாம் புடை தயங்க, நாமநீர்
இலங்கையில் தான் நலங்க விட்ட
கோள்எலாம் கிடந்த நெடுஞ்சிறை அன்ன
நிறை ஆரம் குலவ மன்னோ. (3172)

(வாள் - ஒளி; உலாம் - உலாவும் / தவழும்; முழு - பெரிய; ஒளி - கிரணம்; வழங்குதல் - வீசுதல்; படி - பூமி; அரவு - பாம்பு / ஆதிசேடன்; நிரை - வரிசை; ஆன்ற - நிறைந்த; நாள் - நட்சத்திரம்; புடை - பக்கம்; தயங்க / வயங்க / குலவ / உலவ / தவழ - விளங்க; நலங்க - ஒரு சேர / ஒன்றாக; இடுதல் - கொண்டு வந்து வைத்தல்; கோள் - கிரகங்கள்; நாமம் - அச்சம்; ஆரம் - இரத்தின மாலை / சன்னவீரம் என்னும் வெற்றி மாலையுமாம்((குளகப் பாடல்)

ஒளிவீசும் பெரிய இரத்தினங்கள், விளங்குகின்ற ஒளியின் பிழம்பை வீசவும், வயிரம் போன்ற உறுதி படைத்த மலை போன்ற இருபது தோள்கள் எல்லாம் இப்பூமியைத் தாங்கியிருக்கின்ற வீரம் பொருந்திய ஆதிசேடன் என்ற பாம்பின் படவரிசை போலத் தோன்றவும், நிறைந்த நட்சத்திரங்கள் எல்லாம் அருகில் ஒளிவீசவும், அச்சம் தருகின்ற கடல் சூழ்ந்த இலங்கை மாநகரில், தான் தன் திக்கு விஜயத்தின் போது வெற்றி கொண்டு, அவர்கள் வருந்தும்படி கொண்டு வந்து வைத்திருந்த நவக்கிரகங்கள் எல்லாம் இருந்த பெரிய சிறைச்சாலை போல, நிறைந்த சன்னவீரம் என்னும் வெற்றி மாலையும், இரத்தினமாலையும் விளங்கவும் - பாடல் தொடர்கிறது.

இராவணனுக்கு ஆதிசேடனும், அவன் பரந்த தோள்களுக்கு அதன் அகன்ற படவரிசையும், அவன் அணிகளில் உள்ள மணிகளுக்கு அதன் படவரிசையிலுள்ள இரத்தினங்களும், நவமணிகளுக்கு நவக்கிரகங்களும் உவமை. இராவணன் திக்கு விஜயத்தின் போது நவக்கிரகங்களையும், இருபத்தேழு நட்சத்திரங்களையும் வென்று இலங்கையில் சிறை வைத்திருந்தான் என்று உத்தரகாண்டம் கூறும்.

6. ஆய்வு அரும் பெருவலி அரக்கர் ஆதியோர்
நாயகர் நளிர்மணி மகுடம் நண்ணலால்,

தேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து, செஞ்சுடர்
ஆய்மணிப் பொலன் கழல்அடி நின்று ஆர்ப்பவே. (3173)

(பொலன் - பொன்; ஆதியோர் - முதலியோர்; நாயகர் - தலைவர்கள்; நண்ணுதல் - உராய்தல் / பொருந்துதல்; பெயர்ந்து - அசைந்து; நளிர் - பெருமை) (குளகப் பாடல்)

ஆராய்ந்து சொல்லுதற்கரிய ஆற்றல் படைத்த அரக்கர் முதலான தலைவர்கள், தங்களது பெருமை பொருந்திய இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற கிரீடங்கள் பட்டு உராய்வதால் தேய்ந்து போக, அவ்வாறு தேய்வுறு தலினால் புதிய ஒளியை மீண்டும் பெற்றுச் சிவந்த பேரொளியுடன் கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட மணிகளாலாகிய வீரக்கழல் இராவணனின் பாதங் களிலிருந்து ஆர்ப்பரிக்கவும் - பாடல் தொடர்கிறது.

அரக்கர், தேவர், அசுரர், கின்னரர், இயக்கர், சித்தர் முதலிய இனங்களின் தலைவர்கள் இராவணனின் கால்களில் வணக்கம் செலுத்திப் பணிதலால், அவர்களது மகுடங்கள் தேய்ந்து போகின்ற வீரக்கழலணிந்த பாதங்களை உடையவன். அத்தகைய வீரக்கழல்கள் ஆர்ப்பரிக்க இராவணன் கொலு வீற்றிருக்கிறான் என்க. தேயத்தேய அதிக ஒளி வீசும் மணிகள் பதிக்கப்பெற்ற வீரக்கழல்கள் என்பதாம்.

7. மூவகை உலகினும் முதல்வர் முந்தையோர்,
ஓவலர் உதவிய பரிசின் ஓங்கல்போல்,
தேவரும் அவுணரும் முதலினோர், திசை
தூவிய நறுமலர்க் குப்பை துன்னவே. (3174)

(முதல்வர் - தலைவர்; முந்தையோர் - முற்பட்டவர்; ஓவலர் - ஒழியாது; உதவிய - நல்கிய; பரிசு - கப்பம் / காணிக்கை / பரிசில் / கொடைப்பொருள்; ஓங்கல் - மலை; அவுணர் - அசுரர்கள்; குப்பை - குவியல்; துன்னுதல் - நெருங்குதல் / நிறைந்திருத்தல்; தூவிய - பொழிந்த)

விண், மண், பாதலம் என்னும் மூன்று வகை உலகத்திலும் உள்ள தலைவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு, ஓய்வில்லாது, கொண்டு வந்து தந்த காணிக்கைகள் ஒரு பக்கம் மலை போல் குவிந்திருந்தன. தேவர்களும், அசுரர்களும் எல்லாத் திசைகளி லிருந்தும் பொழிந்த நறுமணம் மிக்க மலர்களின் குவியல்கள் மற்றொரு பக்கம் நிறைந்திருந்தன.

8. இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர், கரதலம் சுமந்த உச்சியர்,
மின்அவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர், முறைமுறை துறையில் சுற்றவே. (3175)

(அவிர் - விளங்குகின்ற; விஞ்சை - வித்யாதரர்; போது - சமயம்; வழி - பக்கம்; உன்னுதல் - நினைத்தல் / அறிதல்; கரதலம் - கைகள்; சுமந்த -

கூப்பிய; துறை - ஸ்தானம்; முறை முறை - வரிசை வரிசையாக; துன்னுதல் - நெருங்குதல்; சுற்றுதல் - சூழ்தல்; உச்சி - தலை)

மின்னலைப் போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இரத்தினங்கள் பதித்த கிரீடங்களையுடைய வித்யாதர வேந்தர்கள், இராவணன் தங்கள் பக்கம் எந்தச் சமயத்தில் திரும்பிப் பார்ப்பான் என்பதை அறியாதவராக, எப்பொழுதுமே தங்கள் தலையில் கூப்பிய கையையுடையவராய் அவரவர்களுக்கு நியமிக்கப்பட்ட இடங்களில் நெருங்கி இராவணனைச் சூழ்ந்து இருக்கவும் - பாடல் தொடர்கிறது.

தாங்கள் கை கூப்பி வணங்கும் போது, இராவணன் தம்மைப் பார்த்து விட்டால் அதனையே கிடைத்தற்கரிய பெரும் பேறாக விஞ்சையர் அரசர்கள் கருதினர் என்பதாம். எனவே முன்னெச்சரிக்கையாக எப்போதும் கூப்பிய கையினராகவே இருந்தனர் என்றார். இது பேரரசருக்குச் சிற்றரசர்கள் செலுத்தும் வணக்க நிலையைக் குறித்தது என்க. இதே நிலை வலிவல மும்மணிக் கோவையிலும் பேசப்படுகிறது. ''இன்னபோது இவ்வழி ஏவும் என்றறியாது, கடைக்கண் நோக்கில் கலந்தே, கைவிரல் புடைப் பெயர்வு நோக்கிப் போற்றுபு நின்று, சிறுகுற்றேவல் நனி தவப்புரிந்தும்'' என்பது பாடல்.

9. மங்கையர் திறத்து ஒரு மாற்றம் கூறினும்,
தங்களையாம் எனத் தாழும் சென்னியர்;
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்;
சிங்கஏறு என, திறல் சித்தர் சேரவே. (3176)

(சிங்க ஏறு - ஆண் சிங்கம்; திறல் - வலிமை; மாற்றம் - சொல்; தாழும் - வணங்கும்; சென்னி - தலை; அம் - அழகிய; ஆக்கை - உடல்; சேர்தல் - திரண்டிருத்தல்; மங்கையர் - குற்றேவர் மகளிர் / பணி மகளிர் / ஏவல் மகளிர்)

ஆண் சிங்கம் போன்று வலிமை படைத்தவர்களாகிய சித்தர்கள் என்னும் தேவசாதியினர், இராவணன் குற்றேவல் பெண்டிரிடம் ஏதேனும் ஒரு வார்த்தை பேசினாலும், அவன் தங்களை நோக்கித் தான் ஏதோ கூறுகிறான் என்று கருதித் தங்கள் தலையைச் சாய்த்து வணங்குவார்கள். அவர்களது அழகிய கைகளும், உள்ளங்களும் கூடக் குவிந்த நிலையில் உள்ள உடம்பினைக் கொண்டவர்களாக இராவணன் அருகில் திரண்டிருக்கவும் - பாடல் தொடர்கிறது.

அவர்கள் தங்கள் தலைகளைத் தாழ்த்தி முயற்சிக்காதவாறு, எப்போதும் தானே தாழ்ந்த தலையை உடையவர் என்று கூறிய நயம் காண்க. அங்கை குவிதலும், முன்பு கரதலம் குவிந்த உச்சியர் என்பது போல, வணக்க நிலையைக் குறித்ததாகும். உள்ளம் குவிதல் என்பது அச்சத்தால் உள்ளம் ஒடுங்கி உடம்பு குனிதலைக் குறித்தது என்க. இங்கே ஒன்று கருதப்பட வேண்டும். சித்தர்கள் என்பவரும் தவத்திற் சிறந்தோரே; தேவ சாதியினரே;

என்றாலும் இராவணன் அவையில் அவர்கள் இவ்வாறு அடங்கியிருந்தது இராவணனின் தவப்பேராற்றல் கருதியே என்க.

10. அன்னவன் அமைச்சரை நோக்கி, ஆண்டுஒரு
நல்மொழி பகரினும் நடுங்கும் சிந்தையர்,
''என்னைகொல் பணி?'' என இறைஞ்சுகின்றனர்,
கின்னரர், பெரும்பயம் கிடந்த நெஞ்சினர். (3177)

(கிடந்த - தங்கப்பெற்ற; சிந்தை - அறிவுமாம்; இறைஞ்சுதல் - வணங்குதல்)

கின்னரர் என்னும் இன்னொரு தேவசாதியினர், இராவணன் தனது அமைச்சர்களை நோக்கி ஏதேனும் இரகசியமாய்ப் பேசினாலும், அவன் தங்களைக் குறித்துத் தான் ஏதோ பேசுகிறான் என்று கலங்கும் மனம் உடையவர்களாய் ''தாங்கள் இடும் பணியாது''? என்று வணக்கமும் மிகுந்த அச்சமும் உடைய மனத்தினராய், இராவணனைச் சூழ்ந்திருக்கவும் - பாடல் தொடர்கிறது.

கின்னரர் என்பவர் கின்னரம் என்னும் யாழைக் கொண்டு இசைபாடும் ஒரு வகை தேவசாதியினர். இவர்கள் மனித முகமும் ஒருவகைப் பறவையின் உடலும் கொண்டவர்கள். பொதுவாக ஆண்களும் பெண்களும் இணை பிரியாது வாழ்வர் என்று கூறுவர்.

11. பிரகர நெடுந்திசைப் பெருந்தண்டு ஏந்திய
கரதலத்து அண்ணலைக் கண்ணின் நோக்கிய
நரகினர் ஆம்என, நடுங்கும் நாவினர்,
உரகர்கள், தம்மனம் உலைந்து சூழவே. (3178)

(உரகர்கள் - நாகலோகத்தவர்; உரகம் - நாகம்; பிரகரம் (ப்ரஹரம்) - அடி / அடித்தல் / தண்டித்தல்; தண்டு - தண்டாயுதம்; கரதலம் - கை; அண்ணல் - பெரியோன் / இயமன்; நரகர் - மகாபாவிகள் / நரகலோகத்தில் வாழ்பவர்; நா நடுங்குதல் - மொழி குழறுதல்; உலைதல் - வலியழிதல்)

தண்டிக்கும் இயல்புடைய பெரிய திசையாகிய தெற்குத் திசையில் காலதண்டம் என்னும் பெரிய தண்டாயுதத்தைத் தன் கைகளில் தாங்கி நிற்கும் பெரியோனாகிய இயமனை, மாபாவம் செய்தவர்கள் தங்கள் கண் எதிரே கண்டவர்கள் போல, நாகலோகத்தில் வாழ்பவர்கள் தங்கள் சொற்கள் குழறியபடி, தங்கள் மனமும் வலியழிந்து போய் இராவணனைச் சூழ்ந்து நிற்கவும் - பாடல் தொடர்கிறது.

பாவிகளைத் தண்டிப்பவன் இயமன் எனவே ''பிரகர நெடுந்திசைப் பெருந்தண்டேந்திய கரதலத்து அண்ணல்'' என்றார். இயமனின் திசை தெற்கு; அவன் ஏந்தியிருக்கும் தண்டாயுதம் காலதண்டம் எனவும், கயிறு காலபாசம் எனவும் அவன் காலன் எனவும் வழங்கப்படுவதும் அறிக. இயமனை அண்ணல் என்றது அவன் நெறிமுறை பிறழாது அவரவர் செய்த

குற்றத்திற்கேற்பத்தண்டனைவிதிக்கும்தன்மையன்என்பதனாலும்என்க. வழக்கில் ''தர்மராஜன்'' என்று இயமனை அழைக்கிறோம் அல்லவா? அதுபோலக் கவிஞன் ''அண்ணல்'' என அழைக்கிறான் என்பதாம். உரகர்களும் பதினெட்டு வகைத் தேவ சாதியருள் ஒருவரே. நரகர் என்பவர் நரக தண்டனைக்குரிய பாவிகள். நரகலோகத்தில் வாழ்பவர் என்பதாம்.

இதற்குப் பின் சில சுவடிகளில் இவ்வாறே அவுணரும், இயக்கரும் திசை திசை இறைஞ்சி நிற்பதாகவும், புரந்தரன்கூட களாஞ்சிகை எடுத்துப் போற்றி நின்றான் எனவும் கூறப்பட்டிருக்கின்றன. அவை எல்லாச் சுவடிகளிலும் காணப் பெறாமையால் மிகைப் பாடல் எனக்கருதி உரை வரையப்படவில்லை.

12. திசைஉறு கரிகளைச் செற்று, தேவனும்
வசையுறக் கயிலையை மறித்து, வான் எலாம்
அசைவுறப் புரந்தரன் அடர்த்த தோள்களின்
இசையினைத் தும்புரு இசையின் ஏத்தவே. (3179)

(கரி - யானைகள்; தேவன் - சிவபெருமான்; வசை - பழி; மறித்தல் - பெயர்த்தல் / மேல் கீழாக்குதல்; வான் - தேவர்கள்; அசையுறல் - சோர்ந்து போதல்; புரந்தரன் - இந்திரன்; அடர்த்த - வென்ற; ஏத்துதல் - துதித்தல்; செறுத்தல் - வெல்லுதல்; இசை - புகழ் / பாடல்)

எட்டுத் திசைகளிலும் பொருந்தியுள்ள திக்கஜங்களை அவற்றின் வலியடக்கி வென்று, மகா தேவனாகிய சிவபிரானும் பழிப்புறும்படி அவன் வசிக்கும் கயிலாய மலையையே தலைகீழாகப் பெயர்த்தெடுத்து, வானுலகமெல்லாம் தளர்வுறும்படி தேவேந்திரனையும் வென்ற இராவணனது இருபது தோள்களின் புகழைத் தும்புரு என்னும் கந்தர்வன் தனது யாழிசையில் இசைத்துத் துதிக்கவும் - பாடல் தொடர்கிறது.

திக்கஜங்களை இராவணன் வென்றதும், கயிலாய மலையைப் பெயர்த்ததும், தேவலோகத்து இந்திரனை வென்றதும் உத்தரகாண்டத்தில் திக்குவிஜயப் படலத்திலும், வரை எடுத்த படலத்திலும் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன. தும்புரு என்பவர் பதினெட்டு தேவ சாதியருள் ஒருவரான கந்தர்வ இனத்தைச் சார்ந்தவர். யாழ்இசையில் வல்லவர்; கந்தர்வம் என்ற சொல்லுக்குக் குதிரை என்பது பொருள். கந்தர்வர் என்பவர் குதிரை முகமும் மானிட உடல்களும் உடையவர்கள். பொதுவாகத் தும்புருவும் நாரதரும் இணைத்தே பேசப்படுவர். தும்புரு இசைத்த தும்புரு என்னும் இசைக் கருவி தான் இன்று ''தம்புரா'' என வழங்கப்படுகிறது என்றும் கூறுவதுண்டு. தும்புரு கைக்கொண்டிருந்த யாழ் கலாவதி என்று வழங்கப்பெறும்.

13. சேண்உயர் நெறி முறை திறம்பல் இன்றியே
பாணிகள் பணிசெய, பழுதுஇல் பண்நிறை

வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை,
வாணியின், நாரதன், செவியின் வார்க்கவே. (3180)

(சேண் - நெடுந்தூரம் / தொன்று தொட்டு; திறம்பல் - பிறழுதல் / மாறுபடுதல்; பாணி - தாளம்; பணி - அழகு; பழுதுஇல் - குற்றமற்ற; பண் - வாய்ப்பாட்டு; தேம் - இனிய / தெய்வத் தன்மை பொருந்திய; மறை - வேதம்; வாணி - வாக்கு; விளைந்த - உண்டாகிய; வார்த்தல் - பொழிதல் / ஊற்றுதல்; நாரதர் - யாவர்க்கும் அன்பு அருளுபவர்)

தொன்று தொட்டு வழங்கி வருகின்ற ஒழுங்கு முறையில் எந்த மாறுபாடும் இன்றி, தாளங்கள் தங்கள் தொழிலை அளவோடு செய்ய, குற்றமற்ற இசைப்பாடலை, தனது வீணையின் நரம்பில் எழுப்பிய, தெய்வத் தன்மை பொருந்திய, இனிமையான வேதத்தை, வாக்கிற் சிறந்த நா வீறு உடைய சரஸ்வதியின் அருளால் நாரதன், இராவணன் செவிகளில் பொழியவும் - பாடல் தொடர்கிறது.

நாரதர் பாடிய பாடலின் தன்மை கூறப்பட்டது. தொன்று தொட்டு வழங்கி வரும் இசைநெறி முறை பிறழாது, தாளம் தப்பாமல், தனது மரகத வீணையில் தெய்வத்தன்மை வாய்ந்த சாமவேதத்தை, வாணியின் அருள் பெற்ற நாரதர் இராவணன் செவிகளில் பாயச் செய்தார் என்பது கருத்து. நாரதர் யாவர்க்கும் அன்பு அருளுபவர். ஆத்ம ஞானம் அருளுபவர். இவர் பிரமகுமாரர், இசையில் வல்லவர். சரஸ்வதி கையில் வைத்திருக்கும் வீணை கச்சபி எனப்படும்.

14. மேகம்என் துருத்தி கொண்டு, விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமும் சுரந்த தீந்தேன் புனலொடும் அளாவி, நவ்வித்
தோகையர் துகிலில் தோயும் என்பது ஓர் துணுக்கத்தோடும்
சீகர மகர வேலைக் காவலன், சிந்த மன்னோ. (3181)

(மகரம் - சுறாமீன்; வேலை - கடல்; காவலன் - வருணன்; தரு - மரம் / கற்பகமரம்; நாகம் - சுரபுன்னை மரம்; சுரத்தல் - பெருக்கெடுத்தல்; தீம் - இனிய / வாசனையுடைய; தேன் - வாசனை எண்ணெய்; அளாவி - கலந்து; துருத்தி - பீச்சாங்குழல் / நீர் / காற்றுப் பரப்பும்கருவி; துணுக்கம் - நடுக்கம்; சிந்த - தெளிக்க; தோகை - மயில்; சீகரம் - துளி / சிறுதிவலைகள்)

சுறாமீனை உடைய கடலுக்குத் தலைவனான வருணன், தேவருலகத்தி லுள்ள கற்பக மரத்தின் மலர்கள் சுரக்கும் இனிய தேனையும், வித்யாதர உலகில் உள்ள சுரபுன்னை மரம் சுரக்கும் இனிய தேனையும், நல்ல மணமுடைய நீரோடு கலந்து, மேகம் என்னும் பீச்சாங்குழலைக் கொண்டு, தெளித்தால், இராவணன் சபையில் அமர்ந்திருக்கும் மயில் போன்ற சாயலையுடைய மகளிர்களின்ஆடைகளில்அவை படிந்து நனைந்துபோய் விடுமே என்று அஞ்சி, சிறுசிறு திவலைகளாகச் சிந்தவும் - பாடல் தொடர்கிறது.

கற்பகம், சுரபுன்னை ஆகிய மலர்களின் தேனைப் பீச்சாங்குழல் கொண்டு பாய்ச்சினால் மகளிரின் ஆடைகள் நனைந்து விடும் என்று அஞ்சி, வருணன் அவைகளைச் சிறு சிறு துளிகளாகச் சிந்தி, அவற்றின் இனிய மணத்தாலும் சுவையாலும் அவர்களை மகிழ்வித்தான் என்பது கருத்து, வருணன் கொண்ட அச்சமும், அங்கிருக்கின்ற மகளிர் தன்னால் வருந்தக் கூடாதே என்ற முன்னெச்சரிக்கையும் உணர்த்தப்பட்டது.

15. நறைமலர்த் தாதும் தேனும்,
நளிர்நெடு மகுடகோடி
முறைமுறை அறையச் சிந்தி
முரிந்து உகும் மணியும் முத்தும்,
தறையிடை உகாதமுன்னம்
தாங்கினன் தழுவி வாங்கி,
துறைதொறும் தொடர்ந்து நின்று,
சமீரணன் துடைப்ப மன்னோ! (3182)

(நறை - நறுமணம்; தாது - மகரந்தம்; நளிர் - பெருமை; கோடி - எண்ணற்ற; முரிந்து - சிதைந்து; உகும் - சிந்தும்; தறை - தரை / நிலம்; துறை - இடம்; சமீரணன் - வாயு தேவன்)

இராவணன் அரசவைக்கு வந்திருந்த அரசர்கள் அணிந்துள்ள மணம் மிக்க மலர் மாலைகளிலிருந்து சிந்தும் மகரந்தப் பொடிகளும், பெருமைமிக்க எண்ணற்ற அவர்களின் கிரீடங்கள் வரிசை வரிசையாகக் கீழே விழுந்து வணங்குவதால், அதனின்றும் சிதைந்து, சிதறி விழுகின்ற இரத்தினங்கள், முத்துக்கள் ஆகிய குப்பைகளும், தரையில் சிந்துவதற்கு முன்பாகவே, வாயுதேவனாகிய காற்றுக்கடவுள் அவற்றைத் தன் கைகளில் ஏந்தித் தாங்கிக் கொண்டு, ஒவ்வொரு இடமாய்ச் சென்று தொடர்ந்து நின்று துடைத்துக் கொண்டிருக்கவும் - பாடல் தொடர்கிறது.

காற்றுக் கடவுளான வாயுதேவனின் பணி கூறப்பட்டது. அரசர்களணிந் திருக்கின்ற மலர் மாலைகளின்றும் உதிரும் மகரந்தத்தூளும், அவர்கள் கிரீடங்களிலிருந்து சிந்தும் முத்தும் மாணிக்கமும் தரையில் விழுந்து அரசவையை அசுத்தப்படுத்தி விடாதபடி, வாயுதேவன், அவை விழுவதற்கு முன்னரே தன்கைகளால் தாங்கிப் பிடித்துக் கொள்வானாம். அவ்வாறு செய்ய முடியாது, தரையில் விழுந்து விட்டால் ஒவ்வொரு இடத்திற்கும் விரைந்து சென்று அவற்றைத் தொடர்ந்து துடைத்துக் கொண்டிருப்பானாம். இராவணன் பஞ்ச பூதங்களையும் தன் ஏவலுக்கு உள்ளாக்கினான் என்பது புலப்படுத்தப்பட்டது.

16. மின்னுடை வேத்திரக் கையர், மெய்புகத்
துன்நெடுங் கஞ்சுகத் துகிலர், சோர்விலர்,
பொன்னொடு வெள்ளியும், புரந்தராதியர்க்கு
இன்இயல் முறைமுறை இருக்கை ஈயவே. (3183)

(பொன் - வியாழன்; வெள்ளி - சுக்கிரன்; மின் - ஒளி; வேத்திரம் - பிரம்பு; துகில் - ஆடை; கஞ்சுகம் - மெய்ப்பை / சட்டை; ஆதியர் - முதலியவர்கள்; புரந்தரன் - இந்திரன்; இருக்கை - ஆசனம்; துன்னல் - தைத்தல்; இயல் - தன்மை)

மின்னல் போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கக் கூடிய பொன்னாலாகிய பிரம்பைக் கையில் கொண்டவர்களாகவும், உடம்பு முழுவதும் உள் புகுந்து கொள்ளத்தக்க அளவில் தைக்கப்பட்ட பெரிய சட்டையாகிய ஆடையை அணிந்தவர்களாகவும், சோர்வில்லாது மிகச் சுறுசுறுப் பாகவும், தேவர்கள் குருவாகிய வியாழன் என்ற பிரஹஸ்பதியும், அசுரர்கள் குருவாகிய வெள்ளி என்ற சுக்கிரனும், தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இனிய தன்மையுடன், அவரவர்க்கு நியமிக்கப்பட்ட ஆசனங்களைத் தந்து உபசரிக்கவும் - பாடல் தொடர்கிறது.

கஞ்சுகம் என்பது சட்டை என்று பொருள்படும். இது மெய்ப்பை என்றும் வழங்கப் பெறும் கழுத்திலிருந்து பாதம் வரை மறையுமாறு தைக்கப்பட்டிருந்த ஆடை என்பதனால் ''மெய்புகத் துன் நெடுங் கஞ்சுகத் துகிலர்'' என்றார். அவர்கள் இருவரும் முறையே தேவகுரு அசுரகுரு. எனவே அவரவர் முறைப்படி தகுதியறிந்து உபசரிப்பர் என்பதனால் இராவணன் அவர்கள் இருவரையும் இந்தப் பணிக்கு அமர்த்தினான் என்க. வியாழன் பொன் நிறத்தினன் எனவே பொன் எனவும், சுக்கிரன் வெண்மை நிறத்தினன் எனவே வெள்ளி எனவும் நிறம் கருதிக் காரணப் பெயரால் குறிக்கப் பெற்றனர் என்க.

17. சூலமே முதலிய துறந்து, சுற்றிய
சேலையால் செறியவாய் புதைத்த செங்கையன்,
தோலுடை நெடும் பணை துவைக்குந்தோறு எலாம்,
காலன்நின்று, இசைக்கும் நாள் கடிகை கூறவே. (3184)

(பணை - முரசம்; துவைத்தல் - முழங்குதல்; காலன் - இயமன்; துறந்து - நீக்கி; சேலை - மேலாடை; புதைத்தல் - மறைத்தல்; இசைக்கும் - கூறத்தக்க; கடிகை - நாழிகை)

இயமன், தனக்குரிய சூலாயுதம் முதலிய படைகலன்களை நீக்கிவிட்டு, இடுப்பில் கட்டியிருக்கும் மேலாடையால் தனது சிவந்த வாயைக் கைகளினால் பொத்திக் கொண்டு, தோலால் மூடப்பட்டுள்ள பெரிய நாழிகை முரசங்கள் முழங்கப்படும் போதெல்லாம், தானே நேரில் வந்து கூறத்தகுந்த நாளின் நாழிகைக் கணக்குகளைக் கூறிக் கொண்டிருக்கவும் - பாடல் தொடர்கிறது.

பொதுவாக இயமனைக் கண்டு எல்லோரும் நடுங்குவர்; ஆனால் அந்த இயமன் இங்கு இராவணன் சபையில், தனது பாசக்கயிறு, சூலம் முதலியவைகளின்றி, தனது ஆடையாலும் கைகளாலும் தனது வாயைப்

பொத்திக் கொண்டு, முரசு ஒலிக்கும் போதெல்லாம், அப்பொழுது என்ன நாழிகை என்று கூறிக்கொண்டே ஏவல் செய்கிறான் என்பது கருத்து. ''பணிந்த மொழியும், தணிந்த நடையும், தாளை மடக்கலும், வாய்புதைத்தலும் அடக்கமாமே'' என்பது தொல்காப்பியம். இயமன் காலம் தவறாது, காலம் தாழ்த்தாது, குறித்த காலத்தில் உயிரைப் பறித்துச் செல்லும் இயல்புடையவன். எனவே அவனை நாளின் நாழிகை கூறும் பணியில் ஈடுபடுத்தினான் இராவணன் என்க. இவ்வாறு கூறுபவர் நாழிகைக் கணக்கர் என்று அழைக்கப்படுவர்.

18. நயம்கிளர் நான நெய்அளாவி, நந்தல்இல்
வியன் கருப்பூரம் மென்பஞ்சின் மீக்கொளீஇ,
கயங்களில் மரை மலர்க்காடு பூத்து என,
வயங்கு எரிக்கடவுளும், விளக்கம் மாட்டவே. (3185)

(நயம் - நன்மை / சிறப்பு; நானம் - புனுகு நெய் / கத்தூரி; அளாவி - கலந்து / ஊற்றி; நந்தல்இல் - கெடாத / அணைதல் இல்லாத; வியன் - வியப்பு / பெருமை; கயம் - தடாகம்; எரிக்கடவுள் - அக்னி தேவன்; மாட்டுதல் - ஏற்றுதல்; கிளர்தல் - மிகுதல்; மீ - மேலே; கொளீஇ - கொளுவி / கொளுத்தி / இணைத்து; வயங்கு - விளங்குகின்ற; மரை - தாமரை)

சிறப்பு மிக்க கத்தூரிப் புனுகு நெய்யை அகலில் ஊற்றி, அணைதல் இல்லாத, நீண்ட நேரம் எரியக்கூடிய பெருமை வாய்ந்த பச்சைக்கற்பூரத்தை மிருதுவான பஞ்சின்மீது பற்றவைத்து, குளங்களில் தாமரை மலர்கள் காடு போலப் பூத்துக் குலுங்குவது போல, விளங்குகின்ற அக்னி தேவனும், அந்த அகல் விளக்குகளை ஏற்றவும் - பாடல் தொடர்கிறது.

அக்னி தேவன் ஒளி மிக்கவன். அவனையே விளக்குகள் ஏற்றும் பணியாளனாக அமர்த்தியிருந்தான் இராவணன் என்பதாம். இராவணன் சபை குளத்திற்கும், விளக்குகள் தாமரை மலர்த் தொகுதிகளுக்கும் உவமை. யார் யார் எந்தெந்தத் தொழிலில் சிறந்தவர்களோ, அவர்களை எல்லாம் இராவணன் தன் சபையில் தனக்குக் குற்றேவல் புரியும் பணியாளர்களாக அமர்த்தியிருந்தான் என்பது சிறப்பு.

19. அதிசயம் அளிப்பதற்கு அருள் அறிந்து, நல்
புதிது அலர் கற்பகத் தருவும், பொய்இலாக்
கதிர்நெடு மணிகளும், கறவை ஆன்களும்,
நிதிகளும், முறைமுறை நின்று நீட்டவே. (3186)

(அதிசயம் - மிகுதி / வியப்பு; அலர் - மலர்; பொய்இலா - தவறாத; கதிர் - ஒளி; கறவை ஆன் - பால்தரும் பசுக்கள்; நீட்ட - கொடுக்க)

நல்ல சிறந்த அன்றலர்ந்த புதிய கற்பக மலர்களும், பொய்த்தல் இல்லாத ஒளிக்கதிர்களையுடைய பெரிய நவரத்தினங்களும், பால்கறக்கக் கூடிய பசு இனங்களும், வானுலகத்து நிதிக் குவியல்களும், இராவணனை

வியப்புக்குள்ளாக்கும் வகையில், அவன் அருள் நோக்கம் பார்த்து, வரிசை வரிசையாக தமக்குரிய இடங்களிலிருந்து அவன் கையில் வழங்கவும் - பாடல் தொடர்கிறது.

கற்பகம் என்று ஒன்று கூறியதால் அதன் இனமான தேவதருக்கள் ஐந்தையும் கொள்க. அவை சந்தானம், அரிசந்தானம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பனவாம். ''ஒருமொழி ஒழி தன் இனம் கொளற்கு உரித்தே'' என்பது தொல்காப்பியம். மணிகள் என்பது சிந்தாமணி, சூடாமணி முதலிய மணிகளைக் குறிக்கும். கறவைப் பசுக்கள் என்பது காமதேனுவையும் அதன் வழிவந்த நந்தினி முதலிய பசுக்களையும் குறிக்கும். நிதி என்பது நவநிதிகளையும் குறிக்கும. அவை சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பன. தெய்வத்தன்மை வாய்ந்த கற்பகம், சிந்தாமணி, காமதேனு, சங்கம் ஆகியவைகள் இராவணன் சபையில் அவன் அருள் நோக்கம் வேண்டிக் காத்துக் கிடந்தன. அவன் யாருக்கு என்ன கொடுக்க விழைகிறானோ அதனை அவன் வியக்கும் வண்ணம் அளிக்க ஆயத்த நிலையில் நின்றிருந்தன என்பதாம்.

20. குண்டலம் முதலிய குலம்கொள் பேரணி
மண்டிய பேரொளி வயங்கி வீசலால்,
''உண்டுகொல் இரவுஇனி உலகம் ஏழினும்?
எண்திசை மருங்கினும் இருள்இன்று'' என்னவே. (3187)

(குலம் - சிறப்பு; மண்டுதல் - நெருங்கியிருத்தல் / அடர்ந்திருத்தல்)

இராவணன் தன் காதுகளில் அணியும் குண்டலம் முதலிய சிறந்த பெரிய அணிகலன்கள் அடர்ந்த பேரொளியை வாரி எங்கும் பரப்பி வீசுவதால், ''இவ்ஈரெழு பதினான்கு உலகங்களிலும் இனிமேல் இரவு என்ற ஒரு பொழுதும் உண்டாகுமோ? எட்டுத் திசைப்பக்கங்களிலும் இருளே இல்லாது ஆயிற்றே'' என்று எல்லோரும் கூறவும் - பாடல் தொடர்கிறது.

இராவணன் தனது இருபது காதுகளிலும் அணிந்திருந்த குண்டலம் முதலிய அணிகலன்களின் ஒளிச் சிறப்புப் புலப்படுத்தப்பட்டது.

21. கங்கையே முதலிய கடவுள் கன்னியர்,
கொங்கைகள் சுமந்து, இடை கொடியின் ஒல்கிட,
செங்கையின் அரிசியும் மலரும் சிந்தினர்
மங்கலம் முறைமுறை கூறி வாழ்த்தவே. (3188)

(கடவுள் கன்னியர் - தெய்வமகளிர் / தீர்த்த கன்னியர்; ஒல்குதல் - அசைதல் / துவளுதல்; சிந்தி - தூவி; அரிசி - மஞ்சள் கலந்த மங்கல அட்சதை)

கங்கை முதலிய தீர்த்த கன்னியராகிய தெய்வ மகளிர், தமது கொங்கைகளைத் தாங்கிக் கொண்டிருப்பதால் தமது இடைகள் பூங்கொடியைப் போலத் துவளும்படி நின்று, தமது சிவந்த கைகளால் அட்சதையையும், மலர்களையும் இராவணன்மேல் தூவி, மங்கலப்பாடல்களாகிய பல்லாண்டுப் பாடல்களை மீண்டும் மீண்டும் வாழ்த்திப் பாடவும் - பாடல் தொடர்கிறது.

கங்கை முதலிய என்றதனால் மற்றைய ஏழு தெய்வத் தீர்த்தங்களான, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி ஆகியவையையும் குறித்ததாகக் கொள்ளல் வேண்டும்.

22. ஊருவில் தோன்றிய உயிர்பெய் ஓவியம்,
காரினில் செருக்கிய, கலாப மஞ்ஞைபோல்,
வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியின்,
நாரியர், அருநடம் நடிப்ப, நோக்கியே. (3189)

(ஊரு - தொடை; ஓவியம் - சித்திரப்பாவை; நாரியர் - தேவமகளிர்; கார் - கார்காலம்; செருக்குதல் - களித்துத்திரிதல்; கலாபம் - தோகை; மஞ்ஞை - மயில்; வார் - தோல்; விசித்தல் - இழுத்துக் கட்டுதல்; வார்விசிக் கருவி - மத்தளம் / தண்ணுமை; பாணி - தாளம்; நடம் - நடனம் / கூத்து; வகுத்த - வகைப்படுத்தி அமைத்த)

நாராயண முனிவரது தொடையினின்றும் தோற்றுவிக்கப்பட்டு, உயிரூட்டப்பட்ட சித்திரப்பாவை போன்றவளான ஊர்வசி என்னும் பெயருடையவளும், ஏனைய தேவமகளிர்களும், கார்காலத்தில் களித்துத் திரியும் தோகைகளையுடைய மயிலினைப் போல, தோலினால் இழுத்துக் கட்டப்பட்ட மத்தளம் போன்ற இசைக்கருவிகளால் வகுத்து அமைக்கப் பட்ட தாள ஒழுங்கு தவறாமல், மிக அருமையான நடனம் ஆடிக் கொண்டிருக்கவும், அதனை இராவணன் மகிழ்ச்சியுடன் கண்டு கொண்டிருக்கவும் - பாடல் தொடர்கிறது.

நரன், நாரணன் என்று இரண்டு முனிவர்கள் பத்ரிகாசிரமத்தில் கடுந்தவம் இயற்றி வந்தனர். வழக்கம் போல தேவேந்திரன் அது பொறுக்காது, தேவலோகத்து அரம்பையர்களை ஏவி அவர்கள் தவத்தைக் கலைக்க முயற்சித்தான். அது கண்ட இரு முனிவர்களில் ஒரு முனிவரான நாரணன் என்பவர், அவர்களை அவமானப்படுத்தக் கருதி, தனது தவபலத்தால் தனது தொடையிலிருந்து மிக்க அழகு பொருந்திய ஒரு பெண்ணைத் தோற்றுவித்தார். அவள் பேரழகினைக் கண்ட அரம்பையர் மிக்க வெட்கமுற்று, தங்கள் செயலுக்கு வருந்தி, அவளையே தேவலோகத்து அரம்பையர்க்குத் தலைவியாக ஏற்றுக் கொண்டு வானுலகு சென்றனர் என்பது புராணக்கதை. நாரண முனிவனின் தொடையில் தோன்றியதால் அந்தப் பெண்ணுக்கு ஊர்வசி என்பது பெயர். ஊரு என்ற சொல்லுக்குத் தொடை என்பது பொருள். இவள்தான் தோகை

விரித்தாடும் ஏனைய அரம்பையர்க்குத் தலைவி. கரிய இராவணனுக்குக் கரியமேகமும், ஆடல்வல்ல அரம்பையருக்கு மயிலும் உவமைகள்.

23. இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும், தன்
அருந்தவம் உடைமையின், அளவுஇல் ஆற்றலின்
பொருந்திய இராவணன், புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே. (3190)

(வெள்ளம் - பெருக்கு; கார்முகம் - வில்)

விண், மண், பாதலம் என்ற மூன்று உலகங்களையும், தான் பிறர் செய்தற்கரிய தவவலிமை கொண்டிருப்பதாலும், அதனால் பெற்ற அளவற்ற வல்லமையினாலும், தன் அரசாட்சிக்கு உட்படுத்திக் கொண்ட இராவணன், புருவமாகிய வில்லையும், கரிய, பெரிய கண்களையும் உடைய இலங்கை நகர மகளிரின் கண்கள் என்னும் வெள்ளப் பெருக்கில் அடைபட்டு சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.

இராவணன் செய்த தவம் சாதாரணமானதல்ல. தனது ஒவ்வொரு தலையாகக் கொய்து போட்டுக் கொண்டே கோகர்ணத்தில் தவம் இயற்றியவன். எனவே ''தன் அருந்தவம் உடைமையின்'' என்றார். அதனால்தான் அவனுக்கு அளவில்லாத ஆற்றல் கைவரப் பெற்றன. ''கடுந்தவங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே'' என்பது மகளிரெல்லாம் விரும்பி நோக்க வீற்றிருந்தான் எனப் பொருள்படும்.

மேற்கண்ட 23 பாடல்களாலும் இராவணன் அரசவைக் கோலம் விரித்துரைக்கப்பட்டது என்க. மண்டபம் பொலிய, மகுட நிரை வயங்க, குண்டலங்கள் வயங்க, ஆரம்குலவ, பொலன் கழல் ஆர்ப்ப, நறுமலர்க் குப்பை துன்ன, விஞ்சைவேந்தர்கள் கரதலம் சுமப்ப, சித்தர் சென்னி தாழ, கின்னரர் இறைஞ்ச, உரகர்கள் மனம் உலைய, தும்புரு இசையின் ஏத்த, நாரதன் தேமறை செவியின் வயங்க, வருணன் கற்பக மலர்கள் சிந்த, சமீரணன்துடைப்ப, வியாழனும் வெள்ளியும் இருக்கை ஈய, காலன் நன்று நாள் கடிகைகூற, எரிக்கடவுள் விளக்கம் மாட்ட, கற்பகத்தரு, சிந்தாமணி, காமதேனு, சங்கநிதி முதலியவை முறை முறை நீட்ட, குண்டலம் வயங்கி வீச; கங்கையே முதலிய கடவுள் கன்னியர் மங்கல முறை மொழி கூறி வாழ்த்த, நாரியர் அருநடம் நடிப்ப, கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே இருந்தனன் என்று முடிவு கொள்ளும்.

24. சூர்ப்பணகை இலங்கையின் வடக்கு வாயில் வந்து சேருதல்

தங்கையும், அவ்வழித் தலையில் தாங்கிய
செங்கையள், சோரியின் தாரை சோர்ந்து இழி
கொங்கையள்; மூக்கிலள்; குழைஇல் காதிலள்;
மங்குலின் ஒலிபடத் திறந்த வாயினள். (3191)

(சோரி - இரத்தம்; தாரை - ஒழுக்கு; சேர்ந்து - ஒன்றுபட்டு; இழிதல் - சிந்துதல்; குழைஇல் - குண்டலமற்ற; மங்குல் - மேகம்; வழி - பொழுது) (குளகப்பாடல்)

அவ்வாறு இராவணன் வீற்றிருந்த பொழுது, அவனுடைய தங்கையான சூர்ப்பணகையும், தனது சிவந்த கைகளைத் தலையில் பிடித்துக் கொண்டு, இரத்த ஒழுக்கு ஒன்று பட்டு வழிகின்ற கொங்கைகளையுடையவளாய், மூக்கும், குண்டலம் அற்ற காதும் இல்லாதவளாய் மேகத்தின் முழக்கம் அற்றுப் போகும்படி திறந்த வாயை உடையவளாய் - பாடல் தொடர்கிறது.

அவளது கொங்கைகளிலிருந்தும், மூக்கிருந்த இடத்திலிருந்தும், காதுகள் இருந்த இடத்தில் இருந்தும் இரத்தம் ஒழுகுகிறது. அந்த நிலையில் தலைமேல் தாங்கிய இரத்தம் தோய்ந்த கைகளுடனும், திறந்த வாயுடனும் அங்கு வந்து சேர்ந்தாள் என்று அடுத்த பாடலில் முடிவு பெறும். இலக்குவன் அவளது கொங்கைகள், மூக்கு, செவிகள் ஆகியவற்றை அறுத்தான் என்பதாம்.

25. முடையுடை வாயினால் முறையிட்டு ஆர்த்துஎழு
கடையுகக் கடல்ஒலி காட்டக் காந்துவாள்,
குடதிசைச் செக்கரின் சேந்த கூந்தலாள்,
வடதிசைவாயிலின் வந்து தோன்றினாள். (3192)

(முடை - புலால் நாற்றம்; கடையுகம் - ஊழிக்காலம்; காந்துதல் - கொதித்தல்; குடதிசை - மேற்குத்திசை; செக்கர் - செவ்வானம்; சேந்த - சிவந்த)

மேற்குத் திசையில் தோன்றும் செவ்வானம் போன்ற சிவந்த செம்பட்டை முடியினையுடைய கூந்தலை உடையவளும், புலால் நாற்றம் வீசும் வாயினையுடையவளுமான சூர்ப்பணகை, தனது குறையை, யுக முடிவுக்காலத்தில் பொங்கி எழும் கடலின் பேரொலி போலக் கூவிக் கொண்டு, கொதித்த உள்ளத்துடன் வடக்கு வாசலில் வந்து சேர்ந்தாள்.

26. சூர்ப்பணகையின் தோற்றம் கண்ட இலங்கை மக்கள் துயரம் [19 பாடல்கள்]

தோன்றலும், தொல்நகர் அரக்கர் தோகையர்
ஏன்று எதிர், வயிறு அலைத்து, இரங்கி ஏங்கினார்;
''மூன்று உலகு உடையவன் தங்கை, மூக்கு இலள்,
தான் தனியவள், வரத் தரிக்க வல்லரோ?'' (3193)

(தரித்தல் - பொறுத்திருத்தல் / சகித்துக் கொள்ளுதல்; தொல் - பழமையான; தோகையர் - மகளிர்; அலைத்தல் - அடித்துக் கொள்ளுதல்; ஏங்குதல் - அழுதல்; ஏன்று - எதிர் கொண்டு)

இவ்வாறு சூர்ப்பணகை வடக்கு வாசலில் தோன்றியதும் அந்தத் தொன்மையான இலங்கை நகர அரக்க மகளிர், எதிர் கொண்டு சென்று, தங்கள் வயிற்றிலடித்துக் கொண்டு, வருந்தி அழுதார்கள். மூன்று உலகங்களையும் தன் ஆளுகைக்கு உரியவனான இராவணனின் தங்கையாகிய சூர்ப்பணகை இவ்வாறு மூக்கு இல்லாதவளாகி, தனியாக வேறு துணையின்றி அனாதையாக இந்நகருக்குள் வந்து நிற்பதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியுமோ? முடியாது என்றவாறு.

தோகையர் என்பது பொதுவாக மயில் போன்ற சாயலை உடைய பெண்களைக் குறிக்கும். என்றாலும் இங்கு அரக்க மகளிரைக் குறித்து நின்றது என்க. பெருந்துயர் உறும்பொழுது பெண்கள் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுவது இயல்பு.

27. பொருக்கென நோக்கினர்; புகல்வது ஓர்கிலர்;
அரக்கரும் இரைத்தனர்; அசனியாம் எனக்
கரத்தொடு கரங்கள் புடைத்து, கண்களில்
நெருப்பு எழ விழித்து, வாய் மடித்து நிற்கின்றார். (3194)

(பொருக்கென - விரைந்து / திடுக்கிட்டு; ஓர்தல் - அறிதல்; இரைத்தல் - ஆரவாரித்தல்; அசனி - இடி / இடி முழக்கம்; புடைத்து - தாக்கி / மோதி)

இலங்கை நகர ஆடவ அரக்கர்களும், திகைத்துப் போய் விரைந்து வந்து பார்த்தனர்; என்ன சொல்லுவது என்று அறியாதவர்களாய்த் திகைத்தனர்; இடிமுழக்கம் போல் ஆரவாரித்தனர்; தங்கள் கைகள் ஒன்றோடொன்று மோதுமாறு அடித்துக் கொண்டனர்; கண்களில் தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்தார்கள்; வாயில் இதழ்களை மடித்தபடியே செயலற்று நிற்கின்றார்கள்.

இரைத்தலும், கரத்தொடு கரம் புடைத்தலும், கண்களில் நெருப்பு எழ விழித்தலும், வாய் மடித்து நிற்றலும் வெகுளியின் மெய்ப்பாடுகள். முன்பாடலில் பெண்கள் வயிறலைத்து இரங்கி ஏங்கினர் என்று கூறியவர் இங்கு ஆடவரும் வெகுண்டனர் என்றார் என்க.

28. ''இந்திரன் மேலதோ? உலகம் ஈன்ற பேர்
அந்தணன் மேலதோ? ஆழியானதோ?
சந்திரமௌலிபால் தங்குமேகொலோ?
அந்தரம்'' என்று, நின்று அழல்கின்றார் சிலர். (3195)

(அந்தரம் - தீமை / குற்றம் / ஆபத்து; மேலது - சேர்வது / சார்தல்; ஈன்ற - படைத்த / தோற்றுவித்த; அந்தணன் - பெரியோன் / பிரமன்; ஆழி - சக்கரப்படை / திருப்பாற்கடல்; மௌலி - முடி; அழல்தல் - கொதித்தல்; பேர் - பெருமை)

அவர்களில் சில அரக்கர்கள், ''சூர்ப்பணகை கொங்கை, மூக்கு, காது ஆகியவற்றை அரிந்த குற்றம் இந்திரனால் செய்யப்பட்டதோ? அல்லது

இவ்வுலகத்தைத் தோற்றுவித்த பெருமை வாய்ந்த பெரியோனான பிரம தேவனால் செய்யப்பட்டதோ? அல்லது சக்கரப் படையை உடையவனும், திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருப்பவனுமான திருமாலால் செய்யப் பட்டதோ? அல்லது பிறைச்சந்திரனைத் தனது முடியில் தரித்திருக்கும் சிவபெருமானால் செய்யப்பட்டதோ?'' என்று மனம் கொதித்துக் கூறினார்கள்.

இந்திரன், பிரமன், திருமால், சிவபெருமான் ஆகியவர்களைத் தவிர வேறு ஒருவராலும் இத்தகைய குற்றத்தைச் செய்திருக்க முடியாது என்று நன்கு அறிந்தவர்கள் அரக்கர்கள். எனவே இவர்களில் யாரோ ஒருவர்தான் இதனைச் செய்திருக்க வேண்டும் என்று வெகுண்டார்கள்.

29. ''செப்புறற்கு உரியவர் தெவ்வர் யார் உளர்?
முப்புறத்து உலகமும் அடங்க மூடிய
இப்புறத்து அண்டத்தோர்க்கு இயைவது அன்று இது;
அப்புறத்து அண்டத்தோர் யார்?'' என்றார் சிலர். (3196)

(செப்புறற்கு - குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த; தெவ்வர் - பகைவர்; மூடிய - உள்ளடக்கிய; அப்புறத்து அண்டம் - பகிரண்டம் / வெளி அண்டம்; இயைவது - சாத்தியமாவது)

''இந்தச் செயலைச் செய்வதற்கு வல்லமை உள்ளவர்கள் என்று குறிப்பிட்டுச்சொல்லத்தக்க பகைவர்கள் இராவணனுக்கு யார் இருக்கிறார் கள்? ஒருவரும் இல்லையே; இந்த மூன்று உலகங்கள் முழுவதும் உள்ளடக்கிய இவ்வண்ட கோளகைக்குள் உள் இருப்பவர்களால் இந்தச் செயலைச் செய்யமுடியாது. என்றால் வெளி அண்டத்திலுள்ளவர்களில் யார் இந்தச் செயலைச் செய்திருப்பார்கள்?'' என்று சில அரக்கர்கள் கூறினார்கள். அப்புறத்து அண்டம் வெளி அண்டம் பகிரண்டம் என்பர்.

30. ''என்னையே? ''இராவணன் தங்கை'' என்றபின்,
''அன்னையே?'' என்று அடிவணங்கல் அன்றியே,
உன்னவே எண்ணுமோ ஒருவரால்? இவள்
தன்னையே அரிந்தனள் தான்'' என்றார் சிலர். (3197)

(உன்னுதல் - நினைத்தல்; ஒண்ணுதல் - இயலுதல்)

மற்றும் சில அரக்கர்கள், ''என்ன வியப்பு இது; ''நான் இராவணனின் தங்கை'' என்று கூறிய பின்னும், ''தாயே'' என்று கூறி அவள் அடிகளில் விழுந்து வணங்குவார்களே அன்றி, யாராலும் இவ்வாறு செய்வதற்கு நினைப்பதற்கும் இயலுமோ? முடியாது; எனவே, இவள்தன்னைத்தானே, தன் காது மூக்கு இவைகளை அரிந்து கொண்டிருக்கவேண்டும்'' என்று சந்தேகித்தனர்.

இவள் இராவணன் தங்கை என்று அறிந்த பிறகு ஒருவருக்கும் இத்தகைய காரியத்தைச் செய்யும் துணிவு வந்திருக்காது. எனவே இவள்

தன்னைத் தானே உறுப்பைக் குறைத்துக் கொண்டிருப்பாளோ? என்று ஐயமுற்றனர் சில அரக்கர்கள் என்பதாம்.

31. ''போர் இலான் புரந்தரன் ஏவல் பூண்டனன்;
ஆர் உலாம் நேமியான், ஆற்றல் தோற்றுப்போய்
நீரினான்; நெருப்பினான் பொருப்பினான்; இனி
ஆர்கொலாம் ஈது?'' என அறைகின்றார் சிலர். (3198)

(ஏவல் - கட்டளை; பூணுதல் - செய்தல்; புரந்தரன் - இந்திரன்; ஆர் - கூர்மை; நீர் - கடல்; பொருப்பு - மலை)

சில அரக்கர்கள், ''இந்திரனோ, இராவணனோடு போர் செய்ய இயலாது, நம் தலைவன் இடுகின்ற கட்டளைகளைத் தலைமேற் கொண்டு செய்யும் ஏவலாளனாய் இருக்கின்றான்; கூர்மையான, ஆரங்களை உடைய சக்கரப்படையை உடைய திருமாலோ, நம் தலைவன் இராவணனிடம் வலியழிந்து திருப்பாற்கடலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான்; நெருப்பைக் கையில் கொண்டவனான சிவபெருமானோ, இராவணனிடம் தோற்றுப் போய் கயிலயங்கிரியில் தன்னை ஒளித்துக் கொண்டான். பின்னர், இந்தச் செயலைச் செய்தவர் வேறு யாராய் இருக்க முடியும்'' என்று கேட்டனர்.

புரந்தரன் இராவணனுக்குக் குற்றேவல் புரிபவன் என்பது பல இடங்களிலும் கூறப்படுவது காண்க. நெருப்பினான் என்று சிவபெருமானைக் குறிப்பது அவன் நெருப்புப் போன்ற நெற்றிக் கண்களை உடையவன் என்பதாலும், நெருப்பு வடிவாய் நின்றவன் என்பதாலும், நெருப்பைக் கையில் ஏந்தி இருப்பதாலும் என்க. ''எரிபோல் மேனிப்பிரான்'' என்பது தேவாரம். இயற்கையிலேயே திருமால் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பதையும், சிவபெருமான் கயிலயங்கிரியில் வாழ்வதையும், அவர்கள் இராவணனுக்குத் தோற்றுப் போய் அஞ்சித்தான் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவது இராவணனுக்குக் பெருமை சேர்க்கக் கருதி என்க. முத்தேவர்களுள் பிரமனை இங்கு கூறாதது நோக்கத் தக்கது. காரணம் பிரமன் பொதுவாக யாருடனும் போரிடுவதில்லை என்பதாலும் இராவண குல முதல்வன், என்பதாலும் என்க.

32. ''சொல்பிறந்தார்க்கு இது துணிய ஒண்ணுமோ?
''இல்பிறந்தார் தமக்கு இயைவ செய்திலள்;
கற்பு இறந்தாள்''எனக், கரன் கொலாம் இவள்
பொற்பு இறந்த ஆக்கினன் புகன்று'' என்றார் சிலர். (3199)

(சொல் - புகழ்; பிறந்தார் - உண்டாக்கப் பெற்ற; இறந்தாள் - அழிந்தாள்; பொற்பு - அழகு; இல் - உயர்குடிப்பிறப்பு)

புகழ்பெற்ற நற்குடியில் பிறந்தவர்களால் இத்தகைய செயலைச் செய்ய முடியுமோ? முடியாது. ''உயர்ந்த குடியில் பிறந்த இவள், அக்குடிப்

பிறப்பிற்குரிய நற்செயல்களைச் செய்யாது, கற்பையும் இழந்தவளாகி விட்டாள்'' என்று கருதி, இவளுக்குக் காவலாக இருந்த கரனே, இவளுடைய அழகு அழிந்ததாகச் செய்தான் போலும்'', என்று சில அரக்கர்கள் கருதலானார்கள்.

இவள் நடத்தைக் குறைவைக் கண்டு, கரனே இத்தகைய தண்டனை வழங்கியிருக்கக் கூடும் என்று சில அரக்கர்கள் கருதினர் என்பதாம்.

33. ''தத்து உறு சிந்தையர், தளரும் தேவர், இப்
பித்து உற வல்லரோ? பிழைப்பு இல் சூழ்ச்சியர்,
முத்திறத்து உலகையும் முடிக்க எண்ணுவார்,
இத்திறம் புணர்த்தனர்'' என்கின்றார் சிலர். (3200)

(தத்துறுதல் - கலக்கமடைதல்; சிந்தை - மனம்; தளர்தல் - சோர்வுறுதல்; பித்து - பைத்தியம்; பிழைப்புஇல் - தவறுபடாத; புணர்த்தல் - செய்தல்; சூழ்ச்சி - தந்திரம்)

''மனம் மிகக் கலங்கிச் சோர்வுற்றிருக்கும் ஏனையத் தேவர்கள் இத்தகைய பைத்தியக்காரத்தனத்தைச் செய்யவல்லவர்கள் அல்லர்; எனவே வேறு யாரோ தவறு படாத தந்திரத்தினால் இந்த மூன்று உலகங்களையும் ஒருசேர அழிக்க எண்ணுகின்றவர்கள்தான் இத்தகைய செயலைச் செய்திருக்கவேண்டும்'' என்று சில அரக்கர்கள் கூறுவாராயினர்.

முன் பாடலில், இந்திரன், பிரமன், சிவபெருமான், இப்புறத்து அண்டத்தோர், தேவர்கள் இவர்கள் யாராலும் செய்யப்பட்டிருக்க முடியாது என்று தீர்மானித்தவர்கள், பின்னர் தானே செய்து கொண்டிருப் பாளோ என்றும், கரன் செய்திருப்பானோ என்றும் சந்தேகித்தனர். இப்பொழுது இவரையெல்லாம் விடுத்து, இந்த உலகத்தையே அழிக்க வேண்டும் எனத் தந்திரம் படைத்த யாரோதான் செய்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகின்றனர் என்பதாம். ஒவ்வொரு பாடலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகக் கொண்டு பொருள் கூறுதல் சாலப் பொருந்தும். பைத்தியம் பிடித்த யாரோ பின் விளைவுகளை அறியாதவர்களாய் இதனைச் செய்திருத்தல் கூடும் என்பதும் ஒன்று.

34. ''இனி ஒரு கற்பம் உண்டு என்னின் அன்றியே,
வனை கழல் வயங்கு வாள் வீரர் வல்லரோ?
பனி வரு கானிடைப் பழிப்புஇல் நோன்பு உடை
முனிவரர் வெகுளியின் முடிபு'' என்றார் சிலர். (3201)

(புனை - கட்டிய; வயங்கு - விளங்குகின்ற; பனி - நடுக்கம் / குளிர்ச்சி; வரு - விளைக்கின்ற; பழிப்புஇல் - குற்றமற்ற; நோன்பு - விரதஒழுக்கம்; வெகுளி - சினம்; கற்பம் - காலத்தின் ஒருபேர்எல்லை / பிரமனின் வாழ்நாள் அளவு; முனிவரர் - முனிவர்களுள் உயர்ந்தோர்; முடிவு - பயன் / விளைவு)

''இனிமேல் வருகின்ற ஒரு யுகத்தில் இது நடக்கலாமே தவிர, இராவணன் ஆளுகின்ற இந்த யுகத்தில், அலங்கரிக்கப்பட்ட வீரக்கழல் களையும், விளங்குகின்ற வாட்படையையும் உடைய வீரர்கள் யாராலாவது செய்யக் கூடிய செயலா இது? வீரர்கள் யாரும் செய்திருக்க முடியாது. குளிர்ச்சி பொருந்தியதும், அச்சம் ஊட்டுவதுமான கானகத்தில் வாழ்கின்ற, நிந்தனைக்கு இடமில்லாத, குற்றமில்லாத விரத ஒழுக்கத்தை மேற்கொண்டிருக்கும் முனிவர்களுள் உயர்ந்தோர் சிலரின் கோபத்தினால் உண்டான விளைவுதான் இது'' என்று சில அரக்கர்கள் கூறினார்கள்.

இந்த யுகத்தில் இராவணனுக்கு எதிராகச் செயலாற்றும் ஆண்மை கொண்ட வீரர் ஒருவரும் இல்லை என்றனர் என்பதாம். கற்பம் என்பது ஒரு யுகாந்த காலம். பிரமனின் வாழ்நாள் ஒரு யுகம் என்பர். முனிவர்களின் கோபம் காலத்தைக் கடந்தது. எனவே முனிவர்களைக் கூறினர் என்பதாம். ''எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார் பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார்'' என்பது குறள் 896.

35. அரக்கியர் துயரம்

கரைஅறு திருநகர்க் கருங்கண் நங்கைமார்
நிரைவளைத் தளிர்க்கரம் நெரித்து நோக்கினர்,
பிரைஉறுபால் என, நிலையில் பின்றிய
உரையினர், ஒருவர்முன் ஒருவர் முந்தினர். (3202)

(கரையறு - எல்லையற்ற; நிரை - வரிசை; பின்றுதல் - வேறுபடுதல்; உரை - பேச்சு; நெரித்தல் - அழுத்துதல் / பிசைதல்)

எல்லையற்ற செல்வம் மிக்க இலங்கை மாநகரத்திலுள்ள கரிய கண்களையுடைய அரக்க மகளிர், தங்களது வரிசையாக வளையலணிந்த, தளிர் போன்ற கைகளைப் பிசைந்து கொண்டு சூர்ப்பணகையை நோக்குதற்காக, பிறை ஊற்றிய பால் போலத் தங்கள் நிலையின் நின்று மாறுபட்டுப் பேசுகின்றவர்களாகி, ஒருவரையொருவர் மோதிக் கொண்டு முந்திச் செல்வாராயினர்.

அச்சம் உடைய பெண்கள், தங்கள் கைகளை நெரித்துக் கொள்வது இயல்பு. பிரை ஊற்றப் பெற்ற பால் தன் நிலை திரிந்து மாறுபடும்; அதுபோல இப்பெண்கள்தாங்கள் இயல்பாய்ப் பேசும் பேச்சுகளினின்றும் மாறுபட்டுப் பிதற்றிக் கொண்டு ஓடினார்கள் என்பதாம்.

36. முழவினில், வீணையில், முரல் நல் யாழினில்,
தழுவிய குழலினில், சங்கில், தாரையில்
எழுகுரல் இன்றியே, என்றும் இல்லது ஓர்
அழுகுரல் பிறந்தது அவ்விலங்கைக்கு அன்று அரோ! (3203)

(முழவு - மத்தளம்; முரலுதல் - ஓசை எழுப்புதல்; தழுவிய - கூடிய; தாரை - எக்காளம்; குரல் - மங்கல ஒலி / ஓசை; என்றும் - ஒரு நாளும்; ஓர் - ஒப்பற்ற / வித்தியாசமான; பிறத்தல் - தோன்றுதல் / கேட்டல்)

மத்தளம், வீணை, இனிய ஓசை எழுப்புகின்ற யாழ், அதனைச் சார்ந்த தொளை இசைக் கருவிகளான வேய்ங்குழல், சங்கு, எக்காளம், ஆகிய மங்கல வாத்தியங்களிலிருந்து எழுகின்ற மங்கல ஒலி அல்லாமல், இதுவரை ஒருநாளும் கேட்டறியாத ஒரு வித்தியாசமான அமங்கலமான அழுகை ஒலி அவ்விலங்கை மாநகரில் அன்று கேட்கலாயிற்று.

வீணையையும், யாழையும் தனித்தனியாகக் கூறியதால் இரண்டும் வெவ்வேறானவை என்பது அறிக. எப்பொழுதும் மங்கல ஒலியே கேட்கின்ற இலங்கை மாநகரத்தில் இன்று சூர்ப்பணகை வரவால் அமங்கல ஒலி கேட்கத் தொடங்கலாயிற்று என்பதனால் தீ நிமித்தம் குறிப்பால் உணர்த்தியவாறு. பின்னர் அனுமன் கூற்றாக ''களிக்கின்றார் அலால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்'' என்றதும் இங்கு நினைவு கூரத் தக்கது.

37. கள்ளுடை வள்ளமும், களித்த தும்பியும்,
உள்ளமும் ஒரு வழிக்கிடக்க ஓடினார்,
வெள்ளமும் நாண்உற, விரிந்த கண்ணினார்,
தள்ளுறும் மருங்கினர், தழீஇக் கொண்டு ஏகினார். (3204)

(வெள்ளம் - கடல் / பிரவாகம்; தள்ளுதல் - ஒசிதல் / வளைதல் / அசைதல் / துவள்தல்; மருங்கு - இடை; வள்ளம் - கிண்ணம்; களித்த - செருக்குற்ற; தும்பி - வண்டுகள்; ஏங்குதல் - அழுதல்)

வெள்ளம் மிக்க கடலும் வெட்கமடையும்படி பெருகுகின்ற நீரையுடைய அகன்று விரிந்த பெரிய கண்களையுடைய அரக்கியர், தங்களது கள் நிரம்பிய கிண்ணத்தையும், கள்ளைப் பருகிச் செருக் குற்றிருந்த வண்டுகளையும், கள்ளை விரும்பிய தங்கள் மனத்தையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, தங்கள் துவள்கின்ற இடையோடு ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு சூர்ப்பணகை நின்றிருந்த இடத்திற்கு ஓடிச் சென்றனர்.

அவர்கள் கள்ளுண்ணப் புகுந்த நேரத்தில் வெளியிலிருந்து சூர்ப்பணகை எழுப்பிய கூக்குரல் கேட்டது. எனவே, அந்தக் கிண்ணத்தையும், வண்டுகளையும், தங்கள் மனத்தையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் சூர்ப்பணகையைக் காண விரைந்து ஓடினர் என்பதாம். ஒருவர் துக்கத்தைப் பரிமாறிக் கொள்ளுதலில் ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்ளுதல் ஒருவகை என்பதை உணர்க.

38. நாந்தக உழவர் மேல் நாட்டும் தண்டத்தர்,
காந்திய மனத்தினர், புலவி கைம்மிகச்

சேந்த கண் அதிகமும் சிவந்து, நீர்உக,
வேந்தனுக்கு இளையவள் தாளில் வீழ்ந்தனர். (3205)

(புலவி - ஊடல் / பிணக்கு; கைம்மிகுதல் - எல்லைகடத்தல் / அதிகப் படுதல்; நாந்தகம் வாள்; நாட்டுதல் - உறுதி செய்தல்; தண்டம் - தண்டனை; காந்துதல் - சினம் மிகுதல் / வெதும்புதல்; சேந்த - சிவந்த)

சில அரக்கர் மகளிர் வாட்படையை உடைய அரக்கர்களாகிய தங்கள் கணவரிடம் கொண்ட ஊடல் அதிகமாக, அதனால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை தரவேண்டும் என்று விரும்பி அதை உறுதி செயதவர்களாய் மிகுந்த சினம் கொண்டதால் சிவந்த கண்களைக் கொண்டிருந்தபோது, புறத்தே தங்கள் அரசனான இராவணனின் தங்கையான சூர்ப்பணகை கதறிய கூக்குரல் கேட்டு, அதனால் தங்கள் கண்கள் இன்னும் அதிகமாகச் சிவக்கப் பெற்று, அதனின்றும் கண்ணீர் பெருக, தங்கள் ஊடலைக் கைவிட்டு அவளிடம் ஓடிச்சென்று அவள்கால்களில் விழுந்து வருந்தினர்.

நாந்தக உழவர் என்பது வாட்படையை உடைய அரக்கர்களாகிய தங்கள் கணவர்களைக் குறித்தது. வில்லேருழவர், சொல்லேருழவர் என்பதைப் போல இது ஒரு புதுப் பயன்பாடு. தம் கணவர்களுக்குத் தண்டனை தர விரும்பியவர்களுக்கு, இப்போது வேறொரு தண்டனை கிடைத்து வருந்தினர் என்று கூறிய நயம் நோக்குக.

39. பொன்தலை மரகதப் பூகம் நேர்வுறச்
சுற்றிய மணிவடம் தூங்கும்ஊசலின்
முற்றிய ஆடலின் முனிவுற்று ஏங்கினார்
சிற்றிடை அலமரத் தெருவு சேர்கின்றார். (3206)

(பொன் - அழகு; தலை - உச்சி; மரகதம் - பசுமை நிறம்; பூகம் - கமுகு; நேர்உறுதல் - பொருந்துதல்; தூங்குதல் - தொங்குதல்; ஊசல் - ஊஞ்சல்; முற்றிய - நிரம்பிய; முனிவுற்று - வெறுத்து; அலமருதல் - வருந்துதல்; தெருவு - தெரு; வடம் - கயிறு)

செம்பொன்போன்று அழகிய உச்சியையுடைய, மரகதம் போல் பச்சை நிறமுள்ள, பாக்குமரத்தில் பொருந்தக் கட்டப்பட்ட அழகிய இரத்தினங்கள் பதிக்கப்பட்ட கயிறுகள் தொங்குகின்ற ஊஞ்சலில், மிக்க மகிழ்ச்சியாக ஆடிக் கொண்டிருந்த வேறுசில அரக்க மகளிர், வாசற்புறத்தே சூர்ப்பணகை கூக்குரலிடும் ஓசை கேட்டு, அவ்வாடலில் வெறுப்புற்று, அச்சம் கொண்ட தமது சிறிய நுட்பமான இடைகள் வருந்தும்படி ஓடிவந்து தெருவினை அடைந்தார்கள்.

பாக்குப் பழம் பொன்னிறமானதென்றும், அம்மரத்தின் நிறம் மரகதம் போல் பச்சை நிறமானதென்றும் ஊஞ்சல் கட்டப்பட்ட கயிறுவடம் இரத்தினங்களால் ஆனது என்றும் கூறப்பட்டது. மகிழ்ச்சியால் ஊஞ்சல் ஆடியவர்கள், அச்சத்தால் ஓடிவந்து, சிற்றிடை நோவ வருந்தினர் என்று கூறிய நயமும் நோக்குக.

40. எழுஎன, மலைஎன எழுந்த தோள்களைத்
தழுவிய வளைத் தளிர் நெகிழ, தாமரை
முழுமுகத்து இருகயல், முத்தின் ஆலிகள்
பொழிதர, சிலர் உளம் பொருமி விம்முவார். (3207)

(எழு -தூண்; முழு - சிறந்த; ஆலி - நீர்த்துளி; பொழிதரல் - சிந்துதல்; பொருமுதல் - அஞ்சுதல்; விம்முதல் - வருந்துதல்; எழுந்த - பூரித்த / ஓங்கிய / உயர்ந்த)

வேறுசில அரக்க மகளிர், தங்கள் கணவர்களுடைய தூண்போன்றும், மலைபோன்றும் உயாந்து விளங்கிய தோள்களைத் தழுவிக் கொண்டிருந்த தங்கள் வளையல்கள் அணிந்த, தளிர் போன்ற கைகள் நெகிழவும், தங்கள் தாமரை போன்ற சிவந்த முகத்தில் உள்ள இரண்டு கயல்மீன்கள் போன்ற கண்கள், முத்துப் போன்ற நீர்த்துளிகளைச் சிந்தவும், சூர்ப்பணகையின் கூக்குரலைக் கேட்டு உள்ளம் வருந்தி அழலாயினர்.

வளைத்தளிர் என்றது கைகளையும், இருகயல் என்றது இரண்டு கண்களையும், முத்தின் ஆலி என்றது கண்ணீர்த்துளிகளையும் குறித்து நின்றன. கணவரை மகிழ்ச்சியால் அணைத்திருந்த நிலை மாறி, சூர்ப்பணகை கூக்குரலால் அச்சம் கொண்டு வருந்தி அழும் நிலைக்கு ஆளாயினர் என்று கூறிய நயம் நோக்குக. காதலின்பத்தைச் சோகமும் அச்சமும் வென்றனஎன்பதாம். இப்பொழுது சூர்ப்பணகை வடக்கு வாசல் வழியாக ஊருக்குள் வந்துவிட்டாள் என்பது பெறப்படுகிறது.

41. ''நெய்ந்நிலைய வேல் அரசன், நேருநரை இல்லான்,
இந்நிலை உணர்ந்த பொழுது, எந்நிலையன்?'' என்னா,
மைந்நிலை நெடுங்கண் மழை வான் நிலையது ஆகப்
பொய்ந்நிலை மருங்கினர் புலம்பினர், புரண்டார். (3208)

(பொய் - இல்லை; மருங்கு - இடை; நேருநர் - ஒப்பானவர் / எதிர்ப்பவர் / பகைவர்; புலம்புதல் - அழுதல்)

''நெய் பூசப்பெற்ற வேற்படையை உடையவனும், தனக்கு ஒப்பாரும், தன்னைஎதிர்ப்பவரும்யாரும்இல்லாதவனுமானநம்அரசன்இராவணன், சூர்ப்பணகைக்கு நேர்ந்த இந்த நிலையை அறியும் பொழுது எந்த நிலை அடைவான்?'' என்று தன் மனத்துள் எணணி, இடையே இல்லை எனச் சொல்லத் தக்க சில அரக்க மகளிர் மை தீட்டப் பெற்று அழகு விளங்கும் பெரிய கண்கள், வானிலுள்ள மேகம் மழை பொழிவது போல அழுது, புரளலாயினர்.

வேற்படைகளில், துருப்பிடிக்காதவாறும், பகைவரின் உடலின் மாமிசத் துண்டுகள் தங்காதவாறும் அவ்வப்போது நெய் பூசி வைத்தல் மரபு. அதனை ''நெய்ந்நிலையவேல்'' என்று குறித்தார். நேருநர் என்பது ஒப்பார் என்ற பொருளிலும், எதிர்வார் என்ற பொருளிலும் கொள்ளப் பட்டது. பொய்ந்நிலை மருங்குல் என்பது இடையே இல்லை என்று

சொல்லும்படியாக நுண்ணிய இடைய உடையவர் என்பதைக் குறித்து நின்றது.

42. மனம் தலை வரும் கனவின் இன்சுவை மறந்தார்;
கனம் தலை வரும் குழல் சரிந்து, கலை சோர,
நனம் தலைய கொங்கைகள் ததும்பிட, நடந்தார்,
அனந்தல் இள மங்கையர், அழுங்கி அயர்கின்றார். (3209)

(அனந்தல் - உறக்கம் / மயக்கம்; தலைவருதல் - தோன்றுதல்; சுவை - இன்பம்; கனம் - பாரம் / சுமை / மேகம்; சரிதல் - அவிழ்தல்; கலை - ஆடை; சோர்தல் - நெகிழ்தல்; நனம் - அடிப்பாகம்; தலைய - பரந்த; ததும்புதல் - குலுங்குதல் / அசைதல்; அழுங்குதல் - வருந்துதல்; அயர்தல் - சோர்தல் / தளர்வுறுதல்; நனந்தலை - அகன்ற இடம் என்பதுமாம்)

உறக்க மயக்கத்தில் இருந்த சில இளமையான அரக்க மகளிர், சூர்ப்பணகையின் கதறல் கேட்டு, தம் மனத்தின்கண் தோன்றிய இனிய கனவுகளின் மகிழ்ச்சிச் சுவையையும் மறந்தவராகி, மேகம் போன்றதும், தமக்குச் சுமையானதுமான தங்கள் கூந்தல் அவிழ்ந்து விழவும், ஆடைகள் கலைந்து புரளவும், விரிந்து அகன்ற கொங்கைகள் குலுங்கவும், படுக்கையினின்றும் எழுந்து, நடந்து வந்து, மனம் மிக வருந்திச் சோர்வுற்றார்கள்.

மனம் தலைவரும் கனவு என்பது, தாம் தம் கணவருடன் கூடி மகிழ்வதாகக் கண்ட கனவினைக் குறிக்கும் என்க. குழல் சரிதலும், கலைகள் சோர்தலும், கொங்கைகள் ததும்புதலும், உறக்கத்தில் நடக்கும்போதும் நிகழும்; புணர்ச்சிக் காலத்தும் நிகழும் என்பது உணர்க.

43. ''அங்கையின் அரன் கயிலை கொண்ட திறல் ஐயன்
தங்கை நிலை இங்கு இதுகொல்?'' என்று தளர்கின்றார்;
கொங்கை இணை செங்கையின் மலைந்து, குலை கோதை
மங்கையர்கள் நங்கை அடிவந்து விழுகின்றார். (3210)

(கோதை - கூந்தல்; அரன் - சிவபெருமான்; அங்கை - அகங்கை / உள்ளங்கை ; இணை - இரண்டு; மலைதல் - தாக்குதல் / அடித்துக் கொள்ளுதல்; திறல் - வலிமை / ஆற்றல்; ஐயன் - தலைவன் / இராவணன்; குலை - குலைந்த / அவிழ்ந்த)

அவிழ்ந்துசரிந்தகூந்தலையுடையஅரக்கமகளிர்சிலர், ''சிவபெருமான் உறையும்கயிலையங்கிரியையேபெயர்த்தெடுத்துத்தன்உள்ளங்கைகளில் தாங்கிய ஆற்றல் பெற்ற நம் தலைவனான இராவணனது தங்கைக்கே இந்த நிலை வந்துற்றதே என்று சோர்ந்து போய், தங்களுடைய இரண்டு கொங்கைகளையும், தமது சிவந்த கைகளினால் அடித்துத் தாக்கிக் கொண்டு சூர்ப்பணகை இருந்த இடம் வந்து அவள் கால்களில் விழலாயினர்.

பெண்கள் துக்கம் வந்த போது, தங்கள் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதல் இயல்பு.

44. ''இலங்கையில் விலங்கும் இவை எய்தல் இல என்றும்,
வலம்கையில் இலங்கும் அயில் மன்னன் உளன் என்ன,
நலம்கையில் அகன்றது கொல் நம்மின்?'' என நைந்தார்,
கலங்கல்இல் கருங்கண் இணைவாரி கலுழ்கின்றார். (3211)

(அயில் - வேற்படை; விலங்கு - மிருகங்கள்; நலம் - நன்மை / சிறப்பு; நைதல் - வருந்துதல்; வாரி - கண்ணீர்; கலுழ்தல் - ஒழுகுதல் / சொரிதல் / சிந்துதல்)

''வலிமை பொருந்திய கைகளில் நம் மன்னன் இராவணன் வேற்படையை எப்பொழுதும் தாங்கியிருக்கிறான் என்ற அச்சத்தால், இவ்விலங்கை மாநகரில் மிருகங்கள்கூட இத்தகைய கொடுமையை அடைந்தது இல்லை; இப்பொழுது நம்முடைய சிறப்புக்கள் எல்லாம் நம் கையை விட்டு நீங்கிப்போயிற்றோ?'' என்று கூறி வருந்தியவர்களாய் எப்பொழுதுமே கலக்கமடையாத, கரிய இரண்டு கண்களினின்றும், கண்ணீர் வெள்ளத்தைப் பொழிந்தார்கள், வேறு சில அரக்க மகளிர்.

இலங்கை மாநகரிலுள்ள விலங்குகள்கூட அடைய முடியாத கொடுமையானநிலையைத்தங்கள்அரசனின்தங்கையாகியசூர்ப்பணகை எய்திவிட்டாளே என்று வருந்தினர் என்க. கலங்கல்இல் கண் இணை என்பது இதுவரையிலும் இலங்கை மக்கள் எதற்காகவும் கலங்கி அறியாதவர்கள் என்று குறித்து, இராவணனது ஆட்சிச் சிறப்பைப் புகழ்ந்தது என்க. இராவணனுடைய வேலுக்கு இரண்டு சிறப்புக்கள் உண்டு. ஒன்று அது பிரமதேவனால் உண்டாக்கப்பட்டது. இரண்டு மண்டோதரியை மணந்து கொண்டபோது, அவள் தந்தை மயனால் இராவணனுக்கு அளிக்கப்பட்டது. எனவேதான் இவ்விரண்டு பாடல்களிலும் இராவணனது வேல் பற்றிக் குறிப்பாகக் கூறினார் என்க.

45. சூர்ப்பணகை இராவணன் தாள்களில் விழுதல்

என்று, இனைய வன்துயர் இலங்கை நகர் எய்த,
நின்றவர் இருந்தவரோடு ஓடும் நெறிதேட,
குன்றின் அடிவந்துபடி கொண்டல்என, மன்னன்
பொன்திணி கருங்கழல் விழுந்தனள், புரண்டாள். (3212)

(வன் - கொடிய; நெறி - வழி; கொண்டல் - மேகம்; திணி - செறிந்த; கரும் - பெரிய; இனைய - இத்தகைய; அடி - அடிவாரம்)

மேற்சொன்னவாறு, இலங்கை நகர மக்கள் கொடிய துயரத்தை அடையவும், இராவணன் அரச சபையில் நின்றிருந்தவர்களும், நன்கு அமர்ந்திருந்தவர்களும், சூர்ப்பணகையின் தலைவிரி கோலத்தைக் கண்டு

நடுங்கியும், இராவணன் என்ன செய்யப் போகிறானோ என்று அஞ்சியும், வெளியே ஓடுவதற்குரிய வழியைத் தேடவும், ஒரு பெரிய மலையின் அடிவாரத்தில் வந்து நீருண்ணத் தோயும் மேகம் போல, இராவணனின் பொன் செறிந்த அழகிய பெரிய வீரக்கழல் அணிந்த பாதங்களில் வந்து விழுந்து புரண்டாள் சூர்ப்பணகை.

இராவணனுக்குக் குன்றும், சூர்ப்பணகைக்கு மேகமும் உவமைகள்.

46. இராவணன் சீற்றமும் அதன் விளைவுகளும்

மூடினது இருட்படலம் மூவுலகும் முற்ற;
சேடனும் வெருக்கொடு சிரக்குவை நெளித்தான்;
ஆடினகுலக்கிரி; அருக்கனும் அயிர்த்தான்;
ஓடின திசைக்கிரிகள்; உம்பரும் ஒளித்தார். (3213)

(முற்ற - முழுவதும்; படலம் - பரப்பு; மூடுதல் - கவிதல்; வெரு - அச்சம்; குவை - குவியல்; அருக்கன் - சூரியன்; அயிர்த்தல் - ஐயுறுதல்; சேஷம் - மீதி)

இராவணன் சீற்றத்தால், இம்மூவுலகிலும் முழுதுமாக இருட்பரப்புச் சூழ்ந்து கொண்டது. பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனும், அச்சம் கொண்டு, தன் ஆயிரம்தலைத் தொகுதியை நெளிக்கலாயினான்; சிறந்த குல பர்வதங்கள் ஏழும் அசையலாயின; சூரியனும் என்ன ஆகுமோ என்று ஐயம் கொள்ளலானான்; எட்டுத் திசை யானைகளும் இடம் விட்டுப் பெயர்ந்தோடின; தேவர்களும் மறைவிடங்களில் சென்று தங்களை ஒளித்துக் கொண்டனர்.

குலமலைகள் எட்டு. இமயம், ஏமகூடம், கயிலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம், கந்தமாதனம் என்பன. திசைக்கரிகள் எட்டு. ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம் என்பன. சேஷம் என்ற சொல்லுக்கு மீதி என்று பொருள். உலகங்கள் அழியும் காலத்தும் அழியாது மிகுந்து இருப்பவன் என்பது குறித்தகாரணப்பெயர். இராவணன்சீற்றம்கண்டு சந்திரன், நட்சத்திரங்கள், அக்னிதேவன் ஆகியோர் அஞ்சி ஓடியதால் மூவுலகில் இருட்டுப் பரவியது; அவன் எழுந்த அதிர்ச்சியில் ஆதிசேஷன் நெளிந்தான்; அவன் தன் காலால் தரையில் மிதித்த வேகத்தில் மலைகள் நடுங்கின; அவன் கோபம் கொண்டு பொங்கி எழச் சூரியன், திக்கஜங்கள், தேவர்கள் ஆகியோர் வெளிச்சென்று ஓடி மறைந்தனர் என்பதாம்.

47. விரிந்த வலயங்கள் மிடை தோள் படர, மீதிட்டு
எரிந்த நயனங்கள் எயிறின் புறம் இமைப்ப,
நெரிந்த புருவங்கள் நெடு நெற்றியினை முற்ற,
திரிந்த புவனங்கள், வினை தேவரும் அயிர்த்தார். (3214)

(மிடை - நெருங்கிய; வலயம் - தோள்வளை; விரிந்த - பூட்டுகள் உடைந்த; நயனம் - கண்; மீதிட்டு - மிக்கனவாய்; நெரிதல் - சுருங்கி வளைதல்; முற்ற - எல்லையை அடைந்து; திரிதல் - நிலைகுலைதல் / சுழலுதல்; புவனம் - உலகம்; அயர்த்தல் - மறத்தல் / திகைத்தல்; வினை - தொழில்; படர்தல் - பூரித்தல்; எயிறு - பல்; எரிப்ப - சுட)

இராவணன் கொண்ட சீற்றத்தால் அவனது நெருங்கிய இருபது தோள்களும் பூரித்து உயர்ந்தன; அதனால் அவன் தோளில் அணிந்திருந்த தோள் வளைகள் தம் பூட்டு அறுபட்டு விரியலாயின; அவன் கண்கள் மிகுதியான நெருப்பைக் கக்கின; பற்கள் வெளித்தோன்றி ஒளி வீசின; அவனது புருவங்கள் சுருங்கி வளைந்து நெற்றியின் எல்லையைத் தொட்டன; அந்நிலை கண்டு உலகங்கள் எல்லாம் நிலை குலைந்து சுழன்றன. தேவர்களும் தாங்கள் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்துத் தங்கள் தொழிலையே மறந்தவர்களாயினர்.

இராவணன் கொண்ட சினத்தால் அவன் உடலில் உண்டான மெய்ப்பாடுகளும், உலகத்தில் நிழந்த நிகழ்வுகளும் கூறப்பட்டன.

48. தென்திசை நமன் தன்னோடு, தேவர் குலமெல்லாம்,
''இன்று இறுதி வந்தது நமக்கு'' என இருந்தார்;
நின்று உடல் நடுங்கி, உயிர் விம்மி நிலை நில்லாது,
ஒன்றும் உரையாடல் இலர், உம்பரினோடு இம்பர். (3215)

(நமன் - இயமன்; குலம் - கூட்டம் / இனம்; உம்பர் - மேலுலகத்தார் / தேவர்; இம்பர் - இவ்வுலகத்தார் / மக்கள்; விம்மி - வருந்தி / பெருமூச்செறிந்து; இறுதி - முடிவு / நாசம்)

தெற்குத் திசைக்குக் காவலனாகிய இயமனுடன், தேவர் இனம் எல்லாம், ''நமக்கு இன்று முடிவுகாலம் வந்து விட்டது'' என்று கருதி, அரசவையுள் ஒடுங்கி அமர்ந்திருந்தனர்; அந்த மேலுலகத்துத் தேவர்களோடு, இம்மாநிலத்து மக்களும் உடன் இருந்து அச்சத்தால் தம் உடல் நடுங்க, பெருமூச்செறிந்து, ஒரு நிலையில் இல்லாது ஒருவரோடு ஒருவர் ஒன்றும் பேசிக் கொள்ளாமல் மௌனமாக நின்றிருந்தனர்.

தேவர் குலம் என்றது பதினெட்டு வகைத் தேவரினத்தையும் குறித்தது என்க. எல்லோர்க்கும் இறுதியை உண்டாக்குபவனான இயமனும், இன்று தனக்கு இறுதி வந்தது என்று அஞ்சினான் என்று கூறிய நயம் உணர்க.

49. இராவணன், ''இது யார் செய்தார்'' என வினவுதல்

மடித்த பிலவாய்கள் தொறும் வந்து புகைமுந்த,
துடித்த தொடர்மீசைகள் சுறுக்கொள உயிர்ப்ப,
கடித்த கதிர்வாள் எயிறு மின்கனல, மேகத்து
இடித்த உருமு ஒத்து உரறி, ''யாவர் செயல்?'' என்றான். (3216)

(பிலம் - குகை; முந்த - முற்பட்டுத் தோன்ற; உயிர்ப்பு - பெருமூச்சு; கதிர் - ஒளி; கனலுதல் - சுடர்விடுதல்; உருமு - இடி; உரறுதல் - சினத்தல் / அதட்டுதல்; கறுக்கொள்ளுதல் - தீயநாற்றம் அடைதல் / கருகிப்போதல்; மடித்தல் - அதுக்குதல்)

இராவணன் தனது உதடுகள் மடிக்கப்பெற்ற பத்து வாய்களிலும் இருந்து கோபத்தீயால் எழுந்த புகை முற்பட்டு வெளித் தோன்றும்படியும், தொடர்ந்து அமைந்திருக்கின்ற துடிக்கின்ற மீசைகள் எல்லாம் அந்தக் கோபத்தீயால் பொசுங்கித் தீய நாற்றம் எழும்படி பெருமூச்சுவிட்ட படியும், தனது ஒளிமிகுந்த வலிய கோரப்பற்கள் எல்லாம் மின்னல் போல சுடர்விட்டு விளங்கும்படியும், மேகத்தில் முழங்குகின்ற இடியைப் போல அதட்டி, ''இது யார் செய்த செய்கை?'' என்று சூர்ப்பணகையிடம் கேட்டான்.

இங்கே ஒரு செய்தி. நாம் மீசை என்கிறோமே, அது மிசை என்ற சொல்லிலிருந்துதான் வந்ததாம். மிசை என்றால் மேலே என்று பொருள். மேல் உதட்டின்மீது உள்ள உரோமம் என்ற பொருளில் பயிலப்பட்டு வந்த மிசைதான் மீசையாயிற்று என்பது ஒரு புதுச் செய்தி. வாய் மடித்தல், மீசை துடித்தல், பற்கள் கடித்தல், பெருமூச்சு விடுதல் முதலியன கோபத்தில் உண்டாகும் மெய் வெளிப்பாடுகள்.

50. சூர்ப்பணகை விடை

''கானிடை அடைந்து, புவிகாவல் புரிகின்றார்,
மீனுடை நெடுங்கொடியினோன் அனையர்; மேல்கீழ்
ஊனுடை உடம்பு உடைமையோர்; உவமை இல்லார்;
மானிடர்; தடிந்தனர்கள் வாள் உருவி'' என்றாள். (3217)

(மீனுடை நெடுங்கொடியோன் - மன்மதன்; தடித்தல் - குறைத்தல்)

''பூமியைப் பாதுகாக்கின்ற தொழிலைச் செய்கின்றவர்களாகிய அரச குலத்தைச் சேர்ந்தவர்களும், மீனைத் தனது பெரிய கொடியாகக் கொண்ட மன்மதன் போன்று அழகுடையவர்களும், மேல் ஏழு கீழ் ஏழு ஆகிய பதிநான்கு உலகத்திலும் தசையோடு கூடிய உடம்புகளை உடையவர் களும் எவரோடும் உவமைப் படுத்திச் சொல்ல முடியாதவர்களும் ஆகிய மனிதர்கள், நான் வசிக்கின்ற ஜனஸ்தானத்தை அடைந்து, தங்களது வாட்படையினை உருவி, என்னுடைய உடல் உறுப்புக்களைக் குறைத்தனர்'' என்றாள் சூர்ப்பணகை.

கானிடை அடைந்து என்பது, நான் வசிக்கின்ற, உன்னால் அமைத்துக் கொடுக்கப்பட்ட காடு ஜனஸ்தானம் என்றும், சிற்றன்னை ஏவலால் காட்டினிடத்து வந்து என்றும் இருபொருள் தருவதை அறிக. புவிகாவல் புரிகின்றார் என்பது அவர்கள் அரச குமாரர்கள் என்பதைக் குறிக்கும். இராவணன் கேட்ட கேள்விக்கு நேரிடையாக இரண்டு மனிதர்கள் என்

உடம்பைக் குறைத்தனர் என்று கூறாது, அந்த அவல நிலையிலும் அவர்கள் அரசர்கள், மன்மதன் போன்ற அழகுடையவர்கள்; உலகில் எவர்க்கும் உவமை கூறமுடியாதவர்கள் என்று அவர்கள் மேனி அழகைப் பாராட்டுவதை உணர்க. பொதுவாகக் காவல் புரிவது என்பது, தன் மக்களுக்கு நல்லன செய்தலும், தம் நாட்டுப் பகைவர்களை அழித்தலும் என்ற கொள்கையைக் குறிக்கும். கரனிடம் கூறும்போதும் இதுபோலவே, ''மன்மதன் மேனியர்'' என்று கூறியதையும் ஒப்பு நோக்குக.

தனக்குத் தீங்கு செய்தவர்களின் அழகைத் தன் அண்ணனிடமே பாராட்டி உரைத்தது காமம் மிகுதியால் என்க.

51. மீண்டும் இராவணன் வினவுதல்

''செய்தனர்கள் மானிடர்'' என; திசை அனைத்தும்,
எய்த நகைவந்தது; எரி சிந்தின கண் எல்லாம்;
''நொய்து அவர் வலித்தொழில்; நுவன்ற மொழி ஒன்றோ?
பொய்தவிர்; பயத்தைஒழி; புக்க புகல்'', என்றான். (3218)

(எரி - நெருப்பு; நொய்து - அற்பமானது; துவன்ற - சொல்லிய; புக்க - நிகழ்ந்தவை; ஒன்று - சத்தியம் / உண்மை)

சூர்ப்பணகை இரு மானிடர்கள் இவ்வாறு செய்தனர் என்று கூறியதைக் கேட்ட இராவணன் உற்ற பெருங்கோபத்தில் எழுந்த சிரிப்பின் ஒலி எல்லாத் திசைகளிலும் போய்ச்சேர்ந்தது. அவனுடைய இருபது கண்களும் கோபத்தில் நெருப்புப்பொறி சிந்தின; ''மானிடர்கள் இத்தகைய பெருஞ் செயலைச் செய்தனர் என்கிறாய். மானிடர்கள் வலிமையற்றவர்கள்; அவர்கள் வலிமை அற்பமானது. நீ உண்மையைத்தான் சொல்கின்றாயா? இது பொருந்தாததாகவல்லவோ இருக்கிறது? எனவே பொய் சொல்லாதே; அச்சத்தைத் தவிர்த்து, அங்கு நிகழ்ந்தவைகளை நிகழ்ந்தவாறே கூறு'' என்றான் இராவணன்.

52. சூர்ப்பணகை விரிவாகக் கூறுதல் [6 பாடல்கள்]

''மன்மதனை ஒப்பர் மணிமேனி; வடமேருத்
தன்மதன் அழிப்பர் திரள்தோளின் வலிதன்னால்;
என் அதனை இப்பொழுது இசைப்பது? உலகு ஏழின்
நன் மதன் அழிப்பர் ஓர் இமைப்பின், நனி வில்லால்''; (3219)

(மணி - அழகிய; வலி - திண்மை; மதன் - அழகு; அழித்தல் - கெடுத்தல்; மதன் - வலிமையுமாம்; இசைப்பது - கூறுவது; நனி - முற்றும்; இமைப்பு - இமைக்கும் கால அளவு; மதன் - மதம் / செருக்கு)

''நான் கூறிய மானிடர்கள், தமது அழகிய மேனியில் மன்மதனை ஒப்பாவார்கள்; தமது திரண்ட தோளாற்றலில், வடக்கே இருக்கும் மேருமலையின் வலிமையையும் கீழ்ப்படுத்துவர்; தமது வில்லாற்றலால்,

இவ்வேழு உலகங்களிலும் உள்ள வலிமை மிக்கவர்களின் செருக்கினையும் அழிப்பர், அதைப்பற்றி இப்பொழுது கூறி என்ன பயன்'', என்று சூர்ப்பணகை கூறினாள்.

அவர்கள் தோளாற்றலுக்கு மேரு மலை உயர்ச்சியாலும், திண்மையாலும் உவமை. அவர்கள் உருவும் ஆற்றலும் இப்பாடலில் பேசப்பட்டது. மீண்டும் அவ்விருவரது மேனி அழகையும், தோளாற்றலையும், வில்லாற்றலையும் புகழ்ந்து பேசுகிறாள், இன்னும் பேசிக்கொண்டே போகிறாள் அடுத்த 5 பாடல்களிலும்.

53. ''வந்தனை முனித்தலைவர்பால் உடையர்; வானத்து
இந்துவின் முகத்தர்; எறி நீரில் எழு நாளக்
கந்த மலரைப் பொருவு கண்ணர்; கழல, கையர்;
அந்தம்இல் தவத்தொழிலர்; ஆர் அவரை ஒப்பார்?'' (3220)

(வந்தனை - வழிபாடு; இந்து - சந்திரன்; எறி - மோதுகின்ற; நாளம் - தண்டு; கந்தம் - நறுமணம்; மலர் - தாமரை; அந்தம்இல் - எல்லையற்ற)

''அம்மானிடர்கள் சிறந்த முனிவர்களிடத்தில் வணக்க, வழிபாடுகள் கொண்டவர்கள்; வானமண்டலத்திலுள்ள பூர்ண சந்திரன் போன்ற முக எழில் உடையவர்கள்; அலைகள் வீசுகின்ற தடாகத்தில் தோன்றுகின்ற தண்டினையுடைய, நறுமணமுடைய தாமரை மலர் போன்ற கண்கள், பாதங்கள், கைகளை உடையவர்கள்; எல்லையற்ற தவஒழுக்கம் பொருந்தியவர்கள்; அவர்களை ஒத்தவர் இவ்வுலகில் வேறுயார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை''. என்றாள் சூர்ப்பணகை.

அவர்கள் தவஒழுக்கத்தில் உள்ளவர்கள், முனிவர்களை வழிபடுபவர்கள் என்பதால், முனிவரல்லாதோரை வணங்க மாட்டார்கள் என்பது பெறப்பட்டது. இங்கும் அவர்களது மேனியழகையே மீண்டும் சூர்ப்பணகை விரித்துச் சிறப்பித்துக் கூறுவது காண்க. ''கைவண்ணம் தாமரை; வாய் கமலம் போலும்; கண் இணையும் அரவிந்தம்; அடியும் அஃதே'' என்பது திவ்யப்பிரபந்தம்.

நாளம் என்பது உள்தொளையுடைய தண்டு; இன்று குகூகீஅங்கி என்று கூறுகிறோமே அதனைக் குறிக்கும் தமிழ்ச்சொல்.

54. ''வற்கலையர்; வார்கழலர்; மார்பின் அணிநூலர்;
விற்கலையர்; வேதம்உறை நாவர்; தனிமெய்யர்;
உற்கு அலையர்; உன்னை ஒர்துகள்துணையும் உன்னார்;
சொற்கலை எனத் தொலைவுஇல் தூணிகள் சுமந்தார்''. (3221)

(வற்கலை - மரவுரி; கலை - ஆடை; வார் - நீண்ட; நூல் - முப்புரி நூல்; கலை - வேதம்; உறைதல் - தங்குதல்; உற்கு - உனக்கு; அலைதல் - வருந்துதல்; உன்னுதல் - மதித்தல்; சொல் - புகழ்; கலை - நூல்;

தொலைவுஇல் - குறையாத; தூணி - புட்டில்; துகள் - தூசி; தனை - அளவு; சுமத்தல் - தாங்குதல்)

''அம்மானிடர்கள் மரவுரியையே ஆடையாகத் தரித்தவர்கள்; நீண்ட வீரக்கழல் அணிந்த பாதங்களை உடையவர்கள்; மார்பில் முப்புரிநூல் அணிந்தவர்கள்; விற்பயிற்சியில் தேர்ச்சியுற்றவர்கள்; எப்போதும் வேதம் தங்கியிருக்கின்ற நாவினை உடையவர்கள்; தளிர் போன்ற மென்மையான, அழகிய மேனியை உடையவர்கள்; உனக்கு ஒருபோதும் அஞ்சாதவர்கள்; உன்னை ஒரு தூசு அளவு கூட மதிக்காதவர்கள்; புகழ் பெற்ற நூல்கள் படிக்குந்தோறும் இன்பம் குறையாது தருவதுபோல, குறையாத அம்புகளை உடைய அம்பறாத் தூணியைத் தாங்கியவர்கள்'' என்றாள் சூர்ப்பணகை.

சொற்கலை என்ற சொல்லுக்கு இலக்கண சாத்திரங்கள் என்றும் பொருள் கூறுவதுண்டு. ''நின்னையோர் துகள் துணையும் உன்னார்'' என்றது முன்பு கரனிடம், ''ஒன்றும் நோக்கலர் உன்வலி'' என்று கூறியதை நினைவுபடுத்துவது காண்க. இங்கும் அவள் மானிடர் புகழ் பாடுவது உணர்க. ''கற்றனைத்து ஊறும் அறிவு'' என்பதும் ''நவில்தொறும் நூல் நயம் போலும்'' என்பதும் குறட்பாக்கள்.

55. ''ஆறுமனம் அஞ்சினம், அரக்கரை'' எனச் சென்று
ஏறுநெறி அந்தணர் இயம்ப, ''உலகு எல்லாம்
வேறும்'' எனும் நுங்கள் குலம், ''வேரொடும் அடங்கக்
கோறும்'' என, முந்தை ஒரு சூளுறவு கொண்டார். (3222)

(ஏறும்நெறி - சிறந்த தவஒழுக்கம்; ஆறும் - அமைதியுற்ற; வேறும் - வெல்வோம்; அடங்க - முழுவதும்; கோறும் - அழிப்போம்; சூளுறவு - சபதம்; இயம்புதல் - முறையிடுதல்)

நாள்தோறும் மேலோங்குகின்ற சிறந்த தவஒழுக்கத்தை மேற்கொண்டுள்ள முனிவர்கள், அம்மானிடர்களிடம் சென்று, ''அமைதியுற்றிருந்த எங்கள் மனம், இங்குள்ள அரக்கர்களைக் கண்டு அஞ்சிப்போய் இருக்கிறது'' என்று முறையிட்டுக் கொள்ள, அதற்கு அம்மானிடர்கள், ''உலகத்துள் உள்ள மக்களை எல்லாம் வெல்வோம் என்று முழங்கிக் கொண்டிருக்கின்ற உங்கள் அரக்கர் குலத்தை, முழுவதும் வேரோடு அழித்து முனிவர்களாகிய உங்களைக் காப்போம்'' என்று முன்பு ஒரு சபதம் மேற்கொண்டிருக்கின்றார்கள்'' என்றாள் சூர்ப்பணகை.

சூர்ப்பணகை இராவணனிடம் தன் அரக்கர் குலத்தைப் பற்றிக் கூறும்பொழுது நம்குலம் என்று கூறாது, ''நுங்கள் குலம்'' என்று கூறியது, அவள் இராமன் மேல் கொண்ட தீராக் காமத்தால் என்க. முன்பு தண்டக வன முனிவர்களுக்கு இராமன் கூறிய சபதமொழிகளை இராமன் மூலம் அறிந்து, இங்கு சூர்ப்பணகை அதை இராவணனுக்குக் கூறுகிறாள்.

56. ''மாரர் உளரே இருவர், ஓர் உலகில் வாழ்வார்?
வீரர் உளரே, அவரின்வில் அதனின் வல்லார்?
ஆர்ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள், ஐயா?
ஓர்ஒருவரே இறைவர் மூவரையும் ஒப்பார்'' (3223)

(மூவர் - பிரமன்; திருமால், சிவன் / முத்தேவர்; மாரன் - மன்மதன்)

''தலைவனே! இவ்வுலகத்தில், ஒரே சமயத்தில் இரண்டு மன்மதர்கள் வாழ்ந்திருப்பது உண்டா? இல்லையல்லவா? ஆனால் இவ்விரு மானிடர்களும் அழகில் மன்மதனைப் போன்றே இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; இவர்களை வில் வித்தையில் வெல்லுவோர் யாரும் இருக்கிறார்களா? இல்லை; இருக்க முடியாது; இவர்கள் ஒவ்வொருவரும் அந்த இறைவர்களாகிய மும்மூர்த்திகளையும் தனித் தனியே ஆற்றலில் ஒப்பானவர்களாகத் தெரிகிறார்கள்; இவர்களை ஒத்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா? ஒருவரும் இல்லை'' என்கிறாள் சூர்ப்பணகை.

அவர்களது மேனியெழிலும், வீரச்சிறப்பும், ஆற்றலும் மீண்டும் புலப்படுத்தப்பட்டது. தமையன், தந்தையைப் போல மதிக்கத்தக்கவன் எனவே ஐயா என்றாள் என்க. இறைவர் என்பது முதற்கடவுளரைக் குறிக்கும். மாரன் என்ற சொல், ஆடவரையும், மகளிரையும் காமநோயால் துன்புறுத்துபவன் என்னும் பொருள் கொண்டது.

57. ''தராவலய நேமி உழவன், தயரதப் பேர்ப்
பராவ அருநலத்து ஒருவன், மைந்தர்; பழிஇல்லார்;
விராவ அருவனத்து, அவன் விளம்ப, உறைகின்றார்;
இராமனும் இலக்குவனும் என்பர், பெயர்'' என்றாள். (3224)

(தரா - தரை / நிலம்; வலயம் - வட்டம்; தராவலயம் - வட்டமானஉலகம் / பூமண்டலம்; நேமி - ஆணைச்சக்கரம்; பராவஅரும் - புகழ்தற்கரிய; நலம் - குணங்கள்; பழி - குற்றம்; விராவஅரும் - புகுதற்கரிய)

''அம்மானிடர்கள் இருவரும், வட்டவடிவமான இப்பூமண்டலத்தில் தன் ஆணைச் சக்கரத்தைச் செலுத்திய தசரதன் என்று பெயர் கொண்ட, புகழ்தற்கரிய நற்குணநலன்கள் அமையப் பெற்ற ஒரு அரசனது மைந்தர்கள்; அவர்கள் எந்தக் குற்றமும் அற்றவர்கள்; பிறரால் புகுந்து தங்குதற்கரிய கானகத்தில், தன் தந்தை தசரதன் இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இங்கு வந்து வாழ்கின்றனர்; அவர்களது பெயர் இராமன், இலக்குவன் என்று கூறுவார்கள்'' என்றாள் சூர்ப்பணகை.

தராவலயம் என்பது ஒரு வடசொல். நேமி உழவன் என்பது முன்பு வில்லேர் உழவர், சொல்லேர் உழவர், வாளேறு உழவன், வரிசிலை உழவன், ஆழி உழவன், நாந்தக உழவர் என்று கூறியதைப் போன்ற சொல்லாட்சி என்க. நலம் என்ற சொல் குணம் என்ற பொருளில்

பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ''கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு'' என்பது குறள் 984. தன் உறுப்பைக் குறைத்தவர்கள் பற்றிக் கூறும் போது, சூர்ப்பணகை அவர்களைப் பாராட்டிப் பேசியதோடு மட்டுமல்லாமல், அவர்கள் பழியற்றவர்கள் என்றும் கூறுவதை நோக்குக. அவர்கள் மீது பழியில்லை என்பதனால், குற்றம் தன்னைச்சார்ந்தது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறாள் என்பதும் ஒன்று. மற்றொன்று அவர்களுடைய தோற்றமும், குணநலன்களும், அவர்களுடைய பகைவர்களைக்கூடப் பாராட்டவைக்கும் தன்மையது என்று கொள்ளுதலும் பொருந்தும்.

58. இராவணன் தன்னைத் தானே பழித்துக் கொள்ளுதல்

''மருந்து அனைய தங்கை மணிநாசி வடிவாளால்
அரிந்தவரும் மானிடர்; அறிந்தும், உயிர் வாழ்வார்;
விருந்து அனைய வாளொடும், விழித்து, இறையும் வெள்காது,
இருந்தனன் இராவணனும் இன்உயிர்கொடு, இன்னும். (3225)

(மருந்து - தேவாமிர்தம்; மணி - அழகிய; வடி - கூரிய; இறையும் - சிறதும்; விருந்து - புதியது)

''கிடைத்தற்கரிய தேவாமிர்தம் போன்ற தனது ஒரே தங்கையாகிய சூர்ப்பணகையின் அழகிய மூக்கைக் கூரிய வாளால் அறுத்தெரிந்தவர்கள் அற்பமான மானிடர்கள்; இவ்வாறு அறுத்த பின்பும், அதன் விளைவுகளை நன்கு உணர்ந்த பின்பும், இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்; அவள் அண்ணன் இராவணனோ, தனது புதிது போன்று ஒளி வீசும் சந்திரகாசம் என்னும் வாளோடு, தன்கண்களைவியப்பால் அகல விழித்துப் பார்த்துக் கொண்டு, சிறிதும் வெட்கப்படாமல், இன்னும் தன் இனிய உயிரோடு இருக்கின்றான்'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் இராவணன்.

மருந்தனைய தங்கை என்றது வாராது வந்த மாமணிபோல் என்ற பொருளுடையதாகும். அரிந்தும் உயிர் வாழ்வார் என்பது, அவ்வாறு அவர்கள் அரிய முற்பட்டபோதே அவர்களைக் கொன்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது அவர்களை இன்னும் உயிரோடு விட்டு வைத்திருப்பது தனது தகுதிக்குத் தகாது என்ற பொருளுடையது. விருந்தனைய வாள் என்பது, வரையெடுத்த பின்பும், திக்குவிசயத்திற்குப் பின்பும், இது வரை போர் புரியாது புதிதாக ஒளி வீசிக் கொண்டிருந்த வாள் என்று பொருள்படும். தன்னைப் படர்க்கையில் யாரோ ஓர் அன்னியன் போலக் கூறிக் கொண்டது தன்னுடைய ஆற்றாமையால் நொந்து கூறியவை என்க. இன்உயிர் கொடு இன்னும் என்பது, தான் இறவாமை குறித்து எழுந்த அவலச்சொல் என்க. ''மயிர்நீப்பின் வாழாக்கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்'' என்பதும், ''மருந்தோ மற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து'' என்பதும் குறள் (968, 969). இந்தச்

சந்திரகாசம் என்ற வாள் இராவணனுக்குச் சிவபெருமானால் அளிக்கப் பட்டது என்பதை நினைவு கூர்க.

59. ''கொற்றம்அது முற்றி, வலியால் அரசு கொண்டேன்;
உற்றபயன் மற்று இதுஒல்கா உரை இறந்தேன்;
முற்ற, உலகத்து முதல் வீரர் முடிஎல்லாம்
அற்ற பொழுதத்து, இது பொருந்தும்எனல் ஆமே?'' (3226)

(கொற்றம் - வெற்றி; முற்றி - நிரம்பி; ஒல்கா - அழியாத; உரை - புகழ்; இறத்தல் - அழிதல் / இழத்தல்; முற்ற - முழுவதும்)

''வெற்றி என்பது ஒன்றையே முழுமையாகப் பெற்று, என்னுடைய ஆற்றலால் இவ்வுலக அரசை மேற்கொண்டவன் நான்; இப்பொழுது எனக்கு வந்த பயன் இது தானோ? என்றும் நீங்காத என் புகழ் இன்று மங்கும்படி ஆயிற்று. இந்த உலகத்திலுள்ள தலை சிறந்த வீரர்களின் தலைகள் எல்லாம் அறுபட்டு வீழ்ந்த போதும், இப்பொழுது இவளால் நான்பட்ட அவமானம் நீங்கப் பெறுவேனோ? என்னுடைய பழைய புகழ் என்னை வந்து அடையுமோ? அடையாதன்றோ?'' என்று நொந்து கொண்டான் இராவணன்.

''ஒல்கா உரை'' என்பது, ''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பது ஒன்றுஇல்'' என்ற குறள் 233ன் சுருக்கம் என்பது அறிக. ''இது பொருந்துமோ'' என்ற சொற்றொடருக்கு இராவணன் தன் இழந்த புகழ் மீண்டும் வருமோ என்று கூறினான் என்றும், தான் இழந்த அவமானம் நீங்கப் பெறுவானோ என்றான் என்றும், இவள் இழந்த மூக்கு மீண்டும் வந்து பொருந்துமோ என்றான் என்றும் பலவிதமாகப் பொருள் கூறுவதுண்டு. உலகத்து வீரர்கள் அத்தனை பேரும் தம் தலைகளை இழந்தாலும், என் தங்கை மூக்கிழந்ததற்கு நிகராகுமோ? என வினவினான் என்றலும் ஒன்று.

60. ''மூளும் உளது ஆயபழி என்வயின் முடித்தோர்
ஆளும் உளவாம்; அவரதுஆர் உயிரும் உண்டாம்;
வாளும் உளது; ஓதவிடம் உண்டவன் வழங்கும்
நாளும்உள; தோளும்உள; நானும் உளென் அன்றோ?'' (3227)

(மூளுதல் - மீண்டும் கிளர்ந்தெழுதல் / முற்படுதல்; ஆண் - ஆண் தன்மை; ஓதம் - கடல்; நாள் - வாழ்நாள் / ஆயுள்; பழி - அவமானம்)

''என்மீது பழி உண்டாக்கி இச்செயலைச் செய்து முடித்தவர்களான ஆண் தன்மை கொண்ட அவ்வீரர்களும் இருக்கிறார்கள்; அவர்களது இனிய அருமையான உயிரும் இன்னும் இருக்கிறது; திருப்பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டவனான சிவபெருமான் எனக்கு அளித்த சந்திரஹாசம் என்னும் வாளும் என்னிடம் இருக்கிறது; அவன் அளித்த நீண்ட ஆயுளான முப்பத்து முக்கோடி வாழ்நாளும் உள்ளது; கயிலையங் கிரியைப் பெயர்த்தெடுத்த வலிய இருபது தோள்களும் இருக்கின்றன;

நானும் இன்னும் உயிருடன் இருக்கிறேனே'' என்று தன்னிரக்கம் கொண்டான் இராவணன்.

''உளதாய பழி'' என்பது என்றும் நிலைத்து நிற்கக்கூடிய அழியாத பழியைக் குறிக்கும். என் கைவாளும், ஆயுள்நாளும், உடலும் பயனின்றிச் செயலற்று உயிருடன் இருக்கிறேனே என்று தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டான் என்பதாம்.

61. ''பொத்துற உடற்பழி புகுந்தது'' என நாணி,
தத்துறுவது என்னை? மனனே! தளரல் அம்மா!
எத்துயர் உனக்கு உளது? இனி, பழிசுமக்க,
பத்துஉள தலைப்பகுதி; தோள்கள் பல அன்றே? (3228)

(தத்துறுதல் - கவலைப்படுதல்)

''என் உள்ளமே! என்னுடைய உடலைத் துளைத்துப் பழி என்னும் அவமானம் நுழைந்துவிட்டதே என்று எண்ணி வெட்கப்பட்டுக் கவலைப் படாதே! மனமே தளர்ச்சியடையாதே! நான் கூறுவதைக் கேள்; இனிமேல் இந்தப் பழியைச் சுமப்பதற்கு என்னிடம் பத்து என்ற எண்ணிக்கையில் உள்ள தலைகளும் பலவாகிய இருபது தோள்களும் இருக்கின்றனவே? எனவே நீ ஏன் கவலைப்படுகிறாய்? உனக்கு ஒரு துன்பமும் வாராது'' என்று தன் மனத்தை நோக்கிக் கூறுகிறான் இராவணன். தன் மனத்திற்கு உண்டான பழி தீர்வதற்கான வழி, தன் தலையிலும் தோளிலும் உள்ள வீரத்தினால் தான் முடியும் என்று கருதுகிறான் என்க.

62. ''கரன் உன்னைக் காக்கவில்லையா?'' எனல்

என்று உரைசெயா, நகைசெயா, எரி விழிப்பான்,
''வன்துணை இலா இருவர் மானிடரை, வாளால்
கொன்றிலர்களா, நெடிய குன்றுடைய கானில்
நின்ற கரனே முதலினோர் நிருதர்?'' என்றான். (3229)

(செயா - செய்து; எரி - நெருப்பு; நெடிய - உயர்ந்தோராகிய; நிருதர் - அரக்கர்)

என்று கூறிச் சிரித்து, தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்து, சூர்ப்பணகையை நோக்கி, ''உயர்ந்து ஓங்கிய மலைகளை உடைய தண்டகவனத்தில், உனக்குக் காவலாக நியமிக்கப் பெற்ற கரன் முதலான அரக்கர்கள், எத்தகைய வலிய துணையும் இல்லாத இரண்டு எளிய மனிதர்களைத் தம் வாட்படை கொண்டு கொன்று வெற்றி பெற்று உன்னைக் காப்பாற்றவில்லையா?'' என்று கேட்டான்.

இராமஇலக்குவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, மானிடர்என்றும், வலிமையற்ற எளியர் என்றும், வலிய துணை இல்லாத தனியர் என்றும், ஆயுதங்கள் அற்றவர் என்றும் கூறிய இராவணன், கரன் பற்றிக் கூறும் போது, கரன் மட்டுமல்ல அவனுடன் கூட இருந்தவர்கள், அரக்க குணம்

படைத்த அரக்கர்கள், வலியவர்கள், வாட்படை, ஆயுதங்கள் எல்லாம் கொண்டவர்கள் என்று அவர்களின் வலிமையையும், மானிடர்களின் எளிமையையும் உணர்த்திய தன்மை நோக்குக. உன்னை உறுப்பறை வதற்கு முன்பு அவர்களைக் கொன்றிருந்தால் உனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்பது இராவணன் கருத்து.

63. ''கரன் முதலியோர் இறந்துபட்டனர்'' எனச் சூர்ப்பணகை கூறுதல்

அற்று அவன் உரைத்தலோடும், அழுது இழி அருவிக் கண்ணள்,
எற்றிய வயிற்றள், பாரினிடை விழுந்து ஏங்குகின்றாள்,
''சுற்றமும் தொலைந்தது, ஐய! நொய்து'' என, சுமந்த கையள்,
உற்றது தெரியும்வண்ணம், ஒருவகை உரைக்கலுற்றாள். (3230)

(அற்று - அது / அவ்வாறு; இழிதல் - பெருகுதல்; எற்றுதல் - அடித்துக் கொள்ளுதல்; நொய்து - எளிதில் / விரைவில்; உற்றது - நிகழ்ந்தது; தொலைதல் - அழிந்து போதல்)

அவ்வாறு இராவணன் கேட்டவுடன், அழுவதால் உண்டான அருவி போன்ற நீர்ப்பெருக்கை உடைய கண்களை உடையவளும், வயிற்றில் அடித்துக் கொண்டு, தரையில் விழுந்து புரண்டு அழுபவளுமாகிய சூர்ப்பணகை இராவணனை நோக்கி, ''தலைவனே! கரன் முதலாகிய நமது சுற்றத்தார் அனைவரும் மிக விரைவாகவும் எளிதாகவும் அழிந்து பட்டனர்'' என்று தன் தலைமீது கைகளைத் தாங்கியவளாய், அங்கு நிகழ்ந்தன எல்லாவற்றையும், ஒருவாறு விரிவாகக் கூறத் தொடங்கினாள்.

மிக்கத் துயரத்தில் பெண்கள் அழும் பொழுது, கண்ணீர் அருவியாகக் கொட்டுவதும், அவர்கள் வயிற்றிலும், மார்பிலும் அடித்துக் கொள்வதும், தரையில் விழுந்து புரள்வதும், கைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு அரற்றுவதும் இயல்பு. இவை அவலத்தின் மெய்ப்பாடுகள். சுற்றமும் என்றதனால், படைவீரர்கள், படைத்தலைவர்கள் மட்டுமன்றி தம் சுற்றத்தாரான, கரன், தூடணன், திரிசிரன் முதலியவர்களும் அழிந்தனர் என்பதைக் குறிப்பித்தவாறாம்.

64. ''சொல்'' என்தன் வாயில் கேட்டார்;
தொடர்ந்து எழு சேனையோடும்
''கல்'' என்ற ஒலியில் சென்றார்,
கரன் முதல் காளை வீரர்;
எல் ஒன்று கமலச் செங்கண்
இராமன் என்று இசைத்த ஏந்தல்
வில் ஒன்றில், கடிகை மூன்றில்,
ஏறினர் விண்ணில் என்றாள். (3231)

(எல் - சூரிய கிரணங்கள்; ஒன்று - படிந்த; இசைத்த - சொல்லப்பட்ட; ஏந்தல் - பெருமையிற் சிறந்தோன்; கடிகை - நாழிகை)

''எனக்கு நேர்ந்ததை என் வாயினாலேயே கேட்டறிந்த காளைகள் போன்ற பருவமும் வீரமும் நிறைந்த கரன் முதலாகிய வீரர்கள், என்னைத் தொடர்ந்து எழுந்து வந்த நால்வகைப் படைகளோடும், கல் என்ற பேராரவாரத்தோடும் போர் முனைக்குச் சென்றார்கள்; அங்கே சூரியனின் ஒளியால் மலர்கின்ற தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையுடைய, இராமன் என்று புகழ்ந்து சொல்லப்படுகின்ற பெருமையில் சிறந்தோன், தனி ஒருவனின், ஒரே வில்லினில், மூன்று நாழிகைப் பொழுதிற்குள் அவர்கள் எல்லாம் வானுலகாகிய சுவர்க்கத்திற்குச் சென்றார்கள்'' என்றாள் சூர்ப்பணகை.

தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தானே தன் வாய் மொழியால் தனது அண்ணனான கரனுக்குத் தெரிவித்தாள் என்பதை ''சொல் என்தன் வாயில் கேட்டார்'' என்றார்; ஆண்மையும், வீரமும் மிக்க வீரருக்குக் காளையை உவமை கூறுவது கவிமரபு. கொதித்துக் கொண்டிருந்த இராவணனிடம், தன் பக்கத்து உறவினர்கள் எல்லாம் சிறிது நேரத்திலேயே இறந்து போயினர் என்ற செய்தியைக் கூறும் போதும் கூட, ''எல் ஒன்று கமலச் செங்கண் இராமன் என்று இசைத்த ஏந்தல்'' என்று இராமனின் கண்ணின் புகழ்பாடும் சூர்ப்பணகையின் காம மிகுதி உணர்க.

65. இராவணன் சினமும் இரக்கமும்

''தாருடைத் தானையோடும் தம்பியர், தமியன் செய்த
போரிடை, மடிந்தார்'' என்ற உரை செவி புகாதமுன்னம்,
காரிடை உருமின், மாரி கனலொடு பிறக்குமாபோல்
நீரொடு நெருப்புக் கான்ற, நிறை நெடுங்கண்கள் எல்லாம். (3232)

(தார் - போர் மாலை; தமியன் - தனியான ஒருவன்; கார் - மேகம்; உரும் - இடி; மாரி - மழை; கனல் - நெருப்பு; கான்ற - சிந்த; தார் - முன்னணிச் சேனையுமாம்)

தனித்த ஒருவனாகவே நின்று போர் செய்து, போர் மாலைகள் அணிந்து முன்னணிப்படையுடன் மற்ற சேனைகளோடும் சென்ற தனது தம்பிமார்களான கரன், தூடணன், திரிசிரன் ஆகியோர் அப்போரில் இறந்துபட்டனர் என்று சூர்ப்பணகை கூறக்கேட்ட உடனேயே, மேகத்திடையே எழுகின்ற இடியினால் ஒரு பக்கம் மழையும், ஒரு பக்கம் நெருப்பும் வந்து விழுவது போன்ற, இராவணனின் வரிசையாக அமைந்த நிறைந்த இருபது கண்களும் ஒரு பக்கம் கண்ணீரையும் ஒரு பக்கம் நெருப்பையும் சிந்துவன ஆயின.

மேகத்திற்கு இராவணனும், மேகம் கொட்டும் நீர் மழைக்கு இராவணன் சோகத்தால் பெருக்கும் கண்ணீரும், மேகம் கொட்டும் நெருப்பு மழைக்கு இராவணன் கோபத்தால் சிந்தும் சினத்தீயும் உவமைகள். தம்பியர் இறந்ததால் சோகமும், அவர்களைக் கொன்ற இராமன் மேல் சீற்றத்தால் கோபமும் உண்டாயின என்பதாம். இடிக்கும் போது மழையும் மின்னலும்

தோன்றுவது இயல்பு; மழையை நீர் இடி என்றும் மின்னலை நெருப்பு இடி என்றும் கூறுவதுண்டு. நீருக்கும் நெருப்புக்கும், கண்ணீரையும் சினத்தையும் உவமை கூறிய நயம் நோக்குக.

66. இராவணன் ''நீ இழைத்த குற்றம் என்ன?'' என்று வினவுதல்

ஆயிடை எழுந்த சீற்றத்து அழுந்திய துன்பம் மாறி,
தீயிடை உகுத்த நெய்யின், சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய,
''நீஇடை இழைத்த குற்றம் என்னைகொல், நின்னை, இன்னே,
வாயிடை இதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய?'' என்றான். (3233)

(சீற்றம் - கோபம்; ஊற்றம் - மிகுவித்தல்; ஆயிடை - அச்சமயத்தில்; அழுந்துதல் - அடங்குதல்; வலிதல் - வன்மை செய்தல்; இடை - இடம்)

அச்சமயத்தில் இராவணனுக்கு எழுந்த கோபம் சிறிது வேறுபட்டு அடங்கி, நெருப்பில் சொரிகின்ற நெய், அதனுள்ளிருக்கும் கொழுந்தைத் தூண்டி விட்டு ஊக்குவிப்பது போல், மீண்டும் சினம் மிகுந்து, சூர்ப்பணகையை நோக்கி, ''நீ அவர்களுக்கு இழைத்த குற்றம் என்ன? ஏன் அவர்கள் உன்னை இவ்வாறு வலிந்து வாயிடையிருக்கும் இதழையும், மூக்கையும் அரிந்தார்கள்? அந்த அளவுக்கு நீ என்ன தவறு செய்தாய்?'' என்று கேட்டான்.

தீயில் சொரியும் நெய் திடீரெனப் பற்றி விடாது. சிறிது நேரம் அடங்கி இருக்கும். நெய் ஊற்றுவதே தீ பற்றி எரிய வேண்டும் என்பதனால் தானே? எனவே அது நெருப்பைக் கொழுந்து விட்டு எரியச் செய்வது போல, கரன் முதலிய தம்பியர் மடிந்த செய்தியைக் கேட்டதும் சீற்றம் கொண்ட இராவணன், சிறிது அடங்கி, பின்னர் சூர்ப்பணகையின் மீது மாறாக் கோபம் கொண்டு இவ்வாறு கேட்டான் என்க. இங்கே வாயிடை இதழும் அவர் அரிந்தனர் என்பதை அவ்வாறே கொள்ளவேண்டும். இதற்குச் சிலர் வலிந்து பொருள் கூறுவர். ஓசை உட்புகும் வழி ஆதலால் செவியை வாய் என்றும், செவி மடலை இதழ் என்றும் கூறியதாகக் கூறுவர். காதும், மூக்கும் அறுபடும் பொழுது வாய் இதழும் அறுபட்டுத் தானே ஆகவேண்டும்! வலிந்து பொருள் கொள்ளத் தேவையில்லை. முன்பே ''மேல்வாய் நீங்கிப் பல்லெல்லாம் உறத் தோன்றும் பகுவாயள்'' என்று கூறியதும் நோக்குக.

67. சூர்ப்பணகை தான் செய்தது கூறுதல்

''என்வயின் உற்ற குற்றம்,
யாவர்க்கும் எழுத ஒண்ணாத்
தன்மையன் இராமனோடும்
தாமரை தவிரப் போந்தாள்,

மின்வயின் மருங்குல் கொண்டாள்,
வேய்வயின் மென் தோள் கொண்டாள்,
பொன்வயின் மேனி கொண்டாள்,
பொருட்டினால் புகுந்தது'' என்றாள். (3234)

(தவிர - இழக்க; வயின் - இடம்; வேய் - மூங்கில்; பொருட்டு - காரணம்; மருங்குல் - இடை; புகுந்தது - நேர்ந்தது)

அதற்குச்சூர்ப்பணகை, ''என்னிடம் நேர்ந்த குற்றம் யாதெனில், தேர்ந்த சிற்பக் கலைஞராலும் எழுத முடியாத பேரழகு படைத்தவனான இராமன் என்பவனோடு, தனது இருப்பிடமாகிய தாமரை மலரை விட்டு நீங்கி வந்தவளும், மின்னலிடமிருந்து தன் இடையின் நுண்மையையும் ஒளியையும் பெற்றவளும், மூங்கிலிடமிருந்து தனது மென்மையான தோள்களைப் பெற்றவளும், பொன்னிடத்திலிருந்து தனது மேனியழகைப் பெற்றவளுமான ஒருத்தியின் காரணமாக நேர்ந்தது'' என்றாள்.

''யாவர்க்கும் எழுதவொண்ணாத் தன்மையன் இராமன்'' என்று காப்பியத்தில் பல விடத்தும் வருவது காண்க. தான் செய்த குற்றத்தைப் பற்றிச் சொல்ல நினைத்தவள், தன் அண்ணனிடம் பேசுகிறோம் என்ற நினைவும் நீங்கி, இராமனைப் புகழ ஆரம்பிக்கிறாள். பின்னர் ஒருவாறு அமைதிப்படுத்திக் கொண்டு, இராவணனுக்கு ஏற்றவாறு கூறத் தொடங்குவதை உணர்க. இடைக்கு மின்னலையும், தோளுக்கு மூங்கிலையும், மேனி எழிலுக்குப் பொன்னையும் உவமை கூறுவது கவிமரபு. ஆனால் இங்கே கம்பன், உவமானப் பொருள்களையே உபமேயமாக்கிக் கூறியிருப்பது ஒரு நயம். சீதையின் அழகு ஒரு உவமையில் அடங்காது என்பது போதரும்.

68. சீதையின் அழகை விரிவாக எடுத்து உரைத்தல் [14 பாடல்கள்]

''ஆர் அவள்?'' என்னலோடும், அரக்கியும், ''ஐய! ஆழித்
தேர் அவள் அல்குல்; கொங்கை, செம்பொன் செய்குலிகச் செப்பு;
பார்அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தது அம்மா!
பேர் அவள், சீதை'' என்று வடிவு எலாம் பேசலுற்றாள்; (3235)

(குலிகம் - சாதிலிங்கம் / இங்குலிகம்; பார் - நிலம் / பூமி; வடிவு - உருவ நலன்கள்; பாக்கியம் - பேறு / நல்வினை)

''அத்தகையவள் யார்?'' என்று இராவணன் கேட்டவுடன், சூர்ப்பணகை, ''ஐயனே! அவளுடைய அல்குல் சக்கரம் பூட்டிய தேரின் தட்டினைப் போன்று அகன்றது; அவளுடைய கொங்கைகள் மாற்றுயர்ந்த சிவந்த பொன்னினால் செய்யப்பட்ட இங்குலிகச் செப்பினைப் போன்று குவிந்தது; அவளுடைய திருவடிகள் நம் ஜனஸ்தானத்தில்பட, இப்பூமி மிகுந்த பேறு பெற்றிருக்கிறது. அவளுடைய பெயர் சீதை என்பதாகும்.''

என்று கூறி, மேலும் அவளுடைய உருவ நலன்களையெல்லாம் விரிவாகக் கூறத் தொடங்கினாள்.

''குலிகச் செப்புஅன கொம்மை வரிமுலை'' என்பது சீவகசிந்தாமணி. இதுகாறும் அவள் வசிக்கின்ற ஜனஸ்தானத்தில் எந்தத் தேவமகளிரின் காலடிகளும் பட்டது இல்லை. ஆதலால் இப்பொழுது சீதையின் திருவடிகள் இப்பூமியை ஸ்பரிசித்ததால், இப்பூமி நல்வினைப் பயன் பெற்றது என்றாள் என்க.

69. ''காமரம் முரலும் பாடல்; கள் எனக்கனிந்த இன்சொல்;
தேமலர் நிறைந்த கூந்தல்; ''தேவர்க்கும் அணங்குஆம்'' என்னத்
தாமரை இருந்த தையல், சேடிஆம் தரமும் அல்லள்;
யாம்உரை வழங்கும் என்பது ஏழைமைப்பாலது அன்றோ?'' (3236)

(முரல்தல் - இசைத்தல்; காமரம் - ஒருவகைப் பண்; கள் - தேன்; தேம் - நறுமணம் / இனிய; நிறைந்த - நிரம்பிய; அணங்கு - தெய்வம்; சேடி - பணிப்பெண்; தரம் - தகுதி; ஏழமை - அறியாமை)

''காமரம் என்று ஒலிக்கின்ற இனிய இசைப் பாடல் போன்றும், தேனினும் இனியது, சுவை முதிர்ந்தது என்று கூறும்படியும் அமைந்த இனிமையான சொற்களை உடையவள்; நறுமணம் மிக்க, இனிய மலர்கள் நிறைந்த கூந்தலை உடையவள்; தேவர்களெல்லாம் தெய்வம் எனப் போற்றும்தகுதி படைத்தவள்; தாமரைமலரில் வீற்றிருக்கும்திருமகள்கூட, இவளுக்குப் பணிப்பெண்ணாகும்தகுதி படைத்தவள் அல்லள். அத்தனை பேரழகு படைத்தவள்; அவளின் வனப்பின் சிறப்பை எடுத்து நான் விரித்துரைப்பது என்பது அறியாமையின் பாற்பட்டதாகும்''.

காமரம் என்பது ஒருவகை இனிமையான பண்வகையைச் சார்ந்தது; முன்னர், ''திரு இங்கு வருவாள் கொல்லோ?'' என்று சீதையைத் திருமகளோடு ஒப்பிட்டாள்; பின்னர் ''தாமரை தவிரப் போந்தாள்'' என்று சீதை திருமகளேதான் என்றாள், இப்பொழுது, ''தாமரையிருந்த தையல் சேடியாம் தரமும் அல்லள்'' என்று சீதை, திருமகளிலும் உயர்ந்த பேரழகுடையவள் என்றும் கூறிய நயம் நோக்குக.

70. ''மஞ்சு ஒக்கும் அளக ஓதி; மழை ஒக்கும் வடித்த கூந்தல்;
பஞ்சு ஒக்கும் அடிகள்; செய்ய பவளத்தின் விரல்கள்; ஐய!
அம்சொற்கள் அமுதில் அள்ளிக்கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும், கடலினும் பெரிய கண்கள்!'' (3237)

(அம் - அழகிய / இனிய; மஞ்சு - மேகம்; அளகம் - முன் நெற்றி மயிர்; ஓதி - கூந்தல் / குழல்; வடித்த - வாரப்பட்ட; மழை - மேகம்; வதனம் - முகம்; கஞ்சம் - தாமரை)

''தலைவனே! அழகிய இனிய சொற்களை தேவாமிர்தத்திடமிருந்து முகந்துகொண்டவளானசீதையின்முன்நெற்றி மயிர்மேகத்தைப்போன்று

கருநிறம் கொண்டதாய் இருக்கும்; அவளால் வாரித் தொங்கவிடப்பட்ட தாழ்ந்த குழல், நீருண்ட கரிய மேகத்தை ஒத்திருக்கும்; அவளுடைய பாதங்கள் செம்பஞ்சைப் போன்று மென்மையானவை; அவளுடைய விரல்கள் சிவந்த பவழங்களை ஒத்திருக்கும்; அவளுடைய களங்கமற்ற முகமோ அளவில் தாமரை மலரினை ஒத்திருந்தாலும், அம்முகத்திலுள்ள கண்களோ, கடலிலும் மிகப் பெரியனவாகும்'' என்றாள்.

''வண்டிசைக்கும் கூந்தல், மதர் விழிகள் சென்று உலவ, எண் திசையும் போதாது இடம்'' என்பது ஒரு பழம்பாடல்; ''மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்'' என்று பின்னர் கூறுவதும் காண்க. ''அமிழ்தத்து அன்னஅம்தீம் கிளவி'' என்பது குறுந்தொகை. ஓதி என்பது முன்னுச்சி மயிர். இது பெண்களின் கூந்தலின் ஐந்து வகைப்பாகுபாட்டுள் ஒன்று. இதைப் பனிச்சை என்பர்.

71. ''ஈசனார் கண்ணின் வெந்தான்''
என்னும் ஈது இழுதைச்சொல்; இவ்
வாசம் நாறு ஓதியாள்ளைக்
கண்டனன், வவ்வல் ஆற்றான்,
பேசில் ஆம் தகைமைத்து அல்லாப்
பெரும் பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான்
அனங்கன், அவ்உருவம் அம்மா!'' (3238)

(வாசம் - நறுமணம்; நாறுதல் - கமழுதல்; வவ்வுதல் - கவர்தல்; பிணி - காமநோய்; பிணித்தல் - வருத்துதல்; நீண்ட - பெரிய; ஈசனார் - சிவபெருமான்; இழுதை - அறிவிலி / அறியாமை; அங்கம் - உடம்பு; அநங்கன் - உடம்பு இல்லாதவன் / அங்கம் அற்றவன் / மன்மதன் / உருவிலி)

''உருவிலியாகிய மன்மதன், சிவபெருமானது நெற்றிக் கண்ணினால் வெந்து போய்த்தான் தன் உருவம் அழியப் பெற்றான்'' என்று சொல்லும் இச்செய்தி அறியாமையின் பாற்பட்டதாகும். ஏன் எனில், இந்த மன்மதன், இயற்கையிலேயே நறுமணம் கமழும் கூந்தலை உடைய சீதையைப் பார்த்திருக்கிறான்; அவளைக் கவர்ந்து செல்ல வேண்டும் என்று எண்ணியிருக்கிறான்; அது அவனுக்கு இயலாது போயிற்று; அத்தகைய ஆற்றல் அவனிடம் இருக்கவில்லை; எனவே வெளியில் சொல்ல முடியாது மிக்க காமநோயால் பிணிக்கப்பட்டு அவள் மேல் கொண்ட மிகுந்த ஆசையினால் தன் உடல் சிறிது சிறிதாக மெலிந்து தேய்ந்து அழிந்து இறுதியில் உருவமே இல்லாதவனாகி விட்டான் என்பதே உண்மை'', என்று கூறினாள்.

மன்மதன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்டான் என்று முன்பே பாலகாண்டத்துக் கண்டதை நினைவு கூர்க. அந்த

உண்மைக் காரணத்தைத் தவிர்த்து, அதைச் சீதையின் மேல் ஏற்றிச் சூர்ப்பணகை கூறுவது, இராவணனுக்குச் சீதையின்பால் ஒருவகைக் காதலை ஏற்படுத்தவே என்க; மன்மதன் அவளைக் கவர இயலாதவனானான். எனவே நீ அவளைக் கைப்பற்று என்பது உட்கருத்து. உத்தம இலக்கணம் பொருந்திய பத்தினிப் பெண்களின் கூந்தல் இயற்கை மணமுடையது என்பது பெறப்பட்டது.

72. ''தெவ்உலகத்தும் காண்டி; சிரத்தினில் பணத்தினோர்கள்
அவ்உலகத்தும் காண்டி; அலை கடல் உலகில் காண்டி;
வெவ்உலை உற்ற வேலை, வாளினை, வென்ற கண்ணாள்
எவ்உலகத்தாள்? அங்கம் யாவர்க்கும் எழுத ஒணாதாள்!'' (3239)

(உலை - கொல்லன் உலை; வெவ் - கொடிய / வெப்பமுடைய; தெவ் - பகைவர்; தெவ்வுலகு - தேவருலகம்; காண்டி - தேடிப்பார்; பணம் - படம்)

''வெப்பமுடைய கொடிய கொல்லனின் உலைக்களத்தில் வடித்துக் கூர்மையாக்கப்பட்ட வேலையும் வாளையும் வெல்லும் தன்மை படைத்த கண்களையுடையவளான அவள், யாவராலும் சித்திரத்தால் வடிக்கப்பட முடியாத அங்கங்கள் உடையவள். நீ வேண்டுமானால் உன்னுடைய பகைவர்களான தேவர்கள் வாழும் தேவலோகத்திலும் தேடிப்பார்; தலையில் படத்தினையுடைய நாகர்கள் வாழ்கின்ற பாதாளலோகத்திலும் தேடிப்பார்; அலைகள் நிறைந்த கடல்களால் சூழப்பெற்ற இந்நிலவுலகத்திலும் தேடிப்பார்; அத்தகைய பேரழகுடைய ஒருத்தியை உன் ஆணை செல்லத்தக்க இம்மூவுலகத்திலும் காணமுடியாது. அப்படியானால் இவள் எவ்வுலகத்தைச் சேர்ந்தவள் என்பது தான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது'' என்றாள் சூர்ப்பணகை.

கொல்லன் உலையில் காய்ச்சிக் கோட்டம் தீர்த்துக் கூர்மையுறச் செய்த வேல், வாள் என்று அவள் கண்களுக்கு எத்தனை சிறப்புச் சேர்த்திருக்கிறாள் பாருங்கள்; இம்மூவுலத்திலுள்ள எந்தப் பெண்ணும் சீதைக்கு அழகில் ஒப்பாகமாட்டாள் என்பது சூர்ப்பணகையின் துணிபு.

73. ''தோளையே சொல்லுகேனோ?
சுடர் முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ?
அல்லவை வழுத்துகேனோ?
மீளவும் திகைப்பதல்லால்,
தனித்தனி விளம்பல் ஆற்றேன்;
நாளையே காண்டி அன்றே?
நான் உனக்கு உரைப்பது என்னோ?'' (3240)

(சுடர் - ஒளி; அல்லவை - அவையல்லாத பிற உறுப்புக்கள்)

''அவளுடைய தோள்களின் அழகை எடுத்துச் சொல்லுவேனோ? ஒளி பொருந்திய அவள் முகத்தில் சஞ்சரிக்கின்ற, ஒளி பொருந்திய, வாளை மீன்

போன்றகண்களின்அழகைஎடுத்துச்சொல்லுவேனோ? இவைதவிரமற்ற அவளுடைய அங்கங்களின் அழகை வருணிப்பேனோ? நான் ஒவ்வொரு முறை சொல்லத் தொடங்கும் போதும் திகைத்து நின்று விடுகின்றேனே அல்லாமல் அவளுடைய உறுப்புக்கள் ஒவ்வொன் றையும் தனித்தனியே வருணிக்கும் ஆற்றல் அற்றவள் ஆனேன்; நீ தான் அவளை நாளைக்குச் சென்று பார்க்கப் போகிறாய் அல்லவா? நான் ஏன் இப்போது உனக்குச் சொல்ல வேண்டும்? நீயே நேரில் சென்று கண்டு கொள்'' என்றாள் சூர்ப்பணகை.

சொல்லுவதில் பாதியைச் சொல்லி, மீதியை உரியவர்களையே பார்த்துக் கொள்ளச் சொல்லுவது பெண்களின் சொல்வன்மையுள் ஒன்று. சூர்ப்பணகையும் அதனையே கையாண்டு, இராவணனது ஆசையைத் தூண்டுகிறாள் என்பதாம்.

74. ''வில்ஒக்கும் நுதல் என்றாலும்,
வேல்ஒக்கும் விழி என்றாலும்,
பல்ஒக்கும் முத்து என்றாலும்,
பவளத்தை இதழ் என்றாலும்,
சொல்ஒக்கும்; பொருள் ஒவ்வாதால்;
சொல்லல் ஆம்உவமை உண்டோ?
''நெல்ஒக்கும் புல்'' என்றாலும்,
நேர் உரைத்து ஆகவற்றோ!'' (3241)

(நுதல் - நெற்றி / புருவம்; ஒவ்வா - பொருந்தாது; நேர் - பொருந்துமாறு; வற்று - கூடியது / வல்லது)

''சீதையின் புருவங்களும், நெற்றியும் வில்லைப் போல் வளைந்தது என்று சொன்னாலும், அவளது விழிகள் வேலைப் போல் கூர்மையானது என்று சொன்னாலும், அவளுடைய பற்கள் முத்தைப் போன்று வெண்மையானது என்று சொன்னாலும், அவளுடைய இதழ்களுக்கு நிறத்தால் பவளம் ஒப்பு என்று கூறினாலும், சொல் அளவில் இவையனைத்தும் பொருந்துவனவாகத் தோன்றும். ஆனால் அவற்றிற் குரிய உண்மையான பொருளை நோக்கினால் அவை பொருந்தாது. எனவே அவளது உறுப்புக்களுக்கு நிகர் என்று கூற வேறு ஏதேனும் உவமைகள் இருக்கின்றனவா? இல்லையே! நெல்லைப் போன்றது தான் புல்லும் என்று கூறினாலும், அது பொருத்தமாகக் கூறப்பட்டது என்று கொள்ள முடியுமோ? முடியாதன்றோ? அதைப் போலவே அவளது ஒவ்வொரு உறுப்புக்கும் உவமை கூறுவது முடியாதது'' என்றாள் சூர்ப்பணகை.

உவமை கூறும் பொழுது, உபமேயப்பொருளைக் காட்டிலும், உபமானப் பொருள் தரத்தால் உயர்ந்ததாயிருக்க வேண்டுமென்பது நூற்கொள்கை. சீதையின் உறுப்புக்களுக்கு எந்த உபமானமும் கூறுதல்

அரிது. கூறினாலும் அது சிறப்புடையதாக அமையாது. நெல்லும் புல்லும் ஒரே மாதிரியாகத் தோற்றம் தந்தாலும், பயன்பாட்டால் நெல் எவ்வளவு உயர்ந்தது என்பதும் புல் எவ்வளவு தாழ்ந்தது என்பதும் இங்கு நோக்கத்தக்கது. எனவே அவற்றின் தோற்றத்தைக் கொண்டே உபமானமாகக் கூறுதல் இயலாது என்பதாம். சீதையின் வடிவு நலன்கள் வருணனைக்கு அப்பாற்பட்டது. நேரில் கண்டுதான் அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறி இராவணனின் காமத்தை மிகுவிக்கிறாள் சூர்ப்பணகை என்பதாம்.

75. ''இந்திரன் சசியைப் பெற்றான்; இரு மூன்று வதனத்தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும்
செந்திருமகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கு இலை உனக்கே; ஐயா!'' (3242)

(சசி - இந்திராணி; இருமூன்று - ஆறு; அந்தரம் - நடுவு நிலைமை; நன்மை - சிறப்பு)

''ஐயனே! தேவேந்திரன் தனக்குரிய நாயகியாக இந்திராணியைப் பெற்றிருக்கிறான்; ஆறு முகங்களை உடைய முருகப் பெருமானின் தந்தையான சிவபெருமானும் உமாதேவியைத் தன் மனைவியாகப் பெற்றிருக்கிறான்; தாமரை மலர் போலச் சிவந்த கண்களையுடைய திருமாலும், சிவந்த அழகிய இலக்குமியைத் துணைவியாகப் பெற்றிருக் கிறான்; அவ்வாறே இப்போது நீயும் சீதையைப் பெற்றிருக்கிறாய்; இதனை நடுவுநிலையிலிருந்து ஆராய்ந்து பார்த்தால், அவர்களுக்கு எல்லாம் ஒரு சிறப்பும் இல்லை. எல்லாச் சிறப்பும் உனக்கே அமைந்திருக்கிறது'' என்றாள் சூர்ப்பணகை.

''சீதையைப் பெற்றாய் நீயும்'' என்று, அவன் சீதையைப் பார்க்கும் முன்பே சூர்ப்பணகை கூறுவதை நோக்குக; அவன் அவளை அடையும் ஆற்றல் பெற்றவன் என்பதும், அவன் அவளை அடைய வேண்டும் என்ற விரைவும் கருதி இவ்வாறு கூறினாள் என்க. அவனது காமத்தை மிகுதிப்படுத்தும் ஒரு சூழ்ச்சி நிறைந்த சொல்இது என்க. அந்த மூன்று தேவமகளிரை விடவும், உனக்கு வாய்த்த மானிடப் பெண்ணான சீதை மிக்கச் சிறப்புடையவள். இதுவே அவர்கள் மூவரிலும் வேறுபட்டு நீ பெற்ற பேறு என்று அவன் ஆசையைத் தூண்டுவதைக் காண்க. இவ்வாறு நான் கூறியது உன்னுடைய தங்கை என்பதாலோ, உன்னிடத்துப் பாசம் மிகவுடையவள் என்பதாலோ அல்ல; நான் நடுவுநிலையில் இருந்து ஆராய்ந்து பார்த்தே கூறுகிறேன் என்று தன் கூற்றை உறுதிப்படுத்தும் நயமும், அவள் சொல் வன்மையும் நோக்குக. கம்பன் பின் வருவன வற்றை முன்னால் குறிப்பால் காட்டும் இயல்புடையவன் என்பதை முன்னர்ப் பல இடங்களில் காட்டியிருக்கிறோம். அது போலவே இங்கும் ''நன்மை அவர்க்கு; இலை உனக்கு ஐயா!'' என்று பொருள் தரும்படியும் சொற்களைப் பயன்படுத்தியிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. காப்பியப்

போக்கிற்கு மிகவும் பயனுடைய ஒரு சொற்றொடர் இது. இதனை ''அவவாக்கு'' என்பார் வடநூலார்.

76. ''பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த மின்னை
வென்ற நுண் இடையினாளை
மாகத்தோள் வீர! பெற்றால்,
எங்ஙனம் வைத்து வாழ்தி?'' (3243)

(மாகம் - ஆகாயம் / மகா+கம் - பெரிய விசும்பு; ஒருவன் - ஒப்பற்றவன் / சிவபெருமான்; பாகம் - பாதி; ஒருவன் - மற்றொருவன் / திருமால்; பங்கயம் - தாமரை; பொன் - திருமகள்; ஆகம் - மார்பு; அந்தணன் - அம்+தண்+அனன் - அழகிய தண்ணளி உடையவன் / பிரமன்; மின் - மின்னற்கொடி)

''வானவாள உயர்ந்த தோள்களை உடையவனே! மும்மூர்த்திகளில் ஒருவனாகிய ஒப்பற்றவனாகிய சிவபெருமான், தன் மனைவி உமாதேவியைத் தனது மேனியின் இடப்பாகத்தில் வைத்துக் கொண்டு வாழ்கிறான்; தாமரை மலரில் வீற்றிருக்கும் அழகிய திருமகளை, மும்மூர்த்திகளில் மற்றொருவனாகிய திருமால் தனது மார்பில் தங்க வைத்துக் கொண்டிருக்கிறான்; அழகிய கருணையை உடையவனான பிரமதேவன் தனது துணைவியாகிய கலைமகளைத் தன் நாக்கில் வைத்துக் கொண்டு வாழ்கின்றான்; மேகத்தில் தோன்றுகின்ற மின்னற் கொடியையும் தன் ஒளியினால் வென்ற நுட்பமான இடையைக் கொண்ட சீதாதேவியை நீ அடையப் பெற்றால், அவளை எங்கே வைத்துக் கொண்டு எவ்வாறு நீ வாழப் போகிறாய்?'' என்றாள் சூர்ப்பணகை.

மும்மூர்த்திகளும் தங்கள் மனைவியரைத் தங்களை விட்டுத் தனியாக வைக்காமல், தங்களுடலிலேயே வைத்திருப்பது நோக்குக. ''கணவரைச் சேர்ந்த பின்பு, பிரிவினை ஓர்ந்து, உமை, செந்திரு, வாணி, பிரிவதின்றி, மருவினர் பாகமும், ஆகமும், நாவும், மகிழ்ந்து என்றுமே'' என்பது சிராப்பள்ளிக்கோவை. இந்த மும்மூர்த்திகளின் தேவியரைக் காட்டிலும் மேம்பட்டவள் சீதாதேவி; எனவே அவளை இராவணன் இம்மூன்று இடங்களுக்கும் மேலான ஓர் இடத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது சூர்ப்பணகையின் ஆவல் என்க. முன் பாடலைப் போல இதிலும் ஓர்வசைப்பொருள்தொனிப்பதையும்உணர்க; எங்ஙனம்வாழ்தி? என்றால் உன் குணத்திற்கு நீ அவளை வைத்துக் கொண்டு எவ்வாறு வாழப் போகிறாய்? உன்னால் வாழமுடியாது என்ற பொருளும் குறிப்பால் உணர்த்தியது தெரிகிறது என்க. ''யாக்கையும், மார்பும் ஆகம் என்று உரைப்பர்'' என்பது பிங்கல நிகண்டு.

77. ''பிள்ளைபோல் பேச்சினாளைப்
பெற்றபின், பிழைக்கலாற்றாய்;
கொள்ளை மா நிதியம் எல்லாம்
அவளுக்கே கொடுத்தி; ஐய!
வள்ளலே! உனக்கு நல்லேன்;
மற்று, நின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க்கு எல்லாம்
கேடு சூழ்கின்றேன் அன்றே?'' (3244)

(பிள்ளை - இளங்குழவி / சிறுகுழந்தை; பேச்சு - மழலை மொழி; கொள்ளை போதல்; மிகுதியாகத் துய்த்தல்; சூழ்தல் - ஆராய்ந்து செய்தல்; கிள்ளை - கிளி)

''தலைவனே! சிறுகுழந்தை போல மழலைச் சொல் மிழற்றும் சீதாதேவியை அடைந்த பின்பு, நீ அவளுக்கு எந்தத் தவறும் இழைக்க மாட்டாய்; உன் உரிமை மகளிரால் அளவுக்கு அதிகமாக அனுபவிக்கப் படும் பொருட்செல்வம் அனைத்தையும் அவளுக்கே கொடுத்துவிடு! வரையாது வழங்கும் வள்ளல் தன்மை பெற்றவனே! இவ்வாறு நீ சீதையை அடைய நான் உன்னைத் தூண்டுவதால் உனக்கு வேண்டுமானால் நல்லவளாக ஆவேன்; ஆனால் உன் அரண்மனையில் வாழும் கிளிப் பிள்ளை போல இனிய சொற்களையுடைய உரிமை மகளிர்க்கெல்லாம் நான் தீமை விளைவிப்பவள் ஆகின்றேன் அல்லவா?'' என்றாள் சூர்ப்பணகை.

இந்தப் பாடலிலும் வசைப் பொருள் தொனிப்பது தெரிகிறது; ''பிள்ளை போல் பேச்சினானைப் பெற்ற பின் பிழைக்கலாற்றாய்'' என்பதில் ''பிழைக்கலாற்றாய்'' என்ற சொற்றொடர் நீ பிழைத்திருக்கமாட்டாய், அழிந்து போவாய், இறந்து படுவாய் என்று பொருள் தொனிப்பதை உணர்க. இறுதி அடியில் ''கேடு சூழ்கின்றேன்'' என்ற சூர்ப்பணகையின் கூற்றும், உனக்கு நான் உண்மையிலேயே கேடு விளைவிக்கின்றேன் என்ற உட்பொருள் தருவதையும் நோக்குக. கொள்ளை போகின்ற செல்வம் என்பதில் ''கொள்ளை'' என்ற சொல் தேவைக்கு மிகுதியான பொருள் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது என்க. எப்போதும் திறந்து கிடக்கின்ற களஞ்சியம் ஆதலால் பலராலும் பலகாலும் எடுத்துச் செல்லப்படும் செல்வம் என்பதனால் ''கொள்ளை மா நிதியம்'' என்றார் என்றலும் ஒன்று.

78. ''தேர் தந்த அல்குல் சீதை,
தேவர்தம் உலகின், இம்பர்,
வார் தந்த கொங்கை யார்தம்
வயிறு தந்தாளும் அல்லள்;

தார் தந்த கமலத்தாளை,
தருக்கினர் கடைய, சங்க
நீர் தந்தது; அதனை வெல்வான்
நிலம் தந்து நிமிர்ந்தது அன்றே.'' (3245)

(இம்பர் - இவ்வுலகு; வார் - கச்சு; சங்க நீர் - சங்குகளை உடைய கடல்; தருக்கு - செருக்கு; தார் - மலரும் ஆம்; தந்த - போன்ற / அணிந்த / மலர்ந்த; வெல்வான் - வெல்லும் பொருட்டு)

''தேர்த்தட்டுப் போன்ற அகன்ற அல்குலை உடைய சீதாதேவி, தேவர்களின் விண்ணுலகத்திலும், இம்மண்ணுலகத்திலும் உள்ள, கச்சணிந்த கொங்கைகளையுடைய மகளிர்களின் வயிற்றிலிருந்து பெறப்பட்டவள் அல்லள். அவள் அயோநிஜை; சங்குகளை உடைய வெண்மையான திருப்பாற் கடலை, செருக்கினால் தேவர்களும் அசுரர்களும் கடைந்த போது, மலர்மாலையணிந்த திருமகள் தோன்றினாள் அல்லவா? அந்தச் செயலை வெல்லும் பொருட்டு, ஐம்பெரும் பூதங்களில் மற்றொன்றாகிய நிலம், வல்லவனான சனகன் யாகத்திற்காகத் தன்னை உழும் பொழுது, இந்தச் சீதையைத் தோற்றுவித்து, அக்கடலினும் பெருமையால் நிமிர்ந்து நின்றது'' என்றாள் சூர்ப்பணகை.

மகளிரின் அல்குலைத் தேர்த்தட்டுக்கு உவமிப்பது கவிமரபு; முதல் இரண்டு அடிகளில் சீதை அயோ நிஜை என்பது நிறுவப்பட்டது; திருப்பாற்கடலில் தோன்றிய இலக்குமியை வெல்லும் பொருட்டு யாக நிலம் தோற்றுவித்தவள் இந்தப் பேரழகுடைய சீதை என்பதாம். ''எழுகின்ற தெள்ளமுதோடு எழுந்தவளும் இழிந்து ஒதுங்கித் தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி'' என்றும் முன்னர்க் கூறியதையும் நினைவு கூர்க.

79. ''மீன் கொண்டு ஊடாடும் வேலை
மேகலை உலகம் ஏத்த,
தேன் கொண்டு ஊடாடும் கூந்தல்,
சிற்றிடை, சீதை என்னும்
மான் கொண்டு ஊடாடும் நீ; உன்
வாள் வலி உலகம் காண,
யான் கொண்டு ஊடாடும் வண்ணம்,
இராமனைத் தருதி என்பால்.'' (3246)

(ஊடாடுதல் - திரிதல் / சுழல்தல் / கலந்து பழகுதல்; வேலை - கடல்; மேகலை - ஆடை / ஆபரணம் / இடையணி; ஏத்துதல் - கொண்டாடுதல்; தேன் - வண்டு; என்பால் - என்னிடம்; சிறு - நுண்ணிய)

''மீன்களைத் தன்னகத்தே கொண்டு சுற்றித் திரியும் கடலை, மேகலை போன்று ஆடையாக உடுத்திக் கொண்டிருக்கும் இவ்வுலகம் போற்றுமாறு, வண்டுகள் சுழன்று திரிகின்ற நறுமணமுடைய

கூந்தலையும், நுண்ணிய இடையையும் உடைய சீதை என்னும், இந்த மான் போன்ற மருண்ட பார்வை கொண்டவளை நீ அடைந்து அவளுடன் இன்புற்றிருப்பாயாக; உனக்கு நான் செய்த இவ்வுதவிக்குக் கைம்மாறாக, உன்னுடைய வாளாற்றலை இவ்வுலகம் கண்டு வியக்குமாறு, அச்சீதை யுடன் உடன் உறையும் இராமனை வெற்றி கொண்டு, நான் அவனுடன் கலந்து வாழுமாறு, என்னிடம் தந்து விடுவாயாக!'' என்றாள் சூர்ப்பணகை.

கடலை இவ்வுலகம் ஆடையாக உடுத்தியிருப்பதாகவும், ஆபரணமாக அணிந்திருப்பதாகவும் கூறுவது கவிமரபு. சூர்ப்பணகையின் காம மிகுதியும், வெட்கமில்லாத் தன்மையும் இப்பாடலில் தெரிய வருகிறது. தன் அண்ணனிடமே தனக்கு இராமனைத் தந்துவிடும்படி வேண்டுவதும், சீதையை அபகரித்து வந்து இன்பமாய் இரு என்று கூறுவதும் அருவருக்கத்தக்கன என்றாலும் அதனைச் சூழ்நிலை நோக்கிக் கவிஞன் கூறியிருக்கும் பான்மை கருதத்தக்கது.

80. ''தருவது விதியே என்றால், தவம் பெரிது உடையரேனும்,
வருவது வரும் நாள் அன்றி, வந்து கைகூட வற்றோ?
ஒருபது முகமும் கண்ணும், உருவமும், மார்பும், தோள்கள்
இருபதும், படைத்த செல்வம் எய்துதி இனி, நீ, எந்தாய்!'' (3247)

(விதி - ஊழ்வினை; தருவது - பயனளிப்பது; நாள் - காலம்; வற்றோ - வல்லதோ?; கை கூடுதல் - கிட்டுதல்; உருவம் - வடிவம்; செல்வம் - சிறப்புமாம்)

''என் தந்தை போன்றவனே! ஒருவன் செய்த செயலினால் விளையும் நன்மையையும் தீமையையும் தருவது விதி தான் என்றால், மிக்க தவம் செய்தவர்களுக்குக் கூட, அதன் பயன் வந்து சேர வேண்டிய காலம் என்று எப்பொழுது விதிக்கப்பட்டிருக்கிறதோ, அப்போது தான் வந்து சேரும். அதற்குரிய காலத்தே அன்றி, அதற்கு முன்னரே வந்து சேருமோ? சேராது; எனவே நீ பத்து முகங்களும், இருபது கண்களும், நெடிய தோற்றமும், இருபது வலிய தோள்களும் படைத்திருந்தும் என்ன பயன்? இது வரை நீ எந்தச் சுகமும் அனுபவிக்க வில்லையே! சீதையை அடையப் போகின்ற இப்பொழுது முதல்தான் நீ உன்னுடைய பெரும் சிறப்பின் பயனை அடையப் போகிறாய்'' என்றாள் சூர்ப்பணகை.

''நீ பெரும் தவம் செய்தவன்; என்றாலும் இதுவரை இந்தச் சீதையை நீ அடைய முடியாததற்குக் காரணம் உனது ஊழ்வினை தான்; இப்பொழுது தான் அந்தக் காலம் வந்திருக்கிறது. இவளை நீ அடைவாய் என்றால் நீ பெற்றிருக்கின்ற நெடிய தோற்றமும், பத்து முகங்களும், அகன்ற மார்பும், இருபது கண்களும், வலிய தோள்களும் பயன் பெற்றன ஆகும்'' என்றாள் என்பதாம். நன்மையோ, தீமையோ அவை வருதற்குரிய காலத்தில் தான் வரும். ''அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த காரியங்கள் ஆகா'' என்பது மூதுரை; ''சிறுகா, பெருகா, முறை பிறழ்ந்து வாரா; உறு காலத்து

ஊற்று ஆகா; ஆம் இடத்தே ஆகும்'' என்பது நாலடியார் 110. இப்போது உன்னிடம் இருக்கும் செல்வம் எல்லாம் பெருஞ்செல்வம் அல்ல; நீ சீதையைப் பெற்றால் தான் உண்மையான பெரும் செல்வம் அடைந்தவன் ஆவாய்'' என்றாள் என்பதாம்.

81. ''அன்னவள்தன்னை நின்பால்
உய்ப்பல் என்று அணுகலுற்ற
என்னை, அவ் இராமன் தம்பி
இடைப் புகுந்து, இலங்கு வாளால்
முன்னை மூக்கு அரிந்து விட்டான்;
முடிந்தது என் வாழ்வும்; உன்னின்
சொன்னபின், உயிரை நீப்பான்
துணிந்தனென்'' என்னச் சொன்னாள். (3248)

(உய்தல் - சேர்ப்பித்தல்; இலங்கு - விளக்கம் மிக்க; நீப்பான் - நீக்கும் பொருட்டு)

''அப்படிப்பட்ட சிறந்த பேரழகுடையவளான சீதையை உன்னிடத்தில் சேர்ப்பிக்கலாம் என்று கருதி, அவளை நெருங்கித் தூக்க முயன்ற போது, என்னை அந்த இராமனுடைய தம்பியாகிய இலக்குவன், இடையிலே புகுந்து, தன்னிடமிருந்த ஒளிவீசும் வாட்படையினால், நான் அவனைத் தாக்கும் முன்பு, முதலில் என்னுடைய மூக்கைச் சிதைத்து விட்டான்; அப்பொழுதே என் வாழ்க்கை முடிந்து போயிற்று என்றாலும், அங்கே நிகழ்ந்தவற்றை உன் முன்னிலையில் கூறிய பின் என் உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து இங்கு வந்தேன்'' என்று கூறி முடித்தாள் சூர்ப்பணகை.

இவ்வாறே தன் மூக்கறுபட்ட பின்பு, தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணியவன், இராவணன் தம்பி கும்பகர்ணனும் ஆவான் என்பது குறிப்பிடத்தக்கது. போர் புரியும் போது கும்பகர்ணன் மூக்கை அறுத்தான் இராமன். கும்பகர்ணன் இராமனிடம் வேண்டுகின்றான் ''மூக்கிலா முகம் என்று, முனிவர்களும், அமரர்களும், நோக்குவார்; நோக்காமை, நுன்கணையால் என் கழுத்தை நீக்குவாய்; நீக்கிய பின், நெடுந்தலையைக் கருங்கடலுள் போக்குவாய்; இது நின்னை வேண்டுகின்ற பொருள் என்றான்'' என்பதையும் இங்கு எண்ணுக.

82. இராவணனுக்குக் காமம் மிகுதல் [6 பாடல்கள்]

கோபமும், மறனும், மானக் கொதிப்பும், என்று இனைய எல்லாம்,
பாபம் நின்ற இடத்து நில்லாப் பெற்றிபோல், பற்று விட்ட;
தீபம் ஒன்று ஒன்றை உற்றால் என்னல் ஆம்செயலின், புக்க
தாபமும் காமநோயும் ஆர்உயிர் கலந்த அன்றே. (3249)

(மறன் - மறம் / வீரம்; பாபம் - பாவம் / தீவினை; நின்ற - நிலைபெற்ற; பெற்றி - தன்மை; தீபம் - விளக்கு; தாபம் - வெம்மை)

தீவினை நிலை பெற்றுவிட்ட இடத்தில், நல்வினையும் அவற்றால் விளையும் புண்ணியமும் நில்லாது விலகி ஓடிப்போகும் தன்மை போல, தங்கைக்கு விளைவிக்கப்பட்ட துன்பம் கருதி எழுந்த கோபம், வீரம், அவமானத்தால் உண்டான மனக்கொதிப்பு என்று கூறப்படுகின்ற இந்த உணர்ச்சிகளெல்லாம், இராவணனிடமிருந்து நீங்கி விட்டன; ஒரு விளக்கிலிருந்து மற்றொரு விளக்குப் பற்றி சுடர் விட்டு எரிவது போல, இராவணனுக்கு, முன்னரே உள்ளுக்குள் இருந்த காமம் என்னும் நோயும், இப்போது அதனால் உண்டாகிய வெம்மையும், அவனுடைய அருமையான உயிரிலேயே கலந்து விட்டது போலாயிற்று.

83. கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான். (3250)

(அரன் - சிவபெருமான்; காமன் - மன்மதன்; கடிந்த - அறுத்து ஒழித்த / போக்கிய; நின்ற - உயிரோடு இருக்கின்ற; உரன் - வலிமை; பழி - இழுக்கு / வசை; வரன் - வரம் / மேன்மை)

முன்பு சிவபிரானையும் வெற்றி கொண்ட மன்மதனது காமபாணத்தால் விளைந்த காம நோய்க்கு உட்பட்ட இராவணன், சூர்ப்பணகை இப்போது சொல்லியதைக் கேட்டதால் அந்தச் சீதையை மட்டும் மறக்காதவனானான்; ஆனால், தன் தம்பி கரன் மாண்டு போனதை மறந்து விட்டான்; தன் தங்கை சூர்ப்பணகையின் மூக்கினைப் போக்கியும், இன்னும் உயிர் வாழந்து கொண்டிருக்கும் இராம இலக்குவர்களையும் அவர்களது வலிமையையும் மறந்து விட்டான்; அதனால் அவனுக்கும் அவன் குலத்திற்கும் ஏற்பட்ட இழுக்கையும் மறந்து விட்டான். முன்பு தன் தவத்தால் சிவபெருமான், பிரமன் முதலியவர்களிடமிருந்து பெற்ற வரங்களையும், அவற்றின் ஆற்றலையும் கூட மறந்து விட்டான்; ஆனால் சீதையை மட்டும் மறக்காதவனானான்.

இராவணன் சீதையினிடத்துத் தோய்ந்த மனத்தை உடையவனானான். அதைத்தவிர மற்ற எதனிலும் அவன் மனம் ஈடுபடவில்லை என்பது பெறப்பட்டது. காமத்தால் அனைத்தையும் மறந்தவன் சீதையை மட்டும் மறக்கவில்லை என்பதாம்.

84. சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தைதானும்
உற்று, இரண்டு ஒன்று ஆய்நின்றால், ஒன்று ஒழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ? மறக்கல் ஆம்வழி மற்று யாதோ?
கற்றவர் ஞானம் இன்றேல், காமத்தைக் கடக்கல் ஆமோ? (3251)

(நாமம் - பெயர்; ஞானம் - மெய்யறிவு)

சிறிய, மெல்லிய, நுண்ணிய இடையை உடைய சீதை என்னும் பெயரும், தனது உள்ளமும், தனித்தனி இரண்டு என்று சொல்ல முடியாமல் ஒன்றாகிக் கலந்து போய்விட்டால், இவற்றுள் ஏதாவது ஒன்றை மறந்து, மற்றொன்றை மட்டும் நினைத்துக் கொண்டிருக்க, அதற்கென்று தனிப்பட்ட வேறோரு இரண்டாவது மனம் இருக்கிறதோ? இல்லையே மனம் என்பது எல்லோருக்கும் ஒன்று தானே? எனவே அவளையும் அவளது பெயரையும் மறக்கக் கூடிய வேறு வழியாது? எவ்வளவு கல்வியறிவுடையவராய் இருந்தாலும், உண்மையான மெய்யறிவு இல்லை என்றால், இது போன்ற காமம் மிகுதியை வெல்லுவது என்பது ஆகக்கூடிய செயலோ? அல்ல.

மெய்யறிவில்லையேல், எவ்வளவு கற்றவராயிருந்தாலும் காமத்தைக் கடத்தல் இயலாது என்பது பொதுப் பொருள். இதன் மூலம் இராவணன் வேதங்களனைத்தையும் கற்றவன் தான், என்றாலும் நன்மை இது தீமை இது என்று பிரித்தறிய முடியாத உயர்ந்த மெஞ்ஞானத்தைப் பெற்றிருக்கவில்லை எனவே அவனால் இந்தக் காமத்தை வெல்ல முடியவில்லை என்ற சிறப்புப் பொருளைப் பெற வைத்த நயம் காண்க. மனம் ஓர் உணர்ச்சிவயப்பட்டால், அதை மாற்ற ஞானமே வேண்டும்; ஞானத்தைத் தவிர வேறு வழியில்லை என்பது கருத்து. ''கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என் சொல்லுகேன்'' என்பார் தாயுமானவர். முன்பு கம்பரே, ''பெண்கள்பால் வைத்த நேயம், பிழைப்பரோ சிறியர் பெற்றால்'' என்ற இடத்தும், சிறியர் என்பது மெய்யறிவில்லாதவரையே உணர்த்திற்று என்பதையும் இங்கு நினைவு கூர்க. ''நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?'' என்பதும் ''இரண்டு மனம் வேண்டும் நினைத்து வாழ ஒன்று; அதை மறந்து வாழ ஒன்று'' என்பதும் கவிஞர் கண்ணதாசனின் மறக்க இயலா வரிகள். ''கேடு வரும் பின்னே; மதிகெட்டு வரும் முன்னே'' என்பது பழமொழி.

85. மயிலுடைச் சாயலாளை
வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்,
இதயம்ஆம் சிறையில் வைத்தான்;
அயிலுடை அரக்கன் உள்ளம்,
அவ்வழி, மெல்ல மெல்ல,
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்போல்,
வெதும்பிற்று அன்றே. (3252)

(எயில் - மதில் / அரண்; வஞ்சித்தல் - வசப்படுத்துதல்; அயில் - வேற்படை; நாள் - பகல் போது; வெதும்புதல் - உருகுதல்; வெயில் - சூரியன்)

உயர்ந்து ஓங்கிய நீண்ட மதில்களை அரணாக உடைய இலங்கை மாநகரின் அரசனான இராவணன், மயில் போன்ற அழகிய சாயலை உடைய சீதையை வஞ்சித்துக் கவர்ந்து வந்து தனது இடமாகிய அசோக வனத்தில் சிறை வைக்கும் முன்பே, தனது உள்ளம் என்னும் சிறையில் வைத்து விட்டான். வேற்படையை உடைய அவ்வரக்கனான இராவணனது உள்ளம் அந்த நிலையில், சூரிய கிரணங்களின் முன்னால் ஒரு நல்ல பகல் பொழுதில் வைத்த வெண்ணெய் போலக் கொஞ்சம் கொஞ்சமாக வெப்பமடைந்து உருகிப் போயிற்று.

''சானகியை மனச்சிறையில் கரந்த காதல்'' என்றும் பின்னால் கூறப்போவதும் இங்கு கருதத்தக்கது. இராவணனின் இலங்கை நகரத்துள் யாரும் உட்புக முடியாது. அது நீண்ட மதில்களால் அரண் போலச் சூழப்பட்டது; அவ்வாறு புகுந்துவிட்டாலும் இராவணன் இருப்பிடத்தை யாரும் எளிதில் அணுக முடியாது; அவ்வாறு அடைந்து விட்டாலும் அவன் மனத்திற்குள் யாரும் செல்ல முடியாது. என்றாலும் இத்தனையையும் தாண்டி, சீதை எளிதில் அவன் மனச் சிறையில் சென்று அகப்பட்டுக் கொண்டாள் என்று கூறியது ஒரு நயம். ''வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்'' என்பது, ''வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால்'' என்று முன்பு பாலகாண்டத்தில் கூறியதை நினைவுபடுத்தும்; ''ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில், வெண்ணெய் உணங்கல் போல்'' என்பது குறுந்தொகை; அவனுடைய வீரம், உறுதி எல்லாம் நலிவடைய ஆரம்பித்து விட்டன என்பது கருத்து.

86. விதியது வலியினாலும், மேல்உள விளைவினாலும்,
பதிஉறு கேடு வந்து குறுகிய பயத்தினாலும்,
கதிஉறு பொறியின் வெய்ய காமநோய், கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல், வளர்ந்தது அன்றே. (3253)

(விதி - ஊழ்வினை; மேல்உள - முன்னரே நிகழ்ந்த / இனிமேல் நிகழ வேண்டிய; விளைவு - நிகழ்ச்சி; பதி - நகர் / இலங்கை; குறுகுதல் - நெருங்குதல்; பயம் - பயன்; கதி - விரைவு; பொறி - மனம்; வெய்ய - கொடிய; மதியிலி - அறிவிலி / மூடன்; மறைய - பிறர் அறியாதவாறு; கேடு - நாசம்; தீமை - பாவச்செயல்)

ஊழ்வினையின் ஆற்றலினாலும், இனி நிகழ வேண்டிய செயல்கள் மிக இருப்பதனாலும், இவ் இலங்கை நகருக்கு நேர வேண்டிய இடர்கள் நெருங்குவதாலும், இராவணன் மனத்தில் எழுந்த காமம் என்னும் நோய் விரைவாக, கல்வி பயின்றும் அதனைப் பயன்படுத்தத் தெரியாத மூடன், தான் செய்யும் பாவச்செயல்கள் பிறர் ஒருவரும் அறியா வண்ணம் செய்தாலும், அது எவ்வாறு விரைவில் எல்லோரும் அறியும்படி வெளிப்பட்டுத் தெரிந்து விடுமோ, அதுபோல விரைந்து வளர்ந்தது.

இராவணன் மனத்தில் தோன்றிய காமநோய் விரைந்து வளர்ந்து எல்லோரும் அறியும் நிலையை அடைந்தது என்பதற்குக் கவிஞன் ஒரு எடுத்துக்காட்டுக் கூறுகிறான். ஒரு அறிவற்ற மூடன், தான் செய்யும் தீயசெயல்கள் ஒருவருக்கும் தெரியாது என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டு, மேலும் மேலும் அதனையே செய்கிறான். ஆனால் சிறிது நாள் கழித்து அது எப்படியும் வெளிவந்து எல்லோருக்கும் தெரிந்து விடுவதைப் போல, இராவணன் காமநோய், அவன் எவ்வளவு மறைக்க முயன்றாலும், வெளிப்பட்டுத் தெரிந்து விடுகிறது என்பதாம். ''மேல் உளவிளைவு'' என்பது முன்னர் பலர் இட்ட சாபத்தினால், இனிமேல் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் என்பதைக் குறிக்கும். அவை வேதவதி சாபம், நந்தி சாபம், அநரண்யன் சாபம் ஆகியன என்க. ''கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்'' என்னும் பழமொழியை நினைக. ''கண்டவர்இல் என உலகத்துள் உணராதார், தங்களது, தகைவின்றித் தாம் செய்யும் வினைகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவாம்'' என்பது கலித்தொகை. ''மறை வழிப்பட்ட பழிமொழி தெய்வம் பறை அறைந் தாங்கு ஓடிப்பறக்கும்; கழிமுடைப் புன்புலால் நாற்றம் புறம் பொதிந்து மூடினும் சென்று தைக்கும் சேயார் முகத்து'' என்பது நீதிநெறி விளக்கம்.

87. பொன்மயம் ஆன நங்கை மனம்புக, புன்மை பூண்ட
தன்மையோ, அரக்கன் தன்னை அயர்த்தது ஓர் தகைமையாலோ,
மன்மதன் வாளி தூவி நலிவது ஓர் வலத்தன் ஆனான்?
வன்மையையமாற்றும்ஆற்றல்காமத்தேவதிந்ததுஅன்றே? (3254)

(புன்மை - இழிகுணங்கள்; அயர்த்தல் - மறத்தல்; வாளி - அம்பு / மலர் அம்புகள்; நலிவது - வருத்துவது; வலம் - ஆற்றல்; வன்மை - வலிமை; வதிதல் - நிலைத்தல்; மாற்றல் - போக்குதல்; ஆற்றல் - சக்தி)

இராவணனுக்கு அஞ்சி ஒளிந்திருக்க வேண்டிய உருவமற்ற மன்மதன், இப்போது தனது மலரம்புகளைச் சொரிந்து பேராற்றல் வாய்ந்த இராவணனையே துன்புறுத்துகிறானே? இதற்கு என்ன காரணம்? பொன் போன்ற பேரழகு வாய்ந்த சீதை அவன் மனத்தில் புகுந்ததனாலா? அல்லது அவனது இயற்கையான இழிவான குணங்களினாலா? அல்லது அவன் எப்போதும் சீதையையே நினைத்துக் கொண்டு இருப்பதனால், தன்னைத் தானே மறந்து போய் விட்ட காரணத்தாலா? எப்படி மன்மதனுக்கு இவ்வளவு ஆற்றல் வந்தது? எவ்வளவு பெரிய வல்லவனாயிருந்தாலும், அந்த வல்லமையைப் போக்கும் சக்தி, காமநோய்க்கு மட்டும் உண்டு போலும்!

வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்திற்குத் தான் உண்டு என்று பொதுவாகக்கூறி, அத்தகைய துன்பம், மன்மதன்மூலம் இராவணனுக்கும் வந்தது என்று கூறினான் என்பதாம். காமம் போன்ற இழிகுணங்களும், மறதியும் தோன்றும் போது, மனவலி கெடும் என்பதாம். தூவுதல் என்ற

சொல். மெத்தெனச் சொரிதல் என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதை உணர்க.

88. இராவணன் தன் அரண்மனைக்குச் செல்லுதல்

எழுந்தனன் இருக்கைநின்று; ஆண்டு, ஏழ் உலகத்துளோரும்
மொழிந்தனர் ஆசி; ஓசை முழங்கின, சங்கம் எங்கும்;
பொழிந்தன பூவின் மாரி; போயினர் புறத்தோர் எல்லாம்;
அழிந்துஅழிசிந்தையோடும்ஆடகக்கோயில்புக்கான். (3255)

(இருக்கை - அரியணை / தவிசு / ஆசனம்; ஆண்டு - அப்பொழுது; ஆசி - வாழ்த்து; புறத்தோர் - வெளியிலிருந்து வந்தவர்கள் / அருகே இருந்தவர்கள்; அழிதல் - வருந்துதல் / வலிமை குறைதல்; ஆடகம் - பொன்; ஓசை - கீர்த்தி)

இராவணன் தான் அமர்ந்திருந்த சிம்மாசனத்தினின்றும் எழுந்தான்; அப்போது, அங்கு கூடியிருந்த ஏழ் உலகத்தவர்களும் அவனுக்கு ஆசிர்வாத மொழிகளைக் கூறினர்; எல்லாப் பக்கங்களிலும் சங்கு முழக்கம் பேரொலி செய்தது. அருகில் அமர்ந்திருந்தவர்களும், வெளியிலிருந்து வந்திருந்தவர்களும் பூமழையை இராவணன் மீது சொரிந்து, தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்; இராவணனும் நிலை குலைந்த மனத்துடன், தனது பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அரண்மனை சென்று சேர்ந்தான்.

ஓசைஎன்ற சொல்லுக்குக்கீர்த்தி என்று பொருள்கொண்டு மெய்க்கீர்த்தி பாடினர்என்றும் பொருள்கொள்வதுண்டு; அரசன்சிங்காதனத்தில் அமரும் போதும், அதனின்று எழும் போதும் சங்கு முழங்குதலும், சான்றோர்கள் மலர்தூவி ஆசி கூறுதலும் மெய்க்கீர்த்தி பாடுதலும் மரபு. ஆடகம் என்பது நான்கு வகைப் பொன்னின் ஒருவகை. மற்ற மூன்று, கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம் என்பன.

89. இராவணன் காமநோய் முதிர்தல் [6 பாடல்கள்]

பூவினால் வேய்ந்து செய்த பொங்கு பேர் அமளிப் பாங்கர்,
தேவிமார் குழுவும் நீங்கச் சேர்ந்தனன்; சேர்தலோடும்,
நாவிநாறு ஓதி நவ்வி நயனமும், குயமும், புக்குப்
பாவியா,கொடுத்தவெம்மைபயப்பயப்பரந்ததுஅன்றே. (3256)

(தேவிமார் - மனைவியர் / உரிமை மகளிர்; வேய்ந்து - அலங்கரித்து; பொங்கு - உயர்ந்த; அமளி - படுக்கை; பாங்கர் - பக்கம்; நாவி - புனுகு நெய் / கத்தூரி; நாறுதல் - மணம் வீசுதல்; நவ்வி - மான்; நயனம் - கண்கள்; குயம் - கொங்கைகள்; பாவித்து - எண்ணி; பயப்பய - மெல்ல மெல்ல; ஓதி - கூந்தல்; வெம்மை - காமதாபம்)

மலர்களாலும், மலர்ச் சரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அமைக்கப் பட்ட உயர்ந்த பெரிய படுக்கையின் பக்கம் நின்றிருந்த தன் மனைவிமார்,

உரிமை மகளிர் ஆகிய கூட்டங்களை விட்டு விலகிச் சென்று இராவணன் படுக்கையை அடைந்தான். அடைந்தவுடன், கத்தூரிப் புனுகு நெய்யின் நறுமணம் கமழும் கூந்தலையுடைய பெண்மான் போன்ற சீதாதேவியின் கண்களும் அவள் கொங்கைகளும் அவன் எண்ணத்தில் புகுந்து கொடிய காமதாபத்தை மிகுதிப் படுத்த, அது கொஞ்சம் கொஞ்சமாக அவன் உடல் முழுதும் பரவியது.

உத்தமசாதிப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் உண்டு என்பது குறுந்தொகை. இது இக்காப்பியத்தில் சீதையின் கூந்தல் குறித்துப் பல்வேறு இடங்களில் கூறப்படுவது காண்க.

90. நூக்கல் ஆகலாத காதல் நூறு நூறுகோடி ஆய்ப்
பூக்க, வாச வாடை வீசு சீதநீர் பொதிந்த மென்
சேக்கை வீ கரிந்து, திக்கயங்கள் எட்டும் வென்ற தோள்,
ஆக்கை தேய, உள்ளம் நைய, ஆவி வேவது ஆயினான். (3257)

(நூக்கல் - விலக்குதல்; பூத்தல் - மிக்குத் தோன்றுதல்; வாசம் - நறுமணம்; வாடை - காற்று; சீதம் - குளிர்ச்சி; சீதநீர் - பனி நீர்; சேக்கை - படுக்கை; வீ - பூக்கள்; ஆக்கை - உடல்; தேய்தல் - மெலிதல்; நைதல் - வலியழிதல்; ஆவி - உயிர்; வேவது - வெதும்புவது; கயம் - கஜம் / யானை; காதல் - காம இச்சை)

தள்ளி விலக்கி விட முடியாத காமம் என்னும் காதல், இராவணன்பால் பல நூறு கோடி மடங்காகப் பெருகித் தோன்றவும், நறுமணமும், காற்றும் வீசுவதால் உண்டாகும் குளிர்ச்சி பொருந்திய நீரும் பதிக்கப்பட்டு ஆக்கப்பட்ட மெல்லிய படுக்கையில், உள்ள பூக்கள் இவனது காம வெப்பத்தால் கரிந்து போகவும், எட்டுத் திசைகளையும் போரிட்டு வென்ற அவனது தோள்களும், உடம்பும் மெலிந்து போகவும், அவன் உள்ளம் வலியழிந்து போகவும், உயிரும் வெதும்பும்படி ஆயினான்.

அவனது காமவெப்பத்தால் மலர்களாலான படுக்கை கரிந்தது; அவன் வலுவான உடம்பு மெலிந்தது; உள்ளம் வலியழிந்து உயிரும் வெதும்பியது, என்றது அவனது காமமிகுதியை உணர்த்த என்க. நூறு நூறு கோடி என்பது அளவு மிகுந்தது என்பதைக் குறித்து நின்றது.

91. தாது கொண்ட சீதம்மேவு சாந்து, சந்தமென் தளிர்,
போது, கொண்டு அடுத்தபோது, பொங்கு தீ மருந்தினால்
வேது கொண்டதென்ன, மேனி வெந்து வெந்து, விம்மு தீ
ஊது வன்துருத்திபோல், உயிர்த்து உயிர்த்து, உயங்கினான். (3258)

(தாது - வாசனைப் பொடிகள் / மகரந்தம்; சீதம் - குளிர்ச்சி; சந்து - சந்தனம்; சந்தம் - அழகு; போது - பூக்கள்; அடுத்தல் - சேர்த்தல்; தீ - தீய / கொடிய; வெந்து - வெதும்பி; விம்மு - மிக்க; உயிர்த்தல் - நெடுமூச்சு விடுதல் / பெருமூச்சு எறிதல்; உயங்குதல் - வருந்துதல்; பொங்குதல் - மிகுதல்; வேது - சூடான ஒத்தடம்)

மகரந்தம், வாசனைப் பொடிகள், குளிர்ச்சி பொருந்திய சந்தனம், அழகிய மெல்லிய தளிர்கள், பூக்கள் இவற்றையெல்லாம்எடுத்துக் கொண்டு, பணிப்பெண்கள் அவனுக்கு சைத்தியஉபசாரங்கள் செய்வதற்காக அணுகியபோது, மிக்கு எழுகின்ற தீய மருந்தினால் சூடான ஒத்தடம் கொடுத்தது போன்று, எரிச்சலால் தன் உடம்பெல்லாம் வெந்து போகவும், பொங்குகின்ற காமத்தீயினால் கொல்லன் உலையிலிருக்கும் துருத்தியிலிருந்துஎழும் நெருப்புப் போல, அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டு,உடல் சோர்ந்து வருந்தினான் இராவணன்.

வேது கொள்ளுதல் என்பது நோய் நீங்க, மருந்துகளிலிருந்து எழும் ஆவியை உடல் முழுவதும் பரவும்படி செய்து கொள்ளுதலைக் குறிக்கும். ஒரு அருமையான பாடல் வரி. ''செந்தழலின் சாற்றைப் பிழிந்து, செழுஞ்சீதச் சந்தனம் என்று யாரோ தடவினார்'' என்ற நந்திக்கலம்பகம் வரிகள் இங்கு நினைவு கூரத்தக்கன.

92. தாவியாது, தீது எனாது, தையலாளை மெய் உறப்
பாவியாத போது இலாத பாவி மாழை, பானல், வேல்,
காவி, ஆன கண்ணி மேனி காண மூளும் ஆசையால்,
ஆவி சாலநொந்துநொந்து,அழுங்குவானும் ஆயினான். (3259)

(தாவித்தல் - ஸ்தாபித்தல் / நிலை நிறுத்துதல்; தீது - குற்றம்; மெய் - உண்மை; மாழை - மாவடு; பானல் - கருநெய்தல் மலர்; ஆவி - உயிர்; சால - மிகவும்; அழுங்குதல் / துன்புறுதல் / அழிதல்; பாவித்தல் - கருதுதல் / எண்ணுதல்; மூளுதல் - மிகுதல்; காவி - நீலோற்பலமலர்)

தன் மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியாமலும், பிறன்மனை நயத்தல் தீது என்று கருதாமலும், சீதையை உண்மையாகவே எப்பொழுதும் மனத்தில் நிறுத்தியிருக்கின்ற பாவியாகிய இராவணன், மாவடு, கருநெய்தல் மலர், வேல், நீலோற்பல மலர் போன்ற கண்களை உடைய சீதையின் பொன் போன்ற மேனியின் அழகைக் காணவேண்டும் என்று மேன்மேலும் பெருகுகின்ற ஆசையினால், தன் உயிர் மிகவும் நொந்து, மிக வருந்துபவன் ஆயினான்.

''பாவியாத போது இலாத'' என்றது நினையாத நேரமே இல்லாத என்றும், எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருக்கும் என்றும் பொருள்படும்; பாவித்தல் என்பது மனத்தில் ஒரு உருவத்தைச் சங்கற்பித்துக் கொள்ளுதல் என்று பொருள்படும். ''உன்னையல்லாமல் பாவியேன் பாவியேன்'' என்பது தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருமொழி.

93. பரம்கிடந்த மாதிரம் பரித்த,
பாழி யானையின்
கரம் கிடந்த கொம்பு ஒடிந்து
அடங்க வென்ற காவலன்

மரம் குடைந்த தும்பிபோல்,
அனங்கன் வாளி வந்து வந்து
உரம் குடைந்து, நொந்து நொந்து,
உளைந்து உளைந்து ஒடுங்கினான். (3260)

(பரம் - பாரம் / சுமை; கிடந்த - தங்கிய; மாதிரம் - திசைகள் / பூமி; பரித்தல் - பாதுகாத்தல் / தாங்குதல்; பாழி - வலிமை / பருத்த; அநங்கன் - மன்மதன்; வாளி - மலரம்புகள்; நொந்து - வருந்தி; விளைந்து - அழிந்து; ஒடுங்குதல் - சோர்தல்; உரம் - மார்பு / உடம்புமாம்; தும்பி - வண்டுகள்)

இவ்வுலகத்தின் சுமையைத் திசைகள் தோறும் தாங்கி நிற்கின்ற பருத்த வலிமை மிகுந்த திக்கு யானைகளின் தந்தங்களின் மேல்கிடந்த துதிக்கைகளை ஒடித்து, அவையனைத்தையும் அடக்கி வெற்றி கொண்ட அரசனான இராவணன், இப்போது, பட்ட மரத்தைக் குடைகின்ற வண்டுகள் போல, மன்மதனின் மலரம்புகள் மிகுதியாக வந்து அவன் மார்பையும் உடலையும் துளைக்க, அதனால் உடலும் உள்ளமும் நொந்து போய், வருந்திச் செயலற்று ஒடுங்கிப் போனான்.

இராவணன்திசையானைகளைவென்று யானைகளின்மருப்பு ஒடித்தது உத்தரகாண்டம் திக்கு விசயப்படலத்தில் விரிவாகப் பேசப்பட்டிருப்பது காண்க. அத்தகைய பேராற்றல் வாய்ந்த இராவணனின் உடலையும் மார்பையும் இப்பொழுது பட்ட மரத்தைத் துளைக்கின்ற வண்டுகள் போல, மன்மதனின் மலரம்புகள் தாக்கின. அதனால் அவன் நொந்து மூச்சடங்கி நின்றான் என்பதாம். துதிக்கையினைக் கொம்பின் மேல் வைத்துக் கொள்ளுதல் யானையின் இயல்பு; எனவே ''யானையின் கரம் கிடந்த கொம்பு'' என்றார். ''வலியுடை மருப்பின் அல்லால், வாரணம் தடக்கை வையாது'' என்பது சீவகசிந்தாமணி; பட்டமரத்தின் உள் உள்ள புழு, பூச்சிகள் முதலியவற்றைத் தின்பதற்காக வண்டுகள், அவைகளைத் துளைத்து உட்செல்லும் இயல்புடையன என்பது குறிக்கப்பட்டது. துன்ப மிகுதிகாட்ட வந்து வந்து நொந்து நொந்து, உளைந்து உளைந்து, என்று மூன்று அடுக்குகளைப் பயன்படுத்தினார் என்க.

94. ''கொன்றை துன்று கோதையோடு ஓர்
கொம்பு வந்து என் நெஞ்சிடை
நின்றது, உண்டு கண்டது'' என்று,
அழிந்து அழுங்கும் நீர்மையான்,
மன்றல் தங்கு அலங்கல் மாரன்
வாளி போல, மல்லிகைத்
தென்றல் வந்து எதிர்ந்த போது,
சீறுவானும் ஆயினான். (3261)

(கோதை - கூந்தல்; அழுங்குதல் - வருந்துதல்; நீர்மை - தன்மை; மன்றல் - நறுமணம்; அலங்கல் - மாலை; மாரன் - மன்மதன்; சீறுதல் - மிகுந்த சினம்

கொள்ளுதல்; துன்றுதல் - பொருந்துதல்; எதிர்தல் - நேர்வருதல் / தாக்குதல் / தீண்டுதல்)

''கொன்றைப் பழங்களை நெருக்கிக் கட்டியது போன்ற கூந்தலையுடைய ஒரு பூங்கொடி போல்பவளான சீதை, வந்து, என் உள்ளத்தில் நின்றாள்; நான் அதனைக் கண்டேன்'' என்று புலம்பி வருந்தும் தன்மையனான இராவணன், நறுமணம் மிக்க மாலைகள் அணிந்த மன்மதனின் மலரம்புகள் போல, மல்லிகை மணத்தோடு கூடிய தென்றற்காற்று வந்து அவன் மேனியைத் தீண்டிய போது, அதுவும் அவனுக்குக் காமத்தீயை மிகுவிக்க, அதனால், அதன் மீது சீற்றம் கொள்வானாயினான்.

மகளிரின் கூந்தலைக் கொன்றையின் சரம் என்று கூறுவது கவிமரபு. ''கொன்றைஅம் பூங்குழலாள்'' என்பது சிலப்பதிகாரம்; ''கொன்றைப் பழக்குழற் கோதையர்'' என்பது வளையாபதி. நீட்சி பற்றியும் கொன்றைக் காய்களை மகளிரின் கூந்தலுக்கு உவமை கூறுவது உண்டு; மன்மதனின் மலரம்புகள் போல மல்லிகைத் தென்றலும் காமுகரை வருத்தும் என்பதாம். இப்பாடல் இராவணன் கண்ட சீதையின் உருவெளித் தோற்றத்தைக் கூறியது என்க.

95. இராவணன் வெளிவந்து ஒரு சோலையை அடைதல்

அன்ன காலை, அங்குநின்று எழுந்து, அழுங்கு சிந்தையான்,
''இன்ன ஆறு செய்வென்'' என்று, ஓர் எண்இலான், இரங்குவான்;
பன்னு கோடி தீபமாலை, பாலையாழ் பழித்த சொல்
பொன்னனார், எடுக்க, அங்கு, ஓர் சோலையூடு போயினான். (3262)

(அன்னகாலை - அப்பொழுது; எண் - எண்ணம் / கருத்து; இரங்குதல் - கவலையுறுதல்; பழித்தல் - இகழ்தல்; பொன் - திருமகள்; அனார் - போல்வர்; மாலை - வரிசை; அழுங்குதல் - வருந்துதல்; பாலை யாழ் என்பது ஒருவகைப் பண்; எடுத்தல் - தாங்குதல் / ஏந்துதல்; பன்னுதல் - சிறப்பித்துச் சொல்லுதல்; ஆறு - முறை; கோடி - எண்ணற்ற)

அப்பொழுது, உள்ளம் மிக வருந்தியவனான இராவணன், அந்தப் படுக்கையினின்றும் எழுந்து, ''என்ன செய்வது, எவ்வாறு செய்வது'' என்பதைப் பற்றி ஒரு கருத்தும் இல்லாதவனாய்க் கவலையுற்று, பாலை யாழிசையைப் பழிக்கும்படி, அதனினும் மேம்பட்ட இனிய சொற்களை யுடைய, இலக்குமி போன்ற பணிப் பெண்டிர், சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற எண்ணற்ற விளக்கு வரிசைகளை, தங்கள் கைகளில் ஏந்திவர, அங்கு அருகிலிருந்த ஒரு பூஞ்சோலையின் உட்புகுந்தான்.

பண்கள் நான்கு வகைப்படும் அவை குறிஞ்சி, மருதம், செவ்வழி, பாலை என்பன.

96. மாணிக்கம், பனசம்; வாழை மரகதம்; வயிரம், தேமா;
ஆணிப் பொன், வேங்கை; கோங்கம் அரவிந்தராகம்; பூகம்
சேண் உய்க்கும் நீலம்; சாலம் குருவிந்தம்; தெங்கு வெள்ளி;
பாணித் தண் பளிங்கு, நாகம்; பாடலம் பவளம் மன்னோ. (3263)

(பனசம் - பலாமரம்; தே - இனிய; மா - மாமரம்; ஆணிப்பொன் - மாற்று உயர்ந்த பொன்; அரவிந்த ராகம் - பத்மராகம்; சேண் - வான்; பூகம் - கமுகு மரம்; சாலம் - ஆச்சாமரம் / மராமரம்; தெங்கு - தென்னை; நாகம் - சுரபுன்னை / புன்னாகம்; பாணி - நீர்; தண் - குளிர்ச்சி; பாடலம் - பாதிரி மரங்கள்)

இராவணன் புகுந்த அச்சோலையுள் இருந்த பலாமரங்கள் மாணிக்க மயமாகவும், வாழை மரங்கள் மரகதம் போன்று பச்சை மயமாகவும், இனிய பழங்களைத் தரும் மாமரங்கள் வயிரம் போன்றனவாகவும், வேங்கை மரங்கள் மாற்றுயர்ந்த பொன் மயமாகவும், கோங்கு என்னும் மரங்கள் பதுமராகக் கற்கள் போன்றும், வானளாவ ஓங்கிய பாக்கு மரங்கள் நெடுந்தூரம் ஒளி வீசக் கூடிய நீலமணி மயமாகவும், ஆச்சாமரங்கள் குருவிந்தம் என்னும் ஒருவகை இரத்தினமயமாகவும், தென்னை மரங்கள் வெள்ளி மயமாகவும், சுரபுன்னை மரங்கள் தெள்ளிய குளிர்ச்சி பொருந்திய நீரின் தன்மையுடைய பளிங்கு மயமாகவும், பாதிரி மரங்கள் பவழ மயமாகவும் விளங்கின.

இராவணன் புகுந்த சோலையில் இருந்த மரங்கள் நவரத்தினங்களின் தன்மை கொண்டிருந்தன என்கிறான் கவிஞன். இது மேலோட்டமாகப் பார்ப்பதற்கு உயர்வு நவிற்சி போலத் தோன்றினாலும் இது உயர்வு நவிற்சி அன்று. இயற்கையிலேயே - உண்மையிலேயே - அப்படித் தான் அமைந்திருந்தது என்பதாம். காரணம் இராவணனுடைய தவம்; தெய்வத்தச்சனுடைய பேராற்றல்; பிரமனளித்த வரம். மரங்கள் மட்டுமன்று. அவற்றின் அடி, தளிர், இலை, பூ முதலியனவும் அவ்வவற்றிற்கு உரிய மணிகளாலும், பொன்னாலும் இயற்றப் பட்டிருந்தன; அவை தேனொழுக நின்று பழங்களையும் நல்கின; இந்தச் சோலையில்தான் இராவணன் சீதாதேவியைச் சிறை வைத்திருந்தான் என்பதும் பின்னர் சுந்தரகாண்டத்தில் கூறப்படும் பாடல்களிலிருந்து அறிகிறோம். கம்பன் மட்டும் இவ்வாறு பாடவில்லை. ஏனையத் தமிழ் இலக்கியங்களான சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம் ஆகியவையும் இவ்வாறே பேசுகின்றன.

97. இராவணன் சோலையிலுள்ள மண்டபத்திலுள்ள படுக்கையை அடைதல்

வான்உற நிவந்த செங்கேழ்
மணிமரம் துவன்றி, வான
மீனொடு மலர்கள் தம்மின்
வேற்றுமை தெரிதல் தேற்றா,

தேன்உகு, சோலை நாப்பண்,
செம்பொன் மண்டபத்துள், ஆங்கு ஓர்
பால்நிற அமளி சேர்ந்தான்;
பையுள் உற்று உயங்கி நைவான். (3264)

(பையுள் - துன்பம்; உயங்குதல் - மனமழிதல்; நைதல் - மெலிதல்; நிவந்த - ஓங்கிய; செங்கேழ் - சிவந்த நிறம் / நல்ல நிறமுமாம்; துவன்றி - நெருங்கி; மாகம் - ஆகாயம்; மீன் - நட்சத்திரங்கள்; அமளி - படுக்கை; நாப்பண் - நடுவில்; பால்நிறம் - வெண்மையான / தூய)

காமநோயால் மிக்கத் துன்பமுற்று வாடி வருந்தி மனமழிந்து மெலிபவனான இராவணன், வானளாவ உயர்ந்த சிறந்த நிறமுடைய மணிகளாலான மரங்கள் அடர்ந்து விளங்கவும், வானத்திலுள்ள நட்சத்திரங்களுக்கும் அந்தச் சோலையில் பூத்திருக்கின்ற தேனொழுகும் மலர்களுக்கும், வேற்றுமை தெரியாதபடி அமைந்திருக்கின்ற அந்தச் சோலையின் நடுவில் இருக்கும் ஒரு பொன் மயமான மண்டபத்தில் ஒருபக்கத்தில் இடப்பட்டிருக்கும் பால் போன்று வெண்மையான தூய படுக்கையில் சென்று சேர்ந்தான்.

98. சோலையின் அமைதி – பறவைகள் ஒலியடங்குதல்

கனிகளின், மலரின், வந்த கள் உண்டு களிகொள் அன்னம்,
வனிதையர் மழலை இன்சொல் கிள்ளையும், குயிலும், வண்டும்,
இனியன மிழற்றுகின்ற யாவையும், ''இலங்கை வேந்தன்
முனியும்'' என்று, அவிந்த வாய; மூங்கையர் போன்ற அன்றே. (3265)

(கிள்ளை - கிளி; மிழற்றுதல் - பேசுதல்; முனியும் - வெகுளும் / கோபிப்பான்; அவிந்த - மூடிய / அடங்கின / பேச்சற்ற; மூங்கையர் - ஊமையர்கள்; கள் - தேன்)

அந்தச் சோலையில் இருந்த பழங்கள், மலர்கள் முதலியவற்றிலிருந்து சிந்திய தேனை உண்டு களித்திருக்கும் அன்னங்கள், மகளிரின் மழலை போன்று இனிய சொற்களைப் பேசும் கிளிகள், குயில்கள், வண்டுகள், இனிய சொற்களைப் பேசும் இன்னும் உள்ள நாகணவாய்ப்புள் போன்ற ஏனைய பறவைகள், எல்லாமும், ''நாம் இப்போது கூவினால், இலங்கையரசனான இராவணன் கோபித்துச் சீறுவான்'' என்று அஞ்சி, பேச்சற்ற வாயினை உடையனவாக, ஊமையர்களை ஒத்திருந்தன.

பொதுவாகப் பெண்களின் இனிய சொற்களுக்குக் கிளியையும் மற்ற பறவைகளையும் உவமை கூறுவது வழக்கம். ஆனால் கம்பன் இங்கே கிளிகளின் கூவுதலை மனிதர் மழலை இன்சொல்லுக்கு உவமை கூறியிருப்பது ஒரு நயம். இராவணனுக்கு மனிதர்கள், தேவர்கள் மட்டுமல்ல, பறவைகளும் அஞ்சி, ஒலி அடங்கின என்பது புலப்படுத்தப்பட்டது.

99. பருவங்கள் கூட மாறுதல்

பருவத்தால் வாடை தந்த
பசும்பனி, அனங்கன் வாளி
உருவிப் புக்கு ஒளித்த புண்ணில்,
குளித்தலும், உளைந்து விம்மி,
''இருதுத்தான் யாது அடா?'' என்று
இயம்பினன்; இயம்பலோடும்,
வெருவிப் போய், சிசிரம் நீங்கி,
வேனில் வந்து இறுத்தது அன்றே. (3266)

(பருவம் - உரிய காலம்; அனங்கன் - மன்மதன்; குளித்தல் - புகுதல் / தோய்ந்து கலத்தல் / தைத்தல்; உளைதல் - நிலைகெடுதல்; இருது - ருது / பருவம் / பருவகாலம்; சிசிரம் - பின்பனிப் பருவம்; இறுத்தல் - சேர்தல் / தங்குதல்; பசுமை - குளிர்ச்சி; வெருவுதல் - அஞ்சுதல்; வேனில் - இளவேனில் / வசந்தகாலம்)

அப்பொழுது நடந்து கொண்டிருந்த பருவத்திற்கு ஏற்றதாகிய பின் பனிக்காலத்திற்குரிய வாடைக்காற்றுடன், பசுமையாகக் குளிர்ந்த பனியும் பெய்ய, மன்மதனின் மலர்க்கணைகள் தன் நெஞ்சத்தில் புகுந்து தைத்து மறைத்த புண்ணில் ஊடுருவிப் பாய்ந்ததனால், மனம் நிலை கெட்டு வெதும்பிக் கொண்டிருந்த இராவணன், அருகில் நின்ற ஏவலாளரை நோக்கி ''இப்பொழுது நடந்து கொண்டிருப்பது என்ன பருவமடா?'' என்று கேட்டான்; கேட்டவுடன் அவனுக்கு அஞ்சி, பின் பனிக்காலம் நீங்கிப் போய், அதற்கு அடுத்த பருவமான இளவேனிற் காலம் வந்து சேர்ந்து தங்கியது.

தேவர்கள், பறவைகள் மட்டுமல்ல, பருவங்களும் இராவவணனுக்கு அஞ்சின என்பது புலப்படுத்தப்பட்டது. அடா என்றது, தனக்கு அடங்கிய பணியாளரை நோக்கி அரசர்கள் கூறும் சொல்; பருவங்கள் மொத்தம் ஆறு. அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. கார் - ஆவணி, புரட்டாசி; கூதிர் - ஐப்பசி, கார்த்திகை; முன்பனி - மார்கழி, தை; பின்பனி - மாசி, பங்குனி; இளவேனில் - சித்திரை, வைகாசி; முதுவேனில் - ஆனி, ஆடி.

100. இராவணன் வேனிற் பருவத்தில் வெதும்புதல்

வன்பணை மரமும், தீயும்,
மலைகளும் குளிர ஆழும்
மென்பனி எரிந்தது என்றால்,
வேனிலை விளம்பலாமோ?

அன்பு எனும் விடம் உண்டாரை
ஆற்றல் ஆம் மருந்தும்உண்டோ?
இன்பமும் துன்பம்தானும்
உள்ளத்தோடு இயைந்த அன்றே? (3267)

(வன் - வலிய; பணை - கிளைகள்; தீய - கருக; ஆழ்தல் - துளைத்து உட்செல்லுதல்; விளம்பல் - சொல்லுதல்; அன்பு - காமம்; இயைதல் - தொடர்பு உடையதாதல்)

வலிய பெரிய கிளைகளையுடைய மரங்களும், நெருப்பும், மலைகளும் கூடக் குளிர்ச்சியடையும்படி, துளைக்கின்ற மெல்லிய குளிர்காற்றும்கூட, இராவணனுக்கு எரிச்சல் தந்தது என்றால், வேனிற்காலத்தில் அவன் படப்போகிற துன்பங்களைப் பற்றிக் கூற இயலுமோ? காமம் என்னும் நஞ்சை உண்டவர்களுக்கு அதைத் தணிக்கத் தரத்தக்க மருந்து ஏதேனும்இருக்கிறதா? இல்லை யல்லவா? இன்பம்என்பதும், துன்பம் என்பதும், அவரவர் உள்ளத்தோடு தொடர்புடையன அல்லவா?

''மாசிப்பனி மச்சையும் துளைக்கும்;'' ''தை மாதத்தில் தரையும் குளிரும்'' என்பன பழமொழிகள். காம நோய்க்கு வேறு மருந்து ஒன்றும் இல்லை என்பதை முன்னரே ''ஆசை நோய்க்கு மருந்தும் உண்டாம் கொலோ?'' எனக் கூறியது கொண்டும் அறியலாம். ''ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு, நீருள் குளித்தும் உயலாகும்; நீருள் குளிப்பினும், காமம் சுடுமே; குன்றேறி ஒளிப்பினும் காமம் சுடும்'' என்பது நாலடியார் 90. சுகதுக்கங்கள்என்பவை அவரவர்மனநிலையைப்பொறுத்தனவாகும். மனம் நன்றாயிருந்தால் சுகமும், மனம் தீதாய் இருந்தால் துக்கமும் வருதலேஇயற்கை. இன்பதுன்பங்கள்புறத்தால்அமைவனஅல்ல; அவை மனத்தின்உணர்ச்சிகளேஎன்பதாம். ''மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி'' என்பது குறள் (453). ''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்பதை நினைக.

101. மாதிரத்து இறுதிகாறும், தன்
மனத்து எழுந்த மையல்
வேதனை வெப்பம் செய்ய,
வேனிலும் வெதுப்பும் காலை,
''யாது இது இங்கு? இதனின்
முன்னைச் சிசிரம் நன்று; இதனை நீக்கி,
கூதிர்ஆம் பருவம் தன்னைக்
கொணருதிர் விரைவின்'' என்றான். (3268)

(மையல் - ஆசைநோய்; மாதிரம் - திசைகள்; வெதுப்புதல் - தகித்தல்; சிசிரம் - பின்பனிப்பருவம்; கூதிர் - குளிர்காலம் / ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்)

இராவணன் மனத்தில் கொழுந்து விட்டு எரிகின்ற காமம் என்னும் நோய், உலகத்துத் திசைகளின் எல்லைவரை சென்று வெம்மையைச் செய்ய, இப்போது வந்த வேனிற்காலமும் அவனைத் தகிக்கும்படி செய்ய ஏவலாளரைப் பார்த்து ''என்ன இது? இது என்ன பருவம்? இதனை விட முன்னால் வந்த பின்பனிக் காலமே நன்றாய் இருந்ததே? இதனை விலக்கி விட்டு, குளிர்காற்று வீசுகின்ற ஐப்பசி கார்த்திகை மாதங்களுக்குரிய கூதிர்ப் பருவத்தை விரைவாக வரச் செய்யுங்கள்'' என்று கட்டளை இட்டான்.

அவனுக்கு எழுந்த காமநோயால் அவன் உடலில் உண்டாகிய வெப்பம், திசைகளின் எல்லை வரை சென்று வெதுப்பியது என்பதாம்.

102. எல்லாப் பருவங்களையும் அகற்றக் கட்டளை இடுதல்

கூதிர்வந்து அடைந்த காலை,
கொதித்தன குவவுத் திண்தோள்;
''சீதமும் சுடுமோ? முன்னைச்
சிசிரமேகாண் இது'' என்றான்;
''ஆதியாய்! அஞ்சும் அன்றே,
அருள் அலது இயற்ற?'' என்ன,
''யாதும், இங்கு, இருது ஆகாது;
யாவையும் அகற்றுக'' என்றான். (3269)

(குவவு - திரண்ட; சீதம் - கூதிர்ப்பருவம் / குளிர்காலம்; சிசிரம் - பின்பனிக் காலம்; அருள் - கட்டளை; ஆகாது - உதவாது; ஆதியாய் - தலைவனே)

அவ்வாறு இராவணன் இட்ட ஆணைப்படி கூதிர்காலம் வந்தது; அப்பொழுதும், அவனுடைய திரண்ட திண்ணிய தோள்கள் மேலும் வெப்பமடைந்தன; அதனை உணர்ந்த இராவணன் ஏவலாளரை நோக்கி, ''குளிர்காலம் என்பது வெப்பத்தைத் தருமோ? இதுவும் முன்பு வந்த பின்பனிக்காலம் போன்றே இருக்கிறதே'' என்றான்; ஏவலாளர்கள் ''தலைவனே! தாங்கள் கட்டளை இடாதவற்றை நாங்களும், பருவங்களும் செய்வதற்கு அஞ்சுவோம் அல்லவா?'' என்று பணிவுடன் கூற, இராவணன் ''எனக்கு இப்போது இங்கு எந்தப் பருவமும் நன்மை செய்யாது; எனவே எல்லாப் பருவங்களையும் நீக்கி விடுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

103. எல்லாப் பருவங்களும் நீங்கிய போது உலகின் தோற்றம்

என்னலும், இருது எல்லாம் ஏகின; யாவும் தம்தம்
பன்அரும் பருவம் செய்யா, யோகிபோல் பற்று நீத்த;
பின்னரும், உலகம் எல்லாம், பிணி முதல் பாசம் வீசித்
துன்அருந் தவத்தின் எய்தும் துறக்கம்போல், தோன்றிற்று அன்றே. (3270)

(பன்னஅரும் - சொல்லுதற்கரிய; பற்று - உலகத்தொடர்பு; பிணி - கட்டு; பாசம் - பற்று; துன்னஅரும் - அடைதற்கரிய; துறக்கம் - வீட்டுலகம்; முதல் - காரணம்)

என்று இராவணன் கட்டளையிட்டதும், எல்லாப் பருவங்களும் தத்தமக்குரிய செயல்பாடுகளைச் செய்யாமல், பற்றற்ற யோகியர்கள் உலகத்தொடர்பை விட்டு விட்டுப் போவது போல, விட்டு விலகிப் போயின; மேலும், பருவங்கள் செயலற்றமையால் இவ்வுலகங்க ளெல்லாம், கட்டிற்குக் காரணமான ஆசை, பற்று என்பவற்றைத் தூக்கி எறிந்து விட்டு, அரிய தவத்தைச் செய்கின்றவர்களான முனிவர்கள் சென்று சேர்கின்ற துறக்கம் - வீட்டுலகம் போன்று தோன்றின.

வீட்டுலகு பருவ வேறுபாடுகள் இன்றி ஒரே தன்மைத்தாய் இன்பமே நிலவப் பெற்று இருக்கும். அது போல இலங்கை உள்ளிட்ட இவ்வுலகமெல்லாம் எந்த விதச் செயல்பாடுமின்றி துறக்கம் போல் ஒரே தன்மைத்தாய் விளங்கியது. தவத்தினோர் துறக்கம் எய்துவர் என்பது, ''தானமும் தவமும் தாம் செய்வராயின், வானவர் நாடு வழி திறந்திடுமே'' என்ற ஒரு தனிப்பாடலால் போதரும்.

104. இப்பொழுதும் இராவணன் வருந்துதல்

கூலத்து ஆர்உலகம் எல்லாம் குளிர்ப்பொடு வெதுப்பும் நீங்க,
நீலத்து ஆர் அரக்கன் மேனி நெய் இன்றி, எரிந்தது அன்றே;
காலத்தால் வருவது ஒன்றோ? காமத்தால் கனலும் வெந்தீ
சீலத்தால் அவிவது அன்றி, செய்யத்தான் ஆவது உண்டோ? (3271)

(கூலம் - கடற்கரை / வரம்பு; ஆர் - போன்ற; கனலும் - எரியும்; சீலம் - புலனடக்கம் / ஒழுக்கம்)

கடற்கரையினால் சூழப்பெற்றுள்ள உலகத்தில் எல்லாம், இராவணன் கட்டளைப்படி, இப்போது எந்தப் பருவமும் இல்லை; குளிர்ச்சியும், வெப்பமும் விலகிப் போனது. இன்ப நிலையே நிலவுகிறது. என்றாலும் நீலமணி போன்ற நிறமுடைய அரக்கனாகிய இராவணனது உடல் மட்டும், நெய் இல்லாமலேயே எரிந்து கொண்டிருக்கின்றது. இதற்குப் பருவ மாற்றங்களா காரணம்? இல்லை; அவனுடைய பொருந்தாக் காமம் என்னும் கொடிய தீ கொழுந்து விட்டெரியும் தன்மையை அடங்கச் செய்ய வேண்டு மென்றால், அது நல்லொழுக்கமாகிய புலனடக்கத்தால் மட்டுமே முடியுமே தவிர, வேறு ஏதொன்றாலும் ஆகக் கூடியது அல்ல.

''அரக்கன் மேனி நெய் இன்றி எரிந்தது'' என்பது ஒரு நல்ல கற்பனைவளம் மிகுந்த சொற்றொடர். ''காமத்தீ சீலத்தால் அவிவது அன்றிச் செய்யத்தான் ஆவது உண்டோ!'' என்பது உலகத்தார்க்கு ஒரு படிப்பினை-அறிவுரைஎன்க. ''தீராதகாமத்தழலைத்தன்செம்மையெனும் நீரால் அவித்து'' என்பது நளவெண்பா.

105. இராவணன் சந்திரனைக் கொண்டு வரச் சொல்லுதல்

நாரம் உண்டு எழுந்த மேகம், தாமரை வளையம், நானச்
சாரம் உண்டு இருந்த சீதச்சந்தனம், தளிர், மென்தாதோடு,
ஆரம், உண்டு எரிந்த சிந்தை அயர்கின்றான்; அயல் நின்றாரை,
''ஈரம் உண்டு என்பர் ஓடி, இந்துவைக் கொணர்மின்'' என்றான். (3272)

(நாரம் - நீர்; நானம் - கத்தூரி; சீதம் - குளிர்ச்சி; தாது - மகரந்தப் பொடி / பூந்துகள்; ஆரம் - முத்து; அயர்தல் - சோர்தல்; ஈரம் - குளிர்ச்சி; இந்து - சந்திரன்; உண்டு - உடலில் கொண்டு)

நீரையுண்டுமேல் நோக்கி எழுந்த குளிர்ச்சியான கரிய மேகம்; தாமரைத் தண்டுகளாலான வட்டவடிவமான சுருண்ட மாலைகள்; கத்தூரியின் சாரம் கலக்கப் பெற்ற குளிர்ச்சியான சந்தனம், இளந்தளிர்கள், மெல்லிய பூந்துகள்களாகிய மகரந்தப் பொடிகள், குளிர்ந்த முத்துக்கள், மாலைகள் இவைகள் எல்லாவற்றையும் தன் உடம்பில் அணிந்து கொண்டிருந் தாலும், அந்த இராவணன் உள்ளம் கொதித்துச் சோர்வுறுகின்றான்; அவன் அருகில் நிற்பவரைப் பார்த்து, ''சந்திரனுக்கு இயற்கையிலேயே குளிர்ச்சியான தன்மை உண்டு என்று கூறுவார்கள். எனவே இப்போது விரைவாக ஓடிச் சென்று அந்தச் சந்திரனை இங்கே கொண்டு வாருங்கள்'' என்று கட்டளை இட்டான்

நீர் கொண்ட மேகம், தாமரை மலர், சந்தனம், தளிர், மகரந்தம், முத்து இவையெல்லாம் குளிர்ச்சி பொருந்திய பொருட்கள். இவை யனைத்தையும் தன் உடம்பில் அணிந்திருந்தாலும் இராவணனின் உள்ளம் மட்டும் கொதித்துக் கொண்டிருந்தது என்று அவன் காமமுதிர்ச்சியைக் குறித்தார் என்க. தாமரைவளையம் என்பது குளிர்ந்த பூக்கள் கோக்கப்பட்ட தாமரைக் கொடி வளையம். இது பொதுவாக விரகதாபம் உற்றவர்களுக்கு அவர்களது வெப்பம் தணிய அவர்கள் மார்பில் அணியும் ஒருவகை மாலை. இவற்றாலெல்லாம் ஏவலாளர் இராவணனுக்குச் சைத்திய உபசாரம் செய்தனர் என்பது பெறப்பட்டது. இராவணன் கோள்களையும் அடக்கி ஆளும் ஆற்றலுடையவன். எனவேதான் சந்திரனைத் தன் அருகே கொண்டு வருமாறு பணித்தான் என்க. ''ஈரம் உண்டு என்பர்'' என்பது ஒரு அரிய சொல்லாட்சி. இராவணனுக்கு, சந்திரன் குளிர்ச்சி உள்ளவன், குளிர்ச்சி தருபவன் என்பது தெரியாதது போலவும் பிறர் சொல்லுவர் என்று சொல்லுவதும் காண்க.

106. சந்திரன் தோன்றுதல்

வெஞ்சினத்து அரக்கன் ஆண்ட வியன் நகர்மீது போதும்
நெஞ்சு இலன், ஒதுங்குகின்ற நிறை மதியோனை நேடி,

''அஞ்சலை; வருதி; நின்னை அழைத்தனன் அரசன்'' என்ன,
சஞ்சலம் துறந்துதான், அச்சந்திரன் உதிக்கலுற்றான். (3273)

(வியன் - பெரிய; போதும் - செல்லும்; ஒதுங்குதல் - விலகிச்செல்லுதல்; நேடி - தேடிப் பிடித்து; சஞ்சலம் - மனக்கலக்கம்; நிறை மதியோன் - பூரணசந்திரன்)

கொடிய கோபம் கொள்ளும் இயல்புடைய அரக்கனாகிய இராவணன் அரசாட்சி செய்கின்ற பெரிய இலங்கை மாநகரின் மீது செல்லுதற்கு மனம் ஒவ்வாதவனாய், அஞ்சி ஒரு பக்கமாக ஒதுங்கிப் போய்க் கொண்டிருக்கின்ற எல்லாக் கலைகளும் நிறைந்த பூரணசந்திரனை, ஏவலாளர்கள் தேடிக் கண்டு பிடித்து, ''பயப்படாதே; உன்னை நம் அரசன் அழைக்கின்றான், வருவாயாக!''என்று வேண்ட, அச்சந்திரனும் தனது மனக்கலக்கம் தீர்ந்து, அவ்விலங்கையில் தோன்றுவானாயினான்.

இலங்கை நகர் மீது சந்திரன் இயங்க மாட்டான் என்பது, ''இருசுடர் வழங்காப் பெருமுது இலங்கை'' என்னும் ஆசிரியமாலைச் செய்யுளால் அறியப்படும்.

107. அயிர்உறக் கலந்த நல்நீர் ஆழி
நின்று, ஆழி இந்து
செயிர் உற்ற அரசன், ஆண்டு, ஓர்
தேய்வு வந்துற்ற போழ்தில்,
வயிரம் உற்று உடைந்தது சென்று ஓர்
வலியவற் செல்லுமா போல்
உயிர்தெறக் காலன் என்பான்
ஒத்தனன், உதயம் செய்தான். (3274)

(உடைந்து - தோற்று; ஆழி - சக்கரம்; செயிர் - குற்றம்; தேய்வு - மெலிவு; அயிர் - கருமணல்; ஆழி - கடல்; தெற - வருத்த; காலன் இயமன்; வயிரம் - பகை)

முன்பு தன்னிடம் தோற்றோடிய பகையரசர்கள், இப்போது தான் ஆக்ஞாசக்கரத்தைச் செலுத்தும் முறையினின்று தவறிக் குற்றம் செய்ததால் ஒரு மெலிவை அடைகின்ற போது, அவன்மேல் மிகுந்த பகைமை கொண்டு அந்த வலியவன் மேல் போர் செய்யப் போவது போல, இதுகாறும் இராவணனுக்கு அஞ்சியிருந்த சந்திரன், இப்போது இராவணனது உயிரைக் கவரவருகின்ற இயமன் போல, கருமணல் நிறைந்து கலந்த நல்ல நீரையுடைய கடலினின்றும் எழுந்து வந்து தோன்றலானான்.

வலிமை மிகுந்த இரு அரசர்களுக்குள் போர் நிகழ்ந்தது. வலியிழந்து ஒருவன் தோற்று ஓடினான். மற்ற வலியவன் ஏதோ ஓர் குற்றம் செய்து, அயர்ந்திருந்த சமயத்தில், முன்பு தோற்றோடிய மெலிவடைந்த அரசன், இப்பொழுது மிகுந்த பகைமை கொண்டு, அவன் மீது போர் செய்ய

முற்படுகிறான். அதைப் போல இராவணன் நாட்டின் மீது வரவே அச்சம் கொண்டிருந்த சந்திரன், அவனுடைய காமக்குற்றத்தைக் காரணமாகக் கொண்டு, இப்பொழுது அவனைத் தனது பழைய பகைமையைத் தீர்த்துக் கொள்ளலாம், தண்டிக்கலாம், வெல்லலாம் என்று கருதி, உயிர் கவரும் இயமனைப் போலக் கடலினின்றும் எழுந்து உதயமானான் என்பதாம். சூரியனும் சந்திரனும் கடலினின்றும் தோன்றுவதாகவும், உதயகிரியில் தோன்றுவதாகவும், அஸ்தமனகிரியில் மறைவதாகவும் கூறுவது கவிமரபு. இங்கு ''தேய்வு'' என்று குறித்தது, பிறன்மனை நயத்தலாகிய இராவணனது குணக்கேட்டை என்க.

108. பராவ அருங்கதிர்கள் எங்கும் பரப்பி, மீப்படர்ந்து, வானில்,
தராதலத்து எவரும் பேணா, அவனையே சலிக்கும் நீரால்
அரா அணைத்துயிலும் அண்ணல், காலம் ஓர்ந்து, அற்றம் நோக்கி,
இராவணன் உயிர்மேல் உய்த்த திகிரியும், என்னல் ஆன. (3275)

(பராவஅரும் - புகழ்தற்கு அரிய; கதிர் - கிரணங்கள்; மீ - மேலே; தராதலம் - பூமி; பேணா - போற்றாத / வெறுக்கின்ற; சலித்தல் - நிலைகலங்கச் செய்தல்; நீர் - நீர்மை / தன்மை; அரா - பாம்பு; அணை - படுக்கை; ஓர்ந்து - உணர்ந்து; திகிரி - சக்கரப்படை; உய்த்த - செலுத்திய; அற்றம் - சமயம்)

புகழ்தற்கு அரிய கிரணங்களை எல்லா இடங்களிலும் செலுத்தி, மேலே வானத்திலும் படர்ந்து, தேவருலகத்துள்ளாரும், மண்ணுலகத்துள்ளாரும், அனைவரும் விரும்பாது வெறுக்கின்ற இராவணனையே வருத்துகின்ற நோக்கம் கொண்டு, ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையில் அறிதுயில் கொள்ளும் பெருமைக்குரிய திருமால், இராவணன் உயிரைக் கவரும் காலத்தை நன்கு உணர்ந்து, தக்க சமயம் பார்த்து அவன் மீது செலுத்துகின்ற சக்கராயுதத்தைப் போல, சந்திரன் தோற்றம் அளித்தான்.

வட்டமான சந்திரன் உதித்தது, திருமாலின் ஆழிப்படையே இராவணனை அழிக்க வந்தது போல் இருந்தது என்பதாம். முன்பாடலில் சந்திரனைக் காலனுக்கு உவமித்த கவிஞன், இந்தப் பாடலில் பூர்ண சந்திரனைத் திருமாலின் சக்கராயுதத்திற்கு உவமித்தது காண்க.

109. நிலாச் சுடரும் இராவணனை வருத்துதல்

அருகுஉறு பாலின் வேலை அமுதெலாம் அளைந்து வாரிப்
பருகின, பரந்து பாய்ந்த நிலாச் சுடர்ப் பனிமென் கற்றை,
நெரியுறு புருவச் செங்கண் அரக்கற்கு, நெருப்பின் நாப்பண்
உருகிய வெள்ளி அள்ளி வீசினால் ஒத்தது அன்றே. (3276)

(அருகுதல் - கிட்டுதற்கு அரியது / அருகே உள்ளதான; பாலின் வேலை - பாற்கடல்; அளைந்து - துழாவி; வாரி - அள்ளி; சுடர் - ஒளி; பனி - குளிர்ச்சி; கற்றை - கிரணத் தொகுதி; நாப்பண் - நடுவில் / இடையே)

தனக்கு அருகே உள்ள, கிட்டுவதற்கு அரியதான பாற்கடலில் தோன்றிய தேவாமிர்தம் முழுவதையும், தேடி அடைந்து, அதனை அள்ளிக் குடிக்கும் போது, அதனின்றும் வெளிப்படுகின்ற இனிமையை இவ்வுல கெல்லாமும் விரித்துப் பரப்புகின்ற அந்த நிலவொளியின் குளிர்ச்சியான மென்மையான கிரணங்களின் தொகுதி கூட, இப்பொழுது, நெரித்த புருவங்களையும், சினத்தால் சிவந்த கண்களையும் உடைய அரக்கனான இராவணனுக்கு, நெருப்பின் நடுவில், உருக்கப்பட்ட வெள்ளிக் குழம்பை அள்ளி வீசினாற் போன்று வெம்மையை உண்டாக்கி எரிச்சலைத் தந்து அவனைத் துன்புறுத்தியது.

சந்திரனின் தண்மையான கிரணங்கள் கூட அவனுக்குக் காய்ச்சிய வெள்ளிக் குழம்பை வாரி வீசுவது போன்றிருந்தது என்றதனால் அவனது காமமிகுதியும் விரகதாபமும் சிறப்பிக்கப்பட்டது. புருவங்கள் நெரிவதும், கண்கள் சிவப்பதும் வெகுளியின் மெய்ப்பாடு; நிலாக் கதிர்கள், உருக்கிய வெள்ளிக் குழம்புக்கு உவமை.

110. மின்நிலம் திரிந்தது அன்ன விழுநிலா மிதிலை சூழ்ந்த
செந்நெல் அம்கழனி நாடன் திருமகள் செவ்வி கேளா,
நல்நலம் தொலைந்து சோரும் அரக்கனை, நாளும் தோலாத்
துன்னலன்ஒருவன்பெற்றபுகழ்எனச்சுட்டதுஅன்றே. (3277)

(மின் - மின்னல்; திரிதல் - உலவுதல்; விழு - சிறந்த; செவ்வி - அழகு / சிறப்பு; கேளா - கேட்டு; நல்நலம் - நல்ல குணங்கள் / பெருமை; துன்னலன் - பகைவன்)

மின்னல் ஒன்று இந்நிலத்தில் உலாவுவது போன்ற சிறந்த நிலா, தவழும் சிறந்த நெற்பயிரையுடைய அழகிய வயல்களையுடைய விதேக நாட்டிற்கு அரசனான சனக மகாராசனது மகளான, இலக்குமி போன்ற சீதையின் சிறப்பியல்புகளைத் தன் தங்கை சூர்ப்பணகை மூலம் கேட்டறிந்த, தனது பெருமையான குணநலன்களனைத்தும் கெட்டழிந்து போக, இப்பொழுது சோர்ந்து போயிருக்கும் அந்த அரக்கனாகிய இராவணனை, ஒரு நாளும் தோற்றறியாத அவனது பகைவன் ஒருவன் இப்பொழுது பெரும்புகழ் பெற்றது போலச் சுட்டெரித்தது.

பகைவன் புகழைக் கேட்டால் அது ஒருவன் மனத்தை எவ்வாறு சுட்டு வருத்துமோ, அவ்வாறு சந்திரன் தனது ஒளிக் கிரணங்களால் இராவணனைச் சுட்டு வருத்தினான் என்பதாம்.

111. சந்திரனும் சூரியனைப் போல் வெப்பம் தருதல்

கருங்கழல் காலன் அஞ்சும் காவலன், கறுத்து நோக்கித்
"தரும் கதிர்ச் சீதயாக்கைச் சந்திரன் தருதிர் என்ன,
முருங்கிய கனலின், மூரி விடத்தினை முகக்கும், சீற்றத்து,
அருங்கதிர் அருக்கன்தன்னை ஆர் அழைத்தீர்கள்?" என்றான். (3278)

(கருமை - பெருமை; கறுத்து - சினந்து; சீதம் - குளிர்ச்சி; யாக்கை - உடல்; முருங்குதல் - அழிதல்; மூரி - வலிய; சீற்றம் - சினம்; அருக்கன் - சூரியன்; காலன் - இயமன்)

பெருமை பொருந்திய வீரக்கழல்களை அணிந்த இயமனும் அஞ்சுகின்ற, இலங்கைக்கு அரசனான இராவணன், தனது ஏவலாளரைச் சினந்து பார்த்து ''குளிர்ச்சியான கிரணங்கள் கொண்ட உடலினை உடைய சந்திரனைக் கொண்டு வாருங்கள் என்று நான் சொன்னால், எல்லாவற்றையும் அழிக்கின்ற தன்மையுடைய நெருப்புப் போன்ற, வலிய நஞ்சு போன்ற, பொறுத்தற்கரிய மிக்க வெப்பம் கொண்ட கிரணங்களையுடைய சூரியனை யார் அழைத்து வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

சந்திரனுடைய குளிர்ச்சியான கிரணங்கள் கூட, இராவணனைக் கொடிய சூரிய கிரணங்கள் போல் தாக்கி வருத்திற்று என்பது பெறப்பட்டது. இராவணன் காமவெப்பத்தால் சந்திரனையும் சூரியனாகவே கருதினான் என்பதாம்.

112. ஏவலாளர் மாற்றம் கூறுதல்

அவ்வழி, சிலதர் அஞ்சி, ''ஆதியாய்!
அருள் இல்லாரை
இவ்வழித் தருதும் என்பது இயம்பலாம்
இயல்பிற்று அன்றால்;
செவ்வழிக் கதிரோன் என்றும்
தேரின்மேல் அன்றி வாரான்;
வெவ்வழித்து எனினும், திங்கள்,
விமானத்தின் மேலது'' என்றார். (3279)

(சிலதர் - பணியாளர்; ஆதியாய் - முதல்வனே; அருள் - கட்டளை; இவ்வழி - இங்கே; தருதல் - கொண்டு வருதல்; இயல்பு - தன்மை; திங்கள் - சந்திரன்)

அவ்வாறு கேட்ட இராவணன் சினத்திற்கு அஞ்சிய ஏவலாளர் சிலர், ''முதல்வனே! தாங்கள் கட்டளை இடாத ஒருவரை நாங்கள் இங்கே அழைத்து வந்தோம் என்று தாங்கள் கூறுவது சொல்லும் தன்மைத்தன்று; சிறந்த வழியில் செல்லும் இயல்புடைய சூரியன் எப்போதும் தனது ஒற்றை ஆழித் தேரில் அன்றி, வேறொன்றிலும் வரமாட்டான்; தங்களுக்கு வெப்பம் தருகிறது என்றாலும், சந்திரன் இதோ விமானத்தில் மேல் தான் வீற்றிருக்கிறான்'' என்றனர்.

சூரியன் தேரில்தான் வருவான்; சந்திரன் விமானத்தில்தான் வருவான் என்று வேற்றுமை காட்டி, இப்போது வந்திருப்பவன் சந்திரன்தான் என

இராவணனுக்கு உறுதி கூறி, தெளிவுபடுத்தி, அவனது தடுமாற்றத்தை நீக்க முயன்றனர் என்பதாம்.

113. இராவணன் சந்திரனைப் பழித்துப் புலம்புதல்

பணம்தாழ் அல்குல் பனி மொழியாற்கு
அன்புபட்டார் படும்காமக்
குணம்தான் முன்னம் அறியாதான்
கொதியா நின்றான்; மதியாலே,
தண்அம் தாமரையின் தனிப் பகைஞன்
என்னும் தன்மை, ஒருதானே
உணர்ந்தான்; உணர்வுற்று, அவன்மேல் இட்டு,
உயிர்தந்து உய்க்க உரை செய்வான். (3280)

(பணம் - படம் / பாம்பின் படம்; தாழ் - தாழ்ச்சியுற / இகழ்ச்சியடையும்படி; பனி - குளிர்ச்சி பொருந்திய; அன்பு - ஆசை; குணம் - இயல்பு; உய்த்தல் - காத்தல்; கொதியா - கொதித்து / தவித்தல்; மதி - சந்திரன்)

பாம்பின் படமும் தோற்றுப் போகும் படியான அகன்ற அல்குலையும் குளிர்ச்சி பொருந்திய இனிய சொற்களையும் உடைய பெண்கள்பால் ஆசை கொண்டவர்கள் அனுபவிக்கும் காதல் நோய் என்னும் குணத்தை, இதற்கு முன்பு எப்பொழுதும் அனுபவித்து அறியாதவனாகிய இராவணன், இப்போது இந்தச் சந்திரனால் மனம் தவித்து நிற்கின்றான்; குளிர்ச்சி பொருந்திய அழகிய தாமரைக்கு நேரான ஒப்பற்ற பகைவன் இந்தச் சந்திரனே, என்பதைத் தானே தனியனாக நின்று உணர்ந்தான். அவ்வாறு உணர்ந்ததனால், இப்போது அந்தச்சந்திரனை முன்னிட்டு, தனது உயிரைத் தனக்கு மீட்டும் தந்து, பிழைக்க வழி செய்யுமாறு, சிலவற்றைச் சொல்லத் தொடங்கினான்.

இராவணன் தான் ஆசைப்பட்ட பெண்ணை உடனே அடைந்து விடும் இயல்பும் ஆற்றலும் உடையவன். இப்போதுதான் முதன் முறையாக அடைய முடியாதபடி வருத்தம் உற்று காமவெப்பம் கொண்டவன் ஆகின்றான். எனவே தான் ''அன்புபட்டார் படும் காமக்குணம் தான் முன்னம் அறியாதான்'' எனப்பட்டான்; சந்திரன் தாமரைக்குப் பகைவன் என்பது, சந்திரனைக் கண்டதும் தாமரை கூம்பிப் போவதைக் குறிப்பதாம். இது கவிமரபு.

114. ''தேயாநின்றாய்; மெய் வெளுத்தாய்;
உள்ளம் கறுத்தாய்; நிலை திரிந்து
காயா நின்றாய்; ஒரு நீயும்,
கண்டார் சொல்லக் கேட்டாயோ?

பாயா நின்ற மலர்வாளி
பறியாநின்றார் இன்மையால்
ஓயா நின்றேன்; உயிர் காத்தற்கு
உரியார் யாவர்? உடுபதியே!'' (3281)

(உடு - நட்சத்திரம்; பதி - தலைவன்; உடுபதி - நட்சத்திரங்களுக்குத் தலைவன் / சந்திரன்; தேயா - தேய்ந்து / மெலிந்து; வெளுத்தல் - வெளிர்த்துப் போதல்; நிலை திரிதல் - தன்மை வேறுபடுதல்; காயா - காய்ந்து / வெதும்பி / சுட்டு; ஒரு - தனியான; பாயா - பாய்ந்து; வாளி - அம்பு; பறியா - பறித்து; ஓயா - ஓய்ந்து / வலியழிந்து / செயலற்று; கறுத்தல் - மனம் கருகிப் போதல்)

''நட்சத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனே! நீயும் நாள்தோறும் உடல் தேய்ந்தும், வெளுத்தும் போயிருக்கின்றாய்; உள்ளத்தினிடத்தே கறுத்துப் போயிருக்கின்றாய்; உனது இயற்கை நிலையிலிருந்து மாறுபட்டு வெதும்பிப் போய் இருக்கின்றாய்; தனியாகவும் எவர் துணையும் இல்லாமலும் இருக்கின்றாய்; எனவே என்னைப் போல் நீயும் யாராவது ஒரு பெண்ணின் அழகைப் பிறர் ஒருவர் வருணிக்க, அதை நீ கேட்டு, அவளிடம் ஆசை கொண்டாயோ? என் மீது மன்மதன் எய்யும் மலர்க்கணைகளைப் பறித்து என்னைத் தேற்றி, என் உயிரினைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லாமையால் உடலும் உள்ளமும் சோர்ந்து போய் நிற்கின்றேன். என்னைக் காப்பாற்றுவதற்கு யாராவது இருக்கிறார்களா? என்னை யாரும் காப்பாற்ற மாட்டார்களா?'' என்று இராவணன் சந்திரனைப் பார்த்துப் புலம்புகிறான்.

நாள்தோறும் தேய்தலும், வெண்மை நிறம் கொண்டிருத்தலும் உள்ளே களங்கம் இருப்பதும், அமுத கிரணங்களை வாரி இறைத்து தனியே நின்று ஒளி வீசுவதும் காமநோயுற்றாரைக் காய்தலும் சந்திரனுக்கு இயற்கையிலேயே அமைந்த இயல்புகள். இராவணன், தன் தங்கை சூர்ப்பணகை, சீதையின் சிறப்பு இயல்புகளைக் கூறக் கேட்டதனால், அவனுடைய உடல் தினமும் மெலிந்து போகலாயிற்று; உடல் வெளுக்கலாயிற்று; உள்ளம் கருகிப் போயிற்று; நிலைதடுமாறிச் சினம் கொள்ளத் தொடங்கியிருக்கிறான். தனியே நின்று புலம்பலானான். எனவே தனது நிலையும், சந்திரனின் நிலையும் ஒரு தன்மைத்தாக இருப்பதை எண்ணி, தான் அழைத்த சந்திரனும், ஒரு பெண்ணின் அழகை மற்றொரு பெண் வருணிக்கக் கேட்டு, அதனால் தான் இத்தகைய இடர்ப்பாடுகளை அடைந்தானோ எனக் கேட்டான் என்க. குளிர்ந்த அமுத கிரணங்களைத் தன் மீது செலுத்தித் தன்னைக் குளிர்விப்பான் என்று கருதித்தான் இராவணன் சந்திரனை வரவழையுங்கள் என்று ஏவலாளர்க்குக் கட்டளையிட்டான்; ஆனால் சந்திரன் இங்கு வந்த பிறகுதான் தெரிந்தது அவனும் தன்னைப் போல் காமநோயுற்று வருந்தி, தன் கிரணங்களால் தன்னையும் காய்கிறான் என்பது. எனவே அவ்வாறு

கேட்டான் என்க. ''நைவாய எம்மேபோல் நாள்மதியே! நீ இந்நாள் மைவான் இருள் அகற்றாய் மாழாந்து தேம்புதியால்; ஐவார் அரவணைமேல் ஆழிப்பெருமானார் மெய்வாசகம் கேட்டு, உன் மெய்ந்நீர்மை தோற்றாயோ?'' என்பது திருவாய்மொழி.

115. ''ஆற்றார் ஆகின், தம்மைக் கொண்டு
அடங்காரோ? என்ஆர் உயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச்சனகி
குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்றாய்; அதனால், அகம் கரிந்தாய்;
மெலிந்தாய்; வெதும்பத் தொடங்கினாய்;
மாற்றார் செல்வம் கண்டு அழிந்தால்,
வெற்றி ஆகவற்று ஆமோ?'' (3282)

(கூற்று - இயமன்; குலம் - பெருமை / சிறப்பு; மாற்றார் - பகைவர்; வற்று - வல்லது; குவளை - நீலமலர் / நீலோற்பல மலர்; கரிதல் - கருகிப் போதல்)

''சந்திரனே! என்னுடைய அருமையான உயிருக்கு இயமனாக வந்துள்ள நற்குடிப் பிறப்புடைய, சிறந்த பெருமையுடைய சனகனின் மகள் சீதையினது குவளை மலர் போன்ற இரண்டு கண்கள் பூத்திருக்கின்ற தாமரை மலர் போன்ற முகத்திற்கு நீ தோற்றுவிட்டாய்; அதனால் உன் உள்ளம் கருகிவிட்டது; உடல் மெலிந்து விட்டது; உடலும் உள்ளமும் கொதித்துப் போயிருக்கிறாய்; பகைவர்களுடைய செல்வச் சிறப்பைக் கண்டு நாம் மனம் அழிந்தால் அது வெற்றிக்குரிய வழியாக வல்லமையுடையதாகுமா? அவ்வாறு தம்மை எதிர்க்கும் பகைவரை வெல்ல முடியாது என்று கருதினால் அறிவுள்ளவர்கள், தம் அறிவைக் கொண்டு தம்மைப் பாதுகாத்துக் கொண்டு அடங்கியிருக்க மாட்டார்களா?'' என்று இராவணன் சந்திரனை நோக்கிப் புலம்பலுற்றான்.

''என் ஆர் உயிர்க்குக் கூற்றாய் நின்ற குலச்சனகி'' என்று, இராவணன் தனக்குக் கூற்று சீதைதான் என்பதை முன் கூட்டியே அவசமாகக் கூறுவது நோக்குக. குவளை மலரைக் கண்களுக்கும் தாமரை மலரை முகத்திற்கும் உவமை கூறுவது கவிமரபு. மற்றவர் செல்வம் கண்டு தாம் மனமழிவதும், அழுக்காறு உறுவதும் தோல்வியே தரும் என்பது ஒரு நீதிக் கருத்து. ''தூமலர்த்தாமரைப் பூவினங்கள், மாஇதழ்க்குவளை மலர் பிணைத்தன்ன, திருமுகத்து அலமரும் பெருமதர் மழைக்கண்'' என்பது அகநானூறு 361. ''தாமரைப் போதில் பூத்த தண் நறுங்குவளைப் பூப்போல், காமரு முகத்தில் பூத்த கருமழைத் தடங்கண்'' என்பது சீவக சிந்தாமணி. ''கொங்குமலி கருங்குவளை கண்ணாக, தெண்கயங்கள், செங்கமலமுகம் மலர்த்தும் திருக்கண்ணபுரம்'' என்பது திருவாய்மொழி.

116. சந்திரன் மறையவும் சூரியன் தோன்றவும் கட்டளையிடுதல்

என்னப் பன்னி, இடர் உழவா,
"இரவோடு இவனைக் கொண்டு அகற்றி;
முன்னைப் பகலும் பகலோனும்
வருக" என்றான்; மொழியாமுன்,
உன்னற்கு அரிய உடுபதியும்
இரவும் ஒழிந்த; ஒரு நொடியில்
பன்னற்கு அரிய பகலவனும்
பகலும் வந்து பரந்தவால். (3283)

(பன்னுதல் - மீண்டும் சொல்லுதல்; இடர் உழவா - இடர் உழந்து / துன்புற்று; உன்னற்கறிய - நினைத்து அளவிடற்கரிய; உடுபதி - சந்திரன்; பன்னுதல் - பாராட்டுதலுமாம்)

என்று பலவாறாகக் கூறித் துன்புற்ற இராவணன் ஏவலாளரை நோக்கி, "இந்தச் சந்திரனை இரவுப் பொழுதோடு நீக்கி விட்டு, முன்பு இருந்த சூரியனையும், பகற் பொழுதையும் வரவழையுங்கள்" என்று அவன் கூறி முடிக்கும் முன்பே, நினைத்தற்குமரிய பெருமையுடைய சந்திரனும் இரவுப் பொழுதும் மறைந்து போயின; ஒரு நொடிப் பொழுதில் புகழ்தற்கரிய சிறப்பையுடைய சூரியனும் பகற்பொழுதும் வந்து பரவலாயின.

117. சூரியன் உதித்ததால் தாமரை மலர்ந்தது; ஆம்பல் குவிந்தது

இருக்கின் மொழியார் எரிமுகத்தின்
ஈந்த நெய்யின், அவிர் செம்பொன்
உருக்கி அனைய கதிர்பாய,
அனல்போல் விரிந்தது உயர் கமலம்;
அருக்கன் எய்த, அமைந்து அடங்கி
வாழாது, அடாத பொருள் எய்திச்
செருக்கி, இடையே, திருஇழந்த
சிறியோர் போன்ற, சேதாம்பல். (3284)

(இருக்கு - வேத மந்திரங்கள்; எரிமுகம் - வேள்வித்தீ; அவிர்தல் - வளர்தல் / விளங்குதல்; விரிதல் - மலர்தல்; அமைதல் - மனநிறை வடைதல்; அடாத - நல்வழியல்லாத, தகாத சிறியோர் - அற்பர்கள் / கீழ்மக்கள்; அருக்கன் - சூரியன்; செருக்கு - கர்வம்; சேதாம்பல் - செவ்வாம்பல்)

இருக்கு போன்ற வேதமந்திரங்களைக் கூறி, வேள்வித் தீயில் நெய்யினை ஆகுதி செய்யும் போது கொழுந்து விட்டெரிகின்ற மாற்றுயர்ந்த செம்பொன்னை உருக்கி ஓடவிட்டாற் போன்று, சூரிய கிரணங்கள் பாய்ந்து வருதலால், தாமரை மலர்கள் தணல் போல உயர்ந்து மலரலாயின; சூரியன் தோன்றியதால் செவ்வாம்பல்கள் குவிந்து போயின. எப்படி? தகாத வழியில் பொருள் ஈட்டிய அற்பர்கள் மனநிறைவு கொண்டு அடங்கிவாழாது, மிகக் கர்வம் கொண்டு வாழ்ந்ததால், இடையே தமது செல்வத்தை இழந்து வாடி நிற்பதைப் போலச் செவ்வாம்பல்கள் குவிந்து போயின.

இருக்கு என்று ரிக் வேதத்தைக் கூறினாலும், உபலட்சணத்தால் எல்லா வேத மந்திரங்களையும் குறிக்கும்.

118. நாணிநின்று ஒளி மழுங்கி,
நடுங்காநின்ற உடம்பினன் ஆய்,
சேணில்நின்று புறம் சாய்ந்து,
கங்குல் தாரம் பின்செல்ல,
பூணின் வெய்யோன் ஒரு திசையே
புகுதப் போவான், புகழ் வேந்தர்
ஆணை செல்ல, நிலை அழிந்த
அரசர் போன்றான் அல் ஆண்டான். (3285)

(பூண் - அணிகலன்; நாணி - வெட்கமுற்று; நடுங்கா - நடுங்கி; சேண் - வான்முகடு; கங்குல் - இரவு; தாரம் - மனைவி; வேந்தர் - பேரரசர்; அரசர் - சிற்றரசர்கள்; அல் - இரவு; சாய்ந்து - ஒதுங்கி / சரிந்து)

உலகத்திற்கு ஒரு அணிகலன் போல விளங்கும் சூரியன் ஒப்பற்ற கிழக்குத் திசையில் உதிக்கவும், இரவை ஆட்சி செய்பவனாகிய சந்திரன், சூரியன் உதித்தது கண்டு வெட்கமுற்று, தன்னிடத்திருந்த ஒளி மழுங்கிப் போய், நடுக்கமுற்ற உடம்பினையுடையவனாய், வான் முகட்டிலிருந்து ஒரு பக்கமாகச் சரிந்து ஒதுங்கிப் போய், தனது மனைவி என்னும் இரவுப் பொழுது தன்னைப் பின் தொடர்ந்து வர மறைந்தான்; எப்படி? புகழ் பெற்ற பேரரசர் ஒருவர் தனது ஆணையைச் செலுத்தியதால், தன் நிலை தடுமாறிப் போன சிற்றரசனைப் போல.

பேரரசன் ஒருவனிடம் சிற்றரசன் ஒருவன் தோற்றுப் போனால், அவன் வெட்கமடைவதும், தன் புகழ் குறைந்து போவதும், உடம்பு நடுங்கி நிற்றலும், ஒரு பக்கம் ஒதுங்கி அச்சம் கொண்டு செல்வதும், தன் மனைவி மக்கள் தன்னைப் பின் தொடர்ந்து வருதலும் இயற்கை. அதைப் போல சந்திரனும் நாணி, ஒளி மழுங்கி, நடுங்கி, புறம் சாய்ந்து, தாரம் பின் செல்லப் போனான். என்றது ஒரு சுவைமிக்க கற்பனை. ஒரு திசை என்பது ஒப்பற்ற திசை என்று கிழக்குத் திசையைக் குறித்தது காரணம் கிழக்குத் திசை மங்கலத்திசை. மற்ற திசைகளினும் சிறந்தது என்பது நூல்கொள்கை.

அல்ஆண்டான் என்பது இரவிற்கரசனான சந்திரனைக் குறித்தது. நிசாபதி என்பது அதற்குரிய வடசொல். நட்சத்திரங்களுக்கு அரசன் சந்திரன் உடுபதி என்பது போல், இரவுக்கரசன் சந்திரன் நிசாபதி எனப்படுகிறான் என்க. சூரியன் பேரரசனுக்கும், சந்திரன் சிற்றரசனுக்கும் உவமைகள். தாமரையின் கணவன் சூரியன் என்பது போல் சந்திரனின் மனைவி இருள் என்பதும் கவிமரபு.

119. அகால சூரிய உதயத்தில் மகளிர் நிலை

மணந்த பேர் அன்பரை, மலரின் சேக்கையுள்,
புணர்ந்தவர், இடை ஒரு வெகுளி பொங்கலால்,
கணம் குழை மகளிர்கள் கங்குல் வீந்தது என்று
உணர்ந்திலர்; கனவினும் ஊடல் தீர்ந்திலர். (3286)

(கணம் - திரண்ட; குழை - காதணி / குண்டலம்; சேக்கை - படுக்கை; புணர்தல் - கூடுதல்; கங்குல் - இரவு; மணந்த - கூடிய / கலந்த)

திரண்ட காதணிகளை அணிந்திருந்த அரக்க மகளிர்கள், தம்மைத் தழுவிக் கலந்த தம் கணவன்மார்களை, மலர் நிறைந்த படுக்கையில், ஊடலால் நிகழ்ந்த ஒரு சிறு கோபத்தால் கூடவில்லை; ஆனால் இப்பொழுது அகால நேரத்தில் இரவு நீங்கிவிட, அதனை அறியாதவர்களாகி, கனவில் கூட அவ்வூடலைத் தொடர்ந்தனர், ஊடல் நீங்கப்பெறாதவராயினர்.

இரவு நீங்கி விட்டதை அறியாததால், அரக்க மகளிர் தம் கணவர்களைக் கூடவுமில்லை; ஊடல் தீரவும் இல்லை என்பதாம்.

120. தள்ளுறும் உயிரினர், தலைவர் நீங்கலால்,
நள் இரவிடை உறும் நடுக்கம் நீங்கலர்
கொள்ளையின் அலர்கருங் குவளை நாள்மலர்
கள் உகுவன என, கலுழும் கண்ணினார். (3287)

(தலைவர் - கணவர் / கொழுநர்; தள்ளுறுதல் - குன்றிப் போதல்; கள் - தேன்; அலர்தல் - விரிதல்; நாள் - புதிய / அன்று மலர்ந்த; கொள்ளை - மிகுதி; கலுழ்தல் - பொழிதல் / அழுதலுமாம்)

அகாலத்தில் சூரியன் உதித்ததால், அதனையறிந்த கணவன்மார்கள் நள்ளிரவு என்றும் பாராமல் அரக்க மகளிரை விட்டு விட்டு நீங்கினர்; எனவே அவ்வரக்க மகளிர் உயிர் குன்றிப் போயினர்; பொதுவாகப் பெண்களுக்கு நடுஇரவில் உண்டாகும் உடல் நடுக்கமும் நீங்கப் பெற்றிலர். அன்றலர்ந்த கருங்குவளைப் பூக்கள் மிகுதியாகச் சிந்துகின்ற தேனைப் போல, தங்கள் கண்களினின்றும் கண்ணீர் பெருக்கிச் செய்வதறியாது திகைத்திருந்தனர்.

121. அணைமலர்ச் சேக்கையுள் ஆடல் தீர்ந்தனர்,
பணைகளைத் தழுவிய பவள வல்லிபோல்,
இணை மலர்க் கைகளின் இறுக, இன்உயிர்த்
துணைவரைத் தழுவினர், துயில்கின்றார் சிலர். (3288)

(சேக்கை - படுக்கை; ஆடல் - கலவி விளையாட்டு / காமலீலைகள்; தீர்தல் - முற்றுதல்; பணை - மரக்கிளை; வல்லி - கொடி; அணை - மெத்தை; உயிர்த்துணைவர் - பிராண நாயகர்; இறுக - அழுத்தமாக; தழுவுதல் - அணைத்துக் கொள்ளுதல்; துயில்தல் - உறங்குதல்)

பஞ்சுமெத்தை போன்ற மென்மையான மலர்களாலாகிய படுக்கையில், தமது கலவி விளையாட்டை முற்றிய சில அரக்க மகளிர், பெரிய மரக்கிளைகளைத் தழுவிப் படரும் பவழக் கொடிகள் போல, தங்களது இரண்டு தாமரை மலர் போன்ற கைகளாலும் அழுத்தமாகத் தங்களது இனிய உயிர் போன்ற கணவன்மார்களைத் தழுவிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அகாலத்தில் சூரியன் உதயமானது தெரியவில்லை.

பணைகள் - அரக்கர்கள்; பவழவல்லி - அரக்கமகளிர்;

122. யானைகள் நிலை

அளிஇனம் கடம்தொறும் ஆர்ப்ப, ஆய்கதிர்
ஒளிபட உணர்ந்தில, உறங்குகின்றன;
தெளிவுஇல இன்துயில் விளையும் சேக்கையுள்
களிகளை நிகர்த்தன, களிநல் யானையே. (3289)

(ஆய் - சிறந்த; கதிர் - சூரியன்; அளிஇனம் - வண்டின் கூட்டம்; கடம் - கன்னக்கதுப்புகள்; களி - செருக்கு; சேக்கை - படுக்கை; களிகள் - கள் குடியர்)

அகால நேரத்தில் சூரியனின் சிறந்த கிரணங்களின் ஒளி தங்கள் மீது படவும், தங்கள் கன்னக் கதுப்புகளில் வண்டினங்கள் ஆரவாரித்துக் கொண்டிருக்கவும் அதை உணராமல், செருக்குக் கொண்ட நல்லிலக்கணம் பொருந்திய யானைகள் நன்கு உறங்கிக் கொண்டிருக்கின்றன; எப்படி? கள் குடிப்போர் தெளிவில்லாமல், தமக்கு இனிய தூக்கத்தைத் தருகின்ற படுக்கையில் படுத்திருப்பதைப் போல, யானைகளும் தம் நினைவின்றி உறங்கின என்பதாம்.

சூரியன் தகித்தாலும் அதை உணராது உறங்குவதும், தெளிவற்றிருப் பதும், தங்களைச் சுற்றி ஈக்கள் மொய்த்துக் கொண்டிருப்பதும், கண்ட இடங்களில் கிடப்பதும் கட்குடியர்களுக்கு இயல்பு. அது போல இங்கு யானைகளும், அளிஇனம் கடம் தொறும் ஆர்ப்பவும், ஆய்கதிர் ஒளிபடவும், தெளிவு இல்லாதனவாகவும், சேக்கையுள் உணர்ந்தில உறங்குகின்ற என்றதும் மற்றொரு சுவைமிக்க உவமை. முன்

செய்யுட்களில் அரக்க மகளிரின் நிலைகூறி இச்செய்யுளில் அஃறிணையாகிய யானையின் நிலையைக் கூறியது உணர்க.

123. விளக்குகள் ஒளி மங்கிப் போதல்

விரிந்து உறை துறைதொறும் விளக்கம் யாவையும்,
எரிந்து இழுது அஃகல, ஒளி இழந்தன
அருந்துறை நிரம்பிய உயிரின் அன்பரைப்
பிரிந்து உறைதரும் குலப் பேதைமாரினே. (3290)

(உறைதுறை - வசிக்கும் இடம்; விளக்கம் - விளக்குகள்; இழுது - நெய்; அஃகல - அற்றல் / குறைதல் / சுருங்குதல்)

அரிய கல்வித் துறையில் நிரம்ப அறிவு பெற்ற, தமது உயிர் போன்ற கணவன்மாரைப் பிரிந்து வருந்தித் தங்கியிருக்கம் அரக்கர் குலத்தில் பிறந்த மகளிரைப் போல, அவ்வகன்ற நகரத்தில் மாளிகைகளில் உள்ள விளக்குகள் யாவையும், அவற்றில் ஊற்றப் பெற்றிருக்கின்ற நெய் குறையாத போதும், ஒளி மங்கிக் காணப்பெற்றன.

அகால நேரத்தில் சூரியன் உதித்ததால், நெய் விளக்குகள் நெய் குறையாத போதும் ஒளி மங்கித் தோற்றம் தருவனவாயின. அதற்கு அறிவு நிரம்பிய தம் கணவர்கள் தங்களை விட்டுப் பிரிந்து போனபோது மகிழ்ச்சி குறைந்து வருத்தமுற்று இருந்த அரக்க மகளிரின் நிலையை உவமித்தார் என்க.

124. காலையில் மலரும் மலர்கள் மலராமை

புனைந்து இதழ் உரிஞ்சுறு பொழுது புல்லியும்,
வனைந்தில, வைகறை மலரும் மாமலர்;
நனந்தலை அமளியில் துயிலும் நங்கைமார்
அனந்தரின் நெடுங்கணோடு ஒத்த ஆம்அரோ. (3291)

(புனைதல் - அலங்கரித்தல் / அணிசெய்தல்; உறிஞ்சுதல் - உராய்தல்; பொழுது - உதயகாலம்; புல்லுதல் - தோன்றுதலுமாம் / அடைதல் / சேர்தல்; வைகறை - விடியற்காலைப் பொழுது; மா - சிறந்த; வனைதல் - மலர்தல்; அனந்தர் - உறக்கமயக்கம்; நனந்தலை - இடப்பரப்பு / அகன்ற இடம்; அமளி - படுக்கை)

அலங்கரிக்கப்பட்ட இதழ்கள் உராய்தலால் தோன்றும் சூரியனின் கிரணங்கள் வெளிப்பட்டும், எப்பொழுதும் விடியற் காலைப் பொழுதில் மலர்கின்ற இயல்புடைய சிறந்த தாமரை போன்ற மலர்கள், அழகாய் மலரவில்லை. முகிழ்த்தே நின்றன; இடமகன்ற படுக்கையில் உறங்கும் அரக்கிமார்கள் தூக்கக் கலக்கத்தில் உள்ள நீண்ட கண்களை ஒத்துக் குவிந்தே இருந்தன.

மலராது குவிந்திருந்த மலர்களுக்குக் கண் விழிக்காது தூங்கிக் கொண்டிருந்த அரக்க மகளிர் உவமை. தனக்குரிய நேரத்தில் உதிக்காது நள்ளிரவில் இராவணன் கட்டளையால் சூரியன் உதித்ததால், மகளிர் விழிக்காது உறங்கினர்; மலர்கள் மலராது குவிந்திருந்தன என்பதாம்.

125. மக்கள் துயில் நீங்காமை

இச்சையில் துயில்பவர் யாவர் கண்களும்,
நிச்சயம், பகலும் தம் இமைகள் நீக்கல
''பிச்சையும் இடுதும்'' என்று, உணர்வு பேணலா
வச்சையர் நெடுமனை வாயில் மானவே. (3292)

(இச்சை - விருப்பம்; வச்சையர் - உலோபிகள் / கருமிகள்; நிச்சயம் - மெய்; நீங்குதல் - பிரிதல்; பேணுதல் - விரும்பி நினைத்தல் / மேற்கொள்ளுதல்; மான - ஒக்க)

அந்நகரில் தத்தம் விருப்பப்படி தூங்குகின்றவர்கள் அனைவருடைய கண்களும், சூரியன் உதித்தும், இன்னும் தங்கள் விழிகள் திறவாமல் இமைகள் மூடியேயிருந்தன. இது உண்மை. ''நம்மிடம் வந்து இரப்போர்க்குப் பிச்சையாவது போடுவோம்'' என்ற எண்ணமே இல்லாது, தனது பெரிய வீட்டின் கதவை எப்போதும் அடைத்தே வைத்திருக்கும் உலோபிகளின் அடைத்த கதவுகளைப் போல, அந்நகர மக்களின் இமைகள் திறவாது விழிகள் மூடியே இருந்தன.

126. சக்கரவாளப் பறவைகளின் மகிழ்ச்சி

நஞ்சுஉறு பிரிவின, நாளின் நீளம் ஒர்,
தஞ்சுஉற விடுவதுஒர் தயாவு தாங்கலால்
வெஞ்சிறை நீங்கிய வினையினார் என,
நெஞ்சு உறக் களித்தன நேமிப்புள் எலாம். (3293)

(உறு - போல; நேமிப்புள் - சக்கரவாளப் பறவைகள்; நாள் - விடியற் காலை; தஞ்சு - புகலிடம்; தயாவு - தயை / அருள்; வினையினார் - தீவினையாளர்கள்; நீளம் - பறவைக் கூடு)

சக்கரவாளப் பறவைகள் எல்லாம், தாம் தம் இணையை இரவில் பிரிந்திருக்கக் கூடிய கொடிய விடத்தைப் போன்ற பிரிவு, ஒருவருடைய தயவினால் விடியற்காலைப் பொழுது வந்து விட்டது என்று அறிந்த போது, கொடிய சிறையிலிருந்து வெளியான தீவினையாளர்கள் மனம் போல மிக்க மகிழ்ச்சியுற்றன.

சக்கரவாளப் பறவைகள் இரவில் பிரிந்து பகலில் கூடி மகிழும் இயல்பின; இவை சூரிய கிரணத்தின் ஒளியையே உணவாக உட்கொண்டு வாழ்வன என்றும் கூறுவர். அத்தகைய பறவைகளுக்கு, இப்பொழுது

இரவுக்காலம் நீட்டிக்காமல், இராவணன் பகற்பொழுதை வரச் செய்தததால் அவனது கருணையை எண்ணியும், பிரிந்த தம் இணையைக் கூடப் போகிறோமே என்று எண்ணியும் நெஞ்சம் மகிழ்ந்தன என்பதாம். இதற்கு எதிர்பாராது சிறையினின்றும் விடுதலை பெற்ற பாவம் செய்தவரின் மனநிலையை உவமித்த நயம் காண்க.

127. விரியாத மலர் கண்டு, வண்டுகள் வருந்துதல்

நாள்மதிக்கு அல்லது, நடுவண் எய்திய
ஆணையின் திறக்கலா அலரில் பாய்வன,
மாண்வினைப் பயன்படா மாந்தர் வாயில் சேர்
பாணரின் தளர்ந்தன பாடல் தும்பியே. (3294)

(நாள் - உரிய காலம் / புதிது; நடுவண் - நடுவில் / இடையில்; திறக்கிலா - விரியாத / மலராத; அலர் - ஆம்பல் முதலிய மலர்கள்; பாடல் - இசை; மாண் வினை - நல்வினை; பயன்படா மாந்தர் - செல்வம் இல்லாத அற்பர்கள்)

அன்றைக்குப் புதிதாக உதிக்கும் சந்திரனுக்கு அல்லாமல், இடையில் இராவணன் ஆணைக்குக் கட்டுப்பட்டு உதித்த சூரியன் வரவையறியாது, தமது மலர்களை விரிக்காத - மலராத - மலர்களான, குமுதம், செவ்வாம்பல், குவளை ஆகிய மலர்களில், இசைபாடும் வண்டுகள் தேன் குடிப்பதற்காகப் போய்ப் பாய்ந்தன. ஆனால் அவை தங்கள் இதழ்களை விரித்திருக்கவில்லை; கூம்பியே இருந்தன. இது எப்படி இருக்கிறது என்றால் நல்வினைஇயற்றாததீவினையாளர்களுடைய வாயிலில் சென்று இரக்கின்ற பாணர்கள், கதவு அடைத்திருப்பதால் சோர்வுற்றுத் தளர்ந்து நிற்பது போல் இருக்கிறது என்பதாம்.

இயற்கையிலேயே தோன்றும் சூரிய கிரணங்களைக் கண்டு தான் ஆம்பல் முதலிய மலர்கள் மலரும். இப்பொழுது இராவணன் கட்டளையால் சூரியன் அகால நேரத்தில் தோன்றியதால் மலர்கள் மலரவில்லை. ஆனால் வண்டுகள் சூரியன் தோன்றியது அறிந்து தேன் குடிப்பதற்காக அம்மலர்களில் பாய்ந்தன. ஆனால் அவை ஏமாற்றமடைந்தன. காரணம் மலர்கள் விரிந்திருக்கவில்லை. இதற்கு உலோபிகளின் அடைபட்ட வாயிற் கதவை அடைந்து இரந்து நிற்கும் பாணர்களின் பரிசு பெறமுடியாத ஏமாற்றத்தை உவமையாகக் கூறினார் என்க.

128. மங்கையர் மருட்சி

அருமணிச் சாளரம் அதனினூடு புக்கு
எரிகதிர் இன்துயில் எழுப்ப எய்தவும்,
மருளொடு தெருளுறும் நிலையர், மங்கையர்
தெருளுற மெய்ப் பொருள் தெரிந்திலாரினே. (3295)

(எரிகதிர் - வெய்ய கிரணங்கள்; சாளரம் - ஜன்னல் / சாலகம் / பலகணி; தெருட்சி - தெளிவு; மருட்சி - கலக்கம்)

அருமையான இரத்தினக்கற்கள் இழைத்துச் செய்யப்பட்ட ஜன்னல்களின் வழியாக உள்ளே புகுந்த சூரியனது வெப்பமிக்க கிரணங்கள், அங்கே துயின்று கொண்டிருந்த அரக்க மகளிரை இனிய உறக்கத்தினின்றும் எழுப்புவதற்காக அடைந்தது; அப்போது அவர்கள், மெஞ்ஞானத்தை முழுவதுமாகத் தெளிந்து கொள்ளாதவர்களைப் போல, இரவு நடந்து கொண்டிருக்கிறது என்ற மருட்சியும், பொழுது விடியவில்லை என்ற தெளிவும் கொண்ட, ஒரு மயக்க நிலையிலிருந்தனர்.

ஐயம் திரிபு அற மெஞ்ஞானத்தை உணராதவர்கள் தெளிவான அறிவு பெறாமல் சிற்சில வேளைகளில் மருட்சியும் கலக்கமும், சிற்சில வேளைகளில் தெளிவு பெற்றவர் போலவும், சஞ்சலத்துடனும் காணப்படுவர். அதுபோல, இரவு முடியாமலும், பகல் வந்தது போலச் சூரியன் பலகணி வழியே பரவவும், அம்மகளிர் தம் இனிய தூக்கத்தினின்றும் எழுந்து மயக்கமும் கலக்கமும், சிறிது தெளிவும் பெற்றவர்களைப் போலக் காணப்பட்டார்கள் என்பதாம். இரவுக்குரிய பொழுது முழுதும் கழியாமையால், உறக்கமும் குறைத் தூக்கத்தால் மருட்சியும் இராவணன் கட்டளையால் சூரியன் உதித்தமையால் கண் விழிப்பும் தெருட்சியும், இரண்டும் ஒரு சேர உடையவராய் இருந்தனர் என்க.

129. நாழிகைக் கணக்கரும், கோழியும் கூடத் தூங்கியமை

ஏவலின் வன்மையை எண்ணல் தேற்றலர்,
நாவலர் இயற்றிய நாழி நாம நூல்
காவலின் நுனித்து உணர்கணித மாக்களும்,
கூவுறு கோழியும், துயில்வு கொண்டவே. (3296)

(நாவலர் - சொல்வன்மையுடைய புலவர்கள்; நாள் - கால விகற்பங்கள்; நாமம் - புகழ்; காவல் - பொறியடக்கம்; நுனிதல் - கூர்ந்து; கணித மாக்கள் - சோதிடர் / காலக்கணக்கர்; ஏவல் - கட்டளை; தேற்றலர் - தெளிவற்றவர்கள்)

சொல்வன்மையுடைய புலவர்கள் இயற்றிய கால விகற்பங்களின் புகழினைக் கூறுகின்ற கணித நூல்களை அறிந்தவர்களும், இரவு முழுதும் காவல் இருந்து காலத்தின் விகற்பங்களைக் கூர்ந்து நோக்கி அறிவுறுத்துபவர்களுமாகிய காலக் கணக்கர்களும், (சோதிடர்களும்) இராவணனது எதிர்பாராத கட்டளையின் வலிமையை எண்ணித் தெளிவற்றவராய், உறங்கினர். அது போலவே விடியலை அறிவிக்கும் கோழியும், இதனை அறியாது உறங்கிக் கொண்டிருந்தது.

நள்ளிரவில், இராவணன் ஆணையால் சூரியன் உதயமாயிற்று. இதனையறியாது, அங்கே அந்த நேரத்தில் விழித்திருந்து கூர்ந்து நோக்கிக்

காலத்தை அறிவுறுத்தும் காலக்கணக்கர்களும் சூரியன் உதித்தமைக்குக் காரணம் தெரியாமல் திகைப்புற்றனர். விடியலைக் கூவி அறிவிக்கும் கோழியும் இதனை அறியாததால், இன்னும் விடியவில்லையே என்று சற்று உறங்குவதாயிற்று என்பதாம்.

130. இராவணன் ''இது சூரியனல்ல, சந்திரனே'' எனல்

இனையன உலகினில் நிகழும் எல்லையில்,
கனை கழல் அரக்கனும், கண்ணின் நோக்கினான்;
''நினைவுறு மனத்தையும் நெருப்பின் தீய்க்குமால்;
அனைய அத்திங்களே ஆகுமால்'' என்றான். (3297)

(எல்லை - சமயம்; கனை - ஒலிக்கின்ற; தீய்த்தல் - சுடுதல் / எரித்தல்; அனைய - அத்தன்மை உள்ள)

இவ்வாறு உலகத்தில் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில், ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த அரக்கனாகிய இராவணனும், சூரியன் உதித்ததைத் தன் கண்களால் நோக்கி, ''இவனை நினைக்கின்ற நெஞ்சத்தையும் தன் கொடிய கிரணங்களால் எரிக்கின்றான். எனவே இவனும், எரிக்கின்ற தன்மை வாய்ந்த, முன்னர் வந்த சந்திரனைப் போலவே இருக்கிறான். எனவே இவன் சூரியனல்ல, சந்திரனே'' என உறுதிபடக் கூறினான்.

131. ஏவலாளர் ''சூரியனே'', என்று கூறுதல்

''திங்களோ அன்று இது; செல்வ! செங்கதிர்
பொங்கு உளைப் பச்சை அம்புரவித் தேரதால்;
வெங்கதிர் சுடுவதே அன்றி, மெய்உறத்
தங்குதண் கதிர் சுடத் தகாது'' என்றார் சிலர். (3298)

(திங்கள் - சந்திரன்; பொங்கு - மிக்க; உளை - பிடரிமயிர்; அம் - அழகிய; புரவி - குதிரை; தண் - குளிர்ச்சி)

இவ்வாறு இராவணன் கூறக்கேட்ட ஏவலாளர்களில் சிலர், ''எல்லாச் செல்வங்களையும் பெற்றவனே! இப்போது இங்கு தோன்றியிருப்பது சந்திரன் அல்ல; சிவந்த கிரணங்களையுடைய சூரியனே ஆகும்; ஓங்கி வளர்ந்த மிக்க பிடரி மயிரை உடைய பச்சை நிறத்தனவான அழகிய குதிரைகள் பூட்டிய தேரில் வந்திருக்கிறான் சூரியன்; வெம்மையான சூரியனுடைய கிரணங்கள் இயற்கையிலேயே சுடுவதாகும். அஃதல்லாமல், உடம்பினைத் தழுவிப் பொருந்தும் குளிர்ச்சி மிகுந்த கிரணங்களைத் தரும் சந்திரன், சுடும் தன்மை கொண்டவனல்ல'' என்று கூறினர்.

இராவணன் காமத்தீயால் வெந்ததால் அவன் சந்திரன் தன்னை எரிப்பது போல எண்ணினான் என்பதாம். சந்திரன் கிரணங்களை விடச் சூரியனின்

கிரணங்கள் வெப்பமுடையன என்பதை அறியாதவனல்லன் இராவணன். அவனது விரகதாபம் அவ்வாறு கூறத்தூண்டியது என்பதாம். அவர்கள், வந்திருப்பது சூரியனே என்று தக்க காரணங்கள் காட்டி நிறுவினர் என்க. சூரியன் ஏழு பச்சைக் குதிரைகள் பூட்டப்பெற்ற ஒற்றை ஆழித்தேரில் வலம் வருகிறான் என்பது நூற்கொள்கை. இதற்குமாறாக, சூரியன் தேரில் உள்ளது ஒரே குதிரைதான் என்றும் ''சப்தாஸ்வம்'' என்பது அதன் பெயர் என்றும் கூறுவதும் உண்டு. இப்பெயர் வில்லிபாரதத்தில் கூறப்படுகிறது.

132. இராவணன் பிறைச்சந்திரனைக் கொணரக் கட்டளையிடுதல்

நீலச் சிகரக்கிரி அன்னவன், ''நின்ற வெய்யோன்,
ஆலத்தினும் வெய்யன்; அகற்றி, அரற்றுகின்ற
வேலைக் குரலைத் ''தவிர்க'' என்று விலக்கி, மேலை
மாலைப் பிறைப் பிள்ளையைக் கூவுதிர் வல்லை''என்றான். (3299)

(கிரி - மலை; ஆலம் - விடம் / நஞ்சு; வெய்யன் - கொடியவன்; குரல் - முழக்கம்; பிறைப் பிள்ளை - குழவித்திங்கள்; வல்லை - விரைவாக; வெய்யோன் - சூரியன்)

பல சிகரங்கள் கொண்ட நீலமலை போலும் மேனியைஉடைய இராவணன், ''இங்கு நிற்கின்ற சூரியன் நஞ்சை விடவும் கொடியவனாக இருக்கிறான்; இவனை நீக்கிவிட்டு, ஒலிக்கின்ற கடலின் முழக்கத்தையும் ஒழிக என்று விலக்கிவிட்டு, மேலைத் திசையில் மாலையில் தோன்றும் மூன்றாம் பிறையாகிய இளஞ்சந்திரனை மீண்டும் விரைவில் கூவி அழையுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

பலதலைகளும், நீல நிறமேனியும் கொண்ட இராவணனுக்கு நீலச்சிகரக்கரி ஒப்பு. கடலின் முழக்கமும் காமுகரை வருத்தும் இயல்பினது. எனவே அதனையும் தவிர்க்குமாறு ஆணையிட்டான் என்க. பிறைப்பிள்ளை என்பது, உலக வழக்கில் கிளிப்பிள்ளை, அணில் பிள்ளை என்று கூறுவது போல் கூறப்பட்டது என்க.

133. இளம்பிறை தோன்றுதல்

சொன்னான் நிருதர்க்கு இறை; அம்மொழி சொல்லலோடும்,
அந்நாளில் நிரம்பிய அம்மதி, ஆண்டு ஒர் வேலை
முந்நாளின் இளம்பிறை ஆகி முளைத்தது என்றால்,
எந்நாளும் அருந்தவம் அன்றி, இயற்றல் ஆமோ? (3300)

(நிருதர் - அரக்கர்; இறை - அரசன்; வேலை - வேளை / பொழுது; முந்நாள் - மூன்றுநாள்; முளைத்தது - தோன்றியது; ஆண்டு - அவ்விடத்தே)

அவ்வாறு அரக்கர்களுக்கு அரசனான இராவணன் கூறினான்; உடனேயே, அப்பொழுதுதான் தனது பதினாறு கலைகளையும் நிரம்பப்

பெற்று விளங்கிய பூரண சந்திரன், ஒரு சிறு பொழுதிற்குள், அவ்விடத்திலேயே மூன்றாம் நாள்தோன்றும் நிலாக்கீற்றாக - பிறைச்சந்திரனாக மாறித் தோன்றினான். அப்படியென்றால் ஒருவர் எப்பொழுதும் அரிய தவம் இயற்றுதலைவிட வேறு ஏதேனும் ஒரு பொருட்டு ஆகுமோ? ஆகாது.

இராவணன் முன்னர் செய்த அரிய தவத்தின் பயனால்தான் கோள்கள் எல்லாம் அவன் கட்டளைக்கு அடிபணிந்து ஏவல் செய்கின்றன என்றால் அந்தத் தவத்தினும் சிறந்தது வேறு ஒன்று உண்டோ? இவையெல்லாம் தவத்தின் ஆற்றலால் அன்றி வேறொன்றால் முடியுமோ? எனவே எல்லோரும் அரிய தவம் இயற்றுதல் வேண்டும் என்பது கவிக்கூற்று. ''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம் ஈண்டு முயலப்படும்'' என்பது குறள் (265).

134. மூன்றாம் பிறை வந்தும், இராவணன் மீண்டும் வருந்துதல்

குடபாலின் முளைத்தது கண்ட குணங்கள் தீயோன்,
''வடவா அனல்; அன்று எனின், மண்பிடர் வைத்த பாம்பின்
விடவாள் எயிறு; அன்று எனின், என்னை வெகுண்டு, மாலை
அட, வாள் உருவிக்கொடு தோன்றியது ஆகும் அன்றே?'' (3301)

(குடபால் - மேற்குத் திசை; முளைத்தது - தோன்றியது; வடவா - அனல் - வடவைத்தீ / வடவா முகாக்கினி / பிரளயகால நெருப்பு; மண் - நிலம்; வாள் - கொடிய; எயிறு - பற்கள்; அட - கொல்லும்படி)

மேற்குத் திசையில் தோன்றிய இளம்பிறையைக் கண்ட, தீய குணங்களைக் கொண்ட இராவணன், ''இது பிரளய காலத்து வடவைத் தீயாகும்; இல்லை என்றால் தன் பிடரியில் இவ்வுலகைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடனாகிய பாம்பின் நஞ்சு பொருந்திய கொடிய பல்லாகும். அதுவும் இல்லை என்றால், மாலைப் பொழுது, என்னிடம் மிகுந்த கோபம் கொண்டு, என்னைக் கொல்லுவதற்காகக் கையில் வாள் ஏந்திக் கொண்டு வந்து என் எதிரே நிற்பதாகும்'' என்று புலம்பினான்.

மூன்றாம் பிறை கடலில் தோன்றியது, இராவணனைத் தகித்தது. எனவே வடவைக் கனல் என்றான். அது வளைந்த வடிவமும், தன்னை வருத்தவும் செய்தது எனவே அதனைப் பாம்பின் பல் என்றான்; அது கூர்மையும், ஈர்க்கும் தன்மையும் கொண்டிருந்ததால் அதை வாள் என்றான் என்க. முன்பாடலில் கடலின் முழக்கமும் காமுகரை வருத்தும் என்றது போல, மாலைப் பொழுதும் காமுகரை வருத்தும் இயல்பினது. எனவே அதனையும் தன்னைக் கொல்லவரும் வாள் போன்றது என்றான் என்க.

135. இராவணன் மூன்றாம் பிறையைப் பழித்தல்

''தாது உண் சடிலத் தலை வைத்தது தண் தரங்கம்
மோதும் கடலிற்கிடை முந்து பிறந்தபோதே,

ஓதும் கடுவைத் தன் மிடற்றில் ஒளித்த தக்கோன்,
''ஈதும் கடுஆம்'', என எண்ணிய எண்ணம் அன்றே? (3302)

(தண் - குளிர்ந்த; தரங்கம் - அலை; ஓதும் - சொல்லப்படுகிற; கடு - விடம் / நஞ்சு; மிடறு - கண்டம் / கழுத்து; தாது - மகரந்தம்; சடிலம் - சடை)

''குளிர்ச்சி பொருந்திய அலைகள் வீசுகின்ற பாற்கடலினிடையில் முன்பு தோன்றிய போதே, எல்லோராலும் கொடிய நஞ்சு என்று சொல்லப்பட்ட ஆலகாலவிடத்தைத் தனது கண்டத்தில் மறைத்து வைத்துக் கொண்ட தக்கவனாகிய சிவபெருமான், இந்த இளம் பிறையையும் தனது கொன்றை மலர்த்தாதுக்களுடன் கூடிய சடைமுடியில் வைத்துக் கொண்டது ஏன் தெரியுமா? இந்த இளம்பிறையும் ஒரு கொடிய விடமாகும் என்று கருதிய கருத்தினால் தான் அல்லவா?'' என்றான் இராவணன்.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது நஞ்சு தோன்றியது. அது தேவர்களுக்கும், மற்றுமுள்ள உலகத்தார்க்கும் எந்தத் தீங்கும் விளைவித்துவிடக் கூடாது என்பதற்காக, தானேஅதை விழுங்கித் தன் கண்டத்தில் ஒளித்து வைத்துக் கொண்டான் சிவபெருமான். ஆனால் அதற்கு முன்பே தோன்றிய இந்தப் பிறைச்சந்திரனைத் தன் சடாமுடியில் யாரும் வேண்டாமலேயே தரித்துக் கொண்டானே அது ஏன் தெரியுமா? இது ஆலகால விடத்தை விடக்கொடியது என்று அவன் கருதியதால்தான் என்கிறான் இராவணன். சிவபெருமான் பிறைச்சந்திரனைத் தன் சடா முடியில் கொண்டிருப்பதற்கு ஒரு காரணம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஆலகாலத்தை தான் உள்ளே உண்டு விட்டான். ஆனால் அதனினும் கொடிய இந்தப் பிறைச்சந்திரனை உடலின் புறத்தே, தலையிலேயே நிறுத்தி விட்டான். எனவே இது ஆலகால விடத்திலும் கொடியது என்று நிறுவுகிறான் இராவணன்.

136. ''உரும் ஒத்த வலத்து உயிர் நுங்கிய திங்கள், ஓடித்
திருமு இச்சிறுமின் பிறை, தீமை குறைந்தது இல்லை
கருமைக் கறை நெஞ்சினில் நஞ்சு கலந்த பாம்பின்
பெருமை சிறுமைக்கு ஒரு பெற்றி குறைந்தது உண்டோ?'' (3303)

(பெற்றி - தன்மை; உரும் - இடி; நுங்கிய - உண்ட; திருமு - திரும்பிய; வலம் - வன்மை; நெஞ்சு - கழுத்தின் அடிப்பாகம்)

''கரிய கறைபொருந்திய தன் நெஞ்சினில் நஞ்சைக் கலந்து வைத்திருக்கும் பாம்புகள் பெரிய பாம்பு என்றும், சிறிய பாம்பு என்றும் உருவத்தால் வேறுபட்டாலும், தனது நச்சுத் தன்மையில் ஒன்றுக்கொன்று சிறிதும் குறைந்தது உண்டோ? இல்லையல்லவா? அதுபோல, இடியைப் போன்ற ஆற்றல் பெற்று, என் உயிரை உண்டு சென்ற பூர்ணசந்திரன் ஓடிப் போய்ச் சிறு உருக்கொண்டு, மின்னல் போன்று திரும்பி வந்திருக்கின்ற இந்த மூன்றாம் பிறையும் என்னைக் கொடுமை செய்து வருத்தும்

ஆற்றலில் சிறிதும் குறைந்தாகவே தெரியவில்லை'' என்கிறான் இராவணன்.

பெரிய பாம்பானாலும், பாம்புக் குட்டியானாலும் உருவத்தால் தான் வேறுபாடே தவிர உயிரினங்களைக் கொல்லுகின்ற நச்சுத் தன்மையில் சிறிதளவும் வேற்றுமை இருக்காது. இரண்டும் ஒரே தன்மை உடையனவாகவே இருக்கும். அதுபோல நிறைமதி என்றாலும், பிறைமதி என்றாலும் என்னை வருத்தித் துன்புறுத்துவதில் இரண்டும் ஒரே தன்மைத்தாகவே இருக்கிறது. சிறிதும் வேறுபாடு தெரியவில்லை என்று பிறைமதியையும் பழிக்கிறான் இராவணன். கொடிய நச்சுப் பாம்புகளின் நெஞ்சு, கரிய கறையுடையதாய்க் காணப்படுவதை நாம் பார்க்கலாம்.

137. இராவணன் பிறையை விரட்டி, இருளைக் கொணரக் கட்டளையிடுதல்

''கன்னக்கனியும் இருள் தன்னையும் காண்டும் அன்றே?
முன்னைக் கதிர் நன்று; இது அகற்றுதிர்; மொய்ம்பு சான்ற
என்னைச் சுடும்என்னின், இவ்ஏழ் உலகத்தும் வாழ்வோர்
பின்னைச்சிலர் உய்வர் என்று அங்கு ஒரு பேச்சும் உண்டோ?" (3304)

(கதிர் - சூரியன்; உய்வர் - பிழைப்பர்; கன்னக்கனிதல் - நன்கு முதிர்தல்; காண்டும் - பார்ப்போம்; மொய்ம்பு - வலிமை; சான்ற - மிகுந்த)

''முன்பு வந்த சூரியனே இப்பிறைச் சந்திரனைக் காட்டிலும் நன்றாக இருந்தது. எனவே இப்பிறைச் சந்திரனை விலக்குங்கள். இது மிக்க வலிமை படைத்த என்னையே சுட்டுத் துன்புறுத்துகிறது என்று சொன்னால், இந்த ஏழு உலகத்தில் வாழ்கின்றவர்களில் வேறு எவரேனும் சிலராவது இவனது கொடுமைக்குத் தப்பிப் பிழைத்து உயிருடன் வாழ்வர் என்ற பேச்சுக்கு இடம் உண்டோ? இல்லை அல்லவா? எனவே நன்கு முற்றி முதிர்ந்த இருட்டையும் பார்த்து விடலாம் அதை வரவழையுங்கள்'' என்று இராவணன் கட்டளையிட்டான்.

''கன்னக் கனியும்'' என்ற சொல்லாட்சியை நோக்குக. உலக வழக்கில் ''கன்னங் கறுத்த'', ''செக்கச் சிவந்த'', ''சின்னஞ் சிறிய'', ''பென்னம் பெருத்த'' என்று சொல்லுவது போல அமைந்துள்ளதையும் அறிக.

138. இருள் வருதல்

ஆண்டு, அப்பிறை நீங்கலும், எய்தியது அந்தகாரம்;
தீண்டற்கு எளிது ஆய், பல தேய்ப்பன தேய்க்கல் ஆகி,
வேண்டின், கரபத்திரத்து ஈர்த்து விழுத்தல் ஆகி,
காண்டற்கு இனிதாய், பல கந்து திரட்டல் ஆகி. (3305)

(ஆண்டு - அப்பொழுதே; தீண்டுதல் - தொடுதல்; தேய்ப்பது - பூசுவது; வேண்டில் - விரும்பினால்; கரபத்திரம் - கைவாள்; ஈர்த்தல் - வெட்டுதல் / பிளத்தல்; கந்து - தூண்கள்; அந்தகாரம் - இருள் / இருட்டு)

அவ்வாறு இராவணன் கட்டளையிட்ட உடனேயே அந்தப் பிறைச் சந்திரன்நீங்கினான்; உடனே, தொட்டுப்பார்ப்பதற்கு எளிதானதாகவும்பல பொருள்களையும் தேய்ப்பதற்கு உகந்த பாறை போல அடர்த்தியாகவும், எந்த ஒளியினாலும் போக்க இயலாததாகவும், நாம் விரும்பினால் நமது கைவாளைக் கொண்டு வெட்டி வீழ்த்தலாம் போன்ற தன்மை உடையதாகவும், காண்பதற்கு இனியதாகவும், பல திண்மையான தூண்களைத் திரட்டி வைத்தாற் போன்றதாகவும் ஆன இருட்டு வந்து சேர்ந்தது.

இருட்டை ஏதேனும் ஒரு கருவி கொண்டு அழிக்க முடியாது, அது அடர்த்தியும், திண்மையும் கொண்டது என்பது கூறப்பட்டது. ''கருவிக்கு நீங்காக் காரிருள்'' என்பதும், ''கொள்ளிக்கும் விள்ளாக் கார் இருள்'' என்பதும் நளவெண்பா.

139. முருடு ஈர்ந்து உருட்டற்கு எளிது என்பது என்? முற்றும் முற்றிப்
பொருள் தீங்குஇல் கேள்விச் சுடர் புக்கு வழங்கல் இன்றிக்
குருடு ஈங்குஇது என்ன, குறிக்கொண்டு, கண்ணோட்டம் குன்றி,
அருள் தீர்ந்த நெஞ்சின் கரிது என்பது அவ் அந்தகாரம்.(3306)

(முருடு - கரடு முரடான பகுதிகள் / முண்டு முடிச்சுடைய பகுதிகள்; ஈர்ந்து - அறுத்து; முற்றும் - நன்கு / முழுவதும்; சுடர் - விளக்கு; வழங்கல் - நிலை பெறுதல்; தீர்த்த - நீங்கிய; பொருள் - நூற்பொருள்; குறிக்கொள்ளல் - குறிக்கப்படுதல்; கண்ணோட்டம் - பரிவு / கருணை / தாட்சண்யம்; குன்றி - குறைந்து / அழிந்து; அந்தகாரம் - இருட்பிழம்பு; தீங்குஇல் - குற்றமற்ற)

கரடு முரடாகவும், முண்டு முடிச்சுகளோடும் கூடியதான ஒரு மரத்தை வெட்டி அதைத் தூண்கள் போல உருட்டிச் செய்வது எளிது என்று சொல்லவும் வேண்டுமோ? நன்கு முழுவதும் முற்றிய நூல் அறிவும், குற்றமற்ற கேள்விச் செல்வம் என்ற விளக்கும் உள்ளே நுழைந்து ஒளி பரப்புதல் இன்றி, இது குருடுதான் - கண்ணற்றது தான் என்று பிறர் கூறும்படி, தயவு தாட்சண்யம் இன்றி, அருட்குணமும் நீங்கிய கீழ்மக்களுடைய உள்ளத்தைக் காட்டிலும் இவ்விருட்பிழம்பு மிகவும் கரிதாய் இருந்தது.

இருட்பிழம்பின் மிகுதி பேசப்பட்டது, கல்வி இல்லாது, கேள்வியறிவு இல்லாது குருடு என்ற பெயரும் தாங்கி, தயவு தாட்சண்யம் இல்லாது, கருணையும் இல்லாத அற்பர்களின் மனம் போல மிகவும் கரிதாயிருந்தது அவ்விருட்டு என்பதாம். பொருள் என்பது நூற்பொருளையும், பொருள் வளத்தையும் குறித்தது என்க. கண்ணோட்டம் என்பது தன்னோடு பழகியவரைக் கண்டால், அவர் கூறியன மறுக்க மாட்டாமை என்பர்.

கண்ணோட்டம் இல்லாத கண் குருடு. ''கண்ணோட்டமில்லவர் கண்ணிலர்'' என்பதும், கண்ணுடையர் என்பவர் கற்றோர்'' என்பதும் குறள் *(577,393)*.

140. இராவணன் இருளையும் பழித்தல்

விள்ளாது செறிந்து இடை, மேல் உறஓங்கி, எங்கும்
நள்ளா இருள் வந்து, அகன் ஞாலம் விழுங்கலோடும்,
''எள்ளா உலகு யாவையும் யாவரும் வீவது என்பது
உள்ளாது, உமிழ்ந்தான், விடம் உண்ட ஒருத்தன்'' என்றான். (3307)

(விள்ளாது - பிரியாது / பிளவுபடாது; இடை - நிலம்; மேல் - விண்; ஞாலம் - உலகம்; விழுங்குதல் - மறைத்தல்; ஒருத்தன் - ஒப்பற்றவன் / சிவபெருமான்; எள்ளா - இகழத்தகாத; வீவது - அழிவது; உள்ளாது - நினையாது; வீங்குதல் - பரவுதல்; நள்ளுதல் - பொருந்துதல்; நள்ளா - விரும்பப்படாத)

கொஞ்சம் கூடப் பிளவு படாது, அடர்ந்து, நிலத்தின்மேலும் ஆகாயத்திலும் பரவி எல்லா இடத்திலும், யாராலும் விரும்பப்படாத இவ்விருட்டு இங்கு வந்து, இந்த இடம் அகன்ற பூமி முழுவதையும் மறைத்ததைப் பார்த்த இராவணன், ''முன்பு ஆலகாலவிடத்தை உண்டவனான ஒப்பற்ற சிவபெருமான், இந்த இகழ்தற்கரிய உலகமும், அவற்றில் உள்ள சர, அசரப் பொருள்கள் எல்லாமும், அவற்றில் வாழும் உயிரினங்கள் எல்லாமும் அழிந்து போகும் என்பதைச் சற்றும் யோசித்துப் பார்க்காமல் உமிழ்ந்து விட்டான், அதுதான் இப்போது இவ்விருளாய் வந்திருக்கிறது'' என்றான் இராவணன்.

141. ''வேலைத்தலை வந்து ஒருவன் வலியால் விழுங்கும்
ஆலத்தின் அடங்குவது அன்று இது; அறிந்து உணர்ந்தேன்;
ஞாலத்தொடு விண்முதல் யாவையும் நாவின் நக்கும்
காலக் கனல் கார் விடம் உண்டு கறுத்தது அன்றே.'' (3308)

(தலை - இடம்; ஒருவன் - ஒப்பற்றவன் / சிவபெருமான்; வலி - ஆற்றல்; ஞாலம் - பூவுலகு; காலக்கனல் - ஊழித்தீ / பிரளய காலத்து நெருப்பு; கார் - கரிய; வேலை - கடல்; ஆலம் - ஆலகால விடம்; நக்கும் - தீண்டி அழிக்கும்)

''இந்த இருளானது, பாற்கடலில் தோன்றி, ஒப்பற்ற சிவபெருமானின் ஆற்றலால் விழுங்கப்பட்ட ஆலகால விஷத்தைப்போன்று, ஒன்றுக்குள் அடங்கிவிடுவதன்று. இதனை நான் நன்கு அறிந்து உணர்ந்து கொண்டேன்; பின்னர் இது, யாது என்றால், அப்பூவுலகத்தோடு, விண்ணுலகு, மற்றுமுள்ள எல்லா உலகங்களையும், மற்ற பூதங்களையும் தனது நாவினாலேயே தீண்டி அழிக்கும் வல்லமை பெற்ற சிவப்பு நிறமான ஊழிக்காலத்தீ, கரிய விஷத்தை உண்டுவிட்டு, இப்போது கரிய நிறம் கொண்டு இங்கு வந்திருக்கிறது'' என்றான் இராவணன்.

முன்பாடலில் தான் கூறிய கருத்தை இப்பாடலில் தானே மறுத்துக் கூறுவதை நோக்குக. ''நாவின் நக்கும் காலக்கனல்'' என்பதை நோக்குக. அக்னிக்கு ''ஸப்த ஜிஹ்வா'' என்று ஒரு பெயரும் உண்டு; இந்த வடசொல்லுக்கு ''ஏழு நாக்குகளை உடையவன்'' என்பது பொருள்.

142. இராவணன் சீதையின் உருவெளிப்பாடு காணுதல்

''அம்பும் அனலும் நுழையாக் கன அந்தகாரத்
தும்பு, மழைகொண்டு, அயல் ஒப்பு அரிது ஆய துப்பின்
கொம்பர் குரும்பைக் குலம் கொண்டது, திங்கள் தாங்கி,
வெம்பும் தமியேன்முன், விளக்குஎனத் தோன்றும் அன்றே!'' (3309)

(அனல் - நெருப்பு; கன - மிக்க / வலிய; அயல் - வேறு; துப்பு - பவளம்; கொம்பு - கொடி; உம்பர் - மேலே; மழை - மேகம் / கூந்தல்; வெம்பும் - வெதும்பும்; தமியேன் - தனியன்; அந்தகாரம் - இருள் / இருட்டு / இருட்பிழம்பு; குரும்பை - தெங்கின் இளங்காய்; குலம் - இரண்டு)

''எதையும் துளைத்துச் செல்லும் அம்பும், எதிலும் ஊடுருவிச் செல்லும் நெருப்பும் கூட நுழைய முடியாத அளவு வலிய மிக்க அந்த இருளில், காம நோயால் வெதும்பும் தனியனாய் இருக்கின்ற என் முன்னால், வேறு எதையும் ஒப்புக் கூற முடியாத ஓர் பவளக்கொடி, இரண்டு இளந்தேங்காய் போன்ற கொங்கைகளையும், சந்திரன் போன்ற முகத்தையும் கொண்டு, ஒரு தீபத்தைப் போலத் தோற்றமளித்தது.

இராவணன் இத்தகைய இருளிலும் சீதையின் உருவெளித் தோற்றத்தைக் கண்டான் என்பதாம். மேகம் அவள் கரிய கூந்தலுக்கும், அவள் மேனி உருவத்திற்குப் பவளக் கொடியும், அவள் கொங்கைகளுக்கு தெங்கின் இளங்காய்களும், அவள் முகத்துக்குச் சந்திரனும் ஒப்பு; விளக்கு அவள் மேனி ஒளிக்கு ஒப்பு என்க. ''அம்பும் அனலும் நுழையாக் கன அந்தகாரம்'' என்பது இருட்டின் மிகுதியைக் குறித்தது. இங்கு உவமைகள் உவமேயங்களாக மாறி வந்துள்ளமை காண்க. உவமானங்களிலும் இவை சிறப்பு மிகுந்தவை என்பதை விளக்கவே இவ்வாறு கூறப்பட்டது என்க.

143. ''மருளூடு வந்த மயக்கோ? மதி மற்றும் உண்டோ?
தெருளேம்; இது என்னோ? திணி மை இழைத்தாலும் ஒவ்வா
இருளூடு, இரு குண்டலம் கொண்டும் இருண்ட நீலச்
சுருளோடும் வந்து, ஓர் சுடர் மாமதி தோன்றும் அன்றே!'' (3310)

(திணி - செறிந்த; இழைத்தல் - குழைத்தல்; ஒவ்வா - ஒப்பாகாத; சுருள் - கூந்தல்; சுடர் - ஒளி; மா - சிறந்த; மருள் - காம மோகம்; தெருள்தல் - தெளிதல்; என்னோ - யாதோ? ; மயக்கம் - அறிவு மாறுபாடு)

''கரிய அஞ்சனமையைத் திரட்டிக் குழைத்து அப்பினாலும் ஒப்பாகாத அத்தகைய இருள் பரவியிருக்கிறது. இருந்தாலும் எனக்கு மட்டும்,

இரண்டு காதணிகளைத் தாங்கி கரிய நீல நிறமுள்ள கூந்தலோடும், ஒரு சிறந்த ஒளி வீசுகின்ற சந்திரன் போல் தோற்றம் தெரிகின்றதே! இது என்ன விந்தை! இது என்னுடைய காம மோகத்தால் வந்த அறிவுமாறுபாடா? அல்லது இது போன்று வேறு ஒரு சந்திரன் உலகில் இருக்கிறதா? சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லையே!'' என்று சீதையின் உருவெளித் தோற்றம் கண்ட இராவணன் புலம்புகிறான்.

''திணிமை இழைத்தாலும் ஒவ்வா இருள்'' என்பதனோடு, ''கூட்டு மை போல் சிறந்த கார் இருள்'' என்ற நளவெண்பா அடிகளை நோக்குக.

144. ''புடை கொண்டு எழுகொங்கையும், அல்குலும், புல்கி நிற்கும்
இடை, கண்டிலம்; அல்லது எல்லா உருவும் தெரிந்தாம்;
விடம் நுங்கிய கண் உடையார் இவர்; மெல்ல மெல்ல,
மடமங்கையர் ஆய், என் மனத்தவர் ஆயினாரே''. (3311)

(புடை - பக்கம்; எழு - பூரித்த; புல்கி - சார்ந்து / தழுவி; நுங்கிய - ஆற்றல் அழியுமாறு செய்த; மடம் - மடப்பம் / இளமை / அழகு)

''இரண்டு பக்கங்களிலும் பூரித்து விளங்குகின்ற இரு கொங்கை களையும், அல்குலையும் தாங்கித் தழுவி நிற்க வேண்டுவது இடைதானே! அதைக் காண வில்லையே? அதைத் தவிர மற்ற உறுப்புக்கள் எல்லா வற்றையும் பார்த்தோம்; விஷத்தைத் தன் கண்ணுக்குள் கொண்டிருக் கின்ற அவள்; மெதுவாக, இளமை பொருந்திய மங்கை போல் என் உள்ளத்தில் சிறிது சிறிதாக இடம் பிடித்துக் கொண்டு விட்டாள்'' என்று சீதையின் உருவெளித் தோற்றம் கண்ட இராவணன் புலம்பினான்.

இடை மிகவும் நுண்ணியது; நூல்போன்றது, பிறர் கட்புலனுக்குத் தோன்றாதது என்பதால் இடைகண்டிலம் என்றான் என்க. அது வெளிப்பட்டுத் தோற்றம் தரவில்லை என்பது கருத்து. கண், நோக்கிய அளவிலேயே விஷம் கக்க வல்லது. எனவே ''விடம் நுங்கிய கண்'' என்றான் என்க. முன் பாடல்களில் சிறிது சிறிதாக அவளது உருவெளித் தோற்றம் கண்ட இராவணன், இப்பாடலில் முழு உருவத்தையும் கண்ட விதம் கூறும் நயம் காண்க.

145. ''பண்டு ஏய் உலகு ஏழினும் உள்ள படைக்கணாரைக்
கண்டேன்; இவர் போல்வது ஓர்பெண் உருக் கண்டிலேனால்;
உண்டே எனின், வேறு இனி, எங்கை உணர்த்தி நின்ற
வண்டு ஏறு கோதை மடவாள் இவள் ஆகும் அன்றே''. (3312)

(படை - வாள்; எங்கை - என் தங்கை/ சூர்ப்பணகை; ஏறுதல் - மொய்த்தல்; கோதை - கூந்தல்; மடவாள் - பெண் / இளமங்கை / சீதை; உரு - உருவச்சிறப்பு)

''முன்னமேயே, நான் ஏழு உலகங்களிலுமுள்ள வாள், வேல், அம்பு, போன்ற படைக்கருவிகள் போன்ற கூர்மையான கண்களை உடைய

பெண்கள் அனைவரையும் கண்டிருக்கிறேன். ஆனால் அவர்களுக்குள் இவளைப் போன்றது ஓர் உருவச் சிறப்புப் பெற்றவரைக் கண்டதில்லை; இப்பொழுது இங்கு என் எதிரே ஒரு அதி சௌந்தர்ய ரூபவதி ஒருத்தி நிற்கிறாள் என்றால், இவள் என்னுடைய அருமைத் தங்கை எனக்குக் குறிப்பிட்டுக் கூறிய, வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய இள மங்கையான சீதையே ஆவாள்'' என்று சீதையின் உருவெளித் தோற்றத்தைக் கண்ட இராவணன் புலம்பினான்.

இதுவரை தான் காணாத புது அழகு என்றதனால் சூர்ப்பணகை குறிப்பிட்டது இவளாகத் தான் இருக்க வேண்டும் என்று துணிந்தான் என்பதாம்.

146. இராவணன் சூர்ப்பணகையை அழைத்து வரச் சொல்லுதல்

''பூண்டு இப்பிணியால் உறுகின்றது,
தான் பொறாதாள்,
தேண்டிக் கொடு வந்தனள்; செய்வது
ஓர்மாறும் உண்டோ?
காண்டற்கு இனியாள் உருக்கண்டவள்
கேட்கும் ஆற்றால்,
ஈண்டு, இப்பொழுதே, விரைந்து,
எங்கையைக் கூவுக'' என்றான். (3313)

(பிணி - நோய்; பூண்டு - மேற்கொண்டு / உற்று; உறுதல் - வருந்துதல்; தேண்டி - தேடி; மாறு - கைம்மாறு / பிரதி உபகாரம்; ஈண்டு - இங்கு; கூவுதல் - கூப்பிடுதல் / அழைத்து வருதல்)

''நான் காம நோய் கொண்டு வருந்துவதைக் காணப் பொறுக்க மாட்டாதவளாகிய என் தங்கை சூர்ப்பணகை, எனக்காக என்று இவளைத் தேடிக் கொண்டு வந்து என்னிடம் சேர்த்திருக்கிறாள். என் தங்கைக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? காண்பதற்கு இனியவளான இச்சீதையின் உண்மை உருவத்தை நேரில் கண்டறிந்தவளான சூர்ப்பணகையிடம், ''நீ கண்ட சீதை இதோ என் எதிரில் நிற்கிறாளே இவள் தானா? என்று கேட்போம்'', என்று கருதி அவளை இங்கே இப்போதே விரைவாக அழைத்து வரும்படி ஏவலாளர்க்குக் கட்டளையிட்டான்.

உருவெளித்தோற்றத்தில் தான் கண்ட அழகி உண்மையிலேயே சீதைதானா என்று அறிந்து கொள்வதற்காக, முன்பே சீதையைக் கண்டு வந்த தன் தங்கையாகிய சூர்ப்பணகையை அழைத்து வருமாறு ஏவலாளர்களைப் பணித்தான் என்பதாம். அவனது உள்ள ஆசையைப் புலப்படுத்த, ஈண்டு, இப்போதே, விரைந்து என்று மூன்று அடுக்குகளைக் கவிஞன் கையாண்டிருப்பதைக் காண்க.

147. சூர்ப்பணகை வருதல்

என்றான் எனலும், கடிது ஏகினர் கூவும் எல்லை,
வன்தாள் நிருதக் குலம் வேர்அற மாய்த்தல் செய்வாள்,
ஒன்றாத காமக்கனல் உள்தெறலோடும், நாசி,
பொன்தாழ் குழைதன்னொடும் போக்கினள் போய்ப் புகுந்தாள். (3314)

(எல்லை - அளவு; தாள் - கால்கள் / முயற்சியுமாம்; மாய்தல் - அழித்தல்; ஒன்றாத - பொருந்தாத; தெறல் - சுடுதல்; குழை - காதணி; உள் - உள்ளம் / மனம்; தாழ்தல் - தொங்குதல்)

என்று இராவணன் கட்டளையிட்டதும், ஏவலாளர் விரைந்து சென்று அவளை அழைத்தவுடன், வலிய முயற்சியையும், கொடிய கால்களையும் உடைய அரக்கர்களின் குலத்தை ஆணி வேரோடு அறுத்து அழிக்கும் தொழிலைச் செய்பவளும், பொருந்தாக் காமம் என்னும் நெருப்பு மனத்தையுடையவளும், மூக்கு, பொன்னாலாகிய குண்டலங்கள் தொங்கப் பெற்ற காதுகள், இவைகளைப் பறிகொடுத்தவளும் ஆகிய சூர்ப்பணகை, இராவணன் எதிரில் போய்ச் சேர்ந்தாள்.

தாள் என்றது முயற்சி, கால்கள் என்னும் இரு பொருளிலும் உரைக்கப் பெற்றது. அரக்கர் குல அழிவிற்குச் சூர்ப்பணகையே காரணம் எனக் கவிஞன் பல இடங்களில் நிறுவுவதையும், அரக்கர் அழிவு பற்றிவரும் இடங்களிலெல்லாம் இவளைப் பற்றிக் கூறியிருப்பதையும் உணர்ந்து அறிக.

148. இராவணன் – சூர்ப்பணகை உரையாடல் [6 பாடல்கள்] சீதையின் உருவெளித் தோற்றம் காட்டி வினவுதல்

பொய்ந் நின்ற நெஞ்சின் கொடியாள் புகுந்தாளை நோக்கி,
நெய்ந்நின்ற கூர்வாளவன், ''நேர் உற நோக்கு; நங்காய்!
மைந்நின்ற வாள்கண் மயில் நின்றெென வந்து என் முன்னர்
இந்நின்றவள் ஆம்கொல், இயம்பிய சீதை?'' என்றான். (3315)

(நின்ற - நிலைபெற்ற / நீங்காத; நேர்உற - நன்றாக; முன்னர் - எதிரே)

அங்கு வந்து நுழைந்த, நெஞ்செல்லாம் பொய்யே நிலைத்து நிற்பவளாகிய கொடியவளான சூர்ப்பணகையை நோக்கி, நெய் பூசப்பட்ட கூரிய வாட்படையை உடைய இராவணன், ''தங்கையே! நன்றாக உற்றுப்பார்; அஞ்சன மை பூசப்பெற்றதும், வாட்படைபோன்று ஒளி வீசுவதும், கூர்மையானதுமான கண்களைக் கொண்டவளும், மயில் போலும் சாயலை உடையவளுமாக என் எதிரில் இதோ நிற்கிறாளே இவள்தான் நீ சொன்ன சீதை என்பவளா?'' என்று கேட்டான்.

வேல், வாள் முதலிய படைக்கருவிகள் துருப்பிடிக்காமல் இருப்பதற்காக எப்பொழுதும் நெய் பூசி வைக்கப்பட்டிருப்பது மரபு.

149. சூர்ப்பணகை மாறுபட்ட கருத்துக் கூறுதல்

''செந்தாமரைக் கண்ணொடும், செங்கனி வாயினோடும்,
சந்துஆர் தடந்தோளொடும், தாழ் தடக் கைகளோடும்,
அம்தார் அகலத்தொடும், அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான் இவன் ஆகும், அவ்வல்வில் இராமன்'' என்றாள். (3316)

(சந்து - சந்தனம் / அழகு; ஆர் - அணியப்பெற்ற; தாழ்தல் - தொங்குதல்; தடம் - பெரிய; அம் - அழகிய; தார் - மாலை; அகலம் - மார்பு; அஞ்சனம் - கரிய / நீல நிறம்; வல் - வலிய; வாய் - இதழ்)

சிவந்த தாமரை மலர் போன்ற கண்களோடும், சிவந்த கொவ்வைக்கனி போன்ற இதழ்களையுடைய வாயினோடும், சந்தனம் பூசப்பெற்ற, அழகிய, பூரித்த தோள்களோடும், முழங்கால்வரை தாழ்ந்து தொங்குகின்ற பெரிய கைகளோடும், அழகிய மாலையணிந்த மார்பினோடும், மை போன்ற கரிய மலை போன்று வருகின்ற இவன்தான், நான் எண்ணியிருக்கும் வலிய வில்லை உடைய இராமன் என்பவன் ஆவான்'' என்றாள் சூர்ப்பணகை.

முழங்கால்வரை நீண்டிருக்கும் கைகள் உத்தம ஆண்களுக்கு உரிய அங்க இலக்கணமாகும் என்க. தடக்கை என்பது ஆஜானுபாகு என்ற வடசொல்லின் தமிழாக்கம். வல்வில் என்பது ஒரே அம்பினால் பலவற்றை ஊடுருவி அழிக்குமாறு ஏவப்படும் வில் என்பதைக் குறிக்கும். இராவணன் கேட்ட கேள்வி வேறு; இவள் கூறுகின்ற பதில் வேறானது. மாறுபட்டது. இராவணன் சீதையையே மனத்தில் நினைத்துக் கொண்டிருப்பதால் அவன் சீதையை உருவெளித்தோற்றத்தில் கண்டு, சூர்ப்பணகையை நோக்கி, இவள்தானா நீ கூறிய சீதை என்கிறான். ஆனால் சூர்ப்பணகை எப்பொழுதும் இராமனையே தன் மனத்தில் நினைத்துக் கொண்டிருந்ததால் அவனது உருவெளித்தோற்றமே அவள் எதிரில் வர அவன்தான் இராமன் என்று மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கிறாள். இவ்வாறு கம்பனால் பாடப்பட்ட பாடல்கள்தான் கம்ப சூத்திரம் எனவும், கம்ப நாடகம் எனவும் கம்ப சித்திரம் எனவும் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கொண்டே இதனை ஒரு நாடகக் காப்பியம் என்று கூறுவதும் உண்டு.

150. இராவணன் சூர்ப்பணகையைக் கடிதல்

''பெண்பால்உரு, நான், இது கண்டது; பேதை! நீ ஈண்டு,
எண்பாலும் இலாதது ஓர்ஆண் உரு என்றி; என்னே!
கண்பால் உறும் மாயை கவற்றுதல் கற்ற நம்மை,
மண்பாலவரேகொல், விளைப்பவர் மாயை?'' என்றான். (3317)

(பேதை - அறிவில்லாதவள்; எண்பாலும் - நினைவிலும்; எண் - எண்ணம் / நினைவு; கவற்றுதல் - கவலை கொள்ளச்செய்தல் / வருத்துதல்; மண்பாலவர் - மானிடர்)

''அறிவற்றவளே! நான் இங்கு உருவெளித் தோற்றத்தில் கண்டது ஒரு அழகிய பெண்ணின் வடிவம்; ஆனால் நீயோ, நினைவிலும் கருத முடியாத ஒரு ஆணின் வடிவம் என்கின்றாய். என்ன வியப்பு இது; இதற்கு என்ன காரணம்? கண்களுக்கு எதிரே மாயச் செயல்களை வஞ்சனையால் செய்து முக்களை வருத்தும் தொழிலைக் கற்ற நம்மிடத்தே, மண்ணுலகத்திலுள்ள மானிடர்கள் கூட மாயம் செய்வார்களோ?'' என்றான் இராவணன்.

மாயையில் வல்ல நம்மையும் ஏமாற்றும் மாயை, மானிடர்களிடம் உண்டோ என்று வினவினான் என்பதாம்.

151. சூர்ப்பணகை மறுமொழி

''ஊன்றும் உணர்வு அப்புறம் ஒன்றினும் ஓடல் இன்றி,
ஆன்றும் உளது ஆம் நெடிது ஆசை கனற்ற நின்றாய்க்கு
ஏன்று, உன் எதிரே, விழி நோக்கும் இடங்கள் தோறும்,
தோன்றும், அனையாள்; இது தொல்நெறித்து ஆகும்'' என்றாள். (3318)

(ஊன்றும் - பதிந்த; உணர்வு - நினைவு / அறிவு; ஓடல் - செல்லுதல்; ஆன்ற - நிறைந்த; நெடிது ஆசை - காமம்; கனற்றுதல் - வெதுப்புதல்; ஏன்று - பொருந்தி; தொல் - பண்டு / பழமையான; நெறி - முறைமை / வழக்கம்)

''நீ சீதையின்பால் கொண்ட முற்றிய நினைவு, அதைத் தவிர்த்து, வேறு ஒன்றினும் செல்லாது, நிறைந்து போன உன் உள்ளத்தில் உண்டாகிய பெரிய காமஇச்சையானது, உன்னை நெருப்புப் போல் சுட்டு வெதுப்ப, அதனால் நீ உன் கண்களால் காணுகின்ற இடங்களிலெல்லாம் அவளுடைய உருவம் உன் எதிரில் பொருந்தித் தோன்றுவதாகத் தோற்றும்; இது ஒன்றும் புதுமையன்று. தொன்று தொட்டுப் பழமையான நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்ற பழக்கம் தான்'' என்று சூர்ப்பணகை இராவணனுக்குச் சமாதானம் கூறினாள்.

பொதுவாகவே ஒன்றின்பால் மிக ஈடுபட்டுவிட்டால், நமக்கு நம் நினைவு அதை விடுத்து வேறு ஒன்றினும் செல்லாது. சாதாரணமான மக்களுக்கே இப்படி என்றால், காமஇச்சை மிகுந்தவனான இராவணனுக்கு அவன் காண்கின்ற இடமெங்கும் சீதையே உருவெளித் தோற்றமாகத் தெரிந்தாள். எனவே சூர்ப்பணகை, அவனிடம், இது ஒன்றும் புதிதல்ல, பண்டைக்காலத்தில் காதல் செய்தவர்களுக்கும் இவ்வாறுதான் நடந்திருக்கிறது. எனவே நீ ஒன்றும் கவலை கொள்ளத் தேவையில்லை என்று சமாதானம் கூறினாள் என்க. இத்தகைய நிலையை இலக்கியத்தில் ''நோக்குவ எல்லாம் அவையே போறல்'' என்று கூறுவர்.

152. அன்னாள் அது கூற, அரக்கனும், ''அன்னது ஆக;
நின்னால் அவ்இராமனைக் காண்குறும் நீர் என்?'' என்றான்;
''எந்நாள், அவன் என்னை இத்தீர்வு அரும் இன்னல் செய்தான்,
அந்நாள்முதல், யானும் அயர்த்திலென் ஆகும்''என்றாள். (3319)

நீர்-நீர்மை/தன்மை; தீர்வுஅரும்-நீங்காத/போக்கமுடியாத; அயர்த்தல் - மறத்தல்)

அந்தச் சூர்ப்பணகை அவ்வாறு கூறவும், அரக்கனாகிய இராவணன், ''சரி; அது அவ்வாறே இருக்கட்டும்; ஆனால் நீ இராமன் உருவைக் காண்கிறாயே? அது எவ்வாறு?'' என்று கேட்டான். அதற்கு அவள், ''எப்பொழுது அவன் எனக்கு இந்தத் தீர்த்தற்கு அரிய துன்பத்தை விளைவித்தானோ, அன்று முதல், நானும் அவனை மறக்காமல் இருக்கிறேன்'' என்று மிகத் தந்திரமாக மறுமொழி கூறினாள்.

''எனக்குத்தான் சீதையின் மேல் தீராக்காதல்; எனவே நான் காண்பவை எல்லாம் சீதையாகவே தோற்றமளிக்கின்றன; ஆனால் இந்தச் சூர்ப்பணகை இராமன் நிற்கிறான் என்று கூறினாளே, இவளுக்கு ஏன் இராமன் உருவம் தெரிய வேண்டும்?'' என்று மனத்துள் எண்ணி, அவளை வினவுகிறான் இராவணன்; அதற்குச் சூர்ப்பணகை, தான் இராமன் மேல் கொண்டுள்ள காதலை மறைத்து, அவன் என்றைக்கு என்னுடைய உறுப்புகளை அறுத்து, மீண்டும் பெற முடியாத, இத்தகைய நீங்காத துன்பத்தைத் தந்தானோ, அன்று முதலே நான் அவனைப்பழி வாங்க வேண்டும் என்று அவனை மறக்காதவளாக, அவனை நினைத்துக் கொண்டே இருப்பவளாக ஆகிவிட்டேன் என்று மிகச் சாமார்த்தியமாக மறுமொழி கூறுகிறாள் சூர்ப்பணகை.

153. சீதையைக் கவர்ந்து வருமாறு சூர்ப்பணகை கூறுதல்

''ஆம் ஆம்; அது அடுக்கும்; என் ஆக்கையோடு ஆவி நைய
வேமால்; வினையேற்கு இனி என்விடிவு ஆகும்?'' என்ன,
''கோமான்! உலகுக்கு ஒரு நீ, குறைகின்றது என்னே?
பூ மாண் குழலாள்தனை வவ்வுதி, போதி''என்றாள். (3320)

(அடுக்கும் - பொருந்தும் / நிகழும்; ஆக்கை - உடல்; ஆவி - உயிர்; நைதல் - மெலிந்து வருந்துதல்; வேதல் - வெதும்புதல்; விடிவாதல் - தீருதல்; விடிவு - தீர்வு; கோமான் - பேரரசன்; குறைதல் - சிறுமை உறுதல்; மாண் - பெருமை; வவ்வுதல் - கவர்ந்து வருதல் / அபகரித்தல்)

''ஆம், அது உண்மை தான்; அவ்வாறு நடக்கக் கூடிய விஷயம் தான்; என்னுடைய உடலோடு உயிரும் மெலிந்து வருந்த நான் வெதும்பிக் கொண்டிருக்கிறேன்; இத்தகைய தீவினையுடைய எனக்கு எவ்வாறு இத்துன்பம் நீங்கும்?'' என்று இராவணன் கேட்க, அதற்குச் சூர்ப்பணகை, ''இவ்வுலகுக்கெல்லாம் ஒப்பற்ற பேரரசனாகிய நீ ஏன் இவ்வாறு

தாழ்ச்சியுற்று மனம் சிதைகிறாய்? மலர்கள் பெருமைப்படும்படி அணிந்த கூந்தலையுடைய சீதையை உடனே சென்று அபகரித்து வருவாயாக! உடனே செல்'' என்று விரைவுபடுத்துகிறாள் சூர்ப்பணகை.

''நான்இராமனைமறக்கவில்லை'' என்று கூறிய சூர்ப்பணகைக்கு, ஆம் அது சரிதான் என்று இராவணன் கூறுவது, தன் நிலையை எண்ணி, அத்தகைய நிலையில் அவளும் இருக்கிறாள் என்பதை உணர்ந்ததால் என்க. ஒரு தவறான காரியத்தைச் செய்யச் சொல்லும் போது, அத்தகைய காரியத்தைச் செய்யப் போகிறவர்களை உயர்த்திச் சொல்லுதல் உலக வழக்கு. எனவேதான் சூர்ப்பணகையும், சீதையைத் தூக்கி வா என்று சொல்லுவதற்கு முன் ''கோமான் உலகுக்கு ஒரு நீ'' என்று புகழ்ந்து பேசுகிறாள் என்க. ''பூமாண் குழலாள்'' என்பது சீதை அணிந்திருப்பதால் மலர்களும் பெருமையுறுகின்றன என்ற பொருளில் கூறப்பட்ட சொற்றொடர் என்பதை உணர்க. ''சீதையை மனத்தாலேயே நினைந்து வருந்தாதே; அவளை உடனே சென்று கவர்ந்து வருக'' என்று சூர்ப்பணகை அவன் அழிவுக்கு வழி கூறுகிறாள் என்க.

154. இராவணன் செயலற்று நிற்றல்

என்றாள் அகன்றாள்; அவ்அரக்கனும் ஈடழிந்தான்;
ஒன்றானும் உணர்ந்திலன்; ஆவி உலைந்து சோர்ந்தான்;
நின்றாரும் நடுங்கினர்; நின்றுள நாளினாலே
பொன்றாது உளன் ஆயினன்; அத்துணை போலும் அன்றே. (3321)

(ஈடு - வலிமை; நாள் - ஆயுட்காலம்; பொன்றாது - இறவாது; அத்துணை - அவ்வளவே; நின்றுஉள - எஞ்சிய; உலைதல் - நிலைகெடுதல்)

என்று கூறிய சூர்ப்பணகை அவ்விடம் விட்டு நீங்கினாள்; அந்த அரக்கனாகிய இராவணனும் வலியழிந்தான்; எந்தச் செயலையும் உணர்ந்து கொண்டானில்லை; செயலற்று நின்றான்; உயிர் நிலையழிந்து சோர்ந்து போனான்; அவன் அருகில் இருந்த அனைவரும், இந்நிலைகண்டு அஞ்சினர்; அவனது ஆயுட்காலம் இன்னும் எஞ்சியிருப்பதாலேயே அவன் உயிர் போகாமல் இருக்கிறது. அது தான் காரணம்; இல்லை என்றால் எப்போதோ உயிர் துறந்திருப்பான்.

''என்றாள் அகன்றாள்'' என்பது இரு காரணங்களை உணர்த்துகின்றன. ஒன்று, தான் மேலும் அவன் அருகில் இருந்தால், தான் இராமன்மேல் கொண்டுள்ள காதல் பற்றி இராவணன் எப்படியாவது அறிந்து கொள்ளக் கூடும். தன் குட்டு வெளிப்பட்டுவிடும் என்று அஞ்சி உடனே அவ்விடம் விட்டு அகன்றாள் என்பது - மற்றொன்று, இப்பொழுது இராவணன் தனியாக இருந்து, தான் சொல்லிய வழியை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அதற்குத் தனிமை வேண்டும் என்று கருதியும் விரைவில்

நீங்கினாள் என்க. ''நின்று உளநாள்'' என்பது, இராவணன் உயிரோடு இருந்த நாட்கள் போக, அவன் ஆயுட்காலத்தில் இன்னும் அவன் வாழவேண்டிய எஞ்சிய நாட்களைக் குறித்தது என்க. இந்த ஆயுட்காலம் முன்பே நிர்ணயிக்கப்படாது இருந்திருந்தால் அவன் இவ்வளவு நேரம் இறந்து போயிருப்பான் என்பது கருத்து.

155. இராவணன்சந்திரகாந்தமண்டபம் அமைக்கச்சொல்லுதல்

''இறந்தார் பிறந்தார்'' என, இன்உயிர் பெற்ற மன்னன்,
மறம்தான் உணர்ந்தான், அவண், மாடு நின்றாரை நோக்கி,
''கறந்தால்என நீர்தரு சந்திரகாந்தத்தாலே,
சிறந்து ஆர்மணி மண்டபம் செய்க'' எனச்செப்புக'' என்றான். (3322)

(பிறத்தல் - உயிர் பெற்றெழுதல்; உணர்தல் - தெளிதல்; மாடு - பக்கம்; தருதல் - சுரத்தல்; ஆர் - நிறைந்த; மணி - அழகிய)

இறந்தவர்கள் மீண்டும் உயிர்பெற்றுப் பிறந்து வருவது போல, தனது இனிய உயிரை மீண்டும் பெற்ற அரக்கர்க்கரசனாகிய இராவணன், தன் செயலற்ற நிலையினின்றும் தெளிந்து, தனது வலிமையை உணர்ந்து, அங்கே அவன் அருகில் நின்றிருந்த ஏவலாளரை நோக்கி, ''பசுவின் மடியிலிருந்து பால் சுரப்பதைப் போலக் குளிர்ந்த நீரைச் சொரிகின்ற சந்திரகாந்தக் கற்களால் ஆன, சிறந்த இரத்தினங்கள் நிறைந்த அழகிய மண்டபம் ஒன்றை நிர்மாணிக்கும்படி சிற்பி விசுவகர்மாவிடம் கூறுங்கள்'' என்றான்.

சந்திரகாந்தக்கல் என்பது சந்திரன் கிரணங்கள்பட்டதும் குளிர்ச்சி யடைந்து, பசு பால் சொரிவது போன்று குளிர்ந்த நீரைச் சொரியும் ஒரு அற்புதமான கல். அதனால் மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்று அவன் கூறியது தனது காமவெப்பத்தைத் தணித்துக் கொள்வதற்காக என்க.

156. சந்திரகாந்த மண்டபம் உருவாதல்

வந்தான் நெடுவான் உறை தச்சன்; மனத்து உணர்ந்தான்;
சிந்தாவினை அன்றியும், கைவினையாலும் செய்தான்
அம்தாம நெடுந்தறி ஆயிரத்தால் அமைந்த
சந்து ஆர்மணி மண்டபம், தாமரையோனும் நாண. (3323)

(சிந்தை - மனம்; அம் - அழகிய; தாமம் - விளக்கம் / ஒளி; தறி - தூண்கள்; சந்து - அழகு / சந்திரகாந்தக்கற்களுமாம்; தாமரையோன் - பிரமன்; சிந்தாவினை - சங்கற்ப சிருஷ்டி; தச்சன் - கம்மியன்)

உயர்ந்த தேவருலகத்தில் வாழும் தெய்வச் சிற்பியான விசுவகர்மா, இராவணன் நிலையையும் அவன் கட்டளையையும் தன் மனத்தால் நினைந்து, அதன் படியும், தன் கைவினைத் திறத்தையும் பயன்படுத்தி,

அழகிய ஒளிமிகுந்த மண்டபம் ஒன்றை, படைப்புக் கடவுளான பிரமதேவனும் கண்டு நாணும் வண்ணம் நிர்மாணித்து முடித்தான்.

சிந்தாவினை என்பது, மனத்தால் நினைத்த உடனேயும், நினைத்த வண்ணமும் உருவாக்குதல் என்ற பொருள் தந்து நின்றது. சங்கற்ப சிருஷ்டி என்பதன் தமிழாக்கம்; தாமம் என்ற சொல்லுக்கு ஒளி, விளக்கம், இடம், மாலை, அழகு என்று பல பொருள்கள் உண்டு.

157. மண்டபத்தின் சிறப்பு

காந்தம், அமுதின் துளி கால்வன, காலமீனின்
வேந்தன் ஒளி அன்றியும், மேலொடு கீழ் விரித்தான்;
பூந்தென்றல் புகுந்து உறை சாளரமும் புனைந்தான்;
ஏந்தும் மணிக் கற்பகச் சீதளக் கா இழைத்தான். (3324)

(மீன் - நட்சத்திரங்கள்; விரித்தல் - பரப்புதல்; சாளரம் - பலகணி / சன்னல்; புனைதல் - அழகுற அமைத்தல்; சீதளம் - குளிர்ச்சி; இழைத்தல் - அமைத்தல்; காந்தம் - சந்திரகாந்தக் கற்கள்; அமுது - நீர்; காலுதல் - கக்குதல் / சொரிதல்; கா - சோலை)

காலத்தைக் காட்டும் நட்சத்திரங்களின் அரசனாகிய சந்திரனது ஒளி இல்லாமலேயே, நீர்த்துளிகள் சொரிவனவான சந்திர காந்தக் கற்களை, மண்டபத்தின் மேலிருந்து கீழ்வரை இடைவெளியில்லாமல் நன்கு பரப்பி அமைத்தான்; மலர் மணம் வீசும் இளந்தென்றல் காற்று நுழைந்து, உலாவித் தங்குமாறு பலகணிகளையும் அழகோடு அமைத்தான்; தளிர், இலை, பூ, அரும்பு, பிஞ்சு, காய், கனி முதலியவைகள் அனைத்தும் நவ இரத்தினங்களாகவே தாங்கியிருப்பதும், வேண்டுவார்க்கு வேண்டியன நல்குவதுமான குளிர்ந்த கற்பக மரம் நிறைந்த சோலையினை, அம்மண்டபத்தைச் சுற்றிலும் அமைத்தான்.

நட்சத்திரங்கள் காலத்தை உணர்த்துவன. எனவே அவற்றைக் காலமீன் என்றார். நட்சத்திரங்களுக்குத் தலைவன் சந்திரன் என்பது முன்னர் உடுபதி என்ற சொல்லுக்குப் பொருள் கூறிய பொழுது கூறியவற்றை நினைவு கூர்க. அன்றியும் நட்சத்திரங்கள் 27ம் தக்ஷனுடைய மகளிர் என்பதும், அவர்களைச் சந்திரன் மணந்து கொண்டான் என்பதும் ஒரு புராணக்குறிப்பு. அதனாலும் காலமீனின் வேந்தன் என்று சந்திரன் குறிக்கப்பட்டான் என்க.

158. இராவணன் அம்மண்டபத்தைக் காண வருதல்

ஆணிக்கு அமைபொன் கை, மணிச்சுடர் ஆர்விளக்கம்
சேண்உற்ற இருள் சீப்ப, அத்தெய்வ மடந்தைமார்கள்
பூணின் பொலிவார் புடை ஏந்திட, பொங்கு தோளான்
மாணிக்க மானத்திடை மண்டபம் காண வந்தான். (3325)

(ஆணி - உரையாணி; சேண் - நெடுந்தூரம்; சீப்பது - ஓட்டுவது; சீத்தல் - போக்குதல்; புடை - பக்கம்; பூண் - அணிகலன்கள்; பொங்கு - பூரிக்கின்ற / மிகப்பலவான; மானம் - விமானம்)

மாற்றுயர்ந்த பொன்னாலாகிய அணிகலன்களைக் கையில் அணிந்து, அவற்றில் ஒளி விட்டுப் பிரகாசிக்கும், தொலைவில் இருக்கும் இருளையும் விரட்டி ஓட்டும் தன்மை வாய்ந்த இரத்தின தீபங்களை ஏந்தி, அவனுக்குப் பணிவிடை செய்யும் தேவமகளிர், இராவணன் இருமருங்கிலும், சூழ்ந்துவர, பூரிக்கின்ற இருபது தோள்களையுடைய இராவணன், தான் ஒரு மாணிக்கத்தாலான விமானத்தில் ஏறி, அம்மணி மண்டபத்தைக் காண்பதற்காக வந்தான்.

இராவணனிடம் ஏவல் செய்பவர்கள் தேவமகளிர்; அவர்கள் கைகளில் அணிந்திருக்கும் அணிகலன்கள் மாற்றுயர்ந்த பொன்னால் ஆனவை. மிக்ச் சிறப்புற்றுத் தோற்றமளிக்கின்றன; அவர்கள் கைகளில் ஏந்தியிருக்கின்ற விளக்குகள் இரத்தின தீபங்கள். தூரத்தே இருக்கின்ற இருட்டையும் விரட்டி ஓட்டிட வல்லவை. அவர்கள் அத்தகைய விளக்குகளைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு இராவணனைச் சூழ்ந்து வருகின்றனர். இராவணன் மாணிக்கக் கற்கள் பதிக்கப்பெற்ற ஒரு விமானத்தில் அமர்ந்து, அம்மண்டபத்தைக் காண வருகிறான் என்பது விளக்கம். ஆணிக்கு அமைபொன் என்பது - உரையாணி என்ற பொருள் தந்து, அதற்குத் தாழாத மாற்றுயர்ந்த பொன் என்பதைக்குறிக்கும். ஆணிப்பொன் என்பது உலக வழக்கு.

159. இருள் விலகுதல்

அல் ஆயிரகோடி அடுக்கியது ஒத்ததேனும்,
நல்லார் முகம்ஆம், நளிர்வால் நிலவு ஈன்ற, நாமப்
பல் ஆயிரகோடி பனிச்சுடர் ஈன்ற, திங்கள்
எல்லாம் உடன்ஆய், இருள்ஓட இரித்தது அன்றே. (3326)

(நல்லார் - தெய்வ மகளிர்; நளிர் - குளிர்ந்த; வால் - வெண்மையான; அல் - இருள் / இரவு; இரிதல் - நிலைகெடுதல் / விலகுதல்; நாமம் - புகழ் / பெருமை; பனிச்சுடர் - குளிர்ந்த ஒளி)

அவன் வந்த இரவுப்பொழுது ஆயிரம் கோடி இருளை அடுக்கிவைத்தாற்போன்று இருந்தது என்றாலும், நல்லவர்களான தேவ மகளிர்களின் முகம் என்னும் குளிர்ச்சி பொருந்திய வெண்மையான நிலவு தோன்றவும், பெருமைவாய்ந்த பல்லாயிரக் கோடிக்கணக்கான குளிர்ந்த ஒளி பரவியதால் சந்திரன் எல்லாம் ஒன்று திரண்டதனால், அவற்றின் பேரொளிக்கு அஞ்சி, இருள் நிலைதடுமாறி ஓடிப்போயிற்று.

ஆயிரகோடி என்பது இங்கு அளவின் மிகுதியைக் குறித்து நின்றது. மகளிர் முகங்களில் எழுந்த பேரொளியால் இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போயிற்று என்பதாம்.

160. பொற்பு உற்றன ஆய்மணி ஒன்பதும் பூவில் நின்ற
கற்பத் தருவின் கதிர்நாள் நிழற் கற்றை நாற,
அல்பற்று அழிய, பகல் ஆக்கியதால் அருக்கன்
நிற்பத் தெரிக்கின்றது நீள்சுடர் மேன்மை அன்றோ? (3327)

(பொற்பு-அழகு / சிறப்பு ; நாள் -பகல் / புதிய; நிழல்-ஒளி; நாறுதல்-தோற்றுவித்தல் ; அல்-இரவு; பற்று- தொடர்பு; அருக்கன்-சூரியன்; நீள்சுடர் மேன்மை- மிக்கஒளிச்சிறப்பு; தெளிதல்-விளங்குதல்; நிற்ப-இல்லாதிருத்தல்)

அழகிய சிறந்த நவரத்தினங்களாலான மலர்கள் பூத்துத் தொங்குகின்ற கற்பகமரம் இருக்கும் சோலையிலிருந்து எழுகின்ற ஒளிக்கற்றை, புதிய பகல்பொழுதைத் தோற்றுவிக்க, இருட்டு தொடர்பற்று விலகிப்போக, பகல்பொழுது வந்ததுபோல் ஆகியதால், சூரியன் இல்லாமலேயே, சூரியன் இருப்பதுபோல் ஒளிவீசித் தெரிவது, அந்த மிக்க ஒளிச்சிறப்பு நிறைந்த கற்பகத்தருவின் சிறப்பே அன்றோ?

சூரியன் இல்லாதபோதும் சூரியன் போன்ற ஒளிக்கற்றைகளைப் பரப்பியது அக்கற்பகச் சோலையில் உள்ள கற்பகமரங்களில் பூத்துக் குலுங்கும் நவரத்தினங்களாலான மலர்கள் என்பதாம். பொதுவாக இரத்தினங்கள் எல்லாம் சூரிய வெளிச்சம் பட்டுத்தான் ஒளிபரப்பும் இயல்புடையன. ஆனால் இந்தக் கற்பகமரத்தில் பூத்துக்குலுங்கும் நவமணிகள், சூரிய வெளிச்சம் இன்றியே சுயஒளி உடையன என்பதாம். கற்பகத்திற்குச் ''சோதிரங்கம்'' என்றும் ஒருபெயர் உண்டு; இது சந்திர, சூரிய ஒளியை அடக்கும்; அதனினும் மிக்க ஒளிகொடுக்கும் என்றும் கூறப்படுவதுண்டு. நவமணிகளாவன கோமேதகம். நீலம், பவளம், புட்பராகம், மரகதம், முத்து, மாணிக்கம், வைரம், வைடூரியம் என்பன.

161. இராவணன் மண்டபம் வந்து சேருதல்

ஊறு, ஓசை, முதல்பொறி யாவையும், ஒன்றின் ஒன்று
தேறா நிலை உற்றது ஓர் சிந்தையன்; செய்கை ஓரான்;
வேறு ஆய பிறப்பிடை, வேட்கை விசித்தது ஈர்ப்ப,
மாறுஓர் உடல் புக்கென, மண்டபம் வந்து புக்கான். (3328)

(பொறி-புலன்கள்; தேறா-தெளியாத; ஓர்தல்-அறிதல்; வேட்கை-ஆசை; விசித்தல் - கட்டிஇழுத்தல் ; ஊறு-ஸ்பரிச உணர்ச்சி; ஓசை-சப்த உணர்ச்சி)

தொடுதல், கேட்டல் முதலிய உணர்ச்சிகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தறியும் தெளிவில்லாத மனம் கலங்கிய நிலையை அடைந்த இராவணன், தான் இன்னது செய்ய வேண்டுமென்பதையும் அறியாதவனாகி, சீதைமேல் கொண்ட காமஇச்சை அவன் உள்ளத்தை வலியக் கட்டி இழுக்கவும், மற்றோர் பிறவியெடுத்து அதில் வேறு ஓர்

உடலில் புகுந்த உயிர்போல, செயலற்று, சந்திரகாந்த மண்டபத்தில் வந்து சேர்ந்தான்.

இராவணன் உற்ற மனம் கலங்கிய நிலையை மரண அவஸ்தைக்கு ஒப்பிட்டு, வேறு ஓர் பிறப்பையும், வேறோர் உடலையும் குறித்தார் என்க. ஐம்பொறிகள் மெய்வாய்கண் மூக்கு செவி என்பன ஐம்புலன்கள், ஊறு, ஓசை, நாற்றம், சுவை, ஒளி என்பன. ''கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றுஅறியும், ஐம்புலன்கள் என்பது குறள்''

162. இராவணன் மலர்ப் படுக்கை அடைதல்

தண்டல்இல் தவம் செய்வோர், தாம் வேண்டிய, தாயின் நல்கும்
மண்டல மகரவேலை அமுதொடும் வந்ததென்ன,
பண்தரு சுரும்பு சேரும் பசுமரம் உயிர்த்த பைம்பொன்
தண்தளிர் மலரின் செய்த சீதளச் சேக்கை சார்ந்தான். (3329)

(தண்டல்-தவறு / தடை / கெடுதல் ; மகரம் - சுரா மீன்கள் ; மண்டலம் - துறக்கம் / நாடு / வட்டம்; பண் - இசைப்பாடல் ; தரு - ஒலிக்கின்ற ; சுரும்பு - வண்டுகள் ; சேர்தல் - மொய்த்தல் ; உயிர்த்த- தோற்றுவித்த / துளிர்த்த / உண்டான ; சீதளம் - குளிர்ச்சி ; சேக்கை - படுக்கை; வேலை - கடல் / பாற்கடல்)

கெடுதல் இல்லாத, எந்தத்தடையும் இல்லாத தவத்தினை மேற்கொண்டிருக்கும் தேவர்கள், அவர்கள் விரும்பினவற்றை விரும்பிய படியே, தாயின் அன்பு கொண்டு தந்து உதவும் சுவர்க்க நாடு, சுராமீன் மிகுந்திருக்கின்ற வட்ட வடிவமான பாற்கடலில் தேவ அமிழ்தத்தோடு சேர்த்து வந்தாற் போன்ற, பாடல் இசைத்து ரீங்காரமிடும் வண்டுகள் மொய்க்கின்ற பசிய மரங்கள் தோற்றுவித்த, இளமையான பொன் போன்ற, குளிர்ச்சி மிகுந்த, தளிர்களாலும், மலர்களாலும் அமைக்கப்பட்ட குளிர்ந்த படுக்கையை வந்து அடைந்தான்

''வேண்டிய வேண்டியாங்கு எய்தலின், செய்தவம் ஈண்டு முயலப்படும்'' என்பது குறள். அதைத் தழுவிய அடிகள் ''தண்டல் இல் தவம் செய்வோர்தாம், தாயின் நல்கும்'' என்ற சொற்றொடர். அமிழ்தத்தோடு கூடிய பாற்கடல், பசுமரம் உயிர்த்த பைம்பொன் தண்தளிர் மலரில் செய்த சீதளச் சேக்கைக்கு உவமை. தவம் என்பது பலனை எதிர் நோக்காது செய்யப்படுவது; ஆனால் இதை இயற்றுவோர், எதனையும் தாயின் அன்போடு நல்கப்படுவர் என்பதாம்.

163. தென்றல் வருதல்

நேரிழை மகளிர் கூந்தல் நிறை நறை வாசம் நீந்தி,
வேரிஅம் சரளச் சோலை வேனிலான் விருந்து செய்ய,

ஆர்கலி அழுவம் தந்த அமிழ்தென, ஒருவர் ஆவி
தீரினும் உதவற்கு ஒத்த தென்றல் வந்து இறுத்தது அன்றே. (3330)

(ஆர்கலி - பேரொலி; அழுவம் - கடல்; ஆவி - உயிர்; தீர்தல் - நீங்குதல்; நேர் - சிறந்த; இழை - அணிகலன்கள்; நறை - நறும்புகை மணம்; வேரி - நறுமணம் / தேன் / பரிமளம்; அம் - அழகு; சரளம் - இனிமை; வேனிலான் - மன்மதன்; இறுத்தல் - தங்குதல்)

ஒருவரது உயிர் அவர் உடலை விட்டு நீங்கினாலும், அது அவ்வாறு நீங்காதிருக்கும் பொருட்டு, உதவி செய்யும் இயல்புடைய தென்றல் காற்று, இப்போது இராவணனைச் சுற்றிச் சூழ்ந்திருந்த சிறந்த ஆபரணங்களை அணிந்திருந்த தேவமகளிரின் கூந்தலிலிருந்து எழும் இயற்கையான மணம், அகில் முதலிய புகைகளால் உண்டாக்கப்பட்ட நறுமணம், நறுநெய்யின் மணம், கத்தூரி முதலியவற்றின் மணம், அவர்கள் சூடியிருந்த மலர்களின் மணம் ஆகியவற்றின் உட்புகுந்து நறுமணம் மிக்க அழகிய இனிய தேவதாரு மரங்கள் நிறைந்த அந்தச் சோலையில் இருக்கும் மன்மதனுக்கு விருந்து ஊட்டும் பொருட்டு, பேரொலி கொண்ட கடலில் தோன்றிய அமிழ்தம் போல வந்து சேர்ந்தது.

ஒருவர் உடலை விட்டு உயிர் நீங்கும் போது அமிழ்தம் உதவும். சரி, தென்றல் எப்படி உதவும்? இதனைத் தெரிந்து கொள்ள திருக்குற்றாலத் தலபுராணத்தில், மந்தமாருதச் சருக்கத்தைப் படித்தால் புரிந்து கொள்ளலாம். எனவே தென்றலும் உயிர்காக்கவல்லது என்பது கவிமரபு.

164. இராவணன் வருத்தம்

சாளரத்து ஊடுவந்து தவழ்தலும், தரித்தல் தேற்றான்;
நீள் அரத்தங்கள் சிந்தி, நெருப்புஉக நோக்கும் நீரான்;
வாழ்மனை புகுந்தது ஆங்குஓர் மாசுணம் வரக்கண்டு அன்ன
கோள்உறக் கொதித்து, விம்மி, உழையரைக் கூவிச் சொன்னான். (3331)

(சாளரம் - பலகணி / ஜன்னல்; தவழ்தல் - படிதல் / உலாவுதல்; தரித்தல் - தாங்குதல்; நீள் - மிக்க; அரத்தங்கள் - ரத்தம் / உதிரம்; உகுதல் - சிதறுதல்; நீர்மை - தன்மை; மனை - வீடு; மாசுணம் - மலைப்பாம்பு; கோள் - தீங்கு; விம்முதல் - நெடுமூச்செறிதலுமாம்; உழையர் - பணியாளர்; கூவுதல் - அழைத்தல்)

அந்த மண்டபத்திலுள்ள பலகணிகளில் நுழைந்து தென்றற் காற்று வந்து உலவவும், அதனைப் பொறுக்கமாட்டாமல், மிகுந்த இரத்தத்துளி களுடன் கூட நெருப்புப் பொறியும் சிந்தும்படி கோபித்து விழிக்கும் தன்மையையுடைய இராவணன், ஒருவன் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டிற்குள் ஒரு பெரிய மலைப்பாம்பு வந்து புகுந்ததைக் கண்டது போலக் கொடுமை பொருந்த மனம் கொதித்து, தேம்பி, அருகிலிருந்த ஏவலாளரை அழைத்துப் பின்வருமாறு கூறலானான்.

முன்பாடலில் தென்றலை அமிழ்தத்திற்கு உவமித்த கவிஞன், இந்தப் பாடலில் அதை மலைப்பாம்பிற்கு உவமித்திருப்பது காண்க. தென்றல் அமுதுதான் என்றாலும், காமநோய் வாய்ப்பட்ட இராவணனுக்கு அது மலைப் பாம்பு போல் தோன்றிற்று என்பதாம். எனவே அவன் அதைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் அற்றவனானான் என்பதாம். தென்றல், பாம்பு போல் சீறும்; நஞ்சு போலக் காமுகரை வருத்தும் என்க.

165. இராவணன் சினந்து கூறுதல்

''கூவலின் உயிர்த்த சில்நீர் உலகினைக் குப்புற்றென்ன,
தேவரில் ஒருவன் என்னை இன்னலும் செயத்தக்கானோ?
ஏவலின் அன்றி, தென்றல், எவ்வழி எய்திற்று'' என்னா,
காவலின் உழையர் தம்மைக் கொணருதிர் கடிதின்'' என்றான். (3332)

(கூவம் - கிணறு; உயிர்த்த - தோன்றிய / ஊறிய / சுரந்த; சில் - சிறிதளவு; குப்புறுதல் - மூழ்குவித்தல் / தலைகீழ் ஆக்குதல்; தேவரில் ஒருவன் - வாயு; ஏவல் - கட்டளை; கடிதின் - விரைந்து; கூவம் என்பது கிணற்றைக் குறிக்கும் வடசொல்)

''சிறு கிணற்று நீர் சுரந்து சிறிதளவேயான தண்ணீர் எப்படி உலகத்தை மூழ்குவிக்க முடியாதோ அவ்வாறு, என் ஆளுகைக்குட்பட்டு எனக்கு அடிமை செய்யும் தேவர்களில் ஒருவனான வாயுதேவன், எனக்கு இன்னல்தரும் ஆற்றல் மிக்கவனோ? என்னுடைய கட்டளை இல்லாமல், இந்தத் தென்றல் எப்படி என் மண்டபத்துக்குள் புகுந்தது? என்று சினந்து, காவலுக்காக அமைக்கப்பட்டிருக்கும் பணியாளர்களை உடனே விரைவாக இங்கே அழைத்து வாருங்கள்'' என்று அருகிலிருந்தாருக்குக் கட்டளையிட்டான் இராவணன்.

166. காவற் பணியாளர் மறுமொழி

அவ்வழி, உழையர்ஓடி, ஆண்டு அவர்க் கொணர்தலோடும்,
வெவ்வழி அமைந்த செங்கண் வெருவுற நோக்கி, வெய்யோன்,
''செவ்வழி, தென்றலோற்குத் திருத்தினிர் நீர்கொல்?'' என்ன,
''இவ்வழி இருந்தகாலை, தடை அவற்குஇல்லை'' என்றார். (3333)

(அவ்வழி - அப்பொழுதே; உழையர் - ஏவலாளர்கள்; வெய்யோன் - கொடியவன்; வெவ்வழி - கொடுமை; வெருஉற - அஞ்சும்படி; செவ்வழி - நேரானவழி - திருத்துதல் - வழிகாட்டுதல் / திறத்தல்; வழி - இடம் / மண்டபம் / சாளரம்)

அப்பொழுது உடனே ஏவலாளர்கள் ஓடிச் சென்று, அவ்வாயிற் காப்போரை அங்கு கொண்டு வந்து நிறுத்தியவுடன், அக்கொடியவனான இராவணன் தனது கொடுமையான சிவந்த கண்களால், அக்காவலர்கள் அஞ்சும்படி நோக்கி, ''தென்றல் இங்கு வருவதற்கு நீங்கள் தான் நேரான

வழியை அமைத்துக் கொடுத்தீர்களா?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் ''தாங்கள் இந்த மண்டபத்தில் தங்கியிருக்கும் பொழுது, தென்றல் வருவதற்குத் தடையேதும் விதிக்கப்படவில்லை; அது தாராளமாக இங்கு வரலாம் என்பது பழைய விதி'' என்று மறுமொழி கூறினார்கள்.

''இவ்வழி இருந்த காலை'' என்பதற்கு அவர்கள் மண்டபத்தில் இருந்த சன்னல்களைக் காண்பித்து, சன்னல்கள் இருக்கும் போது மண்டபத்திற்குள் தென்றல் வருவது இயற்கைதானே? அதற்கு எந்த விதத்தடையும் இல்லையே என்றும், நாங்கள் வாயிலைத்தான் காத்துக் கொண்டிருந்தோம், அது சன்னல் வழியாக வந்து விட்டது என்றும் சமாதானம் கூறினார்கள் என்பதும் பொருந்தும்.

167. தென்றலைச் சிறைப்பிடிக்க ஆணையிடுதல்

''வேண்டிய நினைந்து செய்வான் விண்ணவர் வருவது என்றால்,
மாண்டது போலும் கொள்கை, யானுடை வன்மை? வல்லைத்
தேண்டி, நீர் திசைகள் தோறும் சேணுற விசையில் செல்குற்று,
ஈண்டு, இவன் தன்னைப் பற்றி, இருஞ்சிறை இடுதிர்'' என்றான். (3334)

(வேண்டிய - விரும்பிய; மாண்டது - அழிந்துவிட்டது; கொள்கை - நடைமுறை / கோட்பாடு / ஒழுங்கு; வல்லை - விரைந்து; தேண்டுதல் - தேடுதல்; சேண் - நெடுந்தூரம்; விசை - விரைவு; இருமை - பெருமை / பெரிய / கொடிய; ஈண்டு - இங்கு / இலங்கையில்)

''நான் விரும்பினவற்றைக் குறிப்பால் உணர்ந்து செய்ய வேண்டிய தேவர்கள், இப்போது நான் விரும்பாத இந்தத் தென்றலாகிய வாயுதேவனை இங்கே வரும்படி செய்தலால், எனது கொள்கைகள் ஒரு ஒழுங்கு முறையும் இல்லாமல் அழிந்து போனது போலும்; நீங்கள் விரைவாக நெடுந்தூரம் வரை எல்லாத் திசைகளிலும் சென்று தேடி விரைவாக அத்தென்றலைப் பிடித்து இங்கு இலங்கையில் உள்ள பெரிய கொடிய சிறையில் அடைத்து வையுங்கள்'' என்று இராவணன் கட்டளையிட்டான்.

இராவணன் இருக்குமிடத்திற்கு இன்னார்தான் வரலாம், இன்னின்னார் வரக்கூடாது என்ற ஒரு நெறிமுறை இருந்தது, ஒரு கொள்கை இருந்தது. இப்போது தான் இருக்கும் இடத்திற்கு வரக்கூடாதவனாகிய வாயு - தென்றல் - வந்ததனால், தன்னுடைய கொள்கையும், ஆற்றலும் அழிந்து போய் விட்டதெனக் கருதுகிறான் இராவணன் என்பதாம்.

168. இராவணன் அமைச்சரை அழைத்துவரக் கட்டளை இடுதல்

''காற்றினோன்தன்னை வாளா
முனிதலின் கண்டது இல்லை;
கூற்றும் வந்து என்னை இன்னே
குறுகுமால், குறித்த ஆற்றால்

வேல்தரும் கருங்கட் சீதை மெய்
அருள் புனையேன் என்றால்;
ஆற்றலால் அடுத்தது எண்ணும்
அமைச்சரைக் கொணர்திர்'' என்றான். (3335)

(காற்றினோன் - தென்றல்; வாளா - வீணே; முனிதல் - கோபித்தல்; கண்டது - பயன்; தரும் - ஒத்த; மெய் - உண்மையான; இன்னே - இப்பொழுதே; அடுத்தது - ஏற்றது / மேல் நிகழவேண்டியது; குறித்தல் - எண்ணுதல்; ஆற்றல் - புத்தி கூர்மை / மதிவலி)

''தென்றலை இப்போது வீணாகக் கோபிப்பதால் எந்தப் பயனும் இல்லை; நான் எண்ணியபடி, வேலின் தன்மையான கூர்மையும், கரியதும், பெரியதுமான கண்களைப் பெற்ற சீதையின் உண்மையான அன்பை நான் பெறா விட்டால், என்னுடைய வலியழிவைக் கருதி, இயமனும், இக்காற்றைப் போல் என்னை இப்பொழுதே வந்து நெருங்கி விடுவான்; எனவே, எனக்குத் தம் கல்வியறிவால், அடுத்து நிகழ வேண்டிய, ஏற்றவற்றை எடுத்துச் சொல்லக் கூடிய என்னுடைய அமைச்சர்களை உடனே அழைத்து வாருங்கள்'' என்று ஏவலாளர்களுக்கு, இராவணன் கட்டளையிட்டான்.

வாயுதேவனை ஒன்றும் செய்யாது விட்டு விட்டால், இயமன் முன்னிலும் மிகுந்த ஆற்றல் பெற்று, என்னை நெருங்கி வந்து விடுவான். எனவே இப்பொழுது ஏதாவது செய்தாக வேண்டும். ஆகவே ஆலோசனை மிக்க அமைச்சர்களை விரைவில் கொணர்க என்றான் என்பதாம். மெய் அருள் என்பது ஒரு அருமையான சொல்லாட்சி. முன்பு போல் பொய்யான உருவெளித்தோற்றம் அல்லாது, உண்மையான உருவத்துடன் அவள் அன்பு செய்தல் வேண்டும் என்பது குறிக்கப்பட்டது.

169. அமைச்சர்கள் வந்து குழுமுதல்

ஏவின சிலதர் ஓடி, ''ஏ''எனும் துணையில், எங்கும்
கூவினர்; கூவலோடும் குறுகினர் கொடித்திண் தேர்மேல்;
மாவினில், சிவிகை தன்மேல், மழைமதக் களிற்றின்; வையத்
தேவரும், வானம் தன்னில் தேவரும், சிந்தை சிந்த. (3336)

(ஏவின - கட்டளையிடப்பட்ட; சிலதர் - பணியாளர்கள்; ''ஏ'' - விரைவுக்குறிப்பு; கூவுதல் - அழைத்தல்; வையம் - மண்ணுலகம்; தேவர் - முனிவர்கள்; சிந்தை சிந்துதல் - மனம் கலங்குதல்; திண் - வலிய; மா - குதிரை; சிவிகை - பல்லக்கு; குறுகுதல் - சேர்தல் / அடைதல்)

அவ்வாறு இராவணனால் கட்டளையிடப்பட்ட ஆண் பணியாளர்கள் ஓடிச் சென்று, ''ஏ'' என்று சொல்லும் கால அளவுக்குள், அமைச்சர்கள் உறைகின்ற எல்லா இடங்களிலும் சென்று அழைத்தனர்; அவர்கள் அழைத்தவுடன், இம்மண்ணுலகத்து வாழும் முனிவர்களும்,

விண்ணுலகத்தில் வாழும் தேவர்களும் மனம் கலங்கும்படி, அமைச்சர்கள் அவரவர்கள் தகுதிக்கேற்றவாறு, கொடிகள் ஏந்திய வலிய தேர்களின் மீதும், குதிரையிலும், பல்லக்குகளிலும், மழை போல மதம் பெருக்கும் யானைகளின் மீதும், ஏறி இராவணனை வந்து அடைந்தார்கள்.

சிலதர் என்பது ஆண்பால் - சிலதியர் என்பது பெண்பால்; ''ஏ எனும் துணை'' என்பது, ஏ என்ற சொல்லைச் சொல்லுதற்குரியகால அளவு என்றும், நொடி என்றும், மாத்திரை என்றும் இந்நூலில் பல இடங்களில் கையாளப் பெற்றிருப்பதை அறிக. மழை மதக் களிறு என்பதற்கு மேகம் போன்ற கரிய, மதம் பெருக்குகின்ற யானை என்றும் பொருள் கொள்ளலாம. வையத்தேவர்களாகிய முனிவர்களும், வானத் தேவர்களும் சிந்தை சிந்துதற்குக் காரணம், இராவணன் இப்படிப்பட்ட ஓர் சூழ்நிலையில் அமைச்சர்களை ஆலோசிப்பதற்கு அழைத்தால் தமக்கு என்ன நேருமோ என்று அஞ்சினர் என்பதாம்.

170. இராவணன் மாரீசன் இருக்கும் இடம் செல்லுதல்

வந்த மந்திரிகளோடு மாசு அற மனத்தின் எண்ணி,
சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன், தெளிவுஇல் நெஞ்சன்,
அந்தரம் செல்வது ஆண்டுஓர் விமானத்தில் ஆரும் இன்றி,
இந்தியம் அடக்கி நின்ற மாரீசன் இருக்கை சேர்ந்தான். (3337)

(சிந்தை - மனம்; தெளிவுஇல் - தெளிவற்ற / கலங்கிய; நெஞ்சம் - மனம்; மாசு - குற்றம்; அந்தரம் - ஆகாயம்; இந்தியம் - பொறிகள்; இருக்கை - இடம்)

தன் கட்டளையால் தன்னை வந்தடைந்த மந்திரிகளோடு, குற்ற மில்லாத வண்ணம் ஆலோசனை செய்தான் என்றாலும் இறுதியில் தான் மனத்தில் எண்ணியதையே செய்து முடிக்கும் மனத்தை உடைய வனானவனும், மனத்தெளிவற்றுக் கலங்கிய நிலையில் இருந்தவனுமான இராவணன், வான்வழிச் செல்லும் ஒரு விமானத்தில் அப்பொழுதே, வேறு ஓர் துணையும் இல்லாமல், தனியாக, ஐம்பொறிகளையும் அடக்கித் தவநிலையில் வாழ்கின்ற மாரீசனுடைய தவக்குடிலை அடைந்தான்.

ஆலோசனைக்கு அழைத்த மந்திரிகளோடு ஆலோசனை செய்தான். என்றாலும் அதை ஏற்காது, தான் மனத்தில் நினைத்ததையே இறுதியில் செய்து முடிக்கும் இயல்பும், இப்போது கலங்கிய மனநிலை உடையவனுமான இராவணன், ஒரு தனி விமானத்தில் மாரீசன் தவக்குடிலை அடைந்தான் என்பதாம். மாரீசன் முன்பு இராமன் கணைக்குத் தப்பிப் போனவன். அதனால் நன்னெறி பெற்றுத் தவமியற்றித் தனியனாய் இருந்தான் என்பது உரைக்கப்பட்டது. மாரீசன் இராவணனுக்குத் தாய்வழி மாமன்.

சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் நிறைவுற்றது

8. மாரீசன் வதைப் படலம் [83 பாடல்கள்]

தாடகையின் புதல்வன் மாரீசன். மாரீசன் தந்தை சுந்தன்; தனயைன் சுபாகு. தாடகையின் தந்தை சுகேது. அவன் தந்தை சர்ச்சரன். சுந்தன் இயக்கன். அகத்திய முனிவர் சாபத்தால் சுந்தன் அழிந்தான்; தாடகை, சுபாகு, மாரீசன் மூவரும் அரக்கர்கள் ஆகிப் போயினர். விசுவாமித்திரரின் வேள்வியை அழிக்கப் புகுந்ததால் தாடகையும், சுபாகுவும் இராமனால் கொல்லப்பட்டனர். மாரீசன் தப்பிப் பிழைத்து ஓடிப்போனான். இது பாலகாண்டத்துச் செய்தி. இவன் இரண்டாம் முறையாக, இராமனைக் கொல்லும் பொருட்டு, தண்டகாரணியத்திற்கு இராவணன் வேண்டு கோளுக்கு இணங்க மான் வடிவத்தில் வந்தான். மாரீசன் என்ற அந்த மாய மான் இராமன் அம்பினால் வதைக்கப்பட்டது பற்றிக் கூறும் படலம் என விரியும். இது 83 பாடல்களைக் கொண்டது.

இப்போது இவனைச் சந்திக்க இராவணன் வருகிறான். அவன் வந்த கருத்து என்ன என்று மாரீசன் வினவுதலும், நிகழ்ந்தனவற்றையெல்லாம் கூறிச் சீதையைக் கவர்ந்துவர மாரீசன் உதவ வேண்டும் என்று இராவணன் இரத்தலும், மாரீசன் இராமன் பற்றிப் பலவாறாக நயவுரைகள் எடுத்துக் கூறுதலும், இராவணன் அதைக் கேளாமல், மாரீசன் மீது வெகுளுதலும், வேறு வழியின்றி மாரீசன் அத்திட்டத்திற்கு உடன்படுதலும், சீதையைக் கவர்ந்துவர மானாக உருவெடுத்துப் போக உடன்பட்ட மாரீசன் மனநிலையும், சீதை இருக்கும் இடம் சென்று மாயமானாகத் தோன்றுதலும், மானைக் கண்டு மயங்கிய சீதை இராமனை அணுகி அதனைப் பிடித்துத் தர வேண்டுதலும், இலக்குவன் ''இது உண்மையான மான் அன்று, மாயமான்'' என்று அறிவுறுத்தலும், இராமன் அதை மறுத்து, தானே சென்று பிடித்துவர எண்ணி, இலக்குவனைக் காவலுக்கு வைத்துவிட்டு மானைத் தொடர்ந்து போதலும், மான் மாயவித்தைகள் செய்வதும், நிலையை உணர்ந்த இராமன் அம்பு எய்தலும், மாரீசன் இராமன் குரலிலேயே ''ஏ சீதா! ஏ இலக்குவா!'' என்று அலறி மயங்கி அரக்கன் உருவோடு விழுதலும், ''இதைக் கேட்டுச் சீதை கலக்க மடைவாளே'' என அஞ்சி, இராமன் விரைவில் தவச்சாலை சேர வருதலும். இப்படலத்துள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. மாரீசன் இராவணனை உபசரித்தல்

இருந்த மாரீசன், அந்த இராவணன் எய்தலோடும்,
பொருந்திய பயத்தன், சிந்தை பொருமுற்று வெருவுகின்றான்,

கருந்தட மலைஅன்னானை எதிர்கொண்டு, கடன்கள் யாவும்
திருந்திய செய்து, செவ்வித் திருமுகம் நோக்கிச் செப்பும். (3338)

(வெருவுதல் - அஞ்சுதல்; பொருமுதல் - வருந்துதல்; கடன் - கடமை / உபசாரம்; திருந்திட - செவ்வனே / முறையாக; செவ்வி - அழகு / பொலிவு; செப்புதல் - சொல்லுதல்)

தவத்தில் பொருந்தியிருந்த மாரீசன், அந்த இராவணன் அங்கு வந்து சேர்ந்தவுடன், சிறிது அச்சமுற்று, மனம் வருந்திக் கலக்கமும் அடைந்தான். எனினும் கரிய பெரிய மலை போன்ற இராவணனை எதிர்சென்று வரவேற்று, அவனுக்கு உரிய கடமைகளான உபசரணை களைக் குற்றமறச் செய்து, அவனுடைய பொலிவு பெற்ற அழகிய முகத்தைப் பார்த்துப் பின்வருமாறு கூறலானான்.

''கருந்தட மலையன்னான்'' என்று இராவணனது மேனியைக் குறித்த கம்பன், ''செவ்வித் திருமுகம்'' என்றும் கூறிய நயம் உணர்க. இராவணன் எப்பொழுதும் அமைச்சர் புடைசூழவோ அல்லது அரம்பையர் புடைசூழ வோதான் வருதல் வழக்கம். இப்போது இராவணன் தனியாக வந்திருப்பதால், மாமன் மாரீசனுக்கு மனத்தில் மயக்கம்; கலக்கம், அச்சம் என்க. ஏதோ ஒரு கொடிய எண்ணம் கொண்டு வந்திருக்கிறான் என்பதை ஊகித்து உணர்ந்து கொண்டான் என்க.

2. ''வந்த கருத்து யாது?'' என மாரீசன் வினவுதல்

''சந்த மலர்த் தண் கற்பக நீழல் தலைவற்கும்,
அந்தகனுக்கும், அஞ்ச அடுக்கும் அரசு ஆள்வாய்!
இந்த வனத்து, என் இன்னல் இருக்கைக்கு, எளியோரின்
வந்த கருத்து என்? சொல்லுதி'' என்றான் மருள்கின்றான். (3339)

(மருள்தல் - அஞ்சுதல்; சந்தம் - அழகு; தலைவன் - இந்திரன்; அந்தகன் - இயமன்; எளியோர் - வலியற்றவர்; அடுக்குதல் - ஆணை செலுத்துதல்)

அஞ்சிக் கலங்குகின்ற மாரீசன், ''அழகிய மலர்களையுடைய குளிர்ச்சி பொருந்திய கற்பக மரத்தின் நிழலில் இருந்து அரசோச்சும் தேவர்களின் தலைவனான இந்திரனுக்கும், இயமனுக்கும் அச்சம் தரும்படி ஆணைச் சக்கரம் செலுத்தி அரசாட்சி செய்பவனே! இந்தக் காட்டிற்குள், என்னுடைய துன்பம் தருவதான இருப்பிடத்திற்கு, மிக எளியவன் போல் தனியாக நீ வந்ததன் நோக்கம் என்ன? சொல்லுவாயாக?'' என்றான்.

''சந்த மலர்த்தண் கற்பக நிழல் தலைவன்'' என்றது முன்பு, ''இன்தளிர்க் கற்பக நறுந் தேனிடைத் துளிக்கும் நிழல் இருக்கை'' என்று கூறியதை ஒத்ததாகும் என்க. ''இன்னல் இருக்கை'' என்பது இராவணனுடைய அரண்மனை போல் அல்லாது, வசதிகளற்றமையால் துன்பம் தருவதற் கேற்ற தவக்குடில் என்ற பொருள்பட நின்றது. ''எளியோரின்'' என்பது பெரியவர்கள், சிறியவர்களின் இடத்துக்கு, அவர்கள் எதிர்பாராத

நேரத்தில் அவர்கள் அழைக்காத போதும்கூடத் தானே வந்து தரிசனம் தருவதைக் குறிக்கும். இதுபோல இறைவன் அடியார் இல்லத்திற்குத் தேடி வந்து காட்சி கொடுத்தல் - இறைவனின் ஒரு குணமான ''சௌலப்பியம்'' எனப்படும் என்க. எளிவந்த தன்மை என்பது பொருள். மாரீசன் தவம் புரிந்து கொண்டிருந்த இடம், இலங்கையிலிருந்து வெகுதூரத்திற்கு அப்பால், கடலைத் தாண்டி, ஓரிடத்தில் இருந்தது என்று வான்மீகம் கூறும்.

3. இராவணன் கூறத் தொடங்குதல்

''ஆனது அனைத்தும்; ஆவி தரித்தேன், அயர்கின்றேன்;
போனது பொற்பும்; மேன்மையும் அற்றேன் புகழோடும்;
யான்அது உனக்கு இன்று எங்ஙன் உரைக்கேன் இனி?'' என்னா,
''வானவருக்கும் நாண அடுக்கும் வசை மன்னோ?'' (3340)

(ஆனது - நிகழ்ந்து முடிந்தன; தரித்தல் - தாங்கியிருத்தல்; அயர்தல் - வருந்துதல்; பொற்பு - அழகு; மேன்மை - பெருமை; அடுத்தல் - அமைதல்; வசை - பழி)

இராவணன் மாரீசனை நோக்கி, ''நிகழக் கூடாதவை அனைத்தும் நிகழ்ந்து விட்டன. எனினும் இன்னும் உயிரைத் தாங்கிக் கொண்டு வருந்தி நிற்கிறேன்; என்னுடைய பொலிவுச் சிறப்பும், பெருமையும், புகழும் அழிந்தொழிந்தன; அதை நான் உனக்கு இப்போது எவ்வாறு கூறுவேன்? அந்தச் செயல் நமக்கு அடிமையாய் ஏவல் செய்யும் தேவர்களுக்குக் கூட, நாம் நாணும்படியான பழிமிக்க செயலாகும்'' என்றான்.

மாரீசனுடைய உதவியை எவ்வாறும் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக இராவணன் தன்னைச் சிறிது தாழ்த்திக் கூறிக் கொள்ளுகிறான் என்க. இத்தகைய தீயசெயல் நிகழ்ந்தபிறகும் நான் உயிர் தரித்திருத்தல் தகாதது. எனினும் என் ஆயுட்காலம் முடியவில்லை; எனவே மன வருத்தத்துடன் உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன் என்றான் என்பதாம்.

4. ''வன்மை தரித்தோர் மானிடர்; மற்று அங்கு, அவர் வாளால்
நின் மருகிக்கும் நாசி இழக்கும் நிலை நேர்ந்தார்;
என் மரபுக்கும் நின் மரபுக்கும் இதன்மேல் ஓர்
புன்மை, தெரிப்பின், வேறுஇனி மற்றுஎன்? புகல் வேலோய்!'' (3341)

(தரித்தல் - கொள்ளுதல்; நேர்தல் - செய்தல்; தெரிப்பின் - ஆராய்ந்து சொன்னால்; புன்மை - இழிவு / பழி; மரபு - குலம் / பரம்பரை / வம்சம்)

''வேற்படையை உடையவனே! மனிதர்கள் இப்போது மிக்க வல்லமை பெற்றவர்களாகி விட்டார்கள்; தண்டகாரண்யத்தில் அவர்கள் தங்கள் கை வாட்களால் உன்னுடைய மருமகளான சூர்ப்பணகைக்கும், அவள் மூக்கினை இழக்கும் படியான நிலையை உண்டாக்கி விட்டார்கள்; ஆராய்ந்து பார்க்குமிடத்து என்னுடைய குலப் பெருமைக்கும்,

உன்னுடைய பாரம்பரியச் சிறப்புக்கும் இந்தச் செயலைவிட இழிவானதோர் செயல் வேறு ஏதேனும் உண்டோ? சொல்லுவாயாக!'' என்றான் இராவணன்.

தன் தங்கை சூர்ப்பணகை என்று கூறாது, அவன் மருகி என்று கூறியது, அவனுக்கும் இந்த இகழ்வில் பங்கு இருக்கிறது என்பதைக் குறிக்க என்க. அதனால்தான் மீண்டும் கூறுகையில் தன் குலச்சிறப்பை மட்டும் கூறாது, ''நின் மரபுக்கும்'' என்று கூறுகிறான் என்க. மாரீசன் இராவணனுக்குத் தாய்வழி மாமன் முறையினன். எனவே அவன் குலச்சிறப்பையும் அவனுக்குச் சூர்ப்பணகையிடம் உள்ள உறவையும் தெளிவாக்கவே வேறுபடுத்தித் தனித்துக் கூறினான் என்க.

5. ''திருகு சினத்தார் முதிர மலைந்தார்; சிறியோர், நாள்
பருகினன் என்றால், வென்றி நலத்தின் பழி அன்றோ?
இரு கை சுமந்தாய்! இனிதின் இருந்தாய்! இகல்வேல் உன்
மருகர் உலந்தார்; ஒருவன் மலைந்தான், வரிவில்லால்.'' (3342)

(திருகுதல் - மூண்டெழுதல் / முறுக்கப்பெறுதலுமாம்; முதிர - முற்ற / உக்கிரமாக; மலைதல் - போர்செய்தல்; சிறியோர் - தம்பிகள்/இளையோர்; நாள் - வாழ்நாள் / ஆயுட்காலம்; பருகுதல் - உண்ணுதல்; இகல் - வலிய; இனிது - சுகம்; நலம் - பெருமை; உலத்தல் - அழிதல்)

''ஜீர்ப்பணகை மூக்கறுப்பட்டாள் என்பதறிந்ததும், கொதிக்கின்ற கோபம் கொண்டவர்களாய்த் தங்கள் ஆற்றல் முழுமையும் காட்டிப் போர் செய்த என் தம்பியராகிய கரன், தூடணன், திரிசிரன் ஆகியவர்களின் ஆயுட்காலத்தை, ஒரு கட்டமைந்த வில்லை ஏந்திய மானிடன் ஒருவன் போரிட்டு ஒழித்து அழித்து விட்டான்; உன்னுடைய மருமக்கள் இறந்து போயினர் என்றால் நாம் இதுகாறும் அடைந்த வெற்றிப் பெருமைக்கு எல்லாம் இது ஒரு பழி அல்லவா? இதனையறிந்தும், நீ உன் இரு கைகளையும் தலையிற் சுமந்தபடி தவம் மேற்கொண்டு சுகமாகக் களித்து வாழ்கிறாயே! இது சரியோ?'' என்று இராவணன் மாரீசனைக் கேட்கிறான்.

6. வந்த நோக்கம் கூறுதல்

''வெப்பு அழியாது என் நெஞ்சும் உலர்ந்தேன், விளிகின்றேன்;
ஒப்புஅழிவு என்றே, போர் செயல் ஒல்லேன்; உடன் வாழும்
துப்பு அழி செவ்வாய் வஞ்சியை வௌவ, துணை கொண்டிட்டு,
இப்பழி நின்னால் தீரிய வந்தேன், இவண்'' என்றான். (3343)

(வெப்பு - மனக்கொதிப்பு; உலத்தல் - அழிதல்; விளிதல் - உடல் மெலிதல் / இறத்தலுமாம்; ஒல்லுதல் - இசைதல் / உடன்படுதல்; ஒப்பு அழிவு - தரக்குறைவு; துப்பு - பவளம்; அழிதல் - ஒப்பாதல் இல்லாத / தோற்றல்; வவ்வுதல் - கவர்தல்; தீரிய - தீர்க்கும் பொருட்டு)

''இகழ்ச்சிகளால் நான் கொண்ட மனக் கொதிப்பு அடங்காமல், என் உள்ளம் அழிந்தேன்; எனவே உடலும் இறக்கும் நிலையை எட்டி மெலிந்து கொண்டு வருகிறது; இம்மானிடர் என் வலிமைக்கு ஒப்பாகார் என்றும், இவர்களுடன் போர் செய்வது என் தரத்திற்குக் குறைவு என்றும் கருதியே நான் அவர்களுடன் போர் செய்து வெல்லுவதற்கு உடன்படாது இருக்கிறேன்; என் தங்கையை மூக்கரிந்த அவர்களுடன் வாழ்கின்ற, பவளமும் தன் இதழுக்கு ஒப்பாகாது தோற்றுப் பின்னடைகின்ற பேரழகு வாய்ந்த இதழ்களையும், வஞ்சிக் கொடி போன்ற இடையையும் உடைய சீதையைக் கவர்ந்து வரவும் உன்னுடைய துணையைக் கொண்டு, இத்தகைய பழியைப் போக்கிக் கொள்ளும் பொருட்டும் நான் இங்கு உன்னை நாடி வந்தேன்'' என்றான் இராவணன்.

இராவணன் திக்குவிஜயம் செய்த காலத்தில் தேவர்களையும், திசையானைகளையும், கிரகங்களையும் வென்று சிறைப்படுத்தியவன். அத்தகைய ஆற்றல் பெற்ற அவன், இப்போது ஒரு மானிடனோடு போர் செய்தற்கு உடன்படவில்லை என்பதும், அது அவன் தரத்துக்கும் ஆற்றலுக்கும் இழுக்கு என்பதும் குறிக்கப்பட்டது. என் தங்கையாகிய ஒரு பெண்ணை அவர்கள் இழிவு படுத்தியதால் நானும் அவர்களுடன் வாழும் ஒரு பெண்ணாகிய சீதையையே கவர்ந்து வந்து இழிவுபடுத்த விரும்புகிறேன் என்று, தன் ஆசையினை மறைத்து மாரீசனிடம் பேசும் இராவணனின் சொல்வன்மை நோக்கத்தக்கது.

7. மாரீசன் கூறத்தொடங்குதல்

இச்சொல் அனைத்தும் சொல்லி, அரக்கன், எரிகின்ற
கிச்சின் உருக்கு இட்டு உய்த்தனன் என்னக் கிளரா முன்,
''சிச்சி'' என, தன்மெய்ச் செவி பொத்தி, தெருமந்தான்;
அச்சம் அகற்றி, செற்ற மனத்தோடு அறைகின்றான். (3344)

(கிச்சு - நெருப்பு; உருக்கு - காய்ந்த நாராசம்; சிச்சி - சீச்சி / அருவெறுப்புக் குறிப்பு; செற்ற - சினம் கொண்ட; அறைதல் - கூறுதல்; கிளர்தல் - சினம் மூண்டு எழுதல்; தெருமரல் - அஞ்சுதல் / கலக்கம்)

அவ்வரக்கனாகிய இராவணன், கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பில், உருக்குக் கம்பியைப் போட்டுக் காய்ச்சி, அதனைச் செவியில் ஊற்றினாற் போல இத்தகைய சொற்கள் எல்லாவற்றையும் கூறிச் சினம் பொங்கி எழுமுன், மாரீசன் சீச்சீ என்று அருவருப்பாகவும், அச்சமுடையனாகவும் தன் செவிகளைப் பொத்திக் கொண்டான். பின்னர் ஒருவாறு அச்சம் தீர்ந்து, சினம் கொண்ட உள்ளத்தோடு, பின்வருமாறு பேசலுற்றான்.

மெய்ச்செவி என்ற சொல் கேட்கும் உணர்ச்சியை அறிவிக்கும் காதுகள் என்ற பொருள்பட நின்றது. மெய் - உணர்வு அல்லது அறிவு; மெய் என்ற

சொல்லுக்கு உடல் என்று பொருள் கொண்டு, உடலிலுள்ள காதுகள் என்றும் பொருள் கூறுவதுண்டு.

8. மாரீசன் அறவுரை கூறுதல்

''மன்னா! நீ நின் வாழ்வை முடித்தாய்; மதி அற்றாய்;
உன்னால் அன்று ஈது; ஊழ்வினை என்றே உணர்கின்றேன்;
இன்னாவேனும் யான் இது உரைப்பென் இதம்'' என்னா,
சொன்னான் அன்றே அன்னவனுக்குத் துணிவு எல்லாம். (3345)

(மதி - அறிவு; இன்னாது - துன்பம் தருவது; இதம் - நன்மை; அன்றே - அப்பொழுதே; துணிவு - உறுதி; வாழ்வு - வாழ்நாள் செல்வமுமாம்)

''மன்னவனே! நீ கூறிய இச்சொற்களால் நீ உன்னுடைய வாழ் நாளையும், செல்வம், செல்வாக்கையும் இழக்கின்றாய்; அறிவு கெட்ட வனாகிறாய்; இது உன்னால் நடப்பவை இல்லை; உனது ஊழ்வினைப் பயன்தான் இவ்வாறு உன்னைச் சொல்லத் தூண்டுகிறது என்பதை நான் அறிய முடிகிறது. நான் இப்போது கூறப் போவன உனக்கு துன்பம் தருவதாய் இருக்கும் என்றாலும், அவை உனக்கு நன்மை தருவன என்பதால் இப்போது சொல்லுகிறேன்'' என்று கூறி அவனுக்கு நன்மை தரப்போகும் சொற்களைச் சொல்லத் தொடங்கினான் மாரீசன்.

''வாழ்வை முடித்தாய்'' என்பது, நீ இச்செயலைச் செய்வாயானால் நீ உன் வாழ்நாளை முடித்துக் கொண்டவனாவாய்; இறந்து படுவாய் என்ற உறுதியை உணர்த்தியது என்க.

9. ''அற்ற கரத்தோடு, உன் தலை நீயே அனல் முன்னில்
பற்றினை உய்த்தாய்; பற்பல காலம் பசிகூர
உற்று, உயிர் உள்ளே தேய, உலந்தாய்; பினை அன்றோ
பெற்றனை செல்வம்? பின் அது இழந்தால் பெறல் ஆமோ?'' (3346)

(அனல் - வேள்வித் தீ; முற்றி - வளர்த்து; உய்த்தல் - இடுதல்; பற்பலகாலம் - நெடுங்காலம்; கூர்தல் - மிகுதல்; தேய்தல் - மெலிதல்; உலத்தல் - வருந்துதல்; செல்வம் - அரசச் செல்வம்)

''உன் கைவாள் கொண்டு, உன் தலையையும், கரங்களையும் நீயே அறுத்து, அதை வேள்வித் தீயில் ஆகுதியாகச் சொரிந்து தவம் செய்தாய்; மிக நீண்ட காலம் கொடிய தவம் செய்ததனால் பசிமிகவுற்று, உயிர் உன் உடலினுள் அடங்கிப் போகும் வண்ணம் வருத்திக் கொண்டாய்; அத்தகைய கடினமான தவம் இயற்றிய பின்னால் அல்லவா உனக்கு இத்தகைய பெருஞ்செல்வங்களும், மூவுலகையும் ஆளும் அரசச் செல்வமும் கைவரப் பெற்றன. அவற்றை இப்பொழுது உனது பிறன் இல் விழைதல் என்ற இந்தச் செய்கையால் இழந்து விட்டால், மீண்டும் அவற்றைத் திருப்பிப் பெற இயலுமோ? முடியாதல்லவா?'' என்று அறிவுரை கூறத் தொடங்குகிறான் மாரீசன்.

இராவணன் தன்னுடைய உடைவாளாலேயே தன் தலையையும் கைகளையும் அறுத்து ஓமத்தீயில் ஆகுதிகளாகப் பெய்தான் என்பது உத்தரகாண்டம் இராவணன் பிறப்புப் படலத்தில் கூறப்பட்டுள்ளது. அவன் கோகர்ண ஆசிரமத்தில் ஆயிரம் ஆண்டுகள் உண்ணா நோன்பு - பட்டினித் தவம் புரிந்தான் என்றும், ஒவ்வொரு ஆயிரம் ஆண்டுக்கும் ஒரு தலையும் இரண்டு கரங்களையும் அறுத்து ஆகுதியாகப் பெய்து ஒன்பதாயிரம் ஆண்டு தவம் புரிந்தான் என்றும், கடைசியாகப் பத்தாவது தலையையும் இருபதாவது கைகளையும் வெட்ட முற்படும் பொழுது பிரமன் தோன்றி, முன் இழந்த தலை, கரங்கள் எல்லாவற்றையும் திருப்பித் தந்து மேலும் சில வரங்களும் அருளினான் என்பதும் உத்தரகாண்டக் குறிப்பு.

''ஓராயிரம் ஆண்டு உபவசித்துக் கழிந்தால், ஓரோர் தலையாகச் சீரார் சிரம் ஒன்பதும் தடிந்து, செந்தீயிடை ஓமம் புரிந்து, பேரா உபவாசத்தினனாய்ப் பின்பும் ஓராயிரத்து ஆண்டில் தாரார் மற்றைத் தலைதடியலுற்றான் பற்றித் தசக்கிரிவன்'' என்பது உத்தரகாண்டம்.

10. ''திறத்திறனாலே, செய்தவம் முற்றித் திருஉற்றாய்;
மறத்தினாலோ? சொல்லுதி சொல்ஆய் மறை வல்லோய்!
அறத்திறனாலே எய்தினை அன்றோ? அது, நீயும்
புறத்திறனாலே பின்னும் இழக்கப் புகுவாயோ?'' (3347)

(ஆய் - ஆராய்தல்; திறம் - சிறப்புமாம்; திறன் - அறநெறி; முற்ற - முடிய; திரு - செல்வம்; மறத்திறம் - தீவினை; புறத்திறன் - மறநெறி)

''நீ உன்னுடைய சிறப்பு மிகுந்த ஆற்றலினாலும், செய்தற்கரிய உயர்ந்த தவத்தை முற்றிலுமாக நிறைவேற்றியதாலும்தானே இத்தகைய செல்வங்களையும், செல்வாக்கையும், மூவுலக அரசாட்சியையும் பெற்றாய்? இப்பொழுது உன்னுடைய தீவினையால்தான் நீ இவ்வாறு பேசுகின்றாய்; ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களால் ஆனவேதங்களில் மிக்க பயிற்சி உடையவனே! இத்தகைய செல்வங்களை எல்லாம் நீ தரும நெறியில் நின்றல்லவா பெற்றாய்? இப்போது தர்மத்திற்கு மாறான அதர்ம வழியில் சென்று அத்தனையையும் இழக்கப் போகிறாயா? சொல்லுவாயாக!'' என்றான் மாரீசன்.

செற்தற்கரிய தவத்தைச் செய்து, எய்தற்கரிய பெருஞ்செல்வத்தை அடைந்தவன் சிறந்த உயர்ந்த இராவணன். இதனையறிந்த மாரீசன் அத்தகைய செல்வத்தை இழக்கக் கூடாது என்பதைக் கருதி, இராவணனுக்கு அறவுரை கூறத் தொடங்குகிறான் என்க. இராவணன் வேதங்கள் கற்றவன் என்பது ''சொல்ஆய் மறை வல்லாய்'' என்று குறிக்கப்பட்டதால் அறிக. அத்தகையவன், தானே இவ்வாறு அதர்ம நெறியில் போக இயலாது. எனவே இவனைப் பின்னிருந்து ஊக்குவிக்கும் ஒரு தீயசக்தி அவனுடைய ஊழ்வினைப் பயனே - விதியே என்கிறான் மாரீசன்.

11. ''நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார், நடை அல்லா
வாரம் கொண்டார், மற்று ஒருவற்காய் மனை வாழும்
தாரம் கொண்டார், என்ற இவர்தம்மைத் தருமம்தான்
ஈரும் கண்டாய்; கண்டகர் உய்ந்தார் எவர்? ஐயா?'' (3348)

(நாரம் - அன்பு / நீருமாம்; நடை - முறை; வாரம் - திறைப் பொருள் / வரியுமாம்; தாரம் - மனைவி; தருமம் - அறக்கடவுள்; ஈர்தல் - அழித்தல்; கண்டவர் - கொடியவர்கள் / தீயோர் / பாவிகள்; கண்டகம் - முள்; உய்த்தல் - பிழைத்தல்)

''தம்மிடம் அன்பு கொண்டவர்களது நாட்டை, அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து அபகரித்துக் கொண்டவர்கள்; மனு நீதிப்படியல்லாது, முறை தவறிய வழியில் வரி வசூலிப்பவர்கள்; மற்றொருவருக்கு உரியவளாய் அவன் மனையில் வாழும் மனையாளை வஞ்சனையால் கவர்ந்து கொள்பவர்கள், என்று இங்கு கூறப்பட்ட மூவகைக் கொடியவர்களையும் அறக்கடவுளாகிய தருமதேவதை தானே அவர்களுக்குத் தண்டனை தந்து அழித்து விடுவாள்; இதனை அறிவாயாக! தீய எண்ணமும் கொடிய செயலும் உடைய யாரும் தப்பிப் பிழைத்திருக்கிறார்களா தலைவனே! கூறு'' என்றான் மாரீசன்.

நம்பிக்கைத் துரோகம் செய்து நாடு கைப்பற்றுதலும், அறநூல்களில் கூறப்பட்ட ஆறில் ஒரு பங்குக்குமேல் இறைப்பொருள் பெறுபவனும், பிறன்மனை விழைவோனும் அறக்கடவுளால் தண்டிக்கப்படுவர் என்பது கருத்து. வாரம் என்பது பயிரிடுவோர் அடையும் விளைபொருளின் ஒரு பகுதி. இது பொதுவாக ஆறில் ஒரு பங்கு என்று பழநூல்கள் கூறும்.

12. ''அந்தரம் உற்றான், அகலிகை பொற்பால் அழிவுற்றான்,
இந்திரன் ஒப்பார் எத்தனையோர்தாம் இழிவுற்றார்?
செந்திரு ஒப்பார் எத்தனையோர் நின் திரு உண்பார்;
மந்திரம் அற்றார் உற்றது உரைத்தாய்; மதி அற்றாய்.'' (3349)

(அந்தரம் - விண்ணுலகு; பொற்பு - அழகு; அழிவுறுதல் - கெடுதல்; உண்ணுதல் - நுகர்தல்; மந்திரம் - ஆலோசனை / அமைச்சர் குழு)

''விண்ணுலகுக்கு உரியவனான தேவேந்திரன், அகலிகையின் அழகில் ஈடுபட்டு அதனால் தன் பெருமை அழிந்து தண்டிக்கப்பட்டான்; அந்த இந்திரனைப் போன்றவர் எத்தனையோ பேர் இகழ்ச்சி அடைந்திருக் கிறார்கள்; அதனை நீ அறிவாய்; சிறந்த அழகினை உடைய இலக்குமி போன்ற அளவிறந்தவர்கள் உன்னுடைய அழகையும் செல்வத்தையும் நுகர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை விட்டு விட்டு நீ பிறன் மனையை நாடுகிறாயே! அறிவற்றவனே! உனக்கு ஆலோசனை சொல்ல அமைச்சர்களே இல்லையா? அல்லது அவர்கள் கூறும் அறிவுரையை நீ ஏற்றுக் கொள்வதில்லையா?'' என்று கடிந்து கூறினான் மாரீசன்.

''அறன் கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாரில் பேதையார் இல்'' என்பது குறள் 145. உனது சொற்கள் அறிவில்லாதவரும், நல்ல அமைச்சர்களைத் துணைக் கொள்ளாதவரும் பேசுகின்ற பேச்சுப் போல் இருக்கிறது என்றான் என்க.

13. ''செய்தாயேனும், தீவினையோடும் பழி அல்லால்
எய்தாது, எய்தாது; எய்தின், இராமன், உலகு ஈன்றான்,
வைதால் அன்ன வாளிகள் கொண்டு, உன் வழியோடும்
கொய்தான் அன்றே, கொற்றம் முடித்து, உன்குழு எல்லாம்?'' (3350)

(தீவினை - பாவம்; வைதல் - சாபம் இடுதல்; வாளி - அம்பு; கொற்றம் - வெற்றி / வலிமையுமாம்; வழி - குலம் / வம்சம் / மரபு / சந்ததி; குழு - படைவீரர்கள்; கொய்தல் - அழித்தல்; உலகு ஈன்றான் - பிரமன்)

''என் இந்த அறிவுரைக்கு மாறாக நீ முயற்சி செய்தாலும், அதனால் உனக்கு விளையப் போவது பழியும் பாவமுமே அன்றி, இன்பமும் நன்மையும் அல்ல; இது நிச்சயம்; அவ்வாறு நீ நினைத்ததை அடைந்து விட்டால், அவ்விராமன், இவ்வுலகைப் படைத்தவனான பிரமனின் சாபச் சொல்லைப் போன்ற, குறிதப்பாது அழிவிக்கும் அம்புகளைக் கொண்டு, உன் குலத்தோடு, உன்னையும், உன் படைவீரர் குழு அனைத்தையும், உன் வெற்றிகளையும் முழுதுமாக அழித்து விடுவான். இது உறுதி'' என்றான் மாரீசன்.

பழி இம்மையின் பயன்; பாவம் மறுமைப் பயன். எனவே நீ செய்யும் இச்செயலால் இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் துயரடைவாய் என்பதைக் குறித்தான் என்க. ''உலகு ஈன்றான் வைதால் அன்ன வாளி'' என்பது பிரமசாபத்தைக் குறிக்கும். இராமனது அம்பு உன்னை மட்டுமல்ல, உன் கிளைஞரையும், படைஞரையும் கூட அழித்து விடும் என்றான் என்க. ''பகை , பாவம், அச்சம், பழி என நான்கும் இகவாவாம்இல் இறப்பான் கண்'' என்பது குறள்146. ''அறம், புகழ், கேண்மை, பெருமை, இந்நான்கும் பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா; பிறன் தாரம் நச்சுவார்ச் சேரும் பகை, பழி, பாவம் என்று அச்சத்தோடு இந்நாற்பொருள்'' என்பது நாலடியார் 82. முனிவர்கள் சாபமொழி தப்பாது தொடர்ந்து ஒருவனை அழிக்குமாறு போல, இராமனது பாணமும் உன்னைத் தவறாது அழிக்கும் என்பது கருத்து.

14. ''என்தான், என்னே! எண்ணலையே நீ, கரன் என்பான்,
நின் தானைக்கு மேல்உளன் என்னும் நிலை? அம்மா!
தன்தானைத் திண் தேரொடும் மாளத் தனு ஒன்றால்
கொன்றான்; முற்றும் கொல்ல, மனத்தில் குறிகொண்டான்.'' (3351)

(மேல்நிலை - தலைமை தாங்கும் நிலை; திண் - வலிய; தனு - வில்; முற்றும் - முழுவதையும்; குறிக் கொள்ளுதல் - கருதுதல் / சங்கற்பித்துக் கொள்ளுதல்; எண்ணுதல் - நினைத்தல்)

''உன் சேனைகளுக்கெல்லாம் தலைவன் என்று கூறக்கூடிய நிலையில் உள்ள கரன் என்பவனையும், அவனது வலிய தேர்ப்படையையும், தனது ஒரே ஒப்பற்ற வில்லினால் கொன்றழித்தவன் இராமன்; அவன் உன் குலம் முழுவதையும் கொன்று அழிப்பதையே தன் மனத்தின் கருத்தாகக் கொண்டு வந்திருக்கிறான். இதை ஏன் நீ இன்னும் எண்ணத் தொடங்கவில்லை. பெரும் வியப்புத்தான்?'' என்றான் மாரீசன்.

15. ''வெய்யோர் யாரே, வீர விராதன் துணை வெய்யோர்?
ஐயோ! போனான், அம்பொடும், உம்பர்க்கு அவன் என்றால்,
உய்வார் யாரே நம்மில் எனக் கொண்டு, உணர்தோறும்
நையா நின்றேன்; நீ இது உரைத்து நலிவாயோ?'' (3352)

(வெய்யோர் - கொடியோர்; துணை - அளவு; நையா - நைந்து / மெலிவுற்று; நலிதல் - துன்புறுத்துதல்; அம்பு - படைக்கலம்; உணர்தல் - கருதுதல்)

கொடியவர்களுள் எல்லாம் மிகக் கொடியவன் வீரமுள்ள விராதன்; அவனைக் காட்டிலும் கொடியவர்கள் யாரும் இருக்கிறார்களோ? அவனே இராமனது ஒரே அம்பினால் வானுலகுக்குச் சென்று விட்டான். என்றால் இனிமேல் ''நம்மிடம் உள்ள அரக்க வீரர்களில் யார்தான் உயிர் பிழைத்திருக்க முடியும்?'' என்று மனத்தில் கருதும் ஒவ்வொரு முறையும் நான் மனத்தளர்ச்சி உறுகிறேன்; இந்தச் சமயத்தில் இத்தகைய தகாத வார்த்தைகளைக் கூறி என் துன்பத்தை மிகுதிப்படுத்துகிறாயே? என்று இரங்கிக் கூறினான் மாரீசன்.

இங்கே அம்பு என்றது பொதுச் சொல்லாக ஆயுதப் படைக்கலன்களைக் குறித்தது எனக்கொள்க. காரணம் இராம இலக்குவர்கள் அம்பினோடும் கூட, வாளாலும் அவன் தோள்களை வெட்டி வீழ்த்தினார்கள் அல்லவா? ''விராதன் கொல்லப்பட்டது நமக்கு ஒரு பாடம் என்பதை ஏன் நீ இன்னும் உணரவில்லை'' என்று இராவணன் மாரீசனைக் கேட்டான் எனக் கொள்க.

16. ''மாண்டார், மாண்டார்; நீ இனி மாள்வார் தொழில் செய்ய
வேண்டா, வேண்டா; செய்திடின், உய்வான் விதி உண்டோ?
ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கேன்? அறம் நோனார்,
ஈண்டார்; ஈண்டு ஆர் நின்றவர்? எல்லாம் இலர் அன்றோ?'' (3353)

(தொழில் - செயல்; உய்வான் - நீங்கிப் பிழைத்தல்; நோனுதல் - பேணுதல் / செய்தல்; ஈண்டுதல் - ஓங்குதல் / நீடித்திருத்தல்; இலர் - இறந்தவர்)

''இறந்து போனவர்கள் இறந்து போனவர்களேயாவர்; மீண்டும் பிழைத்து வரமாட்டார்கள்; நீ இனிமேல், இறந்தவர்கள் செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாதே; தயவு செய்து செய்ய முற்படாதே; அவ்வாறு செய்வாயானால், நீ தப்பிப் பிழைப்பதற்கு உனக்கு எந்த ஊழ்வினையும்

உதவி செய்யாது; உனக்கு முன் ஒருவர் பின் ஒருவராக இந்த உலகத்தை ஆண்டவர்கள் எத்தனை பேர் என்று கணக்குக் சொல்ல இயலுமா? அத்தனை பேரும் இறந்து தானே போயினர்? எனவே அறவழியில் தன் மனத்தைச் செலுத்திச் செயலாற்றாதவர் எல்லாம் வம்சவிருத்தியும் ஓங்கிய புகழும் அடைய மாட்டார்கள்; நிலைத்து நிற்கலாம் என்று கூறியவர்கள் அனைவரும் நிலைத்தா நின்றார்கள்? இல்லையல்லவா? இறந்து தானே போனார்கள்?'' என்று மாரீசன் இராவணனுக்கு உலகின் நிலையாமை பற்றி அறிவுரை கூறி வற்புறுத்தினான்.

ஒவ்வொரு அடியிலும் ஒரே சொல்லை இரண்டு முறை கையாண் டிருக்கும் பாங்கு உணர்க. அவை யாக்கை நிலையாமையை வற்புறுத்தவே என்க. உடலும் உயிரும் அழிவின் பாற்பட்டது. உயிர் வாழும் காலத்தில் அறத்தைப் பேணுதல் வேண்டும். இல்லையென்றால் அவர்கள் புகழ் பெறுவதற்கான வேறு வழியே இல்லை என்றான் என்பதாம். ''வாழந்தவர்கள் வாழ்ந்தது மாமழை மொக்குளின் மாய்ந்து மாய்ந்து ஆழ்ந்தார் என்று அல்லால், அன்று முதல் இன்று அறுதியா வாழ்ந்தார்கள், வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை; என்பது திருவாய்மொழி. ''முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும், முடிவில் ஒரு படிசாம்பராய் வெந்து, மண்ணாவது கண்டு, பின்னும் இந்தப் படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால், பொன்னின் அம்பலவர் அடிசார்ந்து நாம் உய்ய வேண்டும் என்றே அறிவார் இல்லையே'' என்பார் பட்டினத்தார்.

17. ''எம்பிக்கும் என் அன்னை தனக்கும் இறுதிக்கு ஓர்
அம்பு உய்க்கும் போர்வில்லி தனக்கும், அயல் நிற்கும்
தம்பிக்கும், என் ஆண்மை தவிர்ந்தே தளர்வுற்றேன்;
கம்பிக்கும் என் நெஞ்சு, அவன் என்றே,''கவல்கின்றேன். (3354)

(எம்பி - என் தம்பி / சுபாகு; வில்லி - வில் வீரன்; அயல் - பக்கம்; கம்பித்தல் - நடுங்குதல்; கவல்தல் - கவலையடைதல்; தவிர்தல் - ஒழிதல் / பின்னடைதல்; இறுதி - அழிவு; ஆண்மை - வல்லமை / வீரம்; உய்த்தல் - செலுத்துதல்)

''என்னுடைய தம்பியான சுபாகுவுக்கும், என் அன்னையான தாடகைக்கும் அழிவு ஏற்படும்படி ஒப்பற்ற ஒரே அம்பைச் செலுத்திய, போராற்றலுடைய வில் வீரனான இராமனுக்கும், அவன் அருகில் எப்போதும் நீங்காது நிற்கும் அவன் தம்பியாகிய இலக்குவனுக்கும், என் வீரமும் வல்லமையும் பின்னடைந்து போய்த் தளர்ச்சியுற்றிருக்கிறேன்; அதை இப்பொழுது நினைத்தாலும் என் நெஞ்சு நடுங்குகின்றது. அதே இராமனையல்லவா நீயும் பகைக்கிறாய் என்று எண்ணும் போது மிக்கக் கவலையுறுகிறேன்'' என்றான் மாரீசன்.

இராமனிடம் தனக்கு முன்பே ஏற்பட்ட அனுபவத்தை எண்ணி நடுங்கி, இப்போது இராவணனை இராமனிடம் பகை கொள்ளாதே என்று

வற்புறுத்துகிறான் என்பதாம். ஒரு முறையல்ல இருமுறை இராமனின் அம்புக்குத் தப்பி வந்தவன் இம்மாரீசன். முதல் அம்பு தன்னைக் கடலில் ஆழ்த்தியது எனவே தப்பிக்க முடிந்தது; இரண்டாவது அம்பு தண்ட காரண்யத்தில் இருவேறு அரக்கர்களுடன் சேர்ந்து மான்வேடம் கொண்டு இராமனைக் கொல்ல முயன்றபோது, இராமன் எய்த அம்பு அவ்விரு அரக்கரையும் மாள்வித்தது. தான் மட்டும் ஒருவாறு தப்பி வந்து விட முடிந்தது. இதனை நினைவு கூர்ந்து இப்பொழுது இராவணனுக்கு அறிவுரை கூறுகிறான் மாரீசன்.

18. ''நின்றும், சென்றும், வாழ்வன யாவும் நிலையாவால்;
பொன்றும் என்னும் மெய்ம்மை உணர்ந்தாய்; புலை ஆடற்கு
ஒன்றும் உன்னாய்; என் உரை கொள்ளாய்; உயர் செல்வத்து,
என்றும் என்றும் வைகுதி; ஐயா! இனி''என்றான். (3355)

(நின்று - நிலைத்திணைப் பொருட்கள்; சென்று - இயங்கு திணைப் பொருட்கள்; பொன்றுதல் - அழிதல்; மெய்ம்மை - உண்மை; புலை - தீவினை; ஆளுதல் - செய்தல்; ஒன்றும் - சிறிதும்; உன்னுதல் - நினைத்தல்; என்றும் - எப்பொழுதும் / நிலைத்து)

''நிலைத்திணைப் பொருள்களும், இயங்கு திணைப் பொருள்களும் உலகத்தில் உயிர்கொண்டு வாழும் உயிரினங்களும், அசையும், அசையா, சரஅசரப்பொருள்கள்யாவையும்என்றும்நிலைத்திருப்பனஅல்ல;அவை என்றாவது ஒரு நாள் அழிந்தே தீரும் என்ற இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொண்டவனே! நீ சீதையைக் கவர்தல் என்ற இந்த இழிந்த செயலை ஒரு சிறிதும் உன் மனத்தில் எண்ணாதே; நான் சொல்லுவன வற்றைக் கேட்டு மனத்தில் கொள்வாயாக; இனிமேலாவது, உன்னுடைய பெருகிய செல்வத்தோடு என்றென்றும் இனிது வாழ்வாயாக!'' என்று வாழ்த்தி முடித்தான் மாரீசன்.

இப்பாடலிலும் ''உலக நிலையாமையே வற்புறுத்தப்பட்டது காண்க. நின்று வாழ்வனவும் சென்று வாழ்வனவும் ஸ்தாவரஜங்கமப் பொருட்கள் எனப்படும். இப்போது நிலையாமை பற்றி உணர்ந்த நீ, தீவினை தவிர்த்து, என் நல்லுரை கொண்டு, அழியாத பெருஞ்செல்வத்தோடு என்றென்றும் இன்புற்றிருப்பாயாக!''என்றான் என்பதாம். உலகத்தில் உள்ள அனைத்தும் அழியும் தன்மையன என்பது ''வாழ்வன யாவும் நிலையா'' என்று குறிக்கப்பட்டது. புலையாடல் என்பது இழிதொழிலைச் செய்தல் என்ற பொருளில் பயின்றது.

19. இராவணன் மாரீசனை வெகுண்டு உரைத்தல்

''கங்கைசடை வைத்தவனொடும் கயிலை வெற்பு ஓர்
அங்கையின் எடுத்த எனது ஆடு எழில் மணித்தோள்,
இங்கு ஓர் மனிதற்கு எளிய'' என்றனை என, தன்
வெங்கண் எரிய, புருவம் மீதுற, விடைத்தான். (3356)

(வெற்பு - மலை; அங்கை - உள்ளங்கை; ஆடு - வெற்றி பொருந்திய; அடல் - வெற்றி; விடைத்தல் - சினத்தல்; எளிய - கீழ்ப்பட்டன / இளைப்பன)

''கங்கையின் வெள்ளப் பெருக்கைத் தன் சடாமுடியில் அடக்கி வைத்திருப்பவனாகிய சிவபிரானை, அவன் உறைகின்ற கயிலை மலையுடன் என்னுடைய ஒரு உள்ளங்கையால் பெயர்த்தெடுத்து வெற்றி கொண்ட எனது அழகிய அணிகள் அணிந்த தோள்கள், இங்கே ஒரு மனிதனுக்குக் கீழ்ப்பட்டு இளைத்துப் போகும் என்று கூறிவிட்டாயே!'' என்று தனது கொடிய கண்களில் நெருப்புப் பொறி பறக்க, புருவம் நெற்றியின் மீது ஏறப் பெருஞ்சினம் கொண்டு, கீழ்வருமாறு உரைக்கத் தொடங்கினான் இராவணன்.

''விடைத்தல்'' என்ற இந்தச் சொல் இதே பொருளில் இன்றும் சோழ நாட்டில் பயன்படுத்தப் படுவதைக் காணலாம்.

20. ''நிகழ்ந்ததை நினைத்திலை; என் நெஞ்சின் நிலை அஞ்சாது
இகழ்ந்தனை; எனக்கு இளைய நங்கை முகம் எங்கும்
அகழ்ந்த வரை ஒப்புஉற அமைத்தவரை, ஐயா!
புகழ்ந்தனை; தனிப்பிழை; பொறுத்தனென் இது'' என்றான். (3357)

(இகழ்தல் - பழித்தல் / நிந்தித்தல்; எங்கும் - முழுவதும்; அகழ்ந்த - தோண்டப்பட்ட; வரை - மலை; அமைத்தல் - செய்தல்; தனி - ஒப்பற்ற / பெரிய)

''மாரீசனே! நீ அங்கு நிகழ்ந்தவற்றைப் பற்றி நினைத்துப் பார்க்க வில்லை; நான் படும் மன உளைச்சலைப் பற்றிச் சிறிதும் உணராது என்னையும் என் ஆற்றலையும் இகழ்ந்து பேசி விட்டாய்; எனக்குத் தங்கையானசூர்ப்பணகையின்முகம்முழுவதையும், ஒருதோண்டப்பட்ட மலைபோல் பள்ளமாகச் செய்து அனுப்பிய மனிதர்களை நீ, என்முன்னாலேயே புகழ்ந்து பேசுகின்றாய். இம்மூன்றும் என்னால் பொறுத்தற்கரிய பெரிய தவறுகள். இருப்பினும் நான் பொறுத்துக் கொள்கிறேன்'' என்றான் இராவணன்.

காது, மூக்கு, கொங்கை இவை அறுக்கப்பட்ட சூர்ப்பணகையின் உடலுக்குப் பல பள்ளங்கள் தோண்டப்பெற்ற மலை உவமை. குலப் பழியைப் பொறுத்துக் கொள்ளச்சொல்வதும், தன் ஆற்றலை இகழ்வாகப் பேசியதும், தன் தங்கைக்குத் தீமை செய்தவரைப் புகழ்ந்ததும் மூன்று தவறுகள் என்க.

21. மாரீசன் இராவணனுக்கு மீண்டும் அறிவுரை கூறுதல்

தன்னை முனிவுற்ற தறுகண் தகவிலோனை,
பின்னை முனிவுற்றிடும் எனத் தவிர்தல் பேணான்,

''உன்னை முனிவுற்று உன் குலத்தை முனிவுற்றாய்;
என்னை முனிவுற்றிலை; இது என்?'' என இசைத்தான். (3358)

(முனிவுறுதல் - வெகுளுதல்; தறுகண் - வன்கண்மை / அஞ்சாமை; தகவு - நடுவுநிலைமை / நேர்மை / பெருமை; பின்னை - மேலும் / மீண்டும்; தவிர்தல் - விட்டுவிடுதல்; பேணுதல் - விரும்புதல்)

தன்னை வெகுண்டு கோபித்த அஞ்சாமையுடையவனும், நடுவு நிலைமையற்றவனுமான இராவணனை நோக்கி, தான் மீண்டும் அறிவுரை கூறினால் தன்னை மீண்டும் கோபிப்பான் என்று கருதிக் கூறாமல் விடாது, மேலும் கூறலானான் மாரீசன். ''நீ என்னைக் கோபித்தாய் என்று நினைக்கிறாயா? இல்லை; நீ உன்னையே கோபித்துக் கொண்ட தோடல்லாமல், உன் குலத்தையும் சேர்த்துக் கோபித்துக் கொண்டாய்? நீ இவ்வாறு செய்வதன் காரணம் என்ன?'' என்று கேட்டான் மாரீசன்.

உன்னுடைய கோபம் எனக்குச் செய்யப் போகும் தீங்கினைக் காட்டிலும், உனக்கும் உன் குலத்துக்கும்தான் அதிகமாகத் தீமை செய்யப் போகிறது என்று கூறினான் என்பது கருத்து. ஒரு மந்திரிக்கு உரிய குணத்தோடு மாரீசன் இராவணனுக்கு அறிவுரை புகன்றான் என்பதாம். ''தம் உயிர்க்கு இறுதி எண்ணார்; தலைமகன் வெகுண்ட போதும், வெம்மையே தாங்கி நீதி விடாது, நின்று உரைக்கும் வீரர்'' என்பது அயோத்தியாகாண்டப் பாடல்.

22. ''எடுத்த மலையே நினையின், ''ஈசன், இகல் வில்லாய்
வடித்த மலை, நீ இது, வலித்தி'' என, வாரிப்
பிடித்த மலை, நாண்இடை பிணித்து ஒருவன் மேல்நாள்
ஒடித்த மலை, அண்ட முகடு உற்ற மலை அன்றோ?'' (3359)

(ஈசன் - சிவபெருமான்; வலித்தி - வளைப்பாயாக; மேல்நாள் - முற்காலம்; வாரி - பற்றி எளிதில் எடுத்தல்; அமலை - பேரொலி; வடித்தல் - வளைத்தல்; இகல் - போர்; முகடு - உச்சி)

''நீ கயிலை மலையைப் பெயர்த்தெடுத்ததையே பெருமையாகக் கூறிக் கொண்டிருக்கிறாயே; முன்பு ஒரு சமயம், சிவபெருமான் திரிபுரம் எரித்த காலத்தில் போர்க்களத்தில் மேருமலையையே வில்லாகப் பயன் படுத்தினான்; அத்தகைய திருத்தப்பட்ட சிவதனுசை விசுவாமித்திரர் கட்டளைக்கு இணங்க, ஒப்பற்றவனான இராமன்; அதனைத் தன்கையால் எளிதில் பற்றி எடுத்து, நாண் ஏற்றிப் பேரொலி முழங்க அதன் இடையில் பிடித்து வளைத்து ஒடித்தான் அல்லவா? அந்த மேரு மலை இவ்வண்டத்தின் உச்சியில் உள்ள மலை அல்லவா?'' என்றான்.

''நீ பெயர்த்தெடுத்த கயிலை மலை இமயமலையின் ஒரு சிகரம். அதையே நீ பெரிய செருக்குடன் கூறிக் கொள்ளுகிறாயே; இவ்வண்டத்தின் உச்சிக்கே நிகரான மேருமலையை எளிதில் கைப்பற்றி நாணேற்றி வளைத்து ஒடித்துக் காட்டினானே இராமன், அவனுடைய

ஆற்றலை / பெருமையை என்னவென்று சொல்லுவது?'' என்று கேட்கிறான் மாரீசன் என்பது கருத்து. நீ எடுத்த மலை கயிலை; அவன் ஒடித்த மலை மகாமேரு என்பதாம். ''ஒருவன்'' என்றது மனிதன் என்று நீ இழித்துக் கூறும் இராமன் என்றும், பதினாறு வயதும் நிரம்பாத இராமன் என்றும் விளக்கம் பெறும். மேரு மலை ஆகாயத்தின் முகடு அளாவியது; மலைகளுள் பெரியதும் மேலானதும் சிறந்ததுமாம்; இந்தச் சிவதனுசு மயனால் படைக்கப்பட்டது. சிவபெருமானால் தக்கன் வேள்வியில் பயன்படுத்தப்பட்டது.

23. ''யாதும் அறியாய்; உரை கொளாய்; இகல் இராமன்கோதை
புனையாமுன், உயிர் கொள்ளைபடும் அன்றே; பேதை
மதியால், ''இஃது ஓர் பெண் உருவம்'' என்றாய்; சீதை
உருவோ? நிருதர் தீவினை அது அன்றோ?''(3360)

(இகல் - வலிமை; கோதை - மாலை / தும்பைப் பூமாலை / கையுறையுமாம்; கொள்ளைபடல் - கவரப்படுதல் /அழிக்கப்படுதல்; பேதை மதி - மயக்க அறிவு)

''நீ இராமனுடைய போராற்றல், வில்லாற்றல் முதலியவை பற்றி ஒன்றும் அறியாதவன்; அவை பற்றி முற்றும் அறிந்த நான் கூறுவதையும் நீ ஏற்றுக் கொள்வதில்லை; போர் புரிய எண்ணியிருக்கும் வலிமையுடைய இராமன் போர்க்குரிய தும்பைப் பூமாலையைக் கழுத்தில் சூட்டிக் கொள்ளும் முன்பும், அவன் தன் கையுறையை அணிந்து கொள்ளுவதற்கு முன்பும், அரக்கர்களின் உயிர்கள் மிகுதியாக அழிக்கப்பட்டிருக்கும். உன்னுடைய அறியாமையாலும், மூடத்தனத்தாலும், ''இது ஒரு பெண்ணின் உருவம்'' என்கிறாய்; அது சீதையின் வடிவமா? இல்லைவே இல்லை; அரக்கர்கள் செய்த தீவினையின் மொத்த உருவம் அது என்பதை உணர்ந்து கொள்வாயாக'' என்றான் மாரீசன்.

''ஏவவும் செய்கலான்; தான்தேரான்; அவ்வுயிர் போலும் அளவும் ஓர்நோய்'' என்பது குறள் *848*. ''தானும் செய்யமாட்டான், பிறர் சொல்லுவதையும் கேட்க மாட்டான்'' என்பது ஒரு உலக வழக்கு. இராமன் போர்மாலை அணிவதற்கு முன்பே அரக்கர்கள் அனைவரும் அழிந்து படுவர் என்று இராமனின் போர்த்திறம் சிறப்பிக்கப்பட்டது.

24. உஞ்சு பிழையாய் உறவினோடும் என உன்னா,
நெஞ்சு பறைமோதும்; அது நீ நினையகில்லாய்;
அஞ்சும் எனது ஆர்உயிர்; அறிந்து அருகு நின்றார்,
நஞ்சு நுகர்வாரை, ''இது நன்று'' எனலும் நன்றோ? (3361)

(உஞ்சு - உய்ந்து / தப்பிப் பிழைத்து; மோதும் - துடிக்கும்; நுகர்தல் - உண்ணுதல்; உன்னா - உன்னி / நினைத்து)

''நீ சீதையைக் கவர்ந்து வருதல் என்ற செய்கையைச் செய்ய முற்படுவாயானால், நீ மட்டுமல்ல, நீ, உன் உறவினர்கள் அத்தனைபேரும் அழிவினின்றும் தப்பிப் பிழைக்க முடியாது. இதை நான் நினைக்கிறேன். எனவே எனது நெஞ்சம் பறையடிப்பது போலத் துடிக்கின்றது; ஆனால் அதைப் பற்றி நீ சிறிதும் நினைக்கின்றாய் இல்லை; எனது அருமையான உயிர்கூட மிக்க அச்சம் கொள்கிறது. ஒருவர் தெரியாமல் விஷத்தைக் குடிக்கப் போனால், அருகில் இருப்பவர் அது விஷம் தான் என்றும், அது அவரைக் கொன்று விடும் என்றும் அறிந்திருந்த பின்னும் அதைத் தடுக்காமல் ''நீங்கள் செய்யும் காரியம் நல்லது தான்'' என்று கூறுவதும் சரியோ?'' என்றான் மாரீசன்.

நீ செய்யும் இக்காரியத்தினால் நீயும் உன் அரக்கர் குலமும் அழிந்துபடுவீர்கள் என்று அறிந்த பின்னும், நான் அதைத் தடுக்காமல் இருப்பது முறையாகாது. எனவே நான் கூறுவதைக் கேள் என்கிறான் மாரீசன். விஷம் பருகுவதிலும் இச்செயல் மிகக் கொடுமையானது. விஷத்திற்கு மாற்று உண்டு; இதற்கு மாற்றே இல்லை; அழிவு நிச்சயம் என்பது மாரீசன் கருத்து.

25. ''ஈசன் முதல் மற்றும் இமையோர் உலகும், மற்றைத்
தேசம் முதல் முற்றும், ஓர் இமைப்பின் உயிர் தின்ப
கோசிகன் அளித்த கடவுட்படை, கொதிப்போடு
ஆசுஇல, கணிப்புஇல, இராமன் அருள் நிற்ப.'' (3362)

(ஈசன் - சிவபெருமான்; இமையோர் - தேவர்கள்; தேசம் - நாடு; முற்றும் - எல்லாவற்றையும்; இமைப்பு - நொடிப் பொழுது; தின்னுதல் - அழித்தல்; ஆசு - குற்றம்; கணிப்பு - அளவு; கோசிகன் - விசுவாமித்திரன்; அருள் - கட்டளை; படை - படைக்கலன்கள் / அஸ்திரங்கள்; கொதிப்பு - உக்கிரம்; குசிகன் குலத்தில் பிறந்தவன் ஆதலால் கௌசிகன் என்பது விசுவாமித்திரருக்குத் தத்திதாந்த நாமம்)

சிவபெருமான் முதலாக மற்றுமுள்ள தேவருலகம், ஏனைய நாடுகள் முதலிய எல்லாவற்றையும் ஒரு நொடிப் பொழுதில் அழிக்கவல்ல, ஆயுதங்கள், விசுவாமித்திரனால் இராமனுக்கு அளிக்கப்பட்ட தெய்வத் தன்மை வாய்ந்த படைக்கலன்கள், மிக்க உக்கிரத்தோடும், குற்ற மில்லாதனவும், அளவற்றதுமாக, இராமன் கட்டளையை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றன.

விசுவாமித்திரர் இராமனுக்குக் கொடுத்த படைக்கலன்கள், எல்லா தேசத்தையும் இமைப் பொழுதில் அழிக்கவல்லவை. தெய்வத்தன்மை பொருந்தியவை; உக்கிரமானவை; தோல்வி என்பதையே அறியாத குற்றமற்றவை; அளவற்றவை; அவை இராமன் கட்டளைக்காகக் காத்து நிற்கின்றன என்பதாம்.

26. ஆயிரம் அடல்கை உடையானை, மழுவாளால்
"ஏ" எனும் உரைக்குள், உயிர்செற்ற எதிரில்லான்,
மேயவிறல் முற்றும், வரிவெம் சிலையினோடும்
தாயவன் வலித்தகைமை யாம்உறு தகைத்தோ? (3363)

(அடல் - வலிமை; மழுவாள் - கோடாலி; செற்ற - போக்கிய / அழித்த; எதிர் - ஒப்பு; மேய - பெற்ற / அடைந்த; விறல் - வெற்றி; வரி - கட்டமைந்த; தாய்தல் - தாவுதல் / கடத்தல் / வெற்றி கொள்ளுதல்; வலி - ஆற்றல்; தகைமை - தன்மை / பெருமை / தக்கது; ஏ - விரைவுக் குறிப்பு)

ஆயிரம் வலிமிக்க தோள்களை உடைய கார்த்த வீர்யார்ச்சுனனை, தனது கோடாலிப் படையால், "ஏ" என்று சொல்லும் காலஅளவுக்குள் உயிரழித்த, தனக்கு ஒப்பில்லாதவனான பரசுராமன் பெற்ற வெற்றி அனைத்தையும், தனது கட்டமைந்த கொடிய விற்படையினால் வென்று, பெருமைபெற்ற இராமனுடைய வலிமையின்தன்மையை நாம்அடைவது என்பது முடியுமோ? முடியாது.

"கார்த்த வீர்யார்ச்சுனன் என்பவன் சந்திர குலத்தவன். ஆயிரம் தோள்களை உடையவன். இராவணனை முன்பே வென்றவன் என்றால் அவன்வீரம் உணர்க. அவனைப் பரசுராமன்தன்கோடலியால் ஒரு நொடிப் பொழுதிற்குள் அழித்தான். என்றால் பரசுராமனின் வீரம் சொல்லும் தகைமைத்தோ! அத்தகைய பரசுராமனையே வில்லாற்றலில் வென்று, அவன்தவவலிமை முழுதும்தான்அடையப்பெற்றவன்இராமன். எனவே இராமனுடைய ஆற்றலுக்கு முன் நாம் நிற்க முடியுமோ?" என்றான் மாரீசன் என்க.

27. "வேதனைசெய் காமவிடம் மேலிட மெலிந்தாய்,
தீது உரைசெய்தாய்; இனைய செய்கை சிதைவு அன்றோ?
மாதுலனுமாய், மரபின் முந்தைஉற வந்தேன்;
ஈதுஉரை செய்தேன்; அதனை எந்தை; தவிர்க" என்றான். (3364)

(வேதனை - துன்பம்; மேலிடல் - மேம்படுதல் / பற்றிக் கொள்ளுதல்; தீது - கொடியது; இனைய - இத்தன்மையான; சிதைவு - அழிவு; மாதுலன் - மாமன்; முந்தை - மூத்தோன்)

"துன்பத்தைத் தருகின்ற காமம் என்னும் விஷம் உன்னைப் பற்றிக் கொள்ள, அது மேம்பட்டு நிற்க, நீ உடலும் உள்ளமும் வாட்டமுற்று மெலிந்து போனாய்; அதனால் கொடிய வார்த்தைகளைக் கூறினாய்; இத்தகைய செயல் நமக்கு அழிவைத் தருவன அல்லவோ? நான் உனக்கு மாமன்; நம்முடைய குலத்தில் உனக்கு முன் பிறந்தவன்; மூத்தவன்; எனவே இத்தகைய நன்மை தரும் மொழிகளைக் கூறினேன்; எனவே என் அப்பனே! சீதையைக் கவர்ந்து வருதல் என்ற எண்ணத்தை விட்டு விடுவாயாக!" என்று அன்புடன் கூறினான் மாரீசன்.

காமவிஷம் வேதனை தருவது என்பது, ''மங்கையரால் வரும் காமம் இல்லை எனில் அருங்கேடு எனும் நாமம் இல்லை; நரகமும் இல்லையே'' என்று முன்னற் கூறியதை அடியொற்றியது என்க; உறவுகளிலேயே மாமன் மருமகன் உறவு மிக்கச் சிறப்பானது. மாதுலனும் மருகனும் நேயத்தின் மிக்கோர் என்பதாம். ''மாமனும் மருகனும் போலும் அன்பின'' என்பது சீவகசிந்தாமணி. மாதுலன் - மாதாவுடன் பிறந்தவன்.

28. இராவணன் மீண்டும் மாரீசனைக் கடிதல்

என்ன, உரை அத்தனையும், எத்தனையும் எண்ணிச்
சொன்னவனை ஏசின அரக்கர் பதி சொன்னான்;
''அன்னை உயிர் செற்றவனை அஞ்சி உறைகின்றாய்;
உன்னை,ஒருவற்குஒருவன்என்றுஉணர்கைநன்றோ?'' (3365)

(ஏசின - நிந்தித்த; அரக்கர்பதி - அரக்கர் வேந்தன் / இராவணன்; செற்ற - போக்கிய; உணர்கை - நினைத்தல் / மதித்தல்; எத்தனையும் - எல்லா விதங்களாலும்)

என்று இவ்வாறு எல்லாவிதங்களாலும் ஆலோசித்துப் பார்த்து நல்ல உறுதி மொழிகள் சொன்னவனான மாரீசனை, அரக்கர் தலைவனாகிய இராவணன் நிந்தித்துப் பின் வருமாறு கூறலானான். ''உன்னுடைய அன்னையாகிய தாடகையின் உயிரைக் குடித்தவனைப் பழி வாங்கும் ஆற்றல் இல்லாமல், அவனுக்கு அஞ்சி, இப்படித் தவவேடம் தரித்து மறைந்து வாழ்கிறாய்; உன்னை ஒரு போர் செய்தற்குரிய ஆற்றல் வாய்ந்த ஆண் மகன் என்று மதிப்பது சரியாகுமா?'' என்றான்.

உன்னை ஒரு ஆண் மகன், வீரன், அரக்கன் என்று எண்ணி உன்னிடம் உதவி கோரி வந்தது என் தவறு என்கிறான் இராவணன். உன்னால் ஒருவர்க்கும் உதவி செய்ய முடியாது. அத்தகைய ஆற்றல் உன்னிடம் இல்லை என்பதாம்.

29\. ''திக்கயம் ஒளிப்ப, நிலை தேவர் கெட, வானம்
புக்கு, அவர் இருக்கை புகைவித்து, உலகம் யாவும்
சக்கரம் நடத்தும் எனையோ, தயரதன்தன்
மக்கள் நலிகிற்பர்? இது நன்று வலி அன்றோ?'' (3366)

(புகைவித்தல் - எரிமூட்டி அழித்தல்; சக்கரம் - ஆணை; இருக்கை - ஊர்; நலிதல் - வருத்துதல்; ஒளிப்ப - ஒளிந்து கொள்ள)

''எட்டுத் திசைகளிலுமுள்ள யானைகளும் என்னைக் கண்டு அஞ்சி ஒளித்துக் கொள்ளவும், தேவர்கள் தங்கள் நிலை குலைந்து போகவும், அவர்களுடைய சுவர்க்க லோகத்துட்புகுந்து, அவர்களது இருப்பிடமாகிய ஊர்களையெல்லாம் எரியூட்டி அழித்து, இவ்வுலகங்கள் எல்லாவற்றிலும் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி அரசாட்சி செய்யும் என்னையா, இந்தத் தசரதனது மக்களும், மானிடர்களுமாகிய இராம இலக்குவர் வருத்த

மடையச் செய்வர்? நன்றாக இருக்கிறது உனது ஆற்றல்!'' என்று ஏளனமாகக் கூறினான் இராவணன்.

இராவணன் எட்டுத் திசையானைகளுடன் பொருது வென்றதும், தேவருலகத்தை எரியூட்டி அவர்கள் நிலைகெட்டு ஓடும்படி செய்ததும், எல்லா உலகங்களிலும் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி அரசாட்சி செய்ததும், உத்தரகாண்டம் திக்குவிஜயப் படலத்தில் விரிவாகப் பேசப் பட்டிருக்கின்றன.

30. ''மூஉலகினுக்கும் ஒரு நாயகம் முடித்தேன்;
மேவலர் கிடைக்கின், இதன்மேல் இனியது உண்டோ?
ஏவல் செய்கிற்றி, எனது ஆணை வழி, எண்ணிக்
காவல் செய் அமைச்சர் கடன் நீ கடவது உண்டோ?'' (3367)

(நாயகம் - தலைமை; மேவலர் - பகைவர்; செய்கிற்றி - செய்வாயாக; ஏவல் - கட்டளை; கடவது - தக்கது; ஒரு நாயகம் - ஏகாதி பத்தியம் / ஏகச் சக்ராதிபதி)

''பூலோகம், சுவர்க்கலோகம், பாதாளம் என்ற மூன்று உலகினுக்கும் ஒரு தனித் தலைமை பூண்டவன் நான்; இப்பொழுது என்னை எதிர்க்கும் பகைவர் கிடைப்பார் என்றால் அது எனக்கு இனிமை பயப்பதல்லவா? அரசினைப் பாதுகாக்கும் அமைச்சர்கள் என்னைக் காத்து வழி நடத்திச் செல்வார்கள். அது அவர்களது கடமை; நீ அமைச்சன் அல்லன். நான் ஏவுகின்ற கட்டளைப்படி நீ பணி செய்வாயாக! அதைக் கடந்து வேறு எதையும் செய்யாதே!'' என்று இராவணன் மாரீசனை எச்சரித்தான்.

31. ''மறுத்தனை எனப் பெறினும், நின்னை வடி வாளால்
ஒறுத்து, மனம் உற்றது முடிப்பென்; ஒழிகல்லேன்;
வெறுப்பன கிளத்தலுறும் இத் தொழிலை விட்டு, என்
குறிப்பின்வழிநிற்றி,உயிர்கொண்டுஉழலின்''என்றான். (3368)

(வடி - கூரிய; ஒறுத்தல் - அழித்தல்; உழல்தல் - திரிதல்; கிளத்தல் - சொல்லுதல்; குறிப்பு - கருத்து / நோக்கம்; வழி நிற்றல் - நிற்றல்; உற்றது - கருதியது)

''நான் ஏவியபடி செய்வதற்கு நீ மறுத்தாய் என்றாலும், கூரிய வாளால் உன்னைக் கொன்றுவிட்டு, என்மனம் விரும்பியதைச்செய்து முடிப்பேன்; அதிலிருந்து நீங்க மாட்டேன்; எனவே நீ உயிருடன்வாழ்ந்து திரிய வேண்டு மென்றால், எனக்கு வெறுப்பூட்டுவனவான இவ்வுறுதி மொழிகள் கூறும் செய்கையை விட்டு விட்டு, எனது நோக்கத்திற்கு ஏற்ப நடப்பாயாக!'' என்று மீண்டும் எச்சரித்தான் இராவணன்.

''மனம் உற்றது'' என்பது சீதையைக் கவர்ந்து வருவதைக் குறித்தது. நினைத்ததை முடிப்பேன் என்று மட்டும் கூறி முடித்துவிடாமல், ஒழிகல்லேன், இதனின்றும் நீங்க மாட்டேன் என்று கூறியதனால்

அவனுடைய நெஞ்சழுத்தமும் உறுதியும் புலப்படுகிறது என்க. அவன் இப்பொழுது யாருடைய அறிவுரைகளையும் ஏற்கும் நிலையில் இல்லை என்பதும், அவன் ஒரு தீர்க்கமான முடிவுடன்தான் வந்திருக்கிறான் என்பதும் பெறப்படுகிறது.

32. மாரீசன் மீண்டும் அறிவுறுத்துதல்

அரக்கன் அஃது உரைத்தலோடும், அறிந்தனன் அடங்கி, "நெஞ்சம்
தருக்கினர் கெடுவர்" என்றல் தத்துவ நிலையிற்று அன்றோ?
"செருக்குநர்த் தீர்த்தும் என்பார்தம்மின் ஆர் செருக்கர்?" என்னா,
உருக்கிய செம்பின் உற்ற நீர் என, உரைக்கலுற்றான். (3369)

(தருக்குதல் - செருக்கடைதல்; தத்துவம் - உண்மை; தீர்த்தல் - நீக்குதல்)

அரக்கனாகிய இராவணன் இவ்வாறு கூறி முடித்ததும், அவனுடைய உள்ளக் கருத்தை நன்கு புரிந்து கொண்டவனான மாரீசன், "உள்ளம் செருக்குடையவர்கள் என்றேனும் அழிந்து போவர்" என்பது உண்மையான நிலையல்லவா? ஆனாலும் செருக்குடையவர்கள் தருக்கைத் தடுத்து விடுவோம் என்று கூறுபவர்களை விடச் செருக்குள்ள வர்கள் யார்? என்று எண்ணி, உருக்கப்பட்ட செம்பின் மேல் தண்ணீர்த் துளிபட்டால், எப்படி அது அடங்கி ஆறிப் போகுமோ, அது போலத் தன் மனம் வருந்தி, மனம். உருகி, அடங்கியவனாகிப் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

செருக்குற்றவர்களின் செருக்கை நீக்க முயல்வது பேதைமை. இவனைத் திருத்த நாம் முயன்றது தவறு என்பதை உணர்ந்து மாரீசன் அடங்கிப் போனான் என்பது கருத்து. "நெஞ்சம் தருக்கினர் கெடுவர்" என்பது ஒரு நீதிமொழி. அவன் உணர்வு முற்றும் அடங்கிப் போன நிலைக்கு, உருக்கிய செம்பின் மேல்பட்ட நீர்த்துளி உவமை.

33. "உன்வயின் உறுதி நோக்கி, உண்மையின் உணர்த்தினேன்; மற்று,
என்வயின் இறுதி நோக்கி, அச்சத்தால் இசைத்தேன் அல்லேன்;
நன்மையும் தீமை அன்றே, நாசம் வந்து உற்ற போது?
புன்மையின் நின்ற நீராய்! செய்வது புகல்தி" என்றான். (3370)

(புன்மை - சிறுமை; நீர்மை - இயல்பு / தன்மை; உறுதி - நன்மை; இறுதி - அழிவு; இசைத்தல் - கூறுதல்; உறுதல் - நெருங்குதல்; புகல்தி - சொல்லுக)

"உன்னிடம் எனக்குள்ள மதிப்பின் காரணமாக, உனக்கு நன்மை தரக்கூடிய கருத்துக்களையே நான் உண்மையாகக் கூறினேனே அல்லாது, எனக்கு வரப்போகும் தீங்கினைக் கருதி அதனால் உண்டான அச்சத்தால் நான் இவற்றை உனக்குக் கூறவில்லை; என்றாலும் அழிவு ஒருவனை நெருங்கிவரும் போது, அவனது உண்மையான விசுவாசிகள் கூறும் எவையும் தீங்கு விளைவிப்பனவாகத்தான் தோன்றும்; தீய இழிவான செயல்களையே செய்யும் இயல்புடையவனே! நான் செய்ய வேண்டுவது

என்ன என்பதைச் சொல்லுவாயாக!'' என்று மனம் நொந்து கூறினான் மாரீசன்.

''நன்மையும் தீமையன்றோ நாசம் வந்துற்ற போது'' என்பது ஒரு நீதி. ''விநாச காலே விபரீத புத்தி'' என்ற வடமொழிக் கூற்றின் தமிழாக்கம் எனவும் கூறலாம்.

34. இராவணன் வேண்டுகோள்

என்றலும், எழுந்து புல்லி, ஏறிய வெகுளி நீங்கி,
''குன்று எனக் குவிந்த தோளாய்! மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலின் இராமன் அம்பால் பொன்றலே புகழ் உண்டு அன்றோ?
தென்றலைப் பகையைச் செய்த சீதையைத் தருதி'' என்றான். (3371)

(புல்லி - தழுவிக் கொண்டு; ஏறிய - ஓங்கிய / பொங்கியெழுந்த; குவிந்த - திரண்ட; மாரவேள் - மன்மதன்; கொதிக்கும் அம்பு - சுடுகணை; பொன்றுதல் - இறத்தல்)

என்று மாரீசன் கேட்டதும், உடனே எழுந்து சென்று அவனை மார்புறத் தழுவி, தான் கொண்ட மிக்க சினத்தை நீக்கி, ''மலைகள் போலும் திரண்டு குவிந்த தோள்களை உடையவனே! சீதையை அடையாமல் மன் மதனுடைய சுடுகணையாகிய காமபாணத்தால் இறந்து ஒழிவதைவிட, சீதையை அடைந்து, இராமனுடைய ராமபாணத்தால் உயிரிழத்தல் புகழையே தரும் அல்லவா? எனவே, எல்லோருக்கும் இனிமையைத் தருகின்ற தென்றலையே பகைக்கும்படி செய்த அந்தச் சீதையை, என் பொருட்டுக் கொணர்ந்து தருக'' என்றான் இராவணன்.

தன்னுடைய எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கப் போகிறான் மாரீசன் என்பதால் அவனை மார்புறத் தழுவி அவனைப் புகழ்ந்து பேசினான் என்க.

35. மாரீசன் வினவுதல்

ஆண்டையான் அனைய கூற, ''அரக்கர் ஓர் இருவரோடும்,
பூண்ட என் மானம் தீரத் தண்டகம் புக்க போழ்தில்,
தூண்டிய சரங்கள் பாய, துணைவர் பட்டு உருள, அஞ்சி
மீண்ட யான், சென்று செய்யும் வினை என்கொல்? விளம்புக!'' என்றான். (3372)

(ஆண்டையான் - தலைவன் / அங்கு இருந்தவன்; பூண்ட - அடைந்த; தூண்டிய - செலுத்திய / ஏவிய; சரங்கள் - அம்புகள்; பாய்தல் - தைத்தல்; படுதல் - அழிதல் / இறத்தல்; மானம் - அவமானம்)

அங்கிருந்த தலைவனான இராவணன் இவ்வாறு கூறவும், ''முன்பு சித்தாஸ்ரமத்தில் என் தாயையும், தமையன் சுபாகுவையும் கொன்று அழித்த இராமனை வஞ்சம் தீர்க்கும் பொருட்டும் என் மானத்தைக்

காப்பாற்றும் பொருட்டும் அவனைக் கொல்லுவதற்காக, அவன் தங்கியிருந்த தண்டகவனத்துள், என்னுடைய இரண்டு துணைவர்களுடன் சென்றேன். அப்பொழுது அவன் செலுத்திய அம்புகளால், என்னுடன் வந்த இரண்டு அரக்கர்களும் அம்பு உடலில்பாய, நிலத்தில் உருண்டு இறந்து போயினர்; அதனைக் கண்டு அஞ்சி, மீண்டு வந்து இங்கு இருக்கிறேன். இப்போது மறுபடியும் இராமனிடம் என்னைப் போகச் சொல்லுகிறாய்; அங்கே போய் நான் செய்ய வேண்டிய செயல் என்ன என்பதை விரிவாகக் கூறுவாயாக!'' என்றான் மாரீசன்.

முதலில் விசுவாமித்திரரின் வேள்விக்கு முன் தாடகை அழிந்ததும், வேள்வியின் போது சுபாகு அழிக்கப்பட்டதும், மாரீசன் கடலில் தள்ளப்பட்டதும் நாம் பாலகாண்டத்துள் பார்த்தோம். மாரீசன் மற்று மொரு முறை இராமனைக் கொல்லுவதற்காகவும், தன் அவமானத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காகவும், தண்டக வனத்துக்கு இரண்டு அரக்கர்கள் துணையுடன் சென்றான் என்பதும், இராமன் அம்பு அவர்கள் இருவரையும் அழித்து ஒழிக்க, மாரீசன் தப்பித்து வந்தான் என்பதும் வான்மீகத்தில் காணப்படும் செய்திகள். இவை கம்பனால் அங்கு கூறப்படவில்லை. இப்போது கதைப் போக்கில் இதை மாரீசன் கூற்றாகவே கூற வைத்திருக்கும் நயம் உணர்க. இராவணன் வேண்டு கோளால் மாரீசன் மாயமானாக மாறிப் போகப் போவது மூன்றாவது நிகழ்ச்சி என்பதை நினைவில் கொள்க. இந்நிகழ்ச்சி கூர்மபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ''மரை உருவாக முன்னர் வாள் எயிற்று அரக்கர், மற்று அங்கு இருவரோடு, இராமன் முன்னர் எய்தலும், வன்கை அம்பால் பொருவரும் என்னோடு எய்தும் இருவரும் பொன்றல் செய்தார்; வெருவி, யான், மாயை தன்னால் இலங்கையின் மேவினனால்'' என்பது கூர்மபுராணத்தில் மாரீசன் கூற்று.

36. ''சீதையைமாயையால்கவர வேண்டும்''எனல்

ஆயவன் அனைய கூற, அரக்கர் கோன்,
''ஐய! நொய்து உன்
தாயை ஆர் உயிர் உண்டானை, யான்
கொலச் சமைந்து நின்றேன்;
போய், ஐயா! புணர்ப்பது என்னே
என்பது பொருந்திற்று ஒன்றோ?
மாயையால் வஞ்சித்து அன்றோ
வவ்வுதல் அவளை'' என்றான். (3373)

(கோன் - அரசன் / வேந்தன்; புணர்ப்பது - செய்வது; வவ்வுதல் - கவர்தல்; நொய்து - விரைவு; சமைந்து - உறுதிகொண்டு)

அந்நிலையில் இருந்த மாரீசன் அவ்வாறு கூறவும், அரக்கர்களின் அரசனான இராவணன், ''ஐயா! எனது தாயாகிய தாடகையை மிக

எளிதிலும், இழிந்த முறையிலும், பெண் என்று கூடக் கருதாமலும் அவள் உயிரைக் கவர்ந்த இந்த இராமனைக் கொல்லுவதற்கு நான் உடன்பட்டு நிற்கிறேன். இந்நிலையில், ''நான் அங்கு போய்ச் செய்ய வேண்டுவது என்ன?'' என்று நீ கேட்பது சரியாகுமா? அங்கே சென்று மாயையால் வஞ்சனை செய்து, சீதையைக் கவர்ந்து வருவது அல்லவா உன்னுடைய செயல்?'' என்றான் இராவணன்.

இராமனோடு போர் புரிந்து, அவனை வென்று, சீதையைக் கவர்ந்து வருவது என் நோக்கமல்ல. அவளை வஞ்சனையாலும், நமது மாயச் செயல்களாலுமே கவர்ந்து வரவேண்டும் என்று, தன் கருத்தைத் தெளிவாகக் கூறுகிறான் இராவணன். இராமனைக் கொல்லுவது என் வேலை; சீதையை வஞ்சித்துக் கவர்ந்து கொண்டு வருவது உன் வேலை என்றான் என்பதாம்.

37. ''சீதையை அறநெறியில் கைப்பற்றுக'' என மாரீசன் கூறுதல்

''புறத்து இனி உரைப்பது என்னே?
புரவலன் தேவிதன்னைத்
திறத்துழி அன்றி, வஞ்சித்து
எய்துதல் சிறுமைத்து ஆகும்;
அறத்து உளது ஒக்கும் அன்றே?
அமர்த்தலை வென்று கொண்டு, உன்
மறத் துறை வளர்த்தி, மன்ன!'' என்ன
மாரீசன் சொன்னான். (3374)

(புறம் - அயல் / வேறு; புரவலன் - காப்பவன் / அரசன்; தேவி - மனைவி; திறம் - நேர்வழி; சிறுமை - பழி; அமர்த்தலை - போர்க்களம்; மறம் - வீரம்; வளர்த்தல் - மேம்படுத்துதல்)

''உன் கருத்துக்கு மாறுபட்டு இனி வேறு கூறுவதற்கு என்ன இருக்கிறது? அரசனாகிய இராமனின் மனைவியான சீதையை உன் நேர்மைத் திறத்தினால் அல்லாது, அவளை ஏமாற்றி வஞ்சனையினாலும் மாயத்தினாலும் அடைவது என்பது உனது தகுதிக்குத் தக்கதன்று; இழிவுடையதாகும்; எனவே இராமனைப் போர்க்களத்தில் வென்று, அவன் மனைவியைச் சிறைப்பிடித்துக் கொண்டு உன்னுடைய வீரத்துறையின் மேம்பாட்டினை எய்துவாயாக; அதுதான் அறநெறியின் பாற்பட்டதாகும்'' என்று மாரீசன் கூறினான்.

வஞ்சனையால் பிறன் மனைவியைக் கைப்பற்றுவது என்பது உனது தகுதிக்கும் பெருமைக்கும் தக்கதன்று. வீரத்தால் வெல்லுவதே மேன்மை தரும் என்றான் என்க.

38. இராவணன் தன் நிலைப்பாட்டையே வற்புறுத்துதல்

ஆனவன் உரைக்க, நக்க அரக்கர்கோன்,
''அவரை வெல்லத்
தானையும் வேண்டுமோ? என் தடக்கை
வாள் தக்கது அன்றோ?
ஏனையர் இறக்கின், தானும்
தமியளாய் இறக்கும் அன்றே
மானவள்? ஆதலால், மாயையின்
வலித்தும்'' என்றான். (3375)

(நக்க - சிரிக்க; தமியள் - தனித்தவள் / துணையற்றவள்; வலித்தல் - வலிந்து கவர்தல்; ஆனவன் - உடன்பட்டவன்; மானவள் - மானிடப் பெண்ணில் சிறந்தவள்)

அப்படிப்பட்ட மாரீசன் அவ்வாறு சொல்லவும், இலங்கை அரக்கர் வேந்தனாகிய இராவணன் இகழ்ச்சியாகச் சிரித்து, மாரீசனைப் பார்த்து, ''அவ்விராம இலக்குவர்களைப் போரில் வெல்லுவதற்கு எனக்கு ஒரு பெரிய போர்ப்படையே வேண்டுமோ? என்பெரிய கைகளில் உள்ள இந்தச் சந்திரகாசம் என்னும் ஒப்பற்ற வாள் மட்டும் போதாதோ? அந்தப் போரில் இராம இலக்குவர்கள் இறந்து ஒழிந்தால், தானும் தன்னந்தனியாக இருக்க வேண்டுமே என்று கருதி, மான் போன்றவளும், மானம் உடையவளும், மானுடப் பெண்களில் சிறந்தவளுமாகிய சீதையும் உயிர் விடத் துணிந்து விடுவாள் அல்லவா? அதனால்தான் சொல்லுகிறேன். அவளை வஞ்சனைச் செயலால்தான் வலிந்து கவர்தல் வேண்டும்'' என்றான் இராவணன்.

இங்கே மானவள் என்றது, கவிஞர் பல இடங்களிலும் இராமனை மானவன் என்று கூறியதை அடியொற்றியது என்று கொள்க.

39. ''வேறு வழியில்லை'' என்று மாரீசன் உடன்படுதல்

''தேவியைத் தீண்டாமுன்னம், இவன் தலை சரத்தின் சிந்திப்
போம்வகை புணர்ப்பன் என்று, புந்தியால் புகல்கின்றேற்கும்
ஆம் வகை ஆயிற்று இல்லை; யார் விதி விளைவை ஓர்வார்?
ஏவிய செய்வது அல்லால், இல்லை வேறு ஒன்று, என்று, எண்ணா. (3376)

(தேவி - சீதாதேவி; சரம் - அம்பு; ஓர்தல் - அறிதல்; எண்ணா - எண்ணி / நினைத்து; புணர்த்தல் - செய்தல்; தீண்டுதல் - பற்றுதல்) (குளகப் பாடல்)

''இராமனின் மனைவியான சீதாதேவியை இவன் பற்றித் தொடுவதற்கு முன்பே, இராமன் தன் இராமபாணத்தால் இவன் தலைகள் அனைத்தும் சிதறிப் போகும்படி செய்து விடுவான்'' என்று என் மனத்தில் உறுதியாக எண்ணுகிறேன்; என்றாலும் அவ்வாறு சொல்லும் எனக்கும் நான் செய்யக்

கூடியது இன்னது தான் என்று கருதும் ஆற்றல் இல்லாது போயிற்றே! விதியின் செயல்பாட்டை முன் கூட்டியே அறிந்து கொள்ளுபவர்கள் யார் இருக்கிறார்கள்? இராவணன் இட்ட கட்டளைப் படி செய்வதல்லால் வேறு ஒரு வழியும் எனக்குப் புலப்பட வில்லையே('' என்ற நினைத்து - பாடல் தொடர்கிறது.

மாரீசன் முன் பாட்டில் இராவணனை நோக்கி, ''போர் செய்து வென்று சீதையைச் சிறைப்பிடி அது தான் தருமம் ஆகும்'' என்று கூறியதற்கு ஒரு உட்பொருள் உண்டு. அவ்வாறு இராவணன் இராமனுடன் போர் செய்தால் அவன் மடிவது நிச்சயம். எனவே தான் உயிர் பிழைத்துக் கொள்ளலாம் என்று கருதியே அவ்வாறு கூறினான் என்க. அதற்கு இராவணன் இசையாததால், இப்பொழுது ''விதியின் பயனை யார் தான் முன் கூட்டி அறிய இயலும்?'' என்று இரங்கிக் கூறினான் என்க. இராவணன் விதியை மாற்றக் கருதிய நான், என் விதியை மாற்றிக் கொள்ளும் வழியை அறிந்தேனில்லையே என்பது கருத்து. விதியை மாற்ற யாராலும் முடியாது என்பது ஒரு நீதி. ''ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' என்பது குறள் 380.

40. இராவணன் கட்டளைக்கு இணங்கி, மாரீசன் போதல்

''என்ன மா மாயம் யான் மற்று
இயற்றுவது? இயம்புக'' என்றான்,
''பொன்னின் மான் ஆகிப் புக்கு,
பொன்னை மால் புணர்த்துக''என்ன,
''அன்னது செய்வென்'' என்னா,
மாரீசன் அமைந்து போனான்;
மின்னு வேல் அரக்கர்கோனும்
வேறு ஒரு நெறியில் போனான். (3377)

(மால் புணர்த்தல் - மயக்குதல்; அமைந்து - இயைந்து; மின்னும் - ஒளிரும்; நெறி - வழி; மால் - ஆசையுமாம்; புணர்த்துதல் - உண்டாக்குதலுமாம்)

''நான் இப்பொழுது என்ன பெரிய மாயச் செயல் புரிய வேண்டும்? சொல்லுவாயாக!'' என்று மாரீசன் இராவணனை நோக்கிக் கேட்கவும், அதற்கு இராவணன், நீ ஒரு பொன்னின் நிறம் கொண்ட மானாக மாறி, அவர்கள் உறையும் தண்டக வனத்துள் சென்று, பொன் போன்ற சீதைக்கு மயக்கத்தை உண்டாக்கு; அப் பொன்மானின் மீது அவள் ஆசை கொள்ளும்படி செய் என்றான். உடனே மாரீசனும் ''அவ்வாறே செய்வேன்'' என்று உடன்பட்டுப் புறப்பட்டுப் போனான்; அவன் போனபின் மின்னல் போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் படைக்கலன்களை உடைய அரக்கர் தலைவனாகிய இராவணனும் வேறு ஒரு வழியில் செல்லலானான்.

மாரீசன் இருந்த இடத்திலிருந்து இராமன் முதலியோர் இருக்கும் தண்டகவனம் ஆரம்பம் வரை இருவரும் ஒரே தேரில் சென்றனர் என்று வான்மீகமும், அத்யாத்ம இராமயணமும் கூறுகின்றன. மாரீசன் ஏன் இத்தகைய வஞ்சகச் செயலுக்கு ஒப்புக் கொண்டான் என்பதற்கு ஒரு மிகைப்பாடல் கிடைக்கிறது. அது நன்றாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் கற்போருக்குத் தெரிய வேண்டுமென்பதாலும் இங்கே தரப்பட்டிருக்கிறது. ''மானின் நல்வடிவு கொண்டால், மன்னவன் இராமன் கொல்வான்; ''நான் இனி ஏகேன்'' என்றால், நீ எனைக் கொல்வாய்; நாடில், மானவன் வாளிபாய மறலியூர் புகுந்து, மற்ற உன் சேனையோடு உனக்கும் தானம் தேருவன்'' என்று சென்றான் என்பது பாடல் பகுதி.

41. கவிக்கூற்று

மேல்நாள் அவர் வில் வலி கண்டமையால்,
தான் ஆக நினைந்து சமைந்திலனால்;
''மான் ஆகுதி'' என்றவன் வாள் வலியால்
போனான் மனமும், செயலும் புகல்வாம். (3378)

(மேல் நாள் - முன்பு; அமைதல் - இசைதல்; சமைதல் - தயாராகுதல் / ஆயத்தமாகுதல்; மனம் - நினைவு / மனநிலை)

முன்னரேயே இராம இலக்குவரது வில்லாற்றலைத் தானே நேரில் கண்டிருந்தமையால், தானாகவே விரும்பி மான் வடிவம் கொண்டு செல்ல இசைந்து தயராகவில்லை மாரீசன். ''மான் ஆகச் சென்று மயக்குதி'' என்று இராவணன் இட்ட கட்டளைக்கும், அவனுடைய வாளாற்றலுக்கும் அஞ்சியே சென்றான். அவ்வாறு சென்ற மாரீசனுடைய மனநிலையையும், மாயச் செய்கைகளையும் இனிக் கூறுவோம்.

மேல் நாள் என்றது முன்பே இரண்டு முறை இராமனது வில்லாற்றலைக் கண்டு அனுபவித்திருக்கின்றான் மாரீசன் என்ற குறிப்புப்பட நின்றது. இராம இலக்குவர் வில் வலிகண்டிருக்கிறான் எனவே தானாகவே செல்ல விரும்பவில்லை; இராவணன் வாள் வலி கேள்வியுற்றிருக்கிறான். எனவே அதற்கு அஞ்சியே இசைந்தான் என்பதாம்.

42. மாரீசன் மனநிலை

வெஞ் சுற்றம் நினைந்து உகும்; வீரரை வேறு
அஞ்சுற்று மறுக்குறும்; ஆழ் குழி நீர்
நஞ்சு உற்றுழி, மீனின் நடுக்குறுவான்
நெஞ்சு உற்றது ஓர் பெற்றி நினைப்பு அரிதால். (3379)

(வெம் - விரும்பத்தக்க; சுற்றம் - உறவினர்; உகுதல் - மனமழிதல்; வீரர் - இராம இலக்குவர்; மறுக்குறுதல் - கலங்குதல்; குழி - பள்ளம்; பெற்றி - தன்மை; அரிது - முடியாதது)

தனது விரும்பத்தக்க உறவினரை இனிப்பார்க்க முடியாதே என்று மனம் மிக வருந்துவான்; அதனோடு வீரர்களாகிய இராம இலக்குவரின் ஆற்றலை எண்ணி மனம் கலங்குவான்; ஆழ்ந்த பள்ளத்தில் உள்ள நீரெல்லாம் நச்சுத் தன்மை அடைந்து விட்டால், அதிலுள்ள மீன்கள் எவ்வளவு துயருறுமோ? அதைப் போல நடுக்கம் அடைந்தான்; அவனது மனம் கொண்ட உணர்ச்சிகளின் தன்மை நம்மால் நினைத்துப் பார்க்கவும் முடியாததாகும்.

இராமன் அம்பால் தான் இறக்கப் போவது உறுதி என்பதாலும், பின்னர் தன் அரக்கர் இனத்தைச் சேர்ந்த உறவினர்களும் மடியப்போகும் நிலையை எண்ணியும் மனம் அழிந்தான் என்பதாம். நஞ்சு கலந்த நீரின் உள்ளிருந்தாலும் மீனால் உயிர்வாழ முடியாது; நீரைவிட்டு வெளியே வரவும் முடியாது என்பதைக் குறிக்கத் தான் ''ஆழ்குழி'' என்று சொல்கிறான். அவ்வாறு நீரை விட்டு நிலத்திற்கு வந்தாலும் மீனால் உயிர்வாழ முடியாது அதைப் போலத் தான் மாரீசனும், மான் வேடம் தாங்கித் தண்டகாரண்யம் சென்றாலும் அழிந்துபட வேண்டியது தான். இங்கேயே இருப்போம் என்றாலும் இராவணன் வாளால் மடிந்து போக வேண்டியது தான். எனவே அவனுக்கு மடிவதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதை ஓர் அழகிய உவமை மூலம் தெரிவிக்கும் கவிஞனின் கவிநயம் போற்றுதற்குரியது. எனவேதான் முடிவாக, அவன் படுகின்ற துயரத்தைச் சொல்லிமாளாது என்று முடிக்கிறான் கவிஞன்.

43. மாரீசன் தண்டக வனத்தை அடைதல்

அக்காலமும், வேள்வியின், அன்று தொடர்ந்து
இக்காலும், நலிந்தும் ஓர் ஈறு பெறான்;
முக்காலின் முடிந்திடுவான் முயல்வான்
புக்கான், அவ் இராகவன் வைகு புனம். (3380)

(நலிதல் - துன்புறுத்துதல்; ஈறு - அழிவு; முக்கால் - மூன்றாம் முறை; புனம் - காடு / மலைச்சார்பான வனம்)

விசுவாமித்திரர் வேள்வி செய்த அக்காலம், தொடர்ந்து தண்டகாண்யத்தில் மானாகச் சென்று முட்ட முற்பட்ட காலத்திலும் இராமனால் துன்புறுத்தப்பட்ட போதும், உயிருக்கு அழிவு என்னும் மரணத்தை அடையதவனாகிய மாரீசன், இப்பொழுது மூன்றாம் முறையாக, நிச்சயம் மரணம் உண்டு என்று முயற்சி செய்து செல்பவன் போல், இராம இலக்குவர் தங்கியிருந்த தண்டகவனத்துள் சென்றான்.

முதல் முறை இராமன் அம்பால் கடலில் தள்ளப்பட்டுத் துன்புற்றான். இரண்டாம் முறை உடன் வந்த இரு அரக்கர்களும் கொல்லப்படத் தான் மட்டும் உயிர் பிழைத்து வந்தான். இப்போது மூன்றாம் முறை நிச்சயமாக உயிர்பிழைக்க முடியாது என்பதை உணர்ந்தவனாக வந்திருக்கிறான் என்பதாம்.

44. மாரீசன் மான் உருக்கொள்ளுதல்

தன் மானம் இலாத, தயங்கு ஒளி சால்
மின் வானமும் மண்ணும் விளங்குவது ஓர்
பொன் மான் உருவம் கொடு போயினனால்
நன் மான் அனையாள்தனை நாடுறுவான். (3381)

(மானம் - ஒப்பு / சமானம்; தயங்கு - விளங்குகின்ற; சால - மிக்க / நிறைந்த; மானம் - ஆகாயம்; நாடுறுதல் - பார்க்கும் படியாக)

தனக்கு நிகரில்லாததும், விளங்குகின்ற ஒளிமிக்கு நிறைந்த மின்னல் போன்றும், ஆகாயத்திலும் நிலத்திலும் விளங்குகின்ற ஒப்பற்ற பொன்மான்போல ஒருவடிவமும் கொண்டு, நல்ல மான்போன்ற மருண்ட பார்வையையுடைய சீதை பார்த்து விரும்பும்படியாக, அவள் அருகில் சென்றான்.

45. மற்ற மான்கள் இப்பொன்மானை நெருங்குதல்

கலைமான் முதல் ஆயின் கண்ட எலாம்,
அலை மானுறும் ஆசையின், வந்தனவால் –
நிலையா மன, வஞ்சனை, நேயம் இலா,
விலை மாதர்கண் யாரும் விழுந்தெனவே. (3382)

(அலை - கடல்; மான் உறும் - ஒக்கும் / போன்ற; மா - பெரிய; நேயம் - உண்மை அன்பு; விழுதல் - அடைதல் / விரும்புதல்; வஞ்சனை - சூது)

ஒருவர் மாட்டு நிலைத்த ஆசை கொள்ளாதவரும், மனத்தில் சூழ்ச்சி மிகுந்தவரும், ஒருவரிடத்தும் உண்மையான அன்பில்லாதவருமான பொது மகளிரிடம் காமுகர் அனைவரும் விரும்பி வந்து விழுவது போல, இப்பொன் மானைக் கண்ட மற்ற கலைமான் முதலிய எல்லா மான்களும், கடல் போல அளவற்ற ஆசைகொண்டு, அலைகள் மோதுவதைப் போல மனஅலைச்சல் கொண்டு, மிகுந்த ஆசையுடன் அதனிடம் வந்து சேர்ந்தன.

விலை மகளிர்க்குப் பொன் மானும்; காமுகர்க்குக் கலை மான் போன்ற மற்ற மான்களும் உவமை. மாயமான் உடல் ஒளி உடையது. விலை மகளிர் மேனி மினுக்குக் கொண்டவர்கள்.

46. சீதை மலர் கொய்ய வருதல்

பொய்ஆம் என ஓது புறஞ்சொலினால்
நையா இடை நோவ நடந்தனளால்
வைதேவி, தன் வால்வளை மென்கை எனும்
கொய்யா மலரால் மலர் கொய்குறுவாள். (3383)

(வைதேவி - வைதேகி / சீதாதேவி; ஓது - கூறுகின்ற; புறம் - அயலார்; நையா - நைந்து / வருந்தி; நோவ - துன்புறும்படி; வால் - வெண்மையான / தூய / ஒளி தங்கிய; கொய்யா - பறிக்காத) (குளகப் பாடல்)

விதேக நாட்டு மன்னன் மகளாகிய சீதாதேவி, தன்னுடைய தூய்மையான, வெண்மையான, ஒளி தங்கிய, மென்மையான, கைகள் என்னும் பறிக்கப்படாத தாமரை மலர் போன்ற கைகளால், மலர் பறிக்கும் பொருட்டு ''இவளுக்கு இடை என்பது இருப்பது பொய் - அது இல்லவே இல்லை'' என்று அயலார் கூறும் அளவிற்கு உள்ள அவள் இடை வருந்தித் துன்புறும்படி, மலர் வனத்துக்கு நடந்து வந்தாள்.

வைதேகி என்பது விதேக நாட்டு அரசன் குலத்தில் தோன்றிய பெண் என்ற பொருளில் வந்த தத்திதாந்த நாமம். கொய்யாமலர் என்ற சொல்லாட்சி, பாயா வேங்கை, பிறவாக் கொக்கு என்பதைப் போல எனக் கொள்க. சீதைக்கு இடைபொய் என்பது, பார்ப்போர் கண்ணுக்குப் புலப்படாத நுட்பமானது, நுண்ணியது என்பதைக் குறிக்க என்க. இடைபொய் என்பது கவிமரபு.

47. சீதை பொன் மானைக் காணுதல்

உண்டாகிய கேடு உடையார், துயில்வாய்
எண்தானும் இயைந்து இயையா உருவம்
கண்டார் எனலாம் வகை, கண்டனளால்
பண்டு ஆரும் உறா இடர்ப்பாடுறுவாள். (3384)

(துயில்தல் - உறங்குதல்; எண் - மனம் / நினைவு; இடர்ப்பாடு - துன்பம்; பண்டு - முன்பு; உண்டாதல் - தோன்றுதல்)

பொதுவாகத் தமக்கு ஏதோ தீங்கு நேரப் போகிறது என்று தோன்றுகிறவர்கள், அதனை ஒரு அறிகுறியாகத் தாம் தூங்கும் போது, கனவில், தன் மனத்தாலும் நினைத்தற்கரிய ஒரு விபரீத உருவம் போலக் காணுவர். அதைப் போல, சீதையும் தனக்கு வரப்போகும் துன்பத்தை, இதற்கு முன்பு யாரும் அடைந்திருக்க முடியாதபடி பெருந்துன்பத்தை அடைபவளைப் போல, இம்மாயமானை நேரில் கண்டாள்.

ஒருவர்க்குத் தீங்கு நேரும் என்பதை அவர்கள் தங்கள் கனவுகளில் காண்பது இயல்பு. அது போல இங்கே சீதை தனக்குப் பெரிய இடர்ப்பாடு வரப்போகிறது என்பதற்கு அறிகுறியாக, இந்த மாயப்பொன் மானை நிஜமாகவே, நேரிலேயே பார்த்தாள் என்பதாம். துன்பம் வரும்முன், கனவு போன்ற முன் நிமித்தங்கள் தோன்றுதல் உண்டு என்பது பெறப்படுகிறது.

48. காணாஇது, கைதவம் என்று உணராள்;
பேணாத நலம்கொடு பேணினளால்
வாழ்நாள் அவ்இராவணன் மாளுதலால்,
வீழ்நாளில் அறம் புவி மேவுதலால். (3385)

(வாழ்நாள் - ஆயுள்; மாளுதல் - முடிதல்; புவி - உலகம்; மேவுதல் - பரவி நிலைபெறுதல்; காணா - கண்டு; கைதவம் - வஞ்சனை; பேணாத - விரும்பத்தகாத; நலம் - அழகு; பேணுதல் - விரும்புதல்)

அந்த இராவணனின் ஆயுட்காலம் ஒரு முடிவுக்கு வருவதாலும், அவன் அழிகின்ற நாள் முதல், அறம் இவ்வுலகில் நிலை பெற்றுப் பரவப் போவதாலும், சீதாதேவி இந்தப் பொன்னாலாய மாயமானை வஞ்சனையானது என்று அறியாதவளாகி, விரும்பக் கூடாத அந்த மானை, அதன் அழகை மட்டும் மனத்தில் கொண்டு, விரும்பத் தொடங்கி விட்டாள்.

சீதை மானைக் கண்டு விரும்பியதற்குக் காரணம் கற்பிக்கிறான் கவிஞன். அவள் இவ்வாறு விரும்பினால்தான் இராவணன் ஆயுட்காலம் ஒரு முடிவுக்கு வரும் அன்றிலிருந்து அறம் உலகில் நிலை நிறுத்தப்படும் என்கிறான் கவிஞன். ''வீழ்நாள் இல்அறம்'' என்பதற்கு அழிகின்ற நாளே இல்லாத தருமம் என்று பொருள் கூறுவதும் உண்டு. அறம் சில சமயம் சரியுமே அன்றி முற்றிலும் அழிந்து போகாது என்பது கருத்து. ''பொன்மான் அன்று ஆசை கொண்ட பொன் அனையார் பட்ட துயர் சென்மாந்த பாவம்'' என்பது சிவசிவவெண்பா.

49. சீதை இராமனிடம் செல்லுதல்

நெற்றிப் பிறையாள் முனம் நின்றிடலும்,
முற்றிப் பொழி காதலின் முந்துறுவாள்,
''பற்றித் தருக என்பென்'' எனப்பதையா,
வெற்றிச் சிலை வீரனை மேவினளால். (3386)

(முனம் - முன்னம் / முன்னே; முற்றி - நிறைந்து; பற்றுதல் - பிடித்தல்; மேவுதல் - அடைதல்; பதைத்தல் - விரைதல் / உணர்ச்சி மிகுதல்)

பிறைச் சந்திரன் போன்ற அழகிய நெற்றியையுடைய சீதையின் முன்னால் சென்று அந்த மாயப் பொன்மான் நின்ற அளவில், நிறைந்து வழிகின்ற ஆசையுடையவளாய், உணர்ச்சி மிகுதியால் விரைந்து சென்று ''இம்மானைப் பிடித்துத் தருவாயாக'' என்று சொல்லுவேன் என்று எப்பொழுதும் வெற்றியையே தரும் வில்லினைக் கைக்கொண்ட வீரனாகிய இராமனை அடைந்தாள்.

50. பொன்மான் பற்றி இராமனிடம் கூறுதல்

''ஆணிப் பொனின் ஆகியது ஆய்கதிரால்
சேணில் சுடர்கின்றது; திண்செவி, கால்,
மாணிக்க மயத்து ஒருமான் உளதால்;
காணத்தகும்'' என்றனள், கை தொழுவாள். (3387)

(கைதொழுதல் - வணங்குதல்; ஆணிப் பொன் - மாற்றுயர்ந்த பொன்; ஆய் - சிறந்த; கதிர் - ஒளி; சேண் - நெடுந்தூரம்; திண் - வலிய)

இராமனை அடைந்த சீதை கை தொழுது வணங்கியவளாய், ''மாற்றுயர்ந்த பொன்னால் ஆகியதும், சிறந்த ஒளி வீசி, நெடுந்தூரத்திலும் பிரகாசிக்கின்றதும், வலிய செவிகளும், கால்களும் சிறந்த மாணிக்கங் களாலானதுமான, ஒருமான் நமது வனத்திற்கு வந்துள்ளது அபூர்வ அழகுடைய அம்மானைத் தாங்கள் காணவேண்டும்'' என்றாள் சீதை.

இங்கு மானைப் பிடித்துத் தரும்படி சீதை கேட்க வில்லை என்பது நோக்கத்தக்கது. மற்றொன்று இங்குதான் முதன் முதலில் சீதை இராமனைக் கைகூப்பித் தொழுவதாகக் கம்பன் கூறுகிறான் என்பதும் நோக்குக.

51. இராமன் பொன்மானைக் காண விழைதல்

''இம்மான் இந்நிலத்தினில் இல்லை'' எனா,
எம்மான்இது? எனச்சிறிது எண்ணல் செயான்,
செம்மான் அவள் சொற்கொடு, தேம் மலரோன்
அம்மானும் அருத்தியன் ஆயினன் ஆல். (3388)

(தேம் - தேன் / இனிய; நிலம் - உலகம்; அருத்தி - ஆசை / பற்று / விருப்பம்; எண்ணல் - ஆலோசித்தல்; அம்மான் - தலைவன் / இறைவன் / தந்தை)

''இது போன்ற ஒரு மான் இவ்வுலகத்திலலேயே இல்லை என்று எண்ணி, எத்தகைய மான் இது? என்று சற்றும் ஆலோசிக்காது, செவ்விய அழகும் பெருமையும் உடைய நல்ல மான் போன்றவளான சீதையின் சொல்லைக் கேட்டு, இனிய தேன் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவனின் இறைவனாகிய திருமால்கூட, அந்த மானைப் பார்ப்பதற்கு விருப்பம் கொண்டான்.''

இத்தகையதொரு மான் இப்பூவுலகில் இருக்க முடியாது என்பதைக் கூட ஆலோசித்து உணரமுடியாதபடி, மனைவியின் சொல்லைக் கேட்டு, ஒரு மானைக் காண்பதற்கு ஆசை கொண்டான். யார்! இவ்வுலகங் களையெல்லாம் படைக்கும் படைப்புக் கடவுளான பிரமதேவனின் தந்தையாகிய திருமால் அம்சமாக அவதரித்திருக்கின்ற இராமன்.

மனைவியின் சொல்லால் திருமாலும் - இறைவனும் - மயங்கினான் என்றது ஒரு நயம். இத்தகையதொரு படைப்பு இயற்கையிலில்லை என்று ஆலோசித்துத் தீர்மானிக்க முடியவில்லை என்பதாம்.

52. ஆண்டு, அங்கு, இளையான் உரையாடினனால்,
''வேண்டும் எனலாம் விழைவு அன்று இது'' எனா;
''பூண் துஞ்சு பொலங்கொடியோய்! அது நாம்
காண்டும்'' எனும் வள்ளல் கருத்து உணர்வான். (3389)

(பூண் - அணிகலன்கள்; துஞ்சுதல் - உறங்குதல் / தொங்குதல்; பொலன் - பொன்; விளைவு - நிகழ்ச்சி; வேண்டும் - விரும்பத்தக்கது; ஆண்டு - அப்பொழுது; உரையாடுதல் - எடுத்துச் சொல்லுதல்)

''அணிகலன்கள் அணியப்பெற்ற அழகிய கொடி போன்றவளே! நீ கூறிய அந்த மானைப் போய் நாம் பார்ப்போம்'' என்று வள்ளலாகிய இராமன் கூறியதும், அவனது உள்ளக் கருத்தை நன்கு உணர்ந்தவனான இலக்குவன், இவள் இந்தப் பொன் மானை விரும்புகின்ற நிகழ்ச்சியானது வேண்டத்தகாதது என்று கருதி, அப்பொழுது, இராமனிடம் சிலவற்றை எடுத்துக்கூறத் தொடங்கினான்.

53. இலக்குவன், ''இது மாயம்'' எனல்

''காயம், கனகம்; மணி, கால், செவி, வால்;
பாயும் உருவோடு இது பண்பு அலவால்;
மாயம் எனல் அன்றி, மனக்கொளவே
ஏயும்? இறை மெய்அல'' என்ற அளவே. (3390)

(கனகம் - பொன்; காயம் - உடல்; மணி - இரத்தினம்; மாயம் - பொய்; இறை - சிறிது; பண்பு - இயற்கைத்தன்மை; உரு - மான்; ஏய்தல் - பொருந்துதல்) (குளகப்பாடல்)

''உடம்பு முழுவதும் பொன் மயமானது; கால்கள், செவிகள், வால் முதலியன இரத்தினங்களால் ஆனது. தாவிக்குதிக்கின்ற வடிவத்தோடு கூடிய இந்த மான் இயற்கைத் தன்மை கொண்டதன்று; இது பொய், வஞ்ச மான் என்று கூறுவதேயன்றி, இதனை உண்மையான மான் என்று கூறுவது சிறிதும் பொருந்தாது. இது உண்மையான மான் அல்ல'' என்று இலக்குவன் கூறும் பொழுதில் - பாடல் தொடர்கிறது.

54. இராமன் மறுமொழி

''நில்லா உலகின் நிலை, நேர்மையினால்,
வல்லாரும் உணர்ந்திலர்; மன்னுயிர் தாம்
பல் ஆயிரகோடி பரந்துளவால்;
இல்லாதன இல்லை இளங்குமரா!'' (3391)

(நில்லா - நிலையில்லாத; வல்லார் - அறிவாற்றல் உடையவர்; நேர்மை - முறைமை; மன் - நிலைபெற்ற)

''இளவலே இலக்குவ! நிலையில்லாத இவ்வுலகத்தின் உண்மையான நிலைமையை, முறையாக நூல்களைக் கற்றறிந்தவர்கள் கூடச் சரியாக உணர்ந்து கொண்டதில்லை. நீயோ இளங்குமரன்; நிலைபெற்ற உயிரினங்கள் பல்லாயிரக் கோடிக் கணக்காக உலகெங்கும் பரந்து பரவியிருக்கின்றன. அவற்றுள் இதுபோன்று வியக்கத்தக்க அமைப்புடைய

உயிரினமும் இருக்காது என்று சொல்லிவிடமுடியாது. அவ்வாறும் இருக்கலாம்'' என்றான் இராமன்.

பல்லாயிர கோடி என்பது மிகுதியைக் குறிக்கும். புதிய ஒன்றை இல்லாதது - இருக்காது - என்று மறுத்துக் கூறுதல் சரியன்று என்றான் இராமன் என்பதாம்.

55. ''என் என்று நினைத்தது, இழைத்து உளம்? நம்
கன்னங்களின் வேறுஉள காணுதுமால்;
பொன்னின் ஒளிமேனி பொருந்திய ஏழ்
அன்னங்கள் பிறந்தது அறிந்திலையோ?'' (3392)

(இழைத்தல் - ஆராய்தல்; கன்னம் - செவிகள்; காணுதல் - கேட்டறிதல்; மேனி - உருவம்)

''நீ எவ்வாறு ஆலோசித்து இவ்வாறு கூறினாய்? மாறுபட்ட தன்மையில் உள்ள உயிரினங்களைப் பற்றி நாம் காதுகளால் - செவிவழிச் செய்தியாய்க் கேட்டு அறிவதில்லையா? பொன்போன்ற தங்க மயமான உடலும் உருவமும் பெற்றிருந்த ஏழு அன்னப் பறவைகள் இவ்வுலகில் தோன்றியது பற்றி நீ அறிந்ததில்லையோ?'' என்று இராமன் இலக்குவனிடம் கேட்டான்.

கன்னம் என்பது கர்ணம் என்ற வடசொல்லின் தமிழாக்கம். காது என்பது பொருள். கும்பகர்ணன் என்ற பெயரைக் கும்பகன்னன் என்று கூறுவது தமிழ் மரபு. ''கன்னங்களால் காணுதுமால்'' என்பது ஒரு முரண்பட்ட சொல்லாட்சியாகத் தோன்றும். கன்னம் என்பது காதைக் குறிக்கும். காதால் கேட்குதுமால் என்பது காணுதுமால் என்று பேசப்பட்டிருக்கிறது. ஒரு புலன் உணர்ச்சியை மற்றொரு புலனின்மேல் ஏற்றிக் கூறுதல் கவிமரபு. ''நாற்றம் கேட்டலும்'' என்று கம்பரே முன் கையாண்டிருப்பதை நோக்குக.

ஏழு அன்னங்களின் வரலாறு. பரத்துவாச முனிவனின் மைந்தர்கள் ஏழு பேர். அவர்கள் மானசமடுவில் யோகம் செய்து வந்தனர். ஒழுக்கக் குறைவின் காரணமாக யோகம் முற்றுப்பெறவில்லை. அனைவரும் இறந்தனர். அடுத்த பிறவியில், குருக்ஷேத்திரத்தில் கௌசிக முனிவனின் மக்களாய்ப் பிறந்தனர். தந்தை இறந்த பின், கார்க்க முனிவனிடத்தில் கலைகள் பயின்றனர். ஒருநாள் கடும் பசியால் அவதிப்பட்ட போது, அங்கிருந்த காமதேனு என்னும் பசுவைக் கொன்று அதன் இறைச்சியை உட்கொள்ள முயன்றனர். அதற்குமுன்பு அவ்விறைச்சியின் சிறிதைக் கொண்டு மூதாதையர்க்குச் சிரார்த்தம் செய்து விட்டுப் பின் எஞ்சிய இறைச்சியை உண்டனர். மூதாகையர்க்குச் சிரார்த்தம் செய்ததன் நல்வினைப் பயனால் பல்வேறு பிறவிகளில் வேடர்களாய், விலங்குகளாய், சக்கரவாளப் பறவைகளாய், அன்னப் பறவைகளாய் மாறி மாறிப் பிறப்பு எடுத்தனர். இந்த ஏழு அன்னப் பறவைகளின் பெயர்கள் - பத்மகர்ப்பம், அரவிந்தாட்சம், கீரகர்ப்பம், சுலோசனம், பிந்து, சுபிந்து, ஹைமகர்ப்பம் என்பனவாம்.

56. சீதை வருந்துதல்

''முறையும் முடிவும்இலை, மொய்உயிர்'' என்று,
இறைவன் இளையானொடு இயம்பினனால்;
''பறையும் துணை, அன்னது பல்நெறி போய்
மறையும்'' என, ஏழை வருந்தினளால். (3393)

(இறைவன் - தலைவன்; மொய் - நிறைந்த; முறை - வரையறுக்கப்பட்ட தன்மை; முடிவு - எல்லை; பறைதல் - கூறுதல்; துணை - அளவு; நெறி - வழி; ஏழை - பேதை / சீதை; ஏழைமை - அறியாமை)

''உலகில் பரந்து பரவியுள்ள உயிரினங்களுக்கெல்லாம், ஒரே மாதிரியானவரையறுக்கப்பட்டதன்மையும், காலஎல்லையும்கிடையாது என்று யாவர்க்கும் தலைவனான இராமன், தன் இளவலாகிய இலக்குவனோடு உரையாடிக்கொண்டிருந்தான். இதை நோக்கிச் சீதை ''நீங்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் கால அளவுக்குள் அப்பொன் மான் காட்டின் பல வழிகளில் சென்று மறைந்துவிடும்'' என்று கூறி அறியாமையால் வருந்தினாள்.

உயிரினங்கள் தோன்றும் முறையும், அழியும் காலமும் நம் அறிவு கடந்த செயல்கள் என்று இராமன் கூறினான் என்பதாம். பறைதல் என்ற சொல் இன்றும் மலை நாட்டில் வழக்கில் இருப்பதைக் காணலாம்.

57. இருவரும் சென்று மானைக் காணுதல்

அனையவள் கருத்தை உன்னா, அஞ்சனக் குன்றம் அன்னான்,
''புனையிழை! காட்டு அது'' என்று போயினான்; பொறாத சிந்தைக்
கனைகழல் தம்பி பின்பு சென்றனன்; கடக்க ஒண்ணா
வினைஎன வந்து நின்ற மான் எதிர் விழித்தது அன்றே. (3394)

(அஞ்சனம் - மை / கருமை; உன்னா - உன்னி / நினைந்து; புனை - அலங்கரிக்கப்பட்ட / அழகிய; இழை - அணிகலன்கள்; பொறாத - ஆற்றாத; கனை - ஒலிக்கின்ற / விளக்கம்மிக்க; விழித்தல் - நோக்குதல்; கடக்க ஒண்ணா - விலக்கமுடியாத)

அவ்வாறு கூறிய சீதையின் மனத்தை நன்கு உணர்ந்த, மை மலை போன்ற நீல வண்ணனாகிய இராமபிரான், ''அழகிய அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தவளே! அந்தப் பொன் மானை எனக்குக் காட்டுவாயாக!'' என்று கூறி, அவளோடும் வனத்துக்குள் சென்றான். இதைக் கண்டு பொறுக்காத, ஒலிக்கின்ற வீரக்கழல்களையணிந்த தம்பியாகிய இலக்குவன் அவர்களைத் தொடர்ந்து சென்றான். யாராலும் விலக்க முடியாத ஊழ்வினை தொடர்ந்து வருவது போல, அந்தப் பொன்மானும் இவர்கள் எதிரில் வந்து நின்று விழித்துப் பார்த்தது.

அந்தப் பொன்மானுக்குத் தவறாது தொடரும் ஊழ்வினை உவமை. அவர்கள் இருவருக்கும் அப்பொன்மானால் தீங்கு நேரக்கூடும் என்ற அச்சம் கொண்டதனால், மனம் பொறுக்காது அவர்கள் பின் தொடர்ந்து சென்றான் இலக்குவன் என்க.

58. நோக்கிய மானை நோக்கி, நுதியுடை மதியின் ஒன்றும்
தூக்கிலன்; "நன்றுஇது" என்றான்; அதன் பொருள் சொல்லல் ஆகும்?
சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கியம் உடைமை அன்றோ? அன்னது பழுது போமோ? (3395)

(நுதி - நுட்பம் / கூர்மை; ஒன்றும் - சிறிதும்; தூக்கல் - ஆராய்தல் / சீர்தூக்கிப் பார்த்தல்; சேக்கை - படுக்கை; அரவு - பாம்பு; பாக்கியம் - நல்வினை / பேறு; பழுது - குற்றம் / பிழை; நன்று - அழகு)

அவ்வாறு விழித்துப் பார்த்து எதிரில் நின்ற அப்பொன் மானைத் தானும் கூர்ந்து நோக்கி, நுட்பமான, கூர்மையான தனது அறிவுத் திறத்தால் சிறிதும் சீர்த்தூக்கிப் பார்க்காமல், ஆராயாமல் ''இது நன்றாக அழகாக இருக்கிறது'' என்று கூறினான் இராமன். எல்லாம் வல்ல திருமாலின் அவதாரமாகிய இராமபிரான் இவ்வாறு கூறியதற்கு என்ன காரணம்? உட்பொருள் என்ன என்பதை நான் சொல்லுகிறேன். திருப்பாற்கடலில் ஆதிசேஷனாகிய பாம்புப் படுக்கையினின்றும் நீங்கி வந்து, அயோத்தியில், தசரத மன்னனின் புதல்வனாகப் பிறவியெடுத்தது, முன்பு தேவர்கள் செய்த நல்வினையின் பயனால் அல்லவா? அந்தப் பேறு பிழைபட்டுப் போய் விடும் அல்லவா! அதனால் தான் அந்தப் பொன்மான் அழகாக இருக்கிறது என்று இராமனும் கூறினான்.

இந்தப் பாடலில் அவதார உண்மையைக் கற்போர்க்குப் புலப்படுத்தினார் கவிஞர் என்க. இவ்வாறு பல இடங்களிலும் கூறியது உணர்க.

59. ''என் ஒக்கும் என்னல் ஆகும்?
இளையவ! இதனை நோக்காய்;
தன் ஒக்கும் உவமை அல்லால், தனை
ஒக்கும் உவமை உண்டோ?''
பல், நக்க தரளம் ஒக்கும்; பசும்
புல்மேல் படரும் மெல்நா
மின்ஒக்கும்; செம்பொன் மேனி;
வெள்ளியின் விளங்கும் புள்ளி. (3396)

(என்னல் - என்று கூறுதல்; என் - எது / யாது; ஒக்கும் - பொருந்தும்; நக்க - விளங்குகின்ற / ஒளிவீசும்; தரளம் - முத்து; படர்தல் - வளைந்து செல்லுதல்)

''தம்பி இலக்குவ! இப்பொன் மானை நன்றாக உற்றுப்பார்; இதனை எதனோடு ஒப்பிட்டுச்சொல்லமுடியும்? தனக்குத்தானேஉவமையாகுமே அன்றி, இதற்கு உவமை கூறக்கூடிய பொருள்கள் உலகில் வேறு ஏதேனும் இருக்கிறதோ? இதனுடைய பல்வரிசை, ஒளி வீசுகின்ற முத்துக்களைப் போன்றிருக்கின்றன; இது தன் உணவாகிய பசும்புல்லை மேய்வதற்காக வெளியில் வளைத்து நீட்டுகின்ற மெல்லிய நாக்கு, மின்னலைப் போன்று அடிக்கடி தோன்றி, மறைந்து ஒளிவீசுகிறது; இதனுடைய மேனி செய்ய பொன் போலும்! அதன் மேலுள்ள புள்ளிகள் வெள்ளி போலும் விளங்குகின்றன'' என்றான் இராமன்.

முதல் அடியில் இதற்கு உவமையே இல்லை, அதற்கு அதுவே உவமை என்று கூறிய இராமன், பின் இரண்டு அடிகளில் அதன் பல்லையும், நாக்கையும், மேனியையும் மேனியின் புள்ளிகளையும் வேறு ஒன்றுக்கு உவமிப்பது காண்க. இது முதலில் கூறியபடி ''நுதியுடை மதியின் ஒன்றும் தூக்கிலன்'' என்பதை உறுதிப்படுத்துவது காண்க. என்றாலும் மானின் முழு உருவத்திற்கும் தோற்றப் பொலிவுக்கும் வேறு ஒப்பு இல்லை என்றான்என்க. இதனை ''அன்வய அலங்காரம்'' என்பார்வடநூலார். மான் தன் நாவை அடிக்கடி வெளியே நீட்டி உள் இழுத்துக் கொள்ளும் இயல்பை நுட்பமாகக் கூறிய தன்மை நோக்குக.

60. ''வரிசிலை மறைவலோனே! மான்இதன் வடிவை, உற்ற
அரிவையர், மைந்தர், யாரே ஆதரம் கூர்கிலாதார்?
உருகிய மனத்த ஆகி, ஊர்வன, பறப்ப, யாவும்
விரிசுடர் விளக்கம் கண்ட விட்டிலின், வீழ்வகாணாய்!'' (3397)

(வரி - கட்டமைந்த; மறை - தனுர்வேதம்; வடிவு - அழகு; அரிவையர் - மகளிர்; மைந்தர் - ஆடவர்; ஆதரம் கூர்தல் - ஆசை கொள்ளுதல்; சுடர் - ஒளி; விளக்கம் - விளக்கு; வீழ்தல் - மொய்த்தல்)

''கட்டமைந்த வில் வித்தையான தனுர் வேதத்தில் பயிற்சி பெற்றவனே! இந்தப் பொன்மானின் அழகைக் கண்டவர்களில், மகளிரானாலும் சரி, ஆடவர்களானாலும் சரி, யார்தான் இதன் மீது ஆசை கொள்ளாமல் இருப்பார்கள்? ஊர்கின்ற புழு பூச்சிகளும், பறக்கின்ற பறவைகளும், மற்றும் உள்ள உயிரினங்கள் எல்லாமும், இதனைக் கண்டால் இளகிய மனம் கொண்டவராகி, பரந்து ஒளி வீசுகின்ற விளக்கினைக் கண்ட விட்டில் பூச்சி போல, அதன்மீது வந்து வீழ்ந்து மொய்ப்பதைக் காண்பாயாக!'' என்றான் இராமன்.

ஊர்வன, பறப்பன என்று இரு பிறவிகளையும், சீதையை என்று மக்கட்பிறவியையும், கலைமான் என்று விலங்கினப் பிறவியையும், ஆக ஏழுபிறவிகளுள் நான்கு பிறவிகளைத் தனித்தனியே கூறிய அழகு காண்க. எஞ்சியிருக்கின்ற மூன்று பிறவிகள் தேவர், தாவரங்கள், நீர்வாழ் உயிர்கள் என்பனவாம். தேவர்களுக்கு இது மாய மான் என்று தெரியும். எனவே

அவர்கள் வந்து குழும வில்லை. தாவரங்களுக்குக் கண்பார்வை இல்லை. எனவே அவையும் இதனைப் பார்க்கவில்லை. நீர்வாழ்உயிரினங்கள் கண்பார்வைக்கு எட்டும் தூரத்தில் இல்லை. எனவே, அதனைப் பார்க்க வில்லை என்றது ஒரு நயம். இன்னும் ஒன்று. இவைகள் எல்லாம் இப்பொன் மானை மொய்க்கும் போது, சீதை இதன்மேல் ஆசைப்பட்டதும், அம்மானைப் பார்க்கத் தானும் உடன் வந்ததும் தவறானதல்ல என்று நிறுவுகிறான் இராமன் என்க.

61. ஆரியன் அனைய கூற, அன்னது தன்னை நோக்கி,
''சீரியது அன்று இது'' என்று, சிந்தையில் தெளிந்த தம்பி,
''காரியம் என்னை, ஈண்டுக் கண்டது கனக மானேல்?
வேரிஅம் தெரியல் வீர! மீள்வதே மேன்மை'' என்றான். (3398)

(ஆரியன் - மேலோன் / உயர்ந்தோன் / நற்குணமுடையவன்; சீரியது - சிறந்தது / நல்லது; தெளிதல் - நன்கு அறிதல் / தீர்மானித்தல்; வேரி - நறுமணம்; அம் - அழகிய; தெரியல் - மாலை; மேன்மை - நன்மை)

மேலோனான இராமன் அவ்வாறு கூறவும் அந்த மானை மீண்டும் ஒருமுறை உற்றுநோக்கிய தம்பியாகிய இலக்குவன் ''இது இயற்கையான சிறந்த மான் அல்ல'' என்பதை நன்றாக அறிந்து தீர்மானித்துக் கொண்டவனாய், ''நறுமணம் கமழும் அழகிய மாலையணிந்த வீரனே! இங்கு நாம் காண்பது பொன்மானாக இருந்தாலும், இதனால் நமக்கு ஆக வேண்டிய காரியம் என்ன இருக்கிறது? எனவே இதனை விட்டு விரைவில் நீங்குவதே நமக்கு நன்மை தரும்'' என்றான்.

இராமபிரானை ஆரியன் என்று பல இடங்களிலும் கவிஞன் கூறிப் போவதைக் காணலாம்.

62. அற்று அவன் பகராமுன்னம்,
அழகனை, அழகியாளும்,
''கொற்றவன் மைந்த! மற்றைக்
குழைவுடை உழையை, வல்லை
பற்றினை தருதி ஆயின், பதியிடை
அவதி எய்தப்
பெற்றுழி, இனிது உண்டாடப் பெறற்கு
அருந்தகைமைத்து'' என்றாள். (3399)

(அற்று - அவ்வாறு / அத்தகைய; கொற்றவன் - மன்னன்; உழை - மான்; வல்லை - விரைந்து; அவதி - கால எல்லை; பதி - ஊர் / அயோத்தி; உண்டாடுதல் - விளையாடுதல்; தகைமை - தன்மை; பற்றுதல் - பிடித்தல்; குழைவு - தளர்ந்த நிலை)

அவ்வாறு இலக்குவன் சொல்லி முடிக்கும் முன்பே, பேர்அழகியான சீதை, பேரழகனான இராமனிடம், ''சக்கரவர்த்தித் திருமகனே! இந்தத்

தளர்ந்த நிலையில் உள்ள, கண்டவர்களை உருக்கும் தன்மை வாய்ந்த இந்த மானை, விரைவில் பிடித்து எனக்குத் தருவாயானால், நாம் வனவாசக் கால எல்லை முடிந்து அயோத்திக்குத் திரும்பிப் போகும்போது எனக்கு விளையாடுவதற்குரிய, பெறுதற்கரிய சிறந்த துணையாகும்'' என்றாள்.

''இதனால் நமக்கு என்ன பயன்'' என்று இலக்குவன் கேட்ட கேள்விக்கு, ''இது எனக்கு விளையாட்டுப் பொருளாகும்'' என்று சீதை பதில் கூறுகிறாள் என்க. மனைவி தன் கணவன் பெயரைச் சொல்லி அழைப்பது நம் வழக்கமில்லை. எனவே, ''மாமன் மைந்த'', ''ஆரிய புத்திர,'' என்பது போல இங்கே ''கொற்றவன் மைந்த'' என்றாள் என்க. ''அவதி'' என்ற சொல் கால எல்லையைக் குறித்தது. மூவரும் வனவாசம் கருதி வந்த பதினான்கு ஆண்டுகளில் பத்து ஆண்டுகள் தண்டகாரண்யத்திலும், மூன்று ஆண்டுகள் பஞ்சவடியிலும் கழிந்து போயின. எஞ்சியிருக்கும் ஒருவருட காலம் என்பது குறிப்பு.

63. இலக்குவன் ''இது மாய மான்'' என்று அறிவுறுத்தல்

ஐயநுண் மருங்குல் நங்கை அஃது உரைசெய்ய, ஐயன்,
"செய்வென்" என்று அமைய, நோக்கத் தெளிவுடைத் தம்பி செப்பும்;
"வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையின் செய்த
கைதவ மான் என்று, அண்ணல்! காணுதி கடையின்" என்றான். (3400)

(ஐயம் - சந்தேகம் / நுட்பம் / அழகுமாம்; மருங்குல் - இடை; ஐயன் - இராமன்; அமைதல் - இசைதல்; செம்மல் - சீரிய குணமுடையோன் / இலக்குவன்; செப்புதல் - சொல்லுதல்; அண்ணல் - பெருமைக்கு உரியவன்; வெய்ய - கொடிய / வலிய; வினை - தந்திரம் / சூது; கைதவம் - வஞ்சகம் / மாயம்; கடை - முடிவு / இறுதி; தெளிவு - உறுதி)

உண்டோ, இல்லையோ என்று சந்தேகப்படும் படியான நுண்ணிய அழகிய இடையை உடைய பெண்களிற் சிறந்தவளான சீதை இவ்வாறு கூறவும், அதற்குத் தலைவனாகிய இராமனும், ''அவ்வாறே செய்வேன்'' என்று உடன்படவும், இதனைக் கூர்ந்து நோக்கிய, நன்கு தெளிவும் உறுதியும் கொண்ட சிறந்த தம்பியாகிய இலக்குவன் பின் வருமாறு கூறலானான். ''ஐயனே! கொடுமையும், வன்மையும் நிறைந்த அரக்கர்கள் நம் மீது வஞ்சம் செய்ய வேண்டும் என்று விரும்பித் தந்திரமாகச் செய்து அனுப்பிய மாயமான் இது என்று இறுதியில் நீ உணர்ந்து கொள்வாய்!'' என்றான்.

இலக்குவன் முன்பு இம்மானைப் பிடிக்க வேண்டாம், நாம் மீண்டு போவதே சிறந்தது என்றான். அதனைக் கேட்காமல், சீதை விருப்பத்திற்கு இராமன் இணங்கியதைப் பொறுக்காத இலக்குவன் விடாப்பிடியாக மீண்டும் எச்சரிக்கிறான் என்க.

64. இராமன் ''தவறாகாது'' என்று கூறுதல்

''மாயமேல், மடியும் அன்றே வாளியின்; மடிந்தபோது
காய்சினத்தவரைக் கொன்று கடன் கழித்தோமும் ஆதும்;
தூயதேல், பற்றிக் கோடும்; சொல்லிய இரண்டின் ஒன்று
தீயதே? உரைத்தி'' என்றான் தேவரை இடுக்கண் தீர்ப்பான். (3401)

(இடுக்கண் - துன்பம்; மடியும் - இறந்தொழியும்; வாளி - அம்பு; காய் - கொடிய; கடன் - கடமை; கழித்தல் - நிறைவேற்றுதல் - தூயது - உண்மையானது / சிறந்தது; பற்றிக்கோடல் - பிடித்துக் கொள்ளுதல்; தீயது - குற்றமானது)

தேவர்களைத் துனபத்திலிருந்து நீக்குவதற்காகப் பூமியில் அவதாரம் செய்திருக்கின்ற இராமபிரான், இலக்குவனை நோக்கி, ''தம்பி! நீ கூறியபடி இது மாயமான் என்றால் என்னுடைய அம்பு பட்டுச் சாகும்; அவ்வாறு அது மடியும்போது, கொதிக்கின்ற கோபம் கொண்டவர்களான அரக்கர்களை எதிர்த்துப் போரிட்டுக் கொன்று, நம்முடைய கடைமையை நிறைவேற்றியவர்களாவோம்; அல்லது நான் நினைக்கின்றபடி இது உண்மையான சிறந்த மான்தான் என்றால், அதனைப் பிடித்துச் சீதையிடம் தருவோம்; நான் சொல்லிய இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றையாவது தீமை தரக்கூடியது என்று கூறமுடியுமா? சொல்லுவாயாக!'' என்றான்.

மாயமான் என்கிறான் இலக்குவன்; தூயமான் என்கிறான் இராமன்; மாய மானாக இருந்தால் கொன்றுவிடுவோம்.; தூய மானாக இருந்தால் கொண்டு வருவோம். எனவே, எதைச் செய்தாலும் நமக்கு ஒரு தீங்கும் விளையப் போவதில்லை; மாறாக நம் கடமையை நிறைவேற்றியவர் களாகவே ஆவோம் என்கிறான் இராமன். இங்கே ''கடன்'' என்று குறிப்பிட்டது முன்பு தேவர்களுக்கு அவர்கள் துயர் தீர்ப்பதாகக் கூறி, அதற்கெனவே பூமியில் அவதரித்து வந்ததும், பின்பு தண்டகாரண்ய முனிவர்களுக்கு அரக்கர்களைக் கொன்று தீர்ப்பேன் அஞ்சாதீர்கள் என்று அபயம் அளித்ததுமாகிய இரண்டையும் குறிக்கும் என்க.

65. இலக்குவன் மீண்டும் எச்சரித்தல்

''பின் நின்றார் இனையர் என்றும்
உணர்கிலம்; பிடித்த மாயம்
என் என்றும் தெளிதல் தேற்றாம்; யாவது
ஈது என்றும் ஓராம்;
முன் நின்ற முறையின் நின்றார்
முனிந்துள வேட்டம் முற்றல்,
பொன்நின்ற வயிரத் தோளாய்!
புகழ் உடைத்தாம் அன்று'' என்றான். (3402)

(பொன் - இலக்குமி / வீர லக்ஷ்மி / அழகுமாம்; வயிரம் - வலிமை; எனையர் - எத்தன்மையர் / எவ்வளவினர்; பிடித்த - மேற்கொண்ட; ஓர்தல் - ஆராய்ந்து தெளிதல்; முனிந்துள - வெறுத்து ஒதுக்கிய; வேட்டம் - வேட்டையாடும் தொழில்; முற்றல் - ஈடுபடுதல் / நிறைவேற்றுதல்)

''அழகிய வீரத்திருமகள் தங்கியிருக்கின்ற வலிய தோள்களையுடையவனே! இந்த மாய மானை முன்னால் ஏவி, இதன் பின்னர் மறைந்து நிற்பவர்கள் எத்தன்மையர் என்றோ, எவ்வளவு பேர் என்றோ நமக்குத் தெரியவில்லை; இது மேற்கொண்டுள்ள வஞ்சக நோக்கம் என்ன என்பதையும் நாம் ஆராய்ந்து பார்க்கவில்லை. இந்த மாயமான் என்ன? ஏன் இப்படி வந்திருக்கிறது என்பதையும் சிந்திக்க வில்லை; இந்த நிலையில், நமது முன்னோர்கள் அறநெறியிற் சென்ற முறையிலேயே செல்வோம். அவர்கள் வேட்டையாடும் தொழிலைக் கடிந்து விலக்கி வைத்திருக்கின்றனர். எனவே, நீ இப்பொழுது இம்மானை வேட்டையாடும் தொழிலில் ஈடுபடுதல், உனக்கும் நம் குலத்தினருக்கும் புகழ் தருவதாக அமையாது; அதோடு அன்றி அது பழிப்புக்கும் இடமாகும்'' என்றான் இலக்குவன்.

முன்னோர்கள் வேட்டையாடும் தொழிலைக் கடிந்து விலக்கியதற்குக் காரணம் முன்பு தசரதன் வேட்டையாடச் சென்று அதனால் அடைந்த சாபம் ஒரு காரணம். மற்றொன்று கொடிய விலங்குகளை வேட்டையாடி மக்களைக் காப்பாற்றுவது மன்னவன் கடமை என்றாலும் சாதுவான பிராணிகளை வேட்டையாடுவது தவிர்க்கப்படவேண்டும் என்பதும் மனு நீதி என்பதனால் இலக்குவன் தடுக்க முயன்றான் என்க. அரசர்கள் விலக்கப்பட வேண்டுவன என்று ஏழு குணங்களைக் கூறுவார்கள். அவை, வேட்டம், கடுஞ்சொல், மிகுதண்டம், சூது, பொருளீட்டம், கள், காமமோடு ஏழு'' என்பது. இங்கு ஒன்று நோக்க வேண்டும். இந்தப் பதின்மூன்று ஆண்டுகால வனவாசத்தில் இராமன் எங்கேயாவது வேட்டையாடினான் என்றாவது, புலால் உண்டான் என்றாவது கம்பன் கூறவில்லை என்பது கருத்திற்கொள்ளத் தக்கது. மற்ற காரணங்களுக்கு மசியாத இராமன், முன்னோர்கள் வெறுத்தொதுக்கியதும், தன் தந்தையின் துயரத்துக்குக் காரணமானதுமான வேட்டைத் தொழிலைச் செய்யாதே என்று கூறினாலாவது இராமன் இதைச் செய்யாதிருப்பானா என்று இதைத் தடுக்க மிகவும் முயலுகிறான் இலக்குவன் என்க. இது இயற்கையான மானாக இருந்தாலும்கூட, இதை வேட்டையாடுதல் அரசனான உன் தகுதிக்குப் புகழ் சேர்க்காது என்று கூறிப்பார்ப்பதும் காண்க.

66. இராமன் மறுத்துரைத்தல்

''பகையுடை அரக்கர் என்றும்,
பலர் என்றும், பயிலும் மாயம்
மிகையுடைத்து என்றும், பூண்ட
விரதத்தை விடுதும் என்றல்

நகையுடைத்து ஆகும் அன்றே?
ஆதலின், நன்றுஇது'' என்னா,
தகையுடைத் தம்பிக்கு, அந்நாள்,
சதுமுகன் தாதை சொன்னான். (3403)

(சதுமுகன் - நான்முகன் / பிரமன்; தாதை - தந்தை / திருமால் / இராமன்; தகை - நற்பண்புகள்; மிகை - அளவில்மிகுதி; விரதம் - கடமை / உறுதிமொழி; அந்நாள் - அப்பொழுது)

''இந்த மானுக்குப் பின்னால் இதை ஏவியவர்களான நம்முடைய பகைவர்களான அரக்கர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் மிகுவான பலரென்றும், அவர்கள் செய்யும் வஞ்சகச் செயல்களும் மிக அதிகம் என்றும் நீ கூறுகிறாய். அதனால் நாம் மேற்கொண்ட கடமையையும், முனிவர்களுக்கு அளித்த உறுதி மொழியையும் கைவிட்டு விட முடியுமா? அவ்வாறு அதனின்றும் பின்வாங்கினால், அது மற்றவர்கள் நம்மை எள்ளி நகையாடுவதற்கு இடம் கொடுத்ததாகாதா? எனவே நான் இம்மானைத் தொடர்ந்து செல்லுவதாகிய செயல் சரியானதே'' என்று, நற்பண்புகள் மிகுந்த தம்பியாகிய இலக்குவனுக்கு, நான்முகனாகிய பிரமதேவனின் தந்தையாகிய திருமாலின் அம்சமாகிய இராமபிரான் கூறினான்.

இலக்குவன் முன்பு கூறிய மூன்று காரணங்களையுமே மறுத்துக் கூறித் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறான் இராமபிரான். அவன் கூறிய தடைகளையே ஒப்புக் கொண்டு, அந்தக் காரணங்களுக்காகவே தான் இம்மானைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும் என்ற கூறுவதையும் நோக்குக.

67. இலக்குவன் தானே மானைப் பிடித்துவருவதாகக் கூறுதல்

''அடுத்தவும் எண்ணிச் செய்தல்,
அண்ணலே! அமைதி அன்றோ?
விடுத்து, இதன் பின் நின்றார்கள் பலர்
உளர்எனினும், வில்லால்
தொடுத்த வெம்பகழி தூவித் தொடர்ந்தனென்,
விரைந்து சென்று,
படுக்குவென்; அது அன்று ஆயின்,
பற்றினென் கொணர்வென்'' என்றான். (3404)

(அடுத்தல் - பொருந்துதல் / நெருங்குதல்; அமைதி - நிறைவு / பொருத்தம்; வெம்பகழி - கொடிய அம்பு; தூவுதல் - சொரிதல் / பொழிதல்; படுக்கல் - கொல்லுதல்; பற்றுதல் - பிடித்தல்)

''பெருமையிற் சிறந்தவனே! நாம் செய்யப் போவது தகுதியான செயல்தான் என்றாலும், அதை ஒரு முறைக்கு இருமுறை ஆலோசித்துச்

செய்வது நல்லதல்லவா? எனவே, இம்மானை முன்னர் ஏவி, இதன்பின் நிற்கும் அரக்கர்கள் மிகுதியான பலர் என்றாலும், என்னுடைய தொடுக்கப்பட்ட வில்லில், கொடிய அம்புகளைப் பொருத்தி, பொழிந்து கொண்டே இம்மானைத் தொடர்ந்து விரைந்து சென்று இதனையும் இதை ஏவிய அரக்கர்களையும் அழித்துவிடுவேன்; இது மாய மான் அல்ல, தூய மான் என்று தெரிந்தால், அதைப் பற்றிக் கொண்டு வந்து உன்னிடம் தருவேன்'' என்றான், இலக்குவன்.

இராமன் அம்மானைப் பின் தொடர்ந்து சென்று கொல்லுவதற்குப் பதிலாகத் தானே தொடர்ந்து சென்று கொன்று வருவதாகவும், இல்லையேல் கொண்டு வருவதாகவும் இலக்குவன் கூறினான் என்பதாம். இவ்வாறு இலக்குவன் தானே மானின் பின் போவதாகக் கூறும் கருத்து வான்மீகத்துள் சொல்லப்படவில்லை என்பதை அறிக.

68. சீதை, அம்மானை இராமனே பற்றித்தர வேண்டும் என்று கூறுதல்

ஆயிடை, அன்னம் அன்னாள், அமுது உகுத்தனைய செய்ய
வாயிடை, மழலை இன்சொல் கிளியினின் குழறி, மாழ்கி,
''நாயக! நீயே பற்றி நல்கலை போலும்'' என்னா,
சேயரிக் குவளை முத்தம் சிந்துபு சீறிப் போனாள். (3405)

(செய்ய - சிவந்த; உகுத்தல் - சிந்துதல்; மாழ்குதல் - வருந்துதல் / மயங்குதல்; நல்குதல் - தருதல்; சேய் - சிவந்த; வரி - கோடுகள் / இரேகை; முத்தம் - முத்து / நீர்த்துளி; சீறி - சினந்து; குழறுதல் - சொல்லின் வடிவம் புலப்படாதவாறு பேசுதல் / கொஞ்சிப் பேசுதலுமாம்; சிந்துபு - சிந்தி)

அந்தச் சமயத்தில் அன்னப் பறவை போன்ற நடையையுடைய சீதை, அமிர்தம் சிந்தியது போன்று, தனது சிவந்த வாயினால், குழந்தை பேசும் மழலைபோல் இனிமையாகவும், கிளிப்பேச்சுப் போன்று வடிவம் புலப்படாதவாறும் பின்வருமாறு பேசி மயங்கிச் சோர்ந்தாள். ''தலைவனே! இந்த மானைத் தாங்களே சென்று பிடித்துக் கொண்டு வந்து எனக்குத் தர மாட்டீர்கள் போலும்'' என்று ஊடல் கொண்டு, தனது சிவந்த இரேகைகள் படிந்ததும், நீலோற்பலமலர் போன்றதுமான கண் களினின்றும், முத்துப் போன்ற கண்ணீர்த்துளிகள் சிந்தி, இராமன் மீது சினம் கொண்டு, பன்னசாலையை நோக்கிச் செல்லலானாள்.

சீதையின் நடைக்கு அன்னமும், அவள் இனிய சொற்களுக்கு அமிழ்தமும், மழலையும், கிளிப்பேச்சும், உவமைகள். அவள் கண்களுக்குக் குவளை மலரும், அவள் கண்ணீருக்கு முத்துச் சிப்பிகளும் உவமை.

69. இராமன் மானைப் பிடிக்கச் செல்லுதல்

போனவள் புலவி நோக்கி, புரவலன், ''பொலன் கொள்தாராய்!
மான்இது நானே பற்றி, வல்லையின் வருவென், நன்றே;
கான்இயல் மயில் அன்னாளைக் காத்தனை இருத்தி'' என்னா,
வேல்நகுசரமும்,வில்லும், வாங்கினன் விரையலுற்றான். (3406)

(புலவி - ஊடல் / முனிவு / பிணக்கு / கோபமுமாம்; பொலன் - அழகு; வல்லை - விரைந்து; கான் - வனம்; இயலுதல் - உலவுதல்; வாங்கி - கைக்கொண்டு; புரவலன் - காப்பவன் / அரசன்; நகு - போன்ற; தார் - மாலை)

அவ்வாறு சீறிப்போனவளின் ஊடலைக் கண்டு, எல்லோரையும் காப்பாற்றியருளும் இராமபிரான், இலக்குவனை நோக்கி, ''அழகிய மாலையணிந்தவனே! இந்த மானை நானே சென்று பிடித்துக் கொண்டு விரைவில் திரும்பி வருகிறேன். அதுவரையிலும், இந்த வனத்தில் சஞ்சரிக்கும் மயில்போன்ற சாயலையுடைய சீதையைக் காத்துக் கொண்டு இங்கேயே இரு'' என்று கூறி, வேற்படையையும் பழிக்கும் கூர்மை யுடைய அம்புகளையும், வில்லையும் கைக் கொண்டு விரைந்து செல்லத் தொடங்கினான்.

இலக்குவனை மறுத்து, இராமன் தானே போய்க் கொண்டு வருவதாகக் கூறியது சீதையின் ஊடலையும், அதனால் எழுந்த சினத்தையும் தவிர்க்க என்க. கோப்பெருந்தேவி ஊடல் கொண்டதால், பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு நிகழ்ந்த அவலம் இங்கு நினைவு கூரத்தக்கது.

70. இலக்குவன் சீதையைக் காத்து நிற்றல்

''முன்னமும் மகவாய் வந்த மூவரில் ஒருவன் போனான்;
அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனன், இதனை; ஐய!
இன்னமும் காண்டி; வாழி, ஏகு'' என, இருகை கூப்பி,
பொன்அனாள் புக்க சாலை காத்தனன், புறத்து நின்றே. (3407)

(மகம் - வேள்வி; அயிர்த்தல் - ஐயுறுதல்; பொன் - திருமகள்)

''ஐயா! முன்பும் விசுவாமித்திரர் கருதிய வேள்வியினிடத்து வந்த தாடகை, சுபாகு, மாரீசன் ஆகிய மூவருள், மாரீசன் என்ற ஒரு அரக்கன் நம் கணைக்குத் தப்பிக் கடலில் தள்ளப்பட்டானே, அந்த மாரீசன்தான் இப்போது மான் வடிவம் கொண்டு வந்திருக்கிறானோ என்று நான் சந்தேகப்படுகிறேன். இருப்பினும் அதனை நீயே காணப்போகிறாய். விரைவில் செல்வாயாக; எந்த இடையூறும் வாராது வாழ்க!'' என்று தன் இரு கரங்களையும் கூப்பித் தொழுது, இலக்குமி போன்ற சீதை சென்ற பன்னசாலைக்கு வெளியே நின்று காவல் காத்து நின்றான்.

முன்னரும் என்பது, முதலில் விசுவாமித்திரர் யாகத்தின் போதும், பின்னர் தண்டகாரண்யத்தில் வேறு இரண்டு அரக்கர்களுடன் மான்வேடம்

கொண்டு உன்னைக் கொல்ல வந்து, நம் அம்பிற்கு அப்போதும் தப்பிப் போனமாரீசன்என்றும்பொருள்கொள்ளஇடம்தந்தது நோக்குக. இராமன் நான் போய் வருகிறேன் என்று கூறிய பின்னரும், இலக்குவன் இதுபற்றி மேலும் கூறியது, அவன் இராமன்பால் கொண்ட பேரன்பாலும், அது மாயமான்தான் என்று அவன் உறுதியாக அறிந்ததாலும்தான் என்க.

71. இராமன் அம்மானைத் தொடர்ந்து செல்லுதல்

மந்திரத்து இளையோன் சொன்ன
வாய்மொழி மனத்துக் கொள்ளான்,
சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள்
சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன்,
சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளினான் அம் மானினைத்
தொடரல் உற்றான். (3408)

(சிகரம் - மலை; செவ்வி - தன்மை /இயல்பு; சுந்தரம் - அழகு; மந்திரம் - ஆலோசனை; வாய்மொழி - மெய்யுரை / உண்மை உரைகள்; சான்ற - தக்க; வதனம் - முகம்; சலம் - சினம் / பிடிவாதம்; சிந்துரம் - சிவப்பு; முறுவல் - புன்னகை)

மலைச்சிகரங்கள் போலச் சிறப்பமைந்த அழகிய தோள்களை உடையவனான இராமன், நன்கு ஆலோசித்து நன்மை பயக்கும் உண்மைஉரைகளைக் கூறிய இளவலான இலக்குவனது சொற்களை மனத்தில் ஏற்றுக் கொள்ளாதவனாய், பூர்ணசந்திரனுக்கு உவமை சொல்லதக்க முகத்தையுடைய சீதையின் பிடிவாதத்தையும், ஊடலையும் மட்டுமே மனத்தில் கொண்டு, சிவந்த பவளம் போன்ற சிவந்த இதழ்களின் இடையில் தோன்றும் புன்சிரிப்புடன், அந்த மாயமானை, பொன்மானைத் தொடர்ந்து சொல்லலானான்.

இலக்குவன் வாய்மொழியும், சீதையின் கோபமும், இராமனுக்குப் புன்சிரிப்பையே தோற்றுவித்தன என்பதாம். ஸ்திதப்பிரக்ஞன் - நடுவு நிலைமை தவறாதவன் என்பது பெறப்பட்டது இருவரும் இருவேறுபட்ட கருத்தைக் கூறினாலும், தன் முகத்தில் மகிழ்ச்சியோ, கோபமோ காட்டாது இருந்த நிலையினைக் குறித்தான் என்க.

72. மாயமான் விரைந்து ஓடுதல்

மிதித்தது மெல்ல மெல்ல; வெறித்தது வெருவி; மீதில்
குதித்தது; செவியை நீட்டி, குரபதம் உரத்தைக் கூட்டி,
உதித்து எழும் ஊதை, உள்ளம், என்று இவை உருவச் செல்லும்
கதிக்கு ஒரு கல்வி வேறே காட்டுவது ஒத்ததுஅன்றே. (3409)

(மிதித்தல் - அடிவைத்தல்; வெறித்தல் - வெகுண்டுநோக்குதல்; வெருவி - அஞ்சி; குரம் -குளம்பு; உரம் - மார்பு; மீது - மேலே; ஊதை - காற்று; உருவ - பாய்ந்து ஊடுருவி; கதி - வேகம்; கல்வி - பாடம்; காட்டுவது - கற்பிப்பது; பதம் - கால்)

அந்த மாயமான் முதலில் மெல்ல மெல்ல அடி வைத்து நடந்தது; பின்னர் வெறித்துப் பார்த்தது; அதனால் அச்சமுற்று, மேலே துள்ளிக் குதித்தது. பின்னர் தன் இருசெவிகளையும் விறைத்து நீட்டி, குளம்பு உள்ள கால்களைத் தனது மார்புடன் சேர்த்து மடக்கிக்கொண்டு, தோன்றி எழுகின்ற காற்று, மனம் என்று கூறக் கூடிய இவைகள் ஊடுருவிச் செல்லக்கூடிய வேகத்தை யெல்லாம் கடந்து, இதுசெல்லும் வேகத்திற்கு வேறு ஒரு பெயர் சொல்ல வேண்டும் என்று மற்றொரு பாடம் கற்பிப்பது போன்று ஓடுவது போல ஓடிப்போயிற்று.

முதலில் அடிமேல் அடி எடுத்து வைத்துச் சென்ற மான், அஞ்சி, வெகுண்டு, துள்ளிக் குதித்தது. பின்னர் வாயுவேகம் மனோவேகம் என்று வேகத்திற்கு உவமை சொல்லக் கூடியவைகளையெல்லாம் கடந்து, இது செல்லும் வேகத்திற்கு என்ன பெயர் சொல்லலாம் என்று ஒரு புதுப் பாடத்தைக்கற்பிப்பது போல விரைந்து ஓடிற்று என்பதாம். விரைவுடையவற்றுள் காற்றும், உள்ளமும் தான் முதலில் வைத்துக் கருதப்படும். அவற்றின் வேகத்தையும் மிஞ்சியது இந்த மானின் ஓட்டம். இதற்கு வேறு ஏதாவது புதுப்பெயர்வைக்க வேண்டும் போல் இருக்கிறது என்று சொல்லுவது போல் ஓடிற்று என்பதாம். ஊதைக்காற்று விரைந்து வீசும் இயல்புடையது எனவே தென்றலைக் கூறாது ஊதையைக் கூறினார் என்க.

73. இராமனும் விரைந்து பின் தொடர்தல்

நீட்டினான், உலகம் மூன்றும் நின்று
 எடுத்து அளந்த பாதம்;
மீட்டும் தாள் நீட்டற்கு, அம்மா! வேறும்
 ஓர் அண்டம் உண்டோ?
ஓட்டினான், தொடர்ந்த தன்னை, ஒழிவு
 அற நிறைந்த தன்மை,
காட்டினான் அன்றி, அன்று, அக்கடுமை
 யார் கணிக்கற்பாலார்? (3410)

(எடுத்து - தூக்கி, கடுப்பு - விரைவு; கணித்தல் - அளவிடுதல்)

முன்பு திரிவிக்கிரம அவதாரத்தில் திருமால் இவ்வுலகங்கள் முற்றிலும் நின்று, தன் பாதங்களைத் தூக்கி அளந்தான். அவன் அம்சமாகிய இராமபிரான் இப்போது இம் மானைத் தொடர்வதற்காக அந்தப் பாதங்களை நீட்டினான். அவன் அந்தப் பாதங்களை வைப்பதற்கு வேறு

ஏதேனும் ஓர் அண்டம் இருக்கிறதா? இல்லையல்லவா? அவன் தான் நீக்கமற நிறைந்திருக்கிறானே; பின்னர் அவன் ஏன் அந்த மானைத் தொடர்ந்து ஓடினான் என்றால், தனது நீக்கமற நிறைந்த தன்மையை மீண்டும் ஒருமுறை இவ்வுலகத்தவர்க்கு உணர்த்தவேயாம். தவிர, அவன் அன்று ஓடிய வேகத்தைக் கணக்கிட்டுக் கூறக்கூடியவர் யார் இருக்கிறார்கள்? ஒருவராலும் அளவிட்டுக் கூற முடியாது.

நீக்கமற நிறைந்தவன் - ஒழிவற நிறைந்த தன்மை என்பது ''சர்வவியாபி'' என்பதைக் குறிக்கும்.

74. மாயமானின் சாகசச் செயல்கள்

குன்றிடை இவரும்; மேகக் குழுவிடைக் குதிக்கும்; கூடச்
சென்றிடின், அகலும்; தாழின், தீண்டல் ஆம் தகைமைத்து ஆகும்;
நின்றதே போல நீங்கும்; நிதிவழி நேயம் நீட்டும்
மன்றல் அம் கோதை மாதர் மனம் எனப் போயிற்று, அம்மா! (3411)

(இவர்தல் - ஏறுதல்; குன்று - மலை; குழு - கூட்டம்; கூட - அணுக; அகலுதல் - விலகுதல்; தாழ்த்தல் - தாமதப் படுத்துதல்; தீண்டல் - தொடுதல்; நீங்கும் - மறையும்; நிதி - பொருள் / பணம்; நேயம் - அன்பு; நீட்டுதல் - செய்தல் / செலுத்துதல்; மன்றல் - மணம்; அம் - அழகிய; கோதை - மாலை / கூந்தல்; மாதர் - விலை மகளிர்)

அந்த மாயமான் மலைகளின் மீது ஏறிப் போகும்; மேகக் கூட்டத்திடையே தாவிச் செல்லும், இராமன் தொடர்ந்து சென்றால் அவனை விட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிடும்; சரி என்று சற்றுத் தாமதித்தால், அவன் தொட்டு விடக்கூடிய அளவுக்கு அருகில் நெருங்கி வரும்; அருகே தானே நிற்கிறது என்று கருதித் தொட்டுத் தூக்கப் போனால் விரைவில் அகன்று ஓடிவிடும்; மொத்தத்தில் இது எப்படி இருக்கிறது என்றால், ஒருவர் கொடுக்கும் பணத்தின் அளவைப் பொறுத்து அவர்பால் அன்பு செலுத்தும், நறுமணமிக்க அழகிய கூந்தலையும், மலர்மாலையையும் அணிந்த விலை மகளிரின் மனம் போல, ஒருவழி நில்லாது ஓடிக் கொண்டே இருந்தது.

விலை மாதரின் மனம் ஒரு வழி நிலைத்திராது. அது போல இந்த மானும் ஒரு வழியில் செல்லாது பலவழிகளிலும், பல வேகத்திலும் ஓடியது என்பதாம்; மானின் வேகத்திற்குப் பரத்தையரின் மனம் உவமை.

75. இராமன் ''இது மாயமான்தான்'' என்று புரிந்து கொள்ளுதல்

''காயம் வேறு ஆகி, செய்யும் கருமம் வேறு ஆகிற்று அன்றே?
ஏயுமே; என்னின் முன்னம் எண்ணமே இளவற்கு உண்டே;
ஆயுமேல் உறுதல் செல்லாது; ஆதலால், அரக்கர் செய்த
மாயமே ஆயதே; நான் வருந்தியது'' என்றான் வள்ளல். (3412)

(காயம் - உடல்; கருமம் - செயல்; ஏய்தல் - பொருந்துதல்; ஆய்தல் - சிந்தித்தல்; உறுதல் - தொடர்தல்)

''இந்த மான் இயற்கைக்கு மாறுபட்ட உடலை உடையதாயிருக்கிறது; அது செய்யும் செயல்களோ, ஒரு மான் செய்யும் காரியங்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறதே; எனக்கு முன்னால் என் தம்பி இலக்குவனுக்கு இந்த எண்ணம் உண்டாகியிருக்கிறதே! அது சரியான கருத்துத் தானே! நானும் சிறிது ஆராய்ந்து பார்த்திருந்தால் இவ்வளவு தூரம் இதனைத் தொடர்ந்து வந்திருக்கமாட்டேன்; இப்போது நான் வருந்துவதற்குக் காரணம் அரக்கர்கள் என்று கூறப்படுபவர்கள் செய்த வஞ்சகமான மாயச் செயல்தான்'' என்று வள்ளலாகிய இராமன் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

முன்பே இலக்குவனுக்குப் புரிந்தது தனக்கு ஏன் புரியாமற் போய் விட்டது என்று வருந்தினான் என்க. மான் ஒரே நேரத்தில் மிக வேகமாக ஓடும் இயல்புடையதல்ல; அது மெல்ல மெல்லத் துள்ளிக் குதித்துத் தான் ஓடும். இடைவெளி விட்டுத் தான் ஓடும். ஆனால் இந்த மான் விரைவாகவும், கொஞ்சம் கூடக் களைப்புறாமல் மலை மீதெல்லாம் ஏறி ஓடுவதால், இது மாய மான்தான், என்று இராமன் இப்பொழுது புரிந்து கொண்டு வருந்தினான் என்பதாம். இராமன் இலக்குவனை உள்ளத்தாற் பாராட்டும் இடங்களில் இதுவும் ஒன்று என்பதைக் குறித்துக் கொள்க.

76. மாரீசன் தப்பிஓட முயலுதல்

''பற்றுவான், இனி, அல்லன்; பகழியால்
செற்று, வானில் செலுத்தல் உற்றான்'' என
மற்றுஅம் மாய அரக்கன் மனக்கொள்ளா,
உற்ற வேகத்தின் உம்பரின் ஓங்கினான். (3413)

(பற்றுதல் - பிடித்தல்; பகழி - அம்பு; செற்று - கொன்று; உற்ற - மிக்க; உம்பர் - வான் / மேலுலகு; ஓங்குதல் - எழும்புதல் / பாய்தல்; கொளா - கொண்டு)

''இராமன், நாம் உண்மையான மான் அல்ல என்பதைப் புரிந்து கொண்டு விட்டான். எனவே இனிமேல் நம்மைப் பிடிப்பதற்கு முயலமாட்டான்; நம்மை அவனது அம்பினால் கொன்று, நம்மை வானுலகுக்கு அனுப்புவதற்கே கருதுவான்'' என்று தன் மனத்துள் எண்ணிய அம்மாயவித்தையில் வல்லவனான மாரீசன், தன்னால் முடிந்த மட்டும் வேகமாக, வானத்தில் எழும்பினான்.

77. இராமன் அம்பு எய்தல்

அக்கணத்தினில், ஐயனும், வெய்ய தன்
சக்கரத்தின் தகைவு அரிது ஆயது ஓர்,

செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்
''புக்க தேயம் புக்கு இன்உயிர் போக்கு'' எனா. (3414)

(வெய்ய - கொடிய; தகைவு அரிது - தடுத்தற்கரிய; செக்கர் - செந்நிறம்; மேனி - உருவம்; பகழி - அம்பு; தேயம் - இடம்)

அதே நேரத்தில், தலைவனான இராமபிரானும், தனது கொடியதும், சுதர்சனம் என்னும் சக்கரப்படை போன்றதும், பகைவர் யாராலும் தடுத்தற்கரியதுமான ஒரு சிவந்த நிறமுடைய அம்பு ஒன்றை எடுத்து, ''இவன் செல்லுமிடமெல்லாம் நீயும் தொடர்ந்து சென்று இவனது இனிய உயிரைப் போக்கி விட்டுவா'' என்று கட்டளையிட்டு, அவ்வம்பைச் செலுத்தினான்.

பகைவர் குருதி எப்பொழுதும் படிந்திருப்பதால் செக்கர் மேனிப் பகழி என்றார் என்க. இராமபிரான் திருமாலின் அம்சம் என்பதால் ''தன் சக்கரம்'' என்றார்.

78. மாரீசன் அலறிக் கொண்டே ஙழே விழுதல்

நெட்டு இலைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்டது; அப்பொழுதே, பகுவாயினால்,
அட்ட திக்கினும், அப்புறமும் புக
விட்டு அழைத்து, ஒரு குன்று என வீழ்ந்தனன். (3415)

(நெட்டு - நீண்ட / நெடு; உற - அழுந்த; பகு - பிளந்த; அட்டம் - அஷ்டம் / எட்டு; விட்டு அழைத்தல் - நீண்ட குரலால் அழைத்தல் / நீட்டி அழைத்தல்; படுதல் - தைத்தல் / ஊடுருவிப் பாய்தல் / தாக்குதல்)

நீண்ட கூர்மையான இலை வடிவம் போன்ற இராமனது அம்பு, வஞ்சனைச் செயலையுடைய அந்த மாரீசனது நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. அப்பொழுதே அவன் தனது பிளந்த வாயினால் ''ஹே சீதா! ஹே லக்ஷ்மணா!'' என்று எட்டுத்திக்குகளிலும், அதற்கு அப்பாலும் சென்று கேட்கும் வண்ணம், தன் குரலின்றி, இராமனது குரலில் கூவி அழைத்து, ஒரு மலை சாய்வது போல, தனது உண்மையான அரக்க வடிவத்துடன் நிலத்தில் கீழே விழுந்தான்.

பொதுவாக ஆயுதங்களின் நீண்டு, அகன்று, கூர்மையாக உள்ள முனைப் பகுதியை இலை என்று கூறுவது கவிமரபு. முத்தலைச் சூலம் எனவும் மூவிலைச் சூலம் எனவும் வழங்கப் பெறுவதை நினைவு கூர்க. தன் குரல் எட்டுத் திக்குகளிலும் பரவவேண்டும் என்பது அவன் எண்ணம். காரணம் தான் கூவி அழைப்பது, தூரத்தில் இருக்கும் சீதைக்கும், இலக்குவனுக்கும் கேட்க வேண்டும் என்பதாம்; விட்டு அழைத்தல் என்பது அவ்வொலி, நீண்ட நேரம் கேட்கும்படி அழைத்தல் என்பதையும், தன் குரலை விட்டு, இராமன் குரலில் அழைத்தல் என்பதையும் குறிக்கும். ஒரு குன்று என வீழ்ந்தான் என்பதால், மாயமான், இறப்பதற்கு முன்பு, தனது உண்மையான

அரக்க வடிவம் கொண்டு, பின்னர் நிலத்தில் வீழ்ந்தான் என்பதைக் குறிக்கும். இராமன் குரலில் மாரீசன் அழைத்தான் என்பது பின்னர் வரும் பாடல் பகுதியால் அறியலாகும். இக்குரல் கேட்டுச் சீதையை விட்டு இலக்குவனும் பிரிந்து விடுவான் என்பது அவன் உள்நோக்கம். இவ்வாறு பெயர் கூறி அழைத்ததாகக் கம்பன் கூறவில்லை; வான்மீகத்திலிருந்து எடுத்துத் தரப்பட்டிருக்கிறது.

79. இராமன் இலக்குவன் ஆற்றல் குறித்துப் பாராட்டுதல்

வெய்யவன், தன் உருவொடு வீழ்தலும்,
''செய்யது அன்று'' எனச் செப்பிய தம்பியை,
''ஐயன் வல்லன்; என்ஆர் உயிர் வல்லன்; நான்
உய்ய வந்தவன் வல்லன்'' என்று உன்னினான். (3416)

(வெய்யவன் - கொடியவன் / மாரீசன்; செய்யது - நல்லது; உன்னுதல் - நினைத்தல்; வல்லன் - சமர்த்தன் / திறமையாளன்)

அந்தக் கொடியவனான மாரீசன் தனது இயற்கை வடிவத்தோடு கீழே சாய்ந்தவுடன், ''இது இயற்கை மான் அன்று; மாயமான்'' என்று கூறிய தம்பி இலக்குவனை நினைத்து, இராமன் ''என் தம்பி இலக்குவன் சமர்த்தன்; எனது அரிய உயிர் போன்றவனாகிய அவன் மிகச் சிறந்த திறமையாளன்; என் உயிரை ஈடேற்ற என்னுடன் வனத்திற்கு வந்தவனும் என் உடன் என் பின் பிறந்தவனுவாகிய இலக்குவன் பேரறிவாளன்'' என்று பாராட்டினான்.

அரக்கர்களும் அசுரர்களும் ஏதோ ஒரு காரணத்திற்காக மாற்றுஉரு எடுத்திருந்தாலும், அவர்கள் இறக்கும் பொழுது, தங்களது சுயஉருப் பெற்றே மடிவர் என்பது நூற்கொள்கை. எனவே மாயமானும் மாரீசன் வடிவு பெற்று இறந்தது என்க. எடுத்துக்காட்டு, பாகவத புராணத்தில் பூதனை முதலிய அசுரர்கள் மாய்ந்த போதும் தங்கள் உண்மை உருக்கொண்டனர் என்பது காண்க. மீண்டும் மீண்டும் வல்லவன் என்று கூறியது அவனது அறிவு ஆற்றலை, தான் இப்போது நன்கு உணர்ந்ததால் என்க.

80. இராமன் ''மாயமான் மாரீசன்தான்'' என்று நன்கு உணர்தல்

ஆசை நீளத்து அரற்றினன், வீழ்ந்தஅந்
நீசன் மேனியை, நின்று உற நோக்கினான்;
''மாசுஇல் மாதவன் வேள்வியில் வந்த
மாரீசனே இவன்'' என்பதும் தேறினான். (3417)

(ஆசை - திசை; நீளம் - எல்லை; நீசன் - கீழ்மகன் / கயவன்; மாசு - குற்றம்; தேறுதல் - தெளிந்து கொள்ளுதல்; அரற்றுதல் - கதறி அழுதல்)

திசைகளின் எல்லை வரை சென்று கேட்கும் படியாகக் கதறி அழுது கொண்டு விழுந்தவனான அந்தக் கீழ்மகனான மாரீசனது உருவத்தை, அவன் அருகில் சென்று, சற்று நின்று, நன்கு உற்றுப் பார்த்தான் இராமன். பின்னர், ''இவன் குற்றமற்ற பெரிய தவத்தை உடையவரான விசுவாமித்திரர் இயற்றிய வேள்வியின் போது, அதனை அழிக்க வந்த அரக்கனான மாரீசன் தான்'' என்று நன்கு தெரிந்து தெளிவுற்றான்.

இலக்குவன் முன்னே உய்த்து உணர்ந்த ஒன்றை, இராமன் இப்பொழுதுதான் தன் அனுபவத்தால் தெரிந்து கொண்டான் என்பதை நோக்குக.

81. இராமன் சீதையின் நிலையை எண்ணி வருந்துதல்

''புழைத்த வாளிஉரம்புக, புல்லியோன்
இழைத்த மாயையின், என் குரலால் எடுத்து
அழைத்தது உண்டு; அது கேட்டு அயர்வு எய்துமால்,
மழைக்கண் ஏழை'' என்று, உள்ளம் வருந்தினான். (3418)

(புழை - துவாரம்; புழைத்த - துளைத்த / துவாரம் செய்த; உரம் - மார்பு; புல்லியோன் - அற்பன்; இழைத்த - பயின்ற / செய்த; மழை - மேகம் / கரிய; அயர்வெய்துதல் - தளர்தல்; எடுத்து அழைத்தல் - நீட்டி முழக்கிக் கூவுதல்; ஏழை - பேதை / சீதை)

''எனது அம்பு அவன் மார்பில் சென்று தாக்கியதால் துளை உண்டாகப் பெற்ற அற்பமான மாரீசன், தான் பயின்ற தனது மாய வித்தையினால், என் குரல் போல நீட்டி முழக்கி ''ஹே சீதா! ஹே இலக்ஷ்மணா!'' என்று கூவி அழைத்தது உண்டல்லவா? அதைக் கேட்ட மேகம் போலும் கரியதும், மழை போன்று குளிர்ச்சியும் பொருந்திய கண்களையுடைய பேதையாகிய சீதை, உள்ளம் தளர்ந்து சோர்வடைவாளே'' என்று எண்ணித் தன் மனம் வருந்தினான்.

82. இலக்குவன் அவளுடன் இருக்கிறான் என்பதால் இராமன் தேறுதல்

''மாற்றம் இன்னது? ''மாய மாரீசன்'' என்று,
ஏற்ற காலையின் முன் உணர்ந்தான் எனது
ஆற்றல் தேரும் அறிவினன்; ஆதலால்,
தேற்றுமால் இளையோன்'' எனத் தேறினான். (3419)

(ஏற்றம் - துணிவு; தேருதல் - தெளிந்த அறிவு / தெளிவித்தல்; மாற்றம் - சொல் / கூப்பாடு; மாயம் - வஞ்சகச்செயல்; தேறுதல் - ஆறுதல் அடைதல்)

''தன்முன்வந்த பொன்மான், உண்மையில் மான் அன்று, அது மாரீசனே! மாயமே என்று துணிவாக, முன்பே உணர்ந்தவனாகிய இலக்குவன்,

சீதையின் அருகில் இருக்கிறான். மற்றும் அவன் என்னுடைய ஆற்றலையும் நன்கு உணர்ந்தவன்; எனவே இவ்வாறு என் குரலில் வந்த கூப்பாடு வஞ்சனையானது, மாயமானதுதான் என்று சீதைக்கு எடுத்துக் கூறி, அவளைத் தேற்றுவான்'' என்று தன் மனத்துள் எண்ணி ஆறுதல் அடைந்தான் இராமன்.

தம்பியின் அறிவுக் கூர்மையையும், பிறரைப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையையும் இராமன் பாராட்டினான் என்பதாம்.

83. இராமன் தவக்குடிலுக்குத் திரும்பி வருதல்

''மாள்வதே பொருள் ஆக வந்தான் அலன்;
சூழ்வது ஓர்பொருள் உண்டு; இவன் சொல்லினால்
மூள்வது ஏதம்; அது முடியாமுனம்
மீள்வதே நலன்'' என்று, அவன் மீண்டனன். (3420)

(மாள்வது - இறப்பது; சூழ்வது - எண்ணுவது; மூளும் - விளையும்; ஏதம் - தீங்கு; மீள்வது - திரும்பிச் செல்வது; பொருள் - பயன் / செயல் / நோக்கம்)

''இவன் நம்மால் அம்பு எய்யப்பட்டு இறப்பது என்பதையே ஒரு குறிக்கோளாகக் கொண்டு வந்தவனாகத் தெரியவில்லை; ஆனால் என் குரலில் கூக்குரலிட்டு அழைத்ததால் ஏதோ ஓர் சூழ்ச்சி இருக்கிறது; அதனால் ஏதேனும் தீங்கு நேரிடலாம். எனவே அத்தீங்கு நிறைவேறும் முன்னே, நான் தவக்குடிலுக்குத் திரும்பிச் செல்வதே நலம் பயக்கும்'' என்று எண்ணி, உடனேயே தவச்சாலைக்குத் திரும்பத் தொடங்கினான் இராமன்..

மாரீசன் வதைப்படலம் நிறைவுற்றது

9. இராவணன் சூழ்ச்சிப் படலம் [84 பாடல்கள்]

மாயமான் இராமன் குரலில் அலறி வீழ்ந்ததும், சீதையின் வற்புறுத்தலால், இலக்குவன் சீதையைத் தனித்து விட்டு அகன்றதும், இச்சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இராவணன் சூழ்ச்சி செய்து, தவவேடம் பூண்டு, சீதையை அணுகி அவளைத் தரையோடும் பெயர்த்து எடுத்துச் செல்லுவதையும் கூறும் படலம் என விரியும். இது 84 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''இராவணன் வஞ்சித்த படலம்'' எனவும், சில சுவடிகளில் ''இராவணன் வஞ்சனை சூழ்படலம்'' எனவும் குறிக்கப்பட்டிருக்கிறது. சில அச்சுப் பதிப்புக்களில் இராவணன் சூழ்ச்சிப் படலத்தை முன்பகுதியாகக் கொண்டு ''சடாயு உயிர் நீத்த படலம்'' என ஒரே படலமாகவும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், மரீசன் கூக்குரல் கேட்டுச் சீதை மயங்குதல்; இராமனின் ஆற்றல்களைப் புலப்படுத்தி, இலக்குவன், சீதையைச் சமாதானப் படுத்த முயலுதல்; சீதை அதை ஏற்றுக் கொள்ளாது மறுத்து, கடுஞ்சொற்களால் இலக்குவனை நிந்தித்தல்; இலக்குவன் உடனே செல்லாவிடில் தான் எரி புகப் போவதாக அச்சுறுத்துதல், இதை உணர்ந்து, இலக்குவன் வேறுவழியில்லாது, விதியின் மேல் பழி சார்த்தி சீதையைத் தனியே விட்டு இராமனைத் தேடிச் செல்லுதல்; இலக்குவன் அகன்றதும், காத்திருந்த இராவணன் தவக்கோலத்துடன் குடிலுக்குள் நுழைதல்; உண்மையான தவசி என்று கருதி சீதை அன்புடன் வரவேற்றல்; இராவணன் சீதையை யார் எனக் கேட்டதும் தன் வரலாற்றைச் சீதை கூறுதல்; சீதை இராவணனை யார் எனக்கேட்டதும், அவன் உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறுதல்; இருவரும் உரையாடுதல்; சீதை இராமனைப்புகழ்ந்து இராவணனை இகழவும், இராவணன் கடுஞ்சினம் கொண்டு தவவேடத்தைக் கலைத்து உண்மை உருவத்துடன் தோன்றுதல்; சீதை நடுக்கமுறுதல்;இராவணன் தகாத வார்த்தைகள் கூறிச் சீதையின் பாதம் தொழுதல்; சீதை இராமனையும் இலக்குவனையும் பரிந்து அழைத்தல்; இராவணன் தவச்சாலையின் நிலத்தோடு சீதையைத் தூக்கித் தேரில் வைத்துக் கொண்டு, செல்லத் தொடங்குதல்; சீதை அரற்றுதல், இராவணன் ஏளனம் செய்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. கவிக் கூற்று

சங்கு அடுத்த தனிக் கடல் மேனியாற்கு
அங்கு அடுத்த நிலைமை அறைந்தனம்;
கொங்கு அடுத்த மலர்க் குழல் கொம்பனாட்கு
இங்கு அடுத்த தகைமை இயம்புவாம். (3421)

(அடுத்த - பொருந்தியுள்ள; தனி - ஒப்பற்ற; அடுத்த - நேர்ந்த; அறைதல் - கூறுதல்; கொங்கு - தேன் / மணம் / மகரந்தம்; குழல் - கூந்தல்; தகைமை - தன்மை)

சங்குகள் பரந்து கிடக்கின்ற ஒப்பற்ற கடல் போன்ற நீல வண்ணம் கொண்ட மேனியையுடைய இராமபிரானுக்கு, அவன் மாயமான் பின்னால் சென்ற இடத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை முன்பு கூறினோம். நறுமணமும், மகரந்தமும், தேனும் கூடிய மலர்களை அணிந்த கூந்தலையுடையவளும் பூங்கொடி போன்ற மேனியை உடைய சீதா தேவிக்கு, இங்கு, அவளுடைய தவக்குடிலில் நிகழ்ந்த செயல்களைப் பற்றி இப்பொழுது கூறுவோம்.

இது கவிக் கூற்று ''சங்கு அடுத்த தனிக் கடல் மேனியான்'' என்பதற்குப் பாஞ்ச சன்யம் என்னும், சங்கினைக் கையில் ஏந்தியுள்ள ஒப்பற்ற நீலவண்ண மேனியனான திருமாலின் அம்சமான இராமபிரான் என்றும் விரித்துப் பொருள் கொள்ளலாம்.

2. சீதையின் துயர நிலை

எயிறு அலைத்து முழை திறந்து ஏங்கிய,
செயிர் தலைக்கொண்ட, சொல் செவி சேர்தலும்,
குயில் தலத்திடை உற்றது ஓர் கொள்கையாள்,
வயிறு அலைத்து விழுந்து மயங்கினாள். (3422)

(அலைத்து - அதுக்கிக் கொண்டு; எயிறு - பற்கள்; முழை - குகை; செயிர் - வஞ்சகம் / குற்றம்; தலம் - நிலம் / தரை; கொள்கை - தன்மை; அலைத்து - அடித்துக் கொண்டு; ஏங்குதல் - முழங்குதல்/ ஆரவாரித்தல்)

தன்பற்களைக்கடித்துக் கொண்டு, தனது மலைக்குகை போன்ற அகன்ற வாயைத்திறந்து, மாரீசன் என்ற மாயமான், ''ஆசீதே! ஆ இலக்குவா'' என்று இராமன் குரலில் வஞ்சகமாக கூக்குரலிட்ட வார்த்தைகள். சீதாதேவியின் காதுகளில் கேட்டவுடன், குயில் ஒன்று அடிபட்டு மரக்கிளையிலிருந்து கீழே தரையில் சிறகடித்துக் கொண்டு விழுவதைப் போன்று, தனது வயிற்றிலடித்துக்கொண்டு, தரையில் விழுந்து, மயக்கமுற்றுச் சிறிது நேரம் செயலற்றிருந்தாள்.

மாரீசன் இராமன் குரலில் அலறியது, சீதையுடன் இருக்கும் இலக்குவனைப் பிரிப்பதற்கேயாகும். எனவே அது வஞ்சனைச் சொல்

எனப்பட்டது அவன் கூக்குரலிட்டது, எட்டி இருக்கும் சீதைக்கும் கேட்கவேண்டும் என்பதால் அது ஏங்கிய சொல் எனப்பட்டது. குயில் ஒன்று மரக்கிளையிலிருந்து அடிபட்டோ அல்லது தவறியோ கீழே விழும்போது தனது இறக்கைகளை அடித்துக் கொண்டு விழும். அதுபோலச் சீதா தேவியும் இந்த வஞ்சகச் சொல்லம்பால் அடிபட்டதால், குயில் போன்ற இனிய குரலுடைய சீதை, தனது வயிறாகிய இறக்கைகளை அடித்துக் கொண்டு மயங்கி விழுந்தாள் என்பதாம். துன்பம் நேர்ந்த போது மகளிர் வாயிலும், வயிற்றிலும், மார்பிலும் அடித்துக்கொண்டு அழுவது இயல்பு. இராமன் இறந்து போயிருப்பானோ என்ற அச்சத்தால் இத்தகைய மெய்ப்பாடுகள் நிகழ்ந்தன என்க. செயிர் என்ற சொல்லுக்குக் கோபம், குற்றம், போர், வருத்துதல், வஞ்சகம் என்று பல பொருள்கள் உண்டு.

3. ''பிடித்து நல்கு, இவ் உழை'' என, பேதையேன்
முடித்தனென், முதல் வாழ்வு என, மொய் அழல்
கொடிப் படிந்தது என, நெடுங் கோள் அரா
இடிக்கு உடைந்தது எனப் புரண்டு ஏங்கினாள். (3423)

(உழை - மான்; நல்குதல் - கொடுத்தல்; முதல் - வேர் / காரணம்; தழல் - நெருப்பு; கோள் - வலிய; உடைதல் - வலியிழத்தல்; பேதை - அறிவிலி; முடித்தல் - அழித்தல்; மொய் - நெருங்கிய)

''இந்த மானை நீங்களே பிடித்து எனக்குத் தாருங்கள்'' என்று கூறி அறிவிலியாகிய நான் எனது வாழ்க்கைக்கு ஆணிவேரான என் கணவனை அழிப்பதற்கு நானே காரணமாகி விட்டேன் என்று பதறி, சீதை, நெருங்கிய நெருப்பில் விழுந்த பூங்கொடி போலவும், நீண்ட வலிய பாம்பு இடியோசை கேட்டு வலியழிந்தது போலவும், தரையில் விழுந்து புரண்டு அழுது அரற்றினாள்.

தனது பேதைமைத் தனத்தை எண்ணித் தன்னைத் தானே நொந்து கொண்டு தரையில் விழுந்து புரண்டு அழுகிறாள் சீதை. அதற்குக் கம்பன் இரண்டு உவமைகள் கூறுகிறான்; ஒன்று ஒரு பூங்கொடி, தனது பற்றுக் கோடாகிய கொழு கொம்பை விட்டு அடர்ந்த தீயில் விழுந்து விட்டது போல என்கிறான். இரண்டாவது வலிமையும் நீண்ட உடல்கொண்டது மானஒரு பாம்பு, இடியோசைகேட்டதும்தன்வலியழிந்துபோய் நிலத்தில் புரள்வது போல என்கிறான். முன்பு குயில் ஒன்று அடிபட்டுக் கீழே விழுந்தது போல் என்றதையும் நினைவு கூர்க.

4. சீதை இலக்குவனிடம் கோபம் கொள்ளுதல்

''குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன்,
மற்று அவ் வாள் அரக்கன் புரி மாயையால்,
இற்று வீழ்ந்தனன் என்னவும், என் அயல்
நிற்றியோ, இளையோய்! ஒரு நீ?'' என்றாள். (3424)

(வீந்த - நீங்கிய / இல்லாத; கோமகன் - தலைவன்; வாள் - கொடிய; இற்று - வலியிழந்து; அயல் - பக்கத்தில்; மற்றை - வேறுபட்ட/ பகைவனான)

''குற்றமே இல்லாத நற்குணங்களை முழுமையாகப் பெற்றுள்ள எனது தலைவனாகிய இராமன், வேறுபட்ட கொடிய பகைவர்களாகிய அரக்கர்கள் செய்த வஞ்சகச் செயலால், தன் வலியழிந்து உயிர் இழந்தான் என்று அவன் குரலிலேயே கேட்ட பின்னாலும், என் அருகிலேயே இன்னும் நின்று கொண்டிருக்கிறாயே! நீயும் ஒரு தம்பியோ? நீயும் ஒரு ஆடவனோ? நீயும் ஒரு மனிதனோ?'' என்று சீதை மிகக் கடுமையாக இலக்குவனைச் சாடுகிறாள்.

''குற்றம் வீந்த குணம்'' என்றது ஒரு அரிய சொல்லாட்சி. குற்றமே கலவாத நற்பண்புகள் என்பதைக் குறிக்கும். ''குறைவான நிறைவு'' என்பது திருவாசகம். இராமன் சீதைக்கும் இலக்குவனுக்கும் இருவருக்குமே இளவரசன்தான் என்றாலும் இங்கு, இலக்குவனைத் தனிமைப்படுத்தி ''எம் கோமான்'' என்று கூறியது உய்த்துணர்க. மற்றை என்ற சொல் இங்கு மாறுபட்ட என்ற பொருளைத் தந்து, பகைவர்கள் என்ற கருத்தை உணர்த்தியது என்க. அவன் நிலையழிந்தான் என்று அவன் கூக்குரல் கேட்ட பின்பும், அவனுக்கு உரிய உதவி செய்ய விரைந்து போகாமல் என் அருகிலேயே இன்னும் நின்று கொண்டிருக்கிறாயே உன் உள் எண்ணம் என்ன? என்று கேட்கும் தொனியும் காண்க. ஒரு நீ என்ற சொல்லுக்கு ''நீ ஒரு மனிதன் தானா? நீ ஒரு ஆடவன் தானா'' என்ற பொருள்களும் உண்டாவதை அறிக.

ஒரு பெண், அவள் மகளாக இருந்தாலும், உடன் பிறந்தவளாக இருந்தாலும் சான்றோர்கள் தனித்து இருக்க மாட்டார்கள் என்று ஆசாரக்கோவை பாடல் 65 கூறுகிறது. கேளுங்கள் ''ஈன்றாள் மகள், தன் உடன் பிறந்தாள் ஆயினும், சான்றோர், தமித்தா உறையற்க; ஐம்புலனும் தாங்கற்கு அரிதாகலின்'' என்பது பாடல். வான்மீகி இன்னும் சற்றுக் கடுமையான சொற்களைப் பயன்படுத்தி; இலக்குவன் எண்ணங்கள் மீது சீதை ஐயுறுமாறும் கூறுகிறார். கம்பன் ஒரே சொற்றொடரில், இலக்குவனுக்கு இழிவு நேராவண்ணம், கூறியது வியந்து போற்றுதற்குரியது.

5. இலக்குவன் சீதையை அமைதிப் படுத்துதல்

''எண்மை ஆர் உலகினில், இராமற்கு ஏற்றம் ஓர்
திண்மையார் உளர் எனச் செப்பற்பாலரோ?
பெண்மையால் உரைசெயப் பெறுதிரால்'' என,
உண்மையான், அனையவட்கு உணரக் கூறினான். (3425)

(எண்-அறிவு; எண்மை-அறிவுடைமை/எளிமையுமாம்; ஓர்-ஒப்பற்ற; ஏற்றம் - மிகச்சிறப்பு; திண்மை - வலிமை)

''எளிமை பொருந்திய, அறிவுடையோர், இவ்வுலகில் இராமனுக்கு இணையான அல்லது மேம்பட்ட வலிமையுடையவர் யாரும் இருக்கிறார்கள்'' என்று கூறுவது தகுதியாகுமோ? நீங்கள் பெண் தன்மையாகிய பேதைமையால் இவ்வாறு கூறி விட்டீர்கள் என்று, அங்கு நடந்த உண்மைகளை நன்கு அறிந்திருந்த இலக்குவன், தன் அன்னை போன்றவளான சீதாதேவிக்கு, அவள் நன்கு புரிந்து கொள்ளும்படி, பின்வருமாறு எடுத்துரைத்தான்.

இராமனுக்கு மேம்பட்ட வலிமையுடையவர் இவ்வுலகத்திலேயே இல்லை என்பது இலக்குவனின் துணிந்த முடிவு. எனவேதான் கூக்குரல் கேட்டதும் தன் அண்ணனைக் காப்பாற்ற விரைந்து செல்லவில்லை என்பதைக் குறிப்பாக அறிவிக்கிறான். மேலும் அங்கே நடந்த உண்மைகள் உங்களுக்குத் தெரியாது. அங்கே இருக்கும் அரக்கனாகிய மாயமான் வஞ்சகச்செயல் புரிந்து, இராமன் குரலில் கூக்குரலிட்டிருக்கிறது. இதனை நான் அறிவேன். தாங்கள் அறிய மாட்டீர்கள் என இலக்குவன் சீதைக்குக் கூறினான் என்பதாம். ''நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்தே என்பது ஆன்றோர் கூற்று. அனையவட்கு என்ற சொல்லிற்கு தனக்கு அன்னை போன்ற சீதாதேவிக்கு என்றும், உலகத்திற்கே அன்னை போன்ற சீதாதேவிக்கு என்றும் பொருள் கொள்ளுவதும் பொருத்தமாதல் காண்க. இங்கேயும் வான்மீகம் இலக்குவன் பெண்மையை இழிவு படுத்திப் பேசுவதாகக் கூறுகிறது. ஆனால் கம்பன் இங்கும் ஒரே சொற்றொடரில் அதனைக் குறித்தது காண்க.

6. ''ஏழுமே கடல், உலகுஏழும் ஏழுமே,
சூழும் ஏழ்மலை, அவை தொடர்ந்த சூழல்வாய்
வாழும் ஏழையர் சிறுவலிக்கு, வாள்அமர்,
தாழுமே இராகவன் தனிமை? தையலீர்!'' (3426)

(சூழும் - சூழ்ந்துள்ள / பரவியுள்ள; தொடர்ந்த - சார்ந்த; சூழல் - இடம்; ஏழையர் - எளியோர் / அற்பர்கள்; அமர் - போர்; தாழ்தல் - தோற்றுப் போதல்)

அன்னையே! ஏழு கடல்கள், பதினான்கு உலகங்கள், இவ்வுலகைச் சூழ்ந்திருக்கின்ற ஏழு குலமலைகள், அவற்றைச் சார்ந்த இடங்கள், இவை எல்லாவற்றிலும் வாழுகின்ற எளியவர்களின் அற்பமான வலிமைக்கு, கொடிய போர்க்களத்தில், இராகவனின் தனித்த ஒப்பற்ற வீரத்தன்மை தாழ்ந்து போய் விடுமோ? ''தாழாது'' என்றான் இலக்குவன்.

ஈரேழு பதினான்கு உலகங்களிலும், ஏழு கடல் ஏழு மலைகளில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வந்தாலும், இராமன் தனியனாகவே நின்று போர் புரியும் ஆற்றல் உடையவன் அவன் ஒருபோதும் தோற்க மாட்டான் என்று சீதை உணரக் கூறினான் இலக்குவன் என்பதாம்.

7. ''பார்என, புனல் என பவனம், வான், கனல்
பேர் எனைத்து, அவை அவன் முனியின் பேருமால்;
கார்எனக் கரிய அக்கமலக் கண்ணனை
யார் எனக்கருதி, இவ்இடரின் ஆழ்கின்றீர்?'' (3427)

(பார் - பூமி; புனல் - நீர்; பவனம் - காற்று; வான் - ஆகாயம்; கனல் - நெருப்பு; முனிதல் - கோபித்தல்; பேருதல் - நிலைபெயர்தல்; கார் - மேகம்)

''பூமியென்றும், நீரென்றும், காற்று என்றும், ஆகாயம் என்றும், நெருப்பு என்றும் கூறப்படுகின்ற ஐந்து பூதங்களும், இவ்விராமன் கோபித்து எழுந்தால், தத்தம் நிலை குலைந்து தளர்வுறும். அவ்வாறு இருக்க, கரிய மேகம் போன்ற மேனியை உடையவனும், செந்தாமரை மலர்போலும் கண்களையுடையவனுமான இராமபிரானை, யார் என்று கருதி இவ்வாறு இடர்க்கடலில் ஆழ்ந்திருக்கின்றீர்கள்?'' என்று கேட்டான் இலக்குவன்.

''இவ்வுலகமும், அதிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் பஞ்ச பூதங்களால் ஆனவை என்பது நூற்கொள்கை. எனவே அத்தகைய அவையே இராமன் கோபித்தால் நிலை தளர்ந்து போகும் என்று சொன்னால், நீங்கள் இராமனை யார் என்று கருதுகிறீர்கள்? அவன் உண்மை நிலை உணராது ஏன் இவ்வாறு துன்பக் கடலில் ஆழ்ந்து போகின்றீர்கள்?'' என்கிறான் இலக்குவன். இராமனின் அவதார உண்மையைக் குறிப்பாலும், தெளிவாகவும் சீதைக்கு எடுத்து உரைக்கிறான் இலக்குவன் என்பதாம்.

8. ''இடைந்து போய் நிசிசரற்கு, இராமன், எவ்வம்வந்து
அடைந்தபோது அழைக்குமே? அழைக்குமாம் எனின்,
மிடைந்தபேர் அண்டங்கள், மேல, கீழன,
உடைந்துபோம்; அயன் முதல்உயிரும் வீயுமால்.'' (3428)

(நிசிசரன் - அரக்கன்; இடைதல் - தோற்றுப் போதல் / பின்னிடுதல்; எவ்வம் - துன்பம்; மிடைந்த - நெருங்கியுள்ள; அயன் - பிரமன்; வீதல் - அழிந்து போதல்; நிசி - இரவு; சரர் - சஞ்சரிப்பவர்; எனவே நிசிசரர் என்பது இரவில் சஞ்சரிக்கும் அரக்கர்களுக்குக் காரணப் பெயர்)

''இராமன், ஒரு அரக்கனுக்குத் தோற்றுப் போய், துன்புற்று, பிறரை உதவிக்கு அழைப்பானோ? அழைக்க மாட்டான்; அவ்வாறு அவன் அழைத்தான் என்றால், நெருங்கியுள்ள பெரிய அண்ட கோளங்கள் எல்லாம் தலைகீழாக மாறி, உடைந்து போகும்; அதிலுள்ள பிரமன் முதலாய எல்லா உயிரினங்களும் அழிந்து போய் விடும்'' என்றான் இலக்குவன்.

ஒரு அரக்கனிடம் இராமன் தோல்வியுறமாட்டான்; அதனால் துன்பம் அடைய மாட்டான்; எனவே அவன் பிறரை உதவிக்கு அழைக்கமாட்டான்

என்பது இலக்குவனின் துணிபு. அப்படியே அவன் அழைக்க நேரிட்டால், இவ்வுலகங்களைச் சூழ்ந்துள்ள அண்ட கோளங்கள் எல்லாம் நிலைதடுமாறி அழிந்து போகும்; அதிலுள்ள சர, அசரப் பொருள்கள் அனைத்தும், பிரமனையும் உட்படுத்தி, எல்லாமும் அழிந்து போகும். இவை ஏதும் நிகழாததால், இராமன் அரக்கனிடம் தோற்கவில்லை; அவனுக்கு எந்தத் துயரமும் நிகழவில்லை. எனவே அவன் யாரையும் துணைக்கு அழைக்கவும் இல்லை என்று உய்த்துணர வைக்கிறான் இலக்குவன் என்பதாம். இது அனுமான அளவை என்றும் பிரமாண அளவை என்றும் வழங்கப்படும். எல்லா உயிரினங்களிலும் உள்ளும் புறமுமாய் இருப்பவன் பரமாத்மா, இராமன் என்பது கருத்து.

9. ''மாற்றம் என் பகர்வது? மண்ணும் வானமும்
போற்ற, வன் திரிபுரம் எரித்த புங்கவன்
ஏற்றி நின்று எய்த வில் இற்றது; எம்பிரான்
ஆற்றலின் அமைவது ஓர் ஆற்றல் உண்மையோ?'' (3429)

(மாற்றம் - சொல்; வன் - வலிய; புங்கவன் - சிவபெருமான்; இற்றது - ஒடிந்தது; புங்கம் - ரிஷபம் / எருது. எருதை வாகனமாகக் கொண்டதால் புங்கவன், சிவபெருமானுக்குக் காரணப் பெயர்)

''மண்ணுலகத்து மானிடரும், விண்ணுலகத்துத் தேவர்களும் புகழ்ந்து பாராட்ட, வலியதாகிய மூன்று கோட்டைகளையும் தீயூட்டி எரித்த, ரிஷப வாகனத்தையுடைய சிவபெருமான், நாண் ஏற்றி அம்பு செலுத்திய வில்லாகிய சிவதனுசை, உன் திருமணத்தின் பொருட்டு எம் தலைவனாகிய இராமன் வளைத்த போது, அது அவன் ஆற்றல் தாங்காது ஒடிந்து போனதே, அத்தகைய ஆற்றலை விட மேம்பட்ட ஆற்றல் எங்கே இருக்கிறது? இதைத் தவிர நான் வேறு என்ன கூறமுடியும்?''

வாய் வார்த்தையால் இதற்கு மாற்றம் உரைப்பதைக் காட்டிலும், சீதைக்குத் தெரிந்த ஒரு செயலை எடுத்துக் காட்டாகக் கூறலாம் என நினைத்தான் இலக்குவன். எனவே, சீதையை அடைவதற்காக, அவர்கள் திருமணத்தின் பொருட்டுக் கன்யா சுல்கமாக வைத்திருந்த சிவதனுசை இராமன் ஒடித்த ஆற்றலை இங்கு குறிப்பிட்டு, அத்தகைய வில்லை ஒடித்த இராமபிரானது ஆற்றலுக்கு இணை, இவ்வுலகில் வேறு எங்கும் இல்லை என்பதை நிலை நாட்டுகிறான் என்க. இராமன் கையில் தங்குதற்கு ஏற்ற ஆற்றல் இன்மையால்தான் அச்சிவதனுசு அன்று ஒடிந்து போனது என்கிறான் இலக்குவன். எனவே இராமனின் ஆற்றல் பற்றிச் சீதை ஐயுற்றுக் கலங்க வேண்டாம் என்பது கருத்து.

10. ''காவலன், ஈண்டு நீர் கருதிற்று எய்துமேல்,
மூவகை உலகமும் முடியும்; முந்து உள
தேவரும், முனிவரும் முதல செவ்வியோர்
ஏவரும், வீவர்; மற்று அறமும் எஞ்சுமால்.'' (3430)

(முந்துள - முற்பட்டு உள்ள; செவ்வி - சிறப்பு; எஞ்சும் - சிதையும்/அழியும்)

''யாவர்க்கும் காவலனான திருமால் அம்சமான இராமபிரான், நம் மன்னவன் இராமன், தன்னைத் தானே காத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்த வீரன். இப்பொழுது நீங்கள் கருதியபடி இறந்து போயிருப்பான் என்றால், இந்த மண், விண் பாதாளம் என்ற மூன்று உலகங்களும் இந்நேரம் அழிந்து போயிருக்கும்; மிகத் தொன்மையான தேவர்களும் முனிவர்களும் ஆகிய சிறப்புடையோர் அனைவரும் மாய்ந்து அழிந்து போயிருப்பர்; இதனைக் கண்டால், என்றும் அழியாத் தன்மை உடைய அறமும் அழிந்து போயிருக்கும்; இவை யாவும் நிகழாமையால், இராமன் இறக்க வில்லை'' என்று நிலை நாட்டுகிறான் இலக்குவன்.

சீதை இராமன் இற்று வீழ்ந்தனன் என்றாள். அவ்வாறு கூறக்கூட இலக்குவனுக்கு உள்ளம் கொள்ளவில்லை. நீர் சொல்லியது போல என்று கூறிவிடுகிறான். சான்றோர்கள் அமங்கலச் சொற்களைத் தங்கள் வாயால் கூறுவதைத் தவிர்ப்பர். பெரியபுராணத்தில் முத்திநாதன் மெய்ப்பொருள் நாயனாரை வாளால் வெட்டினான் என்று கூறவேண்டிய இடத்தில், சேக்கிழார், ''வாளால் வெட்டினான்'' என்ற சொற்களைப் பயன்படுத்தாது, ''பத்திரம் வாங்கித்தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய'' என்று கூறுகிறார் என்பதை அறிக. உலகத்தைக் காப்பாற்றுகிறவனே இறந்து விட்டான் என்று நீங்கள் கருதுவீர்களானால், இவ்வுலகத்தில் அவனால் காக்கப்படுவனவும், காக்கப்படுவோரும் இதுவரை அழிந்து போய் இருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு நிகழாமையின், இராமனுக்கு அத்தகைய நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என்று உய்த்துணர வைத்தான் இலக்குவன். அறத்திற்குள்ள அழியாத தனிச்சிறப்பை நன்கு உணர்த்தவே அது தனித்துக் கூறப்பட்டது என்க.

11. ''பரக்க என் பகர்வது? பகழி, பண்ணவன்
துரக்க, அங்கு அதுபட, தொலைந்து சோர்கின்ற
அரக்கன் அவ்வுரை எடுத்து அரற்றினான்; அதற்கு
இரக்கம் உற்று இரங்கலிர்; இருத்திர் ஈண்டு'' என்றான். (3431)

(பரக்க - விரிவாக; பண்ணவன் - தெய்வத் தன்மை பொருந்தியவன் / தேவன் / மேலோன்; பகழி - அம்பு; துரக்க - செலுத்த; அரற்றுதல் - கூவுதல்; இரங்குதல் - புலம்புதல்; சோர்தல் - தளர்வுற்று விழுதல்; எடுத்து - உரக்க முழக்கி)

''இதைவிட விரிவாக நான் எப்படிச் சொல்லுவது? தெய்வத் தன்மை பொருந்தியவனான நமது தலைவன், தன் அம்பினைச் செலுத்த, அது அங்கே விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த மாயமானாகிய மாரீசன் மீது தைக்க, அவன் தன் அரக்க உரு ஏற்றுத் தன் வலியழிந்து தளர்வுற்று, தாங்கள் கேட்ட ''ஹே சீதா! ஹே இலக்ஷ்மணா!'' என்ற சொற்களை இராமன் குரலில்

உரக்கக் கூவியிருக்கிறான். அதன் பொருட்டுத் தாங்கள் வருத்த மடைந்து அழுது புலம்பாதீர்கள். இங்கேயே அமைதியாகக் கவலையின்றி இருப்பீர்களாக'' என்று அமைதி கூறினான் இலக்குவன்.

''இருத்திர் ஈண்டு'' என்பது, சீதை தரையில் விழுந்து புரண்டாள். அதனால் இங்கேயே எழுந்து அமைதியாக உட்கார்ந்திருங்கள் என்று கூறுவதைப் போன்று கூறினான் என்க. உரக்கக் கூவிய குரல் இராமனுடையதல்ல, அரக்கனாகிய மாரீசனுடையதே. எனவே தாங்கள் அழுது புலம்பாதீர்கள் என்றான் என்பதாம்.

12. சீதையின் கடும் சொற்கள்

என்று அவன் இயம்பலும், எடுத்த சீற்றத்தள்,
கொன்றன இன்னலள், கொதிக்கும் உள்ளத்தள்,
''நின்ற நின்நிலை, இது, நெறியிற்று அன்று'' எனா,
வன் தறுகண்ணினள், வயிர்த்துக் கூறுவாள். (3432)

(எடுத்த - பொங்கியெழுந்த; இன்னல் - துன்பம்; வன் - கொடிய; தறுகண் - அஞ்சாமை; வயிர்த்து - பகைத்து; அன - போன்ற; நெறி - நீதி முறைமை / அறநெறி)

என்று இவ்வாறு இலக்குவன் கூறியதும், பொங்கியெழுந்த கோபத்தை உடையவளாய், தன்னையே கொன்று விட்டது போன்ற உணர்வுடையவளாய், பதைபதைக்கின்ற நெஞ்சத்தை உடையவளாய், கொடிய அஞ்சாமை உடையவளாய், சீதை, இலக்குவனை நோக்கி, ''இராமனுக்கு உற்ற துன்பத்தை அறிந்தும் அவனைக் காப்பாற்ற அங்கு செல்லாமல் இங்கேயே, என் அருகிலேயே இன்னும் நீ நின்று கொண்டிருப்பது நீதி முறைமையின்பாற்பட்டது அன்று'' என்று அவனிடம் பகைமை பாராட்டிக் கடுமையாகக் கூறலானாள்.

அல்லலுற்ற இராமனைக் காப்பாற்றப் போகாதது மட்டுமின்றித் தன்னையும் அமைதியாக இங்கேயே இருக்கச் சொன்னதாலும், அவளையே கொன்று போட்டது போலத் துன்பமடைந்தாள் என்க. இவன் இவ்வாறு இங்கேயே நிற்பது சீதையை வஞ்சனையால் அடைவதற்கே என்று சீதை கருதினாள் என்று வான்மீகம் வெளிப்படையாகவும், விரிவாகவும் கூறும். கம்பன் ஒரே சொற்றொடரில் கூறிய அழகு உணர்க. அத்யாத்ம இராமாயணம் இன்னும் ஒருபடி மேலே சென்று ''இராமனைக் கொல்லும் பொருட்டு பரதனால் அனுப்பப்பட்டவரோ நீர்?'' என்றும், அண்ணனுக்குத் தீங்கு நேர்ந்தால் என்னைக் கைப்பற்றலாம் என்ற எண்ணத்தில் தான் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீரோ?'' என்றும் கடுமையாகக் கூறியதாகவும் கூறுகிறது.

13. ''ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்;
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும், நீ

வெருவலை நின்றனை; வேறு என்? யான், இனி,
எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பென், ஈண்டு'' எனா. (3433)

(பகல் - நாள்; பெருமகன் - அண்ணன் / தலைவன்; உலைவுறுதல் - வருந்துதல் / அழிவடைதல்; பெற்றி - தன்மை; வெருவல் - அஞ்சுதல்; எரி - நெருப்பு; ஈண்டு - இப்பொழுது; கடிது - விரைந்து) (குளகப்பாடல்)

''ஒருநாள்மட்டும்பழகினவர்கள்கூட, நண்பர்க்கு ஒருஆபத்து என்றால் தன் உயிரைத் தருவதற்கும் தயங்க மாட்டார்கள். ஆனால் உன் உடன் பிறந்தவனும், நம் தலைவனும், ஆண்களிற் சிறந்தவனும், நீ பல்லாண்டுகளாகப் பழகியவனுமாகிய இராமன் வருத்தமுற்று இறந்துபட்ட செய்தியை, அவன் குரல் மூலமாகவே செவி மடுத்துக் கேட்டும் கூட, நீ சிறிதும் அச்சம் கொள்ளாமல், பதைபதைக்காமல், என் எதிரிலேயே இன்னும் நின்று கொண்டிருக்கின்றாய்; இனி நான் செய்வதற்கு வேறு என்ன இருக்கிறது? இப்போதே நான் நெருப்பினில் விரைந்து வீழ்ந்து என் உயிரைப் போக்கிக் கொள்கிறேன்'' என்று கூறி - பாடல் தொடர்கிறது.

இங்கே சீதை, முன்பு ஒரே ஒரு நாள் இராமனுடன் பழகிய குகன், இராமனைத்தன்னுடனேதங்கும்படியும், இல்லாவிட்டால்தானும்அவன் கூடவே வந்து வழிகாட்டி உடன் இருப்பேன் என்று கூறியதையும்; அது போலவேதசரதனுடன்ஒரேஒருநாள்பழகியசடாயு, அவன்இறந்த செய்தி கேட்டதும், தானும் உடனேயே இறப்பதற்குத் தயார் நிலையில் இருந்ததையும் குறிப்பிட்டாள் என்க. இலக்குவன் ஒருநாள் பழகியவன் அல்ல. பிறந்ததிலிருந்து உடன் இருப்பவன். அவன் உடன் பிறந்தவன். என்றாலும் அண்ணன் உற்ற துயர் கேட்டு, ஓடிப்போய் அவனைக் காக்க முற்படவில்லையே என்றஆதங்கத்தால், சீதை இவ்வாறுபேசினாள்என்க. ஆனால் நான் இடையில் வந்தவள் தான் என்றாலும், அவன் பிரிவு தாங்க மாட்டேன். எனவே இப்போதே விரைவில் தீப்புகுந்து என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று கூறினாள் என்க. ''பசைந்தாரில் தீர்தலில் தீப்புகுதல் நன்று'' என்பது நான்மணிக்கடிகை.

இங்கே வான்மீகம், ''நீ அவனுக்கு உடனே சென்று உதவி செய்யாவிட்டால், நான்கோதாவரியில் வீழ்ந்து உயிர்துறப்பேன்; அல்லது சுருக்கு மாட்டிக் கொண்டு உயிர் துறப்பேன்; அல்லது மலை உச்சியினின்றும் வீழ்ந்தோ, கடு நஞ்சை உண்டோ, தீயில் குதித்தோ நான் உயிர் துறப்பேன். இராமனைத் தவிர மற்றொரு ஆடவனை மாத்திரம் காலால் கூடத்தொட மாட்டேன்'' என்று கூறியதாகக் கூறும்.

14. சீதை தீப்புகாமல் தடுத்து, இலக்குவன் வணங்கிச் சொல்லுதல்

தாமரை வனத்திடைத் தாவும் அன்னம் போல்,
தூமவெங்காட்டு எரி தொடர்கின்றாள் தனை,

சேம விற்குமரனும் விலக்கி, சீறடிப்
பூமுகம் நெடு நிலம் புல்லி, சொல்லுவான். (3434)

(வனம் - காடு / தடாகம்; தூமம் - புகை; வெம் - கொடிய; எரி - காட்டுத்தீ; தொடர்தல் - நெருங்குதல்; சேமம் - பாதுகாப்பு; விலக்கி - தடுத்து; சீறடி - சிறிய பாதங்கள்; முகம் - எதிரே / முன்இடம்; புல்லி - வீழ்ந்து / தழுவி)

தாமரை மலர்கள் மலர்ந்து காடு போல் தோற்றமளிக்கும் தடாகத்தில், மலரில் தாவித் திரியும் அன்னப் பறவையைப் போல, புகையோடு கூடிய கொடிய காட்டுத் தீயை நோக்கி நெருங்கிப் போகின்றவளாகிய சீதையை, சீதையையும் இராமனையும் எப்போதும் பாதுகாத்து நிற்கின்ற வில்லையுடைய இளவலான இலக்குவன் தடுத்து, அவளுடைய சிறிய பாதங்களைத் தொடாமல், அந்த முன் இடத்தில் நீண்ட நிலத்தில் விழுந்து தழுவி, தொழுது வணங்கிப் பின்வருமாறு சொல்லலானான்.

தாமரைவனம்காட்டு எரிக்கு உவமை. அன்னம் நடையால், மென்மைத் தன்மையால் சீதைக்கு உவமை. குமரன் என்பது மகன் என்ற பொருளில், சீதைக்கு இலக்குவன் மகன் போன்ற உறவு கொண்டவன் என்பதைக் குறித்தது. அண்ணன் மனைவி அன்னைக்கு ஒப்பு. சிறிய அடிகள் கொண்டிருத்தல் உத்தமப் பெண்களுக்குரிய இலக்கணம். ''நுதல், அடி, நுசுப்பு என மூவழிச் சிறுகி'' என்பது நல்லுருத்திரனாரின் கலித்தொகைப் பாடல். இலக்குவன் அவள் சீறடிகளைத் தொடாது, அவள் நின்ற இடத்தில் தரையில் விழுந்து தொழுது வணங்கினான் என்பது அவனுடைய மனத் தூய்மையையும் பக்திச் சிறப்பையும் உணர்த்த என்க. பூ என்பதுதாமரைப் பூவையே குறிக்கும்.

15. இலக்குவன் செல்லுதற்கு இசைதல்

''துஞ்சுவது என்னை? நீர் சொன்ன சொல்லை யான்
அஞ்சுவென்; மறுக்கிலேன்; அவலம் தீர்ந்து இனி,
இஞ்சு இரும்; அடியனேன் ஏகுகின்றனென்;
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ?'' (3435)

(துஞ்சுதல் - இறத்தல்; சொற்ற - சொல்லிய; அவலம் - கவலை / துயரம்; இஞ்சு - இங்கு; வெம் - கொடிய)

''தாங்கள் இறப்பது என்பது எதற்காக? நீங்கள் சொல்லிய சொற்கள் என்னை அஞ்சவைக்கின்றன; தங்கள் கட்டளையை, மறுக்க மாட்டேன்; நீங்கள் சொல்லியபடியே நான் செல்லுகின்றேன். துன்பம் தீர்ந்து தாங்கள் இங்கேயே அமைதியாக இருங்கள்; கொடிய கோபத்தைக் கொண்ட தீவினைய்ய வெல்லும் ஆற்றல் படைத்தவர்களா நாம்? இல்லை யல்லவா?'' என்றான் இலக்குவன்.

துஞ்சுவது என்பது, இறத்தல் என்ற அமங்கலச் சொல்லைச் சொல்லா திருப்பதற்காகக் கையாளப்படும் ஒரு மங்கலச்சொல். இங்கே ''வெஞ்சின

விதியினை வெல்ல வல்லமோ?'' என்று கூறுகிற இதே இலக்குவன்தான், முன்பு, ''விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி'' என்று இராமனிடம் தோள் தட்டியவன் என்பதை உணர்க. ''ஊழிற் பெருவலியாவுள? மற்றொன்று சூழினும், தான் முந்துறும்'' என்பது குறள் 380. ஊழ்வலியை யாராலும் வெல்ல முடியாது என்று தன்னையும் உளப்படுத்திக் கூறியதை நோக்குக.

16. இலக்குவன் செல்லுதல்

''போகின்றேன் அடியனேன்; புகுந்து வந்து, கேடு
ஆகின்றது; அரசன்தன் ஆணை நீர் மறுத்து,
''ஏகு'' என்றீர்; இருக்கின்றீர் தமியிர்'' என்று பின்
வேகின்ற சிந்தையான் விடைகொண்டு ஏகினான். (3436)

(தமியிர் - தனியாக இருக்கின்றீர்; வேகுதல் - வெதும்புதல்) (குளகப் பாடல்)

''இதோ உடனேயே கிளம்பிப் போகின்றேன்; ஆனால் ஏதோ ஒரு பெரிய தீங்கு வந்து இங்கு அடையப் போகின்றது; நம் அரசனான இராமனின் கட்டளையை மீறி, என்னைப் போகச் சொல்லுகிறீர்கள்; ஆனால் நீங்கள் எந்தத் துணையும் இன்றித் தனியாக இருக்கின்றீர்களே'' என்று கூறி மனம் வெதும்பி, பின் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு இலக்குவன் காடு நோக்கிச் சென்றான்.

''பொருந்தி வந்து கேடு ஆகின்றது'' என்பது, இராவணன் தவக்கோலத்தில் வரப்போவதும், சீதையைக் கவர்ந்து செல்லப் போவதுமாகிய கேடு என்க. இராமன் ஆணை என்று கூறாது, அரசன் தன் ஆணை என்றதனால், அது மீறப்பட முடியாதது என்பதையும் குறிப்பிட்டு, என்றாலும் நீங்கள் இட்ட கட்டளைக்காக அதையும் மீறிச் செல்லுகிறேன் என்றான் என்க. நீங்கள் போகச் சொன்னதால்தான் போகின்றேன். எனக்காகப் போகத் தோன்றவில்லை. ஆனால் நீங்கள் தனியாக இருக்கிறீர்களே! உங்களுக்கு ஏதேனும் தீங்கு விளையுமோ என்று தான் தயங்குகிறேன் என்றான் என்பது கருத்து. நான் சென்ற பின்பு ஏதேனும் தீங்கு நிகழுமாயின் அக்குற்றம் தங்களையே சாரும் என்பது உட்கருத்து. அரசன் கட்டளையை மீறியது; சீதை நெருப்பில் வீழ்ந்து விடுவாளோ என்ற அச்சம், தன்னை சீதை சந்தேகப்பட்டு விட்டாளே என்ற ஆதங்கம், இவைகள் தான் அவன் மனம் வெதும்புதற்குக் காரணங்கள் என்க.

17. இலக்குவன் குழம்புதல்

''இருப்பனேல், எரியிடை இறப்பரால் இவர்;
பொருப்பு அனையானிடைப் போவெனே எனின்,
அருப்பம்இல் கேடு வந்து அடையும்; ஆர்உயிர்
விருப்பனேற்கு என் செயல்?'' என்று விம்மினான். (3437)

(பொருப்பு - மலை; அருப்பம்இல் - அற்பம் இல்லாத / பெரிய / எளிமையற்ற; விம்முதல் - தேம்புதல்)

''நான் போகாது இங்கேயே இருப்பேனேயானால், இந்தச் சீதாதேவி நெருப்பில் விழுந்து மாண்டு போவார்; மலை போன்ற இராமனிடத்துச் சென்றேன் என்றால், இங்கே சீதாதேவி தனியாக இருப்பதால், ஏதேனும் பெரிய தீங்கு வந்து சேரும்; என்னுடைய சிறந்த உயிரின் மேல் ஆசை கொண்ட எனக்கு, இப்போது என்ன செய்வது என்பது தெரிய வில்லையே?'' என்று தேம்பி அழுதான், இலக்குவன்.

தான் சென்றாலும் ஒரு துன்பம் வரும், தான் இங்கேயே இருந்தாலும் ஒரு துன்பம் நிகழும். எனவே என்ன செய்வதென்று அறியாது குழம்பிப் போய் வருந்தினான் என்பதாம். இங்கே ஒரு செய்தி. ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்து விட்டால் அதனால் உண்டாகும் பாவம் ''பிரம்மஹத்திதோஷம்'' என்பது நமக்குத் தெரியும். ஒருவன்தானே தற்கொலை செய்து கொண்டாலும் பாவம் ஆகும். அதற்கு ''ஆத்ம ஹத்தி தோஷம்'' என்பது பெயர் என்று அறிக.

18. இலக்குவன் தன்னையே நொந்து கொள்ளுதல்

''அறம்தனால் அழிவுஇலது ஆகல் ஆக்கலாம்;
இறந்துபாடு இவர்க்கு உறும், இருக்கின் இவ்வழி;
துறந்து போம்; இதனையே துணிவென் தொல்வினைப்
பிறந்து, போந்து, இதுபடும், பேதையேன்'' எனா. (3438)

(தொல் - பழைய; போந்து - வந்து; பேதை - அறிவிலி) (குளகப் பாடல்)

''இனி இந்தச் சீதாதேவி இறந்துபடுதலை அறக்கடவுளால் மட்டுமே காக்க முடியும். பழைய வினைப் பயனால் இம்மானிடப் பிறவி எடுத்து இங்கு வந்து, இவ்வளவு அல்லல் உறும் அறிவிலியாகிய நான், இவர் இறந்து போவதற்குக் காரணமாய் இருப்பதைக் காட்டிலும், இங்கிருந்து அகன்று போய் விடுதலே நல்லது'' என்று கருதி - பாடல் தொடர்கிறது.

தனக்கு இப்பொழுது நேர்ந்துள்ள இந்த இக்கட்டான நிலை தனது பழைய வினையின் பயனால் வந்தது என்று உணர்கிறான் மானிடனாய் அவதரித்து வந்திருக்கும் இலக்குவன் என்க. நான் இருந்தால்தான் சீதை இறந்துபடுவாள் நான் அகன்றுபோய் விட்டால் ஒரு வேளை அறக்கடவுள் சீதாதேவியைக் காப்பாற்றக் கூடும் என்றும் எண்ணுகிறான் இலக்குவன். அவள் இறந்து படுதலைக் காட்டிலும், தான் துறந்து போதலே நல்லது என்று கருதுகிறான்.

19. ''போவது புரிவல் யான்; புகுந்தது உண்டு எனின்,
காவல்செய் எருவையின் தலைவன் கண்ணுறும்;
ஆவது காக்கும்'' என்று அறிவித்து, அவ்வழி,
தேவர் செய் தவத்தினால் செம்மல் ஏகினான். (3439)

(புகுதல் - வருதல் / உண்டாகுதல்; எருவை - கழுகு; கண்ணுறுதல் - கண்டு கொள்ளுதல் / காப்பாற்றுதல்; ஆவது - இயன்ற அளவு; செம்மல் - சிறந்த குணங்களையுடையவன்)

''நான் செல்லுகிறேன்! இதற்குள் ஏதேனும் இடையூறோ, பெரிய தீங்கோ ஏற்பட்டால், நம்மைக் காவல் செய்து வருகின்ற கழுகுகளின் தலைவனான சடாயு பார்த்துக் கொள்வார்; அவரால் இயன்ற வரையிலும் காப்பாற்றுவார்'' என்று தன் அறிவினால் அறிவுறுத்தப்பட்டு, அதனை சீதைக்குத் தெரிவித்தும், இராமன் மாய மானைத் தொடர்ந்து எவ்வழியில் சென்றானோ, அதே வழியில், தேவர்கள் முன்பு செய்த சிறந்த தவத்தின் பயனால், சிறந்த குணங்களுடைய இலக்குவன் சென்றான்.

தன்னை நொந்து கொண்ட இலக்குவன், சிறிது தூரம் சென்று விடுகிறான். பின் சீதை பக்கம் திரும்பி இவ்வார்த்தைகளைக் கூறுகிறான் என்பது பொருந்துதல் காண்க. முன்பு இவர்களைக் கண்ட சடாயு ''நான் நன்கு கவனித்துப் பார்த்துக் கொள்ளுகிறேன்.'' ''பார்ப்பைப் பார்க்கும் பார்வையில் பார்க்கின்றான்'' என்று கூறியதை நினைவு கூர்ந்து, இலக்குவன் இப்பொழுது இவ்வாறு கூறினான் என்க. அவன் இவ்வாறு சீதையைத் தனித்து விட்டுச் செல்லுவதற்குக் காரணம், முன்பு தேவர்கள் திருமாலிடம் வேண்டிக் கொண்டமையாலும் அதனைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளாலும்ஆனமையால் ''தேவர்செய்தவத்தினால்'' என்றார்என்க.

இங்கே ஒரு செய்தி. இந்த இடத்தில் இலக்குவன் ''லக்ஷ்மண் ரேகா'' என்ற ஒரு கோடு போட்டுவிட்டு, இதைத் தாண்டித் தாங்கள் போகக் கூடாது, போனால் தீமை விளையும் என்று கூறிப்போனான் என்றும் நாம் செவிவழிச் செய்தியாகவும், திரைப்படங்கள் மூலமாகவும் தெரிந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறு வான்மீகியோ கம்பனோ கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் வங்காளமொழியில் இராமயாணத்தை எழுதிய கிருத்திவாஸர்என்பவர்இவ்வாறுகுறிப்பிட்டிருக்கிறார்என்பதும் அறியத்தக்கது.

20. இராவணன் தவவேடம் புனைந்து வருதல்

இளையவன் ஏகலும், இறவு பார்க்கின்ற
வளை எயிற்று இராவணன், வஞ்சம் முற்றுவான்,
முளை வரித்தண்டு ஒரு மூன்றும், முப்பகைத்
தளை அரிதவத்தவர் வடிவும் தாங்கினான். (3440)

(இறவு - அற்றம் / நீக்கம்; வளை - வளைந்த; முற்றுவான் - நிறைவேற்றும் பொருட்டு; முளை - மூங்கில்; வரி - இழுத்துக்கட்டப்பட்ட; முப்பகை - காமம், வெகுளி, மயக்கம் / உட்பகை; தளை - பந்தம் / கட்டு; வடிவு - உருவம் / வேடம்; வளை எயிறு - வக்ர தந்தம்) (குளகப் பாடல்)

அவ்வாறு இளையவனான இலக்குவன் சென்றதும், அவன் நீங்கிச் செல்வதையே எதிர்பார்த்திருந்த, வளைந்த கோரப் பற்களை உடைய

இராவணன், தனது சூழ்ச்சி நிறைந்த எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு, ஒன்றோடொன்று இணைத்துக் கட்டப்பட்ட ஒரு மூன்று மூங்கில்தண்டுகளைக் கையில் ஏந்திக் கொண்டு காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று உட்பகைகளாகிற பந்தங்களையும் அறுத்து எறிந்தவர் களான தவசிகளைப் போன்ற வேடமும் மேற்கொண்டு - பாடல் தொடர்கிறது.

வளைந்த கோரப்பற்களை உடையவர்கள் அரக்கர்கள் என்பது முன்பும் கூறப்பட்டது நினைக. இவ்வாறு மூன்று மூங்கில் கோல்களால் இழுத்துக் கட்டப்பட்ட தண்டு, திரிதண்டம் என்று வழங்கப்படுகிறது. இது முக்கோல் எனவும் வழங்கப்படும். ''நூலே கரகம் முக்கோல் மனையே ஆயுங்காலை அந்தணர்க்கு உரிய'' என்பது தொல்காப்பியம். இதனைத் தாங்கிய துறவியர் ''முக்கோல் பகவர்'' என்று அழைக்கப்படுவர். இதற்கு இவர்கள் அரி, அயன், அரன் என்ற மூவரையும் ஒருவராகவே கருதும் பண்புடையார் என்பது ஒரு பொருள். மற்றொன்று இவர்கள் உட்பகையாகிய காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் அறுத்தெறிந்தவர்கள் என்பது. இதற்கு மாறாக வேறு சிலர் ஒரே தண்டினைக் கொண்டிருப்பர். இவர்கள் ஏக தண்டிகள் என்று வழங்கப்படுவர். மூங்கிலுக்கு முளை என்பது ஒரு பெயர். காரணம் அது வேரில்லாது, குருத்தாகவே முளைத்து வருவதால் அதற்கு முளை என்பது காரணப்பெயர். இராவணன், காவி உடை, குடுமி, குடை, திரிதண்டம், கமண்டலம் முதலியன கொண்டு, வந்தான் என்று வான்மீகம் கூறும். மகாபாரதத்திலும், இராவணன் குறிப்பு வரும் இடத்தில் மொட்டைத் தலையுடன் வந்தான் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

21. இராவணன் தவவேட வருணனை

ஊண் இலனாம் என உலர்ந்த மேனியன்;
சேண் நெறி வந்தது ஓர் வருத்தச் செய்கையன்;
பாணியின் அளந்து இசை படிக்கின்றான் என,
வீணையின் இசைபட வேதம் பாடுவான். (3441)

(ஊண் - உணவு; உலர்ந்த - வாடிய / வற்றிக் காய்ந்து போன; சேண் - நெடுந்தொலைவு; நெறி - வழி; பாணி - தாளம் / கையுமாம்)

இராவணன் உணவே அருந்தாதவன் போல வற்றி வாடிக் காய்ந்து போன உடலைப் பெற்றுக் கொண்டான்; நெடுந்தொலைவு நடந்து வந்தவர் அடையும் வருத்தத்திற்குரிய செயல்களைச் செய்பவனானான், கையிலுள்ள தாளத்தை, தாளம் தப்பாதபடி அளந்து பாடல் பாடுகின்றவனைப் போல, வீணையில் இசை எழுப்பிக் கொண்டு, தனக்குப் பிடித்த சாமவேதத்தை இசையாகப் பாடிக் கொண்டும் வந்தான்.

தவத்தை மேற்கொண்டவர் உடலை ''என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்'' எனத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. அதைப் போல

வற்றிக்காய்ந்து போன உடலை உடையவனானான் என்பதாம். சேண்நெறி வந்தது ஓர் வருத்தச் செய்கை என்பது, களைப்பால் பெருமூச்செறிதலும், வழிகின்ற வியர்வையைத் துடைத்துக் கொள்ளுதலும் போன்ற செயல்களைக் குறிக்கும் என்க. இசையிற் பாடப்படுவது சாமவேதமே. தவிரவும் இராவணன் சாமவேதத்தை நன்கு கற்றுத் தேர்ந்தவன் என்பதாலும், வேதம் என்பதற்குச் சாமவேதம் எனப்பொருள் கொள்ளப் பட்டது.

22. பூப்பொதி அவிழ்ந்தன நடையன்; பூதலம்
தீப்பொதிந்தாமென மிதிக்கும் செய்கையன்;
காப்புஅரு நடுக்குறும் காலன், கையினன்;
மூப்பு எனும் பருவமும் முனிய முற்றினான். (3442)

(பொதி - இதழ் / அரும்பு / மொட்டு; அவிழ்தல் - விரிதல் / மலர்தல்; பூதலம் - தரையிடம் / பூமி; பொதித்தல் - நிறைந்திருத்தல் / உள் வைத்து மூடுதல்; காப்பு - தடுத்தல்; காலன் - கால்களையுடையவன்; மூப்பு - முதுமை; முனிதல் - வெறுத்தல்; முற்றுதல் - முதிர்தல்)

மொட்டு முகை விரிந்தாற் போல, அரும்பு மலராக மலர்ந்தது போல, மலரின் இதழ் விரிந்தது போல, அவ்வளவு மென்மையாக அடிமேல் அடியெடுத்து வைத்து குறுநடை நடந்து வந்தான்; தரையின் இடத்தில் நெருப்பை நிறைத்து வைத்திருந்தலோ, அல்லது தரைக்கு அடியில் நெருப்பை உள் வைத்து மூடி வைத்திருந்தாலோ, எப்படிப் பட்டும் படாமலும் நடப்போமோ. அவ்வாறு குந்திய நடையுடன் வந்தான்; தடுக்க இயலாது நடுங்கும் கால்களையும், கைகளையும் கொண்டவனாய், முதுமை என்னும் பருவம் கூட இவனுடைய முதிர்ச்சியைக் கண்டு வெறுக்குமாப் போல அத்தகைய மூப்புடன் கூடிய வேடம் தாங்கி இராவணன் வந்தான்.

தனது பாதங்களுக்கு வலிதெரியாமல் மென்மையாகக் குறுநடை நடந்து வந்தான் இராவணன். அது எப்படி இருந்தது? அரும்பு மலர்வது போல இருந்ததாம். ''பூப்பூக்கும் ஓசை கேட்கத் தான் ஆசை'' ஆனால் அதைக் கேட்க முடியுமோ? அது போல் மொட்டு மலர்வதை நின்று பார்க்க முடியுமோ? முடியாது. அதுபோல அவன் பிறர் அறியாமல் பிறர் கேட்காமல் குறுநடை நடந்து வந்தான் என்பதாம். அவனுடைய முதுமைத் தோற்றம் நூறு வயதடைந்தவனைப் போலத் தோற்றமளித்தது என்கிறது இராம ஜெயத் திருப்புகழ் என்னும் நூல். ''இறுகுதல் இரங்கி, நூறு வயது புகும் அந்தணாளன் என உறையுள் வந்து'' என்பது பாடல்பகுதி.

23. இராவணன் சீதை குடிலை அணுகுதல்

தாமரை மணிதொடர் தவத்தின் மாலையன்;
ஆமையின் இருக்கையன்; வளைந்த ஆக்கையன்;

நாமநூல் மார்பினன்; நணுகினான் அரோ!
தூமனத்து அருந்ததி இருந்த சூழல்வாய். (3443)

(தொடர் - தொடுத்த; மாலை - ஜெபமாலை; இருக்கை - மணை; நாமம் - பெருமை; நூல் - முப்புரிநூல்; சூழல் - இடம்; ஆக்கை - யாக்கை / உடம்பு)

தாமரை மணிகளை இடையிடையே தொடுத்துச் செய்யப்பட்ட, தவத்திற்குரிய ஜெபமாலையை உடையவனாய், ஆமை போல ஐந்து பொறிகளையும் அடக்கியது போன்ற தோற்றம் உடையவனாய், ஆமை ஓடு போல் வடிவமைக்கப்பட்ட ஆசனத்தை உடையவனாய், வயது முதிர்ச்சியால் குனிந்த உடலை உடையவனாய், பெருமை பொருந்திய முப்புரிநூலை மார்பினில் அணிந்தவனாய், இராவணன், தூயசிந்தையும் கற்பும் கொண்ட அருந்ததி போன்ற சீதாதேவி இருந்த தவக்குடிலை அணுகினான்.

செபமாலை தாமரை மணிகளால் ஆனது. அது தவத்திற்குரியார் எப்போதும் தன் கைகளில் கொண்டுள்ளது. ஆமையின் ஓடு வடிவத்தில் அமைக்கப் பெற்ற ஆசனம் கூர்மாசனம் எனப்படும். யோகியர்கள் எந்த இடத்திலும் அமர்ந்து யோகம் செய்யத் தலைப்படுவர். எனவே அவர்கள் எப்போதும் இவ்வாசனத்தைத் தன்னிடத்தே கொண்டிருப்பர். ஆமை எப்படித் தன் நான்கு கால்களையும், ஒரு தலையையும் தன் ஓட்டிற்குள் அடக்கிக் கொண்டு வாழ்கிறதோ, அவ்வாறு அதில் அமர்ந்து தவம் செய்யபவரும் தம் ஐந்து பொறிகளையும் அடக்கிய புலனடக்கம் கொண்டவர்கள் என்பது கருத்து.

அருந்ததி வசிஷ்ட முனிவனின் மனைவி. கற்பிற் சிறந்தவள். கற்பினுக்கு எடுத்துக்காட்டாகப் பல இலக்கியங்களிலும் பேசப்படுபவள். கம்பனும் காப்பியப் போக்கில் பல இடங்களில் சீதையை அருந்ததிக்கு ஒப்பிட்டுப் பேசியிருப்பதைக் காணலாம். இவள் கற்பின் திறத்தால் வடதிசையில் ஒரு விண்மீனாக விளங்குகிறாள் என்பது ஒரு புராணக்குறிப்பு. இதைக் கொண்டு தான் இன்றும் திருமணங்களிலும் ''அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்'' என்னும் ஒரு சடங்கு நடக்கின்றது என்பதை அறிக.

''தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்'' எனக் கண்ணகியின் கற்பின் சிறப்பைக் கூறும் பொழுதும் இளங்கோடிகள் அருந்ததியை எடுத்துக் காட்டாகத் தன் சிலப்பதிகாரத்தில் கூறியிருப்பதும் காண்க. ''அருந்ததி அகற்றிய ஆசுஇல் கற்பினாய்'' என்பது சீவகசிந்தாமணி.

24. ''குடிலில் இருப்பது யார்?'' என இராவணன் வினவுதல்

தோம்அறு சாலையின் வாயில் துன்னினான்;
நா முதல் குழறிட நடுங்கும் சொல்லினான்;

''யாவர் இவ்விருக்கையுள் இருந்துளீர்?'' என்றான்;
தேவரும் மருள்கொளத் தெரிந்த மேனியான். (3444)

(மருள் - மருட்சி / கலக்கம் / மயக்கம்; தெரிந்த - வேட மணிந்த; தோம்இல் - குற்றமற்ற; துன்னுதல் - நெருங்குதல்; முதல் - அடியோடு; இருக்கை - இருப்பிடம் / தவக்குடில்)

இராவணன் கொண்டிருந்த தவக்கோலத்தைக் கண்டு, இமையா நாட்டமுடைய தேவர்கள்கூட இவன் உண்மை வடிவத்தைக் கண்டு கொள்ள இயலாமல் சிறிது மயக்கம் அடைந்தனர். அத்தகைய வேடத்தைக் கொண்ட இராவணன், குற்றமற்ற அந்தத் தவக்குடிலின் வாயிலை நெருங்கி, தனது நாக்கு, முதல் எல்லா உறுப்புகளும் நடுக்கமுற ''இந்தக் குடிலுக்குள் இருப்பவர் யார்?'' என்று வினவினான்.

நாமுதல் என்பது இவன் மனம், உடல், கை, கால்கள் முதலியவை நடுக்கமுற என்று பொருள்தந்து நின்றது. தேவர்களும் இவன் வேடத்தைக் கண்டு மயங்கினர் என்றால் தனியாக இருக்கும் பெண்ணான சீதை மயங்கிக் கலங்கியதில் வியப்பில்லை என்று பின்னால் கூறப்போகிறான் கவிஞன். அதற்குத் தான் இங்கே ''தேவரும் மருள் கொள'' என்று கூறியதாகக் கொள்க.

25. சீதை தவசியை வரவேற்றல்

தோகையும், ''இவ்வழித் தோம்இல் சிந்தனைச்
சேகுஅறு நோன்பினர்'' என்னும் சிந்தையாள்,
பாகுஇயல்கிளவி, ஓர்பவளக் கொம்பர் போன்று,
''ஏகுமின் ஈண்டு'' என, எதிர்வந்து எய்தினாள். (3445)

(தோகை - மயில் / சீதை; தோம்இல் - குற்றமற்ற; சேகு - ஐயம் / சந்தேகம்; நோன்பு - தவவிரதம்; சிந்தை - எண்ணம்; பாகு - சர்க்கரைப்பாகு / தேன்பாகு; கிளவி - சொல்; கொம்பர் - கொடி; சிந்தனை - மனம்; ஏகுதல் - வருதல் / எழுந்தருளுதல்)

மயில் போன்ற சாயலும் நடையும் உடைய சீதை, ''இவர் இவ்வனத்தில் உள்ள குற்றமற்ற மனத்தையுடையவரும், ஐயமற்ற தவவிரதத்தை யுடையவரும் போலும்'' என்று தன் மனத்துள் எண்ணிக் கொண்டு, சர்க்கரைப் பாகு போன்ற தன் இனிய சொற்களால் ''ஐயனே! வருக! இவண் வந்தருள்க'' என்று, ஒரு பவளக் கொடி போன்ற வடிவுடைய சீதை அவனை வரவேற்கும் பொருட்டு அவன் எதிரில் வந்து நின்றாள்.

மயில் சீதையின் சாயலுக்கும், நடைக்கும், பாகு அவள் இனிய சொற்களுக்கும் பவளக்கொம்பு அவள் மெல்லிய மேனிக்கும் உவமைகள். தன் இல்லம் தேடி வந்தோரை, இனிய சொற்கள் கூறி, எதிர்வந்து வரவேற்று உபசரித்தல் ஒரு இல்லறமகளின் கடமை. எனவே சீதையும் அவ்வாறே செய்தாள் என்க.

26. இராவணன் சீதையை உற்று நோக்குதல்

வெற்பிடை மதம்என வெயர்க்கும் மேனியன்,
அற்பின் நல்திரை புரள் ஆசை வேலையன்,
பொற்பினுக்கு அணியினை, புகழின் சேக்கையை,
கற்பினுக்கு அரசியை, கண்ணின் நோக்கினான். (3446)

(வெற்பு - மலை / யானை; அற்பு - அன்பு; திரை - அலைகள்; வேலை - கடல்; பொற்பு - அழகு; சேக்கை - இருப்பிடம்; ஆசை - காமஇச்சை; மதம் - சத்து / சாரம்)

மலை போன்ற பருத்த உடம்பினையுடைய யானையின் உறுப்புகளிலிருந்து பெருகி வழிகின்ற மதநீர் போல வியர்த்து ஒழுகும் உடம்பினை உடையவனும், அன்பு என்னும் அலைகள் நிறைந்து புரள்கின்ற காமம் என்னும் கடல் போன்ற ஆசையுடையவனும் ஆகிய இராவணன், அழகு என்ற சொல்லுக்கே அணிகலனாய் விளங்குபவளும், புகழிற்கு இருப்பிடமானவளும், கற்புடைய மகளிர்க் கெல்லாம் தலையாய அரசி போன்றவளுமான சீதாதேவியைத் தனது ஊனக் கண்ணால் உற்று நோக்கினான்.

இதுவரை இராவணன், சூர்ப்பணகை வருணித்திருந்த சீதையை உருவெளித் தோற்றத்தில்தான் பார்த்திருந்தான். இப்பொழுதுதான் முதன் முதலில் அவளை நேருக்கு நேர் பார்க்கின்றான். என்பதை மனத்தில் நிறுத்துக. எனவே கண்ணில் நோக்கினான் என்றார். ஆசை என்ற காமத்தைக் கடல் என்று கூறியதால், அன்பு என்ற காதலை அலை எனக் கூறினான் என்க. அவனுக்கு அன்பு, அலை போல அவ்வப்போது தோன்றுவது தான் என்பதும், காம இச்சைதான் கடல் போல விரிந்திருந்தது என்பதும் பெறப்பட்டது. சீதை பொற்பினுக்கு அணி, புகழின் சேக்கை, கற்பினுக்கு அரசி என்பதும், பின்னால் அனுமன் ''இற்பிறப்பென்பதொன்றும், இரும் பொறையென்பதொன்றும், கற்பெனும் பெயரதொன்றும்களிநடம்புரியக்கண்டேன்'' என்றுகூறப்போவதும்ஒப்பு நோக்கத்தக்கது.

27. தூங்கல்இல் குயில் கெழு சொல்லின், உம்பரின்
ஓங்கிய அழகினாள் உருவம் காண்டலும்,
ஏங்கினன் மனநிலை யாது என்று உன்னுவாம்?
வீங்கின, மெலிந்தன, வீரத் தோள்களே. (3447)

(தூங்குதல் - சோம்புதல் / சோர்வுற்ற நிலை; உம்பர் - தேவர் / தேவமகளிர்; ஓங்கிய - உயர்ந்த; வீங்குதல் - பூரித்தல் / பருத்தல்; உன்னுதல் - நினைத்தல் / முடிவு செய்தல்; கெழு - மிகுதி)

''ஒரு பொழுதும் சோர்வே அடையாது எப்போதும் மகிழ்ச்சியாகவே இனிய குரலில் ஒலியெழுப்பும் குயிலைப் போன்ற இன்சொற்களை

உடையவளும், தேவருலகத்துத் தெய்வமகளிரைக் காட்டிலும் உயர்ந்த அழகைப் பெற்றவளுமாகிய சீதையின் வடிவழகைக் கண்ட இராவணனின் தோள்கள், அவளைக் கண்டதால் பூரித்துப் பருத்து விளங்கின; அவளை உடனே அடைய முடியாமையால் வருத்தமுற்று மெலிந்து போயின; எனவே ஏக்க முற்றிருக்கும் அவனுடைய மனநிலை மகிழ்ச்சியானதா? துயரமுடையதா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை'' என்கிறான் கவிஞன்.

குயில் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு கூவிக்கொண்டிருக்கும். அது சோர்வடைந்திருக்கும் போது கூவாது. அது அக்குயிலின் இயல்பு. அது போலவே சீதை இராமனுக்கு உற்ற துயர் கேட்டுச் சோர்வுற்ற நிலையை அடைந்திருந்தாலும், தன் சொற்களில் உள்ள இனிமை மாறாது விளங்கினாள் என்பது பொருள். வீரர்களுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி குடிகொண்டால் அவர்கள் தோள்கள் பூரிக்கும்; பருக்கும்; அவர்கள் துன்பமுற்ற காலத்து, அவர்கள் தோள்களும் இளைத்துப் போகும் தன்மையன. இது அவர்கள் இயல்பு. இங்கு இராவணனுக்கு மகிழ்ச்சியும், துயரமும் அடுத்தடுத்து நிகழ்ந்தமையால் அவனுடைய மனநிலை இன்னதென்று சரியாகச் சொல்ல முடியவில்லை என்பது கவிக்கூற்று. இத்தகைய துயர நிலையிலும் சீதையின் சொற்கள் இனிமையாகவும், அவள் வடிவழகு உள்ளத்தைக் கவர்வதுமாகவும் இருக்கிறது என்றால், அவள்இயல்பானநிலையிலும், மகிழ்ச்சி மிகுந்த நிலையிலும் இருந்தால், எவ்வாறு இருப்பாள் என்பதை ஊகித்து அறிந்து கொள்ள வேண்டும் என்பதாம். சீதை எந்நிலையிலும் இயற்கையழகு குறையாது விளங்குபவள் என்பது பெறப்பட்டது.

28. புனமயில் சாயல்தன் எழிலில், பூநறைச்
சுனை மடுத்து உண்டு இசை முரலும் தும்பியின்
இனம் எனக் களித்துளது என்பது என்? அவன்
மனம் எனக் களித்தது, கண்ணின் மாலையே. (3448)

(புனம் - காடு; மாலை - வரிசை; நறை - தேன்; மடுத்து - அடைந்து / படிந்து; முரலுதல் - ரீங்காரமிடுதல் / ஒலியெழுப்புதல்; தும்பி - வண்டு; இனம் - கூட்டம்)

காட்டில் வாழும் மயிலினைப் போன்ற சாயலும், நடையும் பெற்ற சீதையின் அழகில் மயங்கிய இராவணனின் கண்களின் வரிசைக்கு, ஒரு சுனையில் சென்று மலர்களில் நிறைந்திருந்த தேனில் படிந்து வயிராற உண்டு வந்து, ரீங்காரமிட்டுத் திரியும் வண்டுகளின் கூட்டம் மகிழ்ந்து களித்திருப்பது போல் இருக்கிறது என்று உவமை கூறுவது எவ்வாறு சிறப்பானதாகும்? இராவணனுடைய மனம் மகிழ்ச்சியால் களிப்புற்றது போலவே, அவன் கண்களின் வரிசையும் களிப்புற்றது என்பதே பொருந்தும்.

அழகிய பெண்களைக் காட்டு மயிலுக்கு உவமை கூறுவது கவிமரபு. ''புனமயில் சாயற்கும், புண்ணிய முதல்விக்கும்'' என்பது சிலப்பதிகாரம். இராவணனுக்கு இயற்கையிலேயே இருபது கண்கள் உண்டு. அதைத்தான் கண்ணின் மாலை எனக் குறிப்பிட்டது. ஆனால் இப்போது அவன் தவவேடத்தில் இரு கண்களுடன்தான் இருக்கிறான் என்றாலும் அவன் இருபது கண்களாலும் கண்டு களித்த இன்பத்தைப் பெற்றான் என்பது பொருள். ஆனால் கவிஞன் இதற்கு வேறு ஒரு உவமை கூற முற்பட்டான். வண்டின் கூட்டங்கள் ஒவ்வொரு மலரிலும் அமர்ந்து சிறு துளித் தேனைப் பருகாமல், எல்லாம் ஒன்று சேர்ந்து, தேன் நிறைந்த ஒரு சுனையில் படிந்து, தேனை முழுவதும் பருகி வந்து ரீங்காரமிட்டுத் திரிந்தால் எப்படியிருக்குமோ, அவ்வாறு பல மகளிரிடம் காணும் அழகு எல்லாமும் சீதையின் ஒருத்தியிடமே ஒரு சேரக் கண்டு அனுபவித்தான் இராவணன் என்று சொல்லத்தான் எண்ணினான். ஆனால் அவ்வாறு சொல்வது நிறைவாகச் சொன்னதாக ஆகாது என்று கருதி, அந்த இராவணனுடைய மனம் இப்போது எப்படிக் களிக்கின்றதோ அவ்வாறே அவன் கண்களும் கண்டு களித்தது என்று கூறி நிறைவு செய்கிறான் கவிஞன்.

29. இராவணன் உற்ற துயரம்

''சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்து இவண்
மேயவள் மணி நிறமேனி காணுதற்கு,
ஏயுமே இருபது? இங்கு இமைப்புஇல் நாட்டங்கள்
ஆயிரம் இல்லை!'' என்று, அல்லல் எய்தினான். (3449)

(சே - சிவந்த; சேக்கை - இருப்பிடம்; தீர்ந்து - நீங்கி; மேவுதல் - வருதல்; மணி - மாணிக்கம்; ஏயுமோ - போதுமோ; நாட்டம் - கண்கள்; அல்லல் - துன்பம்; மணிநிறம் - சிறந்த ஒளி பொருந்திய)

''சிவந்த இதழ்களையுடைய தாமரை மலர் என்ற தன் இருப்பிடத்தை விட்டு நீங்கி, இங்கு வந்திருப்பவளான இந்தச் சீதையின் சிறந்த ஒளி பொருந்திய மாணிக்கம் போன்ற நிறமுடைய வடிவழகைக் காண்பதற்கு, இப்பொழுது எனக்குள்ள இமைக்கும் இயல்புடைய இருபது கண்கள் போதுமோ? போதாதல்லவா? இமைக்காத கண்கள் ஆயிரம் இல்லாமல் போயிற்றே'' என்று துன்பம் அடைந்தான் இராவணன்.

இராவணன் முதன் முதலாகச் சீதையைப் பாக்கும் போதே இவள் திருமகள்தான். தாமரை மலரிலிருந்து இங்கு வந்தவள் தான். இதில் ஏதும் ஐயம் இல்லை என்ற தீர்மானத்திற்கு வந்து விடுகிறான். எனவே அவளது அழகினைப் பருகுவதற்கு எனக்கு உள்ள இருபது கண்களும் போதா. அவையும் இமைக்கும் இயல்புடையன. எனக்கு ஆயிரம் கண்கள் வேண்டும். அவையும் இமைக்காத இயல்புடையனவாய் இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறான் இராவணன். இதே போல், சூர்ப்பணகையும் முதன் முதலில் சீதையைக் கண்ட போது, இவள்

சாதாரண மானிடப் பெண் அல்லள். தாமரை மலரினின்றும் நீங்கித் தன் இருதிருவடிகளும் இந்நிலத்தில் படிய வந்திருப்பவள்தான் என்று தீர்மானிப்பதையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். அதைப் போலவே சீதையின் அழகைக் காண்பதற்கு இராமனுக்கே ஆயிரம் கண்கள் வேண்டும் என்று மிதிலை நகர மக்கள் முன்பு கூறியதும் நினைவு கூரத்தகும்.

முன்பு சீதையின் வடிவழகைக் கண்ட இமையா நாட்டமுள்ள தேவர்கள் கூட ''இமையா நாட்டம் பெற்றிலம் என்றார் இருகண்ணால் அமையாது என்றார் அந்தர வானத்தவரெல்லாம்'' என்பதையும் நினைவு கூர்க. இங்கே ஒரு செய்தி. இராவணன் தவவேடம் பூண்டு வந்திருந்தாலும், சீதைக்கும் நமக்கும் அவன் இரண்டு கண்களையுடையவனாகவே தெரிந்தாலும், அரக்கர்கள் மாயவடிவு எடுக்கும் போது, அவர்கள் பிறர் கண்களுக்குத்தான் மாய உருத்தெரியுமே யன்றி, உண்மையில் மாற்றம் அடையாது என்பதை உணரவேண்டும்.

இராவணன் தனக்கு ஆயிரம் கண்கள் இல்லையே என்று வருந்துகிறான். ஆனால் ஆயிரம் கண்களையுடைய இந்திரன் தனக்கு ஆயிரம் காதுகள் இல்லையே என்று ஓரிடத்தில் வருந்துகிறான். எங்கே? திருவிளையாடலில் விறகு விற்றகதை நமக்குத் தெரியும் தானே? அந்த விறகு வெட்டியின் இசையைக் கேட்பதற்குத் தனக்கு ஆயிரம் காதுகள் இல்லையே என்று வருந்தியதாகக் கூறும் பாடல் இது. கேளுங்கள் ''தாது உலாம் கமலச் செங்கண் சதமகன் உடலமெல்லாம் காதுளேன் அல்லேன் என்றான் கண்ணுளான், கானம் கேட்டு'' என்பது பாடல் பகுதி.

30. ''தன் வாழ்நாள் போதாது'' எனல்

''அரைகடை இட்ட முக்கோடி ஆயுவும்
புரை தபு தவத்தின் யான் படைத்த போதுமே,
நிரைவளை முன்கை இந்நின்ற நங்கையின்
கரைஅறு நல் நலக்கடற்கு?'' என்று உன்னினான். (3450)

(நிரை - வரிசை; கரையறு - எல்லையில்லாத; நலம் - அழகு; புரை - குற்றம்; புரைதபு - குற்றமற்ற; படைத்த - பெற்ற; அரை கடை இட்ட முக்கோடி - மூன்றரைக் கோடி; ஆயு - ஆயுள் / வாழ்நாள் கடை - இறுதி / முடிவு)

''வரிசையாக வளையல்களை முன் கையில் அணிந்திருக்கும், இங்கு நிற்கின்ற மகளிருள் சிறந்தவளான சீதையின் எல்லையற்ற மிக்க அழகு என்னும் கடலை அனுபவிப்பதற்கு, நான் குறைவறச் செய்த தவத்தின் பயனால் அடைந்த மூன்றரைக் கோடி வாழ்நாளும் போதுமோ?'' என்று எண்ணலானான் இராவணன்.

இராவணன் சிவபெருமானிடம் வேண்டிப் பெற்ற ஆயுள் மூன்றரைக் கோடி என்பர். முதலில் பெற்றது மூன்று கோடி; பின்பு அளவிட்டுப்

பெற்றது அரைக்கோடி. எனவே மூன்றரைக் கோடி வாழ்நாள் என்பதாம். குற்றமற்ற - புரைதபு - தவம் என்பது, அவன் சிவபெருமானிடம் இவ்வரத்தைப் பெறுவதற்கு அவன் பட்டதுன்பங்களைக் குறித்தது. கயிலயங்கிரியைத் தன் கைகளால் தூக்க முயலும் போது, சிவபெருமான் தன் கால்கட்டை விரலால் மலையை அழுத்த, இராவணன் கை அதில் சிக்கிக் கொண்டது. அமைச்சரின் அறிவுரையால் சிவனுக்குப் பிடித்த, தனக்குத் தெரிந்த சாம வேதத்தை, தன் கை நரம்புகளையும் ஒரு தலையையும் கொய்து யாழாகச் செய்து இசைபாடிச் சிவனை மகிழ்வித்தான். எனவே சிவபெருமான் மூன்றரைக் கோடி வாழ் நாளும், சந்திரகாசம் என்னும் வாளும், வரங்களும் இவனுக்கு உவந்தளித்தான் என்பது உத்தரகாண்டம். ''எடுத்தனன்எழிற்கயிலை இலங்கையர்மன்னன் தன்னை, அடுத்து ஒரு விரலால் ஊன்ற, அலறிப் போய் அவனும் வீழ்ந்து, விடுத்தனன் கை நரம்பால் வேத கீதங்கள் பாடக் கொடுத்தனர் கொற்றவாள், நாள், குறுக்கை வீரட்டனாரே'' என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ''அவ்வழி அவனும்பாட, அரன் மகிழ்ந்து அழைத்துக் கொண்டு, முவ்வகை உலகும் ஆள, மூன்றரைக் கோடி ஆண்டும் எவ்வகைப் படையும் வெல்லும் சந்திரவாளும் ஈந்தான்'' என்பது உத்தரகாண்டம் வரையெடுத்த படலப் பாடல். முன் பாடலில் தனக்கு இருபது கண்கள் போதாது, இமையா நாட்டம் உடைய ஆயிரம் கண்கள் கூடப் போதுமோ என்று கேட்ட இராவணன், இப்பொழுது தனக்கு இருக்கின்ற மூன்று கோடி வாழ்நாள் கூடப் போதுமோ, போதாதோ என்று எண்ணுவதை நினைக.

31. இராவணன் பலவாறு எண்ணுதல்

''தேவரும், அவுணரும், தேவிமாரொடும்
கூவல்செய் தொழிலினர், குடிமை செய்திட,
மூஉலகமும் இவர் முறையின் ஆள, யான்
ஏவல் செய்து உய்குவென், இனி'' என்று உன்னினான். (3451)

(தேவி - மனைவியர்; கூவல் - அழைத்தல் / ஏவல் / குற்றேவல்; குடிமை - குடி அடிமை / பரம்பரை அடிமை; உய்குதல் - ஈடேறுதல்; உன்னுதல் - எண்ணுதல்; அவுணர் - அசுரர்கள்)

சீதையின் தெய்வீக அழகைக் கண்டு வியந்த இராவணன், இப்போது எனக்குப் பரம்பரை பரம்பரையாகக் குற்றேவல் செய்து வரும் தேவர்களும், அசுரர்களும், இனிமேல் தத்தம் மனைவிமாரோடும், இவளுக்குக் குற்றேவல் செய்திடவும், நான் இப்போது ஆண்டு கொண்டிருக்கும் இந்த மூவுலகங்களின் ஆட்சியையும், இவளே நீதி முறையுடன் ஆட்சி செய்யவும், நான் இவளுக்குக் குற்றேவல் செய்தும் என் வாழ்க்கையில் ஈடேறுவேன் என்று கருதலானான்.

இப்பொழுது இவ்வாறு எண்ணுவதைப் பின்னால் அவளிடம் நேருக்கு நேர் எடுத்துச் சொல்வதையும் காணப் போகிறோம். ஒரு பேரரக்கன் தன் ஆட்சி முழுவதையும் ஒரு பெண்ணிடம் தந்து, தான் அவளுக்குக் குற்றேவல் செய்யும் பேறு பெற வேண்டும் என்று கருதுவானானால், அவளுடைய பேரழகின் சிறப்பை என்ன வென்று கூறுவது? அவள் அவ்வாறு ஆட்சி செய்யும் திறமை படைத்தவள் என்று, தன் முதல் பார்வையிலேயே இராவணன் அறிந்து கொண்டான் என்க.

32. இவளைக் கண்டு வந்து சொல்லிய சூர்ப்பணகையைப் பாராட்டுதல்

''உளைவுறு துயர் முகத்து ஒளி இதுஆம் எனின்,
முளை எயிறு இலங்கிடும் முறுவல் என்படும்?
தளை அவிழ் குழல் இவட்கண்டு தந்த என்
இளையவட்கு அளிப்பென், என் அரசு'' என்று எண்ணினான். (3452)

(உளைவுறுதல் - துன்புறுதல் / வேதனையடைதல்; முளை - நாணல் குருத்து; இலங்குதல் - விளங்குதல்; தளை - கட்டு; குழல் - கூந்தல்; தந்த - அறிமுகப்படுத்திய / தெரிவித்த)

''இராமன் இறந்துபட்டான் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போது அவள் படுகின்ற வேதனைக் காலத்திலேயே, அவள் முகம் இவ்வளவு ஒளி வீசுகிறது என்றால், இயல்பாகவோ, மிக்க மகிழ்ச்சியுடனோ இருக்கும் நேரங்களில் இவளுடைய நாணல் குருத்துப் போன்று விளங்கிடும் பற்களால் புன்னகை செய்யும் போது, அது எத்தன்மையதாகயிருக்கும் என்று வியந்து போன இராவணன், இத்தகைய கட்டவிழ்ந்த கூந்தலையுடைய இவளைக் கண்டுபிடித்து இவள் அழகு பற்றி எனக்குத் தெரிவித்த என்னுடைய தங்கையான சூர்ப்பணகைக்கு, என்னுடைய அரசாட்சியைப் பரிசாகத் தந்து விடுவேன்'' என்றும் எண்ணலானான்.

''உளைவுஉறு துயர்'' என்றது, மாயமான் பின் சென்ற தன் கணவனுக்கு உற்ற வேதனையால் ஏற்பட்ட துயரம் குறித்தது. துன்பப்படும் காலத்திலேயே ஒரு பெண் இவ்வளவு அழகாகத் தோன்றுகிறாள் என்றால், மகிழ்ச்சியிலிருக்கும் போது, இன்னும் எவ்வளவு அழகாகத் தோன்றுவாள் என்று எண்ணிப் பார்த்து வியக்கிறான் இராவணன். நாணலின் வெண்மையான குருத்தைப் பெண்களின் பற்களுக்கு உவமை கூறுதல் கவிமரபு. இராமனுக்கு உற்ற துயர் கேட்டுத் தரையில் விழுந்து புரண்டு அரற்றினாள் என்று முன்பே கண்டோமல்லவா! அதை உறுதிப்படுத்தும் வண்ணம், இங்கே ''தளை அவிழ் குழல் இவள்'' என்கிறான் என்க.

முன் பாடலில் ''இம்மூவுலக அரசாட்சியைச் சீதைக்குத் தருவேன்'' என்று கூறிய இராவணன் இப்போது என் அரசுரிமையை என் தங்கை சூர்ப்பணகைக்குத் தருவேன் என்பதை நோக்குக. இராவணனின் மனத்தெளிவின்மை; தடுமாற்றம், வியக்கும் அழகைக் கண்டதால் ஏற்பட்ட மனக் கலக்கம் ஆகியவை குறிக்கப்பட்டன. இங்கும் சீதையின் அழகு நலச்சிறப்பை வெளிப்படுத்துவதும் உணர்க. முன்பு மிதிலைக்கு வந்த இராமனையும் இலக்குவனையும் பார்த்த மக்கள், அவர்கள் இருவரையும் புகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், இவனை இந்நகருக்கு அழைத்துவந்த முனிவனையும் வணங்க வேண்டும் என்று கூறினர் அல்லவா? அது போலச் சீதையின் சிறப்பை வியந்த இராவணன், அவளைத் தனக்குத் தெரிவித்த தன் தங்கையையும் பாராட்டிப் பரிசு வழங்க எண்ணினான் என்பதாம்.

33. சீதை தவசியாகிய இராவணனை வரவேற்றல்

ஆண்டையான் அனையன உன்னி, ஆசைமேல்
மூண்டு எழு சிந்தனை, முறை இலோன்தனைக்
காண்டலும், கண்ணின் நீர் துடைத்த கற்பினாள்,
''ஈண்டு எழுந்தருளும்'' என்று, இனிய கூறினாள். (3453)

(உன்னி - எண்ணி; மூண்டு - பெருகி / அதிகரித்து; சிந்தனை - மனம்; ஆண்டு - அவ்விடத்தில்)

அந்தக் குடிலின் வாயிலில் நின்று இவ்வாறு எண்ணிக் கொண்டிருந் தவனும், சீதை மேல் மிக்கெழுந்த ஆசை கொண்ட மனத்தினனும், முறை கேடானவனுமான, தவக்கோலத்தில் இருந்த இராவணனைக் கண்ட கற்புடையவளான சீதை, தனது கண்ணிலிருந்து பெருகும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''இங்கே உள்ளே வந்தருள்வீராக'' என்று இனிய சொற்களைக் கூறி வரவேற்றாள்.

இராவணனை ''முறையிலோன்'' என்றும், சீதையைக் ''கற்பினாள்'' என்றும் குறிப்பிட்டுக் காட்டிய திறம் நோக்குக. தான் எவ்வளவு வேதனையில் இருந்தாலும் அதை வெளிக்காட்டாது தன் வீட்டிற்குப் புதிதாக வரும் விருந்தினர்களைப் புன்முறுவல் காட்டி அன்பாக உபசரித்து வரவேற்பதே இல்லற மகளிரின் கடமை என்பதை உணர்த்தவே ''கண்ணீர் நீர் துடைத்த கற்பினாள்'' என்றார் என்க.

34. ஆசனம் தந்து அமரச் செய்தல்

ஏத்தினள்; எய்தலும், ''இருத்திர் ஈண்டு'' என,
வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினாள்;
மாத் திரிதண்டு அயல் வைத்த வஞ்சனும்,
பூத்தொடர் சாலையின் இருந்த போழ்தினே. (3454)

(ஏத்துதல் - வணங்குதல்; வேத்திரம் - பிரம்பு / மூங்கில்; விதி - முறை; மா - பெருமை; அயல் - பக்கம்; பூ - அழகு; திரிதண்டம் - முக்கோல்) (குளகப் பாடல்)

அவ்வாறு வரவேற்ற சீதை அவனை வணங்கினாள்; அவன் உள்ளே வந்ததும், ''இங்கு அமர்க'' என்று கூறி மூங்கில் பிரம்பினாலான ஒரு ஆசனத்தை முறைப்படி தந்தாள். தவவேடம் தரித்த வஞ்சகனான இராவணனும், பெருமை பொருந்திய முக்கோலை அருகில் வைத்து விட்டு, அழகு நிறைந்த பூங்கொடிகளால் அமைக்கப்பட்ட அந்தத் தவக்குடிலில் அவ்வாசனத்தில் அமர்ந்திருந்த பொழுது - பாடல் தொடர்கிறது.

''விதி'' என்பது முறைமை என்ற பொருள் தந்து. அவள் அர்க்கியம், பார்த்தியம், ஆகமனீயம் முதலிய உபசாரங்களையும் செய்தாள் என்பதைப் பெற வைத்தது. அர்க்கியம் என்பது நீர் தந்து வரவேற்றல்; பார்த்தியம் என்பது கால் கழுவிக் கொள்ள நீர் அளித்தல்; ஆசமனீயம் என்பது வலது உள்ளங்கையால், மந்திர உச்சாடனம் செய்து, நீரை உட்கொள்ளுதல் என்பதாம். இராவணனின் பொய்யான தவவேடத்தைக் குறிப்பதற்காக ''வஞ்சன்'' என்றார் என்க.

35. இராவணன் உண்மை உரு உணர்ந்த அஃறிணைப் பொருள்களும் அஞ்சுதல்

நடுங்கின, மலைகளும் மரனும்; நா அவிந்து
அடங்கின, பறவையும்; விலங்கும் அஞ்சின;
படம் குறைந்து ஒதுங்கின, பாம்பும்; பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணும் கண்ணினே. (3455)

(பாதகம் - வஞ்சகம் / பாவம்; மரன் - மரம்; அவிந்து - அடங்கி; அடங்குதல் - ஒடுங்குதல் / ஒளிந்து கொள்ளுதல்; குறைதல் - சுருங்குதல்)

பெரும் பாவமாகிய பிறன்மனை நயத்தல் என்னும் கொடிய செய்கையைச் செய்யப் போகும் அரக்கனாகிய இராவணனைத் தவக்கோலத்தில் கண்ட பொழுது, அங்குள்ள மலைகளும், மரங்களும் நடுக்கமுற்றன; பறவைகள் ஓசையின்றிக் கூடுகளில் புகுந்து கொண்டன. விலங்குகளும் அச்சமுற்றன; சீறிப்பாயும் பாம்புகள் கூடத் தன் படத்தைச் சுருக்கிக் கொண்டு ஒதுங்கிப் போயின.

இராவணன் தவக்கோலத்தில் இருப்பது மானிடர்களுக்கு மட்டும்தான் தெரிந்தது. காட்டில் வாழும் அஃறிணைப் பொருள்களுக்கும் உயிரினங் களுக்கும் அவன் உண்மை உருவமே தெரிந்தது என்பது புரிந்து கொள்ளப் பட வேண்டும். மலைகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், பாம்புகள் முதலியவை இராவணனால் இப்போது தமக்கு என்ன தீங்கு நேரப் போகிறதோ என்று எண்ணி அஞ்சி நடுங்கி ஒளிந்து ஒதுங்கின என்பதாம். ஓரறிவுயிராகிய மரம் முதலியவற்றுக்கும் உய்த்துணரும் அறிவு உண்டு

என்பது புலப்படுத்தப்பட்டிருப்பது காண்க. பொதுவாகவே பாம்பு கொடிய விஷம் கொண்டது. அதுவே இவனைக் கண்டு அஞ்சியது, என்றால் அவனுடைய பாதகச் செயல் எத்தகையது என்பதை உணர்க. பாம்பினால், தான் பயந்து நடுங்கும் போது படமெடுக்க முடியாது; தலையைக் கீழே தாழ்த்திக் கொள்ளும்; சீற்றம் வந்த போது அது எழுந்து சீறிப் படமெடுக்கும் என்பதை அறிக.

36. இராவணன் சீதை உரையாடல் [25 பாடல்கள்]

இருந்தவன், ''யாவது இவ்விருக்கை? இங்கு உறை
அருந்தவன் யாவன்? நீர் யாரை?'' என்றலும்,
''விருந்தினர் இவ்வழி; விரகு இலார்'' என,
பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினாள்; (3456)

(இருக்கை - இருப்பிடம்; உறை இருத்தல் - தங்கியிருத்தல்; தடம் - பெரிய / அகன்ற; விருந்து - புதிது; விரகு - அனுபவ அறிவு / வஞ்சகம்; இரும் - பெரிய)

அவ்வாறு சீதையால் அளிக்கப்பட்ட பிரம்பு ஆசனத்தில் அமர்ந்தவனான இராவணன், சீதையை நோக்கி, ''இவ்விருப்பிடத்தின் பெயர் என்ன? இங்கே தங்கியிருக்கும் அருமையான தவசியின் பெயர் என்ன? நீங்கள் அவருக்கு என்ன உறவு வேண்டும்?'' என்று கேட்டான். அதைக் கேட்டதும் ''இவன் இந்த இடத்திற்குப் புதியவன் போலும், வஞ்சகமில்லாதவன், இங்குள்ள இடங்களைப் பற்றி அறியாதவன் போலும்!'' என்று எண்ணித் தனது பெரிய நீண்ட அகன்ற விரிந்த கண்களையுடைய சீதை, அவனுக்கு விடைகூறும் முகத்தான் பேசத் தொடங்கினாள்.

பெரிய தவசியை ''யாவன்'' என்று ஒருமையில் கேட்டவன், சீதையை நோக்கி ''நீர்'' யார் என்று பன்மையில் கேட்டதை நோக்குக. இங்கே வான்மீகம் இராவணன் சீதையின் அழகைப் பலவாறு புகழ்ந்த பின்னர்தான் இவ்வாறு கேட்டான் என்று கூறுகிறது. தண்டகவனத்து முனிவர்கள் அனைவரும் இராமனையும், இந்தக் குடிலைப் பற்றியும் அறிவர். எனவேதான் சீதை ''இவன் புதியவன் என்றும், இவ்விடங்களைப் பற்றி அறியாதவன் என்றும், வஞ்சக மற்றவன் என்றும் எண்ணுகிறாள்'' என்க. இராவணன் உண்மையிலேயே தவசி என்று சீதை நம்பியதால் நாணித் தலை குனிந்து பேசாமல், அவனை நேருக்கு நேர், கண்ணால் நோக்கிப் பேசத் துவங்கினாள் என்பதாம்.

37. சீதை இராமன் பற்றிக் கூறுதல்

''தயரதன் தொல்குலத் தனையன்; தம்பியோடு,
உயர் குலத்து அன்னை சொல் உச்சி ஏந்தினான்,

அயர்வுஇலன், இவ்வழி உறையும்; அன்னவன்
பெயரினைத் தெரிகுதிர், பெருமையீர்!'' என்றாள். (3457)

(தொல் - பழமையான; குலம் - குடிப்பிறப்பு; சொல் - கட்டளை; உச்சி - தலை; அயர்வு - துன்பம் / வருத்தம்)

''பெருமையுடையவரே! பழமையான இட்சுவாகு குலத்தில் தோன்றிய தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனானவர், தன் தம்பியோடு, உயர்ந்த குலத்தில் பிறந்தவளான தன் அன்னையின் கட்டளையைத் தலைமேல் தாங்கியவராய், அதனால் சிறிதும் வருத்தமின்றி, இக்குடிலில் வசித்து வருகிறார். அவருடைய பெயரைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

சூரிய குலம், இட்சுவாகு குலம், மனு குலம், இரகு குலம் என்றும் இராமனது முன்னோர்களின் பெயரால் அவனது குலமுறை பல இடங்களிலும் குறிக்கப் பெறுவது காண்க. தனக்கு இவ்வளவு இடர் விளைவித்த கைகேயியை, சீதை ''உயர் குலத்து அன்னை'' என்று பாராட்டிப் பேசுவது, அவளும் இராமனைப் போல் கைகேயியிடம் கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் பெருமதிப்பையும், அவள் பெருந்தன்மையையும் சுட்டிக் காட்ட என்க. தண்டகவன முனிவர்கள் அனைவரும் அறிந்த பெயர். எனவே இம்முனிவனும் அறிந்திருக்க வேண்டும் என்று கருதி ''தெரிகுதிர்'' என்றாள் என்க.

இங்கே ஒரு கருத்து. இராமனைக் காட்டிற்கு ஏகச் சொன்னவள் - நேரடியாகச் சொன்னவள் கைகேயி. இது சீதைக்குத் தெரியாது. ''மன்னவன் பணியன்றாகில், நும்பணி மறுப்பனோ'' என்ற இராமன் கூற்றாலும், ''தாய் சொல் தாங்கி, விரையளித்த கான் புகுந்தோம்'' என்று இராமன் சூர்ப்பணகையிடம் கூறும் கூற்றாலும், ''தாய் சொல் தாங்கி தாதை தந்த தரணி தன்னை'' என்ற குகன் கூற்றாலும் அறிகிறோம். எனவே இங்கே சீதையும் ''உயர்குலத்து அன்னை சொல் உச்சி ஏந்தினான்'' என்றாள். ''நாயகன் எனை நன்னெறி உய்ப்பதற்கு ஏயது உண்டு ஓர் பணி'' என்று கோசலையிடமும், ''எந்தையே ஆண்டு ஏழொடு ஏழ் எனா, வந்த காலம் நான் வனத்துள் வைக'' என்று பரதனிடமும், இராமன் தன் தந்தையே தன்னைக் காட்டிற்கு அனுப்பினான் என்று கூறுவதும் நோக்கத்தக்கது. என்றாலும், தாயின் வரத்தால், தந்தை ஏவியது என்று பொருள்கொள்ளுதல் பொருந்தும் என்க.

38. இராவணன் சீதை பற்றி வினவுதல்

''கேட்டனென், கண்டிலென்; கெழுவு கங்கை நீர்
நாட்டிடை ஒருமுறை நண்ணினேன்; மலர்
வாள் தடங்கண்ணி! நீர் யாவர் மா மகள்,
காட்டிடை அரும் பகல் கழிக்கின்றீர்?'' என்றான். (3458)

(கெழுதல் - மிகுந்து பாய்தல்; நண்ணுதல் - செல்லுதல்; மா - சிறந்த; பகல் - நாள்)

''நீவிர் கூறிய செய்தியையும், இராமனையும் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களைக் கண்டதில்லை; கங்கை நீர் மிகுதியாகப் பாயும் கோசல வளநாட்டிற்கு ஒரு முறை சென்றுள்ளேன்; தாமரைமலர்போன்ற, ஒளிபொருந்திய பெரிய கண்களையுடையதாங்கள் யாருடைய சிறந்த பெருமைக்குரிய மகளாவீர்? இந்தக் காட்டின் இடத்து அரிதாக நீண்ட நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறீர்களே?'' என்று அவள்பால் இரக்கப்படுவது போல் இராவணன் கேட்டான்.

இராமனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் என்பது, முன்பு திக்குவிஜயத்தின் போது அயோத்தி சென்று, அப்பொழுது அங்கு அரசாண்டு கொண்டிருந்த அநரண்யன் என்ற இராமனது மூதாதையருள் ஒருவனை வென்று நிந்தித்த போது, ''அநரண்யன் சினம் உற்று, எங்கள் குலவழியில் வரக்கூடிய தசரதன் என்பான் மகன் இராமன் உன்னை வென்று, உன்னை அழிப்பான்'' என்று ஒரு சாபம் கொடுத்துப் போனான். அவ்வரலாற்றை நினைந்து கூறியது என்க. ''கொடுமனத்தோய்! அவமதித்தாய் எனை; அதனால், கோலத் தசரத ராமன் என் குலத்தோன் கொடுங்கணையால், தாலக்குலை போல் நின் தலை, தரை வீழ்க'' எனச் சபித்தான் என்பது உத்தரகாண்டம் திக்குவிசயப் படலம். எனினும் இராமனைப் பற்றி இப்பொழுது சூர்ப்பணகையும் அவனுக்குச் சொல்லிருக்கிறாள் எனவே அவள் மூலமாகவும் கேள்வியுற்றேன் என்று கூறலும் பொருந்தும். என்றாலும் ''கெழுவு கங்கை நீர் நாட்டிடை ஒரு முறை நண்ணினேன்'' என்று கூறுவதால் முன்னதே சாலப் பொருந்தும் என்பதறிக. முன்பாடலில் சீதையை நோக்கி ''நீர் யாரை'' என்று கேட்டதற்கு அவள் இன்னும் விடைகூறவில்லை. எனவே இப்பொழுது மீண்டும், ''நீர் யாவர் மாமகள்'' என்று கேட்டான் என்க. சீதையின் அன்பைப் பெறும் நோக்கத்தால்,தான் அவளிடம் மிகுந்த இரக்கம் கொண்டவன் போல்'' ''காட்டிடை அரும்பகல் கழிக்கின்றீர்'' என்று கேட்டான் என்பதாம்.

39. சீதை தான் யார் என்பது கூறுதல்

''அனக மாநெறி படர் அடிகள்! நும் அலால்,
நினைவது ஓர் தெய்வம் வேறு இலாத நெஞ்சினன்
சனகன் மா மகள்; பெயர் சனகி; காகுத்தன்
மனைவி யான்'' என்றனள், மறுஇல் கற்பினாள். (3459)

(மறு - குற்றம்; அனகம் - பாவம் இன்மை / குற்றமில்லாத; படர்தல் - செல்லுதல்; அடிகள் - துறவியர் / தவம் செய்பவர்கள்; மா - மூத்த / பெரிய)

குற்றமற்ற கற்பினையுடையவளான சீதாதேவி, ''குற்றமில்லாத சிறந்த வழியில் செல்லும் துறவியே! உங்களைப் போன்றவர்களைத் தவிர, வேறு

ஓர் தெய்வமே இல்லை என்று கருதுகிற மகா ஞானியாகிய சனக மன்னனது மூத்த புதல்வி நான்; என் பெயர் சானகி; நான் காகுத்தன் மரபில் வந்த இராமனின் மனைவி'' என்று கூறினாள்.

அனகம் என்பது எதிர்மறைச் சொல் - பாவம் இன்மை என்ற பொருள் தரும். அடிகள் என்பது துறவிகள், முனிவர்கள், பெரியோர்களை அழைக்கும் விளிச்சொல். சனக மன்னன் மகா ஞானி - அவன் முனிவர்கள், துறவிகளைத் தெய்வத்திற்குச் சமமாக மதிப்பவன். அத்தகையவனுடைய மூத்த மகள் நான். இங்கே சீதை தன்னை மூத்த மகள் என்று கூறுவதன் நோக்கம், சனகனின் இரண்டாவது மகளாகிய ஊர்மிளையைக் குறிப்பதற்காக என்க. சனகன் வழி வந்ததால் சானகி தத்திதாந்தப் பெயர் - பெயர் வழி வந்த பெயர். காகுத்தன் இராமனின் முன்னோர்களில் ஒருவன் என்பதும், இவன் இந்திரனை எருதுவாகனமாகப் பயன்படுத்தி அதன் கழுத்தில் அமர்ந்து சென்று அசுரருடன் போரிட்டு வெற்றி கண்டதனால் காகுத்தன் என்று பெயர் பெற்றான் என்பதும் நாம் முன்னர் கண்டதே. இராமன் எனத் தன் கணவன் பெயரை நேரிடையாகக் கூறாமல் காகுத்தன் என்று குலப்பெயரால் கூறியது காண்க. காகுத்தனுக்குப் புரஞ்சயன் என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை அறிக.

40. சீதை இராவணன் பற்றிக் கேட்டல்

அவ்வழி அனையன உரைத்த ஆயிழை,
''வெவ்வழி வருந்தினிர், விளைந்த மூப்பினிர்,
இவ்வழி இருவினை கடக்க எண்ணினிர்
எவ்வழி நின்றும் இங்கு எய்தினீர்?'' என்றாள். (3460)

(கடக்க - வெல்ல; வெவ் - கொடிய; விளைந்த - பழுத்த / முதிர்ந்த; ஆய் - ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட; இழை - ஆபரணங்கள்)

அவ்வாறு அத்தன்மையானவற்றைக் கூறிய, ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்த சீதை, இராவணனை நோக்கி, ''பழுத்த முதிர்ந்த மூப்பினை உடையவராகவும், இந்தக் கொடிய காட்டிற்கு உடலால் மிக வருத்தமுற்றும் வந்திருக்கின்றீர்; இந்தத் துறவு வழியில் உங்கள் நல், தீய வினைகளை வென்று கடக்கக் கருதியுள்ளீர், நீவிர் எங்கிருந்து இங்கு வருகின்றீர்?'' என்று கேட்டாள்.

இருவினை என்பது நல்வினை, தீவினை என, இருள் சேர் இருவினையையும் குறிப்பதாகும். மறுபிறவிக்குத் தீவினையால் உண்டாகும் பாவம் மட்டும் காரணமில்லை; நல்வினையால் விளையும் புண்ணியமும் காரணமாகும். எனவே பிறவிப் பிணி அறுக்க எண்ணுபவர் இரு வினைகளையும் கடக்க வேண்டுவது இன்றியமையாதது என்பது பெறப்பட்டது.

41. துறவி தன்னைப் பற்றிக் கூறுதல்[10பாடல்கள்]

"இந்திரற்கு இந்திரன்; எழுதல் ஆகலாச்
சுந்தரன்; நான்முகன் மரபில் தோன்றினான்;
அந்தரத்தோடும் எவ் உலகும் ஆள்கின்றான்;
மந்திரத்து அருமறை வைகும் நாவினான்." (3461)

(இந்திரன் - தலைவன்; சுந்தரம் - அழகு; அந்தரம் - விண்ணுலகு; வைகும் - பயிலும்) (குளகப் பாடல்)

தேவர் தலைவனான இந்திரனுக்கும் தலைவனானவனும், சித்திரத்தில் எழுத ஒண்ணா அழகுடையவனும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனின் குலத்தில் உதித்தவனும், விண்ணுலகத்தோடு, எல்லா உலகங்களையும் ஆளுகின்ற சிறப்பை உடையவனும், மந்திரங்களைத் தன்னகத்தே கொண்ட அருமையான நான்கு வேதங்களையும் எப்பொழுதும் ஓதிக் கொண்டிருக்கும் நாவினை உடையவனும் - பாடல் தொடர்கிறது.

செல்வச் செழிப்பு, அழகு, குடிப்பிறப்பு, அரசுரிமை, கல்வியறிவு ஆகியவைகளில் சிறந்து விளங்குபவன் (இராவணன்) என்பது பேசப்படுகிறது. இது முதல் பத்து பாடல்கள் ஒரு தொடர். இறுதியில் அத்தகைய இராவணன் இருக்கும் இலங்கையில் இருந்து வருகிறேன் என்று கூறி முடிப்பான் துறவி. அரக்கன் என்பதை மறைத்து தான் பிரமன் குலத்தோன்றல் என்று கூறியது நோக்குக. சூர்ப்பணகையும் முன்பு தன்னை இராமனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளும் போதும், இவ்வாறே "பூவிலோன் புதல்வன், மைந்தன், புதல்வி" என்று கூறியதை நினைவு கூர்க. பிரமன் புலத்தியன் - விச்சிரவசு - இராவணன் என்பது குலமுறை. இந்திரன் என்ற சொல், தலைவன் என்ற பொருளிலும் கையாளப் பட்டிருப்பது காண்க. நரர்களுக்குத் தலைவன் நரேந்திரன் என்பது போலவும், மிருகங்களுக்குத் தலைவன் மிருகேந்திரன் என்பது போலவும், நாகேந்திரன், கஜேந்திரன் என்பது போலவும் கொள்க.

42. "ஈசன் ஆண்டு இருந்த பேர் இலங்கு மால்வரை
ஊசி வேரொடும் பறித்து எடுக்கும் ஊற்றத்தான்;
ஆசைகள் சுமந்த போர் ஆற்றல் யானைகள்
பூசல் செய் மருப்பினைப் பொடிசெய் தோளினான்." (3462)

(ஈசன் - சிவபெருமான்; பேர் - புகழ்; இலங்கு - விளங்குகின்ற; மால் - பெரிய; வரை - மலை / கயிலைமலை; ஊசிவேர் - ஆணிவேர்; ஊற்றம் - வலிமை; ஆசைகள் - திசைகள்; பூசல் - போர்; மருப்பு - கொம்புகள்)

சிவபெருமான் வீற்றிருந்த புகழ் பெற்று விளங்கும் பெரிய கயிலை மலையை அதனது ஆணி வேரொடும் அடியோடு பெயர்த்து எடுத்த ஆற்றலை உடையவனும், திசைகளைச்சுமந்து நிற்கும் பேராற்றல் வாய்ந்த

திக்கு யானைகளின் போர் செய்யும் இயல்புடைய கொம்புகளைப் பொடிப்பொடியாக்கிய மார்பினை உடையவனும் - பாடல் தொடர்கிறது.

இராவணனது இரண்டு வீரச் செயல்கள் இங்கு குறிக்கப்படுகின்றன. ஒன்று அவன் வெள்ளியங்கிரியைப் பெயர்த்தெடுத்தது. இது பற்றி உத்தரகாண்டம் வரையெடுத்த படலம் மிக விரிவாகப் பேசுகிறது. இரண்டாவது திக்கஜங்களின் தந்தங்களைத் தன் மார்பில் தாங்கியது. இது பற்றிய விளக்கமும் உத்தர காண்டம் திக்குவிசயப் படலத்தில் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது.

43. ''நிற்பவர், கடைத்தலை, நிறைந்து தேவரே;
சொல்படும், மற்று, அவன் பெருமை சொல்லுங்கால்
கற்பகம் முதலிய நிதியம் கையன;
பொற்பகம், மானநீர் இலங்கைப் பொன்நகர்.'' (3463)

(கடைத்தலை - வாயில்; படும் - குறையும் / போதாது; நிதியம் - செல்வங்கள்; பொற்பு - அழகு; அகம் - இருப்பிடம்; மான - பெருமை பொருந்திய / பெரிய)

''அவனுடைய அரண்மனை வாயிலில் தேவர்கள் எல்லோரும் இவன் இடும் ஏவல் கேட்கவும், இவன் கருணையைப் பெறவும் காத்து நிற்பார்கள்; தேவலோகத்திலுள்ள கற்பகம் முதலிய செல்வங்கள் அனைத்தும் இவன் கைவசமிருக்கின்றன; இவன் எப்பொழுதும் தங்கியிருக்கின்ற அழகிய உறைவிடம், பெருமை பொருந்திய கடல் நீரின் நடுவில் உள்ள இலங்கை என்னும் பொன்மயமான நகரமாகும்; இவனுடைய பெருமைகளை இன்னும் சொல்லுவது என்றால் சொற்களே போதாமல் குறைவுபட்டு விடும்'' என்று தன்னை மறைத்துத் தன் புகழை வெளிப்படுத்துகிறான் இராவணன்.

இதன் மூலம் அவன் தேவரினும் மேம்பட்டவன் என்பதும். சொல்லுக் கடங்காத புகழ் வாய்ந்தவன் என்பதும், செல்வச் செழிப்புள்ளவன் என்பதும் புலப்படுத்தப்பட்டது. ''கற்பக முதலிய'' என்றதனால், அதனோடு இயைந்த சந்தானம், அரிசந்தானம், மந்தாரம் பாரிசாதம் முதலியவைகளையும் குறிக்கும் என்க. அத்தோடு சிந்தா மணி முதலிய இரத்தினங்கள், காமதேனு முதலிய பசுக்கள் இவற்றையும் உள்ளடக்கும் என்க. மேரு மலையின் ஒரு சிகரம் தான் தென்கடலில் வீழ்ந்தது என்றும், அதன்மேல் தான் இலங்கை நகர் அமைந்து இருக்கிறது என்றும் ஒரு புராணக் குறிப்புக் கூறுகிறது. எனவேதான் மேருமலையின் பகுதி என்பதைக் குறிக்க, இலங்கையைப் ''பொன் நகர்'' என்றான் என்க.

கீழ்க்கண்ட இருபாடல்களும், மிகைப் பாடல்கள்தான் என்றாலும், இராவணன் பெருமையைக் கூறுவதாலும், கற்போர்க்குச் சுவை ஊட்டுவதாலும், விளக்கம் இன்றிப் பாடல்கள் மட்டும் தரப்பட்டுள்ளன.

''மேனகை, திலோத்தமை முதல ஏழையர்,
வானகம் துறந்து வந்து, அவன்தன் மாட்சியால்,
ஊனம்இல் அடைப்பை, கால்வருடல், ஒண் செருப்பு,
ஆனவை முதல் தொழில் அவரது ஆகுமே.''
(அடைப்பை - வெற்றிலைப் பை தாங்குதல்)

சந்திரன், இரவி என்பவர்கள் தாம், அவன்
சிந்தனைவழி, நிலை திரிவர்; தேசுஉடை
இந்திரன் முதலிய அமரர், ஈண்டு அவன்
கந்தடு கோயிலின் காவலாளரே.

(சிந்தனை - கருத்து; தேசு - ஒளி / அழகு; கம் - மேகம்; கோயில் - அரண்மனை)

44. ''பொன்னகரத்தினும், பொலன் கொள் நாகர்தம்
தொல் நகரத்தினும், தொடர்ந்த மா நிலத்து
எந்நகரத்தினும், இனிய; ஈண்டு, அவன்
நல் நகரத்தன நவை இலாதன.'' (3464)

(பொன் நகரம் - அமராவதி; பொலன் - அழகு; தொல் - பழமையான; தொல் நகரம் - போகவதி; மா - பெரிய; நவை - குற்றம்; ஈண்டு - இப்பொழுது / திரண்டு / ஒன்று சேர்ந்து)

''தேவருலகத்தின் தலைநகரமாகிய பொன் போன்ற அமராவதியை விடவும், அழகு மிகுந்த நாகர்கள் வசிக்கின்ற பழமையான பாதாள லோகத்தின் தலை நகரமாகிய போகவதியை விடவும், இப்பூவுலகத்தில் தொடர்ந்து இருக்கின்ற சிறந்த எந்த நகரத்தைக் காட்டிலும், அழகுடையது இவனது தலைநகரமாகிய இலங்கை மாநகரம். இந்நகரங்களில் இருந்த அழகிய, அரிய, இனிய, குற்றமில்லாத பொருள்கள் யாவும் இப்பொழுது ஒன்று சேர்ந்து இவன் நகரத்தில்தான் உள்ளன.''

இராவணன், உலகில் உள்ள எல்லா நல்ல பொருள்களையும் அபகரித்துக் கொண்டு வந்து இலங்கையுள் வைத்துள்ளான் என்பதாம். எனவே அழகிய பெண்ணாகிய சீதை இலங்கையில், இராவணனிடத்தில் இருப்பதுதான் தகும் என்று குறிப்பால் குறிப்புணர்த்துகிறான் என்பதாம். இலங்கையில் உள்ள பொருள்கள் யாவும், இம்மூவுலகங்களிலுமுள்ள பொருள்களைக் காட்டிலும், இனியவை, அழகியவை, அரியவை, குற்றமற்றவை என்பதாம்.

45. ''தாளுடை மலருளான் தந்த, அந்தம்இல்
நாளுடை வாழ்க்கையன்; நாரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன்; வாரி வைத்த வெங்
கோளுடைச் சிறையினன்; குணங்கள் மேன்மையான்'' (3465)

(தாள் - நாளம் / தண்டு; மலருளான் - பிரமன்; அந்தமில் - அழிவில்லாத; வாழ்க்கை - வாழ்நாள் / ஆயுள்; நாரி - பெண் / பார்வதி / உமாதேவி; வெம் - கொடிய / வலிமைமிக்க; கோள் - நவக்கிரகங்கள்; தந்த - அருளிய; வாரி - ஒருங்கே திரட்டி)

நீண்ட தண்டுகளையுடைய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் அருளிய அழிவில்லாத வாழ்நாளையுடையவன்; உமையொரு பாகனான சிவபெருமான் அருளிய சந்திரகாசம் என்னும் வாளை ஏந்திய பெரிய கைகளையுடைய்வன்; ஒன்று சேர்ந்து திரட்டி வைத்த நவக்கிரகங்களை யெல்லாம் கொண்ட சிறைச் சாலையை உடையவன்; எல்லா நற்குணங்களும் மேம்பட்டு விளங்குபவன் - பாடல் தொடர்கிறது.

''அந்தம்இல் நாள் உடை வாழ்க்கையன்'' என்று இவன் கூறுவது உண்மையன்று. காரணம் இவனுக்கு மூன்றரைக் கோடி வாழ்நாள் என்பதை முன்பு கண்டோம். என்றாலும் சீதையைக் கவர்வதற்காக இவ்வாறு மிகைப்படுத்திக் கூறினான் என்க. அவன் சூரியன், சந்திரன் முதலிய நவக்கிரகங்களையும் வெற்றி கொண்டு இலங்கையில் சிறைப்படுத்தி வைத்திருந்தான் என்பது உத்தரகாண்டத்தில் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. என்றாலும் அவன் எல்லா நற்குணங்களிலும் மேம்பட்டவன் என்று தன்னைத் தானே அவன் புகழ்ந்து கூறிக் கொள்வதை உணர்க. நாரி பாகத்தன் என்பது உமாதேவி, சிவபிரானைத் தொழுது, அவள் விரும்பியதற்கிணங்க சிவபெருமான், தன் ஒரு பாகத்தில் அவளைத் தாங்கிக் கொண்டான் என்பது ஒரு புராணக் குறிப்பு.

46. வெம்மை தீர் ஒழுக்கினன்; விரிந்த கேள்வியன்;
செம்மையோன்; மன்மதன் திகைக்கும் செவ்வியன்;
எம்மையோர் அனைவரும், ''இறைவர்'' என்று எணும்
மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான். (3466)

(வெம்மை - கொடுமை; தீர்தல் - நீங்குதல்; கேள்வி - நூற்கேள்வி / வேதம்; செம்மை - நேர்மை / நடுவு நிலைமை; செவ்வி - அழகு; எம்மையோர் - எவ்வுலகத்தோரும்; எணும் - எண்ணும் / மதிக்கும்)

''கொடுமைகள் தீர்ந்த நல்லொழுக்கமுடையவன்; விரிந்து பரந்த வேதத்தை நன்கு கற்று ஓதி உணர்ந்தவன்; நூற்கேள்விகளில் வல்லவன்; நேர்மையும், நடுவு நிலைமையும் உடையவன்; அழகு நிரம்பிய மன்மதனே இவன் அழகைக் கண்டு மயங்கித் தடுமாறும் உடல் அழகுடையவன்; எங்களைப் போன்ற முனிவர்களும், எல்லா உலகத்தவரும், இறைவர் என்று மதிக்கும் மும்மூர்த்திகளாகிய அரன், அரி, அயன் முதலியோரின் நற்பண்புகள் அனைத்தையும் நிறைவுறப் பெற்ற தன்மையன்'' - பாடல் தொடர்கிறது.

கேள்வி என்பது வேதத்தைக் குறிக்கும். சுருதி என்பது வடசொல். அதன் தமிழாக்கம் கேள்வி. எழுதாக்கிளவி வேதம் என்பது விளக்கம். எனவே

கேள்வி என்பது இங்கே கேட்டு ஓதப்படும் வேதத்தைக் குறிக்கும். நூற்கேள்விகளில் வல்லவன் என்ற பொருளும் தரும் ''கற்றலில் கேட்டலே நன்று'' என்பதும் ''கற்றிலனாயினும் கேட்க'' என்னும் குறளும் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தகும். மும்மூர்த்திகளின் பெருமையும் தனக்கு உண்டு என்று கூறுவது காண்க. சூர்ப்பணகையும் முன்பு இராவணனை மும்மூர்த்திகளின் ஆற்றலுடையவன் என்று இராவணன் பற்றிக் கூறியிருத்தலை நினைவு கூர்க. இராவணனது ஒழுக்கம், கேள்வியறிவு, குணநலன்கள், மேனியழகு, கடவுளரை நிகர்த்த ஆற்றல் முதலியன கூறப்பட்டன.

47. ''அனைத்து உலகினும் அழகு அமைந்த நங்கையர்
எனைப்பலர், அவன் தனது அருளின் இச்சையோர்;
நினைத்து, அவர் உருகவும், உதவ நேர்கிலன்;
மனக்கு இனியாள் ஒரு மாதை நாடுவான்.'' (3467)

(எனை - எத்துணையோ / அளவிடற்கரிய; இச்சை - ஆசை; நேர்தல்- உடன்படுதல்; மனக்கு - மனத்திற்கு; நாடுதல் - தேடுதல்; உருகுதல் - மனம் கசிந்து வருந்துதல்; உதவுதல் - அருள் புரிதல்; நங்கையர் - பெண்களில் சிறந்தவர்)

எல்லா உலகங்களிலும் இருக்கும் அழகு பொருந்திய பெண்களிற் சிறந்தவர் எண்ணற்றவர்கள் அவனுடைய அருட்பார்வைக்காக ஆசைப் பட்டிருப்பவர்கள்; அவர்கள் அவனையே நினைத்து, மனம் கசிந்து வருந்தி உருகினும், அவர்களுக்கு அருள் செய்து உதவ உடன்படமாட்டான். காரணம் அவன் தன்னுடைய மனத்திற்கு இனிமை தரக்கூடியவளான ஒரு மங்கையைத் தேடிக் கொண்டிருக்கிறான்.

நங்கையர் என்றாலே பெண்களிற் சிறந்தவர் என்பது பொருள். அதிலும் அழகு அமைந்த நங்கையர் என இங்கே குறித்தது வடிவழகைக் குறிக்கும் எனக் கொள்க. எனைப் பலர் என்பது எத்துணையோ பலர் என்று அளவில்லாத என்ற பொருளைத் தரும். இதே போல் முன்பு சூர்ப்பணகையும் தன் அழகில் மயங்கி மும்மூர்த்திகளும், மன்மதனும் கூடத் தன்னை மனைவியாக அடையத் தவம் செய்கிறார்கள் என்று கூறியதையும் ஒப்பு நோக்குக.

48. ''ஆண்டையான் அரசு வீற்றிருந்த அந்நகர்,
வேண்டி, யான் சில்பகல் உறைதல் மேவினேன்;
நீண்டனென் இருந்து, அவற்பிரியும் நெஞ்சிலேன்,
மீண்டனென்'' என்றனன், வினையம் உன்னுவான். (3468)

(ஆண்டையான் - அத்தன்மையானவன் / ஆண்தகை / தலைவனுமாம்; வேண்டி - விரும்பி; பகல் - நாள்; உறைதல் - தங்குதல்; மேவுதல் - மேற்கொள்ளுதல்; வினையம் - சூழ்ச்சி / தந்திரம் / காரியம்)

அத்தகைய தன்மையையுடைய தலைவனான இராவணன் அரசு செய்து திகழுகின்ற இலங்கை மாநகரில், நானே விரும்பிச் சில காலம் தங்கலானேன்; ஆயின் அவன் நற்குணங்களைக் கண்டும், முனிவர்களைப் பராமரிக்கும் முறை கண்டும், அங்கேயே நீண்ட நாட்கள் தங்கியிருந்தேன். இப்பொழுது, அவனைப் பிரியும் உள்ளம் இல்லாது பிரிந்து இங்கு திரும்பி வந்திருக்கிறேன் என்றான், ஒரு சூழ்ச்சியைச் சிந்தித்திருப்பவனான முனிவன் வேடத்தில் இருக்கும் இராவணன்.

ஆண்டையான் என்ற சொல் ஆண் தகையான் என்ற சொல்லின் மரூஉச் சொல்லாகக் கொண்டு தலைவன் என்ற பொருளிலும், அத்தகைய தன்மை படைத்தவன் என்ற பொருளிலும் விளக்கப்பட்டது. இன்றும் சோழநாட்டில் பண்ணையார்களை ''ஆண்டை'' என்ற சொல்லில் வழங்குவதைக் காணலாம். கொஞ்ச நாட்கள் தங்கலாம் என்று தான் போனேன். ஆனால் அவன் விருந்தோம்பல் பண்பைக் கண்டு நீண்ட காலம் தங்கி விட்டேன். அவனை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்து திரும்பி வந்தேன் என்று இவன் கூறுவது, இராவணனைப் பற்றிச் சீதையின் உள்ளத்தில் ஒரு நல்ல எண்ணத்தை ஏற்படுத்தவே என்க.

49. சீதை மீண்டும் வினவுதல்

''வேதமும், வேதியர் அருளும் வெஃகலா,
சேதன மன்உயிர் தின்னும், தீவினைப்
பாதக அரக்கர்தம் பதியின் வைகுதற்கு
ஏது என்? உடலமும் மிகை என்று எண்ணுவீர்!'' (3469)

(வெஃகுதல் - விரும்புதல்; சேதனம் - பகுத்தறிவு; பதி - நகர் / ஊர் / இலங்கை; ஏது - காரணம்; அருள் - அருள் ஒழுக்கம் / தவம்; பாதகம் - பெரும்பாவம்)

''முற்றும் துறந்த முனிவர்கள் பொதுவாகத் தங்கள் உடலையே மிகுதி என்று எண்ணுபவர்கள். அத்தகைய எண்ணமுடைய நீர், வேதங்களையும். வேதங்களை ஓதும் அந்தணர்களையும், அவர்களது கருணையையும் தவ ஒழுக்கத்தையும் விரும்பாது, வெறுப்பவர்களும், பகுத்தறிவுடைய நிலைபெற்ற உயிருடைய மானிடர்களையே கொன்று தின்னும் கொடிய செயலைப் புரிகின்ற பெரும்பாவிகளுமான அரக்கர்களின் தலைநகராகிய இலங்கையில் சென்று, தாங்கள் இவ்வளவு நாட்கள் தங்குவதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டாள் சீதை.

துறவிகளுக்கு உடல்கூடப் பெரிய சுமை என்பது ''பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பு மிகை'' என்ற வள்ளுவர் குறளாலும் (345) அறியலாம். உடம்பையே சுமை என்று கருதுபவர்கள் துறவிகள். ஆனால் பிறர் உடம்பையே உணவாக உட்கொள்ளுபவர்கள் அரக்கர்கள். அவ்வாறிருக்கும் போது, அத்தகைய அரக்கர்களின் ஊரில் தாங்கள் நீண்ட

காலம் தங்கியிருந்ததற்குத் தகுந்த காரணம் என்ன? என்று கேட்டாள் சீதை என்பதாம். இன்னும் ஒன்று, நல்வினையை விரும்பாதது மட்டுமல்ல; தீ வினைகளை விரும்பிச் செய்பவர்கள் அரக்கர்கள். ''அருள் அல்லது யாதெனில் கொல்லாமை கோறல்; பொருளல்லது அவ் ஊன்தின்னல்'' என்பது குறள் (254). உடலுக்கே ''உயிர்ப் பொறை'' என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை அறிக. இங்கு ''தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற தீயார் சொல் கேட்பதுவும் தீதே; தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு இணங்கி இருப்பதுவும் தீதே'' என்ற மூதுரை (8) நினைவு கூரத்தகும்.

50. ''வனத்திடை மாதவர் மருங்கு வைகலிர்;
புனல் திருநாட்டிடைப் புனிதர் ஊர்புக
நினைத்திலிர்; அறநெறி நினைக்கிலாதவர்
இனத்திடை வைகினிர்; என் செய்தீர்!'' என்றாள். (3470)

(வனம் - கானகம்; மருங்கு - அருகில் / பக்கல்; வைகல் - தங்குதல்; புனல் - நீர்வளம்; இனம் - கூட்டம்; புனிதர் - பரிசுத்தமானவர்; அறநெறி - தரும மார்க்கம்)

''இந்தக் காட்டின் இடத்தில் வசித்துப் பெருந்தவம் இயற்றும் முனிவர்களுடன் நீர் தங்கியிருக்கவில்லை; நீர் வளம் மிக்க செல்வ வளம் பொருந்திய அழகிய இல்லறத்தார்களும் பரிசுத்தமானவர்களும் வாழும் நல்ல நாட்டிடைச் சென்று வாழக்கூட எண்ண மறந்தீர்; தரும மார்க்கத்தையே எண்ணிப்பார்க்க இயலாதவர்களான அரக்கர்கள் கூட்டத்தில் சென்று தங்கியிருந்திருக்கிறீர்; எத்தகைய பாவத்தைச் செய்திருக்கிறீர் தெரியுமா?'' என்று சீதை தவவேடமணிந்திருக்கும் இராவணனைப் பார்த்துச் சற்று கடிந்தே கேட்டாள்.

''நீர் துறவியாக இருந்தால் துறவிகள் நிறைந்து தவம் செய்யும் கானகத்தில் தானே இருந்திருக்க வேண்டும்? ''நற்றாமரைக் கயத்தில் தானே நல்லன்னம் சேரவேண்டும்'', சரி; நல்லவர்கள் வாழ்கின்ற நல்ல ஊர்களிலாவது சென்று நல்லவர்களுடன் சேர்ந்து இருந்திருக்கலா மல்லவா? அதைச் செய்யாதது மட்டும் அல்ல; அதைப் பற்றி எண்ணிப் பாக்கவும் இல்லை; ஆனால் தரும நெறி பற்றி நினைக்காதவர்களான அரக்கர்கள் கூட்டத்தோடு, அவர்கள் ஊரில் நீண்ட காலம் தங்கியிருந்து பிரிய மனமில்லாமல் திரும்பி வந்திருக்கிறீரே? நீர் செய்த காரியம் எத்தகைய பாவம் என்பதை எவ்வாறு கூற முடியும்?'' என்கிறாள் சீதை. ''அடியேன், உன் அடியார் நடுவுள இருக்கும் அருளைப் புரிவாய்'' என்று இறைஞ்சுகிறார் மாணிக்கவாசகர் தம் திருவாசத்தில். சத்சங்கம் என்றும் நன்மையைத்தரும். துர்சங்கம் தீமையைத்தவறாது விளைவிக்கும் என்பது கருத்து. துறவிகள் கானகத்தில் உறைவதைத் தவிர்த்தால், க்ஷேத்திராடனங் களில் சென்று தீர்த்தம் ஆடச் செல்லலாம். அவ்வாறு செல்லும் போது நல்லவர்கள் வாழும் நகரங்களுக்குச் சென்று அவர்கள் இல்லங்களில்

தங்கலாம். அதை விடுத்து அரக்கர்கள் ஊர் தங்கினது பெரும் பாவம் என்கிறாள் சீதை.

51. இராவணன் ''அரக்கர்களும் நல்லவர்களே'' என்று கூறுதல்

மங்கை அஃது உரைத்தல் கேட்ட
வரம்பு இலான், ''மறுவின் தீர்ந்தார்,
வெங்கண்வாள் அரக்கர்'' என்ன வெருவலம்;
மெய்ம்மை நோக்கின்,
திங்கள் வாள் முகத்தினாளே!
தேவரின் தீயர் அன்றே;
எங்கள் போலியர்க்கு நல்லார்
நிருதரே போலும்'' என்றான். (3471)

(வரம்பிலான் - வரம்பு கடந்தவன்; மறு - குற்றம்; வெருவுதல் - அஞ்சுதல்; போலியற்கு - போன்றவர்களுக்கு; நிருதர் - அரக்கர்; வெங்கண் - கொடுமை)

சீதை அவ்வாறு கூறக் கேட்ட, எல்லை மீறி நடக்கின்ற இயல்புடைய வனான இராவணன், ''சந்திரன் போன்ற ஒளி பொருந்திய முகத்தை உடையவளே! கொடுமையான வாட்படையை ஏந்திய அரக்கர்கள் குற்றமற்றவர்கள் என்று கருதி, அவர்களைக் கண்டு துறவிகளாகிய நாங்கள் அஞ்சமாட்டோம். உண்மையாக ஆராய்ந்து பார்த்தால், அரக்கர்கள் அந்தத் தேவர்களைப் போலத் தீயவர்கள் அல்லர்; எங்களைப் போன்ற துறவிகளுக்கு அரக்கர்களே நல்லவர்களாய்ப் படுகிறார்கள்'' என்று கூறினான்.

''வரம்பு இலான்'' என்ற சொல்தான் மேற்கொண்டிருக்கும் தவவேடத் திற்கும், அவன் கூறுகின்ற சொற்களுக்கும் தொடர்பு இல்லாததால் எல்லையற்ற ஒழுக்க நெறி பிறழ்ந்தவன் என்பதைக் குறிக்கும். உங்களைப் போன்றவர்களுக்கு வேண்டுமானால் அரக்கர்கள் தீயவர்கள் போலத் தெரியலாம். ஆனால் எங்களைப் போன்றவர்களுக்கு அவர்களும் நல்லவர் களாகத் தான் தெரிகிறார்கள் என்றான் என்பது கருத்து. தேவர்களையும் அரக்கர்களையும் ஒன்றே போல் கருதுகிற சமநிலை என்பதாம்.

52. சீதை மீண்டும் கடிந்து கூறுதல்

சேயிழை அன்ன சொல்ல, ''தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவர் அல்லர், சொல்லின், தொல்நெறி தொடர்ந்தோர்'' என்றாள்;
''மாயவல் அரக்கர் வல்லர், வேண்டு உரு வரிக்க'' என்பது,
ஆயவள் அறிதல் தேற்றாள்; ஆதலின், அயல் ஒன்று எண்ணாள். (3472)

(சே - செம்மையான; இழை - அணிகலன்கள்; வரிக்க - தாங்க / ஏற்றுக்கொள்ள; அயல் - வேறு; சொல் - புகழ்; தொல் - பழமையான)

அவ்வாறு இராவண சந்நியாசி சொல்லவும், ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவளான சீதை, மாயச் செயல்களில் வல்லவர் களான அரக்கர்கள், தாங்கள் வேண்டும் வடிவத்தை வேண்டும் போது மேற்கொள்ளவல்லவர்கள் என்பதை அறியமாட்டாள் ஆதலால், தன் எதிரே நிற்கும் இராவணனைப் பற்றி வேறு ஒன்றும் தவறாக எண்ணாமல், ''தீயவர்களைச் சேர்ந்தால், நல்லவர்களும், தீயவராகி விடுவர், நல்லவர்களாக இருக்க மாட்டார்கள்'' என்று மேலும் கூறினாள்.

அவன் மேற்கொண்டிருந்த வேடத்தை உண்மை என்று கருதியே இவ்வாறு கூறினாள் என்பதாம். சிற்றினம் சேர்ந்தவர் சிற்றினத்தாரே என்று கருதினாள் சீதை என்பதாம்.

53. சீதை ஐயுறுகிறாள் என்பதை இராவணன் அறிந்து கொள்ளுதல்

''அயிர்த்தனள் ஆகும்'' என்று, ஓர்
ஐயுறவு அகத்துக் கொண்டான்;
பெயர்த்து, அது துடைக்க எண்ணி,
பிறிதுறப் பேசலுற்றான்;
''மயக்கு அறும் உலகம் மூன்றின்
வாழ்பவர்க்கு, அனைய வல்லோர்
இயற்கையின் நிற்பது அல்லால், இயற்றல்
ஆம் நெறி என்?'' என்றான். (3473)

(அயிர்த்தல் - ஐயுறுதல்; ஐயுறவு - சந்தேகம்; அகம் - மனம்; பெயர்த்து - மீண்டும்; துடைக்க - போக்க; பிறிது - வேறுவகை; இயற்கை - இயல்பான குணம்)

''சீதை கூறியதைக் கேட்ட இராவணன், சீதை தன்னைச் சந்தேகிக்கிறாள் என்று தன் மனத்துள் ஒரு ஐயம் கொண்டான். எனவே அதைப் போக்க எண்ணி, உடனே மீண்டும் தன் சொற்களில் மாறுபட்டுப் பேசத் தொடங்கினான்; தடுமாற்றம் இல்லாத - தெளிவான இம்மூவுலகங் களிலும் வாழ்பவர்கள் அனைவருக்கும், அத்தகைய வலியவர்களான அரக்கர்களது இயல்பான தன்மைக்கு ஒத்துப் போய், அவர்கள் வழியில் செல்வது அல்லாமல், வேறு ஒரு வழியில் செல்லுவதும் இயலுமோ?'' என்று கேட்டான்.

ஐயுறவு என்பது ஐய உறவு எனப்பிரியும். உலகம் மூன்று என்பது விண், மண், பாதலம் ஆகியவற்றைக் குறிக்கும். அறிவுத் தெளிவு பெற்றவர்கள் கூடத் தம் விருப்பிற்கு மாறாக வல்லமையுடையோர் வழியில் தான் சென்றாக வேண்டியிருக்கிறது என்று கூறினான் என்க. ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்பது பழமொழி.

54. சீதை ''இராமன் விரைவில் அரக்கர்களை அழிப்பான்'' எனல்

திறம் தெரி வஞ்சன், அச்சொல்
செப்பலும், செப்பம் மிக்காள்,
''அறம் தரு வள்ளல், ஈண்டு இங்கு
அருந்தவம் முயலும் நாளுள்,
மறம்தலை திரிந்த வாழ்க்கை அரக்கர்
தம் வருக்கத்தோடும்
இறந்தனர் முடிவர்; பின்னர், இடர்
இலை உலகம்'' என்றாள். (3474)

(தெரி - தெரிந்து கொள்ளுதல்; செப்பம் - மேன்மைக் குணம்; தருதல் - வளர்த்தல்; முயல்தல் - செய்தல்; திரிதல் - மாறுபடுதல்; வருக்கம் - வர்க்கம் / குலம்; மறம் - பாவச் செயல்கள்)

சீதையின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட வஞ்சகனான இராவணன் அந்தச் சொற்களைக் கூறியதும், மேன்மையான குணநலன்கள் வாய்க்கப் பெற்றவளான சீதை, ''தருமத்தைத் தோற்றுவித்து, அதைக் காத்து, வளர்க்கும் இயல்புடைய வள்ளலான இராமன், இங்கு இப்பொழுது முயன்று செய்யும் அரிய தவம் முடிவடையும் காலத்திற்குள், பாவச் செயல்களையே புரிந்து திரிகின்ற வாழ்க்கையை உடைய அரக்கர்களை, அவர்கள் குலத்தோடு அழித்து ஒழிப்பான். பின்னர் இவ்வுலகிற்குத் துன்பமே இருக்காது'' என்று கூறினாள்.

''திறம் தெரி வஞ்சன்'' என்பது உற்றார் உள்ளத்தில் ஏற்படும் மாறுதல்களைக் கூர்ந்து நோக்கி அறிந்து கொள்ளும் வஞ்சக எண்ணம் உடையவன் என்பது குறிக்கும். ''அருந்தவம் முயலும் நாளுள்'' என்பது இராமனும் தாமும் வனவாசம் முடிந்து அயோத்தி திருப்புவதற்குள் என்ற பொருளைத் தரும். ''செப்பம்'' என்பது கருத்தும், சொல்லும், செயலும் தம்முள் மாறாகாமை என்று விரிவான பொருள் தரும். இராவணனை ''வஞ்சன்'' என்றும், சீதையைச் ''செப்பம் மிக்காள்'' என்றும் இரு முரண்பட்ட சொற்களைக் கையாண்ட கவிஞனின் திறம் வியந்து போற்றற்கு உரியது.

55. இராவணன், ''மானிடரால் அரக்கரை அழிக்க இயலாது'' எனல்

மானவள் உரைத்தலோடும், ''மானிடர், அரக்கர் தம்மை,
மீன் என மிளிரும் கண்ணாய்! வேர்அற வெல்வர் என்னின்,
யானையின் இனத்தை எல்லாம் இளமுயல் கொல்லும்; இன்னும்,
கூன்உகிர் மடங்கல் ஏற்றைக் குருளை மான் கொல்லும்'' என்றான். (3475)

(மானவள் - பெருமையுடையவள்; மிளிர்தல் - பிறழ்ந்து ஒளிவீசுதல்; வேர் - அடி / மூலம்; கூன் - வளைந்த; உகிர் - நகங்கள்; குருளை - குட்டி; மடங்கல் - ஆண் சிங்கம்; மானம் - பெருமை; மானவன் - ஆண்பால், மானவள் - பெண்பால்)

பெருமையுடையவளும், மான் போன்ற மருண்ட பார்வையுடைய வளுமான சீதை அவ்வாறு கூறியதும், இராவணன் சீதையை நோக்கி, ''கயல் மீன்கள் போலப் பிறழ்ந்து ஒளி வீசும் கண்களை உடையவளே! எளிய மனிதர்கள், வலிய அரக்கர்களை, அடிவேரோடு வென்று, கொன்று அழிப்பர் என்றால், யானைக் கூட்டங்களை யெல்லாம் ஒரு சிறு இளமையான முயல் கொன்று விடும்; மேலும், வளைந்த நகங்களை யுடைய ஆண் சிங்கத்தை ஒரு மான் குட்டி கொன்றுவிடும்,'' என்றான்.

யானையின் இனத்தையெல்லாம் என்று பன்மையில் கூறியது அரக்கர் கூட்டத்தை எல்லாம் என்றும், மடங்கல் ஏறு என்று ஒருமையில் கூறியது, அரக்கர் தலைவன் இராவணனையும் குறிக்கும் என்க. யானையின் கூட்டத்தை இளமுயல் கொல்வதும், மடங்கல் ஏற்றைக் குருளை மான் கொல்வதும் கூடாமை, இயலாமையை உணர்த்திற்று. அதுபோல அரக்கர்கள் கூட்டத்தையோ, அதன் தலைவனான இராவணனையோ எளிய மானிடனான இராமனால் வென்று, கொன்று, ஒழிக்க முடியாது என்றான் என்பதாம்.

யானையின்இனம்அரக்கர்கூட்டத்திற்கும், இளமுயல்இராமனுக்கும், மடங்கல் ஏறு இராவணனுக்கும், குருளை மான் இராமனுக்கும் உவமை என்க.

56. சீதை ''இராமன் முன்பே அரக்கர்களை அழித்தவன்'' என்று கூறுதல்

''மின் திரண்டனைய பங்கி
விராதனும், வெகுளி பொங்கக்
கன்றிய மனத்து வென்றிக் கரன்
முதல் கணக்கிலோரும்,
பொன்றிய பூசல் ஒன்றும் கேட்டிலிர்
போலும்'' என்றாள்
அன்று அவற்கு அடுத்தது உன்னி,
மழைக் கண் நீர் அருவி சோர்வாள். (3476)

(மின் - மின்னல்; பங்கி - ஆண்கள் தலை மயிர்; கணக்கிலோர் - அளவற்றவர்; பொன்றிய - இறந்துபட்ட; பூசல் - போர்; ஒன்றும் - சிறிதும்; அடுத்தது - நேர்ந்தது; உன்னி - நினைத்துப் பார்த்து; சோர்தல் - பொழிதல் / சொரிதல் / வடித்தல்; கன்றிய - வெதும்பிய / முதிர்ந்த)

மின்னல் ஒருங்கு திரண்டு வந்தாற் போன்ற சிவந்த செம்பட்டை மயிர் உடைய விராதனும், சூர்ப்பணகை மூக்கறுபட்டாள் என்பதனைக் கேட்டதனால் மிக்கக் கோபம் கொண்டு வெதும்பிய உள்ளத்தைப் பெற்றவனும், வெற்றியாளனுமான கரன் முதலிய எண்ணற்ற அரக்கர்களும், இராமன் அம்பால் போரில் அழிந்துபட்ட செய்தியை நீ சிறிதும் கேள்விப் படவில்லை போலும்'' என்றாள். யார்? அந்தப் போரின் போது தன் கணவனான இராமனுக்கு நேர்ந்த உடற்புண்களை இப்போது எண்ணிப் பார்த்து மழை போலத் தன் கண்ணீர் அருவியைப் பொழிகின்ற சீதாதேவி.

அரக்கர்களின் தலைமயிர் செம்பட்டை நிறமுடையதாயிருத்தலாலும், நீண்டும் வளைந்தும் இருத்தலாலும், மின்னலுக்கு உவமை; கணக்கிலோர் என்பது, கரனுடன் கூட வந்த பதினான்காயிரம் படைவீரர்களையும், பதினான்கு படைத்தலைவர்களையும், தூடணன், திரிசிரன் முதலியவர்களையும் உள்ளடக்கியது என்க. அன்று அப்போரில் ஏற்பட்ட உடல்புண்களை இராமன் தவக்குடிலுக்குத் திரும்பி வந்ததும், சீதை தன் சிவந்த கைகளால் புண் ஆற்றிய நிகழ்ச்சியையும் இப்போது நினைவு கூர்ந்து கண்ணீர் சொரிந்தாள் என்க. இராமனுக்கு நேர்ந்தது குறித்துக் கண்ணீர் சொரிந்தாள் என்பதும், அப்போரில் மடிந்த எண்ணற்ற அரக்கர்களை எண்ணிக் கண்ணீர் வடித்தாள் என்பதும், இரண்டும் பொருந்துவது நினைக.

57. ''அறம் வெல்லும், பாவம் தோற்கும்'' எனச் சீதை கூறுதல்

''வாள் அரி வள்ளல்; சொன்ன மான் கணம் நிருதர்; அன்னோர்
கேளொடு மடியுமாறும், வானவர் கிளருமாறும்,
நாளையே காண்டிர் அன்றே; நவை இலிர், உணர்கிலீரோ?
''மீள அருந் தருமம் தன்னை வெல்லுமோ பாவம்?'' என்றாள். (3477)

(வாள் - கொடிய; அரி - சிங்கம்; கணம் - கூட்டம்; நிருதர் - அரக்கர்கள்; கேள் - உறவினர்; ஆறு - தன்மை; கிளர்தல் - மகிழ்ச்சியுறுதல்; மீளுதல் - நீங்குதல் / விலக்குதல்; நவை - குற்றம்; உணர்தல் - அறிதல்)

''கொடிய சிங்கம் போன்றவன் இராமன்; நீங்கள் கூறிய மான் கூட்டம் தான் அரக்கர்கள்; அவர்கள் தங்களுடைய உறவினர்களோடு உயிரிழக்கப் போகும் தன்மையையும் அதற்கு மாறாக, வானத்துத் தேவர்கள் மகிழ்ச்சியால் களிப்படையப்போகும் தன்மையையும் நாளைக்கே காணப் போகிறீர்கள் அல்லவா? விலக்க முடியாத தருமத்தைப் பாவம் வென்று விடுமோ? நீவிர் குற்றமற்ற துறவி அல்லவா? இதனைத் தாங்கள் அறிய வில்லையா?'' என்று கேட்டாள் சீதை.

முன்பு இராவணன் அரக்கர்கள் சிங்கக் கூட்டம் என்றும், இராமன் மான் குட்டி என்றும் கூறியதையே இப்போது சீதை வேறுவகையாக மாற்றி, இராமன் ஆண்சிங்கம் என்றும் அரக்கர்கள் மான்கூட்டம் என்றும் கூறியதை

உணர்க. நாளை என்பது ''கூடிய விரைவில்'' என்ற பொருளைத் தரும். இன்னும் இராவணனைக் குற்றமற்ற உண்மைத் துறவி என்றே கருதுகிறாள் சீதை. எனவே தான் ''நவையிலீர்'' என்று அழைக்கிறாள் என்க.

58. இராவணன் சீற்றம்

தேனிடை அமுது அளாய அன்ன மென்சில சொல்மாலை,
தானுடைச் செவிகளூடு தவழுற, தளிர்த்து வீங்கும்
ஊனுடை உடம்பினானும், உருகெழு மானம் ஊன்ற,
''மானிடர் வலியர்'' என்ற மாற்றத்தால், சீற்றம் வைத்தான். (3478)

(அளாய - கலந்த; மாலை - வரிசை; வீங்குதல் - பூரித்தல்; மாற்றம் - சொல்; ஊன்றுதல் - மனத்தில் பதிதல்; சீற்றம் - கோபம்; அமுது - பாலுமாம்; தவழ்வுற - நுழைய; ஊன் - தசை)

தேனுடன் தேவாமிர்தம் கலந்தது போன்ற இனிய, மென்மையான, சில சொற்களை முறைப்படுத்திக் கூறிய சீதையின் சொற்களின் வரிசை, தன்னுடைய இருபது செவிகளுள் வந்து நுழையவும், அதனால் மனம் களித்துப் பூரிக்கும் தசையையுடைய உடம்பைக் கொண்டவனான இராவணனும், ''இராம இலக்குவர்களாகிய இருமானிடரும் அரக்கர்களைக் காட்டிலும் வலியவர்'' என்ற அவள் சொல்லைக் கேட்டு, அச்சம் தருகின்ற தன்மான உணர்ச்சி அழுந்திப்பதிய, அதனால் மிக்கக் கோபம் கொண்டான்.

சீதை தன் இனிய சொற்களை முறைப்படுத்தி வரிசையாகச் சொன்னாள் என்பதாம். ''நிரந்து இனிது சொல்லுதல்'' என்பார் வள்ளுவரும். குறள் (648) சீதையின் இனிய சொற்களில் மகிழ்ந்ததால் உள்ளம் பூரித்த இராவணன், அவள் கூறிய செய்தியில் இருந்த கருத்தால் கோபம் கொண்டான் என்றது ஒரு நயம். உவகைச் சுவையை வெகுளிச் சுவை வென்றது என்பதாம்.

59. இராணவன் சூள் உரைத்தல்

சீறினன், உரைசெய்வான், ''அச் சிறுவலிப் புல்லியோர்கட்கு
ஈறு, ஒரு மனிதன் செய்தான்'' என்று எடுத்து இயம்பினாயேல்,
தேறுதி நாளையே; அவ்இருபது திண் தோள் வாடை
''வீறிய பொழுது, பூளைவீ என வீவன் அன்றோ?'' (3479)

(புல்லியோர் - அற்பர்கள்; ஈறு - முடிவு / அழிவு; தேறுதல் - தெளிதல்; வாடை - காற்று; வீறுதல் - வீசுதல்; வீ - பூ; வீவன் - அழிவான்)

அவ்வாறு சீறியவனான இராவணன் பின்வருமாறு கூறலானான்; ''அந்தச் சிறிய வலிமை படைத்த அற்பர்களான விராதன், கரன் முதலியோர்க்கு இறுதி முடிவு செய்தவன் ஒரு மனிதனான இராமனே என்று நீ சிறப்பாகப் பேசினாயேயானால், அதன் முடிவை நாளைக்கே தெளிவாக

அறிவாய்! இராவணனுடைய வலியஇருபது தோள்களும் காற்றுப் போல வீசிய பொழுதே, அந்த இராமன் பூளைப் போல அழிந்துபடப் போகிறான் பார்!'' என்றான்.

தன்னைச் சார்ந்த அரக்கர்களான கரன் முதலியோாரையே ''சிறுவலிப் புல்லியோர்கள்'' எனத் தாழ்த்திப் பேசியது இராவணன் வலிமையைச் சீதைக்கு நன்கு உணர்த்தவே என்க. ''எடுத்து இயம்புதல்'' என்பது சிறப்பாகப் பாராட்டிப் பேசுதல் என்ற பொருளைத் தரும். ''தேறுதி நாளையே'' என்பது முன்பு சீதை ''நாளையே காண்டீர்'' என்று கூறியதைத் தழுவிக்கூறியதாகும். இராவணன்போர்செய்ய வேண்டும் என்பதில்லை. அவனது வலிய இருபது தோள்களின் காற்றுப்பட்டாலே, இராமன் அழிந்து போவான் என்றது தனது தோளாற்றல் மேல் இராவணன் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையைக் குறிக்கும். பூளை என்பது ஒரு வகைக் காட்டுச்செடி; பூளைப் பூ வெண்மையாய்ப் பஞ்சு போன்று மென்மையாக நுட்பமாக இருக்கும். காற்றுக்குத் தாங்காது உதிர்ந்துபடும் இயல்பினது. பொங்கல் புதுநாளில் பூக்களோடு கூடிய இச்செடிகளைக் கொண்ர்ந்து வீட்டின் முன்புறக்கூரை முகப்பில் சொருகி வைப்பது கொங்கு நாட்டு வழக்கம். சிவபெருமான் மன்மதனை எரித்த போதும் பூளைப் பூவையே உவமை கூறியதை எண்ணுக.

60. இராவணன் வலிமையைச் சந்நியாசி புகழ்தல்

''மேருவைப் பறிக்க வேண்டின்,
விண்ணினை இடிக்க வேண்டின்,
நீரினைக் கலக்க வேண்டின்,
நெருப்பினை அவிக்க வேண்டின்,
பாரினை எடுக்க வேண்டின், பலவினைச்
சிலசொல் ஏழாய்!
யார் எனக் கருதிச் சொன்னாய்?
இராவணற்கு அரிது என்?'' என்றான். (3480)

(ஏழாய் - பெண்ணே; பறித்தல் - பெயர்த்தெடுத்தல்; நெருப்பு - வடவைத்தீ)

''பலசொற்களையேபேசுகின்றபேதைப்பெண்ணே! மேருமலையைப் பெயர்த்தெடுக்க வேண்டுமென்றாலும், வானமுகட்டை இடித்துத் தள்ள வேண்டும் என்றாலும், கடல் நீரையெல்லாம் சேறாக்கிக் கலக்க வேண்டுமென்றாலும், அதிலுள்ள வடவைக் கனலை அவித்துவிட வேண்டும் என்றாலும், இப்பூமியைத்தூக்கி நிறுத்த வேண்டும் என்றாலும், இத்தனை செயல்களும் இராவணனுக்கு மிக எளிதானதாகும்; இராவணனை யார் என்று எண்ணி இத்தகைய சொற்களைக் கூறினாய்?'' என்று கேட்டான் இராவணச் சந்நியாசி.

''மேருவைப் பறிக்க வேண்டின்'' என்பது அவன் முன்பே கயிலையங்கிரியைப் பெயர்த்தெடுத்தவன் என்பது புலப்பட இப்பொழுது மேருமலையைக் கூறினான் என்க. காற்றுத் தவிர மற்ற நான்கு பூதங்களையும் கூறியதால், உபலட்சணத்தால் இனம் பற்றிக் காற்றையும், வெற்றிகொள்ள வல்லவன் என்பது பெறப்படும். ஐம்பூதங்களையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டவன் என்பது கருத்து. ''மலை அகழ்க்குவனே, கடல் தூர்க்குவனே, வான் வீழ்க்குவனே, வளி மாற்றுவனே'' என்பது பட்டினப்பாலை. ''பாரினை எடுக்க வேண்டின்'' என்பது, பின்னர் இராவணன் சீதையைப் பூமியோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு போகப் போகும் நிகழ்ச்சியை முன்னரே அறிவித்தது என்க. இராவணனுக்குச் செயற்கரிய செயல் என்று ஒன்றும் இல்லை என்பது கருத்து. நெருப்பு, காற்று, நீர் (அக்னிதேவன், வாயுதேவன், வருணன்). முதலியவற்றை இராவணன் ஏவலாளர்களாய்க் கொண்டவன் என்பது முன்பே கண்டதாம்.

61. சீதை, இராமன் பரசுராமனை வென்றது கூறுதல்

''அரண்தரு திரள் தோள் சாலஉள
        எனின், ஆற்றல் உண்டோ?
கரண்ட நீர் இலங்கை வேந்தைச்
        சிறை வைத்த கழற் கால்வீரன்
திரண்ட தோள் வனத்தை எல்லாம்,
        சிறியது ஓர் பருவம் தன்னில்,
இரண்டு தோள் ஒருவன் அன்றோ,
        மழுவினால் எறிந்தான்?'' என்றாள். (3481)

(அரண் - பாதுகாவல்; சால - மிகுதி; கரண்டம் - நீர்க்காக்கைகள்; வனம் - காடு; மழு - கோடாலி; எறிதல் - வெட்டுதல்; வீரன் - கார்த்த வீரியார்ச்சுனன்; ஒருவன் - பரசுராமன்)

''உடம்புக்குப் பாதுகாப்பாக விளங்கும் திரண்ட தோள்கள் மிகுதியாக இருக்கின்றன என்றால் அதனால் வல்லமை வந்ததாக ஆகி விடுமோ? நீர்க்காக்கைகள் வாழ்கின்ற கடல் நீரால் சூழப்பெற்ற இலங்கையின் அரசனான இராவணனைச் சிறையில் அடைத்து வைத்த வீரக்கழல்கள் அணிந்த கால்களையுடைய வீரனான கார்த்த வீரியார்ச்சுனனின் ஆயிரம் தோள்களாகிய காட்டை முழுவதும், சிறிய இளம் பிராயத்தவனும், இரண்டு தோள்களையுமே பெற்றிருந்த ஒப்பற்ற மனிதனான பரசுராமன் என்பவன்தானே, தன்னுடைய மழுவாயுதத்தால் வெட்டி வீழ்த்தினான்''? என்றாள் சீதை.

உடம்புக்குப் பாதுகாப்புத் தருவது தோள்கள் / கைகள். கார்த்த வீர்யாச்சுனன் என்பவன் ஹே ஹய நாட்டுக் கிருதவர்மன் என்பவன் மைந்தன். ஆயிரம் கைகள் உடையவன். இராவணன் திக்குவிஜயம் செய்து

வரும் போது இந்தக் கார்த்த வீரியார்ச்சுனன் நருமதையாற்றில் நீராடிக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்தான். எனவே அங்கு சென்று தானும் சிவபூசை செய்யலானான். மற்றொரு இடத்தில் நீராடும் கார்த்த வீரியார்ச்சுனன் தான் நீராடுவதற்கு அங்கு மெதுவாய் ஓடும் ஆற்று நீர் போதாது என்று, தனது ஒரு பக்கத்து ஐநூறு கைகளினால் ஆற்று நீரின் போக்கைத் தடுத்தான். எனவே அது இராவணனின் சிவபூசையை நிலைகுலையச் செய்தது. சீற்றம் கொண்ட இராவணன் கார்த்த வீரியார்சுனனை எதிர்த்துப் போர் செய்யத் தன் படைகளுடன் சென்றான். ஆனால் கார்த்த வீரியார்ச்சுனனோ தனது ஆயிரம் கைகளால் இராவணனையும் அவனது சேனைகளையும் தாக்கி, இராவணனைச் சிறைப்படுத்தினான். இராவணன் சிவபெருமானை வேண்ட, அவர் வந்து கார்த்த வீரியார்ச்சுனனைச் சமாதானப்படுத்தி, அவனுக்கு ''இராவணஜித்'' என்ற பட்டத்தையும் நல்கி, இராவணனைச் சிறை மீட்டார் என்பது புராணவரலாறு.

தோள்வனம் என்பது மிகுதியான ஆயிரம் தோள்களைக் குறித்தது என்க. பரசுராமன் ஜமதக்னி ரேணுகை தம்பதியினரின் நான்காவது மைந்தன். தன் தந்தையின் ஆசிரமத்தில் இருந்த ''ஓமதேனு'' என்னும் பசுவினைக் கவர்ந்து சென்றதனால், பரசுராமன் கார்த்தவீரியார்ச்சுனனைத் தன் மழுவாயுதத்தினை எறிந்து கொன்றான் என்பது மற்றொரு புராணவரலாறு. இவை பாலகாண்டத்துள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன. இவன் வரலாறு உத்திரகாண்டத்தில் கார்த்த வீர்யார்ச்சுனப் படலத்திலும், மகாபாரதத்தில் வனபருவத்திலும், பாகவத புராணத்திலும் மேலும் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன என்பதை அறிக.

62. இராவணன் சீற்றமும், வேடம் கலைதலும்

என்று அவள் உரைத்தலோடும், எரிந்தன நயனம்; திக்கில்
சென்றன திரள் தோள்; வானம் தீண்டின மகுடம்; திண்கை
ஒன்றொடு ஒன்று அடித்த, மேகத்து உரும் என; எயிற்றின்
ஒளிமென்றன; வெகுளி பொங்க, விட்டது மாய வேடம். (3482)

(நயனம் - கண்கள்; திக்கு - திசைகள்; உரும் - இடி; ஒளி - வரிசை; மென்றன - கடித்தன; விட்டது - நீங்கிற்று / கலைந்தது)

என்று சீதை இவ்வாறு கூறியதும், இராவணனுடைய இருபது கண்களும் தீப்பொறி பறக்க எரிந்தன; அவனுடைய பருத்த இருபது தோள்களும் திசைகள் எங்கும் சென்று நிறைந்தன; அவனது பத்து மகுடங்களும் வான்முகட்டைப் பற்றின; திரட்சி மிகுந்த இருபது கைகளும் ஒன்றோடொன்று அறைந்து கொண்டன; மேகத்தில் எழும் இடியோசை போல, பற்களின் வரிசைகள் ஒன்றையொன்று கடித்துக் கொண்டன; மிக்க சினம் மேல் எழுந்ததால் அவன் தன் வயம் இழந்தான். எனவே அவனது

வஞ்சனையான தவக்கோலம் கலைந்து உண்மையான உருவம் வெளிப்பட்டது.

வெகுளியின் மெய்ப்பாடுகள் இப்பாடலில் நன்கு விளக்கப் பெற்றிருக்கின்றன. இவ்வாறே கம்பன் ஒவ்வொரு பாத்திரத்திற்கு ஏற்படும் பலவகைச் சுவைகளையும் மிக நன்றாகச் சித்திரித்திருப்பதைக் காப்பியத்தில் பல இடங்களிலும் கண்டு களிக்கலாம். கம்பனே, விசுவாமித்திரர், துருவாசர், பரசுராமர், இலக்குவன், தாடகை, சுக்கிரீவன் முதலியோர் வெகுளி மெய்ப்பாட்டை அவ்வவ்விடங்களில் விவரிக்கும் அழகும் உணர்ந்து சுவைக்கத்தக்கன. பற்கள் ஒன்றையொன்று கடித்துக் கொள்ளும் ஓசைக்கு மேகத்து இடி முழக்கம் உவமை. அரக்கர்கள் மாயவேடம் தாங்கும் ஆற்றல் பெற்றவர் எனினும், அவர்கள் உணர்ச்சி மெய்ப்பாட்டில் தன் வசம் இழக்கின்ற போதும், இறுதியில் இறக்கும் பொழுதும் தங்கள் சுயஉருவைப் பெறுவர் என்பது புலப்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டு - மாயமான் இறந்த போது மாரீசன் உருப்பெற்றது. பாகவதத்தில் பூதனை, சகடாசுரன், பகாசுரன் முதலியோர் சரித்திரங்களிலும் இத்தகைய உரு மாற்றத்தைக் காணலாம்.

63. சீதை ''இவன் யார்'' என்று அஞ்சுதல்

''இருவினை துறந்த மேலோர் அல்லர்கொல்
இவர்?'' என்று எண்ணி,
அரிவையும், ஐயம் எய்தா, ''ஆர்
இவன் தான்?'' என்று, ஒன்றும்,
தெரிவு அரு நிலையளாக, தீ
விடத்து அரவம் தானே
உருகெழு சீற்றம் பொங்கி, பணம்
விரித்து உயர்ந்தது ஒத்தான். (3483)

(துறந்த - நீங்கிய; மேலோர் - தவமுனிவர்கள்; தெரிவு - தெளிவு; விடம் - நஞ்சு; தீ - கொடிய; அரவம் - பாம்பு; பணம் - படம்; எய்தா - எய்தி)

''நல்வினை, தீவினை என்ற இருவினைகளையும் நீங்கிய தவமுனிவர்கள் இல்லை போலும் இவர்'' என்று சீதையும் எண்ணி, அவன் மேல் சந்தேகம் கொண்டு, ''இவன் யாராய் இருக்கலாம்?'' என்று சிந்தித்தும், ஒன்றும் தெளிவாக அறிய முடியாதவளாய்க் குழப்பத்தில் ஆழ்ந்தாள். அப்பொழுது இராவணன் கொடிய நஞ்சை உடைய பாம்பு ஒன்று தானாகவே மிகுந்த அச்சம் கொண்டு, அதனால் கோபம் மிகுந்து வரத் தன்னுடைய படத்தை அகல விரித்து மேல் உயர்ந்து எழுந்தது போன்று, தன்னுடைய பத்துத் தலைகளையும், இருபது தோள்களையும் அகல விரித்துத் தன் உண்மை உருவில் விளங்கினான்.

பாம்புக்குச் சீற்றம் வரும் போதுதான் படம் விரித்து நிற்கும் அது போல இராவணன் நின்றான் என்பது மிகப் பொருத்தமான உவமை. இராவணன்

இப்போது பத் ...லைகளுடனும் இருபது தோள்களுடனும் நின்ற தோற்றம், பல தலைகளையுடைய ஒரு விடமுள்ள பாம்பு சீறிக் கொண்டு படம் எடுத்து ஆடுவது போலத் தோற்றிற்று சீதாதேவிக்கு. காரணம் அவள் இதுவரை இது போன்ற ஒரு உருவத்தைப் பார்த்ததில்லை. இராமன் பிரிவால் வேறு மயக்கம் உற்றிருந்தாள். எனவே அவள் அச்சம், மயக்கம் முதலியவற்றிற்கு இலக்கானாள் என்க. முதலில் ''மேலோர்'' என்று எண்ணி பின்னர், ''மேலோர் அல்லர்'' என்று முடிவு செய்து, ''பின் யார்'' என்று ஐயம் கொண்டாளே அன்றி, அரக்கன் தான் இவ்வாறு மாறுவேடம் புனைந்து வந்திருக்கிறான் என்பதை எண்ணியும் பார்க்காத நல்லுள்ளம் கொண்டவள் சீதை என்பது புலப்படுத்தப் பட்டிருப்பதை உணர்க.

64. சீதை நடுங்குதல்

ஆற்றவெந் துயரத்து அன்னாள் ஆண்டு
உற்ற அலக்கண் நோக்கின்,
ஏற்றம் என் நினைக்கல் ஆகும்? எதிர்
எடுத்து இயம்பல் ஆகும்
மாற்றம் ஒன்று இல்லை; செய்யும் வினை
இல்லை; வரிக்கல் ஆகாக்
கூற்றம் வந்து உற்ற காலத்து உயிர்
என, குலைவுகொண்டாள். (3484)

(வெம் - கொடிய; அலக்கண் - துன்பம்; ஏற்றம் - மேலானது; மாற்றம் - சொல்; வினை - செயல்; வரித்தல் - நியமித்தல்; குலைவு - நடுக்கம்; ஆற்ற - மிக்க)

இராமன் உயிருக்கு ஏதோ ஊறு நேர்ந்து விட்டது என்று முன்னரே துயரம் கொண்டிருந்த சீதை, இராவணனைச் சுயஉருவில் கண்டவுடன் மிகக் கொடிய துயரத்தை அடைந்தாள். அதைக் கருதிப் பார்த்தால், அதனைவிட மேலான கொடிய துன்பம் இவ்வுலகத்தில் வேறு இருக்கவே முடியாது. அப்படி ஒன்று இருக்கும் என்று எண்ணிப் பார்க்க இயலாது. அவனுக்குப் பதிலாக எந்தச் சொல்லையும் அவளால் சொல்ல முடியவில்லை; அவனை விட்டுத் தப்பித்துச் செல்லவும் செய்யக் கூடிய செயல் ஏதும் தோன்றவும் இல்லை. யாராலும் தடுக்க இயலாத இயமன், ஒருவருடைய உயிரை எடுக்க வந்து சேரும் பொழுது, அவன் உயிர் என்ன பாடுபடுமோ அத்தகைய துன்பத்தை அடைந்தாள் சீதை.

ஆற்ற என்ற சொல் மிகுதியைக் குறித்து ஆற்றமுடியாத என்ற பொருளைத் தந்தது என்க. ''வரிக்கல் ஆகாக் கூற்றம்'' என்னும் சொற்றொடர், இயமனை உயிர் பறித்து வருமாறு யாரும் நியமிப்பதில்லை; அவன் தானாகவே சமயம் பார்த்து வந்து உயிர் கவருவான் என்பதைக் குறிக்கும். அவ்வாறு அவன் வருவதை யாராலும் தடுக்கவும் இயலாது என்பதையும் குறிக்கும். கூற்றம் என்பது

ஒருவருடைய உயிரை உடலினின்றும் கூறுபடுத்தி எடுத்துக் செல்லும் தூதுவன்என்றபொருளில்பயன்படுத்தப்படும். கூற்றுவன்வேறு, இயமன் வேறு என்பதை உணர்க. அவன்காலம் பார்த்து உயிர் கவர்ந்து செல்வதனால்தான் அவனுக்குக் காலன் என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை அறிக. இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்ற அடுக்கும் உணர்ந்து இன்புறத்தக்கது. துயர்-வெம் துயர் -ஆற்ற வெம் துயர்- என்ற சொல்லாட்சியை நோக்குக.

65. இராவணன் சீதையை அச்சுறுத்தல்

''விண்ணவர் ஏவல் செய்ய, வென்ற
என் வீரம் பாராய்;
மண்ணிடைப் புழுவின் வாழும்
மானிடர் வலியர் என்றாய்;
பெண் எனப் பிழைத்தாய்; அன்றேல்
உன்னை யான் பிசைந்து தின்ன
எண்ணுவென் என்னின், பின்னை
என் உயிர் இழப்பென்'' என்றான். (3485)

(விண்ணவர் - தேவர்கள்; பிழைத்தல் - உய்தல்)

விண்ணுலகத்துத் தேவர்களும் நான் ஏவும் குற்றேவல்களைச் செய்யும் படி அவர்களை வென்று அடிமையாக்கிக் கொண்ட என் வீரத்தை நோக்காது, மண்ணுலகத்தில் ஏற்பட்ட புழுக்களைப் போல வாழுகின்ற மானிடர்கள் என்னைக் காட்டிலும் வலிமையுடையவர்கள் என்று கூறினாய்; இவ்வாறு கூறியிருக்கும் நீ உயிர் பிழைத்திருக்கிறாய் என்றால் அதற்குக்காரணம்நீபெண்என்பதுதான். இல்லாவிடில்உன்னைக்கொன்று பிசைந்து தின்னவே நான் விரும்பி இருப்பேன். அவ்வாறு உன்னைக் கொன்று விட்டால், நான் உன்னை அடைய முடியாத நிலை ஏற்பட்டு அதனால் நானும் என் உயிரைப் போக்கிக் கொள்வேன்'' என்றான்.

தேவர்கள் இராவணனுக்குக் குற்றேவல் செய்யும் அடிமைகளாய் அவன் அரண்மனையில் இருக்கிறார்கள் என்பது முன்பும் கூறப்பட்டது. ''மண்ணிடைப் புழுவின் வாழும் மானிடர்'' என்றது, இராவணன் மானிடர்களையும், அவர்களின் வலிமையையும் எவ்வாறு அற்பமாகக் கருதுகிறான் என்பதைக் காட்டுகிறது. ஒரு புழுவைக் கொல்லுவது எவ்வளவு எளிதோ, அவ்வளவு எளிது மானிடரைக் கொல்லுவதும் என்பது கருத்து. இவனது இந்த எண்ணம் தான், பிரமனிடமிருந்து வரம் வாங்கும் போது மனிதர்களால் தன் உயிருக்கு ஊறு நேரக்கூடாது என்பதைக் கேட்கத் தவறியதற்குக்காரணம் என்பதை உணர்க. பெண்களைக் கொல்லக்கூடாது என்பது பொதுவானவிதி. இது முதலில் தாடகை வதத்திலும், பின்னர்வாலி தாரையைக் கொல்லாது விட்டதற்குக் கூறும் கூற்றாக வாலி வதைப் படலத்திலும், அதன் பின்னர் மாயா சீதைப் படத்தில், சீதையைக் கொல்ல

நினைக்கும் இராவணனுக்கு அவன் அமைச்சன் மகோதரன் அவனைத் தடுத்துக்கூறும் அறிவுரையும் ஒப்பு நோக்குக. முதலில் அவளைக் கொல்ல எண்ணியது அவன் கொண்ட வெகுளியால்; கொல்லாது விட்டது அவள் மேல் கொண்ட அதீதக் காமத்தால் என்க.

66. இராவணன் சீதையை வேண்டிக் கொள்ளுதல்

''குலைவுறல், அன்னம்! முன்னம், யாரையும் கும்பிடா என்
தலைமிசை மகுடம் என்ன, தனித்தனி இனிது தாங்கி,
அலகுஇல் பூண்அரம்பை மாதர் அடிமுறை ஏவல் செய்ய,
உலகம் ஈர்ஏழும் ஆளும் செல்வத்துள் உறைதி'' என்றான். (3486)

(குலைவு - நடுக்கம்; இனிது - மகிழ்வோடு; அலகுஇல் - அளவற்ற; பூண் - அணிகலன்கள்; உறைதி - தங்குவாயாக)

''அன்னப்பறவை போன்ற மெல்லியலே! நடுக்கம் அடையாதே; இதுவரை என் தலை யாரையும் வணங்கியதில்லை. அத்தகைய எனது இருபது தலையின் மீதுள்ள கிரீடங்களை நான் எவ்வாறு சிறப்பாகக் கருதுகிறேனோ, அவ்வாறே உன்னையும், தனிச்சிறப்புடனும், மகிழ்ச்சியாகவும், தலைமேற் கொண்டு போற்றுவேன்; அளவற்ற ஆபரணங்களணிந்த தேவமகளிர், நீ உன்னுடைய திருவடிகளால் இட்ட குற்றேவல் பணிகளை, முறை வழுவாது பணிவுடன் செய்து முடிப்பர்; என் அரசாட்சிக்கு உட்பட்ட இந்தப் பதினாலு உலகங்களையும், நீயே தலைவியாக இருந்து ஆட்சி செய்கின்ற அரசச் செல்வத்தைப் பெற்று வாழ்வாயாக!'' என்றான்.

முன்பாடலில் வெகுளியின் உச்சிக்குச் சென்ற இராவணன், இப்போது அது உடனே மாறி காமத்தின் வயப்பட்டவனாகக் காட்சியளித்துச் சீதையை இறைஞ்சி வேண்டுதலைக் காண்க. இராமாயணம் ஒரு நாடகக் காப்பியம் என்பது இந்த உணர்ச்சி மாற்றங்களால் நன்கு நிறுவப்படுவது உணர்க. இராவணன் யாருக்கும் தலைவணங்காதவன் என்பது முன்பும் கூறப்பட்டதை நினைவு கூர்க. ''மாதர் வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுட நிரை'' என்பது மாரீசன் வதைப் படலம். ''நான் உனக்குத் தலை வணங்கி இனிது போற்றுவேன்; தேவமகளிர் உனக்குக் குற்றேவல் புரிவர்; நீ இந்தப் பதினான்கு உலகத்தையும் ஆட்சி செய்யும் பேரரசியாகத் திகழ்வாயாக'' என்றான் என்க.

67. சீதை கடுங்கோபம் கொண்டு கூறுதல்

செவிகளைத் தளிர்க் கையாலே
சிக்குறச் சேமம் செய்தாள்;
''கவினும் வெஞ்சிலைக் கைவென்றிக்
காகுத்தன் கற்பினேனை,

புவியிடை ஒழுக்கம் நோக்காய்;
பொங்கு எரி, புனிதர் ஈயும்
அவியை நாய் வேட்டதென்ன, என்
சொனாய்? அரக்க!'' என்னா. (3487)

(சிக்குற - அழுத்தமாக; சேமம் - பாதுகாவல்; கவின் - அழகு; எரி - வேள்வித்தீ; புனிதர் - அந்தணர்; அவி - அவிர்ப்பாகம்; வேட்டது - விரும்பியது) (குளகப் பாடல்)

இராவணன் கூறிய, கேட்கத் தகாத வார்த்தைகளைக் கேட்ட சீதாதேவி பதைபதைத்துத் தன்னுடைய இரண்டு செவிகளையும் தளிர் போன்ற மெல்லிய கைகளாலே மூடிக் கொண்டு காதுகளைப் பாதுகாத்துக் கொண்டாள்; ''அரக்கனே! இயற்கையிலேயே நல்ல அழகு உடையதும், பகைவர்களுக்குக் கொடுமையை விளைவிப்பதும், இராமனுக்கு எப்பொழுதும் வெற்றியையே விளைவிப்பதுமான கோதண்டம் என்னும் வில்லை ஏந்திய வெற்றி பொருந்திய கைகளையுடைய காகுத்தன் வழிவந்த இராமனது கற்புடைய மனைவியான என்னை, சாத்திரநால்களில் கூறியுள்ள முறைமை அறியவில்லை என்றாலும், உலக நடைமுறை ஒழுக்கத்தைக் கூடக் கடைப்பிடிக்கத் தவறியவனான நீ, பரிசுத்தமான அந்தணர்கள் தாம் வளர்க்கும் வேள்வித் தீயில் தேவர்களுக்காகச் சொரியும் ஆகுதிப் பொருளான அவியுணவை, ஒரு அற்பமான நாய் விரும்பியது போல, எத்தகைய தகாத சொற்களைச் சொல்லி விட்டாய்'' என்று கூறி - பாடல் தொடர்கிறது.

தீய சொற்களைக் கேட்காது காதுகளை மூடிக் கொள்வது உயர்ந்தோரின் இயல்பு; ''தீமொழி கேட்டுச்செவியகம் புதைத்து'' என்பது சிலப்பதிகாரம். சிக்குற என்பது உறுதியாக என்னும் பொருளைத் தரும் ''யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்'' என்பது திருவாசகம்; முன்பும் கணவன் பெயர் கூறாது, காகுத்தன் மனைவி என்று மரபு கூறியது போல், இங்கும் ''காகுத்தன் கற்பினேனை'' என்றாள் என்பதை நோக்குக. பிறன் மனை நயத்தல் என்பது சாத்திர நூல்களைக் கற்றுத் தான் வரவேண்டும் என்பதில்லை; உலக வாழ்க்கை நடைமுறையைக் கொண்டே பின்பற்றலாம் என்ற குறிப்புத் தோன்ற, ''புவியிடை ஒழுக்கம் நோக்காய்'' என்றாள் என்க. உயர்ந்த தேவர்களுக்கு உரிமையான அவிர்ப்பாகத்தை, இழிந்த அரக்கனான நீ விரும்பியது, அவ்வுணவை அற்பமான நாய் விரும்பியதற்கு ஒப்பு என்று கடிந்து கூறுகிறாள் சீதை. நாய்க்கு அவிவுணவு கிடைக்காதது மட்டுமல்ல, அது அழிந்தும் போகும் என்பது குறிப்பு. சீதை சந்நியாசியான இராவணனிடம் இதுவரை மரியாதையோடு பேசியதையும், இங்கு அவனை அரக்கன் என்றும் நாய் என்றும் ஏசுவதையும் காண்க. ''அவியை நாய் வேட்ட தென்ன'' என்று உபமானத்தைக் கூறிய கவிஞன், உவமேயத்தைச் சொல்லவும் கூசி, கற்போரையே உய்த்து உணரவைத்த திறம் நோக்குக.

68. சீதை இராவணனை விரட்டத் தொடங்குதல்

''நூல்நுனை நீரின் நொய்தாப் போதலே புரிந்து நின்ற
என்உயிர் இழத்தல் அஞ்சி, இற்பிறப்பு அழிதல் உண்டோ?
மின் உயிர்த்து உருமின் சீறும் வெங்கணை விரவாமுன்னம்,
உன் உயிர்க்கு உறுதி நோக்கி, ஒளித்தியால் ஓடி'' என்றாள். (3488)

(நீர் - பனிநீர்; நொய்தா - விரைவாக; புரிந்து - விரும்பி; இற்பிறப்பு - நற்குடிப்பிறப்பு; உரும் - இடி; விரவுதல் - தாக்குதல்; உயிர்த்தல் - வெளியிடுதல்; உறுதி - நன்மை)

''நூல்லின் நுனியில் படிந்திருக்கும் பனி நீர் எவ்வாறு சூரியனைக் கண்டதும் விரைவில் மறைந்து போகிறதோ, அத்தகைய நிலைமையை உடைய இந்த இனிய உயிரை இழத்தல் இல்லாமல், உனக்குப் பயப்பட்டு, எங்கள் குலவழி வந்த கற்பு நெறியை அழித்துக் கொள்ள முற்படுவேனோ? மின்னலைப் போல ஒளியுடன் வெளிப்பட்டு, இடியைப் போல் சீறிவரும் என் துணைவன் இராமனின் கொடிய அம்புகள் வந்து உன்னைத் தாக்குவதற்கு முன்பே, உன் உயிரின் மேல் உனக்கு ஆசை இருந்தால், உடனே இலங்கைக்கு ஓடிச் சென்று ஒளிந்து கொள்வாயாக'' என்று சீதை இராவணனை எச்சரித்தாள்.

யாக்கை நிலையாமையை உணர்த்துவதற்கு புல்லின்மேல் படர்ந்த பனி நீரை உவமை கூறுவது கவிமரபு. ''உயிர் என்றேனும் ஒரு நாள் போகப் போவதே. ஆனால் கற்பு ஒழுக்கம் என்றும் நிலைபெற்றது. எனவே என்றும் நிலைத்ததாகிய கற்பைக் காப்பாற்றிக் கொள்ள முற்படுவே னேயன்றி உயிரை விடுவதற்கு அஞ்சமாட்டேன்'' என்றாள் என்பதாம். இராமனது அம்பின் விரைவுக்கு மின்னலும், தப்பாது அழிக்கும் ஆற்றலுக்கு இடியும் உவமைகள்.

69. இராவணன் தனது ஆற்றல் பற்றிக் கூறுதல்

என்று அவள் உரைக்க, நின்ற
இரக்கம்இல் அரக்கன், ''எய்த
உன்துணைக் கணவன் அம்பு, அவ்உயர்
திசை சுமந்த ஓங்கல்
வன்திறல் மருப்பின் ஆற்றல் மடித்த
என் மார்பில் வந்தால்,
குன்றிடைத் தொடுத்துவிட்ட பூங்கணை
கொல் அது'' என்றான். (3489)

(சுமந்த - தாங்கிக் கொண்டுள்ள; ஓங்கல் - மலை / யானை; திறல் - வலிமை; மருப்பு - கொம்பு; மடித்த - முறித்த)

இவ்வாறு சீதை ஓடிப் போகச் சொல்லவும், ஓடாது அவள் எதிரிலேயே நின்ற, இரக்கம் என்பதே சிறிதும் இல்லாத அரக்கனான இராவணன், ''உன்னுடைய துணைவனும் கணவனுமாகிய, இராமன் செலுத்துகின்ற அம்பு, அந்த சிறந்த எட்டுத்திசைகளையும் தாங்கி நிற்கின்ற மலை போன்ற திக்கஜங்களின் மிக்க வலிமை வாய்ந்த கொம்புகளின் வலிமையைப் பங்கப்படுத்திய - முறியடித்த, எனது மார்பில் ஊடுருவித் தைக்கப் புகுந்தால், அது ஒரு மலையினைத் துளைக்க முயலும் மலரம்பு போன்றதாகும்'' என்றான்.

அவள் ஓடிப் போய் ஒளிந்து கொள் என்று சொல்லியும், தன் எதிரிலேயே அவன் நின்று கொண்டிருந்ததால், அவனை ''நின்ற இரக்கமில் அரக்கன்'' என்றான். தனது திக்குவிஜயத்தின் போது திசையானைகளுடன் எதிர்த்துப் போரிட்ட போது, அவற்றின் தந்தங்கள் தம் மார்பில் முறிந்து அப்படியே தங்கிப் போய்விட்டதைக் குறித்து ''அவ்வுயர்திசை சுமந்த ஓங்கல் வன்திறல் மருப்பின் ஆற்றல் மடித்த என் மார்பு'' என்றான் என்க. ஒரு மலையின் மேல் ஒரு மலரைத் தொடுத்துவிட்டால், எவ்வாறு மலைக்கு ஒரு துன்பமும் உண்டாகாதோ அவ்வாறே, தன் மலை போன்ற மார்பின் மீது இராமன் எய்யும் அம்பும் தனக்கும் தன் உயிருக்கும் எந்தத் தீங்கையும் செய்து விடாது என்றான் என்க. திசையானைகளின் கொம்பால் ஊறுபடாத தன் மார்பு, இராமனின் அம்பாலும் ஊறுபடாது என்றான் என்பதாம். கொல் என்பது அசைச்சொல்; ''கொல்லே ஐயம், அசைநிலைக் கூற்றே'' என்பது நன்னூல். இராவணன் மார்புக்கு மலையும், இராமனின் அம்புக்கு மலரும் உவமைகள்.

70. இராவணன் சீதையை வணங்குதல்

''அண்ங்கினுக்கு அணங்கனாளே!
ஆசை நோய் அகத்துப் பொங்க,
உணங்கிய உடம்பினேனுக்கு
உயிரினை உதவி, உம்பர்க்
கணம் குழை மகளிர்க்கு எல்லாம்
பெரும் பதம் கைக்கொள்'' என்னா,
வணங்கினன் உலகம் தாங்கும்
மலையினும் வலிய தோளான். (3490)

(மலை - அஷ்டகுல பர்வதங்கள் / எட்டுக்குல மலைகள்; அணங்கு - திருமகள் - இலக்குமி / தெய்வமகள்; பொங்க - பெருக / மிக; உணங்கிய - வாடிய; உம்பர் - விண்ணுலகு; கணம் - கூட்டம்; குழை - காதணி / குண்டலம்; பதம் - பதவி; கைக்கொள்ளுதல் - பெறுதல் / ஏற்றுக் கொள்ளுதல்)

உலகங்களையெல்லாம் தாங்கி நிற்கின்ற எட்டுக்குல மலைகளையும் விட வலிமைபெற்ற தோள்களை உடையவனான இராவணன், சீதையை

நோக்கி, ''திருமகளுக்கும் மேம்பட்ட அழகையுடைய திருமகளே! உன்மீது நான் கொண்ட காமநோய் என் மனத்தில் பெருகியதால், உடம்பு வாடிய எனக்கு, அதை நிறைவேற்றி, என் உயிரைக் காப்பாற்றுவாயாக; அதற்குக் கைம்மாறாக, விண்ணுலகில் திரண்ட காதணிகளையணிந்த தேவ மகளிர்க்கெல்லாம் கிடைக்காத பெரிய பதவியை ஏற்றுக் கொள்வாயாக!'' என்று கூறி அவள் அடிகளில் விழுந்து வணங்கினான்.

''அணங்கினுக்கு அணங்கு அனாளே'' என்ற சொற்றொடர்க்கு, ''அழகினுக்கு அழகு செய்யும் அழகே'' என்றும் ''தெய்வ மகளிர்க் கெல்லாம் உன் அழகால் வருத்தத்தை உண்டு பண்ணும் அழகுடைய வளே'' என்றும் பொருள் கூறுவதுண்டு. உலகம் தாங்கும் மலை மேருமலை என்றும், அது தான் அச்சுப் போல் நின்று இவ்வுலகைத் தாங்குகிறது என்றும் ஒரு புராணக் குறிப்பு உண்டு. எனவேதான் மலைக்கு வடமொழியில் பூதரம் என்ற ஒரு பெயரும் உண்டு. உயிரினை உதவி என்பது காமநோயால் வாடிய உடம்பில் உள்ள உயிரைப்போக்காது, அவன் ஆசையை நிறைவேற்றித் தந்து உயிரைக் காப்பாற்றுதல் என்ற பொருளைத் தரும். இராவணன் சீதையை வணங்கினான் என்று இகழ்ச்சியாகக் கூறும் போது, அவனுடைய தோளாற்றலுக்கு எட்டுக் குலமலைகளின் ஆற்றலை ஒப்பிட்ட நயம் உணர்க.

71. சீதை கலங்குதல்

தறைவாய் அவன் வந்து அடி தாழுதலும்,
கறை வாள்பட ஆவி கலங்கினள் போல்,
''இறைவா! இளையோய்!'' என ஏங்கினளால்
பொறைதான் உரு ஆனது ஓர் பொற்பு உடையாள். (3491)

(தறை - தரை; தாழுதல் - வணங்குதல்; பொற்பு - அழகு / ஒப்பற்ற தன்மை; ஆவி - உயிர்; இறைவா - தலைவா / கணவா)

அவ்வாறு இராவணன் நிலத்தில் விழுந்து அவள் திருவடிகளை வணங்கியதும், பொறுமையே உருவெடுத்து வந்தாற் போன்ற ஒப்பற்ற தன்மையும், அழகும் நிறைந்த சீதாதேவி, தன் உடம்பின் மீது, அவனுடைய இரத்தக்கறை படிந்த கொடிய வாட்படை ஒன்று பட்டதனால் உயிர் நிலைதடுமாறுதல் போலக் கலங்கி ''என் தலைவனே இராமா! அவன் தம்பி இலக்குவனே!'' என்று கூவி அழுதாள்.

தரை என்பது தறை என்று எதுகை நோக்கித் திரிந்தது. இராவணன் விழுந்தது தரையில்தான். என்றாலும் தன் உடம்பின் மீதே அவனுடைய இரத்தக்கறை படிந்த வாள்பட்டது போல உயிர் நிலைதடுமாறினாள் என்பதால், அவளுடைய மென்மைத் தன்மையைச் சிறப்பித்தார் என்பதாம். அவனைத் தன் சொல்லினாலேயே சுட்டு விடும் ஆற்றல் தனக்கு

இருந்தும், தன் தலைவனையும், இளையோனையும் கூவி அழைத்தது அந்தப் பொறுமை என்னும் ஒப்பற்ற தன்மையினால் என்க.

72. இராவணன் சீதையைத் தவக்குடிலோடு பெயர்த்து எடுத்தல்

ஆண்டு, ஆயிடை, தீயவன் ஆயிழையைத்
தீண்டான், அயன் மேல் உரை சிந்தைசெயா;
தூண்தான் எனல்ஆம் உயர் தோள்வலியால்,
கீண்டான் நிலம்; யோசனை கீழொடு மேல். (3492)

(ஆண்டு - அப்பொழுது; ஆயிடை - அவ்விடத்து; மேல் - முற்காலத்தில்; அயன் - பிரமன்; உரை - சாபச்சொல்; செயா - செய்து / நினைந்து; கீண்டுதல் - தோண்டுதல் / அகழ்தல்)

அப்பொழுது, அவ்விடத்தில், கொடியவனான இராவணன், ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்த சீதாதேவியைக் கைகளினால் தொடாமல், முன்பு தனக்கு பிரமன் தந்திருக்கின்ற சாபச் சொல்லை மனத்துள் நினைந்து, தனது தூண் தானென்று கூறும்படியான உயர்ந்து பூரித்துப் பருத்த தோள்களின் வலிமையினால் சீதை அமர்ந்து இருந்த தவக்குடிலின் நிலத்தைக் கீழ் மேலாகவும் பக்கங்களிலும் ஒரு யோசனை தூரத்திற்கு அகழ்ந்து பெயர்த்தெடுத்தான்.

இராவணன் சீதையைத் தன் கைகளால் தொடாமல், அவள் இருந்த நிலத்தோடு பெயர்த்து எடுத்துச் சென்றான் என்பான் கம்பன். அத்யாத்ம ராமாயணமும் இவ்வாறே கூறுகிறது. ஆனால் வான்மீகம், இராவணன் சீதையைத் தன் கரங்களால் பற்றி எடுத்துச் சென்றதாகவே கூறுகிறது. பிரமதேவன் சாபம் என்பது இராவணன் எந்த ஒரு பெண்ணையும் அவள் விருப்பம் இல்லாது தீண்டினான் என்றால் அவன் தலை வெடித்துச் சிதறும் / எரிந்து போவான் என்பதாம். பிரமனைத் தவிர இது போன்ற சாபத்தை இராவணனுக்கு வேதவதி, குபேரன் மகன் நளகூபரன், அவன் காதலி அரம்பை, புஞ்சிகஸ்தலை, அநரண்யன் ஆகியோரும் கொடுத்திருப்பது நினைவு கூரத்தகும். யோசனை என்பது ஒரு காததூரம் என்றும், நாலுகாத தூரம் என்றும் கூறுவர். யோசனை என்பது யோஜனை என்ற வடசொல்லின் திரிபு; தோளின் வலிமைக்குத் தூண் உவமை. இந்நிகழ்ச்சி நடந்த நேரம் பற்றிக் கூடக் கூறுவதுண்டு. இந்த நேரம் விந்தம் என்ற முகூர்த்தம் என்று வான்மீகமும், சித்திரைமாதம் சுக்கிலபட்சம் அஷ்டமி நடுப்பகல் என்று மகா நாடகமும், மாகமாதம் சுக்கிலபட்சம் அஷ்டமி விருந்தம் என்ற முகூர்த்தம் என்று அக்னிவேச்ய இராமாயணமும் கூறும். இராவணன் அபகரித்துச் சென்றது உண்மையான சீதையை அல்ல; மாயா சீதையை என்று அத்யாத்ம ராமாயணமும், கூர்ம புராணமும் கூறுகின்றன.

73. இராவணன் சீதையைத் தேரில் வைத்து எடுத்துச் செல்லுதல்

கொண்டான் உயர் தேர்மிசை; கோல் வளையாள்
கண்டாள்; தனது ஆர்உயிர் கண்டிலளால்;
மான்தான் உறும் மின்னின் மயங்கினளால்;
விண்தான் வழியா எழுவான் விரைவான். (3493)

(மிசை - மேலே; கோல் - அழகு / திரண்ட / சித்திரவேலைப்பாடு; எழுவான் - செல்லும் பொருட்டு)

தான் அகழ்ந்தெடுத்த அந்நிலப்பரப்பை அப்படியே தனது உயர்ந்த தேரின் மீது வைத்துக் கொண்டான்; சித்திரவேலைப்பாடமைந்த அழகிய திரண்ட வளையல்களைஅணிந்தசீதை இதனைக்கண்ணுற்றாள். எனினும் தனது அரிய உயிர், தன் உடம்பை விட்டுப் போய்விட்டது போன்றே நிலைகுலைந்து தடுமாறினாள். நிலத்தில் விழுந்து கிடந்த ஒரு மின்னல் கொடியைப் போலத் தேரில் துவண்டு விழுந்து கிடந்தாள். இச்சமயத்தில் இராவணன் விண் வழியாகச் செல்லும் பொருட்டு விரைந்து செயல்படலானான்.

சீதையின் ஒளிமிக்க மேனிக்கு மின்னல் உவமை. இராவணன் தேர் முதலில் சிறிது தூரம் தரையிற் சென்று பின்னர் வானில் எழுந்தது என்பது பின்னர் கூறப்போவதிலிருந்து பெறப்பட்டது.

74. சீதை அரற்றுதல்

''விடுதேர்'', என, வெங்கனல் வெந்து அழியும்
கொடிபோல் புரள்வாள்; குலைவாள்; அயர்வாள்;
துடியா எழுவாள்; துயரால் அழுவாள்;
கடிதா அறனே! இது கா'' எனுமால். (3494)

(அயர்தல் - சோர்ந்து போதல்; துடியா - துடித்து; அறனே - அறக் கடவுளே; கடிதா - கடிதாக / விரைவாக; கா - காப்பாற்றுவாயாக)

''தேரைச் செலுத்து'' என்று இராவணன் தன் தேர்ப்பாகனுக்குக் கட்டளையிட்டதைக் கேட்ட சீதை, கொடிய நெருப்பில் வெந்து அழிந்துபோகும் ஒரு பசிய பூங்கொடியைப் போல் விழுந்து புரள்வாள்; உயிர் நிலைகுலைந்து அழிவாள்; சோர்வுறுவாள்; துடிதுடித்துப் பின் எழுந்திருப்பாள்; பின்னர் துயரம் தாங்காது அழுவாள்; ''அறக்கடவுளே! விரைவில் இத்துன்பத்தினின்றும் என்னைக் காப்பாற்றுவாயாக!'' என்று வேண்டிக் கொள்வாள்.

முன்னர்சீதையை மின்னல்கொடிக்கு உவமித்தகவிஞன், இப்பாடலில் ஒரு பசிய பூங்கொடிக்கு ஒப்பிட்டதை நினைக. ''விடு தேர்'' என்று இராவணன்கூறியதால், இராவணன்தானேதேரைச்செலுத்திவரவில்லை.

தேரைப் பாகனே செலுத்தி வந்திருக்கிறான் என்பது பெறப்படுகிறது. துயரத்தின் மெய்ப்பாடுகளைப் படிப்படியாகக் கவிஞன் கூறிய திறம் நோக்குக. யாரும் துணைக்கு இல்லாத சமயத்தில், தருமதேவதையையே எல்லோரும் அழைப்பர். அதற்குச் சீதாதேவியும் விலக்கல்ல என்பது தெரிகிறது.

75. ''மலையே! மரனே! மயிலே! குயிலே!
கலையே! பிணையே! களிறே! பிடியே!
நிலையா உயிரேன்! நிலை தேறினீர் போய்,
உலையா வலியாருழை நீர் உரையீர்!'' (3495)

(கலை - கலைமான்; பிணை - இணை / ஜோடி / பெண்மான்; களிறு - ஆண்யானை; பிடி - பெண்யானை; தேறுதல் - அறிதல்; உலையா - அழியாத; உழை - இடம்)

சீதை முதலில் தனக்குத் தெரிந்த மலையை நோக்கி, ''மலைகளே! ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களே, அங்கே திரியும் மயில்களே! குயில்களே! ஆண் மான்களே! அவற்றைப் பிரியாத பெண் மான்களே! ஆண் யானைகளே! அவற்றைப் பிரியாத பெண் யானைகளே! நிலையில்லாத உயிரைக் கொண்டுள்ள என்நிலைமையை நன்றாக அறிந்து கொண்டு, நீங்கள் போய், யாராலும் அழிக்க முடியாத வலிமை பொருந்திய இராம இலக்குவரிடத்தில், எந்நிலைமையை எடுத்துக் சொல்லுங்களே!'' என்று அழுது அரற்றுகிறாள்.

சீதை தான் செல்லும் வழியில் உள்ள அஃறிணைப் பொருள்களைப் பார்த்துத் தனக்கு உதவ வேண்டுவதாக அமைந்தது இந்தப் பாடல். ஆண் மான், பெண் மான், ஆண் யானை, பெண் யானை இவைகள் ஒன்றை விட்டு மற்றொன்று பிரியாது திரிகின்றன. ஆனால் தான் மட்டும் தன் தலைவனான இராமனைப் பிரிந்து இருக்கிறேன் என்பதைப் புலப்படுத்தவும், அப்பிரிவின் ஆற்றாமையை அவைகள் நன்கு உணரும் என்பதாலும் இவற்றைக் கூவி அழைத்து அரற்றினாள் என்க. தலைவன் தலைவியர் பிரிவுற்ற பொழுது துயரத்தால் இவ்வாறு கேளாதனவும், உரையாதனவும், உணராதனவும் ஆகிய அஃறிணைப் பொருள்களை நோக்கி அவை கேட்பன போலவும், உரைப்பன போலவும், உணர்வன போலவும் கூறுவது மரபு. ''ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே, கடலே, கானல், விலங்கே, மானே, புலம்புறு பொழுதே, புள்ளே, நெஞ்சே, அவையல பிறவும், நுவலிய நெறியால், சொல்லுவ போலவும், கேட்குன போலவும், சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்'' என்பது தொல்காப்பியம். ''வாவும் இளமான்காள்! மயில்காள்! மடப் பிடிகாள்! கூவும் கரிய குயில்காள்! மென் புள்ளினங்காள்! ஆவி என மேவி, அகலேம் என அகன்ற காவலன் தான் போன வழி எனக்குக் காட்டீரோ?'' என்பது நைடதம்.

76. ''செஞ்சேவகனார் நிலை நீர் தெரிவீர்;
மஞ்சே! பொழிலே! வன தேவதைகாள்!
''அஞ்சேல்'' என நல்குதிரேல், அடியேன்
உஞ்சால், அதுதான் இழிவோ?'' உரையீர்! (3496)

(மஞ்சு - மேகம்; பொழில் - சோலை; செம் - நேர்மையான / சிறந்த; சேவகன் - வீரன்; உஞ்சால் - உய்ந்தால் / உய்ந்து விடுதல்; நிலை - இருக்கும் இடம்; வனதேவதை - காடுறை தெய்வங்கள்; இழிவு - குறைவு / தாழ்ந்தது)

''மேகங்களே! சோலைகளே! காட்டில் உறையும் தெய்வங்களே! நேர்மையான சிறந்த வீரனான என் கணவன் இராமன் இருக்குமிடத்தை நீங்கள் அறிவீர்கள்; ''பயப்படாதே; அவன் இருக்குமிடம் எங்களுக்குத் தெரியும்'' என்று நீங்கள் ஆறுதல் கூறினால், நான் உயிர் பிழைத்தவளாவேன்; அவ்வாறு நான் உயிர் பிழைப்பதனால் உங்களுக்கு ஏதேனும் இழப்போ, குறைவோ உண்டாகுமோ? சொல்லுங்கள்'' என்றாள் சீதை.

மேகங்கள் வானத்தில் சஞ்சரிப்பன; சோலைகள் வானளாவ உயர்ந்தன; வன தேவதைகள் காட்டில் உறைபவர்கள். எனவே இராமன் எங்கே போயிருந்தாலும் இவர்கள் கண்களுக்குப் பட்டேயாக வேண்டும். எனவே இவைகளை அழைத்துக் கூறினாள் என்க. ''செஞ்சேவகனார்'' என்பது ஒரு அரிய சொல்லாட்சி; அரக்கர்களின் வஞ்சகம் நிறைந்த வீரத்தை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இங்கே சிறந்த நேர்மையான வீரன் எனச் சீதை இராமனைக் குறிப்பிடுவது உணரத்தக்கது. முன் பாடலில் மண்ணுலகில் உள்ள மலையையும் மரத்தையும் அழைத்துக் கூறியவள், இப்போது விண்ணிலுள்ள மேகத்தையும் வானளாவ உயர்ந்த பொழில்களையும் அழைத்துக் கூறுகிறாள்'' என்க.

77. கோதாவரியைக் கூவி அழைத்தல்

''கோதாவரியே! குளிர்வாய், குழைவாய்!
மாதா அனையாய்! மனனே தெளிவாய்;
ஓதாது உணர்வாருழை, ஓடினை போய்,
நீதான் வினையேன் நிலை சொல்லலையோ?'' (3497)

(குழைதல் - இளகுதல் / நெகிழ்தல்)

''கோதாவரி நதியே! நீ குளிர்ச்சி பொருந்திய தன்மையையுடையவள்; நெகிழ்ச்சி மிக்கவள்; எனக்கும் எல்லா உயிர்கட்கும் தாயினைப் போன்றவள், என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டவள். என் மனநிலையை நான் கூறாமலேயே தெரிந்து கொள்ளும் இயல்புடைய என் கணவனாகிய இராமனிடம் ஓடிச் சென்று, தீவினையால் உழல்பவளாகிய என்னுடைய நிலையை எடுத்துச் சொல்ல மாட்டாயோ?'' என்று சீதை அரற்றுகிறாள்.

முன்பு ஓடும்தன்மை இல்லாத மரம், மலை, பொழில் முதலியவற்றைக் கூவி அழைத்தவள், இப்பொழுது ஓடும் இயல்புடைய நதியைக் கூவி அழைத்துத் தன் மனத்துயரைக் கொட்டிய விதம் நோக்குக. பொதுவாக நதியைத் தாய்க்கு உவமிப்பது கவிமரபு. இங்கே கோதாவரியைத் தன் தாயாகக்கருதி சீதை, என்இன்பம்கண்டு குளிர்பவளும், என்துன்பம்கண்டு நெகிழ்பவளுமாகிய கோதாவரியே என்று கூறியதாகவும் கொள்ளல் பொருந்தும்.

78. இராமன் முதலியவர்களையும் கூவி அழைத்தல்

''நிருதாதியர் வேர்அற, நீல் முகில்போல்
சரதாரைகள் வீசினிர், சார்கிலிரோ?
வரதா! இளையோய்! மறு எதும் இலாப்
பரதா! இளையோய்! பழி பூணுதிரோ?'' (3498)

(வரதன் - வரத்தைத் தருபவன் / இராமன்; இளையோய் - தம்பி / இலக்குவன்; மறு - குற்றம்; இளையோய் - அவனுக்குத் தம்பி / சத்துருக்கனன்; நிருதர் - அரக்கர்; ஆதியர் - முதலியவர்கள்; சரம் - அம்பு; சார்தல் - வந்து சேருதல்)

''வேண்டியவர்க்கு வேண்டும் வரங்களைத் தருகின்ற இராமனே! அவனை ஒரு போதும் விட்டு அகலாத இளையவனான இலக்குவனே! குற்றம் ஏதும் இல்லாத பரதனே! அவனுக்குத் துணை நிற்கும் சத்துருக்கனனே! இராக்கதர்கள் அனைவரையும் அவர்கள் குலத்தோடு நிர்மூலமாக்க வேண்டி, நீலமேகம் நீர் சொரிவது போல, அம்பு மழையைப் பொழிந்து கொண்டு இப்பொழுது இங்கு வந்து சேர மாட்டீர்களா? என்னைக் காப்பாற்றாமல், அதனால் உண்டாகும் பழிச்சொல்லை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா?'' என்று கேட்கிறாள். சீதை.

முன்பு அஃறிணைப் பொருள்களான மரம், மலை முதலியவற்றையும், மேகம், சோலை, கோதாவரி நதி முதலியவற்றையும் தன் உதவிக்கு அழைத்தவள், அவைகள் உதவாமையால் இப்போது தனது உறவினர்களை அழைக்கிறாள் என்பது நினைக. ''பரதனை மட்டும் மறு ஏதும் இலாப் பரதா!'' என அழைப்பதை நோக்குக. இங்கே பழி என்பது, தனது மனைவியை மாற்றான் ஒருவன் தூக்கிச் சென்றும், நான்கு ஆண்கள் இருந்தும் அவளைக் காப்பாற்ற முடியவில்லையே என்று உலகத்தார் கூறும் பழிச்சொல் என்க.

79. சிங்கங்களைக் கூவி அழைத்தல்

''முந்தும் சுனைகாள்! முழை வாழ் அரிகாள்!
இந்தந் நிலனோடும் எடுத்து கைநால்
ஐந்தும், தலைபத்தும் அலைந்து உலையச்
சிந்தும்படி கண்டு, சிரித்திடுவீர்.'' (3499)

(முந்தும் - முன்தோன்றும்; முழை - குகை; அரி - சிங்கம்; உலைய - ஒழிய; சுனை - மலை ஊற்றுக்கள்)

''என் முன்னே தோன்றும் மலையருவி ஊற்றுக்களே! மலைக்குகைகளில் வாழ்கின்ற சிங்கங்களே! நான் இருந்த இந்த நிலத்தோடும் பெயர்த்தெடுத்துச் செல்லும் இவ்விராவணனின் இருபது கைளும், பத்துத் தலைகளும், என் கணவன் இராமன் தொடுக்கும் சர தாரைகளால் சிந்திச் சிதறி அழிந்து போகப் போகும் தன்மையைக் கண்டு மகிழ்வீர்களாக'' (எள்ளி நகைப்பீர்களாக) என்றாள் சீதை.

இராமன் வந்து தன்னைக் காப்பாற்றுவான். அதற்காக அவன் இராவணனுடன் போரிடும் போது அவனுடைய இருபது கைகளும், பத்துத் தலைகளும் தரையில் சிந்தி அழிந்து போகும் என்பதை உறுதியாக நம்புகிறாள் சீதை என்பதாம்.

80. இராவணன் சீதையை இகழ்தல்

என்று இன்ன பலவும் பன்னி,
இரியலுற்று அரற்றுவாளை,
''பொன் துன்னும் புணர்மென் கொங்கைப்
பொலன்குழாய்! போரில் என்னைக்
கொன்று, உன்னை மீட்பர்கொல், அம்
மானிடர்? கொள்க'' என்னா,
வன்திண் கை எறிந்து நக்கான்
வாழ்க்கை நாள் வறிது வீழ்ப்பான். (3500)

(பன்னுதல் - பலமுறை சொல்லுதல்; இரியலுறுதல் - நிலை அழிதல்; அரற்றுதல் - வாய்விட்டுப் புலம்புதல்; துன்னு - பொருந்திய; புணர் - இணைந்த; குழை - காதணி / குண்டலம்; வாழ்க்கை நாள் - வாழ்நாள் / ஆயுள்; வறிதே - வீணாக; எறிதல் - கொட்டுதல் / மோதுதல்; வீழ்த்தல் - அழித்துக் கொள்ளுதல்; நக்கான் - சிரித்தான்)

என்று இவ்வாறு பலவற்றையும் திருப்பித் திருப்பிச் சொல்லி, நிலை குலைந்து போய், வாய்விட்டுப் புலம்புவளான சீதையை நோக்கி, தனது மூன்றரைக் கோடி வாழ் நாட்களையும் வீணாக அழித்துக் கொள்ள முயல்பவனான இராவணன், ''பொன்னாபரணங்கள் அணியப்பெற்ற இணைந்த இரு கொங்கைகளையுடையவளே! அழகிய குணநலன்களை அணிந்தவளே! நீ கூறிய அந்த மனிதர்கள் என்னுடன் போரிட்டு, என்னைக் கொன்று, உன்னை மீட்டுக்கொண்டு செல்லும் வல்லமை பெற்றவர்களா? அப்படி என்றால் அவ்வாறே கொள்ளட்டும்'' என்று கூறி, தனது வலிய, திரட்சியான கைகளை ஒன்றோடொன்று தாக்கிப் பேராரவாரம் செய்து இகழ்ச்சியாகச் சிரித்தான்.

பத்துத்தலைகளும், இருபது கைகளும் உடைய என்னை இரு கைகளும் ஒரு தலையும் உடைய அற்பர்களான மானிடர்கள் போரில்

அழித்துவிடுவார்களோ? என்று இகழ்ச்சியாகக் கை கொட்டிச் சிரித்தான் என்பதாம். ''வாழ்க்கை நாள்வறிது வீழ்ப்பான்'' என்பது செயற்கரிய தவம் செய்து பெற்ற மூன்றரைக்கோடி வாழ்நாட்களை, பிறன்மனை நயத்தல் என்ற ஒரு பெருந் தீய எண்ணத்தால், வீணாக அழித்துக் கொள்பவன்'' என்று பொருள் விரிவு கொள்ளும்.

81. சீதை கடுஞ்சினம் கொள்ளுதல்

வாக்கினால் அன்னான் சொல்ல,
''மாயையால் வஞ்ச மான் ஒன்று
ஆக்கினாய்; ஆக்கி, உன்னை
ஆர்உயிர் உண்ணும் கூற்றைப்
போக்கினாய்; புகுந்து, கொண்டு
போகின்றாய்; பொருது நின்னைக்
காக்குமா காண்டிஆயின், கடவல்
உன் தேரை'' என்றாள். (3501)

(வாக்கு - வாய்ச் சொற்கள்; மாயை - வஞ்சம்; வஞ்சம் - பொய்; போக்குதல் - பிரிந்து பின் போகச் செய்தல்; பொருது - போர் செய்து; காணுதல் - அறிதல்; கடவல் - செலுத்தாதே)

அவ்வாறு இராவணன் தன் வாய்ச் சொற்களால் கூறத்தகாத ஏளன மொழிகள் சொல்ல; சீதை வெகுண்டு ''உனது மாயத்திறத்தால் ஒரு வஞ்சகமான பொய் மானை உண்டாக்கியனாய்; உண்டாக்கி, உனது அரிய உயிரைக் கொன்று உண்ண எண்ணும் கொடிய இயமனைப் போன்ற என்னுடையகணவனானஇராமனை, என்னைவிட்டுப்பிரித்து, அப்பொய் மான் பின்னால் செல்லுமாறு செய்தாய்; அவன் இல்லாத நேரம் பார்த்து, நான் தனியாக இருக்கும் பொழுது, எங்கள் தவக்குடிலில் புகுந்து, என்னைக் கள்வனைப் போல் தூக்கிச் செல்லுகின்றாய். இராமனுடன் போர் செய்து, உன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வலிமை உனக்கு இருக்குமானால், இந்தத் தேரை இங்கிருந்து செலுத்திச் செல்லாதே. அப்படியே நிறுத்து'' என்று கடிந்து பேசினாள்.

82. மீட்டும் ஒன்று உரைசெய்வாள்;
''நீ வீரனோ விரைவில் மற்று உன்
கூட்டம் ஆம் அரக்கர் தம்மைக் கொன்று,
உங்கை கொங்கை மூக்கும்
வாட்டினார் வனத்தில் உள்ளார்,
மானிடர்'' என்ற வார்த்தை
கேட்டும், இம்மாயம் செய்தது
அச்சத்தின் கிளர்ச்சி அன்றோ'' என்றாள். (3502)

(மீட்டும் - மீண்டும்; வாட்டுதல் - அரித்து துன்புறுத்துதல்; மாயம் - வஞ்சனை; கிளர்ச்சி - மிகுதி; உங்கை - உன் தங்கை / சூர்ப்பணகை

சீதை இராவணனை நோக்கி, ''நீ உண்மையில் ஒரு வீரன் தானா? உன்னுடன் தொடர்புடையராகிய கரன், தூடணன் முதலிய பதினான்காயிரம் அரக்கர் கூட்டத்தை ஒரு மூன்று நாழிகைப் பொழுதில் கொன்று குவித்தவரும், உனது தங்கையாகிய சூர்ப்பணகையின் கொங்கையையும் மூக்கையும் வாளால் அரிந்து துன்புறுத்தியவரும், மனிதர்களுமாகியவர்கள் வனத்தில்தான் தங்கியிருக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்தும், அவர்களுடன் நேரே எதிர்த்துப் போர் செய்யாது, இவ்வாறு வஞ்சனைகள் செய்வது, நீ அவர்களிடம் கொண்ட அச்சம் மிகுதியால் தானே?'' என்று மீண்டும் ஒரு முறை அவனைக் கேட்டாள்.

''முதலில் உன் தங்கையின் கொங்கைகளையும் மூக்கையும் அறுத்தனர்; பின்னர் உன் அரக்கர் கூட்டத்தை விரைவினில் கொன்று அழித்தனர்; இருமானிடர்கள். அவர்கள் தனியாக இக்காட்டில்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்று கேட்டு அறிந்தும் அவர்களுடன் நேரில் போர் செய்யாது, தந்திரங்களைப் பயன்படுத்துவது, நீ அவர்களிடம் மிகுந்த அச்சம் கொண்டுள்ளாய் என்பதைத் தானே காட்டுகிறது'' என்று மீண்டும் சீதை கேட்டாள் என்பதாம். எனவே நீ ஒரு வீரனே அல்ல என்று நிறுவுகிறாள். ''விரைவில்'' என்பது பதினாலாயிரம் அரக்கரைக் கடிகை மூன்றில் வில் ஒன்றால் வீழ்த்திய வீரத்தைப் புலப்படுத்தும் என்க. ''அம்மானிடர்'' என்று இராவணன் பயன்படுத்திய சொற்களையே சீதையும் பயன்படுத்தியது காண்க. இங்கே சீதையை வீரம் மிக்கவளாகவும், இராவணனைக் கோழையாகவும் காட்டிய கவிஞனின் திறம் நோக்குக.

83. இராவணன் மறுமொழி

மொழிதரும் அளவில், ''நங்கை! கேள்இது; முரண் இல்யாக்கை
இழிதரு மனிதரோடே யான் செருஇழைப்பென் என்றால்
விழிதரும் நெற்றியான்தன் வெள்ளி வெற்பு எடுத்த தோட்குப்
பழிதரும்; அதனின் சாலப் பயன் தரும், வஞ்சம்'' என்றான். (3503)

(மொழி தருதல் - சொல்லுதல்; முரண் - வலிமை; யாக்கை - உடம்பு; செரு - போர்; இழைப்பென் - மேற்கொள்ளுதல்; விழிதரு நெற்றியான் - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் / முக்கண்ணன்; வெள்ளி வெற்பு - வெள்ளியங்கிரி / கயிலாயமலை; சால - மிக்க / சிறந்த; நங்கை - பெண்களில் சிறந்தவள்)

இவ்வாறு சீதை சொன்ன அளவில், இராவணன் ''பெண்களில் சிறந்தவளே! நான் கூறப் போவதைக் கேட்பாயாக! வலிமையில்லா உடலையுடைய இழிந்த அற்பமான மனிதர்களுடன் நான் போர் மேற்கொள்வேன் என்றால், நெற்றியில் கண்ணையுடைய முக்கண்ணனாகிய சிவபெருமான் உறைகின்ற கயிலாய மலையைப் பெயர்த்தெடுத்த என் வலிமைபொருந்திய தோள்களுக்கு அது பழியை

உண்டாக்கும். எனவே அப்பழியினை விட இந்த வஞ்சகச் செயல் எனக்கு மிக்க சிறந்த பயனைத் தரும்'' என்றான்.

மெலியாரோடு வலியவன் போர் செய்தான் என்ற பழியைக் காட்டிலும், உன்னைக் கவர்ந்ததாகிய இவ்வஞ்சகச் செயல் எனக்குச் சிறந்த பயனையே தரும் என்கிறான் இராவணன்.

84. சீதை அரக்கர்களைப் பழித்தல்

பாவையும் அதனைக் கேளா, ''தம்குலப் பகைஞர் தம்பால்
போவது குற்றம்! வாளின் பொருவது நாணம் போலாம்!
ஆவது, கற்பினரை வஞ்சிக்கும் ஆற்றலே ஆம்!
ஏவம் என்? பழிதான் என்னே? இரக்கம்இல் அரக்கர்க்கு?'' என்றாள். (3504)

(பாவை - பதுமை; கேளா - கேட்டு; பொருவது - போர்செய்வது; ஆவது - தக்கது; ஏவம் - குற்றம்; நாணம் - வெட்கம்)

சித்திரப்பதுமை போன்ற அழகுடையவளான சீதையும் இராவணன் கூறியவற்றைக் கேட்டு, அவனை நோக்கி, ''தமது குலத்திற்கே பகைவராக உள்ளவர்களிடத்தில் நேருக்கு நேர் சென்று போர் செய்வது குற்றமாகும் போலும்; அவர்களை ஆயுதங்கள் கொண்டு எதிர்த்துப் போர் செய்வது வெட்கத்தைத் தரும் செயல் போலும்; ஆனால் அவர்கள் செய்யத்தக்க செயல் கற்புடைய பெண்டிரை வஞ்சித்துக் கவர்ந்து செல்லும் ஆற்றல் தான் போலும்; இரக்கம் என்பதே இல்லாத, அரக்கர்களுக்குக் குற்றம் எது? பழி எது? என்றே தெரியவில்லையே'' என்று இரங்கிக் கூறினாள்.

தமது குலத்திற்குப் பகையானவர்களைக் கொல்லாது, அவர்கள் அற்பமான மனிதர்கள் அவர்களுடன் போர் செய்யச் சென்றால் அது எனது புகழுக்குப் பழியைத் தரும் என்று கூறத் தெரிந்த இராவணனுக்கு, அத்தகைய மனிதருடைய மனைவியை வஞ்சனையால் கவர்ந்து செல்லுதல் குற்றம் என்றோ, அது பழிச்செயல் என்றோ, அது அவன் புகழை அழிக்கும் என்பதோ ஏன் தெரியவில்லை என்று ஏங்குகிறாள் சீதை.

பின்வரும் பாடல் பல சுவடிகளிலும், அச்சுப் பதிப்புக்களிலும் மிகைப்பாடலாகக் கொள்ளப் பட்டிருக்கிறது. என்றாலும் கதைப் போக்கிற்கு இது உதவும் என்பதாலும். அடுத்த படலத்திற்குத் தோற்றுவாயாக அமையும் என்பதாலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய இப்பாடல் விளக்கமில்லாமல் தரப்பட்டிருக்கிறது.

என்றனள், ''அபயம் புட்காள்! விலங்குகாள்! இராமன் தேவி,
வென்றிகொள் சனகன் பேதை, விதியினால் அரக்கன் தேர்மேல்
தென்திசைச் சிறை போகின்றேன்; சீதை என் பெயரும்'' என்றாள்;
சென்று அது, சடாயு வேந்தன் செவியிடை உற்றது அன்றே!

இராவணன் சூழ்ச்சிப் படலம் நிறைவுற்றது

10. சடாயு உயிர்நீத்த படலம் [139 பாடல்கள்]

சடாயு கழுகுக்கு இறைவன். சம்பாதியின் உடன்பிறப்பு; அருணனின் புதல்வன்; சீதையை இராவணன் கவர்ந்து கொண்டு வான்வழிச் செல்லும் போது, அவள் இட்ட கூக்குரல் கேட்டு ஓடிவந்து இராவணனுக்கு அறிவுரை கூற, அது பலனளிக்காததால் அவனுடன் போரிட்டு, இராவணனது சந்திரகாசம் என்னும் வாளால் தன் சிறகுகள் சிதைக்கப்பட்டு உயிர் நீத்த செய்திகளைக் கூறும் படலம் என விரியும். இது 139 பாடல்களைக் கொண்டது. இது சில சுவடிகளில் ''சடாயு வதைப் படலம்'' எனவும், ''சடாயு மோட்சப் படலம்'' எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், சீதையைக் கவர்ந்து கொண்டு வான்வழிச் செல்லும் இராவணனைச் சடாயு எதிர்த்தல், சீதைக்கு ''அஞ்சாதே'' என்று ஆறுதல் கூறி, இராவணனுக்கு அறிவுரை கூறுதல், அதை இராவணன் மறுத்து அவனுடன் போர் செய்தல்; இறுதியில் இராவணன் தனது சந்திரகாசம் என்னும் வாளால் சடாயுவின் இறக்கைகளை அறுத்தல்; சடாயு நிலை கலங்கி மூர்ச்சையுற்றுத் தரையில் வீழ்தல்; சீதை நடுங்குதல்; இராவணன் மேலே தொடர்ந்து செல்வதைக் கண்டு சடாயு இரங்குதல்; சீதை அசோக வனத்தில் சிறைப்படுத்தப்படுதல்; இராமன் மீண்டு வரும் போது இலக்குவனைச் சந்தித்தல்; இராமன் வெகுளலும் பின்னர் விதி என்று சமாதானம் அடைந்து இருவரும் தவக்குடிலை அடைதல்; அங்கே குடிசையோடு சீதை பெயர்த்தெடுக்கப்பட்டிருத்தல் காணல்,; தேர்த்தடம் பற்றித் தொடர்ந்து செல்லுதல்; வீணைக்கொடி, வில், சூலம், அம்புப்புட்டில் முதலியன வீழ்ந்து கிடப்பது கண்டு அஞ்சி,, சடாயு போர் புரிந்திருப்பது பற்றி உய்த்து உணர்தல்; ''பலர் போரிட்டிருக்கின்றனர், சீதைக்கு என்ன ஆயிற்றோ'' என்று இராமன் அஞ்சுதலும், ''பொருதவன் ஒருவனே; அவனும் இராவணனே'' என்று இலக்குவன் உய்த்து உணர்ந்து உரைத்தல்; சடாயு செயலற்றுக்கிடப்பதைக் கண்டு இருவரும் நெருங்கிச் செல்லுதல்; சிறிது உயிர்ப்பு வந்த சடாயு, இருவரையும் கண்டு, மகிழ்ந்து, நிகழ்ந்தது கூறுதல்; ''இராமன் இம்மூவுலகையும் அழிப்பேன்'' எனல்; இலக்குவனும், சடாயுவும் ஆறுதல் கூறிய பின், சடாயு தெய்வ மரணம் அடைதல்; இராம இலக்குவர் சடாயுவுக்கு இறுதிக் கடன்கள் இயற்றுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறன.

1. சடாயு இராவணனை நோக்கி வருதல்

என்னும் அவ்வேலையின்கண்,
"எங்கு அடா போவது?" என்னா,
"நில் நில்" என்று, இடித்த சொல்லன்,
நெருப்பு இடைப் பரப்பும் கண்ணன்;
மின்என விளங்கும் வீரத்
துண்டத்தன்; மேரு என்னும்
பொன் நெடுங்குன்றம் வானில்
வருவதே பொருவும் மெய்யான்; (3505)

(பரப்பும் - அகல விரித்த; துண்டு - அலகு / மூக்கு; மெய் - உடம்பு; வேலை - வேளை / சமயம்) (குளகப்பாடல்)

என்று இவ்வாறு சீதை கூறுகிற அச்சமயத்தில், "எங்கேயடா போகிறாய்; நில்லடா! என்று இடி போன்று பெருமுழக்கம் செய்து தம் சொல்லையுடையவனும், கோபத்தால் நெருப்புப் பறக்கின்ற அகன்ற விழிகளையுடைய கண்ணை உடையவனும், மின்னலைப் போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வீரம் கொண்ட மூக்கினை உடையவனும், மேரு என்னும் பொன்மயமான பெரிய மலை, வானத்தில் வருவது போன்ற பெரிய உடம்பை உடையவனும்" - பாடல் தொடர்கிறது.

சடாயு மேருமலை போன்ற பொன் நிறத்தவன் என்பது பெறப்படுகிறது. முன்பு அவன் வலிமைக்கு மந்தரமலையை ஒப்பிட்டதை நினைவு கூர்க; அவனுடைய சொல், கண், மூக்கு, உடல் முதலியவற்றிற்கு ஏற்ற உவமைகள் கூறியதும் காண்க.

2. பாழி வன்கிரிகள் எல்லாம் பறிந்து, எழுந்து, ஒன்றோடு ஒன்று
பூழியின் உதிர, விண்ணில் புடைத்து, உறக்கிளர்ந்து பொங்கி,
ஆழியும் உலகும் ஒன்றாய் அழிதர, முழுதும் வீசும்
ஊழி வெங்காற்று இது என்ன, இருசிறை ஊதை மோத. (3506)

(பாழி - பெரிய; வன் - வலிய; பூழி - புழுதி / பொடி / துகள்; புடைத்தல் - தாக்குதல்; வெம் - கொடிய; சிறை - சிறகுகள் / இறக்கைகள்; ஊதை - காற்று; பறித்தல் - பெயர்க்கப்படுதல்)

வலிய பெரிய மலைகள் எல்லாம் நிலைகுலைந்து, வான் மேலே எழுந்து ஒன்றோடு ஒன்று தாக்கிக் கொள்வதால் பொடிப்பொடியாக உதிர்ந்து போகவும், அதனால் கடலும், இவ்வுலகமும் ஒன்றாகிப் போய் அழியவும், தனது இரண்டு சிறகுகளையும் பிரளய காலத்து ஊழிக்காற்று தன் வலிமை முழுவதும் ஒன்று திரட்டி வீசுவது போலவும் - பாடல் தொடர்கிறது.

ஊழி இறுதியில், கடல் நீர் பொங்கி, உலகை அழிக்கும்; அப்போது காற்றும் பேராற்றலோடு வீசி, மலைகளைப் பெயர்த்துப் பொடிப்

பொடியாக்கிவிடும்; அத்தகைய வேகத்தோடு தனது இரண்டு சிறகுகளையும் விசிறிக் கொண்டு கழுகரசனான சடாயு பறந்து வந்தான் என்பதாம். சடாயு வந்த வேகத்தால், மலைகள் பெயர்ந்து ஒன்றோ டொன்று தாக்கிக் கொண்டு புழுதியாகிப் போயின; கடலும் உலகமும் ஒன்றறக் கலந்து அழிவுற்றன என்பதாம். சடாயுவின் சிறகுக் காற்றுக்கு ஊழிக் காலக்காற்று உவமை.

3. சாகை வன்தலையொடு மரமும் தாழ, மேல்
மேகமும் கிரிகளும் விண்ணின் மீச்செல,
''மாகவெங் கலுழன் ஆம் வருகின்றான்'' என,
நாகமும் படம் ஒளித்து ஒதுங்கி நையவே. (3507)

(சாகை / சாகம் - இலைகள் / கிளைகள்; தாழ்தல் - சாய்தல்; மீ - மேலே; மாகம் - பெருமை; வெம் - கொடிய; கலுழன் - கருடன்; ஒளித்து - ஒடுக்கிக் கொண்டு; நைதல் - வருந்துதல்)

சடாயு அவ்வாறு வேகத்துடன் வருவதால், அவ்வனத்தில் உள்ள மரங்கள் தங்களது கிளை இலை முதலிய தலைப்பகுதிகள் தரையோடு படிந்து சாய்ந்து வீழவும், மேலே இருக்கின்ற மேகங்கள், விண்ணின் மேல் இன்னும் உயரப் போகவும், ''பெருமையும் கொடுமையும் பொருந்திய கருடனே வருகின்றான் போலும்'' என்று எண்ணிப் பாம்புகள், தங்கள் படத்தை சுருக்கி மறைத்துக் கொண்டு, ஒளிந்து, ஒதுங்கிப் போய் வருந்தி நிற்கவும் - பாடல் தொடர்கிறது.

கருடனைக் கண்டால் பாம்பு நடுங்கி அடங்கி ஒதுங்கும். ஆகாயத்தில் கருடன் வருவது போல இருந்தது சடாயு வந்தது என்பதாம்.

4. யானையும், யாளியும், முதல யாவையும்,
கான்நெடு மரத்தொடு தூறு கல்இவை
மேல் நிமிர்ந்து, இருசிறை விசையின் ஏறலால்,
வானமும் கானமும் மாறு கொண்டவே. (3508)

(கான் - காடு; தூறு - புதர்கள்; மாறுகொள்ளுதல் - நிகர்ப்பன / ஒப்பன / மாறி மயங்குதல்; யாளி - ஒரு வகை விலங்கு; விசை - வேகம்)

யானைகள், யாளி ஆகியவும் மற்ற விலங்குகளும், காட்டிலுள்ள பெரிய மரங்களும், புதர்கள், கற்கள் ஆகிய இவைகளோடு, சடாயுவின் இரண்டு சிறகுகளும் வீசிக் கொண்டு வரும் வேகத்தால், நிலைகெட்டு ஆகாயத்தில் எழுந்து நிரப்பவும், வானமும், காடுகளும் தங்கள் நிலையில் மாறுபட்டுத் தோன்றின.

காட்டிலிருந்த யானை, யாளி, மற்ற விலங்குகளும், நீண்ட மரங்கள், புதர்கள், கற்கள் ஆகிய நிலைத்திணைப் பொருள்களும், சடாயுவின் இறகின் வேகம் தாங்காது வானத்தில் ஏறிச் சென்றதால், இப்போது வானமே காட்டினைப் போல் காட்சி தந்தது. எனவே அவை ஒன்றுக்

கொன்று மாறுபட்டுத் தோற்றின என்பதாம். யாளி என்பது யானையைப் போல் துதிக்கையும், சிங்கத்தைப் போல் மற்ற உறுப்புக்களையும் உடைய ஒரு விலங்கு.

5. சடாயு இராவணனை அச்சுறுத்துதல்

''உத்தமன் தேவியை, உலகொடு ஓங்குதேர்
வைத்தனை! ஏகுவது எங்கு? வானினோடு
இத்தனை திசையையும் மறைப்பென், ஈண்டு'' எனா,
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான்; (3509)

(உத்தமன் - எல்லோரையும் விட உயர்ந்தவன்; உலகு - நிலம்; ஓங்கு - உயர்ந்த; ஈண்டு - இப்பொழுதே; பத்திரம் - பாதுகாப்பு / இலையுமாம்; பண்பு - தன்மை)

''எல்லோருக்கும் உயர்ந்தவனான இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியை, நிலத்தோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு, உன்னுடைய உயர்ந்த தேரில் வைத்துக் கொண்டு செல்லுகிறாயே? எங்கே செல்லுகிறாய்? இந்த ஆகாயத்தோடு, மற்ற எட்டுத் திசைகளையும் இப்பொழுதே நீ போக முடியாமல், என் இறக்கைகளைக் கொண்டு மறைத்து விடுகிறேன்'' என்று கூறி, தனக்குப் பாதுகாப்புத்தரும் இலைகள் போன்ற அடர்ந்த தன் இரு சிறகுகளையும் அகல விரித்துக் கொண்டு வரும் தன்மையனான சடாயு - பாடல் தொடர்கிறது.

உத்தமன் என்பது ஆடவரில் சிறந்த புருஷோத்தமனாகிய இராமனைக் குறித்து நின்றது. பத்திரம் என்ற சொல்லுக்குப் பொன், அழகு, இறகு, வாள், மங்கலம், பறவை எனப் பல பொருள்கள் உண்டு. ''பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்'' என்பது கலித்தொகை.

6. வந்தனன் எருவையின் மன்னன்; மாண்பு இலான்
எந்திரத் தேர் செலவு ஒழிக்கும் எண்ணினான்;
சிந்துரகால், சிரம், செக்கர் சூடிய
கந்தரக் கயிலையை நிகர்க்கும் காட்சியான். (3510)

(மாண்பு - நற்குண நற்செய்கைகள்; ஒழிக்கும் - தடுக்கும்; ஈடு - வலிமை; செக்கர் - செவ்வானம்; கந்தரம் - மலைக் குகைகள் / கழுத்துமாம்; எருவை - கழுகுகள்; எந்திரம் - பொறி / சக்கரம்)

நல்ல குணங்களும் செய்கைகளும் இல்லாத இராவணனது எந்திரத்தினால் இயக்கப்பட்டு வேகமாகச் செல்லும் தேரின் செயலைத் தடுக்கும் எண்ணத்தையும், அதைத் தடுக்கும் ஆற்றலையும் உடையவனும், சிந்துரம் போன்று சிவந்த கால்களையும், தலையையும், செவ்வானத்தால் மூடப் பெற்ற மலைக்குகைகளையும் உடைய கயிலை மலையைத் தன் உருவத்தால் ஒக்கின்ற தோற்றத்தையுடையவனுமாகிய, கழுகுகளுக்கு அரசனான சடாயு, இராவணன் எதிரில் வந்து சேர்ந்தான்.

கந்தரம் என்ற சொல்லுக்குக் கழுத்து என்றும் ஒரு பொருள் உண்டு. எனவே சிவந்த கழுத்தை உடையவன் என்றும் பொருள் கூறுதல் பொருந்தும் என்க. இராவணன் தேரை சடாயு தடுக்க முயன்றது போலக் கயிலை மலையும் முன்னொருகாலத்தில் தடுத்தது என்பது, ''போர்அரக்கன் புட்பகம் தான் பொருப்பின் மீது ஓடாதாக'' என்ற தேவாரத்தின் மூலம் அறியலாகும். எனவே இங்கே சடாயுவின் வலிமையையும், தோற்றத்தையும் கயிலைமலைக்கு உவமித்தான் என்க. இதேபோல் முன்பு சடாயுவை மேரு மலைக்கும், மந்தர மலைக்கும் உவமித்ததையும் நினைவு கூர்க. சடாயுவின் வருகையை மேற்கூறிய ஆறு பாடல்களில் கூறி இந்தப் பாடலுடன் முடித்தமை காண்க.

7. சீதைக்கு ஆறுதல் கூறுதல்

ஆண்டு உற்ற அவ்அணங்கினை, ''அஞ்சல்'' எனா,
தீண்டுற்றிலன் என்று உணர் சிந்தையினான்,
மூண்டுற்று எழுவெங் கதம் முற்றிலனாய்,
மீண்டுற்று, உரையாடலை மேயினனால்: (3511)

(ஆண்டு - அவ்விடம்; உற்று - அடைந்து; அணங்குறுதல் - துன்புறுதல்; சிந்தை - மனம்; வெம் - கொடிய; கதம் - கோபம்; முற்றுதல் - முதிர்தல்; மீளுதல் - தணிதல்)

அவ்விடம் வந்து, சடாயு, அழுது துன்புறுகின்ற சீதையை நோக்கி, ''பயப்படாதே'' என்று தேறுதல் கூறி, ''இராவணன் சீதையைத் தொட வில்லை'' என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட மனத்தையுடையவனாய், தான் வரும் பொழுது எழுந்திருந்த கொடிய கோபத்தை முதிரவிடாத வனாய்ச் சற்று தணித்துக் கொண்டு, மீண்டும் இராவணனிடம் வந்து, கீழ்வருமாறு கூறத்தொடங்கினான்.

இராவணன் சீதையைத் தொடவில்லை என்பதை வழி அளவையால் உணர்ந்தான் என்க. எனவே, தான் முன்பு கொண்டிருந்த சினத்தைத் தணித்துக் கொண்டான் என்பதாம். இராவணன் சீதையைத் தொடாததை உணர்ந்தே, இராவணன் அவளைத் தொடுவதற்கு அச்ச முற்றிருக்கிறான் என்பதை உய்த்து உணர்ந்த சடாயு, தான் அறிவுரை கூறினால் ஒரு வேளை விட்டு விடவும் கூடும் என்று கருதி, உரையாடத் தொடங்கினான் என்பதாம்.

8. சடாயு இராவணனுக்கு அறிவுரை கூறுதல் [9 பாடல்கள்]

''கெட்டாய் கிளையோடும்; நின் வாழ்வை எலாம்
சுட்டாய்; இது என்னை தொடங்கினை? நீ
பட்டாய் எனவே, கொடு பத்தினியை
விட்டு ஏகுதியேல், விளிகின்றிலையால்.'' (3512)

(கெடுதல் - ஒழுக்கத்தால் கெடுதல் / கேடு உறுதல்; கிளை - சுற்றம்; படுதல் - இறத்தல்; கொடு - கொண்டு; ஏகுதி - செல்வாயாக; விளிதல் - அழிவடைதல் / இறத்தல்; பத்தினி - கற்புடையவள் / பதிவிரதை; சுடுதல் - எரித்தல்)

''ஒழுக்கம் கெட்டுப் போனாய்; உன்னுடைய சுற்றத்தவரொடும், நீ பெற்ற செல்வ வாழ்க்கை அனைத்தையும் எரித்து ஒழித்தாய்; ஏன் இத்தகைய தகாத செயலைச் செய்யத் தொடங்கினாய்? நீ இதனைச் செய்ததனால் இறந்து போனாய் என்றே எண்ணிக்கொள்; கற்பின் கனலியாகிய சீதையை விட்டு விட்டுத் திரும்பிச் செல்; அவ்வாறு செல்வாயானால் என் கையாலோ, இராமன் கையாலோ இறக்காமல் இருப்பாய்'' என்றான் சடாயு.

கெட்டாய் என்பதைக் கேடுற்றாய் என்றும் கொள்ளலாம்; பத்தினியை விட்டு ஏகினால் விளிகின்றிலை என்றதனால், அவ்வாறு விட்டுச் செல்லவில்லை என்றால் நீ அழிந்து விடுவாய் என்பது எச்சப்பொருள். முதலில் சடாயு சமாதானமாகப் பேசுகின்றான். சற்றே அச்சுறுத்துகின்றான் அவ்வளவே. இது சாப, பேத, தான, தண்ட உபாயங்களில், சாம உபாயம் எனக் கொள்க. நீண்ட கடுந்தவம் செய்து பெற்ற பலவகைச் செல்வங்கள் நிறைந்த வாழ்க்கை என்பதைக் குறிக்கவே, ''வாழ்வை எல்லாம்'' என்றான் என்க.

9. ''பேதாய்! பிழை செய்தனை; பேர் உலகின்
மாதா அனையாளை மனக்கொடு, நீ
யாது ஆக நினைத்தனை? எண்ணம் இலாய்!
ஆதாரம் நினக்கு இனியார் உளரோ?'' (3513)

(பேதை - அறிவில்லாதவன்; மாதா - தாய்; எண்ணம் - சிந்தனை; ஆதாரம் - பற்றுக்கோடு; பிழை - தவறு)

''அறிவற்றவனே! தவறு செய்து விட்டாயே! இந்தப் பெரிய உலக உயிர்கள் அனைத்தையும் ஈன்ற தாய் போல்வாளாகிய இச்சீதையை நீ யார் என்று நினைத்துக் கொண்டு இவ்வாறு கவர்ந்து வந்தாய்? சிந்தனையற்ற மூடனே! இனிமேல் உனக்கு இவ்வுலகில் யார் பற்றுக்கோடாக இருப்பர்? எவரும் இலர்'' என்றான் சடாயு.

பேருலகின் மாதா என்பது லோகநாயகி, ஜகன்மாதா என்ற பொருளில் கையாளப்பட்டதை உணர்க. உன் அழிவை வராமல் காப்போர் வேறு எவரும் இல்லையே என்பதைக் குறிக்க, ''ஆதாரம் நினக்கு இனியார் உளரோ'' என்றான்.

10. ''உய்யாமல் மலைந்து, உமர்ஆர் உயிரை
மெய்யாக இராமன் விருந்திடவே,
கைஆர முகந்து கொடு, அந்தகனார்,
ஐயா! புதிது உண்டது அறிந்திலையோ?'' (3514)

(உய்யாமல் - பிழைக்காமல்; மலைந்து - போர் செய்து; உமர் - உன் உறவினர்; அந்தகனார் - இயமன்; முகந்து - வாரிக்கொண்டு; விருந்து - புதிய சிறந்த உணவு; ஐயன் - தலைவன்)

''உன்னுடைய உறவினர்களான கரன், தூடணன் ஆகியோருடன் போர் செய்து, அவர்கள் தப்பிப் பிழைக்காமல், அவர்களது அருமையான உயிரை, உண்மையாகவே இராமன் இயமனுக்கு விருந்து படைத்தான் அல்லவா? அதனை இயமனும் கை நிறைய மகிழ்ச்சியுடன் வாரிக் கொண்டு ''புதிய விருந்து'' உண்டது போல் மகிழ்ந்தானே, அதை அரக்கர் இனத்தலைவனான நீ அறியவில்லையோ?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டான் சடாயு.

''மெய்யாக'' என்ற சொல்லாட்சி அற்புதமான ஒன்று. இராமன் கரன், தூடணர்களின் பதினாலாயிரம் படைவீரர்களை, ஒன்றரை மணி நேரத்தில், தனியனாக நின்று, அனைவரையும் எமன்கைக்கு வாரிக்கொடுத்தான். படையின் பெருக்கம், காலத்தின் சுருக்கம், தனிமை இவற்றை யாரும் நம்பமாட்டார்கள். எனவேதான் மெய்யாக என்ற சொல்லைக் கவிஞன் இங்கே பயன்படுத்தியிருக்கிறான் என்பதை அறிக. ''விருந்து'' என்ற சொல் புதிது என்ற பொருளைத் தரும். இதுவரை இராவணனுக்கு அஞ்சி, இயமன் கூட அரக்கர்களைக் கொன்று அவர் உடலைத் தின்றதில்லை, இப்பொழுது இராமன் தயவினால் அரக்கர்களின் உடலைப் புதிய விருந்து போல் மகிழ்ச்சியுடன் வாரி உண்டான் என்பதாம்.

11. ''கொடு வெங்கரி கொல்லிய வந்ததன்மேல்
விடும் உண்டை கடாவ விரும்பினையே?
அடும் என்பது உணர்ந்திலை ஆயினும், வன்
கடு உண்டு, உயிரின் நிலை காணுதியால்!'' (3515)

(கொல்லிய - கொல்லும் பொருட்டு; விடுதல் - எறிதல்; கடாவுதல் - வீசுதல்; - அடுதல் - அழித்தல் / கொல்லுதல்; கடு - நஞ்சு / விடம்; காணுதல் - பரிசோதித்தல்; உண்டு - சாப்பிட்டு; உண்டை - மண் உருண்டை)

''கொடுமையான சினம்மிக்க யானை ஒன்று உன்னைக் கொல்லும் பொருட்டே வந்தது என்றால் அதன்மேல், மேலும் நீ மண்ணுருண்டையை வீசியெறிய விரும்புகின்றாயே? அது உன்னைக் கொன்று அழித்துவிடும் என்பதை நீ உணரவில்லையே! என்றாலும், வலிய நஞ்சினை உண்டு பார்த்துத்தான், அதனால் உயிர் நிலைத்திருக்குமா, அழிந்து படுமா என்று கண்டு கொள்வாய் போலும்!'' என்றான் சடாயு.

இந்தப் பாடல் ஒரு கருத்தைச் சொல்லி, மற்றொரு கருத்தைப் புரியவைத்திருக்கின்ற கம்பனின் விசித்திரப் பாடல். இராமன் தேவர்களின் வேண்டுகோளால், உன்னையும் உங்கள் அரக்கர் குலத்தையும் வேரறுப்பதற்கெனவே இயற்கையான கோபத்துடன் இங்கு வந்திருக்கிறான். நீ இப்பொழுது அவன் கற்புடைய மனைவியைக் கவர்ந்து

கொண்டு வந்து, அவனுக்கு மேலும் சினத்தை அதிகப்படுத்தியிருக்கிறாய்; அவன் மேலும் சினம் கொண்டு உன்னையும் உன் இனத்தாரையும் விரைவில் அழிக்க முற்படுவான் என்பதை மனத்தில் கொள்ளவில்லையா? நஞ்சு என்பது உயிரைக் கொல்லும் தன்மையுடையது என்பதைக் கேட்டு அறிதலில் உணரமாட்டாயா? அதை உண்டு பார்த்தால் தான் அது நஞ்சு, அது உயிரைக் கொல்லும் என்று கண்டு கொள்வாயா? சீதையின் பார்வையே விடத்தைக் கக்கி தீய எண்ணம் கொண்டு கண்டவர்களைக் கூடக் கொன்று விடும். எனவே உன் உயிரைக் கொன்று விடும், என்று அவளைக் கவர்ந்து வந்துதான் அறிந்து கொள்ளப்போகிறாயா? என்று சடாயு குறிப்பால் உணர்த்தினான் என்பதாம்.

இயல்பாகவே சினம் மிக்க யானையின் மேல் ஒருவன் மண் உருண்டையை எறிந்தால் அது மேலும் சினம் கொண்டு, அவனை விரைவில் தாக்கி அழிக்குமல்லவா? அது போல, உண்மையிலேயே உங்களை அழிக்க எண்ணம் கொண்டு வந்த இராமன்மேல், அவன் மனைவியைக் கவர்தல் என்ற மண் உருண்டையை இப்பொழுது நீ வீசி எறிந்திருக்கிறாய். எனவே இவன் உன்னையும் உன் கூட்டத்தாரையும் விரைவில் அழித்து ஒழிப்பான் என்பது உறுதி. நஞ்சை உண்டு பார்த்துத்தான் ஒருவன் தெரிந்து கொள்வானா? அதுபோல்தான் இருக்கிறது உனது செய்கையும் என்றான் சடாயு என்க. இதைத்தான் இன்றும் நாம் ''விஷப் பரீட்சை'' என்று சொல்லுகிறோம் என்பதை நினைவிற் கொள்க.

12\. ''எல்லா உலகங்களும், இந்திரனும்,
அல்லாதவர் மூவரும், அந்தகனும்,
புல்வாய் புலி கண்டது போல்வர் அலால்,
வில்லாளனை வெல்லும் மிடுக்கு உளரோ?'' (3516)

(மூவர் - அயன், அரி, அரன்; அந்தகன் - இயமன்; புல்வாய் - மான்; மிடுக்கு - வல்லமை; புல் தின்னும் வாயை உடையது என்பதால் புல்வாய் என்பது மானுக்குக் காரணப் பெயர்; முடிவு இல்லாது அழிவை உண்டாக்குபவன் என்பதால் அந்தகன் இயமனுக்குக் காரணப்பெயர்)

''எல்லா உலகங்களில் வாழ்பவர்களும், மூவுலகத்திற்கும் தலைவனான தேவேந்திரனும், அவர்கள் தவிர்த்த மும்மூர்த்திகளான திருமால், பிரமன், சிவபெருமான் ஆகிய மூவரும், உயிர் கவர்தலையே தொழிலாகக் கொண்ட இயமனும், புல் தின்னும் வாயையுடைய மான், புலியைக் கண்டு அஞ்சி ஓடி மறைவது போல, வில் தொழிலில் வல்லமையுடைய இராம இலக்குவர்களைக் கண்டு அஞ்சி ஓடுவார்களே தவிர, அவர்களை வெல்லும் வல்லமை கொண்டவர்களோ?'' என்றான் சடாயு.

மான் புல்லையே தின்று கொண்டிருக்கும் வாயை உடையது; ஆனால் புலி, பசித்தாலும் புல்லைத் தின்னாது. ஆனால் மான் எப்பொழுதும் புலிக்கு அஞ்சி ஓடி ஒளிவதைத் தான் செய்யும். அதைப் போல, மும்மூர்த்திகள், இந்திரன், இயமன் முதலானோர் இராம இலக்குவர் வில்லாற்றலுக்கு அஞ்சுவர் என்பது கருத்து. அவ்வாறிருக்க நீ ஒரு பொருட்டோ? என்று சடாயு கூறுகிறான் என்க. மும்மூர்த்திகளுடன் சேர்த்து இந்திரனைக் கூறுவதை இக்காப்பியத்தில் பரக்கக் காணலாம்.

13. ''இம்மைக்கு, உறவோடும் இறந்தழியும்
வெம்மைத் தொழில், இங்கு, இதன்மேல் இலையால்;
அம்மைக்கு, அருமா நரகம் தருமால்;
எம்மைக்கு இதம் ஆக இது எண்ணினை, நீ?'' (3517)

(இம்மை - இப்பிறவி; அம்மை - மறுபிறப்பு; எம்மை - எந்தப் பிறவி; இதம் - ஹிதம் / இன்பம்; தொழில் - பிறன்மனை விழைதல்

''நீ பிறனுடைய மனைவியாகிய கற்புடைய சீதையைக் கவர்ந்து வந்திருக்கிற இச்செயலானது, இப்பிறவியிலேயே நீ, உன்னுடைய சுற்றத்தாரோடு ஒழிந்து அழிந்துபடக் காரணமாகும். இதைவிடக் கொடிய செயல் வேறொன்றும் இல்லை; அத்தோடில்லாமல், இச்செயல், மீளுதற்கரிய அடுத்த பிறவியிலும் உன்னைத் தொடர்ந்து வந்து உனக்கு நரகத்தை தரும் இயல்புடையது. எனவே இனிவரும் எந்தப் பிறவியில் உனக்கு இன்பம் தரும் என்று கருதி, இத்தகைய கொடிய செயலைச் செய்ய எண்ணினாய்?'' என்று கேட்டான் சடாயு.

''பிறன்மனை நயத்தல் என்ற கொடிய செயல், இந்தப் பிறவியில் தான் அழிவதோடு மட்டுமல்ல, தன் சுற்றத்தாரையும் அழித்துவிடும். மேலும் மறுபிறவியிலும் இப்பாவம் தொடர்ந்து வந்து நரகத்தில் அழுத்திவிடும். எனவே எப்பிறவியிலும் ஒருபோதும் இன்பம் தராத இச்செயலை ஏன் மேற்கொண்டாய்?'' என்று சடாயு கேட்டான் என்பதாம். பிறன்மனை நயத்தல் பற்றி நாலடியார், சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய நூல்கள் விளக்கமாகப் பேசுகின்றன.

14. ''முத்தேவரின் மூலமுதற் பொருள்ஆம்
அத்தேவர் இம்மானிடர்; ஆதலினால்,
எத்தேவரொடு எண்ணுவது? எண்ணம் இலாய்!
பித்தேறினை ஆதல் பிழைத்தனையால்.'' (3518)

(எண்ணம் - முன் ஆலோசனை; முத்தேவர் - அயன், அரி, அரன்; பிழைத்தல் - பிழை செய்தல்; பித்து - மயக்கம்; மூலம் - ஆதி காரணம்; முதற்பொருள் - பரம்பொருள்; தேவர் - தெய்வம்)

''முன் ஆலோசனை இல்லாதவனே! இங்கு மானிடர்களாய் வந்துள்ள இவ்விராம, இலக்குவர், மும்மூர்த்திகளாகிய, பிரமன், திருமால்,

சிவபெருமான் ஆகிய மூவர்க்கும் ஆதிகாரணமாக விளங்குகின்ற பரம்பொருள் ஆவர். எனவே இவர்களை எந்தத் தெய்வத்தோடும் ஒப்பிட்டுக் கூற முடியாது; உனக்குக் காமமயக்கம் அதிகரித்துவிட்டது. எனவே இத்தகைய குற்றத்தைச் செய்ய முற்பட்டாய்'' என்றான் சடாயு.

இராமபிரானை, இக்காப்பியத்தில் பல இடங்களிலும் கவிஞன் முத்தேவரில் மூல முதற்பொருள் என்று கூறுவதைப் பரக்கக் காணலாம். ''முதலாவார் மூவரே; அம்மூவருள்ளும் முதலாவான் மூரி நீர் வண்ணன்'' என்பது பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி.

15. ''புரம் பற்றிய போர் விடையோன் அருளால்
வரம் பெற்றவும், மற்றுஉள விஞ்சைகளும்,
உரம் பெற்றன ஆவன உண்மையினோன்
சரம் பற்றிய சாபம் விடும்தனையே.'' (3519)

(புரம் - திரிபுரம்; விடை - எருது; விடையோன் - சிவபெருமான்; விஞ்சை - மாய வித்தைகள்; சரம் - அம்பு; சாபம் - வில்; உரம் - வலிமை)

திரிபுரங்களையும் எரித்த போராற்றலுடைய, எருதை வாகனமாக உடைய சிவபெருமான் கருணையினால் நீ பெற்ற வரங்களும், மற்றும் நீ அறிந்திருக்கிற மாயப் போர் வித்தைகளும், சத்திய சீலனான இராமபிரான் தனது வில்லில் அம்பை வைத்துத் தொடுத்து விடுகின்ற வரைதான் வலிமை பெற்றதாக இருக்கும். அவ்வம்பைத் தொடுக்க ஆரம்பித்தால், வரங்களும், வித்தைகளும் வலிமையற்றனவாகிவிடும்'' என்றான் சடாயு.

இராமன் தந்தை சொல் காக்க விரதம் கொண்ட சத்திய சீலன் என்பதை ''உண்மையினோன்'' என்று குறித்தான் என்க. இராமபிரானின் அம்பு சிவபெருமானின் வரத்தைவிட வலிமை பெற்றது என்பதாம்.

16. ''வான் ஆள்பவன் மைந்தன், வளைத்த விலான்,
தானே வரின், நின்று தடுப்ப அரிதால்;
நானே அவண் உய்ப்பென், இந்நன்னுதலை;
போ, நீ கடிது'' என்று புகன்றிடலும். (3520)

(வான் - விண்ணுலகு; ஆளுதல் - வாழுதல்; உய்த்தல் - சேர்த்தல்; கடிது - விரைந்து; புகல்தல் - சொல்லுதல்) (குளகப் பாடல்)

''இப்பொழுது விண்ணுலகில் இருந்து வரும் தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனான இராமன், போர் செய்யும் பொருட்டு வளைத்த வில்லையுடையவனாய் இங்கேநேரில்வந்து விட்டால், அவனைத்தடுத்து நிறுத்துவது மிக அரிய செயலாகும்; எனவே, இவ்வழகிய நெற்றியை யுடைய சீதாதேவியை, அவள் இருந்த இடத்தில் கொண்டு போய் நானே சேர்ப்பித்து விடுகிறேன்; நீ விரைவாக இங்கிருந்து போய் விடு'' என்று சடாயு இராவணனை அச்சுறுத்திச் சொன்னவுடன் - பாடல் தொடர்கிறது.

17. இராவணன் மறுத்து உரைத்தல்

கேட்டான் நிருதர்க்கு இறை; கேழ்கிளர் தன்
வாள்தாரை நெருப்பு உக, வாய் மடியா,
''ஓட்டாய்; இனி நீ உரை செய்குநரைக்
காட்டாய் கடிது'' என்று, கனன்று உரையா. (3521)

(நிருதர் - அரக்கர்; இறை - தலைவன்; கேழ் - நிறம்; கிளர்தல் - விளங்குதல்; வாள் - ஒளிமிக்க; தாரை - கண்கள் / கண்மணிகள்; உக - சிந்த; மடியா - மடித்து; கடிது - விரைந்து; கனன்று - வெகுண்டு)

இவ்வாறு சடாயு கூறியனவற்றைக் கேட்ட அரக்கர்களுக்குத் தலைவனான இராவணன், தனது ஒளி விளங்கிய கண்களினின்றும் தீப்பொறி பறக்கவும், வாயினை மடித்து, ''என்னை இங்கிருந்து ஓட்டுவதற்கு எண்ணாதே; நீ புகழ்ந்து பேசுகின்ற அவர்களை எனக்கு உடனே காட்டுவாயாக!'' என்று சினந்து கூறினான்.

வாள் என்ற சொல்லுக்கு அவனது ''சந்திரகாசம் என்ற வாளினின்றும் நெருப்புப் பொறி சிந்த'' என்றும் பொருள் கொள்வர். கண்ணில் தீப்பொறி பறத்தலும், வாய் மடித்துக் கொள்வதும் சினத்தின் மெய்ப்பாடுகள்.

18. ''சீதையை விடமாட்டேன்'' என்று உறுதியாகக்கூறுதல்

''வரும் புண்டரம்! வாளி உம் மார்பு உருவிப்
பெரும் புண் திறவாவகை பேருதி நீ;
இரும்பு உண்ட நீர் மீளினும், என்னுழையின்
கரும்பு உண்ட சொல் மீள்கிலள்; காணுதியால்.'' (3522)

(புண்டரம் - கழுகு; வாளி - அம்பு; பேருதல் - திரும்பிச் செல்லுதல்; மீள்குதல் - மீண்டு வெளிப்போதல்; உழை - பக்கம்; காணுதி - அறிவாயாக; உண்ட - போன்ற)

''என்னை எதிர்த்துத் தாக்க வரும் கழுகே! என்னுடைய அம்பு உன் மார்பில் புகுந்து ஊடுருவிச் சென்று பெரிய புண்ணை உண்டாக்காத வண்ணம், நீ உடனே இவ்விடத்தை விட்டு அகன்று செல்க; பழுக்கக் காய்ச்சிய இரும்பின் மேல்பட்ட நீர்த்துளி மீண்டும் வெளிப்பட்டுத் தோன்றினாலும் தோன்றும், ஆனால் என் பக்கத்தில் இருக்கின்ற, கரும்புச் சாறு போன்ற இனிய சொற்களைக் கொண்ட இச்சீதை மீண்டுவர மாட்டாள். இதை அறிந்து கொள்வாயாக!'' என்றான் இராவணன்.

புண்டரம் என்பது கழுகுக்கு மற்றொரு பெயர். எருவை, உவணம், கருஞ்சிறை, கங்கம், பவணை என்பனவும் கழுகுக்கு மறுபெயர்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்பில் நீரை ஊற்றினால், அது தனக்குள் இழுத்துக் கொள்ளும். அந்நீரைப் பின்னர் எவ்வளவு முயற்சி செய்தாலும் வெளிக்கொணர முடியாது. அதுபோல இராவணன் கையில் அகப்பட்ட சீதையும் மீண்டுவர மாட்டாள் என்பதாம்.

19. சடாயு சீதையிடம் ''அஞ்சாதே'' என்று கூறுதல்

என்னும் அளவில், பயம் முன்னின் இரட்டி எய்த,
அன்னம் அயர்கின்றது நோக்கி, ''அரக்கன் ஆக்கை
சின்னம் உறும் இப்பொழுதே;'' ''சிலை ஏந்தி, நங்கள்
மன்னன்மகன்வந்திலன்'' என்று, வருந்தல்; அன்னை! (3523)

(பயம் - அச்சம்; இரட்டி - இரண்டு மடங்கு; அயர்தல் - சோர்வடைதல்; யாக்கை - உடம்பு; சின்னம் உறுதல் - கண்டதுண்டமாகப் போதல்; சிலை - வில்; நங்கள் - நம்) (குளகப் பாடல்)

என்று இராவணன் கூறிய' பொழுது, முன்னிலும் இரண்டு மடங்கு அச்சம் கொண்டவளான, அன்னப்பறவை போன்ற சீதாதேவி சோர்வுற்றாள்; இதைக் கண்ணுற்ற சடாயு, ''தாய் போன்றவளே!'' இவ்வரக்கனது உடம்பு இன்னும் சிறிது நேரத்தில் கண்ட துண்டமாக்கப்படும்; நம் மன்னர் தசரதச்சக்கரவர்த்தியின் மகனான இராமன் கையில் வில்லை ஏந்திக் கொண்டு போர் செய்ய ஆயத்தமாக இன்னும் வரவில்லையே! என்று ''நீ வருந்தாதே'' என்று ஆறுதல் கூறினான்.

சின்னம் என்ற வடசொல் துண்டு என்ற பொருள் குறித்தது. ''சின்னா பின்னம்'' என்னும் உலகவழக்கையும் நினைவு கூர்க. அன்னை என்று சடாயு சீதாதேவியை அழைத்தது அன்பு கருதி என்க. எம் என்பது எங்கள் என்பதைப் போல, நம் என்பது நங்கள் எனலாயிற்று.

20. ''முத்து உக்கனபோல் முகத்து ஆலி முலைக்கண் வீழ,
தத்துற்று அயரேல்; தலை, தால பலத்தின் ஏலும்
கொத்து ஒப்பன கொண்டு, இவன் கொண்டன என்ற ஆசை
பத்திற்கும், இன்றே பலி ஈவது பார்த்தி'' என்றான். (3524)

(உக்கன - உதிர்வன; ஆலி - கண்ணீர்த் துளிகள்; தத்து - மனக் கவலை; அயர்தல் - வருந்துதல்; தாலபலம் - பனம்பழம்; கொத்து - வரிசை; ஆசை - திசைகள்; இன்றே - இப்பொழுதே; ஏலுதல் - பொருந்துதல் / தாங்குதல்; பலி - நிவேதனம் / நைவேத்யம் / கடவுளர்க்குத் தரும் உணவு)

''முத்துக்கள் சிந்துவது போல, உன் கண்களினின்றும் கண்ணீர்த் துளிகள் உன் கொங்கைகளில் வந்து விழுமாறு மனக்கலக்கம் அடைந்து சோர்வுற்று வருந்தாதே; பனம் பழத்தின் கொத்துக்கள் போல் வரிசையாக இருக்கின்ற இவனது பத்துத் தலைகளையும், இவன் திக்குவிசயத்தின் போது வெற்றி கொண்டனவாகக் கூறப்படும் பத்துத் திக்குகளுக்கும், பலியாகஇப்பொழுதேநான்கொடுக்கப்போவதைநீ பார்ப்பாயாக'' என்று சடாயு சீதைக்கு ஆறுதல் கூறினான்.

கண்ணினின்றும் வழியும் நீர்த்துளி முகத்தினின்றும் உதிர்வதாகக் கூறப்பட்டது. கண்ணீர்த் துளி விழுவதற்கு முத்து உதிர்தல் உவமை.

இராவணன் தலைகளுக்குப் பனம் பழங்கள் உவமை. திசைகள் பத்து என்பது, எட்டுத் திசைகளுடன் வானையும், நிலத்தையும் சேர்த்துப் பத்துத் திசைகள் என்பது கருத்து. பனம் பழத்தின் குலையை இராவணன் தலைகளுக்கு ஒப்பாகப் பெரிய திருமொழியும் பேசுகிறது, பாடல் இது. ''இலங்கையர் சேனை பானுநேர் சரத்தால், பனங்கனி போலப் பருமுடி உதிர வில் வளைத்தோன்'' என்பது பெரிய திருமொழி.

21. சடாயு இராவணனுடன் போர் புரிதல் [20 பாடல்கள்]

இராவணனது வீணைக் கொடியை அறுத்தல்

இடிப்பு ஒத்த முழக்கின், இருஞ்சிறை வீசி எற்றி,
முடிப் பத்திகளைப் படிஇட்டு, முழங்கு துண்டம்
கடிப்பக் கடிது உற்றவன், காண்தகும் நீண்ட வீணைக்
கொடிப் பற்றி ஒடித்து, உயர் வானவர் ஆசி கொண்டான். (3525)

(இடிப்பு - இடி; இரும் - பெரிய; சிறை - சிறகுகள்; எற்று - மோதி; முடி - கிரீடம்; படி - பூமி; துண்டம் - மூக்கு / அலகு; கடிது - விரைந்து; ஆசி - வாழ்த்துக்கள்; பத்தி - வரிசை)

இடி முழக்கம் போன்று பேரொலி செய்து கொண்டு, தனது இரண்டு பெரிய சிறகுகளையும் வீசி மோதிக் கொண்டு, இராவணனுடைய கிரீடவரிசைகளை இந்நிலத்தில் தள்ளிவிட்டு, தனது போரொலி செய்யப் பயன்படும் அலகினால் அவற்றைக் கடித்துத் துப்புவதற்காக விரைந்து வந்த சடாயு, இராவணனுடைய காண்பதற்குத்தக்க அழகிய நீண்ட வீணைக்கொடியைப் பற்றி, அதை முறித்து சிறந்த தேவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றான்.

தனது பெரிய சிறகுகளினால் இராவணனது தலையில் அணிந்திருக்கின்ற பத்துக்கிரீடங்களையும் நிலத்தில்தள்ளி, அவனைத்தன் மூக்கினால்கடித்துக்குதறவேண்டும்எனஇடி முழக்கம்போலப்பேரொலி செய்து கொண்டு வந்த சடாயு, அது முடியாததனால், இராவணனது அழகிய வீணைக் கொடியைப் பற்றி ஒடித்தான். இதனைக் கண்ணுற்ற தேவர்கள்அவனுக்குவாழ்த்துக்கூறினர்என்பதாம். இராவணன்இசையில் வல்லவன். எனவே வீணையைத் தன் கொடியில் கொண்டிருந்தான். இவன் இசையில் வல்லவன் என்பதையும், இவன் இசையில் சிவபெருமான் மயங்கி இவனுக்கு வரங்கள் அளித்தார் என்பதும் நாம் முன்பே கண்டதாம். ''விசை தணிந்து, அரக்கன் வீழ்ந்து, கைந்நரம்பு எழுவிக்கொண்டு, காதலால், இனிது சொன்ன கின்னரம் கேட்டு, உகந்தார் கெடில வீரட்டனாரே'' என்பது தேவாரம். ஆனால் வான்மீகம், இராவணனது கொடி, மனிதத்தலை வடிவம் எழுதப்பட்டது என்று கூறுகிறது என்பது கருதத்தக்கது.

22. இராவணன் சினமுற்றுச் சிரித்தல்

அக்காலை, அரக்கன், அரக்கு உருக்கு அன்ன கண்ணன்,
எக்காலமும், இன்னது ஓர் ஈடு அழிவுற்றிலாதான்
நக்கான், உலகு ஏழும் நடுங்கிட; நாகம் அன்ன
கைக் கார்முகத்தோடு கடைப்புருவம் குனித்தான். (3526)

(ஈடு - பெருமை / வலிமை; நாகம் - மலை; கார்முகம் - வில்; குனித்தல் - வளைத்தல்; அழிவு - கேடு; கடைப்புருவம் - புருவ நுனி)

அவ்வாறு வீணைக் கொடி அறுபட்டுத் தரையில் விழுந்தவுடன், முன்பு எப்போதும் தனக்கு இத்தன்மையதான ஒரு பெருமைக்கேடு நிகழாத வலியுடைய அரக்கனாகிய இராவணன், அரக்கை உருக்கி வார்த்தாற் போன்ற கொதிப்பும், சிவப்பும் உடைய கண்களையுடையவனாகி, இந்த ஏழு உலகங்களும் நடுங்கும்படி சிரித்தான். மலை போன்ற தனது கையில் உள்ள வில்லையும், தனது புருவ நுனியையும் ஒருசேர வளைத்தான்.

சிவந்த கண்களின் நிறத்திற்கும் சினக்குறிப்புக்கும், உருக்கிய அரக்கை உவமை கூறியது காண்க. வில்லை வளைத்ததும், புருவத்தின் நுனி வளைந்ததும் ஒரே காலத்தில் நிகழ்ந்தன என்பதாம்.

23. மூக்கினால் வில்லைச் சிதைத்தல்

சண்டப் பிறை வாள் எயிற்றான் சர தாரை மாரி
மண்ட, சிறகால் அடித்தான் சில; வள் உகிரால்
கண்டப்படுத்தான் சில; காலனும் காண உட்கும்
துண்டப் படையால், சிலை துண்ட துண்டங்கள் கண்டான். (3527)

(சண்டம் - கொடுமை; வாள் - ஒளி பொருந்திய; எயிறு - பற்கள்; சரம் - அம்புகள்; மண்ட - நெருங்க; வள் - கூரிய; உகிர் - நகங்கள்; கண்டம் - துண்டு; உட்குதல் - அஞ்சுதல்; காலன் - இயமன்; துண்டம் - அலகு; படை - ஆயுதம்; தாரை - மழை ஒழுக்கு; கண்டான் - செய்தான்)

கொடுமையானதும், பிறைச்சந்திரனைப் போன்று வளைந்ததும், ஒளி மிக்கதுமான கோரைப் பற்களை உடைய இராவணன் செலுத்திய அம்புகளின் மழைப் பெருக்கு, தன்னை ஒன்று சேர்ந்து நெருங்கி வந்து தாக்கவும், அவற்றில் சிலவற்றைத் தனது சிறகால் அடித்து வீழ்த்தினான்; சிலவற்றைத் தனது வலிமை பொருந்திய கூரிய நகங்களால் துண்டுகளாக ஆக்கினான்; இயமனும் கண்டு அஞ்சும்படியான தனது மூக்கு என்னும் படைக்கலத்தால், இராவணனுடைய வில்லைக் கண்ட துண்ட மாக்கினான் சடாயு.

இராவணன் செலுத்திய அம்பின் மிகுதிக்கு மழைத் தாரை மண்டுதல் ஒப்பு; அந்த அம்புகளை சடாயு தன் சிறகுகளாலும், கால் நகங்களாலும்,

அவன் விடுத்த வில்லைத் தன் மூக்கினாலும் அறுத்துத் துண்டங்களாக்கினான் என்பது கருத்து.

24. சடாயு இராவணனின் காதணியைப் பறித்துச் செல்லுதல்

மீட்டும் அணுகா, நெடுவெங்கண் அனந்த நாகம்
வாட்டும் கலுழன் என, வன்தலை பத்தின்மீதும்
நீட்டும் நெடு மூக்கு எனும் நேமியன் சேமவில்கால்
கோட்டும் அளவில், மணிக் குண்டலம் கொண்டு எழுந்தான். (3528)

(வாட்டும் - வருத்துகின்ற; கலுழன் - கருடன்; நேமி - சக்கரப்படை; கோட்டுதல் - வளைத்தல்; கால் - தண்டு; அணுகா - அணுகி / அடைந்து; சேமவில் - பாதுகாப்புக்காக இருப்பாக வைத்துள்ளவில்; மணி - இரத்தினம் / அழகு; எழுந்தான் - மேற்கிளம்பினான்)

நீண்ட, கொடிய கண்களையும் பல தலைகளையும் உடைய அனந்தநாகம் என்னும் பாம்பினை வருத்துகின்ற கருடனைப் போல, இராவணனுடைய வலிய பத்துத் தலைகளின் மீதும், தனது, நீண்ட மூக்கு என்னும் சக்கராயுதத்தை நீட்டுகின்ற சடாயு, இராவணன் தனது பாதுகாப்புக்காக வைத்திருக்கின்ற இருப்பு வில்லை எடுத்து தண்டை நாண் பூட்டி வளைப்பதற்குள் சடாயு அவனை மீண்டும் நெருங்கி, அவன் காதுகளில் அணிந்திருந்த அழகிய இரத்தினங்கள் பதித்த குண்டலங்கள் என்னும் காதணிகளைப் பறித்துக் கொண்டு மேற்கிளம்பிச் சென்று விட்டான்.

அனந்த நாகம் என்பது எட்டு உயர்ந்த நாகங்களுள் ஒன்று. அனந்தம் என்ற சொல்லுக்கு மிகுதி என்ற ஒரு பொருளும் உண்டு. எண்ணற்ற பாம்புகளை வருத்தும் கருடன் என்றும் பொருள் கொள்ளலாம். சடாயுவின் மூக்கு வளைந்திருத்தலால் அதனைத் திருமாலின் சக்கரப் படைக்கு உவமையாக நேமியன் என்றார் என்க; சேமவில் என்பது ஆபத்துக் காலத்தில் பயன் படுத்துவதற்காகப் பத்திரப்படுத்திப் பாதுகாப்பாக வைத்திருக்கும் அதிகப்படியான வில் என்று பொருள் தரும். வண்டிக்குப் பயன்படும் அச்சாணியை ''சேம அச்சு'' என்று கூறுவதும் நினைவிற் கொள்க.

25. தேவர்கள் அஞ்சுதல்

எழுந்தான் தட மார்பினினல், ஏழினொடு ஏழு வாளி
அழுந்தாது கழன்றிடப் பெய்து, எடுத்து ஆர்த்து, அரக்கன்
பொழிந்தான், புகர் வாளிகள் மீளவும்; ''போர்ச் சடாயு
விழுந்தான்'' என, அஞ்சினர், விண்ணவர் வெய்து உயிர்த்தார். (3529)

(தடம் - பெரிய; வெய்து - வெப்பமுற்று; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்; எடுத்து - மிகுதியாக; புகர் - ஒளி / ஆற்றல்; கழன்றிட - ஊடுருவ)

அவ்வாறு குண்டலங்களைப் பறித்துக் கொண்டு மேலெழுந்தவனாகிய சடாயுவின் அகன்ற மார்பினில், இராவணன் பதினான்கு அம்புகளைப் பெய்தான்; ஆனால் அவை அவன் உடம்பில் அழுந்திப் பாயாது, ஊடுருவிக் கழன்று வெளியே வந்ததனால், மேலும் மிக்கச் சினம் கொண்டு ஆர்ப்பரித்து மீண்டும் ஒளி பொருந்திய ஆற்றல் வாய்ந்த சில அம்புகளை மழை போலப் பொழிந்தான்; இதனைக் கண்ணுற்ற தேவர்கள், இராவணனுடன் எதிர்த்துப் போர் புரியும் ஆற்றல் உடைய சடாயு விழுந்து விட்டான் என அஞ்சி, வெப்பப் பெருமூச்சு விட்டனர்.

எடுத்து ஆர்த்தல் என்பது மிகுதியாக ஆரவாரித்தல் என்று பொருள்படும். இராவணன் அம்புகள் சடாயுவின் உடம்பில் பாய்ந்து துளைக்கும் வன்மையற்றன; எனவே கழன்றன என்பதாம்.

26. சடாயுவின் தோற்றம்

புண்ணின் புது நீர் பொழியப் பொலி புள்ளின் வேந்தன்,
மண்ணில், கரனே முதலோர் உதிரத்தின் வாரிக்
கண்ணில் கடல் என்று கவர்ந்தது கான்று, மீள
விண்ணில் பொலிகின்றது ஓர் வெண்நிற மேகம் ஒத்தான். (3530)

(நீர் - இரத்தம்; புள் - பறவை / கழுகு; உதிரம் - இரத்தம்; நுகர்ந்தது - பருகியது; காலுதல் - வெளியிடுதல் / உமிழ்தல்; கண்ணி - எண்ணி / கருதி; வாரி - பெருக்கு)

அவ்வாறு இராவணன் அம்பினால் தாக்கப்பட்டுத் தன் உடலில் ஏற்பட்ட புண்ணிலிருந்து சொரிகின்ற புதிய இரத்த நீரையுடைய, பறவைகளுக்கு அரசனான சடாயு, முன்பு நிலத்தில் கரன், தூடணன் முதலானோர் சிந்திய இரத்தத்தின் பெருக்கைக் கடல்நீர் என்று தவறாகக் கருதிப் பருகிய மேகமானது, இப்பொழுது அது கடல் நீரல்ல, கரன் முதலானோர் குருதி என்று அறிந்து வெறுப்புடன் அதை உமிழ்ந்து விட்டு, இப்பொழுது மீண்டும் தனது இயற்கையான வெண்மை நிறம் கொண்டு வானில் திகழ்வது போன்ற தோற்றத்தை ஒத்திருந்தான்.

பறவைகளுக்கு அரசனான சடாயு இயற்கையிலேயே வெண்மை நிறமானவன். அது போலவே வானில் திகழும் மேகமும் இயற்கையிலேயே வெண்மை நிறமானது. முன்பு கரன் முதலானோர் இறந்த போது எழுந்த குருதிப் பெருக்கைக் கடல் நீர் என்று கருதி அதை முகந்து உண்டதனால் செந்நிறம் பெற்றிருந்தது. இப்பொழுது, அது கடல் நீரல்ல, கரன் முதலானோருடைய குருதி என்று அறிந்ததும், அதை மழையாகக் கீழே பொழிந்து விட்டது. எனவே இப்பொழுது அது தன்னுடைய இயல்பான வெள்ளை நிறத்துடனிருந்தது. அது போலச் சடாயுவும், இராவணன் தாக்கியதால் உண்டான புண்களினின்றும் பெருகிய புதிய இரத்தக்கறை நீங்கி இப்பொழுது தனது இயற்கையான வெண்மை நிறத்துடன் வானில் பறந்தான் என்பதாம்.

இங்கே ''புது நீர்'' என்பது, சடாயு இதுவரை, யாராலும் துன்புறுத்தப் படாதவன்; தன் மேனியில் இரத்தக்கறை படியாதவன் என்பதால், இப்பொழுது இராவணனால் முதன் முதல் துன்புறுத்தப்பட்டு, அவன் எய்த அம்புகள் ஏற்படுத்திய புண்களினின்றும் சொரிந்த இரத்தத்தைப் புது நீர் என்றான் என்க. வெண்ணிறமான மேகம் கடல் நீரை முகந்து மேலே சென்றதும் கருநிற மேகமாக மாறி மழையைப் பொழியும். மழை பெய்த பின் மீண்டும் தனது இயற்கை நிறமான வெண்மை நிறத்தைப் பெற்று விடும் என்பது இயல்பு என்பதை உணர்க.

27. சடாயு இராவணன் கவசத்தைஅறுத்துஎறிதல்

ஒத்தான் உடனே உயிர்த்தான்; உருத்தான்; அவன் தோள்
பத்தோடு பத்தின் நெடும் பத்தியில் தத்தி, மூக்கால்
கொத்தா, நகத்தால் குடையா, சிறையால் புடையா,
முத்து ஆர மார்பில் கவசத்தையும் மூட்டு அறுத்தான். (3531)

(உயிர்த்தல் - மூச்சு வெளிப்படுதல்; உருத்தல் - கோபித்தல்; பத்தி - வரிசை; தத்தி - குதித்து; கொத்தா - கொத்தி; குடையா - குடைந்து; சிறை - சிறகுகள்; புடையா - புடைத்து / அடித்து; ஆரம் - மாலை; மூட்டு - பொருத்துகின்ற வாய் / பிணிப்பு)

அவ்வாறு வெண்நிற மேகத்தை ஒத்துச் செயலற்று இருந்தவனான சடாயு, மீண்டும் உயிர்வந்தது போலப் பெரு மூச்சுவிட்டான். உடனே மிகக் கோபம் கொண்டான். அந்த இராவணனுடைய வரிசையாக இருபக்கங்களிலும் அமைந்திருக்கின்ற இருபது நீண்ட தோள்களில் தாவிச் சென்று, தனது மூக்கால் கொத்தியும், கால் நகங்களால் குடைந்து புண்ணாக்கியும், சிறகுகளால் அடித்தும், முத்து மாலை அணிந்திருக்கின்ற மார்பில் இருக்கின்ற கவசத்தை அதன் பிணிப்பு அறுமாறும் செய்தான். எனவே கவசம் கீழே கழன்று விழுந்தது.

மூட்டு என்பது பொருத்துவாய், பிணிப்பு என்ற பொருள் தந்து, மார்பையும் கவசத்தையும் பொருந்தச் செய்து பூட்டப்படும் இடம் என்பதைக் குறிக்கும்.

28. சடாயு இராவணனது வில்லையும் பறித்தல்

அறுத்தானை, அரக்கனும், ஐம்பதொடு ஐம்பது அம்பு
செறித்தான் தடமார்பில்; செறித்தலும், தேவர் அஞ்சி
வெறித்தார்; வெறியாமுன், இராவணன் வில்லை மூக்கால்
பறித்தான் பறவைக்குஇறை, விண்ணவர்பண்ணைஆர்ப்ப. (3532)

(செறித்தல் - அழுத்துதல்; வெறித்தல் - திகைத்தல் / பிரமித்தல்; பண்ணை - கூட்டம்; ஆர்ப்ப - ஆரவாரிக்க; பல் - மூக்கு)

அவ்வாறு இராவணனது கவசத்தை அறுத்தெறிந்த சடாயுவை, அரக்கனான இராவணனும், நூறு அம்புகளை அடர்த்தியாக அவனது பெரிய மார்பில் அழுத்தினான்; அவ்வாறு அழுத்தியதும், தேவர்கள் மிகவும் அஞ்சித் திகைத்துப் போனார்கள். ஆனால் அவர்கள் திகைப்பு அடங்கும் முன்பே, பறவைகளுக்கு அரசனான சடாயு, இராவணனது வில்லைத் தன் பற்களால் - மூக்கால் - பறித்து எறிந்து விட்டான்; முன்பு திகைத்துப் போன தேவர் கூட்டம், இப்பொழுது மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தது.

பல் இங்கு மூக்கைக் குறித்தது என்க. சடாயு இராவணன் போர் இடைவெளியின்றி தொடர்ந்து நடப்பதை உணர்க.

29. எல்இட்ட வெள்ளிக் கயிலைப் பொருப்பு, ஈசனோடும்
மல்இட்ட தோளால் எடுத்தான் சிலை வாயின் வாங்கி,
வில்இட்டு உயர்ந்த நெடு மேகம் எனப் பொலிந்தான்
சொல்இட்டு அவன் தோள்வலி, யார்உளர், சொல்ல வல்லார்? (3533)

(எல் - ஒளி; இட்ட - பொருந்திய; பொருப்பு - மலை; ஈசன் - சிவபெருமான்; மல் - வலிமை; சிலை - வில்; வாங்கி - பறித்து; வில் - இந்திரவில்; பொலிதல் - திகழ்தல்; தோள் - சிறகுகள்; தோள்வலி - புஜபராக்ரமம் / உடல் வலிமை)

ஒளி பொருந்திய வெள்ளி மலையாகிய கயிலாய மலையை, அதில் வீற்றிருக்கும் சிவபெருமானோடு சேர்த்து, தன் வலிமை பொருந்திய இருபது தோள்களால் பெயர்த்து எடுத்த இராவணனது வில்லைத் தன் பற்களால் பற்றிப் பறித்துக் கொண்டு, வானவில்லைத் தன்னகைத்தே கொண்டு உயர்ந்து விளங்குகிற நீண்ட மேகம் போலத் திகழ்ந்த சடாயுவின் தோள் வலிமையை இன்னதென்று அளவிட்டுச் சொல்லும் வல்லமை படைத்தவர் யார் இருக்கிறார்கள்?

சடாயுவின் புஜபராக்ரமத்தை அளவிட்டுச் சொல்வது என்பது யாராலும் இயலாதது என்பதாம். தனது வாயில் இராவணனது வில்லைத் தாங்கிக்கொண்டு வானில் நின்ற சடாயுவின் தோற்றம், இந்திரவில்லோடு தோன்றும் மேகத்திற்கு உவமை. பறவைகளுக்குத் தோள் என்ற உறுப்பு தனியாக இல்லை. எனவே சிறகுகளைத் தோள்களாகக் கொள்க.

30. சடாயு வில்லை ஒடித்துப் போடுதல்

மீளா நிறத்து ஆயிரங் கண்ணவன் விண்ணின் ஓட,
வாளால் ஒறுத்தான் சிலை வாயிடைநின்றும் வாங்கி,
தாளால் இறுத்தான், தழல்வண்ணன் தடக்கை வில்லைத்
தோளால் இறுத்தான் துணைத் தாதைதன் அன்பின் தோழன். (3534)

(தழல் - தீ / நெருப்பு; தாதை - தந்தை; மீளா - தோல்வியுறாத / பின்னிடாத; நிறம் - மார்பு; ஆயிரம் கண்ணவன் - இந்திரன்; ஒறுத்தல் -

தண்டித்தல் / வருத்துதல்; தாள் - கால்கள்; தழல் வண்ணன் - சிவபெருமான்; இறுத்தல் - ஒடித்தல்)

நெருப்புப் போன்ற சிவந்த மேனியையுடைய சிவபெருமானது பெரிய கைகளில் இருந்த திரியம்பகம் என்னும் வில்லைத் தனது தோள் வலிமையால் ஒடித்தவனான இராமபிரானுடைய சிறிய தந்தை போன்றவரும், இராமனுக்குத் தந்தையான தசரதனுக்கு அன்புசால் தோழனுமாகிய சடாயு, எவர்க்கும் எப்போதும் பின்னிடாத மார்பையும், ஆயிரம் கண்களையும் உடைய இந்திரன் வானுலகத்திற்கு தோற்று ஓடும்படி தனது சந்திரகாசம் என்னும் வாளால் தண்டித்து வருத்தியவனான இராவணனுடைய வில்லை, தான் கவ்வியிருந்த வாயிலிருந்தும் கைகளால் எடுத்து, தன் கால்களால் ஒடித்துப் போட்டான்.

இந்திரன் ஆயிரம் கண்களையுடையவன் என்பது பாலகாண்டத்துள் விவரிக்கப்பட்டது. அவனை ஓட ஓட விரட்டியவன் இராவணன் என்பது உத்திரகாண்டம், திக்குவிசயப் படலத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. தழல் வண்ணன் என்பது சிவபெருமானைக் குறித்தது. ''எரிபோல் மேனிப் பிரான்'' என்பதும் தீவண்ணன் என்பதும் தேவாரம். பொதுவாக, எந்தப் பொருளையும் ஒடிப்பது என்பது கைகளால் செய்யப்பட வேண்டுவது. ஆனால் இங்கே இராவணனை இழிவு படுத்துவதற்காகவே சடாயு தன் கால்களால் அந்த வில்லை ஒடித்தான் என்று கூறுவது மிக்க நயம் படைத்த ஒன்று. ''துணைத் தாதை'' என்ற சொற்றொடர்க்குக் காட்டில் தன் தந்தை போன்று துணையிருந்த சடாயு என்றும் பொருள்கொள்ளுதல் பொருந்தும்.

31. இராவணன் சினம் கொண்டு தாக்குதல்

ஞாலம் படுப்பான், தனது ஆற்றலுக்கு ஏற்ற நல்வில்
மூலம் ஒடிப்புண்டது கண்டு, முனிந்த நெஞ்சன்,
ஆலம் மிடற்றான் புரம் அட்டது ஓர் அம்பு போலும்
சூலம் எடுத்து ஆர்த்து எறிந்தான், மறம் தோற்றிலாதான். (3535)

(படுத்தல் - அழித்தல்; ஏற்ற - ஒப்பான / ஈடான; மறம் - வீரம்; ஆலம் - நஞ்சு; மிடறு - கழுத்து; புரம் - திரிபுரம்; அட்டது - எரித்தது / அழித்தது; மூலம் - முழுதும்)

இவ்வுலகத்தையே அழிக்கும் ஆற்றலுடைய கூற்றுவனுக்குத் தக்க நல்ல தனது வில் முழுதுமே சடாயுவினால் ஒடிபட்டதைக் கண்டு, கோபம் கொண்ட மனத்தை உடையவனும், வீரத்திற்கு எப்போதும் தோற்காதவனுமான இராவணன், நஞ்சைத் தன் கண்டத்தில் கொண்டவனாகிய சிவபெருமான் திரிபுரத்தை எரிக்கும் போது கைக்கொண்ட ஒப்பற்ற அம்பு போன்ற ஆற்றலுடைய சூலாயுதத்தை எடுத்து, ஆரவாரித்துக் கொண்டு சடாயுமேல் எறிந்தான்.

''ஞாலம் படுப்பான்'' என்ற சொற்றொடரை இராவணன் மீதே ஏற்றி, உலகத்தையே அழிக்கவல்ல ஆற்றல் படைத்த இராவணன் என்றும்

பொருள் கூறுவதுண்டு. சிவபெருமான் திரிபுரம் எரித்த போது திருமாலையே அம்பாகப் பயன்படுத்தினான் என்று முன்பே கூறப் பட்டிருப்பதை இங்கு நினைவு கூர்க. வில் ஒடிபட்டதால் சூலப்படையை எடுக்க வேண்டியதாயிற்று என்க.

32. சடாயு சூலப்படையைத் தாங்குதல்

"ஆற்றான் இவன் என்று உணராது; என் ஆற்றல் காண்" என்று,
ஏற்றான் எருவைக்கு இறை, முத்தலை எஃகம், மார்பில்;
''மேல் தான் இது செய்பவர் யார்?'' என, விண்ணுளோர்கள்
தோற்றாது நின்றார், தம தோள்புடை கொட்டி ஆர்த்தார். (3536)

(எருவை - கழுகு; இறை - அரசன்; எஃகம் - சூலம்; ஏற்றல் - தாங்குதல்; தோற்றாது - புலப்படாது; தம - தம் / தம்முடைய; புடை - அடித்து / தட்டி)

''இவன் இந்தச் சூலாயுதத்தைத் தாங்கும் வலிமை பெற்றவன் அல்லன் என்று எண்ணாதே; என்னுடைய ஆற்றலைப்பார்'' என்று சடாயு இராவணனுக்குக் கூறி, அவன் எறிந்த மூன்று தலைகளை உடைய சூலாயுதத்தைத் தன் மார்பின் மீது ஏற்றுக்கொண்டான். இராவணனுக்கு அஞ்சி, அவன் கண்களுக்குப் புலப்படாது மறைந்து நின்ற தேவர்கள், இனிமேல் இத்தகைய செயலைச் செய்பவர் யார் இருக்கிறார்கள்?'' என்று வியந்து, தமது தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

பொதுவாகப் பகைவன் தொடுக்கும் ஆயுதங்களை, எதிரே இருப்பவர் தன்மேல் விழாது தடுப்பார்கள். அல்லது, அதனின்றும் தப்பிக்க முயல்வர்; ஆனால் இங்கே சடாயு, இவ்விரண்டு செயல்களையும் செய்யாது, தனது ஆற்றலை இராவணன் அறியவேண்டும் என்ற கருத்தினால் சூலத்தை எதிர்கொண்டு தன் மார்பில் ஏற்றுக் கொண்டான். இது யாராலும் செய்ய இயலாத ஒரு அரும் பெரும் செயல். எனவே தான் மறைந்திருந்த தேவர்கள்கூட வெளிப்போந்து, இத்தகைய செயலைச் செய்தவர் இதுவரை யாரும் இருந்ததும் இல்லை, இனிமேலும் இதனைச் செய்பவர் ஒருவரும் இல்லை என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் என்பதாம்.

33. சூலப்படை திரும்பி இராவணனை அடைதல்

பொன் நோக்கியர்தம் புலன் நோக்கிய புன்கணோரும்,
இன்நோக்கியர் இல்வழி எய்திய நல் விருந்தும்,
தன் நோக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச் சார்ந்த
மென்நோக்கியர்நோக்கமும், ஆம்எனமீண்டது, அவ்வேல். (3537)

(பொன் - பொருள்; பொன் நோக்கியர் - விலை மகளிர்; புன்கணோர் - வறியவர்கள் / பொலிவிழந்த கண்ணுடையவர்கள்; நோக்கு - பார்வை; தன் - இறைவன்; புன்கண் - துன்பமுமாம்; புலன் - ஐம்புலன் இன்பம்)

பொருளையே குறிக்கோளாகக் கொண்டு அன்பு பாராட்டும் விலை மாதர்களிடம் ஐம்புல இன்பங்களையும் அனுபவிக்கச் சென்றடைந்த பொலிவற்ற கண்களை உடைய வறியவர்கள் அவரை அனுபவிக்க இயலாது திரும்பி வருவதைப் போன்றும், இனிய பார்வையும் சொல்லும் இல்லாதவருடைய வீட்டிற்கு விருந்திற்குச் சென்ற புதிய விருந்தினர்கள், விருந்துண்ண மனமில்லாது திரும்பி வருவதைப் போன்றும், இறைவனையே தனது குறிக்கோளாகக் கொண்டு யோகமியற்றும் மனமுடைய யோகியர்களின் மேல் ஆசை கொண்டு, தனது மென்மையான காதல் நோக்குடைய பெண்டிர்கள் அவர்கள் உள்ளத்தில் இடம் கிடைக்காமல் திரும்பிவருவது போன்றும், இராவணன் எய்த முத்தலைச் சூலம், சடாயுவின் மார்பில் பட்டும், உள் நுழைய முடியாதவாறு திரும்பி வந்தது.

ஒரு புறத்திணைச் செயலுக்கு, மூன்று அகத்துறை உவமைகளைச் சுட்டிய கவிஞனின் கற்பனைத்திறம் வியந்து போற்றுதற்குரியது. இராவணன் எய்த சூலம் சடாயுவை ஒன்றும் செய்யாது திரும்பி வந்தது என்பது கருத்து. பொருளையே கருதும் பொருட் பெண்டிர் இயல்பு பல தமிழ் இலக்கியங்களில் அழகாகப் பேசப்பட்டிருக்கிறது. ''அன்பின் விழையார், பொருள் விழையும் ஆய்தொடியார்'' என்பது குறள் *(911)*. ''மாயப் பொய்பல கூட்டி, கவவுக்கரந்து, சேயரும், நணியரும் நலன் நயந்து வந்த, இளம்பல் செல்வர் வளர்தவ வாங்கி, நுண்டாது உண்டு'' என்பது மதுரைக்காஞ்சி; ''விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும் குளக்கற நாடில், வேறல்ல; விளக்கொளியும் நெய்யற்ற கண்ணே அறுமே; அவர் அன்பும் கையற்ற கண்ணே அறும்'' என்பது நாலடியார். புலன் நோக்கு என்பது ஐம்பொறிகளால் விளையும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறிதல் என்க. பொருள் இல்லாத வறியவர் பொதுப் பெண்டிரிடம் இன்பம் அனுபவிக்க முடியாதபடி திரும்பி வருதல் போல, இராவணன் எய்த முத்தலைச் சூலம் சடாயு மார்பில் தைத்காது திரும்பி வந்தது என்பதாம். இனிய சொல்லும் இனிய பார்வையும் கொண்ட இல்லறத்தார் வீடு செல்வதே நல் விருந்தாகும். அவ்வாறின்றி ''முகம் திரிந்து நோக்குவாராயின்'' அவர் இல்லத்திற்குச் சென்ற விருந்தினர் திரும்பி வருதலைப் போல அம்முத்தலைச் சூலம் திரும்பி வந்தது என்பதாம். ''நல்விருந்து'' என்ற சொல்லாட்சியை நோக்குக. உணவு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சென்றவரை விலக்கவே இங்கே ''நல்விருந்து'' என்ற சொல்லைப் பயன்படுத்தினார் என்க. இனிய நோக்கம் இல்லாதவர் பற்றி சீவகசிந்தாமணி கூறுவதைக் கேளுங்கள் ''இல்லாளை அஞ்சி, விருந்தின் முகம் கொன்ற, நெஞ்சில் புல்லாளன்'' என்கிறது சீவகசிந்தாமணி. ''தன் நோக்கிய'' என்பது இறைவனை அடைதலையே குறிக்கோளாகக் கொண்ட யோகியர் என்க. ''தம்மை யுணர்ந்து, தமையுடைய தன் உணர்வார்'' என்பது சிவஞானபோதம். அவ்வாறன்றி, ''தன்'' என்பதற்குத்தானேபிரமம், தன்னிலும்வேறுபட்டபிரமம்வேறல்ல

என்று கருதும் யோகியர் என்றும் கூறுவதுண்டு. ''அஹம் பிரம அஸ்மி'' என்பது அத்வைதம். இத்தகைய யோகியரை விரும்பிச் சென்ற மென்மையான நோக்கம் கொண்ட மகளிர், அவர் முயற்சி பயன் தராது திரும்பி வருதலைப் போல, இராவணன் எய்த முத்தலைச் சூலம் திரும்பி வந்தது என்பதாம்.

34. தேர்ப்பாகன்தலையைச்சடாயு அறுத்துஎறிதல்

வேகம்முடன், வேல் இழந்தான் படை வேறு எடாமுன்,
மாகம் மறையும்படி நீண்ட வயங்கு மான் தேர்ப்
பாகன் தலையைப் பறித்து, படர் கற்பினாள்பால்
மோகம்படைத்தான்உளைவுஎய்த, முகத்து எறிந்தான். (3538)

(படை - ஆயுதம்; மாகம் - ஆகாயம்; வயங்கு - விளங்குகின்ற; மான் - குதிரைகள் / விலங்கு; உளைவு எய்தல் - வருந்துதல்; உளைவு - பெருந்துன்பம்; பாகன் - சாரதி; படர் - செழித்த; மோகம் - காம மயக்கம்)

தனது முத்தலைச் சூலம் சடாயுவின் மீது பாயாது பலனிழந்து தவிக்கின்றவனானஇராவணன், உடனேவேறுஆயுதங்களைஎடுத்துத்தன் மீது எறிவதற்கு முன்பே சடாயு, ஆகாயத்தையே மறைக்கின்ற அளவிற்கு நீண்டு விளங்குகின்றதும், குதிரைகள் பூட்டப்பெற்றதுமான பெரிய தேரைச் செலுத்துகின்ற தேர்ச்சாரதியின் தலையைக் கொய்து, மிக்க ஆழ்ந்து செழித்த கற்பினையுடையவளான சீதாதேவியின் மீது காம மயக்கம் கொண்ட இராவணன் பெருந்துன்பம் அடையுமாறு, கொய்த அத்தலையை அவன் முகத்தின் மீது வீசி எறிந்தான்.

மான் என்ற சொல் பொதுவாக விலங்குகளைக் குறிக்கும். இங்கே குதிரையைக் குறித்தது. இயல்பான இருதலைக் காதலுக்கு மாறானது மோகம். ஒருதலைக் காதல். இயல்பான காதல் அன்று என்பதாம்.

35. சடாயு நிலத்தில் விழுதல்

எறிந்தான்தனை நோக்கி, இராவணன், நெஞ்சின் ஆற்றல்
அறிந்தான்; முனிந்து, ஆண்டது ஓர் ஆடகத் தண்டு வாங்கி,
பொறிந்தாங்கு எரியின் சிகை பொங்கி எழ, புடைத்தான்;
மறிந்தான் எருவைக்கு இறை, மால்வரை போல மண்மேல். (3539)

(முனிந்து - சினம் கொண்டு; ஆடகம் - பொன்; தண்டு - தண்டாயுதம்; வாங்கி - எடுத்து; சிகை - கொழுந்து; எரி - நெருப்பு; புடைத்தல் - அடித்தல்; எருவை - கழுகு; இறை- வேந்தன்; மால் - பெரிய; வரை - மலை; மறிதல் - சாய்தல் / வீழ்தல் / கீழ்மேலாக மாறி விழுதல்)

அவ்வாறு தன் தேர்ப்பாகனது தலையைத் தன் மீது வீசி எறிந்தவனான சடாயுவை நோக்கி இராவணன், அவனது மனவலிமையை, நெஞ்சு உரத்தை நன்கு உணரலானான்; எனவே மிக்கக் கோபம் கொண்டு, தான்

முன்பு பல போர்களில் கையாண்ட ஒப்பற்ற பொன்மயமான தண்டாயுதம் ஒன்றை எடுத்து, நெருப்புப் பொறி படிக்கும்படியும், அந்த நெருப்பின் கொழுந்து மேற்கிளம்பி எழும்பும்படியும் சடாயுவைத் தாக்கினான்; கழுகுகளுக்குத் தலைவனான சடாயுவும், ஒரு பெரிய மலை வீழ்வது போல, நிலத்தில் தலைகீழாக விழுந்தான்.

36. சீதை துயர் உறுதல்

மண்மேல் விழுந்தான் விழலோடும், வயங்கு மான்தேர்,
கண்மேல் ஒளியும் தொடராவகை, தான் கடாவி,
விண்மேல் எழுந்தான்; எழ, மெல்லியலாளும், வெந்தீ
புண்மேல் நுழையத் துடிக்கின்றனள் போல், புரண்டாள். (3540)

(வயங்கு - விளங்குகின்ற; மான் - குதிரை; ஒளி - பார்வை; தொடர்தல் - பின்பற்றுதல்; கடாவுதல் - செலுத்துதல்)

அவ்வாறு சடாயு நிலத்தில் விழவும், விளங்குகின்ற குதிரைகள் பூட்டிய தேரைக் கண்பார்வை பின்பற்றி வரமுடியாத தூரத்திற்கும், உயரத்திற்கும், தனது தேரைத் தானே செலுத்திக் கொண்டு, இராவணன் ஆகாயத்தில் மேற்கிளம்பினான்; அவ்வாறு அவன் செல்ல முற்பட்டதும், மென்மைத் தன்மை கொண்ட சீதாதேவியும், வெம்மையான நெருப்பு, புண்ணினுள் நுழைந்தால் எப்படித் துடிப்போமோ, அதைப் போலத் துடித்துக் கொண்டு அந்தத் தேரில் விழுந்து புரண்டு அழுதாள்.

கண்மேல் ஒளி என்பது - கண்பார்வையைக் குறித்தது. பொதுவாகவே மக்களுக்குக் கண் என்பது சென்று பற்றும் பொறி. மிக நீண்ட தூரம் பார்க்கும் ஆற்றல் பெற்றது. இங்கே பேசப்படுவது கழுகு. கழுகின் கண்பார்வை மிகக் கூர்மையானது, நீண்டது என்று முன்பே கண்டோம். சேய்மையில் நோக்குறும் சிறு கண்ணான். அத்தகைய கழுகே பார்க்க முடியாத அளவுக்குத் தூரமாகவும், வேகமாகவும் சென்றான் என்று அவன் சென்ற விரைவு புலப்படுத்தப்பட்டது. பாகன் தலை அறுந்து வீழ்ந்ததால், தேரைத்தானே செலுத்த வேண்டியதாயிற்று என்பதைக் குறிக்க, ''தானே கடாவி'' என்றார் என்க. வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது, நெருப்பு நுழைவது என்ற உவமைகள் இக்காப்பியத்தில் மிகுதியாகப் பயின்று வந்துள்ளமை உணர்க. துன்பத்திற்கு மேல் துன்பம் அடுக்கடுக்காக வருவதைப் புலப்படுத்த இவ்வுவமை கையாளப்படுவதை உணர்க.

37. சடாயு சீதையைத் தேற்றுதல்

கொழுந்தே அனையாள் குழைந்து ஏங்கிய கொள்கை கண்டான்;
''அழுந்தேல் அவலத்திடை; அஞ்சலை அன்னம்!'' என்னா,
எழுந்தான்; உயிர்தான்; ''அட! எங்கு இனிப் போவது?'' என்னா,
விழுந்தான் அவன் தேர்மிசை, விண்ணவர் பண்ணை ஆர்ப்ப. (3541)

(கொழுந்து - இளந்தளிர்; குழைதல் - மனம் குழம்புதல் / நெகிழ்தல்; ஏங்குதல் - வருந்துதல்; கொள்கை - தன்மை / நிலைமை; அவலம் - துன்பம்; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்; பண்ணை - கூட்டம்; மிசை - மேல்; விழுதல் - பாய்தல்)

இளந்தளிர் போன்ற மேனியும், மென்மைத் தன்மையும் உடைய சீதாதேவி, இதனைக் கண்ணுற்று நெகிழ்ந்து போய் வருந்தியதைக் கண்ட சடாயு, சீதையை நோக்கி, ''அன்னம் போன்றவளே! துன்பக்கடலில் மூழ்கி விடாதே! பயப்படாதே!'' என்று ஆறுதல் கூறி, தான் மீண்டும் சிரமப்பட்டு எழுந்து பெருமூச்செறிந்து, இராவணனை நோக்கி, ''அடே! எங்கே நீ தப்பிப் போகப் பார்க்கிறாய்?'' என்று அதட்டி, தேவர்களின் கூட்டமெல்லாம் ஆரவாரிக்கும்படி, அவனது தேரின் மேல் போய்ப் பாய்ந்தான்.

தனக்கு நேர்ந்த இன்னலைவிடத் தன்னைக் காக்க வந்த சடாயு அடிபட்டுத் தரையில் விழுந்து இறந்து விட்டானோ என்று தான் சீதாதேவி மிகவும் துன்புற்றாள் என்பதைக் குறிக்க, ''குழைந்து ஏங்கிய கொள்கை'' என்றார் என்க.

38. தேர்க் குதிரைகளைச் சடாயு அழித்தல்

பாய்ந்தான்; அவன்பல் மணித்தண்டு பறித்து எறிந்தான்;
ஏய்ந்து ஆர்கதித் தேர்ப்பரி எட்டினொடு எட்டும் எஞ்சித்
தீய்ந்து ஆசுஅற வீசி, அத்திண் திறல் துண்ட வாளால்
காய்ந்தான்; கவர்ந்தான் உயிர்; காலனும் கைவிதிர்தான். (3542)

(மணி - இரத்தினம் / மாணிக்கம்; ஏய்ந்த - இயைந்த / பொருந்திய; கதி - வேகம்; பரி - குதிரைகள்; எஞ்சுதல் - வலிமை குறைதல்; தீய்தல் - அழிதல்; துண்டம் - அலகு / மூக்கு; காய்தல் - அழித்தல்; விதிர்த்தல் - அசைத்தல் / நடுங்குதல்; ஆசுஅற - அடியோடு முடிந்து போகும்படி; தண்டு - தண்டாயுதம்)

அவ்வாறு இராவணனின் தேரின்மேல் பாய்ந்த சடாயு, பலவிதமான இரத்தினங்கள் பதிக்கப் பெற்றிருந்த இராவணனது தண்டாயுதத்தை முதலில் கைப்பற்றிப் புறத்தே வீசி எறிந்தான்; வேகமும் ஒளியும் பொருந்திய அவனது தேரில் பூட்டப்பட்டிருந்த பதினாறு குதிரைகளையும் வலி ஒடுங்கி, அடியோடு அழிந்து போகும்படி, தனது மிக்க வலிமை வாய்ந்த மூக்கு என்றும் வாளால் அழித்து ஒழித்தான்; உயிர்களைக் கவரும் இயல்புடைய கூற்றுவனும் சடாயுவின் இத்தகைய போராற்றலைக் கண்டு வியந்தான். ''இராவணன் குதிரைகள் அழிந்துபட்டனவே, அவன் நம்மை என்ன செய்வானோ'' என்ற அச்சத்தால் கை நடுக்கமுற்றான்.

இராவணன் சீதாதேவியைக் கவர்ந்து வந்த தேர் பதினாறு குதிரைகள் பூட்டப்பெற்ற தேர் என்பது பெறப்படுகிறது. சடாயுவின் மூக்கை முன்பு

துண்டப்படை என்றும், நேமிப்படை என்றும் கூறியதை நினைவு கூர்க. அம்மூக்கு யானையின் தோட்டி (அங்குசம்) போல் கூர்மையாகவும், உறுதியாகவும், வளைந்தும் இருக்கும் எனக்கொள்க.

39. இராவணன் தேரையும், அம்பறாத் தூணியையும் சடாயு அழித்தல்

திண்தேர் அழித்து, ஆங்கு அவன் திண்புறம் சேர்ந்த தூணி
விண்தான் மறைப்பச் செறிகின்றன, வில் இலாமை,
மண்டு ஆர் அமர்தான் வழங்காமையின், வச்சைமாக்கள்
பண்டாரம் ஒக்கின்றன, வள் உகிரால் பறித்தான். (3543)

(செறிதல் - பொருந்தியிருத்தல்; மண்டு - நெருங்கி; அமர் - போர்; வச்சைமாக்கள் - உலோபிகள் / கருமிகள்; பண்டாரம் - கருவூலம்; தூணி - புட்டில்; வள் - கூரிய; உகிர் - நகங்கள்; வழங்குதல் - செலுத்துதல் / கொடுத்தல்; புறம் - முதுகு)

சடாயு இராவணனுடைய வலிமை மிக்க தேரையும் அழித்து, அவனுடைய வலிமையான முதுகுப் புறத்தில் கட்டியிருந்த விண்ணையும் மறைக்கும்படியான அம்புப் புட்டிலில் நிறைந்திருக்கின்ற அம்புகள், இப்போது அவன் கையில் வில் இல்லாமையினால், நெருங்கிய போரில் அவற்றைச் செலுத்த முடியாததனால், பயனற்றுப் போய் வீணே கிடக்கின்ற அவ்அம்புகளைத் தனது கூரிய கால் நகங்களால் பிடுங்கி எறிந்தான். இராவணன் முதுகில் கட்டப்பட்ட அம்பறாத்தூணியில் வீணே கிடக்கும் அம்புகளுக்கு ஒரு உவமை கூறுகிறான் கவிஞன். உலோபிகளின் கருவூலத்தில் அடைந்து கிடக்கும் செல்வம் தனக்கும் பயன்படாமல் பிறருக்கும் உதவப்படாமல் எப்பொழுதும் நிறைந்திருப்பது போலவே, இராவணனுடைய முதுகில் கட்டப்பட்டிருக்கும் அம்புப் புட்டிலில் இருக்கும் அம்புகள், அவன் கையில் வில் இல்லாததனால், தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் முடியாமல், தன்னை எதிர்த்து வரும் சடாயுவின் மேல் செலுத்தவும் முடியாமல் பயனற்றுக் கிடக்கின்ற அம்புகள் என்கிறான்.

இராவணன் கையில் இருந்த வில்லை முன்பே சடாயு ஒடித்து எறிந்ததை நினைவு கூர்க. அவனுடைய அம்பறாப்புட்டில் விண்ணையும் மறைக்கும்படி அளவு பெரிது என்றும், எண்ணிக்கை மிகுதி என்பதும், அத்தனையையும் தாங்கும் வலிமை அந்த இருபது தோள்களையும் உடைய முதுகுக்கு இருந்தது என்பதையும் குறிக்க ''திண்புறம்'' என்றும் ''விண்தான் மறைப்பச் செறிகின்ற'' என்றும் கூறினான் என்க. உலோபிகளின் இழிவு தோன்ற, மக்கள் என்னாது, மாக்கள் என்று கூறியதை உணர்க.

40. இராவணன் மூர்ச்சித்து விழுதல்

மாச்சிச்சிரல் பாய்ந்தென, மார்பினும் தோள்கள் மேலும்
ஓச்சி, சிறகால் புடைத்தான்; உலையா விழுந்து
மூச்சித்த இராவணனும் முடி சாய்ந்து இருந்தான்;
"போச்சு; இத்தனை போலும்நின் ஆற்றல்?" எனப் புகன்றான். (3544)

(மா - பெரிய; ஓச்சி - ஓங்கி / வீசி; புடைத்தல் - அடித்தல்; போச்சு - போயிற்று; உலையா - உலைந்து / வருந்தி; சிச்சிரல் - மீன் கொத்திப் பறவை; முடி - தலை)

''பெரிய மீன் கொத்திப் பறவை ஒன்று, மீனின் மீது குறி வைத்துப் பாய்வதைப் போல, சடாயு இராவணனின் மார்பிலும், தோள்களின் மீதும் தனது சிறகுகளினால் ஓங்கி அடித்தான். அவ்வளவில் அவன் மிகவும் துன்புற்றுக் கீழே விழுந்து மூர்ச்சித்துச் செயலற்றுக் கிடந்தான். அவன் தலை சாய்ந்தது; இதனைக் கண்ணுற்ற சடாயு, போயிற்று; உனது வலிமை இவ்வளவு தானா?'' என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

சிச்சிரல் என்பது சிக்கிரம், சிச்சிலி, சிரம் என்றும் வழங்கப்பெறும். போச்சு என்பது போய்விட்டது என்ற சொல்லின் பேச்சு வழக்கு. உன் வாழ்க்கையே போயிற்று என்பது பொருள்.

41. இராவணன் வாள் கொண்டு சடாயுவைத் தாக்குதல்

அவ்வேலையினே முனிந்தான்; முனிந்து, ஆற்றலன்; அவ்
வெவ்வேல் அரக்கன் விடல்ஆம் படை வேறு காணான்;
''இவ்வேலையினே, இவன் இன் உயிர் உண்பென்'' என்னா,
செவ்வே, பிழையா நெடுவாள் உறைதீர்த்து, எறிந்தான். (3545)

(வேலை - வேளை / சமயம்; வெவ் - கொடிய; முனிதல் - வெகுளுதல்; படை - ஆயுதம்; பிழையா - தப்பாது; தீர்த்து - எடுத்து / உருவி; செவ்வே - நேராக)

அந்தச்சமயத்தில், தன்னைச்சடாயு இகழ்ந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாதவனான அந்தக் கொடிய வேற்படையைத் தாங்கிய இராவணன், சடாயுவின் மீது மிக்க சினம் கொண்டான். எனினும் அவன் மீது செலுத்தக் கூடிய ஆயுதம் தன் கையில் ஒன்றும் இல்லாததை அறிந்தவனாக, ''இப்பொழுதே இவனுடைய இனிய உயிரைக் கவர்வேன்'' என்று சொல்லி, குறிதப்பாத, சந்திரகாசம் என்ற நீண்ட வாளை உறையிலிருந்து நீக்கி, சடாயுவைக் குறிபார்த்து நேராக வீசி எறிந்தான்.

''விடலாம் படை வேறு காணான்'' என்பது, தான் கொண்டு வந்திருந்த படைகள் அனைத்தும் இல்லாதவனுமாக அவன் நின்றதைக் குறித்தது. இராவணன் தனது திக்குவிசயத்தின் போது, கயிலாய மலையைப் பெயர்த்தெடுக்க முடியாது திணறிய போது சாமகானம் இசைத்துச்

சிவபெருமானை மகிழ்வித்து, நாளும், வாளும் பெற்றது முன்பே கூறப்பட்டது. அந்த வாள் தான் இது. இதன் பெயர் சந்திரகாசம் என்பது. தன் தகுதிக்கும், சடாயுவின் அற்பத்தன்மைக்கும் இந்த வாளைப் பயன்படுத்தக் கூடாது என்பது தெரிந்திருந்தும், தன் கையில் வேறு எந்தப் படையும் இல்லாததால் இதனை எறிந்தான் என்று கூறியது ஒரு நயம்.

42. சடாயு சிறகிழந்து தரையில் விழுதல்

வலியின்தலை தோற்றிலன்; மாற்ற அருந்தெய்வ வாளால்
நலியும் தலை என்றது அன்றியும், வாழ்க்கை நாளும்
மெலியும் கடை சென்றுளது; ஆகலின், விண்ணின் வேந்தன்
குலிசம் எறியச் சிறை அற்றது ஓர் குன்றின், வீழ்ந்தான். (3546)

(நலியும் - அழியும்; மெலிதல் - குறைதல்; கடை - முடிவு; விண்வேந்தன் - இந்திரன்; குலிசம் - வச்சிரப்படை; எறிய - வீச; மாற்றல் - தடுத்தல்)

இராவணனுக்கு எதிரே போரிட்ட சடாயு, அவனுடைய ஆற்றலில் தோற்றவனல்லன்; இராவணன் வீசிய வாள் தெய்வவாள்; அதை யாராலும் தடுக்க இயலாது. அது யாவருடைய தலையையும் கொய்து விடும் என்பதாலும், சடாயுவுக்கு இயற்கையிலேயே அவன் ஆயுட்காலம் குறைந்து போகின்ற இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்டது என்பதாலும்தான் கீழே விழுந்தானே யன்றி ஆற்றலில் குறைவு உண்டானதால் அல்ல. இவன் கீழே விழுந்தது எப்படி இருந்தது? முன் காலத்தில் மலைகளுக்கெல்லாம் சிறகுகள் இருந்தன. எனவே அவை இடம் விட்டுப் பெயர்ந்து சென்று எல்லோர்க்கும் துன்பம் விளைவித்து வந்தன; இதனைப் போக்க எண்ணிய வானரசனாகிய இந்திரன், தன்னுடைய வச்சிரப்படை கொண்டு அவற்றின் சிறகுகளையெல்லாம் அறுத்தெறிந்தான். அன்றிலிருந்து மலைகள் இடம் விட்டுப் பெயராமல் ஓரிடத்திலேயே தங்குவனவாயிற்று. அவ்விந்திரன் குலிசப்படை கொண்டு மலையின் சிறகுகளை அறுத்த போது விழுந்த மலைகளைப் போல, இப்போது இராவணனின் சந்திரகாசம் என்ற வாளால் சடாயு தன் சிறகுகள் அறுக்கப்பட்டு மலை போலத் தரையில் விழுந்தான்.

சடாயுவின் போராற்றல் சிறப்பிக்கப்பட்டதை உணர்க. அவன் தரையில் வீழ்ந்ததற்குக் காரணம் அவன் வலிமைக்குறைவல்ல; சந்திரகாசத்தின் தெய்வத் தன்மையும், இவன் வாழ் நாள் முடிவுக் காலமுமேயாம் என்க. வாழ்க்கை முடிந்து விட்டது என்று கூறாது, ''வாழக்கை நாளும் மெலியும் கடை சென்றுள'' என்று கூறிய நயம் உணர்க. இவன் இன்னும் இராமபிரானைக் கண்டு, கூறவேண்டிய செய்தி உள்ளது. எனவே அவன் இறக்கவில்லை. வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தை எய்திவிட்டான் என்பதாம். இராவணனின் சந்திரகாசத்தால்

அறுக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்த சடாயுவுக்கு, இந்திரனின் வச்சிரப்படையால் அறுக்கப்பட்டுத் தரையில் தங்கிய மலைகள் உவமை.

43. சீதை துயர் உறுதல்

விரிந்து ஆர்சிறை கீழ் உற வீழ்ந்தனன், மண்ணின்; விண்ணோர்
இரிந்தார்; ''இழந்தாள் துணை'' என்ன, முனிக் கணங்கள்
பரிந்தார்; படர் விண்டுவின் நாட்டவர் பைம் பொன்மாரி
சொரிந்தார்; அது நோக்கிய சீதை துளக்கம் உற்றாள். (3547)

(ஆர் - அமைந்த / பொருந்திய; இரிதல் - நிலைகெட்டு ஓடுதல்; கணம் - கூட்டம்; பரிதல் - இரங்குதல்; விண்டு - விஷ்ணு / விட்டுணு; நாடு - வைகுண்டம்; துளக்கம் - திடுக்கிடுதல் / நடுங்குதல்; படர்தல் - வியாபித்திருத்தல்)

அகன்று விரிந்த இரண்டு சிறகுகளும் அறுபட்டுக் கீழே மண்ணில் வீழ்ந்தான் சடாயு; அது கண்டு, தேவர்கள் நிலைகெட்டு ஓடினார்கள்; முனிவர்கள், ''சீதை தனக்கு உதவிக்கு வந்த துணையையும் இழந்து விட்டாளே!'' என்று அன்புடன் இரங்கினர்; எங்கும் வியாபித்திருக்கின்ற திருமாலின் நாடான வைகுண்டத்தில் வாழும் நித்திய சூரிகள், பசிய பொன்னாலான கற்பக மலர்களை மழையைப் போலச் சடாயுவின்மேல் பொழிந்தனர். அது கண்ட சீதை, மிக்க மனக்கலக்கம் அடைந்து நடுங்கினாள்.

தேவர்கள், இராவணனால் தமக்கு என்ன துன்பம் நேரப் போகிறதோ என்று அஞ்சி ஓடினர்; ஆனால் முனிவர்கள், சீதை துணையில்லாமல் போனாளே என்று வருந்தி இரங்கினர். நித்திய சூரிகள், சடாயுவின் போராற்றலை எண்ணி வாழ்த்துரைப்பது போல் மலர்மாரி பொழிந்து அவனை விண்ணுலகிற்கு வரவேற்றனர். ஆனால் சீதை சடாயு கீழே விழுந்தது கண்டு கையறு நிலையுற்று நடுங்கினாள். இங்கே ஒரு முக்கியமான கருத்து. காப்பியத்தில் இராவணன் முதன் முதலாகத் தனியாக, எந்தவிதப் படையும் இன்றி நின்று செய்த போர் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

44. வெள்கும் அரக்கன் நெடுவிண் புக ஆர்த்து, மிக்கான்;
தொள்கின்தலை எய்திய மான் எனச் சோர்ந்து நைவாள்,
உள்கும்; உயிர்க்கும்; உயங்கும்; ஒரு சார்வு காணாள்,
கொள் கொம்பு ஒடிய, கொடி வீழ்ந்தது போல் குலைந்தாள். (3548)

(வெள்குதல் - நாணுதல்; நெடு - அகன்ற; தொள்கு - வலை / குழி; நைதல் - வருந்துதல்; உள்குதல் - நினைத்தல்; உயிர்த்தல் - பெருமூச்செறிதல்; உயங்குதல் - துவளுதல்; சார்பு - பற்றுக்கோடு; மிக்கான் - செருக்குற்றான்; குலைதல் - மனம் சோர்வுறுதல்; கொள்கொம்பு - ஆதரவு)

சடாயுவின் போராற்றலைக் கண்டு வியந்து அரக்கனான இராவணன் நாணம் அடைந்தான். என்றாலும் இறுதியில் தான் பெற்ற வெற்றி கருதிப் பெருமிதம் கொண்டு அகன்ற விண்ணுலகு அடையும்படி ஆரவாரம் செய்து செருக்குற்றான்; ஆனால் சீதையோ, வலையில் அகப்பட்ட மான் போலச் சோர்ந்து வருந்தினாள்; ''இனி என்ன செய்வது?'' என்று சிந்திக்கலானாள்; வழி தெரியாது பெருமூச்சு விட்டாள்; தேரில் விழுந்து புரளலானாள்; தனக்கு இருந்த ஒரு பற்றுக்கோடும் இப்பொழுது இல்லாது போகவே, வேறு ஆதரவு ஒன்றும் கிடைக்கப் பெறாதவளானாள்; இதுகாறும் பற்றிப் படர்ந்திருந்த ஒரு கொழு கொம்பு ஒடிந்து போனால் ஒரு பூங்கொடி தரையில் விழுந்து துயருறுமே, அதுபோல, சீதாதேவியும் தேரின்மீது விழுந்து அழுது புரண்டு துயருற்றாள்.

அரக்கன் நாணியது, இவ்வளவு பேராற்றல் வாய்ந்த தான் இத்துணைச் சிறிய ஒரு பறவையிடம் இவ்வளவு நேரம் போராட வேண்டியிருந்ததே என்பதையும் தன் தேர், தேர்ச் சாரதி, தண்டாயுதம், தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் எல்லாம் அழிந்து போயினவே என்பதையும் எண்ணி என்க. சீதை அரக்கனிடம் அகப்பட்டுக் கொண்டதை, வலையில் விழுந்த மானுக்கு உவமித்திருப்பது ஒரு நயம். தொள்கு என்பது குழி என்ற பொருளையும் தரும். கொள் கொம்பு என்ற சொற்றொடர் இப்போது பரவலாக ''கொழு கொம்பு'' என்று பயன்படுத்தப்பட்டு வருவதை உணர்க. சடாயு வீழ்ந்ததைக் கண்டு துன்புற்றுத் துவளும் சீதைக்கு கொள் கொம்பு ஒடியக் கொடி வீழ்ந்தது போல்'' என்ற உவமை சாலப் பொருந்துவதையும் காண்க. சடாயு - கொள்கொம்பு; சீதை - பூங்கொடி.

45. ''வன்துணை உளன் என வந்த மன்னனும்
பொன்றினன்; எனக்கு இனிப்புகல் என்?'' என்கின்றாள்;
இன்துணை பிரிந்து, இரிந்து, இன்னல் எய்திய
அன்றில் அம்பெடை என அரற்றினாள் அரோ. (3549)

(பொன்றுதல் - அழிதல்; புகல் - துணை / பற்றுக்கோடு / ஆதரவு / அடைக்கலம் / புகும் இடம் / தஞ்சம் / சரண்; அம் - அழகிய; அரற்றுதல் - கதறுதல்)

''உனக்கு வலிய துணையாக நான் இருக்கிறேன்'' எனக் கூறிக்கொண்டு வந்த பறவைகளுக்கு அரசனான சடாயுவும் இறந்து போனான்; எனக்கு இனிமேல் அடைக்கலம் யார் தருவார்? என்கின்றாள் சீதாதேவி; தனது இனிய ஆண் அன்றிலைப் பிரிந்து, நீண்ட நேரமாகப் பனை மரத்திலேயே காத்து இருந்து, துன்பம் அடைந்த பெண் அன்றில் போல; இராமனைப் பிரிந்திருந்த சீதாதேவி கதறலானாள்.

சிறகு ஒடிந்து கீழே விழுந்து சடாயு இறந்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தால் ''பொன்றினன்'' என்றாள். ஆனால் சடாயு இன்னும் உயிரிழக்கவில்லை, மூர்ச்சையுற்று இருக்கிறான் என்பதைக் கருத்தில் கொள்க. அன்றில் என்பது சிவந்த கொண்டையுடைய ஒரு பறவை.

ஆணும் பெண்ணும் இணைபிரியாமல் வாழும்; பனைமரத்தில் வாழ்வன; ஆண் பறவை பிரிய நேர்ந்தால் பெண் பறவை மூன்று முறை உரத்த குரலில் கூவும். இக்குரல்கேட்டு ஆண் பறவை வாராது போனால் தன் உயிரை மாய்த்துக் கொண்டு விடும் என்று கூறுவர். இவற்றை வடநூலார் கிரௌஞ்சபட்சி என்று கூறுவர். பிரிவால் வருந்தும் தலைவன் தலைவியர்க்கு இப்பறவைகளை உவமை கூறுவது மரபு. இதன் குரல் பிரிவுற்றார்க்கு விரகதாபத்தை மிகுதிப் படுத்தும் என்க.

46. சீதை தன்னைத் தானே நொந்து கொள்ளுதல்

பின்னவன் உரையினை மறுத்துப் பேதையேன்
அன்னவன்தனைக் கடிது அகற்றினேன்; பொரு
மன்னவன் சிறைஅற மயங்கினேன்; விதி
இன்னமும் எவ்வினை இயற்றுமோ? எனா (3550)

(உரை - சொல்; பேதை - அறிவிலாதவள்; அகற்றுதல் - போக்குதல்; பொரு - போர் செய்த; வினை - துன்பம் / ஊழ்வினை) (குளகப் பாடல்)

''அறிவற்றவளாகிய நான், என் தலைவன் இராமனின் தம்பியாகிய இலக்குவனின் சொற்களைக் கேளாது, அவற்றை மறுத்து, அவனை விரைவில் நான் இருக்கும் இடம் விட்டுப் போகச் செய்தேன்; மேலும் என் பொருட்டு இராவணனுடன் போர் செய்த பறவைகளின் அரசனான சடாயுவும், தனது சிறகுகள் அறுந்து மூர்ச்சித்துக் கிடப்பதைக் கண்டு, இப்பொழுது என்ன செய்வது என்று அறியாது தவிக்கிறேன். என்னுடைய ஊழ்வினை எனக்கு இன்னமும் எத்தகைய துன்பங்களைத் தருமோ? அறியேன்'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள் சீதை.

தான் முன்பு இலக்குவனிடம் நடந்து கொண்ட வினையின் பயனாகத்தான், இப்பொழுது தன்னைக் காக்க வந்த சடாயு போரிட்டு மடிந்தான் என்பது சீதையின் உளக்கருத்து. எனவே இது போல இன்னும் எத்தனை துன்பங்களைச் சந்திக்க வேண்டி வருமோ? என்று மயங்கினாள் என்க. நடந்ததை நினைத்து வருந்துதல் கழிவிரக்கம் எனப்படும். அச்சுவைக்கு இந்தப் பாடல் நல்ல ஓர் எடுத்துக்காட்டு. இது போலவே பின்னர் சுந்தரகாண்டத்தில் உருக்காட்டு படலத்திலும், இறுதியில் காட்சிப் படலத்திலும் சீதை இச்செயலை எண்ணி மீண்டும் கழிவிரக்கம் கொண்டு மயங்குதல் பேசப்படுகிறது என்பதை நினைவிற் கொள்க.

47. ''அல்லல் உற்றேனை, வந்து, ''அஞ்சல்'' என்ற, இந்
நல்லவன் தோற்பதே? நரகன் வெல்வதே?
வெல்வதும் பாவமோ? வேதம் பொய்க்குமோ?
இல்லையோ அறம்?'' என, இரங்கி ஏங்கினாள். (3551)

(அல்லல் - துன்பம்; அறம் - தருமம்)

''பெருந்துன்பமுற்று உழந்த என்னிடம் வந்து, ''பயப்படாதே'' என்று ஆறுதல் கூறித் தேற்றிய இந்த நல்லவனான சடாயு தோற்றுப் போவதோ? நரகில் சென்று சேரக்கூடியவனான இராவணன் வெற்றி கொள்வதோ? பாவம் தான் வெற்றி பெறுமோ? ''அறம் வெல்லும் பாவம் தோற்கும்'' என்னும் தேவ வாக்குப் பொய்யாகிப் போய்விடுமோ? அல்லது இவ்வுலகத்தில் அறம் என்ற ஒன்றே இல்லாது போயிற்றோ?'' என்று ஏக்கமுற்று அழுதாள் சீதை.

தான் அல்லலுற்று வாடிய போது தன்னைக் காப்பதற்காக வந்து அஞ்சேல் என்று ஆறுதல் கூறியதால் சடாயு ''நல்லவன்'' எனப்பட்டான்; பிறன்மனை விழைந்த பெரும் பாவம் செய்ததால், நரகத்தை அடையத் தகுதியுள்ளவன் ஆதலால் இராவணன் ''நரகன்'' எனப்பட்டான். ''பாவம் தோற்கும்; அறமே வெல்லும்'' என்பது வேதத்தின் கருப்பொருள். வேதம் பொய்க்காது, அப்படியாயின், இப்போது இவ்வாறு நிகழ்ந்திருக்கிறதே? இதற்கு என்ன காரணம்? ஒரு வேளை என்னிடத்திலோ அல்லது இவ்வுலகத்திலேயோ, தருமம் என்ற ஒன்றே இல்லாமற்போய் விட்டதோ? என்று கலங்கினாள் என்பதாம். தருமமல்லாத தீயசெயல்கள் முன்னால் நல்லது போலத் தோற்றினாலும், பின்னால் அழிவையே தரும் என்பதாம். ''தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்'' என்பான் பாரதி.

48. ''நாண் இலேன் உரைகொடு நடந்த நம்பிமீர்!
நீள்நிலை அறநெறி நின்றுளோர்க்கு எலாம்
ஆணியை, உந்தையர்க்கு அமைந்த அன்பனை,
காணிய வம்'' எனக், கலங்கி விம்மினாள். (3552)

(நம்பி - ஆண்மையிற் சிறந்தோர்; ஆணி - அச்சாணி / உரைகல்; வம் - வாருங்கள்; விம்முதல் - தேம்பி அழுதல்; காணிய - காணும் பொருட்டு)

''வெட்கமில்லாதவளாகிய என்னுடைய சொல்லைக் கேட்டு, அதன்படி என்னை விட்டு அகன்று சென்ற ஆடவர்களில் சிறந்த இலக்குவனே! நீண்ட நெடுங்காலமாக நிலைத்து நிற்கின்ற அறநெறியில் ஒழுகுபவர்களுக்கெல்லாம் அச்சாணி போன்றவனும் உங்கள் தந்தையாரான தசரதச்சக்கரவர்த்திக்கு அமைந்த நல்ல நண்பனானவனுமான இந்தச் சடாயுவுக்கு உற்ற நிலையைக் காணும் பொருட்டாவது வாருங்கள்'' என்று மனம் நொந்து தேம்பி அழுதாள் சீதை.

நாண் என்பது இங்கே மகளிர்க்குரிய நான்கு சிறப்புப் பண்புகளுள் ஒன்றாகிய நாணத்தைக் குறிப்பதன்று. தனது விளையாட்டு விருப்பமே மேல் என்று கருதி இராமனை வற்புறுத்தி அனுப்பி மாயமானைப் பிடித்துத் தரச்சொல்லிய செயலையும், அதைத் தொடர்ந்து இலக்குவனிடம் கடும் சொற்கள் பேசி அவனைப் போக்கிய செயலையும் உட்படுத்திக் கொண்ட வெட்கம் என்ற பொருளைக் குறிப்பது என்க.

''இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா; வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா; புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்; மிக்க அறமே விழுத்துணையாவது'' என்பது மணிமேகலை; முன்பு பரதனைச் ''செம்மையின் ஆணி'' என்று கூறியதை இங்கு நினைவு கூர்க. ஆணி என்ற சொல்லுக்கு அச்சாணி, உரையாணி, உரைகல் என்று பொருள். பொன்னின் மாற்றைக் காட்டும் ஒரு கல் என்ற கருத்தைத் தரும் என்க.

49. ''எல்இயல் விசும்பிடை இருந்த நேமியாய்!
சொல்லிய அறநெறி தொடர்ந்த தோழமை
நல்இயல் அருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதியோ?'' எனப் பொருமிப் பொங்கினாள். (3553)

(எல் - ஒளி; விசும்பு - ஆகாயம் / விண்ணுலகம் / வைகுண்டம் / சொர்க்கம்; நேமி - ஆணைச் சக்கரம்; தொடர்ந்த - பின்பற்றிய; நம்பி - ஆண்மை மிக்கவன்; புல்லுதல் - தழுவுதல்; கழித்த - செய்து முடித்த)

''ஒளி பொருந்திய சுவர்க்க லோகத்தில் வீற்றிருக்கும் ஆணைச் சக்கரத்தையுடைய தசரதச்சக்கரவர்த்தியே! வேதசாத்திர நூல்களில் கூறப்பட்டிருக்கிற அறநெறியினின்றும் சிறிதும் வழுவாது ஒழுகியவனும், நட்பு என்னும் நல்ல தன்மைக்குரிய அருமையான கடமையினைச் செய்து முடித்தவனுமான, ஆண்மையிற் சிறந்த சடாயுவை, அவன் நீ இருக்கும் சுவர்க்கலோகத்திற்கு வரும் போது, அவனை வாழ்த்தி வரவேற்று உடல் உறத் தழுவிக்கொள்ளுவாயோ?'' என்று தேம்பியழுதாள் சீதை.

''தோழமை நல்லியல் அருங்கடன் கழித்த நம்பி'' என்பது, தனது தோழன் தசரதனது மருமகளாகிய சீதை அடைந்த துன்பத்தைத் தாங்கமாட்டாது, இராவணனுடன் போராடி, அவளைக் காக்கின்ற கடமையினைச் செய்து, இறுதியில் அவனுக்காக உயிரையும் இழந்த பெருந்தன்மையைக் குறிக்கும். சடாயு, தசரதன் இப்போது இருக்கின்ற சொர்க்க லோகத்துக்குத் தான் செல்லுவான் என்று சீதை உறுதிபட நம்பினாள். எனவே தசரதனை அழைத்து, சடாயு வரும்போது அவனைத் தழுவிக் கொள்வாயோ? என்று கேட்டாள் என்பதாம். முன் செய்யுளில் சேய்மையிலிருந்த இராம இலக்குவர்களை அழைத்துச் சடாயுவின் நிலைமை காணவாருங்கள் என்று கூறிய சீதை, இச்செய்யுளில், விண்ணுலகில் இருக்கும் தசரதனை அழைத்துக் கதறியதாகக் கூறியதன் நயம் உணர்க.

50. ''கற்பு அழியாமை என் கடமை; ஆயினும்,
பொற்பு அழிய வலம் பொருந்தும் போர்வலான்
வில் பழியுண்டது; வினையினேன் வந்து
இல் பழியுண்டது'' என்று, இரங்கி ஏங்கினாள். (3554)

(பொற்பு - பொலிவு; வலம் - வலிமை; வந்த - பிறந்த; இல் - குடிப்பிறப்பு; கற்பு - பதிவிரதா தருமம்; வினையினேன் - பாவி)

''எந்த நிலையிலும் என்னுடைய கற்புக்குப் பங்கம் நேரா வண்ணம் ஒழுகுவது என் கடமை என்பதை நான் அறிவேன்; என்றாலும், பண்பு நலன் கெடாத, வலிமை பெற்ற, போரில் வல்லவனான என் கணவன் இராமபிரான் ஏந்தியிருக்கின்ற கோதண்டம் என்னும் வில்லிற்குப் பழி ஏற்பட்டுவிட்டதே? என்னுடைய பாவச்செயல்களினால், நான் பிறந்த சனக குலமும் பழிக்குள்ளாயிற்றே?'' என்று பெரிதும் வருந்தி ஏங்கித் தவித்தாள் சீதை.

என்னுடைய கணவனுக்கும், நான் புகுந்த இட்சுவாகு குலத்திற்கும் பழி உண்டாயிற்று என்று கூறத்துணியாத சீதை, தன் கணவனின் வில்லிற்குப் பங்கம் உண்டாயிற்றே என்று வருந்துகிறாள். ஆனால் தன்னைப் பற்றிக் கூறித் தான் பிறந்த குலத்திற்குப் பழி உண்டாயிற்றே என்று கூறிக் கொள்வது அவளது பெருந்தன்மையைக் காட்டுகிறது என்க. கரன் முதலான எண்ணற்றவர்களைக் கொன்று குவித்த தனது கணவனால், இவ்வரக்கன் ஒருவனுடன் போர் செய்து தன்னைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஆற்றாமை, ''பொற்பு அழியா வலம் பொருந்தும் போர்வலான் வில் பழியுண்டது'' என்ற சொற்றொடரில் வெளிப்படுவது காண்க.

51. இராவணன் விண்ணில் செல்லுதல்

ஏங்குவாள் தனிமையும், இறகு இழந்தவன்
ஆங்குஉறு நிலைமையும், அரக்கன் நோக்கினான்;
வாங்கினன் தேரிடை வைத்த மண்ணொடும்,
வீங்கு தோள் மீக்கொடு, விண்ணின் ஏகினான். (3555)

(ஏங்குதல் - துன்பமுறுதல்; இறகு - சிறகு; வாங்குதல் - தூக்கி எடுத்தல்; வீங்கு - பருத்த; மீ - மேல்)

இவ்வாறு தனிமையாக, ஏதொரு துணையுமின்றிப் புலம்பிக் கொண்டிருக்கின்ற சீதையையும், சிறகுகளை இழந்து மரணத்துன்பத்தை அடைந்து கொண்டிருக்கும் சடாயுவையும், இராவணன் நோக்கி, தனக்கு இப்போது எந்தத் தடையும் இல்லை என்று மனத்துள் கொண்டு, முன்பு தான் தேரின் மேல் மண்ணொடு பெயர்த்து எடுத்து வைத்திருக்கின்ற சீதையை எடுத்துத் தன்னுடைய பருத்த தோள்களின்மேல் வைத்துக் கொண்டு ஆகாய வழியாகச் செல்லலானான்.

சீதை நினைத்தது போலவே, இராவணனும், சடாயு இறந்து விட்டதாகவே கருதினான் என்க. எனவே வேறுயாரும் வருவதற்கு முன் விரைந்து செல்ல வேண்டும் என்று எண்ணினான். சடாயு, முன்பே தன் தேரையும், தேர்ப்பாகனையும், தேர்க்குதிரைகளையும் அழித்து

விட்டதால் இப்போது வேறு வழியின்றித் தன் தோள் மேலேயே அந்நிலத்தைத் தாங்கிக் கொண்டு செல்ல வேண்டியதாயிற்று என்க. ஆனால், அத்யாத்ம இராமாயணம், இங்கே அவன் வேறு ஓர் தேர் கொண்டுவரச் செய்து அதன் மீது ஏறிச் சென்றான் என்று கூறுவது கருதத்தக்கது. இங்கே ஒன்று நோக்க வேண்டும். கம்பன் மட்டும்தான் இராவணன் சீதையைத் தன் கைகளால் தொடாமல், நிலத்தோடு பெயர்த்து எடுத்து வந்ததாகக் கூறுகிறான். அவன் இதையே பல இடங்களிலும் வற்புறுத்திக் கூறுவது நோக்கத்தக்கது. இது ''தா அ நாட்டித் தனாது நிறுத்தல்'' என்னும் கொள்கையின் பாறபட்டதாகும். இதைத் ''தன் குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல்'' என்றும் கூறுவர்.

52. சீதை மூர்ச்சையுறுதல்

விண்ணிடை வெய்யவன் ஏகும் வேகத்தால்;
கண்ணொடு மனம் அவை சுழன்ற கற்பினாள்,
உள்நிறை உணர்வு அழிந்து ஒன்றும் ஓர்ந்திலள்;
மண்ணிடை, தன்னையும் மறந்து, சாம்பினாள். (3556)

(வெய்யவன் - கொடியவன்; உணர்வு - உணர்ச்சி / அறிவு; ஓர்தல் - உணர்தல்; மண் - தரை; சாம்புதல் - வாடுதல் / சோர்ந்து போதல்)

கொடியவனான இராவணன் ஆகாயத்தில் விரைவாகச் செல்லும் வேகத்தில் கற்பிற்சிறந்தவளான சீதையின் கண்களும் மனமும் சுழலலாயின; தன் உள்ளத்தில் நிறைந்திருக்கும் அறிவும் உணர்ச்சியும் அழியப் பெற்றாள்; என்ன நடக்கிறது என்பதொன்றையும் உணரமாட்டாதவள் ஆயினாள்; தன்னையும் மறந்து, பிரக்ஞை கெட்டு, தரையில் சோர்ந்து மூர்ச்சித்து விழுந்தாள்.

புறத்தே என்ன நடக்கிறது என்பதை அறியும் தன்மையை இழந்ததோடு, தன்னையும் மறந்த நிலையில் மயங்கித்தளர்ந்து விழுந்தாள் என்பதாம். இங்கே மண் என்றது நிலத்தைக் குறிப்பதல்ல; தான் முன் தங்கியிருந்ததாகியதும், இராவணனால் பெயர்த்தெடுக்கப்பட்டதுமான தவக்குடிலின் தரையைக் குறிக்கும்.

53. சடாயு இராவணனை நோக்கி அரற்றுதல்

ஏகினன் அரக்கனும்; எருவை வேந்தனும்,
மோக வெந்துயர் சிறிது ஆறி, முன்னியே,
மாகமே நோக்கினன்; வஞ்சன் வல்லையில்
போகுதல் கண்டு, அகம் புலர்ந்து சொல்லுவான்; (3557)

(எருவை - கழுகு; மோகம் - மூர்ச்சை / மயக்கம் / திகைப்பு; வெம் - கொடிய; முன்னி - கருதி; மாகம் - ஆகாயம்; ஆறி - தணிந்து; வல்லை - விரைந்து; புலர்ந்து - புழுங்கி / வாடி)

இவ்வாறு அரக்கனாகிய இராவணன் சென்றான். கழுகுகளுக்கு அரசனான சடாயுவும், தான் இருந்த மயக்கம் என்னும் கொடிய துயரத்திலிருந்து சற்று தணிந்து, முன் நிகழ்ந்தனவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து, அந்த வஞ்சகனாகிய இராவணன் விரைந்து செல்லும் ஆகாயத்தையே சிறிது நேரம் பார்த்திருந்து, மனம் புழுங்கி, கீழ்க்கண்டவற்றைக் கூறத் தொடங்கினான்.

மோகம் என்ற சொல் பொதுவாக மயக்கத்தைக் குறித்தாலும் இங்கே மூர்ச்சையுற்றிருந்த நிலையைக் குறிக்கும். பிறன்மனை நயந்ததாலும், ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து, துறவி வேடத்தில் வந்து சீதையைக் கைப்பற்றிச் சென்றதாலும் அரக்கன், வஞ்சன் எனவும் கூறப்பட்டான் என்க.

54. ''வந்திலர் மைந்தர்;'' நன் மருகிக்கு எய்திய
வெந்துயர் துடைத்தனென் என்னும் மெய்ப்புகழ்
தந்திலர், விதியினார்; தரும வேலியைச்
சிந்தினர்; மேல் இனிச் செயல்என்ஆம் கொலோ? (3558)

(மருகி - மருமகள்; துடைத்தல் - நீக்குதல்; சிந்துதல் - சிதறச் செய்தல்)

''என்னுடைய மக்களான இராமஇலக்குவர் இதுவரை வரவில்லை; என் மருமகளுக்கு உற்ற கொடிய துயரத்தை நான் போக்கினேன் என்னும் உண்மையான கீர்த்தியை எனக்குத் தாராது தடுத்து விட்டார் விதி என்னும் பெருமகனார்; தரும வேலியைச் சிதைத்துவிட்டார்; இனிமேல் என்ன செய்ய முடியும்?'' என்று இரங்கினான் சடாயு.

முன்பாடலில் சீதையைக் கவர்ந்து கொண்டு விரைவில் செல்லும் வஞ்சன் இராவணனைத் தன் கூரிய கண்களால் பார்த்ததனால், இராம இலக்குவர்கள் இதுவரை வந்து சேரவில்லை என்பதை உய்த்து உணர்ந்து கொண்டான்என்க. ''தருமவேலி''என்பது உருவகம். பின்னரும்வாலியின் கூற்றில் ''மன் அறவேலியைப் படுத்தாய்'' என்றும் வருவது காண்க. தன்னுடைய சிறகுகள் அற்று வீழ்வதற்கும், அதன் காரணமாக, தான் சீதையைக் காப்பாற்ற முடியாமல் போனதற்கும் விதியே காரணம் என்று கூறுகிறான் சடாயு.

55. வெற்றியர் உள்எனின், மின்னின் நுண் இடைப்
பொன் தொடிக்கு, இந்நிலை புகுதற்பாலதோ?
உற்றதை இன்னது என்று உணரகிற்றிலேன்;
சிற்றவை வஞ்சனை, முடியச் செய்ததோ? (3559)

(தொடி - வளையல்கள்; புகுதல் - நேர்தல் / நிகழ்தல் / சம்பவித்தல்; சிற்றவை - சிற்றன்னை / சிறியதாய் / கைகேயி; அவ்வை - அன்னை)

''என்றுமே தோல்வியையே அறிந்திராதவரும், வெற்றியே பெறுபவருமான இராம இலக்குவர், பஞ்சவடியில் சீதையுடன்

இருந்திருப்பார்கள் என்றால், மின்னலைப் போன்ற நுண்ணிய இடையையுடையவளும், பொன்னாலாகிய வளையலை அணிந்தவளுமான சீதைக்கு இத்தகைய துயரநிலை நிகழ்ந்திருக்குமோ? இராம இலக்குவர்களுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதையே என்னால் உய்த்துணர முடியவில்லையே? சிறிய தாயாகிய கைகேயின் சூழ்ச்சித்திறம், தனது செயலை முற்ற முடியச் செய்து விட்டதோ?'' என்று ஐயம் கொள்ளுகிறான் சடாயு.

''முடிய'' என்ற சொல்லுக்கு, அழிய என்று பொருள் கொண்டு, அவர்கள் இருவரையும் இவ்வுலகிலேயே இல்லாது மேல் உலகிற்குச் செலுத்தியதோ என்றும் சடாயு ஐயுற்றான் என்று கொள்வதற்கும் இடம் உள்ளதை உணர்க. எனவே தான் முன்பே வெற்றியர் என்கிறான். பிறரால் போரில் கொல்லப்படாதவர், சிற்றன்னையின் வஞ்சனையால் முடிக்கப்பட்டிருக்கலாம் என்று ஐயுற்றான் என்க.

56. ''பஞ்சு அணை பாம்பணை ஆகப் பள்ளி சேர்
அஞ்சனவண்ணனே இராமன்; ஆதலால்,
வெஞ்சின அரக்கனால் வெல்லற்பாலனோ?
வஞ்சனை இழைத்தனன், கள்ள மாயையால்'' (3560)

(பாம்பு - ஆதிசேடன்; அஞ்சனம் - மை; இழைத்தல் - செய்தல்; கள்ளம் - திருட்டுச்செயல்)

''ஆதிசேடனாகிய பாம்பினையே தனது பஞ்சு மெத்தையாகப் பள்ளி கொண்டு அறிதுயில் கொள்ளும் மை போன்ற கரிய நிறமுடைய திருமாலே இராமனாக அவதரித்து வந்திருக்கிறான். எனவே, கொடிய சினம் மிக்க அரக்கனாகிய இராவணனால், அவனை எதிர்த்துப் போரிட்டு வென்று சீதையைக் கைப்பற்றிக் கொண்டு வந்திருக்க முடியாது. இவன் ஏதோ வஞ்சனை மிக்க, திருட்டுச் சூழ்ச்சி செய்து தான் நம் மருகியைக் கவர்ந்து வந்திருக்கிறான்'' என்று சடாயு தனக்குள் எண்ணிக் கொண்டான்.

''கள்ள மாயை'' என்பது பிறரால் அறிய இயலாத மாயம் நிறைந்த வஞ்சனைச் செயல் என்று பொருள்படும். சடாயுவின் உய்த்துணர்ந்து அறியும் தன்மையைக் காட்டும் பாடல்களுள் இதுவும் ஒன்று என்க.

57. ''வேர்அற அரக்கரை வென்று, வெம்பழி
தீரும், என்சிறுவனும்; தீண்ட அஞ்சுமால்
ஆரியன் தேவியை அரக்கன், நல்மலர்ப்
பேர் உலகு அளித்தவன் பிழைப்புஇல் சாபத்தால். (3561)

(சிறுவன் - மைந்தன்; தீரும் - நீங்கும்; அளித்தல் - படைத்தல்; பிழைப்புஇல் - தவறாத; ஆரியன் - தலைமையுடையவன்; வேர் - மூலம்)

''என்னுடைய மைந்தனான இராமனும், அரக்கர்களை வேருடன் அவர்கள் குலம் முழுவதையும் வெற்றி கொண்டு அழித்து, அவனுக்கு

உண்டான இந்தக் கொடிய பழியைப் போக்கிக் கொள்வான்; இராக்கதனும், சிறந்த தாமரை மலரில் வீற்றிருந்து இப்பெரிய உலகைப் படைத்தவனான பிரமதேவன் அளித்த தவறுதலில்லாத சாபத்தை உணர்வான். ஆதலால், தலைவனாகிய இராமபிரானின் தேவியாகிய சீதாதேவியை கையினால் தொட்டுத் தீண்டுதற்கும் அஞ்சுவான். தொட மாட்டான்'' என்று மன அமைதி அடைகிறான் சடாயு.

இங்கு வெம்பழி என்றது, தனது மனைவியை மாற்றான் ஒருவன் அபகரித்துச் செல்லும்படி செல்ல விட்ட கொடிய பழி என்பதைக் குறிக்கும். பிரம சாபம் ''மேவும் சிந்தையில்லாத மாதரை மெய்தொடின், நீ தலை சிந்துக'' என்பதாம்; இரண்டு செயலும் நடக்கும். இராமன் அரக்கர் குலம் முழுவதையும் அழித்து வெற்றி கொள்வான்; அரக்கனும் சீதையைத் தொட மாட்டான். எனவே அவள் கற்புக்கும் ஊறு நேராது என்று சடாயு உறுதியான மன அமைதி கொண்டான் என்க.

58. பருஞ்சிறை இன்னன பன்னி உன்னுவான்,
''அருஞ்சிறை உற்றனள் ஆம்'' எனா, மனம்;
''பொரும்சிறை அற்றதேல், பூவை கற்பு எனும்
இருஞ்சிறை அறாது'' என, இடரின் நீங்கினான். (3562)

(பரும் - பருத்த / பெரிய; இன்னன - இத்தன்மையான; பொரும் - போர் செய்தற்கு உரிய; சிறை - சிறகுகள் / சிறைச்சாலை / காவல்; பூவை - நாகணவாய்ப் பறவை; இறுதல் - அழிவடைதல்)

பருத்த பெரிய சிறகுகளை உடையவனும், பருந்துகளுக்குத் தலைவனுமாகிய சடாயு, இத்தன்மையானவற்றையெல்லாம் திரும்பத்திரும்ப எண்ணிப் பார்த்தான்; இறுதியில், இவ்வளவு நேரம் சீதை இராவணனின் இலங்கையில் நீங்குதற்கரிய சிறைக் கூடத்தில் அடைக்கப்பட்டிருப்பாள் என்று எண்ணிக் கொண்டான். என்பதாலும், தனது போர் செய்தற்குரிய சிறகுகள் அறுபட்டு விழுந்ததாலும், நாகணவாய்ப் பறவை போல இனிய மொழி பேசும் சீதாதேவியின் கற்பு எனப்படும், பெரிய காவல் அழிவுறாது என்று எண்ணி, தன் மனத்தில் ஏற்பட்ட துன்பத்திலிருந்தும் நீங்கினான்.

தனது பெரிய சிறகுகள் அறுபட்டு இருந்தாலும், சீதையின் கற்பு என்னும் சிறகு அறாது என்று, முன்பு தான் கொண்டிருந்த துன்பத்தினின்றும் சிறிது நீங்கினான் என்பதாம். ''சிறை காக்கும் காப்பு எவன் செயும், மகளிர் நிறை காக்கும் காப்பே தலை'' என்பது குறள். கற்புக் காவலே, மகளிர்க்கு மற்ற காவலினும் பெருமையுடைத்து என்பது கருத்து. ''சிறை அற்றதேல் சிறை அறாது'' என்ற சொல்லாட்சி உணர்ந்து இன்புறற்குரியதாம்.

59. சடாயு உறக்கம் கொள்ளுதல்

அம்சிறை குருதி ஆறு அழிந்து சோரவும்,
''வஞ்சியை மீட்டிலென்'' என்னும் மானமும்,
செஞ்செவே மக்கள்பால் சென்ற காதலும்,
நெஞ்சுறத் துயின்றனன் உணர்வு நீங்கலான். (3563)

(அம் - அழகிய; சிறை - சிறகுகள்; சோர்தல் - ஒழுகுதல்; அழிந்து - தணிந்து; மானம் - அவமானம் / வெட்கம்; செஞ்செவே - முறையாக / முற்றிலும் / செம்மையாக; காதல் - அன்பு; துயில்தல் - உறங்குதல்)

தனது அழகிய சிறகுகளினின்றும் பெருகி வந்த இரத்த ஆறு, சிறிது சிறிதாகத் தணிந்து போகவும், உடல் தளர்வுற்று, ''வஞ்சிக்கொடி போன்ற இடையையுடைய சீதாதேவியை இராவணனிடமிருந்து மீட்க முடியாது போயிற்றே'' என்ற வெட்கமும், தம் மக்களாகிய இராம இலக்குவரிடம் முற்றிலும் பொருந்திய அன்பும், தன் உள்ளம் முழுக்க நிறைந்திருக்க, அறிவு மயக்கம் நீங்காதவனான சடாயு, உறக்கம் கொள்வானாயினான்.

இரத்தப் பெருக்கைக் ''குருதி ஆறு'' என்றமை காண்க; ஒரு பக்கம் அவமானம் என்றாலும் புதல்வர்களின் மீது கொண்ட அன்பு அழுந்திப் பதிந்து விட்டதால் அவன் அறிவு கலங்கவில்லை. எனவே உறக்கம் கொண்டான் என்பதாம்.

60. சீதையை இராவணன் அசோக வனத்தில் சிறை வைத்தல்

வஞ்சியை அரக்கனும் வல்லை கொண்டு போய்,
செஞ்செவே திருஉருத் தீண்ட அஞ்சுவான்,
நஞ்சு இயல் அரக்கியர் நடுவண், ஆயிடை,
சிஞ்சுப வனத்திடைச் சிறை வைத்தான் அரோ. (3564)

(வல்லை - விரைவாக; செஞ்செவே - நேரே; நடுவண் - நடுவில்; சிஞ்சுபம் - அசோகம்; சிறை - காவல்)

அரக்கனாகிய இராவணனும், வஞ்சிக் கொடி போன்ற சீதாதேவியை விரைவில் மண்ணொடும் எடுத்துக்கொண்டு போய், அவளுடைய அழகிய மேனியை நேரே தொட்டுத் தீண்டுவதற்கு மிகவும் அஞ்சுபவனாய், நச்சுத்தன்மை கொண்ட அரக்கியர்களுக்கு நடுவில், இலங்கை மாநகரில், அசோகவனத்தில், சிம்சுபா மரத்தின் அடியில், சிறைக்காவலில் வைத்தான்.

சிம்சுபாமரம் என்பது இரவெரிமரம் என்றும், கோதகத்தி மரம் என்றும், நூக்க மரம் என்றும் கூறுவதுண்டு; இந்த இடத்தில்தான் சீதாதேவி தனது அணிகலன்களைக் கழற்றித் தனது ஆடையின் ஒரு பகுதியில் முடித்து இராவணன் அறியாமல் கீழே வீசினாள் என்று வான்மீகமும், அத்யாத்ம

இராமாயணமும் கூறுகின்றன. ஆனால் இந்நிகழ்ச்சியைக் கம்பன் இங்கே கூறாது, பின்னர் கிட்கிந்தாகாண்டம், கலன்காண் படலத்தில் கூறுகிறான். மேலும் இராவணன் முதலில் சீதாதேவியைத் தன் அந்தப்புரத்திற்குக் கொண்டு சென்றான் என்றும், அங்கே சீதை இராவணனைப் பெரிதும் இகழவே, அதைப் பொறுக்காது, அசோக வனத்தில் அரக்கியர் மத்தியில் சிறை வைத்தான் என்றும் வான்மீகம் கூறும். கம்பன் நேரே அசோகவனத்திற்கு எடுத்துச் சென்றான் என்று கூறுவதைக் கருதுக.

61. கவிக் கூற்று

இந்நிலை இனையவன் செயல் இயம்பினாம்;
''பொன் நிலை மானின்பின் தொடர்ந்து போகிய
மன்நிலை அறிக'' என, மங்கை ஏவிய
பின்னவன்தன் நிலை பேசுவாம் அரோ. (3565)

(இனையவன் - இராவணன்; மன் - மன்னன் / தலைமகன் / இராமன்; ஏவிய - கட்டளையிட்ட)

இவ்வாறு இதுவரை இராவணன், சடாயு முதலியோரது நிலையினைப் பற்றி எடுத்துச் சொன்னோம்; இப்பொழுது, பொன் நிறம் பொருந்திய மானின் பின் தொடர்ந்து சென்ற தலைவனாகிய இராமனது நிலையை அறிந்து வருக என்று சீதாதேவியால் கட்டளையிடப்பட்டு அனுப்பிய பின், இளையவனான இலக்குவனின் நிலைமை பற்றிச் சொல்லமேற்படுவோம்.

மங்கை என்பது இங்கு பருவத்தைக் குறிக்காது. பெண் என்ற பொருளில் சீதையைக் குறித்தது என்க.

62. இலக்குவன் அடைந்த துயரம்

ஒருமகள் தனிமையை உன்னி, உள்உறும்
பருவரல் மீதிடப் பதைக்கும் நெஞ்சினான்,
பெருமகன்தனைத் தனிப் பிரிந்து பேதுறும்,
திருநகர்ச் செல்லும், அப்பரதன் செய்கையான். (3566)

(உன்னி - நினைந்து; பருவரல் - துன்பம்; மீ - மேலும் மேலும்; பேது - துன்பம்; பேதுறுதல் - வருத்தம் அடைதல்; தீர்தல் - பிரிதல்)

ஒப்பற்றவளான சீதாதேவியைத் தனியாக விட்டு வந்ததை எண்ணி, உள்ளத்தில் ஏற்படும் துயரம் மேலும் மேலும் பெருக, பதை பதைத்த நெஞ்சினனான இலக்குவன், பெருமைக்குரிய இராமபிரானை சித்திரக் கூடத்தில் தனியாக விட்டுப் பிரிந்து வருத்தமுற்று வந்த அந்தப் பரதன் அனுபவித்ததைப் போலவே துன்புற்றான்.

சீதையைத் தனியே விட்டுப் பிரிந்தான் இலக்குவன்; இராமனைத் தனியே விட்டுப் பிரிந்தான் பரதன்; சீதை இலக்குவன் கூற்றுக்குச் செவிசாய்க்க வில்லை; இராமன் பரதன் கூற்றுக்குச் செவிசாய்க்கவில்லை. இலக்குவனும் பேதுற்றுச் சென்றான்; பரதனும் பேதுற்றுத் திரும்பினான் என்பது விளக்கம்.

63. இலக்குவன் இராமனைக் காணுதல்

தெண் திரைக்கலம் என விரைவில் செல்கின்றான்;
புண்டரீகத் தடங்காடு பூத்து, ஒரு
கொண்டல் வந்து இழிந்தன கோலத்தான்தனைக்
கண்டனன்; மனம் எனக் களிக்கும் கண்ணினான். (3567)

(தெண் - தெள்ளிய; திரை - அலைகள்; கலம் - மரக்கலம் / கப்பல்; புண்டரீகம் - செந்தாமரை; கொண்டல் - மேகம்; இழிந்த - இறங்கிய; கோலம் - அழகு)

தெள்ளிய அலைகளையுடைய கடலில், தடையில்லாது செல்லும் ஒரு மரக்கலம் போல விரைவாகச் செல்லும் இலக்குவன், செந்தாமரை மலர்கள் மிகுதியாகப் பூக்கப் பெற்ற ஒரு பெரிய காட்டில் ஒரு பெரிய கரிய மேகம் வந்து இறங்கினாற் போல, தன் எதிரில் வந்த அழகிய மேனியை உடைய இராமபிரானைக்கண்டு, தன் மனம் எவ்வாறு பூரித்துக்களித்ததோ, அதே போன்று களிக்கின்ற கண்களையும் உடையவனானான்.

இராமன்மேனி கரியது; அவன் உடல் உறுப்புகள் செந்தாமரை போலும் சிவந்தது. ''திருவடியும் கையும், திருவாயும் செய்ய, கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!'' என்பது சிலப்பதிகாரம்; ''கருமுகில் தாமரைக் காடு பூத்த என்ன'' என்று முன்பு பாலகாண்டத்துள்ளும் இராமனின் மேனியழகு கூறப்பட்டதை நினைவு கூர்க. இலக்குவன் சீதையை விட்டுப் பிரியும் போது, இராமனுக்கு எந்தத் தீங்கும் ஏற்பட்டிருக்காது. யாரும் அவனுக்குத் தீங்கு விளைவிக்க முடியாது என்று கூறி வந்ததைப் போலவே, தன் எதிரே எத்தகைய தீங்கும் இன்றி இராமன் வந்ததைக் கண்டதால் முதலில் மனமும் பின்னர் கண்களும் ஒத்த களிப்படைந்தன என்று கூறும் நயம் இன்புறற்குரியது. காட்டிற்கு இலக்குவன் வந்ததிலிருந்து இப்போதுதான் முதன் முறையாகப் பிரிந்து, அதன்பின் முதன் முறையாகப் பார்க்கிறான். எனவே இக்காட்சி அவனுக்குச் சிறப்பு மிக்கதாகத் தோன்றியது என்பது கருத்து. முன்பு இராமனை அழைக்கச் சென்ற சுமந்திரனும் இராமன் அழகில் ஈடுபட்டதை ''கண்ணும் உள்ளமும் களிப்புறக் கண்டான்'' என்றார் கவிஞர் என்பதையும் நினைவு கூர்க.

64. இராமன் இலக்குவனைக் காணுதல்

''துண்ணெனும் அவ்வுரை தொடர, தோகையும்,
பெண் எனும் பேதைமை மயக்க, பேதினால்

உள்நிறை சோரும்'' என்று, ஊசலாடும் அக்
கண்ணனும் இளவலைக் கண்ணுற்றான் அரோ! (3568)

(துண் எனல் - திடுக்கிடுதல்; பேது - வருத்தம் / மனவேறுபாடு; உள்நிறை - உள்ள உறுதி; சோர்தல் - தளர்தல்; கண்ணன் - இராமபிரான்; பேதைமை - அறியாமை)

கேட்பவர் எவரும் அச்சத்தால் திடுக்கிடும்படியான, மாய மாரீசனின் ஆ சீதா! ஆ இலக்குவா! என்ற தன் குரல், மயில் போன்ற சாயலையுடைய சீதையின் செவியில் வந்து சேர்ந்ததும், அவளும் பெண்ணுக்கே உரிய அறியாமை மயக்கத்தால் துன்புற்று, தன் உள்ள உறுதி தளர்வடைவாள்'' என்று ஒரு நிலையில்லாது ஊஞ்சலைப் போல் முன்னும் பின்னும் எண்ணித் தத்தளித்துத் தவிக்கும் மனத்தையுடைய அந்த அழகிய கண்களையுடைய இராமனும், தனது இளவலாகிய இலக்குவனைக் கண்ணால் கண்டான்.

மாயமாரீசன் மாயக் குரலால் சீதை மிகவும் துயரப்பட்டிருப்பாள் என்று எண்ணி விரைவாக வந்த இராமனும், சீதையின் கட்டளையால் இராமனைத் தேடி விரைவாக வந்த இலக்குவனும், நடுவில் ஓரிடத்தில் சந்தித்துக்கொண்டனர் என்பதாம். ''துண்'' என்பது அச்சத்தால் உண்டாகும் திகைப்பைக் குறிக்கும் ஒரு சொல். ''நுண்ணறிவுடையோர் நூலோடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே'' என்பது ஆன்றோர் வாக்கு. ''பெண் நீர்மைக்கு இயல் பிழையே போலும்'' என்பது பெருங்கதை. கண்ணன் என்ற சொல் கண்ணழகு உடையவன், யாவர்க்கும் கண் போன்றவன், எல்லோர் கண்களிலும் நிறைந்தவன் எனப்பல பொருள்கள் தரும் ஒரு சொல். ஒரே நிலையில் நிற்கும் தன்மை நிறை எனப்படும்; ஒரு நிலையில் நில்லாத நிலைமை ஊசல் எனப்படும். இரண்டையும் ஒரே அடியில் கூறிய கவிஞனின் திறன் நோக்குக.

65. இலக்குவன் வரும் காரணத்தை இராமன் புரிந்து கொள்ளுதல்

''புன் சொற்கள் தந்த பகுவாய் அரக்கன்
உரை பொய் எனாது, புலர்வாள்,
வன் சொற்கள் தந்து மடமங்கை ஏவ,
நிலை தேர வந்த மருளோ?
தன்சொல் கடந்து தளர்கின்ற நெஞ்சம்
உடையேன் மருங்கு, தனியே,
என் சொல் கடந்து, மனமும் தளர்ந்த
இளவீரன் வந்த இயல்பே.'' (3569)

(இயல்பு - தன்மை; பகுதல் - பிளத்தல்; புலர்தல் - வாடுதல்; மடமை - அறியாமை; தேர - அறிதற்காக; மருள் - மயக்கம்; மருங்கு - அருகில்)

கீழ்மையான சொற்களையே பேசிப்பழகிய பிளந்தது போன்ற பெரிய வாயினையுடைய அரக்கனான மாரீசன், ''ஆசீதே! ஆ இலக்குவா!'' என்று இராமன் குரலில் கூறிய சொற்களைப் பொய் என்று கருதாது, உண்மை என்றே கருதி, மிகவும் வருந்துபவளான அறிவிலியாகிய சீதை, மிகக் கொடிய சொற்களைக் கூறி, இலக்குவனுக்கு நம்முடைய உண்மையான நிலை என்ன என்று தெரிந்து வருவதற்காகக் கட்டளை இட்டிருப்பாள். அதனால் தான் இளமையும், வீரமும் கொண்ட இலக்குவன், ''சீதையைக் காத்திருப்பாயாக!'' என்று நான் இட்ட கட்டளையையும் மீறி, மனம் தளர்வுற்று, ''இலக்குவனது சொல்லை மீறி வந்து விட்டோமோ'' என்று தளர்கின்ற மனத்தையுடைய என் அருகில் இப்பொழுது வருவது, அவனது அறிவில் உண்டாகிய மயக்கத்தினால் போலும்! என்று கருதினான் இராமன்.

இப்பாடலில் மூன்று பேரின் இயல்பையும் கூறுகிறான் கவிஞன். முதலில் மாயமரீசனின் சொற்கள் பொய் என்று கருதாது உண்மை என்று கருதி, அருகில் நின்ற இலக்குவனைக் கடும் சொற்களால் பேசி, என் நிலைமையைக்கண்டறியக்கட்டளைஇட்டிருப்பாள்அறிவிலியானசீதை என்று சீதையின் இயல்பைக் கூறுகிறான். பின்னர், தம்பி இலக்குவன், இது மாயமான் இதனைத் தொடர்ந்து செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டும் அவன் சொல்லை மீறி வந்து, தான் இப்பொழுது படுகின்ற துயரத்தை எண்ணித் தளருகின்ற தன்னுடைய தவறைக் கூறிக் கொள்கிறான். மூன்றாவது, இலக்குவன் இயல்பிலேயே அறிவு மயக்க மற்றவன். சீதையின் ஏவலால்தான் தன்னருகில் மனமும் உடலும் தளர்ந்த நிலையில் தன்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறான் என்று இலக்குவனின் இயல்பைக் கூறுகிறான். மடமை என்பது ''கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை'' என்பதாம். மருள் என்பது ''ஒன்றைப் பிரிதொன்றாகக் கருதும் உணர்ச்சி'' என்பதாம்.

66. ''நீ ஏன் வந்தாய்?'' என இராமன் இலக்குவனை வினவுதல்

என்று உன்னி, ''என்னை விதியார் முடிப்பது?''
என எண்ணிநின்ற இறையை,
பொன் துன்னும் வில் கை இளவீரன்
வந்து புனைதாள் இறைஞ்சு பொழுதில்,
மின் துன்னு நூலின் மணி மார்பு அழுந்த,
விரைவோடு புல்லி, உருகா
நின்று, ''உன்னி வந்த நிலை என்கொல்?'' என்று,
நெடியோன் விளம்ப, நொடிவான். (3570)

(பொன் - அழகு; துன்னு - பொருந்திய; வயம் - வலிமை / வெற்றி; புனை - அழகிய; மணி - அழகிய; புல்லி - தழுவி; நிலை - காரணம்; உன்னி

- முடிவு செய்து; நொடிதல் - சொல்லுதல்; விதி - ஊழ்வினை; நெடியோன் - இராமபிரான் / தமையன்)

என்று தனக்குள் ஒரு முடிவு செய்து கொண்டு, ''ஊழ்வினையினால் இன்னும் என்ன நிகழ இருக்கிறதோ?'' என்று வருந்திச் செயலற்று நின்ற தலைவனாகிய இராமனை, அழகு பொருந்திய வில்லைக் கையில் ஏந்திய இளைய, வலிமை வாய்ந்த வீரனான இலக்குவன் நெருங்கி வந்து, இராமபிரானின் அழகிய திருவடிகளில் வணங்கிய பொழுதில், மின்னலைப் போன்று ஒளிவீசும் முப்புரிநூல் அணிந்த அழகிய மார்பு ஒன்றுடன் ஒன்று அழுந்தும்படியாக, விரைவாகத் தழுவிக் கொண்டு, பாசத்தால் உருகிச் சற்று நேரம் செயலற்று நின்று, பிறகு, ''நீ இங்கு நினைத்துவந்தகாரணம்என்ன?''என்றுதமையனானஇராமன்கேட்கவும், இளையவனான இலக்குவன் கீழ்க்கண்டவாறு கூறத் தொடங்கினான்.

இலக்குவன் சீதையை விட்டுத் தனியே வந்திருப்பதால், ஏதோ ஒர் பெரிய தீங்கு, அரக்கர்களால் நிகழ இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்த இராமன் ''என்னை விதியார் முடிப்பது'' என எண்ணினான் என்க; நொடித்தல் என்ற சொல் சொல்லுதல் என்ற பொருளில் இன்றும் கன்னட நாட்டில் வழங்குதல் காண்க. நெடியோன் இங்கு திரிவிக்ரம அவதாரத்தையும் குறிக்கும் என்க.

67. இலக்குவன் மறுமொழி

''இல்லா, நிலத்தின் இயையாத, வெஞ்சொல் எழ, வஞ்சி எவ்வமுற, யான்,
''வல்வாய் அரக்கன் உரை ஆகும்'' என்ன, மதியாள், மறுக்கம் உறுவாள்,
''நில்லாது, மற்றுஇது அறி, போதி'' என்ன, நெடியோய் புயத்தின் வலிஎன்
சொல்லால் மனத்தின் அடையாள், சினத்தின் முனிவோடு நின்று துவள்வாள். (3571)

(நிலம் - தவக்குடில்; வெம் - கொடிய; எவ்வம் - துன்பம்; வல் - வலிய; உரை - சொல்; மறுக்கம் - கலக்கம்; போதி - போவாயாக; அடைதல் - ஏற்றுக்கொள்ளுதல்; எழுதல் - ஒலித்தல்; நெடியோய் - உயர்ந்தவன்; துவள்தல் - தளர்வுறுதல்)

''உயர்ந்தோனே! நீ இல்லாத இந்தத் தவக்குடிலில் உன் தகுதிக்குப் பொருந்தி வாராத, கொடிய சொல்லாகிய ''ஆ சீதா! ஆ இலக்குவா! என்ற கொடிய சொற்கள் இங்கு வந்து ஒலிக்க, வஞ்சிக் கொடி போன்றவளான சீதை துன்பம் அடைந்தாள். நான் ''இது வலிய வாயினையுடைய அரக்கனாகிய மாரீசனின் வஞ்சனைக் குரல் என்று சொல்லவும், அவள் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை; கலக்கம் உற்றாள்; ''இங்கே நில்லாதே! இது என்ன என்று உடனே அறிந்து வா, புறப்படு!'' என்று எனக்குக் கட்டளையிட்டாள். உயர்ந்தோனாகிய உன்னுடைய தோள் வலிபற்றி நான் கூறியவற்றை அவள் மனத்தில் ஏற்றுக் கொள்ளவே இல்லை; மிக்க சினம் கொண்டு, சோர்வுறலானாள்.'' என்றான் இலக்குவன்.

''இல்லா நிலத்தின் இயையாத வெம்சொல்'' என்பது, இவ்வுலகத்தில், பொதுவாகப் பொருந்தி வருகின்ற மக்கள் குரலிலும் இல்லாமல், மானின் குரலிலும் இல்லாமல், ஒரு புதுமையாக - ஒரு போதும் கேட்டறியாத கொடிய குரல் என்று பொருள் கொள்ளுவதும் பொருந்தும். ''உன் குரலில் இருந்ததால், அதை உன் சொல் என்றே கருதி, சீதை துன்பம் அடைந்தாள். நான் இது உன் குரலல்ல, மாரீசன் குரல்'' என்று கூறியும் அதை அவள் ஏற்றுக் கொள்ளாது, என்னை அங்கிருந்து அகன்று போகும்படி கட்டளையிட்டாள் என்று, தான் வந்த காரணத்தைக் கூறினான் இலக்குவன் என்க.

அரக்கர்கள் தாம் விரும்பிய வண்ணம் குரலை மாற்றிப் பேசும் வல்லமையுடையவர்கள் ஆதலின் ''வல்வாய் அரக்கன்'' எனப்பட்டனர் என்க.

68. ''ஏகாது நிற்றி எனின், யான் நெருப்பின்
இடை வீழ்வென்'' என்று முடுகா,
''மாகானகத்தினிடை ஓடலோடும்,
மனம் அஞ்சி, வஞ்ச வினையேன்,
போகாது நிற்கின், இறவாதிருக்கை
புணராள் எனக்கொடு உணரா,
ஆகாது இறக்கை; அறன் அன்று; எனக்கொடு,
இவண் வந்தது'' என்ன, அமலன். (3572)

(ஏகாது - போகாது; உணரா - உணர்ந்து; இறக்கை - இறத்தல்; அமலன் - குற்றமற்றவன் / இராமன்; முடுகா - முடுகி / விரைந்து; புணர்தல் - தவிர்த்தல்; வினையேன் - பாவி) (குளகப்பாடல்)

''நீ இராமனிடம் செல்லாமல் இங்கேயே நிற்பாயானால், நான் இந்தக் காட்டுத் தீயில் விழுந்து, என் உயிரைப் போக்கிக் கொள்வேன்'' என்று கூறி, விரைந்து பெரிய காட்டினிடம் ஓடினாள். அதைக் கண்டு அஞ்சி, ''வஞ்சன்'' என்று அவளால் கூறப்பட்ட பாவியாகிய நான், இங்கிருந்து செல்லாதிருந்தால், இவள் இறவாது இருப்பதைத் தவிர்க்கமாட்டாள்; இறந்து விடுவாள், என்று என் மனத்தில் உணர்ந்து, இவள் இறப்பது நடக்கக் கூடாது; அது தருமத்தின் பாற்பட்டதன்று என்று எண்ணி, உடனே இங்கு ஓடி வந்தேன் என்று இலக்குவன் கூற, அதைக் கேட்ட குற்றமற்றவனான இராமபிரான் - பாடல் தொடர்கிறது.

''வஞ்ச வினையேன்'' என்ற சொல்லாட்சி விளக்கத்தக்கது. சீதை தன்னை, ''நின்ற நின் நிலைஇது நெறியிற்று அன்று'' என்று கூறி, அவனை வஞ்சகன் என்று கடுஞ்சொற்களால் ஏசினாளே சினந்து, அதை இராமனிடம் அவ்வாறே கூறாமல், குறிப்பால் உணர்த்தினான் என்க. ''இறவாது இருக்கை புணராள்'' என்று இரு எதிர்மறைச் சொற்களைக் கூறி ''இறந்து படுவாள்'' என்ற ஒரு உடன்பாட்டுப் பொருளைக் கூறியதன்

காரணம், அவ்வாறு கூறுவதைக் கூட அவன் விரும்பவில்லை என்பதைக் குறிப்பதற்காக என்க. இங்கே இலக்குவன் ''இருதலைக் கொள்ளி எறும்பு போல்'' தவித்தது கூறப்பட்டிருப்பதைக் காண்க; அவன் போகாது நின்றால், சீதை இறந்துபடுவாள்; போனால் தமையன் சொல் கடந்தவன் என்றும், அதனால் விளையப்போகும் துன்பங்களுக்கெல்லாம் இவனே காரணமாவான் என்பதும் கருதி என்க. கணவன் இறந்த பொழுது கணவனுடன் எரிபுகுதல் முற்காலத்தில் தருமமாகக் கருதப்பட்டது. ஆனால் கணவன் இராமன் உயிருடன் இருக்கும் பொழுது சீதை எரிபுகுதல் தருமம் அன்று என்று இலக்குவன் கருதினான் என்றும் ''ஆகாது இறக்கை; அறன் அன்று'' என்ற சொற்களால் பெறப்படும். தருமம் அன்று என்பதோடு மட்டுமல்ல; அது பாவமும் ஆகும் என்க.

இங்கே ஒரு கருத்து. வான்மீகமும், அத்யாத்ம இராமாயணமும், இலக்குவன் சீதையைத் தனியே விட்டு விட்டு இங்கு வந்ததற்காக இராமன் கடிந்து கொண்டதாகவும், இலக்குவன் அதற்குப் பிறகு, அவள் கூறிய கடுஞ்சொற்களைத் தெரிவித்தான் என்றும், எனினும் இராமன் அவன் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கூறுகின்றன.

69. இராமபிரான் விளைவுகளைச் சிந்தித்தல்

> ''சாவாதிருத்தல் இலள் ஆனது உற்றது; அதையோ, தடுக்கமுடியாது;
> ஆஆ! அலக்கண் உறுவாள், உரைத்த பொருளோ, அகத்தின் அடையாள்;
> காவா நிலத்தின் வரும் ஏதம்; மற்றுஅது ஒழியாது; கைக்கொடு அகலப்
> போவார், பிரிக்க முயல்வார், புணர்த்த பொருள் ஆம்இது'' என்று தெருளா. (3573)

(அலக்கண் - துன்பம்; அகம் - மனம்; அடைதல் - பதிதல்; காவா - காக்கப்படாத; நிலம் - பன்னசாலை; ஏதம் - தீங்கு; புணர்த்த - ஆலோசித்த; தெருளா - தெளிந்து; பொருள் - சூழ்ச்சி) (குளகப்பாடல்)

''இலக்குவன் இங்கு வாராதிருந்தால், சீதை இறப்பதைத் தடுத்திருக்க முடியாது. அது நடந்தே தீரும்; அந்தோ! துன்பம் உறுபவளான சீதையின் மனத்தில், இலக்குவன் உரைத்த உண்மைப் பொருள்கள் பதிந்திருக்க வழியில்லை; இப்போது இலக்குவன் காத்துக் கொண்டிராத அந்தத் தவக்குடிலில் ஒரு தீங்கு நிச்சயம் வர இருக்கின்றது; அது வாராது போகாது; எங்கள் இருவரையும் சீதையிடமிருந்து தனித்தனியே அகற்றி, அதன் பின்னர் அவளைக் கைப்பற்றிக் கொண்டு நெடுந்தூரம் அகல முயல்பவர்கள் செய்த சூழ்ச்சியாகும் இது'' என்று இராமன் மிகத் தெளிந்து - பாடல் தொடர்கிறது.

இலக்குவன் சீதையை விட்டுப் பிரிந்து வந்ததில் தவறில்லை; இவன் பிரிந்து வாராவிட்டால், சீதை இறந்து படுவாள் என்பது திண்ணம். அதைத் தடுக்க இயலாது. அவள் துன்பம் உற்றிருந்த நிலையில் இலக்குவன் என் புயவலி பற்றியும், மாயமான் குரல் பற்றியும் கூறிய உண்மைப் பொருள்கள் அவள் உள்ளத்தில் பதிந்திருக்க முடியாது. அதிலும் தவறில்லை; நாங்கள்

மூவரும் பிரிந்திருக்கும் நிலையில், தவக்குடிலிலிருந்து அவளைக் கைப்பற்றிக் கொண்டு நீண்ட தூரம் செல்வதற்கு அரக்கர்கள் செய்த சூழ்ச்சித் திட்டங்களே இவைகள் என்று, இராமன் உய்த்து உணர்ந்தான் என்பதாம்.

70. இராமன் துயரம் அடைதல்

''வந்தாய் திறத்தில் உளதன்று, குற்றம்; மடவாள் மறுக்கம் உறுவாள்,
சிந்தாகுலத்தொடு உரைசெய்த செய்கை அது தீரும் என்று தெளிவாய்;
முந்தே தடுக்க, ஒழியாது, எடுத்த வினையேன் முடித்த முடிவால்,
அந்தோ கெடுத்தது'' என, உன்னி அழியாத உள்ளம்அழிவான். (3574)

(மறுக்கம் - பெருந்துன்பம்; முந்தே - முன்னரே; எடுத்த - மேற்கொண்ட; உன்னி - நினைந்து)

''சீதையைத்தனித்து விட்டு விட்டு இங்கு என்னைவந்தடைந்தது உனது குற்றமில்லை; பேதையான சீதை, கலக்கமுற்று பெருந்துன்பமடைந்து, உன்னைக் கூறியதும் தீங்கு விளைவிப்பன அல்ல; இதை நன்கு புரிந்து கொண்ட நீ, முன்னரே ''இது மாயமான்'' என்று தடுத்தும், அதனைத் தவிர்க்காது, பாவியான நான் மேற்கொண்ட செய்கையினால்தான் இவ்வளவு தீங்குகளும் நேர்ந்தன'' என்று நினைந்து, என்றும் கலங்காத உள்ளம் படைத்தவனான இராமனும் மனம் வருந்துபவனானான்.

இராமன், சீதை, இலக்குவன் இருவர் மேலும் எந்தக் குற்றமும் இல்லை என்றும், இவை எல்லாவற்றுக்கும் தானே காரணம் என்றும் தன்னை நொந்து கொண்டான் என்பதாம். சீதை உன்னை அவ்விடத்தை விட்டுப் போ என்று கூறியதில் தவறில்லை. காரணம் அவள் முன்னரே கலக்கம் அடைந்திருக்கிறாள்; அவள் ஒரு பேதைப் பெண்; அவள் மனம் துன்பம் உற்றிருக்கிறது என்பதாம். அவளைக் காப்பாற்ற வேண்டியே நீயும் அவளைத் தனியே விட்டுப் பிரிந்து வந்தாய் எனவே உன் மீதும் குற்றமில்லை; நான் மானைப் பின் தொடர்ந்து செல்ல எடுத்த முடிவிலும், அதன்பின் மேற்கொண்ட செய்கையிலும்தான் தவறு. அவைதான் இத்தகைய தீங்கு நேரக் காரணமாயிற்று என்று பழியைத் தன்மேல் ஏற்றிக் கொண்டான் என்க. ''தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின், என் குற்றம் ஆகும் இறைக்கு'' என்பது குறள் (436) இராமன் என்றும் உள்ளம் அழிந்தவனல்லன் என்பதை விளக்க, தந்தை வீயவும், தாய் துயர் மேவவும், பரதன் வருந்தவும், நகரமாந்தர் வன்துயர் எய்தவும், இராமன் தான் மட்டும் வருந்தாது, காடு புகுந்த தன்மையை நினைக.

71. இராமன், சீதை இருந்த சோலைக்குச் செல்லுதல்

''பாணிக்க நின்று பயன் ஆவது என்னை?
பயில் பூவை அன்ன குயிலைக்
காணின், கலந்த தயர் தீரும்; அன்றி,
அயல் இல்லை'' என்று, கடுகி,

சேண் உற்று அகன்ற நெறியூடு சென்று,
சிலை வாளி அன்ன விசை போய்,
ஆணிப் பசும்பொன் அனையாள் இருந்த
அவிர் சோலை வல்லை அணுகா. (3575)

(பாணித்தல் - காலம் தாழ்த்துதல் / தாமதித்தல்; பூவை - நாகணவாய்ப்புள்; சேண் - நெடுந்தொலைவு; சிலை - வில்; வாளி - அம்பு; விசை - வேகம்; அவிர் - விளக்கமுடைய; வல்லை - விரைவில்; அணுகா - அணுகி / நெருங்கி; அயல் - வேறு ஒன்று; கடுகி - விரைந்து) (குளகப் பாடல்)

இனி இங்கு காலம் தாழ்த்தி நின்று கொண்டிருப்பதால் விளையப் போகும் பயன் என்ன இருக்கிறது? நன்கு பயின்ற நாகணவாய்ப் பறவை போன்றும், குயில் போன்றும் இனிய சொற்களையுடைய சீதையைக் கண்டால் அல்லாமல் வேறு ஒன்றால், நம்மில் கலந்திருக்கிற துயரம் நீங்காது என்று எண்ணி, நெடுந்தொலைவில் அகன்ற விரிந்த வழியில் சென்று, தனது வில்லினின்றும் தொடுத்து எய்த அம்பு போன்று வேகத்தோடு போய், மாற்று உயர்ந்த பசிய பொன் போன்றவளான சீதை இருந்த விளக்கமுடைய சோலையை, விரைவாக நெருங்கி - பாடல் தொடர்கிறது.

கடுகி, விசை போய், வல்லை என்று விரைவினைக் குறிக்கும் மூன்று சொற்களையும் இங்கு பயன்படுத்தியிருப்பது, இராமனின் மனவேதனையைக் குறிக்க என்க. இவன் செல்லும் வேகத்திற்கு இவன் வில்லில் தொடுத்து எய்யும் அம்பையே உவமையாகக் கூறியதும் உணர்ந்து இன்புறற்குரியது. நாகணவாய்ப்புள் தன் பேச்சாலும் தனது குரலாலும், தாமே வலியச் சென்று வேடர்கள் கையில் அகப்பட்டுக் கொள்ளுதல் போல், சீதையும் தனது மாற்றுக்குறையாத பொன் போன்ற அழகால் அரக்கர்கள் கையில் அகப்பட்டுக் கொள்வாள் என்று கருதி இவ்வுவமையைக் கையாண்டிருக்கும் கவிஞனின் கவித்திறம் காண்க.

72. சோலையில் சீதையைக் காணாது திகைத்து நிற்றல்

ஓடி வந்தனன்; சாலையில், சோலையின் உதவும்
தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள் தனைக் காணான்;
கூடு தன்னுடையது பிரிந்து, ஆர்உயிர், குறியா,
நேடி வந்து, அது கண்டிலதுஆம் என,நின்றான். (3576)

(சாலை - தவக்குடில்; தோடு - இதழ்கள்; இவர்ந்த - அமையப்பெற்ற / பொருந்திய; கூடு - உடல்கூடு; குறியா - குறித்து; நேடி - தேடி; உதவுதல் - கொணர்ந்து தருதல்)

அவ்வாறு விரைந்து ஓடி வந்தவனான இராமன், தவச்சாலையில், சோலையில், தான் சீதாதேவியைக் காணதவனாகத் திகைத்து நின்றான்.

இது எதைப் போல இருந்தது என்றால், தன்னுடைய கூட்டை விட்டுப் பிரிந்து சென்ற ஓர் உயிர், அவ்வேலை முடிந்ததும், மீண்டும் தனது உயிரைக் குறியாகக் கொண்டு தேடி வந்த போது, அது அவ்விடத்தில் இல்லாது போன போது ஒருவன் எவ்வளவு திகைப்புறுவானோ, அதுபோலத் திகைத்து நின்றான்.

இங்கே, ''சாலையின் சோலையில் காணான்'' என்று கவிஞன் கூறியிருப்பது நினைவிற்கொள்ளத் தக்கது. காரணம், இராவணன் சீதையைப் பர்ணசாலையோடு தூக்கிச் சென்றிருக்கிறான் என்று முன்பும் கூறியதற்கேற்ப, இங்கு ஓடி வந்த இராமன், பர்ணசாலையோடு சீதையையும் காணான் என்ற பொருள் தொனிக்கும்படி கூறியது காண்க. இராமனை உயிர் என்றும் சீதையை உடல் என்றும் கம்பன் காப்பியப்போக்கில் பல இடங்களிலும் கூறுவது காண்க. சீதையைப் பிரிந்த இராமபிரானுக்கு, உடலைப் பிரிந்த உயிர் உவமை. இறுதி இரண்டு அடிகளும் ''கூடு விட்டுக் கூடு பாய்தல்'' என்ற யோகியரின் தன்மையை மனத்துட் கொண்டு கூறியதாம். பிரிந்த உயிர், தனது உடலைத் தேடி அலையும் என்பதும் சாத்திரக் கொள்கை என்பதாம்.

தன் உடம்பை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி விட்டு, வேறு உடம்பில் புகுந்து ஒரு காரியம் ஆற்றுதலும், அக்காரியம் நிறைவேறியபின் தன் உடம்பு வைத்திருந்த இடத்தை அடையாளம் கண்டு தேடி வந்து, அவ்வுடம்பிற்குள் புகுந்து கொள்ளுதலும் யோகியர்க்கு இயல்பான கூடுவிட்டுக்கூடு பாய்தல் என்ற கலை. மூலன் என்ற ஓர் இடையன் மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பாராத வகையில் இறந்து விட்டான். மாடுகள் அவனைச்சுற்றி நின்று கதறின. அங்கு வந்த ஒரு யோகி இதனைக் கண்டு மனம் பொறாதவராகி, தனது உடம்பை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்துவிட்டு, அவ்விடையனின் உடம்பில் புகுந்து கொண்டு, உயிர் பெற்று எழுந்து அவற்றின் துயர் போக்கி அம்மாடுகளைக் கொண்டு சேர்த்துப் பின், தான் தன் உடம்பை வைத்திருந்த இடத்தைக் குறியாகத் தேடிக் கொண்டு வந்து பார்க்க, அவ்விடத்தில் தன் உடம்பு இல்லாது போகவே திகைத்து நின்று, ''சரி, இதுவும் ஈசன் செயல்'' என்று கருதி, அவ்விடத்திலேயே நின்று நானூறு கவிதைகள் பாடினார் என்கிறது பெரிய புராணம். மூலன் இடையனுக்கு உயிர் தந்து உதவியவர் திருமூலர், அவர் இயற்றிய நூல் திருமூலம் என்பதும் அறிக. இது போன்று திருவண்ணாமலையில் அருணகிரிநாதர் கிளியாகக் கூடு விட்டுக் கூடு பாய்ந்த கதையும் எல்லோரும் அறிந்ததொன்றே.

73. கைத்த சிந்தையன், கனங்குழை அணங்கினைக் காணான்
உய்த்து வாழ்தர வேறு ஒரு பொருள் இலான்; உதவ
வைத்த மாநிதி, மண்ணொடும் மறைத்தன, வாங்கிப்
பொய்த்துளோர் கொள, திகைத்து நின்றாதுணையும்போன்றான். (3577)

(குழை - காதணி; கைத்த - வெறுத்த; உய்த்து - அனுபவித்து; பொய்த்துளோர் - வஞ்சகர் / கள்ளர்; வாங்கி - தோண்டி எடுத்து)

கனத்த காதணிகளை அணிந்தவளாகிய சீதையை அவ்விடத்தில் காணாது, வாழ்க்கையே வெறுத்துப் போன மனத்தை உடையவனான இராமன், திகைத்து நின்றான். யாரைப் போல? தனது பிற்காலத்தில் வலிமையிழந்த முதுமையில் உதவும் பொருட்டு, அனுபவித்து வாழ்வதற்காக, நிலம், மாடு போன்ற வேறு ஒரு பொருளும் இல்லாதவன் ஒருவன், மட்பாண்டத்துள் தனது எல்லாப் பெரும் செல்லவத்தையும் போட்டு, அதைப் புதைத்து வைத்திருக்க, அவனுக்குத் தெரியாமல், சில கள்ளர்களும், வஞ்சகர்களும், அம்மண்பாத்திரத்தைத் தோண்டி எடுத்துச் சென்றதைக் கண்டவன் எவ்வாறு திகைத்து நிற்பானோ, அதுபோல இராமனும் திகைத்து நின்றான்.

இராமன் சீதையுடன் திருமணமாகி அயோத்தியில் வாழ்ந்தது பன்னிரண்டு ஆண்டுகள்தாம். இன்னும் அனுபவிக்க வேண்டியது நிறைய இருப்பதனால் அவளைப் பர்ணசாலையில் பத்திரப்படுத்தி இலக்குவனைக் காவல் வைத்துவிட்டுச் சென்றான். ஆனால் வஞ்சகனாகிய இராவணன், இலக்குவனை ஏமாற்றி, மட்பாண்டமாகிய பர்ணசாலையோடு, செல்வமாகிய சீதையைத் தோண்டி எடுத்துக் கொண்டு சென்று விட்டான். அதைக் கண்டு இராமன் செய்வதறியாது திகைத்து நின்றான் என்று விரிந்த பொருள் கொள்ள வேண்டும். செல்வத்திற்குரிய திருமகளான சீதாதேவியை, இங்கு செல்வமாகவே உவமித்திருக்கும் நயம் உணர்ந்து இன்புறற்குரியது. புதையலைத் தோண்டி எடுத்துச் செல்பவர்கள் மட்பாண்டத்துடனேயே எடுத்துச் செல்வர். அது போலவே இராவணனும் சீதையைப் பர்ணசாலையோடு தோண்டி எடுத்துச் சென்றான் என்று நிறுவுவதில் கவிஞர் உறுதியாக இருப்பது, இவ்வுவமையால் தெரியவருவது காண்க.

74. உலகம் உற்ற நிலைம்

மண் சுழன்றது; மால்வரை சுழன்றது; மதியோர்
எண் சுழன்றது; சுழன்ற, அவ் எறிகடல் ஏழும்;
விண் சுழன்றது; வேதமும் சுழன்றது; விரிஞ்சன்
கண் சுழன்றது; சுழன்றது, கதிரொடு மதியும். (3578)

(மண் - பூமி; மால்வரை - பெரியமலை; மதி - அறிவு; எண் - சிந்தனை; எறி - தாக்கும்; விரிஞ்சன் - பிரமன்; கடல்ஏழு - சப்த சாகரங்கள்)

அவ்வாறு திகைத்து நின்ற இராமபிரான் எல்லாம் வல்ல எம்பெருமானின் திருஅவதாரம். எனவே அவன் திகைத்ததால், இந்த பூமியே சுழலலாயிற்று, பெரிய மலைகள் எல்லாம் நிலை குலைந்தன; பேரறிவாளர்களின் எண்ணங்கள் தடுமாறலாயின; அந்த அலைகள் மோதும் ஏழு கடல்களும் தம்முள் சுழற்சி கொண்டு கொந்தளித்தன;

விண்ணுலகமே அதிர்ந்து தத்தளித்தது. என்றும் நிலை மாறாத வேதங்கள் கூட மாறுபட்டுக் குலைந்து போயின; பிரமதேவனின் எட்டுக் கண்களும் நிலைபெறாது சுழலலாயின; சூரியனோடு சந்திரனும் சுற்றி வரலானான்.

சுழலுதற்கு இயலாத ஒலிவடிவாகிய வேதம் கூடச் சுழன்றது என்றது இராமபிரானின் திகைப்பின் மிகுதி குறிக்க என்க.

75. ''அறத்தைச் சீறும்கொல்? அருளையே சீறும்கொல்? அமரர்
திறத்தைச் சீறும்கொல்? முனிவரைச் சீறும்கொல்? தீயோர்
மறத்தைச்சீறும்கொல்? ''என்கொலோ முடிவு?''என்று, மறையின்
நிறத்தைச் சீறும்கொல் நெடுந்தகையோன்?'' என, நடுங்கா. (3579)

(நெடுந்தகை - பெரும்பண்பினன்; சீறுதல் - கோபித்தல்; திறம் - கூட்டம்; மறம் - பாவச்செயல்; நிறம் - உயர்நிலை / கருத்து / இயல்பு / குணம் / தன்மை; நடுங்கா - நடுங்கி)

பெருமைக் குணம் கொண்டவனான இராமபிரான், தன் மனைவி சீதாதேவி அரக்கனால் கவர்ந்து கொண்டு செல்லும் போது, அதைப் பார்த்துக்கொண்டு வாளாநின்றிருந்த, தருமதேவதையைக்கோபிப்பானா? அருள் சக்தியின் மீது சீறிப் பாய்வானா? தேவர்களுக்கு உதவுவதற்காகத் தான் அவதாரம் எடுத்து வந்திருந்தும், அவர்களும் தனக்கு உதவி, இராவணனைத் தடுக்காததால் தேவர்கள் கூட்டத்தின் மீது சினம் கொள்ளுவானா? தவம் செய்யும் முனிவர்களை எல்லாம் வெகுளுவானா? இவர்களை யெல்லாம் விடுத்து, நேரே தீமை செய்த தீய பண்புகளே வாய்க்கப் பெற்ற அரக்கர்களின் பாவச் செயலைக் கண்டு தண்டிப்பானா? ''அறம் வெல்லும், பாவம் தோற்கும்'' என்ற உயர் நிலைக் கருத்தைக் கொண்ட வேதங்களின் தன்மையைக் கோபிப்பானா? என ஒன்றும் அறியாது, உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் நடுங்கலாயின.

தரும தேவதை தன் மெய் வலியாலும் அருட்சக்தி தன் கருணை மனத்தாலும், தேவர்கள் தம் சாபவலிமையாலும், முனிவர்கள் தம் தவவலியாலும்இராவணனைத்தடுத்து நிறுத்தியிருக்க முடியும். தேவர்கள் காரியமாக அவதாரம் செய்திருக்கின்ற தனக்கு, அவர்கள் தம் உயரிய சக்தியாலும் இராவணனைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். இவர்களெல்லாம் இராமனுக்கு உற்றுழி உதவவில்லை. எனவே இவர்களையெல்லாம் இராமபிரான் என்ன செய்வான்? என்பது புரியாது உலகப் பொருட்கள் அனைத்தும் கதிகலங்கி நின்றன என்பதாம். தனக்குத் தீங்கிழைத்த பகைவர்களாகிய அரக்கர்களைச் சீறுவதில் ஒன்றும் வியப்பில்லை என்பதையும் உணர்க.

76. நீலமேனி அந்நெடியவன் மன நிலை திரிய,
மூல காரணத்தவனொடும் உலகெலாம் முற்றும்
காலம்ஆம் என, கடையிடு கணிக்க அரும்பொருள்கள்
மேல கீழுற, கீழன மேலுறும் வேலை. (3580)

(திரிய - தடுமாற \ மாறுபட; மூலகாரணத்தவன் - பிரமன்; உலகெலாம் முற்றும் காலம் - ஊழிக்காலம்; கடையிடுதல் - வரம்பு கட்டுதல்; கணக்கரும் - அளவற்ற; வேலை - வேளை \ நேரம்.)

நீலநிற மேனியை உடைய பெருந்தகையனான இராமபிரான் மனம் தளர்ந்து, நிலை தடுமாறியதால், இவ்வுலகத்தைப் படைப்பதற்கு மூலகாரணனாக இருக்கின்ற பிரமதேவனோடு, இவ்வுலகமெல்லாம் முழுவதும் அழிந்து போகக் கூடிய பிரளய காலம் தான் இது என்று கூறும்படி, கணக்கிட்டு வரம்பு கட்ட முடியாத அளவற்ற சர, அசரப் பொருள்கள் எல்லாம், மேலே உள்ளன கீழாகவும், கீழே இருப்பன மேலாகவும் ஆகின்ற சமயத்தில் - பாடல் தொடர்கிறது.

இராமபிரான் மனம் தடுமாறியதால் உலகத்திலுள்ள சர அசரப் பொருள்களும் தலை கீழாயின என்பதால், அப்பொருள்களில் எல்லாம், எப்பெருமான் நீக்கமற, உள்ளும் புறமும் நிறைந்திருக்கிறான் என்பது பெறப்படுகிறது. ஊழி முடிவில், உலகத்தோடு, உலகைப் படைத்த மூலகாரணனான பிரமதேவனும் அழிவான் என்பதும், திருமால் மட்டுமே உலகத்தோடு அழியாது நிலைத்து நிற்பவன் என்பதும் கருதுக. 'மேல் கீழுற, கீழன மேலஉற' என்பது, வானம் கீழே வந்து படியவும், மண்ணுலகு மேலே செல்லவும் என்று பொருள்படும். இந்நிலையைச் சற்றுக் கற்பனையில் நினைத்துப் பாருங்கள்.

77. இலக்குவன், "தேர்த் தடத்தைத் தொடர்ந்து செல்வோம்" எனல்

"தேரின் ஆழியும் தெரிந்தனம் தீண்டுதல் அஞ்சிப்
பாரினோடு கொண்டு அகழ்ந்ததும் பார்த்தனம் பயன் இன்று
ஒரும் தன்மை ஈது என் என்பது, உரன் இலாதவர்போல்
தூரம் போதல்முன் தொடர்தும்" என்று, இளையவன் தொழலும். (3581)

(ஆழி - சக்கரம்; பார் - தரை; உரன் - வலிமை; ஓர்தல் - சிந்தித்தல்) (குளகப் பாடல்)

"தேரின் சக்கரத்தின் சுவடுகள் இதோ தெரிகிறது; சீதாதேவியைத் தொட்டுத் தூக்குவதற்கு அஞ்சி, நிலத்தோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு சென்றதும் தெரிகிறது. வலிமையற்றவர்கள் போல், பயன் இல்லாமல் இது எவ்வாறு நடந்தது என்று சிந்தித்துக்கொண்டிருப்பது என்பது என்ன இது? அவன் வெகுதூரம் செல்லுவதற்கு முன்பு, அவனைப் பின் தொடர்வோம், வாருங்கள்" என்று இளையவனான இலக்குவன், இராமபிரானை வணங்கியதும் - பாடல் தொடர்கிறது.

"ஆழி" என்பது தேர்த்தடத்தைக் குறித்தது. நிலமும் சேர்ந்து பெயர்க்கப்பட்டிருந்ததால், அரக்கன் சீதையைத் தொட்டுத் தூக்காது சென்றிருக்கிறான். அவ்வாறு தொட்டுத் தூக்குவதற்கு அவன்

அஞ்சியிருக்கிறான் என்று இலக்குவன் உய்த்துணர்ந்து கூறினான் என்க. "அவன் நீண்டதூரம் சென்று சேர்வதற்குள் விரைவில் அவனைப் பின்தொடர்ந்து போய் அவனைப்பிடிக்கும் வலிமையற்றவர்களா நாம்? ஏன் இவ்வாறு பயனில்லாது, சென்றதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்?" என்று இலக்குவன் கூறினான் என்க. சீதையை மீட்கக் கூடிய அடையாளங்களும், ஆதாரங்களும் இருக்கின்றன. எனவே பின் தொடர்வோம் என்று இலக்குவன் நன்கு எண்ணிய பிறகே கூறினான் என்க. அரக்கனுடைய தேர் வானத்தில் ஏறுவதன்முன், தரையில் நெடுந்தூரம் ஓடியிருப்பது புலனாகிறது.

78. இராமன் உடன்படுதல்

"ஆம் அதே இனி அமைவது" என்று, அமலனும், மெய்யில்
தாம வார்கணைப் புட்டிலும் முதலிய தாங்கி,
வாம மால்வரை மரன் இவை மடிதர, வயவர்,
பூமிமேல் அவன்தேர் சென்ற நெடுநெறி போனார். (3582)

(அமலன் - குற்றமற்றவன் \ பரிசுத்தன்; மெய் - உடம்பு; தாமம் - ஒளி; வார் - நீண்ட; வயவர் - வீரர்; வாமம் - அழகு; மால் - பெரிய; வரை - மலைகள்; மரன் - மரம்; மடிதரல்; சாய்தல் \ ஒடிதல்; நெறி - வழி; புட்டில் - அம்பறாத்தூணி)

குற்றமற்றவனும், பரிசுத்தமானவனுமான இராமபிரான் இலக்குவனை நோக்கி, "ஆம்; நீ சொன்னபடி தான் செய்ய வேண்டும்" என்று உடன்பட்டு, வீரர்கள் இருவரும், தமது உடம்பில் ஒளிமிக்க, நீண்ட, அம்பறாத் தூணிகள் முதலிய படைக்கலன்களைத் தாங்கிக் கொண்டு, அழகிய பெரிய மலைகளும், மரங்களும், மற்றெல்லாம் சிதைந்து போகும்படி, நிலத்தின்மேல் அரக்கனது தேர் சென்ற நீண்ட வழியில் தொடர்ந்து சென்றார்கள்.

அவர்கள் சென்ற வேகத்தில், வழியெல்லாம் இருந்த மலைகளும் மரங்களும் சிதைந்து போயின என்க. முன்பு இராவணன் சென்ற வழியெல்லாம் இருந்த மலைகளும், மரங்களும் சிதைந்து இருந்ததனால் அவன் தேர் சென்ற வழியைத் தொடர்ந்து வீரர்கள் இருவரும் சென்றனர் என்பதும் இங்கு பொருந்தி வருதல் காண்க.

79. தேர்ச் சுவடு மறைந்து போதல்

மண்ணின்மேல் அவன் தேர் சென்ற சுவடு எலாம் மாய்ந்து,
விண்ணின் ஓங்கியது ஒரு நிலை; மெய்உற வெந்த
புண்ணினூடு உறுவேல் என, மனம் மிகப் புழுங்கி,
எண்ணி, "நாம் இனிச் செய்வது என்? இளவலே!" என்றான். (3583)

(மாய்தல் - முடிவுறுதல்; ஓங்கியது - உயர்ந்து சென்ற; புழுங்கி - வருந்தி; நிலை - இடம்; எண்ணின் - ஆலோசிக்குமிடத்து; சுவடு - தடம் \ அடையாளம் \ பதிவுகள்)

தரையின் மீது ஓடிச் சென்ற அவ்வரக்கனது தேரின் சுவடுகள் ஓரிடத்தில் முடிந்து போயின; அங்கிருந்து அத்தேர் விண்ணின் மேல் உயர்ந்து சென்றதற்கான அறிகுறிகள் தென்பட்டன. உடம்பில் மிக்க வெந்த புண்ணின் உள்ளே, வேலினைப் பாய்ச்சியது போல், இராமன் மனம் மிகத் துன்புற்று, இலக்குவனை நோக்கி, "தம்பி! இனி நாம் ஆலாசித்துச் செய்ய வேண்டுவது என்ன?" என்று கேட்டான்.

இப்பொழுது ஆகாய விமானங்கள் செல்வது போல, அக்காலத்தில் இராவணன் தேர், சிறிது தூரம் தரையில் ஊர்ந்து சென்று பின் ஆகாயத்தில் எழுந்திருக்கிறது என்பது புலனாகிறது. சீதையை அரக்கன் கவர்ந்து சென்றது வெந்த புண்; தரை வழி மறைந்தது வேல் நுழைவது; "வெந்ததோர் புண்ணின் கண், வேல் கொண்டு நுழைப்பான் போல்" என்பது கலித்தொகை; ஏற்கெனவே இருக்கும் வருத்தம் மிகும் பொழுது அதைச் சுட்டுவதற்கு இவ்வுவமை தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகக் கையாளப்பட்டிருக்கிறது. கம்பனும் இக்காப்பியத்தில் பல இடங்களில் கையாண்டிருப்பதை உணரலாம்.

80. இலக்குவன், இராமனுக்கு அமைதி கூறுதல்

"தெற்கு நோக்கியது எனும் பொருள் தெரிந்தது, அத்திண் தேர்;
மற்கு நோக்கிய திரள் புயத்து அண்ணலே! வானம்,
விற்கு நோக்கிய பகழியின் நெடிது அன்று; விம்மி,
நிற்கும் நோக்கு இது என் பயத்தது?" என, இளையவன் நேர்ந்தான். (3584)

(மற்கு - மற்போருக்கு \ மல்யுத்தத்துக்கு; பொருள் - உண்மை; பகழி - அம்பு; நெடிது - நீண்ட தொலைவு; விம்மி - கலங்கி; நோக்கு - சிந்தனை; பயத்தது - பயன் தரவல்லது; திரள் - பூரித்த \ பருத்த \ திரண்ட; நேர்தல் - கூறுதல்)

"மற்போரை எதிர்பார்த்து நிற்கும் வலிய தோள்களையுடைய பெருமைக்குரியவனே! அந்த வலிய தேர் தெற்குத் திசை நோக்கிச் சென்றுளது என்ற உண்மை தெரியவருகிறது. எனவே, அவன் சென்றிருக்கக் கூடிய ஆகாயம், நமது வில்லில் இருந்து செல்லும் அம்பு சென்று தாக்குதற்குரியதல்லாத நெடுந்தூரத்தில் உள்ளது அன்று. நமது அம்பால் நிச்சயமாகத் தாக்க முடியும். எனவே இவ்வாறு துன்புற்றுச் செயலற்று நிற்பது எத்தகைய பயனைத் தந்து விடும்? எனவே கலங்காது, மேல் ஆகவேண்டியவைகளைப் பார்ப்போம்" என்று இளையவனான இலக்குவன், கலங்கி நின்ற இராமனுக்கு, ஆறுதலும், ஊக்கமும், தன்னம்பிக்கையும் ஊட்டிக் கூறினான்.

நின் அம்பு அவனைச் சென்று தாக்கி, தடுத்து நிறுத்தக் கூடிய வல்லமை படைத்தது என்று ஊக்கமும், கலக்கமுற்று நின்று விடாமல், தெற்கு நோக்கிச் செல்லுவதே முறை என்று ஆறுதலும், அம்பின் வேகத்தினும், ஆகாயம் பெரிதோ என்று தன்னம்பிக்கையும், ஊட்டினான் என்க.

81. அறுந்து கிடக்கும் வீணைக் கொடியைக் காணுதல்

"ஆகும்; அன்னதே கருமம்" என்று, அத்திசை நோக்கி
ஏகி, யோசனை இரண்டு சென்றார்; இடை எதிர்ந்தார்,
மாகமால் வரை கால் பொர மறிந்தது மான,
பாக வீணையின் கொடி ஒன்று கிடந்தது பார்மேல். (3585)

(இடை - நடுவழியில்; மாகம் - ஆகாயம்; வரை - மூங்கில் \ மலை; கால் - காற்று; பொர - மோத \ தாக்க; மறிந்தது - ஒடிந்து கிடத்தல்; மான - போல; பார் - தரை; பாகு - அழகு; எதிர்ந்தல் - காணுதல்; கருமம் - செயல்; பாக - துண்டிக்கப்பட்ட; யோசனை - பத்து மைல் தூரம்)

"ஆம்; அதுவே இப்போது நாம் செய்யத்தக்க செயலாகும்;" என்று இராமனும் அதற்கு உடன்பட, இருவரும் அந்தத் தெற்குத் திசைநோக்கி இரண்டு யோசனை தூரம் சென்றார்கள். நடுவழியில், ஆகாயமளாவிய பெரிய மூங்கில் ஒன்று, காற்றுத் தாக்கியதால் கீழே விழுந்தது போல, துண்டுபட்டுப் போன அழகிய வீணையின் உருவம் வரையப்பட்ட கொடி ஒன்று, மண்ணில் கிடப்பதைக் கண்டார்கள்.

இராவணன் தான் இசையின்மேல் கொண்ட அதீதக் காதலினால், வீணையையே தன் கொடியாகக் கொண்டான் என்பதாம்.

82. கொடியைக் கண்ட இருவரின் நிலை

கண்டு, "கண்டகரோடும், அக்காரிகை பொருட்டால்,
அண்டர் ஆதியர்க்கு ஆர்அமர் விளைந்தது?" என்று அயிர்த்தார்;
துண்ட வாளினின் சுடர்க் கொடி துணிந்தது என்று உணரா,
புண்டரீகக் கண் புனல்வர, புரவலன் புகல்வான்; (3586)

(காரிகை - சீதை \ அழகு; பொருட்டு - காரணம்; கண்டகர் - கொடியவர் \ பாவிகள் \ பகைவர்; கண்டகம் - முள்; அமர் - போர்; அயிர்த்தல் - ஐயுறுதல்; துண்டம் - மூக்கு \ அலகு; புண்டரீகம் - செந்தாமரை மலர்; அண்டர் - தேவர்; புரவலன் - காப்பவன்; விளைந்தது - நிகழ்ந்தது; உணரா - உணர்ந்து)

அறுபட்டுக்கிடந்த அந்த வீணைக் கொடியைக் கண்டு, "பகைவர்களாகிய, முள் போன்று கொடியவர்களான அரக்கர்களுடன், இந்த அழகு மிக்க சீதையின் காரணமாக, தேவர்கள் முதலியவர்களுக்குப் பெரும் போர் ஒன்று நிகழ்ந்திருக்கிறது போலும்" என்று இருவரும் ஐயுற்றனர். பின்னர் இராமன், அந்தக் கொடியை நன்கு உற்றுப் பார்த்து, இது ஆயுதங்களால் வெட்டுப்படாமல் ஒரு பறவையின் மூக்கு என்னும் வாளினால், ஒளிபொருந்திய கொடி துண்டுபட்டிருக்கிறது என்பதை அறிந்தான்; உடனே அது தனது சிறிய தந்தை சடாயுவாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிய மாத்திரத்தில், தனது செந்தாமரை போலும் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்க. உலகில் உள்ள எல்லோரையும் காப்பவனாகிய இராமபிரான் பின்வருமாறு கூறலானான்.

83. "நோக்கினால், ஐயஸ நொய்து இவண் எய்திய நுந்தை
முக்கினால் இது முறிந்தமை முடிந்ததால்; மொய்ம்பின்
தாக்கினான்; நடு அடுத்தது தெரிகிலம்; தமியன்;
யாக்கை தேம்பிடும்; எண் அரும் பருவங்கள் இறந்தான்" (3587)

(நோக்கு - கூரிய பார்வை; நொய்து - விரைந்து; தமியன் - தனியன்; யாக்கை - உடம்பு; தேம்புதல் - மெலிதல்; பருவங்கள் - ஆண்டுகள்; இறத்தல் -கடத்தல் \ கழித்தல்; மொய்ம்பு - வலிமை; நடு - இடையில்; அடுத்தது - நிகழ்ந்தது \ நேர்ந்தது)

"ஐயனேஸ தனது கூரிய பார்வையினால், அரக்கன் சீதையைக் கவர்ந்து செல்லுவதைக் கண்டுவிட்ட உன் தந்தையாகிய சடாயு, இங்கு விரைந்து வந்து, தனது மூக்கினால், தனது வலிமை முழுதும் சேர்த்து அவனைத் தாக்கியிருக்கிறார்; அதனால் இந்த வீணைக்கொடி முறிந்துபோய்க் கீழே விழுந்திருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் அதன் பின் என்ன நடந்தது என்பது தெரியவில்லையேஸ பாவம் சடாயு வேறு எந்தத் துணையும் இல்லாமல் தனியாக இருப்பவர்; உடல் மெலிந்தவர்; கணக்கற்ற ஆண்டுகள் கழித்தவர்" என்று இராமன் இலக்குவனை நோக்கிக் கூறினான்.

சடாயு தொலைவிலுள்ளவற்றையும் நோக்கி அறியக்கூடிய கூர்மையான கண்பார்வையுள்ளவன் "சேய்மையின் நோக்குறும் சிறுகணான்" என்றும், "சேக்கையில், பார்ப்பைப் பார்க்கும் பறவையில் பார்க்கின்றான்" என்றும் முன்பே கூறியிருத்தலால், சீதையை இராவணன் அபகரித்துச் சென்றதைத் தன் கூரிய கண்களால நோக்கி, விரைந்து வந்து, தன் வலிமையினால் அரக்கனுடன் போரிட்டுத் தனது மூக்கு எனும் வாளால், அவனது வீணைக் கொடியை அறுத்திருக்கிறான் என்று இராமன் உய்த்துணர்ந்து, இலக்குவனுக்குக் கூறினான் என்க. சடாயுவின் ஆயுளைக் கணக்கிட்டறிய முடியாத முதியவன் என்ற பொருள் தொனிக்க, "எண்ணரும் பருவங்கள் இறந்தான்" என்றார். இறந்தான் என்பது கழித்தான் என்னும் பொருளில் வந்தது.

84. இலக்குவன், சடாயு செயலைப் போற்றுதல்

"நன்று சாலவும்; நடுக்கஅரும் மிடுக்கினன்; நாமும்,
சென்றுகூடல்ஆம்; பொழுது எலாம் தடுப்பது திடனால்;
வென்று மீட்கினும் மீட்குமால்; வேறுற எண்ணி,
நின்று தாழ்த்து ஒரு பயன் இலை" என்றலும், நெடியோன். (3588)

(சாலவும் - மிகவும்; மிடுக்கு - வலிமை; திடன் - திடம் \ திண்ணம் \ உறுதி; கூடுதல் - சேருதல்; நெடியோன் - இராமபிரான்) (குளகப்பாடல்)

"அவ்வாறு சடாயு செய்திருந்தால் மிகவும் நல்லதாயிற்று. சடாயு எதற்கும் அஞ்சாத வலிமை பெற்றவன்; அவனுக்குத் துணையாக நாமும் சென்று அவனுடன் சேர்ந்து கொள்ளலாம்; அவன் எப்படியும் இன்று நாள் முழுவதும் அவனுடன் போர் செய்து அவனை மேலே செல்லவிடாமல் தடுத்துக்

கொண்டிருப்பான் என்பது உறுதி. ஒருவேளை, நாம் போய்ச்சேருவதற்குள், அவன் அவ் அரக்கனை வென்று, நம் சீதா தேவியை அவனிடமிருந்து மீட்டிருந்தாலும் மீட்டிருக்கலாம். இங்கே நின்று கொண்டு பலவாறாக எண்ணிக்கொண்டு, காலம் தாழ்த்திக் கொண்டிருத்தலால் ஒரு பயனும் விளையப்போவதில்லை; வாருங்கள் போகலாம்" என்று இலக்குவன் கூறியவுடன், உயர்ந்தவனாகிய இராமபிரான் - பாடல் தொடர்கிறது.

மீண்டும் இலக்குவன், இராமனைக் காலந்தாழ்த்தாது, நாம் ஆற்றவேண்டிய பணிகள் என்ன என்பதைச் சொல்லும் பொருட்டு, அவனை விரைவாகச் செல்லத்தூண்டுகிறான் என்பதாம்.

85. இருவரும், அரக்கனது வில் முறிந்து கிடப்பதைக் காணுதல்

"தொடர்வதே நலமாம்" என, படிமிசைச் சுற்றிப்
படரும்கால் என, கறங்கு என, செல்லுவார் பார்த்தார்;
மிடல்கொள் வெஞ்சிலை, விண்இடு வில் முறிந்தென்ன,
கடலின்மாடு உயர்திரை என, கிடந்தது கண்டார். (3589)

(படி - பூமி; படரும் - செல்லும்; கால் - காற்று; கறங்கு - காற்றாடி பம்பரம்; மிடல் - வலிமை; வெம் - கொடிய; திரை - அலை; விண்ணிடு வில் - இந்திர வில்; தொடர்வது - பின்பற்றிச் செல்லுவது)

"அவ்வரக்கன் போன வழியைத் தொடர்ந்து பின்பற்றிப் போதலே நல்லதாகும்" என்று இராமனும் உடன்பட்டு. முதலில் வீணைக்கொடி அறுந்துகிடந்ததைக் கண்டதால் இன்னும் என்னென்ன கிடக்குமோ என்று எண்ணி, தரையை நன்கு சுற்றும் முற்றும் உற்றுப்பார்த்துக்கொண்டும், காற்று விரைந்து செல்வது போலவும், காற்றாடி சுழன்றுகொண்டு போவது போலவும் சென்றனர். செல்லும் வழியில், வலிமை பொருந்திய கொடிய வில் ஒன்று, ஆகாயத்தில் தோன்றும் இந்திர வில் முறிந்து கிடப்பது போலவும், கடலின் கண் உள்ள உயர்ந்த அலையினைப் போலவும், கிடந்ததைப் பார்த்தார்கள்.

இலக்குவனும் இராமனும் சுற்றும் முற்றிலும் துருவித்துருவிப் பார்த்துக் கொண்டு சென்றதற்குக் காற்றும், காற்றாடியும் உவமைகள். அதுபோல அரக்கனின் வில் முறிந்து கிடந்தமைக்கு வானவில்லும், கடல் அலையும் உவமைகள். காற்று எப்போதும் வீசிக்கொண்டிருக்கும் என்பதைக் குறித்து 'படரும் கால்' என்றார். காற்றுக்கு 'சதாகதி' என்று ஒரு வடமொழிப் பெயரும் உண்டு. வானவில் என்பது வானில் மேகத்தில், ஞாயிற்றுக்கு எதிர்த்திசையில், பல வண்ணங்களில் தோன்றும் வில் போன்ற ஒரு உருவம் என்க. இது மேகத்தை வாகனமாக உடைய இந்திரனுக்குரியதால் இந்திர வில் என்றும் வழங்கப்பெறும்.

86. இராமன், சடாயுவின் திறமையைப் பாராட்டுதல்

"சிலைகிடந்ததால், இலக்குவ! தேவர் நீர் கடைந்த
மலை கிடந்தென வலியது வடிவினால்; மதியின்

கலை கிடந்தன்ன காட்சியது; இது கடித்து ஒடித்தான்
நிலை கிடந்தவா நோக்கு!'' என, நோக்கினன் நின்றான். (3590)

(சிலை - வில்; நீர் - கடல் \ பாற்கடல்; மலை - மந்தரமலை; நோக்குதல் - எண்ணி உணர்தல்; வடிவு - உருவம்; காட்சி - தோற்றம்)

“இலக்குவனே! இங்கே கிடக்கின்ற இந்த வில், தேவர்கள் பாற்கடலைக் கடைந்த பொழுது உதவிய மந்தரமலை போன்று வலிமையுடையது; உருவத்தில், பிறைச்சந்திரனைப்போலத் தோற்றமுடையது, இத்தகைய விலலைத் தன் மூக்கால்விரைவில் கடித்து ஒடித்துப்போட்ட சடாயுவின் வலிமையை நீ நன்கு எண்ணிப் பார்ப்பாயாக” என்று கூறி, அச்சிலையையே உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றான் இராமன்.

அரக்கனது வில்லின் வலிமைக்கு மந்தர மலையும், வளைந்த தோற்றத்திற்கு எட்டாம் நாள் பிறைச்சந்திரனும் உவமைகள். சடாயுவின் போராற்றலைப் பாராட்டினான் இராமன் என்க.

87. சூலம், அம்பறாத்தூணி முதலியனவும் காணுதல்

நின்று, பின்னரும் நெடு நெறி கடந்து. உற நிமிரச்
சென்று நோக்கினர்; திரி சிகைக் கொடு நெடுஞ் சூலம்
ஒன்று, பல் கணை மழைஉறு புட்டிலோடு இரண்டு
குன்று போல்அவண் கிடந்த கண்டு, அதிசயம் கொண்டார். (3591)

(நெடு - நீண்ட; நெறி - வழி; திரிசிகை - மூன்றுதலைகள்; புட்டில் - அம்பறாத்தூணி; நிமிர்தல் - விரைதல்; அதிசயம் - வியப்பு)

வில் இற்றுக் கிடந்ததைப் பார்த்துச் சற்று நின்றிருந்த இருவரும், பின்னர், நீண்ட வழியைத் தொடர்ந்து தெற்குத்திசையில் விரைந்து சென்றனர், அங்கே, ஓரிடத்தில் மூன்று தலைகளையுடைய வலிய, கொடிய, நெடிய சூலம் ஒன்றும், பல கணைகளை மழைத்தாரைபோல உடைய இரண்டு அம்பறாத்தூணிகளும் மலை போலக் குவிந்து கிடப்பதைக் கண்டு வியப்பு மேற்கொண்டனர்.

அம்பின் மிகுதியைக்குறிக்க “கணைமழைஉறு புட்டில்” என்றார். அம்பறாத்தூணியின் அளவுகுறிக்க “குன்று போல்வன” என்றார். இராவணன் இரண்டு புட்டில்கள் நிறைய அம்புகளை வைத்திருந்தான் என்பதும் பெறப்படுகிறது.

88. அரக்கனது கவசத்தைக் காணுதல்

மறித்தும் சென்றனர்; வானிடை வயங்குற வழங்கி
எறிக்கும் சோதிகள் யாவையும் தொக்கன எனலாய்,
நெறிக் கொள் கானகம் மறைதர, நிருதர்கோன் நெஞ்சின்.
பறித்து வீசிய, கவசமும் கிடந்தது பார்த்தார். (3592)

(மறித்தும் - மீண்டும்; வயங்குதல் - விளங்குதல்; வழங்குதல் - இயங்குதல்; எறித்தல் - ஒளி வீசுதல்; தொக்கல் - கூடுதல் , ஓரிடத்தில் சேர்தல்; மறை தர - மறையும் படி; நிருதர்கோன் - அரக்கர்தலைவன் , இராவணன்)

மீண்டும் இருவரும் தெற்கு நோக்கிச் சென்றனர் வானத்தில் விளக்கமுறும்படி இயங்கி ஒளி வீசுகின்ற சோதிகளான, சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலிய எல்லாமும் ஒரே இடத்தில் கூடியது போன்று ஒளி வீசுவதாயும அவர்கள் செல்லுகின்ற காட்டு வழியினையே மறைக்குமாறு ஒளி வீசுவதாயும் உள்ள, அரக்கர்க்கரசனாகிய இராவணன் நெஞ்சிலிருந்து சடாயுவால் பறித்து வீசப்பட்ட அவனது மார்புக்கவசமும், அங்கு கிடப்பதை இருவரும் பார்த்தனர்.

இராவணனுடைய நவமணிகள் பதிக்கப்பெற்றுப் பேரொளி வீசும் கவசத்திற்கு, "வானிடை வயங்குற வழங்கி எறிக்கும் சோதிகள் யாவையும் தொக்கன" எனவும், "நெறிக்கொள் கானகம் மறைதரவும்" என இரு உவமைகள் கூறிய நயம் உணர்க.

89. தேர், தேர்ச்சாரதி, குதிரை முதலியவைகளையும் காணுதல்

கான்கிடந்தது மறைதர, கால் வயக் கலிமாத்
தான் கிடந்தது; சாரதி கிடந்துழிச் சார்ந்தார்;
ஊன்கிடந்து ஒளிர் உதிரமும் கிடந்துளது; உலகின்
வான் கிடந்தது போல்வது கிடந்துழி வந்தார். (3593)

(வய - வலிமையுடைய; மா - குதிரைகள்; உழி - இடம்; சாரதி - தேர்ப்பாகன்; சார்தல் - அடைதல்; ஊன் - தசை; ஒளிர்தல் - விளங்குதல்; உதிரம் - இரத்தம்; உலகு - தரை \ பூமி; வான் - மேகம்; கலிமா - கடிவாளத்தை உடைய குதிரை; கால் - காற்று; கான் - காடு).

காற்றைப் போன்ற வேகமுடையனவும், வலிமையான கால்களைப் பெற்றனவும், கடிவாளங்கள் அணிந்தனவுமான தேரில் பூட்டப்பட்டிருந்த பதினாறு குதிரைகளும் இறந்து கிடந்தமையால், அந்தக் காட்டு வழியே மறைந்துபோனது, அந்த இடத்திற்கு அருகில் இராவணனின் தேர்ச்சாரதி இறந்து கிடந்தான், அந்த இடத்தையும் அடைந்தனர். அருகில் தேர்ப்பாகனதும், குதிரைகளுடையதும் தசைகளும், ஒளிரும் இரத்தமும் சிதறிக்கிடந்தன; தரையில், மேகம் வந்து படிந்தது போன்ற தன்மையுடைய தேர் அழிந்துகிடந்த இடத்தினையும் வந்து கண்டனர்.

குருதி வெள்ளம், சடாயு தன் சிறகால், இராவணனுடைய முகத்திலும், மார்பிலும், தோள்கள் மீதும் அடித்ததனாலும், மூக்கால் கொத்தியதாலும் உண்டான புண்களிலிருந்து வழிந்தது என்றும் கூறுவதுண்டு.

90. அரக்கனது குண்டலங்களைக் காணுதல்

கண்டு, அலங்கு தம் கைத்தலம் விதிர்த்தனர்; கவின் ஆர்
விண்தலம் துறந்து, இறுதியின் விரி கதிர் வெய்யோன்
மண்டலம் பல மண்ணிடைக் கிடந்தென, மணியின்
குண்டலம் பல, குலமணிப் பூண்களின் குவியல். (3594)

(இறுதி - ஊழி இறுதி \ பிரளயகாலம்; கதிர் - கிரணங்கள்; வெய்யோன் - சூரியன்; கவின்ஆர் - அழகமைந்த; குல - சிறந்த; பூண்கள் - அணிகலன்கள்; இலங்கு - ஒளி வீசுகின்ற; கைத்தலம் - கைகள்; விதிர்த்தல் - அசைத்தல்\ நடுங்குதல்; வெய்யோன் மண்டலம் - சூரிய வட்டம்)

ஊழி இறுதிக் காலத்தில், விரிந்த கிரணங்களை உடைய சூரிய மண்டலங்கள் பனிரெண்டும் அழகு அமையப்பெற்ற தங்களது விண்ணுலகை நீங்கி, மண்ணில் வந்து விழுந்து கிடப்பதைப் போல, அரக்கனின் காதுகளில் அணிந்திருந்த இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற இருபது குண்டலங்களும், சிறந்த நவமணிகளால் ஆன பேரொளியுடைய இருபது தோள்வளையமும் பத்து மணிமுடிகள் முதலான அணிகளின் குவியலும் விழுந்து கிடப்பதைக் கண்டு, இராம இலக்குவர் இருவரும் தங்களுடைய ஒளிவீசுகின்ற கைகள் வியப்பால் நடுக்கமுற நின்றனர்.

இருபது தோள்வளைகட்கும், இருபது குண்டலங்கட்கும், பத்து மணிமுடிகட்கும் ஒரு சூரியனை உவமை கூறுதல் போதாது என்று கருதி, சூரிய மண்டலங்கள் பல என்று மிகுதி கூறிய நயம் காண்க. ஊழி இறுதியில் பன்னிரண்டு சூரியர்களும் ஒன்று சேர்ந்து, ஒரேகாலத்தில் தோன்றி வெப்பக்கதிர்களை வீசுவர் என்பது புராணக் குறிப்பு; பன்னிரண்டு சூரியர்களையும் "துவாதச ஆதித்யர்" என்று வடமொழி கூறும்.

91. இராமன், பலர் வந்து சடாயுவுடன் போர் செய்ததாகக் கருதுதல்

"தோள் அணிக் குலம் பல உள; குண்டலத் தொகுதி
வாள்இமைப்பன பல உள; மணி முடி பலவால்;
நாள் அனைத்தையும் கடந்தனன், தமியன், நம்தாதை;
யாளி போல்பவர் பலர் உளர் பொருதனர்; இளையோய்!" (3595)

(குலம் - கூட்டம்; வாள் இமைத்தல் - ஒளி வீசுதல்; தொகுதி - கூட்டம்; முடி - கிரீடம் \ மகுடம்; நாள் - வாழ் நாள் \ ஆயுள்; தமியன் - தனித்தவன்; தாதை - தந்தை; பொருதனர் - போர் செய்தவர்; யாளி - சிங்கஏறு \ ஆண்சிங்கம்; குண்டலம் - காதணி; மணி - இரத்தினம்)

"தம்பி! தோள்வளைகளின் கூட்டம் மிகுதியாகக்கிடக்கின்றது. காதுகளில் அணியும் ஒளிவீசுகின்ற குண்டலங்களும் நிறையக் கிடக்கின்றன. மணிகள் பதிக்கப்பெற்ற மகுடங்களும் அநேகம் கிடக்கின்றன. எனவே மிகமிக

முதியவனும், வாழ் நாட்களையெல்லாமும் தாண்டி வாழ்ந்து கொண்டிருப்பவனும், தனியாக நிற்கின்றவனுமாகிய, நம் சிறிய தந்தை சடாயுவுடன் எதிர்த்துப்போர் புரிந்தவர்கள், ஆண்சிங்கம் போன்ற வலிமையுள்ள பலராக இருத்தல் வேண்டும்" என்று இராமன் உய்த்துணர்ந்து இலக்குவனிடம் கூறினான்.

இருபது தோள்வளைகளும், இருபது குண்டலங்களும், பத்து மகுடங்களும் சிதறிக் கிடந்தமையால் ஒன்றுக்கு மேற்பட்ட பலர், தனியவனான சடாயுவுடன் போர் செய்திருக்க வேண்டும் என்று இராமன் அனுமானித்தான் என்க. யாளி என்பது ஆளி எனவும் வழங்கப்படும். சிங்கம், யானை இவற்றின் உருவோடு, பறவைபோன்ற வலிய சிறகுகளையும் உடைய ஒரு கொடிய பிராணி என்று கூறுவர். இது இப்போது காணப்படுவதில்லை.

92. இலக்குவன், "சடாயுவுடன் போர் செய்தவன் ஒருவனே - இராவணனே" எனல்.

திருவின் நாயகன் உரைசெய, சுமித்திரை சிங்கம்,
"தருவின் நீளிய தோள் பல, தலை பல, என்றால்,
பொருது தாதையை இத்தனை நெறிக்கொடு போனான்
ஒருவனே, அவன் இராவணன் ஆம்" என உரைத்தான். (3596)

(திரு - இலக்குமி \ சீதை; நாயகன் - கணவன்; தரு - மரம்; நீளிய - நீண்ட; நெறி - வழி)

திருமகளின் அம்சமான சீதாதேவியின் கணவனான இராமபிரான் இவ்வாறு கூறவும், சுமித்திரை பெற்றெடுத்த சிங்கம் போன்றவனான இலக்குவன். "மரங்களைப்போல நீண்ட தோள்கள் பலவும், தலைகள் பலவும் சிதறிக் கிடக்கின்றன என்றால், நம் தந்தை சடாயுவுடன் போர் செய்து, அவனை இவ்வளவு தொலைவு கொண்டு வந்தவன் ஒருவனாகத்தான் இருக்கவேண்டும். அவனும் பத்துத்தலைகளும், இருபது தோள்களும் உடைய இராவணனாகவே இருக்கவேண்டும்." என்று உறுதியாகக் கூறினான்.

சீதையைப் பிரிந்ததனால் உண்டான மனக்கலக்கத்தால் இராமன் மனம் ஒரு நிலைப்படா வழி சிறந்த முடிவுகளை எடுக்க முடியவில்லை என்க. இலக்குவன் முன்பு மாய மானைப் பற்றியும், மாரீசன் வஞ்சனை ஒலி எழுப்பிய போதும், இப்போதும், தீர்க்கமாக நிகழ்வுகளை எண்ணிப்பார்த்து முடிவு எடுக்கும் நுண்ணிய அறிவுத்திட்பத்தைக் குறிப்பதற்காகத்தான் "சுமித்திரை சிங்கம்" என்றார் என்க. சிங்கம் எப்போதும் முன்னும் பின்னும் பார்த்துச் செல்லும்,, இதைச் "சிங்கநோக்கம்", "அரிமா நோக்கு", என்று கூறுவதுண்டு. அவன் இராவணன் பற்றி முன்பே கேள்வியுற்றிருக்கிறான் என்பதாலும், முன்பே வீணைக்கொடி அறுந்து கிடந்ததைக் கண்டான் என்பதாலும் அவனால் உய்த்துணர்ந்து தீர்மானிக்க முடிந்தது என்க.

93. சடாயுவை இராமன் பார்த்தல்

மடலுள் நாட்டிய தார் இளையோன் சொலை மதியா,
மிடலுள் நாட்டங்கள் தீ உக நோக்கினன் விரைவான்,
உடலுள் நாட்டிய குருதிஅும் பரவையின் உம்பர்,
கடலுள் நாட்டிய மலையன்ன, தாதையைக் கண்டான். (3597)

(மடல் - மலர் இதழ்கள்; தார் - மாலை; மதியா - மதித்து; மிடல் - வலிமை; நாட்டம் - கண்கள்; நாட்டுதல் - நிலைபெற்றிருத்தல்; பரவை - கடல் \ திருப்பாற்கடல்; மலை - மந்தரமலை; உம்பர் - மேலே)

மலர் இதழ்கள் பொருந்திய மார்பு மாலையணிந் திருந்தவனாகிய இலக்குவன் கூறியவற்றை மதித்து ஏற்றுக்கொண்டு, தனது வலிமைமிக்க கண்களினின்றும் தீப்பொறி பறக்கும்படி கோபப் பார்வை கொண்டு விரைந்து செல்லுபவனாகிய இராமன், உடலுக்குள் நிலை பெற்றிருக்கும் இரத்தம் வெளிப்பட்டு மேலே தெரிய, முன்பு திருப்பாற்கடலைக் கடையும் பொழுது மத்தாகக் கடலுள் நாட்டப்பட்டிருந்த மந்தர மலை போன்ற தன் தந்தையாகிய சடாயுவைக் கண்டான்.

"மடலுள் நாட்டிய தார் இலக்குவன்" என்றது ஒரு உபசார வழக்கு; உண்மையிலேயே மாலை அணிந்திருந்தான் என்பது பொருளல்ல என்று உணர்க. அவன் சொற்களில் இருந்த அறிவுத்திட்பத்தை நன்கு உணர்ந்ததால் இராமன் அதை மதித்து ஏற்றுக்கொண்டான் என்க. தன் மனைவியை அபகரித்துச் சென்றவனும், தன் சிறிய தந்தையை உயிருக்கு மன்றாடச் செய்தவனும் இராவணனே என்று அறிந்ததால் "மிடலுள் நாட்டங்கள் தீ உக நோக்கினான்" என்றார் என்க. சடாயுவை மந்தர மலைக்கு ஒப்பாக முன்பும் கூறியமை நினைவிற் கொள்க. இங்கே வான்மீகம் சற்று வேறுபடுகிறது. இரத்தவெள்ளத்தில் மந்தர மலை போல் கிடந்த சடாயுவைக் கண்ட இராமன், அவன்தான் அவ்வரக்கன் என்று கருதி, அவன் மேல் அம்புவிடத் துணிந்தான் என்று கூறுகிறது. அத்யாத்ம இராமாயணமும் இவ்வாறே கூறுகிறது.

94. இராமன், சடாயுவின் மேனியில் வீழ்ந்து புலம்புதல்

துள்ளி, ஓங்கு செந்தாமரை நயனங்கள் சொரிய,
தள்ளி ஓங்கிய அமலன், தன் தனி உயிர்த் தந்தை
வள்ளியோன் திருமேனியில், தழல் நிற வண்ணன்
வெள்ளி ஓங்கலில் அஞ்சன மலை என, வீழ்ந்தான். (3598)

(ஓங்கு - உயர்ந்த; தள்ளி - மாற்றி; தனி - ஒப்பற்ற; வள்ளியோன் - வள்ளல் தன்மை உடையவன்; தழல் - நெருப்பு; ஓங்கல் - மலை; வெள்ளி ஓங்கல் - கயிலாய மலை; அஞ்சனம் - மை; அமலன் - குற்றமற்றவன்; துள்ளி - துளி; தழல் நிற வண்ணன் - சிவபெருமான்)

எல்லோரினும் சிறந்தவனும், குற்றமற்றவனுமாகிய இராமபிரான், உயர்ந்த செந்தாமரைமலர் போன்ற கண்களினின்றும் கண்ணீர்த் துளி சிந்தவும், அவற்றைக் கை நுனியால் தள்ளிக் கொண்டு, தனது ஒப்பற்ற தந்தை போன்றவனாகியவனும், வள்ளல் தன்மையுடையவனுமாகிய சடாயுவின் அழகிய உடம்பில், நெருப்புப் போன்ற சிவந்த நிறமுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் வெண்ணிறமுடைய கயிலாயமலையின் மீது, மை போன்ற கரிய நிறமுடைய மற்றொரு மலை படிந்தது போல விழுந்தான்.

இராமன் தன் மனைவி சீதாதேவியின் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரையே ஒரு பொருட்டாகக் கருதாமல் போரிட்ட சடாயுவை "வள்ளியோன்" எனக் கூறிய நயம் உணர்க. "தழல் நிற வண்ணன்" என்பது "எரிபோல் மேனிப் பிரான்" என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தை நினைவூட்டுவது காண்க. வெண்மை நிறமுடைய சடாயுவுக்கு வெள்ளியங்கிரியும், கரிய நிறமுடைய இராமபிரானுக்கு அஞ்சனமலையும் உவமைகள்.

95. மூர்ச்சித்த இராமனை, இலக்குவன் தெளிவித்தல்

உயிர்த்திலன் ஒரு நாழிகை; உணர்விலன் கொல் என்று
அயிர்த்த தம்பி புக்கு, அம்கையின் எடுத்தனன், அருவிப்
புயல் கலந்த நீர் தெளித்தலும், புண்டரீகக் கண்
பெயர்த்து, பைப்பைய அயர்வு தீர்ந்து, இனையன பேசும். (3599)

(உயிர்ப்பு - மூச்சு; உயிர்த்திலன் - மூச்சற்றவனாதல்; அயிர்த்த - ஐயமுற்ற; அம் - அழகிய; புயல் - மேகம்; புண்டரீகம் - தாமரை மலர்; பெயர்த்து - விழித்து; பைப்பைய - மெல்ல மெல்ல; அயர்வு - சோர்வு; இனையன - இத்தன்மையான; உணர்வு - தன் நினைவு; புக்கு - அருகில் சென்று)

அவ்வாறு வீழ்ந்த இராமன், ஒரு நாழிகை வரை மூச்சற்றிருந்தான்; தன் தமையன் தன் நினைவு இழந்து விட்டானோ என்று ஐயமுற்ற தம்பி இலக்குவன், அவன் அருகில் நெருங்கிச் சென்று, தனது அழகிய கைகளினால் அவனைத் தழுவி எடுத்துக் கொண்டு, மலையின் அருவியிலிருந்தும் மேகத்திலிருந்தும் கலந்து வந்த புதிய குளிர்ந்த நீரை அவன் மீது தெளித்ததும், செந்தாமரை மலர் போன்ற கண்களை விரித்துப் பார்த்து, மெல்ல மெல்லச் சோர்வு நீங்கி, கீழ்வருவனவற்றைப் பேசத் தொடங்கினான்.

சடாயுவுக்கு நேர்ந்ததைக் கண்டு இராமன் மூர்ச்சித்தான் என்பது அவனது மென்மைத் தன்மையைச் சிறப்பித்தது என்க. உணர்வு தளர்ந்த நிலையில் சோர்வுற்றவர்களுக்குக் குளிர்ந்த நீர் தெளித்து உணர்வு வரச் செய்தல் ஒரு இயற்கையான சைத்திய உபசாரம் என்க.

96. இராமன் தன்னை நொந்து கொண்டு புலம்புதல்

"தம் தாதையரைத் தனையர் கொலை நேர்ந்தார்
முந்து ஆரே உள்ளார்? முடிந்தானே முனை ஒருவன்;

எந்தாயே! எற்காக நீயும் இறந்தனையால்;
அந்தோ! வினையேன் அருங்கூற்றம் ஆனேனே!" (3600)

(தாதை - தந்தை; தனையர் - புதல்வர்; முந்து - முன்பு; முனை - முன்னை \ முன்பு; எற்காக - எனக்காக; கூற்றம் - இயமன்; நேர்தல் - செய்தல் \ காரணமாதல்; வினையேன் - தீவினையேன் \ பாவி)

"தன்னுடைய தந்தையர் கொலை உறுவதற்குக் காரணமாக, அவனது மைந்தர்களே அமைந்த இது போன்ற நிகழ்ச்சி, இதற்கு முன்பு எங்கேனும் நடந்திருக்கிறதா? அத்தகைய மைந்தர் எனக்கு முன்பு யாரேனும் உள்ளனரா? என் பிரிவாற்றாது முன்பு என் தந்தை தசரதன் அயோத்தியில் இறந்து போனான். என் தந்தையே! இப்பொழுது என் பொருட்டு நீயும் இறந்து போனாயோ? ஐயோ! பாவியேனாகிய யான் இவ்வாறு இருவரும் இறக்கும்படி, இயமனாகப் போனேனே" என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் இராமன்.

தந்தையர் இருவர் இறப்பிற்கும் தானே காரணம் எனத் தன்னையே நொந்து கொண்டான் என்பதாம்.

97. "பின் உறுவது ஓராதே பேதுறுவேன் பெண்பாலாள்
தன் உறுவல் தீர்ப்பான், தனி உறுவது ஓராதே,
உன் உறவு நீ தீர்த்தாய்; ஓர் உறவும் இல்லாதேன்
என் உறுவான் வேண்டி இடர் உறுவேன்? எந்தாயே!" (3601)

(உறுவல் - துன்பம்; தீர்ப்பான் - தீர்க்கும் பொருட்டு; ஓராது - கருதாது; உறுவது - நிகழ்வது; ஓர்தல் - உணர்தல்; பேதுறுதல் - துன்புறுதல்; இடர் உறுதல் - துன்புறுதல்)

"என் மனைவியாகிய சீதை என்ற ஒரு பெண்ணின் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டு, நீ தனியனாய் இருக்கிறாய் என்பதைக் கூடக் கருதாது, இராவணனுடன் போராடி, நீ அவளுக்கு உறவு என்று வெளிப்படுத்தி, உன் உயிரை நீக்கிக் கொண்டாய்; பின்னால் என்ன நிகழப் போகிறது என்பதை உணராதவனும், நீ இறந்ததும், என் மனைவி பிரிந்த பின்னும், எனக்கு ஓர் உறவும் இல்லை என்று எண்ணத்தக்கவனுமான நான், இனிமேல் எதை அடைய வேண்டும் என்று கருதி இத்தனை இன்னல்கள் அடைகிறேன்? எனக்குப் புரியவில்லை" என்று தன்னையே நொந்து கொண்டான் இராமன்.

என்னுடைய தந்தை என்பதை, நீ என் மனைவியின் பொருட்டு உயிர் துறந்து நிரூபித்து விட்டாய். நான் தான் எதற்காக இன்னும் வாழ்ந்து கொண்டு துன்புறுகிறேன் என்பது புரியவில்லை என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறான் இராமன். என் மனைவி பிரிந்த பின்பும், என் இரு தந்தையரும் இறந்த பின்பும், நான் உயிர் வாழ்தலால் என்ன பயன்?" என்றான் என்பதாம்.

98. "மாண்டேனே அன்றோ? மறையோர் குறை முடிப்பான்
பூண்டேன் விரதம்; அதனால் உயிர் பொறுப்பேன்;

நீண்டேன் மரம் போல, நின்று ஒழிந்த புன் தொழிலேன்;
வேண்டேன், இம்மா மாயப் புன் பிறவி வேண்டேனே!" (3602)

(மறையோர் - வேதம் வல்லோர்; ஒழிந்த - பயனற்ற; புன் தொழில் - அற்பத்தொழில்; மா - பெரிய; மாயம் - பொய்மை; புன் பிறவி - அற்பப்பிறவி; மாள்தல் - மாண்டல் \ இறத்தல்; பொறுத்தல் - தாங்குதல் \ சுமத்தல்)

"சீதை அபகரிக்கப்பட்டதையும், தாங்கள் உயிர் நீத்ததையும் தடுத்து நிறுத்த இயலாத நான் இறந்தவனாகவே கருதப் படவேண்டுமல்லவா? என்றாலும் நான் இந்த உயிரை இன்னும் சுமந்து கொண்டிருப்பதற்கு, வேதம் வல்ல முனிவர்களின் குறையைத் தீர்த்து விடுகிறேன் என்று அவர்களுக்குச் சத்தியம் செய்து கொடுத்ததுதான் காரணமே அன்றி, நீண்டு வளர்ந்த உதியமரம் போல, யாருக்கும் பயனில்லாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அற்பமான நிலையை யான் வேண்டவே இல்லை; இந்தப் பெரிய வஞ்சனை நிறைந்த, பொய்யான, அற்பமான பிறவியை நான் விரும்பேன், விரும்பேன்" என்று அரற்றுகிறான் இராமன்.

ஊழிக்காலத்திலும் தான் அழியாது இருந்து, இவ்வுலகத்தையெல்லாம் தன் வயிற்றினுள் அடக்கும் வல்லமை படைத்த திருமாலின் கூறான இராமபிரான், இப்பொழுது இப்பிறவியை அற்பமான பிறவியென்றும், பொய்யான பிற்வி என்றும் கூறுவது வியப்பை அளிப்பதை உணர்க. தான் கொண்ட மானிட வேடத்திற்கு ஏற்ப, தன் நிலைக்கு இரங்கி இவ்வாறு கூறினான் என்க. தான் முனிவர்களுக்கு அளித்த உறுதியை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென்பதாலேயே தான் இன்னும் உயிரைச் சுமந்து கொண்டிருப்பதாகக் கூறுவதில் உள்ள ஆற்றாமை உணர்க. அதற்குமுன் உயிர் விடுதல் தன் நிலைக்குத் தக்கதன்று என்பதை உணர்ந்து இவ்வாறு கூறினான் என்க. பிறருக்கு உதவாமல் வாழ்பவனை இன்றும் உதிய மரத்திற்கு ஒப்பிடுவதைக் காணலாம். இது ஒதியமரம் என்று இப்போது பேசப்படுகிறது. இராமன் தான் இருந்தும் பயனற்ற நிலையில் இருப்பதால் மாண்டேனே என்று கூறியதாகக் கொள்க. ஒதியமரம் தனக்கு வந்த இடர் கண்டு தன்னையும் காத்துக் கொள்ளாது; பிறருக்கு வரும் இடரும் நீக்காது. எனவே பயனற்றது என்பதாம். அது போல இராமன் தன் மனைவி தன்னிடமிருந்து பிரிக்கப்பட்டபோதும், தன் மனைவிக்காகப் போரிட்டு உயிர் துறக்க முடியாது போனதாலும், சடாயு இறக்கின்ற போதும் உதவி செய்ய முடியாது போனதாலும், தன்னை மரம் என்று கூறிக் கொண்டான் என்க.

வேண்டேன், வேண்டேன் என்று இருமுறை கூறியது, அவன் வாழ்க்கையின் மேல் கொண்ட வெறுப்பைக் குறித்தது என்க.

99\. "என் தாரம் பற்றுண்ண ஏன்றாயை, சான்றோயை,
கொன்றானும் நின்றான்; கொலையுண்டு நீ கிடந்தாய்;
வன்தாள் சிலை ஏந்தி, வாளிக் கடல் சுமந்து,
நின்றேனும் நின்றேன்; நெடு மரம் போல் நின்றேனே!" (3603)

(தாரம் - மனைவி; பற்றுண்ணுதல் - கவரப்படுதல்; ஏன்றல் - எதிர்த்தல்; சான்றோன் - பெரியோன்; நிற்றல் - உயிரோடு இருத்தல்; தாள் - கால்கள் \ அடி \ தண்டு; வாளி - அம்பு; தாரம் - தாங்கிப் பாதுகாக்கத்தக்கவள் என்னும் பொருள் கொண்ட வடசொல்)

"என்னுடைய மனைவியான சீதையை வேறொருவன் அபகரித்துச் செல்ல, அதைக் கண்டு பொறுக்காது அவனை எதிர்த்துப் போரிட்ட, நற்குணங்கள் வாய்க்கப் பெற்ற நீயோ இங்கு அவனால் கொல்லப்பட்டு நிலத்தில் கிடக்கின்றாய்; ஆனால், உன்னைக் கொன்ற அவனோ இன்னும் உயிருடன் இருக்கின்றான். வலிய தண்டுகளை உடைய வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு கடலளவு கணக்கற்ற அம்புகளைச் சுமந்து கொண்டு, நானும் நீண்ட மரம் போல, உங்களுக்கு உதவமுடியாமல் நிற்கின்றேனே" என்று மீண்டும் மீண்டும் கூறிப் புலம்பினான் இராமன்.

வலிய தண்டுகளுடன் கூடிய வில்லும் கையில் இருக்கிறது; கடல் போல் அளவற்ற அம்புகளையும் சுமந்து கொண்டிருக்கிறேன். இருந்தும் என்னால் இருகுற்றங்கள் செய்தவனைக் கொல்ல முடியவில்லையே? குற்றமற்ற நல்லியல்புடைய நீங்கள் கொல்லப்பட்டீர்களே என்று தன் கையறு நிலையைக் குறித்தான் என்க. எனக்கு உதவி செய்ய வந்த நீ கொல்லப்பட்டுக் கிடக்கவும், நான் உயிரோடு, பயனற்று, மரம் போல் நின்றிருக்கவும் நன்றோ? என்று வெட்கப்பட்டான் என்பதுவுமாம்.

100. "சொல் உடையார் என் போல் இனி உளரோ? தொல் வினையேன்
இல் உடையாள் காண, இறகு உடையாய்! எண் இலாப்
பல் உடையாய்! உன்னைப் படை உடையான் கொன்று அகல,
வில் உடையேன் நின்றேன்; விறல் உடையேன் அல்லேனோ?" (3604)

(சொல் - புகழ்; எண்ணிலா - அளவற்ற; தொல் - பழைய; விறல் - வீரம்)

"வலிய இறகுகளையும், அளவற்ற பற்களையுமே படைக்கலன்களாக உடையவனே! என்னுடைய பழைய தீவினைப் பயனால் என் இல்லிற்குரியவளான சீதைகாணும்படி, படைக்கலன்கள் மிகுதியாகப் பெற்ற அவ்வரக்கன் உன்னைக் கொன்று விட்டு இவ்விடம் விட்டு நீங்கிப் போனபின்பும், வில்லை உடைய நானும் இங்கு இன்னமும் நின்று கொண்டிருக்கிறேனே? நான் தான் வீரம் உடையவன்; அல்லவா? என்னைப் போன்ற புகழ் பெற்றவர்கள் வேறுயார் இருக்கிறார்கள்?"

சடாயுவுக்கு, சிறகுகளின் மேலும் கீழும் இருபுறங்களிலும் பல கூரிய முட்கள் போன்ற பற்கள் இருந்தன என்பதாம்; தன்னைப் போல வீரம் உடையவரோ, புகழ் உடையவரோ வேறு யாரும் இருக்க முடியாது என்று தன்னைத் தானே இழித்தும், பழித்தும், இகழ்ந்தும் கூறிக் கொண்டான் இராமன் என்பதாம்.

101. சடாயு மூர்ச்சைதெளிந்து எழுதல்

அன்னா! பல பலவும் பன்னி அழும்; மயங்கும்;
தன்நேர் இலாதானும் தம்பியும் அத்தன்மையனாய்;
உன்னா, உணர்வு சிறிது உள்முளைப்ப, புள்ளரசும்,
இன்னா உயிர்ப்பான், இருவரையும் நோக்கினான். (3605)

(அன்னா - அன்ன \ அத்தன்மையவான; பன்னி - திரும்பத்திரும்ப; மயங்குதல் - மதி மயக்கம் கொள்ளுதல்; நேர் - ஒப்பு; முளைப்ப - தோன்ற; புள் - பறவை; இன்னா - துன்பம்; உயிர்த்தல் - மூச்சுவிடுதல்; உன்னா - உன்னி \ நினைவுபெற்று)

தனக்குத்தானே ஒப்பானவனும், வேறொருவர் தனக்கு ஒப்பு இல்லை என்று கூறும்படியானவனுமான இராமபிரான், அவ்வாறு பலவற்றையும் பலமுறை சொல்லிச்சொல்லி அழுதான். அறிவு மயங்கிப் போனான்; அவனுடைய தம்பியான இலக்குவனும் அவ்வாறே அழுது அறிவு அழியலானான்; மூர்ச்சையுற்றுக் கிடந்த பறவைகளுக்கு அரசனான சடாயுவும், சிறிது நினைவு பெற்று, உணர்வு தோன்ற துன்பத்தோடு சற்று மூச்சு விடலானான்; அவ்வாறு உயிர்த்து, தன் எதிரே கலங்கி நின்ற இராம இலக்குவர் இருவரையும் கண்விழித்து நன்கு உற்றுப்பார்த்தான்.

102. சடாயுவின் மகிழ்ச்சி

உற்றது உணராது, உயிர் உலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவரைக் கண்டான்; தன் உள்ளம் குளிர்ப்புற்றான்;
இற்ற இரு சிறகும், இன்னுயிரும், ஏழ் உலகும்,
பெற்றனனே ஒத்தான்; "பெயர்த்தேன் பழி" என்றான். (3606)

(உற்றது - நிகழ்ந்தது; உலைதல் - அழிதல் \ நடுங்குதல்; வெய்து - வெப்பமாக; கொற்றவர் - வெற்றிவீரர்; இற்ற - அறுந்துபோன; பெயர்த்தல் - போக்குதல் \ துடைத்தல்)

தனது சிறகுகள் அறுக்கப்பட்ட நிலையில் மூர்ச்சையடைந்து தரையில் விழுந்தவன் தனக்கும், இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதைக்கும். இவை ஒன்றையுமே அறியாது, எங்கோ தவித்துக் கொண்டிருக்கும் இராம இலக்குவர்க்கும், என்ன நிகழ்ந்தது என்பதையே அறிந்து கொள்ள முடியாதவனாகி, உயிர்நிலை கெட்டு, வெப்பப்பெருமூச்சு விடுபவனுமான சடாயு, வெற்றிவீரர்களாகிய இராம இலக்குவரைத் தன் கண் முன்னால் கண்டதும் தனது மனம் மிக்க குளிர்ச்சி அடைந்தவனானான்; இராவணனால் அறுத்து அழிக்கப்பட்ட இரு சிறகுகளையும், தனது இனிய உயிரையும் இந்த ஏழு உலகங்களையும், தானே பெற்றுவிட்டது போல ஒரு அபரிமிதமான மகிழ்ச்சியடைந்து "சீதையைக் காப்பாற்ற வில்லையே" என்ற பழியினின்றும், அவளுக்குற்ற கொடுமையினை இராம இலக்குவர்க்கு எடுத்துக் கூறமுடியாது

போயிற்றே என்ற பழியினின்றும், தன் நண்பனான தசரதகுமாரர்களுக்கு உற்றுழி உதவி செய்து அதை நிறைவேற்ற முடியாது போயிற்றே என்ற பழியினின்றும், தான் நீங்கியதாக அவர்களுக்குக் கூறினான் சடாயு.

இராம இலக்குவரைத் தன் கண் முன்னே கண்டதனால், இனிமேல் ஏற்படப்போகும் எத்தகைய பழியையும் அவர்கள் நீக்கிவிடுவர் என்ற உறுதியால் "பெயர்த்தேன் பழி" என்று தன்னை உளப்படுத்திக் கூறினான் என்க. இச்செய்யுளில், சடாயுவின் தன்னலமின்மை, உற்றுழி உதவும் மனப்பான்மை, நட்பை மதிக்கும் தன்மை, பழிக்கு அஞ்சுதல் போன்ற நற்குணங்களை எடுத்துக் கூறியிருப்பதை உணர்க.

103. இருவரையும் அருகழைத்து உச்சிமோத்தல்

"பாக்கியத்தால், இன்று, என் பயன்இல் பழியாக்கை
போக்குகின்றேன்; கண்ணுற்றேன், புண்ணியரே! வம்மின்" என்று
தாக்கி அரக்கன் மகுடத்தலை தகர்த்த
மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்றான். (3607)

(யாக்கை - உடம்பு; வம்மின் - வாருங்கள்; இன்று - இப்பொழுது; பாக்கியம் - பேறு; தகர்த்த - அறுத்த \ சிதறடித்த)

"புண்ணியத்தின் வடிவானவர்களே! நான் முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனால் இப்பொழுது உங்களைக் காணும் பேறு பெற்றேன்; இப்பொழுது, யாருக்கும் பயன்படாத இந்த உடம்பை - சீதையைக் காப்பாற்றி உங்களிடமே திருப்பித்தர முடியாத பழியை உடைய இந்த உடம்பை அழித்துக் கொள்ளப்போகின்றேன். என் அருகில் வாருங்கள்" என்று அழைத்து, எந்த மூக்கினால் அரக்கனாகிய இராவணனின் மகுடங்களைப் போரிட்டுத் தகர்த்து எறிந்தானோ, அதே மூக்கினால், இப்பொழுது அவ்விருவரையும் முறையாகப் பலமுறை உச்சி மோந்தான்.

தான் முன் பிறப்பில் செய்த நல்வினையின் பயனால்தான். இப்பொழுது இராம இலக்குவர்களைக் காணும் பேறு பெற்றறதாகக் கருதுகிறான் சடாயு. காரணம். இராமன் திருமாலின் அவதாரம் என்பதை அறிந்தவன் அவன். இதேபோன்ற எண்ணம் முன்பு சரபங்கன் பிறப்பு நீங்கு படலத்தில், சரபங்கருக்கு ஏற்பட்டதையும் நினைவு கூர்க. இறக்கின்ற தறுவாயில் இராமநாமத்தைக் கூறினாலே வீடுபேறு எய்துவர் என்றால். அவனை நேரில் காணும் பேறுபெற்றவர் அடைகின்ற மகிழ்ச்சியைச் சொல்லில் வடிக்க முடியுமோ? தனது வாழ்க்கை பயனற்றதாயும், பழியுற்றதாயும் ஆயிற்று என்று வருந்துகிறான் சடாயு.

உடம்பு பயனில்லாது போனது, சீதையைக் காப்பாற்றி இராம இலக்குவர்கள் கையில் ஒப்படைக்க முடியாமல் போனதால்; பழியுற்றது. தன் நண்பன் தசரதனின் மருகியைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற பழி என்க. பழி என்பது ஒரு பழியைத் தான் அடைய வேண்டுமென்பதில்லை; புகழ் பெறாததே ஒரு வகைப்பழி என்கிறான் வள்ளுவன். "வசை என்ப வையத்தார்க்கெல்லாம்,

இசை என்னும் எச்சம் பெறாஅ விடின்" என்பது குறள் (238). முறை முறையே என்பது இராம இலக்குவர் என்ற வயது முறைப்படியும், மறுபடியும் மறுபடியும் என்றும் இருபொருள் தருவதை உணர்க. உச்சி மோத்தல் என்பது தாய் தந்தையர் தன் குழந்தைகளிடத்தில் கொள்ளும் வாத்சல்ய உணர்ச்சியில் உண்டாகும் மெய்ப்பாடு. இராவணனைத் தாக்கும் போது வலிமை பெற்றிருந்த மூக்கு, இவ்விருவரையும் உச்சி மோக்கும் போது மென்மைத் தன்மை பெற்றது என்று கூறிய நயம் ஓர்க. பின்னர் இராமன் பரதனை உச்சி மோக்கின்றான் அப்பொழுது கவிஞன் "உச்சி மோந்து கன்று காண் கறவை யன்னான்" என்பதையும் ஒப்பிட்டுக் காண்க.

104. சடாயு, இராம இலக்குவரை "எங்கே சென்றிருந்தீர்கள்?" என வினவுதல்

"வஞ்சனையால் வந்த வரவு என்பது என்னுடைய
நெஞ்சகமே முன்னே நினைவித்தது; ஆனாலும்,
அம்சொல் மயிலை, அருந்ததியை, நீங்கினிரோ,
எஞ்சல் இலா ஆற்றல் இருவீரும்?" என்று உரைத்தான். (3608)

(நினைவித்தது - நினைக்கச் செய்தது; அம் - அழகிய; எஞ்சல்இலா - குறைவிலாத; நெஞ்சகம் - மனம்; வஞ்சனை - சூழ்ச்சி \ தந்திரம்)

"இராவணன் இவ்வாறு சீதையைக் கவர்ந்து கொண்டு வருவது, அவனது மாயம் நிறைந்த தந்திரத்தால்தான் இருக்க வேண்டும் என்று என் உள்மனம் முன்னமேயே அச்சுறுத்தியது; என்றாலும், அழகிய இனிய சொற்களையுடையவளும், சாயலில் மயிலை ஒத்தவளும், கற்பினில் அருந்ததிக்கு ஒப்பானவளுமான சீதையைத் தனியே பர்ணசாலையில் விட்டு விட்டு, குறைவிலாத ஆற்றல் வாய்ந்த நீங்கள் இருவரும் பிரிந்து சென்று விட்டீர்களா?" என்று கேட்டான் சடாயு.

"நீங்கினிரோ" என்பது கேள்வியாயினும், தந்தைக்குரிய கடுமை தோன்றுவது உணர்க. யாராவது ஒருவர் இருந்துகொண்டு, ஒருவர் நீங்கியிருக்கக்கூடாதா என்பது புலப்படும்படி, 'இருவரும் நீங்கினிரோ?' என்றான் என்க; இவர்கள் இருவரும் எங்கு சென்றனர் என்று அறியச் சடாயு விரும்பினான். எனவே இவ்வாறு கேட்க நேர்ந்தது என்க.

105. இலக்குவன் நிகழ்ந்தது அனைத்தையும் கூறுதல்

என்று அவன் இயம்பலும், இளைய கோமகன்,
ஒன்றும் ஆண்டு உறுபொருள் ஒழிவுறாவகை,
வன்திறல் மாயமான் வந்தது ஆதியா
நின்றதும், நிகழ்ந்ததும், நிரப்பினான் அரோ. (3609)

(இளையகோமகன் - அரசிளங்குமரன்; ஒழிவுறாவகை - விட்டுவிடாமல்; ஆதியா - முதலாக; நிரப்புதல் - சொல்லிமுடித்தல்)

என்று சடாயு கேட்டவுடன், அரசிளங்குமரனான இலக்குவன், அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல், வலிய, திறமைமிக்க, வஞ்சனையான மாயமான் வந்தது முதலாக, இப்போது தாங்கள் இருவரும் இங்கு வந்து நிற்பது இறுதியாக, நடந்தவை அனைத்தையும் முழுவதும் கூறிமுடித்தான்.

106. சடாயு அவர்களைத் தேற்றுதல்

ஆற்றலோன் அவ்வுரை அறைய, ஆணையால்
ஏற்று, உணர்ந்து, எண்ணி, அவ்எருவை வேந்தனும்,
"மாற்ற அருந்துயர் இவர் மனக் கொளாவகை
தேற்றுதல் நன்று" என, இனைய செப்புவான். (3610)

(ஆணை - கட்டளை; அறைய - சொல்ல)

இராமனது கட்டளையினால், சொல்லாற்றலில் வல்லவனான இலக்குவன் அந்நீண்ட சொற்களைக் கூறி முடித்ததும், கழுகுகளுக்குத் தலைவனான சடாயுவும், அதனைத் தன் மனத்துள் உள் வாங்கிக்கொண்டு, நன்கு அதன் ஆழத்தை உணர்ந்து, தான் என்ன கூறவேண்டும் என்பதை நன்கு ஆலோசித்து, "மனைவியைப் பிறன் அபகரித்துச் சென்றதான மாற்றுதற்கு அரியதான துன்பத்தை அவர்கள் மனத்தில் கொண்டு துயருறாத வகையில் , அவர்களுக்குத் தேறுதல் மொழி கூறுவது நன்மை பயக்கும்" என்று கருதி, பின் வருவனவற்றைக் கூறலானான்.

இலக்குவனை 'ஆற்றலோன்' என்று கூறுவதை உணர்க; சொல் வல்லன், சோர்விலான், அஞ்சான் என்பதைக் குறிக்கும் சொல் இது. யார் எதுபற்றிக் கேட்டாலும், இலக்குவனே மாற்றம் உரைப்பதை இக்காப்பியத்தில் பரக்கக் காணலாம். ஆனாலும் இங்கே மனைவியைப் பிரிந்த கணவனால் பேச முடியாது என்பதால், அவன் குறிப்புக்காட்ட இலக்குவன் பேசினான் என்பதாம். சடாயு உடனே ஏதும் பதில் கூறாது, 'ஏற்று', 'உணர்ந்து', 'எண்ணி' என்று இத்தனை அடைமொழி கொடுத்த நயம் உணர்க. மனைவியைப் பிறன் கவர்ந்து செல்லுவதைக் காட்டிலும் பெரிய துயரம் வேறு ஒன்று இருக்க முடியாது என்பதைக் குறிக்க "மாற்ற அரும் துயர்" என்றான் என்க.

107. சடாயு அவர்களுக்கு ஆறுதல் கூறுதல் (9 பாடல்கள்)

"அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ?"
"துதி அறு பிறவியின் இன்ப துன்பம்தான்
விதி வயம்" என்பதை மேற்கொளாவிடின்,
"மதி வலியால் விதி வெல்ல வல்லமோ?" (3611)

(அதிசயம் - புதியது \ புதுமை; அமைக்கல் - உண்டாக்குதல்; துதி - புகழ்ச்சி; விதி - ஊழ்வினை)

“நம் கருத்துக்கு அப்பாற்பட்ட, எதிர்பார்க்க முடியாத அதிசயங்களை - புதுமைகளை ஒருவரால் உண்டாக்க முடியுமா? முடியாதல்லவா? அது போலப் புகழ்ச்சிக்கு உரியதல்லாததான - இகழ்ச்சிக்குரியதான இந்தப் பிறவியில் ஏற்படும் இன்பம், துன்பம் இவையெல்லாம், விதியின் பயன் என்று கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவ்வாறு ஏற்றுக் கொள்ளாவிட்டால், நம் அறிவின் திறமையால், அந்த ஊழ்வினையை நம்மால் வென்று விடமுடியுமோ? முடியாது” என்று சடாயு இராம இலக்குவர்க்கு ஆறுதல் கூறத் தொடங்குகிறான்.

இது முதல் 8 பாடல்கள் சடாயு கூறும் ஆறுதல் மொழிகள். “பேதைப்படுக்கும் இழவு ஊழ்; அறிவகற்றும் ஆகல் ஊழ் உற்றக் கடை” என்பது குறள் 372. இராமன் அறிவு மயங்கி நிற்பதற்கும், இராவணன் சூழ்ச்சி மேற்கொண்டதற்கும் ஊழ்வினைதான் காரணமேயன்றி, நமது அறிவின்மை அன்று என்கிறான் சடாயு. “பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்” என்பர். எனவே இப்பிறப்புக்களெல்லாம் புகழ்ச்சிக்குரியன அல்ல” இகழ்ச்சிக்குரிய புன்பிறவி; எனவே “துதி அறு பிறவி” என்றார் என்க; “ஊழிற்பெருவலியாவுள? மற்றொன்று சூழினும், தான் முந்துறும்” என்னும் குறளும் (380) இங்கு ஒப்பு நோக்கத்தகும். பிறவியில் ஒருவர் அடையும் இன்பம், துன்பம் எல்லாம், அவர்களது முன் வினைப் பயனால் நிகழ்வன; நம் மதியினால் அவற்றை வெல்ல முடியாது என்பதாம். இதே கருத்தை முன்பு, இராமன், இலக்குவன், வசிட்டன் இன்னும் பிறரும் கூறியதை நினைவு கூர்க. “நிதியும் கணவனும் நேர் படினும், தத்தம் விதியின் பயனே பயன்” என்பது மூதுரை. ஒருவர்க்கு நன்மையோ தீமையோ, வருவது வந்தே தீரும். அதைத் தடுக்க இயலாது. வந்ததன் பின் அதைத் தம் மதி வலிமையால் போக்க முயற்சிக்கலாம் என்பது சடாயுவின் கருத்து.

108. *“தெரிவுறு துன்பம் வந்து ஊன்ற, சிந்தையை*
இரிவுசெய்து ஒழியும் ஈது இழுதை நீரதால்;
பிரிவு செய்து உலகு எலாம் பெறுவிப்பான் தலை
அரிவுசெய் விதியினார்க்கு அரிது உண்டாகுமோ?” (3612)

(தெரிவுறு - தெளியப்பட்ட; ஊன்ற - பொருந்த \ அழுந்தி நிலைபெற; இரிவு செய்தல் - நிலைகெடச் செய்தல்; இழுதை - பேதைமை \ அறியாமை; நீர் - நீர்மை \ தன்மை; பிரிவு செய்தல் - வகுத்தல்; பெறுவிப்பான் - படைக்கின்றவன் \ பிரமன்; அரிவு செய்தல் அரிதல் \ அறுத்தல்; ஒழிவது - தன் காரியத்தைச் செய்யாது விடுவது)

“இந்த உலகிலுள்ள உயிரினங்களையெல்லாம் படைக்கின்றவனான பிரமதேவனின் ஐந்து தலைகளுள் ஒன்றைக் கொய்து, இறைவனுக்கே துன்பம் இழைத்த இந்த விதி என்பவருக்கு, அவரால் செய்ய முடியாதது என்பது ஒன்று இருக்கிறதோ?” இல்லை; எனவே, நன்றாகத் தெளியப்பட்ட துன்பம் நம்மிடம் வந்து சேர்ந்து, நிலைபெற்று நிற்கும்போது, நமது மனத்தை நிலைகெடச் செய்து,

செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாது தவிர்த்தல் என்பது அறியாமையின் பாற்பட்டதாகும்.

வருவது வந்தே தீரும். இறைவனையே சோதித்த விதியார். நம்மைச் சோதிக்காமல் விடுவாரா? எனவே அது வரும் போது மனம் கலங்காமல் அதை வெல்லுவதற்குரிய அறிவின் பாற்பட்ட செயல்களைச் செய்யாது தவிர்த்தல் கூடாது என்பதும், அவ்வாறு துன்பம் வந்த போது அதனையே நினைத்துக் கொண்டு மனமழிந்து வருந்தித் தளருதல் கூடாது என்பதும் கருத்து. "இடுக்கண் வந்துற்ற காலை, இருந்து அழுது யாவர் உய்ந்தார்?" என்பது சீவகசிந்தாமணி. பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றை, அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட பிணக்கால், சிவபெருமான் கிள்ளிக் களைந்த புராணக்கதை இங்கு குறிக்கப்படுகிறது. "ஆதிக்கணான் முகத்தில் ஒன்று தோன்றி, அல்லாத சொல் உரைக்க, தன் கைவாளால் சேதித்த திருவடி" என்பது தேவாரம். இவ்வாறு இறைவனையே தலையழியச் செய்த விதி, உன் மனைவியை உன்னிடம் இருந்து பிரித்ததைச் சொல்லவும் வேண்டுமோ? என்பதாம்.

109. "அலக்கணும் இன்பமும் அணுகும் நாள், அவை
விலக்குவம் என்பது மெய்யிற்று ஆகுமோ?
இலக்கு முப்புரங்களை எய்த வில்லியார்,
தலைக் கலத்து, இரந்தது தவத்தின் பாலதோ?" (3613)

(அலக்கண் - துன்பம்; மெய் - உண்மை; தலைக்கலம் - மண்டை ஓடு \ பிச்சைப் பாத்திரம் \ பிரம கபாலம்; இரந்தது - யாசித்தது; இலக்கு - குறி)

"ஒருவருக்கு வரும் துன்பத்தையும் இன்பத்தையும், அது வரும் போது, அவற்றைத் தடுத்து நிறுத்தி விடுவோம் என்று கூறுவது உண்மையாக நிகழக் கூடியதா? அல்ல; முப்புரங்களையும் இலக்காகக் கொண்டு, மேருமலையையே அம்பாகக் கொண்டு வில்லை ஏந்திய சிவபெருமான் பிரமனது கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு யாசித்தது அவரது தவத்தின் பயன் என்று கூறமுடியுமா? அது விதியின் பயனால் விளைந்ததேயாம்."

"முப்புரங்களை அழித்து வெற்றி கொண்டது நல்ல ஊழ்; அதே போல் பிரமனது மண்டையோட்டைப் பிச்சைப் பாத்திரமாக ஏந்தி யாசித்தது தீயஊழ்; இதனைச் சிவபெருமானால் தடுத்து நிறுத்தியிருக்க முடியாதா? எனவே அவ்வாறு நிகழ்ந்தது ஊழின் பயனேயன்றி, அவன் தவத்தின் பயன் அன்று என்பதை உணர்க. எனவே எல்லோருக்கும் நல்லூழும் வரும்; தீயூழும் வரும்; அவை வரும் போது, அவற்றைத் தம் மதியால் வென்று விலக்கி விடுவோம் என்பது உண்மையில் நடக்க இயலாததாகும். இறைவனுக்கே இத்தகைய துன்பம் நிகழ்ந்ததென்றால், உன் மனைவியைப் பிரித்து வைத்தல் அந்த ஊழினால் ஆகாத செயலாகுமா?" என்றான் சடாயு என்க.

சிவபெருமான் பிரமனின் ஒரு தலையைக் கிள்ளியதால் அவனுக்குப் பிரமதோவும் பிடித்துக் கொண்டது என்பதும், அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிரம்ம கபாலம் ஏந்திப் பிச்சையெடுத்தார் என்பதும் ஒரு புராணக்குறிப்பு.

110. "பொங்கு வெங்கோள் அரா, விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்;
அம்கண் மாஞாலத்தை விளக்கும் ஆய்கதிர்த்
திங்களும், ஒருமுறை வளரும் தேயுமால்." (3614)

(பொங்குதல் - சீறுதல்; வெம் - கொடிய; கோள் - கொலைத் தொழில்; அரா - பாம்பு \ கேது; விசும்பு - ஆகாயம்; கதிர் - கிரணங்கள் \ கதிர்கள்; கதிர்ச்செல்வன் - சூரியன்; அம் - அழகிய; ஞாலம் - உலகம்; திங்கள் - சந்திரன்; ஆய் - அழகு)

"மேற்கிளம்பிச் சீறுகின்றதும், கொடிய கொலைத் தொழிலைக் கொண்டுள்ளதுமான கேது என்னும் பாம்பு, ஆகாயத்தில் பூத்திருக்கின்ற கொடிய வெப்பம் தருகின்ற கிரணங்கள் உடைய சூரியனை, முதலில் விழுங்கி விட்டுப் பின்னர் அதை உமிழ்ந்து நீக்கி விடும். அது போல அழகிய இடம் அகன்ற இவ்வுலகத்தைத் தன் ஒளி பொருந்திய அழகிய குளிர்ச்சியான கதிர்களால் விளக்கம் செய்யும் சந்திரனும், ஒவ்வொரு முறை வளர்ந்து வரும் பின்னர் தேய்ந்து போகும்."

உலகுக்ககே ஒளி தரக்கூடிய கோள்களான சூரியனும் சந்திரனையுமே கதிகலங்கச் செய்யும் இவ்வூழ்வினைக்கு, நின் மனைவியை மானிடனாகிய நின்னிடமிருந்து பிரிப்பது ஒரு அரிய பெரிய செயலோ? என்பது கருத்து. பாற்கடலைக் கடையும் போது, அதில் எழுந்த அமிழ்தத்தைப் பங்கிடும் போது, தன் அருகில் இருந்த ஒரு அசுரனைக் காட்டிக் கொடுத்து விட்டான் சூரியன்; எனவே அவன் கேது என்னும் பாம்பினால் விழுங்கப்படுகிறான் என்பது புராணக்குறிப்பு; சந்திரனுக்கு 27 நட்சத்திரங்களும் மனைவியர். எனினும் உரோகிணி என்னும் நட்சத்திரத்திடம் மட்டும் அவன் மிகக் காதல் கொண்டிருந்தான். ஏனையோரை வெறுக்கத் துணிந்தான். எனவே தக்கன் சந்திரன் தேய்ந்து போகுமாறு சாபம் கொடுத்தான். எனவேதான் சந்திரன் 15 நாட்கள் தேய்வதற்கும் ஊழ்வினையே காரணம் என்று நிறுவியவாறு, விழுங்கிய பாம்பு பின்பு உமிழ்ந்து விடுதல் போலவும், தேயும் சந்திரன் பின்பு வளர்வது போலவும், உனக்கு உண்டான இத்துன்பமும் நீங்கும், இன்பமும் பொங்கும் என்று குறிப்பால் கூறினான் என்பதாம். உலகத்தின் நிலையில்லாத தன்மையைச் சந்திரன்தான் எடுத்துக் காட்டுகிறான் என்ற கருத்தைப் புறநானூறு சொல்லுகிறது கேளுங்கள். "தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும், மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும், அறியாதோரையும் அறியக்காட்டி, திங்கள் புத்தேள் திரிதரு உலகம்" என்பது புறநானூறு (27).

111. "அந்தரம் வருதலும், அனைய தீர்தலும்,
சுந்தரத் தோளினிர்! தொன்மை நீரவால்;
மந்திர இமையவர் குருவின் வாய்மொழி
இந்திரன் உற்றன எண்ண ஒண்ணுமோ." (3615)

(சுந்தரம் - அழகு; அந்தரம் - தீங்குகள்; தொன்மை - பழைய வினைகள்; நீர - தன்மையன; மந்திரம் - ஆலோசனை; இமையவர் - தேவர்கள்; குரு - வியாழ பகவான் \ பிரகஸ்பதி; ஒண்ணுமோ - முடியுமோ; வாய்மொழி - உண்மை உரைகள் \ சாபச் சொற்கள்)

"அழகிய தோள்களையுடையவர்களே! ஒருவருக்குத் தீங்கும், துன்பமும் வருதலும், பின்னர் அவை நீங்கிப் போதலும், தொன்று தொட்டு வருகின்ற பழவினையின் தன்மையினால்தான் ஆகும் ஆலோசனையுடையவரும், மந்திரங்களில் வல்லவருமான தேவர்களின் குருவான பிரகஸ்பதி என்னும் வியாழபகவான் கூறிய உண்மையான அறிவுரைகளைக் கேட்டு நடந்த பின்னும், இந்திரன் பட்ட துன்பங்களை எண்ணிக்கையில் அடக்க முடியுமோ?" என்று சடாயு, இராமஇலக்குவர்களுக்கு ஆறுதல் கூறினான்.

இங்கே "தொன்மை நீரவால்" என்ற சொற்றொடருக்குத் தொன்று தொட்டு வருகின்ற தன்மை என்றும், பழைய நல்வினை, தீவினையின் தன்மை என்றும் இருபொருள் கொள்ளலாம். அதுபோலவே "மந்திரம்" என்பதற்கு ஆலோசனை, சூழ்ச்சி என்று ஒரு பொருளும், வேதமந்திரங்கள் என்று மற்றொரு பொருளும் கொள்ளலாம். வியாழபகவான் மந்திரியும் ஆவார், குருவும் ஆவார் என்க; வரும் பொருள் உரைக்க வேண்டுவது அவர் கடமை. அவ்வாறு அவர் முன்பே உணர்ந்து அறிவுரை கூறிய பின்பும், இந்திரனுக்கு, நாரதர், துருவாசர், அகத்தியர் முதலானோர் சாபம் கொடுத்திருக்கின்றனர் என்பதும் புராணக்குறிப்புகள். வாய்மொழி என்பது உண்மையான அறிவுரை என்றும் சாபச் சொற்கள் என்றும் இருபொருள் தந்து நிற்பதை அறிக; இந்திரனுடைய குருவான வியாழபகவானே இந்திரனைச் சபித்து, அவன் பதவியிழக்க நேர்ந்ததும், பின்னர் அவரை வணங்கி, மீண்டும் பதவி பெற்றதும் மற்றொரு புராணக்குறிப்பு. எனவே ஒருவருக்குத் தீங்குகள் வராமல் இருப்பதற்கு அவர்கள் குருவின் அறிவுரையைக் கேட்டு நடப்பது மட்டும் காரணமன்று. பழைய ஊழ்வினையின் தன்மையுமாகும், இது இப்பொழுது மட்டும் நடப்பதல்ல தொன்று தொட்டு நடந்து வரும் தன்மையது என்றும் கூறி, இராம இலக்குவர்க்கு ஆறுதல் கூறினான் சடாயு என்க.

112. "தடைக்கஅரும் பெருவலிச் சம்பரப் பெயர்க்
கடைத் தொழில் அவுணனால், குலிசக் கையினான்,
படைத்தனன், பழி; அது பகழி வில் வலாய்!
துடைத்தனன் நுந்தை, தன் குவவுத் தோளினால்" (3616)

(பகழி - அம்பு; வலாய் - வல்லவனே; குலிசம் - வச்சிரப்படை; தடைக்க - தடை செய்தற்கு \ தடுக்க; கடை - இழிந்த \ அற்பமான; படைத்தல் - பெறுதல்; நுந்தை - உன் தந்தை; குவவு - திரண்ட; கடைத்தொழில் - பாவச்செயல்; அவுணன் - அசுரன்)

"அம்புகள் செலுத்தும் வில்லாற்றலில் வலிமையுடையோனே! பிறரால் தடுத்தற்கரிய பெரிய ஆற்றல் படைத்த, சம்பரன் என்னும் பெயர் கொண்ட,

இழிதொழில் புரிந்துவரும், ஒரு அசுரனால், வச்சிராயுதத்தைக் கையில் ஏந்திய இந்திரன் தன் பதவியிழந்து பழி கொண்டனன்; அந்தப் பழியை, உங்களுடைய தந்தை தசரதன் தான், தன் திரண்ட புயவலிமையால் நீக்கினான்" என்று சடாயு இராமஇலக்குவர்க்கு ஆறுதல் கூறினான்.

இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி, தசரதன், சம்பராசுரனை, அவன் சென்ற இடமெல்லாம் துரத்திச் சென்று, வென்று, இந்திரப்பதவியையும், தேவருலகையும் மீட்டு, இந்திரனுக்கு அளித்தான் என்பது நாம் பாலகாண்டத்தில் கண்டதே. அதனை இங்கு கூறி, அத்தகைய வல்லமை படைத்த, தசரதனின் மைந்தராகிய உங்களால் இராவணன் என்னும் அரக்கனையும் வென்று அழிக்க முடியும் என்று ஆறுதல் கூறினான் என்பதாம்.

113. "பிள்ளைச் சொல் கிளி அனாளைப்
பிரிவுறல் உற்ற பெற்றி,
தள்ளுற்ற அறமும் தேவர்
துயரமும், தந்ததேயால்;
கள்ளப் போர் அரக்கர் என்னும்
களையினைக் களைந்து வாழ்தி;
புள்ளிற்கும், புலன்இல் பேய்க்கும்,
தாய் அன்ன புலவு வேலோய்!" (3617)

(புள் - பறவை; புலன் - அறிவு \ பகுத்தறிவு; புலவு - புலால் நாற்றம்; பிள்ளை - மழலை; பெற்றி - தன்மை; கள்ளம் - மாயம்; களை - பூண்டு;களைந்து - அகற்றி \ அழித்து)

"காக்கை, கழுகு, பருந்து போன்ற புலாலுண்ணும் பறவையினங்களுக்கும், பகுத்தறிவற்ற பேய்களுக்கும் கூட உணவு அளிக்கின்ற தாயைப் போன்றவரே! புலால் நாற்றம் வீசும் வேற்படையை உடையவர்களே! மழலைச் சொற்களைப் பேசும் கிளி போன்றவளாகிய சீதையை நீ பிரிய நேர்ந்த தன்மை, அரக்கர்களால் ஒதுக்கப்பட்ட தருமமும், அதனால் தேவர்கள் அடைந்த துயரமும் தந்ததேயாகும். எனவே வஞ்சனையாகவும், மாயமாகவும் போர் செய்யும் அரக்கர்கள் என்னும் புல் பூண்டுகளை அகற்றி, அழித்து, நீ நல்வாழ்வு வாழ்வாயாக!" என்று ஆறுதல் கூறினான் சடாயு.

இராமன் சீதையைப் பிரிவதற்கான காரணம், அரக்கர்கள் புறக்கணித்துத் தள்ளிய தருமமும், அதனால் தேவர்கள் அடைந்த துயருமே அல்லாது, உங்கள் தவறினால் அல்ல என்கிறான் சடாயு. இவ்வாறு பிரிய நேர்ந்ததற்குச் சீதையின் தீவினையோ, இராமனின் தீவினையோ காரணமன்று என்பது கருத்து. களை என்பது பயிரை வளரவிடாமல் தடுக்கும் வேற்றுப்புல், பூண்டு முதலியன என்க. அறம் - பயிர்; அரக்கர்கள் - களை என்பதாம். எப்படிப் பயிர் செழித்து வளரக் களை களைதல் இன்றியமையாததோ, அதுபோல அறத்தை நிலைநிறுத்த அரக்கர்களைக் களைவதும் இன்றியமையாதது என்றான் என்க.

114. பின் சடாயு நிகழ்ந்தது கூறுதல்

''வடுக் கண், வார் கூந்தலாளை, இராவணன் மண்ணினோடும்
எடுத்தனன் ஏகுவானை, எதிர்ந்து, எனது ஆற்றல்கொண்டு
தடுத்தனென், ஆவது எல்லாம்; தவத்து, அரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்; இது இன்று பட்டது''என்றான். (3618)

(வடு - மாவடு; வார் - நீண்ட; மண் - தரை; அரன் - சிவபெருமான்; படுத்தல் அழித்தல் \ வெட்டுதல்; பட்டது - நிகழ்ந்தது)

“மாவடு போன்ற கண்களையும், நீண்ட கூந்தலையும் உடைய சீதையை, இராவணன் அவள் இருந்த தரையோடும் பெயர்த்தெடுத்துக்கொண்டு சென்றவனை, நான் எனது ஆற்றல் கொண்டு, என்னால் இயன்றவரை எதிர்த்துப் போராடித் தடுத்துப் பார்த்தேன். என்றாலும், அவனது அரிய தவத்தின் காரணமாகச் சிவபெருமான் அவனுக்கு மகிழ்ந்து அளித்த சந்திரகாசம் என்னும் வாளால் என்னுடைய சிறகுகளை வெட்டி என்னை இங்கே வீழ்த்திவிட்டான்; இதுதான் இன்று இங்கு நிகழ்ந்தது” என்றான் சடாயு.

மாவடுவின் பிளவை மங்கையரின் கண்களுக்கு உவமை கூறுவது கவிமரபு. சடாயு, சீதையை எடுத்துச் சென்றவன் இராவணன் என்பதையும், அவன் அவளைத் தீண்டாது, அவள் அமர்ந்திருந்த தரையோடும் எடுத்துச் சென்றதனால், சீதையின் கற்பின் திண்மை பற்றியும் குறிப்பால் கூறியிருப்பது எண்ணி இன்புறத்தக்கது. என்னிடம் வேறு எந்த ஆயுதங்களும், வேறு துணையும் இல்லாததால் என்னுடைய மூக்காலும், சிறகாலும், கால் நகங்களாலுமே என்னால் முடிந்த வரை அவனை எதிர்த்துப் போரிட்டேன் என்று கூறுவதையும் எண்ணுக. இராவணனின் அரிய தவத்தில் மகிழ்ந்து போன சிவபெருமான், இராவணனுக்குச் சந்திரகாசம் என்னும் வாளினைத் தந்தான் என்பதும் முன்பே பேசப்பட்டதொன்றே. பாவியாகிய இராவணனுக்கும் சிவபெருமான் வாள் தந்து மகிழ்ந்தான் என்பதால் இராவணனது தவச்சிறப்புத் தெரிய வருதல் காண்க.

115. இராமன் அடைந்த சீற்றம்

கூறின மாற்றம் சென்று செவித்தலம் குறுகாமுன்னம்
ஊறின உதிரம், செங்கண்; உயிர்த்தன, உயிர்ப்புச் செந்தீ;
ஏறின புருவம் மேல்மேல்; இரிந்தன சுடர்கள் எங்கும்;
கீறினது அண்டகோளம்; கிழிந்தன கிரிகள் எல்லாம். (3619)

(மாற்றம் - சொல்; குறுகுதல் - அடைதல் \ சேர்தல்; ஊறின - பொழிந்தன \ சுரந்தன; உயிர்ப்பு - பெருமூச்சு; இரிதல் - நிலைதடுமாறி ஓடுதல்; சுடர்கள் - சூரிய சந்திரர்; கீறின - பிளவுற்றன; கோளம் - உருண்டை; கிழிதல் - பிதிர்தல் \ சிதைந்து போதல்)

இவ்வாறு சடாயு கூறிய சொற்கள் சென்று இராமனது செவித்தலத்தில் சேர்ந்த உடனேயே, அவனது கண்கள் சிவப்பேறி இரத்தத்தைப் பொழிந்தன, அவன் விட்ட பெருமூச்சு, சிவந்த தீயை வெளிப்படுத்தின; அவனது புருவங்கள் நெற்றிமேல் மேன் மேலும் ஏறலாயின, அது கண்டு சந்திரன் சூரியன் என்னும் சுடர்கள் தம் நிலைகெட்டு அஞ்சிஓடின; அண்ட உருண்டை பிளவுபட்டது; மலைகளெல்லாம் சிதறிப்போயின.

'குறுகாமுன்னம்' என்பது குறுகிய உடனே என்ற பொருள் தந்து நின்றது. சிவந்தகண்களில் தீப்பொறி பறத்தலும், மூச்சுக்காற்று வெப்பம் மிகுந்த தீயைப்போல் வெளியாதலும், புருவங்கள் நெற்றிமேல் ஏறுதலும் வெகுளியின் மெய்ப்பாடுகள். இராமன் முதன் முதலாகக் கோபம் கொண்டதைக் காட்டும் பாடல் இது. முன்பு துருவாசர், விசுவாமித்திரர், இலக்குவன் முதலியோர் கோபம் கொண்டபோது இம்மெய்ப்பாடுகள் விவரிக்கப்பட்டிருப்பதை நினைவு கூர்க. இவர்களின் கோபத்தால் உலகில் ஏற்படும் மாற்றங்களும் காண்க. இங்கே சந்திர சூரியர்கள் தத்தம் இடம் விட்டு அஞ்சி ஓடினர்; உலக உருண்டை பிளவு பட்டுப்போயிற்று; மலைகளெல்லாம் சிதைவுற்றன என்று இராமனின் கோபத்தின் விளைவுகளைக் கூறி, அவன் இறைவனின் அவதாரம் என்பதைப் பெறவைப்பதை உணர்க.

116. கவிக்கூற்று

மண்ணகம் திரிய, நின்றமால் வரை திரிய, மற்றைக்
கண் அகன் புனலும் காலும் கதிரொடும் திரிய, காவல்
விண்ணகம் திரிய, மேலை விரிஞ்சனும் திரிய, "வீரன்,
எண்அரும்பொருள்கள் எல்லாம்" என்பது தெரிந்தது அன்றே? (3620)

(மண்ணகம் - பூமி; திரிதல் - நிலைகெட்டுச் சுழல்தல்; மால்வரை - பெரிய மலைகள்; கண் அகன் - இடம் அகன்ற; புனல் - கடல்நீர்; கால் - காற்று; கதிர் - சூரிய சந்திரர்; விரிஞ்சன் - பிரமன்)

இவ்வாறு இராமன் கொண்ட கோபத்தால், பூமி தன் நிலையழிந்து சுழல்வதாயிற்று; நிலைத்துநின்ற பெரிய மலைகளெல்லாம் சுழலலுற்றன; மற்ற இடமகன்ற பரப்பை உடைய கடல் போன்ற நீர் நிலைகளும், காற்றும், சூரிய சந்திரர்களும் சுழலலாயின. மிக்க காவலுள்ள விண்ணுலகு - ஆகாயம் - கூடச் சுழலலுற்றது; எல்லாவற்றிற்கும் மேல் மேல் உலகமாகிய சத்தியலோகத்தில் உள்ள பிரமதேவனும் சுழலலானான். எனவே, வீரனாகிய இராமபிரானே, அளவற்ற சர, அசரப்பொருள்கள் எல்லாமுமாக இருக்கிறான் என்பது இப்பொழுது தெரியவரலாயிற்று.

இராமபிரான் பரம்பொருளின் அவதாரம் அல்ல என்றால் பஞ்ச பூதங்களும் நிலை தளர்ந்து சுழலாது. அவையனைத்தும் சுழன்றமையால் இராமபிரான் திருமாலின் அவதாரமே என்பது அளந்தறியப்பட்டது என்பதாம்.

117. "குறித்த வெங்கோபம் யார்மேல்
கோளுறும்கொல்?" என்று அஞ்சி,
வெறித்துநின்று, உலகம் எல்லாம்
விம்முறுகின்ற வேலை,
பொறிப் பிதிர்படலை, செந்தீப் புகையொடும்
பொடிப்ப, "பொம்" என்று
எறிப்பது ஓர் முறுவல் தோன்ற.
இராமனும் இயம்பலுற்றான். (3621)

(குறித்த - மனத்தில் எழுந்த; கோள் உறுதல் - கொள்ளுதல்; வெறித்து - திகைத்து; விம்முறுதல் - கலங்குதல்; படலை - திரட்சி; எறிப்பது - ஒளிவீசுதல்; முறுவல் - புன்சிரிப்பு; பிதிர்தல் - உதிர்தல்; பொடித்தல் - தோன்றுதல்)

இவ்வாறு இராமன் கொண்ட பெருஞ்சினம் யாரைப் போய்ப் பற்றுமோ? என்று எல்லா உலகங்களுமே அஞ்சித் திகைத்துச் செயலற்றுக் கலங்கி நிற்கின்ற சமயம், பெரும் திரட்சியான புகையோடு கூடிய சிவந்த தீத்திரளிலிருந்து ஒரு பொறி சிதறித் தோன்றுவதைப் போல ஒலி செய்து கொண்டு, ஒளிவீசும் ஒரு புன்சிரிப்புடன், இராமபிரான் பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

118. இராமபிரான் சினந்து கூறியவை

"பெண்தனி ஒருத்திதன்னை, பேதை வாள் அரக்கன் பற்றிக்
கொண்டனன் ஏக, நீ இக்கோளுற, குலுங்கல் செல்லா
எண் திசை இறுதிஆன உலகங்கள் இவற்றை, இன்னே,
கண்ட வானவர்களோடும் களையுமாறு, இன்று காண்டி." (3622)

(பேதை - அறிவற்ற; கோள் உறுதல் - கொலை செய்யப்படுதல்; குலுங்கல் - நடுங்குதல்; களைதல் - அழித்து ஒழித்தல்; வாள் - கொடிய \ வாளேந்திய; இன்னே - இப்பொழுதே)

"துணை ஏதும் இன்றித் தனியாக இருந்த பெண்ணாகிய ஒப்பற்றவளான சீதையை, அறிவற்றவனும், கொடியவனும், வாளேந்தியவனுமான அரக்கன் இராவணன் அபகரித்துக்கொண்டு செல்லவும், அவனால் நீ இத்தகைய கொடிய நிலையை அடையவும், இதைக்கண்டும் நடுக்கமுற்றுக் கலங்காது எதிர்க்காது, தடுக்காது, வாளாவிருந்த இந்த எட்டுத்திசைகளின் எல்லைவரை பரந்திருக்கும் உலகங்கள் எல்லாவற்றையும், இப்போதே, தேவர்களோடும் சேர்த்து, நான் அழித்து ஒழிக்கப்போகும் முறையை இப்பொழுதே பார்ப்பாயாக!" என்றான் இராமன்.

'கோள் உறுதல்' என்பது கொலை உண்டது என்ற பொருளையும் தரும். "அத்தகைய பாவச் செயலைக் கண்டு எட்டுத் திசைகளின் இறுதிவரை பரவியிருக்கும் உலகங்கள் எல்லாமும் நடுங்கி இருக்க வேண்டும். அதைக் கண்டு வானவர்கள் பொங்கி எழுந்து எதிர்த்திருக்க வேண்டும். இவற்றை

இவ்விருதரத்தாரும் செய்யாததனால் நான் இப்போது உலகங்கள்ளையும் தேவர்களையும் அழித்தொழிக்கப்போகிறேன் பார்" என்றான் இராமபிரான் என்பதாம்.

119. "தாரகை உதிருமாறும், தனிக் கதிர் பிதிருமாறும்,
பேர்அகல் வானம் எங்கும் பிறங்கு எரி பிறங்குமாறும்,
நீரொடு நிலனும் காலும், நின்றவும், திரிந்தயாவும்,
வேரொடும் அழியுமாறும், விண்ணவர் விளியுமாறும்." (3623)

(தாரகை - நட்சத்திரங்கள் \ விண்மீன்கள்; கதிர் - சூரியன்; தனி - ஒப்பற்ற; அகல் - விரிந்த; பிறங்குதல் - விளங்குதல்; எரி - நெருப்பு; கால் - காற்று; நின்ற - நிலைத் திணைப்பொருள்கள்; வேர் - அடி; விளிதல் - இறத்தல்; பிதிர்தல் - துகளாகச் சிதறிவிழுதல்) (குளகப்பாடல்)

"என்னுடைய சினத்தால், விண்மீன்கள் உதிர்ந்து விழப்போவதையும், ஒப்பற்ற சூரியன் சிதைந்துவிழப் போவதையும், பெரிய அகன்ற ஆகாயம் எங்கிலும், விளங்குகின்ற நெருப்புத் தோன்றப் போவதையும், நீர், நிலம், காற்று, அசையும் பொருள். அசையாப் பொருள் இவை எல்லாமும் அடியோடு அழிந்துபோகப் போவதையும், தேவர்கள் இறந்து அழியப் போவதையும் - பாடல் தொடர்கிறது.

120. "இக்கணம் ஒன்றில், நின்ற, ஏழினோடு ஏழு சான்ற
மிக்கன போன்று தோன்றும், உலகங்கள் வீயுமாறும்,
திக்குடை அண்ட கோளப்புறத்தவும் தீந்து, நீரின்
மொக்குளின் உடையுமாறும், காண்" என, முனியும் வேலை. (3624)

(நின்ற - நிலைபெற்ற; மொக்குள் - குமிழி; முனியும் - கோபிக்கும்; மிக்கன - மிகப் பெரியன; சான்ற - அமைந்த; வீதல் - அழிதல்; தீந்து - தீய்ந்து \ கருகிப்போதல்; வேலை - சமயம்; புறத்த - அப்பாலுள்ள) (குளகப்பாடல்)

"எனது சீற்றத்தினால், நிலைபெற்று நிற்கின்றனவும் மிகப்பெரியன போலத் தோற்றம் அளிப்பவையுமான இந்தப்பதினான்கு என்று அமையப்பெற்ற உலகங்களும் இந்த ஒரு கணத்தில் அழிந்துபோகும் விதத்தையும், எட்டுத்திக்குகளையும் எல்லையாகவுடைய அண்ட உருண்டையின் அப்பாலுள்ள உலகங்களும் தீய்ந்து கருகிப்போய் நீர்க்குமிழி போல் உடைந்து போகும் விதத்தையும் காண்பாயாக" என்று கோபித்துக் கூறும் சமயத்தில் - பாடல் தொடர்கிறது.

121. சூரியன் மறைதலும், இலக்குவன் கூட அஞ்சுதலும்

வெஞ்சுடர்க் கடவுள் மீண்டு,
மேருவில் மறையலுற்றான்;
எஞ்சல் இல் திசையில் நின்ற
யானையும் இரியல் போன;

துஞ்சின உலகம் எல்லாம் என்பது என்?
துணிந்த நெஞ்சன்
அஞ்சினன், இளையகோவும்; அயல்
உளோர்க்கு அவதி உண்டோ? (3625)

(வெம் - வெப்பமுடைய; மீண்டு - தப்பித்து; எஞ்சல் இல் குறையாத; இரியல்போதல் - நிலைகெட்டு ஓடுதல்; துஞ்சுதல் - அஞ்சிஒடுங்குதல்; அவதி - எல்லை; போய - போயின)

"வெம்மையான கிரணங்களையுடைய சூரியன் கூட, இராமபிரானது சீற்றத்திலிருந்து தப்பிப்பவன் போல, அருகில் இருந்த மேருமலையில் போய் ஒளிந்து கொண்டான்; வலிமை குறையாத, குற்றமற்ற எட்டுத்திசையில் காவலுக்காய் நிற்கின்ற அஷ்டதிக்கஜங்களும் நிலைகெட்டு ஓடிப்போயின; உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் செயலற்று அடங்கிப்போயின என்று சொல்வது என்ன? எதற்கும் துணிந்த நெஞ்சினை உடையவனான, அரசிளங்குமரன் இலக்குவனே, இராமன் சீற்றம் கண்டு அஞ்சினான் என்றால், மற்றும் உள்ளோர்களின் அச்சத்திற்கு ஒரு எல்லை உண்டோ?"

இயற்கையில் மேருமலையில் மறையப் போகும் சூரியனே, இராமன் சீற்றத்தினைத் தாங்காது தப்பித்துப்போய் மேருமலையில் ஒளிந்து கொண்டான் என்று கூறுவது ஒரு நயம்.

122. சடாயு இராமனது சீற்றத்தைத் தணிக்க முயலுதல்

இவ்வழி நிகழும் வேலை, எருவைகட்கு
இறைவன், "யாதும்,
செவ்வியோய்! முனியல்; வாழி!
தேவரும் முனிவர் தாமும்,
வெவ்வலி வீர! நின்னால் வெல்லும்
என்று ஏமுற்று உய்வார்,
எவ்வலி கொண்டு வெல்வார்,
இராவணன் செயலை?" என்றான். (3626)

(யாதும் - சிறிதும்; வெவ் - விரும்பத்தக்க; ஏமுறுதல் - மகிழ்தல்; உய்தல் - உயிர் பிழைத்திருத்தல்; செவ்வி - மேன்மையான)

இவ்வாறு நிகழும் சமயத்தில், கழுகுகளுக்கு அரசனான சடாயு, இராமபிரானைப் பார்த்து, "மேன்மைக்குணங்கள் உடையவனே! விரும்பத்தக்க வலிமை படைத்தவனே! தேவர்களும், முனிவர்களும், உன்துணை கொண்டுதான் அரக்கர்களை வெல்ல முடியும் என்று கருதி மகிழ்ச்சியால் உயிர் தாங்கி இருக்கிறார்கள்; அவ்வாறிருக்க அவர்கள் எந்தத் துணையைக் கொண்டு இராவணனின் இத்தகைய கொடிய பாவச் செயலைத் தடுத்து வெற்றிகொள்ள முடியும்?" என்று கேட்டான்.

123. "தேவர்கள் இராவணனுக்குக் குற்றேவல் செய்கிறார்கள்" எனல்.

"நாள்செய்த கமலத்து அண்ணல்
நல்கிய நவை இல் ஆற்றல்
தோள் செய்த வீரம் என்னில்
கண்டனை; சொல்லும் உண்டோ?
தாள் செய்ய கமலத்தானே முதலினர்,
தலை பத்து உள்ளாற்கு
ஆள்செய்கின்றார்கள்; அன்றி,
அறம் செய்கின்றார்கள் யாரே?" (3627)

(நாள் - புதிய \ அன்றலர்ந்த; கமலம் - தாமரை மலர்; அண்ணல் - பெரியோன் \ பிரமன்; நவை இல் - குற்றமற்ற; தாள் - தண்டு \ நாளம்; செய்ய - சிவந்த; ஆட்செய்தல் - அடிமைவேலை செய்தல்; நாள் - வாழ்நாள் \ ஆயுள்காலமுமாம்)

"அன்றலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பெருமைபொருந்திய பிரமதேவன் வரமாக அளித்த, குற்றமற்ற வலிமையுடைய இராவணனுடைய தோள்கள் செய்த வீரத்தின் சிறப்பை, மிக்கவலிமையுள்ள நானே என் சிறகுகள் அறுபட்டு வீழ்ந்து கிடப்பதிலிருந்து கண்டு கொண்டிருப்பாய்; என்றால் இதைவிட அவன் தோளாற்றலைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? தண்டுகளை உடைய சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் முதல், எல்லாத் தேவர்களும், பத்துத்தலையை உடைய இராவணனுக்கு அடிமைத் தொழில் தான் செய்கிறார்களே தவிர, தத்தம் தருமங்களைச் செவ்வனே செய்பவர் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை" என்றான் சடாயு.

எனவே தேவர்களையும் முனிவர்களையும் சினந்து கொள்வதில் எந்த ஒரு பயனும் விளையப் போவதில்லை என்கிறான் சடாயு.

124. "தெண்திரை உலகம் தன்னில்,
செறுநர் மாட்டு ஏவல்செய்து
பெண்டிரின் வாழ்வர் அன்றே? இது
அன்றோ தேவர் பெற்றி!
பண்டு உலகு அளந்தோன் நல்க,
பாற்கடல் அமுதம் அந்நாள்
உண்டிலர் ஆகில், இந்நாள்
அன்னவர்க்கு உய்தியும் உண்டோ?" (3628)

(தெண் - தெள்ளிய; திரை - அலைகள்; செறுநர் - பகைவர்; பெற்றி - தன்மை \ நிலைமை; பண்டு - முன்பு ; உய்தல் - உயிர்பிழைத் திருத்தல்)

"தெள்ளிய அலைகளை உடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில், பகைவர்களிடத்தில் அவர் ஏவிய குற்றேவல்களைச் செய்து கொண்டு, வலிமையற்ற பெண்கள் போல அல்லவா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

தேவர்கள்? அதுதான் அவர்களது இன்றைய நிலைமை, முன்பு, தம் ஈரடியாலும் உலகத்தையே அளந்தவனான திருமால், அன்று பாற்கடலில் கடைந்தெடுத்த அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுத்ததைத் தேவர்கள் உண்ணாதிருந்திருந்தால், இப்பொழுது அவர்கள் உயிர் பிழைத்திருந்திருப்பார்களோ?" மாட்டார்கள் அல்லவா? என்றான் சடாயு.

அன்று தேவாமிர்தத்தை உண்டதால் அவர்கள் இறவாமை உடையவர்கள் ஆனார்கள். அதனால் இராவணன் தோளாற்றலுக்குத் தப்பி உயிர் பிழைத்து இருக்கிறார்கள். அவர்களை நீ சினந்து கொள்வதில் பொருள் இல்லை என்று குறித்தான் என்க.

125. "வம்புஇழை கொங்கை வஞ்சி
வனத்திடைத் தமியள் வைக,
கொம்பு இழை மானின்பின் போய்,
குலப்பழி கூட்டிக் கொண்டீர்;
அம்புஇழை வரி வில் செங்கை
ஐயன்மீர்! ஆயும்காலை,
உம்பிழை என்பது அல்லால்,
உலகம்செய் பிழையும் உண்டோ?" (3629)

(வரி - கட்டமைந்த; ஐயன்மீர் - மக்களே; வம்பு - கச்சு; தமியள் - தனித்திருத்தல்; இழை - பொருந்திய; கூட்டுதல் - தேடுதல்; ஆய்தல் - ஆராய்தல்)

"கட்டமைந்த வில்லில் அம்பினைப்பொருத்தித் தொடுக்கும் ஆற்றல் பெற்ற சிவந்த கைகளையுடைய என் அன்புமிக்க மக்களே! கச்சையணிந்த கொங்கைகளையுடைய, வஞ்சிக்கொடி போன்ற சீதையை, கானகத்தில் தனியளாய்த் தங்கியிருக்க விட்டு விட்டு,.கொம்பு பொருந்திய மாயப் பொன்மானின் பின்னால் தொடர்ந்து போய், உங்களுக்கு மட்டுமல்லாமல், உங்கள் சூரியகுலத்துக்கே பழியைத் தேடிக்கொண்டுவிட்டீர்களே! ஆராய்ந்து பார்த்தால், இந்தச்செயல் உங்கள் குற்றமே தவிர, உலகம் குற்றம் செய்தது என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?" என்று கேட்டான் சடாயு.

இராமன், முனிவர் முன்பு, தேவர்களை அழிப்பேன் என்றான் முன்பாடலில். அதற்குத் தகுந்த மாற்றம் கூறிய சடாயு, இந்தப்பாடலில் உலகத்தையே அழிப்பேன் என்று கூறிய இராமனுக்கு உலகத்தின்மேல் குற்றமில்லை, உங்கள் மேல்தான் குற்றம் என்று நிறுவுவதை உணர்க. வீட்டிலேயே பெண்டிர் தனித்திருக்கச் செல்லுதல் குற்றம் என்கின்ற போது, காட்டில் இத்தகைய அழகிய பெண்ணைத் தனித்திருக்கச்செய்து, அவளை அகன்று சென்றது உங்களுடைய குற்றமே என்றும், இதில் உலகம் செய்த குற்றம் ஒன்றும் இல்லை என்றும் நிறுவி, இராமனது சீற்றத்தைத் தணிவிக்கிறான் சடாயு என்பதாம். " குலப்பழி "என்பது ஒரு பெரும் பொருள் தரும் அரியசொல். இராமனின் சூரிய குலத்துக்கும், சீதையின் சந்திரகுலத்துக்கும் என்று பொருள்படும். அன்றியும்

இவ்விரு மரபிலும் இதுகாறும் இத்தகைய ஒரு கொடிய செயலானது, "தன் மனைவியை மாற்றான் கவர்ந்து செல்ல, ஒன்றும் செய்ய இயலாது வாளாயிருப்பதும், நடந்ததில்லை என்பதைக் குறிக்கவே குலப்பழி என்ற சொல்லை இங்கே பெய்தார் என்க. "ஏதிலார்குற்றம் போல் தன் குற்றம் காண்கிற்பின், தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" என்பது குறள் 190. "தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின், என் குற்றம் ஆகும் இறைக்கு" என்பதும் மற்றொரு குறள் 431.

126. சடாயு அறிவுரை

''ஆதலால், முனிவாய்அல்லை; அருந்ததி அனைய கற்பின்
காதலாள் துயரம் நீக்கி, தேவர்தம் கருத்தும் முற்றி,
வேதநூல் முறையின் யாவும் விதியுளி நிறுவி, வேறும்
தீதுஉள துடைத்தி'' என்றான், சேவடிக் கமலம் சேர்வான். (3630)

(முனிதல் - கோபித்தல்; வேறும் - மேலும்; தீது - தீமைகள்; சே - சிவந்த)

இறைவனின் சிவந்த திருவடித் தாமரைகளைச் சேரத் தயாராகும் நிலையில் உள்ள சடாயு, இராமபிரானை நோக்கி, "எனவே நீ முனிவர்களையும், தேவர்களையும், இவ்வுலகத்தையும் கோபிக்காதே வசிஷ்டரின் மனைவியாகிய அருந்ததியின் கற்புப்போன்று சிறந்த கற்பினையும், உன்னிடம் தீராக்காதலையும் கொண்டுள்ள உன்னுடைய மனைவியாகிய சீதாதேவியின் துயரத்தைப் போக்கி, தேவர்கள் உன்னிடம் வேண்டிக் கொண்ட அவர்களது கருத்தையும் நிறைவேற்றி, வேதசாத்திர நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி, யாவற்றையும் நெறி தவறாது நிலைநிறுத்தி, மேலும் ஏதேனும் தீமைகள் இருப்பின் அவற்றையும் போக்குவாயாக" என்று கூறினான்.

'அருந்ததி அனைய கற்பின் காதலாளாகிய' சீதாதேவியின் துயரம் நீக்குதல் என்பது, அவளை அபகரித்துச் சென்ற அரக்கனிடமிருந்து அவளை மீட்டல். அவ்வாறு செய்கின்ற பொழுதே, தேவர்தம் கருத்தாகிய, அரக்கர்களை வேரோடு அழித்து, அறத்தை நிலைநிறுத்தல் என்பதும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பது சடாயுவின் கருத்து. "சேவடிக்கமலம் சேர்வான்" என்பது, சடாயு இராமபிரானின் அவதார உண்மையை அறிந்தவன் என்பதையும், பரமபதம் அடைதற்கு உரியவன் என்பதையும் குறிப்பாக உணர்த்தல் காண்க. சீதை இராவணனால் தீண்டப்படவில்லை என்பதை சடாயு ஒவ்வொரு முறையும் வலியுறுத்திக் கூறுவதைக் காண்க. இங்கும் அதையே "அருந்ததி அனைய கற்பின் காதலாள்" என்று கூறுவதையும் உணர்க.

127. இராமன் சீற்றம் தணிதல்

புயல்நிற வண்ணன், ஆண்டு,
அப்புண்ணியன் புகன்ற சொல்லை,
''தயரதன் பணிஈது'' என்ன,
சிந்தையில் தழுவி நின்றான்;

அயல் இனி முனிவது என்னை?
அரக்கரை வருக்கம் தீர்க்கும்
செயல் இனிச் செயல்'' என்று எண்ணி,
கண்ணிய சீற்றம் தீர்ந்தான். (3631)

(புயல் - மேகம்; வண்ணம் - நிறம்; பணி - கட்டளை; தழுவி - ஏற்றுக்கொண்டு; சிந்தை - மனம்; அயல் - வேறு; தீர்த்தல் - அழித்தல்; கண்ணிய - கருத்தில்; கொண்ட \ முன்பு எண்ணிய; வருக்கம் - இனம்; ஆண்டு - அப்பொழுது; புகன்ற - கூறிய)

மேகம் போன்ற கரிய நிறத்தவனான அழகிய இராமன், அப்பொழுது, அந்தப் புண்ணியனாகிய சடாயு கூறிய அறிவுரையை "இது நம் தந்தை தசரதச் சக்கரவர்த்தி இட்ட கட்டளையே," என்று கருதித் தன் மனத்தில் ஏற்றுக்கொண்டு நின்று, முனிவர்கள், தேவர்கள், உலகம் ஆகிய வேறுளோரைச் கோபிப்பதால் என்ன பயன்? எனவே இனிமேல் அரக்கர்களை அவர்கள் இனத்தோடு வேரற அறுப்பதே இனிச்செய்யப்பட வேண்டிய செயல் என்று உறுதியாக எண்ணிக்கொண்டு, தான் முன்பு மனத்தில் கொண்ட கொடிய கோபத்தை நீங்கியவனானான்.

இராமபிரானைப் "புயல் நிறவண்ணன்" எனக்கவிஞர் பரக்கக் கூறுவதைக் காணலாம். சடாயு பரமபதம் அடைதற்குத் தகுதியுடையவன் எனவே "புண்ணியன்". சடாயுவைத் தனது தந்தை போலவே கருதினான் என்பது இங்கு மீண்டும் நிறுவப்பட்டிருப்பதை உணர்க. தன் தந்தை தசரதன் சொல்லைத் தட்டாது எப்படி வனத்தில் புகுந்தானோ, அதுபோல இப்போது சடாயு கூறியவற்றைக் கேட்டுச் சினம் தணிந்தான் என்பது, இராமன் சடாயுவை எவ்வளவிற்கு மதித்தான் என்பது புலப்படுத்தவே என்க.

128. சடாயு உயிர் பிரிதல்

ஆயபின், அமலன்தானும், ''ஐய! நீ அமைதி'' என்ன
வாயிடை மொழிந்தது அன்றி, மற்று ஒரு செயலும் உண்டோ?
போயதுஅவ் அரக்கன் எங்கே? புகல்'' என, புள்ளின் வேந்தன்
ஒய்வினன்; உணர்வும் தேய, உரைத்திலன்; உயிரும் தீர்ந்தான். (3632)

(அமலன் - குற்றமற்றவன்; புகல் - சொல்வாயாக; புள் - பறவை கழுகு; ஓய்தல் - ஆற்றல் குறைதல் \ ஒடுங்குதல்; உணர்வு - அறிவு)

அவ்வாறு சினம் தணிந்தபின், குற்றமற்றவனான இராமன் "தந்தையே! நீ யார்மீதும் கோபம் கொள்ளாது அமைதியடையவாயாக" என்று தங்கள் வாயால் சொல்லியபடி செய்வதை விடுத்து, அதற்குமாறாக வேறொரு செயலையும் செய்வேனோ? செய்யமாட்டேன். அது நிற்க; சீதையைக் கவர்ந்து சென்ற அவ்வரக்கன் எங்கே போனான்? சொல்வீராக!" என்றான். அதற்குப் பறவைகளின் அரசனான சடாயு பதில் கூறுமுன், ஆற்றல் குறைந்தவனாகி. அறிவும் குறையப்பெற்று, ஏதும் கூற முடியாமல், உயிர் பிரிந்தான்.

இங்கே "அமலன்" என்று இராமபிரானைக் குறித்தது காண்க. முனிவர், தேவர், உலகின் மீது தணியாக் கோபம் கொண்டு உலகையே அழிப்பேன் என்று கூறியவனை எப்படி அமலன் என்கிறான்? முதலில் கோபம் கொண்டாலும், தன் தந்தையின் சொற்கேட்டு இப்பொழுது கோபம் தணிந்துவிட்டான் அல்லவா? எனவே அமலன் என்றார் என்க. "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" என்ற முதுரையின் மறுவடிவம் "ஐய நின்வாயிடை மொழிந்ததின்றி, மற்றொரு செயலும் உண்டோ?" என்ற வரிகள் என்பதை நினைக. சடாயு உயிர் நீங்காதிருந்தால் இராமன் சுக்கீரிவனது சேனையுடன் சீதையைத்தேடி உலகம் முழுவதும் எல்லாத் திசைகளிலும் சென்று தேட வேண்டியது இருந்திருக்காது என்பது அறியப்பட வேண்டிய முக்கிய செய்தி. புள்ளின்வேந்தன் ஓய்ந்ததால் உணர்வு தேய்ந்தது, உணர்வு தேய்ந்ததால் உரைக்கமாட்டாதவன் ஆனான், எனவே உயிர் பிரிந்தது என்று படிப்படியாக அவன் உயிர் பிரிந்த தன்மையைக் கூறிய நயம் உணர்க.

129. கவிக்கூற்று

சீதம்கொள் மலருளோனும் தேவரும் என்பது என்னே?
வேதங்கள் காண்கிலாமை, வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணின் பார்த்தான் படிவம் கொள் நெடிய பஞ்ச
பூதங்கள் விளியும் நாளும் போக்குஇலா உலகம் புக்கான். (3633)

(சீதம் - குளிர்ச்சி; விளிதல் - அழிதல்; நாள் - பிரளயகாலம்; போக்கிலா - அழியாத; போக்கிலா உலகம் - பரமபதம்)

குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், தேவர்களும்கூட கண்டு அறிந்து கொள்ள முடியாதவன் என்பது எதற்கு? இவற்றிற்கெல்லாம் மூலாதாரமாக விளங்குகின்ற வேதங்களே அவனை நேரிடையாகக் காணமுடியாதவாறு வெளியே தோன்றாத உருக்கொண்டு தன் தெய்வத்தன்மையைப் புலப்படுத்தாது ஒளித்து விளங்கும் மாவீரனாகிய இராமபிரானின் சேவடித் தாமரைகளைக் கண்களால் கண்டு தரிசித்தான் சடாயு; சடாயு பெரிய வடிவங்கள் கொண்ட பஞ்சபூதங்கள் என்று சொல்லப்படும் மண், விண், புனல், அனல், காற்று என்பவை அனைத்தும் ஒரே சமயத்தில் அழிந்து போகின்ற ஊழிக்காலத்திலும் அழியாது நிலைபெற்றிருக்கும் உலகமாகிய பரமபதத்தில் சென்று சேர்ந்தான்.

இராமபிரான் தனது அவதார உண்மையை மறைத்து, இப்பொழுது இராமன் என்ற மானிடனாக இருக்கிறான். இதனை பிரமதேவனும், தேவர்களும் அறிந்து கொள்வில்லை என்பது என்ன? வேதங்களே அவனைக் கண்டு கொள்ள இயலாமல் மறைந்து நிற்கின்றனவே? என்கிறான் கவிஞன். ஊழி முடிவுக் காலத்தில் பஞ்சபூதங்களும் தாங்கள் தனித்தனியாக இயங்கும் தன்மையை இழந்து, அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கலந்து இவ்வுலகை அழிக்கும் என்பதும், அப்பொழுதும் அழியாது நிலைத்திருக்கும் இடம் பரமபதம் என்பதும்,

அவ்விடத்தைச் சடாயு, இராமபிரானின் திருவடிகளைத் தரிசித்ததால் பெற்றான் என்பதும் கருத்து, இதுபோல், முன்பு சபரி முதலியோர்க்கும், கவந்தன், விராதன் முதலியோர்க்கும் வெளிநின்று காட்சியளித்து பரமபதப் பதவி அடைவதற்குக் காரணமாயிருந்தான் இராமன் என்பதையும் இங்கு நினைவு கூர்க. பிரமன், தேவர்கள், வேதங்கள் ஆகியவற்றிற்குக் கூடத் தோற்றம் தராத இராமபிரான் திருவடிகளைச் சடாயு தரிசித்தான் என்பது சடாயுவைச் சிறப்பிக்க என்க.

130. வீடு அவன் எய்தும் வேலை, விரிஞ்சனே முதலமேலோர்,
ஆடவர்க்கு அரசனோடு தம்பியும், அழுதுசோர,
காடு அமர் மரமும் மாவும் கற்களும் கரைந்து சாய்ந்த;
சேடரும் பாருளோரும் கரம் சிரம் சேர்த்தார் அன்றே. (3634)

(வீடு - பரமபதம் , மோட்சம் , முக்தி விரிஞ்சன் - பிரமன் அமர் - பொருந்திய் மா - விலங்குகள் கல் - மலை சேடர் - நாகர்களுமாம்)

அவ்வாறு சடாயு மோட்ச உலகத்தில் சேரும் சமயம், புருஷோத்தமனாகிய இராமனும், அவன் தம்பியாகிய இலக்குவனும் அழுது சோர்ந்து போக, அவனுடன் கூட, காட்டில் இருக்கும் ஓரறிவுயிர்களான மரங்களும், ஐயறிவுயிர்களான பறவைகளும், விலங்குகளும், அறிவேயற்ற மலைகளும் கூட இக்காட்சியினைக் கண்டு உருகிப்போய்த் தளர்ந்தன் பிரமன் முதலாகிய வானுலகத்தவரும், நாகர் உலகத்தவரும், இந்நிலவுலக மக்களும், இதனைக்கண்டதும் தன்னிலையறியாது, அவர்கள் கைகள் தங்கள் சிரங்களைச் சென்று சேர்ந்தன் தலைமீது கைகுவித்து வணங்கினர் என்பதாம்.

சடாயு பரமபதம் எய்திய சமயம் மரம், விலங்குகள், கற்கள், இராமன், இலக்குவன், விண்ணுலகத்தோர், மண்ணுலகத்தோர், நாகருலகத்தோர் ஆகிய அனைவரும் வருந்திக் கரம் கூப்பித் தொழுதனர் என்பதாம். இந்நிகழ்ச்சி, முன்பு இராமன் அயோத்தியை விட்டுப்பிரியும் போது ஞஆவும் அழுத் அதன் கன்றும் அழுத் அன்றலர்ந்த பூவும் அழுத் புனல், புள்ளும் அழுத் கள்ளொழுகும் காவும் அழுத களிறு கால்வயப் போர்மாவும் அழுத் அம் மன்னவனை மானவே” என்பதை நினைப்பூட்டுவதை உணர்க. கரம்சிரம் சேர்த்தல் என்பது தலை மேல் கைகளைத் தூக்கிக் குவித்த நிலையில் துதித்தலைக் குறிக்கும். ஞவீடு” என்பது உலகப் பற்றினின்றும் விடுபட்டோர் அடையும் நிலை என்பதைக் குறிக்கும்.

131. இராமன் துயரம்

“அறம்தலை நின்றிலாத அரக்கனின்,
ஆண்மை தீர்ந்தேன்;
துறந்தனென், தவம் செய்கேனோ?
துறப்பெனோ உயிரை? சொல்லாய்;

பிறந்தனென் பெற்று நின்ற
பெற்றியால், பெற்ற தாதை
இறந்தனன்; இருந்துளேன் யான்;
என்செய்கேன்? இளவல்!'' என்றான். (3635)

(பெற்றி - தன்மை \ உரிமை; ஆண்மை - வீரம்)

"தம்பி இலக்குவா! தருமத்தின்கண் நிலை நில்லாது, தருமத்தைக் கொன்று அதன் வழியிற் சென்ற அரக்கனாகிய இராவணனால், நான் என்னுடைய வீரமும், ஆண்மைக்குரிய பண்பும் நீங்கப்பெற்றேன்; நான் பிரிந்த பின் என்னைப் பெற்ற தந்தை தசரதன் உயிர் நீங்கினான்; வனத்துள் நான் தந்தையாகப் பெற்ற சடாயுவும், தானும் தந்தையே என்ற உரிமையை நிலைநாட்டி, அரக்கனுடன் போர் செய்து, இப்போது இறந்தொழிந்தான். ஆனால் நான் மட்டும் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது நான் எல்லாவற்றையும் துறந்து தவவாழ்க்கையை மேற்கொள்ளலாமா? அல்லது, என் உயிரையே போக்கிக் கொள்ளலாமா? இவையிரண்டில் எதைச் செய்யவேண்டும்? எனக்குச்சொல்லுவாயாக!" என்று இராமன் இலக்குவனிடம் கேட்டான்.

"அறம் கடைநின்ற அரக்கன்" என்று உளப்பாட்டுத் தன்மையில் கூறாது. "அறம் தலை நின்றிலாத அரக்கன்" என எதிர்மறைத்தன்மையில் கூறியதை உணர்க. அறன் கடை நிற்றல் என்பது, "இன்பம் கருதிப் பெண்வழிச் சேர்தலும், வரைவின் மகளிரோடும், இழிகுல மகளிரோடும் கூடுதலும், பிறன் மனைவியை விரும்புதலும் ஆம்" ஆண்மை தீர்ந்தேன் என்பது வீரத்தையும், மதிப்பு, கம்பீரம், பெண்களை ஆளும் தன்மை முதலியவற்றையும் குறித்தது என்க. தந்தை என்ற உரிமை கொண்டு சடாயு இறந்துபோனான். ஆனால் மகன் என்ற உரிமை கொண்டு நான் இன்னும் இறவாதிருக்கிறேனே என்று நொந்து கூறினான் என்க. பெற்ற தந்தையாகிய தசரதனையும், இங்கு உற்ற தந்தையாகிய சடாயுவையும் இழந்து தடுமாறித் தவிக்கிறான் என்பது புலப்படுத்தப்பட்டது.

132. இலக்குவன் இராமபிரானைத் தேற்றுதல்

என்றலும், இளைய கோஅவ்
விறையினை இறைஞ்சி, "யாண்டும்,
வென்றியாய்! விதியின் தன்மை
பழிஅல விளைந்தது ஒன்றோ?
நின்று இனி நினைவது என்னே?
நெருக்கி அவ்அரக்கர் தம்மைக்
கொன்றபின் அன்றோ, வெய்ய
கொடுந்துயர் குளிப்பது?'' என்றான். (3636)

(இறை - இராமபிரான்; யாண்டும் - எங்கும் \ எப்பொழுதும்; நெருக்கிய - வருத்திய \ துன்புறுத்திய; வெய்ய - கொடிய \ மிக்க; குளிப்பது - முழுகுதல் \ ஆழ்தல்)

என்று இராமபிரான் கூறியதும், அரசிளங்குமரனான இலக்குவன், இறைவனாகிய இராமபிரானைத் தொழுது, "எப்பொழுதும், எங்கும் வெற்றியை உடையவனே! இவ்வாறு சடாயு இறக்க நேர்ந்தது விதியினால் உண்டாகியது அல்லவா? இதை நம் மீது வந்த பழி என எண்ணலாமா? இதுபோல இதுவரை நமக்கு விளைந்த துன்பங்கள் ஒன்றா, இரண்டா? மிக்க துன்பங்களை அனுபவித்து விட்டோம் அல்லவா? எனவே இதையே நினைத்து நினைத்து துயரப்பட்டு ஆகப்போவது ஒன்றும் இல்லை; நம் தந்தையையும், தேவர்களையும் துன்புறுத்திய அவ்வரக்கர்களை, நாமும் அடர்த்தியாக நெருக்கிக் கொன்ற பின்புதான், இத்தகைய கொடிய துயரக்கடலில் மூழ்க வேண்டும்? இப்பொழுது வீரத்துடன் எழுக!" என்று கூறினான்.

'தந்தையைக்கொன்ற அரக்கர்களைக் கொன்று வெற்றியடையாவிட்டால் அதுதான் தீராப்பழியாக வந்து சேரும். எனவே அதனைச் செய்வதற்கு இப்போது புறப்படு' என்று இராமனுக்கு ஊக்கம் அளித்தான் இலக்குவன் என்க. அரக்கர்களைக் கொல்லுவதுதான் நாம் முதலில் செய்யவேண்டிய காரியம். அது முடிந்ததன் பின் சடாயு இறந்ததற்காக நாம் வருந்திக் கொள்ளலாம் என்று எடுத்துரைத்தான் என்பதாம்.

133. *''எந்தை! நீ இயம்பிற்று என்னை? எண்மையன்ஆகி, ஏழைச்*
சந்தவார் குழலினாளைத் துறந்தனை தணிதியேனும்
உந்தையை உயிர்கொண்டானை உயிருண்ணும் ஊற்றம் இல்லாச்
சிந்தையை ஆகின், நன்று செய்தவம் செய்கை?'' என்றான். (3637)

(எண் - கருத்து; ஏழை - மெலிந்த \ வலிமையில்லாத \ அபலை; சந்தம் - அழகு; வார் - நீண்ட; குழல் - கூந்தல்; உந்தை - உன்தந்தை \ சடாயு; ஊற்றம் - உறுதி \ முயற்சி)

"என்தந்தை போன்றவனே! என்ன கூறினாய் நீ? அபலைப்பெண்ணான, அழகிய நீண்ட கூந்தலையுடைய சீதையை, இராவணன் கவர்ந்து சென்றதால், அவளை மீட்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாது இராவணன் மீது கொண்ட சினந் தணிந்து அவளைத் துறந்துவிடவும் நீ எளியவனாய், தயாராய் இருக்கலாம். ஆனால், உன் தந்தையாகிய சடாயுவின் உயிரைப் பறித்துக்கொண்டவனான, அவ்வரக்கனுடைய உயிரை உடனே கொல்லவேண்டாம் என்ற உறுதியும் முயற்சியும் உன் மனத்தில் இல்லையென்றால், நீ , செய்தற்கரிய தவம் இயற்றச் செல்லுதலே நன்மை பயப்பதாகும்" என்று இடித்துரைத்தான் இலக்குவன்.

"அபலைப் பெண்ணாகிய சீதையை அபகரித்துச்சென்றவனைச் சும்மாவிடலாமா? சரி. அதற்குத்தான் நீ தணிந்து போவாய் என்றாலும், உன் தந்தையாகிய சடாயுவைக் கொன்றவனைக் கொல்லாமல் வாளா இருக்கலாமா? அவ்வாறு செய்வது சரி என்று நீ கருதினால் நீ கூறியபடி தவம் இயற்றச்செல்லுதல் சரியானதே" என்று அவன் கருத்துக்குத் தான் உடன்படவில்லை என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கிறான் இலக்குவன்

என்பதாம். இராவணன் செய்த முதற்குற்றம், நம் சீதையை நாம் இல்லாத சமயம் பார்த்து, மாறுவேடத்தில் வந்து அபகரித்துச் சென்றது. அதற்கே நாம் அவனைக் கொன்று போட்டிருக்க வேண்டும். நீ சினம் தணிந்துவிட்டாய! அவன் செய்த இரண்டாவது குற்றம் உன் தந்தை சடாயுவைக் கொன்றது. இப்போதும் நீ பொங்கியெழாமல், தவம் செய்யப் போகட்டுமா? என்று என்னைக் கேட்பது என்ன கருதியோ?" என்று இலக்குவன் இடித்துரைத்தான் என்க. இவ்விரு குற்றங்களையும் செய்தவனைக் கொல்ல முற்படுவதே தக்கது; அது அன்றித் தவம் செய்ய முற்படுதல் தக்கதன்று என்றான் என்பதாம். மனைவியைப் பிரித்ததைக் காட்டிலும் தந்தையைக் கொன்றது பெருங்குற்றம் என்பது இலக்குவன் கருத்து.

134. வருத்தம் தணிதல்

அவ்வழி இளவல்கூற, அறிவனும் அயர்வு நீங்கி,
''இவ்வழி இனைய எண்ணின் ஏழைமைப்பாலது'' என்னா,
வெவ்வழி பொழியும் கண்ணீர் விலக்கினன், ''விளிந்த தாதை
செவ்வழி உரிமை யாவும் திருத்துவம்; சிறுவ!'' என்றான். (3638)

(அயர்வு - சோர்வு; இவ்வழி - இப்பொழுது; இனைய - இத்தகைய; ஏழைமை - அறிவின்மை; விலக்குதல் - துடைத்துக்கொள்ளுதல்; சிறுவ - தம்பி; உரிமை - கடமைகள்; திருத்துதல் - செய்தல்; விளிந்த - இறந்த; செவ்வழி - சிறந்தமுறையில்; அறிவன் - முற்றுணர்வுடையவன்)

அவ்வாறு தம்பி இலக்குவன் கூறவும், முற்றும் அறிந்தவனாகிய இராமபிரானும், சோர்வு நீங்கி, இவ்வாறு இப்பொழுது எண்ணிக் கொண்டு இருத்தல் அறிவின்மையின் பாற்பட்டதாகும் என்று மனத்துள் எண்ணிக் கொண்டு, தன் கண்களிலிருந்து பொழிந்த வெப்பம் மிகுந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, இலக்குவனை நோக்கி, "தம்பி!" இறந்துபோன தந்தை சடாயுவுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்கள் எல்லாவற்றையும், குறையில்லாது, முற்றவும், தெளிவாகவும், சிறந்த முறையிலும் செய்து முடிப்போம், வா!" என்று கூறினான்.

'இனைய எண்ணுதல்' என்பது, முன்புதான் கூறிய "தவம் செய்யச் செல்லலாமா? அல்லது உயிரை விட்டுவிடலாமா? என்று இலக்குவனைக் கேட்டசெய்திகள். பகைவனைக் கொல்ல முற்படவேண்டிய நேரத்தில் இதுபோல நினைத்துக் கொண்டிருப்பது அறியாமையின் பாற்பட்டது என்று அவன் கூறுவதால்தான் அவனை "அறிவன்" என்கிறான் கவிஞன். இங்கே ஒன்று கவனியுங்கள் "வெவ்வழிபொழியும் கண்ணீர்" என்பது துக்கத்தில் நாம் உகுக்கும் கண்ணீர் வெம்மையாக - உஷ்ணமாக - இருக்கும் என்றும், ஆனந்தத்தில் நாம் உகுக்கும் கண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும் என்றும் அறிக. உரிமை என்பது ஈமக் கடன்களைக் குறிக்கும். பிதிர்க்கடன்கள் நீர்க்கடன், நெருப்புக் கடன் என்பதைக் குறிக்கும் என்க.

135. ஈமப் பள்ளி அமைத்தல்

இந்தனம் எனைய என்ன, கார் அகில் ஈட்டத்தோடும்
சந்தனம் குவித்து, வேண்டும் தருப்பையும், திருத்தி பூவும்
சிந்தினன்; மணலின் வேதி தீது அறஇயற்றி, தெண்நீர்
தந்தனன்; தாதை தன்னைத் தடக்கையால் எடுத்துச் சார்வான். (3639)

(வேதி - மேடை; தீதற - குற்றமற; இந்தனம் - ஈமவிறகு; எனைய - எவ்வளவு; ஈட்டம் - திரள்; திருத்தி - பரப்பி; தெண்ணீர் - தெளிவான நீர்; தடம் - பெரிய; வேண்டும் - தேவையான)

மணலால் ஒருமேடையைக் குறைவற அமைத்து, அதன்மேல் “எவ்வளவு ஈமவிறகுகள்?” என்று கண்டவர் வியக்கும்வண்ணம், கரிய அகிற்கட்டைகளின் திரளையும், சந்தனக்கட்டைகளையும் குவித்து, தேவையான அளவுக்குத் தருப்பைப்புற்களையும் அழகாக அதன் மேல்பரப்பி, மலர்களையும் தூவினான்; பின்னர், தெளிந்த சுத்தமான தண்ணீரினால் சடாயுவின் உடலைக்குளிப்பாட்டி, தனது தடக்கையால் அவ்வுடலை எடுத்து வந்து அந்த மணல் மேடை மீது வைத்தான்.

136. சிதைக்குத் தீமூட்டுதல்

ஏந்தினன் இருகைதன்னால்; ஏற்றினன் ஈமம்தன்மேல்;
சாந்தொடு மலரும் நீரும் சொரிந்தனன்; தலையின் சாரல்,
காந்துஎரி கஞல மூட்டி, கடன்முறை கடவாவண்ணம்
நேர்ந்தனன் நிரம்பும் நல் நூல் மந்திர நெறியின் வல்லான். (3640)

(சாரல் - பக்கம்; காந்துதல் - எரிதல்; கஞல - நன்கு பற்றுமாறு; கடவாத - முறைதவறாத; நேர்ந்தான் - செய்தான்; நன்னூல் - வேதம்)

சிறந்த வேதங்களையும் சாத்திர நூல்களையும் கற்றறிந்து, மந்திர முறைகளில் வல்லவனான இராமபிரான், தனது இருகைகளால், சடாயுவின் உடலை ஏந்திக் கொண்டு வந்து ஈமப்பள்ளியில் அமைத்திருந்த மணல் மேடையின் மீது ஏற்றினான்; பின்னர் சந்தனம், மலர், நீர் முதலியவற்றை அவ்வுடலின் மீது சொரிந்தான். பின்னர் தலையின் தலைப்புறத்தில், எரிகின்ற நெருப்பைப் பற்றவைத்து, நெருப்புக் கடன்களை, முறைதவறாத வண்ணம், செம்மையாகச் செய்து முடித்தான்.

தனது தந்தை தசரதன் இறந்தபோது தனது கடமைகளை நிறைவேற்ற இயலாத இராமன், அக்குறைபாடு நீங்க, இப்பொழுது தனது தந்தை போன்றவனாகிய சடாயுவுக்கு ஈமக்கடன்கள் நிறைவேற்றியதைப் பெரும்பேறாக எண்ணினான் என்க. இராமன் சடாயுவுக்கு ஆற்றிய இறுதிக்கடன்களை “பிரம்மமேத சமஸ்காரம்” என்று முதல் நூல் கூறும். இது வேதங்கள் கற்றறிந்த வேத விற்பனன் இறந்தபொழுது. அவனுக்கு வேதம் தெரிந்த மற்றொருவனால் செய்யப்படும் ஈமச்சடங்கு என்பதைக் குறிக்கும். இங்கே சடாயு

வேதவிற்பன்னனின் நற்குணங்கள் பெற்றிருந்ததாலும், ஈமப்பள்ளிக்குத் தீ மூட்டிய மைந்தன் இராமன் வேதவித்து என்பதனாலும் இதை "பிரம்ம மேதம்" என்றார் என்பதாம். இராமன் சடாயுவுக்கு ஈமக்கடன்கள் செய்ததால், சடாயு பிரம்மஞானியருள் தலை சிறந்தவன் என்று போற்றப்படுவதை உணர்க. இக்காப்பியத்தில் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் கைகளாலேயே ஈமச்சடங்குகள் நிறைவேற்றிக் கொள்ளும் பெரும் பேறு சடாயுவுக்குக் கிடைத்திருப்பதை மனத்திற் கொள்க.

137. இராமன் நீர்க்கடன் செய்தல்

தளிர்த்தன களித்த பச்சைத் தாமரைக் கெழுமு செம்பூத்
துளித்தன அனைய என்ன துள்ளி சோர் வெள்ளக்கண்ணன்
குளித்தனன், கொண்டல், ஆற்றுக் குளித்தபின், கொண்ட நல்நீர்
அளித்தனன்; அரக்கர்ச் செற்ற சீற்றத்தான், அவலம் தீர்ந்தான். (3641)

(களித்த - செழித்துள்ள; கெழுமு - பொருந்திய; துள்ளி - துளி \ கண்ணீர்த்துளி; கொண்டல் - மேகம்; செற்ற - பகைத்த; அவலம் - துன்பம்; நன்னீர் அளித்தல் - தருப்பணம் கொடுத்தல் \ நீர்க்கடன்)

செழித்து, தழைத்து வளர்ந்திருக்கின்ற பச்சைக்கொடியிற் பொருந்திய சிவந்த அழகிய தாமரை மலரில் இருந்து துளிக்கின்ற தேன் துளிபோல, இராமபிரானது செந்தாமரைக் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் ஒழுகிற்று. எனினும் அதை மறைத்துக் கொண்டு மேகநிற வண்ணனாகிய இராமன் அங்கே இருந்த ஒரு காட்டாற்றில் குளித்துவிட்டு, அதன்பின் அதனின்றும் நல்ல நீரை முகந்து கொண்டு வந்து, தன் தந்தையை எண்ணி நீர்க்கடன்கள் செய்தான், பின்னர்தான் அரக்கர்களிடம் கொண்ட பகைமையால் எழுந்த கோபத்தையும், துயரையும் நீங்கியவனானான்.

பச்சையான தாமரைக்கொடி இராமனது மேனியழகுக்கும், சிவந்த தாமரைப்பூக்கள் அவனது சிவந்த கண்களுக்கும், அம்மலர்களில் துளித்த தேன்துளிகள் இராமன் கண்களில் இருந்து ஒழுகிய கண்ணீருக்கும் உவமைகள்; நீரில் மேகம் படிந்தாற் போன்றிருந்தது அவன் ஆற்றில் குளித்தது என்றும் கூறுவதுண்டு; நன்னீர் அளித்தல் என்பது தர்ப்பணம் கொடுத்தலாகிய நீர்க்கடனைக்குறித்தது. நீர்க்கடன் மூலம் இறந்தோரின் விருப்பங்கள் நிறைவேறும் என்பது நூற்கொள்கை. எனவேதான் தருப்பணம் செய்தல் மிக இன்றியமையாதது என்று இன்றும் கருதப்படுகிறது. இராமன் தருப்பணம் கொடுத்தது கோதாவரி ஆற்றில் என்று வான்மீகம் கூறுகிறது.

138. கவிக் கூற்று

மீட்டுஇனி உரைப்பது என்னே? விரிஞ்சனே முதலமேல், கீழ்
காட்டிய உயிர்கள் எல்லாம் அருந்தின; களித்த போலாம்;

பூட்டிய கைகளால், அப்புள்ளினுக்கு அரசை, "கொள்க" என்று,
ஊட்டிய நல் நீர் ஐயன் உண்ட நீர் ஒத்தது அன்றே! (3642)

(பூட்டிய - ஒன்று சேர்த்து விரித்த; ஐயன் - திருமால் அவதாரமான இராமபிரான்; மேல் - உயர்ந்த; கீழ் - தாழ்ந்த; ஊட்டிய - அளித்த; விரிஞ்சன் - பிரமதேவன்)

"தன் இருகைகளையும் ஒருசேர இணைத்து விரித்த நிலையில் இராமபிரான், அந்தப்பறவைகளுக்கு அரசனான சடாயுவுக்கு, "நீ ஏற்றுக் கொள்க" என்று அளித்த அந்தப்புனித நீர், திருமாலின் அம்சமாகிய இராமபிரானே உண்டதுபோல் ஆயிற்று. எனவே, பிரமதேவன் முதலாக, மேல், கீழ் உலகங்களில் இருக்கும், உயர்ந்தவை, தாழ்ந்தவை என்று எடுத்துக்காட்டப்பட்ட உயிரினங்களெல்லாம், தாமே அதனை உண்டு களித்ததைப் போல மகிழ்ச்சியுற்றன. இதைக்காட்டிலும் இத்தருப்பண நீரின் பெருமையை எப்படிச்சொல்வது?"

எல்லாம்வல்ல எம்பெருமான் இராமபிரான் ஊட்டிய புனித நீரை ஏற்றுக்கொண்டு உண்டவன் பறவைகளுக்கு அரசனான சடாயு. கவிஞன், சடாயு உண்ட நீர் உலகத்தில் உள்ள உயிர்களெல்லாம் நீர் உண்டதை ஒக்கும் என்கிறான். இதனால் சடாயு, இறைவனுடன் இரண்டறக் கலந்து விட்டான் என்பது பொருளாகிறது. ஊட்டியவனும், உண்டவனும் ஒருவனே என்பதால் இவ்வாறு கவிஞன் கூறினான் என்க. பிட்டுக்கு மண்சுமந்தவனின் முதுகில் அரிமர்த்தன பாண்டியன் அடித்த அடி, ஊர் மக்கள் அனைவர் முதுகிலும் பட்டதல்லவா? ஒருமரத்தின் வேரில் ஊற்றிய நீர், அம்மரத்தின் உறுப்புக்களாகிய, வேர், இலை, கிளை, பூ, காய், கனி, முதலியவற்றில் பாய்ந்து செழிப்புறச் செய்கிறதல்லவா? அதுபோல என்க, மகாபாரதத்தில், கண்ணன் உண்ட சிறிய உணவு, துருவாசர் முதலிய உயிர்களுக்கெல்லாம் நிறைவளித்தது என்பது போல என்க. இறைவனைத் தன் உள்கொண்டோர் நிலையும், இறைவனிடம் இரண்டறக் கலந்தோர் நிலையும் ஒரே தன்மையவாம் என்க. தருப்பணம் செய்யும் போது இருகைகளையும் சேர்த்து வைத்துச் செய்ய வேண்டும் என்பது புலனாகிறது.

139. சூரியன் மறைதல்

பல்வகைத்துறையும், வேதப்பலிக் கடன் பலவும், முற்றி,
வெல்வகைக் குமரன் நின்ற வேலையின், வேலை சார்ந்தான்;
தொல்வகைக் குலத்தின் வந்தான் துன்பத்தால், புனலும் தோய்ந்து,
செல்வகைக்கு உரிய எல்லாம் செய்குவான் என்ன, வெய்யோன். (3643)

(துறை - சடங்குகள்; பலி - பிண்டபலி; வேலை - வேளை \ சமயம்; வெய்யோன் - சூரியன்; தொல் - தொன்றுதொட்டு \ மிகப்பழமையான; துன்பம் - இறப்புத்துன்பம் ; வேலை - கடல் \ மேற்குக்கடல்; சார்தல் - அடைதல்; வேலை சார்தல் - மறைதல் \ அஸ்தமனமாதல்)

இறுதிக்கடனாகச் செய்யப்படவேண்டிய பலவகைச் சடங்குகளையும், வேதங்களில் கூறப்பட்டுள்ள பிண்ட பலி முதலான பிதிர்க்கடன்கள் பலவற்றையும் நிறைவாக முற்றச்செய்து, பகைவர்களை வெல்லும் வகையினை எண்ணி சக்கரவர்த்திக் குமாரனான இராமன் நின்ற சமயத்தில், வெப்பமுள்ள கதிர்களைக் கொண்ட சூரியன் தனது தொன்று தொட்டு வந்த பழமையான சூரிய குலத்தில் உதித்த இராமபிரான், சடாயு இறந்த துக்கத்தில், தானும் பங்குகொள்ளும் வண்ணம், நீரில் படிந்து நீராடி, சடாயு செல்லுதற்குரிய நற்கதிக்கு உரிய சடங்குகள் எல்லாவற்றையும் தானும் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு, மேற்குக் கடலை அடைந்து மறைந்தான்.

சடாயுவைத் தன் தந்தை என்று இராமன் ஏற்றுக் கொண்டதால், சூரியனும், சடாவுவைத் தன் குலத்து வந்தவன் என்று கருதித் தானும் இராமனைப் போலவே நீர்க்கடன்கள் இயற்றக் கடலை அடைந்தான் என்பதாம். அன்றியும், காசிப முனிவனின் பதின்மூன்று மனைவியருள் ஒருத்தியாகிய அதிதியின் மகன் சூரியன்; மற்றொரு மனைவியான விநதையின் மகன் அருணன்; அவன்மகன் சடாயு. எனவே சடாயு சூரியனுக்கும் மகன் முறையாதல் காண்க. இயல்பாக மேற்குக் கடலில் அஸ்தமனமான சூரியன், தானும் இராமனுடன் சேர்ந்து சடாயுவின் இறப்புக்கு நீர்க்கடன் அளிக்கக் கடலுக்குச் செல்வதாகக் கூறிய நயம் உணர்க.

சடாயு உயிர் நீத்த படலம் நிறைவுற்றது

11. அயோமுகிப் படலம் (101 பாடல்கள்)

அயோமுகி என்னும் அரக்கியைப் பற்றிக் கூறும் படலம் என விரியும். இது 101 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் "அயோமுகி மூக்கரி படலம்" எனவும், "பிரிதுயர்ப் படலம்" எனவும், "அதோ முகிப் படலம்" எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. "அயம்" என்ற வடமொழிச் சொல்லுக்கு இரும்பு என்பது பொருள். இவள் வசித்து வந்த இடம் ஒரு குகை. கிரௌஞ்ச ஆரண்யம் என்ற இடம். இது மதங்காசிரமத்திற்கு அருகில் இருக்கிறது என்று கூறுவர். முன்பு கண்ட தாடகை, சூர்ப்பணகை போன்ற உருவத்தை உடையவள். காண்பவர் நடுங்கும்படி, அருவருக்கத்தக்க தோற்றத்தளாய், சரிந்த வயிறும், கோரப் பற்களும் கரடுமுரடான உடலும், உடையவள் என்பார் வால்மீகி. அவர் ஒன்பது சுலோகங்களில் கூறிய இந்நிகழ்ச்சியைக் கம்பன் 101 பாடல்களில் ஒரு தனிப்படலமாகவே கூறுகிறான். இராமன் தான் புனைந்த மானிட வேடத்திற்கு ஏற்ப எவ்வாறு தன் மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறான் என்பதை மிக நன்றாகப் பேசுகிறது இப்படலம். அத்யாத்ம இராமாயணத்தில் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடப்படவே இல்லை என்பது கருதத்தக்கது. இது அவலச் சுவைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளதைக் கற்பவர் காணலாம். இலக்குவனிடத்து இராமன் எத்தகைய அன்பு வைத்திருந்தான் என்பதை இப்படலம் நன்கு புலப்படுத்துகிறது. இந்நிகழ்ச்சிகள் இரண்டு இரவும் ஒரு பகல் நேரமும் நடந்த நிகழ்ச்சிகள் ஆகும்.

இப்படலத்துள், சடாயுவுக்குப் பிதிர்க் கடன்கள் இயற்றிய பின் இருவரும் சிறிது தொலைவு நடந்து ஒரு மலையில் தங்குதல்; சீதையின் பிரிவால் இராமன் மனம் துன்புற்றுத் தூங்காது விழித்திருத்தல்; இராமன் நீர் வேட்கை கொள்ளுதல்; இலக்குவன் இருளில் நீர் தேடிச் செல்லுதல்; தனியாக வந்த இலக்குவனைக் கண்டு, அங்கு வாழும் அயோமுகி என்னும் அரக்கி, அவன் மீது காமுறுதல்; இலக்குவன் அவளை யார் எனக் கேட்டலும், அவள் மோகனை என்ற மந்திரத்தால் அவனை நினைவிழக்கச் செய்து, அவனைப் பற்றிக் கொண்டு வானில் செல்லுதல்; நீண்ட நேரம் இலக்குவனைக் காணாது இராமன் துயருறுதல்; இராமன் இறக்கத் துணிதல்; இலக்குவன் மயக்கம் தெளிந்து அவளுடைய பிணிப்பிலிருந்து விடுபட்டு அவளுடைய மூக்கு, காது, கொங்கைகள் ஆகியவற்றை அறுத்துத் துண்டித்தல்; அப்பொழுது அரக்கி எழுப்பிய அலறல் குரலை இராமன் கேட்டல்; அக்னிப் படையைக் கையிலேந்தி, வழிகண்டறிந்து இராமன் இலக்குவனை அடைதல்; நிகழ்ந்தது அறிந்து நெகிழ்தல், பின் வருண மந்திரத்தால் நீர் வரவழைத்துப் பருகி மீண்டும்

சீதையின் நினைவால் துன்புற்றிருத்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இருள் பரவவும், மலை ஒன்றில் தங்குதல்

அந்தி வந்து அணுகும்வேலை, அவ்வழி, அவரும் நீங்கி,
சிந்துரச் செந்தீக் காட்டு ஓர் மைவரைச் சேக்கை கொண்டார்;
இந்திரற்கு அடங்கல் செல்லா இராக்கதர் எழுந்ததென்ன,
வெந்துயர்க்கு ஊற்றம்ஆய விரி இருள் வீங்கிற்று அன்றே. (3644)

(அணுகுதல் - நெருங்குதல்; வேலை - வேளை \ சமயம்; சிந்துரம் - சிவந்த நிறம்; சென்னி - சிகரம் \ உச்சி; மை - கரிய; வரை - மலை; சேக்கை - இருப்பிடம் \ தங்கும் இடம்; வெம் - கொடிய; ஊற்றம் - வலிமை; வீங்கிற்று - பரவிற்று; அந்தி - பொழுது சாயும் காலம் \ சாயங்காலம்)

அவ்வாறு சடாயுவுக்கு இறுதிக் கடன்கள் இயற்றிய பிறகு, சூரியன் மறைதலும், மாலையும் இரவும் சந்திக்கும் அந்திப்பொழுது வந்து நெருங்கிய போது, அங்கிருந்து அவ்விருவரும் கிளம்பி சிவந்த நிறமுடைய சிகரங்களை உடைய கரிய மை போன்ற நிறமுடைய ஒரு மலையை அடைந்து, அதனை அன்று இரவு தங்கும் இருப்பிடமாகக் கொண்டு தங்கினர். ஏற்கெனவே இராமன் சீதையின் பிரிவால் கொடிய துயருற்றிருக்கிறான், அதற்கு இன்னும் வலிமை சேர்ப்பது போல் இருளானது விரிந்து பரவித் தோன்றிற்று. இது எப்படிப் பரவிற்று? இந்திரனுக்கு அடங்காத போர்மேற் கொண்டு எழுகின்ற இராக்கதர்களைப் போல எழுந்தது என்கிறான் கவிஞன்.

அந்தி என்பது பகற்பொழுதின் பிற்கூறு. “சிந்துரச் செந்தீக்காட்டு ஓர் மை வரை” என்ற சொல்லாட்சியை நோக்குக. மலை இயற்கையிலேயே மை போன்ற கரிய நிறம் உடையது. இப்பொழுது அந்தி நேரமானதால் செக்கர் வானம் தோன்றியதால் அம்மலையின் உச்சியெல்லாம் செந்நிறமாகத் திகழ்ந்தது. எனவே செந்நிறச்சிகரம்; கருமை நிற மலை என்பதாம். தலைவன் தலைவி பிரிவில், இருட்பொழுது வெந்துயர் விளைவிக்கும் என்பது மட்டுமல்லாது அவ்விருள் அவர் பிரிவிற்கு வலிமை சேர்க்கும் என்று கூறுவதையும் உணர்க.

2. இராம இலக்குவர் இருவரும் மனம் கலங்குதல்

தேன்உக அருவி சிந்தி, தெருமரல் உறுவ போல,
கானமும், மலையும், எல்லாம் கண்ணின் நீர் உகுக்கும் கங்குல்,
மானமும் சினமும் தாதை மரணமும், மைந்தர் சிந்தை,
ஞானமும் துயரும் தம்முள் மலைந்தென, நலிந்த அன்றே. (3645)

(கானம் - காடு; உக - ஒழுக் தெரு; மரல் - மனத்தடு மாற்றம் \ மனச்சுழற்சி; கங்குல் - இரவுப் பொழுது; மலைதல் - மாறுகொள்ளுதல் \ போர் செய்தல்; நலிதல் - தாக்கி வருத்துதல்; மானம் - அவமானம்; ஞானம் - தூய அறிவ;)

காட்டிலுள்ள மரங்களிலிருக்கும் மலர்கள் தேனைச் சிந்தியும், மலைகள் தம்பால் உள்ள அருவிகளை ஓட விட்டும், மனத்தடுமாற்றம் உற்றது போல, அவ்விரவில் கண்ணீர் சிந்தின. சீதையின் பிரிவால் உண்டான அவமானமும், அரக்கனைக் கண்டு சீதையை மீட்க முடியாததால் அரக்கன்மேல் எழுந்த கோபமும், சடாயுவின் மரணமும், இவையெல்லாம் சேர்ந்து, தூய அறிவும், பெருந்துயரமும் தம்முள் மாறுபட்டுப் போரிட்டுக் கொண்டதைப் போல, அவ்விருவர் மனங்களையும் இரவுப் பொழுது தாக்கி வருத்தியது.

இராம இலக்குவர்க்கு உள்ள துயர் கண்டு, காட்டிலுள்ள மரங்கள் தேனை உகுத்துக் கண்ணீர் சிந்தின; அங்குள்ள மலைகள் அருவியை ஓடவிட்டுக் கண்ணீர் சிந்தின என்பதாம். அறிவற்ற காடும் மலையும் அவர்கள் துயர் கண்டு கண்ணீர் வடித்தன என்பது ஒரு நயம். "அலமரல், தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" என்பது தொல்காப்பியம். கம்பனின் விசித்திரப் பாடல்களுள் இதுவும் ஒன்று. நேர் பொருள் காண இயலாது.

3. மெய்உற உணர்வு செல்லா அறிவினை வினையின் ஊக்கும்
பொய்உறு பிறவிபோல, போக்க அரும் பொங்கு கங்குல்,
நெய்உறு நெருப்பின் வீங்கி நிமிர்தர, உயிர்ப்பு நீள,
கையறவு உறுகின்றாரால்; காணல் ஆம் கரையிற்று அன்றே. (3646)

(ஊக்குதல் - தள்ளுதல் \ செலுத்துதல்; வீங்கி - வெம்மை மிகுந்து; நிமிர்தரல் - உயர்ந்தெழுதல்; உயிர்ப்பு - பெருமூச்சு; கையறவு - செயலற்ற நிலை; கரையிற்று - முடிவற்றது)

உண்மையான தத்துவ ஞானத்தின் வழியே செல்லாத அறிவினைத் தீயநெறிகளில் செலுத்தும் பொய்யான இப்பிறவியைப் போல, எவராலும் எளிதில் கடத்தற்கரிய அந்த இரவுப் பொழுது, நெய் ஊற்றி வளர்க்கப் பெற்ற ஓமத்தீ விரிந்து பரந்து, உயர்ந்து எரிவதைப் போல, இராம இலக்குவர், நீண்ட பெருமுச்சுவிட்டுச் செயலற்று நிற்கிறார்கள்; அவர்களுக்கு எவராலும் எளிதில் கடத்தற்கரிய அந்த இரவுப் பொழுது, கரையற்ற கடல் போல் நீண்டு கொண்டே போனது போலத் தோற்றியது.

"மெய் உற உணர்வு செல்லா அறிவு" என்பது, தத்துவஞானம் பெற்றவர்களிடம் பலகாலமாகப் பழகி, கேட்டல், சிந்தித்தல் , தெளிதல் என்னும் மூன்று உபாயங்களாலும் உணர்ந்த அறிவு என்று பொருள்படும்; இவ்வாறு செய்யாரது அறிவு அவர்களைத் தீவினையின்பாற் செலுத்திவிடும் என்பது கருத்து; 'பொய்உறு பிறவி' என்பது அநித்தியமானது - நிலையில்லாதனவற்றை நிலைபெற்றது என்று உணர்கின்ற பேதைமையை உணர்த்தியது. இப்பிறவி தொடர்ந்து வரும் என்பதாம்; அதுபோல இரவும் தொடர்ந்து நீட்டித்துக் கொண்டே இராம இலக்குவரை வருத்தியது என்பதாம். அவர்களுடைய செயலற்ற நிலையை "நெய்உறு நெருப்பின் வீங்கி நிமிர்தர, உயிர்ப்பு நீளக் கையறவு உறுகின்றார்" என்றார். இங்கே பிறவியையும் கடல் என்றார் இரவுப்பொழுதையும் கடல் என்றார்; என்பதை உணர்க. மெய்யுணர்வு இல்லாத அறிவு, மனிதனைத்

தீவினைகளில் புகுத்திப் பிறப்பினைத் தொடர்ச்சியாக விளைவிக்கும். நெய்யினால் நெருப்பு உயர்ந்து எரிவது போல, இவர்கள் துயரால் இரவுப் பொழுதும் காலஅளவின்றி நீட்டிப்பது போலத் தோற்றியது என்பதாம்.

4. இராமன் கண்துயிலாது துயருறுதல் - கவிக்கூற்று

யாம்அது தெரிதல் தேற்றாம்; இன் உயிர்ச் சனகி என்னும்
காமரு திருவை நீத்தோ? முகமதி காண்கிலாதோ?
தேமரு தெரியல் வீரன் கண் எனத் தெரிந்த செய்ய
தாமரை, கங்குற் போதும், குவிந்திலாத் தன்மை என்னோ? (3647)

(தேம் - நறுமணம்; மரு - மருவிய , பொருந்திய; தெரியல் மாலை; தெரிந்த - கூறப்படுகின்ற; செய்ய - சிவந்த; கங்குல் - இரவு; காமரு - அழகிய \ விரும்பத்தக்க; தேர்தல் - தெளியப்பெறுதல்; தே - தெய்வத்தன்மையுமாம்)

நறுமணமும், தெய்வத்தன்மையும் பொருந்திய மாலையை அணிந்த வீரனாகிய இராமனுடைய, கண் என்று கூறப்பட்டு விளங்குகின்ற, சிவந்ததாமரை மலர்கள், இரவுப்போதிலும் கூட, குவிந்துமூடாது இருக்கும் தன்மைக்கு என்ன காரணம்? தனது இனிய புன்முறுவல் பூக்கும், சனகனின் மகளாகிய சானகி என்னும் அழகிய, விரும்பத்தக்க திருமகளைப் பிரிந்ததாலோ? அல்லது அவளுடைய திங்கள் போன்ற முகத்தைக் காணாமையாலோ? எதனால் என்று எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தாமரை மலர் இயற்கையில் மாலையில் திங்கள் தோன்றும் போதும், சூரியன் மறையும் போதும் குவிந்துவிடும் இயல்பினது. இப்பொழுது அவை குவியாது இருப்பதற்குக் காரணம் திங்கள் தோன்றததாலா? அல்லது தன்னிடம் எப்பொழுதும் உறைந்திருக்கும் இலக்குமி தன்னை விட்டு நீங்கிப்போனதாலா? என்பதை நம்மால் அறிய முடியவில்லை என்கிறான் கவிஞன். சீதையைப் பிரிந்து வருந்தும் இராமன், இரவுப்பொழுது முழுதும் கண்களைக் குவித்துத் தூங்கவில்லை என்பது தான் கவிஞன் கூறுவது. அதைத் தாமரை மலருக்கும், தாமரை மலர் போன்ற இராமனது கண்களுக்கும் பொருந்துமாறு கூறிய நயம் ஓர்க.

5. பெண் இயல் தீபம் அன்ன பேர் எழிலாட்டி மாட்டு
நண்ணிய பிரிவு செய்த நவையினால் நவைஇல் உள்ளத்து
எண்ணியது அறிதல் தேற்றாம்; இமைத்தில, இராமன் என்னும்
புண்ணியன் கண்ணும், வன்தோள் தம்பி கண் போன்ற அன்றே. (3648)

(இயல் - தன்மை; தீபம் - விளக்கு; நண்ணிய - அமைந்த \ ஏற்பட்ட; நவை - குற்றம்; தேற்றல் - தெளிய அறிதல்; புண்ணியன் - நல்வினை உடையவன் \ அறவோன்; வன் - வலிய)

பெண்தன்மையுடைய, ஒளிவிடும் விளக்கைப்போன்ற மிகுந்த அழகுவாய்ந்த சீதாதேவ்யினிடம் பொருந்திய, பிரிவு செய்த குற்றத்தினால் , குற்றமற்ற

உள்ளமுடையவனான இராமபிரான் என்ன எண்ணினான் என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை; ஆனால் இராமன் என்று சொல்லப்படும் நல்வினையாளனான அறவோனுடைய கண்களும், வலிய தோள்களையுடைய அவனுடைய தம்பியான இலக்குவனின் கண்கள் இமைக்காதன போலவே. இமைக்காமல் இருந்தன.

'பெண் இயல்தீபம்' என்பது சீதையைச் சிறப்பித்துக் கூறுவதாம். சீதை தான் பிறந்த குலத்துக்கும், புகுந்த குலத்துக்கும் மட்டுமின்றி, பெண் இனத்துக்கே - பெண்குலத்திற்கே ஒரு எடுத்துக் காட்டுப்போல ஒளி வீசித்திகழ்ந்ததைக் குறிக்கும் என்க, இலக்குவன் இராமனுடன் இருந்த பதினான்கு ஆண்டுகாலமும் உறங்கவில்லை என்பதைக் கவிஞன் காப்பியத்தில் பல இடங்களிலும் குறிப்பிட்டுச் சொல்வதை நினைவிற் கொள்க. "வரிவில் ஏந்திக் காலை வாய் அளவும் தம்பி இமைப்பிலன் காத்து நின்றான்" என்பது அயோத்தியா காண்டம் கங்கைப் படலம்; "வில்லை யூன்றிய கையோடும், வெய்துயிர்ப்போடும் வீரன் கங்குல் எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்" என்பது அயோத்தியா காண்டம் குகப்படலம்.

6. நிலவு தோன்றுதல்

"வண்டு உளர் கோதைச் சீதை வாள்முகம் பொலிய வானில்
கண்டனென்" என்று, வீரற்கு, ஆண்டு ஒரு காதல் காட்ட,
தண் தமிழ்த் தென்றல் என்னும் கோள் அராத் தவழும் சாரல்
விண்தலம் விளக்கும் செவ்வி வெண்மதி விரிந்தது அன்றே. (3649)

(உளர்தல் - ரீங்காரமிடுதல் \ குடைதலுமாம்; வாள் ஒளிபொருந்திய; ஆண்டு - அவ்விடத்தில்; காட்டல் - தோற்றுவித்தல்; செவ்வி - சிறந்த; தண் - குளிர்ச்சிபொருந்திய; தமிழ் - இனிமை; கோள் - கொல்லும் தன்மை; அரா - பாம்பு; சாரல் - பக்கமலை)

வண்டுகள் குடைந்து ரீங்காரமிடும் மலர்மாலை யணிந்த கூந்தலையுடைய சீதையின் ஒளிபொருந்திய முகம் இப்பொழுது வானில் விளங்குமாறு நான் கண்டேன் என்று எண்ணம் கொள்ளுமாறு அந்த வீரனாகிய இராமனுக்கு ஒரு ஆசைத்தோற்றம் காட்டும் வண்ணம், விண்ணிடத்து விளங்கும் சிறந்த அழகிய வெள்ளிய சந்திரன், குளிர்ச்சி பொருந்திய, இனிய, தென்றல் காற்று என்னும் கொல்லுதலையே தொழிலாகக் கொண்ட பாம்பு, தவழுகின்ற மலைப்பக்கங்களில் விரிந்து பரந்து தோன்றியது.

சீதையினது முகத்தை இனி எப்போது காண்பேன் என்று துயரமுற்றிருந்த இராமனுக்கு அப்போது உதித்த வெண்மதி, சீதையின் முகத்தைப் பார்த்தது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது என்பதாம். தமிழ்என்ற சொல் இங்கே இனிமை என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதைக் காண்க; தவழுதல் என்பது சந்திரன் ஊர்ந்து வருதலைக் குறிக்கும்; தலைவி தலைவர் பிரிவில் பெருந்துயர் தருவது தென்றல், எனவே அதனைக் "கோள்அரா" என்றார் என்க.

7. நிலவு இராமனைத் துன்புறுத்துதல்

களியுடை அனங்கக் கள்வன் கரந்து உறை கங்குற்காலம்
வெளிபடுத்து, உலகம் எங்கும் விளக்கிய நிலவின் வெள்ளம்
நளி இருள் பிழம்பு என்று, ஈண்டு, நஞ்சொடு கலந்து நாகத்
"துளை எயிற்று ஊறல் உற்றதாம் எனச் சுட்டது அன்றே." (3650)

(களி - மனச் செருக்கு; அனங்கன் - மன்மதன் \ அங்கமற்றவன்; கரந்து - மறைந்து; கங்குல் - இரவுப்போது; வெள்ளம் - கற்றை \ பெருக்கம்; நளி - செறிந்த; இருள்பிழம்பு - இருளின் திரட்சி; ஊறல் - நச்சு நீர்; கள்வன் - வஞ்சகன்; துளை - துவாரம்; எயிறு - பல்)

மனச்செருக்கு மிக்க உருவமற்றவனாகிய மன்மதன் என்னும் வஞ்சகன், மறைந்து வாழும் இரவுப் பொழுதில், இவ்வுலகமெங்கும் நன்கு விளக்கமுற வெளிப்படுத்திக் காட்டுகின்ற சந்திரனின் ஒளிவெள்ளம், இராமனுக்கு மட்டும் செறிந்த இருளின் திரட்சி என்று கூறும் படியும், பாம்பின் நஞ்சோடு கலந்து, அதன் துவாரமுள்ள பல்லிலிருந்து ஊறுகின்ற நச்சுநீரைப் போன்றும், சுட்டு வருத்தியது.

பிரிந்த தலைவன் தலைவியர்க்கு இரவுப்பொழுதில் மன்மதன் மறைந்திருந்து மிகுந்த துயரம் தருவான். எனவே அவனைக் கள்வன் என்றார் என்க. உலகத்துக்கெல்லாம் வெளிச்சம் பரப்பிய நிலவின் வெள்ளம், இராமனுக்கு மட்டும் பாம்பின் நச்சு நீரைப் போன்றிருந்தது என்பதாம். பாம்பின் துளையுடைய எயிற்றில் ஊறியது நச்சு நீர் என்கிறான் கம்பன். பெண்ணின் வெள்ளிய எயிற்றிலிருந்து ஊறியது அமிழ்தம் என்கிறான் வள்ளுவன். "பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வால் எயிறு ஊறிய நீர்" என்பது குறள் 1121.

8. இராமன் சீதையை நினைத்து வருந்துதல் (18 பாடல்கள்)

இடம்படு மானத் துன்பம் இருள்தர, எண்ணின் தீர்ந்தான்,
விடம் பரந்தனையது ஆய வெண்நிலா வெதுப்ப, வீரன்,
படம் பரந்தனைய அல்குல், பால் பரந்தனைய இன்சொல்,
தடம் பெருங் கண்ணினாள் தன் தனிமையை நினையலுற்றான். (3651)

(இடம்படு - தன்னிடத்தில் உண்டான \ மானம் அவமானம்; எண் - உணர்வு; தீர்தல் - இழத்தல்; தரல் - மிகுதிப்படுத்தல்; வெதுப்ப - சுட்டு எரிக்க; தடம் - பெரிய)

தனக்கு உண்டான இந்தப் பெரிய அவமானத்தாலாகிய துன்பம் இந்த இரவில் மிகுியாகவே, வேறு நினைவுகள் அனைத்தையும் நீங்குவானாயினான்; விஷம் பரந்து பரவியது போன்ற வெள்ளிய நிலா தன்னைச் சுட்டு எரித்துத் துன்புறுத்த, வீரனாகிய இராமன், பாம்பின் படம் போன்று அகன்ற அல்குலையும், பால் பரந்து விரவியது போன்ற இனிய சொல்லையும், அகன்ற, காதளவோடிய

கண்களையும் உடைய சீதாதேவியின் தனிமையான நிலையை நினைத்துப் பார்க்கத் தொடங்கினான்.

"மானத்துன்பம்" என்பது, அரக்கன் இராவணன் தன் மனைவியைக் கைப்பற்றிச் சென்ற போதும், அவனுடன் போரிட்டு அவனை மீட்டுக்கொண்டு வர முடியாததால் உண்டான அவமானத்தால் ஏற்படும் துன்பம் என்று பொருள் விரிவு கொள்ளும். ஏற்கெனவே இருள் என்னும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தவனாகிய இராமனுக்கு, வெண்ணிலா பரந்து வரவே, அது மிக்க துன்பத்தைத் தந்தது என்பதாம். எனவே மற்ற எண்ணங்களையெல்லாம் நீக்கி சீதையின் தனிமைத் துயரை எண்ணி மேலும் வருத்தமுற்றான் என்க.

9. மடித்தவாயன்; வயங்கும் உயிர்ப்பினன்,
துடித்து வீங்கி, ஒடுங்குறு தோளினன்;
பொடித்த தண் தளிர்ப் பூவொடு மால்கரி
ஒடித்தகொம்பு அனையாள் திறத்து உன்னுவான். (3652)

(வயங்கும் - வெளிப்பட்டு இயங்கும்; உயிர்ப்பு - பெருமூச்சு; வீங்கி - தடித்து \ பெருத்து \ பூரித்து; பொடித்த - அரும்பிய; மால் மதச்செருக்கு; கரி - யானை; உன்னுதல் - நினைத்தல்; ஒடுங்குதல் - தளர்ந்து சோர்தல்)

இராமன் இராவணன் மேல் கொண்ட கோபத்தால் மடித்த உதடுகளை உடைய வாயையும், வெளிப்பட்டுத் தோற்றுகிற பெருமூச்சை உடையவனாகவும், இராவணனை எப்படியும் கண்டு, அவனை அழிக்க வேண்டும் என்று எண்ணுவதால் துடிதுடித்துப் பூரித்துப் பருக்கின்ற, ஆனால் அவன் எங்கு இருக்கிறான் என்பதை அறியாது தளர்ந்து சோர்வுறுகின்ற, தோள்களையும் கொண்டு அப்பொழுதுதான் மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய தளிர்களும் மலர்களும் கூடிய ஒரு பூங்கொம்பினை, மதம் கொண்ட பெரிய யானை ஒன்று ஒடித்துச் சிதைத்ததைப் போன்று, சீதையின் நிலையை எண்ணி, நினைத்து வருந்துபவனானான்.

இராமன் கொண்ட வெகுளியையும், தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஆற்றாமையையும் வெளிக்கொணர்வது இப்பாடல். இவ்விரு சமயத்திலும் வெளிப்படும் மெய்ப்பாடுகள் புலப்படுத்தப்பட்டன. தளிர்களும் பூவும் சீதாதேவியின் உடல் உறுப்புக்களுக்கும், பூங்கொம்பு சீதாதேவிக்கும், மால்கரி இராவணனுக்கும் உவமைகள். இப்பாடலில் அவமானம், சினம், துன்பம், ஆற்றாமை எனப் பல்வேறு சுவைகளின் மெய்ப்பாடுகள் காணக்கிடக்கின்றன.

10. "வாங்குவில்லன் வரும், வரும் என்று, இரு,
பாங்கும், நீள்நெறி பார்த்தனளோ?" எனும்;
வீங்கும் வேலை விரி திரை ஆம் என,
ஓங்கி ஓங்கி ஒடுங்கும் உயிர்ப்பினான். (3653)

(வீங்குதல் - மேற்கிளம்பிப்பொங்குதல்; திரை - அலைகள்; உயிர்ப்பு - பெருமூச்சு; வாங்கு - வளைந்த; பாங்கு - பக்கம்; நெறி - வழி)

பொங்கி எழுகின்ற கடலின் விரிந்த அலைகள் போன்று, மேன்மேலும் பெருகித்தோன்றியும், பின் அடங்கியும் போகும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பவனான இராமன், சீதை இப்பொழுது நம்மை மீட்பதற்காக, எம் தலைவன் இராமன் "நாண்பொருத்தி வளைக்கப்பட்ட வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு இப்பொழுது வந்து விடுவான், இப்பொழுது வந்து விடுவான் என்று எதிர்பார்த்து தான் சென்ற நீண்டவழியின் இருபக்கங்களிலும் பார்த்துக்கொண்டே இருப்பாளோ?" என்று எண்ணி வருந்துவான்.

"ஓங்கிஓங்கி ஒடுங்கும் உயிர்ப்புக்கு, வீங்குவேலை விரிதிரை" உவமை. "வாங்குவில்லான் வரும் வரும் என்று இருபாங்கும் நீள்நெறி பார்த்தனளோ?" என்று இராமன் ஏங்கியது போலவே, பின்னர் சுந்தர காண்டம், காட்சிப்படலத்தில், சீதை, "சுருதிநாயகன் வரும்வரும் என்பதோர் துணிவால், கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்" எனக் கூறப்படுவதையும் நோக்கினால், இருவரும் பிரிவால் எவ்வளவு மனத்துயர் அடைந்தனர் என்பதை நன்கு புரிந்து கொள்ளமுடியும் என்க.

11. ''என் நினைந்திலள் என்பது சாலுமோ?
மின் இனைந்த விலங்கும் எயிற்றினான்,
''நில் நில்'' என்று, நெருக்கியபோது, அவள்
என் நினைந்தனளோ?'' என எண்ணுமால். (3654)

(இனைந்த - அஞ்சி வருந்தத்தக்க)

"என்னைப் பற்றி அவள் நினைத்திருக்கமுடியாது என்று கூறுவது பொருத்த மாகுமோ? மின்னலைப் போன்று அஞ்சி வருந்தத்தக்க கோரப்பற்களையுடைய விலங்கினைப் போன்ற கோர உருவமுடைய இராவணன், அவளை "நில் நில்" என்று அதட்டிய படியே நெருங்கிய போது, "அவள் என்னை நினைத்தாளோ? என்னவெல்லாம் நினைத்தாளோ?" என்று இப்பொழுது எண்ணி ஏக்கமுற்றான் இராமன்.

பிறன்மனைவியை நயத்தலாகிய தீய குணம் கொண்டவன் இராவணன், எனவே அவனை "விலங்கு" என்றார் என்க.

12. ''நஞ்சு காலும் நகைநெடு நாகத்தின்
வஞ்ச வாயில் மதி என மட்குவாள்,
''வெஞ்சினம் செய் அரக்கர்தம் வெம்மையை
அஞ்சினான்கொல்?'' என்று, ஐயுறுமால்'' என்பான். (3655)

(காலுதல் - உமிழ்தல்; நகை - பற்கள்; வஞ்ச - கொடிய; மதி - திங்கள்; மட்குதல் - ஒளி மங்குதல் \ சோர்தல்; வெம்மை - கொடுமை; நாகம் - பாம்பு \ இராகு; நெடு - பெரிய; ஐயுறுதல் - சந்தேகம் கொள்ளுதல்)

விஷத்தைக் கக்குகின்ற துளையுடைய பற்களையுடைய பெரிய கரிய இராகு என்னும் பாம்பின் கொடிய வாயினிடத்தில் அகப்பட்ட சந்திரனைப் போல ஒளிகுன்றிச் சோர்பவளான சீதை, கொடிய கோபம் கொண்டு எல்லோரையும் அச்சுறுத்துகின்ற அரக்கர்களின் கொடிய செயலைக்கண்டு அஞ்சித்தான் நம்மைக் காப்பாற்றுவதற்கு இவ்வளவு நேரமும் இராமன் வாராதிருக்கிறான் என்று, என் வலிமையின் மீது சந்தேகப்படுவாளோ?" என்று வருந்தினான்.

இராகு என்னும் பாம்பு சந்திரனை விழுங்கும் என்று கூறுவது ஒரு புராண மரபு. இங்கே நாகத்துக்கு இராவணனும், திங்களுக்குச் சீதையும் உவமை.

13. பூண்டமானமும், போக்க அருங்காதலும்,
தூண்டநின்று, இடை தோமுறும் ஆர் ஊயிர்,
மீண்டுமீண்டு வெதுப்ப, வெதும்பினான்,
"வேண்டுமோ எனக்கு இன்னமும் வில்?" என்பான். (3656)

(பூண்ட - அணிந்த; போக்கரும் - நீக்குதற்கரிய; தோம்உறுதல் - துன்புற்றுவருந்துதல்; வெதுப்புதல் - சுட்டெரித்தல்)

"தனக்குத் தன் மனைவி பிறனால் அபகரிக்கப்பட்டதால் உண்டான அவமானமும், தன் மனைவியிடம் கொண்ட நீக்குதற்கரிய மாறாத பேரன்பும், உந்தித்தள்ள, இவ்விரண்டிற்கும் இடைப்பட்டுத் துன்புற்று வருந்தும் அவனது அருமையான உயிர் திருப்பத்திருப்பத் தன்னைச் சுட்டெரிக்க, உள்ளம் வெதும்பி, சீதையைக் காப்பாற்ற முடியாத என்னிடம், இத்தகைய விற்படை இன்னும் என்கையில் இருக்க வேண்டுமோ?" என்று தன்னைத் தானே நொந்து கொண்டான்.

முன்பு "உன்னைப்படையுடையான் கொன்றகல, வில்லுடையேன் நின்றேன் விறலுடையேன் அல்லேனோ!" என்று சடாயுவிடம் கூறியமையும் இங்கு நினைவு கூர்க. அவமானத்துக்கும், மாறாத பேரன்பிற்கும் இடையே அவன் ஆர் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது என்பதாம்.

14. வில்லை நோக்கி நகும்; மிக வீங்கு தோட்
கல்லை நோக்கி நகும்; கடைக்கால் வரும்
சொல்லை நோக்கித் துணுக்கெனும்; தொல் மறை
எல்லை நோக்கினர் யாவரும் நோக்குவான். (3657)

(தொல் - பழமையானது; எல்லை - முடிவு; நோக்குதல் - தியானித்தலுமாம்; வீங்கு - பூரித்த \ திரண்ட; கல் - மலை; கடைக்கால் - முடிவில் \ இறுதியில்; சொல் - பழி; நகுதல் - சிரித்தல்; துணுக்குறுதல் - நடுக்கமடைதல்; நோக்குதல் - நோக்கியநோக்கம் \ நோக்கல் நோக்கம்; மறையெல்லை - வேதாந்தம்)

மிகப்பழமையான வேதங்களின் முடிவாகிய வேதாந்தங்களைக் கற்றறிந்த முனிவர்கள் முதலான அனைவரும் வணங்கித் துதிக்கின்ற இராமபிரான், தன்னால் தன் மனைவி சீதையைக் காப்பாற்ற முடியவில்லையே என்று கருதித்

தன் வில்லைப்பார்த்து இகழ்ச்சியாகச் சிரித்துக் கொள்வான். மிக்கப் பருத்து விளங்கும் தன் தோளாகிய மலையைப் பார்த்தும் சிரிப்பான். இறுதியில் தனக்கு வந்து சேரப்போகின்ற பழிச் சொல்லை எண்ணிப் பார்த்துத் திடுக்கிடுவான்.

இராமபிரான் அவதார உண்மை இறுதிஅடியில் புலப்படுத்தப்பட்டது. இங்கே "கல்" என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. மலைபோன்ற தோள் என்றால் பெருமிதம். ஆனால் மலை என்ற பொருளைத்தரும் கல் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கும் நயம் உணர்தல் வேண்டும். தன் மனைவியை அபகரித்துச் சென்ற அரக்கன் மீது அம்புகளை எய்யாமல், வெறும் கல்லைப் போன்று உணர்ச்சியற்றிருந்த தன் தோள்களை இகழ்ச்சியாகக் கல் என்றான் என்க.

15. *கூதிர்வாடை வெங் கூற்றினை நோக்கினன்;*
"வேத வேள்வி விதிமுறை மேவிய
சீதை என்வயின் தீர்ந்தனளோ?" எனும்;
போதகம் எனப் "பொம்" என் உயிர்ப்பினான். (3658)

(போதகம் - இளைய யானைக்கன்று; உயிர்ப்பு - பெருமூச்சு; மேவிய - அடைந்த; வயின் - இடம்; தீர்தல் - நீங்குதல் - கூற்று - கூறுபடுத்துதல் \ உயிரை உடலில் நின்று வேறு படுத்துதல்; வாடை - வடக்கிலிருந்து வீசும் காற்று; வேள்வி - திருமணச்சடங்கு \ ஓமமுமாம்)

"இளம் யானைக் கன்று போலப் பொம் எனப்பெருமுச்சு விடுபவனாகிய இராமன், குளிர்காலத்து வாடைக் காற்றை, கொடிய இயமனைப்போலப் பார்க்கலாயினான்; "வேதங்களில் கூறியபடி திருமணச் சடங்குகளை நிறைவேற்றி நான் மணந்து கொண்ட சீதை, இப்பொழுது என்னைவிட்டு நீங்கிப்போய் விட்டாளோ?" என்று கலக்கமுறுவான்.

குளிர்காலத்து வாடைக்காற்று, கூற்றுவனைப் போல் கொல்லுவதற்குக் காரணம் சீதையைப் பிரிந்ததனால் என்க. இங்கே வேதத்தில் கூறிய விதிமுறையையும், வேள்வியையும் குறிப்பிட்டது. திருமணச்சடங்கின்போது, இருவரும் இன்றுபோல் இணைபிரியாது இன்பமுடன் வாழவேண்டும என்று அக்னி சாட்சியாகக் கூறி நிறைவேற்றிய சடங்கினைக் குறிப்பிட்டான் என்க. விரகதாபத்தால் பிரிந்திருப்பவரின் உயிரைக் கவர்வதால் வாடைக்காற்று 'கூற்று' எனப்பட்டது.

16. *"நின்று பல் உயிர் காத்தற்கு நேர்ந்த யான்,*
என்துணைக் குலமங்கை ஓர் ஏந்திழை
தன் துயர்க்கடல் தீர்க்கும் சதிர் இலேன்;
நன்று நன்று என்வலி!" என, நாணுமால். (3658)

(நேர்ந்த - இசைந்த; இழை - அணிகலன்கள்; சதிர் - தகுதி; வலி - வன்மை; ஏந்திழை - பெண்)

“என் தந்தையின் ஏவலின்படி அரசுரிமை ஏற்று, உலகத்திலுள்ள உயிரினங்கள் எல்லாவற்றையும் காத்து நிற்க உடன்பட்ட நான், இப்பொழுது எனது துணைவியும், நற்குடியில் பிறந்த மங்கையும், ஒப்பற்ற ஆபரணங்களை அணிந்தவளுமாகிய, பெண்ணாகிய சீதையினது ஒருத்தியின் துயரத்தைத் தீர்க்கும் தகுதிகூட இல்லாதவனாகி விட்டேன். என் வலிமை மிக நன்றாயிருக்கிறது” என்று தன்னைத்தானே இகழ்ந்து வெட்கம் கொண்டான், இராமன்.

தண்டகாரண்ய முனிவர்கள் வேண்டுகோளின்படி அரக்கர்களை அழித்து, அறத்தை நிலைநிறுத்தி, எல்லோரையும் காப்பாற்றுவதாக உறுதி கூறிய நான், என்று முதல்வரிக்குப் பொருள் கொள்ளுதலும் பொருத்தமுடையதேயாகும். என்னுடைய மனைவியாகிய ஒருத்திக்கு நேர்ந்த துன்பத்தையே போக்கக் கூடிய தகுதியில்லாதவனான நான், எப்படி என் தந்தை கட்டளைக்கும், முனிவர்கள் வேண்டுகோளுக்கும் இணங்கினேன்? என்று தன் ஆற்றலில் தானே ஐயம்கொண்டு நொந்து கொண்டான் என்பதாம். தன்னைத்தானே காத்துக்கொள்ள வலிமையில்லாத ஒரு எளிய பெண் என்பதால் சீதையை “ஏந்திழை” என்றான் என்பதும் பொருந்துவது காண்க. நன்று நன்று என்ற அடுக்கு, இகழ்ச்சிப் பொருளில் நின்றது.

17. சாயும்; தம்பி திருத்திய தண் தளிர்
தீயும்; அங்குஅவை தீய்தலும், செவ்விருந்து
ஆயும்; ஆவிபுழுங்க அழுங்குமால்;
வாயும் நெஞ்சும் புலர மயங்குவான். (3660)

(புலர்தல் - பசையற்றுப்போதல் \ உலர்தல்; ஆயும் - சிந்தித்தல் \ ஆராய்தல்; ஆவி - உயிர்; அழுங்குதல் - சோர்ந்து வருந்துதல்; சாய்தல் - சோர்ந்துபடுத்தல்)

மனைவியின் பிரிவால் புலம்பித் தீர்த்ததால் இராமன் வாயும் மனமும் வறண்டு போய்க் கலக்கமுற்றான். தன் தம்பி இலக்குவன் திருத்தி அமைத்த குளிர்ச்சிபொருந்திய தளிர்களால் ஆன படுக்கையில் சற்றுச் சாய்வான். அவள் பிரிவு வெம்மை தாங்காது அத்தளிர்ப்படுக்கை தீய்ந்து போகும். அவ்வாறு அவை தீய்ந்ததும் நேரே எழுந்து உட்கார்ந்து என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்திப்பான். வேறுவழி ஒன்றும் தோன்றாததால் உயிர் ஒடுங்கிப்போய்ச் சோர்ந்து வருந்தியிருப்பான்.

18. பிரிந்த ஏதுகொல்? பேர் அபிமானம் கொல்?
தெரிந்தது இல்லை; திரு மலர்க்கண் இமை
பொருந்த, ஆயிரம் கற்பங்கள் போக்குவான்;
இருந்தும் கண்டிலன்; கங்குலின் ஈறுஅரோ! (3661)

(கங்குல் - இரவுப்பொழுது; ஈறு - முடிவு; ஏது - துன்பம் \ காரணம்; அபிமானம் அன்பு; ஆயிரம் - பல; கற்பம் - ஊழிக்காலம்)

"அழகிய செந்தாமரை போலும் கண்களையுடைய இராமன், தான் இமைக்கும் ஒரு நொடிப் பொழுதில் பல்லாயிர கற்ப காலங்களைக் கடக்கவல்லவன், என்றாலும் இப்போது அந்தத் தளிர்ப்படுக்கையில் அமர்ந்து, இந்த ஒரு இரவுப்பொழுது கழிவதையே காண முடியாதவனானான். இதற்குக் காரணம் அவன் தன் ஆருயிர்த் துணைவி சீதை பிரிந்ததாலா? அல்லது அவள் மீது இவன் கொண்ட பேரன்பினாலா? என்பதை நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை" என்கிறான் கவிஞன்.

ஆயிரம் என்ற சொல் இங்கு "பல" என்ற பொருள் தந்து நின்றது. பெருந்துயர் அடைந்தவர்க்கும், தலைவியைப் பிரிந்த தலைவர்க்கும் இரவுப் பொழுது நீட்டிப்பது போன்ற தோற்றம் தரும் என்பது முன்பும் கூறப்பட்டது காண்க.

19. ''வென்றி விற்கை இளையவ! மேல் எலாம்
ஒன்று போல உலப்பு இல நாள்கள்தாம்
நின்று காண்டி அன்றே? நெடுங் கங்குல்தான்
இன்று நீள்வதற்கு ஏது என்?'' என்னுமால். (3662)

(இளவல் - தம்பி; மேல் - முன்பு; கங்குல் - இரவுப்பொழுது; ஏது - காரணம்; உலப்பில - குறைவில்லாத)

இராமன் இலக்குவனை நோக்கி, "எப்பொழுதும் வெற்றியை விளைவிக்கும் வேற்படையைக் கையில் ஏந்திய தம்பி! முன்பெல்லாம், நாம் தண்டகாரண்யத்தில் தங்கியிருந்த போது கணக்கற்ற நாட்கள், ஒரே அளவினவாய்ச் சென்று கொண்டிருப்பதை நீயும் என் அருகிலேயே கண் இமைக்காது நின்று கொண்டு கவனித்திருக்கிறாய் அல்லவா? ஆனால் இன்று மட்டும் இந்த இரவுப்பொழுது நீண்டு கொண்டே செல்வதற்கு என்ன காரணம்?" என்று வினவினான்.

தன் ஆற்றாமையை உணர்த்த இரவுப்பொழுதை "நெடுங்கங்குல்" என்றும் "நீள்வது" என்றும் கூறிய நயம் நோக்குக.

20. ''நீண்ட மாலை மதியினை, நித்தமும்,
மீண்டு மீண்டு மெலிந்தனை, வெள்குவாய்;
பூண்ட பூணவள் வாள் முகம் போதலால்,
ஈண்டு, சால விளங்கினை'' என்னுமால். (3663)

(நித்தம் - தினம் \ நாள்தோறும்; வெள்குதல் - நாணுதல்; பூண் - அணிகலன்கள்; வாள் - ஒளி; சால - மிகவும்; மெலிதல் - தேய்ந்து குறைதல்)

மாலையில் தோன்றிய நிறைந்த சந்திரனைப் பார்த்து இராமன், "முன்பெல்லாம் நான் சீதையுடன் இருந்த பொழுது நாள்தோறும் திரும்பத் திரும்ப வளர்ந்தும், தேய்ந்தும் குறைந்தும் போவாய்! என் சீதையின் முகத்தின் ஒளிக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் நாணம் கொண்டு வெளிர்த்துப்போய் மறைவாய்; ஆனால் இப்பொழுது, அணிகலன்கள் அணியப்பெற்ற அவள் இங்கு

இல்லாமல், என்னை விட்டு நீங்கிப் போனதால், நீ மிகவும் விளக்கமுற்றுத் தோன்றுகிறாயோ?" எனக் கேட்பான்.

21. "நீள் நிலாவின் இசை நிறை தன் குலத்து,
ஆணி ஆய பழிவர, அன்னது
நாணி, நாடு கடந்தனனாம் கொலோ,
சேண் உலாம் தனித் தேரவன்?" என்னுமால். (3664)

(சேண் - நெடுந்தொலைவு \ வான்; தனி - ஒப்பற்ற; தேரவன் - சூரியன்; நீள் -நெடிது; இசை - புகழ்; ஆணி - வன்மைமிக்க; கடத்தல் - நீங்கிப் போதல்; நாணி - வெட்கமுற்று)

"நெடுந்தொலைவிலுள்ள ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற ஒப்பற்ற ஒற்றைச் சக்கரத்தை உடைய தேரை வாகனமாகக் கொண்ட சூரியன், நீண்ட தூரம் ஒளி பரப்பும் நிலவைப் போல உலகெல்லாம் புகழ் நிறைந்து விளங்குகின்ற எங்கள் குலத்துக்கு, வன்மைமிக்க தீராத பழி ஒன்று உண்டாயிற்று என்று எண்ணி, அதற்காக வெட்கப்பட்டுக் கொண்டு, நாட்டு மக்கள் யாராலும் காண இயலாத வண்ணம், இந்நாட்டை விட்டே கடந்து போய் விட்டானோ? அதனால்தான் இன்னும் சூரியன் உதிக்காமல் இரவு நீண்டு கொண்டே போகிறதோ?" என்று தனக்குள் கருதினான் இராமன்.

தன் குலத்தோன்றலான இராமனின் மனைவியை அரக்கன் ஒருவன் அபகரித்துக் கொண்டு சென்றான் என்பது, தான் முதல்வனாக உள்ள தனது சூரியகுலத்திற்கே ஏற்பட்ட ஒரு பெரும் பழி, தீராப்பழி என்பதை உணர்ந்துதான், சூரியன் இந்நாட்டை விட்டே வெளியேறிவிட்டான் போலும். அதனால் தான் இன்னும் இரவு முடியாமல், சூரியன் உதிக்காமல், இரவுப்பொழுது நீட்டித்துக் கொண்டே செல்லுகிறது போலும் என்று எண்ணினான் இராமன் என்பதாம். பொதுவாகப் புகழை வெண்ணிறமாகவும், குளிர்ந்த நிலவுக்கு ஒப்புக் கூறியும் பாடுவது கவிமரபு. ஆணி என்ற சொல் இங்கு அழுத்தமாகத் தைக்கப்பட்டது என்ற பொருளையும் தரும். பழியடைந்தோரை நாடு கடத்துதல் வழக்கம். அவமானத்திற்கு அஞ்சினோர் தாமே நாடு கடந்து கண்காணாத இடத்திற்குச் செல்லுதலும் உண்டு.

22. சுட்ட கங்குல் நெடிது எனச் சோர்கின்றான்,
"முட்டு அமைந்த நெடு முடக்கோனொடு
கட்டி, வாள் அரக்கன், கதிரோனையும்
இட்டனன்கொல் இருஞ் சிறை?" என்னுமால். (3665)

(சுட்ட - வருத்திய; கங்குல் - இரவுப்பொழுது; நெடிது - நீளுதல்; முடக்கோன் - முடவன் \ அருணன்; முட்டு - தடை \ இடையுமாம்; நெடு - முதிய; இரும் - பெரிய \ வலிய; கட்டி - பிணித்து)

சீதையைப் பிரிந்த தன்னை மிகவும் சுட்டெரித்து வாட்டுகின்ற இந்த இரவுப்பொழுது நீண்டு கொண்டேயிருப்பதால் மனத்தளர்ச்சியுற்ற இராமன், "ஒரு

வேளை கொடிய வாட்படையேந்திய அரக்கனாகிய இராவணன், இடைக்குக் கீழே உறுப்புகள் இல்லாது அமைந்த முதியவனாகிய, கதிரவனின் தேர்ச்சாரதியாகிய அருணனையும், சூரியனோடு இணைத்துப் பிணித்துப் பெரிய சிறையில் அடைத்துவிட்டானோ?" என்று கருதலானான்.

இராவணன் நவக்கிரகங்களையும் தன் சிறையில் அடைத்து வைத்திருப்பவன் என்பதை, உத்தரகாண்டம் திக்குவிசயப் படலத்திலிருந்து அறியலாம். இப்பொழுது நிலவு நீங்கிக் கதிரவன் தோன்றாது இரவுப்பொழுது நீட்டிப்பதற்கு, இராவணன் அருணனையும், சூரியனோடு சேர்த்துச் சிறைப்படுத்தி விட்டானோ என்று இராமன் கருதத் தொடங்கினான் என்பதாம். கதிரவன் உதிப்பது சூரிய உதயம், அதற்கு முன் அருணன் தோன்றுவது அருண உதயம் என்பதை நினைவிற் கொள்க. அங்கே முட்டு என்ற சொல் தடை, இடை, கடிவாளம் என்ற பலபொருள்களைத் தந்து நின்றது. அருணன், சூரியனின் தேர்ச்சாரதி. எனவே "முட்டு அமைந்த" என்ற சொல்லுக்கு எப்பொழுதும் கடிவாளத்தைக் கையில் ஏந்திய அருணன் என்று பொருள் கொள்ளுவதும் பொருந்தும். அருணன் தொடைக்குக் கீழ் காலுறுப்பு இல்லாதவன் என்பது முன்னரும் கூறப்பட்டது காண்க. எனவே "முடக்கோன்", முடவன் எனப்பட்டான் என்க. இவன் விநதையின் மகன் கருடனுக்குத் தமையன்; சடாயு, சம்பாதி இவ்விருவர்க்கும் தந்தை. காசியபன் என்ற முனிவரின் பத்தினியருள் ஒருத்தி விநதை. இவள் மகப்பேறு வேண்டி முனிவரை நாடினாள். முனிவர் இரு முட்டைகளை அளித்துப் பாதுகாத்து வைத்திருக்கச் சொன்னார். ஐந்நூறு ஆண்டுகள் ஆகியும் முட்டையினின்றும் கருவெளிப்படாததால், பொறுமையிழந்து, விநதை அம்முட்டையில் ஒன்றையெடுத்து உடைத்துவிட்டாள். அதனின்றும் முடமாக அருணன் தோன்றினான் என்பது ஒரு புராணக்குறிப்பு.

23. "துடியின் நேர்இடை தோன்றலளாம் எனின்,
கடிய கார் இருள் கங்குலின் கற்பம் போய்
முடியும் ஆகின், முடியும், இம்மூரி நீர்
நெடிய மா நிலம்" என்ன, நினைக்குமால். (3666)

(துடி - உடுக்கை; நேர் - நிகர் \ ஒத்த; கடிய - மிக்க \ வெறுக்கத்தக்க; கற்பம் - ஊழி; மூரி - வலிய; நீர் - கடல்; முடியும் - அழியும்; போதல் - நீளுதல்)

"உடுக்கை போன்ற இடுப்பினை உடைய சீதை, இன்று இரவு முடிவதற்குள் என் எதிரில் வந்து தோன்றவில்லை என்றால், இந்த மிக்க கரிய இருளான இரவுப்பொழுது ஊழிக்காலம் வரை நீண்டு சென்று முடிவது உறுதி. அவ்வாறு முடியுமானால், வலிய கடலால் சூழப்பட்ட இந்நீண்ட உலகெல்லாம் என் ஆற்றலால் அழிந்துபடும்" என்று கருதலானான்.

"சீதை இன்று இரவுக்குள் என்னிடம் வராது போனால், காலை விடிவதற்குள் இவ்வுலகு அழிந்துபடும்" என்றான் என்க.

24. "திறத்து இனாதன, செய் தவத்தோர் உற
ஒறுத்து, ஞாலத்து உயிர்தமை உண்டு, உழல்
மறத்தினார்கள் வலிந்தனர் வாழ்வரேல்,
அறத்தினால் இனி ஆவது என்?" என்னுமால். (3667)

(இனாதன - இன்பம் தருபவை அல்லாதன \ துன்பம் தருபவையான; ஒறுத்து - வருத்தி \ தண்டித்து; ஞாலம் - உலகம்; மறத்தினார் - பாவிகள்; வலித்தல் - கவர்ந்து செல்லுதல் \ இடர் செய்தல்; அறம் - அறக்கடவுள்; உழல்தல் - திரிதல்; வலிந்தனர் - வலிமையுடையோர்கள்; திறம் - வலிமை)

"நல்ல தவத்தைச் செய்து கொண்டிருக்கின்ற முனிவர்களுக்கு வருத்தம் விளைவித்தும், துன்பங்களுக்குள் பெருந்துன்பங்களைக் கொடுத்தும், இவ்வுலகத்து உயிர்களையெல்லாம் கொன்று, அவற்றின் உடம்பினை உண்டும் திரியும் கொடிய பாவிகளான அரக்கர்கள், கற்புடைய பெண்களைக் கவர்ந்து சென்ற பின்பும் வலிமையுடையோராய் இன்பமாய் வாழ்ந்திருப்பார்கள் என்று சொன்னால், இந்த அறக்கடவுளினால் இனிமேல் ஏற்படப் போகிற நன்மைதான் யாதோ?" என்று புலம்பினான் இராமன்.

"இனாதன" என்பது இனிமையல்லாத என்ற பொருளைத் தரும் இன்பம் தாராத, துன்பமே விளைவிக்கும் என்று விரியும். "செய்தவத்தோர்" என்பது, "தவம் செய்வார்தம் கருமம்; செய்வார் மற்றல்லார் தவம் செய்வர் ஆசையுள்பட்டு" என்ற குறளை (266) நினைப்பூட்டுவது காண்க. இதே பொருள்பட முன்பு சீதை, "வெல்வதும் பாவமோ? வேதம் பொய்க்குமோ? இல்லையோ அறம்?" என்று சடாயு வீழ்ந்தபோது உருகிக் கூறியதையும் நினைவிற் கொள்க. இது போன்ற ஒரு நிலை நம் ஒவ்வொருவர் வாழ்விலும் வரும் போதும் நாம் இவ்வாறு கூறுவதையும் எண்ணுக. இராமன் இறைவன் அவதாரம் எனினும் அவன் மானிடனாகவே வாழ்ந்து காட்டினான் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு பாடல் இது.

25. மன்மதனும் கலக்கமடைதல்

தேனின் தெய்வத் திருநெடு நாண்சிலை
பூநின்று எய்யும் பொருகணை வீரனும்,
மேல் நின்று எய்ய விமலனை நோக்கினான்;
தான் நின்று எய்யகில்லான், தடுமாறினான். (3668)

(தேன் - வண்டு; திரு - அழகிய; நின்று - பொருந்தி; வீரன் - மன்மதன்; மேல் - ஆகாயம்; விமலன் - குற்றமற்றவன் \ தூயோன்)

வண்டுக் கூட்டம் போன்றதும், தெய்வத் தன்மை பொருந்தியதும், அழகியதும், நீண்டதுமான நாணை வளைத்து வில்லில் மலர்க்கணை பூட்டி, இராமன் எதிர் நின்று போரிடுவதற்குரிய வில்லை உடைய வீரனாகிய மன்மதனும், ஆகாயத்தில் நின்று இராமன்மேல் காமக்கணைகளைத் தொடுக்க

முயன்று, அந்தக் குற்றமற்ற தூயோனை உற்றுப்பார்த்தான். அவனைக் கண்டதும், தன்னால் நிலைத்து நின்று அம்பு தொடுக்க முடியாமல் தடுமாறிப் போனான்.

மன்மதனின் அம்பு, தேன் கூட்டம் போன்று தொடர்ச்சியாகவும், பறந்தும் செல்லும் இயல்பின் என்பதை "தேனின் கணை" என்றார் என்க. மன்மதனின் மலர்க்கணைகள் ஐந்து என்று முன்பு கண்டதை; நினைவு கூர்க. அவை தாமரை, மா, அசோகம், நீலோற்பலம், முல்லை என்பனவாம். கழையே வில்லும் கணை மலர் ஐந்தே, "வசனம், சூதம், அசோகம், முல்லை, குவளை, காமன் கொள்ளும் ஐங்கணையே" என்பது பிங்கல நிகண்டு. "தான் நின்று மலரம்பு எய்கிலான் தடுமாறினான்" என்பது, முன்பு மன்மதன் சிவபெருமான் எதிரில் நின்று மலரம்புகளைத் தொடுக்க முயற்சி செய்த போதுதான், சிவபெருமானால் தன் அங்கம் முழுவதும் எரிக்கப்பட்டு அனங்கனானான். எனவே இப்பொழுது, சிவபெருமானை ஒத்த ஆற்றல் கொண்ட இராமபிரான் எதிரில் நின்று மலர்க்கணை தொடுக்க அஞ்சி, மேல் மறைந்து அம்புகளை எய்ய முற்பட்டான், என்றாலும் அவ்வாறு செய்ய முடியாது தடுமாறினான் என்றார் என்க.

26. உழந்த யோகத்து ஒருமுதல் கோபத்தால்
இழந்த மேனியும் எண்ணி இரங்கினான்
கெழும் தகைக்கு ஒரு வன்மை கிடைக்குமோ,
பழந்துயர்க்குப் பரிவுறும் பான்மையால். (3669)

(உழந்த - முயன்று வருந்திய; ஒரு - ஒப்பற்ற; முதல் - தனி முதல்வனாகிய சிவபெருமான்; பான்மை - தன்மை; கெழுதகை - உரிமை; இரங்குதல் - வருந்துதல்; பரிவுறுதல் - வருந்துதல்)

முன்பு ஆழ்ந்து முயன்று யோகத்தில் அமர்ந்திருந்த ஒப்பற்றவனானவனும், மூவருள் முதல்வனுமான சிவபெருமானின் கோபத்தால், தான் தன் அங்கங்கள் அனைத்தும் எரிக்கப்பட்டு நீறாகி அனங்கனாகிய நிலையை இப்போது எண்ணிப் பார்த்து வருந்தினான் மன்மதன். அந்தப் பழமையான துன்பத்திற்கு இப்போது வருந்தும் தன்மையால், தனது பிறப்புரிமையை நிலைநாட்டுவதற்கு ஒரு வலிமை கிடைக்குமோ? என்று எண்ணலானான்.

மன்மதனது பிறப்புரிமை, பிரிந்திருப்பார்க்குத் தன் மலர்க் கணை கொண்டு துன்பம் தருதல் என்பதாம்.

27. இரவுப்பொழுது கழிதல்

நீலமான நிறத்தன் நினைந்தவை
சூலம் ஆகத் தொலைவுறும் எல்லையில்,
மூல மாமலர் முன்னவன் முற்றுறும்
காலம்ஆம் என, கங்குல் கழிந்ததே. (3670)

(தொலைவுறுதல் - மனம் அழிந்து வருந்துதல்; எல்லை - கால அளவு; மலர் - தாமரை \ உந்தித்தாமரை; முன்னவன் - பிரமன்; காலம் - ஊழிக்காலம் \ பிரமகற்பம்; கங்குல் - இரவுப்பொழுது)

நீலவண்ணனான இராமபிரான், தன் மனைவியின் பிரிவுத் துயரால் எண்ணி வருந்தியவை அனைத்தும் அவனைச் சூலாயுதம் போலத் தாக்கி வருத்தும் அந்தச் சமயத்தில், உலகத் தோற்றத்திற்கே மூலகாரணமான, உந்தித் தாமரை மலரில் தோன்றியவனான பிரமதேவனின் ஊழிக்காலமே முடிவுறுவதைப் போல நீண்டிருந்த அந்த இரவுப் பொழுது, இப்பொழுது நீங்கியது.

நீலம், கருமை, பச்சை இவை எல்லாமும் நிறத்தால் ஓரினத்தைச் சார்ந்தவை என்பதை நினைவிற் கொள்க. பொதுவாக இராமபிரானின் மேனி நிறத்திற்குக் கருமையும், நீலமும் கூறப்படுமாயினும், சில இடங்களில் பச்சை நிறமும் கூறப்படுவதைக் காண்க.

23. இராமனின் பிரிவுத் துயர்

வெள்ளம் சிலம்பு பாற்கடலின் விரும்பும்
துயிலை வெறுத்து, அளியும்
கள்ளும் சிலம்பும் பூங்கோதைக்
கற்பின் கடலில் படிவாற்கு,
புள்ளும் சிலம்பும்; பொழில் சிலம்பும்;
புனலும் சிலம்பும்; புனை கோலம்
உள்ளும் சிலம்பும்; சிலம்பாவேல்,
உயிர் உண்டாகும் வகை உண்டோ? (3671)

(சிலம்புதல் - முழங்குதல் \ முரலுதல் \ ஒலித்தல் \ ரீங்காரமிடுதல்; துயில் - யோக நித்திரை; அளி - வண்டு; கள் - தேன்; புள் - பறவைகள்; பொழில் - சோலை; உள்ளும் - நினைக்கும்; சில் - சில; உண்டாதல் - நிலைபெறுதல்; வகை - வழி; படிதல் - திளைத்து மகிழ்தல்; புனை - மேற்கொண்ட)

அலைகள் மிகுந்த வெள்ளம் ஒலிக்கும் திருப்பாற் கடலில் போய் நித்திரையை விரும்பி மேற்கொண்டவனான திருமாலின் அம்சமான இராமனும், இப்போது அதனை வெறுத்து, வண்டும், தேனும் ஒலி செய்யும் மலர் மாலையணிந்த கற்பின் கடலாகிய சீதாதேவியின் அன்பில் தோய்ந்து மகிழும் இராமனுக்கு வைகறைப் பொழுதை அறிவிப்பது போல, பறவைகள் ஒலி செய்தன; சோலைகளில்உள்ள மலர்கள் ஒலி எழுப்பின; பொய்கையிலும் நீர் நிலையிலும் உள்ள நீர், ஓசை உண்டாக்கியது, இவையெல்லாவற்றையும் விட, தான் மேற்கொண்டிருந்த போர்க்கோலத்தை நினைத்து, அவன் முதுகில் தாங்கியிருந்த அம்பறாத் தூணிகளில் இருந்த சில அம்புகளும் ஒன்றோடு ஒன்று மோதி ஒலி செய்தன; அவ்வாறு அவை ஒலி செய்திருக்காவிட்டால், "தானும்

உயிரோடுதான் இருக்கிறோம்" என்ற எண்ணமே இராமனுக்கு இருந்திருக்காது. இவ்வொலிகளினால்தான் அவன் மீண்டும் உயிர்பெற்று விழித்தெழுந்தான்.

இவ்வொலிகள் அனைத்தும் அவன் துயரத்தைத் தணிவித்து, அவன் உயிரை மீட்டுத் தந்தன என்பதாம். இவ்வம்புகளின் ஒலிகளைக் கேட்டிருக்காவிட்டால், அவன் உயிர் பிரிந்திருத்தலும் கூடும் என்பதாம். பாற்கடலை விடக் கற்பின் கடல் மேம்பட்டதாக இராமன் உணர்ந்தான் என்ற நயம் காண்க.

29. மயிலும் பெடையும் உடன் திரிய,
மானும் கலையும் மருவி வர,
பயிலும் பிடியும் கட களிறும்
வருவ, திரிவ, பார்க்கின்றான்;
குயிலும், கரும்பும், செழுந்தேனும்,
குழலும், யாழும், கொழும் பாகும்,
அயிலும் அமுதும், சுவை தீர்த்த
மொழியைப் பிரிந்தான் அழியானோ? (3672)

(கலை - ஆண் மான்; மருவி - இணைந்து \ பொருந்தி; பயிலுதல் - பழகுதல்; கடம் - மதம்; கரி - ஆண்யானை; அயில்தல் - விரும்பி உண்ணுதல்; தீர்த்த - பயனற்றதாக்கிய; அழிதல் - வருந்தித் தளர்தல்; பெடை - பெண்பறவை; பிடி - பெண்யானை; அயிர் - கற்கண்டுமாம்; கொழும்பாகு - முற்றக்காய்ச்சிய பாகு)

ஆண் மயிலும் பெண் மயிலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து திரிவதையும், ஆண் மானும் கலை மானும் இணை பிரியாது நெருங்கி வருவதையும், காதலில் பழகும் பெண் யானையும் மதம் மிக்க ஆண் யானையும் வந்தும், போய்க் கொண்டும் திரிவதையும் பார்க்கின்றவனாகிய இராமன், குயிலின் குரல் இனிமையையும், கருப்பஞ்சாற்றின் இனிய சுவையையும், செழிப்பு மிக்க தேனின் சுவையையும், புல்லாங்குழலின் இனிய ஓசையையும், யாழின் இனிய ஓசையையும், முற்றக் காய்ச்சிய வெல்லப்பாகின் இனிய சுவையையும், எல்லோராலும் விரும்பி உண்ணப்படும் கற்கண்டின் சுவையையும், இறவாப் பெருவாழ்வு தரும் தேவ அமிர்தத்தையும், தனது அழகிய சொற்களின் இனிமையாலும், சுவையாலும் ஒன்றுமே இல்லையென்றாக்கிய - பயனற்றதாக்கிய சீதையினைப் பிரிந்த இராமன், மனத்தளர்ச்சியுற்றுத் தளராது போவானோ?

அஃறினை உயிர்களான மயில், மான், யானை முதலியவைகளே இணையாய், ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது இருக்கும் போது, உயர்திணை மானிடப் பிறவியான நான், என் மனைவியைப் பிரிந்து துயருறுகிறேனே என்று எண்ணி வருந்தினான் என்பதாம். சுவையில் இனிமைமிக்க கரும்பு, தேன், வெல்லப்பாகு, கற்கண்டு, தேவாமிர்தம் முதலியவற்றையும், சொல்லில் இனிமை மிக்க குயில், ஓசையில் இனிமை மிக்க குழல், யாழ் முதலியவற்றையும், தன்

இனிமையான சொல்லால் பயனற்றதாக்கிய சீதையைப் பிரிந்த இராமன், மனம் அழியாது இருக்க இயலுமோ? என்று கேட்கிறான் கவிஞன்.

20. சூரியன் உதித்தல்

முடி நாட்டிய கோட்டு உதயத்து
முற்றம் உற்றான் முது கங்குல்
விடிநாள் கண்டும், கிளி மிழற்றும் மென்சொல்
கேளா வீரற்கு, "ஆண்டு,
அடிநாள், செந்தாமரை ஒதுங்கும் அன்னம்
இலளால், யான் அடைத்த
கடிநாள் கமலத்து" என அவிழ்த்துக்
காட்டுவான் போல், கதிர் வெய்யோன். (3673)

(முது - முற்றிய் மிழற்றுதல் - இனிமையாகப் பேசுதல் அடிநாள் - முன்னாள் ஒதுங்கும் - வீற்றிருக்கும் அடைத்த - மூடப்பெற்ற , குவித்த் கடி - மணம் நாள் - புதிது , அன்றலர்ந்த் அவிழ்த்து - மலரச்செய்து கோடு - சிகரம் உற்றான் - தோன்றினான் உதயம் - உதயகிரி முடி - மகுடம் \ உச்சி \ கிரீடமுமாம்)

வெப்பம் மிக்க கிரணங்களையுடைய சூரியன், முற்றிய இரவுப்பொழுது முடிந்து, வைகறைப் பொழுது வந்தும், கிளி போன்று இனிமையாகவும், மென்மையாகவும் பேசும் இயல்புடைய சீதாதேவியின் சொற்களைக் கேட்காத வீரனாகிய இராமனுக்கு, அப்பொழுது, "முன்னாளில், செந்தாமரை மலரில் வீற்றிருந்த அன்னப்பறவை போன்ற சீதாதேவி முதல் நாள் மறையும் போது குவிந்து போன மணம்மிக்க தாமரை மலரில் தான் இப்போது இல்லை என்று தெரிவிப்பது போல, அதே தாமரை மலரை மலர்த்திக் காட்டுவதைப் போல, நிலைத்து நிற்கின்ற சிகரத்தை உடைய உதயகிரியின் உச்சியில் முழுமையாகச் சிறந்து விளக்கமுற்றுத் தோன்றினான்."

சூரியன் மறையும் போது தாமரை மலர் குவியும் சூரியன் உதிக்கும் போது தாமரை மலர் மலரும் முதல் நாள் தான் மறையும் போது, இயல்பாகத் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளாகிய சீதாதேவி, அதனுள் இருந்து குவிந்து விடவில்லை. நீயே இப்பொழுது பார்த்துக் கொள் என்று, இராமனுக்குக் கூறுவது போல, அத்தாமரை மலரை நன்றாக விரித்து மலர்த்திக் காட்டுவது போல் இப்பொழுது உதயகிரியில் சூரியன் முழுமையாகத் தோன்றினான் என்பதாம். வெளியில் சீதாதேவியைக் காணாததால், ஒரு வேளை தனது இருப்பிடமாகிய தாமரை மலருக்குள் நேற்று மாலை சென்று ஒளித்துக் கொண்டிருப்பாளோ என்ற ஐயம் இராமனுக்கு வரலாம், அதனால் தன்னைச் சினக்கலாம் என்று அஞ்சிய கதிரவன், அவ்வாறு இல்லை என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காகவே இன்று முழுமையாய்த் தோன்றினான் என்றது ஒரு நயம்.

31. சீதையின் பிரிவால் இராமன் துயர் உறுதல்

பொழிலை நோக்கும்; பொழில் உறையும்
புள்ளை நோக்கும்; பூங்கொம்பின்
எழிலை நோக்கும்; இளமயிலின்
இயலை நோக்கும்; இயல்பு ஆனாள்
குழலை நோக்கி, கொங்கை இணைக்
குவட்டை நோக்கி, அக்குவட்டின்
தொழிலை நோக்கி, தன்னுடைய
தோளை நோக்கி, நாள் கழிப்பான். (3674)

(குழல் - கூந்தல்; குவடு - மலை \ மலைச் சிகரம்; இணை - இரண்டு; தொழில் - தொய்யில்; நாள் - பொழுது; பொழில் - சோலை; புள் - பறவை \ சகோரம் \ சக்கரவாகம்; இயல் - சாயல்; இயல்பு - தன்மை; நோக்கும் - கண்ணால் பார்த்தல் \ மனத்தால் பார்த்தல்)

சீதையின் பிரிவால் வருந்தும் இராமன், சோலையைப் பார்ப்பான்; அச்சோலையில் தங்கி வாழும் சகோரம், சக்கரவாளம் ஆகிய பறவைகளைக் கவனிப்பான்; பூக்களை மலர்த்தி அழகுடன் விளங்கும் பூங்கொம்புகளை நோக்குவான்; அங்கேஉலவுகின்ற இளமையான மயிலின் சாயலைக் கூர்ந்து கவனிப்பான்; இத்தகைய தன்மைகள் எல்லாம் ஒருங்கே கொண்ட சீதையின் கூந்தலை எண்ணிப்பார்த்து, அவளுடைய இரண்டு கொங்கைகளாகிய மலைச் சிகரங்களை நினைத்துக் கொள்வான்; அக்கொங்கைகளைத் தழுவ முடியாத நிலையில் இருக்கிற தன் தோள்களைப் பார்த்து, ஒவ்வொரு நாளையும் போக்குவான் ஆயினான்.

சீதையின் கரிய கூந்தலுக்கு அடர்ந்த மரங்கள் பொருந்திய பொழிலையும், அவளுடைய இரண்டு மலைகளாகிய கொங்கைகளுக்கு இணை பிரியாத சக்கரவாளப் பறவைகளையும் அக்கொங்கைகளில் எழுதப்பட்ட தொய்யில் சித்திரங்களுக்குப் பூங்கொடிகளையும், அவள் சாயலுக்கு மயிலையும் ஒப்பாகப் பொருத்திப் பார்த்து மனத்தில் வருத்தம் கொள்வான் இராமன் என்பதாம். மகளிர் கொங்கைகளுக்குச் சகோரம், சக்கரவாளம் ஆகிய பறவைகளை உவமை கூறுவது மரபு; அவன் பார்க்கின்ற காட்சிகளெல்லாம் அவனுக்குச் சீதையின் உடல் உறுப்புக்களையே நினைவு படுத்தின என்பதாம். தொய்யில் என்பது கலவிக் காலத்தே கொங்கைகள் மேல் எழுதப்படும் சித்திரங்கள்.

32. சீதையைத் தேடி இராவணன் சென்ற வழியே இருவரும் செல்லுதல்

அன்னகாலை, இளவீரன், அடியின்
வணங்கி, "நெடியோய்! அப்
பொன்னை நாடாது, ஈண்டு இருத்தல்
பொருளோ?" என்ன, புகழோனும்,

"சொன்ன அரக்கன் இருக்கும் இடம் துருவி
அறிதும் தொடர்ந்து" என்ன,
மின்னும் சிலையார் மலை தொடர்ந்த
வெயில் வெங்கானம் போயினரால். (3675)

(காலை - பொழுது; நாடுதல் - தேடுதல்; மின்னுதல் - விளங்குதல் \ ஒளிவீசுதல்; சிலை - வில்; துருவி - ஊடுருவி)

அப்பொழுது, இளைய வீரனான இலக்குவன் இராமனைத் தொழுது, "பெரியோய்! அந்தப்பொன் போன்ற சீதையைத் தேடாது, இங்கே இருந்து காலம் கடத்துதல் தகுதியோ" என்று கூற, எல்லோரின் புகழ்ச்சிக்கும் உரியவனான இராமனும் "சடாயு நமக்குச் சொன்ன அந்த அரக்கனாகிய இராவணன் இருக்குமிடத்தை நன்கு ஊடுருவிச் சென்று கண்டு பிடித்துவிடுவோம்" என்று கூற, மின்னல் போல் ஒளிவீசுகின்ற விற்களையுடைய இருவரும், மலைகள் தொடர்ந்து அமைந்திருப்பதும், கொடிய வெப்பக்காற்று வீசுவதுமான அக்காட்டினிடத்தே செல்வாராயினர்.

இவ்வாறு இவ்விருவரும் சென்ற காடு கிரௌஞ்ச ஆரண்யம் என்று வான்மீகம் கூறும்.

33. ஆசை சுமந்த நெடுங்கரி அன்னார்
பாசிலை துன்று வனம் பல பின்னா,
காசு அறு குன்றினொடு ஆறு கடந்தார்;
யோசனை ஒன்பதொடு ஒன்பது சென்றார். (3676)

(ஆசை - திசைகள்; சுமத்தல் - தாங்குதல்; பாசுஇலை - பசிய இலைகள்; துன்று - தழைத்து; பின்னா - பிற்படும்படி; காசு - குற்றம்; நெடும் - பெரிய)

திக்குகளைத் தாங்கி நிற்கின்ற பெரிய திக்கஜங்களைப் போன்ற ஆற்றலுடைய இராம இலக்குவர், பசிய இலைகள் செழித்து அடர்ந்துள்ள காடுகள் பலவற்றையும் பின்னாகக் கழித்து, குற்றமற்ற மலைகளையும், நதிகளையும் தாண்டி, பதினெட்டு யோசனை தூரம் கடந்து சென்றனர்.

34. மண்படி செய்த தவத்தினில் வந்த
கள்படி கோதையை நாடினர், காணார்,
உள்படி கோபம் உயிர்ப்பொடு பொங்க,
புள்படியும் குளிர் வார் பொழில் புக்கார். (3677)

(படி - உலகம்; வந்த - தோன்றிய; கள் - தேன்; படி - நிறைந்த \ தோய்ந்த; கோதை - மாலை; உள் - உள்ளம் \ மனம்; படிதல் - அடங்கிக் கிடத்தல்; உயிர்ப்பு - பெருமூச்சு; பொங்குதல் - வெளிப்படுதல்; புள் - பறவைகள்; வார் - நீண்ட)

அவ்விருவரும், மண்ணுலகு செய்த அரிய தவத்தின் பயனால் இங்கு அவதரித்த, தேன் படிந்திருக்கும் மலர் மாலைகள் அணிந்த சீதாதேவியை

எவ்வளவு தேடியும் காணாதவர்களாய், தங்கள் உள்ளத்தில் படிந்திருந்த கோபம் பெருமுச்சாக வெளிப்பட, பறவைகள் தங்கும் குளிர்ச்சி பொருந்திய நீண்ட ஒரு சோலையுள் புகுந்தனர்.

35. சூரியன் மறைதல்

ஆரியர் சிந்தை அலக்கண் அறிந்தான்;
நாரியை எங்கணும் நாடினன்; நாடி,
பேர் உலகு எங்கும் உழன்று, இருள் பின்னா,
மேருவின் வெங்கதிர் மீள மறைந்தான். (3678)

(ஆரியர் - அறிவிற் சிறந்தோர்; சிந்தை - உள்ளம்; அலக்கண் - துன்பம்; நாரி - பெண் \ சீதை; உழல்தல் - வருந்தி அலைதல்)

வெப்பக்கிரணங்களையுடைய சூரியன், அறிவிற் சிறந்த பெரியோர்களான இராம இலக்குவர் இருவரின் உள்ளத்தில் உள்ள பெருந்துன்பத்தை நன்கு அறிந்தவனாகி, அவனும் அவர்களுடன் இணைந்து அப்பெண்ணாகிய சீதையை இந்தப் பெரிய உலகங்கள் எல்லாவற்றிலும் அலைந்து திரிந்து தேடிப் பார்த்தான். அவ்வாறு தேடியும் காணப்பெறாமையால், இருட்டு தன்னைப் பின் தொடர்ந்து வர, மேரு மலையின் அப்புறத்தே திரும்பிச் சென்று மறைந்தான்.

அண்ட கோளத்தின் ஒரு புறம் உள்ள உலகத்தில் எங்கும் தேடியவன், அங்கு அவளைக் கண்டுபிடிக்க முடியாமையால் கோளத்தின் அப்புறத்தே சென்று தேடிப் பார்ப்பதற்காக, மேருமலையில் சென்று மறைந்தான் என்பதாம். மேரு மலையைச் சூரிய சந்திரர் சுற்றி வருகின்றனர் என்பதும், சூரியன் இல்லாத பொழுதில், இருள் தொடர்ந்து வரும் என்பதும் புராணக்குறிப்பு.

36. உலகெங்கும் இருள் பரவுதல்

அரண்டு, அருகும் செறி அஞ்சன புஞ்சம்
முரண்டன போல், இருள் எங்கணும் முந்த,
தெருண்ட அறிவில்லவர் சிந்தையின் முந்தி,
இருண்டன, மாதிரம் எட்டும் இரண்டும். (3679)

(அரண்டு - அஞ்சி \ மிரண்டு; அருகுதல் - மெலிந்து போதல்; அஞ்சனம் - மை \ கரிய இருள்; புஞ்சம் - செறிவு \ கொத்து \ அடர்த்தி \ தொகுதி \ திரட்சி; முரண்டன - கலந்தன; முந்துதல் - முற்படுதல்; மாதிரம் - திசைகள்; தெருண்ட - தெளிவு பெற்ற; முந்தி - விரைந்து)

அடர்ந்த மை போலும் திரட்சிக்கு அஞ்சி வருந்தும் கரிய இருள் எல்லாப்பக்கங்களிலும் ஒன்று சேர்ந்தாற் போல் முற்பட்டுத் திகழ, தெளிவான அறிவில்லாதவர்களின் மனம் போல, பத்துத் திசைகளும் விரைந்து இருண்டு போயின.

திசைகள் பத்தாவன. பெருந்திசைகள் நான்கு, கோணத் திசைகள் நான்கு, மேல், கீழ்த் திசைகள் இரண்டு என்க. அங்கு சூழ்ந்த இருள், திண்மை வாய்ந்த நெஞ்சத்தினரையும் அஞ்சி மெலிவுறச் செய்யும் என்பதாம். தெளிந்த அறிவில்லாத கீழோரது மனம், அறியாமையாகிய பேரிருளால் மூடப்பெற்றிருப்பதைப் போல, திசைகளும் இருண்டு போயின என்பதாம். அறிவற்ற மூடர்கள் மனத்திற்குக் கரிய இருள் உவமை.

37. இருவரும் ஒரு பளிங்கறையில் தங்குதல்

இளிக்கு அறை இன் சொல் இயைந்தன, பூவை,
கிளிக்கு அறையும் பொழில், கிஞ்சுக வேலி,
ஒளிக்கறை மண்டிலம் ஒத்துளது, ஆங்கு ஓர்
பளிக்குஅறை கண்டு, அதில் வைகல் பயின்றார். (3680)

(இளி - ஒருவகை இசை; இயைதல் - ஒப்பாதல்; பூவை - நாகணவாய்ப் பறவை \ மைனா; அறைதல் - கூறுதல் \ கற்பித்தல்; கிஞ்சுகம் - முள் முருக்க மரம்; வைகல் - தங்குதல்; கறை - களங்கம்)

ஏழு சுவரங்களில் ஒன்றாகிய இளி என்ற சுரத்திற்கு ஒப்பான இனிய சொற்களைப் பேசும் நாகணவாய்ப்பறவை, கிளிக்கு அச்சொற்களைக் கற்றுக் கொடுக்கும் ஒரு சோலையில், முள் முருக்க மரங்களை வேலியாகவும், ஒளியும், களங்கமும் நிறைந்த சந்திரமண்டலத்தை ஒத்துள்ளதுமாகிய ஒரு பளிங்குப் பாறையை அங்கு கண்டு, அதில் தங்கலாயினர்.

இளி என்பது இசையின் ஏழு சுவரங்களில் ஒன்று. மற்ற ஆறு சுவரங்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, விளரி, தாரம் என்பன. பளிங்குப்பாறை என்பது "ஸ்படிக சிலாதலம்" என்ற வடசொல்லின் தமிழாக்கம். திருவெள்ளறை என்ற ஒரு திருத்தலம் தமிழ் நாட்டில் உள்ளதை நினைவு படுத்திக் கொள்க.

38. இராமன் இலக்குவனை தாகம் தீர்க்க நீர் கொணரப் பணித்தல்

அவ்விடை எய்திய அண்ணல் இராமன்
வெவ்விடை போல் இள வீரனை, வீர!
இவ்விடை நாடினை, நீர் கொணர்க" என்றான்;
தெவ்விடை வில்லவனும் தனி சென்றான். (3681)

(அண்ணல் - தலைவன் \ பெருமைக்குரியவன்; தெவ் - பகைவர்; விடை - காளை; இடைதல் - தோற்று ஓடுதல்; வெம்மை - சினம்)

அந்தப் பளிக்கறையை அடைந்த பின், இராமன், மிக்க சினம் கொண்ட காளை போன்றவனான இளமையான வீரனாகிய இலக்குவனை நோக்கி, "வீரனே! நான் பருகுதற்கு ஏற்ப, இவ்விடத்தில் நீர் கொண்டு தருக" என்றான்;

பகைவர்களைப் பின்னிட்டு ஓடச் செய்யும் வில்லாற்றல் உடையவனான இலக்குவனும், இராமனைப் பிரிந்து அவ்விருளில் தனியே சென்றான்.

இலக்குவனுக்குக் காளை உவமை; இந்தக் காட்சிகள் வான்மீகியால் நான்கே சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அத்யாத்ம இராமாயணத்தில் இப்படலக் காட்சிகள் கூறப்படவே இல்லை. என்றாலும் கம்பன் மட்டும் இந்நிகழ்ச்சிகளை 101 பாடல்களில் கூறியிருப்பதற்குக் காரணம் உடன் பிறந்தார் பாசத்தினை வெளிப்படுத்தவும் இலக்குவனின் தனிச்சிறப்புக்களை எடுத்துக் காட்டவுமே எனலாம். அங்கே சீதையைத் தனியே விடுத்து இலக்குவன் பிரிந்தான். சீதை கவரப்பட்டாள். இங்கே இராமனைத் தனியே விடுத்து இலக்குவன் பிரிந்தான். இலக்குவன் அல்லல் உறப்போகிறான்.

39. அரக்கி, அயோமுகி இலக்குவனைக் காணுதல்

எங்கணும் நாடினன்; நீர் இடை காணான்;
சிங்கம் எனத் தமியன் திரிவானை
அங்கு, அவ் வனத்துள், அயோமுகி என்னும்
வெங்கண் அரக்கி விரும்பினள் கண்டாள். (3682)

(தமியன் - தனித்த; அயம் - இரும்பு; முகி - முகத்தையுடையவள்)

எல்லா இடங்களிலும் சென்று நீர் இருக்கும் இடத்தைத் தேடியும் எங்கும் நீரைக் காணாதவனாகித் தனியாகச் சிங்கம் போல் அஞ்சாமல் திரிந்து கொண்டிருக்கும் இலக்குவனை, அந்தக்காட்டில் வசித்து வரும் இரும்பு போன்ற முகத்தையுடைய அயோமுகி என்னும் கொடிய கண்களையுடைய அரக்கி ஒருத்தி, அவன் மீது ஆசை கொண்டு, அவனைப் பார்த்தாள்.

இரவில், தனித்து, அஞ்சாது, காட்டில் திரிந்ததால் சிங்கத்திற்கு இலக்குவன் ஒப்பு; இலக்குவனுடைய பேரழகில் மயங்கி, அவனை அடைய விரும்பி, அவனைப் பார்த்தாள் அயோமுகி என்பதாம்.

40. நல்மதியோர் புகல் மந்திர நாமச்
சொல் மதியா அரவின் சுடர்கிற்பாள்
தன் மதனோடு தன் வெம்மை தணிந்தாள்;
“மன்மதன்ஆம் இவன்” என்னும் மனத்தாள். (3683)

(மதி - அறிவு; மந்திரம் - மறை \ வேதம்; நாமம் - மொழி \ அச்சம்; சொல் - புகழ் \ சிறப்பு; அரவு - பாம்பு; மதன் - மதம் \ செருக்கு \ வெம்மை \ சினம் \ கோபம்; புகல் - சொல்லும்)

நல்ல அறிவுடைய சான்றோர்கள் கூறும் வேத மந்திரங்களுக்கு அஞ்சிக் கட்டுப்படாத இழிந்த கொடிய பாம்பினைப் போல, இலக்குவனைத் தொடர்ந்து செல்லுகின்ற அயோமுகி, “இவன் அழகிலும், வடிவிலும் மன்மதனுக்கு ஒப்பானவன்” என்று மனத்தில் கருதி, இவனைத் தான் எப்படியும் அடைந்துவிட

வேண்டும் என்ற எண்ணத்தால் தனது செருக்கும், கோபமும் அடங்கப் பெற்றாள்.

பொதுவாக உயர்ந்த சாதிப் பாம்புகள் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டுத் தீங்கு செய்யாது; ஒரு சில இழிந்த, கொடிய, கட்டு விரியன் போன்ற பாம்புகள்தான் வேதம் வல்லோர் கூறும் மந்திரச் சொற்களுக்குக் கட்டுப்பட்டு நிற்காது, தொடர்ந்து வந்து தீமை செய்யும். அது போல, கொடிய அரக்கியும், இலக்குவனைத் தொடர்ந்து வந்தாள் என்பதாம். "கடிக்கும் வல்லரவும், கேட்கும் மந்திரம்" என்று கம்பரே பின்னால் சுந்தர காண்டத்தில் கூறப்போவதை மனத்திற் கொள்க.

41. அயோமுகி, இலக்குவனைத் தழுவ முயலுதல்

அழுந்திய சிந்தை அரக்கி, அலக்கண்
எழுந்து உயர் காதலின் வந்து, எதிர் நின்றாள்;
''புழுங்கும் என்நோய் கெடப் புல்லுவென்;அன்றி,
விழுங்குவெனோ'' என விம்மல் உழந்தாள். (3684)

(அழுந்திய - பதிந்த; அலக்கண் - துன்பம்; உயர் - மிக்க; புழுங்குதல் - வெதும்புதல்; நோவு - நோய்; புல்லுதல் - தழுவுதல்; விம்மல் - ஏக்கம்; உழல்தல் - வருந்துதல்)

அயோமுகி, இலக்குவன்மேல் கொண்ட ஆழப்பதிந்த காதலினால், துன்பம் மேற்பட்டு எழுகின்ற காதலுடன், அவன் எதிரில் வந்து நின்று, "என்னை வாட்டி வதைக்கும் இந்தக் காம நோயைத் தணிப்பதற்காக அவனைத் தழுவிக் கொண்டு இன்பம் அடைவேனேயன்றி, மற்ற எல்லோரையும் கொன்று தின்பது போல, இவனையும் கொன்று விழுங்கி விடுவேனோ? அவ்வாறு செய்யவும் மாட்டேன்" என்று ஏக்கமுற்று வருந்தினாள்.

அவள் இலக்குவனிடம் தீராக்காதல் கொண்டுள்ளாள். அவனை வலிந்து தழுவி இன்பம் பெறுவதுதான் அவள் நோக்கம். எனவே ஒரு அரக்கி மற்ற உயிர்களைக் கொன்று தின்பதைப்போல், இவன் உயிரைக் கொன்று விழுங்கிவிட மாட்டேன் என்று தனக்குள் எண்ணினாள் என்பதாம்.

42. தனது குகைக்குத் தூக்கிக் கொண்டு செல்ல விரும்புதல்

''இரந்தனென் எய்தியபோது, இசையாது
கரந்தனனேல், நனி கொண்டு கடந்து, என்
முரஞ்சினில் மேவி முயங்குவேன்'' என்று,
விரைந்து எதிர் வந்தனள், தீயினும் வெய்யாள். (3685)

(இரத்தல் - கெஞ்சிக் கேட்டல்; இசைதல் - உடன்படுதல்; கரத்தல் - மறைத்தல்; நனி - மிக \ அழுத்தமாக; முரஞ்சு - மலைக்குகை \ பாறை \

பாதுகாப்பான இடம்; முயங்குதல் - தழுவுதல் \ கூடுதல்; வெய்யாள் - கொடியவள்)

கொடிய நெருப்பைவிடக் கொடியவளான அரக்கி அயோமுகி, "நான் இவனிடம் சென்று என்னைக் கூடும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்வேன்; அதற்கு அவன் உடன்படாது, என்னை விட்டுத் தப்பிச் செல்ல முயன்று மறைந்து கொள்வானேயானால், இவனை எனது மிகுந்த வலிமையால் பற்றிக் கொண்டு, இவ்விடத்தை விட்டு அகன்று, எனக்குப் பாதுகாப்பாக உள்ள மலைக்குகைக்குத் தூக்கிச் சென்று அங்கு அவனுடன் கூடித்தழுவி மகிழ்வேன்" என்று எண்ணிக் கொண்டு, அவன் எதிரில் விரைந்து வந்தாள்.

இங்கே "தீயினும் வெய்யாள்" என்ற சொற்றொடரின் உட்பொருள் கருதத்தக்கது. நெருப்பு, தன்னை வந்தடைந்த பொருள்களைத் தான் தீய்க்கும். தானே வலியச் சென்று எந்தப் பொருளையும், உயிரையும் வருத்தாது. ஆனால் அரக்கியாகிய அயோமுகி, தானே, வலியச் சென்று இலக்குவனை வருத்துவதால் அவளைத் "தீயினும் வெய்யாள்" என்றார் என்க. மற்றும் ஒன்று முதலில் இராமபிரான் - சீதாதேவியின் மனமொத்த தெய்வீகக் காதலைக் கூறி, பின், இராமன் - சூர்ப்பணகையின் இசைவுபட்ட இராக்கதக்காதலைக் கூறி, இப்பொழுது, இலக்குவன் - அயோமுகியின் வலியச் சாரும் பைசாசக் காதலைக் கூறிய கவிஞனின் திறம் நோக்குக.

43. அயோமுகியின் தோற்றம் (6 பாடல்கள்)

உயிர்ப்பின் நெருப்பு உமிழ்கின்றனள்; ஒன்ற
எயிற்றின் மலைக்குலம் மென்று இனிது உண்ணும்
வயிற்றள்; வலக்கொடு மாசுணம் வீசு
கயிற்றின் அசைத்த முலை; குழி கண்ணாள். (3686)

(உயிர்ப்பு - பெருமூச்சு; எயிறு - பற்கள்; மலை - யானை; வலம் - வலிமை; கொடு - கொடுமை; மா- பெரிய; மாசுணம் - மலைப்பாம்பு; அசைத்த - கட்டிய; கயிறு - கச்சு; உமிழ்தல் - கக்குதல் \ வெளிவிடுதல்; ஒன்ற - ஒருசேர; வீசுதல் - வரிந்து கட்டுதல்)

அவள் வெளிவிடுகின்ற பெருமூச்சில் நெருப்பையே கக்குபவள்; தன் வலிய பற்களால் யானையின் கூட்டத்தையே ஒரு சேரக் கடித்து, மென்று, நன்றாக விழுங்குபவள்; அவ்யானைக் கூட்டத்தையே அப்படியே அடக்கிக் கொள்ளும் பெருவயிறு படைத்தவள்; வன்மையும் கொடுமையும் உடைய பெரிய மலைப் பாம்பையே தனது கொங்கைகளைக் கட்டும் கச்சாகக் கொண்டவள்; ஆழ்ந்து குழி விழுந்த கண்களைக் கொண்டவள்.

இது முதல் 6 பாடல்களில் இலக்குவன் முன் தோன்றிய அயோமுகியின் பயங்கரமான தோற்றத்தைக் கூறுகிறான் கவிஞன். அவள் பெருமூச்சில் நெருப்புப் பறக்கும்; பெரிய யானைக் கூட்டங்களையே ஒரு சேரக் கடித்து மென்று தின்னும் பற்களையும், அவற்றை அடக்கிக் கொள்ளும் பெரு வயிற்றினையும்

உடையவள். அவளது கொங்கைகளுக்குக் கச்சாகப் பயன்படுத்தப்பட்டது பெரிய மலைப் பாம்புகள் என்றும், குழி விழுந்த கண்களையும் உடையவள் என்றும் வருணிக்கிறான் கவிஞன். மலை என்பது மலை போன்ற பேருருக்கொண்ட யானையைக் குறிக்கும். கைம்மலை, தடமலை, மதமலை என்ற சொற்களும் யானையையே குறிக்கும் என்பதை முன்னர் கண்டோம். அவற்றையும் இங்கு நினைவு கூர்க.

44. பற்றிய கோள் அரி, யாளி, பணிக்கண்
தெற்றிய பாதசிலம்பு தரித்தாள்;
இற்று உலகு, யாவையும் ஈறுறும் அந்நாள்,
முற்றிய ஞாயிறு போலும் முகத்தாள். (3687)

(கோள் - வலிய; அரி - சிங்கம்; பணி - பாம்பு; தெற்றிய - முடைதல் \ பின்னப்பட்ட; சிலம்பு - காலணி \ பாதசரம்; தெரிதல் - ஆராய்ந்து \ தேர்ந்து எடுத்து; இற்று - அழிந்து; ஈறு உறுதல் - முடிவடைதல்; ஈறு - இறுதி; முற்றிய - முதிர்ந்த; ஞாயிறு - சூரியன்; யாளி - யானையைப் போன்று துதிக்கையும், சிங்கத்தினைப் போன்று மற்ற உடல் உறுப்புகளும் அமைந்த ஒரு வலிய விலங்கு)

தான் பற்றிய வலிய சிங்கங்களையும், யாளிகளையும், படம் கொண்ட பாம்பையும் கயிறாகக் கொண்டு பின்னப்பட்ட சிலம்பு என்னும் காலணியைத் தரித்திருப்பவள்; உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் அழிந்து முடிவுபெறும் ஊழிக்காலம் என்னும் அந்த நாளில் தோன்றுகின்ற முதிர்ந்த வெப்பம் கொண்ட சூரியனைப் போன்ற கொடுமையான முகத்தையுடையவள்.

தன்னால் கொல்லப்பட்ட சிங்கங்களையும், யாளிகளையும், பாம்பையும் கயிறாகக் கொண்டு கட்டி, அதைத் தன் சிலம்பாகக் கால்களில் போட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதாம்; ஊழியிறுதியில் சூரியன் கொடிய நெருப்புக் கோளமாக மாறி, உலகத்தைச் சுட்டழிப்பான் என்பது புராணக்குறிப்பு. பொதுவாகப் பெண்ணின் முகத்திற்குச் சந்திரனை உவமிப்பது வழக்கம். கம்பன் மட்டும்தான் ஒரு அரக்கியின் முகத்திற்குச் சூரியனை உவமையாகக் கூறியிருக்கிறான் என்பதைக் கருத்தில் கொள்க. பணி என்பது படத்தையுடைய பாம்புக்குக் காரணப்பெயர்.

45. ஆழி வறக்க முகக்க அமைந்த
மூழை எனப் பொலி மொய் பிலவாயாள்;
கூழை புறத்து விரிந்தது ஓர் கொட்பால்,
ஊழி நெருப்பின் உருத்தனை ஒப்பாள்; (3688)

(ஆழி - கடல்; வறக்க - வற்றும்படி; முகக்க - முகர்ந்து கொள்ள \ மொள்ள; மூழை - அகப்பை \ முகவை; மொய் - பெரிய; பிலம் - குகை; கூழை - கூந்தல்; கொட்பு - சுழல்தல்; உரு - உருவம் \ வடிவம்)

கடல் நீரெல்லாம் வற்றிப் போகும் படியாக முகந்து கொள்ளுமாறு அமைந்த அகப்பை என்னும் முகக்கும் கருவியைப் போல விளங்கும், பெரிய, வலிய குகை போன்ற வாயை உடையவளும், பக்கங்களிலெல்லாம் பிரிந்து பறக்கும் இயல்புடைய அவளுடைய செம்பட்டை முடியால் ஊழிக்காலத்து நெருப்பைப் போல் சிவந்து விளங்கும் உருவத்தினை ஒத்தவளும் - பாடல் தொடர்கிறது.

அவளுடைய அகன்ற குகை போன்ற வாய்க்கு, கடலிலுள்ள நீரையெல்லாம் முகர்ந்து விடுமாறு அமைந்த பெரிய அகப்பையை உவமை கூறியது ஒரு நயம். கடல் நீரை ஒரு அகப்பை கொண்டு மொண்டு விடமுடியுமா? அவ்வளவு பெரிய குகை போன்ற வாயையுடையவள் என்பது அவள் உருவத்தோற்றத்தை மிகுதியாகக் கூற என்க. அவளுடைய செம்பட்டை மயிர் சுழன்று அலைந்து திரிவது ஊழிக்கால நெருப்பு எரிவதை ஒத்திருந்தது என்பதும் அவள் முடியின் செந்நிறம் மிகுதியைக் குறிக்க என்க. முன் பாடலில் அவளுக்கு ஊழிக்காலத்துச் சூரியனை உவமையாகச் சொன்ன கவிஞன், இப்பாடலில் ஊழிக்கால நெருப்பை உவமையாகச் சொல்லுவதும் காண்க.

46. தடி தடவ, பலதலை தழுவ, தாள்
நெடிது அடைய, குடர் கெழுமு நிணத்தாள்;
அடி தடவ, பட அரவம் இசைக்கும்
கடிதடம் உற்றவள்; உருமு கறிப்பாள்; (3689)

(தடி - தசைத் துண்டங்கள்; தழுவ - பொருந்த; தாள் - கால்கள்; நெடிது - நீண்டு; கெழுமுதல் - பொருந்துதல்; குடர் - குடல்; நிணம் - மாமிசம்; அடி - பாதம்; அரவம் - பாம்பு; கடி தடம் - அரை \ அல்குல்; உருமு - இடி; கறித்தல் - கடித்தல்)

தான் கடித்துத் தின்றது போக எஞ்சிய தசைத் துண்டங்கள் நிலத்தில் சிதறிக் கிடக்கவும், பல உடல்களைக் கொண்ட தலைகள் தன் மேனியைத் தழுவிக் கொண்டிருக்கவும், தனது கால்கள் வரை நீண்டு தொங்கும், உயிர்களின் மாமிசத் துண்டங்களோடு கூடிய குடல்கள் நிறைந்து விளங்கும் மாலையை அணிந்திருக்கவும், நிலத்திற் புரளும் படத்தோடு கூடிய பாம்பைத் தனது அல்குலில் கச்சை போல் கட்டியிருப்பவளும், இடி போன்ற ஒளியுடன் தன் பற்களைக் கடித்து ஒலியெழுப்புபவளும் - பாடல் தொடர்கிறது.

47. இவை இறை ஒப்பன என்ன விழிப்பாள்;
அவை குளிரக் கடிது அழலும் எயிற்றாள்;
குவை குலைய, கடல் குவிய, அலைப்பாள்;
நவைஇல் புவித்திரு நாண, நடப்பாள். (3690)

(இறை - ஊழித்தீ \ சூரியன் \ சிவபெருமான்; அழல்தல் - நெருப்பைக் கக்குதல்; எயிறு - பற்கள்; குவை - கூட்டம் \ மலைகள்; குவிதல் - கூடுதல்; குலைதல் - சிதறிப் போதல்; அலைத்தல் - சிதைத்தல்; நவை - குற்றம்; கடிது - கொடுமையாக)

அவளுடைய கண்கள் சிவபெருமானது நெற்றிக் கண்ணுக்கு ஒப்பாகும் என்று கூறும்படி விழித்துப் பார்க்கும் இயல்பினளும், அந்தக் கண்கள் குளிர்ச்சியடைந்தது என்னும்படி கொடுமையாக நெருப்புப் போன்று கனன்று கடிக்கும் பற்களை உடையவளும், மலைக் கூட்டங்கள் எல்லாம் தம் நிலை திரிந்து இடம் பெயரும் படியும், எல்லாத்திசைகளிலும் இருக்கும் கடல்கள் எல்லாம் ஒரே இடத்தில் வந்து குவிவது போலவும் உலகை நிலை குலையச் செய்பவளும், குற்றமற்ற நிலமகளே வெட்கமுறும்படி அதிர்ந்து நடப்பவளும் - பாடல் தொடர்கிறது.

அயோமுகியின் கண்கள், பற்கள், நடை முதலியன பற்றி உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டது என்க. இறை என்ற சொல்லுக்கு ஊழித்தீ என்றும் பொருள் கொள்வதுண்டு. ஊழித்தீ போன்று நெருப்புப் பொறி பறக்க விழித்துப் பார்ப்பவள் என்பது பொருள். “புவித்திரு” என்ற சொல் பூமியாகிய பெண் என்ற பொருள் தந்து நிலமகளைக் குறிக்கும்.

48. நீள் அரவச் சரி, தாழ்கை, நிரைத்தாள்;
ஆள் அரவப் புலி ஆரம் அணைத்தாள்;
யாளியினைப் பல தாலி இசைத்தாள்;
கோள் அரியைக் கொடு தாழ் குழை இட்டாள். (3691)

(நீள் - நீண்ட; அரவம் - பாம்பு; சரி - வளையல்கள்; நிரை - வரிசை; ஆள்தல் - பிணித்தல்; ஆரம் - மாலை; அணைத்தல் - தாங்கியிருத்தல்; இசைத்தல் - அணிந்து கொள்ளுதல்; கோள் - கொலைத் தொழில் \ வலிய; அரி - சிங்கம்; குழை - குண்டலம் \ காதணி கொடு - கொண்டு; தாழ் - தாழ்ந்த \ தொங்கிய; அரவம் - கர்ச்சனை \ ஒலி)

நீண்ட பாம்பினைத் தனது தாழ்ந்து தொங்குகின்ற கைகளில் வளையல்களாக வரிசையாக அடுக்கிக் கொண்டிருப்பவளும், கர்ச்சனை புரிகின்ற ஆண்புலிகளை மாலையாக அணிந்து கொண்டிருப்பவளும், பல யாளிகளை இணைத்துத் தாலியாகப் பூண்டிருப்பவளும், கொல்லும் தொழிலையுடைய, வலிய சிங்கங்களைத் தனது தாழ்ந்து தொங்குகின்ற காதுகளில் குண்டலங்களாகக் கொண்டவளும்.

பாம்புகள் கைவளையல்கள்; புலிகள் கழுத்தில் அணியும் மாலைகள்; யாளிகளால் ஆன தாலி, சிங்கங்கள் குண்டலங்கள். முன்பு தாடகையை வருணித்தது போல வருணித்த அழகு நோக்குக. அயோமுகியின் தோற்றத்தை முன்னால் கூறி, பின் அவள் இலக்குவன் மீது காமுற்றாள் என்றால் கற்போருக்குச் சுவை பயக்காது என்ற காரணத்தால், முன்னால் அரக்கி என்று மட்டும் சொல்லி, அவள் இலக்குவனைக் காமுற்றாள் என்று கூறியதை நோக்குக. பொதுவாக அரக்கி என்றால், இவளும் சூர்ப்பணகை போல் வேறுவடிவம் கொண்டு வந்திருப்பாள் என்று கற்போர் எண்ணுவதற்கு ஒரு வழி இருக்கிறதல்லவா? கவிச்சக்கரவர்த்தியின் கவி சொல்லும் திறமை வியக்கத்தக்கது என்பதை அறிக.

49. இலக்குவன் அயோமுகியைக் காணுதல்

நின்றனள், ஆசையின் நீர் கலுழும் கண்
குன்றி நிகர்ப்ப, குளிர்ப்ப விழிப்பாள்.
மின் திரிகின்ற எயிற்றின் விளக்கால்,
கன்று இருளில் திரி கோளரி கண்டான். (3692)

(கலுழ்தல் - சொரிதல்; குன்றி - குன்றிமணி; நிகர்ப்ப - ஒக்க; திரிதல் - உலவுதல்; கன்று - முதிர்ந்த)

தான் கொண்ட காம நோயினால் உவகைக் கண்ணீர் சிந்தும் கண்கள், குன்றிமணியைப்போலச் சிவந்து காட்ட, மிகக்குளிர்ச்சியடைந்து இலக்குவனை விழித்துப் பார்த்துக்கொண்டே நின்றாள் அத்தகைய அரக்கி அயோமுகி. அவ்வாறு நின்றவளின், மின்னல்போல் ஒளி விட்டுப் பிரகாசம் தருகின்ற பற்களின் வெளிச்சத்தால், அந்த அடர்ந்த, முற்றிய இருளிலும், வலிய சிங்கம் போன்று திரிந்தவனான இலக்குவன், அயோமுகியைக் கண்டு கொண்டான்.

அடர்ந்த இருள்; கரியமேனியுடைய அரக்கி. அவள் நிற்பது எப்படித் தெரியும்? அதற்கு வெளிச்சமாக உதவி செய்தது அவளுடைய மின்னலைப் போன்று ஒளி வீசும் அவள் பற்கள்தான் என்பதாம். பொதுவாகக் காமநோயால் கண்கள் சிவப்பேறித் தானே போகும்? இங்கு குன்றிமணிபோல் சிவந்த கண்கள் அவனிடம் கொண்ட காதலால் குளிர்ப்பார்வையை வீசியது என்பது ஒரு நயமான கற்பனை. காமத்தால் சிவந்தும், காதலால் குளிர்ந்தும் காணப்பட்டன கண்கள் என்பதாம்.

50. ‘‘பண்டையில் நாசி இழந்து பதைக்கும்
திண் திறலாளொடு தாடகை சீராள்;
கண்டகர் ஆய அரக்கர் கணத்து ஓர்
ஒண்தொடி ஆம், இவள்’’ என்பது உணர்ந்தான். (3693)

(பண்டைய - முன்னர்; நாசி - மூக்கு; பதைத்தல் - வருந்தல்; திண் - மிக்க; சீர் - இயல்பு; கண்டகம் - முள்; கண்டகர் - முள்போன்ற கொடியவர்கள்; கணம் - கூட்டம்; ஒண் - ஒளி பொருந்திய; தொடி - வளையல்)

“முன்பு என்னால் மூக்கு அறுபட்டு வருந்தி நின்ற மிக்க வலிமை படைத்தவளான சூர்ப்பணகையோடும், இராமபிரானால் அழிக்கப்பட்ட தாடகை என்பாளோடும், ஒத்த இயல்புடையவளான இவள், கொடியவர்களாகிய அரக்கர் கூட்டத்தில் ஒரு பெண்ணாக இருக்க வேண்டும்” என்று இலக்குவன் உய்த்து உணர்ந்தான்.

இவள் உடல் அமைப்புத் தோற்றத்தைக் கண்டு, முன்பு இராமனால் கொல்லப்பட்ட தாடகை போலவும், பின்பு தன்னால் மூக்கறுபட்ட சூர்ப்பணகை போலவும் இருக்கிறாள். எனவே இவள் அரக்கர் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணாக இருக்கவேண்டும் என்று ஊகித்து உணர்ந்தான் என்பதாம். இங்கே

"ஒண்தொடி" என்ற சொல்லுக்கு ஒளிபொருந்திய வளையல்கள் அணிந்த பெண் என்ற விளக்கம் பொருந்தாது. காரணம் இவள் அரக்கி. எனவே ஒண்தொடி என்ற சொல்லுக்கு ஒரு பெண் என்றே பொருள் கொள்ள வேண்டும். "திண்திறல்" என்பது மனத்திண்மையும், உடல் வலிமையும் உடைமையைப் புலப்படுத்தும். "சீராள்" என்ற சொல் ஒத்த தன்மை உடையவள் என்பதைக் குறிக்கும்.

51. இலக்குவன் "யார் நீ?" என வினவுதல்.

"பாவியர் ஆம் இவர்; பண்பு இலர்; நம்பால்
மேவிய காரணம் வேறு இலை" என்பான்;
"மா இயல் கானின் வயங்கு இருள் வந்தாய்!
யாவள் அடீ? உரைசெய், கடிது" என்றான் (3694)

(பாவியர் - தீவினையாளர்கள்; பண்பு - நற்குணங்கள்; மேவுதல் - அடைதல்; மா - விலங்குகள்; இயல் - திரிகின்ற; வயங்கு - விளங்குகின்ற; கடிது - விரைவாக)

இவர்கள் தீயவினையாளர்கள்; நற்பண்பு இல்லாதவர்கள்; நம்மை நாடி வந்ததற்குக் காரணம் காம இச்சையே அன்றி வேறில்லை என்று எண்ணிய இலக்குவன், "விலங்குகள் திரிகின்ற இக்காட்டிற்குள், விளங்குகின்ற கொடிய இருட்டில் வந்திருக்கிறாயே? நீ யார், விரைவாகச் சொல்" என்று அதட்டினான்.

விலங்குகள் வாழும் காட்டில், முதிர்ந்த இருள் பரவிய காட்டில், ஒரு பெண் தனியாக வந்தால், ஒன்று தன்னைக் கொல்ல வந்திருக்க வேண்டும்; அல்லது தன் மேல் காம இச்சை கொண்டு வந்திருக்க வேண்டும்; அவளுடைய குளிர்ந்த கண்களைப் பார்த்தால், அவள் தன்னைக் கொல்ல வரவில்லை, காம இச்சையால்தான் தன்னை நாடி வந்திருக்கிறாள் என்பதை ஊகித்து உணர்ந்து கொண்ட இலக்குவன், தன் வாயால் அதைச் சொல்லவும் கூசியதால், அவன் கூற்றாக, "வேறு இல்லை" என்று கூற வைத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. விரைந்து சொல் என்று அவன் அதட்டிக் கேட்பதற்குக் காரணம் அவளைக் கூடிய விரைவில் விலக்கி விட வேண்டும் என்ற நல்ல எண்ணமே என்க. பண்பு என்பது அன்பு, அருள் முதலிய நற்குணங்களைக் குறிக்கும்.

52. தான் யார் என்பதையும், வந்த காரணத்தையும் அயோமுகி கூறுதல்

பேசினன்; அங்கு அவள் பேசுற நாணாள்;
ஊசல் உழன்று அழி சிந்தையளும்தான்,
ஏசல்இல் அன்பினளாய் இனிது உன்பால்
ஆசையின் வந்த அயோமுகி" என்றாள். (3695)

(உழல்தல் - வருந்துதல்; ஏசல்இல் - குற்றமில்லாத; ஊசல் - ஊஞ்சல்)

இவ்வாறு பேசிய இலக்குவனுக்கு உரிய மாற்றம் கூறுவதற்காக வெட்கப்படாத அயோமுகி, இவன் நம்மை விரும்புவானோ, மாட்டானோ என்று

ஊசலாடும் உள்ளத்தைக் கொணடவளாய், "நான் குற்றமற்ற அன்புடையவளாய், உன்மேல் கொண்ட இனிய ஆசையால் உன்னிடம் வந்துள்ளவள்; என் பெயர் அயோமுகி என்பது" என்று கூறினாள்.

பொதுவாகப் பெண்கள் தாங்கள் கொண்ட காதலைத் தாங்களே வெளியிட்டுக் கூற மாட்டார்கள். "தாம் உறு காமத்தன்மை, தாங்களே உரைப்பதென்பதாம் எனல், ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா!" என்பது அரக்கி சூர்ப்பணகையின் கூற்று. ஆனால் இந்த அரக்கியான அயோமுகி அதைக் கூறுவதற்கு நாணம் கொள்ளவில்லை. தன் காம இச்சையை இலக்குவனிடம் நேரே கூறினாள் என்பதாம். ஒரு நிலையில் நில்லாது தத்தளிக்கும் மனநிலைக்கு ஊசலாடுதலை உவமிப்பது கவிமரபு. "ஆசை, வன்பாசம் எய்தி, அங்குற்றேன், இங்குற்றேன், ஊசலாட்டுண்டு வாளா உழந்தேன்" என்பது தேவாரம்.

53. அயோமுகி தன் காம இச்சையை வெளிப்படுத்துதல்

பின்னும் உரைப்பவள், "பேர் எழில் வீரா!
முன்னம் ஒருத்தர் தொடா முலையோடு உன்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்து, என்
இன் உயிரைக் கடிது ஈகுதி" என்றாள் (3696)

(உரைத்தல் - விளக்கமாய்ச் சொல்லுதல்; மணி - நிறம் \ அழகு, புணர்ந்து - கூடி \ தழுவி)

மேலும் தொடர்ந்து விளக்கமாய்ப் பேசுபவளான அயோமுகி இலக்குவனை நோக்கி, "பேரழகுடைய வீரனேஸ இதற்கு முன்பு ஒருவராலும் தீண்டி அனுபவிக்கப்படாத என் கொங்கைகளை உன் பொன் போன்ற நிறமுள்ள அழகிய பெரிய மார்பினால் தழுவி முயங்கி, என்னுடைய இனிய உயிரை விரைவாக என்னிடம் தந்து விடுவாயாக!" என்றாள்.

பின்னும் உரைத்தல் என்பது, முன்பாடலில் குறிப்பாகத் தன் காம இச்சையை உணர்த்தியவள், இப்பொழுது அதனைத் தொடர்ந்து விளக்கமாக வெளிப்படுத்தினாள் என்று பொருள் விரிவு கொள்ளும். "முன்னம் ஒருத்தர் தொடா முலை" என்றது தனது தூய கன்னித் தன்மையை நிறுவுவதற்காக என்க. அவன் தன் தடமார்பில் தன் கொங்கைகளைத் தழுவி இன்பம் தாராவிட்டால் தனது உயிர் போய்விடும்; அவ்இனிய உயிர் போய்விடாமல் என்னுடன் கூடி, அவ்வுயிரை என்பால் தந்துவிடு என்று இரங்கி வேண்டினாள் என்பதாம். ஈதல் என்பது உயர்ந்தோர் இரக்கப்பட்டுத் தாழ்ந்தோருக்கு அளிப்பதாம்.

54. இலக்குவன் சினந்து கூறுதல்

ஆறிய சிந்தையள் அஃது உரைசெய்ய,
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்;

"மாறுஇல வார் கணை, இவ்வுரை வாயில்
கூறிடின், நின்உடல் கூறிடும்" என்றான். (3697)

(ஆறுதல் - தணிதல்; கோள் - வலிய \ உயிர் கொள்ளவல்ல; மாறுஇல் - தடுத்தற்கரிய; வார் - நீண்ட; கணை - அம்பு; கூறு - பகுதி \ துண்டு)

இலக்குவனைத் தான் அடைந்து இன்புறலாம் என்று கருதி, ஒருவாறு தனது மனக்கொதிப்புத் தணிந்த அயோமுகி, அவ்வாறு கூறவும், மிக்கச் சினம் கொண்டு, சிங்கம் போல் சீற்றமுற்று, கண்கள் இரண்டும் சிவக்கப்பெற்றான் இலக்குவன்; இலக்குவன் அயோமுகியை நோக்கி, "நீ இவ்வாறு உன் வாயால் மீண்டும் ஒரு முறை கூறுவாயேயானால், என்னுடைய யாராலும் தடுத்தற்கரிய ஒப்பற்ற இந்த நீண்ட அம்பு, உன் உடலை இரு கூறாகப் பிளந்து விடும்" என்று எச்சரித்தான்.

வெகுளி நான்கு காரணங்களுக்காக வரும் என்பது இலக்கண நூற்கொள்கை; "உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்ற வெறுப்பின் வந்த வெகுளி நான்கே" என்பது தொல்காப்பியம். இங்கே இலக்குவனுக்கு வந்த வெகுளிக்குக் காரணம் குடிகோள். குடிகோள் என்பது தான் பிறந்த குடிப்பிறப்புப் பற்றிய பெருமைக்குக் கேடு சூழ்தல் என்பதாம். "கூறிடின் கூறிடும்" என்ற சொல் நயம் உணர்க.

55. அயோமுகி மீண்டும் கெஞ்சுதல்

மற்று அவன் அவ் உரை செப்ப, மனத்தால்
செற்றிலள்; கைத் துணை சென்னியில் வைத்தாள்;
"கொற்றவ! நீ எனை வந்து உயிர் கொள்ளப்
பெற்றிடின், இன்று பிறந்தனென்" என்றாள். (3698)

(செற்றம் - பகைமை; செற்றல் - சினம் கொள்ளுதல்; கைத்துணை - இருகைகள்; சென்னி - தலை; கொற்றம் - வெற்றி)

அவ்வாறு இலக்குவன் கூறவும், அதனைக்கேட்ட அயோமுகி மனத்தில் பகைமையோ, கோபமோ கொள்ளாது, தன் இருகைகளையும் தலையில் குவித்து, இலக்குவனை நோக்கி, "வெற்றிபொருந்திய வேந்தனே! நீயே என்னிடம் வந்து என் உயிரை உன் அம்பினால் கவர்ந்து செல்வாய் என்றால், நான் பிறந்த பயனை இன்று பெற்றவள் ஆவேன்" என்றாள்.

தான் அன்பு கொண்டவர்கள் தன் மீது அன்பைச் செலுத்தாவிடினும், அவர்கள் தன்னைத் தண்டித்தாலும், அதுவும் அவர்களுக்கு இன்பத்தையே தரும். இது காதல் நோயின் ஒரு தன்மை. எனவே அயோமுகி இவ்வாறு கூறினாள் என்க.

இங்கே ஒரு மிகைப்பாடல் காணப்படுகிறது. கதைப்போக்கிற்கு அது உதவும் என்பதால் பாடல் மட்டும் தரப்பட்டிருக்கிறது. பொருள் எளிதில் புரிவது காண்க.

என்று அவள் கூறலும், மைந்தனும்,
"இன்னே நின்றியதாய நறும் புனல் நாடி
வென்றிகொள் வீரன் விடாயது தீர்ப்பான்
இன்று இவண் வந்தனென்" என்று உரை செய்தான்.

56. வெங்கதம் இல்லவள் பின்னரும், "மேலோய்!
இங்கு நறும் புனல் நாடுதி என்னின்,
அங்கையினால் எனை, "அஞ்சலை" என்றால்,
கங்கையின் நீர் கொணர்வென் கடிது" என்றாள். (3699)

(கதம் - கோபம்; நறும் - நல்லமணம் மிக்க; அம் - அழகிய; கடிது - விரைந்து; இல்லவள் - நீக்கியவள்; நாடுதல் - தேடி அலைதல்)

மீண்டும், கோபத்தை நீக்கி அமைதியாய் இருந்த அயோமுகி, இலக்குவனை நோக்கி "மேலானவனே! இங்கே நல்ல பருகுதற்குரிய நீரை நீ தேடி அலைகிறாய் என்றால், நான் உனக்குக் கங்கையின் புனித நீரையே விரைவில் கொண்டு வந்து தருவேன். ஆனால் நீ உன்னுடைய அழகிய கைகளினால், "அஞ்சாதே" என்று கூறி எனக்கு அபயம் அளிக்க வேண்டும்" என்று நிபந்தனை விதித்தாள்.

பெண்களின் காதலுக்காக, ஆண்கள் மட்டும் தான் செய்ய இயலாதவற்றைச் செய்ய வேண்டுமென்பதில்லை. "கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டி விட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்" என்பது காதல் வயப்பட்ட பெண்களுக்கும் பொருந்தும் என்பது இங்கே பெறப்படுகிறது. கங்கை நீர் தூய்மையானது; தெய்வத்தன்மை வாய்ந்தது; எல்லோர் பாவத்தையும் போக்கவல்லது; சேய்மையில் உள்ளது; எனினும் விரைவில் கொணர்வேன் என்று அவள் கூறுவது, தனக்குள்ள ஆற்றலை இலக்குவனுக்குக் காட்டவும், அவனுக்காக, அவள் எதையும் செய்யத் துணிய விழைகிறாள் என்பதைக் காட்டவுமே என்க.

57. இலக்குவன் அவளை அச்சுறுத்துதல்

சுமித்திரை சேய், அவள் சொற்றன சொல் அன்னக்
கமித்திலன்; "நின் இரு காதொடும் நாசி
துமிப்பதன் முன்பு அகல்" என்பது சொல்ல,
இமைத்திலள், நின்றனள், இன்ன நினைந்தாள். (3700)

(சேய் - புதல்வன்; கமித்தல் - பொறுத்தல்; க்ஷமை - பொறுமை; துமித்தல் - அறுத்தல் \ துண்டித்தல்)

சுமித்திரை பெற்றெடுத்த புதல்வனான இலக்குவன், அயோமுகி சொன்ன அவ்வுரைகளைக் கேட்கப் பொறுக்காதவனாகி, அவளை நோக்கி, "உன்னுடைய இரண்டு காதுகளோடு, மூக்கையும் சேர்த்து நான் அறுத்து

எறிவதற்குள், இங்கிருந்து சென்றுவிடு" என்று சொல்ல, அதனைக் கேட்ட அயோமுகி கண்களைக் கூட இமைக்காது. திகைத்துச் சற்றுநேரம் நின்று, கீழ்க்கண்டவாறு நினைக்கலானாள்.

இலக்குவன் முன்பே சூர்ப்பணகையின் காதொடு நாசியை அறுத்ததையும் இங்கு நினைவு கூர்க; பெண்கொலை பெரும்பாவம் என்பதனால் இலக்குவன் அவர்களைக் கொல்லாது அவர்கள் அழகைக்கெடுக்கும் படி இவ்வாறு செய்ய முற்படுகிறான் என்க.

58. அயோமுகி இலக்குவனைத் தூக்கிச் செல்லக் கருதுதல்.

"எடுத்தனென் ஏகினென், என் முழைதன்னுள்
அடைத்து, இவன் வெம்மை அகற்றிய பின்னை,
உடற்படுமால்; உடனே உறும் நன்மை;
திடத்து இதுவே நலன்'' என்று, அயல் சென்றாள். (3701)

(முழை - குகை் வெம்மை - சினம் திடம் - உறுதி எடுத்தல் - தூக்குதல் நலன் - நன்மை தருவது)

இவனை நானே பற்றியெடுத்துக்கொண்டு போய், என்னுடைய குகையில் அடைத்து வைத்தால், இவன் கோபம் சற்று தணியும், பிறகு என் இச்சைக்கு உடன்படுவான் அதனால் எனக்கு நல்லதே விளையும் இதுவே உறுதியான நன்மை பயக்கும் என்று மனத்துள் எண்ணி அவன் அருகில் சென்றாள்.

தாடகை, சூர்ப்பணகை முதலியோரும் மலைக்குகைகளில் வசித்ததாகவே கூறப்பட்டிருப்பதை நோக்குக.

59. அயோமுகி இலக்குவனை எடுத்துச் செல்லுதல்

மோகனை என்பது முந்தி முயன்றாள்;
மாக நெடுங் கிரி போலியை வவ்வா
ஏகினள்; உம்பரின் இந்துவொடு ஏகும்
மேகம் எனும்படி நொய்தினின் வெய்யாள். (3702)

(வெய்யாள் - கொடுமையுடையவள்; மோகனை - மயக்கும்தன்மை; மாகம் - ஆகாயம்; வவ்வா - வவ்வி \ பற்றி எடுத்து; இந்து - சந்திரன்; நொய்தின் - விரைவாக்; போலி - போன்றவன்; உம்பர் - ஆகாயம்)

கொடிய அரக்கியாகிய அயோமுகி, மோகனை என்னும் மயக்கம் தரும் மந்திரத்தால் உண்டாகும் செய்வினையை முற்படுத்திப் பயன்படுத்தி, ஆகாயமளவு உயர்ந்த மலைபோன்ற இலக்குவனைக் கையில் பற்றியெடுத்துக் கொண்டு, ஆகாயத்தில், சந்திரனோடு செல்லும் மேகம் என்று கூறும்படி, விரைவாகச் சென்றாள்.

மோகனை என்பது ஒரு செய்வினை; மந்திரம் வல்லார் செய்யும் எட்டுக்காரியங்களுள் இதுவும் ஒன்று. அதற்குரிய மந்திரத்தைக் கூறி, இலக்குவனை மயங்கச் செய்து, தான் அவனைக் கைப்பற்றிக் கொண்டு, மிக எளிதாக ஆகாயத்தில் சென்றாள் என்பதாம். இங்கே சந்திரன் இலக்குவனுக்கும், மேகம் அயோமுகிக்கும் நிறத்தால் உவமை.

60. இப்பொழுது அயோமுகியின் தோற்றம்

மந்தரம் வேலையில் வந்ததும், வானத்து
இந்திரன் ஊர் முகில் என்னலும், ஆனாள்;
வெந்திறல் வேல் கொடு சூர் அடும் வீரச்
சுந்தரன் ஊர்தரு தோகையும் ஒத்தாள். (3703)

(வேலை - கடல்; ஊர்தல் - செலுத்துதல்; சூர் - சூரபத்மன்; அடும் - கொன்று அழிக்கும்; சுந்தரன் - பேரழகுடையவன் \ முருகன்; தோகை - மயில்)

விண்ணில் செல்லும் அயோமுகி திருப்பாற்கடலைக் கடையும் போது அதில் நட்டு வைத்த மந்தர மலையைப் போலவும், விண்ணுலகத்தில் இந்திரன் ஊர்ந்து செல்லுகின்ற மேகத்தைப் போலவும் தோற்றம் அளித்தாள்; கொடுமையான வலிமை படைத்த வேற்படையைக் கொண்டு, சூரபதுமனைக் கொன்று அழித்த வீரமும், பேரழகும் உடைய முருகப்பெருமான் ஊர்ந்து செலுத்துகிற வாகனமாகிய மயிலைப் போலவும் தோற்றமளித்தாள்.

அயோமுகிக்கு கடல், மேகம், மயில், முதலியன உவமைகள்; அதேபோல், இலக்குவனுக்கு மந்தரம், இந்திரன்; முருகக்கடவுள் ஆகியவை உவமைகள். சுந்தரம் என்பது மன்மதன் நாணும் வடிவழகு உடையவன் என்பதாம். மாரன் - மன்மதன் தோகை என்பது தோகையையுடைய ஆண் மயிலைக்குறிக்கும்.

61. இப்பொழுது இலக்குவன் தோற்றம்

ஆங்கு அவள் மார்பொடு கையில் அடக்கி,
பூங்கழல் வார் சிலை மீளி பொலிந்தான்;
வீங்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர்
ஓங்கல் உரிக்குள் உருத்திரன் ஒத்தான். (3704)

(வார் - நீண்ட; சிலை - வில்; வீங்கிய - மிகுதியாகத் தோன்றிய; வீழ்தல் - பெருக்கெடுத்து வழிதல்; ஓங்கல் - மலை \ யானை; உரி - தோல் \ போர்வை; உருத்திரன் - சிவபெருமான்; பூ - அழகு \ மென்மை; மீளி - பெருவீரன் \ இலக்குவன்)

அவ்வாறு அயோமுகியின் மார்புக்குள்ளும், இருகைகளிலும் அடங்கி ஒடுங்கி இருந்தவனான, அழகிய மென்மையான பாதங்களில் வீரக்கழல் அணிந்தவனும், நீண்ட விற்படையை உடையவனுமான,பெருவீரன் இலக்குவன் விளங்கிய தோற்றம் எப்படி இருந்தது? மிக்க சினம் கொண்டு, பொங்கியெழுந்து,

மதத்தைப்பெருக்கிப் போர்செய்து, யானையை அழித்து அதன் தோலைப் போர்வையாகப் போர்த்துக் கொண்டு வெளிவந்த சிவபெருமானைப் போன்று இருந்தது.

பெருவீரனான இலக்குவன் இப்போது அரக்கியான அயோமுகியின் பிடியில் அடங்கி இருக்கிறான். இதற்குச் சிவபெருமானை உவமை கூறுகிறான் கவிஞன். தாருகாவனத்தில் வசித்து வந்த முனிவர்கள் சினமுற்றுச் சிவபெருமான் மீது ஒரு மாய யானையை ஏவினர். அவ்யானையைக் கொன்று, அதன் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்துக் கொண்டு வெளி வந்தார் சிவபெருமான். இப்பொழுது இலக்குவன் இருந்த நிலை, அன்றைக்குச் சிவபெருமான் இருந்த நிலையை ஒத்திருந்தது என்பதாம். இது நிகழ்ந்த இடம் இன்று திருவழுவூர் என வழங்கப்படுகிறது.

62. இலக்குவனைக் காணாது இராமன் துயர் உறுதல்

இப்படி ஏகினள், அன்னவள். இப்பால்,
"அப்பு இடை தேடி நடந்த என் ஆவித்
துப்புடை மால் வரை தோன்றலன்" என்னா,
வெப்புடை மெய்யொடு வீரன் விரைந்தான். (3705)

(வெப்பு - வெம்மை \ தாபம்; மெய் - மேனி; அப்பு - தண்ணீர்; இடை - இடம்; துப்பு - வலிமை \ மிடுக்கு; மால்வரை - பெரியமலை; தோன்றுதல் - வருதல் \ காணப்படுதல்; ஆவி - உயிர்)

இவ்வாறு இலக்குவனைப் பற்றிக் கொண்டு அயோமுகி சென்றாள். இங்கு, இலக்குவனைச் சற்று பிரிந்ததால் உண்டான வேதனையை உடைய மெலிந்த மேனியை உடைய வீரனாகிய இராமன், "தண்ணீர் தேடிக் கொண்டுவரச் சென்ற என் உயிர் போன்றவனும், வலிமையுடைய பெரிய மலை போன்றவனுமான என் இளவல் இலக்குவனை இன்னும் காணோமே" என்று மனக்கலக்கமுற்று, அவனைத் தேடி இவனும் விரைந்து சென்றான்.

வெப்பு என்பது இலக்குவனைப் பிரிந்ததனால் உண்டாகிய வேதனையையும் குறிக்கும்.

63. பலவாறு நினைந்து வருந்துதல்

"வெய்து ஆகிய கானிடை மேவரும் நீர்
ஐது ஆதலினோ? அயல் ஒன்று உளதோ?
நொய்தாய் வர, வேகமும் நொய்திலனால்;
எய்தாது ஒழியான்; இது என்னைகொலாம்?" (3706)

(வெய்து - வெம்மை \ கொடுமை; மேவுதல் - விரும்புதல்; ஐது - இல்லையாதல் \ வற்றிப்போதல் \ அரியதாதல்; அயல் - வேறு \ மற்று; நொய்து - விரைவு; நொய்தல் - தளர்ச்சியுறுதல்; எய்தாது - வாராது \ அடையாது)

கொடுமையான இந்தக்காட்டினிடையே, நான் விரும்பிக் கேட்ட நல்ல நீரைக் கொணர்வதற்காகச் சென்ற வீரனாகிய இலக்குவன் விரைவாகக் காரியங்களை முடித்துக் கொண்டு வந்து சேரும் வேகமும், விவேகமும் உடையவன். அவன் வேகத்திலும் குறைவில்லாதவன்; விரைவில் வாராதும் இருக்கமாட்டான். அப்படி அவன் வாராது காலம் தாழ்த்துதலுக்கு என்ன காரணமோ? புரியவில்லையே! "உற்றது இன்னதென்று உணர்கிற்றிலேன்" தண்ணீர் அரிதாகிப் போய் எங்குமே கிடைக்கவில்லையோ? அல்லது வேறு ஏதேனும் இடையூறு ஏற்பட்டிருக்குமோ? என்று மனம் தடுமாறினான் இராமன்.

64. அரக்கர் பற்றியும் எண்ணுதல்

"நீர் கண்டனை இவ்வழி நேடினை போய்,
சார், கொண்டு" என, இத்துணை சார்கிலனால்;
வார் கொண்டு அணி கொங்கையை வவ்வினர்பால்
போர் கொண்டனனோ? பொருள் உண்டு இது" எனா. (3707)

(சார் - சார்வாயாக \ வந்து சேருவாயாக; சார்தல் - சேர்தல்; வார் - கச்சு; வவ்வுதல் - கவர்ந்து செல்லுதல்; பொருள் - காரணம்; நேடுதல் - தேடுதல்; (குளகப்பாடல்)

"இவ்வழியே தேடிச் சென்று பருகுதற்குரிய நீர் கொண்டுவந்து சேர்வாயாக!" என்று நான் சொல்லியனுப்ப, அதன்படி சென்றவன் இவ்வளவு நேரம் வரையிலும் வந்து சேரவில்லையே? கச்சையைக் கொண்டு அணிந்துள்ள அழகிய கொங்கைகளையுடைய சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு சென்ற அரக்கர்களுடன் போர் செய்யத் தொடங்கிவிட்டானோ? இவன் இவ்வாறு இவ்வளவு நேரம் வாராது காலந்தாழ்ப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது" என்று எண்ணினான் இராமன்.

65. "அம் சொல் கிளி அன்ன அணங்கினை முன்
வஞ்சித்த இராவணன் வவ்வினனோ?
நஞ்சில் கொடியான் நடலைத் தொழிலால்,
துஞ்சுற்றனனோ, விதியின் துணிவால்?" (3708)

(அம் - அழகிய; வவ்வுதல் - கவர்ந்து செல்லுதல்; நடலை - வஞ்சனை; துணிவு - வலிமை \ முடிவு; துஞ்சுறுதல் - இறந்துபோதல்; அணங்கு - அழகு \ பெண்களில் சிறந்தவள்)

"அழகிய இனிய சொற்களைப்பேசும் கிளிபோன்ற அழகிய சீதையை, முன்பு தன் வஞ்சனைத் திறத்தால் அபகரித்துச் சென்ற இராவணனே, இப்பொழுதும் இலக்குவனைக் கவர்ந்து கொண்டு சென்றிருப்பானோ? நஞ்சைவிடக் கடுமையான விடம் கொண்ட இராவணனது மாயத் திறத்தாலோ, அல்லது எங்கள் தீவினையின் பயனாலோ, உயிர் துறந்திருப்பானோ?" என்றெல்லாம் எண்ணி இராமன் வருந்துவானாயினான்.

துஞ்சுதல் என்ற சொல்லுக்குத் தூங்குதல் என்பது தான் பொருள். இறந்துபோவதற்கு இச்சொல்லை மங்கல வழக்காகக் கூறுவது கவிமரபு. எனவே இங்கே துஞ்சுதல் என்ற சொல் இறந்து போதலைக் குறித்தது.

66. ''வரிவிற் கை என் ஆர் உயிர் வந்திலனால்;
தரு சொல் கருதேன்; ஒரு தையலை யான்
பிரிவுற்றனென் என்பது ஓர் பீழை பெருத்து
எரிவுற்றிட, ஆவி இழந்தனனோ?'' (3709)

(வரி - கட்டமைந்த; தரு - சொல்லிய \ கூறிய; தையல் - பெண் \ சீதை; ஒரு - ஒப்பற்ற; பீழை - துன்பம்; பெருத்து - பெருகி; ஆவி - உயிர்; கருதுதல் - மதித்தல்)

"கட்டமைந்த வில்லைக் கையில் ஏந்திய என் அருமையான உயிர்போன்றவனான இலக்குவன் இதுகாறும் வந்து சேரவில்லை; தான் அன்று கூறிய சொற்களை மதிக்காமல் , ஒப்பற்ற பெண்ணாகிய சீதையை நான் பிரிந்துவிட்டேன் என்ற ஒரு பெருந்துன்பம் அவன் உள்ளத்தில் புகுந்து பெரிதாகிச் சுட்டுப் பொசுக்கியதால் அவன் உயிர் இழந்து இருப்பானோ?" என்றும் எண்ணலானான் இராமன்.

"தருசொல்" என்பது முன்பு மாயமான் பின் செல்லவேண்டாம் என்று இலக்குவன் இராமனுக்கு அறிவுறுத்திய "மாயம் எனல் அன்றி மெய் அல" என்ற சொற்களைக் குறிக்கும். தனது குற்றத்தை நினைத்துப் பெரிதும் வருந்தினான் இராமன் என்க.

67. ''உண்டாகிய கார் இருளோடு ஒட ஒருவென்
கண்தான்; அயல் வேறு ஒரு கண் இலெனால்
புண்தான் உறு நெஞ்சு புழுங்குறுவென்;
எண்தான் இலென்; எங்ஙனம் நாடுகெனோ?'' (3710)

(உண்டாகிய - தோன்றிய; ஒருவென் - தனியன்; புழுங்குறுதல் - வெதும்பிவருந்துதல்; எண் - சிந்திக்கும் ஆற்றல் \ அறிவு)

நிறைந்து தோன்றுகிற இந்தக் கரிய இருளினை மட்டும் துணையாகக் கொண்டு நான் தனியாக நிற்கிறேன். எனக்குப்புறத்தில் இருக்கும் கண்போன்றவன் இலக்குவன்தான். அவனையன்றி எனக்கு வேறு கண் என்பது ஒன்றில்லை; முன்பே சீதையைப் பிரிந்து துயர் உறுகின்ற என் உள்ளம், இப்போது இவனையும் பிரிந்து வெதும்பி வருந்துகிறது. சிந்திக்கும் ஆற்றலையும் அறிவையும் இழந்துவிட்டேன்; இந்நிலையில் அவனை எங்கு சென்று எப்படித் தேடிக்கண்டு பிடிக்கப் போகிறேனா? தெரியவில்லை என்று புலம்புகிறான் இராமன்.

உலகத்தில் உள்ள பொருள்களையும், நடக்கும் நிகழ்ச்சிகளையும். அவற்றின் நன்மை தீமைகளயையும் நன்கு உயர்த்து உணர்ந்து தனக்குக் காட்டித் தன்னை நல் வழிப்படுத்த முயலுவதால் இலக்குவனை இராமன் தன்

கண் என்றான் என்க. இலக்குவன் பிரிந்து சென்றதால் தனக்குக் கண்ணும் போயிற்று; அறிவும் போயிற்று என்று கூறும் நயம் காண்க. எனவே கண்களையும் அறிவையும் இழந்த நான் எவ்வாறு அவனைத் தேடுவேன் என்றதும் ஒரு நயம்.

68. "தள்ளா வினையேன் தனி ஆர் உயிர் ஆய்
உள்ளாய்! ஒரு நீயும் ஒளித்தனையோ?
பிள்ளாய்! பெரியாய்! பிழை செய்தனையால்;
கொள்ளாது உலகு உன்னை; இதோ கொடிதே!" (3711)

(தள்ளா - நீக்கமுடியாத; ஒளித்தல் - மறைதல்)

"தவிர்க்கமுடியாத தீவினையை உடையவனாகிய எனது ஒப்பற்ற அருமையான உயிராய் உள்ளவனே! நீயும் என்னைத் தனியே விட்டு மறைந்து போனாயோ? பருவத்தால் சிறியவனே! தம்பியே! அறிவிற் சிறந்தோனே! நீ இவ்வாறு செய்தது பிழையாகும். எனவே உலகத்தார் உன் செயலை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; இச்செயல் மிகவும் கொடியதானது" என்று புலம்பினான் இராமன்.

ஊழ்வினை என்பது யாராலும் தவிர்க்க முடியாதது. ஒவ்வொருவரும் அனுபவித்தே தீரவேண்டும். அது எல்லாப்பிறப்புக்களிலும் தொடர்ந்து வரும், எனவேதான் "தள்ளா வினை" என்றான்; "ஒளித்தல்" என்பது கண்காணாது மறைந்து போதலையே குறிக்கும், பிள்ளாய் பெரியாய் என்ற முரண்சொல் ஆட்சி நோக்குக. சிறிய பருவத்திலேயே உய்த்து உணரும் பேரறிவு வாய்க்கப் பெற்றவனே என்பது பொருள். உலகு என்பது உயர்ந்தோர் மாட்டே என்று உலகத்திலுள்ள சான்றோர்களைக் குறிக்கும்.

69. "பேரா இடர் வந்தன பேர்க்கவலாய்!
தீரா இடர் தந்தனை; தெவ்வர் தொழும்
வீரா! எனை இங்ஙன் வெறுத்தனையோ?
வாராய், புறம் இத்துணை வைகுதியோ?" (3712)

(பேரா - தீர்க்கமுடியாத; பேர்த்தல் - நீங்குதல் \ போக்குதல் \ தீர்த்தல்; தீரா - நிலைக்காத; தெவ்வர் - பகைவர்; தொழுதல் - போற்றுதல் \ பாராட்டுதல்; இத்துணை - இவ்வளவு நேரம்; புறம் - வெளியே; பேர்த்தல் - பெயர்த்தல் \ வேருடன் களைந்து நீக்குதல்; வந்தன - உண்டாகிய \ ஏற்பட்ட)

"நமக்கு உண்டாகின்ற துன்பங்களையெல்லாம் தீர்க்கும் வல்லமை படைத்தவனே! இப்பொழுது என்னைத் தனியே விட்டுப் பிரிந்து சென்று எனக்கு நீக்கமுடியாத பெருந்துன்பத்தைத் தந்து விட்டாய்; பகைவர்களும் போற்றத்தக்க வீரனே! உன்னால் என்னை எவ்வாறு வெறுத்துப் போக முடிந்தது? இவ்வளவு நேரம் வெளியில் தங்கும் இயல்புடையவனல்லவே நீ? எனவே விரைவில் வந்து என்னைச் சேர்வாயாக" என்று புலம்பினான் இராமன்.

70. "என்னைத் தரும் எந்தையை, என்னையரை,
பொன்னைப் பொருகின்ற பொலங் குழையாள்
தன்னை, பிரிவேன்; உளென் ஆவதுதான்
உன்னைப் பிரியாத உயிர்ப்பு அலவோ?" (3713)

(தருதல் - பெற்றுவளர்த்தல்; பொன் - திருமகள்; பொருதல் - ஒத்திருத்தல்; பொலன் - பொன்; குழை - குண்டலம் \ காதணி; உயிர்ப்பு - மூச்சு \ பிராணன் \ உயிர்வளி; உளன் ஆவது - உயிருடன் இருப்பது)

"என்னைப்பெற்று வளர்த்த என் தந்தை தசரதனையும், என் அன்னையர்கள் மூவரையும், திருமகளைப் போன்ற அழகும், பொன்னால் ஆன காதணிகளை அணிந்தவளுமான சீதையையும் பிரிந்து, தனித்திருந்தும் நான் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக்காரணம் என்னுடைய மூச்சுக் காற்று - உயிர்க்காற்றுப் போன்ற உன்னைப் பிரியக் கூடாது என்பதற்காகத்தான்", என்று இலக்குவனிடம் தான் கொண்ட பேரன்பை இராமன் வெளிப்படுத்தினான்.

முன்பு இலக்குவனை என் கண், என் உயிர், என்தனி ஆர்உயிர் என்று கூறிய இராமன், இங்கு என் பிராணன் மூச்சுக்காற்று என்று கூறுவதை நோக்குக.

71. "பொன் தோடு இவர்கின்ற பொலங் குழையாள்
தன்தேடி வருந்து தவம் புரிவேன்,
நின்தேடி வருந்த நிரப்பினையோ?
என் தேடினை வந்த இளங் களிறே!" (3714)

(களிறு - யானை; இவர்தல் - பொருந்தி விளங்குதல்; பொலன் -அழகு; நிரப்புதல் - நிறைவு செய்தல்; தோடு - காதணி)

"என்னை விரும்பி என்னைத்தேடி என்னுடனேயே கானகமும் உடன் வந்த இளமையான ஆண்யானை போன்றவனே! பொன்னாலாகிய தோட்டோடு பொருந்திய அழகிய குண்டலத்தை அணிந்திருக்கின்ற சீதையைத் தேடி, வருந்தியிருந்து அதை ஓர் தவம் போலச் செய்து கொண்டிருக்கும் என்னை, உன்னையும் தேடி அலைந்து வருந்தும்படி செய்து விட்டாயே?" என்று வருந்தினான் இராமன்.

உன்னைப் பிரிந்ததாலாகிய துயரம், சீதையைப் பிரிந்த துயரத்தைக் காட்டிலும் மேம்பட்டு விளங்கி, என் உள்ளத்தில் வருத்தத்தை நிரம்பச் செய்து விட்டது என்றான் என்பதாம்.

72. "இன்றே இறவாது ஒழியேன்; எமரோ,
பொன்றாது ஒழியார், புகல்வார் உளரால்;
ஒன்றாகிய உன் கிளையோரை எலாம்
கொன்றாய்; கொடியாய்! இதுவும் குணமோ?" (3715)

(இன்றே - இப்பொழுதே; புகல்தல் - கூறுதல்; எமர் - எம் சுற்றத்தார்; பொன்றுதல் - உயிர்துறத்தல்; ஒன்றாகிய - ஒருசேர \ ஒருமித்த; கிளையோர் - சுற்றத்தார்; குணம் - இயல்பு)

"உன்னைக் காணப் பெறேனாயின் நான் இறவாது இருக்கமாட்டேன்; இறந்து படுவேன். இதனை அயோத்தியில் சென்று சிலர் நம் உறவினர்களிடம் சொல்லுவர். அதனால் நம் சுற்றத்தினரும் இறந்துபடுவர்; எனவே ஒருமித்த உணர்வுடைய உன்னுடைய சுற்றத்தார்கள் எல்லோரையும் ஒருசேரக் கொன்றவனாக ஆகிறாய்; அப்பழி உன் மீது வந்து சேர்வதனாலாகிய கொடுமையை உடையவனே! இது உன்னுடைய நல்லியல்புகளுக்கு ஏற்றதாகுமோ?" என்றான் இராமன்.

இங்கே "எமர்" என்றும், "உன் கிளையோர்" என்றும் கூறி எல்லோரையும் இணைத்துக் கூறிய நயம் காண்க.

73. "மாந்தா முதல் மன்னவர்தம் வழியில்,
வேந்து ஆகை துறந்தபின், மெய் உறவோர்
தாம்தாம் ஒழிய, தமியேனுடனே
போந்தாய்; எனை விட்டனை போயினையோ?" (3716)

(ஆகை - ஆகுதல்; மெய் - உண்மை; ஒழிய - நீங்கிப்போக; மாந்தா - மாந்தாதா)

"நம் முன்னோர்களான மாந்தாதா முதல் ஏனைய அரசர்கள் அனைவரும் மரபு முறைப்படி பாரம்பரியமாக அரசாட்சி நடத்தி வந்தனர்; ஆனால் நான் அரசன் ஆகுவதைத் துறந்து வனம் வந்தேன். அப்பொழுது உண்மையான உள்ளன்புடைய நம் சுற்றத்தினர் அனைவரும் காடுவரை வந்து என்னை வழியனுப்பி விட்டு அவரவர்கள் தத்தம் காரியங்களை ஆற்றும் பொருட்டு என்னை விட்டுப்பிரிந்து சென்றனர்; அப்போது தனியேனாகிய என்னுடன் நீ மட்டும் உனக்குரிய வாழ்க்கையின்பத்தைத் துறந்து வந்து என்னைப் பாதுகாக்கும் பொருட்டுக் காட்டுக்கும் வந்து விட்டாய்; ஆனால் இப்போது என்னைத் தனியே தவிக்கவிட்டு விட்டு விலகிப் போய் விட்டாயோ?" என்று இரங்கிப் புலம்பினான் இராமன்.

74. கவிக்கூற்று

என்னா உரையா, எழும்; வீழும்; இருந்து
உன்னா, உணர்வு ஒய்வுறும்; ஒன்று அலவால்;
"மின்னாது இடியாது; இருள்வாய் விளைவு ஈது
என் ஆம்?" எனும், என் தனி நாயகனே. (3717)

(தனி - ஒப்பற்ற; நாயகன் - தலைவன்; ஓய்தல் - சோர்தல்; என்னா - என்று; உரையா - உரைத்து \ கூறி; உன்னா - உன்னி \ நினைத்து; உணர்வு - அறிவு)

என்னுடைய ஒப்பற்ற தலைவனான இராமன், மேற்கண்டவாறு கூறி இலக்குவனைத் தேடும் பொருட்டு எழுந்திருப்பான்; நிற்க முடியாது கீழே விழுவான். சற்றுநேரம் உட்கார்ந்து இருந்து, நிகழ்ந்தனவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து அறிவு மயங்கித் தளர்ச்சியுறுவான். இவ்வாறு அவன் பட்ட

துன்பங்கள் ஒன்றல்ல இரண்டல்ல பலவாகும்; "மின்னல் மின்னாமல் இடி இடிக்காதே இவ்விருட்டுவேளையில் நிகழ்ந்தது எதில் போய் முடியுமோ?" என்று தனக்குத் தானே கூறிக் கொள்வான்.

இதுமுதல் மூன்று பாடல்கள் இராமன் துயரத்தை நினைந்து கம்பன் பட்ட துயரத்தில் எழுந்த கவிக்கூற்று. கம்பன் இராமனைத் தன் தலைமைத் தெய்வமாகக் கொண்டவன். எனவே "என் தனிநாயகன்" என்றான் என்க. "மின்னாது இடியாது" என்பது ஒரு பழமொழி. மின்னல் மின்னிய பிறகுதான் இடி இடிக்கும் என்பது பொருள். ஒரு காரியம் நல்லதோ கெட்டதோ நிகழ்வதற்கு முன்பு, அந்நிகழ்ச்சி நிகழப்போகிறது என்பதை ஒரு சில குறிப்புக்கள் நமக்கு அறிவிக்கும் என்பது உட்கருத்து. தம்பியைப் பிரிவதற்குமுன்பு தனக்கு எந்த அறிகுறியும் தோன்றவில்லையே என்று கருதி, இதனால் என்ன தீங்குகள் விளையுமோ என்று துயரப்பட்டான் இராமன் என்பதாம். ஒளியும் ஒலியும் ஒரே நேரத்தில் தோன்றினாலும், முதலில் ஒளிதான் பூமியை வந்தடையும், பின்னர்தான் ஒலிகேட்கும் என்ற அறிவியல் கருத்தை நோக்குக.

75. நாடும், பல சூழல்கள்தோறும் நடந்து
ஓடும், பெயர் சொல்லி உளைந்து உயிர் போய்
வாடும்வகை சோரும் மயங்குறுமால்
ஆடும் களி மாமதயானை அனான். (3718)

(ஆடுதல் - அசைதல்; சூழல் - பக்கம்; நாடுதல் - தேடுதல்; உளைதல் - வருந்துதல்; களி - மயக்கம்)

நிற்கும் போதே அசைந்து ஆடிக்கொண்டிருக்கும், போர்புரியும் வல்லமை பெற்ற செருக்கும் மதமும் கொண்ட யானையைப் போன்றவனான இராமன், தம்பி இலக்குவனைக் காட்டில் எல்லா இடங்களிலும் நடந்து சென்றே தேடி அலைவான்; "இலக்குவா" என்று அவன் பெயரைக் கூவி அழைத்துக் கொண்டே ஓடுவான். உடலும், உள்ளமும், உயிர்போய் வரும்படி வருந்தித் தளர்ந்து போவான்; அவன் எங்கும் கிடைக்காமையால் திகைப்புறுவான்.

யானை, கட்டிவைத்திருக்கும் போதே, ஓரிடத்தே நில்லாது அசைந்து ஆடிக்கொண்டிருப்பது அதன் இயல்பு. "ஆடும்" என்ற சொல்லுக்குப் போர்புரியும் என்ற ஒரு பொருளும் உண்டு.

76. "கமையாளொடும் என் உயிர் காவலில் நின்று
இமையாதவன், இத்துணை தாழ்வுறுமோ?
சுமையால் உலகூடு உழல் தொல் வினையேற்கு,
அமையாதுகொல் வாழ்வு? அறியேன்" எனுமால். (3719)

(கமை - பொறை \ பொறுமை; தாழ்வுறுதல் - தாமதித்தல்; சுமை - பாரம்; உழல்தல் - அலைதல்; தொல் - பழமையான; வாழ்வு - உயிர் வாழ்க்கை; அமையாது - பொருந்தாது; இமைத்தல் - கண் மூடித்திறத்தல்)

“பொறுமையே வடிவானவளான சீதையோடு, என் உயிரையும் பாதுகாத்து, கண் இமைக்காது காவல் கடமை புரிந்து வந்த இலக்குவன், என்னைப் பிரிந்து இத்துணை நேரம் தாமதிப்பானோ? இந்த உலகத்தில் பிறந்து, பழந்தீவினையால் நிலத்திற்குப் பாரமாகத் திரிகின்ற எனக்கு, ஒரு நல்ல வாழ்க்கை, உயிருடன் இன்புற்று வாழும் வாழ்க்கை இனிப் பொருந்தாதோ? அறியேன்” என்று ஐயுற்று வருந்தினான் இராமன்.

இலக்குவன், இராமனையும் சீதையையும் கண் இமைக்காமல் காத்துவந்தான் என்று பல இடங்களில் கவிஞர் கூறுவதைக் கருதுக. இலக்குவனுக்கு “உறங்காவில்லி” என்ற ஒரு பெயரும் உண்டு என்பதையும் . இலக்குவன் உயிரோடு இருந்தால் இத்துணை தாமதித்திருக்கமாட்டானே? ஒரு வேளை உயிருடன் இல்லையோ என்ற குறிப்பையும் தரும் பாடல் வரிகளின் நயத்தினை உணர்க. உலகில் பிறந்து செய்யத் தக்க காரியங்களைச் செய்யாது வாளா இருப்பவனைப் பூமிக்குப் பாரம் என்று கூறுவது உலக இயல்பு.

77. இராமன் இறக்கத் துணிதல்.

“அறப்பால் உளதேல், அவன் முன்னவன் ஆய்ப்
பிறப்பான் உறில், வந்து பிறக்க” எனா,
மறப்பால் வடிவாள் கொடு, மன் உயிரைத்
துறப்பான் உறுகின்ற தொடர்ச்சியின்வாய். (3720)

(அறப்பால் - அறத்தின் பயனாகிய புண்ணியம்; வடி - கூரிய; மன் - நிலைபெற்ற \ மன்னன் \ தலைவன்; முன்னவன் - தலைவன் \ அண்ணன்; தொடர்ச்சி - அன்பின் தொடர்பு; மறப்பால் - வீரத்தன்மை) (குளகப்பாடல்)

நான் முற்பிறவியில் செய்த தர்மத்தின் பயனாகிய புண்ணியம் என்பது ஒன்று இருக்குமானால், இலக்குவனுக்கு அடுத்த பிறவி என்று ஒன்று இருக்குமானால் அவன் எனக்குத் தமையனாக வந்து பிறக்கட்டும் என்று கூறி, கொடுந்தன்மை பொருந்திய கூரிய வாட்படையினால், தனது நிலைபெற்ற உயிரைத் துறக்கும் பொருட்டு, வாளை உருவுகின்ற அந்தச் சமயத்தில் - பாடல் தொடர்கிறது.

இவ்வாறு இராமன் எண்ணுவதற்குக் காரணம், இந்தப் பிறவியில் இலக்குவன் தனக்குச் செய்திருக்கின்ற உதவிகளுக்குக் கைம்மாறாக, தான் அடுத்த பிறவியில் அவனுக்கு இளையவனாகப் பிறந்து அவனுக்குப் பணிவிடை புரிய வேண்டும் என்ற ஆசையினால் என்க. அதேபோல அடுத்த ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் ஆதிசேஷனாகிய இலக்குவன் அண்ணன் பலராமனாகவும், இராமன் இளையவன் கிருஷ்ணனாகவும், அவதாரம் செய்தனர் என்பதை அறிக.

78. இலக்குவன் அயோமுகி நாசியை அறுத்தலும், அயோமுகி அலறுதலும்.

பேர்ந்தான், நெடு மாயையினில் பிரியா;
ஈர்ந்தான், அவள் நாசி பிடித்து, இளையோன்;

சோர்ந்தாள் இடு பூசல் செவித் துளையில்
சேர்ந்து ஆர்தலுமே, திருமால் தெருளா. (3721)

(பேர்தல் - நீங்குதல்; பிரியா - பிரிந்து; ஈர்தல் - அரிதல்; பூசல் - அவலக்குரல்; ஆர்தல் - பொருந்துதல்; திருமால் - இராமபிரான்; தெருளா - தெளிவுற்ற; நாசி - மூக்கு) (குளகப்பாடல்)

அரக்கி அயோமுகி செய்த மோகனை என்ற மந்திரத்தால் உண்டான மாயையிலிருந்து நீங்கிய இலக்குவன், அவளின் பிணிப்பினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு, அவளைப் பிடித்து அவளுடைய மூக்கையும் ஏனைய உறுப்புக்களையும் அரிந்தான். அதனால் அவள் மிகவும் தளர்வுற்று, எழுப்பிய அவலப்பேரொலி, திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் செவிகளில் வந்து சேர்ந்ததும், இலக்குவனுக்கு ஒன்றும் ஆபத்தில்லை. என்று தெளிவு பெற்று - பாடல் தொடர்கிறது.

இதே போன்று ஒரு காட்சி சிலப்பதிகாரத்திலும் வருகிறது. கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு கவுந்தியடிகள் செல்லும்போது, கோவலன் தண்ணீர் கொணர்வதற்காகத் தனியே செல்லுகிறான். அங்கே காடுறைதெய்வம், வயந்தமாலையின் வடிவில் வந்து கோவலனை மயக்கிற்று. ஆனால் கோவலன் கொற்றவை மந்திரத்தைப் பயன்படுத்தித் தப்பித்து வந்து விட்டான் என்பது சிலப்பதிகாரம்.

79. இராமனது ஊகம்

''பரல் தரு கானகத்து அரக்கர், பல் கழல்
முரற்று அரு வெஞ் சமம் முயல்கின்றார், எதிர்
உரற்றிய ஓசை அன்று; ஒருத்தி ஊறுபட்டு
அரற்றிய குரல்; அவள் அரக்கியாம் எனா?'' (3722)

(பரல் - பருக்கைக்கற்கள்; முரற்றுதல் - ஒலித்தல்; வெஞ்சமம் - கொடிய போர்; எதிர் - மாறுபடுதல்; உரற்றுதல் - துன்புற்று உரக்க எழுப்பும் ஒலி; ஊறு - தீங்கு; தருதல் - நிரம்பக்கிடத்தல்; அரற்றுதல் - வாய்விட்டுக் கதறுதல்)

"பருக்கைக்கற்கள் நிறைந்து கிடக்கின்ற கானகத்தில் திரியும் அரக்கர்கள் தங்களது பலவகையான வீரக்கழல்கள் ஒலிக்கின்ற ஒலியோ, அரிய கொடியபோர் செய்யத் துணிபவர்கள், மாறுபட்டுத் துன்பத்தால் உரக்க எழுப்பும் அவலக்குரலோ அல்ல; இதுயாரோ ஒருத்தி தனது அங்கங்களுக்குத் தீங்கு ஏற்பட்டதால் வாய்விட்டுக் கதறுகின்ற குரலேயாகும். அதுவும் இது இரவு நேரத்தில் கேட்பதால் அது ஓர் அரக்கியாகவே இருக்கவேண்டும்" என்று இராமன் கருத - பாடல் தொடர்கிறது.

தான் கேட்ட ஒலி பல அரக்கர்கள் போரிட்டு முழங்கும் ஒலி அல்ல என்றும் ஓர் அரக்கி துன்பத்திற்கு உள்ளாகி அரற்றிய ஒலியேயாகும் என்றும் ஊகித்து அறிந்தான் இராமன் என்பதாம்.

80. இராமன் அக்னிப்படையைப் பயன்படுத்துதல்

அங்கியின் நெடும்படை வாங்கி, ஆங்கு அது
செங்கையில் கரியவன் திரிக்கும் எல்லையில்,
பொங்கு இருள் அப்புறத்து உலகம் புக்கது;
கங்குலும், பகல் எனப் பொலிந்து காட்டிற்றே. (3723)

(வாங்கி - எடுத்து; அங்கி - அக்னி \ தீ \ நெருப்பு; திரித்தல் - சுழற்றுதல்; பொங்கு - மிகுந்த; கங்குல் - இரவுப்பொழுது; காட்டிற்று - தோன்றியது; பொலிதல் - சிறந்து விளங்குதல்)

இவ்வாறு கருதிய கரியநிறமுள்ள இராமபிரான், தன் அம்பறாத் தூணியிலிருந்து ஒரு அம்பினை எடுத்து, அதை நெருப்புக் கடவுளாகிய அக்னிக்குரிய அதிதேவதையை மனத்துள் எண்ணி அந்தப் பெரும் படையைத் தனது சிவந்த கைகளில் எடுத்துச் சுழற்றிச் செலுத்தும் சமயம், அவ்வளவு நேரம் அங்கு மிகுந்திருந்த இருள் விலகி, உலகத்தின் அப்புறத்தில் சென்று புகுந்து கொண்டது. எனவே இவ்வுலகத்திலிருந்த இரவுப்பொழுது மாறிப்போய், பகல் பொழுதைப் போல ஒளி விளங்கித் தோன்றியது.

இங்கே ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு அம்பினை எடுத்து, அதை நாம் விரும்பும் வண்ணம் அதற்குரிய அதிதேவதைக்குரிய மந்திரத்தைப் பயன்படுத்திச் செலுத்தினால் அது அந்த அதிதேவதையின் குணத்தைக் கொண்டு பாயும். எனவே அக்னியாஸ்திரம் என்றோ, பிரம்மாஸ்திரம் என்றோ, நாகாஸ்திரம் என்றோ தனித்தனியாக அஸ்திரங்கள் இல்லை. அம்பறாத்தூணியில் இருக்கும் அம்புகள் எல்லாம் ஒரு தன்மையானவையே, அவற்றின் மீது நாம் எந்த அதிதேவதையை எண்ணி அதற்குரிய மந்திரத்தைக் கூறிச் செலுத்துகிறோமோ, அதற்குரிய பயனை அது விளைவிக்கும் என்பதை அறிக. எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமானால், சித்திரகூடத்தில் இராமனும் சீதையும் தனித்து அமர்ந்திருந்த பொழுது, இந்திரன் மகனான ஜயந்தன், காக்கை வடிவம் கொண்டு சீதையின் மார்பைத் துன்புறுத்தினான். நீண்ட நேரத்திற்குப் பிறகு இதை உணர்ந்த இராமன், அருகே இருந்த ஒரு புல்லை எடுத்து பிரம்ம மந்திரத்தை உச்சரித்துச் செலுத்தினான். அந்தப் பிரம்ம அஸ்திரம் அவனை உலகம் முழுதும் சுற்றவைத்து, மீண்டும் இராமபிரானிடமே சேர்ந்து அடைக்கலம் புகவைத்தது என்ற நிகழ்ச்சியைக் கூறலாம்.

இராமன் இப்பொழுது அக்னி அஸ்திரத்தைச் செலுத்த இரண்டு காரணங்கள். ஒன்று, அதன் மூலம் ஒளிபெற்று, இலக்குவன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கலாம். மற்றொன்று, இரவுப்பொழுதில் பெரும்பலம் கொள்ளும் அரக்கர் அரக்கியர், பகல் பொழுதாவதால் வலிமை குன்றித் தளர்வர் என்பதாம்.

81. இராமன் விரைந்து புறப்படுதல்.

நெடு வரை பொடிபட, நிவந்த மா மரம்
ஒடிவுற, நிலமகள் உலைய, ஊங்கு எலாம்,
"சட சட" எனும் ஒலி தழைப்பத் தாக்கவும்
முடுகினன் இராமன், வெங்காலின் மும்மையான். (3724)

(வரை - மலை; பொடி - துகள்; நிவந்த - ஓங்கி வளர்ந்த; உலைதல் - நடுங்குதல்; ஊங்கு - பக்கம்; தழைத்தல் - மிக்குத்தோன்றுதல்; கால் - காற்று; மும்மை - மும்மடங்கு; முடுகுதல் - விரைந்து செல்லுதல்; சடசட- இரட்டைக்கிளவி)

இராமன் வந்த வேகம் தாங்காது, நீண்டமலைகள் பொடியாகித் தூளாகிப் போயின. உயர்ந்து வளர்ந்திருந்த பெரியமரங்கள் எல்லாம் ஒடிந்து கீழேவிழுந்தன. அந்த அரக்கியின் குரல்வந்த திசையை நோக்கி, அவளைத் தாக்கும் பொருட்டு, கொடிய புயற்காற்றினை விட மூன்று மடங்கு வேகமாகவும் விரைவாகவும் ஓடினான் இராமன்.

இவன் விரைவிலும் வேகத்திலும், அவன் இலக்குவன் மேற்கொண்ட பேரன்பைத் தெரிவித்தார் என்க. "வெங்கால்" என்பது சண்டமாருதம் எனவும் பொருள்படும்.

82. ஒருங்கு உயர்ந்து, உலகின்மேல் ஊழிப் பேர்ச்சியுள்
கருங் கடல் வருவதே அனைய காட்சி தன்
பெருந் துணைத் தம்முனை நோக்கி, பின்னவன்,
"வருந்தலை வருந்தலை வள்ளியோய்!" எனா. (3725)

(பேர்ச்சி - பெயர்ச்சி \ மாற்றம்; உலகு - நிலம்; காட்சி - தோற்றம்; தம்முன் - தன் அண்ணன் \ தமையன்; பின்னவன் - இளைவன் \ தம்பி) (குளகப்பாடல்)

ஊழி இறுதியில், கருங்கடல், நிலத்தின் மேல் ஒருசேரப்பொங்கிப் பாய்ந்து வந்து, அழிக்க வருவதைப் போன்ற தோற்றத்தை உடையவனும், தனக்குப்பெரிய துணைவனும், கொடிய காற்றின் மூன்று மடங்கு வேகமாக வந்த தன் தமையன் இராமனை நோக்கி. இளவலான இலக்குவன், "வண்மைக் குணம் உடையவனே! வருந்தாதே! வருந்தாதே" என்று கூறி - பாடல் தொடர்கிறது.

ஊழிக்கால முடிவில் கடல்கள் பொங்கி எழுந்து உலகை அழிக்கும் என்பது புராணக்குறிப்பு.

83. இலக்குவன் எதிர்ப்பட்டு வணங்குதல்

"வந்தனென் அடியனேன் வருந்தல், வாழி! நின்
அந்தம் இல் உள்ளம்" என்று, அறியக் கூறுவான்,
சந்த மென் தெளிர் புரை சரணம் சார்ந்தனன்;
சிந்தின நயனம் வந்தனைய செய்கையான். (3726)

(சிந்தின - இழந்த; நயனம் - கண்; செய்கை - செயல்; அந்தம் இல் - சிதைவில்லாத \ முடிவில்லாத; அறிய - விளங்குமாறு; சந்தம் - அழகு; சரணம் - திருவடிகள்; சார்தல் - விழுந்து வணங்குதல்; புரை - ஒப்பு)

அவ்வாறு கூறிக் கொண்டு வந்த இலக்குவன், "தமையனே! வாழ்வீராக! நான் வந்து விட்டேன், உன்னுடைய மயக்கத்தில் எல்லையில்லாத உள்ளம் வருந்தாதே!" என்று அவன் புரிந்து கொள்ளும் வண்ணம் கூறிக்கொண்டே, இராமபிரானது அழகிய மென்மையான தளிர்போன்ற திருவடிகளைத்தொழுது வணங்கினான். அதனைக் கண்டு இராமன், இழந்த கண்ணைத் திரும்பிப் பெற்றது போல அளவற்ற மகிழ்ச்சியடைந்தான்.

தசரதனுக்கு இராமன் எப்படிக் கண்போன்றும் உயிர்போன்றும் விளங்கினானோ, அவ்வாறே இராமனுக்கும் இலக்குவன் கண்போன்றும் உயிர்போன்றும் விளங்கினான் என்பதாம். இழந்த கண்களைத் தான் திரும்பப் பெற்றால் எவ்வளவு மகிழ்ச்சியுறுவானோ, அவ்வளவு மகிழ்ந்தான் இலக்குவனைக் கண்டதும் என்றது, அவன் இளவலின்மேல் கொண்ட பாசத்தைக் குறிக்கும் என்க.

84. இலக்குவனைக் கண்ட இராமன் நிலை.

ஊற்று உறு கண்ணின் நீர் ஒழுக நின்றவன்,
ஏற்று இளங்கன்றினைப் பிரிவுற்று, ஏங்கி நின்று,
ஆற்றலாது அரற்றுவது, அரிதின் எய்திட,
பால் துறும் பனி முலை ஆவின் பான்மையான். (3727)

(உறு - பொருந்திய \ ஒத்த; ஏற்று \ ஏறு - ஆண்காளை; அரற்றுதல் - கதறுதல்; துறுதல் - பிலிற்றுதல் \ நிறைந்து ததும்புதல் \ சுரத்தல்; பனி - குளிர்ந்த; முலை - மடி; பான்மை - தன்மை) (குளகப்பாடல்)

இலக்குவனைப் பிரிந்ததனால் கண்களினின்றும் கண்ணீர் ஊற்றுப் பெருக்குப்போல் பெருக நின்றவனாகிய இராமன், ஆண்மையும் இளமையும் உடைய தன் கன்றினைப்பிரிந்து, ஏக்கமுற்று நின்று, அதனைப் பொறுக்கமாட்டாது வாய்விட்டுக் கதறி அழும்போது, அது தானே வந்து சேர்ந்திடும் போது, பால் சுரக்கின்ற குளிர்ச்சி பொருந்திய மடியினையுடைய தாய்ப்பசுவின் தன்மையை ஒத்தவன் ஆயினான்.

தாய் தன் குழந்தையிடம் காட்டும் அன்பிற்குப் பசு, தன் கன்றினிடம் காட்டும் அன்பை உவமையாகக் கூறுவது மரபு. இது "வாத்சல்யம்" எனப்படும். இதைப்போலக் கன்றைப் பிரிந்த பசுவின் துயரத்தையும், கன்றைக் கண்ட பசுவுக்குப்பால் தானே பெருகுவதையும், தாய் எருமை, தன் கன்று உள்ளிச் சோர்கின்றதையும், கவிஞன் காப்பியத்தில் ஆங்காங்கே கூறிப் போதலைக் காணலாம்.

85. இராமன் இலக்குவனைத் தழுவிக் கொள்ளுதல்

தழுவினன் பல் முறை; தாரைக் கண்ணில் நீர்
கழுவினன், ஆண்டு அவன் கனக மேனியை;
வழுவினையாம் என மனக் கொடு ஏங்கினேன்;
எழு என, மலை என, இயைந்த தோளினாய்! (3728)

(கனகம் - பொன்; எழு - கணையமரம் \ தூண்; வழுவுதல் - கை தவறுதல்; தாரை - ஒழுக்கு; இயைந்த - பொருந்திய)

இராமன் கண்களினின்றும் தாரை தாரையாய்க் கண்ணீரைப் பெருக்கி, இலக்குவனின் பொன் போன்ற மேனியை நீராட்டியும் பல முறை தழுவிக் கொண்டான்; "கணையமரம் போல் திரட்சியும், மலை போல் உயர்ச்சியும் உடைய தோள்களை உடையவனே! நீ என்னைத்தனியே விட்டுவிட்டுக் கைதவறிப் போய்விட்டாய் என்றே மனத்தில் எண்ணிக் கொண்டு மிக ஏக்கமுற்றிருந்தேன்" என்றான் இராமன்.

"தாரை" என்பது இடைவிடாமல் ஒழுகும் ஒழுக்கைக் குறித்தது; இவ்வாறு கண்ணின் நீர் கழுவுதல் \ ஆட்டுதல் என்பதும் இக்காப்பியத்தில் பலமுறை பயன்படுத்தப் பட்டிருப்பதை உணர்க. "வழுவுதல்" இங்கே விட்டுப்பிரிதல் என்ற பொருளில் கைதவறுதலைக் குறிக்கும். இலக்குவனது திரட்சியான தோள்களுக்கு எழுவும், உயரமான நீண்டதோள்களுக்கு மலையும் உவமை.

86. இலக்குவன் நடந்தது கூறுதல்

"என்னை அங்கு எய்தியது? இயம்புவாய்" என,
அன்னவன் அஃது எலாம் அறியக் கூறலும்,
இன்னலும், உவகையும், இரண்டும், எய்தினான்
தன் அலாது ஒரு பொருள் தனக்கு மேல் இலான் (3729)

(எய்தியது - நிகழ்ந்தது \ நேர்ந்தது; அறிய - விளங்கும்படி)

தனக்குவமை இல்லாத, தனக்குமேல் ஒன்றும் இல்லாத, தனி முதல்வனான இராமபிரான், இலக்குவனை நோக்கி, "நீ, நீர் கொணரச் சென்ற இடத்தில் என்ன நிகழ்ந்தது? அதனைக் கூறுவாயாக!" என்று கேட்க, அதற்கு இலக்குவன் அங்கு நிகழ்ந்தது அத்தனையையும் அவன் விளங்கிக் கொள்ளுமாறு கூறிமுடிக்க, அதனைக்கேட்டு இராமன் ஒருபுறம் இன்பமும், மறுபுறம் துன்பமும் இரண்டும் ஒரே சேர எய்தினான்.

தெய்வத்தின் திரு அவதாரமாகிய இராமன், தான் கொண்ட மானுடத்தன்மைக்கு ஏற்ப மகிழ்ச்சியும், துக்கமும் கொண்டான் என்க. "இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே, அன்பருக்கு அன்பனே, யாவையுமாய், அல்லையுமாய்" என்பது திருவாசகம். இலக்குவன் அரக்கியிடம் அகப்பட்டுக் கொண்டு அல்லலுற்றானே என்று துக்கமும், அவளைக்

கொல்லாது, ஊறுபடுத்தி அவளிடம் இருந்து மீண்டு வந்தானே என்பதால் மகிழ்ச்சியும் ஒருங்கே கொண்டான் என்க. எல்லோர்க்கும் தானே தலைவன் என்பதையும், தனக்குமேல் ஒருதலைவன் இல்லையென்பதையும் உறுதிப்படுத்துவதற்காகவே "தன்னலாது ஒரு பொருள் தனக்குமேல் இலான்" என்றான் என்க.

87. "ஆய்வுறு பெருங்கடல் அகத்துள் ஆயவன்
பாய் திரை வருதோறும், பரிதற்பாலனோ?
தீவினைப் பிறவி வெஞ் சிறையில் பட்ட யாம்,
நோய் உறு துயர் என, நுடங்கல் நோன்மையோ?" (3730)

(ஆய்வுறுதல் - ஆராய்தற்கு உரியதாதல்; அகம் - நடு \ உள்; பாய் - தாவுதல்; பரியல் - அஞ்சுதல் \ வருந்துதல்; நுடங்குதல் - தளர்தல்; நோன்மை - வலிமையுடைமை \ ஆற்றல்)

"ஆராய்ந்து அறிதற்குரிய பெரிய கடலிடத்தில் அகப்பட்டுக்கொண்டவன் தன்னைநோக்கித் தாவி வரும் அலைகளைக் கண்டு, அது வரும் பொழுதெல்லாம் அஞ்சி வருந்துதல் சரியாகுமோ? அது போல, முன்பு செய்த தீவினையின் பயனால், இப்போது பிறவி என்னும் கொடிய சிறையில் அகப்பட்டுக் கொண்டுள்ள நாம், உடலுக்கு வரும் நோய்களாலும், உள்ளத்திற்கு வரும் துன்பங்களாலும், தளர்ந்துபோய்ச் சோர்தல் வலியுடைமையாகுமா?" என்று இலக்குவன், சோர்ந்த இராமனுக்கு ஆறுதல் கூறினான்.

"ஆய்வுறு பெருங்கடல்" என்பது, கடலின், நீளம், அகலம், ஆழம், அதனுள் இருக்கும் அரிய பொருள்கள் எல்லாமும் எல்லையற்றன. அதை ஆய்வு செய்வதற்கு இன்னும் இடம் இருக்கிறது என்பதைக் குறிக்க என்க. "ஆயவன்" என்ற சொல் அகப்பட்டுக் கொண்டவன் என்ற பொருளில் உரை தரப்பட்டிருக்கிறது. கடலில் இறங்கியவன் அலைக்கு அஞ்சலாமோ? என்ற உலக வழக்கும் காண்க. கடலுக்குத் தீவினைப்பிறவி உவமை; கடலின் அலைகளுக்கு உடல்நோயும் உள்ளத்துயரமும் உவமை. இப்போது அஞ்சிச் சோர்தல் கூடாது. மேலே செய்ய வேண்டுவனவற்றைச் செய்ய வேண்டும் என இலக்குவன் இராமனிடம் கூறினான் என்பதாம். வினைப்பயன் வந்தக்கால் மனம் அழிபவன் பேதை; அதனைத் தொல்லை என்று நினைத்து உணர்பவரே தடுமாற்றத்தின் எல்லைக்குச் செல்வர் என்ற கருத்துக் கொண்ட நாலடியார் பாடல் (33) இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

நடுக்கடலில் அகப்பட்டுக்கொண்டவன் அலைகளை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும்; சிறையில் அகப்பட்டவன், துன்பங்களைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். வாழ்க்கையில் அகப்பட்டுக்கொண்டவன் சோதனைகளைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும். என்ற வாழ்க்கைத் தத்துவத்தைக் காட்டும் கம்பன் பாடல்களில் இது முதன்மையானது.

88. இராமன் கூறுதல்

"மூவகை அமரரும், உலகம் மும்மையும்,
மேவ அரும் பகை எனக்கு ஆக மேல்வரின்,
ஏவரே கடப்பவர்? எம்பிஸ நீ உளை
ஆவதே வலி; இனி, அரணும் வேண்டுமோ?" (3731)

(அமரர் - தேவர் \ கடவுளர்; மேவுதல் - கிட்டுதல்; உளை - உள்ளாய்; ஏவர் - யார்; கடப்பவர் - வெல்பவர்; அரண் - பாதுகாப்பு; எம்பி - என் தம்பி)

"மேல், நடு கீழ், என்னும் மூன்று வகைப்பட்ட உலகங்களும், அதில் உள்ள தேவர், மானிடர், நரகர் என்பவர்களும், தேவர்கள் தலைவர்களாகிய படைத்தல் , காத்தல், அழித்தல் தொழிலைச் செய்கின்ற பிரமன், விஷ்ணு, சிவன் ஆகியவர்களும் கூட நெருங்குதற்கரிய என்னைப் பகையாகக் கருதி என்னை எதிர்த்து வந்தார்களானாலும் கூட, என்னை வெல்லுபவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்னுடைய தம்பியாகிய நீ என் அருகிலேயே இருக்கிறாய். அதுவே எனக்குப் பெரிய வலிமையாகும்; உன்னைத் தவிர எனக்கு வேறு ஒரு பாதுகாப்பும் தேவையாகுமோ?" என்றான் இராமன்.

"தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்பது ஒரு பழமொழி. ஆனால் கம்பன், இலக்குவன் இந்திரஜித்தை வென்று வந்த போது "தம்பிஉடையான் பகை அஞ்சான்" என்றே கூறியிருக்கிறார் என்பதை இங்கு ஒப்பு நோக்குக. "திண்பொருள் எய்தலாகும்; தெவ்வரைச் செருக்கலாகும்; நண்பொடு, பெண்டிர், மக்கள் யாவையும் நண்ணலாகும்; ஒண் பொருள் ஆவதையாஸ உடன் பிறப்பு ஆக்கலாகா; எம்பியை ஈண்டு பெற்றேன்; என்னனக்கு அரியது என்றான்" என்பது சீவகசிந்தாமணி.

89. "பிரிபவர் யாவரும் பிரிக; பேர் இடர்
வருவன யாவையும் வருக; வார் கழல்
செரு வலி வீர! நின் - தீரும் அல்லது,
பருவரல், என்வயின் பயிலற்பாலதோ?" (3732)

(வார் - நீண்ட; செரு - போர்; தீரும் - நீங்கும்; பருவரல் - துன்பம்; வயின் - இடம்; பயிலல் - தங்குதல்)

"நீண்ட வீரக்கழல்களை அணிந்த போர் வன்மை மிக்க வீரனே! இலக்குவஸ என்னைவிட்டுப் பிரிந்து செல்பவர்கள் எல்லோரும் பிரிந்து செல்லட்டும்; எனக்கு வர இருக்கின்ற பெரிய இடையூறுகள் எல்லாம் வந்து சேரட்டும்; என்றாலும் நான் அஞ்சி வருந்த மாட்டேன். காரணம் என்ன தெரியுமா? அவையெல்லாமும் உன்னாலும், உன்னுடைய வலிமையினாலும் என்னை விட்டு நீங்கிப்போகுமே அல்லாது இத்துன்பங்கள் என்னிடமே தங்கிவிடும் தன்மை கொண்டவையோ? அல்ல" என்றான் இராமன்.

யார் என்னை விட்டுப் பிரிந்தாலும், எவ்வளவு பெரிய துன்பங்கள் என்னை வந்தடைந்தாலும், அவையனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தொழியும். நீ என்னுடன் இருந்தால் போதும். எவையும் எதுவும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்று இராமன் இலக்குவன் போராற்றலைப் பாராட்டினான் என்க.

90. ''வன் தொழில் வீர! ''போர் வலி அரக்கியை
வென்று, போர் மீண்டனென்'' என, விளம்பினாய்;
புன்தொழில் அனையவள், புகன்ற சீற்றத்தால்
கொன்றிலை போலுமால்? கூறுவாய்'' என்றான். (3733)

(புன் - இழிந்த; புன்மை - சிறுமை; புகன்ற - விரும்பிச்செய்த)

“வலிய போர்த் தொழிலை உடைய வீரனே! நீ செய்த போரில் போர் செய்வதில் வலிமையுடைய அரக்கியாகிய அயோமுகியை வெற்றிபெற்று மீண்டு வந்தேன்” என்று சொன்னாய்; உன்னை அபகரித்துக்கொண்ட இழிவான செயலைச் செய்த அத்தகையவளை, கொன்றிருக்க வேண்டும். என்றாலும் அவ்வாறு கொல்லாது அவளை விட்டு விட்டாயே? இதற்கு என்ன காரணம்? கூறுவாயாக!” என்று கேட்டான் இராமன்.

“அவளைப் பெண் என நினைத்தே இவன் கொல்லாது, ஊறுபடுத்தி மட்டும் வந்திருக்கவேண்டும்” எனக் குறிப்பால் உணர்ந்தான் இராமன் என்க.

91. இலக்குவன் நிகழ்ந்தது கூறுதல்

''துளைபடு மூக்கொடு செவி துமித்து உக,
வளை எயிறு இதழொடு அரிந்து, மாற்றிய
அளவையில் பூசலிட்டு அரற்றினாள்'' என,
இளையவன் விளம்பி நின்று இரு கை கூப்பினான். (3734)

(துளை - துவாரம்; துமித்து - துணித்து \ அரிந்து; உகுதல் - சிதறுதல்; தளை - கட்டு \ கச்சு; தடிந்து - அறுத்து; பூசல் - கூக்குரல்; அரற்றுதல் - கதறுதல்; அளவையில் - சமயத்தில்)

அயோமுகியின் கட்டுக்குள் இருந்த இளையவனான இலக்குவன், அவள் பிணிப்பிலிருந்து நீங்கி, “அவளுடைய துவாரம் பொருந்திய மூக்கொடு, காதுகளையும் அரிந்து அவைகீழே சிதறும்படியும் செய்து விட்டு, வளைந்த கோரப்பற்களோடு அவளுடைய இதழ்களையும் அவளைவிட்டு நீக்கியபொழுதில், அவள் அதைத் தாங்கலாற்றாது பெருங்கூச்சலிட்டு வாய்விட்டுக் கதறலானாள்“, என இருகரங்களும் கூப்பி இராமன்ன வணங்கித் தொழுது சொல்லிக் கொண்டு நின்றான் இலக்குவன்.

“துளைபடு மூக்கொடு” என்று இங்கு கூறியிருப்பது முன்பு சூர்ப்பணகையின் மூக்கு முதலிய உறுப்புக்களை அறுத்தபோதும் “தொட்ட நுங்கில் தொளையுறு மூக்கு” என்று கூறுவதையும் ஒப்புநோக்குக. எனவே மூக்கு, காது, பற்கள்,

இதழ்கள் ஆகியவை இலக்குவனால் துணிக்கப்பட்டன என்பதும் பெறப்படுகிறது.

92. இராமன் இலக்குவனைத் தழுவிப் பாராட்டுதல்.

“தொல் இருள்தனைக் கொலத் தொடர்கின்றாளையும்,
கொல்லலை; நாசியைக் கொய்து நீக்கினாய்;
வல்லை நீ; மனு முதல் மரபினோய்!” எனப்
புல்லினன் உவகையின் பொருமி விம்முவான். (3735)

(தொல் - முதிர்ந்த \ முற்றிய; நாசி - மூக்கு; கொய்து - அரிந்து; நீங்குதல் - துரத்துதல்; வல்லை - வல்லமையுடையவன்; புல்லுதல் - தழுவிக் கொள்ளுதல்; பொருமிவிம்முதல் - மகிழ்ச்சியால் தத்தளித்தல்)

இலக்குவன் கூறியவற்றைக்கேட்டு, மிக்க மகிழ்ச்சியால் தத்தளித்து நின்ற இராமன், இலக்குவனை நோக்கி, “முற்றிய இருளில் உன்னைக் கொல்லுவதற்காகத் தொடர்ந்து வந்தவளையும், நீ கொல்லாது, அவளுடைய மூக்கு முதலான உறுப்புக்களை மட்டும் அறுத்து, அவளை உயிரோடு போகவிட்டாய். நீ உன் மனுகுலத்தின் நெறிப்படி காரியம் ஆற்றியமையால், அக்குலத்திற்கே மேலும் பெருமை சேர்ப்பவன் ஆகிறாய்” என்று மகிழ்ந்து பாராட்டி, அவனைத் தழுவிக் கொண்டான்.

தன்னைக் கொல்லத் தொடர்ந்து வருபவர்களைத் தான் கொல்லலாம் என்பது மனுநீதியும், பொதுவிதியும் ஆகும். என்றாலும், அவள் பெண், ஒரு பெண்ணைக் கொல்லுதல் பாவம் என்று கருதி அவளைக்கொல்லாது உடல் உறுப்புக்களை மட்டும் அறுத்து அவளை உயிரோடு நீக்கியது, தான் பிறந்த குலத்திற்கே பெருமை சேர்ப்பது என்று கருதிய இராமன், இலக்குவனை அப்பெருந்தன்மைக்காகப் பாராட்டி, உள்ளம் மகிழ்ந்து அவனைத் தழுவிக் கொண்டான் என்பதாம்.

93. நீர் உண்டு வேட்கை தணிதல்.

பேர அருந்துயர்அறப் பேர்ந்துளோர் என,
வீரனும் தம்பியும், விடிவு நோக்குவார்,
வாருணம் நினைந்தனர்; வான நீர் உண்டு,
தாரணி தாங்கிய கிரியில் தங்கினார். (3736)

(இறை - சிறிது; பேர்தல் - நீங்குதல்; விடிவு - விடியல்; நோக்குதல் - எதிர் பார்த்திருத்தல்; வாருணம் - வருணமந்திரம்; நினைத்தல் - தியானித்தல்; தாரணி - பூமி; கிரி - மலை)

வீரனாகிய இராமனும்; அவன் தம்பியாகிய இலக்குவனும், நீங்குதற்கரிய துயரம் சிறிது நீங்கியவர்களைப் போலக் காணப்பட்டனர்; வருணனை எண்ணி வருணமந்திரத்தைத் தியானம் செய்து, அதனால் கிடைக்கப்பெற்ற

ஆகாயகங்கை நீரைப்பருகி வேட்கை தணிந்தனர். இவ்வுலகத்தைத் தாங்கியிருக்கிற எட்டு குலமலைகளுள் ஒன்றில் அன்றிரவு தங்கினர்.

"பேர அருந்துயர்" என்பது, முன்பு "பேராஇடர்" என்று கூறியதை ஒத்தது."வாருணம்" என்பது வருணசூக்தம் என்ற வருணமந்திரத்தைக் குறித்தது. ஒரு அம்பினை எடுத்து வருணமந்திரத்தை உச்சரித்து அதைத் தொடுத்து விடுத்ததால், ஆகாயகங்கை நீர் கிடைத்தது. அதைப்பருகி ஒரு மலையில் அன்றிரவு தங்கி, விடியலை எதிர்பார்த்து இருந்தனர் என்பதாம்.

94. இலக்குவன் அடி வருட, இராமன் சற்று கண் அயர்தல்

கல் அதர் வெள்ளிடை, கானின் நுண் மணல்,
பல்லவம், மலர், கொடு படுத்த பாயலின்,
எல்லை இல் துயரினோடு இருந்து சாய்ந்தனன்,
மெல் அடி, இளையவன் வருட, வீரனே. (3737)

(கல் - பருக்கைக் கற்கள்; அதர் - வழி; வெள்ளிடை - வெற்றிடம்; பல்லவம் - தளிர்கள்; படுத்த - செய்யப்பட்ட \ அமைத்த; பாயல் - படுக்கை; சாய்தல் - துயிலுதல்; அடி - பாதங்கள்; வருட - பிடித்துவிட \ தடவி விட)

பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டு வழியில், வெற்றிடத்தில், நுண்ணிய மணலைப் பரப்பி, அதன் மீது தளிர்கள், மலர்களைக் கொண்டு இலக்குவன் அமைத்த படுக்கையில் சீதையின் பிரிவால் உண்டாகிய அளவற்ற துயரத்துடன் சற்று துயிலத் தொடங்கினான் வீரனான இராமன். அப்பொழுது, அவனுடைய மென்மையான பாதங்களை, இலக்குவன் தடவிப் பிடித்து விட்டான்.

கல்லிலும் மணலிலும் நடந்த வந்த களைப்புத்தீர, சீதையின் பிரிவில் பெருந்துயரடைந்த வீரனான இராமன், இலக்குவன் மெல்லிய பாதங்களைப் பிடித்துவிடப் படுக்கை கொண்டான். சீதை இல்லாததால், மெல்லிய அடிகளை, இலக்குவன் பிடித்து விட்டான் என்ற குறிப்புத் தோன்றுவதை நோக்குக. "வெள்ளிடை" என்பது, மலர், செடி, கொடி முதலியன தோன்றாத வெற்றிடத்தைக் குறிக்கும்.

95. *மயில் இயல் பிரிந்தபின், மான நோயினால்*
அயில்விலன் ஒரு பொருள்; அவலம் எய்தலால்,
துயில்விலன் என்பது சொல்லற்பாலதோ?
உயிர், நெடிது உயிர்ப்பிடை, ஊசலாடுவான். (3738)

(இயல் - சாயல்; மானம் - அவமானம் \ தாழ்நிலை; நோய் - துன்பம்; அயில்தல் - உண்ணுதல்; அவலம் - பெருந்துயரம்; பாலது - தன்மையது; நெடிது உயிர்ப்பு - பெருமூச்சு)

மயில்போன்ற சாயலை உடைய சீதை, தன்னைவிட்டுப் பிரிந்து போன பின்னர் ஏற்பட்ட அவமானம் ஆகிய கவலையால் இராமன் எந்த ஒரு பொருளையும் உண்ணவில்லை; அதனால் உண்டாகிய துயரத்தால் சிறிதும்

தூங்கவும் இல்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?, பெருமூச்சு விட்டுக்கொண்டு அவன் உயிர் போவதும் வருவதும் போல ஊசலாடிக் கொண்டேயிருந்தது.

சீதையின் பிரிவால் ஏற்பட்ட ஏக்கத்தில் உண்டான பெருமூச்சினால், தன் உயிர் போவதும் வருவதுமாய் ஊசல் போலத் தத்தளித்த நிலையில் வருந்திக் கொண்டிருந்தான் இராமன் என்பதாம்.

96. காடு முழுவதும் சீதையின் உருவெளித தோற்றம் காணுதல்

''மானவள் மெய் இறை மறக்கலாமையின்
ஆனதோ? அன்றுஎனின், அரக்கர் மாயமோ?
கானகம் முழுவதும், கண்ணின் நோக்குங்கால்
சானகி உரு எனத் தோன்றும் தன்மையே!'' (3739)

(மானவள் - மான் போன்றவள்; மெய் - வடிவம்; இறை - சிறிதும்; மாயம் - வஞ்சனை)

“இந்தக் காடு முழுவதையும் நான் உற்றுப்பார்க்கின்ற பொழுது, எனக்கு எங்கே பார்த்தாலும் சனகன் மகளாகிய சானகியின் உருவமாகவே தெரிகின்றதே? இத்தகைய தன்மை, மான் போன்ற மருண்ட விழிகளை உடையவளும் பெருமையிற் சிறந்தவளுமான சீதையின் வடிவத்தை - என்னால் சிறிதும் மறக்கமுடியாததனால் ஆயிற்றோ? அல்லவெனில், பகைவர்களாகிய அரக்கர்கள் ஏதேனும் வஞ்சனையான செயல் செய்து அவ்வாறு தோற்றுவிக்கிறார்களோ? என்பதை அறிய முடியவில்லையே” என இராமன் வருந்தினான்.

இனிய உயிர் போன்ற சீதையைச் சிறிதும் மறக்க முடியாது, உள்ளத்தே எப்பொழுதும் நினைத்துக் கொண்டேயிருந்ததால், அவன் கண்களுக்கு எங்கு நோக்கினும் சீதை நிற்பது போன்ற வடிவமே தோன்றிற்று என்பதாம். இதற்குக் காரணம் அவனால் அவளை மறக்க முடியாததா? அல்லது அரக்கர்களின் மாயச் செயலா? என்று வருந்தினான் இராமன் என்பதாம். ஒரு பொருளை ஆழ்ந்து எப்பொழுதும் நினைத்துக் கொண்டேயிருந்தால். நம் கண்களுக்கு அப்பொருளே எங்கும் நிறைந்திருப்பது போல் தோன்றும். இது இயற்கை. இதனை “நோக்குவ எல்லாம் அவையே போறல்” என்னும் காதல் மெய்ப்பாடாகத் தொல்காப்பியம் கூறும்.

97. ''கருங்குழல், சேயரிகண்ணி, கற்பினோர்க்கு
அருங்கலம், மருங்கு வந்து இருப்ப, ஆசையால்
ஒருங்குறத் தழுவுவென்; ஒன்றும் காண்கிலென்;
மருங்குல்போல் ஆனதோ வடிவும், மெல்லவே?'' (3740)

(குழல் - கூந்தல்; சே - சிவந்த; அரி - இரேகை; கலம் - அணிகலன் \ ஆபரணம்; மருங்கு - அருகில்; ஒருங்கு - ஒருசேர; ஊறு - ஸ்பரிச உணர்ச்சி; மருங்குல் - இடை)

"கரிய கூந்தலையும், சிவந்த ரேகைகள் படர்ந்த கண்களை உடையவளும், கற்புடையோர்களுக்கெல்லாம் ஒரு அரிய ஆபரணம் போல் திகழ்பவளுமாகிய சீதை, உருவெளித் தோற்றத்தில் என் பக்கத்தில் வந்து அமர்ந்திருக்க, அவள் மீது கொண்ட தீராத ஆசையால் அவளை ஒருசேர இறுகத் தழுவினேன், என்றாலும் என்னால் அவளது ஸ்பரிச உணர்ச்சியை உணரமுடியவில்லை; அவளுடைய இடை இல்லை என்பது போல, அவளுடைய உருவமும் மெல்லத் தேய்ந்து இல்லையாகிப் போனதோ?" என்று வருந்தினான் இராமன்.

கம்பன் சீதையை எல்லா இடங்களிலும் "மருங்கிலா நங்கை" எனவே கூறி வந்திருக்கிறான் என்பதை நினைவு கூர்க. பின்னால் சுந்தர காண்டத்தில், "நங்கைமென் மருங்குல் போன்ற வேறுள அங்கமும் மெலிந்தாள்" என்று கூறப்போவதையும் மனத்தில் கொள்க. பெண்களின் அங்கங்கள் மூவழிப் பெருகி, மூவழிச் சிறுகி இருக்க வேண்டும் என்பது உத்தம இலக்கணம்.

98. ''புண்டரீகப் புது மலரில் தேன் பொதி
தொண்டைஅம் சேயொளித் துவர்த்த வாய் அமுது
உண்டனென்; ஈண்டு அவள் உழையள் அல்லளால்;
கண் துயில் இன்றியும் கனவு உண்டாகுமோ?'' (3741)

(புண்டரீகம் - செந்தாமரை மலர்; புது - அன்றலர்ந்த \ புதிய; பொதி - பொதிந்த \ கொண்ட; தொண்டை - கொவ்வைப்பழம்; அம் - அழகிய; சே - சிவந்த; துவர் - பவளம்; உழை - அருகில்)

"அன்றலர்ந்த புதிய செந்தாமரை மலர் போன்ற முகத்தையும், தேனைத் தன்னகத்தே கொண்ட கொவ்வைப்பழம் போன்ற அழகிய சிவந்ததும் ஒளி விளங்குகின்ற பவழம் போன்ற தன்மையதும் ஆகிய அவளுடைய வாயிதழ் தன்னில் ஊறும் அமுதத்தைச் சற்று முன்புதான் பருகினேன். ஆனால் இப்பொழுது பார்க்கிறேன் அவள் என் அருகில் இல்லவே இல்லையே? இது எப்படி நிகழ்ந்தது?; நான் தூங்கவும் இல்லையே விழித்துக் கொண்டுதானே இருக்கிறேன்? கண்கள் தூங்காத போதும் கனவு உண்டாகுமோ?" என்று மயக்கமுற்று வருந்தினான் இராமன்.

செந்தாமரை மலர் சீதையின் முகத்திற்கும் கொவ்வைக்கனியும், பவழமும் அவளது சிவந்த வாய்க்கும், இதழ்களுக்கும் உவமை.

99. ''மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும்
எண்ணினும், பெரியது ஓர் இடர் வந்து எய்தினால்,
தண் நறுங்கருங் குழல் சனகன் மாமகள்
கண்ணினும், நெடியதோ? கொடிய கங்குலே!'' (3742)

(எண் - எண்ணத்தின் எல்லை; ஈர்தல் - வருத்துதல்; ஈட்டம் - வலிமைத்திறம்; கங்குல் - இரவுப்பொழுது; நெடிது - நீண்டது \ நீட்சியுடையது)

“நிலம், ஆகாயம், ஏனைய மூன்று பூதங்களான, நீர், நெருப்பு, காற்று, ஆகியவற்றைக் காட்டிலும், எண்ணுதற்கு அரிய மிகப்பெரியதானதோர் துன்பம் எனக்கு வந்து சேருமானால். கொடுமையான இவ்விரவுப்பொழுது, குளிர்ச்சி பொருந்திய, நறுமணமுடைய, கரிய கூந்தலையுடைய, சனகனின் சிறந்த மகளான சீதையின் கண்களைக் காட்டிலும் நீட்சியுடையதாகிவிடுமோ?” என்று வருந்தினான் இராமன்.

இராமனுடைய துயரம் அளவிடற்கரியது என்பதை மிக அழகாகக் கூறுகிறான் கம்பன். நிலத்தின் பரப்பைக் காட்டிலும், ஆகாயத்தின் உயரத்தைக் காட்டிலும், கடலின் ஆழத்தைக் காட்டிலும். நெருப்பின் வெம்மையைக் காட்டிலும், காற்றின் வேகத்தைக் காட்டிலும். எண்ணத்தின் எல்லையைக் காட்டிலும் நீண்டதாம், பெரியதாம், இராமன் இப்பொழுது படுகின்ற துயர். ஆனால் இத்தகைய துயர் சீதையின் கண்ணின் நீட்சிக்கு ஒப்பாகாதாம். அதைப்போலவே அன்றைய கங்குற்பொழுதும் நீண்டு காணப்படுகிறதாம் இராமனுக்கு, பிரிவுத்துயரின் உச்சத்தைக் குறிப்பது இப்பாடல். “நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று; நீரினும் ஆரளவின்றே” என்பது குறுந்தொகை; “நீர் மிகில் சிறையுமில்லை; தீ மிகின் மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை வளி மிகின் வலியுமில்லை” என்பது புறநானூறு. இவை ஐம்பெரும் பூதங்களின் பேராற்றலை விளக்குவன. எண்ணத்திற்கு அளவில்லை என்பது “எண்பது கோடி நினைந்து எண்ணுவன” என்னும் நல்வழிப் பாடலால் (28) அறியலாம்.

100. “அப்புடை அலங்கு மீன் அமரும் ஆர்கலி,
உப்புடை இந்து என்று உதித்த ஊழித் தீ
வெப்புடை விரி கதிர் வெதுப்ப, மெய் எலாம்
கொப்புளம் பொடித்ததோ, கொதிக்கும் வானமே?” (3743)

(அப்பு - நீர்; அலங்குதல் - பிறழ்தல்; அமர்தல் - தங்குதல்; ஆர்கலி - கடல்; உப்பு - அழகு \ இனிமை; இந்து - சந்திரன்; வெதுப்ப - சுட்டெரிக்க; பொடித்தல் - தோன்றுதல்; கொப்புளங்கள் - விண் மீன்கள் \ நட்சத்திரங்கள்)

“நீரைக் கொண்டதும், ஒளியுடன் அசைகின்ற மீன்களைக் கொண்டதுமான கடலின் நடுவில் அழகிய, இனிமையான சந்திரன் என்று பெயர் கொண்டு தோன்றிய பிரளய காலத்துத் தீயின் வெப்பமுடைய, விரிந்த கிரணங்கள் சுட்டெரிக்க, அதனால் கொதிப்புற்ற வானத்தின் உடம்பெல்லாம், விண் மீன்கள் என்ற கொப்புளங்கள் தோன்றியிருக்கின்றனவோ?”

ஊழித்தீயின் வெப்பம் தாங்காது வானத்தின் உடம்பில் கொப்புளங்கள் தோன்றியது போல் இருக்கிறது வானத்தில் மின்னுகின்ற நட்சத்திரங்கள் என்பதாம். “செப்பிளம் கொங்கை மீர்! திங்கள் சுடர்பட்டு, கொப்புளம் கொண்டு குளிர்வானை, இப்பொழுது மீன் பொதிந்து நின்ற விசும்பு என்பது என்கொலோ?”

என்னும் நளவெண்பாப் பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தகும். சந்திரனுக்கு ஊழித்தீ உவமை.

101. சூரியன் தோன்றுதல்

"இன்னன இன்னன பன்னி, ஈடு அழி
மன்னவர் மன்னவன் மதி மயங்கினான்;
அன்னது கண்டனன், அல்கினான் என,
துன்னிய செங்கதிர்ச் செல்வன் தோன்றினான்" (3744)

(பன்னி - பலமுறை சொல்லி; ஈடு - வன்மை; அழிதல் - குறைதல் \ தேய்தல்; மதி - அறிவு; துன்னிய - நெருங்கிய; அல்குதல் - மெலிந்து வருந்துதல் \ சுருங்குதல்)

இவ்வாறு பலமுறை கூறிக்கூறித் தன் வலிமையெல்லாம் ஒடுங்கிப்போன, அரசர்க்கு அரசனான இராமன். தன் அறிவு கலங்கிப் போனான்; இதனைக் கண்ட நெருங்கிய சிவந்த கதிர்களைக் கொண்ட சூரியனும், தன் வழியில் வந்த இராமன் மிகவும் துன்புற்று மெலிந்து போனான் என்று கருதி, இருளைப் போக்கி அவனைத் தேற்றும் பொருட்டு, உதயமானான்.

இயல்பாகத்தோன்றும் கதிரவனை, தன் குலத்தோன்றலான இராமன் வருத்தத்தால் மெலிந்து போகின்றவனைத் தேற்றும் பொருட்டு உதயகிரியில் தோன்றினான் என்று கூறியது ஒரு நயம்.

அயோமுகிப்படலம் நிறைவுற்றது

12. கவந்தன் வதைப் படலம் (58 பாடல்கள்)

கபந்தன் என்ற வடசொல்லின் திரிபு கவந்தன் என்னும் சொல், கவந்தம் என்ற சொல்லுக்குத் தலையற்ற உடல் என்பது பொருள். தலை என்ற உறுப்பு, தனியாக இல்லாது, வயிற்றுக்குள்ளேயே அடங்கிக் காணப்பட்டமையால் கவந்தன் என்பது இவனுக்குக் காரணப்பெயர். இவனை இராம இலக்குவர் வாளால் அரிந்து வதைத்த நிகழ்ச்சிகளைக் கூறும் படலம் என விரியும். இது 58 பாடல்களைக் கொண்டது. இது "கவந்தன் படலம்" எனவும், "கவந்தப் படலம்" எனவும்! "கவந்த வதைப்படலம்" எனவும், "கவந்தன் மோட்சப் படலம்" எனவும் சில சுவடிகளில் காணப்படுகின்றது.

இப்படலத்துள், அயோமுகி உறுப்பரிந்து மீண்ட இராம இலக்குவர் கவந்தன் வாழும் வனத்தை அடைதல்; அவ்வனத்தின் தன்மை; இருவரும் கவந்தன் கைப்பிடிக்குள் அகப்படுதல், அப்பொழுது அவர்களது நிலையும், எண்ணங்களும்; கவந்தனின் தோற்றம், இராமன் தான் அக்கொடியவனுக்கு இரையாகிப் போவதாகவும், இலக்குவனை மீண்டு செல்லுமாறும் வேண்டுதல்; "முன்னம் முடிவன் யான்" என்று இலக்குவன் மறுத்தல்; இருவரும் கவந்தனை எதிர்த்துப் போரிட்டு, வாளினால் அவன் நீண்ட இரு கைகளையும் துண்டித்தல்; கவந்தன் பண்டைய உருப்பெற்று விண்ணில் சென்று இராமனைத் துதித்தல்; இலக்குவன் "யார் நீ" என வினவ, கவந்தன் தன் வரலாறு கூறுதல்; " சவரியைக் கண்டு சுக்கிரீவன் நட்பைப்பெறுக" என்று கூறி மறைதல்; இராம இலக்குவர் மதங்கரது ஆசிரமத்தை அடைதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. இருவரும் வைகறைப்போதில் அங்கிருந்து செல்லுதல்

''நிலம் பொறை இலது'' என, நிமிர்ந்த கற்பினாள்,
நலம் பொறை கூர்தரும் மயிலை நாடிய,
அலம்புறு பறவையும் அழுவவாம் எனப்
புலம்புறு விடியலில், கடிது போயினார். (3745)

(நிலம் - நிலமகள்; கூர் - மிக்கு; நாடிய - தேடும் பொருட்டு; அலம்புறுதல் - அலைந்து திரிதல்; புலம்புதல் - ஒலிசெய்தல்; விடியல் - வைகறைப் பொழுது; கடிது - விரைந்து; நிமிர்ந்த - மேம்பட்ட \ உயர்ந்த)

நிலத்தைக் காட்டிலும் பொறுமை மிக்கவளும், மேம்பட்ட கற்பினை உடையவளும், மிக்க நற்குணங்களைச் சுமந்திருப்பவளும், மயில் போன்ற

சாயலை உடையவளுமாகிய சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு, அலைந்து திரிகின்ற, இவர்களுடைய துயர நிலையைக் கண்டு, பறவைகளும் அழுகிறதாம் என்று சொல்லும்படியாக ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் விடிகாலைப் பொழுதில், அவ்விருவரும், விரைந்து செல்லலாயினர்.

"நிலம் பொறை இலது" என்பது, அகழ்வாரைத் தாங்கும் நிலத்தைக் காட்டிலும், பொறுமையில் மேம்பட்டவள் அந்நிலம் ஈன்ற சீதை என்பதைக் குறிக்கும்; இயற்கையிலேயே விடிகாலைப் பொழுதில் பறவைகள் ஒலிசெய்து ஆரவாரிக்கும். அது, இவர்கள் துயர் கண்டும், சீதையின் பிரிவை எண்ணியும் அப்பறவைகள் அழுவதைப் போன்றிருந்தது என்று கூறும் கவி நயம் காண்க.

2 உச்சிப்போதில் கவந்தன் வனம் அடைதல்

ஐ-ஐந்து அடுத்த யோசனையின்
இரட்டி, அடவி புடைபடுத்த
வையம் திரிந்தார்; கதிரவனும்
வானின் நாப்பண் வந்துற்றான்;
எய்யும் சிலைக் கை இருவரும் சென்று,
இருந்தே நீட்டி எவ்உயிரும
கையின் வளைத்து வயிற்று அடக்கும்
கவந்தன் வனத்தின் கண்உற்றார் (3746)

(சிலை - வில்; ஐ ஐந்து அடுத்த இரட்டி - 5 x 5 = 25 x 2 = 50 யோசனை தூரம்; அடவி - காடு; வையம் - சூழல்! இடம்; அடக்குதல் - நிறைத்துக் கொள்ளுதல்; நாப்பண் - நடுவில்; புடை - பக்கம்)

கணைகளைத் தொடுக்கின்ற வில்லினைக் கையில் ஏந்திய இராம இலக்குவர் இருவரும், இவ்வாறு ஐம்பது யோசனை தூரம் பரவிக்கிடந்த காட்டுப் பகுதியில் அலைந்து திரிந்தனர். அங்கே, தான் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு, தன் ஒரு யோசனை நீளமுள்ள கைகளை நீட்டி, அந்தப்பகுதிக்குள் அகப்படும் எல்லா உயிரினங்களையும், தன் கைகளுக்குள் சுற்றி அகப்படுத்திக் கொண்டு தன் வயிற்றுக்குள் உணவாக நிறுத்திக் கொண்டு விடும் இயல்பு படைத்த, கவந்தன் என்னும் கொடிய உருவுடைய அரக்கன் வசிக்கின்ற காட்டினை வந்தடைந்தனர்; அப்பொழுது கதிரவனும் வானின் நடுவிடத்தை அடைந்தான். உச்சிப்போதாயிற்று.

ஒரு யோசனை என்பது நான்கு குரோசம் கொண்டதூரம்; ஒரு குரோசதூரம் என்பது இப்பொழுதைய இரண்டரை மைலைக் குறிக்கும். எனவே ஒரு யோசனை என்பது பத்து மைல்தொலைவு ஆகிறது. இதனைக் காதம் என்றும், காவதம் என்றும், கூப்பிடுதூரம் என்றும் குறிப்பிடுவர். இங்கே ஐ ஐந்து அடுத்த இரட்டி என்பதால் ஐம்பது யோசனை தூரம் என்று கொள்ளப்பட்டது. "வழங்கும் உயிர் அனைத்தும், வாரி, வாய்ப்பெய்து, விழுங்கும் கவந்தன்" என்பது 108

திருப்பதி அந்தாதி; கவந்தன் என்ற வடசொல்லுக்கு வாய் அகன்ற பீப்பாய்" என்றும் ஒரு பொருள் உண்டு.

3. அவன் கைகளில் அகப்பட்ட உயிரினங்களின் நிலை

எறுப்பு இனம் கடையுற, யானையே முதல்
உறுப்புடை உயிர் எலாம் உலைந்து சாய்ந்தன;
வெறிப்புறு நோக்கின, வெருவுகின்றன;
பறிப்பு அரு வலையிடைப் பட்ட பான்மைய. (3747)

(கடை - இறுதி; உலைந்து - வருந்தி; சாய்தல் - தளர்தல்; வெறிப்புறு நோக்கு - மருண்டபார்வை; வெருவுதல் - அஞ்சுதல்; பறிப்பு அரு - நீக்க முடியாத; பான்மை - தன்மை; உறுப்பு - அங்கம் ! அவயவம்) (குளகப்பாடல்)

அவ்வாறு கவந்தன் தன் கைகளை நீட்டியபோது, அதில் பேருருவம் கொண்ட யானை முதலாக, சிறிய உயிரினமான எறும்பு வரை, உடல் உறுப்புக்கள் கொண்ட உயிரினங்கள் எல்லாம் அகப்பட்டு வருந்திச் சோர்வுறலாயின; மருண்டபார்வையைக் கொண்ட சிங்கம், புலிபோன்ற மிருகங்கள் கூட, அஞ்சலாயின; ஏதோ ஒரு வலையில் அகப்பட்டுக் கொண்டு, அதனின்றும் மீண்டு வரமுடியாத தன்மையை அடைந்தன - பாடல் தொடர்கிறது.

உயிருள்ள பிராணிகளைத் தொகுத்துக் கூறும்பொழுது, பேருருவம் கொண்ட யானையை முதலாகவும் சிறிய உருவம் கொண்ட எறும்பினை இறுதியாகவும் கூறுவது மரபு. "அத்திமுதல் எறும்பு ஈறான் உயிர்" என்பது ஒரு தனிப்பாடல். அத்தி - யானை.

4. மரபுளி நிறுத்திலன், புரக்கும் மாண்பிலன்,
உரன் இலன் ஒருவன் நாட்டு உயிர்கள் போல்வன;
வெருவுவ, சிந்துவ, குவிவ, விம்மலோடு
இரிவன, மயங்குவ, இயல்பு நோக்கினார். (3748)

(மரபு - வழிமுறை \ குலமுறை ஒழுக்கம்; நிறுத்தம் - நிலைபெறச் செய்தல்; புரத்தல் - காத்தல் \ அரசாள்தல்; உரன் - திறமை; உயிர் - மக்கள்; இரிதல் - நிலைபெயர்ந்து ஓடுதல்)

தன் குலமுறை ஒழுக்கத்தில் சென்று குடிகளை நிலை நிறுத்ததாதவனும், தனக்குக் கீழ்ப்பட்ட குடிமக்களை நன்கு பாதுகாக்கும் மாட்சிமை இல்லாதவனும்; அரசாளும் ஆற்றல் அற்றவனும் ஆகிய ஒரு அரசனது அரசாட்சியில் உள்ள மக்களைப்போல, ஒவ்வொரு மணித்துளியும் தனது நிலைபேறு இல்லாமை கருதி அஞ்சுவனவும், சிதறிப்போவனவும், ஒன்றுசேர்ந்து திரண்டு வருவனவும், ஏக்கத்தோடு நிலைபெயர்ந்து ஓடுவனவும், திகைத்து ஓரிடத்திலேயே நிற்பதுவுமான உயிரினங்களின் இயல்புகளை, இராம இலக்குவர் ஆகிய இருவரும் கண்டனர்.

கொடுங்கோல் அரசன் நாட்டுக் குடிமக்கள் போலக் கவந்தன் கைக்குள் அகப்பட்ட உயிர்கள் அஞ்சி, இங்குமங்கும் ஓடித்திரிந்து திகைத்தன என்பது கருத்து. கவந்தன் கையில் அகப்பட்டுத் தவித்த உயிரினங்களுக்கு, கொடுங்கோல் அரசனின் ஆட்சியில் துயரப்படும் மக்கள் உவமை.

5. மால் வரை உருண்டன வருவ; மா மரம்
கால் பறிந்திறுவன; கான யாறுகள்
மேல் உள திசையொடு வெளிகள் ஆவன;
சூல் முதிர் மேகங்கள் சுருண்டு வீழ்வன. (3749)

(மால் - பெரிய; வரை - மலை; கால் - மூட்டு \ வேர்; பறிந்து - சாய்ந்து; இறுதல் - அழிதல்; கானயாறு - காட்டாறுகள்; சூல் - கரு; சுருண்டு -துவண்டு)

கவந்தன் கைகளில் பெரிய மலைகளும் உருண்டு வந்து அகப்பட்டுக்கொண்டன; பெரிய மரங்கள் வேரோடு சாய்ந்து அழிந்தன; காட்டாறுகள் தமக்கு எதிரேயுள்ள திசைப் பக்கங்களுடன் ஒன்றாகி வெட்ட வெளியாகக் காட்சியளித்தன; நீருண்ட கருக்கொண்ட கரிய மேகங்களும், சுருண்டு கீழே விழுவன ஆயின. இக்காட்சிகளை இராம இலக்குவர் இருவரும் கண்டனர்.

காட்டிலுள்ள மலைகளும், மரங்களும் அவன் கைகளில் அகப்பட்டுக்கொண்டன. நிலத்தில் ஓடும் ஆறுகள் போன இடம் தெரியவில்லை. வானத்தில் உள்ள மேகங்கள் கூடச் சுருண்டு வீழ்ந்தன என்பதாம். இயற்கை கூட மாறுபட்டுப் போயிற்று என்பது கருத்து.

6. இருவரும் கவந்தன் பிடிக்குள் அகப்பட்டுக்கொள்ளுதல்

நால் திசைப் பரவையும், இறுதி நாள் உற,
காற்று இசைத்து எழ எழுந்து, உலகம் எங்கணும்
ஏற்று இசைத்து உயர்ந்து வந்து இடுங்குகின்றன
போல், திசை சுற்றிய கரத்துப் புக்குளார். (3750)

(இறுதிநாள் - ஊழிமுடிவுக்காலம்; இசைத்து - வீசி \ பேரொலி எழுப்பி; பரவை - கடல்கள்; இடுங்குதல் - சுருங்குதல் \ நெருங்குதல்; சுற்றிய - வளைத்துக்கொண்ட; ஏற்று - அடக்கிக்கொண்டு)

ஊழி இறுதிக்காலத்தின் போது, காற்று பேரொலியுடன் வீசி எழ, நான்கு திசைகளிலும் உள்ள எல்லாக் கடல்களும் பொங்கியெழுந்து, உலகத்து உயிரினங்கள் எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக்கொண்டு, பேரொலியுடன் மேற்கிளம்பி நெருங்கி வருவதுபோல, எல்லாத் திசைகளையும் சுற்றி வளைத்துள்ள அக் கவந்தனது கைகளுக்குள் இராம இலக்குவர் இருவரும் புகுந்து விட்டவராயினர்.

அவர்களை அறியாமலேயே, கவந்தனது நீண்ட கரங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டனர் என்பதைப் "புக்குளார்" என்ற சொல்லினால்

பெறவைத்தார் என்க. "இடுங்குதல்" என்ற சொல் சுருங்குதல் என்ற பொருளில் இன்றும் வழக்கில் இருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டு, கண் இடுங்கியது என்ற வழக்கு. ஒருபொருளை நெருக்கிப் பிடிக்கப்பயன்படுத்தும் கருவி குறடு அல்லது இடுக்கி என்ற பெயரில் வழங்கப்படுவதையும் நோக்குக. இங்கே இடுங்குதல்; நெருங்குதல் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது.

7. தேமொழி திறத்தினால், அரக்கர் சேனை வந்து
ஏமுற வளைந்தது என்று, உவகை எய்தினார்;
நேமி மால் வரை என்ன நெருக்குகின்றதே
ஆம் எனல் ஆய, கைம் மதிட்குள் ஆயினார். (3751)

(நேமி - சக்கரம் \ சக்கரவாளமலை; மால் - பெரிய; வரை - மலை; தே - தேன் \ இனிய; திறம் - கற்பு; ஏமம் - ஏம் \ துன்பம்; நெருக்குதல் - வளைத்துக்கொள்ளுதல்)

சக்கரவாளம் என்னும் மலை வந்து நெருக்குகின்றது என்று கூறும் படியான கவந்தனது கைகளாகிய மதிலுக்குள் அகப்பட்டுக் கொண்டவர்களாகிய இராம இலக்குவர், தேன் போன்ற இனிய சொற்களைப் பேசும் சீதாதேவியின் பொருட்டு, அவளின் கற்பின் சிறப்பினால், அரக்கனுடைய படைகள் தாமே வந்து, துன்புற்ற நம்மை வளைத்துக் கொண்டது போலும் என்று கருதி, மனமகிழ்ச்சி அடைந்தனர்.

"திறம்" என்ற சொல்லுக்குக் கற்பு என்ற ஒருபொருளும் உண்டு; "தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்" என்பது சிலப்பதிகாரம். தன் பகைவர்களான அரக்கனுடைய சேனைகள், நாம் தேடிப்போகாமலேயே நம்மை வந்தடைந்தது என்பதை எண்ணி மகிழ்ச்சியுற்றனர் என்பதாம். கவந்தன் கைகளுக்கு "நேமி மால் வரை" உவமை. சக்கரவாள கிரி என்பது இவ்வண்டப்பரப்பைச் சூழ்ந்துள்ள ஒரு வட்டவடிவ மதிலையுடைய மலைத்தொடர். அது உட்புறம் ஒளியும், வெளிப்புறம் இருளுமாய் அமைந்திருப்பது என்பது ஒரு புராணக்குறிப்பு.

8. இராமன் இலக்குவனிடம் கூறுவது

இளவலை நோக்கினன் இராமன், "ஏழையை
உளைவுசெய் இராவணன் உறையும்ஊரும், இவ்
அளவையது ஆகுதல் அறிதி; ஐய! நம்
கிளர் பெருந் துயரமும் கீண்டது ஆம்" என. (3752)

(ஏழை - பெண் \ அபலை , சீதை; உளைவுசெய்தல் - வருத்துதல்; உறையும் - வசிக்கும்; கிளர்தல் - வளர்ந்துபெருகுதல்; கீண்டது - ஒழிந்தது; அளவை - எல்லை)

இராமன், தன் தம்பி இலக்குவனை நோக்கி, "ஐயனே! அபலைப் பெண்ணாகிய சீதாதேவியைத் துன்புறுத்தி வருத்துகின்ற இராவணன்

வாழ்கின்ற ஊரும் இந்த எல்லைக்குள்தான் இருக்க வேண்டும் என்பதை அறிவாயாக; நாம் அடைந்துள்ள இம் மிகுந்த துன்பமானது ஒழிந்ததாகும்" என்றான்.

கவந்தன் கைகள் வளைத்துக்கொண்டதை, அரக்கர் சேனைதான் வந்து வளைத்துக்கொண்டது என்று தவறாகக் கருதியதால் இவ்வாறு கூறநேர்ந்தது என்பதை உணர்க. கவந்தனது நீண்ட கைகளுக்கு, வலிமையால், அரக்கர் சேனை உவமை. "நம்கிளர் பெரும் துயர் கீண்டது" என்பது, இராவணன் வாழும் ஊர் அருகில் இருப்பதால், அவனைக் கண்டு, வென்று, கொன்று, சீதையை எளிதில் மீட்கலாம் என்பதால் என்க. தன் மனைவியை மாற்றான் ஒருவன் அபகரித்துச் செல்லுதனினும் மேலான துன்பம் ஒரு மனிதனுக்கு வேறு ஒன்று இருக்கமுடியாது என்பதைக் குறிக்கவே, "கிளர்பெரும் துயரம்" என்றார் என்க.

9. இலக்குவன் கூற்று

"முற்றிய அரக்கர்தம் முழங்கு தானையேல்,
எற்றிய முரசு ஒலி, ஏங்கும் சங்கு இசை,
பெற்றிலது; ஆதலின், பிறிது ஒன்று ஆம்" எனச்
சொற்றனன் இளையவன், தொழுது முன்நின்றான். (3753)

(முற்றிய - சூழ்ந்து வளைத்துள்ள; எற்றுதல் - அடித்தல் \ தாக்குதல்; ஏங்குதல் - ஒலித்தல்; சொற்றனன் - சொல்லினான்)

"நம்மைச் சுற்றி வளைத்துள்ளது. அரக்கர்களின் ஒலிக்கின்ற சேனைகள் என்றால், அவை குறுந்தடியால் அடிக்கப்பெறும் முரசங்களின் ஒலியோடும், ஒலிக்கும் சங்குகளின் ஓசையோடும் வந்திருக்க வேண்டும். இவை, அவைகொண்டு வாராததனால், இது வேறு ஏதோ ஒன்றாகும்" என்று இளையவன் இலக்குவன், இராமன் எதிர் நின்று வணங்கிக் கூறுவானானான்.

பொதுவாக வீரர்கள் போர் செய்ய வரும்போது போர்முரசும், சங்கொலியும் ஒலிக்கும். இங்கே அவைகள் வாராததனால் இவை போர்ச் சேனைகள் அன்று - வேறு ஏதோ ஒன்றாக இருக்க வேண்டும் என்று தெளிகிறான் இலக்குவன். சீதையைப் பிரிந்த காரணத்தால், இராமன் சில இடங்களில் தவறான அனுமானங்கள் கொள்வதையும், அவற்றை இலக்குவன் தெளிவோடு நோக்குவதையும் பல இடங்களிலும் காணலாம்.

10. "தெள்ளிய அமுது எழத் தேவர் வாங்கிய
வெள் எயிற்று அரவம்தான? வேறு ஓர் நாகம்தான்?
தள்ள அரு வாலொடு தலையினால் வளைத்து,
உள் உறக் கவர்வதே ஒக்கும்; ஊழியாய்!" (3754)

(வாங்கிய - இழுத்த \ கடைந்த; எயிறு - பற்கள்; அரவம் - பாம்பு - வாசுகி (குளகப்பாடல்)

"ஊழி முடிவுக்காலத்தும் அழியாது நிலைபெற்றிருக்கும் பரம்பொருளே! தெளிந்த தேவ அமிர்தம் பாற்கடலிலிருந்து எழும்படி, மந்தர மலையை நட்டு, தேவர்கள் கடைந்த போது அதில் இழுத்துக்கட்டப்பட்டிருந்த வாசுகி என்னும் வெண்மையான பற்களையுடைய பாம்பு தானோ? அல்லது வேறு ஏதேனும் பாம்பின் இனமோ? நீக்கமுடியாத தனது வாலுடன், தலையையும் சேர்த்துச் சுழற்றி நம்மை உள்ளே கவர்ந்து கொள்ள முயலுவதைப் போன்றிருக்கிறது" என்றான் இலக்குவன்.

கவந்தன் கைகளுக்குப் பாம்பின் வாலும், தலையும் உவமைகள்.

11. கவந்தன் உருவத் தோற்றம்

என்று இவை விளம்பிய இளவல் வாசகம்
நன்று என நினைந்தனன், நடந்த நாயகன்;
ஒன்று இரண்டு யோசனை உள் புக்கு, ஓங்கல்தான்
நின்றென இருந்த அக் கவந்தன் நேர் சென்றார். (3755)

(வாசகம் - கூற்று; நடந்த - முன்சென்ற; ஓங்கல் - மலை; நேர் - எதிரில்)

இவ்வாறு இலக்குவன் கூறிய மாற்றமே நல்லது, சரியானது என்று கருதினான் முன்னே நடந்து சென்று கொண்டிருந்தவனும், பூமியிலே வந்து அவதரித்திருக்கின்ற தலைவனுமாகிய இராமபிரான். ஒரு இரண்டு யோசனை தூரம் அவன் கைகளின் உள்ளே புகுந்து, ஒரு மலைதான் நின்றுகொண்டு இருக்கிறதோ என்னும் படியாக அமர்ந்திருந்த கவந்தனின் எதிரில் இருவரும் சென்று சேர்ந்தனர்.

"ஒன்று இரண்டு" என்ற சொல்லாட்சி, உலகவழக்கில் கூறுவதைப் போலப் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறிக. கவந்தன் அமர்ந்திருந்த தோற்றமே, மலை நின்று கொண்டிருப்பதைப் போன்றிருந்தது என்பதால் அவன் உடல் தோற்றம் கூறப்பெற்றது. "இருந்த அக்கவந்தன்" என்ற சொல்லை "இருந்தவக் கவந்தன்" என்று, கவந்தனின் முன்னைத் தவவாழ்க்கையைச் சிறப்பித்துச் சொன்னதாகவும் பொருள் கொள்ள இடம் இருப்பதையும் உணர்க. இவ்வாறு பிரித்துப் பொருள்தரும் சொற்களைக் கூட்டிப்பொருள் கொள்ளுதலை, "யோக விபாகம்" என்று இலக்கண நூல் வல்லார் கூறுவர்.

12. அவன் கண்ணும் வாயும்

வெயில் சுடர் இரண்டினை மேரு மால் வரை
குயிற்றியதாம் எனக் கொதிக்கும் கண்ணினன்;
எயிற்று இடைக்குஇடை இரு காதம்; ஈண்டிய
வயிற்றிடை வாய் எனும் மகர வேலையான். (3756)

(வெயில் - வெப்பம்; சுடர் - சூரியர்; குயிற்றுதல் - பதித்தல்; ஈண்டுதல் - பொருந்தப் பெறுதல்; மகரம் - சுறா மீன்கள்; வேலை - கடல்) (குளகப்பாடல்)

வெப்பத்தோடு கூடிய ஒளியைப் பரப்புகின்ற இரண்டு சூரியர்களைப் பெரிய மேருமலையில் பதித்து வைத்தது போன்று, நெருப்புப்பொறி கக்கும் கண்களையுடையவனும், ஒவ்வொரு பல்லுக்கும் இடையே இரண்டு காததூரம் இடைவெளி உடையவனும், வாய் என்னும் உறுப்பை வயிற்றின் இடையில் கொண்டுள்ளவனும் சுறாமீன்கள் நிரம்பிய கடலைப்போன்றவனுமாகிய கவந்தன் - பாடல் தொடர்கிறது.

அவனுடைய உடம்பிற்கு மேருமலையும், கண்களுக்கு இரண்டு சூரியர்களும் அவன் வாய்க்குக் கடலும் உவமைகள் அவனுடைய வாயின் அகலமும், கோரத்தோற்றமும், "எயிற்று இடைக்கு இடை இருகாதம் ஈண்டிய வாய்" என்ற சொற்றொடரால் புலப்படுத்தப்பட்டது.

13. அவனது கைகள்

ஈண்டிய புலவரோடு அவுணர், இந்துவைத்
தீண்டிய நெடுவரைத் தெய்வ மத்தினைப்
பூண்டு உயர் வடம், இரு புடையும் வாங்கலின்,
நீண்டன கிடந்தென நிமிர்ந்த கையினான் (3757)

(ஈண்டிய - ஒன்றுகூடிய; இந்து - சந்திரன்; வடம் - கயிறு; புடை - பக்கம்; வாங்கல் - இழுத்தல் \ கடைதல்; நிமிர்ந்த - நீண்ட \ நீளமான; புலவர் - தேவர்; அவுணர் - அசுரர்; தீண்டிய - பிணைக்கப்பெற்ற) (குளகப்பாடல்)

தேவர்களும், அசுரர்களும் ஒன்றுகூடித் திரண்டு நின்று. சந்திரனை அடைதூணாகப் பிணைத்து, நீண்ட, பெரிய, தெய்வத்தன்மை வாய்ந்த மந்தரமலையை மத்தாக நட்டு, உயர்ந்த கயிறாக வாசுகி என்னும் பாம்பை இருபக்கங்களிலும் பொருத்தி இழுத்துப் பாற்கடலைக் கடைந்தபொழுது, நீண்டு கிடந்த அந்த வாசுகிப் பாம்பைப் போல நீண்ட கைகளையுடையவனுமாகிய கவந்தன் - பாடல் தொடர்கிறது.

கவந்தன் உடம்புக்கு மந்தரமலையும், அவன் நீண்ட கைகளுக்கு வாசுகி என்னும் பாம்பும் உவமைகள்.

14. அவன் மூக்கும் நாக்கும்

தொகைக் கனல் கருமகன் துருத்தித் தூம்புஎன,
புகைக் கொடி, கனலொடும் பொடிக்கும் மூக்கினான்;
பகைத் தகை நெடுங் கடல் பருகும் பாவகன்
சிகைக் கொழுந்து இது எனத் திருகு நாவினான். (3758)

(கருமகன் - கொல்லன் \ கருமான்; தொகை - மிக்க; தூம்பு - துளை \ துவாரம்; பொடித்தல் - வெளிப்படுத்துதல் \ தோற்றுவித்தல்; தகை - தன்மை; பாவகன் - வடவைத்தீ \ அக்னிதேவன் \ வடவாமுகாக்னி; சிகை - சுவாலை; திருகுதல் - சுழன்று கொண்டிருத்தல்; துருத்தி - ஊதுஉலை) (குளகப்பாடல்)

கொல்லனது உலைக்களத்தில் மிகுதியாக நெருப்பைப் பரப்புகின்ற துருத்தியின் தொளையைப்போன்ற மூக்கையும், அந்நெருப்பின் மேலே படர்ந்து தெரியும் புகையைப்போலக் கோபத்தையும் வெளிப்படுத்தும் மூக்கினை உடையவனும்; புகைக்குப் பகைமைத் தன்மை கொண்ட, பெரிய கடல் நீரைப்பருகும் அக்னி தேவனின் சுவாலையின் கொழுந்துதான் இது என்று எண்ணும் படியான, சுற்றித்திரிகின்ற நாக்கினை உடையவனுமாகிய கவந்தன்-பாடல் தொடர்கிறது.

தீயினது கொடியாகப் புகையைக் கூறுவது கவிமரபு. எனவே "புகைக்கொடி கனல்" என்றார். நீரும்நெருப்பும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட குணமும் பகைமையும் கொண்டவை. எனவே "பகைத்தகை" என்றார். கோபத்தில் அவனது மூக்கிலிருந்து நெருப்பும் புகையும் சேர்ந்து வந்தன என்று கூறியது ஒரு நயம். "பாவகன்" என்பது பொதுவாக நெருப்புக் கடவுளாகிய அக்னி தேவனைக் குறிக்கும் என்றாலும் இங்கே வடவைத்தீயைக் குறித்தது எனக் கொள்க. யாவற்றையும் எரித்துத் தூய்மை ஆக்குவது என்ற பொருள் கொண்ட வடமொழிச் சொல் பாவகன் என்பது.

வடவைத்தீ என்பது பெண் குதிரை வடிவாய் ஆழ்கடலில் உள்ள ஒரு தீச் சுடர்; இது கடல் நீரை வற்றச் செய்யும் வலிமையுள்ளது, என்பது புராணக்குறிப்பு; இதனை "உஷ்ண ஓட்டம்" என்பர் பூதத்துவ அறிஞர்கள். இடைவிடாது ஆறுகள் கடலில் கலப்பதால், கடல் நீர் கரை கடந்து வருதற்கு வாய்ப்பு உண்டு, அதனைத்தடுத்து, கடல் நீரைப்பருகி, வற்றச்செய்யும் தொழிலை உடையது வடவைத்தீ என்பதும் அறிக. அது இங்கே கவந்தனது பசிக்கனலைக் குறித்தது என்க. துருத்தியின் தொளை வழியே வெளிவரும் நெருப்பையும் புகையையும் போல, கவந்தனது மூக்கின் வழியே அவனது பசிக்கனல் வெளிப்பட்டது என்பதாம். மிக்க சினத்தால் பெருமூச்சு விடுவதற்குக் கொல்லனது உலைக்களத்துத் துருத்தியை உவமை கூறுவதும் கவிமரபு. இங்கே பசிக்கனலுக்குக் கூறப்பட்டது என்க.

15. அவனது கோரப்பற்கள்

புரண்டு பாம்பு இடை வர வெருவி, புக்கு உறை
அரண்தனை நாடி, ஓர் அருவி மால் வரை
முரண் தொகு முழை நுழை, முழுவெண் திங்களை
இரண்டு கூறிட்டென, இலங்கு எயிற்றினான். (3759)

(வெருவி - அஞ்சி; அரண் - பாதுகாப்பான இடம்; முரண் - வலிமை; முழை - குகை; திங்கள் - சந்திரன்; கூறு - பகுதி; இடுதல் - துண்டித்துவைத்தல்; இலங்கு - விளங்குகின்ற; எயிறு - பற்கள் \ கோரப்பற்கள் \ வக்ரதந்தம்) (குளகப்பாடல்)

இராகு என்னும் பாம்பு புரண்டு வருவதனால், அதற்கு அஞ்சி, ஓடி ஒளிந்துகொள்ளத் தகுதியான பாதுகாப்பான இடத்தைத் தேடி, ஒரு அருவி பெருகுகின்ற பெரிய மலையின் வலிமைமிக்க ஒரு குகைக்குள் நுழைந்து

கொண்ட வெள்ளிய பூரண சந்திரனை இரண்டு கூறுகளாக ஆக்கினால் எப்படித்தோற்றம் தருமோ, அப்படி விளங்குகின்ற கோணலான கோரப்பற்களை உடையவனாகிய கவந்தன் - பாடல் தொடர்கிறது.

கவந்தனது கைகளுக்குப் பாம்பும், உடலுக்கு மலையும், வாய்க்கு வலியமலைக் குகையும், கோரப்பற்களுக்குப்பிளவுபட்ட சந்திரனும் உவமைகள். கவந்தனிடமிருந்து தப்பித்துக் கொள்ள நினைத்த சந்திரன், அவனது வாயையே மலைக்குகை என்று தவறாகக் கருதி அங்கே நுழைந்து அகப்பட்டுக்கொண்டது என்று கூறிய கற்பனை மிக நயம் மிக்கது.

16. அவன் உடலின் தன்மை

ஓத நீர், மண், இவை முதல ஓதிய
பூதம் ஓர் ஐந்தினில் பொருந்திற்று அன்றியே,
வேத நூல் வரன்முறை விதிக்கும் ஐம்பெரும்
பாதகம் திரண்டு, உயிர் படைத்த பண்பினான். (3760)

(ஓதம் - குளிர்ச்சி; ஓதிய - சொல்லப்பட்ட; பொருந்திற்று - படைக்கப்பட்டது; திரண்டு - ஒன்று சேர்ந்து; பண்பு - தன்மை; வரன்முறை - வரிசைக்கிரமப்படி)

குளிர்ச்சிபொருந்திய நீர், மண், என்று இவை முதலாகக் கொண்டு கூறப்பட்ட ஐம்பூதங்களால் ஆன உடம்பு என்பதோடல்லாமல், வேதசாத்திரங்களில் வரிசைக்கிரமமாகக் கூறப்பட்டிருக்கிற பஞ்சமாபாதகங்கள் அனைத்தும் ஒன்று திரண்டு வந்து இவன் உயிரில் இருப்பது போன்ற தன்மை கொண்ட உடம்பினைப் பெற்றவனான கவந்தன் - பாடல் தொடர்கிறது.

பஞ்ச பூதங்கள் நீர், பூமி, அனல், காற்று, ஆகாயம் என்பன. எல்லா மனித, உயிர் இனங்கள் அனைத்தும் இப்பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டவை என்பது பொது விதி. ஆனால் கவந்தனின் உடல் மட்டும், இவைகளோடு மட்டும் அல்லாது, வேத நூல்களில் கூறப்பட்டுள்ள பஞ்சமாபாதகங்களான, கொலை, களவு, பொய், குடி, பிறர்மனை நயத்தல் என்ற ஐந்து பெரும் பாதகங்களும் ஒன்று திரண்டு வந்து இவன் உயிரில் கலந்திருப்பது போன்ற உடம்பினைக் கொண்டவன் என்பதாம். ஐம்பெரும் பாதகங்களில் கொலை, களவு, பொய், கள்ளுண்ணல் என்ற நான்கும் எல்லோராலும் பொதுவாகக் கூறப்படுகிறது. ஐந்தாவது பண்பு பல்வேறு விதமாகக் கூறப்பட்டிருப்பதை நோக்கவேண்டும். சிலர் பிறர்மனை நயத்தல் என்றும், இன்னும் சிலர் குரு நிந்தனை என்றும், காமம் என்றும்; இன்னும் சிலர் சூது, ஈதல் மறுத்தல் என்றும் வெவ்வேறு விதமாகக் கூறுவதுண்டு. பஞ்சமாபாதகங்களைச் செய்வதையே தொழிலாகக் கொண்டவன் கவந்தன் என்பது கருத்து.

17. அவன் காதும், வயிறும்

வெய்ய வெங்கதிர்களை விழுங்கும் வெவ் அரா,
செய் தொழில் இல, துயில் செவியின் தொள்ளையான்;

பொய் கிளர் வன்மையில் புரியும் புன்மையோர்
வைகுறும் நரகையும் நகும் வயிற்றினான். (3761)

(வெய்ய - வெப்பமுடைய; வெம் - விரும்பத்தக்க; வெவ் - கொடிய; அரா - பாம்பு \ இராகு \ கேது; தொள்ளை - தொளை \ துளை \ துவாரம்; புன்மையோர் - கீழ்மக்கள்; நகும் - இகழும் \ ஏளனம் செய்யும்; புரியும் - செய்யும்)

வெப்பத்தை வீசுகின்ற சூரியனது கிரணங்களையும், விரும்பத்தக்க ஒளியைப்பரப்புகின்ற சந்திரனது கதிர்களையும், உணவாகக் கொள்ளுகின்ற, இராகு, கேது என்ற இரு பாம்புகளும், தனது தொழில் செய்யாத நேரங்களில், உறங்குவதற்கு வசதியான இடமாக அமைவது கவந்தனின் பெரிய செவித்துளைகள்தான்; மிக்கு எழுகின்ற தீய செயல்களாகிய பொய் முதலிய பஞ்சமாபாதகங்களைச் செய்யும் கீழ்மக்கள் சென்று சேர்கின்ற நரகத்தையும், எள்ளி நகையாடும் கொடிய வயிற்றையும் உடையவனான கவந்தன் - பாடல் தொடர்கிறது.

அவனது செவித்தொளைகள் பாம்புகள் தங்கி இளைப்பாறும் அளவு பெரியன. அவனது வயிறு கொடிய நரகக் குழியைக் காட்டிலும் கொடுமை வாய்ந்தது என்பதாம். பேய், அரக்கர் முதலியவர்களின் செவித்தொளைகளில் பாம்பு முதலியன புகுந்து வசிக்கும் என்பது சங்க இலக்கியங்களில் பலவிடத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. நரகத்தில் சென்று உழலும் பிராணிகள் மீண்டு வர வாய்ப்பு உண்டு. ஆனால் இவன் வயிற்றுக்குள் சென்றவை எவையும் மீண்டு வெளிவரமுடியாது என்பதாலும், தீமை செய்தவைகள் மட்டுமல்லாமல், கையில் அகப்பட்ட எல்லாப்பொருள்களுமே இவன் வயிறாகிய நரகத்துள் செல்வதாலும், இவன் வயிறு நரகத்தினும் கொடுமையானது என்று குறிக்கப்பட்டது என்க.

18. அவனது வாய்

முற்றிய உயிர் எலாம் முருங்க வாரி, தான்
பற்றிய கரத்தினன், பணைத்த பண்ணையில்
துற்றிய புகுதரும் தோற்றத்தால், நமன்
கொற்ற வாய்தன் செயல் குறித்த வாயினான். (3762)

(முற்றிய - சுற்றி வளைத்த; முருங்குதல் - அழிதல்; பண்ணை - தொகுதி \ கூட்டம் \ கொற்றம் - வன்மை; குறித்த - ஒத்த; துற்றுதல் - உண்ணுதல்; பணைத்த - வகுத்த \ பெரிய)

தன்னால் சுற்றி வளைக்கப்பட்ட உயிரினங்களெல்லாம் அழிந்து போகும்படி, அள்ளி யெடுத்துக் கொள்ளும் கைகளை உடையவன்; பருத்த கூட்டமாக அள்ளி உண்ணும் போது அவன் வாய்க்குள் அவை செல்லும் தோற்றம், இயமனின் வெற்றியும் வன்மையும் பொருந்திய கோட்டை வாயிலுக்குள் செல்லும் தன்மையை ஒத்த வாயினை உடையவன்.

கவந்தனின் வாய்க்குள் செல்லும் பிராணிகள், இயமனின் கோட்டை வாயிலுக்குள் நுழையும் செய்கையை ஒத்திருந்தது என்பதாம். கவந்தன் வாய்க்கு இயமனது நகர வாயில் ஒப்பு.

19. தலையற்ற முண்டத்தின் தோற்றம்

ஓலம் ஆர் கடல் என முழங்கும் ஓதையான்;
ஆலமே என இருண்டு அழன்ற ஆக்கையான்;
நீல மால், நேமியின் தலையை நீக்கிய
காலநேமியைப் பொரும் கவந்தக் காட்சியான். (3763)

(ஓலம் - ஆரவாரம்; ஓதை - பேரிரைச்சல்; ஆலம் - ஆலகால நஞ்சு \ விஷம்; அழன்ற - கொதிக்கின்ற; ஆக்கை - உடம்பு; நீக்கிய - அறுத்தெறிந்த; காட்சி - தோற்றம்; நேமி - சக்கராயுதம்; மால் - திருமால்; கவந்தம் - தலையற்ற உடல் \ முண்டம்)

ஆரவாரம் செய்கின்ற கடல் போல முழக்கம் செய்யும் பேர் இரைச்சலைக் கொண்டவன்; ஆலகால விஷம் போலக் கறுத்து, கொதிக்கின்ற உடம்பை உடையவன்; நீலநிறம் கொண்ட திருமால், தனது சக்கரப்படையினால் தலையை அறுத்துத் தள்ளிய காலநேமி என்னும் அசுரனைப்போல தலையற்ற முண்டமாகக் காட்சியளிப்பவன் கவந்தன் - பாடல் தொடர்கிறது.

காலநேமி என்பவன் இரணியனின் மகன்களுள் ஒருவன். அசுரன். இவன் நூறு தலைகளையும் நூறு கைகளையும் உடையவன். தன் தகப்பனைக் கொன்ற திருமாலுடன் பெரும் போர் செய்தவன். திருமாலின் சக்கராயுதம் இவன் தலைகளையும் கைகளையும் அறுத்துத் தள்ளியது. எனினும் தலையற்ற முண்டமான உருவத்துடனே, சிறிதும் தளராது, திருமாலுடன் போர் செய்தான். இறுதியில் கருடன் தன் மார்பால் தள்ளி, காலநேமியை வீழ்த்தினான் என்பது புராண வரலாறு. இந்தக் காலநேமியே. பின்னர் கிருஷ்ணாவதாரத்தில் கம்சனாக அவதரித்தவன் என்றும் கூறுவர். கவந்தனின் பேரோசைக்குக் கடலின் முழக்கமும், அவன் உடலின் நிறத்திற்கும், அவன் கொடுமைத் தன்மைக்கும் ஆலகால விஷமும் உவமைகள்.

20. இருவரும் கவந்தனை நன்கு நோக்குதல்

தாக்கிய தணப்பு இல் கால் எறிய, தன்னுடை
மேக்கு உயர் கொடி முடி இழந்த மேரு நேர்
ஆக்கையின் இருந்தவன் தன்னை, அவ்வழி,
நோக்கினர் இருவரும், நுணங்கு கேள்வியார். (3764)

(தணப்பு - தடை; தாக்கிய - மோதிய; மேக்கு - மேலே; கொடுமுடி - சிகரம்; ஆக்கை - உடம்பு; நுணங்கு - நுட்பமான; நேர் - நிகர் \ ஒப்பு; கால் - காற்று)

தடை செய்ய முடியாத பெருங்காற்றுத் தாக்கியதால், தன்னுடைய மிக உயர்ந்த வலிமையான சிகரங்களை இழந்த மேருமலையை ஒத்த உடம்பை உடையவனான கவந்தனை, அப்பொழுது, நுட்பமான கல்வி, கேள்விகளில் சிறந்தவர்களான இராம இலக்குவர் இருவரும் சற்று நின்று பார்த்தனர்.

கவந்தனது தலையற்ற உடலுக்குச் சிகரம் இழந்த மேருமலை உவமை. மேருமலை தன் சிகரங்களை இழந்த வரலாறு: முன்னொரு காலத்தில் காற்றுக் கடவுளான வாயுதேவனுக்கும், ஆதிசேஷனாகிய பாம்பிற்கும், தம்மில் யார் வலிமையுடையவர் என்ற போட்டி எழுந்தது. அதன்படி, வாயுதேவன் மேருமலையின் சிகரங்கள் அனைத்தையும் அழிக்க வேண்டும் என்பதும், அவை அழிபடாமல் ஆதிசேஷன் தன் படங்களால் காத்து நிற்க வேண்டுமென்பதும் இருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. வாயுதேவன் தன்பலம் கொண்ட மட்டும் மேருமலையை மோத, ஆதிசேஷன் தன் ஆயிரம் படங்களால் காத்து நின்றான்., என்றாலும் மேருமலையின் மூன்று சிகரங்கள் பெயர்ந்துபோய் தெற்கே கடலில் விழுந்தன. இந்த மூன்று மலைச் சிகரங்கள் மீதே, பின்னர் இலங்கைத் தீவு உருவாகியது என்பதும், அதனால் தான் இலங்கைக்குத் "திரிகூட மலை" என்று பெயர் வந்தது என்பதும் ஒரு புராணக்குறிப்பு.

21. அவன் வாயைப் பார்த்து வியத்தல்

நீர் புகும் நெடுங்கடல் அடங்கும், நேமி சூழ்
பார் புகும், நெடும் பகு வாயைப் பார்த்தனர்;
"சூர் புகல் அரியது ஓர் அரக்கர் தொல் மதில்
ஊர் புகு வாயிலே இது?" என்று உன்னினார். (3765)

(நேமி - சக்கரவாளமலை; பார் - பூமி; பகு - பிளந்த; சூர் - கொடிய தெய்வம் \ தீண்டிவருத்தும் \ சூரன் \ சூரியனுமாம்; தொல் - பழமையான; மதில் - கோட்டை; உன்னுதல் - நினைத்தல்)

எல்லா ஆறுகளின் தண்ணீரும் வந்து சேருகின்ற பெரிய கடல்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள இந்தப் பூமி முழுவதும் புகுந்து கொள்ளுவதற்கு இடமான நீண்ட, பெரிய, பிளந்த, திறந்த கவந்தனுடைய வாயை, இராம இலக்குவர் இருவரும் பார்த்து, "சூரியனும், தேவர்களும் கூடப் புகுதற்கு அரியதான அரக்கர்களின் தொன்மையான மதிலைக் கொண்ட இலங்கை நகரின் நுழைவாயில் இதுதானோ!" என்று வியந்து எண்ணலாயினர்.

சக்கரவாளகிரி என்பது அண்டத்தின் அப்புறத்தே வட்டவடிவமாயும் உள்ளே இருளையும், வெளியே ஒளியையும் கொண்டு அமைந்துள்ள ஒரு மலைத்தொடர் என்பது புராணக்குறிப்பு. சூர் என்ற சொல்லுக்குத் தீண்டி வருத்தும் கொடிய தெய்வம் என்றும், தேவர்கள் என்றும், சூரியன் என்றும் பொருள்கள் உண்டு. இங்கே சூரியன் என்ற பொருளே பொருத்தமானது என்பதை உணர்க. சூரியனும் புகமுடியாத இலங்கை என்று முன்னர்க் கூறியுள்ளதையும் நினைவு

கூர்க. "இருசுடர் மீதினில், இயங்கா மும்மதில் இலங்கை" என்பது திருமங்கையாழ்வார் பாசுரம். கவந்தனது திறந்தவாயின் அகலமும், நீளமும், ஆழமும் புலப்படுத்தப்பட்டது.

22. இராம இலக்குவர் இதுபற்றி உரையாடுதல் (15 பாடல்கள்)

அவ்வழி, இளையவன் அமர்ந்து நோக்கியே,
வெவ்வியது ஒரு பெரும் பூதம், வில் வலாய்!
வவ்விய தன் கையின் வளைத்து, வாய்ப் பெயும்;
செய்வது என் இவண்?"என, செம்மல் சொல்லுவான். (3766)

(அவ்வழி - அப்பொழுது; அமர்ந்து - உற்று \ நிதானமாக; வவ்விய - அகப்பட்ட \ பற்றிக்கொண்ட \ கைக்குவந்த; இவண் - இப்பொழுது; செம்மல் - செம்மைக்குணமுடையவன் \ இராமன்; பெய்தல் - போட்டுக்கொள்ளுதல்)

அப்பொழுது, தம்பி இலக்குவன் அதை நன்கு உற்றுப்பார்த்து, இராம பிரானை நோக்கி, "வில் வித்தையில் வல்லவனே! இது கொடிய ஒரு பெரியபூதம் ஆகும். அது, தன் கையை வளைத்து அதில் பற்றிக் கொண்ட, அகப்பட்ட, எல்லா உயிரினங்களையும் தன் வாயில் போட்டு மென்று தின்று விடுகிறது. இப்பொழுது அதன் கையில் அகப்பட்டிருக்கும் நாம் என்ன செய்வது?" என்று கேட்டான்; தலைவனாகிய இராமன் கீழ்வருமாறு சொல்லலானான்.

"அமர்ந்து நோக்குதல்" என்பது, ஆற அமர நிதானமாக, கூர்ந்து, உற்று நோக்குதலைக் குறிக்கும்; இலக்குவன் அது இலங்கையின் நுழைவாயில் அல்ல, ஒருபெரிய பூதத்தின் வாயே என்று தெளிவுற்றான். அதனைத் தன் தமையனுக்கும் தெரிவித்தான் என்பதாம்.

23. "இது பூதமே" என இராமன் துணிதல்

"பாரிடமே இது; பரவை சுற்றுறும்
பார் இடம் அரிது எனப்பரந்த மெய்யது;
பார்! இடம் வலம் வரப்பரந்த கையது;
பார் இடந்து எடுத்த மா அனைய பாழியாய்!" (3767)

(இடத்தல் - குத்துதல்; மா - விலங்கு \ வராகம் \ பன்றி; பாழி வலிமை; பரவை - கடல்; சுற்றுறுதல் - சூழப்படுதல்; பார் - பூமி; அரிது - பற்றாது \ போதாது; மெய் - உடம்பு; பாரிடம் - பூதம்)

இராமன், இலக்குவனை நோக்கி, "பூமியைத் தனது கொம்புகளினால் குத்தி எடுத்துக் கொண்டு வந்த பெரிய விலங்கான வராகத்தை ஒத்த வலிமையை உடையவனே! இது பூதமேதான்; ஏனெனில், கடலால் சூழப்பெற்ற இவ்வுலக இடம் அனைத்தும் கூடப்போதாது என்று கூறும்படி, இது விரிந்த, பருத்த உடம்பினை உடையதாய் இருக்கிறது; இடப்பக்கமும், வலப்பக்கமும், நீண்டு

பருத்து, விரிந்திருக்கும் கைகளையும் பார்; எனவே இது பூதமேதான்" என்று இராமன் துணிந்து கூறுகிறான்.

மெய்யும் கையும் பருத்தும், பரந்தும், நீண்டும் இருந்ததால் அவ்வுருவம் ஒரு பூதமே என்று தீர்மானிக்கிறான் இராமன் என்பதாம்.

24. தான் அதற்கு உணவாகிப் போவதாக இராமன் கூறுதல்

"தோகையும் பிரிந்தனள்; எந்தை துஞ்சினன்;
வேக வெம் பழி சுமந்து உழல வேண்டலேன்;
ஆகலின், யான், இனி, இதனுக்கு ஆமிடம்;
ஏகுதி ஈண்டு நின்று, இளவலே!'' எனஎ்றான் (3768)

(தோகை - மயில்; எந்தை - என்தந்தை \ இங்கே சடாயு; உழல்தல் - அலைதல்; வேண்டுதல் - விரும்புதல்; வேகம் - மனக்கலக்கம்; ஆமிடம் - உணவு \ மாமிசம் \ ஆமிஷம் \ நுகரப்படும் பொருள்.)

"தம்பி! மயில்போலும் சாயலை உடைய சீதையும் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாள்; அவளைக் காப்பாற்றச் சென்ற என் தந்தையாகிய சடாயுவும் அப்போரில் உயிர் நீத்தான். மனக்கலக்கத்தைத் தருகின்றனவான இத்தகைய பழிகளைச் சுமந்து கொண்டு அலைந்து திரிய நான் விரும்பவில்லை; எனவே, நான் இப்பொழுது, இந்தப் பூதத்திற்கு உணவாகிப் போகின்றேன். நீ மட்டும் இங்கிருந்து அகன்று அயோத்தி சென்று விடுவாயாக!" என்றான்.

வேகம் என்ற சொல் மனக்கலக்கம் என்ற பொருளைத்தரும்; "வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க" என்பது திருவாசகம். ஆமிஷம் என்ற வடசொல்லின் திரிபு ஆமிடம் என்பது. இதற்கு நுகரப்படும்பொருள் என்றும் உணவு என்றும், மாமிசம் என்றும் பொருள்.

25. "ஈன்றவர் இடர்பட, எம்பி துன்புற,
சான்றவர் துயருற, பழிக்குச் சார்வுமாய்த்
தோன்றலின், என் உயிர் துறந்தபோது அலால்,
ஊன்றிய பெரும்படர் துடைக்க ஒண்ணுமோ?'' (3769)

(எம்பி - என்தம்பி \ இங்கே பரதன்; பழி - வசை; சார்பு - பற்றுக்கோடு; ஊன்றிய - அழுந்திய \ நிலைபெற்ற; துடைத்தல் - நீக்குதல்; ஒண்ணுமோ - முடியுமோ; இடர் - துன்பம்)

"என்னைப் பெற்றெடுத்த என் தாய் தந்தையர் என் பிரிவால் துன்புற்று வாடவும், என் தம்பிகளாகிய நீயும், பரதனும் சத்துருக்கனனும் என் பிரிவால் வருத்தமடையவும், அயோத்தியில் உள்ள வசிட்டர் முதலிய சான்றோர்கள் மனம் வருந்தவும், மாற்றான் கவர்ந்து சென்ற என் மனையாளை மீட்க முடியவில்லையே என்ற பழிக்கு ஆதாரமாகத் தோன்றியுள்ள நான்; என்னுடைய

உயிரை அழித்துக் கொண்ட போது அல்லாமல், அழுந்தி நிலைபெற்ற இத்தகைய பெரிய பழியை நீக்குதல் என்பது முடியுமோ? முடியாது."

தான் கொண்டிருக்கின்ற பெரும்பழி, தான் உயிர் துறந்தாலன்றி அழியாது என்றான் என்பதாம். "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்பது திருக்குறள். இங்கே இராமன் தான் பழியோடு தோன்றியிருப்பதாகக் கூறியிருப்பது கருதத்தக்கது.

26. "இல் இயல்புடைய, நீர் அளித்த, இன்சொலாம்
வல்லி, அவ் அரக்கர்தம் மனை உளாள் எனச்
சொல்லினென், மலை எனச் சுமந்த தூணியென்,
வில்லினென், செல்வெனோ, மிதிலை வேந்தன்பால்?" (3770)

(வல்லி - பூங்கொடி; இல் - இல்லற வாழ்க்கை)

"எனக்குத் தாங்கள் மணம் செய்து கொடுத்த, இல்லறத்திற்குரிய தன்மைகள் அனைத்தும் பொருந்தியவளும், இனிய சொற்களைப் பேசுபவளும், கொடி போன்றவளும் ஆகிய சீதை, இப்போது அவ்வரக்கர்களின் இல்லத்தில் வாழ்கின்றாள் என்று சொல்லிக் கொண்டு, மிதிலை நகரத்து அரசன்பால், மலை போன்ற வில்லையும், அதைத் தாங்கும் அம்பறாத் தூணியையும் வீணே தாங்கிக் கொண்டு செல்வேனோ? மாட்டேன்" என்று இராமன் புலம்பலானான்.

27. "தளை அவிழ் கோதையைத் தாங்கல் ஆற்றலன்,
இளை புரந்து அளித்தல்மேல் இவர்ந்த காதலன்,
உளன் என, உரைத்தலின், "உம்பரான்" என
விளைதல் நன்று;ஆதலின், விளிதல் நன்று" என்றான். (3771)

(தளை - இதழ்; கோதை - பூமாலை; தாங்கல் - காப்பாற்றுதல்; இளை - பூமி; புரந்து - காத்து; அளித்தல் - பாதுகாத்தல்; இவர்தல் - உடையதாதல்; உம்பர் - மேலுலகம்; விளைதல் - சொல்லப்படுதல்; விளிதல் - இறத்தல்; காதல் - ஆசை).

"இதழ்கள் கட்டவிழ்ந்து நன்கு மலர்ந்த மலர் மாலையை அணிந்த சீதையையே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் அற்றவனாகிய இராமன், பூமியைக் காப்பாற்றி இந்நாட்டை அரசாள்வதில் மிக்க ஆசை கொண்டுள்ளான்" என்று உலகத்தார் பேசுவதைக் காட்டிலும், "அவன் இறந்து போய் விண்ணுலகு அடைந்தான்" என்று கூறுவது நன்று. எனவே நான் இப்போது இறந்து படுவதே நல்லதாகும்" என்றான் இராமன்.

தனது மனைவியையே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றலற்றவன், நிலமகளைக் காப்பாற்றும் ஆசை கொள்வது எப்படிப் பொருந்தும்? என்று உலக மக்கள் கூறும் பழிச் சொல்லைக் காட்டிலும், மனைவி மாற்றானால் அபகரித்துச் செல்லப்பட்டாள் என்பதைக் கேட்டதும், அவளைத் தேடுதற்கு முற்பட்டு, அம்முயற்சியில் தோல்வியுற்றதால், இழிச் சொல்லுக்கு அஞ்சி இறந்துபட்டான் என்று பிறர் கூறுவதே நன்மை பயப்பதாகும் என்று கருதி, இறப்பதற்கு

எண்ணினான் என்பதாம். சீதையைப் பிரிந்து பின்னரும் உயிர் வாழ்தல் அரசச் செல்வத்தின் மீது கொண்ட ஆசையால் தான் என்று உலகம் கூறும் பழிக்கு அஞ்சினான் என்க. "இளை" என்ற சொல்லுக்குப் பூமி என்பது பொருள். இப்பூமிதேவியின் தலைவனான திருமாலுக்கு "இளைபதி" என்று ஒரு பெயரும் உண்டு என்பதை அறிக.

28. இலக்குவன் மறுமொழி

ஆண்டான் இன்னன பன்னிட, ஐயற்கு இள வீரன்,
''ஈண்டு, யான், உன்பின் ஏகியபின், இவ் இடர் வந்து
மூண்டால், முன்னே ஆர் உயிரோடும் முடியாதே,
மீண்டே போதற்குஆம் எனின், நன்று என் வினை!''என்றான். (3772)

(ஆண்டான் - தலைவன்; பன்னுதல் - சொல்லுதல்; மூண்டது - நேரிட்டது; முடிதல் - இறத்தல்; வினை - அடிமைத்தொழில்; நன்று - சிறப்புடையது)

யாவர்க்கும் தலைவனாகிய இராமபிரான் இவ்வாறு மனம் வருந்திக் கூறவும், வீரனாகிய இராமனுக்குத் தம்பியாகிய இலக்குவன் "இந்தக் காட்டிற்கு நான் உன் பின்னால் வந்து சேர்ந்தபின், உனக்கு இப்படிப்பட்ட ஒரு பெருந்துயரம் நேரிட்டது என்றால், உனக்கு முன்னால் நான் இறந்து போகாமல், எனது அருமையான உயிரைத் தாங்கிக் கொண்டு, அயோத்திக்குத் திரும்பிச் செல்லுவது கூடும் என்றால், நான் செய்யும் அடிமைத்தொழில் மிக நன்றாகச் சிறப்புடையதாக இருக்கிறது" என்று தன்னையே இகழ்ந்து கூறிக் கொண்டான் இலக்குவன்.

"மன்னும் நகர்க்கே இவண் வந்திடின் வா; அது அன்றேல் முன்னம் முடி" என்பது சுமித்திரையின் கட்டளை. வனம்புகுதற்கு முன்பு இலக்குவனின் தாய் சுமித்திரை கூறிய இச்சொற்களை இங்கே இலக்குவன் நினைவுபடுத்துவதை உணர்க.

29. என்றான் என்னாப் பின்னும் இசைப்பான், "இடர் தன்னை
வென்றார் அன்றே வீரர்கள் ஆவார்? விரவாரின்,
தன் தாய், தந்தை, தம்முன், எனும் தன்மையர்முன்னே
பொன்றான்என்றால், நீங்குவது அன்றோ புகழ் அம்மா?'' (3773)

(இசைத்தல் - சொல்லுதல்; விரவார் - பகைவர்; பொன்றுதல் - இறந்துபடுதல்)

என்று இவ்வாறு கூறிய இலக்குவன் மேலும் கூறுவான். "தனக்கு வந்த துன்பங்களையும் தடைகளையும் எதிர்த்து, அவற்றை வென்று கடந்தவர்கள் அல்லவா வீரர்கள் என்று போற்றப்படுபவர்? பகைவர்களால் தன் தாய், தந்தை, தமையன் முதலிய உறவினர்களுக்கு வரும் துன்பத்தைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு முன்பாகவே தான் தன் உயிரைப் போக்கிக் கொள்ளாது,

உயிர்வாழ்ந்தான் என்றால். அவனுக்குப்புகழ் என்பது நீங்கிவிடுமல்லவா? பழிதானே சேரும்" என்றான் இலக்குவன்.

இங்கே இரண்டு கருத்துக்கள் நோக்கப்படவேண்டும். ஒன்று எத்தகைய துயரம் வந்தாலும் அதை எதிர்த்து நின்று வெற்றி கொள்ளுவதே வீரர்களுக்கு உரிய பணி என்பது, மற்றொன்று. தன் உறவினர்களுக்கு வரும் துன்பத்தால், அவர்கள் இறந்து போவதற்கு முன்பு, தானே மடிந்துபோதல் மிக்க புகழைத்தரும். உயிர் தரித்து நின்றால் பழிதான் வந்து சேரும் என்பதாம். எனவே இங்கே இலக்குவன் இராமன் உயிர் விடுதலைத் தடுக்க விழைவதையும், தான் உயிர் விடத்தயாராய் இருப்பதையும் ஒருசேர அறிவிக்கிறான் என்க.

30. "மானே அன்னாள் தன்னொடு தம்முன் வரை ஆரும்
கானே வைக, கண்துயில் கொள்ளாது அயல் காத்தற்கு
ஆனான்; என்னே!" என்றவர் முன்னே, "அவர் இன்றித்
தானே வந்தான்" என்றலின், வேறு ஓர் தவறு உண்டோ? (3774)

(வரை - மலை \ மூங்கிலுமாம்; ஆர்தல் - நிறைதல்; வைகுதல் - வாழ்தல்; அயல் - பக்கம்; தவறு - குற்றம் \ பழி)

"மான்போன்ற மருண்ட பார்வையுடையவளான சீதையோடு, தன் தமையன் இராமன், மலைகளும் மூங்கில்களும் நிறைந்த இந்தக் காட்டிலே வசிக்கும்போது, கண்கள் உறக்கம் கொள்ளாது, பக்கத்திலேயே இருந்து அவர்களைக் காத்துக் கொண்டு நின்றிருந்த இலக்குவனின் அடிமைத்தொழில் எவ்வளவு சிறந்தது" என்று வியந்து பாராட்டிய நாட்டு மக்களின் முன்னே போய், என் தமையனும், அவர்தம் துணைவியாரும் இன்றி, நான்மட்டும் தனியனாக வந்திருக்கிறேன்" என்று கூறுவதைக் காட்டிலும் வேறு ஒரு பழி எனக்கு உண்டாகுமோ?" என்றான் இலக்குவன்.

தன்னைப் பாராட்டியவர்களே, தன்னைப்பழித்துக் கூறுவதைக் காட்டிலும் மேம்பட்ட குற்றம் வேறு ஒன்றும் இல்லை என்றான் இலக்குவன் என்பதாம். இலக்குவன் பணியை அயோத்தி மக்கள் குகன் முதலியோர் பாராட்டிப் பேசியது முன்னர்க் கூறப்பட்டதை நினைவு கூர்க. பின்னும் இராமனே "துஞ்சல் இல் நயனத்து ஐய!" என்று கூறுவதையும் இங்கு ஒப்புநோக்குக.

31. என் தாய், "உன்முன் ஏவிய யாவும் இசை; இன்னல்
பின்றாது எய்தி, பேர் இசையாளற்கு அழிவு உண்டேல்,
பொன்றா முன்னம் பொன்றுதி" என்றாள்; உரைபொய்யா
நின்றால் அன்றோ நிற்பது வாய்மை நிலை அம்மா? (3775)

(முன் - அண்ணன்; ஏவிய - கட்டளையிட்ட; இசைதல் - ஏற்றுக்கொள்ளுதல்; பின்றாது - தவிர்க்காது \ பின் வாங்காது; இசை - புகழ்; பொன்றுதல் - இறந்துபடுதல்; பொய்யா - தவறாகாமல்; வாய்மை - சத்தியம்)

"என்னுடைய தாய் சுமித்திரை, "உன் தமையன் இட்ட கட்டளைகளையெல்லாம் ஏற்றுக்கொள். அக்கட்டளைகளினால் ஏதேனும் துன்பம் வருமானால், அதனைத் தயங்காது எதிர்கொள். பெரும்புகழ் படைத்த இராமனுக்கு இறப்பு என்பது நேரும் என்று நீ கருதினால், அவன் இறந்து படுவதற்கு முன்பே நீ மடிந்து விடு" என்று கட்டளை இட்டிருக்கிறாள். அவளுடைய அவ்வார்த்தைகள் தவறாகப் போகாதபடி நான் நிலைபெற்று நின்றால் அல்லவோ சத்தியம் என்பது நிலைபெற்று நின்றதாகும்?" என்றான் இலக்குவன்.

32. "என் பெற்றாளும், யானும், எனைத்து ஓர் வகையாலும்,
நின் பெற்றாட்கும், நிற்கும், நினைப்புப் பிழையாமல்,
நல் பொன் தோளாய்! நல்லவர் பேண நனி நிற்கும்
சொல் பெற்றோம், மற்று ஆர்உயிர் பேணி, துறவேமால்." (3776)

(நல் - அழகிய; நினைப்பு - கருத்து; பிழைத்தல் - மாறுபடுதல்; பேணுதல் - விரும்புதல் \ பாதுகாத்தல்; நனி - மிக \ நன்றாக; நிற்கும் - நிலைபெற்றிருக்கும்; சொல் - புகழ்; துறத்தல் - விலகுதல்)

"அழகிய பொன்னாபரணங்கள் அணிந்த தோள்களையுடையவனே! என்னைப் பெற்ற என் தாயாகிய சுமித்திரையும், நானும், எந்த விதத்திலும், உன்னைப் பெற்ற தாயாகிய கோசலைக்கும், உனக்கும், உங்கள் கருத்தினின்றும் மாறுபடாமல் இருக்கும், நல்லவர்கள் என்று எல்லோரும் விரும்பும் வண்ணம், நன்றாக எப்போதும் நிலைத்து நிற்கும் புகழுரைகளைப் பெற்றோம். அதை விடுத்து, இனிமேல், எங்களது அருமையான உயிர்களை மட்டும் பாதுகாத்துக் கொண்டு, உங்களை விட்டு விலகிச் செல்லமாட்டோம்" என்றான் இலக்குவன்.

எப்பொழுதும்போல் நான் உன்னுடனேயே இருப்பேன். உன்னை விட்டு விலகிச்சென்று என் உயிரை மட்டும் பாதுகாத்துக்கொள்ளச் சிறிதும் விரும்பமாட்டேன் என்பது கருத்து. தன் சார்பாகத் தன் தாயையும், இராமன் சார்பாக அவன் தாயையும் இணைத்துக் கொண்டான் என்க. பிறர் சொல்படி நடப்பதனால் வரும்புகழினும், பிறர்கருத்து மாறுடாமல் நடப்பதனால் வரும் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். "ஒன்றா உலகத்து, உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்" என்பது குறள் 233.

இதனால், இலக்குவனும் சுமித்திரையும், இராமனிடத்தும் கோசலையினிடத்தும் ஒருபோதும் மாறாத நிலைத்த பேரன்பு, கொண்டு, அவர்களைத் தம் அரிய உயிரினும் மேலாகப் போற்றி வந்தனர் என்பது பெறப்படுகிறது.

33. "ஓதுங்கால், அப் பல்பொருள் முற்றுற்று, ஒருவாத
வேதம் சொல்லும் தேவரும் வீயும் கடை வீயாய்;

மாதங்கம் தின்று உய்ந்து இவ்வனத்தின் தலை வாழும்
பூதம் கொல்லப் பொன்றுதி என்னின், பொருள் உண்டோ? (3777)

(ஓதுதல் - சொல்லுதல்; முற்றுறுதல் - முடிவடைதல்; ஒருவாத - நீங்காத; சொல்லும் - புகழ்ந்து கூறும்; வீதல் - இறந்துபோதல்; கடை - ஊழி இறுதிக்காலம்; மாதங்கம் - யானை; உய்தல் - உயிர்பிழைத்திருத்தல்; தலை - இடம்; பொன்றுதல் - இறத்தல்; பொருள் - உண்மை)

"உண்மையைச் சொல்லுமிடத்து, உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் முற்றிய வாழ்வு பெற்று முடிந்துபோகிற நிலையிலும், எக்காலத்தும் அழிக்கஇயலாத வேதங்கள் சிறப்பித்துச் சொல்லுகின்ற தேவர்கள் கூட அழிந்து போகின்ற ஊழி முடிவுக்காலத்திலும், அழிந்து போகாத தன்மை படைத்த பரம்பொருள் நீ; அவ்வாறு இருக்க, யானைகளைக் கொன்று, தின்று இவ்வனத்தில் உயிர்வாழ்கின்ற அற்பமான ஒரு பூதம் கொன்று, நீ உயிரிழக்கப் போகிறாயா? மிக நன்றாக இருக்கிறது. இதில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா?" என்று கேட்டான் இலக்குவன்.

சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டு. மரணமிலாப்பெரு வாழ்வு எய்தியவர்கள் தேவர்கள். எனவே அவர்களைச் சிறப்பிக்க, "ஒருவாத வேதம் சொல்லும் தேவர்" என்றார். "மாதங்கம்" என்பது யானைக்குக் காரணப்பெயர். மதங்கன் என்ற முனிவர் யானைகளைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்ததால், அது மாதங்கம் எனப்பட்டது. உலகில் உள்ள எல்லாப் பொருள்களும், தேவர்களும் அழிந்தால் கூட, இராமபிரானுக்கு அழிவில்லை என்பது குறிப்பு.

34. "கேட்டார் கொள்ளார்; கண்டவர் பேணார்;" கிளர் போரில்
தோட்டார் கோதைச் சோர் குழல்தன்னைத் துவளாமல்
மீட்டான் என்னும் பேர் இசை கொள்ளான், செரு வெல்ல
மாட்டான், மாண்டான்" என்றலின் மேலும் வசை உண்டோ? (3778)

(பேணுதல் - ஒப்புக்கொள்ளுதல்; தோடு - இதழ்கள்; ஆர் - நிறைந்த; கோதை - பூமாலை; சோர் - தாழ்ந்த \ அவிழ்ந்து தொங்குகின்ற; துவள்தல் - வருந்துதல்; கிளர்தல் - பொங்கி எழுதல்; இசை - புகழ்; செரு - போர்; வசை - பழி)

"நீ இவ்வாறு ஒரு பூதத்தின் கையில் இறந்து போகிறேன் என்று கூறுவதைக் கேட்கின்ற பெரியவர்கள் யாரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; அதைப்போலவே நீ செய்யத்துணிந்த இந்தக் காரியத்தைப் பார்ப்பவர்களும் இதை விரும்பி ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதழ்கள் நிறைந்த மலர்மாலையை அணிந்துள்ள, தாழ்ந்து தொங்குகின்ற கூந்தலையுடைய சீதையை, அவள் சிறிதும் வருந்தித் துவண்டு போகாமல், பொங்கியெழுகின்ற போர் செய்து மீட்டுக்கொண்டு வந்தான் என்று மக்கள் பாராட்டுகின்ற பெரும்புகழைக் கொள்ளாது, போரில் வெற்றி பெறமுடியாமல் தோற்று இறந்து போனான் என்று

மக்கள் சொல்லுவதைக் காட்டிலும் வேறு ஒரு பழி இருக்கிறதா?" இல்லை" என்றான் இலக்குவன்.

நமக்குநேர்ந்த பழியைத் துடைப்பதற்குப் பதிலாக அதைத் துடைக்காது உயிர்துறத்தல் என்பது மேலும் ஒரு பெரும்பழியையே சேர்ப்பிக்கும் என்பது இலக்குவன் கருத்து. "வசையென்ப வையத்தார்க் கெல்லாம், இசையென்னும் எச்சம் பெறாதுவிடின்" என்பது குறள் -238. ஒருவராலும் ஒப்புக்கொள்ள முடியாத செயலையா செய்யப்போகின்றாய்? என்று இலக்குவன் கேட்டான் என்க.

35. "தணிக்கும் தன்மைத்து அன்றுஎனின், இன்று, இத்தகை வாளால்,
கணிக்கும் தன்மைத்து அன்று, விடத்தின் கனல் பூதம்
பிணிக்கும் கையும், பெய் பில வாயும் பிழையாமல்
துணிக்கும் வண்ணம் காணுதி; துன்பம் துற" என்றான். (3779)

(விடம் - நஞ்சு; கனல் - கனலுதல் \ கொதித்தல்; கணித்தல் - எண்ணுதல் \ அளவிடுதல் \ மதித்தல் \ பொருட்படுத்துதல்; தகை - தகுதிவாய்ந்த \ மேம்பட்ட; துணித்தல் - வெட்டுதல்; வண்ணம் - விதம்; பிழையாமல் - தவறாமல்)

"நஞ்சைப்போல் எரிக்கும் இந்தப் பூதம் நம்மால் பொருட்படுத்தப்படவேண்டிய ஒரு உயிரினம் அல்ல; நம்மிடம் இருக்கும் தகுதி வாய்ந்த மேம்பட்ட இந்த வாளால் இதனை அடக்குவது என்பது முடியாது என்று கூறுவதும் சரியல்ல; நம் வாளால் இதை உறுதியாக அடக்கமுடியும்; தன் கையில் அகப்பட்ட எல்லாவற்றையும், தனது பாதளக்கிடங்கு போன்ற தன் வாய்க்குள் போட்டுக் கொள்ளும் இந்தப் பூதத்தைக் குறிதவறாமல் நான் வெட்டியழிக்கப்போகும் விதத்தைக் காண்பாயாக! உன் கவலைகளை விட்டொழிப்பாயாக" என்றான் இலக்குவன்.

36. ஒருவரையொருவர் முந்திச் செல்லுதல்

என்னா முன்னே, செல்லும்; இளங்கோ இறையோற்கு
முன்னே செல்லும்; முன்னவன் அன்னானினும் முந்த,
தன் நேர் இல்லாத் தம்பி தடுப்பான்; பிறர் இல்லை.
அன்னோ கண்டார் உம்பரும் வெய்துற்று அழுதாரால். (3780)

(என்னா - என்று; நேர் - ஒப்பு; அன்னோ - அந்தோ; உம்பர் - தேவர்கள்; வெய்துறுதல் - துன்பமடைதல்)

என்று இவ்வாறு கூறிக்கொண்டு இளையவனான இலக்குவன் முன்னால் சென்றான். தம்பியை முந்திக் கொண்டு மூத்தவன் இராமன் சென்றான்; அவனையும் முந்திக்கொண்டு, தனக்கு நிகரில்லாத தம்பி இலக்குவன் சென்று, இராமனை முன் செல்லவிடாமல் தடுப்பான். அவர்களைத் தவிர அங்கு வேறு ஒருவரும் தடுப்பாரில்லை. இந்த நிலையைக் கண்ட தேவர்களும், மிக்க துன்பமுற்று அழுவாராயினர்.

37. இனையர் ஆகிய இருவரும், முகத்து இரு கண்போல்,
கனையும் வார் கழல் வீரர் சென்று அணுகலும், கவந்தன்,
''வினையின் எய்திய வீரர் நீர் யாவர்கொல்? என்ன,
நினையும் நெஞ்சினர், இமைத்திலர்; உருத்தனர், நின்றார். (3781)

(இனையர் - இத்தன்மையர்; கனைதல் - ஒலித்தல்; வார் - நீண்ட; உருத்தல் - வெகுளுதல் \ கோபித்தல்)

இத்தன்மையையுடைய, ஒலிக்கின்ற நீண்ட கழல்களை அணிந்த வீரர்களாகிய இருவரும், முகத்திலுள்ள சிறந்த இருகண்கள் போல,ஒரே பார்வையையும், நோக்கத்தையும் கொண்டு, இணைந்து சென்று, கவந்தனை நெருங்கவும், அவன் "உங்கள் தீவினையின் பயனால் இப்போது இங்கே என்னை வந்து அடைந்திருக்கும் நீங்கள் யார்?" என்று கேட்கவும், அவ்விருவரும் ஆலோசித்த மனமுடையவராய், அவனைக் கோபித்து நோக்கி, இமைகொட்டாமல் அசையாது சற்றுநேரம் நின்றிருந்தனர்.

"முகத்து இருகண் போல்" என்றது ஒரு அரிய உவமை. ஒரு முகத்தில் இருப்பது இரண்டு கண்கள். அவை ஒருபொருளைப் பார்க்கும்போது, ஒரு கண் மட்டும் பார்க்காது. இரண்டு கண்களும் முன்னும் பின்னும் செல்லாது இணைந்துதான் ஒரு பொருளைப் பார்க்கும். அது போல இராம இலக்குவர் இருவரும் ஒரே வேகத்தோடு, ஒரே நோக்கத்தோடு, முன்பின் அன்றி, இணைந்தே சென்றனர் என்பதாம்." நோக்குமாம் கண்ணிரண்டும் ஒன்றையே காண்" என்பது நன்னெறி (6) "வினையின் எய்தினீர்" என்ற சொற்றொடர்க்கு கவந்தன் பின்னால் தனக்கு விளையப்போகும் நன்மை கருதி என்னுடைய நல்வினையின் பயனால் இங்கு வந்து அடைந்த" என்று கூறுவதாகப் பொருள் கொள்ளலே பொருந்தும்.

கவந்தன் ஓர் அரக்கன். தன் கையில் அகப்பட்ட எல்லாவற்றையும் உண்ணும் இயல்பினன். அவன்முன் நிற்பது யார், எது என்று அறிய வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. இருப்பினும் இவர்கள் இருவரின் பேரழகையும் கண்டு, உண்ண மனம் கொள்ளாமல், அவர்கள் அழகில் ஈடுபட்டு, இரக்கம் கொண்டு, இவ்வாறு கேட்டான் எனக் கொள்ளுதல் வேண்டும். பெருவீரர்கள் பகைவனைக் கண்டோ, அவன் படைகளைக் கண்டோ, அஞ்சுதல் கூடாது. அவ்வாறு அஞ்சினும் அதை வெளிப்படுத்துதல் கூடாது. எனவேதான், இவனைக் கண்டு சற்று அஞ்சினாலும், இவ்விருவரும் "இமைத்திலர்" என்றான் கவிஞன். கண்ணை இமைப்பது கூட அச்சத்தின் குறியீடு என்கிறது குறள். "விழித்தகண் வேல் கொண்டு எறிய, அழித்து இமைப்பின், ஒட்டன்றோ வன் கணவர்க்கு" என்பது குறள் - 775. (ஒட்டு - புறம் கொடுத்தல் \ இழுக்கு; வன் கணவர் - வீரர்)

38. இருவரும் கவந்தன் தோள்களைத் துணித்தல்

"அழிந்துளார் அலர்; இகழ்ந்தனர் என்னை" என்று அழன்றான்
பொழிந்த கோபத்தன்பொறிக் கனல் விழிதொறும் பொடிப்ப,
"விழுங்குவேன்" என வீங்கலும், விண் உற, வீரர்
எழுந்த தோள்களை வாள்களால் அரிந்தனர், இட்டார். (3782)

(அழிதல் - மனமழிதல் \ மனம்கலங்குதல்; அழல்தல்; மனம்வெதும்புதல்; பொழிந்த - மிக்குஎழுந்த; பொறிக்கனல் - தீப்பொறி; பொடிப்ப - தோன்ற; விரைதல் - ஆத்திரப்படுதலுமாம்; இடுதல் - கீழே விழச் செய்தல்)

"என்னைக் கண்டும், சற்றும் அஞ்சி மனங்கலங்காதவராய் உறுதியோடு நின்று என்னை அவமானப் படுத்திவிட்டனர்" என்று கொதித்தான்; கோபத்தைப் பொழிந்தான்; தீப்பொறி இருகண்களிலும் தோன்ற "இவர்களை இப்பொழுதே விழுங்கிவிடுகிறேன்" என்று கூறி ஆத்திரம் கொண்டான். வானளாவப் பூரித்தெழுந்த அவனுடைய இரு தோள்களையும், வீரர்களாகிய இராம இலக்குவர் இருவரும் வெட்டிக் கீழே வீழ்த்தினர்.

என்னிடம் வந்துசேரும் உயிரினங்கள் எல்லாம் என்னைக் கண்டு அஞ்சிக் கதிகலங்கி நிற்கவும், இவ்விருவர் மட்டும் என்னைக் கண்டு சிறிதும் தளர்வுறாது, "இமைத்திலர், உருத்தனர், நின்றனர்" என்றதால், அவர்கள் தன்னை இகழ்ந்ததாக உணர்ந்தான் கவந்தன். இதுபோன்றதொரு அனுபவம் அவனுக்கு வாய்த்ததில்லை என்பதாம். வெட்டுதல், துணித்தல் என்று கூறாது, "அரிந்தான்" என்றது காண்க. அரிதல் என்பது எளிய பொருள்களை வெட்டுவது போல, அவனது தோள்களை எளிதாய் வெட்டினர் என்ற பொருள் தருதல் உணர்க. கவந்தனது வலக்கரத்தை இராமபிரானும், இடக்கரத்தை இலக்குவனும் வெட்டினர் என்று வான்மீகம் கூறும். இந்நிகழ்ச்சியோடு, முன்பு விராதன் என்ற அரக்கன் தோள்களையும், இவ்விருவரும் வெட்டி வீழ்த்திய நிகழ்ச்சியையும் ஒப்பிட்டு நோக்குக.

39. கைகளற்ற கவந்தனின் தோற்றம்

கைகள் அற்று வெங் குருதி ஆறு ஒழுகிய கவந்தன்,
மெய்யின், மேற்கொடு கிழக்கு உறப்பெரு நதி விரவும்,
சைய மா நெடுந் தாழ் வரைத் தனிவரை தன்னோடு,
ஐயம் நீங்கிய, பேர் எழில் உவமையன் ஆனான். (3783)

(வெம் - வெப்பமான; விரவும் - பாயும்; தனி - ஒப்பற்ற; சையம் - மலை; மெய் - உடல்; தாழ்வரை - அடிவாரம்)

இவ்வாறு கைகள் இரண்டும் அறுபட்டதனால், வெப்பமுடைய இரத்தம் வெள்ளமெனப் பெருகுகின்ற கவந்தனின் உடல் தோற்றம், மேற்குத தொடர்ச்சிமலையில் காவிரி புறப்படும் சையமலையின் அடிவாரத்திலும்

மேற்புறத்திலும், கீழ்ப்புறத்திலும் இருபெரிய நதிகள் பாய்ந்து செல்வதைப் போல, சந்தேகமில்லாத பெரிய அழகிய தோற்றத்திற்கு உவமை கூறும்படி அமைந்தது.

முன்பு கவந்தனை மலை என்று வருணித்ததை இங்கு நினைவு கூர்க. இப்போது அந்த மலையாகிய கவந்தனின் இரு தோள்களும் துண்டிக்கப்பட்டதால் அதிலிருந்து பெருகுகின்ற இரத்த வெள்ளம், அந்த மலையின் மேற்புறத்திலிருந்தும், கீழ்புறத்திலிருந்தும் பெருகிவரும் காவிரியாறு போலச் சந்தேகத்திற்கு இடமில்லாது காட்சியளித்தது என்பது கருத்து. இங்கு "சையமலை" என்று குறிப்பிட்டதனால் அவ்ஆறு காவிரியாறு என்று கூறப்பட்டது. காரணம், காவிரியாறு உற்பத்தியாவது மேற்குத்தொடர்ச்சிமலையில் உள்ள சையம் என்ற மலையிலிருந்து தான் என்பது வரலாற்றுக் குறிப்பு. இரத்தம் உடலினின்று வெளியாகும் போது சற்று வெப்பத்துடன் இருக்கும் என்பதால் "வெங்குருதி" என்றார் என்க. சையமலையின் மேற்குப்புறத்தும் கிழக்குப்புறத்தும் ஓடும் ஆறுகளுக்குக் கவந்தன் இரண்டு கைகளினின்றும் பெருகியோடும் குருதிவெள்ளம் உவமை. அம்மலையில் இருபக்கமும் பெருகி ஓடும் நதிகள் பார்ப்பதற்கு மிக்க அழகாக இருக்கும். அதை நினைந்தே கம்பன் இங்கே "பேர் எழில்" என்று கூறுகிறான் என்க.

40. கவந்தன் பழைய நல் உருப்பெறுதல்

ஆளும் நாயகன் அம் கையின் தீண்டிய அதனால்,
மூளும் சாபத்தின் முந்திய தீவினை முடித்தான்;
தோளும் வாங்கிய தோமுடை யாக்கையைத் துறவா,
நீளம் நீங்கிய பறவையின், விண் உற நிமிர்ந்தான். (3784)

(ஆளுதல் - காத்தல்; அம் - அழகிய; மூளும் - நேர்ந்த; வாங்கிய - நீங்கப்பெற்ற; தோம் - குற்றம்; யாக்கை - உடம்பு; நீளம் - கூடு; நிமிர்தல் - எழுந்து தோன்றுதல்; தீவினை - பாவம் - துறவா - துறந்து \ விட்டு நீங்கி)

உயிரினங்களையெல்லாம் காத்தற்தொழில் புரியும் தலைவனாகிய திருமாலின் அம்சமாகிய இராமபிரானது படைக்கலத்தால் - வாளால் - அழகிய கைகளால் தீண்டப்பட்டதனால், முன்பு தான் பெற்று வந்த சாபத்தினால் விளைந்த பாவத்தை முடித்தவனானான் கவந்தன். முன்பே தலையற்ற முண்டமாயிருந்த அவன் இப்போது தோளும் நீக்கப்பட்ட குற்றமுடைய கோரமான உடம்பை விட்டு நீங்கி, இறகு முளைத்ததும் தானே கூட்டைவிட்டுத் தனியே பறந்து போகும் பறவையைப் போல, எழில் உருவத்தோடு வானளாவ உயர்ந்து விண்ணில் சென்று நின்றான்.

"ஆளும் நாயகன்" என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் தெய்வவழிபாட்டு முறைகளில் ஒன்று. காப்பியப்போக்கில் பல இடங்களிலும் இவ்வாறு கூறுவதைக் கற்போர் உணரலாம். "அம்கை" என்பது அவன் அழகிய கைகளில் ஏந்திய படைக்கலன்களையும் குறிக்கும். இராமபிரானுடன் போர் செய்து மாண்டவர் அனைவரும் தீவினை நீங்கப்பெற்று சுவர்க்கம் பெற்றனர் என்பது

இக்காப்பியத்தின் தனிச்சிறப்பு. கவந்தன் தன் வரலாற்றைப் பின்னர்க் கூறுவான். கவந்தனின் உடம்புக்குப் பறவைக்கூடும், கவந்தனுக்குப் பறவையும் உவமைகள். "குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே" என்பது குறள் 338. "சேக்கை மரன் ஒழியச் சேண் நீங்கு புள் போல யாக்கை தமர்க்கொழிய நீத்து" என்பது நாலடியார் 30. நீளம் என்ற சொல், நீடம் என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

41. கவந்தன் இராமனைத் துதிக்கத் தொடங்குதல்

விண்ணில் நின்றவன், "விரிஞ்சனே முதலினர் யார்க்கும்
கண்ணில் நின்றவன், இவன்" எனக் கருத்துற உணர்ந்தான்;
எண் இல் அன்னவன் குணங்களை, வாய் திறந்து, இசைத்தான்
புண்ணியம் பயக்கின்றுழி அரியது எப்பொருளே? (3785)

(விரிஞ்சன் - பிரமன்; கருத்து - மனம்; எண்இல் - கணக்கற்ற; இசைத்தல் - பாடித்துதித்தல்; பயத்தல் - பயனளித்தல்)

அவ்வாறு ஆகாயத்தில் திவ்ய சொரூபத்தோடு நின்றவனான கவந்தன், "பிரமன் முதலிய தேவர்களுக்கும் மக்களுக்கும் கண்ணுக்குள் சோதியாய் நின்று அருள்பாலிப்பவன் இவன்தான், என்று இராமபிரானின் தெய்வீகத் தன்மையை மனத்தால் உணர்ந்து கொண்டான். எனவே அத்தகைய இராமபிரானது கணக்கற்ற, சிந்தைக்கு எட்டாத நற்குணங்களை வாய்திறந்து பாடித் துதிக்கலானான். நல்வினையின் பயனாகிய புண்ணியம் பயன் தரத்துவங்கும் போது, எந்தப்பொருள்தான் அரியதாகி விடும்? எல்லாப் பொருளும் எளிதில், விரைவில் வந்து சேர்ந்துவிடும் அல்லவா?"

இராமபிரான் கை தீண்டப்பெற்றதால் சாப விமோசனம் பெற்று முன்னைய கந்தருவ உருவம் பெற்றதோடன்றி, இறைவன் பெருமையை உணர்ந்து துதிக்கவும் வல்லவனானான் என்க. "கண்ணில் நின்றவன்" என்பது, தேவர்களின் தியானத்தில் பிரத்யட்சமாகி ஞானக்காட்சி தந்து அருள் பாலிப்பவன் என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதை உணர்க. "கண்ணகத்தே நின்று, களிதரு தேனே" என்பது திருவாசகம். மனத்தால் நினைத்து வாய் திறந்து இசையோடு பாடி கைகளால் துதித்தான் என்பதை "கருத்துற உணர்ந்து, வாய்திறந்து, இசைத்தான்" என்றார் என்க. "எண்ணில்" என்ற சொல் அளவற்ற என்ற பொருளைத் தந்தாலும், சிந்தைக்கு எட்டாதது, எண்ணுதற்கரியது, எண்ணம் கடந்தது என்று கொள்ளுவது சாலப் பொருத்தமாதலை அறிக.

42. கவந்தன் துதி (9 பாடல்கள்)

ஈன்றவனோ எப்பொருளும்? எல்லை தீர் நல் அறத்தின்
சான்றவனோ? தேவர் தவத்தின் தனிப்பயனோ?
மூன்று கவடு ஆய் முளைத்து எழுந்த மூலமோ?
தோன்றி, அரு வினையேன் சாபத் துயர் துடைத்தாய்!" (3786)

(துடைத்தல் - போக்குதல்; ஈன்றவன் - படைத்தவன்; தனி - ஒப்பற்ற; கவடு - கிளைகள் \ பிரிவுகள்; மூலம் - ஆதாரம் \ மூலப்பரம்பொருள்; சான்று - எடுத்துக்காட்டு)

நான் எதிர்பாராமல், என் முன் தானே எளிதாகத் தோன்றி, தீர்க்கமுடியாத கொடிய தீவினைகளை உடையவனான எனக்கு முனிவனது சாபத்தினால் விளைந்த பெருந்துயரத்தைத் தீர்த்தருளியவனே! உன்னை உலகில் எல்லா சர, அசரப்பொருள்கள் எல்லாவற்றையும் படைத்தவன் என்று கூறுவேனா? என்றும் நிலைத்திருக்கும் முடிவற்ற நல்ல தருமத்தின் எடுத்துக்காட்டு என்று கூறுவேனா? தேவர்கள் செய்த அரிய தவத்தின் பயனாய் வந்து அவதாரம் செய்தவன் என்பேனா? பிரமன், திருமால், சிவன் என்று மூன்று பிரிவுகளாக முளைத்துத் தோன்றியவர்களுள் எல்லாவற்றுக்கும் ஆதிகாரணனான மூலப்பரம்பொருள் என்பேனா? எவ்வாறு கூறித் துதிப்பேன்? இறைவா!"

திருமாலின் உந்தித் தாமரையிலிருந்து தோன்றியவன் பிரமன், எனவே படைப்புக் கடவுளைப் படைத்தவன் என்றதனால் இவனே எல்லாப் பொருளையும் ஈன்றவன். அவனே "மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலம்" என்பதாம். இக்காண்டத்தில் முதலில் விராதன் வதைபட்டதும் அவன் துதித்தலும், இடம் பெற்றிருப்பதை நோக்குக. "அரியாகிக்காப்பான், அயன் ஆகிப்படைப்பான், அரனாகி அழிப்பவனும் தானே" என்பது திருக்கயிலாய ஞான உலா. "மூவராகிய மூர்த்தியை, முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை" என்பது நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்.

43. "மூலமே இல்லா முதல்வனே! நீ முயலும்
கோலமோ, யார்க்கும் தெரிவு அரிய கொள்கைத்தால்;
ஆலமோ? ஆலின் அடையோ? அடைக்கிடந்த
பாலனோ? வேலைப் பரப்போ? பகராயே !" (3787)

(முயலுதல் - நினைத்து மேற்கொள்ளுதல்; கோலம் - படிவம்; தெரிவு அரிய - தெரிந்து கொள்ளமுடியாத; கொள்கை - தன்மை; அடை - இலை; வேலை - கடல்; பரப்பு - இடம்)

"தனக்கென்று ஒரு மூலமே இல்லாத மூலமுதற்பொருளே! நீ உன் இச்சையால் மேற்கொள்ளும் வடிவங்கள் எல்லாம் ஒருவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் இருப்பதில்லை. வெவ்வேறு நேரத்தில், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு வடிவங்கள் கொள்ளுகிறாய். எனவே, ஊழி இறுதிக்காலத்தில் எடுக்கப்போகும் ஆலமரத்தின் வடிவுதான் நீ எனச் சொல்லலாமா? அல்லது ஆலமரத்தின் ஒரு இலையாக இருக்கப்போகிறாயே அதைச் சொல்லலாமா? அல்லது அந்த ஆல இலையின் மீது ஒரு பாலகனாய்ப் பள்ளி கொண்டிருக்கப் போகிறாயே அதைச் சொல்லலாமா? அல்லது இவையெல்லாவற்றிற்கும் இடம் அளித்த பாற்கடலின் பரப்பைச் சொல்லலாமா? எதையென்று சொல்லுவேன் இறையே! உனது உண்மையான வடிவத்தை நீயே சொல்லிவிடேன்" என்கிறான் கவந்தன்.

உலகில் உள்ள எல்லாப்பொருள்களுக்கும் ஒரு ஆரம்பம் உண்டு. ஒரு முடிவும் உண்டு. எந்தப்பொருளுக்கு ஆதியும் இல்லையோ, அந்தமும் இல்லையோ அதை மூலப்பரம் பொருள் என்கிறோம். அதைத்தான் கவந்தன் "மூலமே இல்லா முதல்வனே" என்கிறான் என்க. இறைவன் ஒவ்வொரு சமயத்தில் எடுக்கும் அவதாரங்களின் நோக்கத்தையும் வடிவத்தையும் யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்பதைத்தான் "நீ முயலும் கோலமோ, யார்க்கும் தெரிவரிய கொள்கைத்தால்" என்கிறான். ஊழியிறுதிச் காலத்தில், இறைவன் திருப்பாற்கடலில் ஓர் ஆல இலையில் பாலகனாய், இவ்வுலகெல்லாவற்றையும் உண்டு, பள்ளி கொண்டிருப்பான் என்பது ஒரு புராணக்குறிப்பு. அதைத்தான் இறுதி இரண்டு அடிகளும் தெரிவிக்கின்றன என்க. "பண்டும் இன்றும் மேலுமாய் ஓர் பாலனாகி, ஞாலம் ஏழ் உண்டு, மண்டி, ஆலிலைத் துயின்ற ஆதிதேவனே" என்பது திருச்சந்தவிருத்தம். காரணம் இன்றிக் காரியம் இல்லை என்பதும். வித்தின்றி விளைவில்லை என்பதும், நெருப்பின்றிப் புகையில்லை என்பதும் பொதுவிதி. ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை என்பது பரம்பொருளுக்கே மட்டுமான சிறப்பு விதி. "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி" என்பதும் "போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றம் ஆகி நீ தோற்றம் இல்லாய்" என்பதும் மணிவாசகரின் திருவாசகம். "ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இலானுக்கு, ஆயிரம் திருநாமம்" என்பதும் சான்றோர் வாக்கு.

முன் செய்யுளில் "மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ?" என்று கேட்டவன், இங்கு இன்னும் நல்லுணர்வு பெற்று "மூலமே இல்லா முதல்வனே" என்று துதித்ததன் நுண்மை இராமபிரானின் திவ்யதீட்சையால் வந்தது என்பதை உணர்க.

44. "காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் கண் ஆகி,
பூண்பாய்போல் நிற்றியால், யாது ஒன்றும் பூணாதாய்;
மாண்பால் உலகை வயிற்று ஒளித்து வாங்குதியால்;
ஆண்பாலோ? பெண்பாலோ? அப்பாலோ? எப்பாலோ?!" (3788)

(பூணுதல் - பற்றிக்கொள்ளுதல் \ சார்ந்திருத்தல் வாங்குதல் - வெளிப்படுத்துதல் கண் - அறிவு \ இடம் \ ஆதாரம் \ இருப்பிடம் மாண்பு - மாட்சிமை \ தெய்வத்திறம்)

ஒரு பொருளைக் காணுகின்றவர்களுக்கும் அவர்களால் பார்க்கப்படுகின்ற பொருளுக்கும் ஆதார இருப்பிடமாகி அவர் மேல் பற்றுக் கொண்டுள்ளவன் போலவும், அதனைச் சார்ந்திருப்பதைப் போலவும் நிற்கின்றாய். ஆனால் அதனால் விளையும் நன்மை தீமை எதன் மேலும் நீ பற்றுக் கொள்ளுவதுமில்லை அவற்றைச் சார்ந்திருப்பதும் இல்லை. உன்னுடைய தெய்வீகத்தன்மையால், பிரளய காலத்தில், உலகமும், உலகத்தில் உள்ள உயிரினங்களும் அழிந்து போகாமல் காப்பாற்றி, உன் வயிற்றுக்குள் ஒளித்து வைத்துக்கொண்டு, ஊழி முடிவில் வெளிப்படுத்துகின்றாய். எனவே நீ உயிர்த் தோற்றத்திற்குக் காரணமான பெண்ணினத்தைச் சார்ந்தவனா? ஆண்பாலா?

இவ்விரண்டும் அல்லாத மூன்றாவதான அலிப்பாலா? அல்லது இவையெல்லாவற்றையும் கடந்த வேறு ஏதேனும் ஓரினத்தைச் சார்ந்தவனா? எங்களுக்குச் சொல்லுவாயாக!" என்று துதிக்கிறான் கவந்தன்.

"காண்பார்க்கும், காண்படுபொருட்கும் கண் ஆகி" என்ற அடிகள், திருநாவுக்கரசரின் "காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே? காண்பார் யார் கண்ணுதல் நீ காட்டாக்காலே" என்ற தேவார வரிகளை நினைவு படுத்துதல் காண்க. "பூண்பாய்போல் நிற்றியால், யாதொன்றும் பூணாதாய்" என்ற வரி, முன்பு இந்திரன்" தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற தொல்சுடரே" என்று துதித்தவற்றையும் நினைப்பூட்டுவது காண்க. "உயிர்ப்பித்தல்" என்பது பெண்பாற்குரியது ஆதலின் பெண்பாலோ என்றான். பிரத்தியட்சமாகத் தெரிவது இராமன் திருஉருவம் எனவே ஆண்பாலோ என்றான். இவன் உருவத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ள முடிவில்லையே என்றதனால் எல்லாவற்றையும் கடந்த அப்பாலோ? எப்பாலோ? என்றான் என்க. இது இறைவனின் பரத்துவ நிலையைக் குறித்தது என்க. ஞஆண்அல்லன் பெண் அல்லன் அல்லா அலியும் அல்லன் காணலும் ஆகான் உளன் அல்லன் இல்லை அல்லன்ஞ, என்பது நம்மாழ்வார் பாசுரம்.

45\. "*ஆதிப்பிரமனும் நீ! ஆதிப் பரமனும் நீ!*
ஆதி எனும் பொருளுக்கு அப்பால் உண்டாகிலும் நீ!
சோதிச் சுடர்ப் பிழம்பும் நீ!" என்று, சொல்லுகின்ற
வேதம் உரைசெய்தால், வெள்காரோ வேறு உள்ளார்? (3789)

(பரமன் - பரம்பொருள்; சோதி - ஒளி; சுடர் - பேரொளி \ சூரியன்; பிழம்பு - பேரொளித்திரள்; வெள்குதல் - நாணுதல்)

"படைப்புத்தொழிலுக்குக் காரணமான ஆதி நான்முகனும் நீயே! அந் நான்முகனுக்கும் காரணமான பரம்பொருளும் நீயே! ஆதிமூல காரணம் என்று சொல்லப்படும் ஒரு பொருளுக்கு மேலும் அதைக் கடந்தும் ஒரு பொருள் இருக்குமாயின் அதுவும் நீயே! ஒளியாகவும், சூரியனாகவும், பேரொளித் திரளாகவும் திகழும் பரஞ்சோதியும் நீயே! என்று சிறப்பித்துச் சொல்லுகின்ற வேதங்கள் எல்லாம் சொல்லுவதைக் கேட்டால், மற்ற கடவுளராய் உள்ளவர்களெல்லாம் வெட்கத்தால் நாணமாட்டார்களா?" என்று துதிக்கிறான் கவந்தன்.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளே" என்ற திருவெம்பாவைப் பாடலின் கருத்து, "ஆதி என்னும் பொருளுக்கு அப்பால் உண்டாகிலும் நீயே" என்ற வரிகளில் எதிரொலிப்பதைக் காண்க. "ஆதி, ஆதி, ஆதி நீ, ஓர் அண்டம் ஆதி ஆதலால் சோதியாத சோதி நீ" என்பது திருமழிசை ஆழ்வாரின் பாசுரம். பரம்பொருளைச் சோதிவடிவாகக் காண்பது பல சமயத்தார்களாலும் பின்பற்றப்படும் ஒரு பொது நோக்கு.

46. ''எண் திசையும் திண் சுவரா, ஏழ் ஏழ் நிலை வகுத்த
அண்டப் பெருங்கோயிற்கு எல்லாம் அழகுடைய
மண்டலங்கள் மூன்றின்மேல், என்றும் மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரை; அம்மா!'' (3790)

(புண்டரீகம் - தாமரை; பொகுட்டு - கொட்டை \ விதை; புரை - இடம் \ இருப்பிடம்; வகுத்த - நிர்மாணித்த; மொட்டு - அரும்பு)

எட்டுத்திசைகளும் வலிய மதிற்சுவராகவும், பதினான்கு உலகங்களும் மேல் நிலை மாடங்களாகவும் நிர்மாணம் செய்யப்பட்ட இந்த அண்டம் என்னும் பெருங்கோயிலுக்கு, அழகுடைய, சூரிய. சந்திர, நட்சத்திர மண்டலங்கள் என்னும் மூன்று மண்டலங்களின் மேல் நின்றாலும், என்றும் மலராத தன்மையுடைய தாமரைமலரின் அரும்புக்குள் இருக்கும் கொட்டைதான், பரமபதம் என்று சொல்லப்படுகின்ற உனது இருப்பிடமாகும்.

இறைவன் இருக்குமிடம் பரமபதம். அது தாமரை விரை போன்றது. தாமரைக்காயை "கர்ணிகை" என்பர் வடநூலார். இந்தக் கருத்தைச் சொல்லுகிறது இந்தப்பாடல். எப்படி ஒரு சிறு விதையிலிருந்து பெரிய ஆலமரம் விழுதுவிட்டு வளர்ந்து அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படைக்கு இருக்க நிழலாகிறதோ அதுபோல, இச்சிறு கொட்டையாகிய பரமபதமே. இவ்வண்டத்தில் உள்ளோர்க்கெல்லாம் பேரின்பப்பெருவாழ்வை அளிக்கிறது என்பது உட்கருத்து. "அண்டமே ஒரு பெருங்கோயில்;" அதற்கு எட்டுத்திசைகளும் மதில்சுவர்கள்; பதினான்கு உலகங்களும் பதினான்கு மேல் நிலை மாடங்கள்; அக்கோயிலுக்கு ஒளிதருபவை சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலானவை. அதற்கும் மேலே உள்ள தாமரை மலரின் அரும்புக்குள் இருக்கும் தாமரைக் காய் தான் இறைவனின் இருப்பிடமான பரமபதம் - வைகுண்டம். இதுதான் இச்செய்யுளின் திரண்ட கருத்து.

47. ''மண்பால் அமரர் வரம்பு ஆரும் காணாத,
எண்பால் உயர்ந்த எரி ஓங்கும் நல் வேள்வி
உண்பாய் நீ; ஊட்டுவாய் நீ; இரண்டும் ஒக்கின்ற
பண்பு ஆர் அறிவார்? பகராய், பரமேட்டி!'' (3791)

(எண் - மதிப்பு; பரமேட்டி - பரமேஷ்டி \ வேள்வி வடிவாக இருக்கும் பரம்பொருள்; இட்டி - வேள்வி \ யாகம்; மண்பால் அமரர் - அந்தணர்கள்.)

"எல்லா உலகங்களிலும் மேலான பரமபதத்தில் விருப்பத்துடன் எழுந்தருளியிருப்பவனே! மேலான வேள்வி வடிவாக இருக்கும் பரம்பொருளே! மண்ணுலகத்துத் தேவர்கள் என்று கருதப்படும் அந்தணர்கள், எல்லை காணமுடியாத, மதிப்பில் உயர்ந்த, நெருப்பு வளர்த்து இயற்றப்படும் நல்ல வேள்வியில் பெய்யப்படும் அவியுணவை, தேவர்கள் நிலையில் இருந்து உண்பவனும் நீயே; வேள்வி நடத்துகின்ற வேள்வித்தலைவனாய் இருந்து மற்றையோர்க்கு அவ்வவியுணவை ஊட்டுபவனும் நீயே. இந்த இரண்டு

தன்மைகளையும் ஒரு சேரப்பெற்றிருக்கின்ற உன்னுடைய உயரிய பண்பை யார்தான் புரிந்து கொள்வார்கள்? நீயே சொல்லுவாயாக!" என்று புகழ்ந்து துதிக்கிறான் கவந்தன்.

"மண்பால் அமரர்" என்ற சொல்லாட்சியை நோக்குக. அமரர் என்றால் தேவர்கள். விண்ணுலகில் வாழ்பவர், இறவா வரம் பெற்றவர், இமைப்பிலர், கால்தோயார் என்பது நாம் அறிந்ததே. இங்கே "மண்பால் அமரர்" என்றது பூதேவர் - பூசுரர் இத்துணைச் சிறப்பும் வாய்ந்து மண்ணுலகத்தில் வாழ்கின்ற வேதம் கற்றறிந்த வேதியரைக் குறிக்கும் என்க". ஒரு கோடி பூதேவரும் கைதொழும் கோவை உற உன்னுவாம்" என்பது வில்லிபாரதம். உண்பாய் நீ, ஊட்டுவாய் நீ என்பதும், விஷ்ணு சகஸ்ரநாமத்தில் - திருமாலின் ஆயிரந்திருநாமங்களில் கூறப்படுகிறது என்பதை அறிக. யக்ஞபுக் யக்ஞவா; யக்ஞகிருத், யக்ஞமானன் என்று வருதலும் காண்க. உண்பவனாகவும், ஊட்டுபவனாகவும் இருக்கும் ஒரு மாயை நிலையைச் சாதாரண மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாது என்பது கருத்து

48. "நிற்கும் நெடு நீத்த நீரில் முளைத்தெழுந்த
மொக்குளே போல, முரண்இற்ற அண்டங்கள்,
ஒக்க உயர்ந்து, உன்னுளே தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு, எளிதோ? பரம்பரனே!" (3792)

(நிற்கும் - நிலைத்துநிற்கின்ற; நீத்தம் - வெள்ளம்; முளைத்து - தோன்றி; ஒக்க - ஒருசேர; ஒளித்தல் - மறைத்தல்; பக்கம் - தன்மை; பரம் - மேலானது; மொக்குள் - நீர்க்குமிழி)

"மேலானவற்றுக்கெல்லாம் மேலானவனே! நிலைத்துநிற்கின்ற நீண்ட வெள்ள நீரில் தோன்றி எழுகின்ற நீர்க்குமிழி போல, முரண்பாடுகள் அழியப்பெற்ற அண்டங்கள் ஒரு சேர உயர்ந்து, உன்னிடத்திலிருந்து வெளிப்பட்டு சிறிதுகாலம் நிலைத்து நின்று, பின்னர் உன்னில் போகின்ற தன்மையை உலகத்தார் அறிந்து கொள்ளுவது அத்தனை எளிதாகுமா"? என்று திருமாலின் நிலைத்த தன்மையைக் குறித்துப் போற்றித் துதிக்கிறான் கவந்தன்.

வெள்ளம் திருமாலுக்கும், அதனுள் தோன்றும் நீர்க்குமிழி அண்டங்களுக்கும் உவமை; நீரில் தோன்றுகின்ற நீர்க்குமிழி தோன்றி, சிறிதுநேரம் நின்று பின் அந்நீரில் மறைதல் போல உன்னிடத்திருந்து தோன்றி இவ்வண்டங்கள் சிறிது காலம் நிலைத்து நின்று, பின் உன்னிடமே வந்து மறைகின்ற தன்மையை, நேரில் யாராலும் காணமுடியுமோ? என்பது கருத்து. அண்டங்களுக்கு முன்னர் படைக்கப்பட்டது "மகார்ணவம்" என்னும் பெருங்கடல்நீர்; இதனின்று தான் அண்டங்கள் தோன்றின என்பதும், ஊழி இறுதிக் காலத்தில் மீண்டும் இவ்வண்டங்கள் அக்கடல் நீரினுள் மறைந்து போகும் என்பதும் நூற்கொள்கை. இதை ஓர் அருமையான உவமையின் மூலம் விளக்குகிறார் அழகிய மணவாளதாசர். "சின்னூல் பலபலவாயால்

இழைத்துச்சிலம்பி, பின்னும் அந்நூல் அருந்திவிடுவதுபோல அரங்கர் அண்டம் பன்னூறு கோடி படைத்தவை யாவும் பழம்படியே, மன்னூழி தன்னில் விழுங்குவர் போத மனம் மகிழ்ந்தே" என்பது திருவரங்கத்துமாலை.

49. "நின்செய்கை கண்டு நினைந்தனவோ, நீள் மறைகள்?
உன் செய்கை அன்னவைதான் சொன்ன ஒழுக்கினவோ?
என் செய்தேன் முன்னம்? மறம் செய்கை எய்தினார்
பின் செல்வது இல்லாப் பெருஞ் செல்வம் நீ தந்தாய்!" (3793)

(மறம் - பாவம்)

"முடிவேயில்லாத அனந்தமான வேதங்கள் உன் செய்கைகளைக் குறிப்பாகக் கொண்டு நினைத்துச் சொல்லப்பட்டனவோ? அன்றி உன்னுடைய செய்கைகள்தான் அவ்வேதங்களில் கூறியபடி கடைப்படிக்கப்படுகின்றனவோ? இரண்டும் ஒன்றேபோல் இருக்கும் உயர்வான நீ, பாவச் செயல்களையே செய்தவர்களின் பின்னால் சென்று தொழுது, நிற்காத பெருஞ்செல்வத்தை எனக்கு அருளியிருக்கிறாய்; இப்புண்ணியத்தை நான் அடைய, என் முற்பிறவியில் நான் என்ன நல்வினைகளைச் செய்தேனோ? தெரியவில்லையே!" என்று இராமபிரான் அருள்திறத்தைப் புகழ்ந்து கூறினான் கவந்தன்.

இராமபிரான் வேதநூல்களில் கூறப்பட்டவையிலிருந்து பிறழாது ஒழுகினான் என்பதா? அல்லது இராமபிரான் நடைமுறைகளைக் கணித்துத்தான் வேதநூல்கள் உருவாக்கப்பட்டன என்பதா? என்பது முதல் இரண்டடிகளின் கருத்து. இங்கே "பெரும் செல்வம்" என்பது சாப நீக்கத்தைக் குறித்தது என்க. வேதங்கள் கூறுவனவும் இறைவன் செயல்களும் வேறுபட்டன அல்ல என்பதாம்.

50. "மாயப்பிறவி மயல் நீக்கி, மாசு இலாக்
காயத்தை நல்கி, துயரின் கரை ஏற்றி,
பேய் ஒத்தேன்; பேதைப் பிணக்கு அறுத்த எம்பெருமான்!
நாய் ஒத்தேன்; என்ன நலன் இழைத்தேன் நான்?" என்றான். (3794)

(மயல் - மயக்கம்; காயம் - உடம்பு; நல்கி - அருளி; பேதை - பேதைமை \ அறியாமை; பிணக்கு - மாறுபாடு \ தொடர்பு; இழைத்தல் - செய்தல்; மாயம் - வஞ்சனை; மாசு - அழுக்கு)

"வஞ்சனையினால் ஆன இந்த அரக்கப்பிறவியின் மயக்கத்தை நீக்கி, அழுக்கும் குற்றமும் இல்லாத ஒளிமிகுந்த உடலை - திவ்ய சொரூபத்தை அருளி, இவ்வரக்கப்பிறவி என்னும் சாபத்தால் நான் அழுந்தியிருந்த துயர்க்கடலினின்றும் என்னைக் கரைசேர்த்து, பேய்போல வயிற்றுப்பசியைத் தீர்த்துக்கொள்வதிலேயே என் காலத்தைக் கடத்திய என் அறியாமையாகிய தொடர்பை அறுத்து, அறிவுச் செல்வத்தையும் எனக்கு வழங்கிய எம்பெருமானே! நாயைப்போன்ற இழிந்த பிறவியுடையவனாகிய நான் எந்தக் காரணமும்

இல்லாமல் உன்னிடம் இருந்து இவ்வளவு கருணை பெறுவதற்கு என்ன புண்ணியம் செய்திருக்கிறேனோ! தெரியவில்லையே!" என்று வியந்து துதித்தான் கவந்தன்.

"மாசிலாக்காயம்" என்பது திவ்ய சொரூபமாகிய பண்டைய உருவாகிய கந்தர்வ நிலையைக் குறிக்கும்; உடல் மாற்றத்தைத் தந்ததோடு அறியாமையையும் போக்கினான் என்பதை "பேதைப்பிணக்கு அறுத்த எம்பிரான்" என்று குறித்தான் என்க. அவனுக்கு மாயப்பிறவி நீங்கியது; அரக்கவாழ்வின் துயர் நீங்கியது; அறியாமை நீங்கியது. மாசிலாக்காயம் பெற்றான்; இன்பம் பெற்றான்; ஞானம் பெற்றான் என்பதாம், நாய்ப்பிறவி மிகவும் இழிந்தது, கீழ்ப்பட்டது என்பது சான்றோர் கொள்கை. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பல இடங்களில் தன்னை நாயேன் என்றும், நாயினும் கடையேன் என்றும் கூறிக்கொண்டிருப்பதை நினைவிற்கொள்க.

51. இப்பொழுது இராமன் கவந்தனை நேரில் காணுதல்

என்று, ஆங்கு, இனிது இயம்பி, ''இன்று அறியக் கூறுவெனேல்,
ஒன்றாது, தேவர் உறுதிக்கு'' என உன்னா,
தன் தாயைக் கண்ணுற்ற கன்று அனைய தன்மையன் ஆய்,
நின்றானைக் கண்டான், நெறி நின்றார் நேர் நின்றான். (3795)

(ஒன்றாது - பொருந்தாது; உறுதி - ரகசியம் \ நன்மையுமாம் ;உன்னா - உன்னி \ கருதி)

என்று இவ்வாறு மென்மையாகக் கூறி, இப்பொழுது இவர்கள் அறியும்படி இவர்களது தெய்வீகத்தன்மையை வெளிப்படக் கூறுவேனானால் அது தேவர்கள் முன்பு நான்முகனுக்கு செய்து கொடுத்த சத்தியத்திற்குப் பொருந்தாது என்று கருதி, தாய்ப்பசுவைக் கண்ட கன்றைப்போல் வாத்சல்யத்துடன் வானில் நின்ற கவந்தனை, ஞானநெறியில் நிற்பவர்களுக்கு நேரே வந்து அருள்பாலிப்பவனான இராமபிரான் கண்டான்.

ஆரம்பத்தில் தேவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சிவபெருமானுடனும் பிரமதேவனுடனும் திருமாலைச் சந்தித்துத் தங்கள் குறைகளை முறையிட்ட நிகழ்ச்சியையும், அதற்குத் திருமால் தெரிவித்த உபாயத்தையும், அவர்கள் செய்து கொடுத்த, 'யாரும் வெளிப்படுத்தலாகாது' என்ற உறுதிமொழியையும் இங்கு இப்பொழுது நினைவு கூர்க. கடவுளுக்கும் உயிருக்கும், உள்ள மிகுந்த அன்பினைக் குறிக்கும் போதெல்லாம் கன்று தாய்ப்பசுவைப் பார்க்கும் பார்வையையே குறிப்பிடுவது கவிமரபு. இங்கே இராமபிரான் தாய்ப்பசு; கவந்தன் கன்று.

52. இலக்குவன் கவந்தனை "யார்" என வினவுதல்

''பாராய், இளையவனே! பட்டஇவன்? வேறே ஓர்
பேராளன் தானாய் ஒளி ஓங்கும் பெற்றியனாய்

நேர், ஆகாயத்தின் நிற்கின்றான்; நீ இவனை
ஆராய்!'' என, அவனும், ''ஆர்கொலோ நீ?'' என்றான். (3796)

(பட்ட - இறந்துபோன; பேராளன் - பெரியோன் \ தேவன் \ பெருமைக்குரியவன்; பெற்றி - தன்மை; ஆராய்தல் - வரலாற்றைக் கேட்டறிதல்; ஒளி- தேஜஸ் \ தெய்வீகக் காந்தி)

இராமன் இலக்குவனை நோக்கி "தம்பி! இதைப்பார்; நம்மால் இறந்து பட்ட இவன் வேறே ஒரு உருக்கொண்டு பெருமைக்குரிய தேவன் போலவும், தேக ஒளி பெற்ற தன்மையனாகவும், நமக்கு எதிரே ஆகாயத்தில் நிற்கின்றான்; நீ இவனது வரலாற்றைக் கேட்டறிவாயாக" என்றதும், இலக்குவனும், கவந்தனை நோக்கி, "நீ யார்!" என்று, வினவினான்.

கவந்தன் தான் இறக்கும் முன்பு, தன்னை ஒரு குழியில் போட்டு, தீயிட்டுக் கொளுத்திவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும், அவ்வாறே இராம இலக்குவர் செய்ததாகவும், அதன் பயனாய் அதனின்றும் திவ்ய சொரூபத்துடன் அவன் எழுந்து நின்று, வானில் தோன்றி தன் வரலாறு கூறினான் என்று வான்மீகமும், அத்யாத்ம இராமாயணமும் கூறும்.

53. கவந்தன் தன் வரலாற்றைக் கூறுதல்

''சந்தப் பூண் அலங்கல் வீர! தனு எனும் நாமத்தேன்; ஓர்
கந்தர்ப்பன்; சாபத்தால், இக் கடைப்படு பிறவி கண்டேன்;
வந்துற்றீர் மலர்க்கை தீண்ட, முன்னுடை வடிவம் பெற்றேன்;
எந்தைக்கும் எந்தை நீர்; யான்இசைப்பது கேண்மின்'' என்றான். (3797)

(சந்தம் - அழகு; பூண் - அணிகலன்; அலங்கல் - மாலை; கந்தர்ப்பன் - கந்தருவன்; நாமம் - பெயர்; கடைப்படு - இழிந்த; காண்டல் - நேர்தல்; இசைப்பது - கூறுவது)

"அழகு பொருந்திய அணிகலனாகிய மலர் மாலையை அணிந்துள்ள வீரர்களே! என் பெயர் தனு என்பது. நான் ஒரு கந்தர்வன்; ஸ்தூலசிரசு என்னும் ஒரு முனிவரின் சாபத்தால் இத்தகைய இழிந்த அரக்கப் பிறவியை மேற்கொள்ள நேர்ந்தது. இங்கு வந்து சேர்ந்த உங்களது தாமரை மலர் போன்ற கைகள் என்மேல் தீண்டவும், நான் எனது பண்டைய உருவமாகிய கந்தர்வ உருவத்தை அடைந்து விட்டேன். எனக்கு நல்உயிர் கொடுத்த நீர், என் தந்தையினும் சிறந்த தந்தை போன்றவராவீர். இப்பொழுது நான் கூறுவதைச் சற்று கேளுங்கள்" என்றான் கவந்தன்.

தனு என்பது அவன் குலம் என்றும், ஸ்ரீ என்பது அவன் தந்தையின் பெயரென்றும் இவன் பெயர் விசுவாவசு என்றும் வான்மீகம் கூறும், இவன் செய்த கொடுமைகள் தாங்காது ஸ்தூலசிரஸ் என்னும் முனிவன் இவனை அரக்கனாகும்படிச் சபித்தான் என்றும், பின் திருமால் இராமபிரானாக வந்து உன் கைகளைத் துண்டித்து உன்னை எரிக்கும்போது இச்சாபம் நீங்கும் என்றும்

கூறியதாகவும் கூறுவர். இவன் இந்திரனை ஒரு முறை எதிர்க்கும் போது, இந்திரன் தன் வச்சிராயுதத்தால் இவன் கண்களையும் தலையையும் வயிற்றுக்குள் புகுமாறு செய்தான் என்றும், ஒரு யோசனை தூரம் நீண்ட கைகளைக் கொடுத்தவனும் இந்திரனே என்றும், இவனுக்குச் சாபம் அளித்தவர் "அஷ்டவக்ர முனிவர்" என்றும் அத்யாத்ம ராமாயணம் கூறும்.

54. அவர்களுக்குக் கவந்தன் உதவுதல்

"கணை உலாம் சிலையினீரைக் காக்குநர் இன்மையேனும்,
இணை இலாள் தன்னை நாடற்கு ஏயன செய்தற்கு ஏற்கும்;
புணை இலாதவற்கு வேலை போக்கு அரிது; அன்னதேபோல்,
துணை இலாதவருக்கு இன்னா, பகைப் புலம் தொலைத்து நீக்கல்." (3798)

(கணை - அம்பு; சிலை - வில்; இணை - ஒப்பு; புணை - தெப்பம்; வேலை - கடல்; போக்கு - கடத்தல்; உலாம் - பொருந்திய; பகைப்புலம் - பகைவர் நாடு \ தேசம்)

"அம்பினைத் தொடுத்து எய்யும் வில்லினை உடைய, வில்களைக் காப்பாற்றும் வல்லமை பெற்றவர் உங்களுடன் ஒருவரும் இல்லையென்றாலும், ஒப்பற்ற கற்பினை உடையவளான சீதாதேவியைத் தேடிப் போவதற்கும், அதற்குத் தொடர்புடைய செயல்களைச் செய்தற்கும் நீங்கள் ஒரு துணையைப் பெற்றுக்கொள்வது ஏற்புடைத்தாகும். ஏனெனில், தெப்பம் இல்லாதவர்களால், கடலைக் கடப்பது அரிதாகும். அதுபோலவே, பகைவர் தேசத்தை அழித்து நீக்க வேண்டுதற்கு ஒரு துணையில்லாமல் இருப்பது உங்களுக்குத் துன்பமேயாகும்" என்று கூறினான் கவந்தன்.

"நெடு நீர் புணையின்றி நீந்துதல் இன்னா" என்பது இன்னா நாற்பது (4). பகைப்புலம் அழித்து நீக்குதற்கு ஒரு துணை இன்றியமையாதது என்பதாம்.

55. "பழிப்பு அறுநிலைமை ஆண்மை
பகர்வது என்?" பதும பீடத்து
உழிப்பெருந் தகைமை சான்ற
அந்தணன் உயிர்த்த எல்லாம்
"அழிப்பதற்கு ஒருவன் ஆன
அண்ணலும்., அறிதிர் அன்றே,
ஒழிப்ப அருந்திறல் பல்பூத
கணத்தோடும் உறையும் உண்மை?" (3799)

(பதும பீடம் - தாமரைத் தவிசு; அந்தணன் - பிரமன்; உயிர்த்த - தோற்றுவித்த; அண்ணல் - சிவபெருமான்; ஒழிப்ப அரும் - அழிக்கமுடியாத; பழிப்பு - குற்றம் \ இகழ்ச்சி; கணம் - கூட்டம்)

"குற்றமில்லாத தன்மையையும் ஆண்மை பொருந்திய வீரத்தையும் உடைய உங்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? இருப்பினும், தாமரைத்

தவிசில் வீற்றிருக்கும் பெருமை வாய்ந்த பிரமதேவன் தோற்றுவித்த உயிரினங்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்கென்றே இருப்பவனான ஒப்பற்ற மேன்மையனாகிய சிவபெருமான்கூட, நீக்குதற்கரிய, மிக்க திறமை வாய்ந்த பலவகைப் பட்ட பூதக் கூட்டங்களைத் தன்னுடன் வைத்துக் கொண்டு இருக்கும் உண்மையை நீங்களும் அறிவீர்கள் அல்லவா?" என்றான் கவந்தன்.

பகைவரை வெல்லச் செல்லுவோர் துணையோடு செல்லுதல் பழிப்பற்றதாகும்; அதுவே ஆண்மையுடையதுமாகும் என்றும் பொருள் கூறுவதுண்டு. சிவபெருமானே, தன்னுடன் பூதகணங்களைத் தங்க வைத்துக் கொண்டிருக்கும் போது, நீங்கள் துணைவலி பெறுவதில் தவறில்லை என்று வற்புறுத்துகிறான் கவந்தன். நாம் தனித்தே போரிடுவோம், நமக்குத் துணை வேண்டுவதில்லை என்று கருதுவது பழிப்புக்கும் இடமாகும், அது ஆண்மையையும் குறிக்காது என்று எதிர்மறைப் பொருளாகவும் கொள்ளலாம். அழித்தல் தொழிலை உடைய சிவபெருமான், பகைவரை வெல்லுவதற்காகப் பூதகணங்களைத் தன்னுடன் வைத்திருப்பதைக் கொண்டு, அவன் வலிமையற்றவன் என்று பிறர் பழிப்பதோ, ஆண்மை குறைந்தவன் என்று இகழ்வதோ இல்லை என்பதை உணர்க. எனவே நீங்கள் துணையை நாடுவதால் உங்கள் புகழுக்கும், ஆண்மைக்கும் பழி ஏற்படாது என்றான் என்பதாம். "வருவார் விடைமேல் மாதொடும் மகிழ்ந்து பூதப்படை சூழ" என்பது சுந்தரர் தேவாரம். சிவபெருமானுக்கு "பூதநாதன்" என்னும் ஒரு பெயரும் உண்டு என்பதையும் அறிக.

56. அதற்குரிய வழியைக் கூறுதல்

"ஆயது செய்கை என்பது, அறத்துறை நெறியின் எண்ணி,
தீயவர்ச் சேர்க்கிலாது, செவ்வியோர்ச் சேர்த்து, செய்தல்;
தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட்டு, அன்னாள்
ஏயது ஓர் நெறியின் எய்தி, இரலையின் குன்றம் ஏறி." (3800)

(நல்குதல் - உதவுதல்; தலைப்படுதல் - சந்தித்தல்; இரலை - கலை மான் மானின்முகம் \ ருசிய முகம்) (குளகப் பாடல்)

எனவே இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது என்பது இதுவேயாகும். அறநெறிகளில் கூறியபடி ஆலோசித்து, கொடியவர்களைத் துணைக்கொள்ளாது, நல்ல மேன்மைக் குணம் படைத்தவர்களை உங்களுடன் சேர்த்துக் கொண்டு, மேல் நிகழ வேண்டுவனவற்றைச் செய்யுங்கள்; பெற்ற தாயைக் காட்டிலும் உயிரினங்களுக்கு உதவி செய்யும் "சபரி" என்னும் வேடமாதைச் சந்தித்து, அவள் கூறுகின்ற வழியில் சென்று, ருசிய மூகம் என்ற மலையின் மீது ஏறி - பாடல் தொடர்கிறது.

அறத்துறை என்பது நீதி நூல்களைக் குறித்தது. இரலை என்பது கலைமான் என்று பொருள் தரும். மான் போன்ற வடிவம் கொண்டிருப்பதால் அக்குன்றம் இரலைக் குன்றம் என்று வழங்கப்படுகிறது. ருசிய மூகம் என்பது வடசொல்.

முன் செய்யுளால் துணைவலியை வற்புறுத்திய கவந்தன், இந்தப் பாடலில் அந்தத் துணை எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறான் என்க. இங்கே வள்ளுவன் கூறிய நட்பு, தீ நட்பு, கூடா நட்பு, நட்பு ஆராய்தல் ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள பாடல்களை நினைவு கூர்தல் தகும். சபரி என்பதற்கு ஆண்பால் சபரன். "இரலையும் கலையும் புல் வாய்க்குரிய" என்பது தொல்காப்பியம். இரலையின் குன்றம் என்பது ருசிய மூகபர்வதம் எனப்படும். இதனைச் சிருங்ககிரி என்றும் கூறுவர். இப்பொழுது இது மைசூர் நாட்டில் இருக்கிறது. வட பெண்ணையாற்றின் அருகிலுள்ள சந்திரதுர்க்கம் என்பதே ருசியமூக பர்வதம் என்றும் கூறுவர்.

57. "சுக்கிரீவனைத் துணையாகக் கொள்க" என்று கூறுதல்

"கதிரவன் சிறுவன் ஆன கனக வாள் நிறத்தினானை
எதிர் எதிர் தழுவி, நட்பின் இனிது அமர்ந்து. அவனின், ஈண்ட,
வெதிர் பொரும் தோளினாளை நாடுதல் விழுமிது" என்றான்,
அதிர் கழல் வீரர்தாமும், அன்னதே அமைவது ஆனார். (3801)

(சிறுவன் - மகன் கனகம் - பொன் வாள் - ஒளிபொருந்திய் அமர்ந்து - தங்கியிருந்து வெதிர் - மூங்கில் பொரு - போன்ற் விழுமியது - சிறந்தது அதிர் - ஒலிக்கின்ற் அமையும் - பொருந்தும்)

"சூரியன் மைந்தனாகிய, பொன் போன்று ஒளிபொருந்திய உடலை உடையவனான சுக்கிரீவன் என்பவனை உடல் இறுகத்தழுவி, நட்புப் பூண்டு, நீண்ட மூங்கிலைப் போன்ற தோள்களை உடைய சீதாதேவியைத் தேடுதல் சிறப்புடையதாகும்" என்றான் கவந்தன். ஒலிக்கின்ற கழல்களை அணிந்த வீரர்களாகிய இராம இலக்குவரும், அதுவே செய்யத்தக்கது என்று உடன்பட்டனர்.

சுக்கிரீவன் கதிரவன் மைந்தன் பொன் நிறத்தவன். இவனுடைய பெருமைகளைக் கவந்தன் இராம இலக்குவர்க்கு மிக விரிவாகக் கூறியதாக வான்மீகம் கூறும்.

58. இருவரும் மதங்க ஆசிரமம் வந்து சேர்தல்

ஆனபின், தொழுது வாழ்த்தி, அந்தரத்து அவனும் போனான்,மானவக்
குமரர்தாமும் அத்திசை வழிக்கொண்டு ஏகி,
கானமும் மலையும் நீங்கி, கங்குல் வந்து இறுக்கும் காலை,
யானையின் இருக்கை அன்ன, மதங்கனது இருக்கை சேர்ந்தார். (3802)

(அந்தரம் - ஆகாயம்; கங்குல் - இரவுப்பொழுது; இருக்கை - வாழும் இடம்; இறுத்தல் - தங்குதல்)

இவ்வாறு கூறி முடித்தபின், கவந்தன், இராமலக்குவர்களைத் தொழுது வாழ்த்தி, வான் வழியே சென்றான். பெருமைமிகுந்த மனுவின் குலத்தில்

வந்தவர்களான இராம, இலக்குவரும், கவந்தன் கூறிய வழியையே மேற்கொண்டு சென்று, காடும் மலையும் கடந்து, இரவுப் போது வந்து சேர்ந்த போது, யானைகள் மிகுதியாகத் திரிந்திருந்த இடம் போன்று தோற்றமளித்த மதங்கன் என்னும் முனிவரது ஆசிரமத்தை வந்து அடைந்தனர்.

மனுகுலத்தில் வந்தவர் மானவர். மானம் பெருமையுமாம். மதங்க முனிவர் யானைகள் மீது மிக அன்பு கொண்டவர். எனவே அவர் வாழ்ந்த இடத்தில் யானைகள் மிகுதியாகக் காணப்பட்டன. எனவே தான் யானைக்கே மதங்கம் என்ற ஒரு பெயர் வழுங்கப்படுகிறது. இவர் வடமொழியில் "கஜ ஆயுர் வேதம்" என்ற யானை மருத்துவ நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். அவரே யானை உருவத்தோடு வாழ்ந்தார் என்றும் கூறுவர். இந்த ஆசிரமம் பம்பைப் பொய்கைக்கு மேற்கே இருப்பதாக வான்மீகம் கூறும்.

கவந்தன் வதைப் படலம் நிறைவுற்றது

13. சவரி பிறப்பு நீங்கு படலம் (9 பாடல்கள்)

சபரி என்ற வடசொல்லின் திரிபு சவரி என்பது. சபரர் என்பவர் வேடர் இனத்தவர்; தேன் கொணர்ந்து விற்கும் தொழிலுடையவர். இவர் ஒரு வேட்டுவப் பெண். முதிர்ந்த வயதுடையவர். மதங்கர் ஆசிரமத்தில் அவருடைய மாணாக்கர்களுக்குத் தொண்டு செய்து தவவாழ்வு நடத்தும் பெற்றியர். இராமபிரான்பால் தீராக் காதல் உடையவர். எனவே அவரால் பிறப்பு நீங்கி வீடுபேறு உற்ற நிகழ்ச்சிகளைக் கூறும் படலம் என இது விரியும். இது 9 பாடல்களைக் கொண்ட சிறு படலம். இப்படலம் சில சுவடிகளில் "சபரி பிறப்பு நீங்கு படலம்" எனவும், "சவரிப்படலம்" என்றும், "சவரி மோட்சப் படலம்" எனவும் குறிக்கப் பெற்றுள்ளது.

"இப்படலத்துள் மதங்கரது ஆசிரமத்தின் பெருமையும், வனத்தை அடைந்த இராம இலக்குவர் சவரியைக் கண்டு, அவர் தந்த காய்கனிகளை உண்ணுதலும், அவர் சுக்கிரீவன் வாழுகின்ற இரலைக் குன்றத்திற்குச் செல்லும் வழிகூறுதலும், இராமபிரானைக் கண்ட பின்னர் சபரி வீடு பேறு எய்துதலும், இருவரும் பம்பை சேர்தலும் ஆகிய நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன.

1. மதங்காசிரமத்தின் சிறப்பு

கண்ணிய தருதற்கு ஒத்த கற்பகத் தருஆம் என்ன,
உண்ணிய நல்கும் செல்வம் உறுநறுஞ்சோலை ஞாலம்
எண்ணிய இன்பம் அன்றி, துன்பங்கள் இல்லை ஆன,
புண்ணியம் புரிந்தோர் வைகும் துறக்கமே போன்றது அன்றே! (3803)

(கண்ணிய - நினைத்த \ கருதிய; தரு - மரம்; உண்ணிய - உண்ணத்தக்கன; செல்வம் - வளம் \ செழிப்பு; புண்ணியம் - நல்வினைப்பயன்; துறக்கம் - சுவர்க்கம்)

நினைத்தவற்றை நினைத்தபடியே தருவதற்கு அமைந்த கற்பக மரம் போல, உண்ணுதற்குத் தக்கனவான கனி, காய், கிழங்கு முதலியவற்றை நல்குகின்ற செழிப்பு வாய்ந்ததும், நறுமணம் மிக்கதுமான அந்த மதங்காசிரமத்தின் சோலை, உலகத்தார் விரும்பி எண்ணுகின்ற இன்பத்தைத் தவிர, துன்பங்கள் என்பதே இல்லாததான, நல்வினைகளையே புரிந்தோர்கள் வாழ்கின்ற துறக்கத்தையே ஒத்திருந்தது.

"எண்ணிய எண்ணியாங்கு எய்தலாலும், உண்ணுதற்குரிய உணவும், மகிழ்ச்சியான சூழ்நிலையும் எப்போதும் நிலவுவதாலும் அங்கு வாழும்

தவசிகள் எப்போதும் இன்பமேயன்றித் துன்பமே அனுபவிக்காதவர்களாகவும், அவர்கள் அனைவரும் நல்வினையையே செய்பவர்களாகவும் இருப்பதால், அந்தச் சோலை கற்பகமரம் முதலிய மரங்கள் இருக்கின்ற சுவர்க்கத்தை ஒத்திருந்தது என்பதாம். மதங்காசிரமத்திற்குச் சுவர்க்கம் உவமை. துறக்கம், புண்ணியம் புரிந்தோர் அடையும் வாழ்வு நிலையாகும்.

2. இராமபிரான் சவரிக்கு இன்னுரை நல்குதல்

அன்னது ஆம் இருக்கை நண்ணி,
ஆண்டுநின்று, அளவுஇல் காலம்
தன்னையே நினைந்து நோற்கும்
சவரியைத் தலைப்பட்டு, அன்னாட்கு
இன்னுரை அருளி, ''தீது இன்று
இருந்தனைபோலும்'' என்றான்
முன் இவற்கு இது என்று எண்ணல்
ஆவது ஓர் மூலம் இல்லான். (3803)

(மூலம் - முதற்பொருள் \ பரம்பொருள்; இருக்கை - இருப்பிடம்; நோற்றல் - தவம் செய்தல்; தலைப்பட்டு - சந்தித்து; நினைத்தல் - தியானம் செய்தலுமாம்)

இவனுக்கு முன்னால் ஒரு பொருள் இருக்கிறது என்று எண்ணக்கூடிய வேறு ஒரு பொருள் இல்லாத மூலமுதற் காரணனான இராமன், அத்தகைய மதங்காசிரமத்தை அடைந்து, அங்கே அளவற்ற காலமாகப் பரம்பொருளாகிய தன்னையே தியானித்து, தவம் மேற்கொண்டிருக்கின்ற சவரியைச் சந்தித்து, அவளுக்கு இனிய சொற்களைக் கூறி, "இங்கு எந்தத் துன்பமும் இல்லாமல் இருக்கின்றாயா?" என்று நலம் விசாரித்தான்.

"தன்னலாது ஒரு பொருள் தனக்குமேல் இல்லான்" என்பது இறுதி அடிக்கு விளக்கம். இராமன் வரவையே எதிர்பார்த்து நீண்டநெடுங்காலமாகத் தியானமும் தவமும் செய்து வந்தவள் சபரி என்பது பெறப்படுகிறது. சம்ஷேப இராமாயணம் என்பது மிகச் சுருக்கமான இராம காதை. இதில் கூட சபரியைப்பற்றியும், அவள் தவ மேன்மையைப் பற்றியும் விரிவாகச் கூறப்பட்டிருக்கிறது என்பதே, அவள் தன் தவப்பெருமைக்குச் சான்று. வான்மீகமும் விரிவாகப் பேசுகிறது என்பது கருதத்தக்கது.

3. சவரி இராம இலக்குவர்க்கு விருந்து படைத்தல்

ஆண்டு, அவள் அன்பின் ஏத்தி, அழுது இழிஅருவிக்கண்ணள்,
''மாண்டது என்-மாயப்பாசம்; வந்தது, வரம்புஇல் காலம்
பூண்ட மாதவத்தின் செல்வம்; போயது பிறவி'' என்பாள்,
வேண்டிய கொணர்ந்து நல்க விருந்து செய்து இருந்த வேலை; (3805)

(ஏத்தி - துதித்து; இழி - சொரிகின்ற; பாசம் - உலகப்பற்று; மாண்டது - நீங்கியது; பூண்ட - மேற்கொண்டிருந்த; செல்வம் - பலன்; போயது - ஒழிந்தது; வேலை - வேளை \ சமயம்; மாயம் - பொய்யான) (குளகப்பாடல்)

அங்கு அவள் இராம இலக்குவர்களை அன்பினால் துதித்து, அருவிபோல் கண்களினின்றும் கண்ணீரைச் செரிவாளாய், “என்னுடைய பொய்யான உலகப்பற்று நீங்கியது; எல்லையற்ற காலமாய் நான் மேற்கொண்டிருந்த சிறந்த தவத்தின் பயனை இன்று அடையப் பெற்றேன்; எனது பிறவிப் பிணி ஒழிந்தது” என்று கூறி, அவர்கள் உண்ணுதற்குத் தக்கனவான காய் கனி கிழங்குகளைக் கொண்டு வந்து கொடுக்க, அவர்களும் விருந்துண்டு மகிழ்ந்திருந்த சமயத்தில் - பாடல் தொடர்கிறது.

“காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்குதல்” முற்றிய பக்தியின் வெளிப்பாடு என்பதாம் . அதனைக் குறிக்கவே “அழுது இழி அருவிக் கண்ணாள்” என்றார். இங்கே ஒரு கருத்து. அவள் முன்பே உண்டு மீதி வைத்திருந்த காய் கனிகளையே இராமபிரான் உண்டருளினான் என்று சிலர் கூறுவர். இதற்குக் கம்பனிலோ, வான்மீகத்திலோ, அத்யாத்ம இராமாயணத்திலோ எந்த ஆதாரமும் இல்லை என்பதை உணர்க. “கண்டேன் சீதையை” என்பதைப் போல இங்கே, மாண்டது, வந்தது, போயது என்று பயனிலையை முன்னிறுத்திக் கூறியிருப்பது அவளின் மன விரைவையும் வெற்றியின் தன்மையையும் புலப்படுத்தியது என்க.

4. சவரி இராமபிரானிடம் தெரிவித்தல்

''ஈசனும், கமலத்தோனும், இமையவர் யாரும், எந்தை!
வாசவன்தானும், ஈண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி,
''ஆசுஅறு தவத்திற்கு எல்லை அணுகியது; இராமற்கு ஆய
பூசனை விரும்பி, எம்பால் போதுதி'' என்று, போனார்.'' (3806)

(ஈசன் - சிவபெருமான் கமலத்தோன் - பிரமன் இமையவர் - தேவர்கள் வாசவன் - இந்திரன் ஆசு - குற்றம் எல்லை - காலம் பூசனை - வழிபாடு ஆய - உரிய் போதுதி - வருவாயாக)

“என் தந்தையே! சிவபெருமானும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், தேவர்கள் அனைவரும், அவர்களுக்குத் தலைவனான தேவேந்திரனும், இங்கு வந்திருந்து என்னை மகிழ்ச்சியுடன் பார்த்து, “நீ இயற்றிய குற்றமற்ற தவத்திற்கு உரிய சித்திபெறும் காலம் நெருங்கிவிட்டது; இங்கேயே தங்கியிருந்து, இராமன் வரவை எதிர்பார்த்திருந்து, அவன் வரும் பொழுது, அவனுக்கு உரிய வழிபாடுகளை மன மகிழ்ச்சியுடன் செய்து, எங்களிடம் வந்து சேருவாயாக!” என்று சொல்லிப் போனார்கள்” என்று சபரி இராமபிரானிடம் தெரிவித்தாள்.

இவ்வாறு சிவன், பிரமன், தேவேந்திரன், தேவர்கள் ஆகியோர் வந்து கூறியதாக வான்மீகத்தில் இல்லை. எனினும் மதங்கரின் மாணாக்கர்கள் கூறிச் சென்றனர் என்று மட்டும் வான்மீகத்தில் காணப்படுகிறது.

5. இராமபிரான் சவரியை வாழ்த்துதல்

"இருந்தனென், எந்தை! நீ ஈண்டு எய்துதி என்னும் தன்மை
பொருந்திட; இன்றுதான் என் புண்ணியம் பூத்தது" என்ன,
அருந்தவத்து அரசிதன்னை அன்புற நோக்கி, "எங்கள் வருந்துறு
துயரம் தீர்த்தாய்; அம்மனை! வாழி" என்றான். (3807)

(தன்மை - நிலைமை; பூத்தல் - மலர்ந்து பயன் அளித்தல்; அம்மனை - தாயே)

"என் தந்தையே! தாங்கள் இங்கு வருவீர்கள் என்ற நிலைமை மேற்பட, அதனால்தான் தங்கள் வரவை எதிர்நோக்கி நீண்ட காலம் இங்கே தங்களையே நினைந்து தவம் மேற்கொண்டிருந்தேன், இன்று தாங்கள் இங்கு எழுந்தருளியதால் என் தவத்தின் பயன் மலர்ச்சியுற்றது. தவம் பலித்தது" என்று கூறிய, அரிய தவத்திற்குரியவளாள சபரியை இராமபிரான் அன்புமிக நோக்கி, "எங்களுடைய வழி நடைப்பயணத்தால் நாங்கள் அடைந்திருந்த துன்பத்தையெல்லாம் உன் அன்பான உபசரிப்பால் தீர்த்து வைத்தாய்; தாயே! நீ வாழ்வாயாக!" என்று வாழ்த்தினான்.

6. சவரி, இரலைக் குன்றம் செல்ல வழி சொல்லுதல்

அனகனும் இளைய கோவும் அன்று
  அவண் உறைந்தபின்றை,
வினைஅறு நோன்பினாளும் மெய்ம்மையின்
  நோக்கி, வெய்ய
துனைபரித்தேரோன் மைந்தன் இருந்த
  அத் துளக்கு இல் குன்றம்
நினைவு அரிது ஆயற்கு ஒத்த
  நெறி எலாம் நினைந்து சொன்னாள். (3808)

(அனகம் - குற்றமற்றவன்; பின்றை - பிறகு; வெய்ய - வெப்பமுடைய; துனை - விரைந்து செல்லுதல்; பரி - குதிரை; துளக்குதல் - அசைத்தல் \ அழிதலுமாம்)

குற்றமற்றவனாகிய இராமபிரானும், இளவலான இலக்குவனும் அன்றையப் பொழுதை அவ்வாசிரமத்திலேயே தங்கியிருந்து கழித்ததன்பின், தீவினை நல்வினைகளை அறுத்த, தவநெறி மிக்கவளான சபரியும், மெய்யன்போடு அவ்விருவரையும் நோக்கி, வெப்பமும், விரைவாகச் செல்லும் குதிரைகள் பூட்டப் பெற்ற தேரும், உடையவனான சூரியனின் மைந்தனான சுக்கிரீவன் தங்கியிருக்கின்ற, அந்த அசைதலும், அழிவும் அற்ற இரலைக் குன்றத்திற்குச் செல்லுகின்ற நினைப்பதற்கரிய அருமையும், ஆராய்ந்து எண்ணிக் கூறுவதற்கு ஒத்ததுமான வழிகளையெல்லாம், நன்கு நினைத்துப் பார்த்துக் கூறலானாள்.

இரலைக்குன்றம் - ருசியமூகபர்வதம். இரலைக் குன்றம் செல்லும் வழி மிக்கக் கொடுமையானது அதில்ஏதும் தவறு நேர்ந்துவிடாமல், நன்கு

நினைவுபடுத்தித் தெளிவாக எடுத்துக் கூறினாள் என்பதாம். சபரி இரலைக் குன்றத்திற்கு வழி கூறியதாக வான்மீகத்தில் இல்லை. கவந்தனே கூறியதாகத்தான் அங்கே காணப்படுகிறது.

7. அது கேட்ட இராமபிரான் நிலை

வீட்டினுக்கு அமைவது ஆன மெய்ந்
நெறி வெளியிற்று ஆகக்
காட்டுறும் அறிஞர் என்ன
அன்னவள் கழறிற்று எல்லாம்
கேட்டனன் என்ப மன்னோ!
கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும்
அமுதத்தின் சுவையாய் நின்றான். (3809)

(தோட்டல் - துளைத்தல்; உணர்வு - அறிவு; உண்ணுதல் - நுகர்தல்; வீடு - முக்தி)

கேள்வி ஞானத்தாலேயே தன் செவிகள் முழுவதும் துளைக்கப்பட்ட சான்றோர்கள், தம் அறிவினால் நுகர்கின்ற தேவ அமிழ்தத்தின் சுவையைப் போல நின்றிருந்தவனாகிய இராமபிரான், முக்தி உலகத்திற்குச் செல்லுவதற்கான உண்மையான வழிவகைகளை வெளிப்படக் கூறுகின்றவர்களாகிய ஞான ஆச்சாரியர்கள் போல, அந்தச் சபரி கூறியவைகள் அனைத்தையும் கூர்ந்து கேட்டான் இராமன், என்று சான்றோர் கூறுவர்.

ஒரு நல்ல ஆசாரியன் முக்தி நெறிக்குரிய வழிகளை எடுத்துப் போதிப்பது போல், இரலைக் குன்றத்திற்குச் செல்லும் வழியைச் சபரி எடுத்து விளக்கவும், போதனையைக் கூர்ந்து கவனிக்கும் மாணவனைப் போல, இராமன் சபரி கூறியவற்றையெல்லாம் கருத்தூன்றிக் கேட்டான் என்று சபரியை ஒரு ஆசார்யன் நிலையில் வைத்தும், இராமபிரானை ஒரு மாணாக்கன் நிலையில் வைத்தும் கூறியது ஒரு நயம்; கேள்வி என்பது, கேட்க வேண்டிய நூல்களின் உண்மைப் பொருள்களை, ஆன்ற அறிவுடையோர் கூறக் கேட்டலைக் குறிக்கும்.

8. சவரி வீடு பேறு அடைதல்

பின், அவள் உழந்து பெற்ற யோகத்தின் பெற்றியாலே
தன்உடல் துறந்து, தான் அத்தனிமையில் வீடு சார்ந்தாள்;
அன்னது கண்ட வீரர் அதிசயம் அளவின்று எய்தி,
பொன் அடிக்கழல்கள் ஆர்ப்ப, புகன்ற மா நெறியில் போனார். (3810)

(உழந்து - வருந்தி; யோகம் - தவம்; பெற்றி - பயன் \ சிறப்பு; வானம் - விண்ணுலகு)

விருந்தினர்களுக்குரிய அதிதிபூஜை முதலானவைகளை மகிழ்வோடு நிறைவாகச் செய்து முடித்த பின்னர், அவள் தன் மெய் வருந்திப் பெற்ற தவத்தின் பயனாலே, தன் உடல் நீங்கப்பெற்று, வானத்திலுள்ள ஒப்பற்ற வீடுபேற்றினை அடைந்தாள்; அதனைக் கண்ட வீரர்களாகிய இராம இலக்குவர், மிகவும் வியப்புற்று, அவள் கூறிய சிறந்த வழிகளிலேயே, தங்கள் அழகிய கால்களில் அணிந்திருக்கின்ற வீரக்கழல்கள் ஒலியெழுப்பும்படி, பயணத்தை மேற்கொண்டனர்.

அவர்களிடம் தான் விண்ணுலகு செல்வதாகக் கூறி, அவர்கள் இசைவு பெற்று, நெருப்பினை மூட்டி, அதில் உடலைத் துறந்தாள் என்று வான்மீகம் கூறும். தனிமையின் வீடு என்பது ஒப்பற்றதும், அழியாததுமான, வீடுபேறு என்பதைக் குறிக்கும். ஏகாந்தமான, பரம்பொருளோடு இரண்டறக் கலக்கும் நிலை என்று கூறலும் பொருந்தும்.

9. இருவரும் பம்பைப் பொய்கையை அடைதல்

தண் நறுங்கானும், குன்றும், நதிகளும், தவிரப் போனார்,
மண்ணிடை, வைகல்தோறும், வரம்பு இலா மாக்கள்ஆட
கண்ணிய வினைகள் என்னும் கட்டு அழல் கதுவலாலே
புண்ணியம் உருகிற்றன்ன பம்பைஆம் பொய்கை புக்கார். (3811)

(தண் - குளிர்ச்சி பொருந்திய; தவிர - நீங்கும்படி; ஆட - நீராட; கண்ணிய - பொருந்தியுள்ள; தழல் - நெருப்பு; கதுவுதல் - வெதுப்புதல் \ பற்றுதல்; பொய்கை - நீர்நிலை; கட்டழல் - தீயின் தொகுதி)

குளிர்ச்சி பொருந்திய, நறுமணம் மிகுந்த காடுகளையும், மலைகளையும், நதிகளையும் நீங்கிக் கடந்து சென்றனர் இராம இலக்குவர்; இவ்வுலகில் நாள்தோறும் எண்ணற்ற மக்கள் வந்து நீராட, அதனால் அவர்களிடம் பொருந்திய வினைகள் என்னும் நெருப்பின் தொகுதி பற்றி வெதுப்புதலால், புண்ணியமெல்லாம் ஒன்று திரண்டு உருகி வந்து ஓடுவது போல விளங்கும் பம்பையென்னும் நீர் நிலையை அடைந்தனர்.

பம்பை நதியின் சிறப்புக் கூறப்பட்டது. இதில் நீராடுவதால் பாவம் தொலையும் புண்ணியம் பெருகும் என்பதாம். பொய்கை என்பது மானிடர்கள் ஆக்காத இயற்கையாயமைந்த நீர்நிலை. சரஸ் என்பது வடசொல். மானிடர்களால் செயற்கையாக ஆக்கப்பட்ட நீர்நிலை வாவி, தடாகம் என்று அழைக்கப்படும். நீராடும் மக்களின் பாவத்தீயால் புண்ணியம் உருகி அங்கு நீராய்ப் பெருகி ஓடுகிறது என்பது கருத்து.

சவரி பிறப்பு நீங்கு படலம் நிறைவுற்றது

செய்யுள் முதல் குறிப்பு அகராதி

ஏ

ஐ

வ

வா

வி



ஆசிரியர் பழனியப்பன் சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் பாரம்பரியமிக்க ப.அ.ப. குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைக் கல்வியை மயிலாடுதுறை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் முடித்தவர். உயர்நிலைக் கல்வியின் போதே தமிழில் மிக்க ஆர்வம் கொண்டவர். தஞ்சை மாவட்டத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் முதன்மை நிலைவகித்துப் பரிசுகள் வாங்கியவர். மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியிலும் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியிலும் B.Com பட்டப்படிப்பை முடித்தவர். இவர் பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் தமிழ் பயின்றவர். இந்த ஒன்றே இவர் கம்பராமாயணத்திற்கு உரை எழுதத் தகுதியானவர் என்று சான்று பகரும். மயிலாடுதுறையிலும் திருச்சிராப்பள்ளியிலும் தங்கியிருந்து கல்லூரிப் படிப்பைத் தொடரும்போது புலவர் திரு. கீரன் அவர்களுடன் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவருடைய தொடர் சொற்பொழிவுகளைக் குறிப்பு எடுத்துத் தன்னைத் தயார் செய்து கொண்டவர். கல்லூரி நாட்களிலும் மாவட்ட அளவில் நிகழ்ந்த தமிழ்க் கட்டுரை, கவிதை, சொற்பொழிவுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றவர். நாட்டுடமையாக்கப்பட்ட பாங்க் ஆப் பரோடாவில் 1965 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை பல பதவிகளில் பணியாற்றியவர். இவர் இந்த வங்கியின் நாமக்கல் கிளையில் பணியாற்றும்போதுதான் அனுமன் அருளால் கம்பராமாயணத்திற்கு உரை எழுத எண்ணம் கொண்டார். நான்கு, ஐந்து ஆண்டுகளின் கடுமையான உழைப்பு தான் இன்று உங்கள் கைகளில் உரை நூலாகத் தவழ்கிறது.